975

# திராவிடநாடு

மலர் 10 27-1-52 இதழ் 30

DIGITIZED

JL
V211m, N4ID
N52.10.
144230.

290

290 REGD No. M 4642

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 27—1—52 | இதழ் 30

# வெட்கமில்லையா? விலகுங்கள்!

அண்ணல்

"மந்திரிகள் தோல்வி பற்றி யாருமே வருந்தவில்லை."

"பதவியிலிருந்து விரட்டப்பட்டதில் சென்னை மக்கள் குதூகலிக்கிறார்கள்."

*

தேர்தல் அலைகள், தேன் துளிகள் போல தினசரி காங்கிரஸ் வீழ்ச்சி பற்றிய பட்டியலகளைத் தந்து கொண்டிருக்கின்றன. ஐந்தாண்டுக் காலம் இவர்கள் பிடியில் கிடந்து அல்லல் பட்டோமே, என்கிற பெருமூச்சு, எல்லோருடைய இதயத்திலுமிருந்து கிளம்பி பரவிக் கொண்டிருக்கிறது. காங்கிரசுக்குத் தோல்வி — காங்கிரஸ் மந்திரிகள் முறியடிக்கப்பட்டனர் — காங்கிரசுக்கு மெஜாரிட்டி இல்லை—காங்கிரஸ் ஆட்சி பீடம் ஏற இனி வாய்ப்பில்லை—எனகிற மகிழ்ச்சி உரையாடல்கள் மக்கள் மன்றத்தில், வலம் வரத் துவங்கிவிட்டன. இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது ஒழிந்தது என்ற எக்களிப்பு, அக்கிரம ஆட்சி முறை அகலும் என்ற ஆனந்தம், கள்ளமார்க்கெட் காவலர்கள் ஒழிந்தார்கள் என்ற குதூகலம், கொடுமைகள் ஒழியும் என்கிற மகிழ்ச்சி எங்கும் பரவிக்கிடக்கிறது. ஐந்தாண்டுக் காலம், காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் பெற்ற வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்லவே—எனவே, புயல் ஓயும், புதுமணம் பரவும் என்கிற பூரிப்போடு கண்களிலே புது ஒளி பறக்க, நிற்கிறார்கள். எங்கும் இந்தக் காட்சியைக் காண்கிறோம்!

ஆண்ட மந்திரிகள்!!

அறுவர் தோற்றனர்!!

இந்தச் செய்தி பற்றி, ஆனந்த கீதம் பாடுகிறார்கள், மக்கள். கண்ணுக்கெதிரே தெரியும் இந்தக் காட்சியைத்தான், 'தினசரி' இதழ், கொட்டை எழுத்துக்களில், தலைப்பில் நாம் தந்திருப்பது போல, வெளியிட்டிருக்கிறது. 'தினசரி சொல்கிறது —காங்கிரஸ் செல்லப் பிள்ளையாக, சர்க்காரின் ஆசியும் ஆதரவும் பெற்ற ஏடு— தெரிவிக்கிறது, மக்கள் மன்றத்தின் எதி

## ஜனநாயகம் : : புதிய பாடம்!

### தோற்ற மந்திரிகள் ஏன் இன்னமும் ஆட்சி பீடங்களில் அமர்ந்திருக்க வேண்டும்?

இது, மக்கள் சக்தியின் ஏகோபித்த குரல்—ஜனநாயகத்தின் கேள்வி.

ஆனால் பிரதமர் குமாரசாமி ராஜா கூறுகிறார், பதவியைவிட்டு ஓடுவது பொறுப்பற்றதனம், தான் விலகினாலும் தன்னையேதான் அழைப்பார், கவர்னர் என்று!

காங்கிரஸ் சட்டசபைக் கட்சியின் தலைவர் அவர். அவர் தோற்கடிக்கப்பட்ட அன்றே தமது சட்டசபைக் கட்சியைக் கூட்டியிருக்கவேண்டும். உடன் கட்சிக்கூட்டம் கூட்டப்பட முடியாவிட்டால், சுற்றறிக்கை [illegible] டிருக்கவேண்டும், தோற்ற தன்னை நீக்கி, வேறொருவரை, [illegible] லைவராக தெரிந்தெடுக்கவேண்டுமென்று. அவர் செய்யாவிட்டாலுங்கூட, மற்ற காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களாவது, கட்சிக்கூட்டத்தைக் கூட்டி, தோற்ற பிரதமரைத் தலைவர் பதவியினின்றும் நீக்கிவிட்டு, வேறொருவரைத் தெரிந்தெடுத்திருக்க மேண்டும். இவ்விரு முறைகளுள், ஏதாவது ஒருமுறை கையாளப்பட்டிருந்தாலும், குமாரசாமிராஜா இடைக்காலப் பிரதமராக வந்திருக்கமுடியாது, கவர்னரும் அவரையே அழைத்திருக்கமாட்டார். இதற்குப் பயந்துதான் அவர், கவர்னர் தன்னையே அழைப்பார் என்று கூறிவிட்டு, ஆட்சி பீடத்திலேயே அமர்ந்திருக்கிறார்! புதிய ஜனநாயக பாடம் படிக்கிறார்!

**எந்த ஜனநாயக ரீதியில் இது பொருந்துமோ—அவர்தான் கூறவேண்டும்!**

ரொலியை. மக்கள் வருந்தவில்லை, இந்த மதோன்மத்தர்கள் ஒழிந்தது கண்டு! மகிழ்கிறார்கள்!! சுமையொன்று நீங்கியது போன்ற பெருமூச்சொன்றை விட்டுவிட்டு, 'அப்பாடா! தொலைந்தார்கள்!!' என்று ஆனந்த கீதம் பாடத் துவங்கிவிட்டார்கள்.

கேள்விப்படாத தோல்வி, படித்தறியாத பட்டியல், பரிசாகத் தரப்பட்டு வருகிறது — காங்கிரசுக்கு. "யாருமே எதிர்பார்க்கவில்லை இதுபோல நடக்குமென்று" என்ற, வேதனையோடு, தேசிய இதழ்களின் திருமனைகளிலும், தேசிய திருவாளர்களின் சந்திப்புகளிலும், ஏமாற்றக் குரல்கள் எழும்ப ஆரம்பித்துவிட்டன.

இறுமாந்து கிடந்தோர் — வீசியெறியப்பட்டு விட்டனர்! துப்பாக்கியால் துரைத்தனம் நடாத்தக் கனவு கண்டோர் படுகுழியில் வீழ்ந்துவிட்டனர்! ஒன்பது மந்திரிகள்—அவர்களிலே அறுவர் தோற்கடிக்கப்பட்டனர்!

இந்த முடிவு, சாதாரணமானதல்ல. ஆட்சியிலமர்ந்தோரை, விரட்டியிருக்கின்றனர் — 'இவர்களை'த் தேர்ந்தெடோம்! மாபாபிகள்போலப் பதைக்கவிட்டனர் எம்மை—இவர்கள் தேவையில்லை!" என்று தீர்ப்பு தந்துவிட்டனர்.

எங்குமே காண முடியாத காட்சி—இங்கே, வேதனைக்குப் பலியான மக்களால் சாதிக்கப்பட்டுவிட்டது. மந்திரி சபையில் அங்கம் வகித்த அத்தனை சூத்ரதாரிகளையும்— விரட்டியடித்துவிட்டார்கள்.

இந்தப் பாடம், ஜனநாயக உலகுக்குக் கிடைக்குப, நல்லதோர் எ[illegible]க்கை—பொன் முடிவு — பூரிப்புத் தென்றல். இவர்களைத் தோல்வியுறச் செய்ததன் மூலம், மக்கள் 'மாஜிகளாக' இவர்களை ஆக்கிவிட்டார்கள் என்பது மட்டுமல்ல, 'இந்த மந்திரிமார்களை பொறுப்புள்ளவர்கள் என நினைத்து அமர்த்தினோம் — ஏமாந்தோம் — இடர்பட்டோம். இனி ஏமாறோம்—இவர்கள் பொறுப்புள்ளவர்களல்ல! [illegible] பி[illegible]நிதிகளாக ஆகஇலாயக்கு[illegible]வர்களல்ல!!' என்ற, நன்[illegible]வையும் தெரிவித்துவிட்டார்கள்.

ஆனால், நமது 'மாஜி'யாகவிருக்கும் தோழர் குமாரசாமி ராஜாவுக்கு, 'தோல்வித் தோட்டா' பெற்ற பிறகு ஞானோதயம் அரும்பி, 'மக்களுக்கு பொறுப்புள்ளவராக' நடக்கவேண்டும் என்ற ஆசையைத் தந்திருக்கிறது — உண்மையென்று எண்ணுறீர்கள்!—அதுபோல அவர் சொல்கிறார்!!

பத்திரிகை நிருபர்கள் அவரைச் சந்தித்துக் கேட்டனராம்.

"ஐயன்மீர்! தோற்ற தாங்களும் பிற மந்திரிகளும் மீண்டும் பதவியில் இருக்கக் கூடாதென்று — எதிர்க்கட்சிகளும் மக்கள் மன்றமும் முழக்கமிடுகின்றனவே—தெரியுமோ?"

'தெரியும்! தெரிகிறது!!"—குமாரசாமியார், பதில் தந்திருக்கிறார்.

"பின் ஏன் ராஜினமா செய்யவில்லை?"—நிருபர்கள், கேள்வி.

"அது பொறுப்பற்றதனம். அடுத்த மந்திரி சபை அமைக்கப்படும் வரை நாங்கள்தான் இருக்க வேண்டும்."

குமாராசாமி அவர்களுக்கு, சர்க்காரை நடத்தும் 'பொறுப்பு' வந்திருக்கிறதே—சரி, பரவாயில்லை! தேர்தல் இத்திருவாசகத்தை தயாவது தெளிவுபடுத்தியிருக்கிறது—என்ற எண்ணத்தோடு, அவர் நிருபர்களுக்கு தந்த விளக்கத்தைக்கூர்ந்து கூர்ந்து தேடினோம் — அன்று முதல் இன்று வரை தினசரி இதழ்களின் ஒவ்வொரு வரியையும் கவனிக்கிறோம்—நாம் எதிர்பார்க்கும் விளக்கம் பற்றி சிறு குறிப்பு கூட வரவில்லை!

"மந்திரியார் பொறுப்பை அறிந்திருக்கிறார் — மக்களை நிர்க்கதிக்கு ஆளாக்கக் கூடாது, புது மந்திரிமார்களிடம் ஒப்படைக்கும் வரையில் நாமே நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் வந்திருக்கிறது. மக்களுக்குத் துரோகம் செய்யக் கூடாதென்கிற நற்புத்தி வந்திருக்கிறது" என்ற எண்ணத்தோடு,நான், நாம் இன்னும் ஒரு பதில் வருமா என்று காத்திருந்தோம். நாம் எதிர்பார்க்கும் பதில், வராதென்று, தெளிவாகத் தெரிய வருகிறது, இப்போது—நாம் காத்திருந்த நாட்கள், நகர்ந்து கொண்டேயிருப்பதால்.

மந்திரி நாற்காலிகளை விட்டுச் செல்வது 'பொறுப்பற்றதனம்' என்று கூறிய குமாரசாமி அவர்களிடமிருந்து நாம் எதிர்பார்த்த பதில் வேறெதுவுமல்ல — மாதாமாதம் தங்களுக்கென ரூ 1500 சம்பளமாக வாங்கிக்கொண்டு வருகிறார்களே, அது சம்பந்தமானதுதான்.

அமைச்சர் பீடத்திலிருப்பவர் பொறுப்போடு மக்களுக்கு துரோகமிழைக்காமல் நடக்கும் நோக்குடன் தாங்கள் மந்திரி சபையிலிருப்பதாகத் தெரிவித்தாரே என்ற நல்லெண்ணம்தான், இவரிடமிருந்து, அந்தப் பதிலை எதிர்பார்க்கும் படிச் செய்தது. "மக்கள் எங்களை நிராகரித்து விட்டார்கள். ஆனாலும் புது ஆட்சி அமைக்கப்படும் வரை எங்கள் கடமையைச் செய்வதுதான் முறை. அப்படிச் செய்யாவிடில், அது துரோகமாகும். ஆகவே மந்திரிகளாக இருக்க வேண்டியிருக்கிறது. மந்திரிகளாக இருப்போம்—நாட்டு நன்மைக்காக. ஆனால், அதைச் சேவையெனக் கருதுவோமே தவிர, கூலிக்குழைப்பதாக யாரும் கருத வேண்டாம். இதோ, இது வரை நாங்கள் வாங்கிவந்த சம்பளத்தொகை ரூ 1500யையும் இன்று முதல் புது ஆட்சி அமையும் வரை பெறமாட்டோம்—வேண்டுமானல் எங்கள் செலவுக்கு கொஞ்சம் 'அலவன்சு' பெற்றுக் கொள்வோம்".

இத்தகைய விளக்கத்தைத்தான் நாம் எதிர்பார்த்தது. ஆனால், 'பொறுப்பு' உணர்ந்த குமாரசாமியாரோ, இதுபற்றி எதுவும் கூறவில்லை! மாதாமாதம் நமது வரிப்பணத்தில் — வாழத்தான் போகிறார்கள்!!

"வரிகட்டும் மக்கள், நிராகரித்துவிட்டார்கள். ஆனால் இத் தியாகசீலர்கள்—அவர்கள் வரிப்பணத்தில் விட்டகுறை தொட்டகுறையாக, கொஞ்சநாளைக்காவது வாழ்வோம் என்று கருதுகிறார்கள்! என்னே கேவலம்! அநாகரீகம்!!" என்று நாம் கூறவில்லை. ஆனால் அத்தகைய எண்ணம் பலர் மனதில எழும்பினும் தவறில்லை!!

ஒரு மந்திரியின்மீது தங்கட்கு நம்பிக்கையில்லையென்று மக்கள் தெரிவித்துவிட்டால், உடனே அவ்வமைச்சர் தனது பதவியை உதறி



விட்டுச் செல்வதுதான்—ஜனநாயக முறை.

ஆனால் இங்கு! மந்திரிமார்களில் ஒருவரல்ல — முதல்வரே தோற்றிருக்கிறார். முதல்வரோடு மட்டும் முடிந்துவிடவில்லை, தோல்விப் படலம். அவரோடு, மந்திரிச்பையின் சூத்ரதாரிகளாக இருந்த அறுவர் —ஆமாம்! ஆறுபேர்!! — தோற்றிருக்கிறார்கள். கிட்டத்தட்ட மந்திரி சபையே தோற்றிருக்கிறது. மந்திரிமார்கள்மட்டுமல்ல, அவர்களைச் சார்ந்திருக்கும் கட்சியும் எதிர்க்கட்சிகளால் மூக்குடைபட்டுக்கொண்டேயிருக்கிறது. ஆனால், 'தூரத்தப்பட்டோரோ' இன்னும் இரண்டு மாதத்திற்கு மேல் பதவி வகிப்போம் என்று சொல்கிறார்கள்! விளக்கம் தருகிறார்கள்!!

விளக்கத்திலாவது, விவேகம் கலந்திருக்கிறதா என்றால் அனுதாபம்தான் வருகிறது — இவர்கள் மீது.

'தோற்ற மந்திரிகள் புது மந்திரி சபையை அமைக்கும்வரை பதவியிலிருக்கலாம் என்கிற இங்கிலாந்து முறையின்படியும், அரசியல் திட்டம் அனுமதிப்பதாலும் பதவியிலிருப்பது தவறு அல்ல"—இவ்விதம் சொல்கிறார்கள், விளக்கம் என்ற பெயரால்.

ஆனால், இங்கிலாந்திலே என்ன நடைபெற்றதென்பது, கண்கூடாக அறிவோம் நாம். அண்மையில் அங்கே, பொதுத் தேர்தல் நடைபெற்றது. தனதுகட்சி—தானல்ல!—தோற்றுவிடும் என்று அட்லிக்கு—பிரிட்டிஷ்பிரதமர்பொறுப்பிலிருந்தவர் — அறிகுறிதென்பட்டது. உடனே ராஜினமாவை ஒப்படைத்துவிட்டு வெளியேறினார்! ஒரு வினாடிகூட 'சட்டம், வழக்கம்' பற்றிப்பேசவில்லை!! ஆனால், இவர்கள், தேர்தல் முடிந்தபிறகும் பிப்ரவரி, மார்ச்சு, என்று மாதக் கணக்கில் காலந்தள்ளுவோம் என்றுகூறுகிறார்கள்!!

காலந்தள்ளுவோம்— சென்னைக் கடற்கரையின் காற்றை அனுபவிப்போம் என்று கூறுவதுமட்டுமல்ல, அடுத்த ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தை (பட்ஜட்) யும் வகுத்துவிட்டுத்தான் போவார்களாம்!!

மதிப்பிழந்து, மக்களால் வெறுத்தொதுக்கப்பட்ட இவர்களைப் பதவி ஆசை படுத்தும் பாட்டைப்பற்றி நினைக்கும்போது, பரிதாபம் வருகிறது நமக்கு.

மந்திரிகள் மக்கள் நம்பிக்கையை இழந்தோமென்று தெரிந்ததும், முதலில் தங்களது ராஜினமாக்களை, கவர்னரிடம் சேர்ப்பிக்கவேண்டும்—கவர்னர் விரும்பி கேட்டுக்கொண்டால் புது மந்திரி சபை ஏற்படும் வரை பொறுப்பிலிருக்கலாம், அதுவும் விருப்பம் இருந்தால்.

இதுதான் ஜனநாயக முறைப்படி நியாயம். ஆனால், இவர்களோ 'நாங்களே இருப்போம்!' என்று கூறுகிறார்கள். காரணம், ராஜினமா செய்தால், கவர்னர் மீண்டும் புது ஆட்சி அமையும்வரை இருங்கள் என்று கூறுவாரோ, மாட்டாரோ என்கிற ஐயம், இவர்களுக்குள்ளாகவே எழும்பியிருப்பதுதான். ஏனெனில், இவர்கள் தோற்றவர்களாயிற்றே! "தோற்றார் வேண்டாம்—புது ஆட்சி வரும்வரை காங்கிரஸ்காரர்களே வேண்டுமானலும் இருக்கட்டும். ஆனால் வெற்றிபெற்றோராக—யாராவது அப்பொறுப்பை வகிக்கட்டும்" என்று மக்கள்குரலெழுப்பினால், இரண்டு மூன்று மாதங்களாவது உல்லாசமாகக் காலந்தள்ளலாம்என்கிற நப்பாசை வீணாகிவிடுமே என்கிற பயம்போலும்!!

பதவி ஆசையால் கண்ணியத்தையும் கவுரத்தையும் இழக்கிறார்கள். பாபம்! பரிதாபம்,!

மக்கள் உதறித் தள்ளிய பின்னும் அரசு பீடத்தில் அமர்வது அழகல்ல—அநாகரீகம்! அதையுணர்ந்து உடனே இந்த மகானுபாவர்கள் வெளியேறினால் நல்லது—அரும்பும் ஜனநாயகம் வளர வழி செய்தவர்கள் ஆவார்கள். இல்லையென்றால், 'பதவியாசை கொண்டோர்' என்று இவர்கள், இந்தஐந்தாண்டுக் காலத்தில், பெற்றிருக்கும் 'நல்ல பெயரை' முத்திரையாகப் பொறித்துக் கொண்டேசெல்வார்கள்!

# வாழ்க திண்டிவனம்!

வடவருக்கும், அவர் தம் வால் பிடித்து திரிவோருக்கும் திண்டிவனம் நல்ல பாடம் போதித்து விட்டது.

திண்டிவனத்தின் தீரத்தை, திராவிடம் புகழ்கிறது — அதே நேரத்தில் திராவிட மென்றாலே தீராத விஷமாகக் கருதிடுவோரோ, திண்டிவனம் என்றவுடன் நடு நடுங்குகின்றனர்.

பார்லிமெண்ட் தேர்தலில் திண்டிவனம் தொகுதியில், வடநாட்டு பனியா, பெரிய பண மூட்டை, பத்திரிகைத் தொழில் மூலம் திராவிடத்தை சுரண்டிடும் முதலாளி கோயங்காவை காங்கிரஸ் சார்பில் நிறுத்திபிருந்தனர். அப்பொழுதே கண்டித்தோம் நாம். நாட்டிலுள்ள நல்லறிவாளர்கள் அனைவருமே நம் பக்கம் தான் நின்றனர்.

பனியாவை எதிர்த்தார் செந்தமிழர் திருக்குறள் முனுசாமி. இருப்புப் பெட்டியுடன், திருக்குறள் மோதிற்று!

மாட்டுப் பெட்டியின் பக்கத்தில் பனியா—சேவல் பெட்டியின் அருகில் திராவிடத்தின் இலட்சிய முரசு கொட்டும் வீரர்.

சேவல் தான் கூவிற்று—மாடோ மருண்டோடி விட்டது!

கோயங்காய், தேர்தல் இலவங்காய் கனியாகும் என்று காத்திருந்தார். அது வெடித்து விடவே விரண்டோடி விட்டார்.

சேவலின் கூவல், இன்று அகில இந்தியாவிலும் கேட்கிறது. திண்டிவனம், தீரர்புரியென்று, அந்தக் கூவல் எதிரொலிக்கிறது.

திண்டிவனம் தீரர்களைப்பாராட்டுகிறோம். திருக்குறள் முனுசாமியின் வெற்றி திராவிடத் தனியரசு பிரச்சினையின் வெற்றியெனக் கருதுகிறோம். அவரையும் வாழ்த்துகிறோம். திராவிட மக்களின் உள்ளத்தை எடைபோட உதவிய தோற்ற கோயங்கா அவர்களுக்கும் நன்றி செலுத்துவோமாக!

திராவிடநாடு

காஞ்சி] 27—1—52 [ஞாயிறு

# மன்னியுங்கள்! மன்னியுங்கள்!!

☆

குற்றங்கள் செய்துவிட்டார்கள் எங்கள் குணங்கெட்ட மந்திரிகள்—குரங்காட்டம் ஆடிவிட்டார்கள்—கோபித்துக்கொள்ளாதீர்கள். கோணல் திட்டம் தீட்டிவிட்டார்கள். ஆத்திரப்படாதீர்கள்.

வீண் செலவுகள் செய்துவிட்டோம்—அது எங்கள் புத்திகெட்டத்தனம். விபரீதமாக நடந்துவிட்டோம். அது எங்கள் அறியாமையின் விளைவு! ஐந்து ஆண்டுகளில் நாங்கள் செய்த குற்றங்கள் குன்று உயரம்—பிழைகள் பெரிய சமுத்திரம், இருந்தாலும் மன்னியுங்கள்! மன்னியுங்கள்!! மன்றாடிக் கேட்கிறோம், மண்டியிட்டு வேண்டுகிறோம். எங்கள் தவறுகளை உணர்கிறோம். வருந்துகிறோம். மன்னிப்புக் கேட்கிறோம். பழைய தவறுகளை பெரிய மனதுடன் மறந்துவிடுங்கள். மன்னியுங்கள்! மன்னியுங்கள்!!

சோகக் குரலில், பேசியிருக்கிறார், பம்பாய் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல்

பட்டீல் பாராளு மன்ற உறுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பட்டதைப் பாராட்ட, இந்திய வர்த்தக சங்கத்தார் விருந்தளித்த பொழுது, அவர் இப்படி, காங்கிரஸ் தவறு செய்துவிட்டது, மக்களே மன்னியுங்கள், என்று பேசியுள்ளார்.

பட்டீல் பாராளுமன்றத்திற்கு தெரிந்தெடுக்கப்பட்டுவிட்டார். அவர் பாராட்டு விழாவில், சோகக் குரலில் பேசுகிறார். அவரும் ஒரு மாகாணத்தின் காங்கிரஸ் ராஷ்டிரபதிதான்.

ஆனால், தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவர் காமராஜர் இன்னமும், காங்கிரஸ் பிரதாபம் பற்றித்தான் பேசுகிறார்.

பம்பாயாவது காங்கிரஸ் மெஜாரிட்டியைக் காப்பாற்றியிருக்கிறது. அங்கே பிரதாபம் பற்றிப் பேசினால் அர்த்தமுண்டு. அங்கே புலம்பல்—ஆனால் இங்கே பிரதாபம்! ஆறு காங்கிரஸ் மந்திரிகள் 'அரோகரா' வாகிவிட்ட இங்கே பிரதாபம்—காங்கிரஸ் மெஜாரிட்டியை காப்பாற்ற முடியாத இங்கே பிரதாபம்—இதுதான் விசித்திரம்!

ஆனால் தோற்ற முதல் மந்திரி குமாரசாமி ராஜா. 'இந்தத் தேர்தல் காங்கிரஸ்காரர்களின் கண்களைத் திறந்துவிட்டது' என்று கூறியுள்ளார்.

கண்கள் திறந்துள்ளன என்பதை அவர் கண்கள் கண்டுபிடித்து விட்டன!

அது மட்டுமல்ல, காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக்கு வந்த இரண்டொரு திங்களுக்குள் அதிகார போதையால், அவர்கள் கண்களை மூடிக்கொண்டார்கள். அதனால்தான் ஐந்தாண்டாக நாட்டு மக்களின் கண்கள் திறந்து பல நாட்களாகிவிட்டன என்பதை உணராமல் இருந்து வந்தார்கள்.

தேர்தல் வந்து தோல்வி கண்ட பிறகுதான் அவர்கள் கண்கள் திறந்தன. ஆனால் மக்களின் கண்கள் திறந்துவிட்டன, முன்னரே!—பிரதமர் கண்களை திறந்ததோடு நிறுத்திவிட்டார்.

குமாரசாமி ராஜாவின் கண்கள் திறந்துவிட்டன—வாய் திறக்கவில்லை. தோல்வியால் ஏற்பட்ட துயரங்கூட இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால் பட்டீல் சொல்லிவிட்டார். பகிரங்கமாக குற்றங்களை ஒப்புக்கொண்டுள்ளார்.

அதுமட்டுமல்ல, பல ராஜ்யங்களில் மந்திரிசபைகளை காங்கிரஸ் அமைக்க முடியுமோ, முடியாதோ தெரியவில்லை. மத்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் ஒரே அரசியல் கட்சியாரால் அமைக்கப்படாவிட்டால் எத்தனையோ தொல்லைகள் உண்டு என்றும் அவர் கூறியுள்ளார்.

பட்டீல் பாவ மன்னிப்புகோரி மக்கள் மன்றத்தில் நின்றாலும், காலம் கடந்துவிட்டது என்பதைக் கவனப்படுத்துகிறோம்.

அவர்கள் ஆட்சியில் இருக்கும் பொழுதே, இம்மாதிரி மன்னிப்புப் பேச்சுகள் பேசி, மக்கள் மன்றத்தினரிடம், மன்னிப்புப் பெற்று, ஆட்சிக் குழுவார் செய்யும் தவறுகளைத் திருத்தியிருந்தால் அர்த்தமுண்டு.

அப்பொழுது கண்களை மூடிக்கிடந்துவிட்டு, வாயையும் திறக்காமல் இருந்துவிட்டு, இப்பொழுது மன்னியுங்கள், மன்னியுங்கள் என்று பேசினால், பட்டீலுக்கு மனச்சாந்தி கிடைக்கலாம் மக்கள் எப்படி மன்னிப்பர், மறப்பர்?

கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்று கிராமப் புறங்களில் கேட்டிடும் பழமொழியைப்போலத்தான் பட்டீல் பேச்சு இருக்கிறது.

ஆண்டு முடிந்த பிறகு, அவர் மன்னிப்பு கேட்கிறார். அக்கிரமம் நடந்த பிறகு அவர் அடைக்கலம் கேட்கிறார். அநியாயம் இழைத்து அல்லல்பட்ட பிறகு, மறந்துவிடுங்கள் என்கிறார்.

மன்னிப்பு கொடுத்து, நடந்ததை மறந்துவிட்டு, என்ன செய்யவேண்டும் என்கிறார் என்றால், காங்கிரஸ் நாடாளவிடவேண்டும் என்கிறார்.

மன்னிப்பு கிடைப்பதே அரிது. மறுபடியும் முடி சூட்டுவிழா நடவாத காரியம்! மிக மிக அரிது.

பட்டீல், காலங்கடந்து மன்னியுங்கள், மன்னியுங்கள், என்கிறார். அதனால் பலன் ஏதும் இல்லை. ✲

5-ம் பக்கத் தொடர்ச்சி

கள். அதுபற்றி நமக்கு அக்கரையில்லை.

ஆனால் இவர்கள் தோல்வி சாதாரணமானதல்ல- காங்கிரசுக்குப் பேரிடி! பக்தவத்சலம், இன்று கூறுவது போல், அரசியல் துறவறம் பூணுகிறேன் என்று அறிவிக்க வேண்டிய பெரிய அரசியல் வாதியல்ல அவர் என்பதை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? தோல்வியைத் துடைத்துக் கொள்ள ஆறுதல்மொழியாக இருக்கலாம் இது. ஆனால் உண்மை இதுவல்ல! தோற்ற அறுவரும், காங்கிரசின் எடுபிடிகளல்ல—நாடாண்டவர்கள்—அதுவும் முக்கிய இலாகாக்களை ஏற்று பணியாற்றி

11-ம் பக்கம் பார்க்க



14230 600 008

# விதைத்தனர்! : : அறுக்கின்றனர்!!

தினை விதைத்தவன், தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான் என்று, நாட்டுப் புறங்களில் பழகிடும் பழமொழிக்கு இன்று நல்லசாட்சிகள் நம் சென்னை மாகாண மந்திரிமார்கள். இந்த மதி மந்திரிகள் இந்தத் தேர்தலில் அறுத்தெடுத்தது, அவர்கள் பதவியில் அமர்ந்து, எதை விதைத்தார்களோ, அதையேதான்! தாங்கள் ஆட்சியில் அமர்ந்தபிறகு மக்கள் மத்தியில் வேதனையை விதைத்தார்கள். ஆகவே வேதனையைத்தானே அறுத்தெடுக்க முடியும்? ஆனால், அவர்களும், அவர்களின் கொடி தூக்கிகளும், 'பராக்கு'களும் நாட்டுக்கு எங்கள் சாதனை யென்று பேசாத நாளில்லை!

பதினொரு மந்திரிகளில் ஒருவர் போட்டியிடவில்லை. மற்ற பதின்மரில் ஆறுபேர் தோற்றனர். தோற்ற மந்திரிகள் ஒவ்வொருவரும், தோற்றதற்கு ஒவ்வொரு காரணம் கண்டுபிடித்துக் கூறாமல் போய்விடவில்லை.

ஆனாலும், வேதனைதந்த, இத்த வீண் மந்திரிகளை, நாட்டு மக்கள் வீட்டுக்கனுப்பிவிட்ட செய்தி, அரசியலில் முக்கிய நிகழ்ச்சி—காங்கிரஸ் கட்சிக்கு சரியானதோர் படிப்பினை—அதிகார மமதையாளர்களுக்கு சுளீர் சவுக்கடி—அதிகார போதையேறிக் கிடப்போருக்கு தக்கதோர் பாடம்! மந்திரிகளுக்குப் பாடம் புகட்டிய மக்களை மனமார பாராட்டுகிறோம். மக்கள் உள்ளத்தில் மலை போல் வளர்ந்து வரும் அரசியல் தெளிவு வளர்க, வளர்க, என்று கூறுகிறோம்.

சென்னை ராஜ்யத்தில் காங்கிரஸ் ஆளவந்த பிறகு, மந்திரி சபை மூன்று முறை மாறி மாறி வந்தது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், மக்களுக்கு நன்மை செய்யவே, இந்த மாற்றம் என்று பேசினர்! இது அவர்களுக்குள்ளே வளர்ந்துள்ள பதவி பாசம், மனமாச்சரியம் என்று நாம் கூறியபோது ஏசினர்!!

பிரகாசம் வந்தார்—ஒளி வந்துவிட்டது, இனி எல்லாம் பிரகாசமாகி விடும் என்றனர். ஆனால் அவரே, பிறகு இருட்டானார். ஓமாந்தூரார் வந்தார், கலியுக ஜனகர் காணீர் என்று பேசினர். பிறகோ, அவரையும் விரட்டிவிட்டு, குமாரசாமி ராஜா மந்திரி சபை அமைத்தார். இப்படி, மாறி மாறி மந்திரி சபை வந்தும், மக்களுக்கு துன்பம் போய் துக்கம் என்றுதான் நாம் கண்டோம்.

மக்கள், இந்த மதி மந்திரிகளின் ஆட்டபாட்டங்களை மனதில் வைத்துக் கொண்டு, நல்ல படிப்பினை தந்துவிட்டார்கள்—அவர்கள் வாழ்க, அவர்களின் நெஞ்சுறுதி வளர்க!!

பதினொரு மந்திரிகளில் தொழில் மந்திரி பெருமாள்சாமி ரெட்டியார், தேர்தலில் போட்டியிடவில்லை. நல்லவேளை, அவர் தப்பித்துக் கொண்டார்—அவர் மந்திரியாக வந்து, நாட்டுக்குத் தேவையான நன்மையென்று அவர் செய்தது தேர்தலில் நிற்காதது ஒன்றே ஒன்றுதான்! அவரது முன்யோசனைக்கு, நன்றி—அவரது தேர்தல் துறவறத்திற்கு நமது பாராட்டு!

நான்கு மந்திரிகள் எப்படியோ ஜெயித்துவிட்டனர். அவர்கள் எப்பாடு பட்டோ, முட்டியடித்து, வந்துவிட்டனர். கனம் சீதாராம ரெட்டி, பார்லிமெண்டுக்குப் போய் விடுவார். இந்தத் தொல்லையே வேண்டாம், சென்னையை விட்டு சென்றிடுவேன், என்று டெல்லி பார்லிமெண்டுக்குச் சென்று விட்டார்.

விவசாயத்தை வீணாக்கிய ஏ. பி. ஷெட்டி., உணவு நிர்வாகத்தை உருக்குலைத்த ரோச் விக்டோரியா, அரிஜன மந்திரி பரமேஸ்வரன், வெகுபாடுபட்டு, தப்பிப் பிழைத்து விட்டனர்.

இவர்கள் மக்கள் கவனத்திலிருந்துவிலக்கப்பட்டவர்களாகவே, இவர்கள் ஆளும்பொழுது கருதப்பட்டார்கள். ஆனால், இன்று அவர்களையும் மக்கள் விடுவதற்குத் தயாராகவில்லை யென்றாலும், தேர்தல் திருவிளையாடல்கள் மூலம் வந்து விட்டனர்—வந்து என்ன செய்வது!

மக்களின் மனதை அரித்துக் கொண்டிருந்த மந்திரிகளை மட்டும் விடவே இல்லை—ஓட ஓட விரட்டியடித்து விட்டனர்.

காங்கிரசுக்கு, நேரு அதிர்ச்சி வைத்தியம் செய்வதாகக் கூறினர். ஆனால், சென்னை ராஜ்ய மக்கள், செய்த அதிர்ச்சி வைத்தியம்தான் பாராட்டுதலுக் குரியது!

முதல் மந்திரி குமாரசாமி ராஜா தோற்றார் என்ற செய்தி வருகிற வரையில், மக்கள் பலர் மனக்குறையுடன் தான் உலவினர். தினமும் ஸ்ரீவில்லிபுத்தூர் என்னவாயிற்று, என்று கேட்காத ஆளில்லை—அவர் மீது மக்களுக்கு அவ்வளவு அபார திருப்தி!!

பணநாயகராக, பவனி வந்த கோபாலரெட்டியாரும், 'கோவிந்தா' என்று கேள்விப்பட்ட பிறகு, மக்கள் உள்ளத்திலே களிப்பு!

எவர் போனாலென்ன, எவர் வந்தாலென்ன, நான் ஓடிக் கொண்டேயிருப்பேன் என்றொரு ஆங்கிலக் கவிதையின் முதலடி, பக்தவத்சலத்தை நினைத்துக்கொண்டால், தானே உதடுகளில் தொனிக்கும். எவர் பிரதமராக வந்தாலும், போனாலும், அவர் மராமத்து மந்திரி! அவருக்கே இந்தத் தேர்தலில் 'மராமத்து' செய்துவிட்டார்கள் மக்கள். அவர், இந்தத் தேர்தலில் வெற்றிபெற என்னென்ன மாய்மாலங்கள் செய்தார்—ஆனாலும் பக்தவத்சலம் படுதோல்வியென்று படித்தபிறகே மக்கள் முகம் மலர்ந்தது.

காளா வெங்கட்டராவ், சந்திர மௌலி, இவர்கள் தோற்றார்கள் என்ற செய்திகள் வரும்பொழுதெல்லாம், தோற்ற மந்திரிகளின் எண்ணிக்கையைக்கூட்டிப்பார்த்துப் பூரித்தனர் மக்கள்.

கல்வி மந்திரியாக இருந்த கனம் மாதவமேனன் மண்ணைக் கவ்விடும் மங்களகரமான மகத்துவநாளை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்தனர். அதுவும் நடந்தேறிவிட்டது.

தோற்றவர்கள், தோல்விக்கு ஒரு காரணம் கண்டுபிடித்துக் கூறுகிறார்

(4-ம் பக்கம் பார்க்க)

## ☆ உலக நீதிமன்றம் ☆

உலக நாடுகளுக்குள் ஏற்படும் தகராறுகளை விசாரித்து, பாரபட்சமற்ற முறையில் நீதி கூறுவதற்காக ஏற்பட்டது உலக நீதி மன்றம்.

இது நெதர்லாந்தின் அழகிய நகரமான தி ஹேக் என்னுமிடத்தில் வேலை செய்கிறது. இதில் பத்துப் பதின்மூன்று நீதிபதிகள் உள்ளனர் — உலகின் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள். சமீபத்தில், டில்லி அரசாங்கத்தைச் சேர்ந்த சர் பி. என். ராவ் என்பவரும் உலக நீதி மன்றத்தின் நீதிபதிகளுள் ஒருவராக நியமிக்கப் பட்டுள்ளார். எல்லா நீதிபதிகளுமே, உலக சட்ட அறிஞர்களின் முன்னணியில் வீற்றிருக்கத் தகுதி வாய்ந்தவர்களெனத் திடமாகக் கூறலாம்.

இந்த நீதிபதிகள், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் குழுவில் பெரும்பான்மை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாதுகாப்பு சபையால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே பதவி வகிக்க உரிமை பெற்றவர்களாவர்.

உலக நாடுகளுக்குள் ஏற்படும் தகராறுகளை சட்டத்திற் குட்பட்ட முறையில் தீர்த்து வைப்பதின் மூலம், அவைகளுக்குள் போர் ஏற்படாமல் தடுக்கவேண்டும் என்பதே இந் நீதி மன்றம் நிறுவப்பட்டதின் நோக்கம்.

தனிமனிதன் தன் குறைகளைத் தீர்த்துக் கொள்ள நீதி மன்றம் செல்கிறான். சட்டத்தின் பிரகாரம் நீதிபதி அவனுக்குத் தீர்ப்பளிக்கிறார். இத்தீர்ப்பிற்கு அவன் கட்டுப்பட்டவன். இதில், இரண்டு விஷயங்களைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்: ஒன்று; நீதி வழங்குவதற்காகச் சில சட்டங்கள் இயற்றப்பட்டு அமுலில் இருக்கின்றன. இரண்டு; இச் சட்டங்களின் பிரகாரம் அளிக்கப்படும் தீர்ப்பிற்கு எல்லோரும் கட்டுப்பட்டுத் தானாக வேண்டும். கட்டுப்படாவிடின், அரசாங்கம் தண்டிக்கும்.

சட்டம் வேண்டும் — சட்டப்படி அளிக்கப்படும் தீர்ப்பு நிறைவேற்றப்படவேண்டும்.

உலக நீதி மன்றத்திற்குச் சட்டம் இருக்கிறது — சர்வதேச சட்டம் (International Law) என்ற பெயராளவில் நாடுகள் ஒன்றுடனொன்று தனித்தனியே செய்து கொள்ளும் உடன்படிக்கைகள், அல்லது அவைகள் கூட்டங் கூட்டமாக ஒன்று சேர்ந்து அமைத்துக் கொள்ளும் ஏற்பாடுகள், சமாதான உடன்படிக்கைகள், பொதுவாக எல்லா நாடுகளும் ஒத்துக்கொள்ளத் தகுந்த "சம்பிரதாயங்கள்"— இவைபோன்றவைகளின் தொகுப்புதான் சர்வதேச சட்டம்.

நாடுகளுக்குள் ஏற்படும் பலப்பல சச்சரவுகளைத் தீர்த்துவைப்பதற்கு, இச் சட்டம் போராதெனப் பல அறிஞர்கள் கருதுகின்றனர். இன்னுஞ் சிலர், இருக்கிற சட்டத்தையே அமுல் நடத்த முடியவில்லை— இந்நிலையில் புதிய சட்டங்கள் தேவையில்லை என்கின்றனர். இருசாரார் சொல்வதிலும் உண்மையிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட தகராறில் உலக நீதி மன்றம் தீர்ப்பளித்த பின்னர், அத்தீர்ப்பை யார், எப்படி, அமுல் நடத்துவது—என்ற கேள்வி எழுகிறது. தீர்ப்பு நியாயமற்றது என்று கருதும் நாடு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். சரி, பாதுகாப்பு கவுன்சிலின் அபிப்பிராயத்தை அந்த நாடு ஏற்க மறுக்குமானால்?

இந்தக் 'கேள்விக்குப் போர்க்களத்திலேதான் முடிவு காணவேண்டும்!

அதாவது, தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு ஒரு "பலம்" தேவை. இந்தபலம் இன்னும் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஏற்படவில்லை. அதுவரை, ஒவ்வொரு நாடும் தானே நியாயத்திற்குக் கட்டுப் பட்டால் தான், தீர்ப்பு நிலை பெறக்கூடும்.

இதற்குத் தகுந்த சூழ் நிலை இப்பொழுது காணப் படவில்லையென்றாலும், நீதிபதிகளின் பாரபட்சமற்ற தன்மையும், நேர்மையும், கண்ணியமும் போற்றுதற்குரிய முறையில் அமைந்துள்ளன.

சமீபத்தில், பிரிட்டன் சம்பந்தப்பட்ட ஒரு தகராறில், பிரிட்டனுக்கு விரோதமாக ஒரு பிரிட்டிஷ் நீதிபதி தீர்ப்பளித்தார்! இது அவரது கண்ணியத்தைக் காட்டுகிறது. இருப்பினும் பிரயோசனமில்லை. நீதிபதியின் தீர்ப்பை பிரிட்டன் மதித்து நடக்கவில்லை.

தீர்ப்புகளுக்கு உலக நாடுகள் பணிந்து நடந்தால்தான், உலக நீதி மன்றம் உருவான பலன்தர முடியும்.

❀

## வருந்துகிறோம்

நமது நண்பரும் நேஷனல் பிக்சர்ஸ் உரிமையாளர்களில் ஒருவருமான திரு. P. A. பெருமாள் அவர்களின் துணைவியார் சாந்தநாயகி அம்மையார் அண்மையில் சென்னையில் இயற்கை எய்திய செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். அன்புத் துணைவியாரை இழந்த நண்பர் அவர்கட்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது துயரம் பிணைந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்களின்

**புதிய நூல்கள்**

**தங்கையின் காதலன்**
8-அணா

☆

**பதவி**
8-அணா

☆

**திண்டுக்கல்லில் தங்கப்பழம்**
4-அணா

விற்பனையாளர்க்கு கழிவு 25o/o செலவு இனம்.

**செல்வம் பதிப்பகம்**
வெண்கலக் கடைத்தெரு
மதுரை.




# நமது அன்பு வாழ்த்துக்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவோடு, பொதுத் தேர்தலில், காங்கிரஸ் ஆதிக்க வெறிக்கு சாவுமணி யடித்து, வெற்றி பெற்றோரின் பட்டியலைக் (21—1—52 வரை) கீழே தந்துள்ளோம் — உளப் பூரிப்போடு. நமது மதுரைத் தீர்மானப்படி ஒப்பந்தப் பத்திரத்தில் கையெழுத்திட்டு,

> திராவிட நாடு தனியரசுக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்,
>
> அதற்காக சட்டசபையிலும் பார்லிமெண்டிலும் போராடுவேன்,

என்ற உறுதிமொழியோடு, உதயசூரியன்போல, காங்கிரஸ் இருளைக் கிழித்து, வெற்றிமாலை சூடிய இவர்களின் பவனியைப்பற்றி நினைக்கும்போது, பூரிப்புக் கொள்கிறோம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட இத் திருச்செல்வர்களுக்கு, ஆங்காங்குள்ள மக்கள், மலர் மாலைகள் சூட்டி, மகிழ்வு அலைகளைக் காட்டி, தங்கள் ஆனந்த வெள்ளத்தால் மூழ்கடித்தனர். அந்தச் செய்திகள், நம்மை மேலும் மகிழ்வுகொள்ளச் செய்தன — ஐந்தாண்டுக் காலம் இந்நாட்டை ஆட்டிப் படைத்த காங்கிரஸ் வெறியைப் புறமுதுகிடச் செய்து, தமிழக விளக்குகளாம் இவர்களை, தங்களது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்து, அகமகிழ்ந்து ஆனந்தமுற்றனர் என்பதால். மக்களின் நற்பணிக்கு நமது இதயம் அன்பு வாழ்த்துகளைக் குவிக்கிறது. ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டு நமது ஆதரவைப்பெற்ற அபேட்சகர்களுக்காக, இரவையும் நேரத்தையும், ஓய்வையும் தொல்லையையும் பாராது; புயல்போல தினசரி நமது பிரச்சார வீரர்கள் தமது பணியைச் செய்திருக்கின்றனர். கடமை மறவா அக் காளைகளின் தொண்டு, சட்டசபையில் தென்றலும் நிலவும் பவனிவரப் பயன்பட்டிருக்கிறது—கடந்த இரண்டு மாதங்களாக, பாசீசம் ஒழிய, உரிமைக் கோரிக்கைக்கு உரம் தேட, வாழ்விழந்தோர் வாழ, அவர்தம் பணி, மிக மிகப் பயன்பட்டது என அறிய மகிழ்கிறோம். அவர்தம் உழைப்புக்கு நமது ஆனந்த வாழ்த்துகள்!

பிரச்சார வீரர்கள் ஒருபுறம் பணியாற்ற, கழக ஆதரவு பெற்றோருக்கு வெற்றி தேடித் தரவேண்டும் என்ற வீராவேசத்தோடு, அல்லும் பகலும் அயராது நமது கிளைக் கழகங்கள் பணிபுரிந்திருக்கின்றன—ஒவ்வொரு கழக வீரரும், காங்கிரஸ் முதலையை முறியடிக்க, தங்கள் சக்திக்கு மீறிய அளவு ஒத்துழைப்பளித்திருக்கின்றனர். கொள்கை காக்கும் குன்றங்கள், அவர்கள். அவர்தம் பணிக்கு எதிர்காலம் நன்றி கூறும்! நல்வாழ்வு, புகழுரை சூட்டும்!!

இருள் நீங்கி; புதுவாழ்வு மலர, வெற்றிபெற்று நிற்கும் தமிழகத் திருவிளக்குகளுக்கு நமது அன்பு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்தம், வெற்றி கண்டு களிநடம்புரிந்து மாலைகள் சூட்டி, மனமெல்லாம் இன்பமழை பெய்ததுபோல், ஏறுநடை போடும் பொதுமக்களுக்குரியோராக நடக்கவேண்டும், நல்வாழ்வு மிளிர அவர்தம் பணி வளரவேண்டும் எனத் தெரிவித்துக்கொள்கிறோம்—வாழ்க வெற்றி விளக்குகள்! வளர்க உரிமைக் கோரிக்கை!!

## பார்லிமெண்டு

| | | |
|---|---|---|
| திண்டிவனம் | ... | திருக்குறள் முனுசாமி |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஏ. ஜயராம் |
| காஞ்சிபுரம் | ... | டாக்டர். ஏ. கிருஷ்ணசாமி |
| வந்தவாசி | ... | என். ஆர். முனுசாமி |
| தர்மபுரி | ... | என். சத்யநாதன் |

## சட்டசபை

| | | |
|---|---|---|
| பண்ருட்டி | ... | எஸ். ராதாகிருஷ்ணன் பிஏ. |
| விருத்தாசலம் | ... | என். பரமசிவம் பி. ஏ. |
| ,, (ரிசர்வ்டு) | ... | கட்டிமுத்து |
| திருக்கோயிலூர் | ... | டி. டி. முத்துக்குமாரசாமி |
| ,, (ரிசர்வ்டு) | ... | எ. முத்துசாமி |
| விழுப்புரம் | ... | நாகராஜன் |
| விக்கிரவாண்டி | ... | எ. கோவிந்தசாமி |
| திண்டிவனம் | ... | வேணுகோபால் |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஜகன்னாதன் |
| செஞ்சி | ... | கே. அரங்கநாதன் |
| மேல்மலையனூர் | ... | கோபாலர் பி. ஏ. பி. எல். |
| பழனி | ... | எம். பி. மங்களக்கவுண்டர் |
| ஒட்டன்சத்திரம் | ... | எஸ். இலட்சுமிபதி |
| அரூர் | ... | எ. துரைசாமி |
| ஓமலூர் | ... | பி. ரத்தினசாமி |
| ஆத்தூர் | ... | எம். பி. சுப்பிரமணியம் |
| கிருஷ்ணகிரி | ... | டி. கிருஷ்ணமூர்த்தி |
| மாயவரம் | ... | கே. ஆர். சம்பந்தம் பி. ஏ. |
| ,, (ரிசர்வ்டு) | ... | ஏ. வேலு |
| அரக்கோணம் | ... | பி. பக்தவத்சலம் |
| திருப்பத்தூர் | ... | இ. எல். ராகவன் பி. ஏ. பி.எல். |
| ஆரணி | ... | வி. கே. கண்ணன் |
| வந்தவாசி | ... | எஸ். சோமசுந்தரம் |
| ,, (ரிசர்வ்டு) | ... | தசரதன் |
| வாணியம்பாடி | ... | எ. கே. அனுமந்தராயர் |
| செய்யாறு | ... | தருமலிங்கம் |
| போளூர் | ... | எம். எ. மாணிக்கவேல் |
| ஸ்ரீபெரும்புதூர் | ... | டி. சண்முகம் |
| முசிறி | ... | தங்கவேலு பி. ஏ. பி. எல்., |

☆

# சர்ப்ப நாட்டியம்

[தில்லை-வில்லாளன்]

உரிமைக் குரல் கேட்கிறது! சுதந்திர இசை முழங்குகிறது!!

இதனைக் கேட்ட, ஆதிக்க சர்ப்பம், இடியோசை கேட்டதைப் போல பயந்து நடுங்குகிறது.

ஆதிக்க வெறியாட்சியின் காலம் அஸ்தமித்து வருகிறது என்று கூறுகிறது, அந்த விடுதலைக்குரல்! உரிமையின் சகாப்தம் உதயமாகி விட்டது என்பதை எடுத்துக் காட்டுகிறது, அந்த நாதம்!

சுதந்திர நாதங்கேட்டு, வல்லரசு நாகம், நடுங்குவதை நாம் காண்கிறோம்—உலகம் காண்கிறது!

ஆதிக்கத்தின் சர்ப்ப நாட்டியம் முடிவதைக் காண, உரிமையின் பெருமை புணர்ந்தோர் அனைவரும் களிப்படைகின்றனர்!

உரிமைக் குரலொலி, இன்று டுனிஷியாவில் கேட்கிறது!

அந்தக் குரலின் எதிரொலி இன்று அகில உலகத்திலும் கேட்கிறது.

டுனிஷியா, வட ஆப்ரிக்காவில் உள்ள சிறியதோர் நாடு.

ஒருபக்கம் மத்திய தரைக்கடல், மற்றொருபக்கம் சஹாரா பாலைவனம் — இரண்டு பக்கங்களிலும் அல்ஜிரியா, டிரிபோலிடேனியா ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்ட நாடு, டுனிஷியா.

டுனிஷியா, வரலாறு வாழ்த்தும் வண்ணச் சிறு நாடு.

டுனிஷியா, இன்று அதன் பெயர் —ஆனால், இதுதான் கிரேக்கரும், ரோமரும் பொற்கால பூபதிகளாக உலவிய நேரத்தில், ஆப்ரிக்கா கண்டமெனவே கருதப்பட்டு வந்தது.

மனிதனின் கண்கள், அதிக தூரம் பரவமுடியாத அந்த நேரத்தில், இன்றைய டுனிஷியாதான், அன்றைய ஆப்ரிக்காவாக இருந்தது. அதற்கு அதன் பெயரே சாட்சி சொல்லும். அராபி மொழியில் இதன் பெயர் இப்ரிக்யா. இதனை லத்தீன் மொழியில் இப்ரிகியா என்று அழைத்தனர். அந்தப் பெயரேதான் ரோமர்களால் ஆப்ரிக்கா என்று அழைக்கப்பட்டது. கார்த்தஜினிய ஆட்சியிலே இருந்த நேரத்திலும், ரோமர்கள் பிடிக்கு வந்தபொழுதும், பெலிசரிஸ் வென்ற பொழுதும், அராபியர்கள் ஆட்சியில் இருந்த பொழுதும், டுனிஷியா தன் புகழொளி பரப்பத் தவறவில்லை.

பிறகு அங்கு வெள்ளையர்களின் குடியேற்றம் அதிகரித்து, இறுதியில் அது பிரஞ்சுக் காலனியாகி விட்டது. கி. பி 1881ல், பிரஞ்சு ஆதிக்கம் அங்கே உதயமாகிவிட்டது.

சரித்திரச் சிறப்பு பெற்ற டுனிஷியா, இன்று பிரஞ்சு வல்லரசின் இரும்புப் பிடியின் கீழ் இருக்கிறது.

அங்குதான், விடுதலை விருத்தம் இசைப்போரின் தொகை வளர்ந்து, போர்முரசுகொட்டி, அறப்போரும் தொடங்கிவிட்டது.

பிரஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடும் தேசிய உணர்ச்சி இன்று பொங்கி வழிகிறது.

பிரஞ்சு வல்லரசினை எதிர்த்து அறப்போர் நடத்தும் பெரும் பணியை நடத்தி வருபவர், விடுதலை வீரர் ஹபீப் போர்ஜிபா. அவர்தான், டுனிஷியா மக்களின் உறக்கத்தை நீக்கி, உணர்ச்சியையூட்டி, விடுதலை வேட்கையைப் பெருக்கி, வீராவேசத்தை எழுப்பி, 'டுனிஷியா, டுனிஷியருக்கே' என்ற உரிமை முழக்கத்தை கிளப்பி வருகிறார்.

சுதந்திர தாகத்தினை தவிர்க்கப் பாடுபடும் விடுதலை இயக்கத்தின் பெயர் நியோ தஸ்தூர் கட்சியாகும். இதன் தலைவர்தான் போர்ஜீபா.

பிரஞ்சு ஆதிக்கம் நீங்கி, டுனிஷியா, சுதந்திர ஆட்சி மலர வேண்டும் என்று சுதந்திர உணர்ச்சி கிளப்பிய அந்த விடுதலை வீரரை, ஆதிக்க சர்ப்பம் கடித்துவிட்டது.

விஷவேகத்தின் முழு வலிமையையும் காட்டிவிட்டது, பிரஞ்சு ஆதிக்க சர்ப்பம்.

ஆனால், அந்த விஷம், போர்ஜீபாவை எதுவும் செய்யவில்லை.

நாட்டின் இதய கீதத்தை முழக்கிய தலைவனை, பிரஞ்சு ஆட்சியினர் சிறையிட்டு விட்டனர்.

சிறையிலே தங்கள் தலைவரைப் பூட்டிவைத்துவிட்டு, மக்கள்வறிதே வெளியில் உலவிட, அவர்கள் உணர்ச்சியற்ற மரக்கட்டைகளுமல்ல, மண் பொம்மைகளுமல்ல!

மக்கள் மன எரிமலை வெடித்தது, கிளர்ச்சி பெருகிற்று.

தொழிலாளர் யூனியன், ஒரு பெரிய வேலைநிறுத்தம் நடத்திட முடிவு செய்தது. பிரஞ்சு ஏகாதிபத்தியம் மக்கள் கிளர்ச்சியை அடக்க வெறிகொண்டெழுந்தது.

போர்ஜிபா, மக்களைத்திரட்டுவேன், தேசீய மாநாட்டைக் கூட்டுவேன் என்று கூறினார். ஆனால், அவரது கட்சிக்கு, தடைபோடப்பட்டிருந்தது. தடையை மீறுவேன், தாய் நாட்டு விடுதலைப் போருக்காகப் போராடுவேன், மாநாடு கூட்டுவேன், டுனிஷியாவிற்குமுழு விடுதலையையாங்கித் தருவேன் என்று முழக்கமிட்டார். இதுதான், பிரஞ்சு ஆதிக்கநாகத்திற்கு இடியோசையாகி விட்டது.

நாட்டோர் போற்றும் தலைவரை ஆட்சியிலே அமர்ந்துள்ள அந்நிய ஏகாதிபத்தியம் கைது செய்தது. சிறையில் தள்ளிற்று.

நாடோ, கொந்தளிக்கத் தொடங்கிவிட்டது. நாட்டின் தலைவருக்கு, நாட்டை தம்வேட்டைக் காடாக்கிக் கொண்ட வெளிநாட்டார் செய்த கொடுமையைத் தாங்கமுடியவில்லை.

பொது வேலைநிறுத்தம் செய்வதின் அடையாள மறியலில் பிரஞ்சு ஏகாதிபத்தியம் புகுந்தது.

அந்த ஏகாதிபத்திய வெறியர்கள் பட்டாளத்தையே ஏவினர், அடித்தனர், உதைத்தனர், மிதித்தனர், துவைத்தனர் — ஐயோ! சுட்டனர்! சுட்டனர்!! சுருண்டு விழுந்தனர், விடுதலை வேட்கையால் உந்தப்பட்டு வந்த மூவர்- அந்நாட்டின் சொந்தக்



144236

காரர்கள் டுனிஷியாவின் மண்ணிலே பிறந்து மண்ணிலே வளர்ந்தவர்கள். அவர்களைத்தான், குடியேற வந்து, அந்நாட்டின் உரிமை வாழ்வை படுசூரணமாக்கிய அந்நிய ஏகாதிபத்தியத்தினர் சுட்டனர். முப்பத்து மூவர் படு காயமடைந்தனர்.

டுனிஷியா பிரச்சினையை ஐக்கிய நாட்டு பாதுகாப்பு சபைக்குக் கொண்டுபோக, டுனிஷிய மந்திரிகள் இருவர் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளனர். 'டுனிஷியா மக்களுக்குரிய நியாயமான உரிமைகளை பிரஞ்சு சர்க்கார் கொடுக்க மறுக்கிறது. பொதுத் தேர்தல் நடத்தி, தேசிய சபையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எந்த வகையிலும் நியாயமானது, இதனை மறுப்பதால்தான், மக்கள் கிளர்ச்சி டுனிஷியாவில்' என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு மந்திரிகளும், பாரிசில் உலவுகின்றனர். அவர்கள் நேரடியாக, பிரஞ்சு சர்க்கார்மீதுள்ள குற்றச்சாட்டை ஐ. நா. சபைக்குக் கொண்டுபோக முடியாது.

வெளியுலகத்தொடர்பு கொள்வதென்றால், அது முதலில், வெளிநாட்டிலாகா காரியதரிசிமூலம் செல்லவேண்டும். அவரோ, ஒரு பிரஞ்சுக்காரர்!

டுனிஷியாவின் நிர்வாகத்தில் இன்னமும், இரட்டையாட்சிமுறை தாண்டவமாடுவதைப் பார்க்கலாம்.

மந்திரிசபையில் பதினைந்து மந்திரிகள் இருக்கிறார்கள். அதில் ஏழு பேர்களே டுனிஷியர்கள். மற்றவர்கள் எல்லோரும் பிரஞ்சுக்காரர்கள்.

மந்திரிசபை யென்பது, அதிகாரமற்ற ஒரு அலங்காரக் கொலுமண்டபம். ஆலோசனை தரும் குழுவாக அது இருந்து வருகிறதே தவிர, ஆளும் நிலையும், வலுவும் அதற்குக் கிடையாது.

நிர்வாக இயந்திரத்தை நடத்துவிப்போரும், ஆளவந்த அந்நியர்களே. எங்கும் பிரஞ்சு ஆதிக்கம்.

பணம் படைத்தோர், பதவியிலிருப்போர், நிர்வாக வேலைகள் செய்வோர், நிபுணர்கள் என்று தொழில் துறையில் பேசப்படுவோர் எல்லாம் பிரஞ்சுக்காரர்கள்.

ஆகவேதான், பிரஞ்சு ஆட்சியின் நா அசைந்தாலொழிய, அங்கு எதுவும் செய்யமுடியாது.

எனவே டுனிஷியா மந்திரிகள் சலே பேன் யூசுப், முகமது பாட்ரா ஆகியோர் ஐ. நா. சபையில் அலங்காரப் பார்வையாளராக வேண்டுமானால் போக முடிகிறதே தவிர, அங்கு எதையும் பேசமுடியவில்லை.

ஐ. நா. சபையின் பொதுக்காரியதரிசி டிரிக்வீலி, பிரஞ்சுக்காரருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார், டுனிஷியா விவகாரத்தை, ஐ. நா. சபை நேரடியாக எடுத்துக்கொள்ளலாமா இல்லையா என்று முடிவு செய்யும்படி!

பிரஞ்சுமந்திரிசபையோ அடிக்கடி மாறும் அற்புத சரித்திரம் பெற்றது. சென்ற வாரத்தில் மாறிய மந்திரி சபையின் முதல்வர் எட்கார் பாரும், வெளிநாட்டு மந்திரி ஷூமனும் டுனிஷியா பற்றிய புதிய மந்திரி சபையின் கொள்கை பற்றி இன்னமும் தெளிவாக்க வில்லை.

ஆனால், பிரஞ்சு வல்லரசு, இப்பிரச்சினையை ஐ. நா. சபை எடுக்கக் கூடாது என்று வாதாடவழியிருக்கிறது.

கி. பி. 1881ல் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி, பிரஞ்சு ஆட்சியின் அனுமதியின்றி, வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ளக் கூடாது. அதனைக்காட்டி மிரட்டுகின்றனர்.

இந்தோ சீனவில், தங்கள் கைபொம்மையாக, பாவாடாய் கிடைத்தாரே. அதைப் போலத்தான், டுனிஷியாவில் பே கிடைத்துள்ளார். அவரை அலங்கார அதிகாரத் தலைமையிலே அமர்த்திவிட்டு தாங்கள் சூத்திரதாரிகளாக இருந்து ஆட்டுவிக்கிறார்கள்.

மந்திரிகள் இருவரும் ஐ. நா. வுக்கு கொண்டு சென்றுள்ள வழக்கில், பேயின் கையொப்பமில்லை. ஆகவே, அதனை ஐ. நா. சபை ஏற்கக்கூடாது என்றும் பேசுகிறார்கள்.

பே, அவர்களின் உருட்டு பொம்மை — ஆகவேதான் அவர் சம்மதம் வேண்டும் என்கிறார்கள்.

ஆனால், டுனிஷியாவில் உண்மையில் அதிகாரம் செலுத்துபவர் பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி—ரெஸிடெண்ட் ஜெனரலாக இருக்கும் லூயிபேரிலியர். பேயையும் ஆட்டிவிக்கும் பெரும் பேய் அவர்தான். ஆகவேதான், வல்லரசின் வக்கீல்கள், அப்படிப் பேசுகிறார்கள்!

டுனிஷியா, மத்திய தரைக்கடலோரத்திலுள்ள ஒரு சுவையுள்ள கனித்தோட்டம். அதில் மந்திகள் புகுந்து அழிப்பது போல பிரஞ்சு மக்கள் புகுந்துவிட்டனர்.

டுனிஷியா, ஒரு வண்ணமலராகத்தானிருந்தது. வண்டு மனம் கொண்ட ஐரோப்பிய வல்லரசினர் வந்து புகுந்து விட்டனர்.

டுனிஷியா சிறிய நாடு—இருந்தாலும் சிறப்பாக வாழ்ந்தநாடு. இன்று சீரழிக்கப்பட்டாலும், சீரும், சிறப்பும், பேரும், புகழும் கொண்ட நாடு.

இதன் பரப்பு 48,300 சதுர மைல்களே. இருந்தாலும், இதன் மீது நாட்டம் விழுந்ததற்கு காரணம், இதன் வளமும், செழிப்புமே யாகும்.

வாழ்வோரின் தொகையிலே, வந்தேறிகளின் தொகையைப் பாருங்கள். வந்து சேர்ந்தவர்கள், வாழ்ந்திருந்தோரை, வீழ்த்திய வரலாற்றையும் பாருங்கள்.

பழைய கணக்குப்படி, அங்குள்ளோரின் தொகை 2, 215, 399 பேர்கள். வந்து குடியேறியோர் எண்ணிக்கை 195,293.

அம்மண்ணிலே பிறந்த, அம்மண்ணின் சொந்தக்காரர்களை, நேற்று வந்து குடியேறியவர்கள் ஆட்டிப் படைக்கிறார்கள்.

குடியேறியவர்களில் பிரஞ்சுக்காரர்கள் 19,427. இவர்கள்தான், நாட்டுக்குச் சொந்தக் காரர்களை, அடக்கியாள்கிறார்கள்.

சிலர், பலரை வதைக்கிறார்கள். அந்தச் சிலர் இன்று வலியோராக இருக்கலாம். பலர் இன்று எளியோராக இருக்கலாம். ஆனால், வலியோர் சிலர், எளியோர் தமை வதையே புரிகுவதா, என்ற முழக்கம் தான் அங்கு எழுந்துள்ளது.

அந்த முழக்கத்தின் மூலவர்களை இன்று காராக்ருகத்தில் தள்ளிவிட்டனர்.

தினமும் செய்திகள் வந்தவண்ணமுள்ளன. மக்கள் கிளர்ச்சி வளர்கிறது-பெரிதாகிறது-விரிவடைகிறது.

இன்று சிலர், பலரை அடக்கும்

கொடுமை அவர்களின் கண்களுக்குத் தெரிகிறது.

அதுவும் அவர்கள், தங்கள் கலை, பண்பு, மொழி, நாகரீகத்திற்கு ஒட்டிவராதவர்கள்—வந்த அந்நியர்கள்—அவர்கள் ஆளுகை கூடாது என்று கூறுகின்றனர்.

புதிய தேர்தலை நடத்தி, புதிய ஆளும் சபையை அமை என்ற கோரிக்கை குரல், ஆதிக்க சர்ப்பத்தின் ஆர்ப்பாட்டத்தால், எச்சரிக்கை குரலாக மாறிவிட்டது.

பேசியவர்கள் இன்று செயலில் இறங்கிவிட்டார்கள்.

வேலை நிறுத்தங்கள் செய்கிறார்கள். அங்கங்கே, வேதனை தரும் அந்நியர்களை மடக்குகிறார்கள் — அவர்களை வதைக்கிறார்கள், வாட்டுகிறார்கள்.

பெண்களும் போர் புரிகிறார்கள்— சிறுவர்கள் கூட களத்தில் இறங்குகிறார்கள்.

இவர்களை, பிரஞ்சு போலீசார் அடிக்கிறார்கள் — விரட்டுகிறார்கள். ஆனால் டூனிஷியாவின் மக்கள் கிளர்ச்சி மங்கவில்லை, ஒளி விடுகிறது! கருகவில்லை. மலர்கிறது, புரட்சி மணம் வீசுகிறது!!

சிலர், அதுவும் குடியேற வந்த அந்நியர்கள், நம்மை சீர்குலைப்பதா என்ற எண்ணம் வரும்பொழுதெல்லாம் சீறுகிறார்கள்—புயல் காற்று போல போருக்கு கிளம்புகிறார்கள்.

நியூ தஸ்தூர் கட்சியும், அதன் தலைவரும், இந்த எண்ணத்தை, உற்சாக நீர் ஊற்றி, உணர்ச்சி எரு விட்டு வளர்த்து வரவே தான் சிறைக் கதவு திறந்து, சிங்கத்தை உள்ளே தள்ளி பூட்டி வைத்து, சிறு நரிகள் காவல் காக்கின்றன.

இந்த சுதந்திர எண்ணம், வளரும் நிலையிலேயே, அழித்துவிட பிரஞ்சு ஆதிக்கத்தார் வெகு பாடு பட்டார்கள்.

டூனிஷியாவை விட்டுச் செல்ல முடியுமா? கோதுமை வயல்களைக் கண்டுள்ளார்கள் ஆலிவ் விளைவை அறிந்துவிட்டார்கள். கனி குலுங்கும் தோட்டங்களைப் பார்த்துவிட்டார்கள். எப்படி அதனை விடுத்துச் செல்வார்கள்? சுரண்டுவதில் சூரர்களான, ஏகாதிபத்திய சீலர்களல்லவா, அவர்கள்!

ஆடுகள், குதிரைகள் ஒட்டகங்கள் வளர்ப்பு வேலையைக் கூட பிரஞ்சுக்காரர்கள் பிடித்துக்கொண்டனர்.

மத்திய தரைக் கடல் சீதோஷ்ணத்தை யொட்டி வளரும் காடுகள் ஏராளம் அங்கு. அவைகளின் விலையும், மதிப்பும் அவர்கள் அறிவார்கள். பவளம் கடலுக்கடியில், நீரில் மீன்கள், நிலத்தைத் தோண்டினால் உலோகப் பொருள்கள் பலப்பல காண்கிறார்கள். எப்படிச் செல்வார்கள், இத்தனைச் செல்வங்களையும் விட்டு விட்டு? ஆகவே தான் சுதந்திர எண்ணத்தை அடக்க, அது எழுந்த நாளிலிருந்து பல முயற்சிகள் செய்தனர்.

வல்லரசுகள், தங்கள் வலைக்குள் சிக்கிய நாடுகள் போராடினால் வழக்கமாகக் கையாளும் முறையைப் பயன் படுத்தினர் பிரஞ்சு ஆட்சியினர்.

ஒரு கலம் நெல் கேட்கும் விவசாயிடம், ஒரு படி நெல்லைக் கொடுத்து, திருப்திபடுத்த முயற்சி செய்யும் மிராசுதாரனைப் போல, பிரஞ்சு ஏகாதிபத்தியம் நடந்து கொண்டது.

பூரண விடுதலை கோரி, டூனிஷியர்கள் புரட்சிக் கொடி உயர்த்தப் போகிறார்கள் என்றவுடன், நன்மை செய்வதாகக் காட்டிக் கொள்ள புதிய உரிமைகளை வழங்கினர்.

1950ல், இந்த தந்திர முறையின் மூலம், பிரஞ்சு சர்க்கார், தனது பிடியை இன்னமும் விடாமல் வைத்துக்கொள்ள முயன்றது — ஆனால் இன்று தோற்றுவிட்டது.

ஆளும் சபைக்கு, பிரஞ்சு ரெஸிடெண்ட் தலைமை வகித்து வந்தது போய், டூனிஷிய பிரதமரே தலைமை வகிக்க வேண்டும் என்று உரிமை வழங்கப்பட்ட பொழுது, மகிழ்ந்தனர் டூனிஷியர்கள். ஆனால் அந்த மகிழ்ச்சியிலேயே மயங்கிக் கிடந்து விடுவார்கள் என்று எண்ணினர். ஏமாந்தனர்.

நிதி சம்மந்தமான பிரச்சினைகள், ஆளும் சபையின் பரிசீலனைக்கு வரவேண்டும் என்றனர்.

பிரஞ்சுக்காரரும், டூனிஷியரும் சர்க்கார் உத்தியோகங்களுக்குப் போக, ஒரே மாதிரி தேர்விற்குப் போகவேண்டும் என்று ஏற்பாடு செய்தனர்.

உயர்தர உத்தியோகங்களில்பாதியையும், கீழ்த்தர உத்தியோகங்களில் முக்கால் பகுதியையும், டூனிஷியருக்கென ஒதுக்கி வைக்கத்திட்டம் தந்தனர்.

இவைகளை ஏற்றுக்கொண்டனர். மகிழ்ச்சிகூட அடைந்தனர். ஆனால் திருப்தி அடையவில்லை.

பசியெடுத்துக் கிடப்பவனிடம், தண்ணீர் ஒரு குவளை தந்துவிட்டால்மட்டும் போதுமா? அப்படித்தான் டூனிஷியர்கள், இந்தசீர்திருத்தங்களுக்குமேலும் திருத்தங்கள் வேண்டினர்.

இந்த திருத்தங்களால் ஏதும் பெரியமாற்றப் [illegible] பட்டுவிடவில்லை. ஆட்சியில் ஆட்டிப்படைப்போர், அடங்கி பணி புரிவோர் என்ற இரட்டைநிலை மாறவில்லை. ஜனநாயகம் வந்துசேர்ந்துவிடவில்லை. இருந்தும் அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டுமேலும் போராடுவோம், வெற்றி பெறுவோம் என்று இருந்தனர். ஆனால் பிரஞ்சு சர்க்காரோ அத்தோடு தீர்ந்தது என்று தப்புக் கணக்கு கேட்டனர்.

இதைவிட விசித்திரமானது, இந்த சாதாரண திருத்தங்களைக் கூட, டூனிஷியாவிலிருந்த பிரஞ்சு மந்திரிகள் எதிர்த்தார்கள்.

டூனிஷியாவின் விடுதலை விரும்பிகள், திருத்தங்களுக்கு அடுத்தபடி, விடுதலைப் பிரகடனம் வந்துவிடும் என்று எதிர்பார்த்தனர். வரவில்லை.

## நன்றி

பொங்கல் திருநாளில், திராவிடத்தின் பல பகுதிகளிலிருந்தும், பொங்கல் வாழ்த்துகளை அனுப்பியிருந்தார்கள், தோழர்கள். அந்த வாழ்த்துகள், செந்தமிழின் செழிப்பைமட்டுமல்ல, நாட்டில் சொல்லேருழவர்களாக நாம் பணியாற்றியதால் ஏற்பட்டுள்ள மனவளத்தையும் படம் பிடித்துக் காட்டுவதைக் காண பூரிக்கிறேன்; புதிய வலிவு கொள்கிறேன்; புதிய நம்பிக்கை பெறுகிறேன். வாழ்த்து அனுப்பிய தோழர்கள் அனைவருக்கு இதன் மூலம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நன்றி செலுத்துகிறேன்.

**அண்ணாதுரை.**



ஆகவே, மக்களின் விடுதலைப் போர் துவங்கிவிட்டது.

பார்ஜிபா, பரங்கியரின் சிறையில் கிடக்கிறார்.

நாட்டின் சொந்தக்காரர்களில் நெஞ்சிலே நர்த்தனமாடும் அவர், வெஞ்சிறையிலே வாடுகிறார்.

அந்தக் கொடுமையை பொறுக்க முடியாது பொருமுகிறார்கள், அடக்க மனம் படைத்தோர் — பொங்கியெழுகிறார்கள், ஆத்திரகுணமுள்ளோர், போருக்குச் செல்வோம், புறப்படுவீர் என்று போர் முரசு கொட்டுகிறார்கள், தீவிரவாதிகள்.

டூனிஷியா, சிறியநாடு — அதற்காக அதனை அடங்கித்தானிருக்க வேண்டும் என்று யாரும்உபதேசம் புரியவில்லை.

சஹாரா. பெரியது — ஆகவே, அது டூனிஷியாவுக்குத் தலைமை வகிக்கவேண்டும் என்று பித்தர் தவிர வேறு எவரும் பேசமாட்டார்கள்.

வலியோர் சிலர் வந்து, வாழ்ந்திருப்போரை வாட்டுவதா என்பதே அவர்கள் முன் உள்ள பிரச்சினை.

சிலர் அந்நியர்கள் — அயலார், எத்துறையிலும்! அவர்களுக்கு அடங்கிக்கிடக்கிறோமே என்கிற பொழுது வெட்கமும், துக்கமும் அவர்களை வாட்டுகிறது.

ஆகவேதான் கொலை வாளினை எடடா, மிகு கொடியோர் செயல் அறவே என்ற போர் முரசும் ஒலிக்கப்படுகிறது.

இந்த முரசத்தின் எதிரொலி எங்கும் கேட்கத்தான் செய்யும்.

நியோ தஸ்தூர் கட்சியினர் நேருவுக்கு, சென்ற ஆண்டு இங்கு வந்த டூனிஷியர் குழுவாரிடம் அளித்த வாக்குறுதியை நினைப்பூட்டி, உதவி வேண்டியுள்ளனராம்.

டூனிஷியாவில், பிரஞ்சு ஏகாதிபத்தியம் ஆடும் சர்ப்ப நாட்டியத்தை, சுதந்திர வேகங்கொண்ட எவரானும் கண்டிக்காமலிருக்கமுடியாது.

உரிமையின் சகாப்தம், இருபதாம் நூற்றாண்டு. இதில் பிரஞ்சு ஏகாதிபத்தியம் பழையமுறையைக் கடைப்பிடித்து உலகநாடுகள் பரிகசிக்கத்தக்க முறையில் வீழ்ச்சியடையக்கூடாது என்பதனை எடுத்துக்காட்டியாக வேண்டும்.

டூனிஷியா பிரச்சினை பற்றி நேருவின் ஆதரவு கோரியுள்ளனர்.

ஆனால் அவரோ, நெருக்கடியான நேரத்தில் சிக்கி, நிமிடத்திற்கு நிமிடம் துயரச்செய்திகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்.

அவர் டூனிஷியாவின் பக்கம் பார்வை திருப்புகிறாரோ இல்லையோ, திராவிடத்தின் பக்கம் திருப்பியே ஆகவேண்டிய நிலையேற்பட்டு விட்டது.

திராவிடம், டூனிஷியாவைப்போல பல மடங்கு பெரிய நாடு.

அதன் வளங்களும், சிறப்புகளும், எத்தனையோ மடங்கு அதிகம்.

திராடத்தின் அரசியலில் வந்தேறிகள் கூட அல்ல, இருந்த இடத்திலிருந்தபடியே, வடவர்கள் ஆட்டிப் படைக்கிற கொடுமையை யார்தான் சகிக்க முடியும்?

டூனிஷியாவின் இடத்திலே திராவிடம்! பிரஞ்சுக்காரர் இடத்தில் பனியா! இப்பொழுது எண்ணிப் பாருங்கள்.

நேருவின் பார்வை இந்தப்பக்கம் திரும்பவில்லை. திருப்பும்படி இந்தத் தேர்தல் செய்து விட்டது.

டூனிஷியாவில், பிரஞ்சு ஏகாதிபத்தியம் ஆடுவது சர்ப்ப நாட்டியம்—இங்கு வடநாட்டாதிபத்தியம் நடத்தியது, நடத்துவது மந்திநடனம்—இதனை நேரு காணட்டும்! நிலைமை மாறட்டும் — நிலைமையை மாற்றுவோம்!

## பிறப்பு

தோழர் முல்லைவடிவேல் துணைவியார் திருமதி மரகதவல்லி அம்மை 7—1—52ல் ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்த செய்தி கேட்டு மகிழ்கிறோம்.

வேலூர் தோழர் ஏ. எஸ். குப்புசாமி அவர்களின் துணைவியார் திருமதி கிருட்டிணம்மாள் 19—1—52ல் பெண் மகவைப் பெற்றெடுத்தார். தாயும், சேயும் நலம்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

யவர்கள். அவர்கள் இன்று மக்களால் முகத்தில் கரி பூசப்பட்டு, மூக்கறுபட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

மந்திரிகள் நால்வர் ஜெயித்திருக்கிறார்களே, என்று எவரும் எண்ணத் தேவையில்லை. அவர்கள் ஜெயித்துவந்த தொகுதிகளில், காங்கிரசை ஒழித்துக்கட்ட கச்சைகட்டிவந்தவர்களின் எண்ணிக்கையையும் பாருங்கள். மந்திரிகளுக்கு கிடைத்துள்ள ஓட்டுகளையும் கணக்கிட்டு பாருங்கள் பிறகு தெரியும்.

அவர்கள் காங்கிரசின் பெயரால் ஆட்சி பீடம் ஏறிச் செய்த அவலங்கள், இன்று ஆந்தைக் குரலெடுத்து அலறுகின்றன.

முற்பகல் செய்தார்கள். பிற்பகலில் அதன் பலனைக் காண்கிறார்கள்.

துயரத்தை விதைத்தார்கள்—தோல்வித் துயரத்தை அறுக்கிறார்கள், நம் மந்திரிகள்!

மக்களின் குரலை மதிக்காத எவருக்கும் இந்த கதிதான்—மந்திரியாக இருந்தவர்களுக்கு மக்கள் காட்டிய இதே பாடந்தான், இனி மந்திரியாக வரப்போகிறவர்களுக்கும்!

## வருக! வருக!

தோற்ற மந்திரிகள் ஆட்சி பீடத்தில்! வெற்றி பெற்ற தோழர்கள் சிறைச்சாலைகளில்!

இந்த விபரீத போக்கை, முற்போக்கு சக்திகள் எல்லாம் எதிர்த்தன. போராடின. கம்யூனிஸ்ட் தலைவர்கள், ராமமூர்த்தி, நாகிரெட்டி ஆகியோரைத்தான் காவல் கைதிகளாக வைத்துக்கொண்டு ஆட்சியாளர் அடம் செய்தனர்.

நாகிரெட்டி வெளியில் வந்துவிட்டார். ராமமூர்த்தி வெளியில் விடப்பட்டு, மீண்டும் வேறுவழக்குகள் சம்மந்தமாக கைது செய்யப்பட்டுள்ளார். அவரை ஜாமீனில்விட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்மூடிக்கிடந்த, ஆட்சியாளர் கண் திறந்தனர். தோழர்கள் வெளியில் வந்தனர். அடக்குமுறை தீயில் வெந்து, இன்று தணலில் வெந்த தங்கமென விளங்கும் தோழர்களை வரவேற்கிறோம். பாராட்டுகிறோம்.

# நேசக் கரம் இணைப்பீர்! நீசத்தனம் ஒழிப்பீர்!!

“தூக்கிலிட்டுவிட்டோம்!” —நெஞ்சு நெருப்பாகும் இந்தச் செய்தியை, மலேய அரசாங்கம், உலகுக்குத் தந்திருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து, வயிற்றைக்கழுவ, கடல் கடந்து சென்ற ஏழையை—பிணமாக்கிவிட்டார்கள் —தூக்கிலே தொங்கவிட்டுவிட்டார்கள். 28—12—51 அன்று மலேய பூமியில், அந்த ஏழை வாலிபரின் உயிர் பறிபோய்விட்டது. பெரியண்ணன் தூக்கிலேற்றப்பட்டுவிட்டார்! பிணமாக்கப்பட்டார்!!

நெஞ்சு துடிக்கும் செய்தி இது. தூக்கிலே துடித்துச் செத்த பெரியண்ணன், மலேய சொத்துக்களைச் சுரண்டும் மூலதனத்தோடு சென்றவரல்ல—கையையும் காலையும் சொத்தாகக் கொண்டு, உழைப்பைச் சிந்தி, ஒரு சில காசுகளைப் பெற்று, தமிழகத்திலே கண்ணீரும் கம்பலையுமாகக் கிடக்கும் தனது குடும்பத்தாரின் வயிற்றைக் கழுவும் ஆவலோடு, சென்றவர். அவருக்குப் பரிசு—சாவு! மரணமேடை!!

‘பொன்விளையும் பூமி இது’ என்று போற்றித் துதிபாடும், திருவிடப்பூமியிலே, வாழமுடியாது, கடல் கடந்து சென்றார்—ஆனால் வாழ்வு அங்கும் கிடைக்கவில்லை பிணமானார்! பிணமாக்கப்பட்டார்!! மலேய சர்க்காரால் கொல்லப்பட்டுவிட்டார்!!!

கண்ணீர் வடிக்கிறோம்—அந்தக் காளையை நினைத்து! ஒருசில திங்களுக்குமுன், அவருக்கு இத்தகைய தண்டனை தரப்படலாம் என்றொரு செய்தி, வந்தது. செய்தி தேள் போல இருந்தது — கணபதியை இழந்தோம்! மலேயா சாம்பசிவத்தை மரணப் பிடியிலிருந்து விடுவிக்கபட்டபாடு ஏராளமாயிற்றே—இப்போது, அதேவரிசையில் இன்னொரு தமிழகச் செல்வனையுமா இழக்கவேண்டும்? ஐயகோ! என்ன கொடுமை, இது! என்று கலங்கினோம்—நமது மாநில மாநாட்டிலும், குற்றக்கூண்டிலே நிற்கும் இவர்கள் விடுதலை செய்யவேண்டுமென மலேய சர்க்காரைக் கோரி தீர்மானம் விடுத்தோம். நம்மைப் போலவே, இங்கே வாழும் முற்போக்குக் கட்சிகள் மலேய சர்க்காரைக் கேட்டுக்கொண்டன. ஆனால் வெறியர்கள் நம் கோரிக்கையை அலட்சியம் செய்து, ஒரு உயிரை, பதைக்கச் சாகடித்திருக்கின்றனர்!

நெஞ்சுவேகும் இந்தக் கொடுமை நடவாமல் தடுக்கவேண்டியபொறுப்பும் அதிகாரமும் உடைய டில்லி அரசாங்கமும், பாராமுகமாய் இருந்திருக்கிறது. தமிழகச் செல்வன் ஒருவன் உயிரைக் காப்பாற்றித்தர தவறிவிட்டது! வழக்கம் போல அலட்சியமாக இருந்திருக்கிறது!!

தனது நாட்டு மகன், இன்னொரு நாட்டில் சித்திரவதைக்காளாகி செத்து மடிவதைத் தடுக்க வேண்டிய இந்திய சர்க்கார்—வாய் மூடிக் கிடக்கிறது—சித்திரவதை செய்யும், மலேய சர்க்காரோடு, ‘காமன்வெல்த் நேசம் — கலங்குமோ நம் பாசம்’ என்று சிங்காரப் பண்ணிசைத்துக் கிடக்கிறது. நமது சகோதரன் உயிரை நமக்குப் பெற்றுத்தரவில்லை. தரவில்லை என்பது மட்டு மல்ல, தருவதற்கான முயற்சிகளையும் எடுக்கவில்லை!

பெரியண்ணன், போய்விட்டார். இன்னும் பல ‘பெரியண்ணன்களை’ தூக்கிலே ஏற்ற துடித்துக்கிடக்கிறதாம், மலேய ஆட்சி.

இந்தக் கொடுமைகள் ஒழிய வேண்டும்! குற்றஞ் செய்தோரை நீதி முன் நிறுத்தி—தண்டனை தருவதோ, விடுதலை செய்வதோ தான் முறை. அதற்குப் பதிலாக, ‘இவன் ஒரு பயங்கரவாதி!’ என்று கூறுவதும் உடனே தூக்கிலே தொங்கவிடுவதுமென்றால், நாமென்ன அநாகரீகக் காலத்திலா வாழ்கிறோம்! நலம் விரும்புவோரே—தாயகச் சகோதரர்களே இந்தக் கொடுமைகள் ஒழிய ஒன்று படுங்கள்!

“எல்லோரும் மேற்படி செயலைக் கண்டித்து இந்திய சர்க்காருக்கும் மலேய சர்க்காருக்கும் உடனே கண்டனங்கள் அனுப்ப வேண்டுகிறோம்” என, சென்னை நாடு கடத்தப்பட்டோர் சங்கம்வேண்டுகோள் விடுத்திருக்கிறது. சகல முற்போக்குக்கட்சிகளும்ஒன்றாகநின்று இந்தக் கொடுமை ஒழிய நேசக் கரம் தூக்கவேண்டும்! மனித வெறியை மண்டையிலடிப்போம்! முற்போக்குக் கட்சிகளே — நம் குரல், எதேச்சாதிகார வெறியை சுக்குநூறாக்கட்டும்!

## வாசகர்களுக்கு

கடிதம் எழுதும் தோழர்கள், பத்திரிகை சம்மந்தமானதாக இருந்தால், ஆசிரியர் என்றும், சந்தா, ஏஜன்ஸி ஆகியவை சம்மந்தமாக இருந்தால் நிர்வாகி என்றும் முகவரி எழுதவேண்டுகிறோம்.

## தோழர்களுக்கு

கழக சம்மந்தமான தகவல்கள் எழுதுவதானால், பொறுப்பாளர், தி. மு. க. தலைமைநிலையம், காஞ்சிபுரம் என்றும், கழகசம்மந்தமாக சி.என். ஏ.நேரடியாகபார்க்கவேண்டியசெய்திகளை, பொதுச்செயலாளர், தி. மு. க. என்றும், முகவரி எழுதுங்கள்.

## கிளைக் கழகங்களுக்கு

தி. மு. க. தலைமை நிலையம் இன்னும் சில திங்கள்வரை, காஞ்சிபுரத்திலேயே இயங்கி வரும். ஆகவே, சென்னை ராயபுரம் முகவரிக்கு எழுதினால் கால தாமதமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M A at ‘Dravidanadu” Press.
95, Tirukkachinambi st., Kancheepuram.

108

REGD No M. 4642

திராவிடநாடு

15 சதம்

மலர் 10 | 2—3—52 | இதழ் 35

பூலோகப்பயணம்

# தங்க ரதம்

அண்ணல்

"சாமி! சத்யபாமா, கதவைத் திறவாய்!" என்று பாடவேண்டிய அவசியமேற்படவில்லை, பரந்தாமனுக்கு. 'வைகுந்தவாசம்' திறந்துகிடந்தது. எட்டிப்பார்த்தார், துஷ்டநிக்ரசிஷ்ட பரிபாலனம் செய்யும் மகாவிஷ்ணு. பாரியை லக்ஷிமி, பரமானந்தத்தோடு இருந்தாள். நாரதர் கானம் பாட, கின்னர கிம்புருடர், கீதத்துக்கு 'பின்னணி' இசைக்க, இரண்டு மூன்று தேவமாதர்கள், புது 'ஸ்டையிலில்' நடனமாட, அதைப் பார்த்துப் பரசவமடைந்து கொண்டிருந்தாள், பரந்தாமன் துணைவி. அவளது முகத்திலேற்பட்ட மலர்ச்சி, பரந்தாமன் உள்ளத்தைப் பரவசத்திலாழ்த்திற்று. வாயிலிலே நின்றபடி, ரசித்துக்கொண்டிருந்தார், நாராயணமூர்த்தி.

"கோபாலனோடு நான்—
ஆடுவேனே
நந்த கோபாலனோடு......"

இந்தப் பாடலை நாரதர் பாட, அரம்பைமாதர், அபிநயம் பிடித்தனர். அவர்கள், நாட்டியம், இதய ஆசையை எடுத்துக் காட்டுவது போலிருந்தது. 'நந்த கோபாலன்' எனும் போது அவர் தம் முகம் மலர்ந்ததும், ஆடுவேனே' என்ற வார்த்தைக்கு அபிநயம் பிடிக்கையில் அவனோடு கூடியாடும் மோகன லாகிரி கொண்டோர் போலவும் ஆடினர்! மேகவர்ண சாமளநிறத்தானை, தொட்டிழுத்து கட்டிலில் விளையாடத்தான் முடியாது, அவர்களால். அந்த இன்பத்தை, இப்படியாவது, அனுபவிப்பதை யார் தடுக்கமுடியும்? ஆகவே, ஆடினர். 'என் கோபாலனோடு' எனும் போது, அவர்தம் உடலில் ஏற்பட்ட வளைவும் நெளிவும், பிரமாதமாயிருந்தது! ஆனால், அந்த 'என்' என்ற வார்த்தையைக் கேட்ட தேவி லக்ஷிமி, படுக்கையறையைப் பார்த்தாள்—பெருமூச்சுவிட்டாள்.

'ஹலோ! டியர். இங்கே இருக்கிறேன்' என்று, கலகல வெனச் சிரித்தார், மகாவிஷ்ணு.

"வந்துவிட்டீர்களா!" என்று தாவியோடினாள், தாமரைச்செல்வி.

"எஸ்!" என்று, சொல்லியவண்ணம், ஓடிவந்தவளைத் தூக்கி........ நாரதரும் அரம்பையரும், கண்களை மூடிக்கொண்டனர். மெதுவாக, அந்த இடத்தைவிட்டு, ஜோடி ஜோடியாக, நழுவலாயினர்.

"பிரபு! எங்கே, போயிருந்தீர்கள். என்ன அருமையான நடனம் தெரியுமோ? ஏதோ, பூலோகத்திலிருந்து கற்றுவந்ததாம் — நாரதர் பாட, அரம்பையர் ஆட......அபூர்வம்! போங்கள்!!"

"ஓ! சினிமா பாட்டா?"

"அதென்ன பிரபு! சினிமா!"

"பூலோக சிருஷ்டி, அது. தேவி! Wher, is our கருடன்?"

"என்னது?"

"ஓ! உனக்கு இங்கிலீஷ் தெரியாதா?"

"அதென்ன சுவாமி, இங்கிலீஷ்!"

"பூலோகத்தில், வெள்ளைக்காரான்னு ஒரு இனத்தார் — இருக்கா. அவா, பேசறபாஷை நம்மளவாளும்பேசறு இப்போ!

"பிரபு! பூலோகம் போனவே உங்கள் புத்திபேதலிச்சுடுது. வீண கெட்டுத் திரும்பறேள். போகவேணும்னாலும் கேட்கமாட்டேறேள், இன்னைக்கு போனேள்? எங்கே போம்......

"பக்தா கூப்பிட்டா—மங்கள மானகாரியம். மகாராஜா கூட வந்திருந்தான்..............."

"யார் பிரபு, அந்த மகாராஜா!"

"மைசூர் மகாராஜா! நூற்றுக் கணக்கானமைல் வந்து, பக்தாளோடு கலந்துண்டு, தேரிழுத்தான் தேவி, தேரிழுத்தான்!"

"மகாராஜன்—தேரை இழுத்தானா? என்ன, பிரபு! கேலி! 'மகாராஜாதான் மனுஷாளில்லே—ஏழைகளோடுகலக்கமாட்டா.பெரிய அரண்மனை உண்டு—நம்ம கோயில் மாதிரி. அதிலிருந்து கிளம்பவே, மாட்டா" என்றெல்லாம் சொல்லியிருக்கேளே!"

"சொன்னேன். ஆனா, காலம் மாறுதேல்லியோ? அதனாலே, பக்தரோடு சேர்ந்து, வடம்பிடித்திழுத்திருக்கான்!"

"எங்கே சுவாமி, இந்த அதிசயம்?"

"ஆழ்வார்திருநகரி யிலே—அது தான், நம்ம, நம்மாழ்வார் பிறந்த இடம். அங்கே, 15ந்தேதி, விமரிசையா வெள்ளோட்டம் நடத்தினு. புதுத்தேர் ஒன்று கட்டியிருக்கா—ஒருலட்சரூபாயிலே!"

"ரதமா! ஒருலட்சத்திலா! என்ன பிரபு, இது? பூலோகவாசிகள் பொருளில்லாமல் திண்டாடரு—செத்துவிழரு, வீதியிலேன்னு சொன்னீங்களே, முன்பு!"

"உண்மைதான். அதனுலே! பகவத் காரியத்தை பக்தா, நிறுத்திடுவாளோ?"

"ஓகோ! நம்ப பக்தாளெல்லாம் பணக்காரர்களா?"

"நீ ஒரு பைத்யம்! நம்ம பக்தா கிட்டே பணமிருக்கணும்னு இல்லே தேவி. பணத்தை சம்பாதிக்கத் தெரிஞ்சுவா—அவா"

"எப்படி பிரபு! தொழில் அறிந்தவாளோ?"

"ஊஹூம்"

"வியாபாரத்திலே இருப்பாவாளோ?"

"வியாபாரத்திலேருந்தா, வேதமோத யாரிருக்கா?"

"பின்னே, எப்படிப்பிரபு, பணம் கிடைக்கும் — லக்ஷரூபாயில் தேர் கட்ட."

"ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே! தேரின்னுலும் சாதாரண தேரல்ல. கோ-ரதம் அதுவும் தங்கம்—வெள்ளியாலே கட்டப்பட்டது?"

"தங்கம் வெள்ளியா?"

"திகைக்காதே லக்ஷ்மி! அசல் தங்கம். அசல் வெள்ளித்தகடு"

"நம்பமுடியலியே, பிரபு! நாமதாரிகளான நம்ம பக்தாளுக்குத்தங்கமும் வெள்ளியும்—ஒரு தேருக்குப் போடற அளவுக்கு...? ஒருவேளை, பூலோக பக்தா, இன்னும் 'திருமங்கையாழ்வாரை'ப்-போலவே இருக்காளோ?"

விஷ்ணு சிரிக்கிறுர்—அவருக்குப் பழைய ஞாபகங்கள் வந்துவிடுகின்றன. லக்ஷிமியை அணைத்துக்கொண்டு, "கண்மணி! உன் சந்தேகங்களை நிவர்த்தி செய்கிறேன். புறப்படு. பூலோகம் போகலாம்" என்கிறுர். கருடவாகனம் புறப்படுகிறது.

* * *

கோ-ரதம் கட்டப்பட்ட ஆழ்வார் திருநகரில், ஒரு வீடு. உடம்பெல்லாம் நாமதாரியான, ஒரு பக்தரின் இல்லம். பக்தர், பாரியையோடு பேசிக்கொண்டிருக்கிறுர்.

"கோரதம் — பிரமாதமாத்தான் இருக்கு கண்ணைப் பறிக்குது, தங்கமும் வெள்ளியும். எல்லாம் என்னுலே தான்னு பிரமாதமாப் பேசறேள்! ஆனு, என்ன பலன்? பக்கத்து வீட்டுக்காரரைப் பாருங்கோ ரதம் கட்ட ஆரம்பிச்சதிலேருந்து முடியறதுக்குள்ளே— ஆத்துக்காரி கழுத்திலும் கையிலும் மின்னுது; தங்கம்! நீங்க, என்னடான்னு, ஒரு சங்கிலிக்கில்லாமெ தவிக்கிறேள்.."

"பகவான் அனுக்கிரகிப்பார். பாபமல்லவோ, அவர் சொத்துக்கு ஆசைப்படறது"

"பாபமோ, புண்யமோ! அவாளவா சவுகரியம் பண்ணிட்டா...... நீங்கதான்"

> நெல்லை ஜில்லாவில் உள்ள ஆழ்வார் திருநகரியில் லட்சம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவிட்டு தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட "கோ—ரதத்தை" மைசூர் மகாராஜா பிப். 15ல், வடம் பிடித்து வெள்ளோட்டம் செய்தார்.

சகதர்மிணி முகம்கோணுவதைக் கண்ட அவர், எழுந்திருந்துபோகிறுர்—பெட்டியொன்றைத் திறக்கிறுர். சிறு மூட்டையொன்றேடுவருகிறுர். அவிழ்த்துக் கொட்டுகிறுர். பணமும் நோட்டும் சிதறுகிறது.

"ஏதுன்னு?"

"அதெல்லாம் கேட்காதடீ!எடுத்துக்கோ. போதுமா?"

"சமத்துன்னு சமத்துத்தான்! நேக்கு தெரியுமே........"

படுக்கை அறை மூடப்படுகிறது. பகவத்—தம்பதிகள், இந்தப் "பக்த லீலை"யைப் பார்த்த வண்ணம், திரும்புகிறுர்கள். லக்ஷிமி, ஜாடையாகப் பார்க்கிறுள் 'என்ன, இது?' என்று கேட்கும் பாவனையில். 'பேசாமல் வா' என்று காதோடு சொல்கிறுர், கருடவாகன ரூபர்.

* * *

ஜொலிக்கிறது கோரதம்! அதன் மேலே போடப்பட்டிருக்கும், தங்கத்தகடும், வெள்ளியும், பள பளக்கின்றன. லக்ஷிமியே திகைக்கிறுள். அப்போது அங்கே பேசப்படுவது, காதில் விழுகிறது.

'பிரமாதமான சேவை! அழகான ரதம்! அற்புதம்!!"

"அற்புதமா, ஏன் இருக்காது? லட்சரூபாயில்லே........"

"லட்சமா?"

"ஆமாம்பா, ஆமாம்!"

"யார் தந்தா—இவ்வளவு ரூபா!"

"நீயும் நானும் எங்கேயிருந்து தரப்போகிறேும் — 'ரேஷன்' அரிசிக்கேதான் திண்டாடறேமே. இதெல்லாம், பணக்காரர்கள் கொட்டித்தந்தது........"

"கடவுளுக்கு ரதம். ஆனுல் — இங்கே ஒரு கல்லூரி உண்டோ?"

"ஊ......ஹூ.........ம்"

"பெரிய ஆஸ்பத்திரி!"

"ஊ......ஹூ......ம்"

"சின்னதா, ஒரு வாசகசாலை!"

"ஊ......ஹூ......ம்"

"ரதம் மட்டுமிருக்கு! நல்ல உலகம்பா இது."

லக்ஷிமி காதில், இந்த வார்த்தைகள் கேட்கிறது. நைவேத்யமாகும் தளியல் படையல் பொங்கல் முதலானவைகளில் கவனத்தைச் செலுத்தியிருந்த கமலக்கண்ணனை, அழைத்துக்கொண்டு புறப்படுகிறுள் — அவசரமாக. கருடன் பறக்கிறுன். 'இந்தத் தேர் கட்ட, பணம் தந்த ஒருவர் வீட்டுக்குப்போ!" என்று உத்திரவிடுகிறுள், திருமகள்.

* * *

'பாரதமாதா பவனம்' என்று பெயர் பொறிக்கப்பட்ட ஒரு மாளிகை.'சோபா' ஒன்றில் உட்கார்ந்திருக்கிறுர், மாளிகையின் அதிபதி. எதிரே, கணக்கப்பிள்ளை, நிற்கிறுர்.

"ஏன்யா! என்ன விசேஷம்? எங்கே, வந்தே.....கணக்கெல்லாம் முடிஞ்சுதா."

"முடிஞ்சுகிட்டு வருதுங்க. ஒரு சந்தேகம்......"

என்னது? எந்தக் கணக்கிலே சந்தேகம்......

"கருப்புக் கணக்கிலா—வெள்ளையிலா?"



"இரண்டிலுந்தாங்க!"

"விழிக்கிறதைப்பாரு—சேச்சே! உங்களோடு மாரடிக்கிறதிலேயே உயிருபோயிடும்போலிருக்கு — சொல்லித்தொலை. என்னது?"

"ஐயாயிரம், கோரத் திருப்பணிக்கு.............."

"என்னது?"

"கோ—ரதத் திருப்பணிக்குங்க................"

"ஆமாம், தந்திருக்கேன்—ஐயாயிரம்!"

"ஆமாம்........"

"அதை, கருப்புக் கணக்கிலே குறிக்கவா—அல்லது........"

"என்ன புத்திசாலிய்யா! ஏன் கொடுத்தோம் ஐயாயிரம்—கோயில் திருப்பணிக்கு. தெரியுமா?"

"பகவத் கைங்கரியம்! பரந்தாமனுக்குச் செஞ்சா, போறகதிக்கு நல்லது கிடைக்கும்னு......"

"மகாபுத்திசாலி! அதற்காகத் தான் கொட்டிக்கொடுத்தோமோ"

"................"

"அந்த ஐயாயிரத்தையும், இன்கம் டாக்ஸ்' கணக்கிலே எழுது. அதோட, தெய்வகாரியமா, போய் வந்ததிலே என் பத்து ரூபா ஆயிரம்னு சேர்த்து எழுது......"

"சரிங்க!.........!"

"ஆடிடர் கேட்டா, விளக்கமா, விஷயத்தைச் சொல்லு. மறந்து கிறந்து எழுதாம விட்டுடாதே! ஐயாயிரம் குறையுது — இன்கம் டாக்ஸ் கணக்கிலே—தெரியுதா..."

"புரியுதுங்க........"

லக்ஷிமிக்கு தலைசுற்றுவதுபோலிருக்கிறது. பணக்காரருக்குப் பக்கத்திலேயிருக்கும் அவரது மனைவியைப்பார்க்கிறுள்-அவளது கழுத்து கை, எல்லாம் 'தங்கத்தால்' நிரம்பிக் கிடக்கிறது. விஷ்ணுவோடு—புறப்படுகிறுள். கருடன், 'எங்கே?' என்று கேட்கும் பாவனையில் திரும்புகிறுன். 'தங்கம் எடுக்கும் இடத்திற்கு......' என்று கட்டளையிடுகிறுள் கமலகுமாரி.

* * *

சிற்றெறும்புகள்,ஊர்வதுபோலத் தெரிகிறது, ஒரு இடம். அங்கே இறங்குகின்றனர். 'சுவாமி' இந்த இடத்தின் பெயரென்ன?' என்று நாதனைக்கேட்க, 'கோலார்' என்று கூறுகிறுர் திருமால்.

மாயா ரூபத்துடன், தங்கவயலுக்குள் செல்லுகின்றனர். அழுக்கு மேனி! தலையிலே குல்லா! உடலெல்லாம் வியர்வை! கனி பிளந்து கொண்டிருக்கிறுர்கள், ஆயிரமாயிரம்பேர்! கனிச் சுரங்கத்தைச் சுற்றி காவல்! அவர்களைப் பரிபாலிக்கும் அதிகாரிகள் தங்கியிருக்கும் பெரிய பெரிய கட்டிடங்கள்! மற்ரேர் பகுதியில்—சிறு பொந்துகள்போல வீடுகள்! அங்கே, பரட்டைத்தலையாய் வயிறு உலர்ந்து வாடிடும் உருவங்கள்! 'கனிக்குச் சென்ற கணவன் திரும்பவேண்டுமே' என்று கலங்கியிருக்கும் காரிகைகள்! பல்லாயிரம் அடிக்குக்கீழ்! பூமிக்குக்கீழே!!வேதனையோடு, வெட்டுகிறுர்கள்—ஆயிரமாயிரம்பேர். இருட்டுப் பாறைகளைப் பிளக்கின்றனர். 'பள பளக்கும் தங்கமது பாறையிலே ஒட்டியிருக்கு—அதைப் பார்த்தெடுத்து வந்து நாங்க பவுனுக்கிறேும்!' என்று களைப்பைப் போக்க, தெம்மாங்கு பாடிக்கொண்டு வெட்டுகிறுர்கள். கோரமாக இருக்கிறது, இந்தக் காட்சி!

"நாதா!" என்கிறுள், செல்வக் குமாரி.

'லக்ஷிமி!"

"நம் நரகத்தைவிட கோரமாயில்லே"

பதில் பேசவில்லை, பரந்தாமன். லட்சுமி பேசுகிறுள்.

"பார்த்தீர்களோ! இந்தப் பாடுபடும் மக்களின் மனைவி மக்களை"

"பார்த்தேன்! பார்த்தேன்!!"

"இவ்வளவு கஷ்டப்பட்டு தங்கத்தை எடுக்கும், அவர்கள் கழுத்திலும் கையிலும்என்ன இருந்தது?"

"ஒண்ணுமில்லை!"

"அதுமட்டுந்தானு? வேறேதாவது இல்லீயோ!"

"இருந்தது! கருப்புமணி, கழுத்தில்—கைகளில்"

"கண்ணுடிவளையல்!"

"காதுகளில்?"

"நெட்டித்தக்கை"

உரையாடல் முடியவில்லை—'படார்' எனப் பெருஞ்சப்தம் ஒன்று கேட்கிறது. பூமிக்குக்கீழே—மண்பாறைகள் வேகமாகச்சரிந்து விழுகின்றன. தொழிலாளர் பலர் புதைகின்றனர். ஐயோ! ஐயோ!! என்று கூச்சல். அபாயச் சங்கு ஊதுகிறது. தொழிலாளர் குடிசைகளில் அலறல் எழும்புகிறது. லக்ஷிமி பதைக்கிறுள்—பரந்தாமன் கண்முன்னே 'தங்க ரதம்' தென்படுகிறது. 'லக்ஷிமி' என்கிறுர். அவளோ, பரந்தாமன், தோளில் மூர்ச்சையாகிச் சாய்கிறுள்!!

## மாணவருலகில்!

அ' நகர்:- அண்ணுமலைப் பல்கலைக் கழக திராவிட மாணவ முன்னேற்றக் கழக துவக்க விழா 17—2—52 மாலை நடைபெற்றது. அதையொட்டி அண்ணுமலை நகர் குளக்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் தி.மு.க பொதுச் செயலாளர் அண்ணுதுரை சொற்பொழிவாற்றினுர் மத்திய திராவிட மாணவ முன்னேற்றக் கழக அமைப்பாளர் கே. ஏ. மதியழகனும் கலந்து கொண்டார். மேற்படி பொதுக் கூட்டத்துக்கு அ'நகர் மாணவ முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் டி. சோமசுந்திரம் (இன்சினீரிங் கல்லூரி மாணவர்) தலைமை வகித்தார்.

குடந்தை:- குடந்தை அரசினர் கல்லூரி தமிழ்ப் பேரவையின் ஆண்டு நிறைவு விழா 18-2-52 அன்று கல்லூரித் தலைவர் விசுவநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் கிருஷ்ணமூர்த்தி யாவரையும் வரவேற்ருர். தோழர் சி. என். ஏ., 'மாணவருலகு' பற்றி சொற்பொழிவாற்றினுர்.

வாணியம்பாடி:- இஸ்லாமியக் கல்லூரி தமிழ் பேரவையின் கூட்டம் 20—2—52 அன்று கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் கபூர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'வாழ்வும் வளமும்' எனும் பொருள் குறித்து, தோழர் அண்ணுதுரை சொற்பெருக்காற்றினுர்.

## இனி நடப்பது

சென்னை:- பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப் பேரவையில் 3—3—52 திங்கட் கிழமை மாலை தோழர் சி. என். ஏ., ஆங்கிலத்தில் பேசுவார்.

# வகுப்பறையில்!

[அரவரசு]

☆

தமிழ் வகுப்பு

ஆசி:- டேய்! ராமா! கடவுள் வாழ்த்துச் செய்யுளை ஒப்பி.

ராமன்:- சாதிகுலம் பிறப்பிறப்பு பந்தம் முத்தி.........செய்வாம்.

ஆசி:- இறைவணக்கம் பொருள் இலக்கணம் கூறு.

அடுத்தமாணவன்:- இறைவனை வணங்குதல் இரண்டாம் வேற்றுமைத் தொகை சார். வணக்கம் என்பது தொழிற்பெயர் சார்!

ஆசி:- இறை வணக்கத்தின் அவசியம் என்ன?

மாண:- எடுத்தகாரியம் இனிது முடிய இறைவன் அருள் வேண்டும் சார். அதனால் முதலில் இறை வணக்கம் அவசியம் சார்.

மற்றொருமாணவன்:- சார் ஒரு சந்தேகம் சார்!

ஆசி:- என்னடா அது?

மாண:- தமிழ் புத்தகத்திலே முதல்லே கடவுள் வாழ்த்து இருக்கிறதே ஏன் சார்?

ஆசி:- டேய்மண்டு இந்நேரம் எங்கே கவனித்தாய். நாம் எந்த காரியத்தை துவக்கினாலும் அது இனிது முடிய கடவுளை வழிபட வேண்டும். நாம் தமிழ்பாடத்தை படிக்கத் துவக்குமுன் அதில் நன்கு படித்து தேர்ச்சியடைய கடவுள் அருள் வேண்டும். அதனால் முதலில் இறை வணக்கச் செய்யுள் வருகிறது.

மாண:- அது சரி சார். ஆங்கிலம் பூகோளம், சரித்திரம் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் முதலில் கடவுள் வாழ்த்து ஒன்றும் வரவில்லையே சார், அது ஏன்?

ஆசி:- டேய்! இதெல்லாம் ஒரு சந்தேகமாடா? உட்கார் இனி இது மாதிரி கேள்விகளைக் கேட்காதே.

மாண:- சந்தேகப்பட்டுதான் சார் கேட்கிறேன்.

ஆசி:- சீ உட்காருடா. என்னைத் தனியாகக்கேள். சொல்லுகிறேன். இப்போது மேலே போவோம் டேய் காதர் தமிழணங்கு என் தலைப்பை உடைய செய்யுளைச் சொல்லு.

மாண:-

நீராருங் கடலுடுத்த
  நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
  திகழ்பரத கண்டமதில்
தக்க சிறு பிறை நுதலும்
  தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த
  திராவிட நற்றிரு நாடும்
அத்திலக வாசனை போல்
  அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த
  பெருந் தமிழ் அணங்கே.

ஆசி:- இச்செய்யுளைப் பாடியது யார்?

மாண:- பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

ஆசி:- டேய் திராவிடமணி! இச்செய்யுளுக்கு பதவுரைக்கூறு.

திராவிடமணி:- கூறுகிறேன் சார் முதலில் ஒரு சந்தேகம்......

ஆசி:- என்னடா சந்தேகம்?

திரா:- "தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நற்றிருநாடும்" இத்தொடரை சற்று விளக்குங்கள் சார்.

ஆசி:- சரி கவனி! தெக்கணமும்—தக்ஷிண பீடபூமியும்; அதிற்சிறந்த —அதிலே சிறந்து விளங்குகின்ற திராவிட நல் திருநாடும்—நல்ல திராவிடத்திருநாடும்...

ஒரு மாணவன்:- "திராவிட நல் திருநாடும்" இதன் பொருள் என்ன சார். சற்று விளக்கிக் கூறுங்கள்.

ஆசி:- கவனி! நல் என்றால் நல்ல; திரு என்றால் அழகிய அல்லது மேன்மையான திராவிடநாடு என்றால் திராவிட மக்கள் வாழும் நாடு. அதாவது அழகிய சிறந்த திராவிட நாடு என்று பொருள்.

மாண:- அந்த திராவிடநாட்டின் எல்லைகள் என்ன சார்?

ஆசி:- தற்போதுள்ள சென்னை மாகாணந்தான். விந்தியமலைவரையிலும் திராவிடர்கள் வாழ்ந்ததாகவும் சிலர் கூறுவர்.

2 பூகோளவகுப்பு

ஆசி:- சரி டேய்! மானீடர்! இந்த இந்தியா படத்தை சுவற்றில்மாட்டு. (படம் சுவற்றில் மாட்டப்படுதல்)

ஆசி:- கோவிந்தா! இந்த படத்திலே டில்லி எங்கே இருக்கிறது. காட்டு!

மாண:- (படத்தில் காட்டுதல்)

ஆசி:- சரி. லாகூர், அலாகாபாத், பம்பாய் இவைகளைக் காட்டு நீ போ அடுத்தவன் வாடா!

அடுத்த மாணவன்:- (அவ்வூர்களைக் காட்டுதல்)

ஆசி:- டேய் கோபால்! ஆமதாபாத், ஸ்ரீநகர் இவைகளைக் காட்டு.

கோபால்:- (படத்தில் காட்டுதல்)

ஆசி:- பெஷாவர், லக்னௌ இவைகளைக் காட்டு. நீபோ அடுத்தவன்வா.

அடுத்தவன்:- (படத்தில் காட்டுதல்)

ஒரு மாணவன்:- சார் எல்லாம் வடநாட்டிலே இருக்கிற நகரங்களையே காட்டச் சொல்றீங்களே சார்! நம் தென்னாட்டிலே......

ஆசி:- டேய் அவசரக் குடுக்கே. எனக்குத் தெரியுண்டா உட்கார். ஷரீப்! வங்காளமாகாணத்தை படத்திலே காட்டு,

ஷரீப்:- எந்த வங்காளம் சார் கிழக்கா, மேற்கா—

ஆசி:- அதென்னடா அது. கிழக்கும், மேற்கும்!

ஷரீப்:- அப்படி அர்த்தமில்லே சார் மேற்கு வங்காளத்தையா, கிழக்கு வங்காளத்தையான்னு கேட்டேன் சார்.

ஆசி:- ஓ! சாயபு இல்லே நீ. சரி உங்க வங்காளத்தைத்தான் காட்டு.

ஷரீப்:- (காட்டுதல்)

ஒரு மாணவன்:- சார் ஒரு சந்தேகம். கொஞ்சம் விளக்கவேணும் சார்.

ஆசி:- என்ன சந்தேகம்?

மாண:- இந்த அட்லாஸ்லே 9-வது பக்கத்திலே ஒரு பெரிய சந்தேகம் சார்.

ஆசி:- அதென்ன ஆட்லாஸ்டா?

மாண:- ஆக்ஸ்பர்ட் அட்லாஸ் தான் சார்.

ஆசி:- கொண்டுவா இங்கே.

மாண:- இதோ சார் இந்த ஒன்பதாவது பக்கத்திலே "முக்கிய மனித ராசிகள்" என்று பெயர்

12-ம் பக்கம் பார்க்க



# உறுப்பினர் சேர்க்கும் பணி

## பொதுச் செயலாளர் வேண்டுகோள்

திராவிடமுன்னேற்றக் கழகம். மக்கள் மன்றம் — சந்தேகமில்லை, தி. மு. கழகத்துக்கு எங்கும் பேராதரவு—மாற்றாரும் கூறுவர். தி. மு. கழகத்தின் கிளைகள் எங்கும் தழைத்துள்ளன—உண்மை. எனினும் புள்ளி விபரம் கேட்கிறது, அறிவு உலகம்.

பேராதரவு பெற்றுள்ள தி. மு. க. வுக்கு மொத்த உறுப்பினர் எண்ணிக்கை என்ன? — அரசியல் உலகு கேட்கிறது.

கூட்டத்தில் கூடி நிற்பர், கொள்ளை கொள்ளையாக — உறுப்பினர் எவ்வளவு ஐயா! உறுப்பினர் பட்டியலைக் காட்டு — என்றுதான் எவரும் கேட்பர். தி. மு. கழகம், சட்ட திட்டம் அமைத்துக் கொண்டுவிட்டது — இனியும், கட்டுப்பாடு இல்லாமல் கழகம் இருக்கக் கூடாது—இருக்க முடியாது.

உங்கள் ஊரிலே, எவ்வளவு உறுப்பினர், தி. மு. க. வுக்குஎன்று கேட்டால், முயர்சி எடுத்துக் கொண்டால் எத்தனையோ ஆயிரம் உறுப்பினர்களைச் சேர்க்க முடியும், என்று கூறும் பதில், இனி தி. மு. க. வில் இருத்தலாகாது. உறுப்பினர்களைப் பெருவாரியாகச் சேர்த்தாகவேண்டும்.

நமது முன்னுள்ள பிரச்னைகள், அதிகரித்துக் கொண்டுள்ளன. அவைகளைக் கடந்து வெற்றிப் பாதையில் செல்ல, நமது உள்ளங்கள் ஆர்வம் கொண்டிருந்தால் மட்டும் போதாது—ஒவ்வொரு விநாடியையும் கழகத்துக்காகச் செலவிட வேண்டும்.

கிளைக் கழகங்கள், தினசரி, பற்பல இடங்களில் துவக்கப்படுவதாகச் செய்திகள் காணுகிறேன்—பெருமிதங் கொள்கிறேன். அத்தனைக் கிளைக் கழகங்களும், எஃகுக் கோட்டைகளாக வேண்டும்.

பல இடங்களிலிருந்து, கிளைக் கழகக் கட்டிடத் திறப்புவிழாபற்றிய அழைப்புகளும் அறிவிப்புகளும், தலைமை நிலையத்துக்கு வந்திருக்கிறது. மகிழ்ச்சிக்குரிய செய்தி, இது. ஒவ்வொரு கிளைக் கழகங்களும், தங்களுக்கென ஓரிடம் அமைத்துக் கொண்டு, பொதுமக்களின் இடைவிடா தொடர்போடு பணியாற்ற வேண்டும்.

கழகத் தலைமை நிலையத்திலிருந்து இன்றுவரை 30,000 (முப்பதாயிரம்) உறுப்பினர் ரசீதுகள், அனுப்பப்பட்டிருக்கின்றன —முக்கிய நகரங்களுக்கும், சில மாவட்டச் செயலாளர்களுக்கும். ஏனைய இடங்களுக்கு, தினசரி, அனுப்பும் வேலை நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது.

மாவட்டம், சிற்றூர், நகரம்—எங்கும் உறுப்பினர் சேர்க்கும் வேலை வேகமாக நடைபெறுதல் வேண்டும். மார்ச்சு மாதத்தின் வேலைத் திட்டமாக, இதைக் கருதவேண்டும்—நாம். ஏப்ரல் முதல் வாரத்தில் எல்லாக் கிளைக் கழகங்களுக்கும், புது சட்டதிட்டப்படி நிர்வாகிகள் தேர்தல் நடத்தப்பெற வேண்டும்.

பாசறை அமைகிறது—பணி நடைபெறுகிறது—இனி உரிமைக் கிளர்ச்சியை ஒழிக்க முடியாது என்று ஆதிக்கக்காரனும் கூறியாக வேண்டிய நிலையைக் காணவேண்டுமானால், நடைபெற்ற பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை, மாநாடுகளின் எண்ணிக்கைஆகியவைகளைக் காட்டினால், போதாது—கண்சிமிட்டியபடி அரசியல் உலகு கேட்கும், உறுப்பினர் எவ்வளவு?—எங்கே புள்ளி விபரம் என்று.

தி. மு. க. தலை நிமிர்ந்து நின்று இதற்கு பதில் கூறவேண்டும்—பட்டியலைக் காட்டவேண்டும்.

தனி நாடு கேட்கிறோம், தோழர்களே! தனி நாடு கேட்கிறோம்!!—அதை ஆதரிக்கும் உறுப்பினரின் எண்ணிக்கை எவ்வளவு என்று தான் அரசியல் உலகு கேட்கும்.

இந்த முக்கிய ஆக்க வேலைகளில் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், கிளைக் கழகங்கள் எல்லோரது கவனமும் கவலையும் செலுத்தப்பட வேண்டும்.

முப்பதினாயிரம் ரசீதுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன — இரண்டு வாரங்களில். இன்னும் பதில் கிடைக்கவில்லை. எல்லாவற்றையும் சேர்த்தே அனுப்பவேண்டும்என்றிருத்தல் வேண்டாமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். சேரச் சேர, அனுப்பிக்கொண்டேயிருங்கள் — கட்டணத்தோடு. அடிக்கடி கழகத் தலைமை நிலையத்துடன், கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளுங்கள்.

பொதுக்குழு முடிவுப்படி, உறுப்பினர் கட்டணம் எட்டணாவையும், தலைமை நிலையத்துக்கு அனுப்பி வையுங்கள். கழக சட்டதிட்டப்படி தலைமைக் காரியாலயம், மாவட்டம், வட்டம், சிற்றூர் அமைப்புகளுக்குச்சேரவேண்டிய பங்கு தொகை, இங்கிருந்தே, அனுப்பப்பட்டுவிடும்.

புதிய பொறுப்புகள் — புதிய பாதை—புதியமுயற்சி — புதுயுகம் காணும் உளம்படைத்தோரே, புறப்படுங்கள்! தி. மு. க. கட்டுக்கோப்பான ஸ்தாபனம், என்று மலர்ந்திடச் செய்வோம். குடும்பங் குடும்பமாக உறுப்பினர்களைச் சேருங்கள்.

தாயகத்தின் விடுதலைக்குநம்மைத் தக்கோர் ஆக்கிக் கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் இது — வளர்ந்து நிற்கிறோம் — இந்த வளர்ச்சியை வகைப்படுத்த வேண்டாமா? வாலிபர்களே, மாணவர்களே, தாய்மாரே—நமது கொள்கைகள்வெற்றி பெற, குடும்பம் குடும்பமாகச் செல்லுங்கள்—உறுப்பினர்களைச் சேருங்கள்! உறுப்பினர்களைச் சேருங்கள்!!

அன்பன்,

அண்ணாதுரை.

# திராவிடநாடு

காஞ்சி] 2—3—52 [ஞாயிறு


## மொழிப் போராட்டம்

செங்குருதி சிந்திய தேசாபிமானிகளைப் பெற்றெடுத்த கீழ் வங்கத்தின் மணல், கடந்த சில தினங்களாக, சிவப்பு மயமாகிறது எனும் செய்திகளைக் கேள்வியுற்றோம் — சிந்தை நொந்தோம். இந்திய தீபகற்பத்தின் அரசியல் வரலாற்றில், இரத்தக் கறை படிந்த பல சம்பவங்களை ஏந்திய பெருமை கொண்ட வங்க மாதாவின், 'எதிர்கால உலகம்' இரத்தக் குளத்தில் மிதந்ததாம். கல்லூரி மாணவர்களின் குருதி கொட்டிற்றும்—தியாக பூமியில். தாய்மொழிக் கேற்பட்ட இழிநிலை போக்க, குமுறும் கடலென எழுந்த மாணவருலகு-தடியடிக்கும் துப்பாக்கிக்கும் இரையாயிற்றும்— இளைஞர் உலகிலே எழும்பிய, இந்த வீரப் போராட்டத்தால் 'கங்கைக் கரை சிவந்தது' எனும் செய்திகள் எட்ட எட்ட பதைத்துப் போனோம்.

மாணவருலகு, வைத்த தீ, வளர்ந்து விட்டதாம், அங்கு— பிப். 21ந் தேதி டாக்கா நகரில், எழுந்த, வீர முழக்கம், கிழக்கு பாகிஸ்தானெங்கும் ஒலிக்கத் துவங்கியிருக்கிறது. அதனால்,

12 பேர் செத்தனர்
150 பேருக்குக் காயம்
பேராசிரியர்கள் கைது
எம். எல். ஏக்கள் கைது.
ராணுவத்தினர் அட்டகாசம்.

இத்தனையும், கிழக்கு வங்கத்திலே, சின்னாட்களுக்குள் நிகழ்ந்திருக்கின்றன. கடைகளிலே ஹர்த்தால்— டாக்கா பல்கலைக் கழகம் மூடப்பட்டது—மாணவர்கள் 28 பேர் கைது — ஒவ்வொரு அறையிலும் புகுந்தனர் போலீசார்—முன்னாள் லீக் காரியதரிசி கைது—பத்திரிகாசிரியர்கள் சிறைக்குள் — ராணுவம் ரோந்து வருகிறது—144! ஊரடங்குச் சட்டம்!! — இத்தனை நிகழ்ச்சிகள், கிழக்கு பாகிஸ்தானில்.

சிந்தையில் கொட்டும் தேள் போல செய்திகள் இத்தனையும், வங்க மொழிக்காக, நடைபெற்றிருக்கின்றன.

வளமும் வாழ்வும் பெற்றுத் திகழும் வங்க மொழிக்காக, கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. வங்க மொழி வளர்த்த தேசிய வீரம், இலக்கிய உலகுக்கு அளித்திருக்கும் செல்வம், வளர்த்துத் தந்த கவிஞர்கள், ஏராளம்—தாய்மொழி பற்றுக்கொண்ட, தனையர்களைத் தாங்கியிருக்கும், சமவெளி, இது. அங்கே இத்தனை கோரங்கள்! இவ்வளவு அடாபிடி! 12 உயிர்கள்! படை பவனி! குண்டு முழக்கம்!

இத்தனையும் எதற்காக? மொழியைக் காக்கப் புறப்பட்டோரைத் தடுக்க! வேண்டாத ஒன்றை பொது மக்கள் மீது—திணிக்க! பாகிஸ்தான் அரசாங்கம், சர்க்கார் மொழியாக உருதுவைப் பிரகடனப் படுத்தியது — முன்பு. இந்த முடிவு பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில செய்யப்பட்ட நாள் முதல், கீழ் வங்கம், குமுறிக் கொண்டேயிருந்தது.

உருதுவைப் போல, தமது வங்காளி மொழியும் சர்க்கார் மொழியாக்கப்படவேண்டும் என கோரினர். தமது தாய்மொழிக்கும் சம அந்தஸ்து வேண்டுமென வேண்டினர். பாகிஸ்தான் மக்கள் தொகையில், மூன்றில் இரண்டு பங்கு பேர், பேசும் மொழி — வங்கமாகும். ஆனால், 'கராச்சி' இவர்கள் கோரிக்கையை ஏற்கவில்லை.

இந்த நடவடிக்கையை எதிர்க்க வேண்டுமென வங்கமாணவர்கள் புலி போலெழுந்தனர்! "வங்கமொழிக்கு வரும் ஆபத்து இது. வங்கமொழியையும், அரசாங்க மொழியாக்க வேண்டும்" என்ற கோரிக்கையோடு கிளம்பினர். தமது உரிமையை நிலை நாட்ட, பல்கலைக் கழகத்திலே, வேலை நிறுத்தமும் — கல்லூரிகளிலே முரசொலியும் எழும்பிற்று. இந்த மொழிப் போராட்டம் முகிழ்ந்ததும், தாய்மொழிக்கேற்படும் அவமானத்தைத் தவிர்க்க,

பேராசிரியர்கள்
எம். எல். ஏக்கள்
பல்கலைக் கழகத்தார்
டாக்கா வக்கீல்கள்
பொது மக்கள்
வியாபாரிகள்

எல்லோரும், கூட்டாகத் திரண்டனர். பல முஸ்லீம் லீக் பிரமுகர்களும், நேரிடையாகப் பங்குகொண்டனர். தீ பரவிற்று—கடைகள் மூடப்பட்டன — கல்லூரிகளுக்கு மாணவர்கள் செல்லவில்லை —வங்க மொழியை தாழ்த்தாதே' என்ற முழக்கங்கள் எழும்பலாயின.

இந்த மொழிப் போராட்டம், வேண்டுமென்றே துவக்கப்பட்டதென, எவரும் கூறமுடியாது. யாரோ சிலர் வெறுப்பால் கிளப்பி விட்ட புயல் என்றும் கூறி விட முடியாது. ஏனெனில் கீழ் வங்க முழுமையும் கட்சி பேதமின்றி இக் கண்டனக் கிளர்ச்சியில் கலந்து கொண்டனர்.

கீழ் வங்கத்தின் மொத்த மக்கள் தொகை ஆறு கோடி. இதில், வங்க மொழி பேசுவோர், நான்கு கோடி. மிகப் பெரும்பான்மையோரின் தாய் மொழியை உதாசீனம் செய்தால், எவரே தாங்க முடியும் அதை? அதினும் மொழியைத் தாயெனப் போற்றும் தனயரா தயங்குவர்!

இந்த உரிமையுணர்ச்சியை மதியாது அலட்சியத்தோடு நோக்கினார்—கீழ் வங்கப் பிரதமர் நூருல் அமீன். இதன் விளைவாக கிளர்ச்சி வலுத்தது—எங்கும் மாணவர் படை திரண்டது. புயலென வளரும் மொழிப் போராட்டத்தை ஒடுக்க, ராணுவப் படைகளையும் துப்பாக்கிகளையும் நம்பியது—கீழ் பாகிஸ்தான் சர்க்கார். பிப். 21ந் தேதி, அலைகடலென எழுந்துவந்த மாணவர் கிளர்ச்சி ஊர்வலத்தின் மீது, துப்பாக்கியைக் காட்டிற்று— பிணங்கள் 12! மரணப் படுக்கையில் 150 பேர் வீழலாயினர்.

இவ்வளவு ரசாபாசத்துக்குப் பின், இன்னும் அமைதி ஏற்படவில்லையாம். கைதுகளும்—144ம்— ராணுவ ரோந்தும் நடைபெற்றுக் கொண்டுள்ளனவாம்.

ரத்தமும் குண்டுகளும் விழுந்து சிதறியபின், கீழ்பாகிஸ்தான் சட்டசபையினர்; மக்கள் கோரிக்கையை



ஏற்று 'வங்காளி மொழி சர்க்கார் மொழியாக்கப் படவேண்டும்' என ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபைக்கு அனுப்பியுள்ளார்களாம்.

வேதனைக்குப்பின் ஏற்பட்ட இம் முடிவு, வரவேற்கக் கூடியதுதான்.

மொழிப் போராட்டம், எதேச்சாதிகார வெறியை, எதிர்ப்பதாகும். "வங்க மொழி மதிக்கப்பட வேண்டும்" என, கிழக்கு வங்கத்திலே, திரண்டெழுந்தோரில், காங்கிரஸ்காரர்களும் இருக்கிறார்கள்—சிறைக்குள் பூட்டப்பட்டிருக்கும் ஐந்து எம். எல். ஏக்களும் காங்கிரசார்தான். தாய் மொழியை எதிர்த்து, வரும் மற்றோர் மொழியின் ஆதிக்கத்தைத் தடுக்க, அவர்கள் தியாகம் புரிகிறார்கள். ஆனால் இங்கு! நமது சென்னையில் — இன்பத் தமிழகத்தில்!! "இந்தி"க்கு ஆதரவு தரும், இங்குள்ள தேசியத் தோழர்களுக்கு, கீழ்வங்கத்தைக் காட்டுகிறோம் — அங்கே மொழிக்காக சிந்தப்பட்ட இரத்தத் துளிகளைப்பாருங்கள்—கறைபடிந்த கதராடைகள் அங்கேயிருக்கின்றன—தாய் மொழிக்காக தியாகம் புரியும் தீரர்களைப்பாருங்கள்!

மொழிப் போராட்டம், எங்கும் எழும்பும் — வளமிக்க மொழியை அடிமையாக்கி, வேண்டாத மொழியைப் பொதுவாக்கும் முயற்சி, பலிக்காதென்பதை, 'கீழ்வங்கம்' செப்புகிறது.

தாய்மொழிக்காக கிளர்ச்சி செய்து, உயிரைத் துறந்த அந்த உத்தம இளைஞர்களின் தியாகத்தை நாம் போற்றுகிறோம். மாணவமணிகள் மூட்டிவிட்ட தீ, இன்று மகத்தான உரு வெடுத்திருக்கிறது. வீதிகளிலே வீழ்ந்த அந்த வீரப்புதல்வர்கள், வங்கத் தாயின் பெருமைக்காகத் தம்மைத் தத்தம் செய்திருக்கின்றனர். தமது தாய்மொழிக்காக, வீரப போராட்டம் நடத்தி, அவர்கள் சிந்திய இரத்தம் வீண்போகாது என நம்புகிறோம்.

உரிமைக்குரலை மதித்து, பாகிஸ்தான் சர்க்கார் நடக்கவேண்டுமென விரும்புகிறோம். இந்திய சர்க்காரைப்போன்ற, எதேச்சாதிகார வெறிக்கு ஆளாகாது, தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் — பாகிஸ்தான் சர்க்கார். எவ்வளவோ பாடுபட்டு தாம்பெற்றதனிநாட்டை, எதேச்சாதிகாரவெறிக்கு ஆட்படுத்தும் நோக்கம், அவர்களுக்கும் அரும்புவது, ஆபத்தாகும்.

ஆகவே, பொறுப்புணர்ச்சியோடு, கராச்சியினர் நடக்க வேண்டுமென விரும்புகிறோம். மொழிப் போராட்டத்தால் கங்கை மண் சிவந்தது— ஒரு களங்கமாகும்!

கீழ்வங்க மக்கள், பாகிஸ்தான் பிரிவினையை ஏற்று, புது நாட்டின் பொலிவுக்காகப் பாடுபட்டுக்கொண்டிருப்போராகும். அவரெல்லாம், பாகிஸ்தான் மலர்ந்தபோது மகிழ்ந்தனர்—தமது சமுதாயத்துக்கென ஒரு தனிநாடு கிடைத்து விட்டது என்பதால். அவ்வளவு மகிழ்ச்சியும் மலர்ச்சியும் கொண்ட மக்களிடையில், தமது சர்க்காரையே எதிர்க்க வேண்டிய நிலை வளர்ந்ததென்றால், தாய் மொழிபற்று, இளைஞர்களின் நரம்பு நாதமாக இருப்பதுதான்.

இந்த உண்மையை கராச்சியினர் உணராததன் விளைவுதான், இப்போது விளைந்த மொழிப்போராட்டம். இதுபோன்ற களங்க நிகழ்ச்சிகள் — ஏற்படுதல், நல்லாட்சிக்கு ஏற்றதல்ல.

இதை, உணரவேண்டும்-மொழி ஆதிக்கத்தைப் பரப்பலாம் எனக் கனவு காணுவோர். தாய்மொழியை இழக்க எவரும் மனமிசையார்! தாய்மொழியைத் தாழ்த்தும் மனப்பான்மையை மாணவருலகம் அனுமதிக்காது! இந்த உண்மையை கீழ் வங்கத்தைக் கண்டு உணரவேண்டும் — பாகிஸ்தானும், இந்துஸ்தானும். கீழ் வங்கம், தரும், பாடம் இடம்தான்.

## இலங்கை தி. மு. க.

இலங்கை திராவிட முன்னேற்றக்கழகத்தின் முதல் மாநாடு விரைவில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி மாநாட்டுக்கென வரவேற்புக் குழுவும் அமைக்கப்பட்டு விட்டது. கழக முன்னணி வீரர்கள் மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன் ஆகியோரை அழைப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது என மாநாட்டுச் செயலாளர் ம. அ. அந்தோணி முத்து அறிவிக்கிறார்.

## அதுவும் இதுவும்!

லண்டன் பிப் 25:- சூரியனை சந்திரன் மூன்று நிமிஷ நேரம் அடியோடு மறைத்ததையும், 9000 மைல் நீளம் 85மைல் அகலத்துக்கு இருள் பரவியதையும் சூடானில் பத்து விஞ்ஞானிகள் கண்டனர். இந்த சூரியகிரகணம்பற்றி போட்டோக்கள் எடுக்கப்பட்டன. இதனால் பல ஆராய்ச்சிகள் செய்யலாமென்றும், அநேக அரிய உண்மைகள் பெறலாமென்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்தியாவில்!:- சூரிய கிரகணத்தையொட்டி லட்சோபலட்சம் மக்கள் பிரார்த்தனை புரிந்து தீர்த்தமாடினர். குருக்ஷேத்திரத்தில் 5 லட்சத்திற்கு மேற்பட்ட யாத்ரீகள் புனித நீராடினர்.


### பாராட்டு விழா

தி. மு. க. ஆதரவு பெற்று வெற்றி பெற்ற M. L. A;
M. P-க்களுக்கு பாராட்டுக் கூட்டம்,
**4—3—52 செவ்வாய் மாலை 5-மணி**
**சென்னை: செயிண்ட்ஸ்மேரி மண்டபத்தில்**
நடைபெறும். மேற்படி பாராட்டு விழாவிற்கு,
தி. மு. க. பொதுச் செயலாளர்
**அண்ணாதுரை**
தலைமை வகிப்பார்.
தி. மு. க.

# கவர்னர் நியமனம்

வெள்ளையன் தன் கையில் சிக்கிய இந்திய உபகண்டத்தை ஆள, தன்னது நாட்டிலிருந்து பலரை அனுப்பினன், வைஸ்ராயாகவும், கவர்னர் ஜனரலாகவும்.

அதைப்போல, தென்னாட்டு ஆட்சியை நிர்வகிக்க, தன்னைச் சேர்ந்தோரை, கவர்னராக அனுப்பி வருகிறது, வடநாட்டு சர்க்கார்.

தங்களது ஆதிபத்யம் நிலைநாட்டப்பட, வெள்ளையருக்கு தமது பிரபுக்களும், நண்பர்களும் தேவைபபட்டனர்.

தமது பிடியை வலுப்படுத்த, வடநாட்டினருக்கு, தமது சகாக்களும், நண்பர்களும் தேவைப்படுகின்றனர்.

இந்த உண்மையை நிலைநாட்டுவதுபோல, சென்னைமாகாணத்தின் கவர்னராக ஸ்ரீபிரகாசா என்பவர், வரும் மார்ச்சு 12-ந் தேதியன்று பதவியேற்கப் போகிறாராம்.

ஸ்ரீபிரகாசா, இப்போது டில்லி சர்க்காரில் மந்திரியாக இருந்து வருபவர். அவரைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை வெளியிட்ட பத்திரிகைகள் தெரிவித்திருப்பது:-

ஸ்ரீபிரகாசாவும்—நேருவும் அந்தரங்க நண்பர்கள் — 'இருவரும் லண்டன் காம்பிரிட்ஜ் கல்லூரியில் படித்தவர்கள்' என்பவையாகும்.

நேருவின் அத்யந்த நண்பர்கள் என்று, இன்று காங்கிரஸ் இயக்கத்திலிருப்போரில், ஸ்ரீபிரகாசாவும் ஒருவர். அதுமட்டுமல்ல, நேருவின் வார்த்தையை சிரமேற்கொண்டு நடப்பவர் என்றும் கேள்வியுறுகிறோம். அதை, ஸ்ரீபிரகாசாவே வெளியிட்டிருக்கிறார். "இந்த நேரத்தில் என்னை கவர்னராகப் போகும்படி நேரு சொல்கிறார். நான் அதை ஏற்காமல், என்ன செய்யமுடியும்?" என்பதாக.

நேருவின் நண்பர்—அவர் கட்டளைப்படி நடப்பவர் என்பது மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தபிரமுகரும் ஆவார் ஸ்ரீபிரகாசா.

இவரை, சென்னைக்கு கவர்னராக ஆக்கியிருக்கிறது — டில்லி பீடம். பழைய கவர்னர் பவநகர், செல்லப் போகிறார் — அவரது இடம் இவரால் நிரப்பப்படுகிறது.

சென்னை — இன்றுள்ள சூழ்நிலை எல்லோரும் அறிந்ததாகும். காங்கிரஸ் வாதிகள் மந்திரிசபை அமைக்க மெஜாரிடியில்லாமல் திண்டாடுகிறார்கள் — காங்கிரசல்லாதோரோ, சர்க்கார் அமைக்க வேண்டுமென்று முயன்று கொண்டுள்ளனர். இந்த நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் வருகிறார், கவர்னராக!

காங்கிரஸ் முகத்தில் மக்கள் கரி பூசிவிட்ட நேரத்தில். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரே நமது நாட்டின்—ஆட்சித்தலைவராம்; நிர்வாகச் சூத்ரதாரியாம்.

வஞ்சகனும் துணியான், இச்செயலுக்கு. ஆனல் நமது டில்லி பீடம், துணிந்து செய்கிறது 'காங்கிரஸ் வேண்டாம்' என்று கூறிவிட்ட இடத்திற்கு — காங்கிரஸ் மந்திரிசபை ஏற்படுமோ, ஏற்படாதோ என்கிற ஐயம் பரவியிருக்கிற நேரத்தில் — இத்தகைய ஒருவர், கவர்னராக்கப்படுவதென்றால்!

அதிலும் நம்முடைய உரிமைக் கோரிக்கை வளர்ந்து வருகிற நேரம் இது—இந்த நேரத்தில் நேருவின் சகா, காங்கிரஸ் பிரமுகர்; கவர்னராக வருகிறார்!!

ஏதோ, திட்டமிட்ட, சூதெண்ணத்தோடே, டில்லி ஸ்ரீபிரகாசாவைக் கவர்னராக்கியிருக்கலாம் என்று, பரவிக்கிடக்கும் செய்தியை நாமும் நம்ப வேண்டியவராகிறோம்.

"தனக்கு வேண்டியவர்களையே சென்னை மாகாணத்துக்கு கவர்னராக்க வேண்டும்" என்பதே நேருவின் ஆசையென்பதை விளக்க, இன்னும் ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறோம். பவநகர் விலகப் போவதாகத் தெரிவித்ததும், பம்பாயைச் சேர்ந்த பி. ஜி. கேர் என்பவரைக் கேட்டனர்—ஒத்து, கொள்ளுமாறு. அவரும், நேருவின் உற்ற நண்பராகும். அவர் மறுக்கவே, தமது அருகிலிருக்கும் ஸ்ரீபிரகாசாவை அனுப்புகிறார், நேரு.

கவர்னர் பதவியென்றால் லட்சக் கணக்கான ரூபாய்களை, அலவன்சாகவும், சம்பளமாகவும் அனுபவிக்கக்கூடியதாகும். ஆண்டுக்கு இவ்வளவு என்று ஒதுக்கப்படும் இந்த ரூபாய்கள், நாம் செலுத்தும் வரிப் பணத்தில் தான் செலவிடப்படுகின்றன.

சென்னைக்கென ஒரு மந்திரி சபையும் சர்க்காரும் இருக்கும் போது, கவர்னர் ஏனோ—அதுவும் அங்கிருந்து வரவேண்டும்? நாமே அதையும் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமே! அதைவிட்டு, டில்லி, ஒருவரை அனுப்பவும், அவர் நமது ஆட்சிக்குத் தலைவராக இருக்க வேண்டிய அவசியம்தான் என்ன?

இவைகளை சிந்தித்துப்பார்த்தால் டில்லியின் ஆசை விளங்கும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தன்பிரதிநிதிகளைக்கொண்டே, பலநாடுகளை அடிமைப்பிடியில் கிடக்கச் செய்தது போல, டில்லியும் செய்கிறது! டில்லி சாம்ராஜ்யத்துக்காக வடநாடு, பாடுபடுகிறது!!

அதனால்தான் நெருக்கடியும் விடுதலை வேட்கையும் நிறைந்துள்ள இந்த சமயத்தில் தனது சகாவை—கட்சிக்காரரை — நேரு தர்பார் அனுப்புகிறது, இங்கு. இந்த உண்மையை, நாம் கவனத்தில் நிறுத்த வேண்டும்.

## கன்னையா

நாகர்கோவில் தோழர் கன்னையாவின், மரணதண்டனை, மலேய சுல்தானல் ரத்து செய்யப்பட்டசெய்தி அறிந்து மகிழ்கிறோம். தோட்டத் தொழிலாளியாக மலேயக்காடுகளில் துயரமனுபவிக்கும் அவரை பயங்கரவாதி யெனப் பட்டம் சூட்டி, மலேய சர்க்கார் கைது செய்ததையும், பிறகு தூக்கு தண்டனை தரப்பட்டதையும், இக்கொடுமையை எதிர்த்து இங்குள்ள முற்போக்கு சக்திகள் கண்டனக் குரல் எழுப்பியதையும் நாடு அறியும். இவருடைய மரணதண்டனை ரத்து செய்யப்பட வேண்டுமென நமது மாநில மாநாட்டிலும் தீர்மானமூலம் கோரினோம். நமது ஆசை நிறைவேறியதற்காக மகிழும் இந்த நேரத்தில், மலேய சர்க்காரின் மற்றொரு போக்கைக் காண வருந்துகிறோம். தூக்குத்தண்டனையிலிருந்து தோழரை, ஐந்து வருட சிறைவாசத்துக்கு அனுப்பியுள்ளனர்—விடுதலைசெய்யவில்லை. இந்த அடக்கு முறையை எதிர்த்து, கன்னையாவுக்கு பூரண விடுதலை வாங்கித்தருவதற்கான முயற்சிகளை இந்திய சர்க்கார் மேற்கொள்ளவேண்டுமென வலியுறுத்துகிறோம்.



# நல்லதல்ல

சென்னை மாநிலத்தில், இன்று ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலை குறித்து, உலகமுழுமையும், கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது.

பிற்போக்காளரிடை கலக்கமும் முற்போக்குச் சக்திகள்வசம் தீவிரமும் மலர்ந்திருக்கிறது, தேர்தல் முடிவுகளால்.

பணதிபத்யத்தின் பிம்பமான காங்கிரசின் சரிவு, புதுமை வேகத்துக்குக் கிடைத்திருக்கும் வெற்றியென்றே—கருதுவர், நாடு புதுமை பெறவேண்டுமெனும் தாகங்கொண்டோர்.

ஆட்சி பீடத்திலமர்ந்து வெறியாட்டம் ஆட காங்கிரசை இனி அனுமதிக்கக்கூடாது, என்றே ஆர்வங்கொள்வர்—முற்போக்குக் கொள்கைகள் பேசும் எவரும்.

தோட்டத்திலே ஏற்பட்ட புற்று இடிக்கப்பட்டால்தான், பாம்புகள் கொட்டம் அடங்கும்—தோட்டத்தையும் சோலையாக்கமுடியும். அதற்குப்பதில், "பாம்புப்புற்று இருந்தாலும் பரவாயில்லை! இடிக்கப்படுவதைப்பற்றியும் கவலையில்லை! எம் பணிஇரண்டுக்கும்பொதுவானதே!' என்று யாராவது சொன்னால், எரிச்சலைத்தான் ஊட்டும், எவருக்கும்.

இந்த சமரச ஞானம் போதிப்போர், சங்கராச்சாரியாராகவோ, சனதன வேத விற்பன்னராகவோ இருந்தால், 'தள்ளு குப்பையை' என்று கூறிவிடலாம்.

ஆனல், சமதர்மிகள் பேசுகிறார்கள்—சமரச ஞானம்! சமதர்மிகளெனக்கூறி வரும், இந்திய சோஷியலிஸ்டுகள் கூறுகிறார்கள்!

இந்த வாரம் சென்னையில் கூடிக்கலந்த சோஷியலிஸ்டு கட்சி நிர்வாகிகள், இத்தகைய முடிவையே வெளியிட்டிருக்கிறார்கள்.

காங்கிரசை எதிர்த்து அமைக்கப்படும் கூட்டு முன்னணியிலே சேரமாட்டோம்.

காங்கிரசிலும் சேரப்போவதில்லை.

இந்த முக்கியமான கட்டத்தில், கொஞ்சம் முற்போக்கோடு, நிகழ்ச்சிகளை நோக்கி முடிவு செய்வர், என எதிர்பார்த்தோம். ஆனல், "வழக்கம்போலவே" — நடந்துகொண்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சியின் கேடுகளைப் பற்றி, சோஷியலிஸ்டுகளும். பேசினார்கள்—தேர்தலின்போது. 'இத்தகைய காங்கிரசு ஆட்சியையோ, நாம் அனுமதிப்பது?' என்று கேட்கப்பட்டது, அவர்தம் தலைவர்களால். சிற்சில இடங்களில், சோஷியலிஸ்டுகளும், 144-க்கும் சிறைக்கும் ஆளாயினர், காங்கிரஸ் அடக்குமுறையால்.

அந்த அடக்கு முறைகளைக் காட்டி, பொதுமேடைகளில், கேட்டார்கள்—மக்களைப்பார்த்து. 'காங்கிரஸ் ஒழியவேண்டும் — எமக்கு வோட்டு தாருங்கள்!" என்று.

அப்படி வோட்டுக் கேட்டு, சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் எதிர்பார்த்த அளவு இல்லையென்றாலும் — 13 இடங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்த 13 ஸ்தானங்களிலும் வாக்களித்த மக்கள், காங்கிரஸ் ஒழிய வேண்டும், என்ற ஆசையோடுதான் வோட்டுப் போட்டிருக்கிறார்கள். ஆனல், சோஷியலிஸ்டு கமிட்டி முடிவு செய்திருக்கிறது — காங்கிரசுக்கு எதிராகச் செய்யப்படும் 'கூட்டு முன்னணியில் சேரமாட்டோம்' என்பதாக.

* * *

சோஷியலிஸ்டு தலைவர்கள் கூட்டம் நடைபெறுவதற்கு முதல் தினம் கம்யூனிஸ்டுத் தலைவரான தோழர் டாங்கே, சோஷியலிஸ்டுத் தலைவரான, தோழர் ஜெயப்பிரகாஷ்நாராயணனுக்கு, வேண்டுகோள் ஒன்று விடுத்திருக்கின்றார்—கூட்டு முயற்சியில் சோஷியலிஸ்டுகளும் பங்குகொள்ள வேண்டுமெனக் கோரி, அதற்கு ஜயப்பிரகாஷ் தந்திருக்கும் பதிலில், 'எங்கள் நிலையில் மாற்றம் ஏற்படாது. எப்போதும் போன்றதுதான்' என்று தெரிவித்திருக்கிறார்.

எப்போதும் போன்றதுதான்! — தெரிவித்திருக்கிறது, சோஷியலிஸ்டு கட்சி. எப்போதும்—இவர்கள், எப்படி நடந்து வருகிறார்களென்பதை, மக்கள் மன்றம் தெரிந்துகொள்ளாமலில்லை.

காங்கிரஸ் கூடாரத்தை விட்டு, சோஷியலிஸ்டுகள் வெளியேறிய நேரத்தில், காங்கிரஸ் பாசிசத்தை எதிர்த்து மலரும் இப்புதுக் கட்சி என்றே பலர் கருதினர். சோஷியலிஸ்டு தலைவர்களில் சிலர் கூட, அப்படித்தான் கருதினா — கூறினர். வடநாட்டில் காங்கிரசுக்கு அடுத்தபடியாக இருக்கும் பலதரப்பட்ட கட்சிகள், பிற்போக்காளரின் பிடியில் சிக்கியமையால், முற்போக்குக் கொள்கைகளைக் கூறும் சோஷியலிஸ்டு கட்சி முக்கிய இடம் பெறலாம் என்றே கருதப்பட்டது. கம்யூனிஸ்டுக்கட்சி தடைக்குள்ளான போது—சுதந்திரமாக உலவும் நிலையில்தான் இருந்தது, சோஷியலிஸ்டு கட்சி. எனினும், எதிர்பார்த்த அளவு — மக்கள் மன்றத்தின் கவனத்தைக் கவர்ந்ததாகத் தெரியவில்லை. காரணமென்ன? சோஷியலிஸ்டுகளை ஆதரிக்க பத்திரிகைகள் இல்லாமலில்லை — காங்கிரசை விட்டு வெளியேறியவர்கள் என்ற காரணத்தால், காங்கிரசைச் சார்ந்திருந்தோர் அனுதாபமும் கிடைத்திருந்தது. ஆனல், என்ன ஆயிற்று? கட்சிக்குள்ளேயே பூசலும், அருணாதலைமையில் மற்றோர் கட்சியும், ஏற்பட்டிருக்கிறதே யொழிய எதிர்பார்த்தது, ஏன், நடக்கவில்லை!

இந்த விளைவை, சோஷியலிஸ்டு நண்பர்கள் — குறிப்பாக தென்னாட்டுப் பிரிவினர் — கூர்ந்து கவனிக்கவேண்டும்.

சோஷியலிசக் கொள்கை ஒருகையிலும், ரமணரிஷி பக்திப்பிரவாகம் உளத்திலும், உலவியதுதான் என்று, நாம் காரணங்காட்ட விரும்பவில்லை. ஜயப்பிரகாஷ் போன்ற தனிப்பட்ட தலைவரைவிட அவர்கள் ஏந்திய சோஷியலிஸ்டு கொள்கைகள், பலம் வாய்ந்தவைதான். இருந்தும் பலனைக் காணவில்லையென்றால், அதற்குள்ள முக்கிய காரணம், சோஷியலிஸ்டுகளைப் பற்றி, மக்கள் கொண்டிருக்கும் கருத்துதான்.

இருமனம் படைத்தோர்!—காங்கிரசின் நண்பர்கள் — எவ்வளவு பேசினாலும், சமயம் வரும்போது காங்கிரஸ்பக்கமே நிற்பார்கள் — காங்கிரசின் மற்றொரு பதிப்பே 'சோஷியலிஸ்டு' கட்சி—ஜெயப்பிரகாஷும் நேருவும் அந்தரங்க நண்பர்கள் — இதுபோல மக்கள் மன்றத்தில், பல கருத்துகள், பரவிக்கிடக்கின்றன.

இந்தக் கருத்தைப் பலமூட்டுவதுபோல, தோழர் ஜெயப்பிரகாஷ் அவர்களும், நடந்துவந்திருக்கிறார் 'ரயில்வே ஸ்டிரைக்!' என்றொரு முழக்கம் வரும் 'நேருவைச் சந்தித்தார் ஜே. பி. என்றொரு செய்தி தொடரும்—'ரமாசம்காண முடிவு. ஸ்டிரைக் நடக்காது'—இப்படி செய்திகள் பறக்கும்.

இவைகளின் உண்மைகள் எத்தகையனவாயிருந்தாலும், இதனாலேற்பட்ட பலன், மக்கள் மன்றம் இவர்களைப்பற்றி சந்தேகம் கொள்ளும்படி ஆனதுதான்.

இந்த உண்மையைத் தென்னாட்டில் வதியும் அவர்தம் கட்சியினர் எவரும்—மறுக்க முடியாது.

இப்போது இந்த எண்ணத்துக்கு வலிவு தருவது போல முடிவு செய்திருக்கிறார்கள் — சோஷியலிஸ்டு கட்சியினர்.

காங்கிரசுக்கெதிராக—ஓர் ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டு ஆட்சியை நடைபெறச் செய்ய வேண்டும் என்று பலதரப்பட்ட கட்சிகள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. அந்தக் கட்சிகளின் கொள்கைகளில்—வித்தியாசம் இருந்தாலும், அவர்கள் ஒரே நோக்கத்துக்காக ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

"காங்கிரசுக்கு மக்களிடத்தில் விருப்பமில்லை. காங்கிரசாட்சி ஒழியும் என்று ஆவலிலேயே மக்கள் ஆசையை நிறைவேற்றவேண்டும்"

என்ற, கருத்தை, எல்லோரும் உணர்ந்த காரணத்தால், கட்சிமாச்சரியங்களிருந்தாலும், எல்லோரும் கூடி குறைந்தபட்ச திட்டமொன்றை அமைத்துக்கொண்டு, கூட்டு சர்க்கார் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆனால், காங்கிரசை எதிர்ப்பதாகக் கூறிவந்த சோஷியலிஸ்டு கட்சியினரோ, இந்த கூட்டு முயற்சியில் பங்கேற்கமாட்டோமென, கூறுகின்றனர்.

ஏன் பங்கேற்க மாட்டோம் என்று, விளக்கும்போது, சோஷியலிஸ்டு பிரமுகர்களில் ஒருவரான—சாதாரணமானவரல்ல!— விஜய நகரம் ராஜா கூறியிருக்கிறார்—"இந்த கம்யூனிஸ்டுகளின் முயற்சிக்கு ஒத்துழைக்க மாட்டோம். கம்யூனிஸ்டுகளோடு சேருவாயா அல்லது காங்கிரசாரோடு ஒத்துழைப்பாயா என்று யாராவது கேட்டால், நாங்கள் காங்கிரசையே தேர்ந்தெடுப்போம்" என்பதாக. விளக்கத்தைப் பாருங்கள்! கம்யூனிஸ்டு கட்சியை விட காங்கிரசில் எந்த முற்போக்கு எண்ணம் முகிழ்ந்து கிடக்கிறதோ, அவரைத்தான் கேட்கவேண்டும்!

சோஷியலிஸ்டு தலைவர்களோ, கூட்டுமுயற்சியில் சேரமாட்டோம் என்கின்றனர்! "இந்தக் கூட்டு முயற்சியில் சேர்ந்தால் — தங்கள் கட்சியின் பலம் குறைந்துவிடும். என்று சோஷியலிஸ்டுகள் கருதலாமல்லவா?" என்று சிலர் கேட்கலாம். அப்படி சந்தேகப்படுவோருக்கு ஒன்று தெரிவிக்க விரும்புகிறோம்—பல கட்சிகளோடு சேர்வதால், தமது கட்சி பலவீனமாகும் என எதிர்பார்ப்பது, மிக மிக வேடிக்கையானதாகும்.

ஒவ்வொரு கட்சியும், தத்தமக்கென, சில கொள்கைகளுக்காகத்தான், போராடிக்கொண்டிருக்கின்றன. அந்த கொள்கைகளாலேயே வளர்ந்துகொண்டிருக்கின்றன. 'தலைமைப் பதவிக்காக ஒரு கட்சி' என்று, மனப்பான்மை கொண்டோரின், மண்டைக் கனத்தை மக்கள், இனி மதிக்கமாட்டார்கள். கொள்கைகளின் தீவிரமே, கட்சிகளின் ஊன்றுகோலாகும்.

தேவைப்படும் மருந்தைத் தரும் டாக்டரைத்தானே, நோயால் வாடுவோர், எதிர்பார்ப்பர்—விரும்புவர். நல்ல மருந்து வைத்திருக்கும் வைத்தியர், நாலு வைத்யரோடு சேர்ந்து பேச, ஏன் பயப்படவேண்டும்?

மற்ற கட்சிகளோடு சேர்வதால் 'மாத்து' குறைந்துவிடுமோ, என அஞ்சுவது, தாங்கள் சுமந்திருக்கும் கொள்கைகளின் வலிவையே சந்தேகிப்பதாகும். இந்த அளவு சந்தேகம், சோஷியலிஸ்டு தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்குமென, நாம் நம்பவில்லை.

* * *

சென்னை மாநிலத்தில் காங்கிரசுக்கு எதிராக அமைக்கப்படும் சர்க்காரில், காங்கிரசை தோற்கடித்த அத்தனை கட்சிகளும் ஒன்று சேர்ந்தால்தான், ஒரு அமைதியான சர்க்கார் இயங்கமுடியும் என்று, எல்லோரும் நம்புகின்றனர். பிரஜா கட்சிபோன்றவைகள்கூட, இந்த முயற்சியில் பங்கேற்கும்போது, முற்போக்குக் கொள்கைகள் பேசும் சோஷியலிஸ்டுகள், இம்முயற்சியில் பங்கேற்காமல் தயங்குவது—விசித்திரமாகமட்டுமல்ல, வேதனையாகவும் இருக்கிறது.

"எந்தச் சர்க்கார் ஏற்பட்டாலும், சோஷியலிஸ்டு கட்சி எதிர்கட்சியாகவே விளங்கும்."

என்று, சோஷியலிஸ்டு தலைவர்கள் முடிவு செய்திருக்கிறார்களாம். இதன் நோக்கத்தைப்பற்றி கவனிக்குமுன், இந்தப் போக்கால் விளையும் விபரீதங்களைக் கவனிக்கவேண்டும். 'காங்கிரசுக்கு எதிராகவும், கூட்டுமுயற்சிக்கு எதிராகவும், இருப்போம். எங்களது போக்கு இரண்டுக்கும் நடுநிலையுள்ளதாகவே இருக்கும்" என்று அவர்கள் கூறுவதில், ஆபத்து இருக்கிறது.

இந்த 'நடுநிலைமை'யால், இங்கே, காங்கிரசை எதிர்த்து ஒரு கூட்டு சர்க்கார், அமையாமல்கூடப் போய்விடலாம். ஏனெனில் கூட்டு முயற்சியில் பங்குகொண்டிருக்கும் கட்சிகளின் மொத்த எம். எல். ஏக்கள் தொகை 190 ஆகும். 375-பேர் கொண்டசட்டசபையில், இன்னும் பலமான மெஜாரிடியிருக்கவேண்டுமேயானால் சோஷியலிஸ்டு போன்றோரும் பங்கேற்றால்தான் முடியும். அவர்கள் 'நடுநிலை'யாக இருப்போம் என்று ஒதுங்கினால், காங்கிரசின் ஆட்சி ஏற்பட வாய்ப்பு, உண்டாகலாம்.

---

## மகிழ்ச்சி

பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் தோழர் க. அன்பழகன் M. A., அவர்களின் துணைவியார் வெற்றிச் செல்வியாருக்கு 17—2—52-ல் ஒரு ஆண் மகவு பிறந்து தாயும், சேயும் நலமென்ற சேதி கேட்டு மகிழ்கிறோம்.

---



இந்த நிலையைத்தான், சோஷியலிஸ்டுகளின் முடிவு கொண்டு வருகிறது.

கூட்டுசர்க்கார் அமைப்பதெற்கென ஐக்கிய ஜனநாயக முன்னணியார் வகுத்திருக்கும் குறைந்த பட்ச திட்டம் (Minimum Programme) சோஷியலிஸ்டு கட்சி ஏற்கமுடியாததல்ல. அப்படியே அபிப்பிராய பேதங்களிருந்தாலும், கூடிக்கலந்து கூட்டவும் குறைக்கவும், செய்யலாம். இருந்தும், சோஷியஸ்டுகள் 'நடுநிலைப் பாதை'யில்தான் இருப்பார்களாம்!

கூட்டு முயற்சி வெற்றியளிக்காமற் போனால், அதனாலேற்படும் பழிக்கு சோஷியலிஸ்டுகள் இலக்காகத்தான் செய்வர். காங்கிரசுக்கு எதிராக வோட்டுப் பெற்றுச் சென்ற நீங்கள், ஏன், காங்கிரசுக்கு எதிரான அரசாங்கம் அமைக்க ஒத்துழைக்கவில்லை?' என்று மக்கள் மன்றம், கேட்காமல் போகாது.

இதை, மனத்திலிருத்தி, தமது முடிவை, புனராலோசனை செய்ய வேண்டும் என்று சோஷியலிஸ்டு எம். எல். ஏ.,க்களுக்கு ஆலோசனை கூற விரும்புகிறோம்.

இந்த நெருக்கடியான கட்டத்தில் பொதுமக்களின் விருப்பத்துக்கெதிராக, ஒதுங்கினால், சோஷியலிஸ்டுகள் மீது, மக்களுக்கிருந்து வரும் தப்பெண்ணம், அதிகமாகவே செய்யும்.

"காங்கிரசின்—மறுபதிப்பு" என்று இவர்கள் பற்றி பேசப்படும் கூற்று, வலிவுள்ளதாகிவிடும். இத்தகைய குற்றச்சாட்டைக் கழுவிக் கொள்ளும், நல்லசந்தர்ப்பம், இந்த நேரம். இதை நழுவவிடுவதால் ஏற்படும் பலாபலன்களை சோஷியலிஸ்டுகள் நன்றாக சிந்திக்க வேண்டும்—வடநாட்டு சோஷியலிஸ்டுகளைவிட தென்னாட்டிலுள்ள சோஷியலிஸ்டு தோழர்கள், இந்த விஷயத்தில், அதிக கவனம் செலுத்தவேண்டும்.

முற்போக்கு கட்சியெனச் சொல்லிக்கொண்டு, பிற்போக்குக் கட்சியான காங்கிரஸ் ஆட்சிபீடம் அமர அனுமதிக்கும், எவரையும், எதிர்காலம் மதிக்காது; நம்பாது.

## நெய்வேலி நிலக்கரி

"சென்னை மாகாணத்துக்கு தற்போது தேவைப்படும் நிலக்கரி 30-லட்சம் டன்களாகும். ஆனால், 11-லட்சம் டன் மட்டுமே, ரயில் மூலமும், கடல் மூலமும் நமக்குக் கிடைக்கிறது. இதனால், நம்முடைய, தொழில் வளர்ச்சி தடைப்படுகிறது"

* * *

"சென்னையில நிலக்கரியின் விலை ஒருடன்னுக்கு ரூ. 35-முதல் 40-வரை ஆகிறது. சில இடங்களில் ஒருடன் விலை ரூ. 70 ஆகக்கூட இருக்கிறது. இதனால், இங்கே உள்ள தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலை, உயர்கிறது."

* * *

"தென் ஆற்காடு, நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி உலகத்திலேயே மிகச் சிறந்ததாகும். ஜெர்மனியில் கிடைக்கும் உயர்ந்த ரகத்தையும் விட, ஆஸ்திரேலியாவில் அகப்படும் பழுப்பு நிலக்கரியையும்விட, இது மிகமிக உயர்ந்தது. தொழில்களுக்கு இது பெரிதும் பயன்படும்."

* * *

"சுமார் நூறு மைல் பரப்பில் 200-கோடி டன் பழுப்பு நிலக்கரி கிடைக்குமென இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்த கமிட்டி அறிவித்திருக்கிறது"

* * *

சிந்தைகளிக்கும் இத்தகவல்களைத் தந்திருப்பவர் சென்னை சர்க்கார் அபிவிருத்தி இலாகா காரியதரிசியான ஜே. எம். லோபோபிரபு ஆகும். "டில்லியின் தொடர்பைத் துண்டித்தால் திகைக்கவன்றோ, நேரிடும்" என்று சிலர் செப்புகிறார்களே, அவர்கள் திருப்பார்வைக்கு, "நெய்வேலி"யைக் காட்ட விரும்புகிறோம். 'வைரத்தை விட மதிப்புள்ளது, நிலக்கரி' என்று கூறுகின்றனர், இன்றைய ஆராய்ச்சியாளர்கள். இன்றைய தொழிலுலகத்தில், நிலக்கரி, மிகமிக இன்றியமையாதது. அது இருக்கிறது, இங்கு! அதிலும்—அதிகமாக; சிறந்ததாக!!

## எல்லை காந்தி

'எல்லைக் காந்தி என அழைக்கப்படும் கான் அப்துல் கபார்கான் அவர்கள், லாகூர் சிறையில், நோய்வாய்ப்பட்டுக் கிடப்பதாக, 'பாகிஸ்தான் டைம்ஸ்' இதழ் தெரிவிக்கிறது. பாகிஸ்தான் ஏற்பட்ட நாள் முதல், எல்லைகாந்தி, சிறை வாழ்க்கையில் கிடந்துழல்கிறார், என்பது யாவரும் அறிந்ததே யாகும். அந்த கிழவர், காங்கிரஸ் இயக்கத்தில், முக்கியமான வரிசையிலிருந்து பணியாற்றினார். காங்கிரசின் கொள்கைப்படி, 'பிரிவினை கூடாது' என்று, கருத்துக்கொண்டிருந்தவர்தான். ஆனால், பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு, அவர் மறுக்கவில்லை. 'பாகிஸ்தானிலிரேன்! இந்தியாவுக்கு வந்துவிடுகிறேன்' என்று பிறந்த மண்ணைவிட்டு, ஓடிவந்துவிடவுமில்லை. இளமை முதல், பொது வாழ்வில், பற்பல சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆட்பட்ட, தீரர் அவர். அத்தகைய ஒருவரை, சிறைக்குள் வாடவிடுவது, நீதியல்ல—என்பதை நாம் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளோம். இத்தனை ஆண்டுகள் ஒரு பொதுத் தலைவரை, பூட்டி வைப்பதென்பது — விரும்பப்படாத காரியமாகும். புதிதாகப் பிறந்து வளரும், பாகிஸ்தான், இதுபோன்ற பொதுஜனத் தலைவர்களைப் பூட்டிப் போடுவதன் மூலம், மக்களின் மன எரிச்சலைப் பரிசாகப் பெறுவது, நல்லதல்ல. ஆகவே, சிறையில் வாடும் வீரரை, விடுதலை செய்ய வேண்டுமென, வலியுறுத்துகிறோம். குடல் நோயால் கொத்தப்படுகிறாராம், அவர். வளரும் புது நாடுகள், அடக்குமுறைகளை நம்புவது, ஆபத்தை அணைப்பதாகும். இந்தப் பாதையில் சென்ற இந்திய சர்க்கார் இன்று, அதற்கான பரிசை பெற்று வருகிறது-தேர்தலில்! இந்த நிலைதான், அடக்குமுறைப்பாதையில், செல்லும் எவருக்கும் ஏற்படும். இதை பாகிஸ்தான் சர்க்கார், உணரவேண்டும் என விரும்புகிறோம் — சகோதர நாடென்பதால்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுத்து ஒரு படம் இருக்கிறதே சார் அதைக் கொஞ்சம் விளக்கிக் கூறுங்கள்.

ஆசி:- இந்த மஞ்சள்கலர் இருக்கிற இடமெல்லாம் மங்கோலியர் வசிக்கிறார்கள். வைலட்கலர் ஆர்ய—திராவிடரைக் குறிக்கும்.

மாண:- ஆர்ய திராவிடர்னு என்ன சாதி சார்.

ஆசி:- சாதியில்லேடா. ஆரிய இனமும் திராவிட இனமும் கலந்து புது இனம் உண்டாகி அந்த மக்கள் வாழும் இடம்.

மாண:- சரி சார்.

ஆசி:- இந்த பச்சை மங்கோலிய—திராவிட இனத்தைக் குறிக்கும் இந்த லேசானபச்சை இருக்கிறதே அது திராவிட இனத்தவர் வாழும் இடம்.

மாண:- இப்போது கூடவா சார்.

ஆம்:- ஆமாண்டா! இப்பத்தி நிலையைதான் படத்திலே போட்டு காட்டியிருக்கான்.

மாண:- அப்போ பார்க்கபோனு திராவிட இனத்தவர்தான் இந்தியாவிலே அதிகம்போல இருக்குது.

ஆசி:- ஆமாம் அது எப்படி கண்டு பிடிச்சே?

மாண:- படமே சொல்லுதே சார். சென்னை, ஐதராபாத், ஒரிஸ்ஸா பீகார் எல்லா மாகாணங்களும் திராவிட மக்கள் வாழக்கூடியதாகவே வர்ணம்தீட்டிக் காட்டப்பட்டிருக்கிறதே.........என் சார் "திராவிட நாடு" என்று பிரிவினை கேட்கிறார்களே இந்தவர்ணம்பூசப்பட்டபாகம் தானு சார் அது.

ஆசி:- ஓ ஹோ! இந்த சந்தேகந் தானு உனக்கு போடா இடத்திற்கு.

மாண:- சார் தேசப்படப் புத்தகத்தில் உள்ளதைத்தானே சார் கேட்கிறேன் அதுக்குள்ளே கோவிச்சிக்கறீங்களே.

ஆசி:- இந்த மாதிரி சந்தேகமெல்லாம் இனி பள்ளிக்கூடத்தில் கேட்காதே. இங்கே கூடாது.

மாண:- அப்போ வீட்லேவந்து கேட்கட்டுமா சார்?

(மணியடித்தல்—மணவர்கள் கலைதல்)

## செய்திக் கதிர்

"இந்திய சர்க்காரிடமிருந்து நிதி கிடைத்திருந்தால், ராஜ்ய சர்க்காரின், பிரதான அணைக்கட்டுத் திட்டங்கள் இந்த ஆண்டு கஷ்டமில்லாமல் நிறைவேற்றப்பட்டிருக்கும்"

—சென்னை சர்க்கார் அறிக்கை

* * *

நிருபர்:- ஏன், மாலம்புழா போன்ற நீர்த்தேக்க வேலைகளை தொடர்ந்து செய்யவில்லை.

பக்தவச்சலம்:- சர்க்கார் கஜானுவில் பணமில்லையே!

* * *

"இந்திய சர்க்காரிடம் இந்த ஆண்டு 20 கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாக மிச்சமிருக்கிறது"

—"தினசரி"

* * *

"இருபது கோடி ரூபாய் மிச்சமிருக்கிறதே! அப்படியிருக்க, மத்ய சர்க்கார் ஏன் தான், இந்தத் திட்டத்துக்கு பண உதவி புரியவில்லையோ, எனக்குத் தெரியவில்லை"

—மாதவ மேனன்

* * *

இந்தச் செய்திகள் கொஞ்சம் பழையவை; அதாவது இரண்டொரு மாதங்களுக்குள், அமைச்சர்களால்—இப்போது மாஜிகள்!—சிந்தப்பட்டவையாகும். இதுபற்றி, காரைக்குடி 'வாரச் செய்தி' இதழ் எழுதியிருக்கிறது— கடந்த வாரம்.

இந்திய சர்க்காரிடம் இருக்கும் 20 கோடி ரூபாயில் சென்னையை நம்பி கேவலம் 20 லட்சம் ரூபாயா தரமாட்டார்கள் அவர்கள். சென்னையை டில்லி அவ்வளவு மட்டமாகவா மதிக்கிறது? அங்கு வடநாட்டிலே மலாம்புழாவைவிட மிகப் பெரிய பல திட்டங்களுக்கு கோடிக் கணக்கான பணத்தைக் கொட்டிக் கொடுத்தக் கும்பல் டில்லி, தென்னுட்டின் வாழ்வை ஓரளவு வளப்படுத்தும் இந்தச் சிறியதொகையான 20 லட்சத்தைக் கொடுத்துதவ மறுக்கிறதென்ருல், தென்னுட்டை டில்லி அலட்சியப் படுத்துகிறதென்று தான் பொருள்"

[மலையாளப் பகுதியிலே ஓடிக் கொண்டிருக்கும் வற்ருத ஓர் ஆறு மாலம்புழா. இதற்கு அணை கட்டினுல் ஆண்டு ஒன்றுக்கு 20 ஆயிரம் டன் அரிசி கிடைக்கும். சென்ற ஆண்டில் துவக்கப் பெற்ற இந்த அணைக்கட்டுக்கு இதுவரை 60 லட்சம் செலவாகியிருக்கிறது. இன்னும் 20 லட்சம் தான் தேவை, வேலை முடிய—அது கிடைக்காததால், வேலைகள் நடக்கவில்லையாம்.]

☆

## பரிதாபம்!

காந்தியடிகளின் 'குரலாக' விளங்கிய "ஹரிஜன்" இதழை, நிறுத்திவிடுவதென முடிவுசெய்திருக்கிருர்களாம்,—காந்தியாரின் நவஜீவன் டிரஸ்ட் அதிபதிகள். காரணம், அந்த இதழை ஆதரிப்போர் தொகை குறைந்துவிட்டதாம். சந்தாதார்கள் இல்லையாம். பரிதாபத்தோடு வெளியிட்டிருக்கிருர்கள், நிர்வாகிகள்.

எப்படியிருக்கமுடியும், ஆதரவு? காந்தியார் மறைந்ததுமே, அவர் விருப்பத்துக்கு மாருக நடந்துவரும், காங்கிரஸ் வாதிகளுக்கு இந்தப் பத்திரிகை, கண்ணிலா, படப்போகிறது! கள்ள மார்க்கெட், கொள்ளைலாபம், ஊழல் இலஞ்சம் இவைகளில் செலுத்தும் கவனத்தை வேறெதில் செலுத்துவர், கதர் குல்லாய்கள்! பரிதாபப் படுகிரேம், காந்தியாரின் குரலை, நினைத்து!!

### முகவரி மாற்றம்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி,
'தனியரசு'
விருதுநகர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.

109
REGD No. M. 4642

# திராவிடநாடு

விலை அணு 2. சிலோன் 15 சதம்

மலர் 10 || 9—3—52 || இதழ் 36

# மண்டிக் கடையில்
## ஒரு மணி நேரம்!

[வண்டு]

[முக்கிய குறிப்பு:- இந்த நிகழ்ச்சியில் குறிப்பிடப்படும் 'ஸ்டோர்', 'சாமான்', 'பழைய கடை' என்பவைகளுக்கு வீணர்த்தம் செய்து கொள்ள வேண்டாம்]

[சுதந்திர விலாஸ்-ஸ்டோர்' என்கிற போர்டு, மின்சார பல்புகளால் அலங்கரிக்கப்பட்டு ஜொலித்துக்கொண்டிருக்கிறது. முதலாளி மூக்கப்பிள்ளை, செல்லாத காலணு ஒன்றைத் தட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிருர். கணக்கப்பிள்ளை, தெருவில் போவோரை பார்த்துக்கொண்டிருக்கிருர். எடுபிடிகள், உள்ளே, கொஞ்சம் ரவையையும் சர்க்கரையையும் கலந்து 'வயிற்றுக்குள்' அனுப்பிக்கொண்டிருக்கின்றனர்—சுவாரஸ்யமாக.]

"என்னுண்ணேன்! ஏன் இப்படி ஈ ஓட்டுது கடை. யாரும் திரும்பக் கூடமாட்டேங்கிருங்களே........"

"எப்படிப்பா, வருவாங்க. ஊம்...கொஞ்சம் ரவை எடு"

"பெரிய போர்டு மாட்டியிருக்கோம்—எலெக்ட்ரிக் பல்ப் ஜொலிக்குது—பிட் நோட்டீஸ் பறக்குது. ஆனல் எவனும் திரும்பமாட்டேங்கிருனே!"

"ஏன் வர்ருன் இங்கே! இந்த ரவையைப் பாத்தில்லே......என்னு புழு நெளியுது"

"சேச்சே! தெரியாம சாப்பிட்டுட்டேனே-அண்ணே வாய் குமட்டுதே நீ சொன்னதும்"

"கொஞ்சம் புளியை எடுத்துப் போட்டுக்கோ"

[புளியை எடுப்பதற்காக புளி மூட்டையில் கை வைக்கிருன். ஏதோ, கையில் தட்டுப்பட்டு விழுந்தடித்து ஓடுகிறது]

"ஐயோ! எலி, அண்ணே......"

'பாத்திலே! இங்கே எலி மட்டுமா இருக்கு? யானை, புலி, காடி கூட மறைஞ்சிருந்தாலும் இருக்கும்...ஊம்...புளியை வாயிலே போட்டுக்காதே"

[இந்த சமயத்தில், 'குலாம்' என்று கூப்பிடுகிருர்—முதலாளி ஐயா. அவன் போகிருன்—]

"குலாம்! நீ போயி — அவன் கடை எப்படியிருக்குன்னு — பார்த்து வா!"

"எங்கே, கோவாப்பரேடிவ் ஸ்டோருக்குங்களா?"

"ஆமாண்டா, கழுதே! கோவாப்பரேடிவ் ஸ்டோராம் ஸ்டோரு!"

[குலாம் போகிருன் — மூக்கப்பிள்ளை, கணக்கப்பிள்ளையைப் பார்க்கிருர்—கணக்கப்பிள்ளை சுவாரஸ்யமாக 'பகுத்தறிவுப் போட்டி' கூபன்களைப் பூர்த்திசெய்து கொண்டிருக்கிருர்]

"ஏன்யா! எப்படியிருக்குதாம், ஸ்டோர்"

"மேலிருந்து கீழ்..."

"என்ன......?"

[பகுத்தறிவு கூபன்களில் ஆழ்ந்திருந்த கணக்கப்பிள்ளை, முதலாளியின் குரல் கேட்டுத் திடுக்கிருர். 'மேலிருந்த கீழை' விட்டு விட்டு...]

"என்னுங்க......"

"எப்படியிருக்குதாம்ணேன் — அவன்க கடை"

"ரே! நீங்க ஒண்ணு — கவலைப் படாதீங்க. ஒண்ணும் வியாபாரமே நடக்கறதில்லையாம் — ஊரிலே எல்லாம் ஒரே கெட்டபேரு — யாரும் போறதே இல்லை"

"அப்படீன்னு, நம்ப கடை வியாபாரம் அதிகரிக்கணுமே"

[கணக்கப்பிள்ளை, பதில் கூற முடியாமல், பேச்சை வேறுதிசைக்கு ஓடிக்கிருர்]

"நம்ப அண்ணைக்குப் போட்ட 'பிட்நோட்டீசு'களெல்லாம் தீர்ந்துடுச்சாம் — ஒரு வீடு தவருமே கொடுத்துட்டாங்க பசங்க"

"அதுக்கு குறைச்சலேலே! பணம் தான் பாழாவுது......"

"நான் பிரமாதமா எழுதிக் கொடுத்திருக்கேன் — இன்னொரு பத்தாயிரம் போடச்சொல்லியிருக

கேன் — படிக்கட்டுங்களா, நோட்டுசை''

''ஊம்......ஊம்......''

''கோவாபரேடிவ் ஸ்டோர் — ஒரு பித்தலாட்டம். உருப்படாது, உதவாது. ஒரு கடை போதாதா நம்ப ஊருக்கு. பொதுமக்களே நம்பா தீர்கள்—இத்தனையும் தலைப்புங்க... இனிமேலேதான் மேட்டரு...''

[இந்த நேரத்தில், கையில் பையோடு ஒருவர் வருகிறார். கணக்கப்பிள்ளையும் முதலாளியும், ஏக சமயத்தில 'வாங்க! வாங்க!!' என்று அழைக்கின்றனர். வந்தவர் உட்காருகிறார்]

''என்னுங்க—ஊரிலே இல்லியா!''

''இங்கேதான் இருக்கேன்—''

''ஏய்! யாரது? கோவிந்தா — நீ போய், காபி வாங்கிட்டுவா—ஏங்க காப்பி சாப்பிட்டீங்களா! இல்லே—சோடா......''

[திகைக்கிறார் வந்தவர். மூக்கப்பிள்ளையா இப்படி உபசரிக்கிறார் என்று ஆச்சரியத்தோடு...]

''வேணுங்க! வேணுங்க!!''

''பரவாயில்லீங்க ... கோவிந்தா! வாங்கி வா, காப்பி......ஏன், இந்த பக்கமே வர்ரதில்லே....சாமான் கூட இங்கே வாங்க வர்ரதில்லையாமே...''

''ஸ்டோரிலே வாங்குறேமுங்க..........நானும் ஒரு மெம்பருல்லே...''

["ஆ...கா.. ...ங்" என்று, பெருமூச்சுவிடுகிறார், முதலாளி, ஐயா. சிறிது நேரம், அமைதி. கணக்கப் பிள்ளை கேட்கிறார்.]

''சர்க்கரை என்ன விலைங்க...... ஸ்டோரிலே?''

''வீசை 1—4—8...''

''வெள்ளையிலேயா?''

''வெள்ளை, கருப்பெல்லாம் ஸ்டோரிலே கிடையாது. நியாயமான விலைதான்...''

["அப்படீங்களா?" என்று கேட்டுவிட்டு மூக்கப்பிள்ளை, தமது புருவத்தைச் சுழிக்கிறார். வயதான காரணத்தால், நெற்றியிலே மடிப்பு விழுகின்றன...]

கண:- ஆகா! பார்த்தீங்களா... ஐயாவுக்கு நெற்றியிலே மடிப்பு விழறத்தை... அழகாக இருக்குங்க, இது. இப்படியே, ஒரு 'போட்டோ' எடுக்கணும்...

[சம்பந்தா சம்பந்தமில்லாமல், கணக்கப் பிள்ளை பேசுவதை, முதலாளி, அலட்சியமாக, கவனிக்காதது போலிருக்கிறார். வந்தவருக்கு, உள்ளுக்குள் சிரிப்பு — இத்தகைய ஆசாமியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கும் முதலாளியைப் பார்த்து]

மூக்:- சாமான் வேணுங்களா?

வந்:- இல்லீங்க...

மூக்:- அப்புறம் எது விஷயமா வந்தீங்க...

வந்:- சும்மா, பார்த்துட்டு போகலாமேன்னுதான் வந்தேன்...

மூக்:- சரி—வணக்கங்க. ஞாபகம் இருக்கட்டும்.

[வந்தவர் போகிறார். முதலாளி, கணக்கப்பிள்ளையைப் பார்த்துக் கேட்கிறார்]

மு:- என்யா! வந்தவன், எதிரின்னு தெரியுது... அப்பகூட என் நெற்றிச் சுருக்கத்தை புகழறது...?

க:- உண்மையைச் சொன்னு என்னங்க...எதுக்காகங்க மறைச்சுப் பேசறது. ஐயாவொட அறிவும், உருவும்...

[குலாம், வருகிறான். அவனை, ஆவலோடு விசாரிக்கிறார், மூக்கப் பிள்ளை]

குலாம்:- போனேங்க... ...ஒரே கூட்டம்...

மூக்:- நிஜமாவா!

குலாம்:- ஆமாங்க... ...கூட்டம் நெருக்கித் தள்ளிகிட்டு நின்னுது... ஸ்டோர் காரியதரிசி வெளியே வந்தாரு ... எல்லோரையும் வேண்டிக்கிட்டாரு......'க்யூ'வா, நில்லுங்க அப்பத்தான் சவுகரியமாயிருக்கும். கட்டுப்பாடு வேணும்—ஒருத்தரை, ஒருத்தரு ஏன் தள்ளிக்கணும்'' அப்படீன்னாரு...

மூக்:- (ஆவலாக) கூட்டத்தார் கேட்கலீயே?

குலாம்:- அதுதான் இல்லீங்க! காரியதரிசி சொன்னதுதான் தாமதம்—கொஞ்ச நேரத்திலே 'க்யூ' விலே எல்லாரும் நின்ன அழகு... எஜமான்...ஏன். கேட்கிறீங்க? என்ன இருந்தாலும்...

மூக்:- சரி! சரி! மேலேசொல்லு...

குலாம்:- நான் ஒரு பக்கமா போய் நின்னுகிட்டு கடையைக் கவனிச்சேங்க....அவுரு வர்ரவுங்க கிட்டே பேசறதும், கடை சிப்பந்திகள் கிட்ட நடந்துகிற முறையும், சாமான்களை பற்றி எடுத்துச் சொல்ற விளக்கமும்...

[மூக்கப் பிள்ளை, முகம் வியர்க்கிறது. சலிப்போடு, 'போதும்! போதும்!!' என்று விரட்டுகிறார்!— குலாமை. அவன், தான் கண்டுவந்த காட்சிகளைச் சொல்ல, கோவிந்தனிடம் போகிறான். கணக்கப்பிள்ளையை கூப்பிட்டு, ரகசியமாகப் பேசுகிறார்.]

''என்னய்யா, இது! நம்ப நினைச்சதுக்கு நேர்மாறு இருக்கே...

(11-ம் பக்கம் பார்க்க)

### கண்டனம்

12–2–52ல் கோவையில், காங்கிரஸ்காரர்கள் செய்த அட்டூழியங்களைக் கண்டித்தும், 17—2—52ல் 144 தடைபோட்டு பேச்சுரிமையைத் தடைசெய்ததைக் கண்டித்தும், கீழ்க்கண்ட, கோவை மாவட்டக் கிளைக்கழகங்கள், தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. அவை சென்னைப்பிரதமர், ஜில்லாபோலீஸ் அதிகாரி, ஆகியோருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

போத்தனூர்
சென்னிமலை
கொமாரலிங்கம்
சத்யமங்கலம்
உதகை
திருப்பூர்
புஞ்சைத்தலையூர்
ஆய்க்கவுண்டன்பாளையம்



# 'அறிவகம்' தந்த விருந்து

## மக்கள் தூதர்களுக்குப் பாராட்டு

## 'புது அத்தியாயம்' ஆரம்பம்

## தி. மு. க. வாழ்த்து

[அண்ணல்]

வெள்ளம் போல் திரண்டிருந்தோரைக் கூறுவதா, வியர்வை சிந்த சிந்த ஜன்னல் கதவுகளிலும் உயரமான கட்டிடங்களிலும் தொத்திக் கிடந்தோரைப் பற்றிச் சொல்லுவதா, ஆர்வத்தோடு அத்தனை ஜனத் திரளும் அலைகளைப் போல அடிக்கடி கைகளைத் தட்டிக் கொண்டிருந்த காட்சியை விவரிப்பதா, தாய்மாரின் கூட்டத்தை கூறுவதா, தயங்காத உளம் படைத்த வாலிபர்களின் உணர்ச்சி வெள்ளத்தைத் தான் குறிப்பிட முடியுமா!

'இவர் இந்தத் தொகுதியில் வெற்றி பெற்றவர்' என்று மதியழகன் சொல்ல, மலர் முகத்தோடு வெற்றி பெற்றவர் நிற்க, மகிழ்ச்சியோடு தி. மு. க. பொதுச் செயலாளர் மலர் மாலை சூட்ட, 'வாழ்க! வாழ்க!!' என்று மக்கள் மனதார வாழ்த்த, தி. மு. க. ஆதரவோடு தேர்தலில் வெற்றி பெற்ற மக்களின் தூதுவர்களுக்கு அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்பு, கண்களுக்கு மட்டுமல்ல — கருத்துக்கும் விருந்தாக இருந்தது.

4–3–52 சென்னை செயிண்ட்ஸ் மேரி மண்டபத்திலே நடைபெற்ற பாராட்டுக்கூட்டம் — நாட்டின் வாழ்விலே, ஒரு புதிய அத்தியாயமாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் மக்கள் முன் சபதம் எடுத்துக் கொண்டனர்! தாம் இந்த இந்தக் காரியங்களுக்காக சட்டசபையிலே பணியாற்றுவோமெனத் தெரிவித்துக்கொண்டனர்! "பொது மக்களே! காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்ற எங்கள் தொண்டு காங்கிரசை முறியடிப்பதோடு நின்று விடாது. காங்கிரஸ் வெட்டிய படுகுழியை மூடி, புது இடம் அமைப்போம்'' எனத் திட்டவட்டமாக, தெளிவோடு தெரிவித்தனர்—ஒவ்வொருவராகச் சொல்லினர் இந்த உறுதி மொழியை.

மக்கள் முன் நின்று தத்தமது கருத்துக்களை, வெற்றி பெற்றோர் தெரிவித்தபோது, 'இவர்களையா உதிரிகள் என்றனர் — இவர்களா எதற்கும் பயன்படாதவர்கள் என்று செப்பினர், என்னே இந்தத் தேசிய ஏடுகளின் பித்தப் புத்தி;' என்று, எண்ணாதோர், இல்லை— அங்கே.

திராவிட முன்னேற்றக் கழக ஆதரவோடு, ஒப்பந்த ஏட்டில் கையெழுத்திட்டு, வெற்றி பெற்றோருக்கு — அன்று மாலை ராயபுரத்திலே உள்ள தி. மு. கழக மாளிகையில், தேனீர் விருந்து ஒன்று நடத்தப்பட்டது—தி. மு. கழகத்தால். அறிவகம், ஒளி மயமாயிருந்தது! கழக மாளிகையின் உச்சியிலே, பெருமிதத்தோடு பறந்த நமது கழகக் கொடியைப்போல, இதயமெல்லாம் குதூகலத்தோடு நமது கழக முக்கியஸ்தரெல்லாம், பல்வேறு மாவட்டங்களிலிருந்து, "அறிவகத்திலே'' நடமாடினர் — அவர்கள் மத்தியிலே, அலங்கரிக்கப்பட்ட, பெரியதொரு விருந்து ஒன்று, சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

விருந்து முடிந்ததும், யாவரும் வேகமாகத் திரும்பினர்— செயிண்ட்ஸ் மேரி மண்டபம். அங்கே, சட்ட சபை உறுப்பினர்கள் ஒருவர் பின்னொருவராகச் சேர்ந்து வந்து மேடையிலமர்ந்த போது, மக்களின் மூச்செல்லாம் முழக்கமாக மாறிற்று — பேச்செல்லாம் வாழ்த்துக்களாயிருந்தன. புது சட்ட சபையினர்! நமக்குப் புது வழிகாட்டப் போவோர்! எனும் பூரிப்பால், மக்கள் மன்றம், மகிழ்ந்துக் கிடந்தது.

"இவர்தான் S. S. ராமசாமி — தென்னாற்காட்டுத் தீரர் உழைப்பாளர் கட்சிப் பிதா', 'அவர் யார் தெரியுமோ — துடிதுடிவெனப் பேசுகிறாரே அவர்தான் ராஜாசிதம்பரம், திருச்சித் தலைவர்', 'சாந்த முகத்தோடு ஆனால் தணியாத ஆர்வத்தோடு காட்சி தருகிறாரே அவர்தான் D. கிருஷ்ணமூர்த்தி, நெடுநாளைய சுயமரியாதைக்காரர்' 'இவர் திருப்பத்தூர் ராகவன், தீந்தமிழ் வீரர்' 'அதோ — புன்சிரிப்போடு வருகிறாரே அவர்தான் அரவக்குரிச்சி ரத்தினம்—, நமது மூச்சு', 'இதோபார்—துள்ளமாக மாணவர் போல காட்சிதருகிறாரே அவர்யார் தெரியுமோ — தசரதன், சிறந்த தொண்டர் தீவிரவாதி' 'ஏறு நடை போட்டு கூர்மையாக நம்மை நோக்குகிறாரே, அவர்தான் விக்கிரவாண்டி கோவிந்தசாமி, உழைப்பாளர் கட்சியின் காரியதரிசி— ஊக்கம் படைத்த வீரர்', 'பெருமிதத்தோடு வீற்றிருக்கும் அந்த உருவம் தெய்வசிகாமணி, காஞ்சியில் வெற்றிபெற்றவர் சென்னையின் மாஜி உதவி மேயர்', ஆர்வத்தோடு அமர்ந்திருக்கும் விநாயகம்—கூர்த்த மதிபடைத்தவர், விடுதலைவீரர்' கடலூர் ரத்தினத்தைப்பார் — அவர்தான். எழுத்துவன்மை மிக்கவர், இழிந்த சமுதாயத்துயர் தீர்க்கும் தொண்டர்', 'அதோ நகைச்சுவையோடு சிரித்துப் பேசிக்கொண்டிருங்கிறாரே, கல்லூரி மாணவரைப் போல, அவர்தான் ராதாகிருஷ்ணன்

### மகிழ்கிறோம்

கம்யூனிஸ்டுத் தோழர் மணலி கந்தசாமி உள்பட மூன்று சட்டசபை, அங்கத்தினர்களை சர்க்கார் நிபந்தனையின்றி விடுதலை செய்திருப்பதை அறிய மகிழ்கிறோம்.

அண்ணாமலை நகர் வளர்த்த உருவம் அவர்' 'அவரோடு பேசிக்கொண்டிருக்கும் இளைஞர்தான் செஞ்சி அரங்கநாதன்— நிகைக்கிருயா? அவர் ஆர்வத்தைப்பற்றி செஞ்சி வட்டாரத்தைக்கேள், தெரியும்' 'அவருக்குப் பக்கத்தில் வாலிப மிடுக்கோடு அமைதியாக அமர்ந்திருக்கும் பரமசிவம் — சாதாரணமானவரல்ல, நல்ல சீர்திருத்தவாதி' 'இதோ ஒல்லியாக, சின்னஞ் சிறு மீசையோடு வருவதுதான் நமது பேபி — டாக்டர் சுப்பராயனைத் தோற்கடித்த சிங்கம்' 'சேனுபதி யார் தெரியுமோ—அதோ வெள்ளையாடை உடுத்து புன்சிரிப்பும் சாந்தம் தவழும் முகத்தோடு காட்சியளிப்பவர்தான்' 'அரும்பு மீசையோடு வீர உருவம் ஒன்று வருகிறதே அதுதான் இளைய கோட்டை லட்சுமிபதி—இலட்சியக்காளை' 'திருவொற்றியூர் T.சண்முகம்இவர். இவரைத்தான் உனக்கே தெரியும்' 'விருத்தாசலத்தில் வெற்றிபெற்ற கட்டிமுத்து அவர்தான், காரியம் சாதிக்கும் காளை' 'அதுதான் மாயவரம் சம்பந்தம், மக்களின் தொண்டர்', 'சிந்தனை ரேகைகள் படர்ந்த முகத்தோடு வருபவர்தான் அரூர் துரைசாமி' 'அதோ, வேகமாக வருகிருரே அவர் துறையூர் ரங்கசாமி வாதத்திறமையுள்ளவர்—தமிழ் பிம்பம்' 'கரூர் மாணிக்கசுந்திரம் யாரென்ருயே! அவர்தான்—எதற்கும் அஞ்சாத, விடுதலை வீரர் அவர். வேடிக்கையாகப் பேசுவார்' 'பெருமிதத்தோடு அமர்ந்திருக்கும் ஆரணி வி. கே. கண்ணனப்பார்' 'திண்டிவனம்ஜயராமன் இவர்-தீவிரவாதி: தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் பொதுஜனத் தொண்டர்' 'கடலூர் தொகுதியில் பார்லிமெண்டுக்கு வெற்றிபெற்ற கோவிந்தசாமி கச்சாராயரைப் பார்த்தாயா? சாதுவைப்போல இருக்கும் அவர் கேள்விகள் கேட்டால் தெரியும்........!' 'அதோ கல்லூரி மாணவர்போல கவலைபடா முகத்தோடு வருகிருரே அவர்தான் முசிறி தங்கவேலு—வழக்கறிஞராயிருக்கிருர், சட்டக்கல்லூரியில் இரண்டாண்டுக்கு முன் நமது கூட்டங்களில் கண்டிருக்கலாமே!'

இவ்வித உரையாடல்கள், மேடையிலும் மண்டபத்திலும் நிறைந்திருந்தன. தி. மு. க. ஆதரவோடு வெற்றி பெற்ரேரில் பலர், வழக்கறிஞர்கள் — சிலர் கல்லூரிகளிலே கர்ஜனை எழுப்பி, நமது கருத்தையெல்லாம் கவர்ந்த நண்பர்கள்— பலர், நகரசபை ஜில்லாபோர்டு ஆகியவைகளிலே பொறுப்புள்ள பதவிகள் தாங்கி நிர்வாகம் நடத்தும் திறமை படைத்தோர், இன்னும் சிலர் பொதுமக்களுக்காகதாம் வகித்த சர்க்கார் உத்யோகங்களை உதறித்தள்ளி, பொதுச் சேவை புகுந்திருப்பவர்கள், இத்தனை பேரையும் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தியபோது மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்தார்கள்— அவர்தம் அறிவொளிவீசும் முகத்தையும் தீவிர நோக்கம் துள்ளி விளையாடும் வயதையும் கண்டபோது, மக்களின் கவனத்துக்கு, 'தோற்றுவிட்ட காங்கிரஸ் எம். எல். ஏக்கள்' கவனத்தில் வாராமலில்லை.

கடந்த சென்னை சட்டசபையின் நினைவு வரத்தான் செய்தது. ஓய்யாரமாகச் சென்று சட்டசபைநாற்காலிகளில், அமர்ந்து கைதூக்க வேண்டிய நேரத்தைத் தவிர்த்து மீதநேரமெல்லாம் கடலையைக்கொறித்தும், ஆரஞ்சுப்பழத்தை உரித்தும், அதுபோக மிஞ்சிய நேரத்தில் கண்ணைமூடித்தூங்கியும்,காலங்கழித்த 'கனதனவான்களின்' கவனம் வராமல் போகுமா?

அதனுல்தான், தி.மு.க. பொதுச் செயலாளர் குறிப்பிட்டார், "நாம் இன்று மகிழ்ச்சியோடு இருக்கிரேம் என்ருல் அதற்குள்ள காரணம் காங்கிரசை இவர்களெல்லாம் தோற்கடித்துவிட்டார்கள் என்பதால்மட்டுமல்ல. ஆனுல் காங்கிரசைத் தோற்கடித்த இவர்கள் யார், என்பதை எண்ணும்போதுதான், நாம் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிரேம். காங்கிரசை எதிர்த்து சங்கராச்சாரி வெற்றி பெற்ருரென்ருல் சந்தோஷமா கொள்வோம்? டாக்டர் சுப்பராயனைத் தோற்கடித்தது ஒரு தம்பிரான் என்ருல் மகிழ்ச்சியா ஏற்படும் நமக்கு? சந்தானத்தை தோற்கடித்தது ஒரு சனுதனியென்ருல் பாராட்டவா செய்வோம்? மாட்டோம்—மனமகிழ்ச்சி இப்போதுள்ளதுபோல் இருக்காது இன்று நாம் மகிழ்கிரேமென்ருல், காங்கிரசைத் தோற்கடித்தவர்கள் யார் என்பதால்தான். காங்கிரசை வீழ்த்திய இந்த உருவங்களைப் பாருங்கள்—அவர் தாங்கிய கொள்கைகளை நினையுங்கள். இவர்களெல்லாம் முற்போக்குவாதிகள். நாடு புதுமை பெறத் துடிக்கும் பொதுத்தொண்டர்கள். அதனுல்தான் மகிழ்கிரேம்" என்று குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில், வெற்றிபெற்ற சுயேச்சையாளர்களைப்பற்றித் தூற்றல்பாணம் விடுக்கும் துயர துந்துபிகளைப்பற்றி அவர் குறிப்பிடுகையில், "சுயேச்சைவாதிகளைப் பார்த்து உதிரிகள்" என்ருர்கள். கொள்கை யில்லாதவர்கள் எனத்தூற்றின—சில பத்திரிகைகள். உங்களையே கேட்கிறேன்! இவர்களா உதிரிகள்? நாடு விடுதலைப் பெறவேண்டுமென எண்ணங்கொண்டிருக்கும் இவர்களுக்கா கொள்கை இல்லை? இந்த உதிரிமலர்களைக் கொண்டு, அழகான மாலையை நாம் தயாரித்திருக்கிரேமே!" என்று கூறினர். அதோடு, காங்கிரசல்லாத சர்க்கார் சென்னை மாகாணத்தில், நிறுவ, இவர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமென்றும்விளக்கினர்.

"காங்கிரஸ்தான் இந்த நாட்டை ஆளமுடியும். காங்கிரசைவிட்டால் கதியில்லை — என்றெல்லாம் கர்ஜித்தார் விருதுநகர் விசித்திர மனிதர்—தேர்தலின்போது. காங்கிரஸ்தான் ஆளமுடியும் என்ற கூற்றுக்கு இந்தத்தேர்தல் தக்கபதிலளித்துவிட்டது. இந்த வறட்டுஜம்பத்திற்கு பதிலளிக்கும் ஆசையோடாவது காங்கிரசல்லாத அரசாங்கம், குறைந்தபட்சம் ஆறுமாதமாவது ஆட்சி செய்யவேண்டும் என்பது என்விருப்பம்........"

"ஐக்கிய ஜனநாயக முன்னணி தயாரித்துள்ள குறைந்தபட்ச திட்டத்தை நான்கூர்ந்து கவனித்தேன் பல அம்சங்கள் வரவேற்கத்தக்கதாகவே உள்ளன. மத்திய சர்க்காருக்குள்ள அதிக உரிமைகளைக் குறைக்கவும், இங்கே வசூலிக்கப்படும் வரி முதலியவை இங்கே செலவிடப்படவேண்டுமெனவும் அதிலே குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். மக்களின் அடிப்படைத்தேவைகளான உணவு, உடை பிரச்சினைகளுக்கு முதன்மையும் அளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தினடிப்படையில் கூட்டாட்சி அமையும் என்றே நான் நம்புகிறேன். ஆனுல் அரசியல் வானில் ஏற்படும் மாற்றங்களால் அவ்வாறு ஒருகூட்டாட்சி அமையத் தவறுமேயானுல், இத்திட்டங்களை முன்வைத்து, இவர்களெல்லாம் ஒன்றுபட்டு எதிர்க் கட்சியாக இருந்து போராடத் தவறமாட்டார்கள்."

"காங்கிரஸ் கூடாரத்திலே கலக்கம் ஏற்பட்டிருக்கிறது. எப்படியாவது சர்க்காரிலிருக்க வேண்டும் என்ற ஆசைகொண்டு அலைகிருர்கள். எந்த சுயேச்சைகளை உதிரிகள் என்றும் வௌவால்கள் என்றும் வசைப்பாடினரோ அவர்களைச் சேரவருமாறு அழைக்கின்றனர்! 'காங்கிரசில் எவரையும் சேரவிடோம். கலப்பு சர்க்கார் அமைக்கமாட்டோம்' என்று கர்ஜனை எழுப்பியது எங்கேபோயிற்று என்று கேட்கிறேன். சுயேச்சைகள் நிச்சயம் காங்கிரசில் சேரமாட்டார்கள் நான் பல சுயேச்சையாளர்களைச் சந்தித்தவரையிலே, அவர்கள் காங்கிரசில் சேர்வதை குஷ்டரோகியைக் கட்டியணைப்பது போலவே கருதுகிருர்கள். அப்படியாராவது சேர்ந்தாலும், காங்கிரஸ் குஷ்டரோகியைவிட, மகாமட்டமாகவே அவர்களைக் கருதுவர் — மக்கள்,"

இத்தகைய கருத்துக்களைத்தெரிவித்து, தி. மு. க. பொதுச் செயலாளர் பேசியபிறகு, ஒவ்வொரு சட்டசபை உறுப்பினரும்தத்தமது கருத்துகளைத் தெரிவித்துப் பேசினர். தமக்குப்பெரிதும் ஒத்துழைத்த, தி. மு. கழகத்துக்கு நன்றி தெரிவித்துச் சொற்பொழிவாற்றினர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"திராவிடத் தனியரசு ஏற்பட வேண்டும். இதற்காக, தி. மு. க. காட்டும் வழிகளில் செல்வதற்கு நாங்கள் தயங்கமாட்டோம். எங்கள் விருப்பம் நாம், நல்வாழ்வு பெற வேண்டும் என்பதுதான்"

—விக்கிரவாண்டி கோவிந்தசாமி
(T- N- T- காரியதரிசி)

"திராவிட நாடு வெகு விரைவில் கிடைத்துவிடுமென நம்புகிறேன். அதற்கான வழியும் சுலபமாகிவருகிறது. அது இன்னும் சுலபமாக வேண்டுமானுல், காங்கிரசல்லாத ஆட்சி இங்கே ஏற்படவேண்டும். அப்படியேற்பட்டால் நிச்சயம் மத்தியசர்க்காருக்கும்நமக்குமுள்ள உறவு முறியத்தான் செய்யும்"

—ராஜா சிதம்பரம்
(திருச்சி மாவட்ட போர்டு தலைவர்)

(7-ம் பக்கம் பார்க்க)

---

## இலக்குவனர்

விருதுநகர் செந்திக்குமாரநாடார் கல்லூரித் தமிழ்பேராசிரியர் சி. இலக்குவனர் M. O L. அவர்களைப் பொருந்தாக்காரணம் காட்டி கல்லூரியினின்றும் விலக்குவதை எதிர்த்து கல்லூரிமாணவர்கள் பிப் 28ந்தேதி, வேலைநிறுத்தம் செய்தனர். 'இலக்குவனரை விலக்கமாட்டோம்' என்ற உறுதி மொழிதரப்படவேண்டும் என மாணவர்கள் தீர்மானம் நிறை வேற்றியுள்ளார்கள்.

---

### தி. மு. க. பிரச்சாரக்குழு

கூட்டங்களுக்குச் செல்லும் திராவிட முன்னேற்றக் கழக பிரச்சாரக்குழு நண்பர்கள், தாங்கள் சென்று பேசிய கூட்டங்கள்பற்றிய தகவல்களை உடனுக்குடன், பிரச்சாரக்குழு தி. மு. க. தலைமை அலுவலகம், காஞ்சி. என்ற முகவரிக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து இதைக்கவனிக்கவேண்டுகிறேன்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்,
செயலாளர்.

---



# வடநாட்டு கவர்னர் வருகை

## 12-ந்தேதி கண்டன நாள்

### நாடெங்கும் நடத்துங்கள்

வடநாட்டு ஆதிக்கத்தின் அறிகுறியாகவும், காங்கிரஸ் பாசீச முறையின் கூறுகவும், சென்னை கவர்னராக ஒரு வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிருர். திராவிடநாடு திராவிடருக்கே என்ற கொள்கைக்காகப் போராடும் திராவிட முன்னேற்றக் கழகம், இந்த வடநாட்டு ஆதிக்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.

இன்றுள்ள நிலையில், திராவிட நாடு வடநாட்டுக்கு அடிமை என்ற நிலையை உறுதிப்படுத்தவும், அடிமைத்தனத்தை வளர்க்கவுமே, இந்திய அரசியல் சட்டம் பயன் படுகிறது. இந்த ஆதிக்கத்தை தி. மு. க. நாடெங்கும் விளக்கிக் கண்டிக்க வேண்டும். வடநாட்டு ஆதிக்கத்தைக் கண்டிக்க 12—3—52 அன்று நாடெங்கும் கண்டன நாள் கூட்டங்களை நடத்தி, இன்றுள்ள வடநாட்டு ஆதிக்கத்தை மக்களுக்கு எடுத்து விளக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(1) வடநாட்டு ஆதிக்கம் கூடாது.

(2) கவர்னர் நியமனம் கூடாது — கவர்னர்களும் பொது மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(3) காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒருவரை கவர்னராக நியமித்ததைக் கண்டிக்கிரேம்.

என்ற இந்த மூன்று கருத்துக்களைக் கொண்டே, கண்டன நாள் நடைபெற வேண்டுமென விரும்புகிறேன். எல்லாக் கிளைக் கழகங்களும் கண்டன நாள் நடத்தி திராவிடத்தின் தீர்ப்பை வடநாடு அறியச் செய்ய வேண்டுகிறேன்.

அன்பன்
அண்ணுதுரை.

திராவிடநாடு

காஞ்சி] 9—3—52 [ஞாயிறு

# "ஏனோ?"

✲

"எவ்வளவு வேண்டும்?"

"ஒன்பது லட்சம் டன், தேவை"

"அவ்வளவா?"

"ஐயோ—இதுகூட இல்லையேன்றால் திண்டாட்டம்தான்"

"என் செய்வது! இந்த ஆண்டுக்கு 6,85,000 டன்தான் தரப்படும்"

டில்லியின் பதில் கேட்டு சென்னை கலங்கியிருக்கிறதாம். இதுபோன்ற கலக்கங்கள், அடிக்கடி ஏற்படுவதால், பலரது கவனம் இதில் செல்லவில்லை. ஆனால், மனித வாழ்வுக்கு இன்றியமையாத 'உணவு' நிலை, எவ்வளவு உதாசீனப்படுத்தப் படுகிறது டில்லியால் என்பதை, கவனப்படுத்த விரும்புகிறோம். சித்தூரிலே மக்கள்படும் கஷ்டத்தை 'தினமணி' புகைப் படங்கள்மூலம் காட்டுகிறது; நம் கண்முன்னே, சோறில்லாததால், மூன்று குழந்தைகளைக் கொலை செய்த 'தாராபுரம்' செய்திகள் தினசரி வந்துகொண்டே உள்ளன. ஆனால் டில்லி தெரிவிக்கிறது — கேட்டது தரமுடியாதென்று!

இந்த கேடுகெட்ட நிலையில் நாம் விழிக்கும் நேரத்தில், வேதனையான செய்தியொன்றையும் டில்லி, தெரிவித்துள்ளது. 'புது பட்ஜட்'படி, மாகாணங்களுக்கு கொடுத்து வந்த மான்யத் தொகை இனி தரப்படமாட்டாதாம். வெளியிலிருந்து அதிக விலைக்கு வாங்கி, அந்த விலையை மக்கள்மீது சுமத்தாமல், எப்போதுமுள்ள விலைக்கு விற்பதால்—மாகாண சர்க்கார்களுக்கேற்படும் நஷ்டத்தை ஈடு செய்வதுதான், இந்த மான்யத் தொகையால் கிடைக்கும் நன்மையாகும். இதுவும் பறிபோகிறது!

இந்த 'மோசத்தால்' ஏமாந்த சென்னை, பிப் 29ல் ஒரு உத்திரவு பிறப்பித்திருக்கிறது. சென்னை, மதுரை, கோவை, விசாகை ஆகிய நகரங்களிலுள்ள ஏழைமக்கள் தலையில் கைவைத்திருக்கிறது. அரிசி விலையை பட்டணம் படிக்கு, ஒன்றரை அணுவாகவும், கோதுமை விலையை நாலரையணுவாகவும் அதிகரித்திருக்கிறது.

இந்த உத்திரவுமூலம், மேலே குறிப்பிட்ட நான்கு நகரங்களைத் தவிர பிற இடங்களில், இப்போதுள்ள விலையைவிட அரையணு அதிகமாகிறது, கோதுமைவிலையில.

டில்லி, 'மான்யத்தை' நிறுத்தவே சென்னை, நம்மக்களின் வாழ்க்கையில் புயலை வீசச் செய்திருக்கிறது. டில்லிவாழ,நாம் மாள்கிறோம்!

மான்யத்தை நிறுத்தவேண்டிய அளவுக்கு, டில்லியில் பணமில்லையோ என்று பார்த்தால், கடந்த ஆண்டு வரவு செலவு கணக்குப்படி 93 கோடி மிச்சமாம் — தெரிவிக்கிறார், தேஷ்முக். மிச்சம் இருப்பது மட்டுமல்ல! மாகாணங்கள், டில்லிக்கு 'கொட்டியழும்' தொகையும் அதிகமாகியிருக்கிறது!!

டில்லிக்கு மாகாணங்கள் செலுத்தும் கலால், சுங்கம் ஆகிய இருவரிகள் மூலமும் வரும் ஆண்டில் முறையே 5-கோடியும் 76-கோடியும் அதிகமாக வசூலாகுமாம் இந்த 'அதிகம்' நாம் செலுத்தப்போவது தான்.

இருந்தும், டில்லி, ஏமாற்றுகிறது—நாம் ஏமாறுகிறோம்.

டில்லி கடந்த ஆண்டு, 11-கோடி ரூபாயை அதிகமாக, ராணுவத்துக்கென ஒழித்திருக்கிறது—வீண்ஜம்பத்தால். ஆனால் பசி தீர்க்க நமக்கு 'மான்யம்' அளிக்க முடியாதாம்!

'இந்த வேதனையான செய்திகளினூடே மற்றொரு 'இடி'யைப்பற்றியும் கேள்விபடுகிறோம். நெல் கொள்முதல் அதிகமாகச் செய்ய வேண்டுமென்று அண்மையில் ஒரு கட்டளை விடுத்திருக்கிறது டில்லி—சென்னைக்கு. நெல் அதிகமாக உற்பத்தியாகும் தஞ்சை, கிருஷ்ணா, குண்டூர், மேல் — கீழ் கோதாவரி ஜில்லாக்களில் மணங்குக்கு ரூ. 1. வீதம், கொள்முதல் விலையை உயர்த்தும்படி. இந்த உத்திரவு மே மாதம் வரை அமுல் நடத்தப்படுமாம்.

டில்லியின் தாக்கீதை சிரமேற்கொண்டு சென்னை, உடனே இந்த உயர்வைப் பிரகடனப்படுத்தியிருக்கிறது. இந்த உயர்வால், கொள்முதல் அதிகமாகலாம் என்ற நல்லெண்ணத்தை வரவேற்கிறோம். ஆனால், இந்த உயர்வை யார் சுமப்பது? அரிசிவாங்கும் மக்கள்தானே!

உத்திரவுபோடத் தெரிகிறது 'டில்லி'க்கு; உதவிசெய்யவோ மனமில்லை—ஊதாரித்தனமாக நடந்துகொள்கிறது. இருந்தும் இங்குள்ளோர் 'டில்லியே வேண்டும் என்கிறார்கள்—மத்தியசர்க்காரைமறுக்கா தீர்கள் என்று பிதற்றுகிறார்கள்.

வரியும் செலுத்தி, பலனுமில்லாமல், பயந்து பணிந்து, செத்துத் தொலையும் இந்நிலை ஏனோ, நமக்கு?

★

## தி. மு. க. பொதுக் குழு

## 6—4—52-ல் ஈரோட்டில்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் ஏப்ரல் 6-ந் தேதி ஈரோட்டில் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அழைப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது மாநில மாநாட்டுக்குப் பிறகு கூடும் இந்த பொதுக்குழுக் கூட்டத்தில் கழக சம்பந்தமான வேலைகள் குறித்தும், கழக சட்ட திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான முறைகள் பற்றியும், மாநில மாநாட்டுக் கணக்கு வகை பற்றியும், கழக தினத்தாள் குறித்தும் கலந்து பேச வேண்டுமாகையால் 6—4—52-ல் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்

**அண்ணாதுரை**

★



5-ம் பக்கத் தொடர்ச்சி

"திராவிட நாடு அமைந்து மக்கள் சரிசமமாக வாழவேண்டுமென்பதை நாங்கள் விரும்புகிறோம். ஐக்கிய ஜனநாயக சர்க்கார் அமைய நாங்கள் ஒத்துழைப்போம். தி.மு.க.வும் அண்ணாவும் பாராட்டுவதோடு இருந்துவிடக்கூடாது—இதற்கான வழிகளை அடிக்கடி எடுத்துக் கூறவேண்டும்"

—S. S. ராமசாமி
(உழைப்பாளர் கட்சி தலைவர்)

"திராவிட நாடு பெறுவதற்காக தி, மு. க. கூறும் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றப் பாடுபடுவேன். பிரிவினைப் பிரச்சாரத்தை ஆந்திரத்திலும் கேரளத்திலும் செய்ய நாம் முனையவேண்டும். இதற்கான முயற்சிகளை, சட்டசபையிலிருக்கும் ஆந்திர, கேரளத் தோழர்களிடம் நான் செய்வேன்"

—D. கிருஷ்ணமூர்த்தி.
(கிருஷ்ணகிரி)

"திராவிட நாட்டுப் பிரிவினையை திராவிடர் எவரும் மறுத்துவிட முடியாது. அதன்மூலமே நமது நாடு நலம்பெற முடியும் என நம்புகிறேன். அதற்கான பலத்தைத் திரட்ட, ஆந்திரத்தில், மிக்க முயற்சி எடுக்கப்படவேண்டுமென தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியிலிருந்து நாம் போராட வேண்டும். அப்போதுதான், திராவிட நாட்டுப் பிரிவினையை, எளிதில் பெறலாம் என்று நான் கருதுகிறேன்".

—K. விநாயகம் B. A.
(செங்கற்பட்டு)

"உழைப்பாளர் கட்சியின் வெற்றிக்கான மூல காரணம் தி. மு. கழகந்தான். எங்களின் வெற்றிக்காக பல வழிகளிலும் பாடுபட்டார்கள். அவர்களுக்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்"

—A. ரத்தினம்
(கடலூர்)

"நான் கட்டபொம்மன் பரம்பரையைச் சேர்ந்தவன். அந்நிய ஆதிக்கத்தை விரட்டப் பாடுபட்ட அந்தப் பரம்பரையைச் சேர்ந்த என்னால், நமது நாட்டில் இன்னொருவர் ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்கமுடியாது. வடநாட்டை எதிர்த்துப் போராட வாய்ப்பளித்த தி. மு. க.வுக்கு என்றும் கடமைப் பட்டவன்"

—S. இலட்சுமிபதி
(ஒட்டன்சத்திரம்)

"கூட்டு மந்திரிசபை அமைப்போம். முயற்சி வெற்றி தராவிடில், நல்லாட்சி நடைபெற, எதிர்க் கட்சியாக இருந்து, நமது திட்டங்களை வலியுறுத்துவோம்"

—K. R. சம்பந்தம் B.A.
(மாயவரம்)

"என்னை ஓட்டுக் கேட்கும் எம். எல். சி. அபேட்சகர்களைக் கூட, 'திராவிடநாட்டுப் பிரச்னையை ஒத்துக்கொள்வீர்களா?' என்று தான் கேட்டேன். சட்டசபையில் இலட்சிய வெற்றிக்காக, பாடுபட நான் தயாராக இருக்கிறேன்"

—ரங்கசாமி B.A., B.L.
(துறையூர்)

"தி. மு. கழகத்தின் நாட்டுப் பிரிவினையைச் செயல்மூலம் காட்டுவோம், நாங்கள். இதற்கான திட்டங்களை அடிக்கடி எங்களுக்கு அண்ணா தெரிவிக்கவேண்டும்"

—ராதாகிருஷ்ணன் B.A.
(பண்ருட்டி)

"எதிரிகள் என்றும் இன்னும் பலவிதமாகவும் எங்களைத் தூற்றியோருக்கு பதில் தந்து, வெறுப்புப் பிரச்சாரத்தை மாற்றி, வெற்றி தேடிக் கொடுத்தது தி. மு. கழகமும், தளபதி அவர்களும்தான்"

—தசரதன்
(வந்தவாசி)

"தளபதி இதோ! போர்வீரர்கள் நாங்கள்! நாட்டுப் போருக்காக, எப்போதும் தயாராயிருக்கிறேன் நான். எங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுகிறேன்"

—E. L. ராகவன் B.A., B.L
(திருப்பத்தூர்)

"திராவிடம்—நமது நாடு எத்தர் பிடியில் சிக்கிவிட்டது. இழிநிலையில் கிடக்கிறது, நமது சமுதாயம். இதை விடுவிக்க நான் போராடுவேன் — நல்வாழ்வுக்கு உழைப்பேன்"

—தங்கவேலு B.A., B.L.
(முசிறி)

"தி. மு. க. வின் விருப்பப்படி நாங்கள் எம். எல். ஏ.க்களாகிவிட்டோம். எங்களுக்கு, சட்டசபையில் போராட, அண்ணா யோசனைகள் கூறவேண்டும் அடிக்கடி. நான் வெற்றிபெற்றது, தி. மு. கழகத்தாலேயேதான்"

T. சண்முகம்
(ஸ்ரீபெரும்புதூர்)

"வெற்றி பெற்றது நானல்ல—அண்ணாதான். தி. மு. கவினால் தான் நான் வெற்றி பெற்றேன் திராவிட நாட்டுப் பிரிவினைக்காக நான் எதையும் செய்யத் தயார்"

—எஸ். தெய்வசிகாமணி B.A.B.L
(காஞ்சிபுரம்)

"எங்கள் வெற்றிக்காகப் பாராட்டியதோடு இருந்துவிடக் கூடாது, அண்ணாவும், தி. மு. கழகமும். தி. மு. கவின் கட்டளைக்குக் காத்திருக்கிறேன்"

—அரங்கநாதன்
(செஞ்சி)

"தி. மு. கழகத் திட்டங்கள் வெற்றிபெற என்னாலியன்றளவு பாடுபட தயங்கமாட்டேன்"

—துரைசாமி
(அரூர்)

"எங்களைப் பாராட்டுகிறார்கள்—தி. மு. க. தளபதி அவர்கள். உண்மையில் கூறவேண்டுமானால் வெற்றி பெற்றது அவர்தான்—நாங்களல்ல. எப்போதும் திராவிட நாட்டுக்காக உழைப்போம்"

—மாணிக்கசுந்தரம்
(கரூர்)

"எனது ஆசை, ஏழைகள் சமுதாயம் வாழ்வு பெறப் போராடும் தி. மு. கவின் திட்டங்களை யேற்று அதன்படி நடப்பதுதான்"

—கட்டிமுத்து
(விருத்தாசலம்)

"நான் எப்போதும் தி. மு. கவின் வெற்றிக்காகப் பாடுபடுவேன். நானும் எனது நண்பர்களும் சேர்ந்து அமைத்திருக்கும் திராவிட பார்லிமெண்டரி கட்சி, நமது கொள்கைகளுக்காகத் தீவிரமாகப் பாடுபடும். தி. மு. கழகம், திட்டங்களைத் தெரிவித்து உதவிட வேண்டுகிறேன்"

—கே. என். ரத்தினம்
(அரவக்குறிச்சி)

"அகில உலகும் புகழ் பெற்றவர் என்று வர்ணிக்கப்படும் டாக்டர்

சுப்பராயனை, வோட்டர்லிஸ்டு கூட வாங்காது, தி. மு. கழகத்தின் ஆதரவை மட்டும் துணைகொண்டு தோற்கடித்தவன் நான் தான். எனக்கு பல மொழிகள் தெரியும். என்னால் போய் டில்லியில் வாதாட முடியுமா — என்று எரிச்சல்காரர்கள், பேசினர், தேர்தலின்போது. உறுதியாகச் சொல்வேன்—தி. மு. கவும் அண்ணாவும் என்ன சொல்கிறார்களோ அதன்படியே நடப்பேன், டில்லியில். நான் படித்திருக்கும் எஸ். எஸ். எல். சி. படிப்பு டில்லியின் பி. ஏவுக்குச் சமானமாகும்! இந்திய ஜனாதிபதி தேர்தல் நடைபெறும்போது, அவரை போட்டியின்றி தேர்ந்தெடுக்க விடமாட்டேன். நானே வேண்டுமானாலும் போட்டி போடுவேன் — திராவிட நாட்டுப் பிரிவினைக்காகக் கீழே விழும் முதல் பிணம், நானாகத்தான் இருப்பேன்.

—எஸ். கே. பேபி
(திருச்செங்கோடு)

தத்தமது கருத்துக்களை வெளியிட்டு, மக்களின் தூதுவர்கள் பேசப் பேச, செயிண்ட்ஸ் மேரி மண்டபமே, அதிர்ந்தது — மகிழ்ச்சிக் களிப்பால். அமர்ந்திருந்த எம். எல். ஏக்களில், சிலர், பேச காலங் குறுக்கிட்டதென்றாலும், அத்தனை பேரும், தம் முன் நிற்கும் கடமைகளை உணர்ந்தே பேசினார்கள்.

'போலோ பாரத் மாதாகி' அல்லவே, இவர்கள்! நாட்டின் புதுயுகத் தூதர்களாயிற்றே!

"புது சட்ட சபை உறுப்பினர்கள்—நமது நாட்டிலே புது அத்தியாயத்தை ஆரம்பிக்கிறார்கள்" என்று தி. மு. க பொதுச் செயலாளர் குறிப்பிட்டதுபோல, தென்னாட்டில் காங்கிரசை ஒழித்து விட்டு வந்திருக்கும் புது முகங்கள் தானே அவர்கள்! ஆகவே, நம்மால், மக்கள் வாழ்வுக்கான வழி வகைகளைச் செய்யவேண்டுமென்ற ஆர்வம் அவர்கள் பேச்சிலும் மூச்சிலும் தென்பட்டது!

ஒவ்வொருவரும் திராவிட நாட்டுப் பிரிவினைக்காகப் போராடுவோம் என்று விளக்கினர்.

பிறகு, தி. மு. க. பொதுச் செயலாளர் தமது முடிவுரையில், காங்கிரசல்லாத கூட்டு சர்க்கார் அமைய வேண்டிய அவசியத்தைப் பேசியதோடு, காங்கிரஸ் சார்பில் பல பண முதலைகள், வலைவீசத் துவங்கியிருக்கும் போக்கைக் கண்டித்துப் பேசினார். பிறகு, கம்யூனிஸ்டுகளுக்கும் தி. மு. கவுக்குமுள்ள உறவை பற்றிக் கூறுகையில், "தி. மு. க. தேர்தல் காலத்தில் கம்யூனிஸ்டுகளை ஆதரிக்கவில்லை. காரணம் மதுரை தீர்மானம் தான். அதைக் கண்ட சிலர் சந்தோஷப் பட்டார்கள். இன்று மீண்டும் அவர்களோடு கூடுவதைக் காண கலங்குகிறார்கள். எங்களுக்கு திட்டங்கள் தான் முக்கியம். எனவேதான் இன்று நல்லாட்சிக்கான திட்டத்தை நானும் ஒத்துக்கொள்கிறேன்" என்று கூறினார்.

இந்தப் பாராட்டு விழா — திராவிடத்தின் 'புது அத்தியாயம்' ஆகும். எனவே, எல்லோரிடையிலும் மகிழ்ச்சி நிறைந்து கிடந்தது. பாசீச வெறியை ஒழித்து வெற்றி பெற்றிருக்கும் புது எம். எல். ஏ.க்கள், வளரும் புதுமையின் சின்னங்களாக விளங்கவேண்டும்.

தன்னைத் தவிர வேறு யாருமில்லையென கருக்கோடு பேசிய காங்கிரஸ் முதுகெலும்பை முறித்த இந்த வெற்றிவீரர்களின், தொண்டு —மக்களுக்கான வகையில் வளரவேண்டும்.

நாம் ஆதரித்த பலர், மிக மிகச் சாதாரணமானவர்கள், பெரிய ஆலை அரசர்களோ, பண ஆசைகொண்டவர்களோ அல்ல. வாலிபர்கள் — பொதுமக்களோடு தொடர்புகொள்ளும் பேச்சாளர்கள்— வழக்கறிஞர்கள். இத்தகைய சிறப்பு பெற்றோர், சட்டசபைக்குள், நுழையவிருக்கிறார்கள் – நாம் 'புது அத்தியாயத்தை'க் காணப்போகிறோம்.

இந்தப்புதுமை – சாதாரணமானதல்ல இதை எல்லோரும் உணரவேண்டும். அரும்பும் புதுநிலை, வளரவேண்டும் —'மக்களின் தூதுவர்கள் எம். எல். ஏக்கள்' என்ற புகழை நிலைநாட்டிக்கொள்ளவேண்டும். மனிதன் புகழைப் பெறுவது கடினம். இகழ்வைப் பெறுவது சுலபம்.

மக்களின் ஆதரவைப் பெறுவது எளிதல்ல — எரிச்சலைப் பெறுவது மிக மிக சுலபம்.

இந்த உண்மையை மனதில் கொண்டு, தாம் எதற்காகப் போராடப் போவதாக, மக்கள் மன்றத்தில் அறிவித்திருக்கிறார்களோ, அந்தக் காரியங்களுக்காக, தமது சட்டசபைக் காலத்தை செலவிட வேண்டுமெனத் தெரிவித்துக்கொள்கிறோம்—அன்போடு.

"புகழ் விளக்கு எரியட்டும்
புகை மண்டலம் விலகட்டும்
தாயக விலங்கு ஒடியட்டும்
நாக்கும் சங்கடம் நீங்கட்டும்"

## உண்மை

"இந்திய சரித்திரத்திலேயே, மத்யசர்க்கார் ஒன்றுக்குக்கீழ் இந்தியா முழுமையும் கட்டுப்பட்டிருப்பது, இப்போதுதான். முன்பிருந்த எந்த சக்கரவர்த்தியும் இத்தகைய ஆட்சியை நிறுவியதில்லை"

—பூனா நகரில் ராசேந்திர பிரசாத்

[பிப். 28]

## வருந்துகிறோம்

சேலம் நகர தி. மு. க. முன்னணி வீரரான தோழர் எம். பி. வள்ளியப்பன், 1—3—52 காலை மாரடைப்பால் இயற்கையெய்திய செய்தி கேட்டு திடுக்கிட்டோம். கடந்த இருபதாண்டுகளாக சுயமரியாதை இயக்கத்திலிருந்து இன்றுவரை, ஓய்வு ஒழிவின்றி அயராது உழைத்தவராகும்.

தி. மு க. துவங்கிய காலமுதல் அவரது சேவை பலமடங்காக ஆயிற்று. சிற்றூர்களுக்கெல்லாம் சென்று, நமது பிரச்சாரங்களை நடத்தி, பலகிளைக் கழகங்களைத் துவக்கியவர். சேலம் மாவட்ட மாநாட்டிலே, அவர் ஆற்றிய பணி, அளவிடற்கரியது.

சேலம் மாவட்டக் கமிட்டி உறுப்பினராகவும், சேலம் அம்மாபேட்டை மெயின்ரோடு தி. மு. க. செயலாளராகவுமிருந்து பணியாற்றிய இவரை, 42-வது வயதில், சாவு நம்மிடமிருந்து பறித்துக்கொண்டு விட்டது. மிகவும் வருந்துகிறோம். நமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்தம் குடும்பத்தாருக்கும் சேலம் கழகத் தோழர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.



## லாபமாம், லாபம்!

"இதற்குமுன் எப்போதுமே இவ்வளவு லாபம் கிடைத்ததில்லை"

என்று, இந்திய ரயில்வே வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த அமைச்சர் கோபால்சாமி அய்யங்கார் அறிவித்திருக்கிறார். கடந்த ஆண்டில் 15 கோடியே 5 லட்சம் ரூபாய், மிச்சப்பட்டிருக்கிறதாம், ரயில்வே வரவு செலவில்! பெருமிதத்தோடுபேசியிருக்கிறார் அவர். ஆனால் இந்த மீதம் எப்படி ஏற்பட்டது? மக்கள்மீது வரிக்கட்டணத்தை அதிகமாக்கியதால்தானே! —கடந்த ஆண்டில், அதற்கு முந்திய ஆண்டைவிட 26 கோடியே 66 லட்சம்அதிகமாகவசூலாகியிருக்கிறதாம், ரயில்வே இலாகாவுக்கு. கோடிக்கணக்கை, மகிழ்ச்சியோடு அறிவித்திருக்கிறார், அய்யங்கார்! எப்படி, ஏற்பட்டது இந்த லாபம்?

மண்டிக்கடை வியாபாரிக்கு, லாபம் அதிகம் வந்ததென்றால், காரணங்களிருக்கவேண்டும்—ஒன்று அதிக விலை; மற்றொன்று அதிக வியாபாரம், அடுத்தது, சாமான்களைக் குறைவாகத் தந்தது.

இதைப்போலத்தான் ஆகியிருக்கிறது—கடந்த ஆண்டில். ரயிலில் அதிக மக்கள் பிரயாணம் செய்தனரோ என்று புள்ளி விபரத்தைப் பார்த்தால். இத்தனை கோடி மிச்சப்படும் அளவில், ஏதும் உயரவில்லை.

கடந்த வருடம் 13077 கோடி 20 லட்சம்.

முன்வருடம் 12552 கோடி 60 லட்சம்.

இதுதான், ரயிலில் பிரயாணம்செய்தோரின் புள்ளி விபரம். இதேபோல போக்குவரத்துத் துறையிலும், அதிக வாகின்கள் ஓடவில்லை.

ஆனால் லாபம் கிடைத்திருக்கிறது. எப்படி? ரயில்வே கட்டணத்தை உயர்த்தி, ஏழைமக்கள் தலையில் கைவைத்தது. தொழிலாளர்களின் துயரங்களைத் துடைக்காது, மிரட்டியது. மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தராதது.

இந்த 'முதலாளி' மனப்போக்கால், இந்தியரயில்வே, தெம்மாங்கு பாடுகிறது! ரயில்வே பட்ஜட்டை பார்க்கும் பொழுது, எவரும் பாராட்டமுடியாது. 'ரயில் நேரந்தவறிதான் ஓடுகின்றன' என்று மந்திரியாரே ஒப்புக்கொள்கிறார். அவ்வளவு தூரம், நிர்வாக ஊழலை, வளர்த்திருக்கிறது, அய்யங்காரின் ஆட்சி.

சர்க்காரின் ஸ்தாபனங்கள் மக்களுக்காகத்தான்பயன்படவேண்டும். ஆனால், இவர்களோ, 'வண்டிக்கடை' அதிபதிபோல் பணத்தைச் சுரண்டுகின்றனர்.

கடந்த ஆண்டில் இவ்வளவு லாபம் வந்திருக்கும்போது இந்த ஆண்டிலாவது கட்டணத்தை குறைக்கலாமே! அதுவும் இல்லையென்றால், தவிக்கும் ரயில்வேத் தொழிலாளியின் ஊதியத்தை உயர்த்தலாமே!!

இவை, எதையும் செய்யவில்லை— செய்யும் அறிகுறியும் தென்படவில்லை ஆனால் 'லாபம்' என்கிறார், நாமதாரி அமைச்சர்! என்று விடுபடுமோ, இவர்களிடமிருந்து இந்த ஸ்தாபனங்கள்! என்று பொது மக்கள் சுமை நீங்குமோ!!

## உறுப்பினராகுங்கள்

1. உறுப்பினராக விழைவோர், தி. மு. க. கொள்கைகளையும், இலட்சியங்களையும் ஏற்று கழக, சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடப்பேன் என்று தனித் தாளில் எழுதிக் கையொப்பமிட்டு, எட்டணாவும் அனுப்பி வைக்கவேண்டும்

2. குறைந்த எண்ணிக்கையுள்ள சிற்றூர்த் தோழர்கள் தனித்தாளில் உறுப்பினராவோர் கையொப்பம் பெற்று, கட்டணத்தையும் அனுப்பி வைப்பதே நல்லது.

3. இருபத்தைந்து உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு தொகையும், வசூலித்து அனுப்பிவிட்டால், ரசீது புத்தகம் உடன் கிடைக்கும்.

4. தலைமை நிலையத்திலிருந்து, மாவட்டக் கழகமும், தனிப்பட்ட கிளைக் கழகங்களும் நேரடியாக ரசீது புத்தகங்கள் பெற்றுள்ளன. அவை தாம்பெற்ற புத்தகங்களை முடித்து தலைமை நிலையத்திற்கு அனுப்பவேண்டும்.

5. மாவட்டச் செயலாளரிடமிருந்து ரசீது பெற்றோர், புத்தகத்தை முடித்து அதற்கான முழுத் தொகையோடு மாவட்டச் செயலாளருக்கே அனுப்பவேண்டும்.

6. உறுப்பினர் கட்டணம் எட்டணாவையும் தலைமை நிலையத்திற்கே அனுப்பிவைக்கவேண்டும்.

7. ஏப்ரல் திங்களில், நிர்வாகிகள் தேர்தல் நாடெங்கும் நடைபெறும். ஒவ்வொரு சிற்றூர்க்கிளையும், நிர்வாகிகள் விவரமும், உறுப்பினர் எண்ணிக்கையும் அனுப்பி தொகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

8. வட்ட, மாவட்டக் கழகங்களுக்குரிய தொகை, அவ்வமைப்புகள் புதிதாக ஏற்படும்வரை தலைமை நிலையத்திலேயே இருக்கும்.

9. உறுப்பினர் விபரம், முகவரி, சிற்றூர், வட்டம், மாவட்டம், ஆகியவற்றை மிகத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

10. புத்தகம் முடிந்த பிறகு அனுப்புவதைவிட, சேரச் சேர அனுப்புவது நல்லது

உறுப்பினர் ரசீது புத்தகங்கள் அனுப்புக, அனுப்புக என்று எழுதும் கடிதங்கள் ஏராளம். அதுவும் ஏற்கனவே ரசீது புத்தகங்கள் பெற்றும் மேலும் வேண்டும் என்று எழுதும் மடல்கள் மிக மிக அதிகம். அவை, நம் ஆர்வத்திற்கு அளவுகோல். ஆனால், இவ்வளவு பேர்களைச் சேர்த்துவிட்டோம், தொகை அனுப்பியுள்ளோம், பெற்றுக்கொள்க என்று எழுதிடும் கடிதங்களே, நம் ஆக்கத்திற்குத் தூண்டுகோல் — அத்தகைய மடல்களே தலைமை நிலையத்திற்கு வந்து ஏராளமாகக் குவிய வேண்டும்.

விவரங்களுக்கு:—

**தலைமை நிலையம்,**
திராவிட முன்னேற்றக் கழகம்,
காஞ்சிபுரம்.

# சென்னையில் கருப்புக் கொடி

வடநாட்டுக் கவர்னருக்குக் கருப்புக் கொடி காட்டவேண்டும் என்று திராவிடர் கழகம் தீர்மானம்செய்து நாள் குறித்திருக்கிறது.

வடநாட்டு ஆதிக்கத்தை நாம் வெறுக்கிறோம் என்பதன் அறிகுறியாகக் கருப்புக் கொடி காட்டப்பட வேண்டும் என்று திராவிடர் கழகம் கூறுவது, முற்றிலும் நியாயமானதும் அனைவரும் வரவேற்கவேண்டியதுமாகும்.

வடநாட்டுக் காங்கிரஸ் பாசீசம் திராவிடத்தின் எழுச்சியை அறிய இந்த கருப்புக்கொடி பிடித்தல் உண்மையாகவே ஒரு அரிய வாய்ப்பாகும்.

இதிலே கலந்து, வெற்றியை மேலும் வலுவுள்ளதாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இருக்கிறது.

ஆனால்; கருப்புக் கொடி நாள் நடத்துவதாக அறிவித்திருக்கும் திராவிடர் கழகம், நாம் தீண்டுவதையும் தீண்டக்கூடாது என்ற திட்டத்தைத் தெரிவித்துவிட்டதால், தி. மு. க. இந்தக் கருப்புக் கொடி காட்டும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது கூட்டுறவு, ஒத்துழைப்பு, கலப்பு, தங்கள் முயற்சியைக் கெடுத்துவிட்டது என்று பழி சுமத்தவும் திராவிடர் கழகத்தில் பெரும்பகுதியினர் முன்வரக்கூடும். அவர்களும் கலந்துகொள்வதானால் அந்தக் காரியமே வேண்டாம், என்று ஒரு பகுதியினர் எண்ணக்கூடும். எனவே, திராவிடர் கழகம் தனித்தன்மையுடன் கருப்புக் கொடி காட்ட இடமளித்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தார் 12-3-52 அன்று நாடெங்கும் கண்டன நாள் நடத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணாதுரை

# அவமதிக்கிறார்

மக்களால் வெறுத்து வீசப்பட்ட மத்தியசர்க்கார் அமைச்சர் சந்தானத்தை, விந்தியப்பிரதேச கவர்னராக ஆக்கியது பற்றி கண்டித்தோமல்லவா? இதே கண்டனத்தை எழுப்பியிருக்கிறார்கள், புது டில்லியில்.

இந்தியப் பிரதமரை, பத்திரிகை நிருபர்கள், கேட்டிருக்கிறார்கள், 'தோற்கடிக்கப்பட்டவர்,கவர்னராகலாமா?' என்று. அதற்குப் பண்டிதர் பதிலளித்திருக்கிறார்—ஜனநாயக உலகைக் கேலி செய்வதுபோல்!

'மந்திரியாகஇருந்தாலென்ன,மதியூகியாக இருந்தாலென்ன, மக்களை மதியா உன்னைநாங்களும்மதியோம்'' என்று, மாயூரம் தொகுதி லட்சக் கணக்கான மக்கள், முடிவு கூறினார்கள்—தேர்தலின்போது.

அந்த முடிவை, அவமதிக்கிறார் நேரு! முடிவு தந்த லட்சக் கணக்கான வோட்டர்கள் — யாரோ சிலராம்—செப்புகிறார், ஆசிய ஜோதி. "சென்னையிலுள்ள சில வாக்காளர்களால் அவர் தேர்ந்தெடுக்கப் படவில்லை யென்பதற்காக, அவருடைய சேவையையா — இழப்பது?'' — என்று கூறியிருக்கிறார். ரயில்வே இலாகாவில் அருமையாக வேலை செய்தாராம், சந்தானம்—கூறுகிறார் நேரு. என்ன அருமையோ அது—நமக்கெல்லாம் தெரியாதது—நாட்டின் பிரதமருக்குத் தெரிகிறது! ரயில்வே இலாகா முழுமையையும் 'நாமதாரி'களாக ஆக்கியது தவிர, எந்த 'அருமை'யையும் காணவில்லை நாம்—ஆனால், முடிசூடா மாணிக்கம் கூறுகிறார்!

சந்தானத்தைப் பாராட்டிவிட்டுப் போகட்டும்—ஆட்சேபமில்லை நமக்கு. ஆனால், அவரைத் தேர்ந்தெடுக்காமல் விரட்டிய மக்களை அவமதிக்கிறார் — ஜனநாயகத்தேர்தலை, அலட்சியமாகக் கருதுகிறார். நண்பருக்காக, நாவு, இவ்வளவு வேகமாக அசைவதா, ஒரு பிரதமருக்கு? சிலராம் சிலர்! Some Electors in Madras — நேரு, கூறுகிறார் இப்படி! சந்தானத்தை வெறுத்து வீசியமக்கள் தீர்ப்பைவிட, தனது தீர்ப்பே மேலென்கிறார்—ஜனநாயகம்பற்றிப் பேசும் காந்தியவாரிசு, கூறுகிறது இவ்விதம்! தலைமைப்பதவி, இத்தகைய நெஞ்சுரத்தைத்தராது—இவருக்கு என எண்ணினோம்—ஆனால் சராசரிநிலையையும்தாண்டிவிட்டார்! "வேண்டியோருக்கு ஏற்படும் இழிவு'' காண, ஏனோதானோக்கள், குதிக்கலாம்—குளறலாம் — கொந்தளிப்போடு பேசலாம். ஆனால் இவரா பேசுவது? நேருவா!—ஜனநாயகம் பேசும் நேருவா!!

# திராவிட பார்லிமெண்டரி கட்சி

'திராவிடப் பார்லிமெண்டரி கட்சி(Dravidian Parlamentary party) என்ற பெயரால் சட்டசபைக்குள் ஒரு கட்சி இயங்குமென்பதாகவும் அதில் இதுவரை 13-பேர் சேர்ந்திருப்பதாகவும், நண்பர்கள் மூலம் அறிந்தேன். இதைப்பற்றி கரூர் தோழர் ரத்தினம் முதலானவர்கள் என்னைக் கலந்தனர். இந்த முயற்சியை வரவேற்கிறேன், ஐக்கிய ஜனநாயக முன்னணியோடு சேர்ந்து பணியாற்றுவதே இதன் நோக்கமாக இருக்கும் என்றும் விரும்புகிறேன்'' என்பதாக 4—3—52 விழாவில் பேசிய தி. மு. க. பொதுச் செயலாளர் வெளியிட்டார்.

# வருந்துகிறோம்

வயலிகிராமம் (நெல்லை) தி. மு. கழகச் செயலாளரான தோழர் வ. ச. சண்முகம் தனது இளம் பருவத்தில் 17-வது வயதில் திடீரென, சாவால் பிரிக்கப்பட்டாரென்று செய்தி, நம்மைக் கலங்கச் செய்தது மேற்படி கிராமத்தில் நமது கழகம் நிறுவி, பாடுபட்ட இளைஞர் அவர். மைந்தனை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும், அவரது சகோதரர் வேலுச்சாமிக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என அவ்வூர் தி. மு. க. வினர் தெரிவிக்கிறார்கள்.



2-ம் பக்கத் தொடர்ச்சி

ஸ்டோர் பலமாயிடும் போலிருக்கே...''

"அதெல்லாம் ஆகாதுங்க...பிட்நோட்டீசாலேயே ஒழிச்சுக்கட்டிடறேனுங்க...''

"ஒழிச்சு வாழ்ந்தோம். இந்தாய்யா, கணக்கப்பிள்ளை. வர வர எனக்குப் பயமாயிருக்கு......நம்ப கடைப் பயல்களே, அங்கேபோயிடுவான்க போலிருக்கே!''

"நீங்க ஒண்ணு! இவனுகளாவது போவதாவது!''

"இல்லேய்யா—எங்க வீட்டுக்காரி மரகதமே சொல்றா, நம்ம கடை சரக்கு நல்லால்லே—ஸ்டோர் சாமான் ஜோராயிருக்குன்னு! தெரியுமோ?''

"நாமும்,நல்ல சரக்கா,வாங்கிட்டு வர்றது......''

"வாங்கிட்டுவரலாம் — ஆனால் பணம்! பணமய்யா பணம்? என் வீட்டுதுல்லே — நான், அல்ல, கொட்டியழணும்? அவனுகளுக்கு என்ன, கோவாப்பரேடிவ்ஸ்டோரு ...அப்படியில்லியே, நம்மது''

"ஆமாங்க...இருந்தாலும்...''

"நிலைமையை உணர்ந்து பேசணும்—ஊரிலே நம்மைப்பற்றி கேவலமா பேசறாங்க. அதோபாரும் நம்ப கடைப்பசங்க பேசறது—காதிலே விழுதோ?''

[கடைக்குள்ளே குலாம், ஸ்டோரின் பெருமை பற்றி, கோவிந்தனிடம் சொல்லிக்கொண்டிருக்கிறான். 'என்னைப் பார்த்ததும் கேலி பண்றாங்க, கோவிந்தண்ணேன்! வெட்கம் பிடுங்கித்தின்குது. இங்கே இருந்துகிட்டு முதலாளிகிட்ட, ஊராரும் கிட்ட அவஸ்தைப்படறதைவிட, அங்கே போனா.......'' இந்தப்பேச்சு, முதலாளிக்கும் கணக்குப்பிள்ளைக்கும், கேட்கிறது.]

"கேட்டியா, பய சொல்றதை!''

"ஆமாங்க..........''

"இவன்களும் போயிட்டா.....''

"போனா என்னங்க! வேறே ஆள் வச்சுக்குவோம்''

"சுலபமா சொல்றீர், நீர்! முடியற காரியமா? எவ்வளவு அருமையான பசங்க......எத்தனை வருசமா உழைக்கிறாங்க........ இவன்களைப் போல எவன்கிடைப்பான். கிடைச்சாலும், விஷயந் தெரிஞ்சவனா, எவன் அகப்படுவான்.''

"ஆமாம்! ஆமாம்!! ஐயா சொல்றது—அத்தனையும் சரிதாங்க.....''

"நான் ஒண்ணு செய்யறேன்!''

"என்னது?''

"சம்பளத்தைக் கொஞ்சம் கூட்டித் தந்துடுவோம் — சந்தோஷப்படுவாங்க, அதே சமயத்திலே, சில தடைகளையும் சொல்லிடுவோம்!''

"ரொம்ப நல்ல யோசனைங்க''

[மூக்கப்பிள்ளை, குலாமையும் கோவிந்தனையும் கூப்பிடுகிறார். 'சந்தோஷமான தகவல்' என்று ஆரம்பித்து, 'கடையிலே வியாபாரம் இல்லேன்னாலும் உங்க உழைப்பைப் பாராட்டறதுக்காக மாசம் ரூ 1, உயர்த்திருக்கிறேன்' என்று விளக்கிவிட்டு, அவர்களிடம் சொல்கிறார்.]

"சம்பளம் உயர்த்திருக்கேன் — சந்தோஷம்தானே!''

"ஐயா, முடிவுக்கு ஆட்சேபனை ஏதுங்க?''

"சரி—நான் சில சங்கதி சொல்வேன். அதன்படி நடக்கணும். நீங்க நடந்தாத்தான் நம்ம கடை வியாபாரம் பெருகும். வியாபாரம் பெருகினா, உங்க சம்பளத்தை இன்னும் அதிகமாக்குவேன்......''

"சரிங்க...........''

[இதற்குமேல், கொஞ்சம் ஆசை காட்டிவிட்டு, தனது நிபந்தனைகளைச் சொல்கிறார், மூக்கப்பிள்ளை. அந்த நிபந்தனைகள்.]

ஸ்டோர்பக்கம் போகக்கூடாது!

ஸ்டோரைப்பற்றி யாராவது பேசினால் கேட்கக்கூடாது!

ஸ்டோர் சாமான்களைப் பற்றி யாராவது புகழ்ந்தால், காதை மூடிக்கொள்ளணும்!

'நம்ம கடை உண்டு — நாமுண்டு'ன்னு இருக்கணும்!

[நிபந்தனைகளைக் கேட்டுக்கொண்டு அவர்கள்போகிறார்கள்—ஸ்டோருக்குப போய்வரும் ஜனங்கள், ரோடில் திரள் திரளாகச் செல்கிறார்கள். கணக்கப் பிள்ளை, காரசாரமாக சில வரிகளை எழுதுகிறார்— முதலாளியிடம் காட்டுகிறார்.]

'புதிய சரக்குகள்—தயார்!'

'போகாதீர்—ஸ்டோருக்கு'

'துரோகிகள் ஆகாதீர்'

'பழையகடை ஆகுமா?'

[முதலாளியும், சந்தோஷமாக, தலையாட்டுகிறார், 'பிட்நோட்டீஸ்' போடச் சொல்லி. குலாமும் கோவிந்தனும் உள்ளே இருக்கிறார்கள் — அவர்கள்மீது தாவியோடுகிறது ஒரு எலிக் குஞ்சு! அதுவந்த சாமான் மூட்டையைப் பார்க்கிறார்கள் —கரப்பானும் வண்டும் அங்கே நிறைந்து கிடக்கின்றன!!]

# துவக்க விழாக்கள்

சேத்தியா தோப்பு: தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த இவ்வூரில் 29-2-52 அன்று தி. மு. க. துவக்கவிழா நடைபெற்றது. தோழர் அறிவழகன் தலைமைவகித்தார். தி. மு. க. பொதுச்செயலாளர் சி. என். ஏ. கழகத்தைத் துவக்கிவைத்துச், சொற்பொழிவாற்றினார்.

கோள்ளிடம்: (தஞ்சைமாவட்டம்) 2—3—52 அன்று தி. மு. க. துவக்கவிழா நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவத்தோழர் அங்கப்பன் தலைமை வகித்தார். கழகஇலட்சியங்களை விளக்கி பல்கலைக் கழக மாணவ மணிகளான தோழர்கள் மு. அண்ணாமலை, சிவனடியார், சம்பந்தம் ஆகியோர் பேசினர். காஞ்சி கே. டி. எஸ். மணி, இராம அரங்கண்ணல் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

# இந்தியின் கதி

☆

நிருபர்:- இந்தியைப் பரப்ப, தீவிர மான நடவடிக்கைகளை—முன்னைப்போலவே, மத்திய சர்க்கார் தொடர்ந்து செய்யுமா?

நேரு:- ஏன், கேட்கிறீர்கள் — இப்படி.

நிருபர்:- தெற்கில் நடைபெற்றதேர்தலில் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டிருக்கிறதே– அதனுல் கேட்டோம்.

☆

புது டில்லியில், கடந்த 28ந்தேதி இவ்விதம் கேட்டிருக்கிறார்கள் இந்தியப்பிரதமர் நேருவை—அதற்குப் பதிலளிக்கையில், 'மத்திய சர்க்கார் இந்தியைப் பரப்ப தீவிரமான நடவடிக்கைகளைக் கையாளுவதாக நீங்கள் சொல்லத்தான் கேள்விப்படுகிறேன்' என்று தெரிவித்திருக்கிறார். அதோடு, அவர் தந்திருக்கும், சில தகவல்கள்:—

"இந்தியை பொதுமொழி யாக்குவதென்பது அரசியலமைப்பின்ஜீவாதாரத் திட்டமாகும்"

"இத்திட்டத்தை, தெற்கிலுள்ளவர்களோ அல்ல மற்றவரோ, ஏன் எதிர்க்கவேண்டும்?"

"இதை எப்படி நிறைவேற்றுவதென்பதில் கருத்து வேற்றுமைகளிருக்கலாம். ஆனுல் எப்படியும் நிறைவேற்றித்தான் ஆகவேண்டும்"

"இந்தியாவை ஒரேநாடாக ஆக்க இந்தத் திட்டத்தைதவிர வேறுவழியில்லை"

"இதை சாமர்த்தியமாக செய்யவேண்டுப—இல்லாவிடில் தொல்லைகள் உண்டாகத்தான் செய்யும்."

☆

இந்தியாவை ஒரே நாடாக்க, எப்படியும் இந்தியை, பரப்பவேண்டும் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார் — ஆனுல் அதற்கான வழிமுறைகள், கட்டாயமாக இருக்காதாம்! சாமர்த்தியமாகச் செய்யப்படுமாம்!!

இந்தியைப் பரப்புவதற்கென, டில்லி, கையாண்ட முறைகளை நாம் அறிவோம்—டில்லிக்குக் கீழ்ப்பட்டு இந்தியைத் திணிக்க, முயற்சித்த மாகாண சர்க்காருக்கும், தகுந்த புத்தியைத் தந்திருக்கிறோம், நாம். இருந்தும், நேரு சொல்லியிருக்கிறார் 'மத்திய சர்க்கார் இந்தியைத் திணிக்க, தீவிரமாக எதுவும்செய்யவில்லை, என்பதாக.

தீவிரமாகச் செய்யவில்லையென்பதை வாதத்துக்காக ஒப்புக்கொள்வோம்—இந்திப் பிரச்சார சபைகளுக்கென சர்க்காரும் ஒதுக்கி வரும் பணங்கூட இல்லையென்று கூறமுடியாது, அவரால்! அத்தகைய பிரச்சார சபைகளுக்கென, அள்ளிக்கொடுக்கப்பட்டு வருகிறது —டில்லியில்.

இவைகளின் மூலம் இந்தியைப் பரபுவதைத்தான், நேரு, குறிப்பிடுகிறார் 'சாதுர்யமான வழிகள்' என்று.

இந்தச் சாதுர்யவழி, தந்திருக்கும் பலனைப் பாருங்கள் — இந்தத் தகவல், நாம் தரவில்லை; புது டில்லி தருகிறது 'தினமணி' மூலம்:—

புதுடில்லி பிப் 16:- நாட்டில் ஹிந்திப் பிரசார இயக்கம் அவ்வளவு சுறு சுறுப்பாக நடக்கவில்லை என்று கல்வி இலாகா கருதுகிறது. 1950 — 51ல் ஹிந்தியைப் பரப்புவதற்காக, பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட 170,000 ரூபாயை வேறு துறையில் செலவிட சர்க்காரிடமே திரும்பக் கொடுத்துவிட கல்வி இலாகா உத்தேசித்துள்ளது.

ஹிந்தி பாஷையில் பரிச்சயமே இல்லாதவர்கள் இந்த பிரச்சார இயக்கத்தை நடத்தியதுதான் காரணம் என்று அபிப்பிராயம் கூறப்படுகிறது.

☆

சாதுர்ய வழியின், இலட்சணம் இது!

இந்தியைப் பரப்ப முனைந்தோரின் தகுதி—'பரிச்சயமே இல்லாதவர்கள்' அவர்களுக்கு சர்க்கார் ஆதரவு! பணம்!!

பலன் கிடைக்கவில்லையென்று — பரிதாபத்தோடு சொல்கிறது,டில்லி கல்வி இலாகா. ஆனுல் நேருவோ, எப்படியும், பரப்பவேண்டும் என்கிறார்! பரப்பமுடியவில்லை — என, கல்வி இலாகா, பணத்தைத் திருப்பித்தருகிறது, அவரிடம்!!

"இந்தி பொதுமொழி — வீண் முயற்சி" என்று, நாம் போராடிய பொழுது, அறிவிய தேசியத் தோழர்களுக்கு, இந்தஉண்மைகளை வைக்கிறோம். நாம் கூறியபோது, துப்பாக்கிகளைக் காட்டினர்—சிறைகளில் சித்திரவதை செய்தனர் — ஆனுல் நேருவோ, 'திணிக்கவில்லையே!' எனச் செப்புகிறார் — 'சாதுர்யமாகச் செய்வோம்' என்கிறார் — அவரது கல்வி மந்திரி சபையோ 'சாதுர்யவழி பயன்படவில்லை—பணம் இந்தா' என்று கூறுகிறது. விந்தையான கதி, இந்திக்கேற்பட்டிருக்கிறது! பரிதாபப்படுகிறோம் இந்தியின்கதி குறித்து! அனுதாபத்தோடு கூறுகிறோம், இன்னும் 'இந்தி பொதுமொழி' என்று எவரேனும் எண்ணியிருந்தால், எண்ணம் ஈடேறுது—தயவு செய்து மாற்றிக்கொள்ளுங்கள்!!

☆

## சென்னை நிலை

| | |
|---|---|
| காங்கிரஸ் | 152 |
| சுயேச்சை | 63 |
| கம்யூனிஸ்டு | 61 |
| பிரஜா | 35 |
| உழைப்பாளர் | 19 |
| ரங்காகட்சி | 15 |
| சோஷியலிஸ்டு | 13 |
| காமன்வீல் | 6 |
| முஸ்லிம்லீக் | 5 |
| பார்வர்டுபிளாக் | 3 |
| தாழ்த்தப்பட்டோர்சம்மேளனம் | 2 |
| ஜஸ்டிஸ் | 1 |

சென்னை சட்டசபையின் மொத்த ஸ்தானங்கள் 375. இதில் பங்கு கொண்டுள்ள கட்சிகளின் நிலை இது.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.

110

110/2.52

REGD No M 42

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 16—3—52 | இதழ் 37

# அவரும் அவர்களும்

சென்னைக்குப் புதிய கவர்னர் வருகிறார். அவர் ஒரு செல்வவான். பிரமுகர். காங்கிரஸ்காரர்.

சென்னையோ, பார்ப்பன ஆதிக்கம் பாதிக்கப்படுகிறது என்ற புகார் கௌிளம்பும் இடம். பார்ப்பன எதிர்ப்பு உணர்ச்சியும் பார்ப்பனீய, ஒழிப்புக் கிளர்ச்சியும் பல ஆண்டுகளாக இருந்து வருகிற இடம் என்று டெல்லிக்குப் பலரும் கூறி வந்திருக்கிறார்கள்

பார்ப்பனர், மத, சமுதாயத் துறைகளிலே, இலாபகரமான அந்தஸ்து பெற்று ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இந்த அந்தஸ்தை பித்தலாட்டமான ஒரு புராண கால மனப்பான்மையைப் புகுத்தி பாமரரை ஏய்ப்பதனுல் தான் பெற முடிகிறது, சமூக நீதி நிலை நாட்டப்படவேண்டுமானுல், பித்தலாட்டமாகப் பெறும் அந்தஸ்து ஆதிக்கம் தகர்க்கப்பட்டாக வேண்டும் என்ற கருத்து புயலளவுக்கு உள்ள இடம் சென்னை. எந்தப் பிரச்சினையிலும் இந்தப் பிரச்சினை உட் பிரச்சினையாக இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும்.

இதனை வகுப்புவாதம் என்று இழிமொழி சூட்டிக் கண்டித்தும், இதனுலேயே நாடு நாசமாகிறது என்று பேசியும், இதை ஒழித்தாக வேண்டும் என்று முழக்கமிட்டும், பெசன்டு அம்மையார் கால முதல், டி. டி. கே காலம் வரையில், விடா முயற்சி நடந்து வருவதும் அனைவருக்கும் தெரியும்.

சமூக நீதிக்காகப் பேசுவதும், வகுப்புத் துவேஷம் என்று திரித்துக் கூறப்பட்டு, குற்றவாளிக் கூண்டிலே, பலர் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்பட்டதும் இங்குதான்.

விடா முயற்சி, திரித்துக் கூறல், சட்டம் கொண்டு தாக்குதல் ஆகிய எல்லா வழிகளைக் கையாண்டும், 'வகுப்புவாதம்' களைந்தெறியப்பட முடியாததாக உள்ள இடம் சென்னை.

வெள்ளையராட்சி மூலம் பெற வேண்டிய ஆதரவு வற்றியதும் காங்கிரஸ் மூலம் ஆதரவு பெற்று வளமான, வகுப்பு ஆதிக்க வெறியாம் பார்ப்பனீயம், நாளாகவாக, காங்கிரஸ் மூலமாகவும் அதிக அளவிலும் தொடர்ச்சியாகவும் ஆதரவு பெற முடியாது என்பதைப் புரிந்து கொண்டுள்ள இடமும் சென்னை தான்.

காங்கிரசு மட்டும்என்ன, சட்டை கருப்பு இல்லையே தவிர, எங்களைப் போலத்தான் மட்டில், காங்கிரசுக்குள்ளேயே 'வகுப்புவாதம்' இருப்பதைத்தான் காண்கிறோம், என்று கோபமும் வெறுப்பும் கலந்த குரலில் பார்ப்பனப் பிரமுகர்கள் பேசுவதும் சென்னையில் தான்.

நாம் ஒன்றுபட்டு நமது குறையைக் கூறிக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து பிராமண மகா சபை நடத்தி வருவதும் சென்னையில்தான்.

எவ்வளவோ கிளர்ச்சிகளுக்குப் பிறகும், நாட்டு மக்கள் மனதைப் பக்குவப்படுத்தும் பத்திரிகைச் சாதனம், பெரும்பாலும் பார்ப்பனரிடம் இருந்து வருவது, சென்னையில தான்.

ஆலைக்கு முதலாளி ஏன்? நிலத்திலே பிரபு ஏன்? என்று வீரதீரமாகக்கேட்கவும், அறிவாற்றலுடன் மாற்றுத் திட்டம் தயாரிக்கவும் நாடு முன் வந்திருக்கும் இந்த 'புரட்சி'க் காலத்திலேயும் கூட, ஆலயத்திலே ஐயர் ஏன், ஊரிலே அக்ரகாரம் ஏன், ஓட்டலிலே பிராமணாள் ஏன், பிறவியிலே உயர்வு தாழ்வு ஏன், என்று பேசவும், நாடு பயப்படுகிறது என்கிற நிலைமை தெளிகிற இடமும் சென்னைதான்.

நாடு முன்னேற, உலகிலே உயர் இடம் கிடைக்க, மக்களுக்குப் பாடுபடக் கூடிய ஒரே கட்சி, காங்கிரசுதான் என்று காப்பி ஆற்றித் தரும்

பார்ப்பனர் முதல் கலெக்டர் வேலை பார்க்கும் பார்ப்பனர் வரையிலே பேசி வந்ததும் சென்னையில்தான்.

காங்கிரசு ஒழிந்தால்தான் கஷ்டம் தீரும் என்ற அளவுக்கு ஏழை எளியவர்கள் தீர்மானித்துத் தீர்ப்பளித்துக் காங்கிரசை முறியடித்திருப்பதும் சென்னையில்தான்.

பொது மக்களுக்குப் புத்தி கெட்டுவிட்டது, கெட்டவர் பேச்சைக் கேட்டுக் கேட்டுக் கெட்டுப் போகிறார்கள் என்று எல்லா பார்ப்பனப் பிரமுகர்களும் ஏசிக்கொண்டிருக்கிற இடம் சென்னை.

காங்கிரசாலே, மந்திரிசபை அமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, பிச்சை கேட்டும் தத்து எடுத்தும், கண் சிமிட்டியும் காவடி தூக்கியும், ஆசை காட்டியும் காசை இறைத்தும் ஆள்பிடித்து அரசு அமைக்கலாமா என்ற அற்ப வழியில் காங்கிரஸ் நுழைந்து தீரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதும்; சென்னையில்தான்!

இந்த சென்னைக்குத்தான் இந்த நிலைமையில், பிரகாசா எனும் பிரமுகர், கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

மலேயாவில், தோட்டக் காடுகளில் பாடுபட்டுப் பாடுபட்டு, வெள்ளை முதலாளிகள் பவுன்களை மூட்டை மூட்டையாகக் கட்டிக்கொண்டு செல்வதையும், வறுமை தங்களைக் கொட்டிக் கொல்வதையும் தாங்கமாட்டாமல், மலேயாவிலே, பாட்டாளிகள் உரிமைக் கிளர்ச்சி செய்வது கண்டு கலங்கிடும் வெள்ளை முதலாளிகள், தங்கள் அரசிடம் முறையிட்டு, கலகக்காரரைச் சுட்டுத் தள்ளக்கூடிய திறமைசாலியான ஒரு வெள்ளைக்கார ஏகாதிபத்திய வெறியனை மலேயாவுக்கு அனுப்பும்படி கேட்டுப் பெற்றிருக்கிறார்கள்.

இங்கே பிரகாசா கவர்னராக வந்திருக்கிறார்!

இங்கே பிரகாசா கவர்னராக அனுப்பப்பட்டிருக்கிறார்!

இல்லை, இல்லை, இங்கே பிரகாசாவைக் கவர்னராக அனுப்பிவைக்கும்படி, சென்னைப்பார்ப்பனப் பிரமுகர்கள் காஷ்மீர் பார்ப்பனப் பிரமுகரான நேரு பண்டிதரிடம் முறையிட்டு, அவரும் அதுசரி என்றுகூறி இங்கே பிரகாசாவை அனுப்புகிறார்.

இப்படியா நடந்தது—ஒவ்வொரு மாகாணத்துக்கும் கவர்னர்களை நியமிக்கிறார்கள் அது ஜனாதிபதியின் உரிமை. பார்ப்பன பிரமுகர்கள் பிரகாசாவைச் சென்னைக்கு அனுப்பும்படி கேட்டுப் பெற்றனர் என்று கூறலாமா — தவறல்லவா இது— இதுதானே வகுப்புத் துவேஷம் என்று கேட்கத் தோன்றும், சிலருக்கு.

## சி. என். ஏ.

சி. என். ஏ. நெஞ்சு வலியின் காரணமாக, கடந்த ஒரு வாரகாலமாக இங்கு சிகிச்சை பெற்றபிறகு நீங்காததால் 11-3-52 அன்று காஞ்சி டாக்டர் பார்த்தசாரதியோடு சென்னைக்குச் சென்று டாக்டர் சடகோபனின் ஆலோசனைக்குப் பிறகு இங்கு, சிகிச்சை பெற்று வருகிறார். ஓயாத கார் பிரயாணமும், இடைவிடாத கூட்டங்களுமே, நெஞ்சு வலிக்கு காரணமென்றும், ஒரு மாதகாலம் பூர்ணஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும், டாக்டர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இதனால் 11, 12. தேதிகளில் குறிப்பிடப்பட்டிருந்த தஞ்சை, குன்றத்தூர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியவில்லை. தொடர்ந்து திட்டமிடப்பட்ட சுற்றுப் பயணத்தையும் ரத்து செய்யும்படி நேர்ந்திருக்கிறது.

இட்டுக் கட்டியதல்ல, இந்தக் கருத்து.

சென்னைக்கு இவரை அனுப்பும்படி பார்ப்பனப் பிரமுகர்கள் கேட்டுத்தான் பெற்றிருக்கிறார்கள். ஆதாரம் இருக்கிறது. ஏன் கேட்டார்கள் என்பதை அறிந்துகொள்ள யூகம் அதிகம் தேவையில்லை.

சென்னைக்குக் கவர்னராக நியமிக்கப்பட்ட பிரகாசாவுக்கு, டெல்லியில் சென்ற கிழமை ஒரு பாராட்டு விருந்து நடைபெற்றது 'இந்து' இதழிலே செய்தியைக் காணலாம்.

விருந்துக்குத் தலைமை தாங்கினவர், அனந்தசயனம் அய்யங்கார்.

கோபால்சாமி அய்யங்காரும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் பாராட்டுரை வழங்கினார்கள்.

பூ! இதுதானா சங்கதி! அனந்தசயனம் அய்யங்காரும், கோபால்சாமி அய்யங்காரும் கிருஷ்ணமாச்சாரியாரும் விருந்து விழாவிலே கலந்து உபசார மொழி பேசினார்கள் என்றால், என்ன! இதைப் போய் பிரமாதப்படுத்துவதா? பார்ப்பனர்களே பிரகாசாவைச் சென்னைக்குக் கவர்னராக நியமிக்கும்படி கேட்டு, கேட்டு, அதன்படியே காரியம் நடந்திருக்கிறது என்று கூறுவது, இந்த விருந்து நடந்ததாலா! எவ்வளவு சின்னபிள்ளைத்தனம் இது—செச்சே! எவ்வளவு துவேஷபுத்தி!—என்று சமரச வாசகர்கள் கூறக்கூடும்.

விருந்து ஒன்று அல்ல, யூகத்துக்குக் காரணம்.

சென்னைக்குக் கவர்னராகிறவரும், அவரை அன்று பாராட்டினவர்களும் பேசியதிலேயே, இந்தக் கருத்து தொக்கி நிற்கிறது — சாதாரண அறிவு உள்ளவர்களுக்கும் புரிகிற அளவுக்கு-

ஆச்சாரியார், டெல்லியைவிட்டு அனுப்பிவைக்கப்பட்டபோதே, பிரகாசாவைப் பார்த்து, சென்னைக்கு வரவேண்டும், என்று கூறினார். வேடிக்கை பார்க்கவா கூப்பிட்டிருப்பார்! இருவருமே அந்தப் பருவம் கடந்தவர்கள்!! எனவே, மத்திய சர்க்கார் மந்திரியாகஇருந்த பிரகாசாவை, ஆச்சாரியார் சென்னைக்கு வரவேண்டும் என்று அழைத்தார் என்றால், அரசியல் காரணமாகத்தானே இருக்க முடியும்.

ஒரு சமயம் கவர்னர் பிரகாசா சென்னைப் பகுதிக்கு இதற்குமுன்பு வந்ததே இல்லைபோலும் அதனால் தான் ஆச்சாரியார் அவரை அழைத்திருக்கிறார் என்று எண்ணிவிடாதீர்கள். இதே விருந்துக் கூட்டத்திலே கவர்னர் பிரகாசா நான்சென்னைக்கு முன்பே பலதடவைகள் வந்

11-ம் பக்கம் பார்க்க



# விலை இறங்குகிறது! [அணல்]

### பம்பாய்

"ஹலோ! செட்டியார்..."

"யார், செல்லாராமா! என்ன சேதிங்க?"

"கடலை மூட்டை 'ஆர்டர்' வந்ததா—அனுப்பியாச்சா"

"எவ்வளவுக்குங்க..."

"ஒரு லட்சத்துக்கு"

### சென்னை

'டெலிபோன்' மூலம் தகவல் பெற்ற, சிங்காரம் செட்டியார், 'ஆர்டர்'களைப் பார்க்கிறார். செல்லாராம், ஒரு லட்ச ரூபாய்க்கு சரக்கு கேட்டு பத்தாயிரம் ரூபாய் 'அட்வான்ஸ்' செய்திருக்கிற விபரம் தெரிகிறது. உடனே, சரக்குகள் பம்பாய்க்கு அனுப்பும்படி, சிப்பந்திகளுக்குக் கூறுகிறார். சரக்கு அனுப்பப்பட்டுவிட்டது! தகவலும், அறிவிக்கப்பட்டு விட்டது — செல்லாராமுக்கு. ஆனால், சரக்குகளின் ரசீது மட்டும், பம்பாயிலுள்ள, இந்தியன் பாங்கிக்கு அனுப்பப்படுகிறது.

### பம்பாய்

செல்லாராம், "சரக்கு அனுப்பப்பட்டுவிட்டது. இந்தியன் பாங்கியில் மீதம் 90 ஆயிரத்தையும் கட்டிச் சரக்கைப் பெறவும்" என, சென்னைச் சிங்காரத்திடமிருந்து வந்த தகவலை வைத்துக் கொண்டிருக்கிறார். அப்போது, பம்பாய் இந்திய பாங்கியின் பியூன், வந்து சொல்லுகிறான், "(Invoice) வந்திருக்குங்க."

"சரி! சரி!! நாளைக்கு சரக்கை எடுத்துக்கிறேன்."

பணப் பெட்டியைப் பார்க்கிறார்—பணமில்லை 90 ஆயிரம். சரக்கோ எடுக்கப்படவேண்டும். உடனே, மெர்க்கண்டையல் பாங்கிக்கு — 'போன்' செய்கிறார். அவர், வரவு செலவு வைத்திருக்கும் பாங்கி அதுதான். சிங்காரம் செட்டியார் சரக்கு அனுப்பியிருப்பதைத் தெரிவித்து, அந்த சரக்கு மீது, கடன் தருமாறு கேட்கிறார்.

கடன் தரப்படுகிறது, பாங்கியால். இந்தியன் பாங்கியில் கட்டப்பட்டு, ரசீது பெற்றுக்கொண்டு, சரக்கைக் கொண்டுபோய் மெர்க்கண்டையல் பாங்கியில் வைக்கிறார்.

* * *

இன்று பெரிய வியாபாரிகள் செய்து வருவது, இதுதான்! கை முதல் சிறிது வைத்து, ஆயிரக் கணக்கிலும், லட்சக் கணக்கிலும் வியாபாரம் செய்ய—பாங்கிகள், பெரும் உதவியாயிருந்து வருகின்றன. வியாபாரிகளின் நம்பிக்கை பேரில், பாங்கிகள் தரும் பண உதவியைக் கொண்டே. செல்லாராம் போன்றாரும்—சிங்காரம் செட்டியாரைப் போன்றோரும். மிகப் பிரபலவியாபாரிகளாயிருக்கிறார்கள்.

கடலை மூட்டைக்கு வெளிநாடுகளில் கிராக்கி ஏற்படுமென்கிற, அறிகுறி தென்பட்டதும்தான், அவசர அவசரமாக, சென்னைச் செட்டியாரைக் கூப்பிட்டு சரக்குகளைத் தருவித்தார். சேமித்து வைத்தார். ஆனால், இவர் சரக்கு வாங்கிய மறுநாளே—சர்க்கார் உத்திரவு ஒன்றை பிறப்பித்திருக்கிறது—'ஏற்றுமதி வரியை அதிகமாக்கியிருக்கிறோம்' என்பதாக.

### லண்டனில்

இந்திய சர்க்கார், ஏற்றுமதி வரியை அதிகமாக்கியிருக்கும் செய்தியைக் கண்ட லண்டன் தாம்சன் கம்பெனியார், பம்பாய் செல்லாராமிடமிருந்து கடலை மூட்டைகளை வாங்குவதற்குப் பதில், பாகிஸ்தான் முகம்மதுஇபராகிமிடமிருந்து வாங்குவது இலாபமென எண்ணுகின்றனர். அதனால், பம்பாய் செல்லாராமுக்கு, "ஆர்டர்" வரவில்லை! கடலை மூட்டைகள் தேங்கிக் கிடக்கின்றன!!

பாங்கிக்கோ 3% வீதம் வட்டி செலுத்தவேண்டும், வாங்கிய தொகைக்கு. 'என்ன செய்வது?' என்று திகைத்துக்கிடக்கிற நேரத்தில், பத்திரிகையில் ஒரு செய்தி வருகிறது—அமெரிக்காவுக்கு மிளகுத்தேவையிருப்பதாக. உடனே, ஆசை ஏற்படுகிறது — மிளகை வாங்கி அனுப்பினால் லாபம் வருமென்று. கொச்சிக்கு 'போன்'செய்கிறார்—சரக்கு தாராளமாக வாங்கலாமென பதில் கிடைக்கவே, செல்லாராம் சேட், பழக்குலை கண்ட நரியாகிறார்! உடனே சரக்கை வாங்கிச் சேமிக்கவேண்டும்— இன்னும் பத்துநாள்போனால் விலை ஏறும் — கொள்ளை லாபம் கிடைக்கும்என்று கனவு காண்கிறார். ஆசை, அதிகமாகிறது! பெட்டியைப் பார்க்கிறார்—கடலை விற்காததால் காலியாயிருக்கிறது அது. உடனே மெர்க்கெண்டையல் பாங்கிக்கு, 'போன்' செய்கிறார்—மானேஜரைக் கூப்பிட்டு "மேலும் கொஞ்சம் கடன் தாருங்கள்!" என்கிறார். மானேஜரும், எத்தனையோமுறை இவ்விதம் 'கடன்' தந்தவர்தான்! ஆனால் இன்று! சர்க்கார் பிறப்பித்த உத்திரவு, அவருக்குத் தடையாயிருக்கிறது. சங்கடத்தோடு சொல்கிறார் "முன்னைப்போல் தாராளமாக கடன் கொடுக்கக்கூடாது என்று சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஆகவே கடன் தருவதற்கில்லை. மேலும் ஒரு விஷயம் — வட்டிவிகிதத்தையும் 3½% ஆக்கியிருக்கிறார்கள்." தகவல், தலைமேல், இடியாக விழுகிறது, செல்லாராமுக்கு! திகைக்கிறார்! விழிக்கிறார்!!

### விருதுநகர்

பருத்தி வியாபாரம் ராமலிங்க நாடாருக்கு, சர்க்கார் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் தெரிய வருகின்றன. பாங்கிகள்மூலம் கடன் தரப்படாததும் வட்டி விகிதத்தை உயர்த்தியிருப்பதும் தெரியவருகிறது. உடனே, யார் யாருக்கு பஞ்சுமூட்டைகள் அனுப்பினாரோ, அவர்களிடமிருந்து வரவேண்டிய நிலுவைகளை வசூலிக்க முற்படுகிறார். இப்படி நிலுவை தரவேண்டியவர்களில், செல்லாராமும் ஒருவர்.

---

## தோழர் டி. என். ராமன்

நமதியக்கத் தோழரும் நெடுநாளைய சுயமரியாதைக்காரருமான திருவாரூர் டி. என். ராமன் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பம்பாய்

செல்லாராம், விழிக்கிருர்! திகைக்கிருர்!! "பஞ்சு மூட்டைக்கான பாக்கியை அனுப்பு", "உளுந்து மூட்டைக்கான பணத்தை உடன் அனுப்பவும்", "கணக்கு முடிவு செய்ய வேண்டும்—பாக்கித் தொகைக்கு வழி செய்யவும்"—இவ்விதமாக விருதுநகரிலிருந்தும், திருச்சியிலிருந்தும், கோழிக்கோட்டிலிருந்தும் தந்திமேல் தந்தி வந்து குவிகிறது—கையிலோ பணமில்லை! பாங்கியோ கடன் தர மறுக்கிறது! கொள்முதலான பஞ்சும், கடலையும் மூட்டை மூட்டையாகக் கிடக்கின்றன! என் செய்வார்? ஒரே வழி, மூட்டை மூட்டையாகக் கிடப்பவைகளை வெளியே வியாபாரத்துக்கு அனுப்புவதுதான்! நேற்றுவரை, 'உளுந்து இல்லை' 'பஞ்சு இல்லை', 'கடலெண்ணெய் விலை தாங்கமுடியவில்லை' என்று கலங்கிக் கிடந்த மக்களை நோக்கி, 'உளுந்தும்', 'கடலை'யும் புறப்படுகிறது. மார்க்கெட்டுகளில், குவிக்கப்படுகிறது!

நேற்றுவரை, 'காணமுடியாமலிருந்த' இந்தப் பொருள்கள், இன்று ஏராளமாகக் கிடப்பதைக் காணும் மக்கள், 'இன்னும் குறையும்—வாங்கலாம்' என்று எண்ணுகிருர்கள். 'வாங்கவேண்டும் இப்போது' என்று ஆசைப்படுபவரோ, பையைப் பார்க்கிருர்கள்-காசில்லை!

* * *

கடந்த ஒரு வார காலமாக, நாடெங்கும் கொந்தளிக்கும், விலைவாசி இறக்கத்துக்குள்ள மூல காரணம், இதுதான். வியாபாரிகள் திகைக்கிருர்கள்! பெரிய வியாபாரிகள் கலங்குகிருர்கள்! கலக்கம்—பெருமூச்சு—ஏக்கம், இத்தனையும்; தினசரி, நாடெங்கும் பரவிக்கொண்டிருக்கிறது-வணிக மக்களிடையே.

'விலை இறங்குகிறதாமே!'

'பொருள்கள் சாதாரணமாகக் கிடைக்கிறதாமே!'

என்று ஆனந்தமும் ஆச்சரியமும் கலந்தோராய்க் காட்சி தருகிருர்கள், பொதுமக்கள்.

"இத்தனை நாளும் இல்லாமல் இப்போதுமட்டும் விலை குறைந்தது?" என்பதால், ஆச்சரியம், ஏற்பட்டிருக்கிறது, சராசரி மக்களிடையில்.

இந்த விலை இறக்கத்துக்கு, நாம் மேலே தந்த விளக்கம்தான் முக்கிய காரணமாகும்.

பொருள்கள் குவிந்திருக்கின்றன, கடைகளில்!—கூறப்படுகிறது, மக்களால். ஏது, இவ்வளவுபொருள்களும்? உற்பத்தி பெருகி விட்டதா, திடீரென கடலையும் உளுந்தும், காப்பியும் சர்க்கரையும் பெருகிற்று, அல்லது காஞ்சி காமாட்சி கருணை பாலித்து மக்களுக்குத்தேவையான பொருள்களையெல்லாம் 'மாரி'யாகக் கொட்டிவிட்டாளா, என்பதை நாம் நன்ருகச் சிந்திக்கும்போது, விஷயங்கள் தெளிவாகும்.

நிறையபொருள்கள், உற்பத்தியாளுல், விலை குறையும்.

ஆனல், உற்பத்தி எப்போதும் போலத்தானிருக்கிறது; ஆனல் விலைமட்டும் குறைந்திருக்கிறது.

எப்படியேற்பட்டது, இது? மக்களுக்கு வேண்டிய அளவு தானியப் பொருள்களும், வாழ்க்கைப் பொருள்களும், உற்பத்தியாகாதது கண்முன்னல் தெரிகிறது; ஆனல் விலைமட்டும் இறங்கியிருக்கிறதே, எப்படி இது?

இந்தக் கேள்விக்குப்பதில் தான், நாம் மேலே தந்த விளக்கம். அதிக லாபம் பெறவேண்டுமென்ற ஆசையால், கொள்ளைலாபக்காரர்கள், மக்களுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் இது நாள்வரை பதுக்கி வைத்திருந்தார்கள்—ஆனல் இப்போது, மேலே தந்த விளக்கத்தின்படி, பதுங்கிக்கிடந்தது வெளியே வந்திருக்கிறது!

இவ்விதம் வெளிக்கு சரக்குகள் வந்ததற்குக் காரணம், நாம் குறிப்பிட்டதுபோல் சர்க்கார் ஏற்றுமதி வரி விதித்ததும், வியாபாரிகளுக்கு முன்னைப்போல கடன் தராமல் பாங்கிகளைத் தடைசெய்ததும்தான்.

கடந்த நவம்பர்மாதம், வியாபாரிகளுக்கு பாங்கிகள் கடன் தருவது சம்பந்தமாக சில விதி முறைகளை, ஏற்படுத்திஞர்கள்.

'அட்வான்சாக' முன்னைப்போல பணம் தரக்கூடாது.

வட்டிவிகிதம் 3 லிருந்து $3\frac{1}{2}$ ஆக இருக்கும்.

புதிதாக கடன்வாங்குவோருக்கு சில நிபந்தனைகள் உண்டு.

இந்த நடவடிக்கையும், ஏற்றுமதிவரி உயர்த்தப்பட்டதும், வியாபாரிகளைக் கலக்கத்திற்குள்ளாக்கிற்று. திகைத்தனர்!

எனினும், பல்லைக் கடித்துக்கொண்டு, 'புது பட்ஜட் எப்படி இருக்கிறது—ஏற்றுமதி வரி குறைக்கப்படுகிறதா?' என்று ஆசையோடு பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனல் புது இந்திய சர்க்காரின் பட்ஜட்டில் இந்த வரி குறைக்கப்படவுமில்லை—பாங்கி விதிகள் தளர்த்தப்படவுமில்லை. இதைக்கண்ட வியாபாரச் 'சூதாடிகள்' கலக்கமடைந்தார்கள்! சர்க்காரின் போக்கைக்கண்ட, ஆங்காங்குள்ள மொத்த வியாபாரிகள், தத்தமது சரக்குக்கானபணத்தைத் தருமாறு, 'வியாபாரச் சூதாடி' (Speculators) களை நிர்பந்திக்கத் துவங்கினர் — சரக்கு, மார்க்கெட்டுக்கு வரவேண்டியதாயிற்று!

* * *

சரக்கு, நிரம்பியிருக்கிறது, கடைகளில்; ஆனல் வாங்குவாரில்லை! வாங்கலாமென்று ஆசைப்பட்டாலோ, கையில் காசில்லை!!

விசித்திரமான காட்சியாகத் தோன்றும், இது. மக்கள் மன்றத்தில், கடைகளிலே குவிந்துகிடக்கும் பொருள்களை வாங்கவேண்டும் என்ற ஆவலில்லை. மக்களுக்குத் தேவையில்லையோ இந்தப்பொருள்கள் என்று பார்த்தால், யாவும் தேவைதான்! ஆனல் வாங்கவில்லை!!

வாங்கும் சக்தி (Purchasing

கேளுங்கள்!
உணர்ச்சிமாலை
144
உடைந்த ஆசை
சென்னை. 2.



Power) குறைந்திருக்கிறது—மக்களிடம். பணப்புழக்கம் இல்லை!

பணப்புழக்கம் இல்லை மக்களிடம் ஆனல், சர்க்காரோ பணவீக்கம் நாட்டிலிருப்பதாகக் கூறுகின்றனர். அதற்குக் காரணமாகத் தாங்கள் அச்சடித்து வெளியிட்ட கரன்சி நோட்டுகளின் கணக்கைக் காட்டுகின்றனர்.

உண்மையில் கடந்த போர்க்காலத்தின்போது, ஏராளமான பணப்புழக்கம்—ஏற்பட்டது, மக்களிடம். நோட்டுகள் தாராளமாகநடமாடின—பொருள்கள் கிடைக்கவில்லை!—கள்ளமார்க்கெட், கொள்ளை லாபம் மிகுந்தது. சிலர், கோடீசுவரர்களான காட்சியைக் கண்முன் கண்டோம்! பணம், முதலாளிகளின் பெட்டிக்குள் குவிந்தது! கிட்டதட்ட 500 கோடிக்கு மேற்பட்ட ரூபாய்கள், 'பதுங்கி' விட்டன!!

பதுக்கப்பட்ட பணத்தை எடுக்க சர்க்கார், சரியான முயற்சிகளைக் கைக்கொள்ளவில்லை. "கள்ளமார்க்கட்காரரை தூக்கிலிடுவோம்!" "வருமான வரியை சரியாக செலுத்துங்கள்" "மூலதனம் போட்டு ஆலைகளை ஆரம்பியுங்கள்" என்று நேரு ஆட்சியினர் வெளியிட்ட தந்திர சாகசங்கள், எதுவும் பயனளிக்கவில்லை! பண அரசர்கள் வளரத்தான் செய்தனர்! 'கருப்பு பணம்' பலவிதங்களில் நடமாடத் துவங்கிற்று!!

இந்த உண்மையை உணர்ந்தும், சர்க்கார் பணமுதலைகளிடம் பதுங்கிய பணத்தை வெளிக்கொணர—சரியான நடவடிக்கை எடுக்கவில்லை.

அண்மையில், பட்ஜட்டைச் சமர்ப்பித்துப் பேசிய நிதிமந்திரி தேஷ்முக் பேசுகையில், பண வீக்கத்தைக் குறைக்க சர்க்கார் மேற்கொண்ட நடவடிக்கைகளை சொன்ஞர்.

அவர் குறிப்பிட்ட விவரத்தில் முக்கியமானது, "மக்களிடமிருந்த வாங்கும் சக்தி, சர்க்காரிடம் சேர்ந்திருக்கிறது" என்பதாகும்.

அதாவது, அமெரிக்கா கடனுக—பணம்பெருமல்—கோதுமை அனுப்பிற்றல்லவா! அதை, சர்க்காரே விற்ருர்கள்—வாங்கிய மக்கள் கோதுமைக்கு விலை கொடுத்தே, பெற்ருர்கள். அப்படி மக்கள் கொடுத்த பணம்தான், இந்த ஆண்டு வரவு செலவில், மிச்சம் ஏற்படச் செய்திருக்கிறது! இந்த மிச்சத்தில் ஒரு பகுதி, மக்களிடமிருந்து கோதுமை விற்பனைமூலம் கிடைத்த பணம்தான்!!

இந்த மிச்சத்தைப் பெருமிதமாகக் குறிப்பிட்ட நிதி அமைச்சர், பதுங்கிய பணத்தைப் பற்றி எதுவும் கூறவில்லை—பதுங்கிய பணம் வெளிவரவில்லை, இன்னும்.

பண வீக்கத்தைக் குறைக்கும் நோக்கத்தோடுதான், பாங்கிகளின் வட்டி விகிதத்தை 3%லிருந்து $3\frac{1}{2}$% ஆக உயர்த்தியதாகக் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கை ஓரளவு பயன் தரக்கூடியதுதான். பாங்கிகளிலிருந்து, பணம் 'வியாபாரச் சூதாடிகள்' கைக்குப் போகாது — அவர்கள் மூலம் வெளியே பரவாது—அதே நேரத்தில், சூதாடிகளின், கொள்ளை லாப நடவடிக்கைகள் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதன் விளைவையே, இன்று நாம் பார்க்கிருேம்!

* * *

விலைவாசிக் குறைவை, நினைக்கும்போது இந்தியாவில் என்று மட்டுமல்ல; அகில உலகிலுமே வியாபார மந்தம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஐந்தாறு மாதங்களாகவே, உலக மார்க்கெட் மந்தமாயிற்று — பொருள் விலைவாசிகள் குறையலாயின! காரணம், வெளிநாடுகளிலுள்ள முதலாளிகள், கொரியப் போரையும், எகிப்துக் கிளர்ச்சியையும், ஈரான் எண்ணெய்த் தகராறையும் கண்டு, சரக்குகளைக் குவித்தார்கள்—அதிக லாபம் பெறலாமெனும் ஆசையால்! ஆனல், அவர்கள் எதிர்பார்த்ததற்கு நேர்மாருக,

(10-ம் பக்கம் பார்க்க)

இந்திய அரசியலமைப்பைப்பற்றி, உலக நாடுகளின் அரசியலமைப்பு அறிஞரும், இலங்கை பல்கலைக் கழகத்துணைவேந்தருமான ஐவர் ஜென்னிங்ஸ் வெளியிட்டிருக்கும் கருத்துக்களில் சில:—

"இந்திய அரசியலமைப்பில், வடக்கேயுள்ள இந்துக்கள்வசமே அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது."

"சிறுபான்மையோரின் கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன."

"வகுப்புகளின் கோரிக்கைகளை இவ்விதம் கவனிக்க மறுத்ததால் தான் பாகிஸ்தான் ஒரு தனி ராஜ்யமாக ஏற்பட நேர்ந்தது என்பதை சரித்திரம் சொல்லும்."

"மாகாண சர்க்கார்களின்மீது அளவுக்கு மேற்பட்ட அதிகாரம் செலுத்துவதாக இந்திய அரசியலமைப்பின் பிரிவுகள் இருக்கின்றன."

"256, 257 ஷரத்துகளின்படி அரசியல் விவகாரங்களில் யூனியன் சர்க்கார் தலையிடலாம்."

## சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளை கவனத்தில் கொள்ளக் கோருகிருேம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவருது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
3. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள். இல்லையெனில் குறிப்பிட்ட தேதியோடு பத்திரிகை நிறுத்திவிடப்படும்.

மேனேஜர்.

திராவிடநாடு

காஞ்சி] 16—3—52 [ஞாயிறு

# டில்லி
## பலமான
# ஏகாதிபத்யம்

☆

"ஏதோ, சொல்கிறார்கள்!"

"வேண்டுமென்றே கூறுகிறார்கள்"

"வேறு வேலை ஏது — வடக்கு தெற்கு என்று பேசுவதைத் தவிர?"

"துடுக்குத்தனம் – துள்ளுகிறார்கள்!"

*   *   *

வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது!! — என்று, காரணங்களோடு நாம் காட்டினாலும், ஏற்பதில்லை—இங்குள்ள தேசிய நண்பர்கள். உருட்டும் விழிகளையும், மிரட்டும் குரலையும், கேலியையும் கிண்டலையும் வீசத் தவறுவதுமில்லை. அவர்கள் சிந்தனைக்கு ஒரு சிறு குறிப்பு:—

இந்திய அரசியலமைப்புப்படி அதிகாரங்கள் வடக்கே உள்ள இந்துக்கள்வசமே ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

(A Constitution which vests control in the Hindus of the North)

*   *   *

சென்னை பல்கலைக் கழக மண்டபத்திலே, கற்றோரும் கற்போரும் கூடியிருக்க, அவர்கள் மத்தியிலே ஒருவர் வெளியிட்டது; இது. ஒருவர் என்றால், இங்கேயே இருந்து, இந்து நடைபெறும் அரசியல் காரியங்களை, அடிக்கடி கவனித்துக் கொண்டிருப்பவரல்ல. வெளிநாட்டார்! இலங்கைத் தீவைச் சேர்ந்தவர். தி. மு. க. பிரச்சாரத்துக்காக அழைத்துவரப்பட்டவரல்ல—அல்லாடி அய்யரின் சஷ்டியப்தபூர்த்தி தர்ம ஸ்தாபன நிதியை யொட்டி 'பிரசங்கம்' செய்ய தருவிக்கப்பட்டவர், ஐவார் ஜென்னிங்ஸ். இலங்கைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்—அரசியலமைப்புச் சட்டங்களிலே 'தீர்ப்பு' வழங்குமளவு தெளிவும் அறிவும் பெற்றவராம் — இந்து' தெரிவிக்கிறது!— அவர் கூறியிருக்கிறார், கடந்த 4, 5 6 தேதிகளில் 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சில அம்சங்கள்' என்ற தலைப்பில் பேசும்போது.

அந்நியர், அவர்—அரசியல் சட்டங்களிலே தெளிந்த ஞானமும், விரிந்த அறிவும் பெற்றவர்—அவர் சொல்கிறார்—வடக்கே உள்ள இந்துக்கள்வசம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன – எவ்விதம்? இந்திய அரசியலமைப்புமூலம்!

*   *   *

சுயராஜ்யம் மலர்ந்து; அதிகார மாற்றம் டில்லி மூலவர்கள் கைக்கு வந்து, புது இந்திய அரசியலமைப்பு தயார் செய்யப்பட்டு, அது அமுல் நடத்தப்பட்டுவரும் இந்த நேரம் வரை—நாம் இந்த உண்மையை எத்தனையோ முறை, எடுத்துக்காட்டி வந்துள்ளோம்.

டில்லி ஏகாதிபத்தியமாகிறது—அதற்கான வகைகளில் தனக்கான அதிகாரங்களைக் குவித்துக்கொள்கிறது—என்று நாம் தெரிவித்தபோதெல்லாம், சீறினர், பாய்ந்தனர்—பிரிவினை பேசும் பித்தர்கள் என்றனர்—தூற்றுவதே இவர்தம் வேலை என்றனர். இப்போது ஜென்னிங்ஸ் சொல்கிறார்--அரசியலமைப்புகளில் சிறந்த ஞானமும், தெளிந்த அறிவும் உடையவராம்—சென்னை நீதிபதி ராஜமன்னார் பாராட்டுகிறார், அவரை—அவர் கூறுகிறார்,

சிறுபான்மையோரின் கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன—புது அரசியல்மூலம்.

எல்லோருக்கும் பாதுகாப்பு தரப்பட்டிருப்பதாக, மார்தட்டி கர்ஜனை எழுப்பிய காங்கிரஸ் தோழர்களே—கவனியுங்கள், ஜென்னிங்ஸ் தரும் விளக்கத்தை:

"மதத்தின் மூலமாகவும் இனவாரியாகவும், இங்கே இருக்கிற பாகுபாடுகளையும், பிரிவுகளையும் வெளியார் கண்களுக்கு படாமல் மறைக்க வேண்டுமென்பதில், (Congross Pol ticians) காங்கிரஸ் தலைவர்கள் அக்கரை காட்டி வந்ததால், சிறுபான்மை மக்களின் முக்கியத்துவத்தையும், நலன்களையும், கருத்துக்களையும் வேண்டிய அளவு கவனிக்கவில்லை — குறைத்தே காண்பிக்க விரும்பினர். வகுப்புகளின் கோரிக்கைகளை, இவ்விதம் கவனிக்க மறுத்ததால்தான், பாகிஸ்தான் ஒரு தனி ராஜ்யமாக ஏற்பட நேர்ந்தது என்பதை சரித்திரம் சொல்லும்.

ஆகவே, இந்திய அரசியலமைப்பில், அவர்களுக்கான பாதுகாப்பு அளிக்கப்படாததால் ஏற்படும் விளைவுகளை நம்மால் கூறமுடியாது—பெரும்பான்மையோர் எப்படி தங்கள் ஆதிக்கத்தை சிறுபான்மையோர்மீது செலுத்துகிறார்கள் என்பதில்தான் இருக்கிறது.

பலதரப்பட்ட மாற்று உள்ளம் கொண்ட மக்களைக் கொண்டநாடு, முள்ளின்மேல் இருப்பது போன்றதாகும்"

சிறுபான்மை மக்களின் கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லை — வகுப்புவாரியாக வாழும் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படவில்லை— புது இந்திய அரசியலமைப்பில். விளக்குவது, நாமல்ல; ஜென்னிங்ஸ்!

ஏன், கவனிக்கவில்லை, யென்பதைப் பற்றியும் அவர் விளக்கம் தந்திருக்கிறார் — "காங்கிரஸ் தலைவர்கள், பலதரப்பட்ட மக்கள் இங்கே வாழ்கிறார்கள் என்று வெளியாருக்குக் காட்டவே விரும்பியதில்லை." இந்த விருப்பம் ஏன் ஏற்படவில்லை? — இந்தக் கேள்வியில் இந்தியத் தலைவர்களின் எண்ணம் பதிந்து கிடக்கிறது.

பல இனத்தவரும் மதஸ்தரும் வாழும் பூமியாக இதைச் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை! — அதாவது இந்தியாவை ஒரே நாடு—இங்கு வாழ்வோரெல்லாம் ஒரே மக்கள்—இந்தப் போலியை விரும்பினர்!

இந்த உண்மையைச் சுட்டிக்காட்டும்போது, எரிந்து விழுவீர்களே நண்பர்களே, என்ன சொல்கிறீர்கள் இப்போது? ஜென்னிங்ஸ் கூறுகிறார் —ஏராளமான நூல்களை அரசியல் உலகுக்குத் தந்தவராம் — நீதிபதி ராஜமன்னார் புகழ்கிறார்; அவர் கூறுகிறார்!

*   *   *



வடநாட்டு இந்துக்கள் அதிபதிகளானார்கள்

பல இன—வகுப்புகளின் நலன்கள் காக்கப்படவில்லை.

இந்த, உண்மைகளை, இந்திய அரசியல் சட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும், அலசிக் காட்டி, விளக்கங்களோடு, வெளியிட்டிருக்கும், பல்கலைக் கழகத் துணைவேந்தர்—இன்னும் பல கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்—டில்லி வகுத்த இந்திய அரசியலமைப்பு முறை பற்றி. ஜென்னிங்ஸ், இங்கேவந்து சென்ற நிகோலாஸ் அல்ல; 'இந்து' அவரைப்பற்றி, குறிப்பெழுதுகிறது, சிறந்த அறிஞர் என்று. மயிலை வாசிகள் அவரது பேருரையைக் கேட்க மகிழ்ந்தே அழைத்திருக்கிறார்கள் — 'இவரது கருத்துக்களைக் கேட்கும் பெரியதோர் சந்தர்ப்பத்தை அமைத்துத்தந்த சென்னை பல்கலைக் கழகத்தாரைப் பாராட்டுகிறேன்' என்று பெருமிதத்தோடு சொல்லுகிறார் நீதிபதி ராஜமன்னார். அத்தகைய புகழ்மாலைகள், அந்த வட்டாரத்தால் சூட்டப்படும் ஜென்னிங்ஸ்பேசியிருக்கிறார் எனின் அந்தக் கருத்துக்களைச் சாதாரணமானதென்று கூறமுடியும்? நாம்—தெரிவித்தால், 'தெரியாதது கள்—வகுப்புவாதிகள் — துவேஷிகள்—விதண்டாவாதம் செய்பவர்கள், இப்போது பேசுவது, ஜென்னிங்ஸ்! கேளுங்கள், அவர் பேசிய சில வார்த்தைகளை!!

"முடியாட்சி முறையின் அடிப்படையிலேயே இந்திய அரசியலமைப்பு அமைந்திருக்கிறது. சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்ட அரசனைப்போல ஜனாதிபதி இருக்கிறார்"

"அடிப்படைச் சுதந்திரங்கள், அடிப்படை உரிமைகளாக மாற்றப்படவில்லை"

"முக்கியத்துவம் தரப்படவேண்டிய, வகுப்புப்பிரச்சினைகள் போன்றவைகள், இந்திய அரசியலமைப்பில் இடம்பெறவில்லை. ஆனால் சட்டமூலம் செய்யவேண்டியதான மொழிப் பிரச்னை அரசியலமைப்பிலே ஏற்றப்பட்டிருக்கிறது"

*   *   *

முக்கியமானவைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன, ஆனால் சாதாரணமானவைகள் முக்கியமாகக் கருதப்பட்டிருக்கின்றன--ஜென்னிங்ஸ் இதற்கு ஆதாரமாக 'மொழிப் பிரச்னையை'க் காட்டுகிறார். மொழிப் பிரச்சினை எது? இந்தி மொழி அரசியல் மொழியாக ஆக்கப்படவேண்டும் என்று ஆக்கப்பட்டிருக்கிறதே— அதுதான்! அதைத்தான் குறிப்பிடுகிறார்!!

'ஏன், இந்திக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்—மொழி ஏகாதிபத்தியத்தைப் புகுத்துகிறீர்களே!' என்று, நாம் கேட்டோம். தடிகளையும் துப்பாக்கிகளையும் பரிசாகப் பெற்றோம்—ஏளனங்கள் வீசப்பட்டன, காங்கிரஸ் நண்பர்களால். இப்போது, அந்நியர் ஒருவர் சொல்கிறார்—அரசியலமைப்பைப்பற்றிய உண்மைகளை 'அலசுபவர்' சொல்கிறார்!!

*   *   *

ஜென்னிங்ஸ், மாகாணங்களுக்கும் மத்தியசர்க்காருக்குமிடையே, புது இந்திய அரசியலமைப்பு மூலம் ஏற்பட்டிருக்கும் நிலை பற்றிக் குறிப்பிட்டிருப்பதை, இங்குள்ளோர், கவனத்துக்கு வைக்க விரும்புகிறோம் — நாம் கூறினால்தான், 'நாட்டுத் துரோகி' என்பரே! விதண்டாவாதிகள் என்று வெறுப்பரே!

"மாகாணங்கள், சாதாரணமாக ஒரு காரியத்தையும் செய்ய முடியாது லெஜிஸ்லேடிவ் கவுன்சில் அவசியமில்லையென ஒரு மாகாணம் விரும்புகிறது என்று வைத்துக் கொள்வோம். அது உடனே, தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாது. யூனியன் பார்லிமெண்டுதான் செய்யலாமென (இ. அ. ச. 169 பிரிவு) இருக்கிறது"

"இதைப்போல எவ்வித மாற்றங்களும் அரசியலமைப்பைத் திருத்தித்தான், மாகாணங்கள் பெறமுடியும்"

"மாகாண சர்க்கார்களின் மீது அளவுக்கு மேற்பட்ட அதிகாரம் செலுத்துவதாக இந்திய அரசியலமைப்பின் பிரிவுகள் இருக்கின்றன."

"எல்லா மாகாண அமைப்புகளும், தங்களுடைய காரியங்களை கவனிக்குமளவுக்கு பலவீனமாயிருக்குமென ஏன், சந்தேகிக்க வேண்டும்?"

கேட்கிறார், அவர். மாணவர்களும், சட்ட வல்லுநரும், பிரமுகர் பலரும் கூடியிருந்தமண்டபத்திலே இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். சாதாரணமாகவல்ல வெளிநாடுகளின் அரசியலமைப்புகளைக் காட்டிக் கேட்டிருக்கிறார்!

"மத்தியசர்க்காருக்கு அதிகாரங்கள் இருக்கவேண்டாமோ; இருந்தால்தானே, அது, பலம்வாய்ந்ததாக இருக்கமுடியும்?" என்று டில்லியை ஆதரித்துப் பேசுவீர்களே, நண்பர்களே, அதற்கும் அவரது, விரிவுரையிலே விளக்கம் இருக்கிறது.

இந்தியாவைப் போல, அமெரிக்க ஐக்கியக் குடியரசுக்குள்ளும் பற்பல ராஜ்யங்கள் இருக்கின்றன—ஆஸ்திரேலியாவிலும் உள்ளன. ஆனால் அங்கே, உள்ள அரசியலமைப்பு, ராஜ்யங்களைவைத்து அமைக்கப்பட்டதாகும். ஆனால் இங்கே! மத்தியசர்க்காரைவைத்துமாகாணங்களின் 'தலைவிதி' நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது!

"கூட்டாட்சி பார்லிமெண்டுக்கெனச் சில முக்கிய அதிகாரங்களும், மிச்ச அதிகாரங்கள் மாகாணங்களுக்கும் இருப்பதுதான், அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் நடைமுறையிலிருப்பதாகும்."

இங்கே—இதுவா, இருக்கிறது? இல்லையென்றால் — ஏன், மாகாணங்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை? என்ன காரணம் இதற்கு?—சொல்லுவீர்களா! தென்படுகிறதா!!

*   *   *

மாகாணங்களுக்குள்ள அதிகாரங்களை டில்லி, 'எடுத்துக்கொண்டது மட்டுமல்ல, தன் இஷ்டத்துக்கு மாறாக, எப்போதும் மீறிச் செல்ல முடியாதவாறும், தக்க சட்டங்களை ஆக்கி வைத்திருக்கிறது — இதை

---

### பிறப்பு

நடிகத் தோழர் எஸ். எஸ். சிவசூரியன் 3—3—52 அன்று ஆண் மகவொன்றுக்குத் தந்தையானார் என்கிற செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறோம்.

நாம் சொன்னோம் முன்பு! இப்போது—போற்றப்படுகிற அரசியல் அறிஞர் சொல்லுகிறார்!!

"நிரந்தரமான இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மாகாணங்களுக்கென அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைத் தவிர, வேறெதுவும், மாகாணங்களால் செய்யமுடியாது. அப்படி மாகாணங்கள் விரும்பினாலும், திருத்தப்பட முடியாதபடி, அவ்வளவு கஷ்டசாத்தியமாக்கப்பட்டிருக்கிறது".

ஏன், இது! சிந்தித்தீர்களா? அதிகாரம் கொடுக்கப்படவில்லை — கொடுத்த அதிகாரத்துக்கு மேலாக இன்னும் அதிகாரம் பெற வழி செய்தும் தரப்படவில்லை மாறாக, வழி கஷ்ட சாத்யமாக்கப்பட்டிருக்கிறது!

திருத்த வேண்டுமென பார்லிமெண்டுக்குச் சென்றாலும், எளிதல்ல; வேறு முறையில் அதிகாரத்தைப் பெற முயன்றாலும் முடியாது — ஆமாம்! மாகாணங்கள், எவ்வளவு முயன்றாலும், சர்க்காரை ஏற்று நடத்துவோர், ஆசைப்பட்டாலும், அது மத்ய சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டு, மத்ய பீடம் இசைந்தால்தான் முடியும்—பார்த்தோமே, இதை கம்யூனல் ஜி. ஓ. விஷயத்தில்!

இந்தத் தடைகளைப் பற்றி, ஜென்னிங்ஸ், விளக்கமாகக் குறிப்பிடுகிறார்.

"248 ஷரத்துப்படி மாகாணங்கள் மத்தியபார்லிமெண்டுக்கு, எதிராக எதுவும் செய்ய முடியாது. மாகாணம் ஒரு சட்டம் செய்தால், அது பார்லிமெண்டுக்கு அடங்கியதாகவே இருக்கவேண்டும்"

இத்தகைய, கட்டுப்பாடுகளோடு, இந்திய அரசியலமைப்பைச் செய்திருக்கிறார்கள்—டில்லி மூலவர்கள். ஏன் இவ்வளவு சட்ட திட்டங்கள்! எதற்காக இத்தனை அம்சங்கள்!!

"மாகாணங்கள் அடிமைப்படுத்தப் பட்டிருப்பதைக் காட்டும் அநேக அம்சங்கள் இருக்கின்றன. எல்லா வகையிலும் யூனியன் சர்க்காரின் அதிகாரமே செல்லுபடியாகும்"

* * *

மாகாணங்களின் 'சுதந்திரம்' விலங்கிடப்பட்டிருக்கிறது—இந்திய அரசியலமைப்பால். இஷ்டப்போல உலவ முடியாதபடி கட்டுகள்! கண்ணுக்கு—காலுக்கு—கைகளுக்கு—வாய்க்கு—காதுகளுக்கு!!

இவ்வளவு, அதிகாரங்களை,சுரண்டிக்கொண்டதுமட்டுமல்ல.

"256, 257 ஷரத்துக்கள் படி, அரசியல் விவகாரங்களில் யூனியன் சர்க்கார் தலையிடலாம்."

இந்த அம்சத்தை, ஜென்னிங்ஸ் சுட்டிக்காட்டி, ஒரு சந்தேகத்தை எழுப்புகிறார்! அந்தச் சந்தேகம், இன்று நம்மிடையிலே பலருக்கேற்பட்டிருப்பதுதான்—அதை அவரே கூறுகிறார்:

"மாகாணத்தில் காங்கிரசல்லாத சர்க்காரும், மத்திய சர்க்காரில் காங்கிரஸ் காரருடைய சர்க்காரும் இருக்கவேண்டிய நிலை வந்துவிடுவதாக வைத்துக் கொள்வோம், அப்போது, இரண்டுக்கும் தகராறு ஏற்படாமலா போகும்?"

'ஆமாம்! ஏற்படலாம்' என்பீர்கள். அப்போது, டில்லி, என்ன நடவடிக்கையெடுக்கும் என்பதை நாமும் அறிவோம்—எனினும், அவர் என்னகூறுகிறார், கேளுங்கள்

"அப்போது, தன் கட்டளையை மதிக்காதமாகாணத்தின்மீது,மத்திய சர்க்கார், தன் அதிகாரத்தைப் பிரயோகிக்கத்தான் செய்யும். சட்டத்தை மதிக்கவில்லையென்று,மாகாணத்தின்மீது, மத்திய சர்க்கார் (Contempt of Court)வழக்காதொடரும்? கவர்னரைக்கொண்டு, மந்திரிகளை, விலக்கும்படிதான் செய்யும்."

இவ்வளவு முன்ஜாக்கிரதையோடு மாகாணங்களின் உரிமைகளை,டில்லி மூலவர்கள் பறிக்கவேண்டிய காரணம் என்ன? ஆஸ்திரேலியாவில் இல்லாதது, கானடா நாட்டின் அரசியலமைப்பிலே காணமுடியாத அளவு, அமெரிக்காநாட்டிலே நடைமுறையிலே இல்லாத அளவு, இவ்வளவு வலிவுள்ளதாக ஏன் டில்லி பீடம் இருக்கவேண்டும்! நம்மிடத்திலேயிருந்து, வரிகளை வாங்கிச் செல்லும், டில்லி-'நேரடியாகவோ, மறைமுகமாகவோ வரி விதிக்கும் அதிகாரங்கள் மத்தியசர்க்காருக்கும் உண்டு' எனசட்டத்தைப் பெற்றிருக்கும் டில்லி, ஏன் இவ்வளவு அதிகாரங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கிறது! என்ன காரணம்?

* * *

டில்லி ஒரு ஏகாதிபத்தியமாகிறது!—என்ற நமது குற்றச்சாட்டை அலட்சியமாகக் கருதுவோரைப் பார்த்துக் கேட்கிறோம் — சிந்தித்துப்பாருங்கள், இப்போதாவது.

டில்லி முக்கியமானபிரச்சினைகளை ஒதுக்கியது—

தனதுமொழிப்பிரச்சினையைசட்டமாக்கிக்கொண்டது—

மாகாணங்களின் உரிமைகளை பறித்துக்கொண்டது—

மீறி நடக்காமல், சட்டவேலியை அமைத்துக்கொண்டது—

இஷ்டம்போல் உத்திரவு பிறப்பிக்கலாம்—

கீழ்ப்படியாவிடில் மாகாண சர்க்காரை நீக்கலாம்—

இந்த நிலையில் இருக்கிறோம் நாம்—அல்ல! அல்ல!!—இருக்கும்படிச்செய்யப்பட்டிருக்கிறோம், டில்லி மூலவராலும், அவருக்கு ஒத்துழைக்கும் அல்லாடி போன்ற சட்ட நிபுணர்களாலும். ஏன், இவ்வளவு ஆசையிருக்கவேண்டும்—டில்லியினருக்கு! என்ன காரணம் இத்தகைய சட்ட அமைப்பை ஆக்கிக் கொண்டதற்கு! சிந்தியுங்கள்—தென்படும், எவ்வளவு பயங்கரமாக உயர்ந்திருக்கிறது டில்லி என்று. இப்போதுசொல்லுங்கள்—டில்லி எது! எத்தகைய டில்லி ஏற்பட்டிருக்கிறது!!

## "ஞாயிறு"

தஞ்சை — காந்தையிலிருந்து வெளிவரும் 'ஞாயிறு' இதழ் சொந்தத்தில் அமைக்கப்பட்டுள்ள அச்சகத்திலிருந்து 15—3—52 முதல் வெளிவரும் என்பதை தோழர் ஏ. கே. வேலன் தெரிவித்துக் கொள்கிறார்.



## அறிவிப்பு

பலமுறை, எச்சரிக்கை விடுத்தும், சி. என். ஏ வின் எழுத்துக்களையும், பேச்சுக்களையும், தவறான முறையில், நூல் வடிவங்களாக்கி விற்பனைசெய்யும் பழக்கம் தொடர்வதாக அறிகிறோம்.

இவ்வித முறையால், பலர் தமது விருப்பம் போலெல்லாம் கருத்துக்களைக் கூட்டியும், குறைத்தும் நூல்களாக்கி விடுகின்றனர் — இதனால் மிக மிக மனச் சங்கடத்தை உண்டாக்கி விடுகின்றனர். மக்கள் மத்தியில் பரவும் நூல்களைக் கவனித்து வெளியிட வேண்டுமென்னும் கவலையும் சிரத்தையுமில்லாது, புத்தகங்களை வெளியிடும் பழக்கம் மிகவும் தீமை பயப்பதாகும்.

எனவே, பலமுறை அறிவித்தும், இந்தப் பழக்கத்தை விடாமல், தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் சிலர் மீது, வழக்கறிஞர்கள் மூலம், நடவடிக்கைகள் எடுப்பதென்கிற முடிவுக்கு வந்துள்ளோம்.

'திராவிட நாடு' இதழில் அறிவிக்கப் படாத எந்த நூலும், சி. என். ஏ விடம் காட்டியோ, இசைவுடனோ வெளியிடப்படாத நூல்களென்பதை தோழர்கள் தெரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

நமது பார்வைக்கு அனுப்பப்பட்டோ, அனுமதி பெற்றோ, பிரசுரிக்கப்படாமல், சி. என். ஏ வின் பெயரோடு வெளியிடப்படும் நூல்கள் பற்றி, கண்டிப்பாக, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நிர்வாகி,
"திராவிட நாடு"

## பம்பாயில்!

மார்ச்சு 15, 16 தேதிகளில் நடைபெற விருக்கும் பம்பாய் தி. மு. க. ஆண்டுவிழாவில் தோழர் இரா நெடுஞ்செழியன் M. A., சத்திய வாணிமுத்து அம்மையார் ஆகியோர் கலந்துகொள்வர்.

## உணரவேண்டும்

☆

சென்னை கவர்னர் பதவியேற்ற அன்று, சர்க்கார் விருந்து மண்டபத்துக்கெதிரில், திராவிடகழக நண்பர்கள் பலர் கருப்புக்கொடி காட்டி திராவிடத்தின் அதிருப்தியைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கருப்புக்கொடி பிடித்து, தமது அதிருப்தியைக் காட்டிக்கொள்வது, குற்றமானதல்ல — மக்களுக்குள்ள உரிமைகளில் ஒன்றாகும் என்பதை நாம் பல முறை எடுத்துக் காட்டி வந்துள்ளோம்.

விரும்பத்தகாத நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ளுகிறதென்றாலும், மக்களுக்கு நன்மையேற்படாத சட்டங்கள் பிறப்பிக்கப்படுகிறதென்றாலும், அதை எதிர்த்து தமது அதிருப்தியைக் காட்டிக் கொள்ளும் உரிமை வெளிநாடுகளில் இருக்கிறது.

மக்கள், ஆர்ப்பாட்டம் செய்வதா, என வெகுண்டு, அதிருப்தி கொண்டோர்மீது தடியையும் குதிரைப் பட்டாளத்தையும் ஏவிவிடும் துணிவும், முறையும் ஆங்காங்கே கையாளப்படுவதில்லை.

கவர்னர் பதவியேற்ற அன்றைய தினம், மவுண்ட்ரோட்டில் கருப்புக் கொடி பிடித்த தோழர்கள்மீது, காங்கிரசாட்சி வழக்கம்போல, தடிகளை வீசி, அவர்களைத் தள்ளிக் கொண்டுபோய் காவலில் வைத்து, பிறகு விடுதலை செய்திருக்கின்றனர். தாய்மார் பலரும் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

இங்கே, தமது கொடுமை ஆட்டங்களை காங்கிரசார் நடத்திக்காட்டிய, அதே தினம் லண்டனில் ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது—சர்ச்சில் சர்க்காரை எதிர்த்து. பிரிட்டிஷ் சர்க்காரின் பட்ஜட் திட்டத்தின்மூலம், ஏழைகளுக்கு நன்மைகள் இல்லையென்பதற்காக, மக்கள், பார்லிமெண்டுமுன் கூடி, ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

'பட்ஜட்'டிற்காக, ஆர்ப்பாட்டம்! ஆனால், தமது அதிருப்தியைவெளியிட்ட, பிரிட்டிஷ் மக்கள்மீது, தடியும் குதிரைப்பட்டாளமும் அங்கே ஏவிவிடப்படவில்லை. தமது எண்ணத்தைத் தெரிவிக்கும் உரிமை, அங்கு, அவ்விதம்! ஆனால் இங்கோ!

தடியடி — காவல் — கொடுமை, இத்தனையும் வழங்கப்படுகிறது. அன்றையதினம் தோழர்கள் எம். கே. தங்கவேலர், ஆற்காடு இளங்குப்பன், ஜே. சாரோன், சந்திரன், பி. வேலாயுதம், சம்பந்தம், எம். மொய்தீன் ஏ. ஜே. பால், இ. ஆறுமுகம், பி.இ. பக்தவத்சலம்,லட்சுமி அம்மை, பாப்பம்மாள், நாகரத்தினம் அம்மை, சுப்பையா,முனுசாமி, அண்ணாமலை, பாலசுந்தரம், டி.என். காளியப்பன், கேசவன், எம். கே. டி. சுப்பிரமணியம், லோகநாதன், சண்முகம், முனுசாமி, புதுமைப்பித்தன், ரமணி, மணி, வேலுசாமி, பன்னீர்செல்வம், வீராசாமி, சுப்பிரமணியம், நடராசன், ஏழுமலை, ஜோதிலிங்கம், சுவாமிநாதன் முதலிய தோழர்களை, கவர்னர் செல்லும்வரையில், காவலில் பிடித்து வைத்திருக்கிறார்கள். இவர்களிலே பலர், வெளியூரைச் சேர்ந்தவர்கள்—வேடிக்கைப் பார்க்கவந்த மக்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இங்கே, உரிமைக்கு இவ்வளவு மதிப்பு தரப்படுகிறது — சர்க்காரால். தோழர்கள் ஏந்தும், தடியடிகள், இலட்சியமுழக்கத்தை இன்னும் ஓங்கச் செய்யுமேயொழிய — அடக்கிவிடாது. இதை உணரவேண்டும் அடக்குமுறை ஆட்சி.

## பாராட்டு விழா

**16—3—52**

ஞாயிறு மாலை 6-மணிக்கு

**காஞ்சியில்**

இரட்டைமண்டபத்தருகில்

தி. மு. கழக ஆதரவு பெற்று
வெற்றி பெற்ற

எம். எல். ஏ., எம். பி.க்களுக்கு
பாராட்டு விழா நடைபெறும்.

சி. வி. எம். அண்ணாமலை வரவேற்புரை வழங்குவார்.

க. அன்பழகன் எம். ஏ., கே. ஏ. மதியழகன் பி. ஏ., பாராட்டுரை வழங்குவர்.

நகர தி. மு. க. காஞ்சி.

5-ம் பக்கத் தொடர்ச்சி

கொரியப் போர் — விரியவில்லை; கொடுமை அதிகமாகவில்லை. 'பெரிய உலக யுத்தமாக மாறும்' என கனவு கொண்டோரின் ஆசையில் மண் விழுந்தது. மேற்கத்திய முதலாளித்துவம், இந்த ஏமாற்றத்தைக் கண்டதும், பொருள்களைக் குவிக்கும் ஆசையைக் கைவிட்டது. ஆங்காங்கே, விலைவாசிகள் இறங்கலாயின! இதனால், இந்தியாவிலிருந்து, பொருள்களை வாங்கும் ஆர்வம், குறைந்தது—இதே நேரத்தில், இந்திய சர்க்கார் ஏற்றுமதித் தீர்வையை அதிகமாக்கவே — இந்திய 'சூதாடிகள்' கலங்கினர்! பொருள்களைச் சேமிப்பது பயன் தராது என்று கண்டனர்!!

விலை வாசிகள், இறங்கத் துவங்கியிருக்கிறது..

* * *

இந்த விலை இறக்கத்தைக் கண்ட மக்கள் குதூகலிக்கும் இதே நேரத்தில், வியாபாரச் சூதாடிகளோ, 'பாங்கி வட்டியைக் குறைக்க வேண்டும்' 'ஏற்றுமதி வரியைக் குறைக்க வேண்டும்' என, மகஜர் மேல் மகஜர் அனுப்பிக் கொண்டுள்ளனர். இந்த கோரிக்கைகளுக்கு இந்திய சர்க்கார் இணங்காமலிருக்க வேண்டும். அப்போதுதான், பண முதலைகளின், கொள்ளை லாபச் சதி, ஓரளவுக்காவது அடங்கும்!

விலைவாசிகள் குறைவதைக் கண்ட, கொள்ளை இலாபக்காரர்கள் இப்போது கூக்குரலெழுப்பத் துவங்கியிருக்கிறார்கள். குமாரராஜா அறிவுரை தருகிறார்—அவரது தம்பி சிதம்பரம் செட்டியார் 'குறையுங்கள் ஏற்றுமதி வரியை' என்றார்—கோதாரி தெண்டனிடுகிறார். இத்தகையோரின், கோரிக்கைகளுக்கு சர்க்கார் சம்மதிக்கக் கூடாது.

விலைவாசிகள் இறக்கம், நிரந்தரமானதாகயிருக்கச் செய்யவேண்டும். இப்போது இயங்கும் விலை, இப்படியே இருக்குமா... சில மாதங்களில் தீர்ந்து விடுமா என்று சிலர் கேட்கலாம்.

அகில உலகத்தையும் வைத்துப் பார்க்கும் பொழுது, விலைவாசிகள் மறுபடியும் ஏறுவதற்கு, சந்தர்ப்பமிருப்பதாகத் தென்படவில்லை. இந்த நிலை, நீடிக்கவேண்டும்—அப்போதுதான் கடந்த பல்லாண்டுகளாக கஷ்டப்பட்டுக் கிடக்கும் மத்திய தர—ஏழை—மக்கள் வாழ்வில, சிறிதாவது, நலம் ஏற்பட முடியும்.

இந்த நிலை சமுகமாக வேண்டுமானால், மக்களுக்குத் தேவையான உற்பத்திப் பொருள்கள், கிடைக்கச் செய்யவேண்டும்—அதேபோல, கிடைக்கும் பொருள்களை வாங்கும் சக்தியும் பொது மக்களுக்கேற்பட வேண்டும்.

பண வீக்கத்தைக் குறைக்க, மத்திய தர மக்களிடமிருக்கும் 'வாங்கும் சக்தி' பறிமுதல் செய்யப் படுவதால், பயன் ஏற்பட முடியாது—இதை இந்திய நிதி இலாக்காவினர் உணரவேண்டும்.

பண மூட்டைகளுக்கு பணிந்து விடாமல், உற்பத்திப் பெருக்கத்துக்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் வாழ்க்கைக்குப் போராடும் ஏழை உலகின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும்.

இந்த, அடிப்படை வேலைகள் செய்யப்படாவிடில்—விலை இறங்குவதும் பொருள்கள் குவிந்ததும் ஒரு 'மாயை'யாகத்தான் ஆகும்.

★

## நாகாஸ்தான்

நாகர்கள் (வடகிழக்கு எல்லைப்புற மலைவாசிகள்) தலைவர், பண்டித நேருவைக் கண்டு, தமது 'நாகாஸ்தான்' கோரிக்கையைச் சொன்னார். நேரு மறுத்து விட்டார். 'தனி ராஜ்யமாக நாகர்கள் இருப்பது சாத்தியமில்லை' என்றாராம், நேரு. தொடர்ந்து, தாங்கள் போராடப் போவதாக நாகர் தலைவர் பிஜோ, அறிவித்துள்ளார். காந்திய முறையில் போராடப் போவதாகவும், ஆனால் குண்டுகள் வீசப்பட்டால் அதைத் தாங்கவும் தயங்கமாட்டோமெனவும், அவர் எச்சரித்துள்ளார். நாகர்கள் தொகை இரண்டு லட்சமாகும். 'தனி சுதந்திரநாடே' இவர்தம் கோரிக்கை.

## தண்டனையும் பாராட்டும்

சித்தையன் கோட்டையில், 144 தடையுத்தரவை மீறிய குற்றத்திற்காக, தோழர்-காஞ்சி. கல்யாணசுந்தரம் அவர்கள் 9—3—52ல் உத்திரமேரூர் கூட்டத்தின் பொழுது கைது செய்யப் பட்டு, 10—3—52 மாலை 4—மணிக்கு திண்டுக்கல் சப் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஒரு வாரசிறை தண்டனை ஏற்றார். உடனே மதுரை ஜெயிலுக்குக் கொண்டு போகப்பட்டார்.

காங்கிரஸ் பாசிசம் ஆடிய வெறிக் கூத்தின் ஒரு அங்கம்தான் சித்தையன் கோட்டை நிகழ்ச்சி. போகும் காலத்திலும்பொல்லாங்குபோகாது என்று தோழரைக் கைது செய்து, சிறை தண்டனை தந்துள்ளது. அடக்கு முறையினால் கிடைக்கும் லாபத்தை முழுக்க முழுக்க பெற்றும் காங்கிரஸ் சர்க்கார் கடைசி நேரத்திலும் தன் 'கைவரிசை'யைக் காட்டியிருக்கிறது. பாவம், அதனால் அந்தியகால திருப்தி ஏற்படுமானால், ஏற்படட்டும் அதற்கு!

சிறை தண்டனை முடிந்து 16, 17, 18 ஆகிய நாட்களில் முறையே மதுரை, திண்டுக்கல், சித்தையன் கோட்டை ஆகிய இடங்களில் பாராட்டுக் கூட்டங்கள் நடைபெறவும் ஏற்பாடாகியுள்ளன.

---

### உறுப்பினராகுங்கள்

தி. மு. க. மக்கள் மன்றம். அதன் வளர்ச்சியே, புது வாழ்வுக்கு அடிகோலும். உறுப்பினர்கள் எண்ணிக்கையே ஸ்தாபனத்தின் முக்கியம்.

இந்த மாதத்தின் வேலைத்திட்டம் இதுதான்.

உறுப்பினராகுங்கள்! உறுப்பினராகச் சேருங்கள்!!

---



44280

2-ம் பக்கத் தொடர்ச்சி

திருக்கிறேன்—பிரம்மஞான சங்கக் கூட்டங்களில் கலந்துகொள்ளவும், யாத்திரையாகவும் வந்திருக்கிறேன் என்று கூறுகிறார் எனவே ஆச்சாரியாரின் அழைப்பு, இந்த கவர்னர் வேலைக்கு முன்னறிவிப்பு! சந்தேகமில்லாமல!!

இதுமட்டுமா! ஒருநாள் கோபால்சாமி ஐயங்கார், பிரகாசாவைப் பார்த்து, என்னுடன் உள்ள மந்திரிகளில் ஒருவரைச் சென்னைக்குக் கவர்னராகப் போகிறேன் என்று கூறினாராம்—பொருளற்ற பேச்சா!

இதுமட்டுமல்லாமல், தேர்தல் முடிவுகள் வெளியானபிறகு, அவைகளைப் பரிசிலனை செய்தபடி பேசிக் கொண்டிருந்தபோது, டி.டி. கிருஷ்ணமாச்சாரியார், நீங்கள்சென்னைக்கு வந்தால் நல்லது, என்றாராம்.

இவ்வளவும், அந்த விருந்துக் கூட்டத்திலேயே, கவர்னர் பிரகாசா கூறியிருக்கிறார்.

ஆகவே ஆச்சாரியாரின் வளமான மனதிலே உதித்து, கோபால்சாமி ஐயங்காரால் சீராட்டப்பட்டு, டி.டி. கிருஷ்ணமாச்சாரியாரால் பாராட்டப்பட்டு, வெளி வருவதுதான் இந்த கவர்னர் நியமனம்.

எவ்வளவு சுலபமாக, திடநம்பிக்கையுடன் அவர்கள், கவர்னர் பதவிகளை உண்டாக்குகிறார்கள் என்பதைக் கவனியுங்கள்.

சிதம்பரனார் சிறையில் செக்கிழுத்துக் கொண்டிருந்தபோது கோபால்சாமி ஐயங்கார் போலீஸ் தடிகளுக்குப் பூண் போட இவ்வளவு செலவு ஆகும், துப்பாக்கி ரவைகளுக்கு இவ்வளவு பணம் தேவைப் படும் என்று ஏகாதிபத்திய கணக்கு தயாரித்துக் கொண்டிருந்தார். அவர் சுயராஜ்ய சர்க்காரிலே வீற்றுக் கொண்டு, மொகல்பாதுஷா பேசுவது போலப்பேசுகிறார் என் சகாக்களில் ஒருவரைக் கவர்னராக நியமிக்கப் போகிறேன் என்று.

கோபால்சாமி ஐயங்காரால், பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே பண்டித நேருவைக் காஷ்மீரில் உள்ளே நுழையாதே என்று உத்திரவு போட்டு தடுக்க முடிந்தது—நேரு சர்க்காரிலே சகாவாக அமர்ந்துகொண்டு, கவர்னர்களை நியமிக்க முடிகிறது! இது அல்லவா யோகம்!! உலக வரலாற்றிலே தேடிக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம் இப்படி ஒரு கோபால்சாமியாரை. இவர் எடுத்து வீசுகிறார் கவர்னர் பதவிகளை, இங்கே இளித்தவாயர்கள் நம்மை ஏசுகிறார்கள். இவரும் ஆச்சாரியாரும், டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் சென்னைக்குக் கவர்னராக பிரகாசா எனும் பிரமுகர் வேண்டுமென்று திட்டமிட்டு வேலை செய்துள்ளனர் என்று கூறுவது, தவறு?

பார்ப்பன ஆதிக்கத்தையா ஒழிக்கப் பார்க்கிறாய், காங்கிரசை ஒழித்தால், பார்ப்பன ஆதிக்கம் ஒழியும் என்ற எண்ணத்தால் சென்னையில் காங்கிரசை ஒழித்திடவா துணிந்தாய், இதோ பிடி சாபம்! என்கிறாரே கோபால்சாமி ஐயங்கார்!

ஜாதிக் கொடுமை, வகுப்பு ஆதிக்கம் என்றெல்லாம் அடிவயிறு வலிக்க வலிக்கப் பேசி, 'ஓட்டுகளை'க் காங்கிரசுக்கு எதிராகவா. போகும்படி செய்தாய், இதோ பார், கவர்னர் யார் என்று கண் திறந்து பார்! தேஜஸ் தெரிகிறதா, தெளிவற்றவனே தெரிந்துகொள், இவரை எமது ஆச்சாரியார் அன்றொருநாள் அருகே அழைத்து அந்தரங்கமாக சேதி சொன்னார், இன்று அவரை கவர்னராகக் கொண்டு வருகிறேன் காணாய்! என்று சோப்புச் சீமான் சொல்லாமற் சொல்கிறார்.

ஓட்டுகளப்பா உங்களிடம் இருப்பது, வெறும் ஓட்டுகள், என்னிடம் இருப்பது என்ன தெரியுமா? கவர்னர்கள், என் பேனா முனையில்!!— என்று கூறும் கோபால்சாமி ஐயங்கார் உங்கள் மனக்கண்முன் தெரியவில்லையா!

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி அப்போது முகமலர்ச்சியுடன், தேவர்களை நோக்கி, அஞ்சற்க. நாம் வராக அவதாரம் எடுத்து உம்மை ரட்சிப்போம்–என்று கூறினார்—இது புராணம்! ஆமாம்! புராணம் காட்டும் வழிகானே இப்போதும் வேண்டுமென்று பேசுகிறார்கள் பூஜ்யர்கள்.

இதோ பாருங்களேன், எந்தச் சென்னை, பார்ப்பனீயத்தை எதிர்க்கிறதோ அங்கு பார்ப்பனப் பிரமுகர் தங்களுக்குகந்த ஒரு பிரமுகரைக் கவர்னராக நியமிக்கும்படி நேருஜியைக் கேட்டு, அவர் அங்ஙனமே ஆகுக! என்று அருளியிருக்கிறார். புராணம்! புது உருவில்!!

அவர்கள், அவரை அழைத்து வருகிறார்கள். பிறகு, அவர், அவர்களுக்காக அல்லாமல் நமக்காகவா பாடுபடமுடியும்!

★

## மாணவருலகில்!

அரியலூர்:- 28—2—52 அன்று உயர் நிலைப்பள்ளி மாணவர் பேரவைக் கூட்டம். திருச்சி மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவரும் புதிதாக சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான தோழர் ராஜா சிதம்பரம் M. L. A. தலைமையில்தோழர் அண்ணாதுரை மாணவர்கள் நிலைபற்றி பேசினார்.

உடையார்பாளையம்: 29—2—52 அன்று மாலை 5-மணிக்கு உயர் நிலைப்பள்ளி மாணவர் சங்கச்சார்பில்புதிதாகத்தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் K. R. விசுவநாதன் M. L. A. தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தி. மு. க. பொதுச் செயலாளர் சி. என். ஏ. சொற்பொழிவாற்றினார்.

ஜயங்கொண்டம்: 29-2-52 அன்று மாலை 7-மணிக்கு இவ்வூர் உயர்நிலைப்பள்ளியின் சார்பில் நடைபெற்ற மாணவர்கள் கூட்டத்தில் சி.என். ஏ. சொற்பொழிவாற்றினார். புதிதாகச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் பழனியாண்டி M. L. A. இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

✲

கோவை மாவட்ட திராவிட மாணவ முன்னேற்றக் கழகக் கிளைகளின் செயலாளர்கள் தங்களது செயற்குழுவின் முழு விவரத்தையும், 'சிந்தனைச் செல்வன்—கோவை மாவட்ட தி. மா. மு. க. மிசின்வீதி திருப்பூர்' என்ற முகவரிக்கு எழுதுமாறு கோவை மாவட்ட மாணவச் செயலாளர் அ. ச. இளங்கோ கேட்டுக் கொள்கிறார்.

## பர்மிய எல்லையில்

பார்மோசாத் தீவில், பயந்து கிடக்கும், சியாங்-கே-ஷேக்கின் படைகள், பர்மாவின் வட பகுதிக்குள் கொண்டுவந்து குவிக்கப்படுவதாக, செய்திகள் வந்து கொண்டுள்ளன.

இந்த நடவடிக்கை, செஞ்சீனாவின் மீது படையெடுக்கத் தூண்டும் காரியமெனக் கருதப்படுகிறது. சீனாவின் எல்லைக்கு வெளியே, குவிக்கப்படும், சியாங்-கே-ஷேக் படைக்கு, அமெரிக்காவிலிருந்து ஆயுதத் தளவாடங்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனவாம்

தாய்லாந்திலிருந்தும், பார்மோசா மூலமும் அமெரிக்க ஆதிபத்திய வாதிகள், துருப்புக்களுக்கான தளவாடங்களை, அனுப்பிக் கொண்டுள்ளனராம்.

பர்மிய எல்லையில், இந்தப் படைகள் உலவுவது சம்பந்தமாக, பர்மிய சர்க்கார் கலங்கியிருக்கின்றனர்—இதனால் பர்மாவின் அமைதிக்கு பங்கம் ஏற்படக் கூடும் என்ற பயத்தால். இந்தச் சம்பவம் பற்றி, இந்தியப் பிரதமர் பண்டித நேரு. அண்மையில் கண்டித்திருக்கிறார்.

பர்மாவுக்குள் கொமிண்டாங் படைகள் கொண்டுவந்து திணிக்கப்படுவது, உலக சமாதானத்துக்குப் பங்கம் விளைவிக்குமென்றும், அவைகள் கடலை நோக்கித் துரத்தப்பட வேண்டுமெனவும், பண்டித நேரு அறிவித்துள்ளார்.

இதுபற்றி, அமெரிக்க அரசாங்கமோ, யாதொன்றும் வெளியிடாமலிருக்கிறது — அமெரிக்க சார்பில் பேசுபவரோ, 'ஆயுதத் தளவாடங்கள் அமெரிக்காவால அனுப்பப்படவில்லையென்றும்யாரோ சில தனிப்பட்ட அமெரிக்க கம்பெனிகள், சியாங்-கே-ஷேக் தந்த 'ஆர்டரின்' பேரில், அனுப்பியிருக்கலாமென்றும்' பித்தலாட்டப் பேச்சுக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், உலகத்தின் கண்களுக்கு உண்மை தெரியாமலில்லை—சின்னஞ்சிறு தீவுக்கு விரட்டப்பட்ட, சியாங்கைசத்தான "சீனா" என்ற பெயருடன் ஐக்கிய நாடுகள் சபையில் பிரதிநிதித்துவம் வகிக்கச் செய்து வருகிறது, அமெரிக்கா.

அதோடு, மக்களின் பிரதிநிதித்துவத்தோடு விளங்கும் செஞ்சீனக் குடியரசை, இன்னும் அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை. எரிச்சல் கண்களோடு, பார்த்துப் பெருமூச்சு விடுகின்றனர், அமெரிக்க ஆதிபத்திய வாதிகள்.

கம்யூனிஸ்டுகள் சார்பில் அமைந்துவிட்ட சீனக் குடியரசு கண்டு, ஆத்திரமடைந்து கிடக்கும் அமெரிக்க முதலாளித்துவம், இப்போது "நடவடிக்கை"க்கு, வித்திடுவதையே உணர்த்துகிறது—பர்மாவின் எல்லையில் கொமிண்டாங் படைகள் உலவும் நிகழ்ச்சி.

நாலாயிரத்திலிருந்து பத்தாயிரத்துக்குட்பட்ட படைகளுக்கான, தளவாடங்கள், பர்மிய எல்லையில் கொண்டுபோய் குவிக்கப்படுகின்றனவாம் — தனிப்பட்ட அமெரிக்க விமானக் கம்பெனிகள் இந்தச் "சேவை"யைச் செய்து வருகின்றனவாம்.

பர்மிய எல்லையில்உலவும்இந்தப்படைகளுக்கும்பர்மியருக்குமிடையே தகராறும்கலகமும் ஆடிக்கடி நடக்கத்துவங்கியிருப்பது கண்டு, பர்மிய சர்க்கார் கலங்கியிருக்கிறது.

உண்மையில், சியாங்-கே-ஷேக்கின் இந்தச் செய்கை, மாபெரும் போரை, ஆசியப் பகுதியில் சிருஷ்டித்தாலும் ஆச்சரியப்பட முடியாது.

செஞ்சீனாவை வெறுக்கும், அமெரிக்காவின் உதவி, 'ஒரு போருக்கான, ஆயத்தமே இது' என்றே விளக்குகிறது.

இந்த நடவடிக்கை உடனே தடுக்கப்பட்டாகவேண்டும் — சமாதானம் விழைவோரால். இன்றேல், மூன்றாவது உலகப் போருக்கான தீ, ஆசியாவில் மூட்டப்பட்டுவிடும்.

இந்த ஆபத்து ஏற்படாமல் தடுக்க, இந்திய சர்க்கார் தன்னாலான! நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

❀

### ஆசிரியருக்கு கடிதம்

ஐயா,

மத வெறியைத் தூண்டும் ஸ்தாபனங்களை ஒழித்துவிட வேண்டுமென ஓயாது பேசி வருகிறார், டில்லித் தலைவர் நேரு. ஆனால், காந்தியாரின் உயிரைக் குடிக்குமளவுக்கு வளர்ந்து வாகை சூடிக்கிடக்கும் இந்துமத வெறி, பரவ, இரகசியமாக நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளை உங்கள் பார்வைக்கு கொண்டு வருகிறோம்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், வெளியாரின் தூண்டுதலோடு, 'ஒரு சிலர்' ஆதரவில், ஆர். எஸ். எஸ். நடவடிக்கைகள் துவக்கப்பட, ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

நாள்தோறும் சில மாணவர்களை அழைத்துச் சென்று ஆர். எஸ். எஸ். முறைகளில், உடற்பயிற்சி, சிலம்பு விளையாட்டு முதலியவைகள் சொல்லித் தரும் காரியங்களில் சிலர் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த முயற்சிக்கு, வகுப்பு வெறியர் சிலரின் ஒத்தாசையுமிருப்பதாகத் தெரியவருகிறோம்.

அறிவியக்கக் கதிர்களை பரவவிடும் அண்ணாமலை நகரில், இத்தகைய பிற்போக்கு ஸ்தாபனங்களுக்கு உயிரூட்டும் வேலைகளில் வேண்டுமென்றே, வெளியார் சிலர் ஈடுபட்டிருப்பதாகவும் பேசிக் கொள்ளப்படுகிறது.

மாணவருலகு விழிப்படைந்திருக்கிற இந்த நேரத்தில், இது போன்ற முயற்சிகள், நிச்சயம் முறியடிக்கப்பட்டுவிடும் —முற்போக்கு எண்ணங்களால்.

எனினும், இந்த அளவுக்குத் துணிச்சலோடு வகுப்பு வெறி ஸ்தாபனங்கள் உலவத் துவங்கியிருக்கும் உண்மையை, எடுத்துச் சொல்லவே, இதை எழுதுகிறேன் —பொறுப்புள்ளோர் கவனத்தில் படுமென்ற ஆசையால்.

அ. நகர்
மார்ச் 5. | ஒரு மாணவன்

Edited, Printed & Published by C. N. Annadurai M A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.

111 -APR 111/2-52

REGD No M 4842

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 23—3—52 | இதழ் 38

"தெய்வ நம்பிக்கையை நீங்கள் ஸ்திரமாக்கிக் கொள்ள வேண்டும்"

## 'நம்பிக்கையில்லை!'

[ அண்ணல் ]

கடந்த 17-ந் தேதி சென்னை லிங்கிச்செட்டித்தெருவில் அர்ச்சகர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றதாம். தஞ்சை கணேச குருக்கள் வரவேற்பு உபன்யாசம் செய்ய, சேலம் சிவசுப்பிரமணிய குருக்கள் தலைமை தாங்க, திருப்பதி பார்த்தசாரதி பட்டாச்சாரியார், பேசும்போது இதைத் தெரிவித்திருக்கிறார். அந்த மகாநாட்டில் கூடியோர், பொதுஜனங்களல்ல — அவர்கள் அனுமதிக்கவா,படுவர் அதுவும் அர்ச்சகர்கள் மாநாட்டில்? ஆகவே, 'அவர்களுக்குள்'ளாகவே இந்த 'போதனை' நடைபெற்றிருக்கிறது!

யார், யாருக்குச் சொல்லியது தெரியுமோ இது! 'சதா சர்வகாலமும், தயாபரன் பூஜையில ஈடுபட்டிருக்கேன்' என்று, குழைவு நெளிவோடு, கூறுவரே, நமது கோயில் குருக்கள்மார், அவர்களுக்கு, அறிவுரை தந்திருக்கிறார் 'ஸ்திரமாக்கிக் கொள்ளுங்கள்' — என்று. ஆச்சரியப்படுவீர்கள்! 'ஆறுகாலப் பூஜையும், அர்த்தராத்திரி நைவேத்யமும் அலங்காரமும், செய்வித்து, கர்ப்பக்கிருகத்துக்குள்ளே இருப்பவருக்கா —இந்தப் போதனை—அவர்களுக்கெப்படி தெய்வ நம்பிக்கை குறையும்—அவசியமென்னவந்தது 'ஸ்திரமாக்கிக் கொள்ளுங்கள்' என்று தெரிவிக்க?' என்று எண்ணுவீர்கள். யாரோ ஒரு விதண்டாவாதியல்ல, 'ஸ்திரமாக்கி'க் கொள்ளச் சொன்னவர். அவர்களையே சேர்ந்தவர்! நமக்கென்ன தெரியும், அர்ச்சகர்களுக்கிருக்கும் பக்தியும் சிரத்தையும். நாம்தான் அண்டவும் முடியாது — அறியவும் முடியாதே! கோயில் அர்ச்சகர்கள் தெய்வ நம்பிக்கையை ஸ்திரமாக்கிக் கொள்ளவேண்டும்' என்று தெரிவித்தவர், 'நம்மளவா' என்று அந்த வட்டாரத்தால் அழைக்கப்படும் பேறு பெற்றவர்.

"ஸ்திரமாக வேண்டுமாம்!" கூறுகிறார், அவர். 'ஏன், போலியாக இருக்கிறதோ? என்று கேட்பீர்கள், நீங்கள் — நமக்கென்னதெரியும்? கூறுகிறார் அவர்! பாம்பின்கால் பாம்பு அறியும்!!

கோயில் விஷயங்களில் சர்க்கார் குறுக்கிடுவது கூடாதென்வும், அர்ச்சனை டிக்கட் விற்பனை முறையால் அர்ச்சகர்கள் நலப்பெறமுடியவில்லையென்றும், வலியுறுத்தப் பேசப்பட்டதாம்—அம்மாநாட்டில். 'வேறென்ன பேசுவர்! கழுகுக் கூட்டத்தில் கவரிமான் பேச்சா எழும்பும்!!

* * *

'அவர்கள் கூடிப்பேசினால் என்னவாம்? ஏதோ அவர்களுக்குள் கலந்துபேசிக் கொண்டார்கள். வயலிலே உழைப்பவன் கூலி அதிகம் கேட்கலையோ! ஆலையிலே இருப்பவன் அழவில்லையோ, சம்பளம் போதவில்லை யென்று! அதைப் போலத்தான் இதுவும். அர்ச்சகாளுக்கு மட்டும் பணம் என்ன கர்ப்பக்கிருகம் வெடித்து கிளம்பவா உதிருகிறதோ —அவர்கள் தொழில் அது — அதை நடத்தி, அதற்கான ஊதியத்தைப் பெறுவது பற்றிப் பேசினால் — உனக்கென்னப்பா?" என்று கோபிக்கலாம், கோயில் கூடாரத்தோர். 'குறும்புத் தனத்தைப்பார்!' என்று

### தி. மு. க. பொதுக்குழு

அன்புடையீர்,

வணக்கம். மாநில மாநாடு முடிந்து, தி. மு. க. வின் முதல் பொதுக்குழுக் கூட்டம் 6-4-52 ஞாயிறு காலை 10-மணிக்கு ஈரோடு எஸ். ஆர். சந்நானம் மண்டியில் நடைபெறும். அவ்வமயம் கழக சம்மந்தமான வேலைகள் குறித்தும், கழக சட்டதிட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான முறைகள் பற்றியும், மாநில மாநாட்டுக் கணக்கு வகை பற்றியும் கழக தினத்தாள் குறித்தும் கலந்து பேசப்படும். பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை

சில நாம், பக்திமான்கள்.

அர்ச்சனை வருமானம்பற்றியோ அவர்கள் மாநாடுபற்றியோ, கவலையும் கருத்துமில்லை—நமக்கு. ஆனால்,

'கடவுளின் சீடர்கள்!', 'கடவுளுக்குப் பூஜை செய்யும் புண்யமூர்த்திகள்!' 'கடவுளைத் தொட்டுப் பூஜிக்கும் புண்யாத்மாக்கள்' என்று போற்றப்படும் அவர்களைப் பற்றிய அம் மாநாட்டில், 'கடவுள் நம்பிக்கை' பற்றிய பிரச்சினை ஏன் வந்தது எனயோசித்தோம் — ஒருவேளை அவர்களும் 'நாஸ்தீகப் பட்டியலில்' இடம் பெறுகிறார்களோ எனும் ஐயத்தால்! ஏனெனில், மதாச்சாரத்தின் தூதுவர்களெனக் கருதப்படுவோர் மத்தியில், இந்தப் போதனை ஏன் செய்யப்பட வேண்டும்? 'நன்றாக படி, தம்பி!' என்றால், 'தம்பி படிக்கவில்லை' என்றுதானே அர்த்தம். ஆகவேதான், 'ஏன் இந்தப் பிரச்சினை' எழும்பிற்று—என்று எண்ணினோம். அதிலும் இந்தப் போதனையைப் புரிந்திருப்பவர் முதலியாரோ நாய்க்கரோ சைவப்பிள்ளையோ அல்லவே — பட்டாச்சாரியாராயிற்றே! விஷயம் புரியும் நிலையிலுள்ள குலமல்லவா! ஆகவே, சிறிது சிந்தை செலுத்த வேண்டியவரானோம்.

*     *     *

"லோகம் கெட்டுண்டே போறது—காலா காலத்திலே மழை பெய்யறதில்லே—நாடு க்ஷீணதசைக்குப்போறது. கலிமுத்திட்டுது—நாஸ்தீகா பரவிட்டா! நாசம் விளையுது!!" என்று அக்கிரகாரத்து வீதிகளிலே, நம்மைப்பற்றிப்பேசிக் கொள்கிறார்களல்லவா — அந்த ஞாபகம் வந்தது நமக்கு.

குருக்கள்மாருக்கு கடவுள் நம்பிக்கைஸ்திரமாக இல்லை—பட்டாசாரியார் சொல்கிறார், இப்படி. அவர்கள், கடவுள் அருகிலிருந்து, பூஜிக்கும் பேறுபெற்றவர்கள். அக்காரவடிசலும், ஆர்த்தியும், அர்ச்சனைக்காசும் அவர்களுக்குத்தான் சொந்தம். அத்தகையோரிடத்தில், தெய்வநம்பிக்கை குறைகிறதாமே! சொல்லுகிறாரே — பட்டாச்சாரியார்!

அர்ச்சகர்களென்றால் சாமான்யரா? கடவுளுக்குப் பக்கத்திலிருக்கும் பிரம்ம குலத்தவராயிற்றே — அவரா, நாஸ்தீகர்களாகின்றனர்! என்ன இது வேடிக்கை — கூறுபவரோ, பட்டாச்சாரியார் — கூற்றை நம்பாமலும் ஒதுக்க முடியவில்லை! என்னவிந்தை இது—எனத் திகைத்தோம்— இந்தச் செய்தியைத் தெரிவித்த 'தினமணி' இதழின் அதே பக்கத்தில், மற்றோர் செய்தி கண்ணில் பட்டது—அதுவும் அர்ச்சகர் சம்பந்தப் பட்டதால், கவனித்

## 'சூழ்நிலை'—மறுப்பு

சென்னை தொண்டையாண்டலப் பள்ளியில் நான் பேசிய சொற்பொழிவு சிந்தாமல் சிதையாமல் 'சூழ்நிலை' என்ற பெயருடன் புத்தகவடிவமாக வெளியிட்டிருப்பதாக ஒரு அறிவிப்பும் மதிப்புரையும் 13—3—52 மாலைமணி இதழில் வெளிவரக் கண்டேன்! 'சூழ்நிலை' என்ற தலைப்பிலே நான் பேசவுமில்லை, அப்பெயருடன் வெளிவரும் புத்தகம் என் சம்மதம் பெற்றோ, அனுமதியுடனோ வெளிவருவதுமல்ல. 'மதிப்புரை' மாலைமணியில் வெளிவந்த பிறகும், என் பெயரால் வெளியிடப்பட்டுள்ள அந்தப் புத்தகத்தை நான் காணவுமில்லை, எனவே, அந்தப் புத்தகத்தில் என் கருத்துகள் இருக்குமென்றோ, பொதுமக்களுக்கு என் கருத்துக்களை அறிவிக்கும்நல்லெண்ணத்துடன் வெளியிடுவதென்றோ நான் நம்புவதற்கில்லை. இம்மாதிரியாக வெளியீடுகள் புறப்படுவது உண்மையில் எனக்கும் பொதுமக்களுக்கும் இழைக்கப்படும் முதல் தரமான துரோகச் செயலென்றே கூறுவேன். இவ்விதமான முயற்சியை என்னைப்போலவே பொதுமக்களும் கண்டிக்கத் தவறக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,

**அண்ணாதுரை.**

தோம். ஆச்சரியம் அலைகடலாயிற்று! திகைப்பு மலைபோல வளர்ந்தது!!

திருப்பதி கோர்ட்டிலே, நடைபெறும் வழக்கு, ஒன்றுபற்றிய செய்தி அது. வாதி—ஒருஅர்ச்சகர். பிரதிவாதி பக்தர். பக்தர், அர்ச்சகர்மீது வழக்குப் போட்டிருக்கிறார். வேடிக்கையான வழக்கு அது! விபரத்தை வழக்குத் தொடர்ந்த பக்திமானே, கூறுகிறார்—சேளுங்கள்:—

"என்பெயர் கேசவராவ். நானும் என்மனைவியும் திருமலை திருப்பதி, திருச்சானூருக்கு யாத்திரையாக வந்தோம். பிரார்த்தனை செலுத்துவதற்காகவே வந்தோம திருச்சானூர் அலர்மேல் மங்கைத்தாயார் கோவிலுக்கு பிரார்த்தனையாக ஒரு புடவை, ஒரு ரவிக்கை, ரூ 85 ஆகியவைகளை வைத்திருந்தோம். மங்கண்ணா எனும் டவாலி எங்களை திருச்சானூருக்கு அழைத்துக் கொண்டுபோனார். ஒருசிறிய கோயிலினுள் சென்றோம். அந்தக்கோயிலிலிருந்த அர்ச்சகர் ராஜாராவ் எங்கள் வஸ்துக்களை வாங்கிக் கொண்டு ஹாரத்தி கொடுத்தார்"

சரி. இதிலென்ன வழக்கு! வழக்கமாகத்தானே நடந்திருக்கிறது—பக்தர் போனார் அர்ச்சகரிடம் காணிக்கை தந்தார் — ஆரத்தி நடைபெற்றது என்பீர்கள்! ஆனால் ரசமான கட்டம் எது தெரியுமோ? இனிமேல்தான்.

பக்தர் போனது ஆரத்தி நடைபெற்றதெல்லாம் உண்மைதான். ஆனால் பக்தர்போகவிரும்பிய கோயிலல்ல, அதுபக்தர்காணிக்கை செலுத்தவேண்டிய அம்பாள், அலர்மேல் மங்கைத் தாயார்! காணிக்கை செலுத்தப்பட்டதோ வேறொரு கோயிலில்! தாங்குவாரா, பக்தர் இதை? அலர்மேல் மங்கைத் தாயாருக்காக வாங்கிய புடவையையும் ரவிக்கையையும்-ஏதோர்ஒருமூலையிலிருக்கும் அம்பாளுக்கா, கொடுக்கச்சம்மதிப்பார்? 'எனக்கு செலுத்த வேண்டியதை எவளுக்கோ கொடுத்தாயா—' என்று, அலர்மேல் மங்கை, சீறமாட்டாரோ! ஆகவே, தகவல் அறிந்ததும், போலீசாரிடம் புகார் செய்திருக்கிறார், ராஜாராவ் மீதும், 'இதுதான் அலர்மேல் மங்கை கோயில் என்று அழைத்துச் சென்ற, மங்கண்ணாமீதும். போலீசார் இரண்டு அர்ச்சகர்களையும் கூண்டிலேற்றியிருக்கிறார்கள். புகார் செய்த பக்தரோ 'நீதிபதி அவர்களே' என்று நிற்கிறார்—'மங்கைத்தாயார் கூலிகொடுப்பார் இந்தப் பாவிகளுக்கு' என்று போய்விடவில்லை! அர்ச்சகரோ, ஆத்துக்காரியை எண்ணி, புதுப்புடவை



ரவிக்கையை நினைத்து நினைத்து, அதை இழக்கும்படி நேர்ந்ததை மனதுக்குள்ளே எண்ணி 'ஐயோ சிவனே!' என்று கூண்டிலே நிற்கிறார்!!

☆

கடவுள் நம்பிக்கை இல்லை! — பட்டாச்சாரியார் தந்த பிரசங்கச் சிதறல் இது. கடவுளை ஏமாற்றி மோசடி செய்தார் அர்ச்சகர்!—கண்முன்னே நடைபெறுகிறதுவழக்கு. இந்த இரண்டைக் கண்டதும், கடவுள் இவர்கள் கையில் அகப்பட்டு அவஸ்தைப்படுவது கவனத்துக்கு வந்தது. 'கோவிந்தா! கோவிந்தா!!' என வீதியிலே அலறி, படியேறி, பகவானின் பாரியைக்கு, பக்தர் கொண்டு சென்ற புடவையும் ரவிக்கையுமே—பகற்கொள்ளை அடிக்கப்படுகிறது! பாபம்—எவ்வளவுவினோதம் பாருங்கள் — கொள்ளையடிப்பதும் திருடனல்ல; அர்ச்சகர்!! பக்தர்கள் செலுத்தும் இந்தக் காணிக்கைகள் இன்னும் எவ்விதமெல்லாம், பறிபோகிறதாம், தெரியுமா? அதே 'தினமணி' இதழிலே, மேலே தந்த செய்திக்கு தலைப்பிலிருக்கிறது. மற்றோர் செய்தி.

"திருமலை ஏழுமலையானுக்கு பக்தர்கள் அ[illegible]பிய சில மணியார்டர்களை கையா[illegible]தாக திருமலை திருப்பதி தேவ[illegible]ான டிரஷரி அட்டெண்டர்மீது போலீசார் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள்."

பக்தர்கள் காணிக்கை, பரந்தாமனுக்குப்போகிறது இவ்விதம்! இந்த வழக்கிற்குக் காரணமானவரோ — சாதாரணமானவரல்ல — ஏழுமலையானின் பொக்கிஷ இலாகாவைச் சேர்ந்தவர்! டிரஷரி அட்டெண்டர்!

பட்டாச்சாரியார் கூறுவதுபோல கடவுள் நம்பிக்கை ஸ்திரமாகஇருந்திருந்தால், கடவுளுக்கு வந்த காணிக்கை இப்படியா களவுபோகும்! போகாது! போகாது!!—"கடவுள் என்ன செய்யமுடியும்?" என்ற துணிச்சல்தான், இதுபோன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து செய்து வரத்தூண்டியிருக்கிறது. இந்தக் காரியங்களைச் செய்தவர்கள் அர்ச்சகர்கள் — மற்றோரைப் பார்த்து 'கர்ப்பக்கிருகத்துக்கு வராதே-கண்ணைப் பொசுக்கிடுவார்' என்று பிறருக்கு கடவுள் மகிமைபற்றிப் பேசுபவர்கள்! அவர்களுக்கு பக்தியில்லை என்கிறார்—பட்டாச்சாரியார்! 'உண்மைதான்' என்கிறார்கள், செய்கைமூலம், அர்ச்சகர்கள் 'பக்தியில்லாததுமட்டுமல்ல பயமுமில்லை' என்று, அவர்தம் செயல்கள்மூலம், விளக்கியிருக்கின்றனர்.

கடவுள் சக்தியை, அர்ச்சகர்களே சந்தேகிக்கின்றனர்—அல்ல! அல்ல!! —நம்பவில்லை! ஆனால் நம்மனோரை மட்டும் 'காணிக்கை செலுத்த,வா' 'பிரார்த்தனை செய்' என்று அழைக்கின்றனர். கடவுளின் தூதர்கள் அர்ச்சகர்கள்! அவர்களின்நிலை இப்படியிருக்கிறது — நம்மவரோ இன்னும் வீதிகளிலே உருண்டு 'ஏழுமலையானுக்கு' காணிக்கைகள் சேகரிக்கின்றனர்—பரலோகஆசையோடு. பக்தர்கள் துரோகம் — தூதர்கள் கொள்ளை, இதற்கிடையிலே பரந்தாமன்! கோயில்கள் கொள்ளைக் கூட்டங்களென்றால் கோபிப்பரே—பக்தர் குழாம். பட்டாச்சாரியார் தெரிவிக்கிறார்—பத்திரிகை தகவல் கூறுகிறது இப்போது! என்ன சொல்வரோ இதற்கு, எம்பிரான் சீடர்கள்!!

## ஆரவல்லி, அருகே!

இருதயம் பாலைவனமாகிறதாம், —கவலையோடு தெரிவித்திருக்கிறார்! மத்திய சர்க்காரின் முக்கிய நீர்ப்பாசன அதிகாரியான கோஸ்லா. 'பாரதமாதா'வின் இருதயம் பாலைவனமாகிறதாம்! இந்திய உபகண்டத்தின் நடுவிலமைந்துள்ள, ராஜஸ்தான், மணற் காடாகி வருகிறதாம்! இந்தக்கவலை, வடநாட்டு மக்களுக்கு அதிகரித்திருப்பதாகவும், உலககாடுகளின் கவனத்தைக் கவர்ந்திருப்பதாகவும், கோஸ்லா கூறுகிறார்.

சிறுசிறு ரஜபுதன சமஸ்தானங்களைக் கொண்டது, இந்த ராஜஸ்தான். இதன் வடபகுதியிலிருக்கும் தார் பாலைவனம், வளர, அதிகரித்து வரும் அறிகுறி, ஒவ்வொரு ஆண்டும் விரிகிறதாம். இந்த வேதனையை வெளியிட்டிருக்கிறார். கோஸ்லா.

ஆரவல்லி குன்றுகளால் அணைக்கப்படும், இந்த பூமிக்காக, ஆண்டு தோறும் ரூ 4-லட்சம் செலவிடப்பட்டு வரு[illegible]றது — டில்லி சர்க்கார். எனினும், பாலைவனம் வளர்கிறதாம்!

இந்தக் கேட்டைத் தீர்க்க, ஐக்கிய நாடுகளின் சார்பில், ஒரு ஆலோசனையாளர் குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும், அது இந்தியாவுக்கு வந்து இந்தச் சிக்கலைத் தீர்க்கும் திட்டத்தை வகுக்கும் என்றும், அவர் தெரிவித்திருக்கிறார்.

நாடு—மணலாகும் இந்த ஆபத்தைத் தவிர்க்கும் வழிவகைகளைக் காணுவதற்காக, மத்திய சர்க்கார், ஆராய்ச்சி நிலையமொன்றை நிர்மாணிக்கப் போகிறார்களாம்—ஜோதி புரியில்.

இந்திய உபகண்டத்தின் மொத்தப் பரப்பில் 11—சதவிகிதம் கொண்டது, ராஜஸ்தானாகும்; ஆனால் 5-சதவிகிதம் மக்கள் தொகையே இருக்கின்றனர். இந்தியாவிலேயே குறைந்த மழையுள்ள பிரதேசமும், இதுதான். பஞ்சமும் பட்டினியும், அடிக்கடி அல்ல — எப்போதும் —இங்கு வட்டமிட்டு வருகின்றன.

மைகா, துத்தநாகம் முதலிய பல உலோகப் பொருள்கள் இங்கே, கிடைக்கின்றன. பெருத்த அளவில் உப்பு, இங்கே கிடைக்கிறது.

பாலைவன வளர்ச்சி தடைபடாவிட்டால், விளைவு வேதனையாகிவிடுமென—அஞ்சுகின்றனர், வடநாட்டு மக்கள். அதன் காரணமாகவே, ஆர்வத்தோடு, பல முயற்சிகளிலீடுபட்டிருக்கிறது, டில்லி.

## சி. என். ஏ.

சி. என். ஏ. உடல்நிலை, நலம் அடைந்துவருகிறது. இப்போது நெஞ்சுவலி குறைந்திருக்கிறது. (மருந்து சாப்பிட்டுக்கொண்டு வருகிறார்.) இன்னும் குறைந்தது ஒரு மாத ஓய்வு தேவை என்று டாக்டர் கூறியிருக்கிறார்.

## வேலை நிறுத்தம்

டால்மியா புரம் சிமெண்ட் கம்பெனியின் ரிப்ராக்டரி பிளாண்டில் 120 தொழிலாளர்கள் மார்ச் 14ந் தேதி, உள்ளிருந்து வேலைநிறுத்தம் செய்தனர். தமக்குத்தரப்படும் சம்பளம் போதாதென்பதே தொழிலாளரின் குறையாகும்.

# கோபாலர் படம் பிடிக்கிறார்!

"முக்கியமான திட்டங்கள் பல போட்டிருந்தோம் — ஆனால் அதை நிறைவேற்ற பணமில்லாது தவித்தோம். மத்திய சர்க்காரைப் பார்த்துக்கேட்டோம். தேவையான அளவுக்குத்தான் நிதிஉதவி கோரினோம்; அதிகமாக அல்ல. ஆனால் மத்திய சர்க்கார் தரவில்லை, இம்மாகாணத்துக்கு"

* * *

முன்னாள் நிதியமைச்சர் கோபால ரெட்டியார், சட்டசபை 'பட்ஜட்' விவாதத்தின் போது, தகவலைத் தெரிவித்திருக்கிறார். கடந்த ஆறு ஆண்டுகாலத்தில் இதைச் செய்யத்திட்டமிட்டிருந்தோம்— ஆனால் பணமில்லை கையில் — மத்திய சர்க்காரும் மறுத்து விட்டது, மனமிரங்காமல் என்று விளக்கி இருக்கிறார். சட்டசபையின் கடைசிக் கூட்டத்தில் என்றல்ல, பலப்பல முறை, மத்தியசர்க்காரின் 'மாற்றாந்தாய்' போக்கு குறித்து, கோபாலர் பேசியிருக்கிறார்—கூட்டங்களிலும் கல்லூரிகளிலும். நிதியமைச்சர் அவர்! ஆகவே, நிதியை டில்லிக்குத் தந்துவிட்டு, உதவி கேட்டால் 'இல்லை' என மறுத்த டில்லி பீடத்திடம் படாதபாடு பட்டிருக்கிறார்! எனவேதான், இழிவு தாங்கமுடியாது இவ்வண்ணம் பேசிவந்தார், எனக் கருதினோம். ஏனைய அமைச்சர்களைவிட, டில்லியின் ஓரவஞ்சனை குறித்து, வருத்தமும் கண்டனமும் அதிகமாகத் தெரிவித்தவர் — நிதி மந்திரி தான். எங்கு போனாலும் சொன்னார்! இதைச் சொல்வதற்காகவே பல இடங்களுக்குப் போனார்!—ஆனால் அப்போதும், டில்லி, இரங்கவில்லை. சென்னையைத் தவிக்கவிட்டு, வேடிக்கை பார்த்திருக்கிறது. சென்னையில் ஆட்சி செலுத்திபோரும் காங்கிரசார் தான்—டில்லியில் இருப்போரும் காங்கிரசார்தான். ஆனால் சென்னையின் வேண்டுகோள் எதையும் ஏற்கவில்லை; நிராகரித்திருக்கிறார்கள். காரணமென்ன இதற்கு? மாகாண சர்க்கார் உதவி கோரிய திட்டங்கள்—முக்கியமானவையாம்! கோபாலர் தெரிவிக்கிறார். மக்களின் நல்வாழ்வைப் பெருக்கும் அணைக்கட்டுகளும், நீர்ப்பாசன வசதிகளும் செய்யப் பணம் கேட்டனராம். ஆனால் டில்லி, மறுத்திருக்கிறது! மக்கள் நலன் கோரி—மாகாண சர்க்கார் பணம் கேட்டனர். டில்லி, மறுத்தது.

"பல திட்டங்களைப் போட்டு, பணம் கேட்டு பரபரப்போடு விழித்துக்கொண்டிருந்தோம். கவலையோடு 'என்ன பதில் வருமோ எனக் காத்து கிடந்தோம்—எத்தனையோ தடவைகள்" இவ்விதம், விளக்கம் தருகிறார், அவர். ஒரு முறையல்ல இருமுறையல்ல; எத்தனையோ தடவைகளாய்! மறுத்ததாம் மத்திய சர்க்கார்! 'முகாரி' பாடுகிறார், முன்னாள் நிதி அமைச்சர்!

எத்தனையோ தடவைகள், இவ்விதம் டில்லி மறுத்தது மட்டுமல்ல; அடிக்கடி எச்சரிக்கை செய்து கொண்டுமிருந்ததாம். இப்படிப் பணம் கேட்காதீர்கள்—என்றல்ல; இவ்விதம் திட்டங்களைப் போடாதீர்கள். என்று மாகாண சர்க்கார் மக்களின் நல்வாழ்வுக்கான மூலதனத் திட்டங்களில் முயற்சி செலுத்துவதை — கண்டித்திருக்கிறார்கள். பணமும் இல்லை! பரிதாபமும் இல்லை, நம்மீது!!

என் இது?—அதற்கும் சிறு குறிப்பு தந்துள்ளார். முன்னாள் அமைச்சர் மத்திய சர்க்கார் கட்டளையை மீறி, இவர்கள், சில காரியங்கள் செய்தார்களாம். அதனால், இவ்விதம் நேர்ந்ததாம். மத்திய சர்க்கார் மனமொப்பாது இவர்கள் செய்தது — மதுவிலக்கு இன்னும் சில திட்டங்கள். மதுவிலக்கு காங்கிரசின் தேர்தல் திட்டம்! அதை நிறைவேற்றுவது டில்லிக்கு பிடிக்கவில்லை. அதோடு, இன்னும் சில திட்டங்கள் டில்லியின் உத்திரவோடு செய்யவில்லையாம். அந்தத் திட்டங்கள் எவையென்று கோபாலரே கூறுகிறார் — அணைக்கட்டு நீர்ப்பாசனத் திட்டங்கள்! இந்தத் திட்டங்கள், டில்லியைக் கேட்டுப்போடவில்லையாம். அதனால் எச்சரிக்கை—பணமில்லை என்ற கைவிரிப்பு—எரிச்சல் மொழி!

ஏனிந்த எச்சரிக்கையும் எரிச்சலும் வந்தன? கோபாலரே தெரிவிக்கிறார், மாகாண சர்க்கார், மத்திய சர்க்காரின் அனுமதியின்றி, இத்திட்டங்களை மேற்கொண்டனராம். With out their Sanction! அவர்களின் அனுமதியில்லாமல்!! எப்படிச் சகிக்கும் டில்லி? ஆகவே, பண உதவி செய்ய மறுத்திருக்கிறது—நம்மை பரிதாபப்படச் செய்திருக்கிறது.

* * *

"மாகாண சர்க்கார்களுக்கு ஏன் உதவவில்லை?"

## 'ஒரு அதிசயம்!'

"பதினைன்றில் ஒரு பங்கு சம்பளம் போதும்" என்று, தெரிவித்திருக்கிறார், மேற்கு வங்க கவர்னர். தனக்குரிய மாதச்சம்பளம் ரூ. 5,500-ல் ரூ. 500 மட்டும் போதும் என்றும் அறிவித்திருக்கிறார் அவர்! 'மீதப்பணம் — சர்க்கார் எடுத்துக் கொள்ளட்டும்' என்றும், கூறியுள்ளார். இந்தச் செய்தி, பலருக்கு, ஆச்சரியத்தையே தரும். கொள்ளை லாபம், அடிக்கவே அரசாங்கத்தில் குந்தியிருக்கிறோம், என்ற கருத்தோடு ஆயிரக்கணக்கில் சம்பளமும் பல்லாயிரக் கணக்கில் அலவன்சும் பெற்றுத் திரியும் காங்கிரஸ் ஆட்சி அதிகாரிகளின் அக்கிரமங்களைக் கண்ணாரப் பார்க்கின்ற நேரத்திலே, மேற்கு வங்க கவர்னர் முகர்ஜியின் செய்கை, எல்லோரையும் வியப்பிலே ஆழ்த்தும்.

கவர்னராகவும் மந்திரிகளாகவுமிருக்கும் பலருக்கு, தமது வாழ்க்கைக்கான சகல சவுகரியங்களும் நிரம்ப நிரம்ப இருக்கின்றன. ஆனாலும், சர்க்கார் தரும் பணத்தையும், விதவிதமாகப் பணப் பெட்டியில் கொண்டு குவிக்கும் ஆர்வத்திலேயே கிடக்கின்றனர்.

இத்தகைய கொள்ளைலாபக் கும்பலிலே, முகர்ஜி, ஒரு விலக்கு! எனவே அதிசயப்படுகிறோம்!!



"மத்தியசர்க்காருக்குள்ள பணக் கஷ்டம்தான்"

"உண்மைக்காரணம் அதுதானா—அல்லது அவர்தம் அனுமதியின்றி, சென்னைசர்க்கார் சில திட்டங்களைப் போட்டதாலா?"

"சேச்சே! சர்வாதிகார எண்ணம் கொண்டதல்லவே நேருவின் சர்க்கார்."

"பின் ஏன் உதவவில்லை?"

"உருப்படாத திட்டங்களெனக் கருதியிருக்கலாம்......"

"எது, அணைக்கட்டுவதும், நீர்ப்பாசனவசதிசெய்வதுமா......?"

"அதை மறுப்பரோ! வேறு ஏதாவது இருக்கும்"

"வளர்த்தாதே—'அனுமதியின்றி திட்டங்களை வகுத்தனரே திமிரடக்குவோம்' — என்கிற ஆத்திரம் தானே, காரணம்?"

"அப்படியெல்லாம் இருக்காது"

* * *

கோபாலர் கூறிய வார்த்தைகளை வைத்து தேசியத் தோழர் ஒருவரைக் கேட்டால், இவ்விதம்தான் பதில் தருவார். "பணமில்லாததால் தான் உதவவில்லை" என்று, வலியுறுத்தி, வகைப்படுத்தி கூறுவார். ஆனால் அதற்கும் பதில் தந்திருக்கிறார் கோபாலர் டில்லி மறுத்ததற்கு பணமில்லாதது அல்லவாம், காரணம்!

"சென்னை கேட்டால் பண உதவி செய்யாத மத்தியசர்க்கார்,மற்றமாகாணங்களுக்கு நிறைய உதவியிருக்கிறார்கள்" சென்னைக்குப் பணமில்லை —ஆனால் மற்ற மாகாணங்களுக்கு உதவியிருக்கிறார்கள். அதுவும் சாதாரணமாகவல்ல; நிறைய உதவியிருக்கிறார்கள்! அதுவும் எப்படிப்பட்ட மாகாணங்களுக்கு? 'பணம் தேவைப்படுகிறது' என்ற திட்டங்கள் எதுவும்போட்டு உதவிக்குக்காத்திருக்காத மாகாணங்களுக்கு!! செலவழிக்க வகையும் வழியுமில்லாதபிற பிறமாகாணங்களுக்கு நிறைய பண உதவி அளித்திருக்கிறார்கள்—செலவழிக்கத் திட்டங்கள் போட்ட சென்னைக்கு போதிய உதவி தரவில்லை!! The Government of India did not allocate Sufficient funds to this State, which was in a position to spend, while they allotted large sums to other states which were not yet in a position to spend — கோபாலரின் பேச்சு, இது.

திட்டத்தைத் தீட்டிக்கொண்டு 'திருவோடு ஏந்திற்று' சென்னை. திரும்பிப் பார்க்கவில்லை, டில்லி. அதேநேரத்தில், மற்ற மாகாணங்களுக்கு ஒருபக்கம் நிதி உதவி தந்தது அதோடுமட்டுமல்ல,பலபெரிய அணைத்தேக்கங்களை, மத்திய சர்க்காரே கட்டித்தர முனைந்திருக்கிறது. இதுவும் நாம் கூறுவதல்ல!

"மத்திய சர்க்காரால் பண உதவி செய்யப்படும் தாமோதரர் பள்ளத்தாக்கு ஹீராகுட் அணைத் தேக்கம் போன்ற திட்டங்கள் எதுவும் இங்கே கிடையாது. அதுபோன்ற பெரிய திட்டங்கள் எதற்கும், பண உதவி செய்யவில்லை."

☆

நன்செய் விளையவும், நல்ல தொழில் ஆலைகள் வளரவும், மின்சாரம் பரவவும் அணைக்கட்டுகள் அவசியம். இந்த மூலச்செலவுகளில் போடும் பணம், பலனும் பயனும் தருவதாகும். பஞ்சமும் பட்டினியும் ஒழிக்க, வழி செய்து தருவதாகும். இத்தகைய நல்லதிட்டத்துக்கு மத்திய சர்க்கார், உதவவில்லை. மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தையும், வஞ்சகத்தையும் கோபாலர் படம் பிடித்துக்காட்டுகிறார்—குமுறலோடு. நாம் கூறிடின், கையாண்டி செய்வர், தேசிய நண்பர்கள். இப்போதென்ன சொல்வர்! மத்திய சர்க்கார், ஏன் இவ்வளவு மாச்சரியத்தை காட்டவேண்டும், சென்னையில் ... வடநாட்டில் வளம்! இங்கே வறுமை!! — இதை வளர்ப்பதற்கா, பெயர் பாரத தேசியம்? சில திட்டங்களைக் கேட்டுச் செய்யவில்லையென்பதால் இவ்வளவு துரோகமா! அல்லது தென்னாடு எக்கேடுகெட்டால் என்ன என்கிற வஞ்சகமா! அல்லது 'வரி செலுத்தத்தான் நீ. வாங்கத்தான், நான்' என்கிற சர்வாதிகார மமதையா—எதைச் சொல்வீர்கள் காரணமாக, கோபாலர் படம் பிடித்துக் காட்டுகிறார் — மத்திய சர்க்காரைப் பற்றி. இப்போது கூறுங்கள் நண்பர்களே, எதுசரி! எது உண்மை!!

☆

## புது இதழ்கள்

**எதிரொலி:-**

தி. மு. க. பிரச்சாரக்குழுத் தோழர் N. S. இளங்கோவை ஆசிரியராகக் கொண்டு தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்திலிருந்து 'எதிரொலி' எழும்பியிருக்கிறது. நண்பர் இளங்கோவின் முயற்சியால் எழும்பும், இந்த ஒலி, திராவிட சமுதாயத்தின் இதய வலியைப் போக்கப் பாடுபடும் — அறிவுலகுக்குப் பணியாற்றுமென நம்புகிறோம். நஞ்செய் பூமியிலிருந்து எழும்பும் இந்த 'எதிரொலி', வளர்ந்து,கொள்கைகள் பரப்ப வேண்டுமென வாழ்த்துகிறோம்—வரவேற்கிறோம். எதிரொலி 12-பக்கங்கள்:-

விலை 0—2—0.

**நெல்லைத்தோழன்:**

தூத்துக்குடித் தோழர் K. V. K. சாமியின் 'நெல்லைத்தோழன்' இருவாரமாக, வெளிவரத் துவங்கியிருக்கிறது. தொழிலாள மக்களின் துயர் நீக்குவதே, நெல்லைத்தோழன் முக்கிய குறிக்கோள் என அறிகிறோம். தோழரின் முயற்சியைப் பாராட்டுகிறோம். வாழ்க நெல்லைத் தோழன்!

6-பக்கங்கள் (பெரிய அளவு)

விலை. 0—2—0.

## சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளை கவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவறாது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
3. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள். இல்லையெனில் குறிப்பிட்ட தேதியோடு பத்திரிகை நிறுத்திவிடப்படும்.

மானேஜர்.

திராவிடநாடு

காஞ்சி] 23—3—52 [ஞாயிறு

# 'உதவி வருகிறது!'

☆

பாலைவனத்தை சோலைவனமாக்கிய பெருமை ரஷ்ய மக்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் உண்டு. அதள பாதாளத்தில் கிடந்த ரஷ்ய பூமியில், தொழில் வளர்ச்சி குலுங்கச் செய்த மகத்தான பெருமை பெற்றவர்கள், அவர்கள். பெரிய ஆலைகளும், சின்னஞ் சிறு தொழில்களும், அமைத்து, ஒரு சிங்காரக் கோட்டமாக ஆக்கியிருக்கிறார்கள்—கால் நூற்றாண்டுக்குள். ரஷ்யா, பெரும்பாலும் விவசாயம் நிரம்பிய நாடாகும்! விவசாயிகள் நிரம்பிய எந்த நாட்டிலும், தொழில் வளர்ச்சி, இவ்வளவு பெருமிதமாக வளர்வதென்பது—சாதாரண காரியமல்ல. ஆகவேதான், சோவியத் சாதனை, கேட்டு பலர் திகைக்கிறார்கள்! 'எப்படி முடிந்தது?' என்று வியக்கிறார்கள்!!

ரஷ்யாவைப் போல, இந்தியாவும், விவசாய நாடுதான். பொருளாதாரம், விவசாயத்தின் அடிப்படையில் தான் அமைந்து கிடக்கிறது. ஆகவே, ரஷ்யாவைப் பார்த்து, அதன் திட்டங்களை ஆராய்ந்து, பலன் காண முடியும், இந்திய ஆட்சியாளர்கள்.

இன்று தொழில் துறையில் என்ன தொல்லைகளிருப்பதாக இங்குள்ளவர்கள் கூறுகிறார்களோ, அதைவிடப் பன்மடங்கு சங்கடங்களைத் தாங்கவேண்டியவர்களாயிருந்தார்கள், ரஷ்ய மக்கள்—புரட்சிக்குப் பின். முதல் ஐந்து ஆண்டுத் திட்டமொன்று போட்டு அதை அமுல் நடத்த முயன்றபோது சோவியத் தலைவர்கள், பலப்பல பிரச்சினைகளைச் சமாளிக்கவேண்டியவர்களானார்கள் — புதிய பொருளாதார திட்டத்தை அமைக்க வேண்டியவர்களானார்கள்!

அதே முயற்சியில், இப்போது, இந்திய பொருளாதார நிபுணர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் — இங்கு. இந்திய தேசிய பொருளாதாரத் திட்டம் பற்றி, ஆலோசனையில் ஆழ்ந்திருப்போர், ரஷ்யாவின் சாதனைகளைக் கவனிக்க வேண்டும்—'எப்படிச் செய்தனர்?' என்ற ஆவலோடு ஆராய வேண்டும். வேற்றுமை மனோபாவம் ஒழித்து, ரஷ்யாவின் சாதனைகளை ஆராய்ந்தால், இங்கேற்படும் ஒழுங்கீனங்களும், வீண் விரயமும் ஒழிய வழி காணலாம்.

'ரஷ்யாவா கூடாது, கூடாது!' என்று, கண்ணையும் காதையும் பொத்திக் கொள்வது, வீண் சந்தேகத்தின் விளைவாகும். எதேச்சாதிகார ஆசை கொண்டோரே, இப்படிப் பேசுவர். மக்கள் வாழ்வை வளமாக்கும் ஆசைகொண்ட எவரும், எங்கெங்கே நல்வழி தென்படுகிறதோ, அதையெல்லாம் தேடிக்கொணர்ந்து சிந்தித்து செயல் புரிய தயங்க மாட்டார்!

இன்று இந்திய மக்களுக்குள்ள முக்கிய பிரச்சினை ஏழ்மையும் பட்டினியும் தான். இந்தப் பிரச்சினைகள் அவசியம் கவனிக்கப்பட வேண்டும். பட்டினியிருப்பதால் ஏழ்மை வளருகிறது—ஏழ்மையால் அறியாமை ஆட்சி புரியத் துவங்குகிறது — முன்னேற்றம் முகிழ்ப்பதில்லை. நாடு வளம் பெறும் நற்பணிகள், பரவுவதுமில்லை! வளர்வதுமில்லை!! இலட்சக் கணக்கானோர் பட்டினியால் பாதவிக்கும்போது அமைதியும் வாழ்வும் எப்படி யேற்பட முடியும்? இன்று அகில உலகத்தையும் எடுத்துப்பார்த்தால், முன்னேறுத பல நாடுகளின், முக்கிய பிரச்சினையாக இருப்பது உணவுதான்.

இந்த உணவுப் பஞ்சம் ஒழிய வேண்டுமானால், முக்கிய மாற்றங்கள், விவசாயத் துறையில் ஏற்பட வேண்டும்.

இன்று உலகில், பொருளாதாரச் செழிப்பு, தொழில் வளர்ச்சியை வைத்தே மதிப்பிடப்படுகிறது. எந்த நாட்டில் ஆலைகள் அதிகமோ, எந்த நாடு அதிக உற்பத்தியைப் பெருக்கி வெளிநாடுகளுக்கெல்லாம் அனுப்புகிறதோ, அதைத்தான் மதிக்கின்றனர். தொழில் வளர்ச்சி அதிகரித்தால், பொருளாதாரம் முன்னேற முடியும்! ஆனால், இந்திய துணைக்கண்டத்திலோ, தொழில் வளர்ச்சி—மிக மிகக் குறைவாக இருக்கிறது. அமெரிக்க நாட்டையும் இந்தியாவையும் ஒப்பிட்டால், இன்றுள்ள நிலைமையில் அமெரிக்காவை எட்டிப் பிடிக்க கிட்டத்தட்ட நூறு ஆண்டுகள் ஆகுமாம்! சிறு நாடு ஜப்பானைவிட நமது தொழில் வளர்ச்சி ஐந்தில் ஒரு பாகம் கூட இல்லை! தொழில் வளர்ச்சியில் இவ்வளவு பின்னணியிலிருக்கிறோம். ஆலைப் புரட்சிகள், மறுமலர்ச்சித் தென்றலெல்லாம், வெளிநாடுகளிலே வீசியிருக்கிறது—பண்ணைக்காரர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்து வளம்காணச் செய்திருக்கிறது! இரண்டு நூற்றாண்டுக்குமுன்—அங்கே யெல்லாம் இந்த மாறுதல். இப்போதோ இருபதாம் நூற்றாண்டு! நாம் எப்போதும் போலத்தான் இருக்கிறோம். ஆலைகள் வளரவுமில்லை — தொழிலுற்

## உறுப்பினராகுங்கள்

—

உறுப்பினர் சேர்க்கும் பணி ஆங்காங்கே தீவிரமாக நடைபெறும் செய்தி நமக்கு வந்தவண்ணமுள்ளன.

உறுப்பினர்கள் சேர்த்தபணமும் ரசீதும் நமக்கு வந்துகொண்டிருக்கின்றன.

தோழர்களின் ஆர்வம் காண மகிழ்கிறோம்—அவர்கள் இன்னும் தீவிரமாகப் பணியாற்றவேண்டும். பொதுக்குழு கூட்டம் 6—4—52ல் கூடவிருக்கிறது—அதற்குள் நிறைய உறுப்பினர்கள் சேர்த்தாக வேண்டும்.

இந்தப்பணிமுடிந்ததும்,சிற்றூர், நகர,வட்டம்—மாவட்டக் கழகங்கள், புதுசட்டதிட்டபடி அமைக்கப்பட்டாகவேண்டும்.

ஆகவே சீக்கிரம் முடிக்கப்பட வேண்டும் உறுப்பினர் சேர்க்கும் பணி. உடனுக்குடன் தகவல் தெரிவியுங்கள். உறுப்பினர் சேருங்கள்! ஒவ்வொரு வீடாகச்சென்று உறுப்பினரைச் சேருங்கள்!!

தி. மு. க.



பத்தி அதிகரிக்கவுமில்லை. இதனால், இங்கே பொருளாதாரக் செழிப்பும் ஏற்பட முடியவில்லை.

"விவசாயத்தின் அடிப்படையில் பொருளாதாரத்தை அமைத்துக் கொண்டுள்ள சிலநாடுகள் மிக மிக உயர்ந்த வாழ்க்கையை அனுபவிக்கின்றன" என்று அண்மையில் (Peter wood) என்கிற பொருளாதார அறிஞர் குறிப்பிட்டதுபோல, சிலநாடுகள் இருக்கின்றன.

ஆனால் இன்று பெரும்பாலான நாடுகளின் பொருளாதாரம், தொழில் வளர்ச்சியின் மூலமே, கணக்கிடப்பட்டு, வருகிறது.

இந்நிலையில் பின்தங்கியிருக்கும் இந்தியாவின் நிலை என்ன?-வேதனையானது! மக்கள் பெருக்கம் ஒருபக்கம்—பசியும் ஏழ்மையும் மற்றோர் பக்கம். இந்த சங்கடமான நிலைமையைத் தவிர்க்கவேண்டுமென்றால், விவசாயம் அதிகமானால் மட்டும் போதாது; நன்செய் அதிகமாவதாலோ, தரிசுகள் பண்படுத்தப்படுவதாலோ மட்டும், இங்குள்ள பிரச்சினைகள் முடிவு பெற்றுவிடமுடியாது.

ஏனெனில் விவசாயத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் நிலங்களைவிட, அதிகமான உழைப்பாள மக்கள் குவிந்திருக்கிறார்கள்.-மக்கள்பெருக்கத்தால் கிராமங்களில் ஜனப்புழக்கம் வர வர உயர்ந்து கொண்டே போகிறது. இத்தனைபேரும் விவசாயத்தையே நம்பியிருந்துவிடவும் முடியாது!

அதிகரித்துக்கொண்டேபோகும் பாமரமக்களின் வாழ்க்கைவசதிக்கு தொழிலாலைகள் வேண்டும். — மிக மிக அதிகமாக வேண்டும். தொழிலுற்பத்தி அதிகரித்தால்தான், ஏழ்மையால் அவதிப்படும் விவசாயிகள் கூட்டம், பொருள்களை உற்பத்தி செய்து, தமதுபொருளாதாரத்தை வளமாக்கிக்கொள்ள இயலும்.

தொழில் வளரவேண்டும்! ஆனால் அதற்கான வசதிகள்? நவீன தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களும் இங்கே இருக்கின்றன. ஆனால் அவைகளை உபயோகிக்கும் இயந்திர சாதனங்களும், தொழிலறிஞர்களும் தான் இல்லை! இதற்கான வழிவகைகளைக் காணவேண்டிய, அவசியம் ஏற்பட்டிருக்கிறது. நான்முகனும் நாவுக்கரசி கலைமகளையும், லட்சுமி தேவியையும் நம்பிவிட்டால் போதாது — பூஜையும் அர்ச்சனையும் பலன் தந்துவிடாது — அறிஞர்கள் வேண்டும்! ஆலைகள் வேண்டும்!!

ஆலைகளும் அறிஞர்களும் கிடைத்துவிட்டால் மட்டும்போதாது—அவைகளை நிர்மாணிக்கப் பணமும் வேண்டும். இங்குள்ள நிலையோ, இதிலும் பூஜ்யம்தான்! இந்தத் திட்டங்களை, நடைமுறையில் செய்ய, போதியபணம் கிடையாது சர்க்காரிடத்தில். பணம்பெற்றிருக்கும் சிலமுதலாளிகளோ, பதுக்கிய பணத்தை எடுக்கபயந்து கொண்டிருக்கிறார்கள். பதுக்கிய பணம், அகப்பட்டால்கூட இன்றைய தேவையை பூர்த்தி செய்யுமா? செய்யாது! அப்படியானால் என்ன செய்வது? ஆலைகள் பெருகவேண்டும்— பணமோ இல்லை! சர்க்கார் தவிக்கிறது!

இந்த நெருக்கடியான கட்டம் தான் இங்கு, இப்போது ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சிக்கலைக்கண்ட காங்கிரஸ் ஆட்சியினரோ கலங்கிப் போயினர். அவர்கள் கலக்கத்துக்கு காரணம் இந்திய சமூக அமைப்புத் தான்! எல்லாவற்றையும் சர்க்காரே ஏற்று நடத்தும் முறைஏற்பட்டிருந்தால் இந்தக் கலக்கம் எழ காரணமில்லை. ஆனால் இங்குள்ள நிலைமையோ! சிலர் முதலாளிகளாக இருக்கிறார்கள் — அவர்கள் பணப்பெட்டியில் பணம் கிடக்கிறது — பலர் மூலப்பொருள்களை உற்பத்தி செய்யும் நிலப்பிரபுக்களாக இருக்கிறார்கள்—பெரிய பெரிய இரும்பு காய்ச்சும் ஆலைகளும், நிலக்கரி வயல்களும் சிலர் வசம் சிக்கியிருக்கிறது. தனி முதலாளிகள் ஒரு பக்கம்! சர்க்கார் மற்றோர் பக்கம்! — இந்தக்கோளாறுக்கு, தலைவணங்கி விட்டது, காங்கிரஸ் இயக்கம். காங்கிரசின் பொருளாதார முறையே முதலாளிகளுக்குச் சாதகமானது தானே!

இதனால் இங்குள்ள முதலாளிகளைத் தாஜா செய்ய வேண்டியவர்களானார்கள் காங்கிரஸ் தலைமையினர். காங்கிரஸ் விடுதலை இயக்கமாக இருந்த நிலைமாறி, ஆட்சியை ஏற்று நடத்தும் பொறுப்பை ஏற்றதும் ஆலையரசர்களும் பணக்காரர்களும் அதன் "சூத்ரதாரி"களாகமாறி விட்டார்கள். அதன் காரணமாகவே, அவர்கள் இஷ்டப்படியெல்லாம், சர்க்கார் வளைந்து கொடுத்து வருகிறது. ஆலையரசர் ஒரு பக்கம் — பணமுதலைகள் மற்றோர் பக்கம். நடுவிலே சர்க்கார்! மக்களோ பாதகத்தில்! இது, தொடர்ந்து நடைபெறுவதை நாம் அறிவோம். உதாரணம் வேண்டுமென்றால் கடந்தவார நிகழ்ச்சியொன்றைக் காட்டலாம்! விலைவாசிகள் வீழ்ந்தன — காரணங்களில் ஏற்றுமதி வரியை அதிகமாக்கியது ஒன்று எனக் கூறப்பட்டது — மக்கள் மகிழ்ந்தனர்—விலைவாசிகள் வீழ்ந்ததைக்கண்டு — ஆனால் முதலாளிகளும் 'சூதாடிகளுமோ' ஏற்றுமதி வரி குறைக்கப்பட வேண்டுமென்று தந்திமேல் தந்தி கொடுத்தனர்—தேசீய பத்திரிகைகளோ, 'சில நூறு பணக்கார வியாபாரிகளுக்காக பல கோடி மக்களை அவதியுறச் செய்யாதீர்கள்' என்று எழுதின—ஏற்றுமதி வரியைக் குறைக்காதே என்று வலியுறுத்தின. ஆனால் இந்திய சர்க்காரோ விலைவாசி வீழ்ந்த ஒரு வாரத்திற்கெல்லாம் பருத்தி, எண்ணெய்வித்துகள் போன்றவைகளின் ஏற்றுமதி வரியை, குறைத்து உத்திரவு பிறப்பித்து விட்டனர். மக்கள்நலன், சில பணக்காரர்களுக்காக பலியாகிறது!

முதலாளிகள் சார்பாக இருக்க வேண்டுமெனும் ஆர்வத்தால், முதலாளித்துவத்திற்கு எதிரான எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை, காங்கிரஸ் ஆட்சி. இதனாலேயோ, ஆலை வளர்ச்சிபற்றிய பிரச்சினைவந்ததும் கலங்கினர். சர்க்கார் கலக்கம் கண்ட முதலாளிகளோ மகிழ்ந்தனர். இப்

## தி. மு. கழக நிதிக்கு நடிகவேள் ராதா

—

சென்னிமலை தி. மு. க கழகநிதிக்காக, சென்னிமலை மேட்டாபீசுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள அர்ச்சுனன் நினைவு அரங்கில் மார்ச் 28, 29, 30. ஆகிய நாட்களில் நடிகவேள் எம். ஆர். ராதா, நடிக்கும் நாடகங்கள் முறையே இரத்தக்கண்ணீர், பேப்பர் நியூஸ், இரத்தக்கண்ணீர் ஆகியவை நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

போது, கொட்டம் அடிக்கத் துவங்கியிருக்கிறார்கள்—அந்நிய முதலாளிகளோடு சேர்ந்து கொண்டு. எந்த காங்கிரஸ்காரர்கள் அந்நியர்களை விரட்டியதாகப் பேசுகிறார்களோ, அவர்களே அந்நியரை 'வருக வருக' என அழைக்கின்றனர். அழைப்பைக் காணும் அவர்களோ நிபந்தனைகள் கேட்கிறார்கள்! நிபந்தனையையும் ஒப்புக்கொண்டு. அவர்களுக்கு வரவேற்பு வழங்கப்படுகிறது. அமெரிக்காவில் இந்தியத் தூதராக இருக்கும் பி. ஆர். சென் இந்தவாரம் கூறியிருக்கிறார்—அமெரிக்க முதலாளிகளுக்கு.

"தனிப்பட்ட முதலாளிகள் தொழில் ஆலைகள் துவக்குவதை மகிழ்ச்சியோடு வரவேற்போம். அவர்கள் ஆலைகளுக்கான எல்லா வித உறுதியையும் ஒத்துழைப்பையும் இந்திய சர்க்கார் தரும்"

☆

உலகு இரு கூடாரங்களாகியிருப்பதையாவரும் அறிவர். வளர்ந்து வரும் பொதுவுடைமைப் புயலைக் கண்டு, முதலாளித்துவத்தின்மோகனபுரியாக இருக்கும் அமெரிக்கா, உலகெங்கும் தனது ஆதிக்கத்தைச் செலுத்த பலவகையாலும் முயற்சித்து வருகிறது. முன்னேற்றமடையாத பிற்போக்கு நாடுகளை 'பணவலை' மூலம் வீழ்த்தி வருகிறது. இதன் அறிகுறிகளை, நாம் இங்கு நன்றாக காண்கிறோம். தொழில்வளர்ச்சி! உணவு!!—இந்த இரண்டுமில்லாத இந்தியாவை, வெகுளியிதில், வீழ்த்திவருகிறது—அமெரிக்கா. இதற்கு, இங்குள்ள முதலாளித்துவ வாதிகள், ஒத்துழைத்துவருகிறார்கள். ஆனால் நேருவோ, ஜம்பமாகப் பேசுகிறார்!

"எந்த கூடாரத்திலும் இந்தியா சேராது" என்பதாக. "அமெரிக்கா உதவி செய்கிறது" என்று கூறுகிறார், ஆனால் இந்த உதவியின் உள் ரகசியம் என்ன? கடந்த மார்ச்சு 7ந் தேதி அமெரிக்க சட்டசபையில் பேசியிருக்கிறார் ட்ரூமன்—வெளிநாடுகளுக்குபணஉதவி செய்யும்நோக்கம் குறித்து.

"கம்யூனிஸ்டுகள் முன்னேற்றமடையாத நாடுகளை வீழ்த்தமுயற்சிக்கின்றனர், இதைத்தடுப்பதே பண உதவியின் நோக்கமாகும். வெளிநாடுகளில் நமக்கானவர்களை நாம் ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால், நமது கரையோரத்துக்கருகே ஆபத்து வந்துவிடும். அப்படியேற் பட்டால், நம்மை நாமே காத்துக்கொள்வதென்றால் ஏராளமான படைகளை நாமே திரட்டவேண்டும். நமது தேவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்துக்கு நாம் ஆளாவோம். நம்மோடு நேசங்கொள்ளும் நாடுகளிடமிருந்து கிடைக்கும் தளவாடம், படைபலத்தைவிட இங்கேயே நாம் எல்லாம் செய்வதென்றால்—அது நமக்குத்தான் கேட்டைத் தரும்"

அமெரிக்கத் தலைவர்—உதவியளிப்பவர் கூறுகிறார்—இப்படி!, ஆனால் உதவி பெறும் நேருவோ, 'பரஸ்பரசகாயம்' என்று கருதுகிறார்!!

"வேறு என்ன செய்வோம்?
நம்மிடமோ வசதியில்லை.
உணவும் பணமும் இல்லை.
இந்நிலையில் உதவியில்லாமல்
வாழமுடியுமோ?"

என்று கேட்கத் தோன்றும். பரஸ்பர உதவியில்லாமல் வாழமுடியாது தான்! ஆனால் உதவியென்கிற பேரால், வீட்டுக்குள் நுழைந்து 'தர்பார்' நடத்த விரும்புகிறவனை அனுமதிக்கவா முடியும்?

"பணம் பெற்றால், அனுமதித்ததாகவா, அர்த்தம்?" என்று கேட்கலாம். அமெரிக்க சர்க்கார் பண உதவியை "அள்ளி"க் கொடுத்துவிட்டு சும்மாயிருக்கவில்லை. அதன் பேரில் பல நிர்வாகிகளையும் அனுப்பத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது! ஒரு பக்கம் வெளிநாட்டினரின் ஆலைகள் — தனிப்பட்ட முதலாளிகளின் கொட்டம்; மற்றோர் பக்கம் வெளிநாட்டு சர்க்கார் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வழி வகைகள்! இதன் விளைவு ஆபத்தைத்தானே தரும்?

"சரியப்பா! உன் யோசனைப்படி அமெரிக்க உதவியை அலட்சியம் செய்து விடுகிறோம். பிறகு என்ன செய்வது?" என்று கேட்கலாம்.

# ஓமந்தூரார் பேசுகிறார்!

[சென்னை மேல் சபையில் 19—3—52 அன்று முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி அவர்கள் பேசிய போது குறிப்பிட்டார்—டில்லியின் அலட்சியம் குறித்து. அவைகளில், சில:]

"சென்னையின் நன்மைகள் பற்றி மத்ய சர்க்கார் அதிசிரத்தை கொள்வதில்லை. இதுவரை சென்னைக்கு செய்திருக்கும் உதவியையும் மற்ற மாகாணங்களுக்கு செய்திருக்கும் உதவியையும் ஒப்பிட்டுப் பார்த்துச் சொல்கிறேன்.

* * *

இன்று சென்னையிலுள்ள கஷ்ட நிலைமைக்கு யூனியன் சர்க்காரின் போக்கே காரணம்.

* * *

சென்னையைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்கார் நியாயமாகவே நடந்துகொள்ளவில்லை. இங்கிருந்து மத்திய சட்டசபைக்குச் சென்ற சட்டசபை உறுப்பினர்களும் தமது கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை.

* * *

ஒவ்வொரு விஷயத்திலும், மற்ற மாகாணங்களோடு, ஒப்பிட்டால், சென்னை, பெருத்த அளவில் உதாசீனம் செய்யப்பட்டிருப்பதோடு, மோசமாகவும் நடத்தப்பட்டிருக்கிறது.

* * *

நான் முதலமைச்சராயிருந்த போது, ஒவ்வொரு தடவையும் டில்லிக்குச் சென்று, மத்திய சர்க்காருடன் சண்டை போட வேண்டியிருந்தது. ஆனால், என்னோடு அப்போதிருந்த சகாக்களின் ஒத்துழைப்பு போதுமான அளவு கிடைக்காததால், என் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

* * *

ஒருபோது எல்லா மாகாணங்களையும் விட முதன்மையிலிருந்த நமது மாகாணம், இன்று அதளபாதாளத்தில் கிடக்கிறது — மிகமிக மோசமாகிவிட்டது.



அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

உதவி பெறுவது—தவறல்ல!
ஆனால் அந்த உதவியால்
ஆபத்து வரக்கூடாது!!

அமெரிக்க உதவியால், ஆபத்து வரும் அறிகுறி தென்படுகிறது அதுமட்டுமல்ல, தவிக்கும் ஏழைகள், நிலை மாறாததன்மை ஏற்படும் என்றும் தெரிகிறது.

உதவி கிடைப்பது சரி—ஆனால் அந்த உதவி, "ஒரு சிலர்" அள்ளி விருந்துவிடக்கூடாது. நாட்டுக்கும் மக்களுக்கும் பொதுவானதாக வேண்டும். எல்லோருக்கும் நன்மை செய்வதாயிருக்கவேண்டும்.

எல்லோருக்கும் நன்மை—இந்நிலைவர, முதலாளித்துவ சமூக அமைப்பு, எப்போதும் இடம் தராது. சாகசத்தால் தன்னை உயர்த்திக்கொள்வதுதான், முதலாளித்துவத்தின் முக்கிய கொள்கை. முதலாளித்துவ அமைப்பில் என்றும் ஏழைகள் இன்பம் காண முடியாது! அமெரிக்கா உதவி செய்கிறதென்று சொன்னால், அது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள—தனது முதலாளித்துவ அமைப்பை நிலைநாட்ட — மூன்றாவது உலகப் போரின்போது தான் தாக்கப்படாமலிருக்க.

இது தவிர எல்லோரும் வாழ வேண்டும் என்ற ஆசையினால் அல்ல; இந்த முக்கிய வேற்றுமையை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

இங்குள்ள உணவுப் பிரச்சினை, தொழில் வளர்ச்சி — ஆகியவைகளின் முக்கியத்துவத்தை நன்றாக அறிவோம் — இது திருத்தியமைக்கப்பட்டால்தான், நமது வாழ்வு நன்கு அமைய முடியும்.

என்ன வழி இதற்கு? இன்றுள்ள சமூக அமைப்பில் மாறுதல் வேண்டும் — முதலாளித்துவ முறைகள் ஒழிக்கப்பட வேண்டும்— புது முறை ஒன்று தேவை!

அந்தப் புதுமுறையை ஒழிக்கத் தான், அமெரிக்கா பண உதவிசெய்கிறது—பரிந்து வருகிறது.

☆

"ஓ! கம்யூனிசம்!!" பயங்கரத்தோடு, பதில் கூறுவர், இதைக் கேட்டதும். அவர்தம் கூற்றைக் கவனிக்குமுன் இத்தகைய பயத்தைப் பரப்புவோர் தன்மைகளைக் கவனித்தால் உண்மை விளங்கும். பிரமையைச் சிருஷ்டித்து, மக்களிடையில் கலக்கத்தை உண்டாக்கி, தமது நிலை சிறிதும் தாழக்கூடாது, இன்ப நிலை மாறக்கூடாது எனும் எண்ணத்தோடு உலவுபவரே, இத்தகைய பிரச்சாரத்தைப் பரப்புகிறார்கள். பார்க்கிறோம் நாம்! 'ரஷ்ய ஆபத்து'—பயத்தோடு சொல்வது பாமரனல்ல; பாரையே விலைக்கு வாங்கும் அமெரிக்கத் தூதர், 'ஐயயோ, கம்யூனிசமா?' — ஏழையல்ல கூறுபவன்; இன்னொரு நாட்டைச் சுரண்ட விரும்பும் பிரிட்டிஷ் முதலாளி. மாடிக் கட்டிடம் படைத்த 'இந்து'வும் 'மித்திரனும்' கோயங்காவும், 'கோதாரி'யும், மடாதிபதியும், கோயில் சுரண்டியும்தான் கூவுகிறார்கள்—அலறுகிறார்கள்; ஏழையல்ல, தவிப்பவனல்ல, ஆலையிலே தன் உடம்பையும் வாழ்வையும் அடகுவைத்தவனல்ல.

கம்யூனிசம் என்பது ஒரு கொள்கை—ஏழைகள் வாழவேண்டுமெனக் கூறும் ஒரு கோட்பாடு. இதைக் கண்டேன் அஞ்சவேண்டும்? இதைப்பற்றி, கடந்த 14ந் தேதி காஞ்சியில் பேசிய ஜீவானந்தம், அழகாகச் சொன்னார். "மண்ணைக் காட்டி சர்க்கரை யென்றால் மக்கள் நம்பவா செய்வார்கள். சர்க்கரையைக் காட்டி 'மண் அது மயங்காதே' என்பது பலன் தரும்?" என்ற உதாரணத்தோடு. அவர் மேலும் குறிப்பிட்டார், "கம்யூனிசம் என்பது ஏதோ ஒன்று—அது யாரோ சொல்வது என்று கருதாதீர்கள். அது ஒரு பொதுக் கொள்கை. உலகிலே ஏழ்மையை ஒழிக்கக் காட்டிய கொள்கை. அந்தக் கொள்கையை எந்தப் பெயரோடு நடத்தினாலும் சரி — நாங்கள் விரும்புவதெல்லாம் ஒருவன் கஷ்டப்படவும், இன்னொருவன் சுகபோகமாகவும் ஏன் வாழ வேண்டும்?" என்பது தான். உண்மை, இது! ஒன்று ஏழையர் உலகம் — மற்றொன்று பணக்கார உலகம். இதில் எது தேவை யென்பது தான் இன்றுள்ள பிரச்சினை. அமெரிக்கா பணக்கார வழியைக் கூறுகிறது! இதை எவரே ஏற்க முடியும்?

இதனால் தான், அமெரிக்காவின் உள் நோக்கம் கண்டு, அஞ்சுகிறோம். அதற்கு ஆதரவு தரும் நேரு சர்க்கார் கண்டு கலங்குகிறோம்.

"அஞ்சினால் போதுமா! கலங்கி

## கழகக் கட்டிடம்

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த குள்ளம்பட்டியில் தி. மு. கழகக் கட்டிடம் பத்தாயிரத்திற்குமேலாக செலவிட்டு, அழகாகக் கட்டப்பட்டுள்ளது. மே மாதத்தில் அதன் திறப்புவிழா நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

## வேண்டுகோள்

"மலேயா சர்க்காரால் தூக்குத் தண்டனைக்கு ஆளாக்கப்பட்ட கன்னையா அதிலிருந்து தப்பி இன்று ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்று வருகிறார். அவரை நம்பி வாழ்ந்த அவரது குடும்பம் தெருவீதியிலே நிற்கிறது. வறுமையோடு போராடி வாழ்க்கையிலே துன்ப முத்திரை பொறிக்கப்பட்ட அவரது குடும்பம் நாதியற்றுத் தவிக்கிறது.

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த கன்னையாவை நம்பி வாழும் உயிர்கள் ஐந்து. கிழத்தாய்—தந்தை-விதவை சகோதரி — இரண்டு தங்கைகள். அவர்கள் அனைவரும் கன்னையாவை நம்பி வாழ்கிறார்கள். தூக்கு மேடையிலிருந்து கன்னையாவை தடுத்தோம். அதற்கென உழைத்த இடதுசாரி கட்சிகளுக்கும், இந்திய அரசாருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். பிரச்சினை முடிந்து விடவில்லை. சிறைத் தண்டனையை ரத்துசெய்து கன்னையாவை இந்தியாவிற்கு அனுப்ப மலேயா சர்க்காரை வற்புறுத்துவோம். அதற்காக உழைக்க சகல முற்போக்குக் கருத்துப் படைத்த கட்சிகள்— தொழிற்சங்கங்கள் — இயக்கங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். கூட்டங்களைக்கூட்டி— தீர்மானங்கள் நிறைவேற்றி—தந்திகள் அனுப்பி இந்திய சர்க்காரையும் மலேயா சர்க்காரையும் கேட்டுக்கொள்ளுவோம்." என்பதாக நாகர்கோயில் கன்னையா விடுதலைக்கமிட்டி செயலாளர் தோழர் அந்தோணி எழுதுகிறார்.

னால் போதுமா! உடனடி நிவாரணம் வேண்டுமே — அமெரிக்கா தானே உதவவருகிறது'' எனலாம்.

உண்மை அதுவல்ல; பொதுவுடைமை நாடான ரஷ்யாவும், பிற போக்கு நாடுகளுக்கு உதவத் தயாராயிருக்கிறது.

இந்தியாவின் தொழில் வளர்ச்சி, உணவுப் பிரச்சினைகளுக்கு உதவி புரிய தயாராக இருக்கிறது. பம்பாயில் சமீபத்தில் நடந்த உலகநாடுகளின் பொருட் காட்சியில் பேசிய, ரஷ்யத்தூதர் நோவிகாவ் வெளியிட்டார், "இந்தியாவுக்குத்தேவையான, பெரிய இயந்திர சாதனங்களையும் ஆலைச் சாமான்களையும் அனுப்ப ரஷ்யா தயாராகஇருக்கிறது..'

இந்தக் கூற்றுக்கு ஆதாரமாக, வரும் ஏப்ரலில், ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் சர்வதேசப் பொருளாதார மாநாடு ஒன்று கூடப்போவதாகவும் அதில் இந்தியாவைச் சேர்ந்த வியாபாரிகள், தொழில் அதிபர்கள் தொழிற் சங்கத்தலைவர்கள், எல்லாம் அழைக்கப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம்.

"ஆகவே, வேறு யார் இருக்கிறார்கள் உதவி செய்ய!'' என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறுவது உண்மையல்ல.

இன்று மக்கள் விரும்புவது — ஒரு புதுவழி. அதற்கு மூடிபோட முயல்வது—பலனைத் தரமுடியாது. 'உதவி வருகிறது!' என்றுசொல்லி, பழைய தர்பாருக்கு, வழி செய்வது மக்களால் இனி ஏற்கப்படாது. இதை மனதிலுறுத்தவேண்டும் — அமெரிக்காவுடன் ஆலிங்கனம் செய்வோர்!

ஆகவே, மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி உண்டாக்கக் கூடிய வழிகளைப் பின்பற்ற வேண்டும். கண் முன்னால் காண்கிறோம் ரஷ்யா, எப்படி தன் தொல்லைகளைத் தீர்த்து முன்னேறியிருப்பதென்பதை. அதே போலத்தான், விவசாயநாடான இந்திய உபகண்டமும் திட்டங்களைத்தீட்ட வேண்டும் — நேசத்தோடு 'புது வழி' கண்டோர் நிட்டம்பழகி மக்களின் துயர் துடைக்க முயலவேண்டும். பழையதர்பார் பலன் தராது! பழைய முறை கேடு தான் தரும்!!

## ஆலோசகர் நியமனம்

திருவாங்கூர் கொச்சிக்கு, டில்லிபீடம், ஆலோசகர் ஒருவரை நியமித்திருக்கிறது. பெயர்தான் ஆலோசகரே ஒழிய, இந்தநபருக்கு பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

"இந்த ஆலோசகருக்கு, உத்திரவுகள் பிரதம மந்திரி நேருவிடமிருந்தோ, அல்லது பார்லிமெண்டிலிருந்தோ வராது. மத்திய சர்க்கார் காரியாலயத்திலிருந்து தான் வரும். எனவே ராஜ்ய மந்திரிசபையின் ஆலோசனையிலிருந்து வரும் விஷயங்களை ஆலோசகர் கவனிக்க வேண்டியதில்லை. ஆலோசகரின்நியமனம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காரைத் திணறடிக்கத்தான் உதவியாயிருக்கும்'' என்று திருவாங்கூர் ராஜ்யத்தின் முன்னாள் அட்வகேட் ஜெனரல் ஒருஅறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இந்த ஆலோசகர், மந்திரி சபையின் கூட்டங்களிலும்கலந்துகொள்வாராம். "சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு வெளி நபர் மந்திரிசபை கூட்டத்தில் கலந்து கொள்வது உலகில் எந்த ஜனநாயக நாட்டிலும் இல்லாத வழக்கம்'' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

காங்கிரசுக்கு சாவுக்குழி தோண்டிய திருவாங்கூருக்கு ஏனிந்த ஆலோசகர்நியமனமோ தெரியவில்லை! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட சபை இருக்கிறது — சர்க்கார் காரியங்களை நடத்தப்போகிறது. இந்நிலையில் ஏன், இந்த ஆலோசகரை நியமிக்க வேண்டும்? டில்லியின் பொம்மையாக இருக்கவா! விசித்திரமான நியமனம் இது!!

❀

## கோவை ஆரம்ப ஆசிரியர் மாநாடு

கோவை மாவட்ட ஆரம்ப ஆசிரியர்களனைவரும் ஒன்று சேர்ந்து தமது கோரிக்கைகளுக்காகப்போராடவேண்டுமென்றும் இந்த நோக்கத்துடன் வரும் ஏப்ரலில் மாவட்ட மாநாடு ஒன்று நடத்த இருப்பதாகவும் அதற்கு எல்லா ஆசிரியர்களின் தொடர்பும் வேண்டப்படுவதாகவும் மேற்படி மாநாட்டு அமைப்பாளர்களான அ. சீனிவாசன், சி. வேலுசாமி தெரிவிக்கின்றனர்.


தயாராகிறது!

மு. கருணாநிதியின்

**விடுதலைக்கிளர்ச்சி**

திராவிடப்பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

வாசித்தீர்களா! ஆயிரக்கணக்கில் விற்பனையாகிறது
விளம்பரங்களுக்குத் தக்க பலன் தரும் இதழ்




ஏஜண்டுகள் தேவை. மானேஜர் "களஞ்சியம்" 38, செயின்ட் மேரீஸ் ரோடு, சென்னை 18




# ☆ நாக நாடு ☆

"நரமாமிசம் படைப்போர்! மனிதர்களைப் பலியிடுவோர்! காட்டுமிராண்டிகள்! நாகரீகமில்லாதவர்கள்! மண்டையோடுகளுக்கு பூஜை செய்யும் மனோபாவம் படைத்தவர்கள்!'' என்றெல்லாம், பேசப்பட்ட நாகர்கள் தனிநாடு கேட்கிறார்களாம்.

அஸ்ஸாம் மாகாணத்தைச் சேர்ந்த நாகமலைகளில் வசிக்கும், இரண்டு லட்சம்பேர், தமக்கோர் நாடு, வேண்டுமென்கிறார்கள்.

நாகமலைக் குன்றுகள், நாகரீக ஒளி, பரவாத இடமாகும். அங்கே வாழும் மலைசாதி மக்கள் இவர்கள். வனமிருகங்களோடு எதிர்த்துப் போராடிக்கொண்டு, காட்டுக்குள் குடிசைகள் அமைத்து, மலைக் குன்றுகளைத்தாவி, மேடும்பள்ளமும் கடந்து, இருட்டிலே அலையும், மலைசாதிமக்கள், தமக்கோர் தனிநாடு கேட்கிறார்கள்.

கடந்தவாரம், நாகமக்களின் தலைவர் பிஜோ, இந்தியப் பிரதமர் பண்டித நேருவைச் சந்தித்து, நாகநாடு வேண்டுமென்று, வலியுறுத்தியிருக்கிறார். அவர்தம் கோரிக்கைக்கு நேரு, மறுத்து, பதில் தந்திருக்கிறார் — 'கொஞ்சம்பேர் நீங்கள். தனியாக வாழமுடியாது' என்று. தாமே நீதிபதியாக, அமர்ந்து தீர்ப்பு தந்திருக்கிறார்.

இந்தப் பதிலைக்கேட்ட நாகர்கள் தலைவர், சோர்ந்துபோய்விடவில்லை. 'நாகநாடு பெற்றே தீருவோம்' என்று முழக்கமிட்டிருக்கிறார். காந்தியார் விட்டுச்சென்ற பாதை தெரியும் எங்களுக்கு—சாத்வீகப்போராட்டம்—அதை மேற்கொள்வோம், இந்த சர்க்காரின் சட்டங்களைமறுப்போம், சத்யாக்கிரகங்கள் செய்வோம்—என்று தணியாத விடுதலை வேட்கையோடு, பிஜோ அறிவித்திருக்கிறார்.

'குண்டுகள் எம்மைத் துளைத்தாலும், துப்பாக்கிகள் சுட்டாலும்— அதைத்தாங்கும் சக்தியும் உண்டு எமக்கு. தயங்கோம், இவைகளைத் தாங்க' என்றும் பிரகடனப்படுத்தியிருக்கிறார், பிஜோ.

நாகநாடு—கேட்பவர்கள் இரண்டு லட்சம்பேர் — அதுவும் மலை ஜாதி மக்கள்—நாகரீகமில்லாதவர்களென நையாண்டி செய்யப்படுபவர்கள் — அவர்கள் கேட்கிறார்கள் தனிநாடு. அதை பெற்றுத்தீரவேண்டுமெனப் போராடத் துவங்கியிருக்கிறார்கள். தமக்கோர் நாடு தேவை என்கிற, முழக்கத்தைக் காட்டி, அண்மையில் நடைபெற்ற இந்தியப்பொதுத் தேர்தலை பகிஷ்கரித்திருக்கிறார்கள் தமது மக்களில் எவரையும்அனுப்பவில்லை, பாராளுமன்றத்துக்கு. தமது உரிமைக்குரலை, இவ்விதம், உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

அவர்கள் மலைஜாதி மக்கள்—நாகரீகமில்லாதவர்கள் — அங்கே ஒரு பிஜோ — உலகங்களைச் சுட்டிக் காட்டி, விடுதலை முழக்கமிடுகிறார்— அவர் காட்டிய பாதையிலே செல்லக் காத்துக்கிடக்கிறார்கள், நாகமக்கள். இரண்டு லட்சம் தொகையினர்! எனினும் தனிநாடு கேட்கிறார்கள்.

அறியாமை இருளுக்குள் கிடத்தப்பட்டிருக்கும், மலைநாட்டுமக்கள் இன்று விடுதலைகீதம் பாடுகிறார்கள் — டில்லியின் பிடிப்பிலிருந்துவிடுபடவேண்டுமென விரும்புகிறார்கள் இயற்கையின் தொட்டில்போல், மேடு பள்ளமும், அடர்ந்த மரங்களும், உயர்ந்த சரிவுகளும், பாயும் மிருகங்களும், ஓடும் சிற்றாறுகளும் நிரம்பிய தமது இருப்பிடம் தனியாகவேண்டும் — தாமே நிர்வாகம் நடத்த வேண்டும் எனத் துடிக்கிறார்கள்.

ஆனால் நம்மவர்! பண்டைப்பெருமைகள்பற்றி பலப்பல பேசுவர். எகிப்துநாட்டு எழிலரசி கிளியோபாத்ரா காலத்தில், எமது பூமியிலிருந்து முத்துக்கள் விற்பனையாயிற்று என்று பேசும் திறன்படைத்தோர் உண்டு — ரோமாபுரியும் ஏதன்சும் எழிலோச்சிய நாட்களில் சிங்காரத்தோடிருந்தது தெரியுமோ எமது நாடு — என்று செப்புவர், பெருமையோடு. எலிமயிராடை!— எமது நாட்டியிலிருந்து அனுப்பப்பட்ட ஆடையின் பெயர் இது, என்பர். கோட்டைகளைக் காட்டுவர்— குழிந்துகிடக்கும்அகழ்களைச் சொல்வர்; கோயில்களைப்பற்றிக் கூறுவர் —அது கட்டப்பட்ட காலத்தைப் பற்றி வர்ணிப்பர். உலகத்துக்கே நாகரீகம் சொல்லித்தந்தது தென் பாகம்தான்—முப்பக்கமும் அலைகள் தழுவிக் கிடக்கும் இதுதான் நாகரீகம் வளர்த்த தொட்டில் திரைகள் முத்தமிட்ட இடம்' திரை — இடம்—திராவிடம் என்று, அமுதத் தமிழில், காரணங்காட்டி விளக்கும் பண்டிதமணிகளும், அவர்தம் விளக்கவுரைகேட்டு 'ஆகா!' என்று வியந்து, 'பிரசங்கம் பிரமாதம்' என்று கூறும் பெம்மான்களுமிருக்கிறார்கள். ஆனால், நாம் தனிநாடு கேட்பதுபற்றி— சிந்திப்பதுமில்லை; நினைப்பதுமில்லை, அவர்கள். சோபாவிலே அமர்ந்தபடி 'எப்படி சார்?' என்பதும், கதராடை அணிந்து கொண்டு "ஏன் இது?'' என்றும், "ஏதோ பேசுகிறார்கள்!'' என்ற பாராமுகத்தோடு பலரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்திய உபகண்டத்தின் வடகிழக்கெல்லையைக் காட்டவிரும்புகிறோம் – பாருங்கள் நண்பர்களே பாருங்கள்! நாகநாடு– கேட்கிறார்கள் நாகர்கள்!! நாகரீக மற்றோர் என்று கேலி செய்யப்பட்ட நாகர்களிடையே ஒரு பிஜோ தோன்றினர் — விடுதலை தாகம் பிறந்துவிட்டது. ஏடுகளைக் காட்டி பழம்புகழ் பாட முடியாதவர்கள், அவர்கள். காட்டிலே உலவியோர்! இன்று நாடு கேட்கிறார்கள்—தனி நாடு!! டில்லியின் தொடர்பு கத்தரிக்கப்பட்டு—அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து விடுபட்டு—தமது நாகக் குன்றுகள் தனிநாடாக வேண்டுமெனக்கூறுகிறார்கள். அவர்களுக்கு சரித ஆதாரங்கள் கிடையாது! பண்டைப்பெருமைகள்பற்றி பேசமுடியாதவர்கள்! இப்போதுதான் நாகரீக ஒளிபெற்று வருபவர்கள்! அவர்கள், எழுப்புகிறார்கள், உரிமை முழக்கம்!! நாகரீகஒளி சிதறத் துவங்கி, உலகைப்பற்றி உணரத் துவங்கியதும், அவர்கள் உள்ளங்களிலே 'அடிமை விலங்கு' தென்பட்டிருக்கிறது — அது உடைத்தெறியப்படவேண்டுமென கர்ஜிக்கிறார்கள்—பிஜோ தலைமையில்.

பிறருக்கேன் ஆட்பட்டிருக்க வேண்டும்? — இந்த ஒரு ஆத்திரம் தான் அவர்களை விடுதலைப்போராட்டத்தில், குதிக்கச் செய்திருக்கிறது

—பரணி பாடுகிருர் பிஜோ.

நாமோ, டில்லியிடம் கட்டுண்டிருப்பதாலுள்ள தொல்லைகளை காட்டுகிறோம் — ஆதாரத்தோடு. பழம் பெருமைகள் பற்றிப் பேசுகிருர்கள் பண்டிதரும், புலவர்பெருமக்களும். 'தென்ஞடு எப்போதுமே சிறந்த பூமியாச்சே!' — என்று, வடக்கேயுள்ளவர், பொருமைக் கண்களோடு பேசும் நிலை பெற்றிருக்கிறோம். திரை இடம்! — சிறந்து விளங்கிய காலம் உண்டு, நமது வரலாற்றில். நாகரீகச் சிறப்பும், கலையழகும், பழம் பெருமையும் வாழ்ந்த நமது நாடு—டில்லியால் ஏமாற்றப்படுகிறது! இதைத் தினசரி காணும் நம்மவரோ பேசாது இருக்கிருர்கள்—பேசினுலும், 'முடியுமோ இதெல்லாம்?' என்கிருர்கள். அங்கே பாருங்கள்! இரண்டு லட்சம் தொகையினர்—குன்றுகளிலே வாழ்வோர்—நாகரீகக் கதைகள் இல்லாதோர்—தனிநாடு கேட்கிருர்கள் — நாகநாடு வேண்டுகிருர்கள்! நாமோ, ஐந்து கோடிமக்கள்—வளமிருந்த நாட்டினைக்கொண்டோர்—பழம் பெருமை பெற்றோர் —இன்னும் எத்தர்களால் ஏமாற்றப்படும் — இழிநிலையிலிருப்போர் — நமக்கென ஒருநாடுகேட்டால் கேலிசெய்யப்படுகிறோம்.!!

✲

---

## திராவிடன்

முற்போக்கு வார இதழ்

ஆசிரியர்

**என். வி. நடராசன்**

கீழ்கண்ட ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

விருத்தாசலம் ஈரோடு
ஆத்தூர் (சேலம்) கரூர்
தாராபுரம் திருத்துரைப்
மணப்பாரை. பூண்டி

நிர்வாகி—'திராவிடன்'
18, பெருமாள்முதலி தெரு,
சேன்னை 1.

---

## இலங்கையில்

இலங்கை திராவிட முன்னேற்ற மத்திய கழகத்தார், தமது சேவைகளை விளக்கி, நமக்கோர் கடிதம் எழுதியிருக்கிருர்கள்.

விரைவில் 'இலங்கை தி. மு. க. முதல் மாநாடு நடத்தப்பட வரவேற்புக்குழு தேர்ந்தெடுத்து, அதற்கான முயற்சியிலீடுபட்டிருப்பதாகவும், அதில் கலந்துகொள்ள இங்கிருந்து தோழர்கள் சிற்றரசு, கருணுநிதி, என். வி. நடராசன் ஆகியோர் அழைக்கப்பட்டிருப்பதாகவும் அறிய வருகிறோம்.

சென்னை மாநில மாநாட்டின் போது இலங்கை தி.மு.க. சார்பில் தோழர்கள் கே. கந்தசாமி, எஸ். கே. மாயகிருட்டிணன் ஆகியோர் வந்து கலந்துகொண்டதோடு, தி. மு. க. பொதுச் செயலாளரிடம், தமதுவேலைமுறையையும், இலங்கை வாழ் திராவிடரின் ஆர்வத்தையும் எடுத்துச் சொல்லினர். அவர்கள் ஆர்வத்தைக்கண்ட மகிழ்ச்சியடைந்தோம். இப்போது அவர்கள் அனுப்பி வைத்துள்ள, அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

"இலங்கை தி. மு. க. முதல் மாநாட்டை மார்ச்சு இறுதிக்குள் நடத்தவேண்டுமென, எல்லோரும் முடிவுசெய்துள்ளோம். மாநாட்டுத் தலைவர்களுக்கான 'பாஸ்போர்ட்' அனுமதி கிடைத்ததும் மாநாட்டின் இடமும் தேதியும் நிச்சயிக்கப்படும். எங்கள் மத்திய கழகத்தின்கீழ், கீழ்கண்ட ஊர்களில் கிளைகள் இருக்கின்றன."

(1) கண்டி (2) அந்தோணிமலை (3) வத்துகாமம் (4) தலவாக்கொல்லை (5) தோட்டப்பகுதி, கடுகன்னுவா. இன்னும் மத்தியகழகத்தில் இணையாமலிருக்கும் பகுத்தறிவு கழகங்களும், இலங்கை பல்கலைக் கழக தமிழ்ச்சங்கம், கண்டி மத்திய மாகாண தமிழ்ச் சங்கம் ஆகியவைகள் மாநாட்டிற்கு ஒப்புதலும், பிரச்சாரக் கூட்டங்கள் நடத்தவும் ஒத்துழைக்கின்றன.

இந்த விபரத்தைத் தந்து, இன்னும் தாங்கள் கழகக் கொள்கைகளை வளர்க்க இட்டிருக்கும் திட்டங்களைப்பற்றியும் குறிப்பிட்டிருக்கிருர்கள். இலங்கையில் நமது இயக்க நாடகங்கள், அடிக்கடி நடத்தப்பட்டுவரும் செய்திகளை, அங்கிருந்துவரும் தமிழ் ஏடுகள்மூலம் அறிய வருகிறோம்.

பல ஆர்வமுள்ள காளைகள், இலங்கையில் இருக்கிருர்கள், அனைவரும் ஒன்றுபட்டு, அறிவுப் பணியிலீடுபடுவதை வரவேற்கிறோம். அவர்தம் பணி வளர்ந்து, தாயக விடுதலைக்கு, ஊன்றுகோலாக இருக்க வேண்டும்.

★

---

## ஆரிய வெளியீடுகள்

**கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்**
(இரா. நெடுஞ்செழியன் M.A. எழுதியது)
ரூ. 0—12—0

சொற்ப் பிரதிகளே கைவசமுள்ளன.

**ராஜாடி ராஜா!** ரூ. 0—12—0
( இரா. செழியன் M. A. )

**பொது அறிவு 1.**
ரூ. 0—8—0
( இரா. செழியன் M. A. )

விற்பனைக் கழிவு 25%, ஐந்து ரூபாய்க்குமேல் ஆர்டர் தருவோருக்கே விற்பனைக் கழிவு தரப்படும். அஞ்சல் செலவும் ஏற்கப்படும். V. P. P-யில் அனுப்ப செலவு தனியே செலுத்தவேண்டும். விவரங்கட்கு:-

**மன்றம் பதிப்பகம்**
12, வைத்தியநாதமுதலித்தெரு
சேத்துப்பட்டு, சென்னை 10.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press.
95, Tirukkachinambi St., Kancheepuram.

---

112

REGD No M 4642

# திராவிடநாடு

விலை அணு 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 30—3—52 | இதழ் 39

# "ஆரிய மாயை" தீர்ப்பு

[ சி. என். ஏ. ]

"பிடிபட்டு விட்டான் அந்த அக்கிரமக்காரன்"

"விட்டு விடுவார்களா இப்படிப் பட்டவனை!"

"கண்ணை மூடிக்கொண்டிருக்கிருர்கள்—என்று எண்ணிக் கொண்டிருந்தான். இப்போது தெரியும், எப்படிப்பட்டவர்கள் நாட்டை ஆள்கிருர்கள் என்று"

"ஆமாம்! இவ்விதமானவர்களைப் பிடித்துத் தண்டிக்காமலிருந்தால், பலருக்கும் தலைக்கிறுக்கு ஏறிவிடும். புத்தி வருகிறவிதமாகத் தண்டனை தரவேண்டும். பச்சைப் பயிரை அழிக்கும் மாடு கண்டால் கம்போ கல்லோ, எது கிடைக்கிறதோ அதைக் கொண்டு தாக்கித் துரத்தா விட்டால், பயிர் ஏது!"

"அதிலும் இவன் செய்த குற்றம் எப்படிப்பட்டது தெரியுமா? ஊரார் பருகிட உபயோகமாகும் திருக்குளத்திலே விஷக்கிருமிகளைக் கலந்துவிட்டான்."

"படுபாவி! என்ன நெஞ்சழுத்தமய்யா இவனுக்கு"

"யாருக்குத் தெரியப்போகிறது என்ற எண்ணம்."

"விஷக்கிருமி கலந்த தண்ணீரைப் பருகி மக்கள், எவ்வளவு கஷ்டப்படுவார்கள்"

"மக்களுக்கு, ஒருவிதமான புதிய நோய் அல்லவா கண்டுவிட்டது"

"என்ன நோய்?"

"என்ன நோய் என்று பெயரிடுவது. அந்த அக்கிரமக்காரன் செய்த காரியத்தால், மக்கள் மனதிலே ஒருவிதமான கொதிப்பு நோய்! கோபம்! எதையும் சட்டை செய்யாத தன்மை! எவருக்கும் அடங்க மறுக்கும் போக்கு! இது என்ன, அது எப்படி என்று எதற்கு எடுத்தாலும் கேள்விகேட்கும் துடுக்குத்தனம்! புருவத்தை நெறிப்பது! புன்னகை புரிந்தபடி புதுப்புது கேள்விபோடுவது! இப்படி மாறிவிட்டார்கள் அந்த மக்கள்."

"புதியநோயின் காரணமாக...!"

"ஆமாம்! சூட்சமம் தெரியவில்லை நெடுநாளாக......"

"அப்படியானல் அந்தப் பாதகன் பொதுக்குளத்திலே விஷக்கிருமிகளைக் கலக்கியது, இப்போதல்லவா?"

"இல்லை, இல்லை, அவன் அந்தக் காரியம் செய்து, வருஷம் ஐந்து ஆறு இருக்கும்"

"அவ்வளவு நாள் பொறுத்துக் கண்டு பிடித்தார்கள்"

"ஆமாம். இவ்வளவு நாளாகிவிட்டதே இனியார் இதைக்கண்டு பிடித்து நம்மைக் கண்டிக்கப்போகிருர்கள், தண்டிக்கப் போகிருர்கள், என்று எண்ணிக் கொண்டான்"

"ஏமாளி! நாடாள்பவர்களின் போக்கு தெரியாதவன்."

"திடீரென்று ஒரு நாள், பிடி பயலை! என்று உத்திரவு பிறந்தது —விழித்தான் — அடைத்தார்கள் கூண்டில் — வழக்கு நடைபெற்றது —நான் விஷக்கிருமியைக் கலக்கவில்லை, பொதுக்குளத்திலே பாசியும் தூசியும் படிந்துகிடந்தது, அதைத்தான் அப்புறப்படுத்தினேன் என்று வாதாடினுன். நாடாள்பவர்களா இதற்கு ஏமாறுவார்கள்! திருக்குளத்துத் தண்ணீரில் விஷக்கிருமிகள் இருப்பதை ஆராய்ச்சி மூலம் எடுத்துக்காட்டினுர்கள்."

'பலே! திறமையானவர்களல்லவா நாடாள்கிருர்கள். இவன் தந்திராகத்தப்பித்துக் கொள்ளப் பார்த்தால், முடியுமா?"

"உள்ளே தள்ளிவிட்டார்கள்"

"வேண்டியதுதான் — வேண்டியதுதான்"

"ஊராருக்கும் அறிவித்து விட்டார்கள், பொதுக்குளத்திலே விஷக்கிருமி கலந்துவிட்டிருப்பதை"

"சரியான வேலை செய்தார்கள். இவ்வளவு திறமையாக வேலைசெய்தால்தானே, ஆட்சி இலட்சணமாக இருக்கும்"

"ஆட்சி இலட்சணமாக இருந்தால்தானே மக்கள் சுபீட்சமாக இருப்பார்கள்."

"மக்கள் சுபிட்சமாக இருக்க வேண்டுமானால், விஷக் கிருமிகளைப் பொதுக்குளத்திலே கலக்கிவிடும் காதகர்கள், பிடிபட்டாகத்தானே வேண்டும்"

"பிடிபட்டுவிட்டான் அக்கிரமக்காரன்"

* * *

அவன், பொதுக் குளத்திலே, பாசியும் தூசியும் குவிந்துவிட்டதாலே, தண்ணீர் கெட்டவாடை அடிப்பது தெரிந்து, மக்களுக்கு 'இதம்' செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்தாலே தூண்டப்பட்டு பாசியையும் தூசியையும் அப்புறப்படுத்திவந்தான். ஆழமான குளமப்பா, படிக்கட்டுகள்கூட வழுக்கலாக இருக்கும் ஆபத்து நேரிட்டுவிடப் போகிறது, என்று கூட நண்பர்கள் எச்சரித்தனர், அவனோ, கடமையைச் செய்யத்தானே வேண்டும் என்றான் — செய்து கொண்டு வந்தான்! ஓராண்டு ஈராண்டல்ல, ஆறாண்டுகளாக! ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, திடீரென நாடாள்வோரிடமிருந்து தாக்கீது புறப்பட்டது, "நாசகாலனே! நமது ராஜ்யத்திலே, பொதுக் குளத்திலே விஷக்கிருமிகளைக் கலந்துவிட்டிருக்கிறாய், இந்த மாபெரும் குற்றத்துக்காக தண்டிக்கப்போகிறோம்" என்று. அவன் திடுக்கிட்டுப் போனான். விஷக்கிருமிகள், குளத்திலே இருப்பது தெரிந்துதான், நான் அந்தக் கிருமிகள் உற்பத்தியாவதற்குக் காரணமாக உள்ள அழுக்குகளை அப்புறப்படுத்துகிறேன்—இதற்காக, பாராட்டவேண்டாம் என்னை, ஏனென்றால் நான் சூமானல்ல சீமானல்ல, சாமான்யன் ஆனால் இதற்காகத் தண்டனையா! இதென்ன விதமான ஆட்சி ஐயா!!—என்று கேட்டான். சிறையின் உள்ளே போட்டுப் பூட்டினார்கள். அக்கிரமக்காரன்பிடிபட்டான்என்று ஆட்சியாளர்களின் ஆதரவாளர்கள் முழக்கமிட்டனர். இந்த ஆட்சியிலே இப்படிப்பட்ட தீயர்களைப் பொசுக்கிவிடுவார்கள் என்று எச்சரித்தனர். ஊராரில் பெரும்பாலோர், நமக்கென்ன தெரியும்—நாடாள்பவர்கள் காரணமில்லாமலா தண்டிப்பார்கள் — என்று பேசிக் கொண்டனர். ஆட்சியாளரின் ஆதரவாளர்கள், விஷக்கிருமி கலந்தான் விபரீத புத்திக்காரன், விட்டுவைக்கலாமா இப்படிப்பட்டவனை' என்று கேட்டனர். ஆட்சியாளர் செய்தது நியாயம் என்று நிலைநாட்டப்பட்டது. அவன்சிறையிலே!!

* * *

ஏ! கைதி! உன்னைத்தான்—என்ன உறக்கமா? எழுந்திரு, எழுந்திரு, புறப்படு, புறப்படு—என்றார்கள் சிறைக் காவலர்.

## 6-4-52ல் பொதுக்குழு கூட்டம்

அன்புடையீர்,

வணக்கம். மாநில மாநாடு முடிந்து, தி. மு. க. வின் முதல் பொதுக்குழுக் கூட்டம் 6-4-52 ஞாயிறு காலை 10-மணிக்கு ஈரோடு எஸ். ஆர். சந்தானம் மண்டபத்தில் நடைபெறும். அவ்வமயம் கழக சம்மந்தமான வேலைகள் குறித்தும், கழக சட்டதிட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கான முறைகள் பற்றியும், மாநில மாநாட்டுக் கணக்குவகை பற்றியும் கழக தினத்தாள் குறித்தும் கலந்து பேசப்படும். பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. வரத்தவறியிருந்தாலும், இதையே அழைப்பாக ஏற்று கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்,

**அண்ணாதுரை**

"எங்கே?" என்று கேட்டான் கைதி.

"ஊருக்கு—வீட்டுக்கு—விடுதலை உனக்கு" என்றனர்.

"எனக்கா! ஏன்?" என்றான் கைதி.

"ஏன்! என்ன கேள்வி கேட்கிறாய், போ என்றால் போவாயா, என்னமோ, ஏன்! போ—போ! என்றனர். வெளியே சென்றான்.

பிறகோர் நாள், அவன் களஞ்சியத்திலே இருந்த கம்பு வரகு தானியத்தை ஆட்சியாளர்கள் எடுத்துச் சென்றனர்—அபராதத் தொகைக்கு ஈடு என்று! அதுவும் போச்சுதா என்று அவன் ஆயாசப்பட்டான்.

விஷக்கிருமியைக் குடி தண்ணீரில் கலக்க குற்றம் இலேசானதா? ஆள வந்தார்கள், உள்ளே தானே தள்ளுவார்கள், உல்லாசமாக இருந்து விட்டு வந்துவிட்டாப என்று அவன் எண்ணிக் கொண்டான். ஆளவந்தார்கள் அசகாயசூரர்களல்லவா, ஆளை வெளியே போகச் சொல்லிவிட்டு, களஞ்சியத்திலே இருந்த தானியத்தை எடுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள். சோணகிரி போலாகிவிட்டான் பயல்!—என்று இதையும் கீர்த்தனமாக்கிப்பாடினார்கள், ஆளவந்தார்களின் தாளந்தட்டிகள்.

* * *

நாட்கள் பல சென்றன—மாதங்கள் பல சென்றன. நாட்டிலே உள்ள நல்ல றங்கூறுமன்றம் கூடிற்று—பொதுக் குளத்திலே விஷக்கிருமி தூவவில்லை, தூவியதாகக் குற்றம் சாட்டியது தவறு, தண்டனை தந்தது மிகத் தவறு, விடுதலை செய்க, என்று தீர்ப்பளித்தது. குற்றம் செய்யவில்லை—நல்லறங் கூறுமன்றம் தீர்ப்பளிக்கிறது. அவனோ, தண்டனையை ஓரளவு அனுபவித்துமாகிவிட்டது! அவன், விஷக்கிருமிகளைத் தூவிவிட்டான் என்பது ஆதாரமற்றது— தீர்ப்பு! ஆட்சியாளரோ, ஊராருக்கு உரத்த குரலிலே அறிவித்தது, இவன் அக்கிரமக்காரன், பொதுக் குளத்திலே விஷக் கிருமிகளைக் கலக்கினான், என்பது! ஆட்சிக்குப் பாதந்தாங்கிகளும், பராக்குக் கூறுவோரும், ஆமாம் ஆமாம் என்றனர்! எடுபிடிகள் கொக்கரித்தனர்! அறங்கூறு மன்றம் கூறுகிறது அவன் குற்றமற்றவன், என்று! அவனோ, செய்யாத குற்றத்துக்காகச் சிறையில் தள்ளப்பட்டுக் கிடந்தான்—வரகும் பறித்துச் சென்றனர்.

* * *

எந்த அநியாயபுரி 'ராஜ்யத்து'க் கதை இது என்கிறீர்களா! எல்லாம், நம்ம ராம ராஜ்யத்துக் கதைதான்!! சென்னை மாகாணத்திலே! சீறும்



சிறப்பும் பெற்று செங்கோல் செலுத்திவரும் கதருடையார் ஆட்சியிலேதான்!!

1943ல் குற்றம் செய்தான் என்று 1949ல் வழக்கு, 1952ல், ஆதாரமில்லை விடுதலை செய்க, என்று உயர்நீதிமன்றத் தீர்ப்பு!!

* * *

நான் 'விடுதலை' செய்யப்பட்டுவிட்டேன்! உண்மைதான், நண்பர்களே! சென்னை உயர்நீதிமன்றம், நான் குற்றமற்றவன் என்று தீர்ப்பளித்துவிட்டது, விடுதலை செய்யுமாறு கூறிவிட்டது. விடுதலை கிடைத்துவிட்டது.

"ஆரிய மாயை" என்ற ஏடு எழுதினேன், நாடாளும் நல்லோர்கள், அந்த ஏடு மக்கள் மனதிலே வகுப்புத் துவேஷத்தைப் புகுத்துகிறது என்று கண்டுபிடித்தனர்!! 1943ல், 'திராவிட நாடு' இதழிலே பல கட்டுரைகள், இந்நாட்டு நிலையை விளக்கியும், ஜாதி பேதம், இவைகளால் உண்டாகும் கேடுகள், இவை ஏற்படக் காரணம், இவை களையப்படவேண்டியதன் அவசியம், இவைகளை விளக்கி "ஆரிய மாயை" என்ற தலைப்பிலே பல கட்டுரைகள் தீட்டினேன்—இது புத்தக வடிவாக வெளி வந்தது—என் அனுமதியுடன் தான்!—இந்த ஏடு, நாட்டிலே நச்சுக் கருத்துக்களைப் பரப்புகிறது என்று கண்டறிந்த கதருடையார், 1949ல் என்மீது வழக்குத் தொடுத்தனர் — தண்டித்தனர் — சிறை சென்றேன்.

பொதுக் குளத்திலே விஷக் கிருமிகளைக் கலந்த குற்றவாளிக்கு ஒப்பாக, என்னைச் சித்தரித்தனர் ஆளவந்தார்களின் ஆதரவாளர்கள்! பொது மக்கள் மனதிலே வகுப்புத் துவேஷம்' குறிப்பிட்டுக் கூற வேண்டுமானால், 'பிராமணத் துவேஷம்' ஏற்படுகிறது 'ஆரிய மாயை' மூலம், ஆகவே 153வது செக்ஷன்படி நான் குற்றவாளி, என்று கூறினர் காங்கிரசாட்சியினர், நான் தண்டிக்கப்பட்டது, முறையான செயல்தான், நாட்டிலே கேடு பரவாதிருக்க இத்தகைய நடவடிக்கையை நல்லறிவு படைத்த 'சர்க்கார்' எடுக்கத்தான் வேண்டும், என்று பேசினர். மட்டரகங்கள் ஏசவும் செய்தன!

சர்க்கார், எல்லா வகுப்புகளுக்கும் பொதுவானது — இந்த நிலையிலே ஒரு வகுப்பின் மீது மற்றோர் வகுப்பு துவேஷம் மூட்டுவது, சகிக்க முடியாத குற்றம், என்று சட்டத்தைக் கட்டி அணைத்தபடியும் சிலர் பேசினர். புத்தகத்தை வெளியிட்டவருக்கு 500 ரூபாய் அபராதம்—எனக்கு 700! கட்ட மறுத்தேன், சிறையில் தள்ளினர். பத்து நாட்களில் வெளியே துரத்தினர். சென்னையில் அலுவலகத்திலே இருந்த காகிதக் கட்டுகளைத் தூக்கிச் சென்று, 'கடை வைத்து' விற்றுப் பணமாக்கிக்கொண்டனர்—700 கிடைத்துவிட்டது ஆளவந்தார்களுக்கு!

சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்து, ஆரிய மாயை எனும் ஏடினைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்து, அதிலே வகுப்புத் துவேஷம் ஊட்டும் பகுதிகள் இருப்பது நிச்சயமாகத் தெரிந்து, வழக்குத் தொடுத்தனர், சர்க்கார் — இதிலே தவறு என்ன? இதற்கு ஏன் குய்யோ முறையோ என்று கூவுகிறார்கள் இந்த கோணற்புத்திக்காரர்கள், என்று கொக்கரித்தனர், கொடி தாங்கிகள்! ஆர அமர யோசிக்காமல் அன்னை பாரத மாதாவின் அருமருந்தன்ன பிள்ளைகள்,' வழக்குத் தொடுக்கமாட்டார்கள், வம்புக்கு இழுக்கமாட்டார்கள், என்று பேசினர் சிந்துபாடிச் சொந்த இலாபம் தேடிடும் சிலர்கள். சர்க்கார் ஒரு எழுத்தாளன் மீது, வழக்கு தொடருவது என்றால், உண்மையிலேயே மிக மிக யோசனைக்குப் பிறகே, வழக்குத் தொடர வேண்டும்.

முருகன் மீது எப்படியாவது ஒரு வழக்குத் தொடுக்கவேண்டும் என்பது கந்தனின் ஆவல்—கந்தன், நண்பன் சோமனிடம் யோசனை கேட்கிறான் — சோமன் ஒரு அடாவடிப் பேர்வழி—"இதற்கென்ன கந்தா! என் வீட்டுக் காளையை முருகன் தன் வீட்டுத் தொழுவத்திலே கட்டி வைத்து மூன்று படி பாலைக் கறந்தெடுத்துக் கொண்டான்" என்று வழக்கு போட்டால் போகிறது என்று யோசனை கூறினால் கந்தன், சர்வ சூன்யனாக இருந்தால்கூட "ஏனடா சோமா! என்னை இழிவுபடுத்தவா இந்த யோசனை சொல்கிறாய். காளை பால்கறந்தது என்று கூறினால் என்னையல்லவா, அடிமுட்டாள் என்று சொல்வார்கள்." என்று கேட்கமாட்டானா! என்மீது தொடரப்பட்ட வழக்கோ, கந்தன், முருகன் போன்றாருடையதல்ல. சர்க்கார்வாதி! நான் பிரதிவாதி! சர்வவல்லமை பொருந்திய சர்க்கார் அதன் சட்ட திட்டங்களுக்கு அடங்கி நடக்கும் பொறுப்புள்ள ஒரு 'பிரஜை'மீது தொடுக்கும் வழக்கு! இதிலே, காளைமாடு பால் கறந்தது' என்ற போக்கு, இருக்கலாமா, கடுகளவாவது! இருக்கிறதே, கடுகளவா, கண்டவர் கைகொட்டிச்சிரிக்கும் அளவுக்கு! இரண்டு நீதிபதிகள் உட்கார்ந்து, கூறுகிறார்கள், 'ஆரியமாயை'யில் வகுப்புத் துவேஷம் இல்லை, என்று—ஆனால், எண்ண, எழுத, சர்வ சுதந்திரம் வழங்கிடும் எழிலரசு அமைத்து இருக்கும் காங்கிரஸ் சர்க்கார், காளை மாட்டுப் பாலைக் கறந்தெடுத்துக் கொண்டேன், என்று வழக்குப் போடக்கூசும் கந்தனைவிட, அவசர அவசரமாக, ஆலோசனையற்று, என் மீது வகுப்புத்துவேஷக் குற்றம் சாட்டிற்று — நான் தண்டனையையும் ஓரளவுக்கு அனுபவித்தேன். இலட்சணம் எப்படி இருக்கிறது!!

நாடாளும் சர்க்கார், ஒரு 'குடிமகன்'மீது வழக்குத் தொடருவது

11-ம் பக்கம் பார்க்க

ஆசிரியருக்கு...

### இந்திக்கு ஆதிக்கம்?

ஐயா,

அரசியலார், இந்தியை விருப்பபாடமாக வைத்திருந்தும், எங்கள் பள்ளியில் மட்டும் அந்த முறை அமுல் நடத்தப்படவில்லை. 'ஒருசிலரின்' ஆதிக்கமே காரணமாகும். நான்காம்படிவ மாணவர்கள் ஒவ்வொருவரும் இந்தியைக் கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கு பெயர் என்ன? இந்தியை கட்டாயமாக்கி வலியுறுத்தும் இவர்களைப் பற்றி சர்க்கார் கவனிக்காதது ஏன்? இனியாவது, ஆட்சிபீடம், தக்க நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்க்கிறோம்.

மானாமதுரை
19—3—52

எ. வெ. செ.
உயர்நிலைப்பள்ளி
மாணவர்கள்

# 'கீழ்ப்பாக்கம்' அலறுகிறார்!

[அண்ணல்]

தாய், நோயால் படுத்தபடுக்கையானாள். தனயனோ ஏழை! டாக்டரோ, மருந்து வாங்கித்தரச் சொல்கிறார். கையில் பணமில்லாததைக் கண்டு கலங்குகிறான் — கண்களிலே நீர் வருகிறது! தாயைப் பார்க்கிறான் — நெஞ்சு கொதிக்கிறது. ஒருபக்கம் மருந்து! மற்றோர் பக்கம் ஏழ்மை!! — அவன் விழிக்கிறான். தாய்ப்பாசம் தனயனைத் தள்ளுகிறது. கொஞ்ச ரூபாய்கள் போதும், அந்த மருந்து வாங்க. ஆனால் ஏது அவனுக்கு! கடைக்குச் செல்கிறான், மருந்துகள் விதவிதமாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன. காரும் கனவான்களும் வருகிறார்கள்—போகிறார்கள். அவனோ கண்ணீரோடு நிற்கிறான்! 'தாய் இறந்து விடுவார்களோ—இந்தமருந்து கொடுக்காவிட்டால்?' —மனிதன்தானே அவனும்! கலங்குகிறான்!! சுற்று முற்றும் பார்க்கிறான். அவன் கை, மருந்துபாட்டிலைத் தொடுகிறது. கடைக்காரர் பிடித்துவிடுகிறார். போலீசார் வருகின்றனர். கூண்டிலே நிறுத்தப்படுகிறான். சிறைக்குள் தள்ளப்படுகிறான். "அய்யா! அய்யா!! என் அம்மாவைப் பாத்துட்டு வந்துடறேனய்யா—கொஞ்சம் விடுங்கய்யா!" —அவன் குரல், அலறுகிறது. ஆனால் சிறைக்கதவு சாத்தப்படுகிறது!

☆

ஏழைக்கு ஏது இன்பம்?—பாரில்
பணமில்லேன்னா
வாழ்க்கையே துன்பம்!
என்ன உலகமடா! ஏழைக்கே
நரகமடா!
தன்னலப் பேய்களுக்கே
தங்கச் சுரங்கமடா!
எப்படி வாழ்வேன்—இனிமேல்?

☆

"தத்ரூபமா எடுத்திருக்கான், பிரதர்! மாடிவீட்டைக் காட்டிட்டு சந்திலே கிடக்கும் குடும்பங்களைக் காட்டறதும்; எச்சிலைக்கு ஓடும் மனிதனைக் காட்டிட்டு சீட்டாடிக் கொண்டு சிங்காரமாகக் கிடப்போரைக் காட்டியதும் ரொம்ப பிரமாதம்!"

"பாத்திங்களா! பாவம்—அந்தப் பிள்ளை அனியாயமா, திருடனுச்சு. அந்த அம்மா என்ன கதி ஆனாங்களோ?"

"வேதாசலமுதலியார் படுத்தின பாட்டைப் பார்த்தியோ — பாவம் மாக்கிளையிலே பிணமானான் அந்த ஏழை!"

☆

இந்தக் காட்சிகள், கடந்த சில வாரங்களாக, கீழ்ப்பாக்கம் நண்பரின் கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. 'சீசன் சரக்கு!' விற்பதில், சாமர்த்தியமும் தந்திரமும் பெற்றவர் நண்பர் 'கல்கி'. அடிக்கடி இதுபோல எழுதுவதும், அதற்கு யாராவது மறுப்பெழுதினால் அதைக் காரசாரமாக்கிப் பத்திரிகைப் பயணத்தை நடத்திச் செல்வதிலும் பேனாபிடித்த நாள்முதல், ஆசை கொண்டவர் அவர். ராஜாஜியைப் பற்றி எழுதி, சர்ச்சையிழுப்பார்—'தியாகபூமி' படத்தைப்பற்றி கண்டித்தோருக்கு 'படலம் படலம்' ஆகப் பதில் தருவார். திடீரென, 'டப்பா' சங்கீதம் என்று பாய்வார்! கோகிலகானக் குரல் கேட்டால் 'மீராவைப் போலுண்டோ மேதினி மீதில்!' என்று படங்களோடு, தனி மலர், போடுவார். தன்னை எவருமே அழைப்பதில்லையென்ற ஆத்திர உணர்ச்சி தலையெடுக்கும்போது 'மோசம் — இந்த சினிமாக்கள்' என்று மூச்சு விடுவார். 'கள்வனின் காதலி'யைப் பார்ப்பார்—கவலைபெருகும்! இத்தகைய எழுத்தாளர், அவர். அவரது இதயத்தில் இப்போது, ஏழைகளைப்பற்றிப் படம்பிடிப்போர், நடமாடத் துவங்கியிருக்கிறார்கள். சீறு சீறென்று சீறுகிறார்! முன்னுக்குப்பின் முரண்பட—அது தானே அவர் திறமை! — எழுதிக் கொட்டுகிறார்!! இப்போதெல்லாம் படம் எடுப்போர், "ஏழைகளின் கஷ்டங்களையும் தொழிலாளர்களின் துயரங்களையுமே காட்டுகிறார்களாம்" அதோடுமட்டுமா? "பணக்காரர்களின் கொடுமைகளைப்பற்றி காரசாரமான பேச்சுக்களையும் நிகழ்ச்சிகளையும் புகுத்துகிறார்களாம்" இந்த நாட்டின் புகழையே கெடுப்பதாகிறதாம்! கல்கி கூறுகிறார். இதுபோல ஏழைகளின் கஷ்டங்களையே காட்டுவதால், "மக்கள் எல்லாம் உழைப்பையே வெறுக்கும்படியாகச் செய்கிறார்களாம்!"— "உழைப்பவன் உழைப்பினால் உயர்ந்து நல்ல நிலைமைக்கு வருவதை நம் நாட்டுப் படங்களில் பார்க்கமுடிவதில்லையாம்" — இந்த முறையின் மூலம், "பணக்காரர் மீது துவேஷத்தை உண்டுபண்ணுகிறார்களாம்!"

☆

பால் ராப்சன் என்றொரு பிரபல பாடகர். அவரது இசை கேட்டு மகிழாதார் கிடையாது, அமெரிக்காவில் அவ்வளவு பிரசித்தி வாய்ந்தவர்! ஆனால், அவரது இசைநிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுப்பதிலே, கவலையும் கருத்துங்கொண்டு, கலகம் விளைவிப்பதும் கலாட்டா செய்வதுமாக இருக்கிறார்கள்—அமெரிக்காவில். காரணம் அவர் ஒரு நீக்ரோ! 'அடிமை ஆண்டான்' பேதம் குறித்து அவர் பாடுகிறாராம்!! வீழ்ந்துபோன தன் மக்களின் நிலை குறித்து அவர் பாடுபடுவது—ஆதிபத்யக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. தடுக்கிறார்கள்! கலாட்டாசெய்கிறார்கள்!! இதைப்போலவே சினிமா உலகில் பிரசித்திபெற்ற சார்லி சாப்ளினுக்கும் ஏற்பட்டிருக்கிறது. அவர் ஒரு சிறந்த நகைச்சுவை மன்னர்! அவரது உள்ளத்தில், ஐசுவரிய நாடெனப் போற்றப்பட்டாலும் அமெரிக்காவில் ஏழைகள் படும் அல்லலும், தொழிலாளியின் வேதனைகளும் தென்படலாயின. அதைப் போக்க, பொதுவுடைமை மருந்தே, பயன்படுமெனக் கூறத் துவங்கினாராம். அதை வலியுறுத்தும் சில படங்களைத் தாமே எடுத்தாராம்—இது அமெரிக்க சர்க்காரின் கண்களுக்கு அவரைச் சந்தேகிக்கச் செய்திருக்கிறது! இது, அமெரிக்காவில்!! அமெரிக்காவோ, பொது



வுடைமையை எதிர்க்கும் நாடு—அங்கே அப்படி. 'கல்கி'யார் அமெரிக்கா'வாகியிருக்கிறார் இங்கே!

* * *

காலைமுதல் மாலைவரை கஷ்டப்படும் கந்தன், செல்கிறான் திரைப்படம் காண. முதலாளியின் முத்திரைகள் தினசரி அவன் முதுகிலே பதியத் தவறுவதில்லை! ஆனாலும், படத்திலே, தொழிலாளி ஒருவனை முதலாளி அடிக்கும்போது பரிதாபப்படுகிறான் — குற்றமொன்றும் செய்யாத போதும் கொடுமை ஏன் இழைக்கவேண்டும் என்ற கேள்வி எழும்புகிறது, அவனுக்கு? மாடி வீட்டையும் மண்குடிசையையும் ஒரே நேரத்தில் காணும்போது அவன் மனதுக்குள்ளே கேள்விகள் எழும்பத்தான் செய்கின்றன! "உழைத்தேன்! வாழ முடியவில்லை" என்கிற வசனங்களைக் கேட்கும்போது, அவன், தன்னைப்பார்த்தே மற்றொரு தோழன் கூறுவதுபோல உணருகிறான். 'தானும்வாழப்பிறந்த மனிதன்' என்பதை உணருகிறான்! தன்னைப்போல அடிபடும் திரைப்பட ஏழையின்மேல் அவனுக்கோர் பரிவேற்படுகிறது — ஏழை அழும்போது அவனும் அழுகிறான்! ஏழைக்குவந்த தொல்லைகள் தொலையும்போது மகிழ்கிறான்!!

'காமிசத்யபாமா' எனக் கதவுதட்டும் கதைகளும், 'தாருகாவனத்து ரிஷிபத்தினிகளை' கற்பழித்த சிவபெருமான் உருவும், இன்று விரும்பப்படவில்லை. மக்களால். கண்முன்னே நடைபெறும் காட்சிகளைக் காண விரும்புகிறார்கள்! ரிக்ஷா இழுப்பவனின் வேதனை, கோயிலிலே பூசாரி செய்யும் அட்டகாசம், மதவேட்டத்துடன் மக்களை வீழ்த்திய ராஜகுரு, இவர்களையெதிர்த்து மக்களுக்காகப் பாடுபடும் நல்லவன்—ஆகியோரைக் காணும்ஆவல் அதிகரித்திருக்கிறது நாட்டில். வாழ்க்கையோடு போராடும் மற்றோர் நண்பனைக் காண விரும்புகிறார்கள்! தமது வாழ்க்கையில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் கண்முன்னே கண்டு, அதன்மூலம், பாடமும் படிப்பினையும் பெற விரும்புகிறார்கள்! கஷ்டப்பட்ட ஏழை, எப்படி கஷ்டங்களை நீக்கி சுகம் பெற்றான் என்பதை அறிய ஆசை கொண்டிருக்கிறது மக்கள் மன்றம்! அதனால்தான் இதுபோன்ற படங்கள் இன்று, வெற்றிகரமாக ஓடுகின்றன. மக்களின் ஆதரவையும் பெறுகின்றன.

இது கூடாதாம்! கூறுகிறார், கல்கி!!

ஏழைகளைக் கேவலமாகக் காட்டுகிறார்களாம்—"ஏழைகளின் துயரங்களைக் காட்டுவதற்காக க்ஷயரோக ஆஸ்பத்திரிக்குப்போய் எலும்புந் தோலுமானநோயாளிகளைக்கஷ்டப்பட்டுப் படம் பிடித்துக் கொண்டு" வந்து காட்டுகிறார்களாம்! கூறுகிறார் அவர். கருத்துமட்டுமே பழுதுபட்டிருக்கிறதென எண்ணினோம்—'இல்லை! இல்லை!! கண்ணிற்கும் காமாலை வந்துவிட்டது' என்று தெரிவிக்கிறார், எழுத்து மூலம். பருப்பு வகைகளும், தஞ்சை அரிசியும், விதவிதமான 'வசதிகளும் பெறும் பாக்கியம்பெற்றுள்ள' நண்பருக்கு நாட்டிலே நடமாடும் ஏழைகளின் உருவம்கூட கண்ணில் படவில்லை!

கடவுள்மீது நேரடி நடவடிக்கையெடுப்பதுபோல் — கதை எழுதுகிறார்களாம் சினிமா கதாசிரியர்கள். ஏழைகளுடைய இரத்தத்தைப் பணக்காரர்கள் உறிஞ்சுவது எப்படி என்று சினிமாத் திரைகளில் காட்டுகிறார்களாம்!—வேதனையோடுசொல்கிறார். இந்த வரிகளுக்குப் பின்னால் அவரே எழுதுகிறார், "இதே படங்களை சோபாக்களில் உட்கார்ந்து பார்த்துப் பரிதவிக்கும் பணக்காரர்கள் அந்தக்கோபத்தைக் கொட்டகைக்கு வெளியில் ஏழைப்பிச்சைக்காரர்கள்மீது காட்டுவார்கள். 'சட்! விலகிப்போ!' என்று அப்பால் தள்ளிவிட்டுப் போவார்கள். மோட்டார்களை அந்த ஏழைகள்பேரில் இடிக்காமற்போனால், அது அவர்கள் செய்த புண்ணியம்! — எப்படி இருக்கிறது இது? பணக்காரர்களுக்கு இதுபோன்ற படங்களைப்

(8-ம் பக்கம் பார்க்க)

## உறுப்பினராகுங்கள்

இன்றுவரை ஐம்பதினாயிரம் உறுப்பினர்கள் சேர்க்கவேண்டிய உறுப்பினர் ரசீது புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தலைமைநிலையத்திலிருந்து, மாவட்டச் செயலாளர்களுக்கும், குறிப்பிட்ட சில ஊர்களுக்கும் புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இங்கிருந்து நேரில் பெற்றுள்ளவர்கள் பெற்ற புத்தகங்களின் கணக்கு விவரங்களைத் தலைமை நிலையத்திற்கே அறிவிக்கவேண்டும். மேலும் புதிதாக புத்தகம் வேண்டுமென்றாலும் தலைமை நிலையத்திற்கே எழுத வேண்டுகிறோம்.

மாவட்டச் செயலாளர் மூலம் பெற்ற ரசீதுகள், மாவட்டச் செயலாளரிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். அவர் தலைமை நிலையத்திற்கு, தாம் பெற்ற ரசீது புத்தகங்களுக்குரிய கணக்கு விவரம் தருவார்.

ஈரோடு பொதுக்குழு கூடுவதற்குள் எவ்வளவு உறுப்பினர்கள் அதிகம் சேர்க்கமுடியுமோ, அவ்வளவு உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுகிறோம்.

உறுப்பினர் தொகை வளர, வளர நம் உழைப்பின் பயனும் பெருகும்! இதனை மனதில்எண்ணி பணியாற்ற வேண்டுகிறோம்.

உறுப்பினர் ரசீது புத்தகங்கள் போதவில்லை, மேலும் வேண்டும் என்று எழுகிறார்கள். ஆனால் முன்னர் பெற்ற ரசீதுகளை முடித்து அனுப்பி வைக்காது கேட்கிறார்கள். சேரச்சேர அனுப்பிக் கொண்டிருப்பதுதான் நல்லது.— அப்பொழுது வளரும் உறுப்பினர் தொகையை அறிவிக்க இயலும்.

தோழர்களே, ஈரோடு வரும் பொழுது, இதோ எங்கள் மாவட்டம் தான் உறுப்பினர் சேர்ப்பதில் தலைமை வகிக்கிறது என்று போட்டியிட்டுக் கொண்டு புள்ளி விவரம் தரும் விதமாக வர வேண்டும்.

30—3—52 வரை தலைமை நிலையத்திற்கு உறுப்பினர் புத்தகங்கள் வேண்டி எழுதியுள்ளவர்களுக்கெல்லாம் அனுப்பப்பட்டுள்ளன. இனி புதிதாக உறுப்பினர் புத்தகம் பெற விரும்புவோர் அந்தந்த மாவட்டச் செயலாளர்களிடமே பெற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
தலைமை நிலையம்,
தி. மு. க. காஞ்சி.

திராவிடநாடு

காஞ்சி] 30—3—52 [ஞாயிறு

# கலங்கும் இலங்கை

நீரலைகள் தாலாட்டும் இலங்கைத் தீவு, கண்ணீர் வெள்ளத்தால் கலங்கித் தவிக்கிறது, கடந்த 23-ந்தேதி முதல்.

எழுபது லட்சம் மக்களின் இதயங்களைக் கடலாக்கிவிட்டு, வீரர் சேனநாயகா போய்விட்டார். அலைகள் ஒலிக்கும் சமுத்திரத் தொட்டில், பெருமூச்சுப் புயலால், ஆடிக் கிடக்கிறது.

'வானொலி' மூலம், சிந்தை சிலிர்க்கும் செய்தியைக் கேள்வியுற்றதும், கலங்கினோம்—நம் கண்முன் மறைந்த வீரரின் கம்பீரப் பார்வையும், சிங்கத் தோற்றமும், புன்சிரிப்பு ஓடும் வதனமும் காட்சி தந்தன. இனி, காணமுடியாது அவரை. தெளிவாக ஒலிக்கும், அவரது குரலை கேட்க முடியாது. சேனநாயகா சென்று விட்டார்—காலச் சிறகடிப்புக்கு விடுதலை மலர் ஒன்று, வீழ்ந்துவிட்டது.

பொதுச் சேவையின் ஆர்வத்தால் வளர்ந்து, அதிகாரம் தாங்கி, மக்களின் இதயங்களிலெல்லாம் சுடர்விட்டுக் கொண்டிருந்த ஒளி, அவர். அவரை, உலகு இழந்துவிட்டது.

இலங்கைத் தீவின் மடியிலே தவழ்ந்து விளையாடிய தலைவர்களான ராமநாதன் எப். ஆர். சேனநாயகா, பெரோரா, அருணாசலம், ஜெயதிலகா, ஜெயவர்த்தனா ஆகியோருடன் கைகோர்த்துலவிய, சிறப்புறு தலைவர் — இன்று, போய்விட்டார்.

நாவலர்களும், இலக்கிய மேதைகளும் தலைமைதாங்கி நடத்திய இலங்கையின் அரசியல் வாழ்வில், பொதுமக்களின் உள்ளத்தை மட்டும் நன்கு தெரிந்து, அதற்காகத் தன்னை அர்ப்பணித்து, தலைவரான பெருமை பெற்றவர், சேனநாயகா.

வளைக்கும் பேச்சுவன்மையில்லா தலைவர், ஆனால் தன் வாழ்வுமூலம், மக்களின் தந்தையானார். 1884-அக்டோபர் 20-ந்தேதி போத்தலே நிலச்சுவான்தாரான, முதலியார் டொன் ஸ்பேட்டர் சேனநாயகாவின் மூன்றாவது மகனாகப் பிறந்த, சேனநாயகா, தனது 58—வது வயதில் — பூமிக்குள் போய்விட்டார். இளமையில் அவருள்ளத்தைக் கவர்ந்த முக்கிய தொழில், பூமியைப் பண்படுத்துவதாம் பயிரிடுவதுமாம். மண்ணைப் போற்றியவர், மண்ணுக்குப் பரிசாகிவிட்டார்!

புரவிமீதேறி உலவச் சென்ற புத்தமதக் காவலர், எதிர்பாராத விதமாக விழுந்து, எல்லோரையும் பதைக்கவிட்டுவிட்டு, போய் விட்டார்.

சேனநாயகாமறைவு, இலங்கைக்கு ஏற்பட்ட மகத்தான நஷ்டமாகும். பல்வேறு வகுப்பினரும், பல்வேறு மதத்தினரும், சூழ்ந்துகிடக்கும் அங்கு, 'நீதியின் ஒளி' எனப் போற்றப்பட்டார், சேனநாயகா.

மதுவிலக்கு இயக்கத்தால் பொது வாழ்வு புகுந்த இவர், தனது அண்ணன் எப். ஆர். சேனநாயகாவைப் பின்பற்றி, தலைவரானார். மக்களுடன், பழகும், வாய்ப்பு பெற்று இலங்கையின் மணிவிளக்காகத் திகழ்ந்தார்.

1915ம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற வகுப்புக்கலகத்தின் போது, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தால், சிறைக்குள் தள்ளப்பட்டார். சிங்களக்கிராம மக்களை துப்பாக்கிக் குண்டுகளுக்கு பிரிட்டிஷ் துரைத்தனம் இரையாக்கியதைக் கண்டு மனம் துடித்த, இவர், தன்னை பொது வாழ்வுக்காக அர்ப்பணித்துக் கொண்டார்.

அது முதல், தமது மக்களின் நன்மைகளுக்காகப் போராடி, அவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தார். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு 'டொமினியன்' அந்தஸ்து தந்து, பிரிட்டிஷார் பிரகடனம் செய்தனர். அன்று முதல் இவரே "இலங்கை" ஆனார்.

அகில உலக விவகாரங்களில், அவசர முடிவுகளைக்கூறுது, தமது நாட்டின் புகழை உயர்த்திய, அறிஞர் இவர்.

இத்தகைய, வீரர் ஒருவரை இலங்கை இழந்து விட்டது—மண்ணுக்குள் சென்று விட்டார். இவரது பிரிவு, ஆசியாவுக்கே ஒருநஷ்டமாகும். சேனநாயகா மறைவுகேட்டு, இலங்கை மட்டு மல்ல; ஆசியாவே அதிர்ந்தது.

சாதாரண தொண்டு மூலம் தன்னேரில்லாதவராக வாழ்ந்து மக்களின் "தந்தை" ஆனார். இவரது பொதுவாழ்வு, இத்தபடிப்பினையைத் தான் தருகிறது.

கலங்கும் இலங்கைக்கு நமது கண்ணீரையும் சேர்ப்பிக்கிறோம். காலஓட்டம், இலங்கைக்கேற்பட்ட, "இடி"யைப் போக்கட்டும்.

புயலில் சிக்கியகலம் போலப் பெருமூச்சு விடும் இலங்கைக்கு, நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்—அங்குவாழ் திராவிட மக்கள் சார்பில்.

வாழ்க வீரர் புகழ்!

# நெருக்கடி

"திராவிட நாடு" நெருக்கடியால் தாக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் ஏற்பட்டிராத அளவுக்கு நெருக்கடி.

இந்த நெருக்கடி மெள்ள மெள்ள வளர்ந்துகொண்டே வந்தது—இப்போது வெளிப்படுத்தித் தீரவேண்டிய அளவுக்கு இருக்கிறது.

'திராவிட நாடு' ஏஜண்டுகள், இதுவரை இதுபோன்ற நெருக்கடி ஏற்படமுடியாதபடி நடந்து கொண்டு வந்தார்கள். சில திங்களாகச் சில ஏஜண்டுகள் பாக்கிப் பணத்தைக் குவியும்படிச் செய்துவிட்டனர். ஐயாயிரம் ரூபாய்க்கு மேலாகவே நிலுவை இருக்கிறது. கடிதங்களுக்குப் பதில் கடிதங்கள் அனுப்புகிறார்கள் — கண்டித்தால் 'சிபார்சு'களை அனுப்புகிறார்கள்—பணம் வருவதில்லை.

இதனால் வளர்ந்த நெருக்கடி இதுபோது 'வாராவாரம்' இதழ் முடிக்கக் கண்டவிதி சென்று காகிதம் வாங்கிவரும் நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது.



இந்த 'நெருக்கடி' ஏற்படக் காரணமாக இருந்துவரும் ஏஜண்டுத் தோழர்கள், உடனே பணம் அனுப்பிவைத்தால்தான், இதழுக்கு வந்துள்ள ஆபத்து நீங்கும்.

அருள் கூர்ந்து, 'பாக்கி' அனுப்ப வேண்டிய 'ஏஜண்டுகள்' இந்த நிலைமையை அறியவேண்டுகிறேன்.

பல்லாயிரக்கணக்கான திராவிடர்களின் அன்புக்குப் பாத்திரமாக உள்ள திராவிடநாடு இதழ், இன்று நெருக்கடியால் தாக்கப் படுகிறது.

உடனே நெருக்கடி தீரவழிசெய்க-பாக்கிபணத்தை உடனடியாக அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு கிழமை இதழ், ஐயாயிரம் ரூபாய்க்கு, மேல், வெளியில் இறைத்துவிட்டு, ஒழுங்காக வெளிவந்து கொண்டிருக்க முடியாது என்பதைப் பணம் சேரவேண்டிய ஏஜண்டுத்தோழர்கள் உணர வேண்டுகிறேன்.

நெருக்கடி, என் கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டிய அளவுக்குவளர்ந்திருப்பதாலேயே, இந்த வேண்டுகோள்.

பொறுப்புணர்ச்சியுள்ள ஏஜண்டுகள் இந்த என் வேண்டுகோளுக்கிணங்க நடந்து கொள்ளவேண்டுகிறேன்.

அன்பன்

அண்ணாதுரை.

# ராயலசீமா

ஆந்திரப்பகுதியான ராயலசீமா பற்றி வரும் செய்திகள் நெஞ்சைக் கலக்குகின்றன. பட்டினிக்கொடுமையால் பரதவிக்கும் நமது ஆந்திரச் சகோதரர்களைக் கண்டு கலங்குகிறோம். வாழத்தவிக்கும் அவர்களின் பசி தீர்க்க, பஞ்சநிவாரணவேலைகள் துவக்கப்பட, பலர் முயற்சிப்பதாக அறிகிறோம்.

கடந்த 21-3-52 "ஜன சக்தி" இதழில் பஞ்சத்தை எதிர்த்துப் படை திரள்வோம் என்றொரு கட்டுரையைக் கண்டோம். இது போன்ற இன்றியமையாத, ஒரு பணியில், ஜனசக்தி இதழினர் துவங்கும் முயற்சிக்கு தி. மு. கழகம் கைகொடுக்கும்.

தனித் தனி நபர்களின் சொந்த முயற்சியைவிட, முற்போக்குக் கட்சிகளின் கூட்டணியே, பலனை காரியத்தைச் செய்யமுடியும். தவிக்கும் ராயலசீமா மக்களின் துயர் துடைக்க எடுக்கப்படும் பெரு முயற்சியில், சிறிய பங்காக யிருக்க வேண்டுமென்று முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை 28-3-52 அன்று ஆந்திர கம்யூனிஸ்டு எம். எல். ஏ. வான தோழர் நாகி ரெட்டிக்கு ரூ. 100 அனுப்பிவைத்துள்ளார். பாலைவனத்தில் தூவப்படும் சிறு துளியானாலும், இந்தத் தொகைவதையும் மக்களுக்கான அன்புக் காணிக்கையென்றும், பொதுச்செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

முற்போக்கெண்ணம் படைத்தோரால்மட்டுமே ஏழை யுலகுக்கான நன்மைகளைச் செய்யமுடியும் என்பது நமது கருத்தாகும். பசியும் பட்டினியும் தாக்கி, வாழப் பிறந்த மக்கள் வீதிகளிலே பிணங்களாவதை, நாம் சகிக்கமுடியாது. காங்கிரசாட்சியின் போக்கால் மக்கள் மாளத் துவங்கும் பரிதாபம் காண, இதயம் கொதிப்போர் ஏராளம். அவரது முயற்சி, இத்துயர் துடைக்கும்-பணியில் திரளவேண்டுமென விரும்புகிறோம்-பசியும் பட்டினியும் பரவாமல் தடுக்க; இடைக்கால நிவாரணம் செய்துதர.

—

# பாகிஸ்தானில் பாசிசம்!

'எல்லைக் காந்தி'யென்று அழைக்கப்படும் கான்அப்துல்கபார்கானைப் பற்றி வரும் தகவல்கள் கலக்கமூட்டக்கூடியவைகளாக இருக்கின்றன. கடந்த சில மாதங்களாக அவரது உடல் நலம் சீர்கேடுற்றுவரும் செய்திகளை, அடிக்கடி பெற்றுக் கொண்டுள்ளோம். இவ்வளவு மோசமான நிலையிலிருக்கும் அவரை இன்னும்-பாகிஸ்தான் சர்க்கார் விடுதலை செய்யவில்லை — மாறாக சிறையிலேயே பூட்டிவைத்திருக்கிறது.

மார்ச் 25-ந்தேதியன்று அவரைப்பற்றி காபூல் வானொலி நிலையம் வெளியிட்ட செய்திமூலம், அவரது உடல் நலம் மிகமிகக் கேடுற்றுவருவதாக அறிகிறோம். சிறையில், அண்மையில் அவரைக் கண்டுவந்த, யாககான் என்பவர், இத்தகவலைத் தந்துள்ளார்.

அப்துல் கபார்கான், சிறையிலடைக்கப்பட்டிருப்பது அரசியல் காரணத்துக்காகவேயாகும். கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்கு மேலாக, தள்ளாத அக்கிழவர், சிறைக்குள் தள்ளப்பட்டு கிடப்பதை. நாம் கண்டித்தே வந்துள்ளோம். பாகிஸ்தான் பிரிவினையேற்படுமுன், அந்தக் கோரிக்கைக்கு அவர் ஆதரவாக இல்லையென்றாலும், காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக விளங்கினாரென்றாலும், பிரிவினைக்குப்பின் 'பாகிஸ்தான் கூடாது' என்று அவர் மறுக்கவில்லை; தானும் ஒரு பாகிஸ்தான் பிரஜையாகவே வாழப்போவதாக அறிவித்தார்.

தாயகப் பற்றுக்கொண்ட ஒரு அரசியல் வாதியை சிறையில் பூட்டி வைப்பது மிகமிக மோசமானது. இவரைப்போலவே, பூட்டிவைக்கப் பட்ட மற்றொரு அரசியல் தொண்டர் காஜிஅதாவுல்லாகான், சிறையிலே நோய்வாய்ப்பட்டு, உற்றார் உறவினரின் பராமரிப்பு ஏதுவுமின்றி, சிறைக்குள்ளேயே செத்தார். இந்த கோரமரணம் கேட்டு, ஜனநாயக வாழ்வில் நம்பிக்கையுள்ள எல்லோரும் கலங்கினார்கள்—கண்டித்தார்கள்.

இருந்தும், எல்லைகாந்தியாரின்—உடல்நிலைபற்றி திடுக்கிடக் கூடிய தகவல் பல வந்துகொண்டிருந்தும் இன்னும் இவரை, சிறைக்குள்ளே போட்டு சித்ரவதை செய்வதன் நோக்கம், நமக்கு விளங்கவில்லை.

தனிப்பட்ட ஒரு அரசியல்வாதியால், பாகிஸ்தான் கரைந்துவிடுமென்று, பாகிஸ்தான் சர்க்கார் கருதுமென்றால் அதைவிட வெட்கக்கேடு வேறு எதுவுமில்லை. வீண் குரோதத்தால், ஒரு அரசியல் தலைவரின் வாழ்வு, சிறையிருட்டுக்குள் வீழ்த்தப்பட்டது என்றே நாகரீக உலகம் பேசும்; எதிர்காலம் கேலி செய்யும்.

இந்த நேர்மையற்ற செயலை ஜனநாயகம் விரும்புவோர்; கண்டிக்காமல் விடார். மனங்கூசும் இந்த நடவடிக்கையை ரத்து செய்யவேண்டும்—பாகிஸ்தான் சர்க்கார். அடக்குமுறைப் பாதை வலிவு தராது, வீழச்செய்யும்! இதை உணரவேண்டும் பாசிசப் பாதை நோக்கிகள்!!

—

5-ம் பக்கத் தொடர்ச்சி

பார்த்தால், "இரண்டரை ரூபாய் ஸோபாக்களில் புழுவாய்த் துடிப்பார்கள். உடலும் உள்ளமும் எரிவார்கள். ஆறு அணுக் கொடுத்து ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிட்டால்தான் அந்த எரிச்சல் பணக்காரர்களுக்குத்தீரும்!"—பணம் படைத்தோர் மனம் கஷ்டப்படுகிறதாம்! கல்கியார் கூறுகிறார் — இப்போது மாளிகைவாசமும் நஞ்செய் புன்செயும் ஏற்பட்டுவிட்டபிறகு—எழுதுகிறார்! வக்கீலாகிறார், பணக்காரர்களுக்கு!! இது 1952 கல்கி—1938ம் ஆண்டு கல்கியை எண்ணிப் பாருங்கள்! திருச்செங்கோட்டுக்கும் ஆனந்தவிகடனுக்குமிடையிலே, ஓடிக்கொண்டிருந்த கல்கியைப் பாருங்கள்! அந்த நினைவுகளை, அவரே நினைத்தால்; இப்படியா எழுதுவார்? திருடிக் கஷ்டப்படும் முத்தையாவும், தீபாவளிக்கு வீட்டுக்கு வரும்போது அவதிப்படும் தேச பக்தனின் ஏழ்மையும், நல்லானும்தான் தென்படுவார்கள்! இப்போது, இடமும் வசதியும் மாறிவிட்டதே—வாடகை வீட்டிற்குள் வசித்த கல்கியா இன்றிருக்கிறார். இல்லையே! வாகனவசதியும், வறுமையில்லா வாழ்வும் பெற்றதும், ஏழைகளைக்காண கண் கூசுகிறது! பணக்காரர்களைப்பற்றி எழுதுவதும் பேசுவதும் 'துவேஷமாகப்' படுகிறது—'ஐயயோ' என்றலறுகிறார்!!

☆

பேர்லின் வீழ்ச்சி
சைக்கிள் திருடன்
முஸ்ஸார்ஸ்கி
யுக்கிவாரிசு
புகழ் பெற்ற அமெரிக்கர்
டேரி அம்மை
சதுப்பு நிலப்பெண்
மந்திரப் பெட்டி
அண்ட் கிராண்ட் பேட்ரன்

என்கிற படங்கள், அண்மையில் சென்னையில் நடைபெற்ற' பிலிம் விழாவில் காட்டப்பட்டன. ரஷ்யா, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், ஹங்கேரி, பிரான்ஸ், அமெரிக்காமுதலிய பல்வேறு நாட்டுத் திரைப் படங்கள் அங்கே காட்டப்பட்டன. கடமை தவறுத வாலிப உள்ளத்தைக் காட்டிற்று, பெர்லின் வீழ்ச்சி! ஏழ்மையையும் மனிதசுபாவத்தையும் காட்டிற்று இத்தாலியப்படம் சைகிள் திருடன்! இசையுலகில் புதுமை செய்த இன்னிசைவாணரின் வாழ்க்கைச் சித்திரமாகயிருந்தது ரஷ்யசித்திரம் முஸ்ஸார்ஸ்கி! நாடக நடிகையொருத்தியை கதாபாத்திரமாகக் கொண்டு தமது நாட்டுப் பற்றுப் பிரதிபலிக்க ஹங்கேரியர் வெளியிட்டிருந்த படம் டேரி அம்மையார்! நாலுவயது சிறுவனைக்கொண்டு நமது கவனத்தையெல்லாம் கவர்ந்தனர் ஜப்பானியர் யுகிவாரிசு என்னும் தமது ஒளிச்சித்திரம்மூலம்! டாக்டர் ஒருவரின் ஆர்வத்தை அடிப்படையாகவைத்து பிரெஞ்சு நாட்டார் எடுத்திருந்தனர் "அன் கிராண்ட்பாட்ரன்!"சினிமாவைக்கண்டுபிடித்த வில்லியம் பிரீஸ் கிரீனைப்பற்றி அழகாக விளக்கினர் பிரிட்டிஷார், 'மந்திரப் பெட்டி'மூலம்! இத்தாலிய கிராமப்புற நிகழ்ச்சிகளைத் திறம்பட காட்டிற்று, சதுப்பு நிலப்பெண்! அமெரிக்க நீதிபதியொருவரின் அருங்குணங்களை விளக்கிற்று 'மெக்னீவிஷியன்ட் யாங்கி!', இத்தகைய சிறப்புறு படங்களில் குறிப்பிடக்கூடிய அம்சம், இவைகள் யாவும் அந்தந்த நாட்டு நிலைகளைக் காட்டும் கண்ணுடி போலிருந்ததுதான். வாழமுடியாது தவிக்கும் ஏழையையும், காதலில் சிக்கிய வாலிபனையும், இலட்சியத்துக்காக உயிரைத்திரணமென மதிக்கும் இளநங்கையும், குடும்பக்கொந்தளிப்பால் தவிக்கும் நடுத்தர வகுப்பினனையும்; கண்டோம், இக்காட்சிகளில். அந்தந்த நாட்டுமக்களின் நிலைமைகளை ஹங்கேரியப் படமும், இத்தாலியப் படமும் காட்டிற்று — விடுதலை ஆர்வமும், போருக்குப் பின்னேற்பட்ட தொல்லைகளும் இந்தப்படங்களில் விளங்கின! ஆனல், 'கல்கி'யாரோ, இந்தப் படங்களைத்தான் பார்த்தார் போலும் — இவைகள் காட்டும் விளக்கத்தைக் கவனிக்கவில்லை! ஏழ்மையைக் காட்டினர்கள், ஏழையின் உள்ளத்தையும் காட்டினர்கள் — இத்தாலியப்படங்களில். நண்பர், கல்கி, தமது கட்டுரைக்கு ஆதாரமாக, அமெரிக்கப் படங்களையும் ரஷ்யப் படங்களையும் எடுத்துக் கொண்டிருக்கிறார். அவைகளைப் போல இங்கும் தயாரிக்கப்பட வேண்டும் என்று சொல்லட்டும்; நமது ஆசையும் அதுதான். ஆனல் அவர் அதைச்சொல்லவில்லை! அவ்வகளைக் காட்டி, தவறுன அபிப்பிராயத்துக்குத்தள்ளுகிறார் மக்களை. மனதில் புகையும் ஆத்திரத்தை வெளியே இறைக்கிறார்—ஏழைகளைக் காட்டலாமா? ஏழைகளைக் காட்டுவதால் பணக்காரர்மீது துவேஷம் வாராதா? என்று வக்கீலாகிறார்! அதற்கு ஆதாரமாகக் கூறுகிறார், "ரஷ்யப் படங்களில் உழைப்பின் உயர்வைக் கூறுகிறார்களாம். இங்கே உழைப்பவன்படும் அவதியைமட்டும்காட்டுகிறார்களாம்."

ருஷ்யப்படங்களில் மட்டுமல்ல, அந்த இன்பபூமியில், உழைப்புக்குத்தான் மதிப்பு! மனிதர்களுக்குள் பேதமில்லாத அங்கே, உழைப்புதான் கடவுள் — எஜமான் சர்க்கார் எல்லாம்! ஆனல் இங்கே, உழைப்புக்கு மதிப்பா வாழ்கிறது—'கல்கி' ஆபீஸ் 'கம்பாசிடரை'க் கேட்டால் தெரியுமே! உழைப்புக்கும் உயர்வுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது—'கல்கி'யின் ஊர்ப்பக்கம் சென்று வயலிலே வேலைசெய்யும் காத்தானையும், வரப்பிலே அமர்ந்திருக்கும் கூத்தப்பிள்ளையையும், வீட்டிலே வெற்றிலைத் தட்டோடு இருக்கும் சதாசிவஐயரையும் பார்த்தால் தெரியும், உழைப்பின் மதிப்பு! இங்கே உழைப்புக்கு மட்டுமல்ல; மனிதத்தன்மைக்கே மதிப்பில்லை. ஆனல் நண்பர், ஆயாசப்படுகிறார்! இல்லாத ஒன்றை எப்படிக் காட்டமுடியும்? ஆலையரசனும், வேலை செய்பவனும், மாமனர் மருமகனக இருப்பதையா படம்எடுக்கமுடியும். எடுத்தால்தான் நம்புவரா! ஐயர் வீட்டுப் பெண்ணும் அடிமை காத்தான் மகளும், நிலவொளி நேரத்தில் 'காதல் பாட்டு' பாடுவதாகவும், அதைக் கண்டு தோள்மேல தோள்போட்டு ஐயரும் காத்தானும் சந்தோஷப்படுவதாகவும், படத்திலே காட்டத்தான் முடியுமா? அல்லது இந்த அற்புதத்தைக்கண்டு கருடன் ஓடி, வைகுந்தம் சேர்ந்து, பரந்தாமனிடம் தெரிவிக்க அவர் லட்சுமிசமேதராய் பூலோகம் வந்து, 'பக்தா! மெச்சினேன் உன்னை. ஜாதிமதம் ஏது. இதை நிரூபித்த உனக்கு சாச்யுத பதவி தந்தேன்' என்று கூறிச் செல்வதாகக் கதையெழுதி, கலர் விளம்பரம் செய்து, படம் எடுத்தால்தான் ஓடுமா?

கல்கி சொல்கிறார்—நாம் நாட்டுப் புகழைவிளக்கும் படங்கள் எடுக்கப்பட வேண்டுமாம். புகழ் விளக்கம் வேண்டுமாம்! எந்தப் புகழை, எப்படி விளக்குவது என்று எவரும் அவரைக் கேட்காததால், பேனவையோட்டியிருக்கிறார். இங்குள்ள புகழை விளக்க, இங்குள்ளபடியே படம் எடுத்து வெளியாருக்குக் காட்டினல் கேலியோடு விடமாட்டார்! கெக்கலிப்பர்!!

☆

நாட்டிலே, இன்று, புது மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. சமுதாய பேதங்கள் ஒழியவில்லை! ஏழையும் பணக்காரனும், கீழ்ஜாதியும் மேல்ஜாதியும், விதவைத்துயரும், கைம்மைக் கொடுமையும், சீரழித்துக்கிடக்கிறது. இந்தச்சீரழிவின் கேடுகளை, மக்கள் முன்காட்டி, இவைகளைப்பற்றி உணரச் செய்யும் பணிதான், இப்போது முக்கியமானது. இவைகளைவிளக்கும் சமூகப்படங்களைக் கண்டு வயிறெரிவதும், வக்காலத்து வாங்குவதும் நாட்டு நன்மையை குட்டிச்சுவராக்குவதாகும்! சமுதாயத் தட்டில் மேலேயிருப்பவன் வாழவும், கீழேயிருப்பவன் தேயவுமான நிலையை நீடிக்கச் செய்ய முயல்வது பலனளிக்காது. "துவேஷம் ஏற்படுத்தாதீர்!" என்று, துடுக்கோடும், மிடுக்கோடும் எழுதுவதால், உண்மைகளுக்குத் திரைபோட முடியாது. இன்று மனிதன், மனிதனைப் பார்க்க விரும்புகிறான்! அந்த மனிதன் மூலம் நாட்டின் நிலையை மக்களுக்கு விளக்கவேண்டும்! இது வெற்றியானல்தான், உழைப்பின் மகிமை குறித்து, விளக்க முடியும்—சாக்கடையிலிருந்து சந்தனத்தைக் கரைக்க முடியாது! இன்றுள்ள பணி, சாக்கடையைத் துடைக்கும் பணி. இதை கண்டு பழைமையும் பண உலகும் 'தீது, இது' என்று போதனை புரிகிறது. அந்த ரகத்திலே கல்கியும் சேர்கிறார்! 'சீசன் சரக்காயிருந்தாலும்' 'சிந்தனையோடு எழுதப்பட்டவையானலும்' சரி, அவருடைய எண்ணங்கள் பழைமைக்கு மெருகூட்டுகின்றன. பரிதாபப் படுகிறோம், பணஆசை அவரை இப்படி ஆக்கிவிட்டதே என்பதை எண்ணி!

✲

## ஜப்பான்

"ஜப்பான் அமெரிக்காவின்காலனி நாடாக்கப்பட்டு வருகிறது. ஜப்பானில் அமெரிக்காவுக்கு ராணுவ தளங்கள் கொடுக்கபட்டிருக்கின்றன. ஜப்பானில் ராணுவத்தினரை விசாரிக்க அமெரிக்கருக்கு கிரிமினல்கோர்ட்டு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது."

சர்வதேச சட்ட விஷயங்கள் அறிந்த ஜப்பானிய அறிஞர் பேராசிரியர் ஹிகோமட்ஸூ, இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே சமீபத்தில் நடைபெற்ற 'பாதுகாப்பு ஒப்பந்தம்' (Defence Pact)பற்றி, ஜப்பானியபார்லிமெண்டின் வெளிநாட்டு விவகாரக் கமிட்டியில் பேசுகையில் இத்தகைய கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

ஜப்பானுடன் அமெரிக்கா அண்மையில் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது — 'பாதுகாப்பு' என்ற பெயருடன். கடந்தபோருக்குப்பிறகு, அமெரிக்கா தனது ஆதிபத்யத்தை ஜப்பானில் நிலைநாட்டி வருவதை உலகு அறியும். இப்போது தனது துருப்புகளையும், ஆயுதத் தளவாடங்களையும் குவிக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டிருப்பதே, இந்த ஒப்பந்தம், என்று கருதப்படுகிறது — ஜப்பானில் பலரால்.

* * *

அமெரிக்க முதலாளிகளின் "நியூயார்க்டைம்ஸ்" இதுபோல எழுதுகிறது 'ஜப்பான் குறித்து:—

"ஜப்பான், படைதளங்கள் வைக்கக்கூடிய கேந்திரஸ்தானமாகும். தூரக்கிழக்கில் அமெரிக்காவுக்கான ஆபத்தைத் தவிர்க்கும் முக்கிய தளம்—இது."

பிரிட்டிஷ் முதலாளிகள்குரலான "டீஸ்நியூஸ்" எழுதுகிறது:—

"ஜப்பானிய மக்களை, தமக்கு கட்டுப்பட்டோர்களாக அமெரிக்கா வைத்திருக்கவேண்டும். உலகத்தில் அமெரிக்கா தனது போர்க்குக்கான முக்கிய இடமாக இதைக் கருத வேண்டும்."

* * *

இந்தச்செய்திகள், ஜப்பான்பற்றி அமெரிக்கா கொண்டுள்ள கருத்தை விளக்குவதாகும். ஜப்பான்மூலம் தமது, ஆதிபத்யத்தைப் பரவச் செய்யத் திட்டமிட்டு வருகிறது அமெரிக்க ஆதிபத்யம். இதற்கு அனுசரணையாக, ஜப்பானில்அமைக்கப்பட்டிருக்கும் சர்க்காரும்இருந்து வருகிறது. யோஷிடாவின் தலைமையில் இயங்கும் ஜப்பானிய சர்க்காரின் ஒவ்வொரு நடவடிக்கையும், இந்தக்கருத்தைத்தான் வலியுறுத்துகின்றன. சுதந்தர உணர்ச்சியும், விவேகமும் நிறைந்த ஜப்பானிய மக்கள், மீளா அடிமைகளாக்கப்படுவதையெண்ணும்போது வருந்தத்தான்வேண்டும். என்செய்வது! நாட்டைக் காட்டிக் கொடுப்போர் எங்கும் இருக்கிறார்களே!!

## தவருன செய்தி

24—3—52 'மாலைமணி'யில் சிதம்பரம் வட்டத் தோழர்களுக்கு என்ற தலைப்பில்;சிதம்பரம் தோழர் சி. எஸ். சடகோபனைப்பற்றி அவதூறுன செய்தி வந்திருப்பதைக் கண்டசிதம்பரம் திராவிடமுன்னேற்றக் கழகத்தார் வருந்துவதுடன், 25—3—52 மாலை 6-மணிக்கு தி. மு. க. செயற்குழுகூடி, 'மாலைமணி'யில் வந்த செய்திக்கும், கழகத்திற்கும் எந்தவிதமானசம்மந்தமுமில்லையென்பதோடு, பொறுப்புள்ள ஒரு தோழரைப்பற்றி, யாரோ சில விஷமிகள் இப்படி எழுதி, கழகக்கட்டுப்பாட்டைக் குலைப்பதைப் பெரிதும் கண்டித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர் சி. எஸ். சடகோபன் இன்றுவரை கழக நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் ஒத்துழைத்து வருகிறார் என்பதை 26—3—52ல் சிதம்பரம் தி. மு. க. செயலாளர் இரா. சக்கிரவர்த்தி நேரில்வந்து பொதுச்செயலாளரிடம் தெரிவித்ததோடு, அத்தவறுன செய்தியைப்பற்றி வருத்தம் தெரிவித்தார்.

குமரிமன்னன்
**எழிலரசி கிளியோபாட்ரா 1—8—0**

க. அன்பழகன் எம். ஏ.
**அழகுராணி 1—4—0**

இராம. அரங்கண்ணல்
**வியர்வை விருந்து 0—6—0**

தனிப்பிரதி வேண்டுவோர்—புத்தக கிரயத்தை M. O. செய்யவும். விற்பனை க்கழிவு 25% அனுப்பவும். செலவு இனும்.

விவரங்களுக்கு:- 'எம். நூரி
14. ஏ. குப்ஐயர் தெரு
சென்னை 1.
A.

# வழக்கு தொடரப்படும்

—※—

"திராவிட நாடு" இதழில் வெளி வந்த கட்டுரைகள், கதைகள், ஆகிய வற்றினைத் தொகுத்தும், சிதைத்தும், நூல்வடிவாக்கி, C. N. A. புத்தகங்கள் என்று பல வெளியீடுகள் சமீப காலத்தில் கிளம்பியுள்ளன. நேர்மையான நோக்கமற்ற பணந்தேடிகளின் இந்த தீயசெயலுக்கு பொறுப்புவாய்ந்த சில பிரசுராலயங்கள், ஆதரவு காட்டியதால் சுயநலக்காரர்கள், பணம் பறித்துக் கொள்ளமுடிந்ததுடன், பொதுமக்களுக்கும் வீணனசெலவும் ஏற்பட்டிருக்கிறது. இத்தகைய மோசடிகளைத்தடுக்க சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் அனுமதிச் சீட்டோ, கையொப்பமோ இன்றி என்பெயரால் புத்தகம் வெளிவர அச்சியற்றியவர்களும், சட்டப்படி தவறு செய்தவர்களே ஆகிறார்கள்.

ஒருவர் பெயரால் ஏதேனும் புத்தகம் வெளியிடுவது என்றால், அவருடைய சம்மதக்கையொப்பமின்றி அச்சடித்துக்கொடுப்பது பொது நாணயத்துக்கு உகந்ததல்ல-சட்டப்படியும் தவறு.

எப்படியாவது பக்கங்களை அதிகப்படுத்திக்காட்டி விலையைக்கூட்டிவிடவேண்டுமென்று, தொடர்பு, பொருத்தம், விளக்கம் அற்றமுறையிலே இந்த வெளியீடுகள்உள்ளன.

கருத்துகள் சிதைக்கப்பட்டும் திரித்தும் வெளியிடப்படுவது எத்தகைய கேடுகளை விளைவிக்கும் என்பதை எண்ணிப் பாராமல், பொதுமக்களுக்கு இந்தத் துரோகம் இழைக்கிறார்கள்— இவ்வளவும் பணத்துக்காகச் செய்யப்படுகிறது —இந்த இழிசெயலை ஒழித்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்.

நான் ஏற்கனவே, சில பிரசுராலயத்தாருக்கு உரிமையாக்கியுள்ள சிலகட்டுரைகளும் இந்த வெளியீடுகளிலே உள்ளன — ஆகவே அவர்களும் வழக்குத் தொடுக்க முன்வந்துள்ளனர்.

சில சுயநலமிகள், நேர்மையான பிரசுராலயத்தாரைஅணுகி,அண்ணு சம்மதம் தந்திருக்கிறார், ஆகவே வெளியிடுங்கள் என்று கூறி, பணம் பறித்திருக்கிறார்கள்.

எனவே, இத்தகையவர்களை நாடு அறியவும், கேடுகள் களையப்பட வேண்டும் என்பதற்காகவும்,வழக்கு தொடரப்படுகிறது.

இதுவரை, இவ்வித எத்தர்களிடம் சிக்கதிருக்கும் பிரசுராலயங்களும், அச்சகங்களும், எச்சரிக்கையாக இருந்து இவ்வித 'பொது ஜன விரோதிகளை' அம்பலப் படுத்தும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுகிறேன்.

கழகங்கள், வாசகசாலைகள், ஆகியவற்றின் வளர்ச்சிக்காக என் நூலை வெளியிடவேண்டுமென்று கேட்டபோது, நான் யாருக்கும் தடை கூறாமல், தாராளமாகவே தந்திருக்கிறேன்.

தனிப்பட்ட முறையிலே நண்பர்களின் உதவிக்காகவும் பல 'ஏடுகளை'த் தந்திருக்கிறேன்.

பதிப்பகங்களுக்கும் பல ஏடுகளைத் தந்திருக்கிறேன்.

நாட்டுக்குத்தேவையான கருத்துகள் யாவை, அவை எவ்விதம் தொகுக்கப்படவேண்டும், என்பனவற்றை நானே கவனித்து வெளியிடப்பட்ட அந்த ஏடுகள், போன்ற நல்ல இந்தக் 'களவு' ஏடுகள். இதே விதமான அநீதி தங்களுக்கு இழைக்கப்பட்டிருப்பதாக நமது கழக எழுத்தாளர் சிலரும் என்னிடம் கூறியிருக்கிறார்கள். தீயசெயல் முளைத்திருக்கிறது. எனவே தமிழ் நாட்டிலே முளைத்து வரும் இந்தத் தீயசெயலை முளையிலேயே கிள்ளி எறிய என்னுடன் ஒத்துழைக்கும்படி, பிரசுராலயங்களையும், அச்சகங்களையும், பொது மக்களையும், இயக்க ஏடுகளையும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

அண்ணுதுரை

## விசித்திரம்

திருவாங்கூர் கொச்சி சட்டசபை சபாநாயகர். தேர்தல் இந்த வாரம் நடைபெற்றது. கே. பி. நீலகண்ட பிள்ளை என்னும் சோஷியலிஸ்டு அபேட்சகர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சட்டசபையில் கட்சிகளின்நிலை:—காங்கிரஸ் 46, ஐக்கிய முன்னணி 31, சோஷியலிஸ்டு 11, திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் 8, சுயேச்சைகள் 11, கொச்சி கட்சி 1.

சோஷியலிஸ்டுகள் 11 பேர் தானே! எப்படி அவர்களுக்குள் ஒருவர் சபாநாயகராக முடிந்ததெனக் கேட்கலாம். முற்போக்குக் கொள்கைகள் பேசும் சோஷியலிஸ்டுகட்சிக்கு, பிற்போக்கு ஸ்தாபனம் காங்கிரஸ் ஆதரவு கிடைத்ததாம். பழையபாசம் — புது உறவு!

அவருக்கு மொத்தம் 58 ஓட்டுகளும் அவரை எதிர்த்த சி. அச்சுத மேனன் எனும் கம்யூனிஸ்டுக்கு 46 ஓட்டுகளும் கிடைத்திருக்கின்றன.

சோஷியலிஸ்டுத் தோழருக்கு ஆதரவாகவந்த ஓட்டுகள் விபரம், காங்கிரஸ் 46, சோஷியலிஸ்டு 11: சுயேச்சை 1.

கம்யூனிஸ்டுத் தோழருக்கு ஆதரவாக கிடைத்த ஓட்டுகள்: திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் 8, சுயேச்சைகள் 10, ஐக்கிய முன்னணி 29, கொச்சி கட்சி 1.

யார் யாருக்கு, யாரார் ஓட்டளித்திருக்கிறார்கள் பாருங்கள். காங்கிரசைக்குறைகூறும் சோஷியலிஸ்டுக் கட்சி இப்போது கூடிக்குலாவுகிறது! 'முற்போக்கு' 'பிற்போக்கை' கட்டியணைக்கிறது! எங்கே காண முடியும் இந்த விசித்திரத்தை?

—

## காஞ்சியில்

30-3-52 ஞாயிறு மாலை காஞ்சி கலியாணசுந்திரம் அவர்கட்குப் பாராட்டுக் கூட்டம்.

இடம்: இரட்டை மண்டபம்.

தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார்



3-ம் பக்கத் தொடர்ச்சி

என்றால், காரணமின்றி, நியாயமின்றி, அவசியமின்றி; சட்டசம்மதமின்றிச் செய்யமாட்டார்கள், என்றுதானே பொதுவாக எவரும் எண்ணுவார்கள். அவ்விதம் எண்ணும் விதமாகத்தானே ஆளவந்தார்களின் தாளங்களும் தூர்துபிகளும் முழங்கின! இப்போது 'அதுகளின்' முகம், என்ன வழிய வழிய இருக்கும், என்று எண்ணுகிறீர்கள்; இதோ தீர்ப்பு — குற்றமில்லை, என்று! குற்றக் கூண்டிலேமட்டுமல்ல, சிறைக் கொட்டடியிலும், தூரத்தப்பட்டேன் —தூரத்திய துரைத்தனத்தாரைப்பற்றி என்ன 'தீர்ப்பு' பொதுமக்கள் தருவார்கள்.

பொறாமை, பொச்சரிப்பு, முன் கோபம், ஆகிய கெட்ட குணம் கொண்டவர்கள் பொய்க்கேசுகளை ஜோடித்து நல்லவர்களை அலைக்கழிப்பதுண்டு. அப்படிப்பட்டவர்களைச் சமூகத்தின் சாக்கடைப் புழுக்கள் என்று அறிவுடையோர் கூறுவர். இழிநிலைதான் அவர்கட்குக் கிடைக்கும். தனிப்பட்ட மனமாச்சரியத்தால் தூண்டப்பட்டோ, பொறாமை பொச்சரிப்புக் குணத்தாலோ பொய்வழக்குத் தொடுக்கும் அளவுக்குச்சிலருடையபோக்கு இருந்துவிடும் — ஆனால், ஒரு நாடு ஆளும் சர்க்கார், தன் ஆட்சியின் கீழ் உள்ளவர்களின் உரிமைகளை யாரும் பறித்துக்கொள்ளாதபடி பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் சர்க்கார், என்மீது தொடுத்த 'ஆரியமாயை' வழக்கு, எப்படி இருக்கிறது, என்று பாருங்கள்—எவ்வளவு ஆலோசனையற்ற, அவசரப்புத்தியுள்ளகாரியம். இதோ நீதிபதிகள் இருவர் கூறுகிறார்களே குற்றமில்லை என்று—காங்கிரசாட்சி என்னபதில் கூறுகிறது! காளை பால் தராதா — ஆமாம் — மறந்துவிட்டேன்—அவசரத்திலே அவ்விதம் சொல்லிவிட்டேன் — என்று வழவழா பேசமுடியும்-சர்க்காராயிற்றே —கந்தன் அல்லவே!!

ஒரு 'ஏடு'—அதைப் படிப்பதால் மனதிலே, 'துவேஷம்' அடைந்து பலாத்காரத்தில், இரத்தவேட்டையில் இறங்கிவிடுவார்கள், என்று, உண்மையாகவே அச்சப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டதா?

'ஆரியமாயை'யைப் படித்தேன்— படித்ததும் என்மனம் எரிமலையாகிவிட்டது, எதிரே ஏகாம்பர குருக்கள் வந்தார், ஏ; ஆரியனே! தமிழகத்திலே தலைகாட்ட என்ன தைரியம் உனக்கு! என்று கூவினேன் கொக்கரித்தேன் — எனக்கு அவ்வளவு 'துவேஷம்' மூண்டுவிட்டது ஓட ஓட விரட்டினேன். ஏகாம்பர ஐயர், பரமசிவம்! சச்சிதானந்தம்! சர்வேஸ்வரா! — என்றெல்லாம் கதறினார்—நான் விடவில்லை—என்மனதிலே 'ஆரியமாயை' படித்ததாலே மூண்டெழுந்த ஆத்திரம், ஏகாம்பரத்தை அடி அடி என்று அடித்த பிறகுதான் ஓரளவுக்கு அடங்கிற்று என்று, யாராவது ஒரு அடிவருடியிடமிருந்தாவது, 'வாக்குமூலம்' கிடைத்திருக்கிறதா சர்க்காருக்கு.

அல்லது ஜகத்குரு சங்கராச்சாரியாரோ, சாதாரண ஐயரோ, 'ஆரியமாயை' எனும் ஏடு, நாடு கெடும் நஞ்சை ஊட்டவல்லது, நாடாள்வோர் இத்தகைய ஏடுகளை உலவவிடுதல் மகாபாபம் மகாதோஷம் என்று கூறினார்களா!

ஊருருக்கும் கூட்டம் நடத்தி 'ஆரியமாயை'மூலம் வருப்புத்துவேஷம்மூண்டுவருகிறது, என்று யாராவது கிளர்ச்சி செய்தார்களா?

என்ன கண்டு, 'ஆரியமாயை'மீது பாய்ந்தனர், காங்கிரசாட்சியினர் சொல்லச்சொல்லுங்கள் பார்ப்போம் பேச்சு மூச்சு இராது!

'ஆரியமாயை' — ஒரு தொகுப்பு நூல்!

இந்நாட்டு மதம், ஜாதி வகுப்பு மூடத்தனம், வைதீகவெறி, இவை பற்றி, பல்வேறு 'மேதைகள்'வெளியிட்ட கருத்துக்களை, கோர்த்து வெளியிடப்பட்ட ஏடு.

இது வகுப்புத் துவேஷத்தை மூட்டுவதாக இந்தக் காங்கிரசாட்சிக்குத் தென்படுகிறது! எவ்வளவு கேலியாகக் கூறுகிறார்கள் மக்கள் இன்று — இரு நீதிபதிகள் 'ஆரியமாயை'யில் வகுப்புத் துவேஷம் இல்லை, என்று தீர்ப்பளித்துவிட்டார்களே, ஏன் காங்கிரசாட்சியினர் இப்படி ஒரு ஆதாரமற்ற சட்டபலமற்ற வழக்கைத் தொடுத்தார்கள்—என்று கேலியாகத்தானே பேசுகிறார்கள். பேசாமலிருப்பார்களா? நாடாள்பவர்கள், இப்படியா தங்கள் நிலையை ஆக்கிக்கொள்ள வேண்டும்! ஆழம் தெரியாமல் காலை விடும் பேர்வழிபோலவா, அசோகச்சக்கரதாரிகள் நடந்துகொள்வது!

சாதாரண மானவர்கள்கூட, ஒரு வழக்குத் தொடுப்பது என்றால், தோற்று விட்டால் என்ன செய்வது, பலரும் கேவலமாக பேசுவார்களே என்று யோசிப்பார்கள் — போகக் கூடாது, போனால் முகத்தில் கரிபூசிக் கொள்ளக் கூடாது, என்று கூறுவார்கள். ஒரு நாட்டை ஆளும் நிலையைப் பெற்றவர்களோ, வழக்குத் தொடுக்கிறார்கள், உயர் நீதிமன்றம், குப்பைக்கூடைக்கு அனுப்புகிறது!

கள்ளன் பிடிபட்டான், பிடிபட்டான் கள்ளன், என்று கூவி, மீசையை முறுக்கிவிட்டபடி, இதோ, இந்தக் கோணிமூட்டைக்குள்ளே கள்ளன் இருக்கிறான் என்று கூறியபடி, மூட்டையை அவிழ்த்து மன்னன் முன் காட்டுகிறான், ரணகளச் சூரன் ரங்கநாதன் —மூட்டைக்குள்ளே இருப்பதோ, வைக்கோற் பொம்மை! சபையிலுள்ளவர்கள்' 'சபாஷ்' கூறவா செய்வார்கள்!!

இதோ, இரு உயர்தர நீதிபதிகள், கூறுகிறார்களே, 'ஆரியமாயை'யில் வகுப்புத்துவேஷம் கிடையாது, என்று' யாருமே செய்யமுடியாத வீரதீர பராக்கிரமச்செயலைச் செய்துவிட்டவர்கள் போல அல்லவா, கிளம்பினர், காங்கிரசாட்சியினர், 'ஆரியமாயை'யைத் தாக்க! கடைசியில்! செச்சே! எனக்கே, வெட்கமாக இருக்கிறது, அடிக்கடி கூற!! ஏன், இவ்வளவு அவசரபுத்தி! எதற்காக இவ்வளவு 'பதைப்பு'—! தனி நபராக இருந்தால், அவன் புத்தியே அது என்று கூறிவிடலாம், சர்க்காரை அல்லவா நடத்துகிறார்கள்!!

உயர்நீதிமன்றம் பார்த்து குற்றமில்லை, என்று கூறினதால், நல்லதாயிற்று—வழக்கு அங்கு செல்ல

## வருந்துகிறோம்

காஞ்சிபுரம் வள்ளுவர் கழக உறுப்பினரான தோழர் பச்சையப்பன் அவர்கள், 16—3—52 அன்று பஸ் ஓட்டிக் கொண்டு செல்லும் பொழுது, பஸ் கவிழ்ந்து மரணமடைந்த செய்தியறிந்து வருந்துகிறோம்.

இல்லை என்றால், குற்றவாளிப் பட்டியலில்தானே என்பெயர் இருந்து கொண்டிருக்கும்! குற்றமற்றவர்களைக் குற்றவாளிகளாகச் சித்தரிக்கவா' சிரமப்பட்டு ஒரு ஆட்சியை நடத்துகிறார்கள்! —அவசரக் கோலத்தை அள்ளித் தெளிக்கும் போக்கிலே நடந்துகொள்ளும் காங்கிரசாட்சியிலே, எந்த நேரத்தில், யாருக்கு, எத்தகைய ஆபத்து உண்டாகக்கூடும், எத்தகைய வழக்கு கிளம்பக்கூடும், என்று யார் கூறமுடியும்! இந்த நிலையிலே மக்கள் வைக்கப்பட்டிருப்பதற்காகத்தானா 'சுயராஜ்யம்' பெற்றது. எந்த ராஜ்யத்திலும், இப்படி வழக்குகளைத் தொடுப்பது, வாட்டுவது கடைசியாக, உயர்நீதிமன்றம் பார்த்து, இந்த வழக்கிலே உப்புமில்லை, சப்புமில்லை, என்று கூறுவது, அப்படியா, சரி, சரி, என்று ஆளவந்தார்கள் கூறுவது என்ற நிலை இருக்கலாமா?

'ஆரியமாயை' மூலம் வகுப்புத் துவேஷ மூட்டியதாக என்மீது குற்றம் சுமத்திய சர்க்காரின் போக்கை, மக்கள் நன்கு புரிந்து கொள்ளும் விதமான தீர்ப்பு, சென்னை உயர்நீதி மன்றத்திலே, கிடைத்திருப்பதுகண்டு. உண்மையாகவே களிப்படைகிறேன்—நண்பர்களும் மகிழ்வர்.

'வகுப்புத்துவேஷம்' என்ற பழி சுமத்தி, நமது இயக்கத்தைக் கேவலப்படுத்தும், முயற்சி, மேடை மூலமாக, மாற்றுக் கட்சியினரால் செய்யப்பட்டு, முறிந்து விட்டது.

வழக்கு மன்றங்கள் மூலமாக, 'வகுப்புத்துவேஷிகள்' என்ற பழிச்சொல்லை, நம்மீது திணிக்கவேண்டும், என்ற தீய நினைப்பும், பாழ்பட்டுவருகிறது.

'ஆரிய மாயை' வழக்கு ஒன்று மட்டுமல்ல, 'இட்சிய வரலாறு' என்ற ஏடு மீதும் வழக்கு நடைபெற்றது, அதிலேயும், வகுப்புத் துவேஷம் இல்லை, என்ற தீர்ப்புக் கிடைத்தது. 'திராவிட நாடு' இதழிலேயே, காந்தி ராமசாமியும் பெரியார் ராமசாமியும், என்ற கட்டுரையும், வெள்ளி முளைக்க எட்டு ஆண்டுகள் என்ற கட்டுரையும், வகுப்புத் துவேஷ மூட்டுவன, என்று சர்க்கார் கூறி, ஜாமீன் கேட்டனர், உயர்நீதி மன்றத்தில் பிரதம நீதிபதியும், இருநீதிபதிகளும் அமர்ந்த மன்றத்திலே, இந்தக் கட்டுரைகளிலே வகுப்புத் துவேஷமில்லை, என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

என் ஏடு மட்டுமல்ல, நண்பர் ஆசைத்தம்பி தீட்டிய காந்தியார் சாந்தி அடைய என்ற ஏடு, வகுப்புத் துவேஷமுள்ளது என்று சர்க்கார் வழக்குத் தொடுத்து, ஆசைத்தம்பியைச் சிறையில் தள்ளி வாட வைத்தனர்—பிறகோ உயர்நீதி மன்றத்திலே, அந்த புத்தகத்திலே, வகுப்புத் துவேஷமில்லை, என்று தீர்ப்புக் கிடைத்தது.

புலவர் செல்வராஜ் அவர்கள் தீட்டிய, கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா என்ற ஏடும், நாடாள்வோருக்கு வகுப்பு, மதத்துவேஷத்தை ஊட்டுவதாகத் தோன்றியது. வழக்கு தொடுத்தனர்—தீர்ப்பு, வகுப்பு மதத்துவேஷம் இல்லை, என்றுகிடைத்தது. இந்தச் சம்பவங்களின் பொருள் என்ன? பாடம் என்ன?

'வகுப்புத்துவேஷம்' என்ற குற்றம் சாட்டியதிலே, காங்கிரசாட்சியின் போக்கு தெள்ளத்தெளியத் தெரிவது போலவே, ஒவ்வொரு வழக்கிலும், 'தீர்ப்பு' நமது பக்கம் இருப்பது, நமது தூய்மையை நிரூபிக்கிறது.

தொடுத்தவழக்குகள் தூள்!தூள்! தூளியாவது, இதைக்கண்டு, காங்கிரசாட்சிக்கு வெட்கம் பிறக்க வேண்டாமா?

வீணானவழக்குகளைத்தொடுத்து, எங்களை வாட்டிடும் போக்கைக் கொண்டிருக்கும் ஆளவந்தார்களைக் கண்டிக்கும் பொறுப்பு நல்லறிவாளர்களுக்கு — அவர்கள் எந்த முகாமில் இருப்பினும்—இல்லையா, என்று கேட்கிறேன்.

பொதுநல ஊழியர்கள்மீது இவ்விதம், சட்ட பலமற்றவழக்குகளைத் தொடுத்துக்கொண்டிருப்பதுமுறை தானா? ஒவ்வொரு வழக்கையும், உயர்நீதி மன்றத்திலே கொண்டு செல்லும் காரியம் சுலபமானதா? சிரமம்எவ்வளவு? செலவுஎத்தனை? இடையே தொல்லைகள் எவ்வளவு? ஏன் குற்றமற்றவர்கள்மீது இந்தக் கொடுமை!—இதைக்கேட்க ஆளில்லையா இந்த நாட்டிலே!! மேதைகளே! தீவிரவாதிகளே! பேச்சுரிமை. எழுத்துரிமைப் பாதுகாவலர்களே! இந்தப்போக்கைக் கண்டிக்காமலிருக்கும் காரணம் என்ன?

'வகுப்புத் துவேஷம்' — ஆரிய மாயையில், இலட்சிய விளக்கத்தில் திராவிடநாடு இதழில், காந்தியார் சாந்தி அடைய எனும் நூலில், கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா எனும் புத்தகத்தில்—காங்கிரசாட்சி கூறிற்று — உயர்நீதிமன்றமோ, 'இல்லை' என்று தீர்ப்பளிக்கிறது.

எங்கள்மீது 'துவேஷம்' கொண்டவர்கள், இவ்விதம் வீண்வழக்குகளைத் தொடுக்கிறார்கள், என்பது புரியவில்லையா! இந்தத் துவேஷத்துக்கு யார் வழக்குத் தொடுப்பது, என்ன தண்டனை விதிப்பது!?

“போதாதா நாங்கள் விதித்துள்ள தண்டனை! தேர்தலின் போது தீர்ப்பு அளித்துவிட்டோமே!—என்று கூறும பொது மக்கள், என் மனக்கண்முன் தெரிகிறார்கள், உண்மைதான்! தீர்ப்பு அளித்துவிட்டார்கள்!

நாட்டிலுள்ள கேடுகளைக் களைய வேண்டுமென்ற நல்லார்வத்தின் காரணமாக பேச்சிலும் எழுத்திலும், நாம் ஒருவேளை வகுப்புத் துவேஷம் வளரும்விதமாக நடந்து கொள்கிறோமோ, என்ற ஐயம் ஏற்பட்டால்கூட, இதோ வரிசை வரிசையாகக் கிடைத்துள்ள தீர்ப்புகள் கூறுகின்றன, இல்லை, இல்லை, வகுப்புத்துவேஷமல்ல உன் எழுத்திலே இருப்பது, நீ குற்றமற்றவன், உன் செயலிலே தவறு இல்லை என்று.

தீர்ப்புகள் தரும் உற்சாகம், புதியதோர் ஆர்வத்தைத் தருகிறது.

நமது பணியைத் திரித்துக் கூறுவோர்கள் கூவட்டும், கொக்கரிக்கட்டும், வழக்குகள் தொடரட்டும், நாம் நமது பணியினை தூயஉள்ளத்துடன், தொடர்ந்து நடத்திச் செல்வோம், நாடு தீர்ப்பளிக்கட்டும், நல்லோர் தீர்ப்பளிக்கட்டும், என்ற உறுதிகலந்த உற்சாகம் கிடைக்கிறது, நல்ல தீர்ப்பு மூலம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.

402

402—405
2. 52



REGD No

# திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

6—4—52

இதழ் 40

...ண்டோ!'' என்று ...த்திரிகைகளில் விளம் ...ர். திரும்பிப் பார்க்க ...ம். கலக்கத்தோடு பார்த் ...ந்து லட்சம் ரூபா, சார்! ...ய கிடக்குது!!' என்று ...ய்த்தனர். அவர்கள் கலக் ...ணா, கேலிஎழும்பிற்று பலருக் ...ஐந்து லட்சம் போட்டுவாங்கி ...களாம்—இன்று விற்க விருப்பு ...றார்கள்—எவரும் விருப்பவில்லை வாங்கிய லட்சணத்தைப் பார்த் தாயோ?'' என்று பலப் பலக் கூறி, பரிகாசம் செய்தனர், மக்கள்.

விலை போகாத ''அதை'' வாங் கியவருள் ஒருவர் குறிப்பிட்டார். 'விளம்பரம் செய்தோம் பலனில்லை; ஏலம் போட்டால் என்ன?''

''ஏலமா?''

''ஆமாம். வேறு வழி...!''

ஐந்து லட்சத்தை விழுங்கிய ''அது'' துருப்பிடித்துக் கிடந்தது. அதைப் பராமரிக்கவும், துடைத்து வைக்கவும், 'எண்ணெய் போடவு மாக—செலவு வேறு ஆகிக்கொண் டிருந்தது. ஆகவே, ஏலம் போட முன் வந்தனர்.

''ஐந்து லட்சம் போட்டு வாங்கி யது—அருமையான பெயர் கொண் டது—ஒரு தரம்.........இரண்டு தரம்......'' என்று கூவப்பட்டது ஏலத்துக்கு. எவரும் கேட்கவில்லை. வியர்வையையும் வேதனையையும் சமாளித்துக் கொண்டு கூவினர்.

ஒருவர் முன் வந்தார்—சந்தோ ஷத்தோடு பார்த்தனர். அவர் கேட்டார் — ''ரூபாய் முப்பது ஆயி ரம்!''

ஐந்து லட்சமாச்சே என்றனர், விலை கூறியவர்கள் 'ஆனால் என்ன— முப்பதாயிரம் தான் பொறும்— அதுக்கு மேல் எனக்கு வேண்டாம்' என்று அவரும் போய்விட்டார்

எங்கே நடந்தது, இது என்று புரிந்துகொண்டிருக்கலாம — மாட் சிமை தங்கிய காங்கிரஸ் மகானுபா வர்களைத் தாங்கிய சென்னை மாகா ணத்திலேதான், இத்திருக் காட்சி நடைபெற்றது.

ஏலம் போட்டவர்கள் காங்கிரஸ் மந்திரிமார்கள். ஏலம் போடப்பட்ட பொருள் அனுமான் — ராம தூத னின் சிலையல்ல, விமானத்துக்கு இவர்கள் விரும்பி வைத்த பெயர்— விமானம் 'அனுமான்' இந்த இடத்தில் உருவானதல்ல; யாரோ வெளிநாட்டார் செய்தது—ஆனாலும் பக்தி சிரத்தையோடு பெயர் சூட்டி தூப தீபம் காட்டித்தான், 'வெள் ளோட்டம்' நடத்தினர். அந்த அனு மான் சந்தி சிரித்திருக்கிறது! அய் யங்கார் சுவாமிகளோ ஆச்சார்ய பீடங்களோ 'அனுமா'னுக் கேற் பட்ட அவமானத்தைப் போக்க முன் வந்ததாகத் தெரியவில்லை — விற்காமல் கிடந்தது—கஜானாப் பணத்தைத் தின்றுகொண்டே கிடந்தது!

**ஐந்துலட்சம் :: :: ஐயா!**

பரிதாபகரமான அனுமானைப் பற்றி, பழைய சட்ட சபையின் கடைசி நாளில் பல உறுப்பினர்கள், கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். அப்போது காங்கிரஸ் மந்திரியார் கனம் சீதாராம ரெட்டி அனுமா னைப் பற்றிய விவரங்களைத் தந் திருக்கிறார்—

'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' என்பதைப்போல சென் னையிடம் இருந்தது இந்த ஒருவிமா னம்தானும்அடிக்கடிடில்லிசெல்லும் அவசியம் ஏற்படுகிறதல்லவா—அதற் காக 1948ல் வாங்கப்பட்டதாம். வாங்கியபிறகு மூன்றாண்டுகளில் மூன்றே மூன்று முறைதான் இந்த விமானம் டில்லிக்குப் பறந்ததாம்— அப்படியானால் சென்னை மந்திரிகள் போகவில்லையோ என்று நினைப்பீர் கள். போனார்கள் பலப்பல தடவை கள்! இந்த விமானம் 'ஷெட்டில்' கிடக்க, வேறு விமானங்களுக்கு காசு போட்டு 'டிக்கெட்' வாங்கிக் கொண்டு போனார்கள்! காசு—கஜா னாவிலிருந்து எடுத்துக்கொண்டது!

பிரயோஜனப்படாத விமானம் சும்மா இருந்ததா? — இல்லை! — சுமார் $2\frac{1}{4}$ லட்சத்தைத் தின்றிருக் கிறது!! $2\frac{1}{4}$ லட்சம் அனுமானின் பராமரிப்புக்காகச் செலவிடப்பட்ட தாம் — ஏழைபங்காள காங்கிரஸ் அமைச்சர் அறிவிக்கிறார்.

இவ்வளவு செலவு செய்த விமா னத்தைத்தான், எவரும் வாங்க வர வில்லை—ஏலத்துக்குக் கூவியும் கேட் பாரில்லை—கேட்ட ஒருவரும் 'கிண் டல்' செய்துபோயிருக்கிறார்.

* * *

''சரி அப்பா? இப்போது என்ன

யாயிற்று — அனுமான்!'' என்று கேட்பீர்கள். அதைத்தான் ராஜமன்னார் என்பவர் சட்டசபையில் கேட்டிருக்கிறார். அதற்கு காங்கிரஸ் அமைச்சர் பதில் கூறியிருக்கிறார்.

''ஐந்துலட்சத்துக்குமேல்செலவு செய்திருக்கிறோம். விற்க முயன்றோம் — முடியவில்லை: ஏலம் கூவினோம்—கேட்பாரில்லை. என்ன செய்வது? இனமாகக் கொடுத்துவிட்டோம்!''

இனம் கொடுத்துவிட்டார்களாம்! சென்னை மாகாணத்து கஜானாவிலிருந்து ஐந்துலட்சத்தைக் கொட்டி வாங்கிய இந்த ஆகாயவிமானத்தை இனம்தந்துவிட்டார்களாம். இனம்!—யாருக்கு? டில்லிக்கு!! கூறுகிறார், அமைச்சர், கும்பி கொதிக்க அலறிக்கிடக்கும் மக்கள் நம்பிய காங்கிரஸ் அமைச்சர் கூறுகிறார்! கலக்கம் எதுவுமின்றி கூறுகிறார்!! டில்லி பாதுகாப்பு இலாகாவுக்கு இனமாக அளித்துவிட்டார்களாம்!

அமைச்சரின் இந்தப் பதிலைக் கேட்ட நண்பர் அப்துல் மஜீது ஆத்திரத்தோடு கேட்டிருக்கிறார்:

''உங்களது தமாஷாவுக்காக சர்க்காருக்கேற்பட்ட இந்த நஷ்டத்தை யார்தலையில் கட்டப்போகிறீர்கள்?''

இதைத் தொடர்ந்து பல உறுப்பினர்கள், காங்கிரஸ் அமைச்சரை, கேள்விகள் கேட்டிருக்கிறார்கள்—காங்கிரஸ் உறுப்பினர்களே கேட்டிருக்கிறார்கள்.

ராஜமன்னார்:— புராணத்தொடர்பு கொண்ட 'அனுமான்' என்கிற பெயரை இந்த விமானத்துக்கு வைக்கக் காரணம் என்ன?

பட்டாபிராமப்யா;— இந்த 'உதவாக்கரை விமானத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டதா?

லிங்கராஜு:— இந்த விமானத்தை வைத்துக் கொள்வதற்காக இந்திய சர்க்காருக்கு ஏதாவது பணம் தரப்போகிறதா, சென்னை?

கோபாலசாமி:— இந்த 'நன்கொடை' விமானத்தை இந்திய பாதுகாப்பு இலாகா உபயோகிக்கப் போகிறதா—அல்லது மியூசியத்தில் வைக்கப் போகிறதா?

கேலி! கிண்டல்!!—இத்தனைக்கும் காங்கிரஸ் அமைச்சர் திணறித் திணறி பதில் சொல்லியிருக்கிறார்—'இல்லை! ஆமாம்!' என்ற வார்த்தைகளைக்கொண்டு.

கடைசியாக நண்பர் ரஸாகான் கேட்டிருக்கிறார்:

''இந்த விமானத்தால் இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே. இத்தொகையை எந்தெந்த மந்திரிகளிடமிருந்து வசூலிக்கப் போகிறீர்கள்?''

வசூலிக்கப் போவதில்லை!—என்று ரத்னச் சுருக்கமாகப்பதில் கூறிவிட்டார், அமைச்சர். எப்படி வசூலிப்பார்கள்!—இந்தத் தைரியத்தால் தானே மக்களுடைவரிப்பணத்தை இப்படியெல்லாம் கொட்டியளந்திருக்கிறார்கள்—ஏழைகள் நாடாம்! ராயலசீமைபஞ்சமாம்! பட்டினியால் சாகிறார்களாம்! பாருங்கள், நமது காங்கிரஸ் ஆட்சியின்கைங்கரியத்தை—ஐந்துலட்சம் ஐயா, ஐந்து லட்சம்! வீண்—வீண்! யாருடைய பணம் இது? எவர்தரும்வரி இது! இவர்கள் மந்திரிமார்கள்—இதற்கும் பெயர் அரசாங்கம்—இதுபோன்ற காரியங்களைச் செய்வோர் 'தியாகிகள்'! வெட்கக்கேடு!

❀

# வெற்றிலை குடியானவர் தொல்லை

[இரா. சகந்நாதன்]

பாண்டமங்கலம் பொத்தனூர், புதுபாளையம், வேலூர், சேலம் மாவட்டத்தில் இருக்கின்றன. மேற்படியூர்களில் ஏறத்தாழ ஐம்பதாயிரம் மக்களுக்குமேல் (கொடிக்காலில்) வெற்றிலைத் தோட்டத்தில் வேலை செய்து வருகிறார்கள், இந்த ஊர்களில் உற்பத்தியாகும் வெற்றிலையை அந்த ஊர் ஏஜண்டுகளின் மூலம் சங்ககிரி சேட்டுகளுக்கு அனுப்பி, சேட்டுகள் கொடுக்கும் பணத்தைக்கொண்டு, உள்ளூர் ஏஜண்டுகள், பணத்தை குடியானவர்களுக்கு கொடுப்பது உண்டு. ஆனால் அடிக்கடி சங்ககிரியிலிருக்கும் சேட்டுகள் தாம் முதலில் சொல்லிய விலையின்படி கணக்கு தீர்ப்பது இல்லை. உதாரணமாக ஒரு ஏஜண்டு ஒரு வாரத்தில், ஒரு சேட்டிற்கு பத்தாயிரம் ரூபாய் (சரக்கு) வெற்றிலை போட்டால் அந்த சேட்டிடம், அந்த ஏஜண்ட் பாக்கி வசூலிக்கச்சென்றால் முதலில் 6 ஆயிரம் அல்லது 7 ஆயிரம்ரூபாய்கொடுத்துவிட்டு, மீதி அடுத்த வாரம் தருகிறேன் என்று சொல்லி சரக்குப் போடும்படி கேட்பது. இவர்களும் அதன்படி அவர்களுக்கு சரக்குப் போடுவது. பணம் வசூல் செய்யப் போனால் பழைய பாக்கியில் (1000) ஆயிரம் ரூபாய்தான் தரமுடியும் கணக்கு நேர் செய்து கொடுஎன்று சொல்லி, ஏஜண்டைக் கேட்பார்கள். ஏஜண்டும், விட்டுக் கொடுத்துவிட்டு ஊர்வந்து குடியானவர்களிடம் பணத்தை குறைத்துத்தருவது இப்படியாக நீண்டகாலமாக நடந்து வருவதால் குடியானவர்கள் மிகவும் தொல்லைக்கு ஆளாகி அவதிப்படுகிறார்கள். சென்ற வாரம்வரை இந்த மூன்று ஊர்களின் பாக்கி சங்ககிரி சேட்டிடம் (375000) ரூபாய் மூன்றேமுக்கால் லட்சம் இருக்கிறது. இந்தத் தொகையைக் கேட்டால் 'தள்ளிக்கொடு. சரக்குப்போடு' என்று கேட்கிறார்கள். இவற்றிற்கு எல்லாம் ஆளாகியுள்ள குடியானவர்கள் மிகவும் கடன்காரர்களாக ஆகி, சோற்றுக்கு திண்டாடுகிறார்கள். சேட்டுமார்களோ பணம் இதுவரை தந்தபாடில்லை. ஆதலால் பொத்தனூர் வெற்றிலை வியாபாரசங்கத்தின் சார்பாக உள்ள முதன்மையாளர் சென்றவாரத்தில் சங்ககிரி சென்று பாக்கிகளை சேட்டுமார்களிடம் கேட்கும்பொழுது மேற்படிசேட்டுகளின்கையாட்கள் வசூல்செய்ய வந்தவரை மிகவும் தாறுமாறாகப் பேசி, கேவலப்படுத்தியிருக்கிறார்கள். இதைக் கேள்விப்பட்ட குடியானவர்கள் மிகவும் கோபப்பட்டு சேட்டுகளுக்கு வெற்றிலை போடக்கூடாது பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று ஆத்திரத்தோடுசங்ககிரிச் செல்ல முற்பட்டார்கள். ஆனால் அதற்குள், பொத்தனூர் கிராமத்தின் ஊராண்மைக் கழகத் தலைவர் அவர்கள் அறிந்து குடியானவர்களுக்கு சமாதானம் சொல்லி, வெற்

11-ம் பக்கம் பார்க்க



# ஏனப்பா, முடியாது?

''எப்படியப்பா முடியும்?''—ஏளனத்தோடு கேட்பவர்களும், எரிச்சலோடு பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். ஆந்திரத்தைக் காட்டியும் கன்னடத்தை உதாரணத்துக் கழைத்தும், கேரளத்தை சுட்டிக் காட்டியும் 'திராவிட நாடாவது! வருவதாவது—எப்படியப்பா முடியும்?' என்று கேட்கிறார்கள்.

இப்படிக் கேட்போரிலே, இரு ரகம் உண்டு. ஒன்று, சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளும் ஆசை கொண்டோர். மற்றொன்று, நம்மைப் பார்த்து வயிறெரிந்து வாய்க்கு வந்த வார்த்தைகளை வாரியிறைக்கும் ரகம்.

இரண்டாவது ரகத்துக்குப் பதில் தர முனைவது பயன் படாத செயலாகும். கொக்கு, கருப்பு என்போரைத் திருப்தி செய்யவா முடியும்—குதிரைக்கு மூன்று காலே என்பது விதண்டா வாதம்தானே!

கேரளமும் ஆந்திரமும் தமிழகமும் கன்னடமும் சேர்ந்த கூட்டாட்சி அமைப்பதென்பதே நமது கோரிக்கையாகும்.

இந்தக் கூட்டாட்சிக்கான பிரதேசமாக சென்னை மாகாணத்தை நாம் குறிப்பிட்டு வருகிறோம். இத்தகைய மாபெரும் நிலப்பரப்பு, கூட்டாட்சிக்குள் இருப்பதே பலனும் பயனும் தரமுடியுமென்பது நமது கருத்தாகும்.

இந்தக் கூட்டாட்சிக் கோரிக்கைக்கு நாம் காட்டும் முதல் காரணம்—இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பண்டைய கலாச்சாரமும் அவர்தம் பழக்க வழக்கமும் தான். ஒரே இனம்! ஒரே மொழி பேசிய கூட்டம்! ஒரே நிலையில் வாழ்ந்திட்ட மக்கள்!—இந்த அடிப்படையை வைத்தே, நாட்டுப் பிரிவினை கோருகிறோம்.

''என்னப்பா இது! தமிழ் நாட்டிலிருந்துகொண்டு ஒரே இனம் என்று சொல்லிவிட்டால் போதுமா?''

''மலையாளத்தார் மனமிசைவரா, ஆந்திரத்தார் அருகே வருவரா, கன்னடத்தார் கை கொடுப்பரா!''

''தனித் தனி மொழிகள், நீ குறிப்பிடும் பிரதேசத்தில் இருப்பதை அறியாயோ?''

என்று, இவ்வித கேள்விகளை எழுப்புகிறார்கள். உண்மைதான்—கேள்வி எழுப்புவோர் குறிப்பிடுவது போல அந்தந்த பிரதேசங்களில் நமது குரல் ஒலிக்கவில்லை—காரணங்கள் பல உண்டென்றாலும் ஒலிக்கவில்லை என்பது உண்மை.

நமது கழகத் தோழர்களில் சிலர், கேரளத்திலும், கன்னடத்திலும், ஆந்திரத்திலும் அடியெடுத்து வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் நமது எண்ணம் பரவிய அளவுக்கு அந்தந்த பிரதேசங்களில் பரவவில்லை.

பரவவில்லையே யொழிய நாம் கொண்டிருப்பதுபோல, இந்த மாநிலம் ஒரே அமைப்புக்குள் வாழவேண்டுமென்று ஆங்காங்கே உள்ளோர் விரும்புகிறார்கள்.

சென்னை மாகாணம், தனிச் சிறப்போடு இயங்கவேண்டும் — இந்த ஆசை கேரளத் தோழர்களிடத்திலும் ஆந்திர நண்பர்களிடமும் கன்னடம் பேசுவோர்களிடையிலும் இல்லாமலில்லை; இருக்கிறது.

மலையாளத்தார் மனமிசைவரா, இசைந்தாலும் திருவாங்கூரும் கொச்சியும் இணைய விரும்புமா—தனி ராஜ்யமாச்சே, அது!—என்று, கேரளப் பிரதேசங் குறித்து, கூறுவோர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தகவலை வைக்கவிரும்புகிறோம்.

''சென்னை ராஜ்யத்துடன்
திருவாங்கூர் கொச்சி இணைக்
கப்பட வேண்டும்''

நாமல்ல கூறுவது: கேரள சாமாஜம்! கடந்த 24ந் தேதி சென்னையிலே நடைபெற்ற மலையாளிகள் மாநாட்டிலே இப்படியொரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. மலையாளிகள் மாநாடு! தலைமை வகித்தவர் டாக்டர் சி. ஆர். கிருஷ்ண பிள்ளை!!

இத் தீர்மானம் ஏன் கொண்டு வரப் பட்டிருக்கிறது தெரியுமோ?

''பொருளாதாரத்திலும், கலாச்சாரத் துறையிலும், சமுதாய ரீதியிலும் முன்னேற இதுவே வழி தரும்''

இது, ஏது?—சென்னையோடு திருவாங்கூர் கொச்சி இணைந்து வாழ்வது! இதனால் பலன்? சமுதாய முன்னேற்றம்—பொருளாதார அபிவிருத்தி—கலாச்சார முற்போக்கு மலையாளிகள் மாநாடு கூறுகிறது இப்படி!

திராவிட நாடு பெற நாம் என்ன கூறுகிறோம்—திராவிட சமுதாயம் முன்னேற; திராவிட நாடு பொருளியல் வாழ்வு பெற; திராவிடக் கலாச்சாரம் சிறப்புற்று விளங்க!

மலையாளிகள் மாநாடு கூறுவதற்கும் நாம் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறதா! இல்லை யென்றால் எப்படி, இக்கருத்து, அங்கே எழும்பிற்று—நமதுகுரல் ஒலிக்கவில்லை மாநாடுநடைபெற்ற கோகலே மண்டபத்தில்; ஆனால் எண்ணம் முரசொலித்திருக்கிறது! எவ்விதம் ஏற்பட்டது இது!

நாம், எதுகைகூடினால் உண்மையான சுகவாழ்வு மலருமோ அதைப் பெறவிரும்புகிறோம். ஆகவே, அந்த உண்மை, அவர்கள் உள்ளத்திலும் எழும்பியிருக்கிறது.

* * *

''இதென்னப்பா, ஆரியமும் திராவிடமும்!''

''மலையாளிகளும் தெலுங்கரும் கன்னடியரும் திராவிட இனமாமே!''

''ஏதோ சொல்கிறார்கள்!''

''ஆரியம் திராவிடம் பேதத்தை எப்படிக் காட்ட முடியும்?''

இதுபோல, வேறு சிலர் கேட்கிறார்கள் இனவாரி அடிப்படையில் தனி நாடு கோருவதைக் கேட்டு, இவர்களுடைய கருத்தெல்லாம். 'எங்கேயிருக்கிறது ஆரியமும் திரா

விடமும். அதுதான் கலந்துவிட்டதே ஒன்று' என்பதாகும்.

இந்தக்கலப்பு எங்கேயிருக்கிறது? இருந்தால் அக்ராகாரம் ஏற்பட்டிருக்குமா—அங்கே இன்னார்தான் இருக்கவேண்டும் என்கிற நியதி உண்டாகியிருக்குமா—பேசும் மொழியிலே 'ஆத்துக்கு' 'டேக்கு' 'நோக்கு' புறபபட்டிருக்குமா—மடிசஞ்சி முறை வளருமா—வைதிகப் பாசம் நிலைத்து நீடிக்குமா!

ஆரியக் கலாச்சாரத்துக்கும் திராவிடக்கலாச்சாரத்துக்குமுள்ள வேற்றுமைகளைக் கண்கூடாகக் காண்கிறோம்—இன்றும்! 1952-லும்!!

பேதங்களும் கலாச்சார வேற்றுமைகளும் அதிகமாகத் தென்படுகின்றன. திராவிட இனம் தனது மொழியைப் பேசுகிறது! அதுவே தமது தாய்மொழி என்று கூறுகிறது. வந்த இனமோ, 'சம்ஸ்கிருதம்' தனது தாய்பாஷை என்று சொல்கிறது — அதுவே மேலான பாஷை என்று பெருமை பேசுகிறது.

தமிழகத்தில் மட்டுமல்ல பிற பிரதேசங்களிலும், இரண்டு கலாச்சாரத்துக்குமுள்ள, பேதங்கள் இன்றும் நிலவிக்கொண்டுதான் உள்ளன. அங்கங்கும் பார்ப்பனர்களே, மேல்ஜாதிக் காரர்களாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கீழேயிருக்கும் அத்தனை மக்களும்—அவர்தம் மொழிகளும்—திராவிடக் குழு மொழியாகத்தான் இருக்கின்றன. இந்நிலையில் ஏன் இந்த இனம் — தனி நாடு பெற்று, வாழக் கூடாது? வாழ்ந்ததே கிடையாதா! தமிழகமும் கேரளமும் கன்னடமும் தெலுங்கு பிரதேசமும், இணைந்து தழுவி, வாழ்ந்திருக்கின்றன. தென்னாட்டு சரித்திரத்தைப் பார்த்தால் பலப்பல தென்படும். இன்றும், ஆங்காங்கே சென்றால் இந்த உண்மையை அறிவிக்கும் சில சாசனங்களைக் காணலாம். இவ்வளவு ஒற்றுமை கொண்ட மாபெரும் இனம், ஒன்றாக ஏன் வாழமுடியாது! இவ்வளவு பேரும் ஒன்றாகிவிட்டால் தன்னிலை என்னவாகும் என்று கலங்கும் ஆதிபத்யவாதியைவிட எவர்தான் இதை எதிர்ப்பர்?

"தமிழ் நாட்டார் திராவிடம் என்று பேசுகிறார்கள். தமது ஆதிக்கத்துக்கீழ் ஆந்திர கேரள கன்னடப் பகுதிகளை கொண்டு வர விரும்புகிறார்கள். இதுதான் திராவிடநாடாம்"

"ஆந்திரர் ஆந்திரநாடு கேட்கிறார்களே, என்னப்பா செய்வீர்கள்?"

"மொழிவாரி மாகாணப் பிரிவினையன்றோ தேவை! இந்தக் கிளர்ச்சியைத் தாண்டி திராவிடநாட்டுப் பிரச்சினை வெற்றிபெறஇயலுமோ?"

இப்படிச் சில கேள்விகள்—முக்கியமானவையும்கூட. இதற்கு தனது பதிலை திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய முதல் மாநாட்டின் மூலம் தெளிவாக்கியிருக்கின்றது: அத்தீர்மானம்:—

"தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திராவிடக் குழு மொழிகள் வழங்கும் பகுதிகள் மொழிவழி தனி மாகாணங்களாகப் பிரிந்து சுய நிர்ணய அடிப்படையில் சுதந்திர சமதர்ம திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியாக உருவாக வேண்டும்"

அந்தந்த பகுதிகள் மொழிவாரியாகப் பிரிய வேண்டுமென்பதை நாம் மறுக்கவில்லை. அவையவை தமது மொழியின் மூலமாக ஆட்சி நடத்தவும், தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும், வேண்டுமென்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அப்படி பிரிந்த நான்கு பிரதேசங்களும், தமக்கோர் கூட்டாட்சி அமைத்துக் கொள்ள வேண்டுமென்கிறோம் — நான்கு காலுக்கள் ஒரே இடத்திலிருக்கவேண்டும்—சிதறினால் ஒரு அணுவாக ஆகமுடியாது! மதிப்பாக வாழவும், பொது எதிரியை மடக்கவும், தனது பொருளாதார வாழ்வை நிலைநாட்டிக் கொள்ளவும் இந்தக் கூட்டாட்சி ஏற்பட வேண்டும் என்று நமது தீர்மானம் கூறுகிறது.

இந்தக் கூட்டாட்சி, சமதர்ம மணம்கமழ, விளங்குமென்று தெளிவுபடுத்தியுள்ளோம்.

☆

"இந்திய சர்க்காரிலிருந்து பிரிந்து போகத்தானே விரும்புகிறீர்கள்?"

"ஆமாம்!"

"ஏன்?"

"டில்லி எங்களை வஞ்சிக்கிறது—எல்லாத் துறையிலும் மலைபோல வளர்ந்து எங்களைத் தாழ்த்துகிறது"

"இதுமட்டுந்தானா காரணம்?"

"இன்னும் பலப்பல உண்டு—இந்தியா ஒரு உபகண்டம். இங்கே பல இனத்தவர்கள் வாழ்கிறார்கள். அதிலே குறிப்பிடக்கூடிய இனம் எமது. இது ஒரு காலத்தில் சிறப்புற்று விளங்கியது..."

"சரி! சரி!! இதனால் திராவிடநாடு கேட்கிறாய் திராவிடக் கூட்டாட்சியில் ஒரு மத்தியசர்க்கார் நான்கு பிரதேசங்களையும் நிர்வகிக்க இருக்குமல்லவா?"

"இருக்கலாம்!"

"அப்போது என்ன அர்த்தம்?"!

"விளங்கவில்லையே தாங்கள் கூறுவது!"

"ஒரு மத்தியசர்க்கார் வேண்டாமென்று கூறிவிட்டு மற்றோர் மத்திய சர்க்கார் ஏற்படுத்தப் போகிறீர்கள் இல்லையா?"

இப்படி, திசையைத் திருப்புவோரும் இருக்கிறார்கள். இப்போதிருப்பதற்கும் — நாம் கூறும் கூட்டாட்சிக்குமுள்ள வித்யாசங்கள் நிறைய இருக்கின்றன. இப்போது இருப்பது ஒரு சர்க்கஸ் கூடாரம்! மான், பசு, புலி, நரி — எல்லாம் அடைக்கப்பட்டிருக்கிறது!! ஆனால், நாம் கூறும் கூட்டாட்சி — தற்போதைய மத்யசர்க்காரைப் போன்றதல்ல. தன்னோடிருக்கும் பிரதேசங்களைச் சுரண்டி, தான்மட்டும் கொழுப்பதல்ல! எல்லாப் பிரதேசங்களையும் தனது ஆதிக்கத்துக்குப் பணியவைத்து ஆட்டிப் படைப்பதல்ல! எல்லா அதிகாரங்களையும் பறித்துக்கொண்டு தன்னோடு இருப்பவைகளை, 'பிச்சைக்காரர்'களாக ஆக்குவதல்ல!

சகோதர கூட்டாட்சி — இரத்த பாசம் கொண்டது—பரஸ்பர கூட்டுறவு அடிப்படையில் கொண்டது. இத்தகைய திராவிடக் கூட்டாட்சி மலர்ந்தால்தான், இங்கே பரவிக்கிடக்கும், மாபெரும் இனம் ஐக்கியத்தோடு தனது சாதனைகளைப் பெறமுடியும். மலையாளிகள் மாநாட்டில் குறிப்பிட்டதுபோல, "பொருளாதார முன்னேற்றமும், கலாச்சார முற்போக்கும், சமுதாய ஒற்றுமையும் கொண்டு" விளங்க முடியும்.

☆



# மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி

## தி. மு. க. பொதுச் செயலாளர் வேண்டுகோள்

அன்புடையீர்,

வணக்கம். தென்ஆற்காடு மாவட்டத்தில், தேர்தலில் காங்கிரசுக்கு எதிர்ப்பாகப் பணியாற்றிய வீர இளைஞர் மஜீத் எனும் தோழன் காங்கிரசுக்காரர் ஒருவரால் கொலை செய்யப்பட்ட செய்தி தாங்கள் அறிந்ததே.

தமிழ்நாடெங்கும் இந்தப் படுகொலையைக் கண்டித்து அறிக்கைகள் விடுத்தும், கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றியும், அனுதாபச் செய்தி அனுப்பியும், எல்லா முற்போக்குக் கழகங்களும், தங்கள் கடமையைச் செய்தன.

தென்ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த (உழைப்பாளர் கட்சி) M. L. A-க்களும் இது விஷயமாகத் தங்கள் கடமையைச் செய்து வருகிறார்கள்.

நெல்லிக்குப்பத்தில், தோழர் மஜீது குடும்ப பாதுகாப்பு நிதி திரட்டும் முயற்சிக்காக ஒரு தனிக் கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

பல நண்பர்கள் தனிப்பட்ட முறையிலே உதவிசெய்துமிருக்கிறார்கள்.

சில பொதுக் கூட்டங்களிலே உண்டியல் மூலம் சிறு தொகையும் வசூலாகி இருப்பதாக அறிகிறேன்.

தோழர் மஜீதின் குடும்பத்தினர் பரம ஏழைகள்.

பொதுநலப் பணிக்காகத் தன் மகன் பலியிடப்பட்ட செய்தி ஒருபுறமும் வறுமை மற்றோர்புறமும் தாக்க, மஜீதின் தந்தை தத்தளிப்பதாக அறிகிறேன்.

எனவே, "மஜீது குடும்ப பாதுகாப்பு நிதி" முயற்சியில், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஈடுபட்டு, உருவாக்கி, விரைவில், வெற்றி தேடித்தரக் கோருகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், 'மஜீது குடும்ப பாதுகாப்பு நிதி'க்காக அனுப்ப விரும்பும் உதவித் தொகையை, 'திராவிடநாடு' நிலையம், காஞ்சிபுரம், என்ற முகவரிக்கு, 'மஜீது குடும்ப பாதுகாப்புநிதி' என்று குறிப்பிட்டு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டங்களில் உண்டியல் வசூலிக்கப்பட்டால், அதனையும், இம்முறையிலே அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லிக்குப்பத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நிதிக் கமிட்டி, தென்ஆற்காடு மாவட்ட M. L. A-க்கள் ஆகியோரையும் கலந்துகொண்டு, 'சேரும் நிதி'யை அந்தக் குடும்பத்துக்குச் சேர்ப்பிக்கும் காரியத்தை மேற்கொள்ள இருக்கிறேன்.

இந்த என் வேண்டுகோளை அன்புடன் ஆதரித்து, விரைவில், என் எண்ணம் வெற்றிபெறச் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

அன்பன்

**அண்ணாதுரை.**

# ராதாவுக்குத் தடை

கரூரில் நடைபெறவிருந்த நடிகவேள் எம். ஆர். ராதாவின் நாடகங்கள், நடைபெறவொட்டாமல், கடந்த 27ந்தேதியன்று தடைசெய்யப்பட்டதாக அறிகிறோம்.

மேற்படி தடையைவிசிய மாஜிஸ்டிரேட் மேற்படி நாடகங்கள் நடைபெற்றால் அமைதிக்குப் பங்கம் ஏற்படுமென்று குறிப்பிட்டுள்ளார்.

நண்பர் ராதா — மக்கள் மனங்கவர்ந்தவர். தினசரி அவரது நாடகம் நடக்காத இடமில்லை-ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊராக அவரது நாடகசபையினர் தமது நாடகங்களை நடத்தி வருகிறார்கள். நடத்தி வருகிறார்களென்றால் 'நவாப்' கம்பெனிகள் போலல்ல, பெருமித வசூல்—அபாரமான கூட்டம்—எப்படியப்பா நடிக்கிறார்' என்றபாராட்டுதல்களோடு.

அந்த ஊர்களிலெல்லாம் ஏற்படாத அமைதிக்குப் பங்கம், கரூரில் மட்டும் எப்படி ஏற்படுமோ—விளங்கவில்லை. நாமும் தொடர்ந்து கவனித்து வருகிறோம். கரூரில்மட்டுமே அடிக்கடி ராதாவுக்கு தடை உத்திரவுகள் போடப்பட்டு—நாடகங்கள் நடத்தப்படாமல் தடுக்கப்படுகின்றன. நான்கைந்து முறைகள், இதுபோல நடைபெற்றிருக்குமெனக் கருதுகிறோம். ஒரு முறை நடத்த அனுமதிதந்து, அதனால் ஏற்பட்ட 'அமைதிக்குப்பங்கத்தால்'தான் இப்போதும் தடுக்கப்படுகிறது என்று கூறமுடியாது! ஏனெனில் தொடர்ந்து அங்குமட்டும் தடைகள் போடப்பட்டிருக்கின்றன!!

சிலருடைய சொந்த விருப்பு வெறுப்பு அன்றி வேறெதைக் காட்டமுடியும்இந்நடவடிக்கைக்கு?

ஆட்சியின் அம்புகள் இத்தகைய அடாபிடிச் செயலில் இறங்குவது காண உண்மையில் வருந்துகிறோம். மனித உரிமையை உதாசினம் செய்வது பேராபத்தைத் தரும். இதை உணரவேண்டும், அதிகாரத்தால், இஷ்டம்போல உலவுவோர்.

☆

திராவிடநாடு

காஞ்சி] 6—4—52 [ஞாயிறு

# ஆச்சாரியார் வருகிறார்!

★

ஆச்சாரியார் வருகிறார்! அரசோச்ச வருகிறார்! பதவிப் பட்டாடை உடுத்திக்கொண்டு, சட்டசபை உறுப்பினர்கள் சிலர் பாதந்தாங்க, சிலர் பல்லக்குத் தூக்க, வேறு சிலர் சாமரம் வீச, மற்றும் சிலர் 'அடைப்பம்' தாங்க, பவனிக்குத் தயாராகிறார்!

ஆமாம் — அலுத்துவிட்டேன், மிக மிக அலுத்துவிட்டேன்—அரசியலில் இனி நுழையேன், அரே ராமா! அரே கிருஷ்ணா! எனும் அருமைத் திருமந்திரங்களை உச்சரித்துக் கொண்டு உயிருக்குயிராக உள்ள பரம்பிரம்மத்தை கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பூட்டும் வண்ணம் எடுத்துரைத்து, இகத்திலே பரத்தைக்காண, உறுதி கொண்டுவிட்டேன், இனி பதவியின் பளபளப்பு, அதிகார மயக்கம், எனும் 'மாயப் பிசாசுகள்' தீண்டிட விடமாட்டேன், பஜகோவிந்தம், பஜகோவிந்தம், என்று பாடிக் கொண்டிருந்தாரே, அதே ஆச்சாரியார் தான் வருகிறார்!

'யானைமீது அம்பாரிகட்டி அதிலே வெல்வெட்டு மெத்தை அமைத்து, அதன் மீது அலங்காரமாகச் சாய்ந்துகொண்டு சென்ற 'மஹாராஜா', இத்தகைய போகபோகாதிகள் வீண் மனமயக்கம், எம்மானைப் பெம்மானைக் காண வொட்டாது தடுக்கும் பாபக் கறைகள், எனவே, இவை வேண்டேன், இனி துளசிமாலை அணிவேன், திருவாய்மொழி படிப்பேன், திருநாமம் தரிப்பேன், தீர்த்த யாத்திரை செல்வேன், நைத்தாளமிடுவேன் வேறு வீண்வேலை ஏதும் செய்வேன் அல்லேன், என்று ஊரறிய உலகறிய, உரத்த குரலில் கூறிவிட்டு, அடுத்த நாளே, எருமை மீதமர்ந்து எருக்கஞ் செடி நிறைந்த காட்டைக் கடந்துசென்று இடுப்பளவு சேறுள்ள இடத்திலே இறங்கி, இதுவும் ஒரு சேவை தான், என்று கூறினதாகக் கதை தீட்டவும் கூசவர் — ஆனால் கண்ணுலே காண்கிறோம், 'கனம்' ஆகிறார், இகலோகமே இலேசானது என்று கூறிக்கொண்டிருந்த ஆச்சாரியார்.

மதுவிலக்குப் பிரச்சாரத்தை, கேட்போர் மனம் தெளியும் வண்ணம் செய்துகொண்டிருக்கும்சொற்பொழிவாளன், மேலும் அருமையாக, மதுவால் விளையும் கேடுகளை எடுத்துக் கூறும் நோக்குடன், "பூபோட்ட கிளாசிலே போடப்பா இரண்டரை" —என்று கேட்டான், என்று நகைச்சுவைக்காகக்கூட, எழுதயாரும் முயற்சிக்கமாட்டார்கள்— ஆனால், ஆச்சாரியார் இதோ கிளம்புகிறார், சென்னையில் அரசோச்ச! வீழ்ச்சிதான்—எனினும், என்செய்வது, என்கிறார்! உடலிலேயோ வலிவில்லை — உள்ளமோ, பாரமார்த்திகத்திலே பாய்ந்துவிட்டிருக்கிறது— எனினும், என் செய்வது, 'இவாளெல்லாம், அழைக்கிறபோது ஒப்புக்கொள்ளாமலிருக்கமுடியல்லே!'' —என்று பேசுகிறார்.

அடுத்த ஆச்சாரியார் வருகிறார். ஆத்மார்த்தத் துறையிலே ஈடுபட்டுவிட்டேன்! என்று அறிவித்துவிட்ட ஆச்சாரியார் வருகிறார்! பட்டம், பதவி, எனும் மோகம் தீண்டமுடியாத, உயர்நிலைக்குப் பயணமாகிறேன் என்று பஜகோவிந்தம் பாடிக்கொண்டிருந்த ஆச்சாரியார் வருகிறார்.

வருகிற ஆச்சாரியார், கொல்லைப் புறமாக வருகிறார்!

மக்களை ஆளவருகிறார், ஆள்பவர்களை மக்கள் தெரிந்தெடுத்தபோது, அவர்களிடம் வராதவர் இன்று மக்களை, ஆளவருகிறார்!

ஆளும் கட்சி காங்கிரசாக இருக்கக்கூடாது என்று நாட்டு மக்கள் தீர்ப்பளித்தான பிறகு, காங்கிரசை ஆளுங்கட்சி ஆக்கும் 'ஆத்மார்த்த' வித்தை புரிய வருகிறார், ஆட்சி செய்து செய்து அலுத்துவிட்டேன் என்று கூறிய ஆச்சாரியார்.

நரியைப் பரியாக்கி, அப்பரிமீதமர்ந்து, புலிவேட்டை ஆடுவேன், என்று புகலாமல் புகன்றிடும் 'பூஜ்யர்' பாரீர் என்கிறார்கள், மேளதாளங்களும், குப்பை கூளங்களும். கல்கியைக்கூட ஏமாற்றிவிட்டு, 'கனம்' ஆகிறார், கோவைச் சீமான் சண்முகத்திடம், 'குல்லூக பட்டர்' என்ற பட்டம் பெற்றவர்!

நடவாத காரியம், என்றார் நண்பர் கல்கி—நடைபெறத்தான் செய்தது.

இந்த நாட்டிலே, எது நடைபெறவில்லை!

கண்ணைப் பெயர்த்தெடுத்து அப்பிய கண்ணப்பனுக்கு அருள் பாலித்த முக்கண்ணன், தாயைப் புணர்ந்து தகப்பனைக் கொன்று மாபாதகம் செய்த 'மறையவர் குல மாணிக்கத்தை' அருநாம் புல்லினைப் பசுக்களுக்கு அளித்து, பொற்றாமரையிலே குளித்து, எழு, என்னடி சேர்வாய் என்று கூறினாராமே —இந்த நாட்டிலே எதுவும் நடைபெறும்!!

திருமணம் இந்த எழிலரசிக்கு— ஏற்ற மணாளனைக் காணோம், என்று வீட்டார் விசாரத்துடன் இருக்க, வீதி வழியே செல்லும், விபூதி ருத்ராட்சதாரி, செம்பொன்னும் ஓடும் என் நோக்கில் வேறல்ல, ஒன்றே, என்று சிந்துபாடியபடி, இத் தொடியிடையாளை யாமே கடிமணம் புரிவோம் — கவலை கொள்ளற்க என்பார்—மங்களானீப யாத்து கூறுவர், மாமண்டையினர்!

எதுவும்நடைபெறும், நாடு இது— எனவேதான், இதோ ஆச்சாரியார் வருகிறார்.

அதிலும், சும்மாவா வருகிறார்!

வருக! வருக!—என்று அழைத்தனர் — உதட்டைப் பிரித்துத் தலையை அசைத்தார்.

ஐயனே வருக! அரசியல் நுட்பம் உணர்ந்த மெய்யனே வருக! ; ஆபத்பாந்தவா வருக! அநாதரட்சகா வருக! எம்மைச் சுற்றிலும் சூறாவளி—எனவே வருக! என்றனர்— சொன்னார்களா!! — கெஞ்சினர்— கதறினர்—அதற்குப்பிறகே திருச்செங்கோட்டுத் திருமுனி, திருவாய் மலர்ந்தருளினார், "அஞ்சற்க! அன்பர்காள், அஞ்சற்க! இதோ புறப்படுகிறோம், கருப்புக் கண்ணாடியுடன்'' என்று.

ஏறத்தாழ, புன்னைமரத்தின் மீதமர்ந்து புல்லாங்குழல் ஊதும் கண்ணனை, சேலை இழந்த கோபியையார், இருகரம் கூப்பி, கண்ணா! மணிவண்ணா! சேலையைத் தாரீர் என்று



கெஞ்சிட, மோகன முரளீதரன், தொழுதிடும் துடியிடைகளின், அகத்தின் அழகு முகத்திலே தெரிகிறதா என்பதைக் கூர்ந்து கவனித்த பிறகு, சேலையைத் தருகிற காட்சி—படம் உண்டல்லவா, 'பக்த சிரோமணிகளின் கிரஹங்களில்' — அந்தப் படம், எம்பெருமானின் லீலாவிநோதக் காட்சி— அதன் அரசியல் பதிப்பு இப்போது தியாகராய நகரில், ஆச்சாரியார் இல்லத்திலே!

ஆகஸ்ட்டுத் துரோகி ஆச்சாரியார் ஒழிக! என்று அண்டம் அதிர முழக்கமிட்ட வீராதிவீரர், விருதுநகர் தீரர், காமராஜர் உட்பட, சகலரும் கூடிநின்று, சாஷ்டாங்கதெண்டனிட்டு வருக!வருக! என்று கெஞ்சிக் கூத்தாடின பிறகு, துறவறத்தைத் துறந்து, தாளத்தைக் கல்கிக் காரியாலயத்திலே போட்டுவிட்டு, கவர்னர் கைலாசுக்குச் சென்றார், 'சனமாகும்' வேதாந்தி!!

பொது மக்களிடம் மார்தட்டிப் பேசினார்கள் நாங்கள் ஆளப்பிறந்தவர்கள் திறமையும் உடையவர்கள், மற்றையோரை மதியாதீர், ஆட்சி புரியும் அருகதை உடையோர் யாமே, எனவே எமக்கே ஓட் அளியுங்கள் என்று — தியாகராயநகர் சென்று, 'பவதிபிக்ஷாந் தேஹி,' ஆகிவிட்டனர்! ஆச்சாரியாரின் வாழ்நாளிலேயே, வெற்றிக்களை பரிபூரணமாகத்தாண்டவமாடிய வேளை அது.

கனக விசயருக்குச் சிலை அமைத்திடும் திருப்பணியில் ஈடுபடுகிறேன், என்று சேரன் செங்குட்டுவன் கூறி, கனக விசயரின் தலையிலே ஏற்றிக்கொண்டு வந்த 'கல்லை' சிற்றுளி கொண்டு செதுக்கினான், என்று 'சிலப்பதிகாரம்' திருத்தி பதிப்பிக்கப்படுகிறது — செந்தமிழ் நாட்டவர்கள், சொரணையற்றுப் போனார்கள், என்று எண்ணிக் கொண்டிருக்கும் ஆணவக்காரருக்கு அரசியலிலே இடம் இன்னமும் இருப்பதால்!

ஆச்சாரியார் மகாமேதையாம்! இருக்கட்டுமே! அவரை அழைத்த நாற்றிஐம்பத்தி இரண்டு 'உருவங்களும்' தத்தமது மூளையைக் கூட்டிப் பார்த்தால் கூடவா, நாட்டை ஆளும் காரியத்துக்குப் போதுமான தாகப்படவில்லை. அவ்வளவு 'சூன்யங்கள், ஏன், பொது மக்களின் ஓட்டுகளைப் பறித்தன! திருமணமான பிறகா, மணமகன் கூறுவது, ஐயா, நான் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலி! என்று. களத்திலே நின்ற பிறகா, வாள்வீசி அறியேன், என்று பேசுவது. சட்டசபை உறுப்பினர்களான பிறகா, வெட்கமின்றி கூறுவது, எங்களுக்குள் ஒருவர் தலைவராக முடியவில்லை, நாடாள நாங்கள் போதாது, எங்களிலே சிலர் நரிக்குணம் கொண்டவர் உளர், சிலர் புலிக்குணம் கொண்டவர் உளர், ஆனால் அவர்போன்றார் இங்கு இல்லை, அவரிடம் இருகுணமும் இணைந்திருக்கிறது, என்று பேசுவது.

அலுத்துப் போயிருக்கும் ஆச்சாரியார், அரசியல் விவகாரங்களுக்கு அப்பாற்பட்டவராகி, இன்னிறத்தான் இவ்வண்ணத்தான் என்று சாமான்யர்களால் கண்டு கொள்ள முடியாதவரான கடவுளின் திவ்ய சொரூபத்தை மனக்கண்ணால் காணவேண்டுமென்ற 'ஞானநிலை'யை நாடிச் சென்று கொண்டிருப்பதாகக் கூறப்பட்ட ஆச்சாரியார், அழைக்கப்பட்டு வருகிறார்! வருகிறபோதே, தன் பொறுப்புகளையும் பாரங்களையும் தாங்கும் நிலை, உடலில், உள்ளத்தில், இருப்பதாகவாவது கூறுகிறாரா என்றால் அதுவும் இல்லை தத்தி நடக்கிறேன்—முதுமை—சோர்வு— என்று கூறிக்கொண்டு வருகிறார். என்ன அதன் பொருள்? ஏன் இதைக் கூறுகிறார்! ஏற்க இருக்கும் பெரியதோர் பொறுப்புக்குத் தேவையான திருக்கலியாண குணங்களா இவை? இல்லை! எனினும் பன்னிப் பன்னிக் கூறும் நோக்கம் என்ன?

உருக வைக்கிறாராம், தோழர்களே!

பாபம்! இவ்வளவு தள்ளாத காலத்தில், நிம்மதியாக, ராமா, கிருஷ்ணா, கோவிந்தா என்று மனனம் செய்துகொண்டு இருக்கவேண்டிய காலத்தில், எவ்வளவோ நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் பாடுபட்டு பாடுபட்டு எலும்புக் கூடாகிவிட்ட இந்த முதியவரை, பெரிய தொல்லை மிகுந்த பொறுப்பை ஏற்கச் சொல்கிறோம், — இந்த நிலையிலும், தன் வயோதிகம், அலுப்பு, எதையும் பொருட்படுத்தாமல் சென்னை ராஜ்யத்தின் நன்மைக்காகத் தம்மை அர்ப்பணிக்க முன் வந்துள்ளார், என்னே அவரது தியாக சுபாவம், எத்துணை நிஷ்காம கர்மீயம், என்றெல்லாம் எண்ணுவார்களாம், தன் உரை கேட்பவர்கள்!

சிலர் இதுபோல எண்ணவுங் கூடும்!

சிலர், இப்போதே இதைச் சுட்டிக் காட்டியும் பேசுகின்றனர்.

நாம், வேறொன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

"இதற்கு மேல் துரிதமாகப் போக எனக்கு உடம்பில் சக்தி இல்லை. நான் இன்னமும் வேகமாகப் போகவேண்டுமென்று நினைத்தால் கூட சரீரம் இதற்கு மேல் இடம்கொடுக்கவில்லை. என்னுடைய 25வது வயதில் இப்பதவியை நான் ஏற்றிருந்தால் என்ன செய்திருப்பேன் என்று சொல்ல முடியாது. ஆனால் 58வது வயதில் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இப்போது எனக்கு வயது 60 ஆய்விட்டது'' என்று கனம் முதலமைச்சர் சென்னை கொத்தவால்சாவடி மேடையின் மீது ஏறிக்கொண்டு பேசினார்.

புளுகு! புளுகு! ஆச்சாரியார் கொத்தவால்சாவடிப் பக்கமே வரவில்லை—என்று கூறிச் சிறந்தோனும் காங்கிரஸ் நண்பர்களுக்கு மற்ற நண்பர்களும் கூட, இப்படி ஒரு கூட்டம் நடைபெற்றதாகச் செய்தியே வரவில்லையே, ஏன் இது போல இல்லாததை எழுதுவது என்றே கேட்கத் துடிப்பர்.

பேசியவர் ஆச்சாரியார் தான்— உறுதி கூறுகிறோம் — கூட்டம் நடைபெற்றதும் கொத்தவால்சாவடியில்தான், நிச்சயமாகக் கூறுகிறோம்—வயதாகிவிட்டது' எனவே தான் வல்லமையுடன் பணியாற்ற இயலவில்லை, என்றுதான் கூறினார், அதுவும் உண்மை—ஆனால் பேசியது, இப்போதல்ல, 1939ம் ஆண்டு ஜூலை மாதம் 2ந் தேதி!!

ஆச்சாரியார், இப்போது நான் வயோதிகன்—ஆகவே அதிகமாகப் பணியாற்ற இயலாது என்று பேசுகிறாரே, இது புதிய பேச்சல்ல அவருடைய பழைய பல்லவி—1939லேயே, சென்னை முதலமைச்சராக இருந்த போதே, அவருடைய ஆட்சியிலே ஏற்பட்ட அவதிகளைக் கண்டு அல்லல்பட்ட மக்கள் ஆயாசப் பட்டபோதே, அவர், நான்

கிழவன், என்ன செய்யலாம், என்று தான் பேசினார். அப்போது துவக்கிய பேச்சு—இப்போதும் அவருக்குப் பயன் படுகிறது.

தள்ளாத காலத்திலே, ஏன் பாபம், இந்தப் பொல்லாத வேலை—தாங்க முடியாத தொல்லை.

காங்கிரசின்போல் உள்ளே நுழைந்திருப்பவர்களிலே, வாலிபமுடுக்குக்கும் வயோதிகத் தளர்ச்சிக்கும் இடையே உள்ள பருவத்தினர், திறத்தினர், ஒருவருமே கிடையாதா! அவ்வளவு பஞ்சமா! செச்சே! வெளியே சொன்னால் வெட்கக்கேடு! வேற்று நாட்டவர் கேட்டாலும் கைகொட்டிச் சிரிப்பர்! ஏன்! நூற்றிஐம்பத்துஇரண்டுகளின், இல்லங்களிலே உள்ள பெண்டு பிள்ளைகள் கூடக் கேலி பேசுமே!

காளைகள்—கர்ஜனைபுரியும் சிங்கங்கள் — என்றெல்லாம் ஏட்டர்கள் முன்பு சித்தரிக்கப்பட்டவர்கள், இன்று, எம்மால் ஆகாது என்று கூறி, துணைக்கு — துணைக்கா! — தலைமைக்கு, ஒரு முதியவரை, அழைப்பது, அவர் வருகிறபோதே நான் வயோதிகன் என்று பசபபுவது—இதுவா அரசியல்—ஜனநாயகம் — எந்தவகையான ஜனநாயகமோ நாம் அறியோம்.

மன்னிக்கவேண்டும்—ஜனநாயகம் என்ற புனிதமான பதத்தை, இந்த நிலைமையிலே எடுத்து எழுதியதற்காக.

ஜனநாயகம், தெள்ளத் தெளிய, எதை எதைக் கூறுகிறதோ, அவைகளுக்கு நேர்மாறாகவே, காரியமாற்றிவரும் கூட்டத்தின் பிடியிலே நாடு சிக்கிச் சீரழிந்து வருகிற இந்த நாளிலே, ஜனநாயக முறையிலே இந்தக் காரியம் நடைபெறுகிறதா என்று, எண்ணிப் பார்க்கத் தொடங்குவதுதான், தவறு.

ஜனநாயகம், கூறுகிறது, அகில உலகிலும் உள்ள அறிவாளர் ஏற்றுக்கொண்டுள்ளனர், ஒரு கட்சிக்கு, சட்டசபையிலே 'மெஜாரடி' கிடைக்காவிட்டால், அந்தக் கட்சிக்கு நாடாள உரிமை கிடையாது என்று.

இதோ, மக்கள் கூறிவிட்டனர், காங்கிரசாட்சி வேண்டாம் என்று.

375-உறுப்பினர்கொண்ட சட்டசபையில் 152-பேர்மட்டுமே, காங்கிரஸ்! ஜனநாயகம் காங்கிரசுக்கு, ஆளும் உரிமையைத் தரவில்லை. அரசியல் நாணயம், ஆட்சிக்குக் காங்கிரசுக்கு உரிமை இல்லை என்றே கூறுகிறது. —ஆயினும் என்ன — காங்கிரசல்லவா மந்திரிசபை அமைக்கிறது! முறைதானா!—என்று கேட்பீர்கள்! கேட்பர் மக்கள்—கேட்கட்டுமே—கேள்வி கேட்கும் மக்கள் கிளம்பினால், ஆட்சிபுரிய கேளாக்காதினரை, (ஆச்சாரியாருக்குக் காது கேளாது) நியமிக்கிறேன் என்கிறார் இந்தியஹிட்லர்!

சிறுபான்மையினருக்கு ஆட்சி உரிமை!

இதற்குத்தலைமை, அலுத்துப் போன கிழவர்.

இவர், வருவதும், கொல்லைப் புறமாக!

எவ்வளவு இலட்சணமான துவக்கம்—எவ்வளவு விரைவிலே அழிவதற்கு!!

கவர்னருக்கு, அறிவிக்கப்பட்டது, ஐக்யமுன்னணியில் காங்கிரஸ் கட்சியிலே இருப்பதைவிட, அதிகம்பேர் உள்ளனர் என்று. கருப்புக் கிளைவ், இதையா கவனிப்பார்! அவர், அனுப்பப்பட்டது இதற்கா! 'பழிபாவம்' ஏற்படுமோ, என்ற பயம் போக வேண்டுமென்று தான் அவர், இங்கே வந்தவுடனே அவசர அவசரமாக ராமேஸ்வரம் சென்று, 'ஒரு முழுக்கும்' போட்டுவிட்டு வந்துவிட்டாரே! இனி என்ன அச்சம்! அழைத்தார் ஆச்சாரியாரை! கொல்லைக்கதவு திறந்திருக்கிறது, மெள்ள நுழையுங்கள், என்றார்—அதுவும் சரி, என்று கூறினார்—ஆச்சாரியார் வருகிறார்!

வருவதற்கு முன்பு, ஒரு வார்த்தை நேருவைக் கேட்டுப் பாருங்கள், என்றாராம். தூதுவர்கள் சென்று கேட்டனர் — நேரு, சரி என்றாராம்! இவரும் உள்ளே நுழைந்துவிட்டார். நுழையுமுன்பு ஒருவிநாடி அவருக்கு நேருவின்மீது கோபம் பிறந்திருக்கும் — அமெரிக்கா—சீனா—ரஷியா—இங்கிலாந்து, — இப்படி ஏதேனும் ஓர் சீமைக்கு விசேஷ தூதராக அனுப்பக் கூடாதா, நாம் அந்தக் காரியம் எதற்கும் தேவையில்லை, என்று, நேரு எண்ணிவிட்டாரே—என்று சோகித்திருப்பார்.

ஆச்சாரியாரின், அனுபவம், முதுமை, இவைகளைக் கவனித்து, அவருக்கு ஓர் உயரிடம் தரவேண்டும் என்று நேரு எண்ணியிருந்தால், அவரை குடிஅரசுக்குத் தலைவராக அல்லவா இருக்குமாறு அழைத்திருக்கவேண்டும். ஆச்சாரியார், பாவம், பஜகோவிந்தம் பாடியபடி இருக்கிறார்; நேருவோ, பாபு ராஜேந்திரபிரசாத்தைத் தலைவராக இருக்க அழைக்கிறார். இந்தக் கோபம், கொல்லைப்புற நுழைவாக இருந்தால்கூடப் பரவாயில்லை என்ற அளவுக்கு, ஆச்சாரியார் உள்ளத்திலே ஒருவிதமான நிஷ்காம கர்மியத்தைக் கிளறி இருக்கக் கூடும்.

ஜனநாயகத்தைப் பற்றிய நினைப்பை நீக்கிவிட்டே, இன்று, இத்தகைய காரியங்கள் நடைபெற்று வருகின்றன,

மக்களால் விரட்டி அடிக்கப்பட்டவர்களைக் கவர்னர்களாக்குகிறார், நேரு, துணிவுடன் — மக்களின் முகத்திலே காரித் துப்புகிறார் — ஜனநாயகத்தைத் துச்சமென்று தூக்கி எறிகிறார்!!

நாடு, எதிர்பார்த்தது, ஜனநாயக முறைப்படி இங்கு ஐக்ய முன்னணி ஆட்சிக்கு வரும், என்று.

நூற்றுக்கணக்கிலே, நடைபெற்ற பொதுக்கூட்டங்களிலே, முற்போக்குக் கட்சிகள் பலகூடி ஐக்கிய முன்னணி ஆட்சியே வேண்டும் என்று இலட்சக்கணக்கிலே மக்கள் தீர்மானித்தனர்.

அந்த முன்னணி ஒரு வேலைத் திட்டத்தையும், பலமுறை கூடி, விரிவாக விவாதித்துத் தயாரித்தது.

கள்ளமார்க்கட்டுக்காரரும் கொள்ளை இலாபமடிப்போனும், மதஆதிக்கக்காரனும், இலஞ்ச இலாவணக்காரனும், நடுங்கிக்கொண்டிருந்தனர்.

இவர்களை எல்லாம்விட அதிகமான அச்சம், டில்லி தேவதைகளுக்கு ஏற்பட்டது.

கம்யூனிஸ்டு கட்சிக்கும் மற்ற முற்போக்குக் கட்சிகளுக்கும் இடையே தோழமை வளமாகிக் கொண்டுவருவது கண்டு, அமெரிக்காவின் பிடியிலேஉள்ள டில்லி அச்சத்தால் தாக்கப்பட்டது.

திராவிடநாடு பிரச்சினைக்குப்பக்கபலம், பலவழிகளாலும் பலதிக்குகளிலிருந்தும், திரள்வதும், இந்த பலம், ஐக்கியமுன்னணி ஆட்சியில் வலுவடையும் என்பதும், வடநாட்டு வியாபாரக் கோமான்களுக்குத் தெரிந்தது—திகில் பிறந்தது.



எனவே, ஜனநாயகத்தைக் குழிதோண்டிப்புதைக்க அனுபவமிக்க ஒரு காங்கிரஸ்காரரைக், கவர்னராக்கினர் — அவர் ஆச்சாரியாரைத் துணைக்கு அழைத்துக்கொண்டார்!

ஆச்சாரியார், வருகிறார், இனி, அரசியல் நெருக்கடி இராது, என்கிறார்கள் அடிவருடிகள். அதன் பொருள் இதுதான். மக்களின் விரோதிகளுக்கு, உயிர்ப் பிச்சை தருகிறோம், என்கிறது பாசிசம்.

ஆச்சாரியார், தலைமையை ஏற்றுக்கொண்டதும், வியாபார உலகு பூரிப்பும் நம்பிக்கையும் கொண்டது —என்று செய்தி, எல்லா இதழ்களிலும், வெளிவந்ததன், பொருளும் இதுதான்.

எனவே; ஆச்சாரியார் வருகிறார், என்றால் முற்போக்கு இயக்கங்களை நொறுக்க அடக்குமுறை வருகிறது என்றுதான் பொருள்.

அதிலே ஆச்சாரியார் அபாரமான திறமைகொண்டவருங்கூட.

தாய்மார்களை எல்லாம், கைக்குழந்தைகளுடன், இந்தி எதிர்ப்பின்போது, சிறையில் தள்ளிய ஈரநெஞ்சினர், வருகிறார்!

தாலமுத்து, நடராஜனைப் பிணமாக்கித்தந்தவர், வருகிறார்.

பெரியாரை பெல்லாரி சிறையிலே தள்ளி, பெல்லாரியின் கடுமையான உஷ்ணம் உடம்புக்கு நல்லதுஎன்று சட்டசபையிலே கேலிபேசிய, கண்ணியர், வருகிறார்.

கிரிமினல் சீர்திருத்த சட்டத்தை உபயோகிப்பது முறையா, என்று கேட்டதற்கு, கையில் கிடைத்ததைக்கொண்டு அடிப்பேன், என்று மிரட்டிப்பேசிய மேதை வருகிறார்.

சட்டசபையிலே எதிர்க் கட்சியின் சார்பிலே கூறப்படும், வாதங்களைத் துளியாவது கவனிக்கலாகாதா என்று கேட்டால், எனக்கு ஒருகாது கேளாக்காது. அதைத்தான் அந்தப் பக்கம் திருப்புகிறேன் என்று நையாண்டி பேசியவர், வருகிறார்!

குட்டிகதைகள் கூறி, மக்களிடையே குழப்ப மனதைக்கிளறும், புராணிகர் வருகிறார்.

தொழிலாளர் இயக்கத்தைத் தாக்குவதிலே, திறமைமிக்கவர் வருகிறார்.

வைதீகர்களை, என்சதை என் இரத்தம், என்று பாசத்தோடு அழைத்த 'பூஜாரி' வருகிறார்!

பாகிஸ்தானைப் பலமாகக் கண்டித்த சூரர், வருகிறார்.

நாட்டுக்காக, சொல்லொணாக் கஷ்டநஷ்டத்தைப் புன்னகையுடன் ஏற்ற, சுபாஷ்சந்திரபோசை, 'ஓட்டைப்படகு' என்று கேலி பேசிய உத்தமர் வருகிறார்.

சமதர்மத் தோழர்களின் பிரச்சாரத்தைக் கண்டு கோபங்கொண்டு சோற்றுக்கில்லாதார் பிரச்சாரம்' என்று ஜார்மொழி பேசிய சீலர் வருகிறார்.

அடக்கு முறையை வீசத் தெரிந்தவர், பாமரரை மயக்கும் வித்தை அறிந்தவர், பக்தி வேடமணிந்து மூடத்தனத்தை வளர்க்கும் ஆழமான உள்ளம் படைத்தவர், ஆள வருகிறார்.

அச்சமூட்டுவதாக அல்லவா இருக்கிறது, என்று எண்ணுவீர்கள், இல்லை, இல்லை. மேலும், கவனியுங்கள்.

ஆகஸ்ட் இயக்கத்திலே கலந்து கொள்ள மறுத்து, கலந்துகொண்ட காங்கிரசாரையும். கேலி பேசியவர், ஆச்சாரியார்.

அதன் பயனாக, சென்றவிடமெல்லாம் வெறுப்பைக்கண்டு, விரண்டவர் ஆச்சாரியார்.

காமராஜரிடம், கைவரிசை காட்டி, கலங்கிக் கதறி, கல்கி புதிய இதழ் துவக்கியும் பயன்காணாது, பாரத காலட்சேபம் செய்யப்போகிறேன் என்று, கூறி; மூக்காடிட்டு ஏகிய, முதியவர், ஆச்சாரியார்.

கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு, பயன் படுமா என்ற சபலம்கொண்டு பொன்மலை ரயில்வே தொழிலாளர் மாநாட்டிலே கலந்து கொண்டு, 'பொது உடைமை' பேசியவர், ஆச்சாரியார்.

ஆந்திரப் பிரிவினைக்கு அடிப்படை பள்ளம் வெட்டி, அது தெரிந்த ஆந்திரர்கள், அவரைக்கண்ட இடத்திலெல்லாம் கடுமொழி பேசிட, கதிகலங்கி ஓடி ஒளிந்த வீரர், வருகிறார்.

ஜனாப் ஜின்னாவின் ஒப்பற்ற அறிவாற்றலின் முன்பு; எதிர்ப்புகள் சரிவதுகண்டு, காங்கிரஸ் தீர்மானிப்பதற்கு முன்பே, பாகிஸ்தான் கொடுக்கத்தான் வேண்டும் என்று கூறி, லீகுக்கு, 'பீஸ்வாங்காத' வக்கீலாக வேலைபார்த்தவர் ஆச்சாரியார்.

வீம்புடனும்வீறாப்புடனும் இந்தி எதிர்ப்பாளர்களை ஏசி விட்டு, அவர்களின் சக்தி ஓங்கி வளரக் கண்டு, புற்றிலிருந்து ஈசல்கிளம்புவது போலக்கிளம்புகிறார்களே என்று புலம்பியவர், ஆச்சாரியார்.

பதவிக்காலம் முடிய வீற்றிருக்க முடியாமல், பாதியிலே ஓடியவர் ஆச்சாரியார்!

அவர்தான் மீண்டும் வருகிறார்! தொட்டது துலங்காது — அவருடைய ஆற்றல் அது! கெஞ்சினால் மிஞ்சுவார், மிஞ்சினால் கெஞ்சுவார்—அவருடைய சுபாவம் அது.

திராவிடர்கள் மீது மோதி, அதன் 'சுகம்' கண்டவர் ஆச்சாரியார்.

அவருடைய போக்கும் முறையும், நமக்குப் புதியதுமல்ல, அவை

---

## இங்கே பாரீர்!

சேலம்
மார்ச் 28.

அரூர் தாலுக்கா தாசரல்லி போர்டு பாடசாலையில் வேலை செய்துவரும் தலைமை ஆசிரியர் ஏ. தீத்தான் என்பவர் காலில் செருப்பு அணிந்து வருகிறார் என்ற காரணத்தை முன்னிட்டு அவ்வூர் ஜாதி இந்துக்களில் சிலரால் 25—2—52 நடுப்பகல் 11-மணிக்கு பாடசாலைக்குள்ளேயே தாக்கப்பட்டாராம். இது சம்பந்தமாக, ஜில்லா போர்டு பிரசிடெண்டிற்கு ரிப்போர்டு செய்ததற்கு, 'நீரே வழக்கை நடத்திக் கொள்ளும் என' கூறிவிட்டாராம். அவ்வூரிலிருந்து மாறுதல் கேட்டதற்கும் நிர்வாகம் மறுத்துவிட்டதாம்.

இதுபற்றி வழக்கு சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்தும் அது 19 3—52ல் தள்ளுபடி செய்யப்படடுவிட்டதாம்.

(ஜனசக்தி)

களைச் சமாளிப்பது நமது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதுமல்ல.

அவரும் நாமும் முன்பு ஒரு முறை களத்திலே சந்தித்திருக்கிறோம்—வடுக்கள் நமக்கு—தோல்வி அவருக்கு — இதனை அவருடைய அடிவருடிகள் அறியமாட்டார்கள்—அவர் மறக்கமாட்டார்.

அப்போது, அவருக்கு இருந்த 'கட்சிபலம்' ஜெர்மன் ரீஷ்டாக்கில், ஹிட்லருக்கு இருந்ததுபோல! எல்லாம் கதர்மயம் ஜெகத்—அப்போது. இப்போது! அவருடைய வாக்கியப்படி, 'விநாடிக்கு விநாடி வாழ்வுக்காகப் போராட வேண்டிய, நிலையில் காங்கிரஸ் கட்சி.

இன்று, ஆளவந்திருக்கும் காங்கிரஸ் கட்சி, பாங்கியில் பணம் இல்லாதவன் தரும் 'செக்' போன்றது.

ஐக்ய முன்னணிக்கு இனித்தான் வேலை மும்முரமாக இருக்கிறது. முற்போக்காளரின் கூட்டணிக்கு இனி மும்முரமாக வேலை இருக்கிறது.

ஜனநாயகம் சித்ரவதை செய்யப்பட்டதை, நாடு அறியச் செய்ய வேண்டிய பெரும் பணி இருக்கிறது.

மக்களுக்கு இழைக்கப்படும், அநீதியை, உலகு அறியச் செய்ய வேண்டும்.

அடக்குமுறைகளை ஆச்சாரியார் வீசத்தான் செய்வார் — தாங்கிக் கொள்ளும் சக்தி நமக்கு உண்டு, என்பதைத் தரணி அறியச் செய்ய வேண்டும்.

ஆச்சாரியார் ஆட்சியை ஒழித்துக் கட்ட, நம்மிடம் உள்ள ஆற்றலைத் திரட்டிக் காட்டவேண்டும்.

ஆச்சாரியார் வருகிறார், ஆண்மையாளர்களை அறைகூவி அழைக்கிறார்! ஓட்டளித்த பல இலட்சக்கணக்கான மக்களின் எண்ணத்தில் மண்ணைத் தூவிவிட்டு, ஆச்சாரியார் ஆட்சிப்பீடம் ஏறுகிறார்.

கொடுமைகளை அவிழ்த்துவிட, ஆச்சாரியார் தயங்கமாட்டார்! விழிப்புற்ற ஜனநாயகத்தைக் கண்டால் பாசிசம், பாய்ந்து கடிக்கத்தான் செய்யும்—ஆனால் அத்தகைய போராட்டங்களிலே, பாசிசம் வெற்றிபெற்றதாக, வரலாறு கூறவில்லை. பாசிசத்தை வெற்றிபெற விடமாட்டோம்.

அவர்கள் மிகப் பலர், நாம் மிகச் சிலர்—முன்பு!!

இப்போது, அவர்கள் மிகச் சிலர் —நாம் மிகப் பலர்! மக்கள், நமது முகாமில்! நமது மனதினை யாருக்கும் நாம் அடகுவைத்துவிடவில்லை. நமக்கோ, நமது இயக்கத்தை நம்பிக்கொண்டிருக்கும் ஏழை மக்களுக்கோ, வாழ்வுக்கும் சாவுக்கும் வித்யாசம் கிடையாது. எனவே, ஆச்சாரியார் ஆட்சியிலே ஏற்படக்கூடிய, எத்தகைய அடக்குமுறைக்கும் நாம் யாரும் களைத்துவிடப் போவதில்லை.

நாடு, நமது குரலைச் சரிவரக் கேட்கமுடியாதபடி தேசிய சந்தடியிருந்திருந்தபோதே, நாம் ஆச்சாரியாரை சந்தித்திருக்கிறோம்—உருகி உடல் கருகி உள்ளிரல்பற்றி எரியும் நோய் பிடித்த நிலையில் உள்ள காங்கிரசுக்குத் தலைமைபூண்டு இன்று வரும் ஆச்சாரியாரின் ஆட்சியை ஒழித்துக்கட்டுவது, முயன்றால், எளிதானதுதான்—சந்தேகம் வேண்டாம்.

ஆச்சாரியார் வருகிறார்—பஞ்சம் பரவுகிறது!

ஆச்சாரியார் வருகிறார் — கம்யூனிஸ்டு—முற்போக்காளர் கூட்டுறவு வளருகிறது!

ஆச்சாரியார் வருகிறார்—திராவிடரின எழுச்சி வீறுகொண்டு எழுகிறது.

ஆச்சாரியார் வருகிறார்—திராவிட நாடு திராவிடருக்கே ஆகப்போகிறது. எனவே, தயாராகுங்கள், இருள் கப்பிக்கொள்கிறது, விடிவெள்ளி காணப் போகிறீர்கள் என்று கூறுகிறோம். திராவிட முன்னேற்றக் கழகம், அக்ரமமான முறையிலே அமைக்கப்படும் ஆச்சாரியார் மந்திரிசபையை மக்களின் விரோதி என்றே தீர்மானிக்கிறது. இதனை மாற்றி அமைக்க, எந்த முற்போக்காளர் திட்டமும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவைப் பெறும், என்று உறுதி கூறுகிறோம்.

நாடாள வருகிறார், ஆச்சாரியார்!

நாட்டினரே! திராவிடநாடு திராவிடருக்கே என்ற முழக்கம் திக்கெட்டும் கேட்கட்டும், கோளாக் காதையும் துளைத்துக்கொண்டு செல்லுமளவுக்கு, மக்களின் எழுச்சிக்குரல் ஓங்கட்டும். வாழ்க ஜனநாயகம்! ஒழிக பாசிசம்!

---


## SHORT TERM COURSES
### IN TECHNICAL LINE (VII–VIII)

Under the auspices of this Association the Vacational Courses in Automobile, Radio and Bacteriology will be conducted in the same way as in last year. Duration 4 to 6 weeks. Only Students of Intermediate (Mathematics, Physics and Science) and above will be admitted. No separate fees But Rs. 160/-to be paid in advance for consumption of materials and other charges, and Rs 140/- to be paid as caution and hostel deposits, the latter refundable after meeting the Hostel and other charges A vegetarian cosmopolitan boarding and lodging on dividing system available.

Rules are strict. Students will not be allowed to stay or go outside.

Applications with copies of health certificate, and particulars about height, weight and age and 3 copies of passport size photo (not returnable) must reach us before 10th April. If called for personal interview, they must be ready to join if selected, with deposits on 22nd April.

For few Lady students separate accommodation available No concession or exemption except for Lady students. No material charges will be made for Bacteriology.

Phone: 40
Telegram: GEDEE
Coimbatore,
25 3—52

G. D. NAIDU,
President,
Industrial Labour Welfare Association Ltd.
"GOPAL BAGH", COIMBATORE.




2-ம் பக்கத் தொடர்ச்சி

றிலையை வெளியூர்களுக்கு அனுப்புதற்க ஏற்பாடுசெய்ய முயற்சிக்கிறார்கள். இதனால் வெற்றிலை வெளியூர்களுக்கு போகவில்லை. வேலூரில் பெரிய கூட்டமாக கூடி மூன்று ஊர்களிலும் சென்று ஊர்வலம் வந்து, சேட்டிற்கு வெற்றிலைபோடுவதில்லை. ரொக்கப் பணத்திற்கு வெற்றிலை யடைப்போம் என்ற ஒலியைக்கிளப்பி இருக்கிறார்கள்.

வெற்றிலையை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யும் கோட்டாமுறை சங்கிரியிலிருக்கும் சேட்டுமார்களுக்கே இருந்து வருவதால் பொத்தனூர் முதலான ஊர்களில் உண்டாகும் வெற்றிலையை வெளியூர்களுக்கு அனுப்ப முடியாமல் சேட்டுமார்களின் வழியாக அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதால்தான் இந்த மூன்று லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாய் பாக்கி. இதைக்கேட்க சென்றதற்கு மானக்குறைவும் தாக்குதலும் ஏற்பட்டு 2, 3, வாரங்களாக மக்கள் பணமுடையால், பஞ்சு படாத பாடு அடைந்து வருகிறார்கள். இதை அரசாங்கத்தார் உடனே மிக விரைவில் கவனித்து பாண்டமங்கலம், போத்தனூர் புதுப்பாளையம் வேலூர் ஆகிய ஊர்களில் உள்ள வெற்றிலை வியாபாரிகளுக்கு, ரயில்வே கோட்டா முறையை புகளூர் ரயில்வே ஸ்டேஷனில் (Pugalore Ry. Stn.) வெற்றிலைக் கூடைகளை வெளியூர்களுக்கு யார், எப்பொழுது எந்த இடத்திற்குப் கொண்டுபோகலாம் புக்கிங் செய்யலாம் என்ற முறை தரும்படி மிகவும் வேண்டிக்கொள்கிறார்கள். இங்கே ஐம்பதாயிரம் மக்கள் அவதிப்படுகிறார்கள். இதிலே சர்க்கார் தனது கடமையை செய்யத் தவறினால் கொடிய பஞ்சம் ஏற்பட்டுவிடும். வேலூரில் காவிரிக்குப்பாலம் ஏற்பட்டுவிட்டதால், வெளியூர்களுக்கு அனுப்பவும் வெற்றிலைக் கூடைகளை (Pugalore Ry) புகளூர் ஸ்டேஷன்களில், ஏற்றுமதிசெய்ய மிகவும் வசதி ஏற்பட்டு இருக்கிறது. இதை சர்க்கார் மிக மிக விரைவில் கவனித்து ஆவன செய்யுமா?

*

# முடிந்தது

முடிந்துவிட்டது.

1952 மார்ச்சு 27ந்தேதியோடு, முடிந்துவிட்டது.

1946 மேமாதம் 24ந்தேதி, துவங்கிய சட்டசபைக் கூட்டம் முடிந்துவிட்டது.

ஆறு ஆண்டுகள், சென்னைசட்டசபை மண்டபத்திலே அமர்ந்திருந்தோர், இனி அங்கு செல்லமுடியாது. சென்றால் 'காலரி'தான் கிடைக்கும்.

வித விதமான கேள்விகள்! விசித்திரமான உருவங்கள்! — சென்னை சட்டசபை மண்டபத்திலே உலவினர்.

"தூங்கலாமா?"

"தூங்கலாம். ஆனால் குரட்டை விடக்கூடாது"

"ஆரஞ்சுப்பழம்சாப்பிடலாமா?"

"மூக்குப் பொடி போட்டால் என்ன?"

எந்த சட்ட சபையிலும் எழும்பாத, விநோதமான கேள்விகள் இங்கேதான் எழும்பின. மின்சார விசிறிக்குக்கீழ், இஷ்டம்போலத் தூங்கினர் சட்டசபை மெம்பர்கள் இங்கேதான் காணமுடிந்தது—இத் திருக்காட்சியை! சட்டசபை வராந்தாவிலே கடலையைக் கொரித்துக் கொண்டிருந்த 'கனம்'களைக்காணும் 'பாக்கியம்' ஏற்பட்டதும் இங்குதான்! எத்தனையோ முறை சபாநாயகர் 'மணி அடித்து அடித்து உறுப்பினர்களைக் கூப்பிட நேர்ந்ததும் இங்குதான்! 'கோரம்' இல்லாததால் — கால்மணிநேரம், அரைமணி நேரம் கடந்து சபை ஆரம்பமான காட்சியையும் நமது சென்னையிலேதான் கண்டோம் அடிக்கடி!

இத் திருக்கல்யாண குணங்களோடு விளங்கிய பலர் 'மாஜி எம். எல். ஏக்கள்' ஆகிவிட்டனர். இனி, சட்டசபை மண்டம் போனால், அவர்கள் 'காலரி கனவான்களாகத்தான்' இருக்கமுடியும் — 'கனம் M.L.A.'வாக வீறுப்போடு போக முடியாது!

பழைய சட்டசபை, முடிந்துவிட்டது.

அதிலே இருந்த பலர், மறுபடியும் போகமுயன்று, மூக்கறுபட்டனர்—மக்களை மதியாதகாரணத்தால்.

'பழையவர்'களிலே 29 உறுப்பினர்மட்டுமே, மறுபடியும் சட்டசபையில் அமரும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

'முடிந்துபோன சட்டசபையிலும்' சிலர் இல்லாமலில்லை — சிந்தனையும் செயலாற்றும் ஆசையும் கொண்டோர். ஆனால் அவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை 'காங்கிரஸ்' கூட்டத்துக்குமுன்.

அத்தகைய சட்டசபை முடிந்துவிட்டது.

☆

# நம்பியாருக்கு மறுப்பு

மாஸ்கோவில் இந்தவாரம் நடைபெறவிருக்கும் பொருளாதார மாநாட்டுக்குச் செல்லவிருந்த தோழர் அனந்தநம்பியார் எம். பி. தடை செய்யப்பட்டார்.

டில்லி, அவரை ரஷ்யா போகாதவாறு தடுத்துவிட்டது. தொழிற் சங்கங்களின் சார்பில் மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ள இருந்தார் தோழர் அனந்தன். அவருக்கு 'பாஸ்போர்ட்' தரமறுத்துவிட்டது இந்திய சர்க்கார். இதேபோல நெல்லூர் மாவட்டத்திலிருந்து செல்லவிருந்த பி. சி. ரேட்டிக்கும் அனுமதிதரவில்லை.

டில்லியின் இந்த சர்வாதிகார வெறியை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். மனித உரிமையைத் தடைசெய்யும் இந்த "வெறி" ஏன் ஏற்படவேண்டும், டில்லிக்கு! அவர் ஒரு கம்யூனிஸ்டு என்பதுதான் காரணமா? 'ஆம்' என்றால், நடுநிலைக் கொள்கை வகிப்பதாகப் பேசுகிறாரே, நேரு — எங்கே சென்றது அப்பேச்சு! நம்பியார் செல்வதால் பூகம்பமா ஏற்பட்டுவிடமுடியும்?

டில்லியின் இந்த இழி செயல், நல்லோரை வெட்கப்படவே செய்யும். ஒழிக சர்வாதிகாரம்! வளர்க மனிதஉரிமை!!

# கூறுவது, நாமல்ல!

['பிரசண்டவிகடன்' 1-4-52 இதழில் வடநாட்டு ஆதிக்கம் என்ற தலைப்பிட்டு எழுதியிருப்பது இது].

இந்தியா ஒரு நாடு என்றும், அதனை ஒரு தொகுப்பாகப் பார்க்க வேண்டும் என்றும் நம் இந்திய முதல் அமைச்சரும், காங்கிரஸ் தலைவருமான பண்டித நேரு அடிக்கடி கூறி வருகிறார். இந்திய ஒற்றுமையில் விருப்பமுள்ள யாரும் இதனை எதிர்க்கமாட்டார்கள். தென்னாடு, வடநாடு என்று வேற்றுமை காட்டுவது கூடாது என்று கூறி வருகின்றனர். ஆனால் நடைமுறையில் நடப்பதென்ன? வடநாடு, தென்னாட்டை ஆதிக்கம் புரிய விரும்புகிறது; பொருளாதாரத் துறையில் அடிமைப்படுத்தஎண்ணுகிறது என்பது எளிதில் புரியக் கூடியதாகும்.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, இந்தியா பலவிதப் புது மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. பல முக்கியமான புதிய தொழில் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. பெரிய வியாபாரங்களை நடத்தும் ஏகபோக உரிமையுங்கூட, இந்தியர்கள் கைக்கு விடப்பட்டிருக்கிறது. இவ்வளவிலும் தென்னாட்டுக்கும், தென்னாட்டு வியாபாரிகளுக்கும் கிடைத்த பங்கை நினைக்கும்போது, இந்நாட்டு வளர்ச்சியிலும், இந்நாட்டு மக்கள் நல்வாழ்விலும் நாட்டமுள்ள யாருடைய மனமும் வருந்தாமலிருக்காது.

சான்றாக, பெரிய தொழில் நிலையங்களாகத் திறக்கப்பட்ட சிந்திரி தொழிற்சாலை, பெனிசிலின் ஆலை, டி. டி. டி. ஆலை ஆகிய எல்லாப் பெரிய தொழில் நிலையங்களும் வடக்கேதான் திறக்கப்பட்டுள்ளன. பக்ரா, ஹிராகட் முதலான மிகப் பெரிய அணைக்கட்டுகளும் அங்கேதான் கட்டப்படுகின்றன. மொத்த வியாபாரச் சலுகையும், ஏற்றுமதி, இறக்குமதிக்கான ஏகபோக உரிமையும் வடநாட்டவர்களுக்கே தரப்பட்டுள்ளன.

இந்திய தொழில் விஞ்ஞானி ஜி. டி. நாயுடு இங்கோர் பெரிய மோட்டார் தொழிற்சாலையை அமைத்துக் கொள்ளும் உரிமை கேட்டதற்கு மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிர்லாவுக்கு அவ்வுரிமை தாராளமாகத் தரப்பட்டிருக்கிறது. இந்தியத் தொழில் விஞ்ஞானியின் மேதை இந்தியாவைப்பொதுவாகப் பார்க்கவேண்டும் என்று சொல்லுகிறவர்களால் போற்றப்படவில்லை. இதனால், தென் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் அளவிடற்கரியது. தென்னாட்டவரும், உலகப் புகழ் பெற்றவருமான விஞ்ஞானப் பேறிவாளர் சர். சி. வி. இராமன் முதற்கொண்ட, இந்நாட்டுப்பெரு மக்கள் சரியானபடி இந்திய அரசாங்கத்தவரால்மதித்துப்போற்றப்படவில்லை.

இந்நாட்டு மந்திரி சபை காங்கிரஸ் மந்திரி சபையாக இருந்துங்கூட, இதனை மத்திய அரசாங்கம் மதிக்கவில்லை என்றும், மற்ற மாகாணங்களுக்குக் காண்பிக்கப்படும் சலுகையுங்கூட, இம்மாகாணத்துக்குத் தரப்படவில்லை என்று முன்னாள் முதலமைச்சர் இராமசாமி ரெட்டியார், நிதி அமைச்சர் கோபால் ரெட்டி, பிரதமக் காரியதரிசியாக இருந்த எஸ். வி. இராமமூர்த்தி, இலட்சுமணசாமி முதலியார் போன்ற பல பெருமக்கள் கூறியிருக்கின்றனர். அரிசி சாப்பிடும் வழக்கமுள்ள இந்நாட்டு மக்களைக் கேவலப்படுத்தக் கூடிய முறையில், மத்திய அரசாங்க அமைச்சர் ஒருவர் பேசியிருக்கிறார். இன்னோரன்ன பிற செயல்கள் எதைக் காட்டுகின்றன? இந்தியாவை ஒரு தொகுப்பாகப் பார்க்க வேண்டும் என்று சொல்லுகிற பெருமக்கள் இதனைத் தயவுசெய்து சிந்தித்துப்பார்க்க வேண்டும். தென்னாட்டு மக்கள்மீது இவ்வளவு அலட்சியமும், அவமரியாதையும் காட்டப்பட்டும் அதனைத் திருத்திக்கொள்ளும் வழிவகைகள் செய்யாமல், குறுகியமாகாண உணர்ச்சியோடு நடக்கக்கூடாது என்று உபதேசஞ் செய்யமட்டும் தவறுவதில்லை. இது, இந்நாட்டு மக்கள் நலங்களைக் காட்டிக்கொடுத்து வாழும் சில அடிவருடிகளுக்கு மகிழ்ச்சியைத் தரலாம். ஆனால் இந்நாட்டு மக்களுக்கு அது நன்மையை விளைக்காது.

இந்தியப் பாதுகாப்பை உத்தேசித்தேனும் பல பெரிய தொழில்கள் இந்நாட்டில் தொடங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அப்படிச் செய்ய வடக்கே உள்ள அமைச்சர்களுக்கு மனம் வரவில்லை. அதுவும் தவிர, மாகாண அரசுகளிடமிருந்து சில முக்கிய அதிகாரங்களைப் பிடுங்கிக்கொண்டதின் மூலமும், நல்ல வருவாய் இனங்களைக் கொள்ளை கொண்டதன்மூலமும், இந்நாட்டு அரசாங்கம் சுயேச்சையான வழிகளில் மூலதனம்போட்டுத்தொழில்களைப் பெருக்க முடியாமலும் போயிற்று. இவ்வித நிலையில் வடவர் ஆதிக்கம் கூடாது என்றுசொல்வது எவ்வகையிலும் தவறு என்று கூறமுடியாது.

---

## தலைமை நிலைய வெளியீடுகள்.

1. சட்டதிட்டங்கள் 0—2—0
2. தீர்மானங்கள் 0—1—0

புத்தகம் வேண்டும் கிளைக் கழகங்களும், கழக உறுப்பினர்களும், புத்தக விலையோடு, தபாற்செலவையும் சேர்த்து முன்பணமாக அனுப்பிப் புத்தகங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். தனிப்பட்ட புத்தக வியாபாரிகளுக்கு இந்தப் புத்தகங்கள், கமிஷன் முறைப்படித் தர இயலாது. இரண்டு புத்தகங்கள் வேண்டுவோர் நான்கணா தபால் தலைகள் அனுப்புக.

விவரங்களுக்கு:—

திராவிட முன்னேற்றக் கழகம்.
தலைமை நிலையம் : : காஞ்சிபுரம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at 'Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.

403

REGD. No M 4642

திராவிடநாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10 | 13—4—52 | இதழ் 41

# வளர்கிறோம்! வளர்கிறோம்!

## வகைப்படுத்த வேண்டாமா?

## காட்டாறு பலன் தராது

## கனி பறிப்பதா நம் பணி?

## எத்துணை பெரிய இலட்சியம்!

## எண்ணுங்கள் இதனை

—[அரங்கண்ணல்]—

"இதுவே கடைசி பொதுக்குழுக் கூட்டம் அடுத்த பொதுக்குழு, புதுச் சட்டதிட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்கும் என நம்புகிறேன். அதில், உங்களிலே பலர் இருக்கலாம்—சிலர் இல்லாமலிருக்கவும் நேரலாம். ஆனால் நீங்கள், கழக துவக்கத்திலிருந்து சாதித்துள்ள காரியங்களை நினைக்கும்போது, மகிழ்கிறேன் — நான் மட்டுமல்ல; எல்லோரும் மகிழ்ச்சியடைவார்கள். பொதுக்குழு உறுப்பினர்களாகிய நீங்கள், ஒவ்வொரு பிரச்சினையின்போதும் காட்டிய வாதத்திறமை கண்டு, மிகமிகப் பெருமிதமடைந்தேன். உங்களது சேவையை நாடு மறக்காது. அருமையான சட்ட திட்டங்களை வகுத்துத்தந்து, ஏராளமான கிளைக் கழகங்களை அமைத்து வளர்த்து, அரும்பணி ஆற்றிய இந்தப் பொதுக்குழுவின் கடைசிக் கூட்டமாகவே இதைக் கருதுகிறேன். அடுத்த பொதுக்குழு, நமது புது சட்டதிட்டப்படி அமைக்கப்பட்டதாக விளங்குமென எதிர்பார்க்கிறேன். எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்"

இந்த உரை கேட்டோர் கைகளைத் தட்டினார்கள்! அல்ல — அல்ல; கைகளைத் தட்டுவதுபோல முரசொலி முழக்கினார்கள்!! 6—4—52 அன்று ஈரோட்டு நகரில் நமது இலட்சிய சிங்கம் ஈ. வே. கி. சம்பத்தின் இல்லத்திலே, நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப்பொதுக்குழுக்கூட்டம் குறிப்பிட வேண்டியதாகும். ஈரோட்டில் கூடியது என்பதாலல்ல; கூடிய பொதுக்குழு கவனித்து முடிவு செய்த பிரச்சினைகளை வைத்தே கூறுகிறோம், இதனை.

☆

—விரைவீர்!—

"உறுப்பினர் சேர்ப்பதே இன்றைய முதல்பணி. இதுவிரைவில் முடிக்கப் படவேண்டும். அப்போதுதான் மற்றவேலைகள், நடந்து, கழக அமைப்பு வலிவுள்ளதாகும். ஆகவே தான், நான், இந்தப்பணி விரைவில், வேகமாக நடைபெற வேண்டுமென்று கூறுகிறேன். கழகத்தின் பெருமைகளைச் சொல்லிக்கொண்டிருப்பதில் பயனில்லை—எவரும் 'உறுப்பினர் தொகை'யைத்தான் உற்று நோக்குவர். இதை விரைவாக முடித்துத்தாருங்கள்! இந்த உறுப்பினர் சேர்க்கும் வேலை, மே மாத இறுதிக்குள் முடிந்துவிடவேண்டும்.

மாவட்டச் செயலாளர்களே, பொதுக் குழு உறுப்பினர்களே, கிளைக் கழக நண்பர்களே, உங்கள் யாவருக்கும் விடுக்கும் என் கோரிக்கை இதுவாகும். காலதாமதம் வேண்டாம்! வேலைகள் மலைபோல வளருகின்றன! விரைவீர்! விரைவீர்!"

சி. என். ஏ.
பொதுக் குழுவில்

—விரைவீர்!—

☆

பலப்பல முக்கிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. அத்தனையும் கழக ஆக்கம் குறித்த ஆலோசனைகள்! எப்படி சட்டதிட்டங்களை அமுல் நடத்துவது, கழக வேலைகளைக் கவனிப்பது எவ்விதம், தலைமை நிலையம் பணியாற்றுவது எங்ஙனம், இதையெல்லாம் கவனிக்க பொருள் வேண்டுமே என்செய்வது, நமக்கோர் தினசரி வேண்டாமா, அதுவும் கழகத்துக்காகவே இருந்தாலல்லவோ நல்லது, இப்படியெல்லாம் பலத்த ஆலோசனைகள்! பலப்பல யோசனைகள்! விவாதங்கள்!, விபரங்கள்!—இவைகள்யாவும், வளர்ந்துவரும் நம்மை வகைப்படுத்துவதாயிற்றே? அதனால் வந்திருந்த பொதுக்குழு உறுப்பினர் அனைவரும் சிரத்தையோடு கலந்துகொண்டனர். தீவிரமாக யோசித்து திட்டங்கள் பல சொல்லினர். இதையெலாம் கேட்ட பிறகு, பொதுச் செயலாளர் பேசியதுதான், நாம் தலைப்பிலே தந்தது.

* * *

தி. மு. க. துவக்கப்பட்டு மூன்றாண்டுகள் வரப்போகின்றன. இதற்குள், அது தன்னை வளர்த்துக்கொண்டது—ஆம்! நிற்காது—முடியாது—நிலைக்காது—ஆகாது—என்றெல்லாம் 'வாழ்த்துக்கள்' வழங்கியோரின் கண்கள் அகலமாகி, இருதயம் சுருங்குமளவுக்கு வளர்ந்திருக்கிறது. அதுவும் சாமான்ய வளர்ச்சியா! நடைபெற்ற பொதுக்கூட்டங்களும், மாநாடுகளும், தாங்கிக்கொண்ட 'இடி'களும் 'மின்னல்'களும், சமாளிக்க நேர்ந்த எதிர்ப்புகளும் தொல்லைகளும், ஏராளம்! பொதுக்கூட்டங்கள் புன்சிரிப்பைத் தூவும் நமக்கு — புண்ணாக்குவது போல புதுப்புதுத் தொல்லைகள் தொடரும் எதிரிகள் மூலம். இருந்தும், வாகைசூடிய வீரனைப்போல நிமிர்ந்து நிற்கிறது! மக்களுடைய 'நண்பனாக' மலர்ந்து விட்டது! மணமுள்ளமலர் — கொள்கை குன்று கோட்டம் — சாயாத மலை—ஓயாத கடல்—திராவிட முன்னேற்றக் கழகம்!! இதன் வளர்ச்சியை வகைப்படுத்திய, பெருமைகொண்ட, பொதுக்குழுவைத்தான் பொதுச் செயலாளர் பாராட்டினார்கள். மூன்றாண்டுகளுக்கு முன்பு, கலங்கித் தவித்து, கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, தத்தித்தவழத் துவங்கிய நேரத்திலே, இந்தப் பொதுக்குழு நிறுவப்பட்டது—கழகத்தின் வேலை முறைகள் ஒழுங்காகவும், ஜனநாயக ரீதியிலும் நடைபெறுவதற்காக. அந்தப்பணியைத் திறம்பட செய்து வந்திருக்கிறது—இதுவரை. அருமையான—சட்டதிட்டமொன்றையும் ஆக்கித்தந்திருக்கிறது—கழகத்துக்கு.

* * *

கழகம், காட்டாறுபோல இருந்துவிடமுடியுமா! நமது கருத்தல்லவே அது. 'உரத்துப் பேசினார்கள் — ஊர்ஜனங்கள் கேட்டார்கள். கைதட்டினார்கள்' என்றளவில், நாம் வைக்கவிரும்புவதல்லவே, நமது கழகம். மடத்துக்கும் மடாலயத்துக்கும் பிறகென்ன வேறுபாடாம்! காங்கிரசுக்கும் 'கலகலத்த' கட்சிகளுக்கும் பிறகென்ன வித்தியாசம்! 'நேருவைப் பாரீர்' என்று தலைவர் ஒருவரைமட்டுமே காட்டி வளரும் கட்சியுமல்லவே நம்முடையது! அந்தந்தக் கட்சிகள்போல, நாமும் இருந்தால் ஆற்றுவெள்ளம் கண்டும் அதை வயலுக்குப்பாய்ச்சி, வரப்பால் தடுத்து, உருவாக்காதவர்களாகவன்றோ ஆகிவிடுவோம்? இந்த எண்ணம் கொண்டோரல்லவோநாம்! 'எடுத்த காரியம் ஒழுங்காக நடக்க வேண்டும்—தொட்டது சுடர்விட்டு பிரகாசிக்கவேண்டும்' என்ற வார்த்தைகளை மூச்சாகவும் பேச்சாகவும் கொண்ட கூட்டமல்லவா, தி. மு. கழகம். அதனால்தான் நிர்மாணித்தந்த செயலாக்கத் துடிக்கிறோம். அருவிபோல ஓடிக்கிடக்கும் ஆர்வத்தை வகைப்படுத்தி வளர்க்க விரும்புகிறோம்! சட்ட திட்டப்படி, கிளைக்கழகங்களை அமைக்க விரும்புகிறோம்!!

* * *

இந்த ஆசையை, பொதுக்குழு கூட்டத் துவக்கத்திலும், நன்றி கூறிக்கொண்டபோதும், வலியுறுத்திக்கூறினார்கள் பொதுச் செயலாளர். ஜனநாயக முறையோடு, அமைப்புமுறை வழுவாது கழகங்கள் இனி வேலைசெய்தாகவேண்டும் ஆமாம், வேலை செய்தாகவேண்டும்! இஷ்டப்போல் கூடினோம், ஏதோ செய்தோம். என்று சொல்லவும் முடியாது — செல்வதும் ஆகாது! அத்தகைய சட்ட திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த சட்டதிட்டப்படி நமது காரியங்கள் நடைபெற்றாகவேண்டும். 'அவர் வந்தார் இந்தமாதம். அழகாக நடத்தினோம் பொதுக்கூட்டம். இவரை அழைக்க கடிதம் எழுதியிருக்கிறோம். இவ்வளவு திட்டமிட்டிருக்கிறோம் செலவு செய்ய' என்று, பேசிடுதல், இனிப்பலிக்காது— பலனையும் தரமுடியாது. அத்தகைய சட்டதிட்டம் — நிறைவேற்றப்பட்டிருக்கிறது—எல்லோரும் ஏற்றுக்கொண்டுமிருக்கிறோம். இதன்படி நமது அலுவல்கள் நடைபெற்றாக வேண்டும். இந்தப்பரீட்சை—(பரீட்சையென்றுகுறிப்பிடுகிறோம். ஏனெனில் காட்டருவிபோல வளர்க்கப்பட்ட 'பாரம்பரை' வழக்கம் இப்போதுதான் அகல ஆரம்பித்திருப்பதால்!)—யில் நாம், நம்மைக் தகுதியுள்ளோராக்கிக்கொள்ளவேண்டும். நாம் கூடிப்பேசிவிட்டுக் கலைந்துவிடும் கூட்டமல்ல! 'காங்கிரசுக்கு எதிர்ப்புக்கட்சி' என்ற நாமத்தோடு விளங்குவதற்காக ஏற்பட்டோரல்ல! 'நல்ல பகுத்தறிவாளர்கள்' என்கிற புகழ்ச்சொல்லோடு முடிந்துபோய் விடாது நமதுபணி! எதையெடுத்தாலும் நன்றாகச் செய்வார்கள் என்ற பட்டத்தையல்ல நாம் எதிர்பார்ப்பது! ஏனெனில், இவைகள் எல்லாவற்றையும்விட, மாபெரும்

4-ம் பக்கம் பார்க்க

## கழக வெளியீடுகள்!

ஒவ்வொரு கழகத்திலும்
இருக்கவேண்டும்!
ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டும்!!

1. சட்டதிட்டங்கள் 0—2—0
2. தீர்மானங்கள் 0—1—0

வேண்டுவோர், புத்தக விலையோடு தபாற்செலவும் சேர்த்து, முன்பணம் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு கிளைக் கழகமும் நான்கணு தபால்தலை அனுப்பி இரண்டு புத்தகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

தி. மு. க.
தலைமை நிலையம்
காஞ்சிபுரம்



## கழகச் சார்பில் தினத் தாள்

"கழகச் சார்பில் ஒரு தினசரி வேண்டும்!" — நண்பர்கள், சந்திக்கும் போதெல்லாம், இதுபோலக் கூறத் தவறுவதில்லை. கழகத்தின் குரலாக, ஒரு இதழ் வேண்டும் என்கிற ஆவல், இன்று நேற்றல்ல, கழகம்துவங்கியநாள்முதலாக-நமது உள்ளத்தில் ஊசலாடிக்கொண்டே வந்தது. எனினும் தோழர்கள் நம்மிடம் தத்தமது ஆசைகளைத் தெரிவித்தபோது, தினசரி ஒன்றையேற்று நடத்துவதென்றால், அதற்குத் தேவையான வசதிகளை நினைத்து, பெருமூச்சு விடுவோம்—'எப்படி முடியும்?' என்ற ஏக்கத்தால். கழக சார்பில் தினசரி வேண்டும் என்று கூறிய தோழர்கள், அது கழகத்தாலேயே நடைபெறவும் வேண்டும் என்ற ஆர்வத்தோடு தெரிவிப்பதும் உண்டு. உண்மையில் இது மிக மிக வரவேற்கக் கூடியது மட்டுமல்ல, பலப்பல வழிகளில் இன்றியமையாததும்கூட.

முக்கியம்! இன்றியமையாதது!! என்று எண்ணிவிட்டால் போதுமா? வாதித்துவிட்டால் ஆகிவிடுமா! ஒரு நாள் பத்திரிகை வெளியே புறப்படுவதென்பது 'பிரமிட்' கோபுரம் ஒன்று கட்டி முடித்ததையொக்குமே!! எத்தனை எத்தனை வசதிகள் வேண்டும், எவ்வளவு பணத்தொகை தேவைப்படும், தொட்ட காரியம் தொடர்ந்து நடைபெறும் திட்டங்கள் காணப்பட வேண்டும். தினசரி! நினைக்கும் போது மனதில் கூத்தாடும் பூரிப்பு, 'நடத்துவது எப்படி?' என்று எண்ணும்போது பெருமூச்சாலும் சோகத்தாலும் மூழ்கடிக்கப்பட்டுவிடும்.

இதுபோலப்பலதடவைகள் நமக்கேற்பட்டதுண்டு. ஆர்வத்தால் துவங்கிவிட்டு பிறகு—அவதிப்படுவதென்பது, நமக்கு பிடிக்காத செயல்—வேண்டப்படாத முறை. இதனாலேயே, மிகமிக யோசனையில் ஆழ்ந்திருந்தோம்.

இந்தக் கவலையைப் போக்கும் வகையில் ஈரோட்டில் கூடிய பொதுக்குழு. தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது — மாநில மாநாட்டு கணக்கு விபரங்களைப் பரிசீலனை செய்தபிறகு.

11. (A) தி. மு. க. முதல் மாநில மாநாட்டின் மூலம் மீதப்பட்டுள்ள தோகையில், கழகக் கட்டிடத்துக்குத் தரப்படவேண்டிய கடனை ரூ. 5615 ஐக்கொடுத்து, எஞ்சிய தோகையைக் கொண்டு கழகத்தின் சார்பில் தமிழ் நாள் தாள் ஒன்று துவக்கவேண்டும் என்று இப் பொதுக்குழு தீர்மானிக்கிறது.

(B) கழகத்தின் தமிழ் நாள் தாளைத் துவக்குவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளுமாறு கழகப் பொதுச்செயலாளரை இப் பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

ஏகோபித்து நிறைவேற்றப்பட்ட இந்த முடிவு, மகிழ்வூட்டும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்தத் தொகைமட்டும் போதுமா! போதாது! போதாது!! நாம் கழகத்தின் சார்பில் நடத்தவிரும்புகிறோம்—ஒரு தின இதழ். இது, நீர்க்குமிழிபோல் ஆகிவிடக்கூடாது. ஆகவே, தக்கதான அடிப்பீடத்தை அமைத்துக் கொள்ளவேண்டும் — போதிய பொருளாதார வசதியிருந்தால்தான், தினஇதழ் ஒழுங்காக நடக்கமுடியும்! இந்த முக்கிய விஷயம் குறித்தும் விவாதித்த பொதுக்குழுவினர், மேலும் சில முடிவுகளை வெளியிட்டிருக்கிறார்கள். சிறுதுளி பெருவெள்ளமாகும்! ஒவ்வொரு கிளைக்கழகத்தினரும் முயன்றால் முடியாத காரியமல்ல, இந்தப் பணி!

(c) கழக நாள்தாளுக்கு முன்கூட்டியே ஒவ்வொரு கிளைக் கழகமும் குறைந்தது தாளின் ஒரு ஆண்டு சந்தாத்தொகையையாவது அனுப்பி வைக்க வேண்டும் என்று எல்லாக் கிளைக்கழகங்களையும் இப்பொதுக் குழு கேட்டுக்கொள்கிறது.

ஓராண்டு சந்தா தொகை! இருபத்துநான்கு ரூபாய்!! — முடியாத காரியமல்ல நமது கிளைக்கழகங்களால். கழகத்துக்குப் பத்திரிகையும் வரும்—களிப்பு தரும் நற்பணி புரிந்ததாகவும் ஆகும். இந்த முக்கியபணியில் உடனடியாக முயல வேண்டுகிறோம். இதையொட்டி மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

(d) கழகத்தின் சார்பாக நடைபெறும் பொதுக்கூட்டம், ஆண்டு விழா, நாடகம் ஒவ்வொன்றின் மூலமும், கழக நாள் தாள் வளர்ச்சிக்கு ரூ. 5—0—0 அவசியம் அனுப்பி வைக்க வேண்டும் என்று இப் பொதுக் குழு தீர்மானிக்கிறது.

இதுவும், தொல்லையில்லாத ஆனால் பலன் தரக் கூடிய முறையேயாகும்.

இந்த சாதாரண முயற்சிகள் மூலம், உடனடியாக, பணம் சேகரித்து அனுப்பியுதவ வேண்டுகிறோம். பலனுள்ள பணி. இலகுவாக முடியும்! இந்த உருவான வேலையில், உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுகிறோம் கிளைக் கழக நண்பர்களை. எவ்வளவு விரைவில் பணம்சேருகிறதோ அவ்வளவு விரைவில் நமது கழகத்தின் 'குரல்' ஒலிக்க ஆரம்பிக்கும்! நமது கழக 'தினசரி' பவனிவர இயலும்!!

சென்னை
மாநில மாநாட்டில்
செலவு போக மிச்சம்
**ரூ 34,804-9-3**

### 'தினத்தாள்' நிதி

(பொதுக் கூட்டங்கள் மூலம்)

| | | | | |
|---|---|---|---|---|
| ஈரோடு | ... | 5 | 0 | 0 |
| மோகனூர் | ... | 5 | 0 | 0 |
| திட்டக்குடி | ... | 5 | 0 | 0 |
| வேங்கடசமுத்திரம் | ... | 5 | 0 | 0 |
| காஞ்சிபுரம் | ... | 5 | 0 | 0 |

2-ம் பக்கத் தொடர்ச்சி

கோரிக்கையைக் கொண்டிருக்கிறோம்.

தனியாட்சி — நம்முடைய கோரிக்கை! 'திராவிடநாடு' கேட்கிறோம்—தனித்து 'நம்மை நாமே' கட்டிக்காக்க விரும்புகிறோம். இது இலேசானதா! எளிதில் முடியக் கூடியதா! முடிந்ததும் நம்பணி ஓய்ந்துவிடத்தான் இயலுமா? எண்ணிப்பாருங்கள் — தனிநாடு, நாம் கேட்பது — அத்தனி நாட்டிலும் நாம் அமைக்கவிரும்பும் ஆட்சியும் சமூகமும் இப்போதுள்ளதுபோன்றதா. இல்லை! இல்லை!! புது சமுதாயம்—பொதுவுடைமைச் சமுதாயம்!

சாதாரண காரியமா, இது? இதயத்திலே கைவைத்துப் பாருங்கள் —எவ்வளவு பெரிய இலட்சியம் நம்முடையது. இதைச் சாதிக்க பொதுக்கூட்டங்களும், மாநாடுகளும் போதுமா? 'இவர் பேசினர்—அவர் வருவார்' என்று சொல்லிவிட்டால் முடிந்துவிடுமா! சிந்தித்துப்பாருங்கள்—சிந்தனையிலே லவைத்திருக்கிறோம் பலப்பலக் கனவுகளை. அந்த ஆசைக்கனவுகள் மூலம், நமது சமுதாயத்தை, மாற்றி அமைக்கவிரும்புகிறோம். புது நாடு! புதுநிலை!!—சொல்லவும் எழுதவும், சுகமாகவும், அழகாகவும்தானிருக்கிறது. ஆனால் இதை நிர்மாணிக்க? இதை நாம் நிர்மாணிக்க?! நம்மை மட்டுமே நம்பியிருக்கும் நாம் நிர்மாணிக்க??

மலைதென்படும், நாம் செய்ய வேண்டிய தொண்டினை எண்ணும்போது. மாக்கடலும், அங்கே அடிக்கும் கோர அலைகளும், காட்சிதரும் நமது இலட்சியபுரி பயணத்தை நினைக்கும்போது. இவ்வளவு பெரிய இலட்சியத்தைச் சுமந்திருக்கும் நமக்குள்ள வசதிகள்—பெருமூச்சு உண்டாகும் இதை நினைத்தால்! குடிசைகளும் கொந்தளிப்போரும் தென்படுவர்—நாம் ஏழைகள்! நாம் பாடுபடுவதும் 'நமது உலகுக்காக!'

வாய்ஜாலம் பேசிடும் பணபிம்பங்களின் பரிவோ, சாதி 'ஜாலம்' காட்டிடும் சன்மார்க்கர்கள் அன்போ, சர்க்காரின் ஆதரவோ, இல்லாதவர்கள் நாம் — இல்லாமலிருக்கவும் விரும்புகிறவர்கள் நாம்.

நமது நிலைமையை எண்ணிப்பாருங்கள். செங்குத்தான பாறையில் ஏறுகிறோம்—பெரிய பாறையை உருட்டிக் கொண்டே மேலேபோகிறோம் — கீழே நம்மை இழுக்கத் தொல்லைகள் எனும் குண்டுகள் பாய்ந்து கொண்டேயிருக்கின்றன. இதற்காக, நாம் தொட்டகாரியத்தை விட்டுவிட்டு துவண்டுவிடும் கூட்டமுமல்ல. ஆகவே, நமது பணி பெரிது—நாம் பெற விரும்பும் திராவிடநாடு இலட்சியம் மிகப்பெரிது—அங்கே நாம் அமைக்கவிரும்பும் சமுதாயம் மிகமிகப் பெரிது!

இத்தனைகளையும் சாதிக்க, நம்மை நாமே தகுதியாக்கிக் கொள்ள வேண்டாமா? எதிர் காலத்தில் புது ஆட்சியை நடத்தத் துடிக்கும் நாம், இப்போது நமது கழக சட்ட திட்டத்தை அமுலாக்கி, 'எதுவும் முடியும் இவர்களால்' என்ற சொல்லுக்குப் பாத்திரமாக வேண்டாமா! தூங்கிக்கிடந்த இனம் துயர் நீக்கி என்றுதான் மீட்சி அடைவது? பொதுவாழ்வு புகுந்தலவும் நம்மை நம்பும் மக்களின் துயர் துடைப்பது தான் என்று! இதையெல்லாம், நினைத்துப் பாருங்கள்—நாம் எதிர்காலத்தில் எவ்வளவு வேகமாகச் செல்லவேண்டியிருக்குமென்பது தோன்றும்.

புது அமைப்புகள்! — இன்றைய முதல் வேலை, இது. இந்த வேலைக்குப் போகுமுன், நாம் செய்யவேண்டியது யாது? — உறுப்பினர்களைச் சேர்ப்பது! ஆமாம்! ஒவ்வொருஉறுப்பினரும் நமதுகோரிக்கைக்குகிடைக்கும்'குண்டுகள்'—ஏராளமாகஉறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும்—ஒருவருக்கொருவர் கூடிக் கலந்து பேசி 'இன்று நீ இந்த கிராமம். நாளை நான் அடுத்த தெருவுக்கு' என்று, ஓடி ஓடி பணியாற்ற வேண்டும்.

"கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே! உங்களைத்தான் நம்பியிருக்கிறது நாடு" என்று மாநில மாநாட்டில், பொதுச் செயலாளர், கூறியது ரீங்காரமிடுமே உங்கள்காதுகளில். அதன்பொருளை ஒரு நிமிடம் நினையுங்கள்! புலிவீரம் பிறக்கும்—பொல்லாங்கு ஒழிக்க புறப்படத் தூண்டும்-பணிபெரிது! பாசறைகளாகவேண்டும் நம் கிளைக் கழகங்கள்!!! எங்கே, பார்க்கலாம் ஒவ்வொருவரின் பணியையும் பலனையும்.

✲

## தி. மு. க-வின் பாராட்டு

ஈரோட்டில் கூடிய தி. மு. க. பொதுக்குழு நிறைவேற்றிய (3) (6) தீர்மானங்கள்:

3. கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில் பஞ்சம், பசி, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், அடக்குமுறை, பட்டினிச்சாவு, நிர்வாக ஊழல், லஞ்சம், கள்ளச் சந்தை, முதலாளித் துவக்,கொள்ளை சிறைச் சித்ரவதைகள், பொது மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம், தொழிலாளர் இயக்கத்தின் மீது கடும் அடக்குமுறை, எழுத்துரிமை —பேச்சுரிமை பறிமுதல் ஆகிய கொடுமைகளுக்குக் காரணமாக இருந்த காங்கிரசைப் பொதுத்தேர்தலில் பெரும் அளவுக்கு முறியடித்த பொது மக்களை இப்பொதுக் குழு பெரிதும் பாராட்டுகிறது.

(6) தி. மு. க ஆதரவு பெற்று சென்னை சட்டசபை—டெல்லி மக்கள் சபை ஆகிய வற்றிற்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை இப்பொதுக் குழு பாராட்டுவதோடு திராவிட நாடு பிரிவினை இலட்சியத்திற்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

☆

## சட்டசபை கம்யூனிஸ்டு கட்சி

சென்னை சட்ட சபைக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவராக தோழர் நாகி ரெட்டி எம். எல். ஏ. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சட்ட சபை கம்யூனிஸ்டு கட்சியின் அலுவலாளர்கள் பின்வருமாறு:— துணைத் தலைவர்கள்: கே. பி கோபாலன், எம். கலியாணசுந்திரம். செயலாளர்கள்: பி. வெங்கடேஸ்வரலு, மணலி கந்தசாமி, பி. கே. கோபாலகிருஷ்ணு. நிர்வாகக்கமிட்டி: ஜி. பாபனய்யா, எம். அனுமந்த ராவ், எம். வி. பத்ரன், டி. சி. நாராயண நம்பியார், வி. ஜி. ராவ், ப. ஜீவானந்தம்.



## கழகத் தோழர்கள் கவனிக்க

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் ரசீது புத்தகங்கள் திராவிடமெங்கும் அனுப்பப்பட்டுள்ளன. தலைமை நிலையத்திலிருந்து இதுவரை நேரில் பெற்றுள்ள புத்தகங்களுக்கு தலைமை நிலையத்திற்கே கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இனி, புத்தகங்கள் வேண்டுவோர், தங்கள் தங்கள் மாவட்டச் செயலாளர்களுக்கே எழுதி உறுப்பினர் ரசீது புத்தகங்கள் பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

சென்னை மாவட்டம்
என். வி. நடராசன்,
18, பெருமாள் முதலித் தெரு,
சென்னை 1.

செங்கற்பட்டு மாவட்டம்
சி. வி. எம். அண்ணாமலை,
பெரிய காஞ்சிபுரம்.

வடாற்காடு மாவட்டம்
கே. சுப்ரமணியம்,
போளூர்—N A Dt.

தென்னாற்காடு மாவட்டம்
சி. முனுசாமி,
தாஸ் சைக்கிள் கம்பெனி,
விருத்தாசலம்.

தஞ்சை மாவட்டம்
கே. கே. நீலமேகம்,
பஞ்சுக்காரத் தெரு,
கும்பகோணம்.

நாஞ்சில் மாவட்டம்
ஜான்,
நாகர்கோவில்.

திருச்சி மாவட்டம்
ஜி. பராங்குசம்,
கிலேதார் தெரு,
தெப்பக்குளம் அஞ்சல்
திருச்சி.

ராமநாதபுர மாவட்டம்
எம். எஸ். ராமசாமி,
c/o சிவ-சண்முகசுந்தரன்.
தியாகராயர் வாலிபர் சங்கம்,
அருப்புக்கோட்டை.

மதுரை மாவட்டம்
தா. ஆவுடையப்பன,
சோழவந்தான்.

சேலம் மாவட்டம்
பி. ஆர். சோமசுந்தரம்,
25, மாரிமுத்துமுதலி தெரு,
அம்மாபேட்டை, சேலம்.

திருநெல்வேலி மாவட்டம்
ஆர். எஸ். தங்கப்பழம்,
வடக்கு பீச்ரோடு.
தூத்துக்குடி.

கன்னட மாவட்டம்
வே. இளஞ்சேரன்,
167-A, அக்கிப்பேட்டை,
பெங்களூர் 2.

இனி தனிப்பட்ட ஊர்களிலிருந்து உறுப்பினர் ரசீது புத்தகங்கள் வேண்டி தலைமை நிலையத்திற்கு எழுதும் கடிதங்கள் கவனிக்க இயலாது. உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை, மேமாத இறுதிக்குள் முடித்துத்தர வேண்டுகிறோம்.

பொறுப்பாளர்,
தலைமைநிலையம், தி. மு. கழகம்,
காஞ்சிபுரம்.

# திருவாங்கூர் ஆட்சியின் அடக்குமுறை

## ஜான், மனோகரன் சிறைக்குள்

கடந்த சில மாதங்களுக்கு முன், திருவாங்கூர் நாஞ்சில் மாவட்டத்தைச் சேர்ந்த தென்தாமரைக்குளம் எனும் ஊரில் தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெறக் கூடாதென திருவாங்கூர் ஆட்சி அம்புகள் தடைவிதித்ததையும், அதைமீறி நமது கழகத்தவர், நமது தீர்மானப்படி நடந்து கொண்டதையும், அவர்களைக் கைதுசெய்து அவர்கள்மீது வழக்கு தொடரப்பட்டதையும் நாடு அறியும். இந்த வழக்கு 5—4—52 அன்று நாகர்கோவில் முதலாவது மாஜிஸ்டிரேட் கோவிந்தசாமி அய்யர் முன்னிலையில் நடைபெற்றது. மாஜிஸ்டிரேட் தோழர்களைப் பார்த்து, "தடையுத்தரவை மீறினீர்களா — எதிர்வழக்காடுகிறீர்களா?" என்று கேட்டார் தோழர்கள் அனைவரும் "மீறினோம் எதிர்வழக்காடவில்லை?" என்றனர். அதன் பேரில் அபராதமாக தலா ரூ 20-ம் கட்டமறுத்தால் ஒருவாரச் சிறைத் தண்டனை என்றும் தீர்ப்பளித்தார். கழகத் தீர்மானத்துக்கிணங்க, அபராதம் கட்டுவதற்கில்லையென்று கூறி, சிறைத் தண்டனையை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டனர். விசாரணையின்போது ஏராளமான தோழர்களும் கிளைக் கழகங்களின் செயலாளர்களும் கூடியிருந்தார்கள். சிறைத் தண்டனையேற்று, கழகக் கொள்கையைக் காத்த இலட்சிய வீரர்கள்.

V. M. ஜான்
(நாஞ்சில் மாவட்ட செயலாளர்)

கி. மனோகரன்
(பிரச்சாரக்குழு உறுப்பினர்)

மு. சுப்பிரமணியம்
(தோப்பூர்)

சி. குமரசாமி
(குமரிமுனை)

A. பகவதிப்பெருமாள்
(கோட்டாறு)

S. செல்லத்துரை
(தென்தாமரைக்குளம்)

S. ஆதிநாராயணன்
(தெ. தா. குளம்)

A. தங்கப்பழம்
(தெ. தா. குளம்)

D. பொன்னையா
(தெ. தா. குளம்)

S. செல்லப்பன்
(தெ. தா. குளம்)

S. தங்கசாமி
(தெ. தா. குளம்)

### பொதுக்குழு கண்டனம்

மேற்படி செய்தி ஈரோட்டில் பொதுக்குழு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, தந்திமூலம் கிட்டியது. மேற்படி அடக்குமுறைபற்றி, தி. மு. க. பொதுக்குழு நிறைவேற்றிய தீர்மானம்:

(14) திருவிதாங்கூர் கொச்சி அரசாங்கம் நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செ[illegible]ன வி. எம். ஜான், தி. மு. க. பிரச்சாரக்குழு உறுப்பினர் கி. மனோகரன் ஆகியோரையும் மற்றும் ஒன்பது கழக முக்கியஸ்தர்களையும், தென் தாமரைக் குளத்தில் பேச்சுரிமையைப் பறித்து, 144 தடையுத்திரவை விதித்து அதை மீறினர்கள் என்ற குற்றத்திற்காக அவர்களைச் சிறைக்கனுப்பியிருக்கும் அடக்குமுறைக் கொடுமைப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிடநாடு

காஞ்சி] 13—4—52 [ஞாயிறு

# கோலேந்திவிட்டார்

☆

ஆச்சாரியார் மந்திரிசபை அமைத்துவிட்டார். 'பஜகோவிந்தம்' பாடியவர் பாராளத் துவங்கிவிட்டார்.

ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டு, சர்வாதிகாரம், தன்கையிலே கோலேந்திவிட்டது. தவிக்கும் மக்களின் துயர் துடைக்காத காங்கிரஸ், ஆட்சிபீடம் அமர்ந்துவிட்டது.

மக்களால் விரட்டியடிக்கப்பட்ட கட்சி, மார்தட்டிப் புறப்படுகிறது— மக்களை ஆள. புலிகள் புறப்பட்டுவிட்டன—பசுக்கூட்டம் நோக்கி. பச்சை இரத்தம் நாவிலே வழிய, பதவி ருசிகொண்ட காங்கிரஸ் பாசீசம், மீண்டும் மக்களைச் சுரண்டக் கிளம்பிவிட்டது.

ஆச்சரியத்தோடு பார்க்கிறான், 'ஹிட்லர்' இந்த அற்புதத்தை. 'நம்மையும் மிஞ்சிவிட்டார்களே இந்த காங்கிரஸ்' என்று, நோக்குகிறான் முசோலினி. ஜார் சிரிக்கிறான்! ஷாயி, வெட்கப்படுகிறான்!! ஜனநாயகம், இரத்தம்பட்ட உடலோடு, கிடக்கிறது!!!

தோற்ற கட்சி, தோள்தட்டிக் கிளம்பிய அற்புதத்தை எவரும் கண்டிருக்க முடியாது. 'நாங்கள் இருக்கிறோம், அதைச்செய்துகாட்ட' என்று கூறுது கூறுகிறது, டில்லி ஏகாதிபத்தியம்.

மக்கள் மதியாத கட்சி, மக்களை ஆளவருகிறது. மதோன்மத்தர்களைக் கொண்டுள்ள, காங்கிரஸ், மாநிலத்தை ஆளத் துவங்கிவிட்டது. நீதியை ஒதுக்கிவிட்டு 'கொல்லைப்புறமாக' தலைவரைத் தேர்ந்தெடுத்து, பதவி நாற்காலிகளில் அமர்ந்து, கேலியோடுபார்க்கிறது— நாட்டை.

நாடு எதிர்பார்க்கவில்லை— இவர்களை. விரும்பவும் இல்லை இந்த வீணைசைக்காரர்களை. விரட்டி, விரட்டி அடித்தனர் — ஓடஓடத் துரத்தினர். மந்திரிகள் தோற்றார்கள்! பிரதமமந்திரி மூக்கறுக்கப்பட்டார்! பெரும்பாலான உறுப்பினர்கள், மக்களால் ஓட்டப்பட்டனர். 'மெஜாரிடி'யில்லாத கட்சியாயிற்று காங்கிரஸ். இப்போது! அது ஆட்சி நடத்துகிறது. தோற்றோர் துள்ளிப்பாடுகிறார்கள்! நொண்டி, நடனம் ஆடுகிறான்—ஊமை, பாடுகிறான்— எங்கே காணமுடியும் இதனை!!

375-ல் 152-ஐ பெற்ற கட்சி ஆள்கிறது தோழர்களே! ஆள்கிறது—அற்புதமான காட்சியினை எங்கே காண்பீர்? 166-உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஐக்கிய ஜனநாயக முன்னணியை அழைக்கவில்லை—கவர்னர். டில்லியால் அனுப்பப்பட்ட கவர்னர்! காங்கிரஸ் கவர்னர்!!

அழைக்காதது மட்டுமல்ல, 'பரமானந்தம்' காணப்போவதாக, தியாகர் திருநாமம் கொண்ட நகரிலே 'ஒதுங்கிக்கிடந்த'வரை, ஊராளச் செய்திருக்கிறார்—ஊராளவருமாறு 'கொல்லைப்புறமாக' அழைப்பு தந்தார்—தனது விசேஷ அதிகார மூலம் எம். எல். ஸி. ஆக்கியிருக்கிறார்!

மக்களால் விரட்டப்பட்ட கட்சிக்கு, மக்களைச் சந்திக்க 'பயப்படும்' மகானுபாவர், தலைமை வகிக்கிறார்—தர்பார் நடத்தத் துவங்குகிறார்.

கோரத் தாண்டவம் ஆரம்பமாகிவிட்டது—மூர்க்கத்தனம் துவங்கிவிட்டது—முதலைகளாக மாறிவிட்டனர் 'காங்கிரஸ் மூலவர்கள்'— வேறென்ன கூறமுடியும், இந்தக் கேவலத்தைத் துணிந்து செய்திருக்கும் அவர்களைப்பற்றி?

நாடு, ஐந்தாண்டுகாலமாக நலிந்தது, மெலிந்தது — மக்கள் கதறினார்கள்! பட்டினியால் மட்டுமல்ல; குண்டுகளைக் கண்டு. அத்தகைய 'குணாளர்'கள் கையில் மீண்டும் நாடு சிக்கிவிட்டது.

சிக்கும்படி செய்துவிட்டார்கள் —யார்? மக்களா—அல்ல! அல்ல!! எதிர்க்கட்சியினரா—இல்லை! இல்லை!! டில்லி ஆதிபத்தியக்காரர்கள், தமது திருத்தொண்டராம் ஆச்சாரியார் மூலம், இத் திருப்பணியைச் செய்திருக்கிறார்கள். இதற்கு கருவி, இங்குள்ள 'துரோகிகள்!' — ஆமாம், வேறு வார்த்தை கிட்டவில்லை எமக்கு, இதைவிட. வீரப்பரம்பரையென கர்ஜித்தனரே திருப்பரங்குன்றத்திலே அந்த விவேகிகள் இருக்கத்தான் இருக்கிறார்கள்! இறந்துபோய்விடவில்லை— அவர்கள் கண்முன்பாக. ஆச்சாரியார் அரியாசனத்தில்! ஐந்து ஆண்டுகளுக்கு முன், எவர் கூடாதெனக் கூறி 'இங்கே இடமில்லை'யென விரட்டப்பட்டாரோ அவர் சென்னை சர்க்கார் மாளிகையில்!! நாட்டை வீழ்த்திய இனத்துக்குப் பணியோமெனப் பரணி பாடினரே, அவர் இன்று பாதசாரிகளாய், நின்று பார்க்கிறார்கள்! பவனிவருகிறார் ஆச்சாரியார்!!

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஆச்சாரியார், டில்லியின் பக்கபலத்தோடு, மணிமுடி சூட்டப்பட்டிருக்கிறார் — பிரதமர் ஆக்கப்பட்டிருக்கிறார்.

ஆகவில்லை—ஆக்கப்பட்டிருக்கிறார், இரண்டு வார்த்தைகளுக்கு முள்ளவித்தியாசமிருக்கிறதே, அதுதான் ஜனநாயகத்தின் அரிச்சுவடி. அது, கொலை செய்யப்பட்டுவிட்டது, டில்லி மூலவர்களால்.

"இல்லை! நாங்களேவிரும்பித்தான் அழைத்தோம் இவரை. சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியன்றோ தீர்மானம் போட்டது. டில்லிக்கும் இதற்கும் என்ன சம்பந்தமாம்!" என்று கேட்கலாம் தேசிய நண்பர்கள். தோழர்களே! "ஏகமனதாக— ஒரே உள்ளத்தோடு" என்று அகராதியிலுள்ள அத்தனை வார்த்தைகளையும் காட்டி எழுதலாம், பாதந்தாங்கிப் பத்திரிகைகள். 'அவர் போனார்—இவரே வேண்டிக்கொண்டார்' என்றெல்லாம் செய்திகள் வரலாம். அதனால் உண்மையை மறைத்துவிட முடியாது! 'எல்லோரும் ஆச்சாரியார் வரவேண்டுமென்று விரும்பியிருந்தால், இது போலவா பேசுவார்கள்?

"ஆச்சாரியார் வருவதில் காமராஜருக்கு இஷ்டமில்லை"

யார் பேசியது என்பீர்கள், சட்டசபைக்கட்சித் தேர்தல் நடைபெற்ற அன்று பேசிய காமராஜ் கூறியிருக்கிறார் இப்படி.

என்ன பொருள் இதற்கு? சிலர் இப்படிப் பேசுகிறார்களாம். யாராயிருக்க முடியும் அந்தச் சிலர். காமரா?—நாம்தான் எதிர்க் கட்சிகளாயிற்றே! எதிர்க் கட்சிக்குப் பதிலளிக்கும் அவசியமேஇல்லையே இப்போது. என்ன காரணம் காமராஜரே இதை வெளியிடுவதற்கு! ஏதோ, அவர்களுக்குள்ளாகவே இந்தப் பேச்சு பலமாகியிருக்க வேண்டும். பானையிலில்லாமல் அகப்பையில் வருமா!

காமராஜரும், முன்பு கர்ஜனை புரிந்தோரும் இன்று 'தாளடியே சரணம்' என ஓடும்படி—அல்லது ஒத்துக்கொள்ளும்படிச் செய்யப்பட்டதற்குக் காரணம் என்ன?

திறமையான நிர்வாகம் வேண்டுமென்ற ஆசையால்—என்று பதில் கூற முனைவர். இது கூறுவோரது ஆசையை வெளிப்படுத்துமேயொழிய, உண்மை அதுவல்ல. ஆச்சாரியாருக்கு சமீப வருடங்களில் ஏற்பட்ட — ஏற்படுத்தப்பட்ட — "அந்தஸ்தை"க் காட்டி விளையாட விரும்புகிறார்கள், டில்லியினர். ஆச்சாரியார் என்றால் 'அந்தப் பதவி வகித்தவர் —இவர்களெல்லாம் பாராட்டப்பட்டவர். இவ்வளவு பெரியவர்—நேருவையும் ஆட்டிப்படைப்பவர்' என்றெல்லாம், பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிறதல்லவா? இந்த அந்தஸ்தைக் காட்டி, மனமொடிந்து கிடக்கும் மக்களை மயக்கப் பார்க்கிறார்கள். இதனால்தான் இன்று காங்கிரஸ் ஏடுகள் எழுதுகின்றன—'ராஜரிஷி சம்மதித்தார்' 'பெரிய அதிர்ஷ்டம்' 'சென்னை பிழைத்தது!' 'ராஜாஜி ஒத்துக்கொண்டார்' என்று. மலையிலிருந்த 'மகாதேவர்' இறங்கியது போலும், அவர் இறங்காததால்தான் இங்கே பட்டினியும் பசியும் தாண்டவமாடியது போலவும், பிரமாதப் படுத்த ஆரம்பித்திருக்கின்றன. பாபம், இங்கே 'இடமில்லை' யென்று விரட்டியோட்டப்பட்ட காட்சியை மக்கள் மறந்துவிட்டனர் என்ற எண்ணம் போலும்!

சென்னை சிரிப்பாய் சிரிக்கிறது என்றால் அதற்குக் காரணம் நிர்வாகச் சீர்குலைவு என்று சொல்லுகிறார்கள். அதைப் போக்கவே, ஆச்சாரியார் மந்திரியானார், என்று கூறப்படுகிறது. இது, மக்களைமயக்கும், சொல்வித்தை. ஆச்சாரியாரின் அந்தஸ்தைக் காட்டி, 'கவர்னர் ஜெனரலாகவும் கவர்னராகவுமிருந்தவர் மந்திரியாக வந்திருக்கிறாரப்பா! எல்லாம் இனி சரியாய் போய் விடுமப்பா!!' என்று, மக்கள் கருதுமாறு செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் கூறுவது போலவே ஆச்சாரியார் நிர்வாகத் திறமையுள்ளவராக வைத்துக் கொள்வோம். அதனால் என்ன? எல்லாம்வல்ல 'எம்பிரான்' அவர்! சக்கரத்தைச் சுழற்றிவிட அதன் காற்று வேகத்தில் எல்லாம் சரியாகிவிடும் என்று சொல்லிக்கொள்ள!! பிரிட்டிஷ்காரன் ஆக்கிவைத்துச் சென்ற நிர்வாக இயந்திரம் அப்படியே இருக்கிறது—அது எப்போதும் போல இயங்கிக் கொண்டுதானிருக்கும். அதில் இவரென்ன சீர்திருத்தம் செய்வது? அப்படித்தான் செய்வதென்றாலும் எதைத்தான் செய்ய முடியும்! இப்போதிருக்கிற சர்க்கார் காரியதரிசிக்குப் பதில் மற்றொருவரைப்போடலாம்— அல்லது கலெக்டர்களையும் தாசில்தார்களையும் கண்டிப்பாக இருக்கும்படி கட்டளையிடலாம்— கிராம முன்சீபுகளைக் கூட்டி 'போதனைகள்' புரியலாம். இதைத்தவிர வேறென்ன செய்ய முடியும், நிர்வாகச் சீர்திருத்தம் என்றால்! இன்று, நாடு விரும்புவது இதையா? மக்கள் வயிற்றையன்றோ காட்டுவார்கள்! ஏழ்மையன்றோ ஒழிக்கப்படவேண்டும்! பேதாபேதமன்றோ போக்கப்படவேண்டும்! வயலிலேற்படும் புயலையும் வாழமுடியாது வரப்போரங்களிலும் பாதைகளிலும் குவியும்பிணங்களையுமன்றோ தடுக்கவேண்டும்! இந்தக் கேடுகள் அனைத்தும் ஒழிய — நிர்வாகச் சீர்திருத்தம் — போதுமா! முடிந்துதான்விடுமா!! ஆம்! என்று கூறக் கூடிய, அசடுகளல்லஇங்குள்ளோர்.

வாழ்க்கை வாழும்படியாகஇருக்க வேண்டும்—இதுதான், மக்களுடைய ஆவல். இந்த ஆவலோடுதான் காங்கிரசாட்சிக்கு 'வரவேற்பு' கூறினார்கள் முன்பு. காங்கிரஸ் இதுசம்பந்தமாகக் கூறிய கொள்கைகளை அப்படியே ஏற்றார்கள். போராடினார்கள். இன்று! அந்தக் கொள்கைளால் பலனில்லை என்பது மக்களுக்குப் புலப்பட்டுவிட்டது. காங்கிரசின் கொள்கை முதலாளிகளுக்கு சார்பாக இருப்பதுதான் — ஏழைகள் எலும்புகளைவிட பணக்காரன் விரலில் படும் சிறுகாயமே அவர்களைக் கவலைப்படச் செய்யும் என்கிறஉண்மைகளை உணர்ந்திருக்கிறார்கள்.

அதனால்தான், காங்கிரஸை விரும்பவில்லை- தோற்கடித்தார்கள்.

காங்கிரஸ் தனதுகொள்கைகளைக் கூறித்தான் தேர்தலுக்கு வந்தது.

தேர்தலில் தோல்வி மக்கள் காங்கிரசின் கொள்கைகளை—போக்கை—வேலைமுறையை விரும்பவில்லை; வெறுக்கிறார்கள்.

கண்முன் தெரியும் இந்த உண்மைக்கு திரைபோடப் பார்க்கிறது காங்கிரஸ் ஏகாதிபத்தியம்—திரைபோடுவதோடு தெற்கில் வளரும் புதுவேகத்தைப் பொசுக்கிடவும் விரும்புகிறது, வடநாட்டு முதலாளித்துவம். இந்த எண்ணத்தை வெளிப்படையாக கூறிடவாமுடியும்? முடியாதே! அதனால்தான் மோகனாஸ்திரத்தை வீசுகிறார்கள்— 'முனிபுங்கவர்' என வர்ணிக்கப்பட்டவண்ணம் முடிசூட்டப்பட்டிருக்கிறார், "முன்பு மூக்கறுக்கப்பட்டவர்!"

நிர்வாகம் ஒழுங்காக நடக்கும்— இதை இங்குள்ள காங்கிரஸ்காரர்கள்—முன்பு ஆச்சாரியாரை விரட்டித்துரத்தியவர்கள்—கூறுகிறார்கள். டில்லி சொல்லியபடி! ஆமாம், டில்லி சொல்லியபடி!! தெற்கில் தன்னுடையது அல்லாத ஆட்சி ஏற்படுவதை விரும்பாத டில்லி தனது பிரதிநிதியாக காங்கிரஸ்காரர் ஒருவரை கவர்னராக அனுப்பியது — முதலில் பிறகு, 'கல்கத்தாவில்' கூடி 'சென்னை'பற்றி முடிவு செய்து — சென்னையிலிருந்து சென்றோர் மூலம் அனுப்பியது இங்கு. அந்த முடிவுதான்—இன்று ஆச்சாரியாரை அமர்த்தியிருக்கிறது, ஆசனத்தில்!

"டில்லி கட்டளையிட்டுவிட்டால் [illegible]துமா? காமராஜர் போன்றோர் உ[illegible]னை ஒத்துக்கொண்டாவிட முடியும்! இவர்களுக்கும் ஆச்சாரியார் வரவேண்டும் என்கிற ஆசையில்லாவிடில் எப்படி நடக்கும் இது!" என்று கேட்கலாம்.

---

## மாவட்டங்கள் கவனிக்க!

பொதுக்குழு நிறை வேற்றியுள்ள தீர்மானங்களில் ஒன்று:

(10) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வோரிடத்தைத் தேர்ந்தெடுத்து கழகப் பிரச்சார பயிற்சி வகுப்பும், கழகப்பணியாளர் பயிற்சி வகுப்பும் நடத்த வேண்டும் என்று பொதுக்குழு தீர்மானிக்கிறது.

உண்மைதான், ஆனால் ஒத்துக் கொள்ளும்படி, நிலைமை கொண்டு விட்டிருக்கிறது. ஒத்துக்கொள்ளாவிடில் டில்லி பழி சாட்டும் இவர்கள் மீது! பழி ஏன், என்பதொருபக்கமும் டில்லி காட்டும் யோசனையால் பலன் தரலாம் என்கிற ஆசையுமே 'திருப்பரங்குன்றத்து வீரர்கள்' திருவடி சரணம் பாடச்செய்திருக்கிறது.

அந்த ஆசையெது வென்பீர்கள்! அதுதான், ஆச்சாரியாரின் அந்தஸ்தைக்காட்டி மக்களை மயங்க வைப்பது, சட்டசபையில் ஆதரவு தேட முனைவது.

இந்த யோசனைகளின் முடிவாக, ஆச்சாரியார் பதவியேற்கும்படி செய்யப்பட்டிருக்கிறார். அவரது மந்திரிசபையில் சேர, 'பல்லிளித்து வருவோர் எவராவது உண்டா?' என்று வலைவீசுகிறாராம், அவரும்.

காங்கிரசை எதிர்த்து வெற்றி பெற்றோரை, சேர்க்க முனைகிறது கரையும்/கட்சி. முகத்திலே துப்பியவனுக்கு முத்தம்!

இந்தக் கேவலத்துக்கு இரையான கட்சிக்கு ஆதரவு தர எவரே செல்வர்—கொள்கையும் முதுகெலும்பும் அற்றோரைத்தவிர. கோணங்கிக் கூத்துக்கு நல்லோரா கை கொடுப்பர்! நானா—மக்களைச் சந்திப்பதை விட இன்று 'மனோரம்யமாக வாழ்ந்தால் போதும்' என்கிற மதோன்மத்தரைத் தவிர, எவரும் ஒப்பார் இதனை!

ஆச்சாரியாரின் அந்தஸ்து அழகில் மயங்கி, தமது அரசியல் வாழ்வை 'குப்பைத் தொட்டி'யாக்கிக் கொள்ள விரும்பும் அரசியல் வாதிகள், எதிர் காலத்தின் இகழ்ச்சிச் சின்னங்களாகத்தான் ஆவர்—பாசீசம் வளர கைகொடுக்கும் எவரையும் இன், உலகம் மதிக்காது—நாமும் மதியோம்.

"இப்பொழுது தேர்ந்தெடுக்கப் பட்ட காங்கிரசல்லாத சட்டசபை உறுப்பினர்கள், காங்கிரஸ் ஆதிக்கம் கூடாது என்று தீர்மானித்த பொது மக்களின் காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சியாலேயே வெற்றி பெற்றவர்கள். எனவே, மீண்டும் காங்கிரஸ் ஆட்சி ஆதிக்கம் ஏற்படுவதற்கு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, துணையாகவோ, உடந்தையாகவோ காங்கிரசல்லாத சட்ட சபை உறுப்பினர்கள் எவரேனும் இருப்பாரேயானால், அச்செயல் பொது மக்களுக்கு இழைக்கும் மா பெரும் துரோகமாகும். ஆகவே காங்கிரசின் சூழ்ச்சிகளுக்குப் பலியாகாமலும், அரசியல் வலையில் வீழாமலும், எச்சரிக்கையாக இருந்து, காங்கிரசின் ஆதிக்கத்தை ஒழிப்பதில் தீவிரமாக முனைந்து பாடுபட வேண்டும்" என்று காங்கிரசல்லாத உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டு, ஈரோட்டில், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழு முடிவு செய்திருக்கிறது.

இந்த முடிவை, எல்லோரது பார்வைக்கும் வைக்கிறோம்.

பாசிசம் வளர கைதரும், சமூக விரோதிகள் வளர்வது — ஆபத்து! மிக மிக ஆபத்து!! இதை வளர விடோம்—ஏற்பட்டிருக்கும் பாசிச ஆட்சிஒழிய பாடுபடுவோம்-ஈரோடு பொதுக்குழு முடிவு செய்திருப்பது போல, "காங்கிரன் பாசிச ஒழிப்புக்காக முற்போக்குக் கட்சிகள் ஐக்கிய ஜனநாயக முன்னணி என்ற பெயரால் மேற்கொள்ளும் முயற்சிகளை ஆதரிக்கிறது" என்ற முடிவுப்படி, உருவெடுக்கத் துவங்கியிருக்கும் டில்லி ஏகாதிபத்யத்தையும் அதன் பிம்பங்களின் போக்கையும் ஒழிக்கப்பாடுபடுவோம். ஒழிக காங்கிரஸ் ஆட்சி! ஒழிப்போம் பாசிச ஆட்சியை!!

✻

## 'ஆச்சாரியார்' குறித்தவழக்கு

"காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் சென்னை கவர்னர், நடந்து கொண்டுள்ளார். அரசியலிலிருந்து விலகிய ஆச்சாரியாரை, காங்கிரஸ் மேலிடத்துக்குக் கட்டுப்பட்டு, திடீரென எம். எல். சி-யாக நியமனம் செய்ததன் நோக்கம் இதுதான்" என்று ஆச்சாரியார் நியமனம் குறித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடிய தோழர் பி. ராமமூர்த்தி எம். எல் ஏ. கூறினார். வழக்கு ஐகோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டது நீதிபதிகள் ராஜமன்னார், வெங்கட்டராமய்யர் ஆகியோரால். இந்த வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டு செல்வதென முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

## பிரிவுத் துயரம்

நம் அலுவலகப் பொறுப்புகளையெல்லாம் ஆர்வத்தோடு செய்திடும் அருமைத் தோழர் இராசாபாதுரின் அன்பு மகனை, திடீரென சாவுவந்து பிடுங்கிக்கொண்டு போய்விட்டது என்ற செய்தியை நம்மால் நம்பவே முடியவில்லை முதலில். உண்மைதான் என்று உணர்த்தப்பட்ட பொழுதோ, நம் இதயம் ஒடிந்து விழுந்துவிட்டது ஒரு கணம் — பாண்டியன் நண்பரின் அன்புக் குழந்தை — சிறுகை நீட்டி, குறுநகை காட்டி, இட்டுந்தொட்டுந் துழவியும் மகிழ்வூட்டிய குழந்தைச் செல்வம், 7—4—52ல் மறைந்துவிட்டது. ஆறாத்துயரில் ஆழ்ந்து கிடக்கும் அன்பருக்கு, காலம்தான் அவரது கவலையை மாற்றும் என்று கூறுவதுதன் மூலம், ஆறுதல் கூறுவதைத் தவிர வேறென்ன செய்வது? அவருக்கும் குழந்தையைப் பிரிந்து குமுறும் உள்ளமும், குபுகுபுவென நீர்வழியும் கண்களும் கொண்டு, துயரமே வடிவாகக் கொண்டுள்ள அவரது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளை கவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவறாது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
3. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள் இல்லையெனில் குறிப்பிட்ட தேதியோடு பத்திரிகை நிறுத்திவிடப்படும்.

மானேஜர்.



## ஈரோடு காணாத காட்சி

"வருக! வருக!! என நண்பர் சம்பத் வரவேற்றார். மகிழ்வோடு நுழைந்தனர், ஒவ்வொருவரும். ஆனந்தம் அவர்களுக்கு! நமது இலட்சிய வீரரொருவரின் இல்லத்திலே கூடப் போகிறோம் என்பதால். குதூகலத்தோடு காட்சி தந்தது, அருமைத் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்களின் இல்லம். காலை மணி 11க்குப் பொதுக்குழுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. பொதுச்செயலாளர், கடந்த பொதுக் குழுக் கூட்டத்துக்குப் பின் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி எடுத்துக்கூறிய பிறகு முதல் மாநில மாநாட்டின் வரவு செலவுக் கணக்குகளைக் கூறினார். மீதப்பட்ட தொகையைக் கூறியபோது, களிப்பு தாண்டவமாடிற்று, எல்லோரது இதயத்திலும். இந்த நேரத்தில், இடைவேளைக்காக, பொதுக்குழு கலைந்தது. இதயத்தில் தாண்டவமாடிய களிப்பை இரட்டிப்பாக்குவதுபோல அருமையான விருந்து அளிக்கப்பட்டது ஈ. வே. கி. சம்பத் அவர்களால். 'என்ன வேண்டும்?' என்று ஆவலோடு தோழர் ஈ. வே. கி. செல்வன் கேட்க, 'இன்னும் வைப்பபா!' என்று அன்போடு தோழர் எஸ். ஆர். சந்தானம் கூற 'இதோ!' என்று தோழர்கள் அப்பாவு, பெருமாள் ஆகியோர் உபசரிக்க, நடைபெற்ற விருந்து, பிரமாதமாக இருந்தது. இதயத்துக்கு அன்பு விருந்து! வயிற்றுக்கு உணவு விருந்து!! — இரண்டாலும் திண்டாடினர் பொதுக்குழு உறுப்பினர்கள், 'எது பிரமாதம்!' என்று கூறத் தெரியாமல். விருந்துக்குப்பின் 3-மணிக்கு மீண்டும் கூடியபோது பலப்பல தீர்மானங்கள் மீது காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. வழக்கம் போல எல்லா உறுப்பினர்களும் பங்கேற்றுக்கொண்டார்கள் — தீர்மானங்கள் நிறைவேறிய பின் பொதுச் செயலாளர், எல்லாவற்றையும் தொகுத்துக் கூறி, கழகத்தின் எதிர்கால வேலைத்திட்டம் குறித்து எடுத்துரைத்தார். கடைசியில், பொதுக் குழுக் கூட்டம் சிறப்புற நடத்தித் தர உதவியாக இருந்த தோழர் சம்பத் அவர்களுக்கு பொதுக்குழு உறுப்பினர்கள் சார்பிலும் தனது சார்பிலும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டதோடு, இதற்கு வேண்டிய உதவிகள் செய்து தந்த தோழர் சந்தானத்துக்கும் தோழர்கள் அப்பாவு, பெருமாள் முதலியோருக்கும் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொண்டார். மாலை 6-மணிக்குப் பொதுக் குழு முடிந்ததும், ஈரோடு தி. மு. க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று பெருமிதமாக நடைபெற்றது. தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் தலைமையில் தோழியர் சத்தியவாணி முத்து, தோழர்கள்: மு. கருணாநிதி, என். வி. நடராசன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின் பொதுச் செயலாளர். சி. என். ஏவும் பேசினார்.

பொதுக்குழு கூட்டத்தின் நடவடிக்கைகளைக்கண்டு களிக்கும்நோக்கத்துடன் ஏராளமான வெளியூர் தோழர்கள் வந்திருந்தார்கள். இதுவரை நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டங்களில், உறுப்பினர் தவிர்த்து வேறு யாரையும் அனுமதிக்கவில்லை யென்றாலும், இந்தக் கூட்டத்திற்கு யாவரையும் அனுமதிக்கும்படி பொதுச் செயலாளர் அனுமதித்தார். இதுவே, இந்தப் பொதுக் குழுவின் கடைசிக் கூட்டமாதலால், இந்த அனுமதி தரப்பட்டது. நடிகவேள் எம். ஆர். ராதா உள்பட பலபேர், நடவடிக்கைகளை கண்டார்கள்.

எல்லோருக்கும் இரவு உணவு, தோழர் சம்பத் அவர்களின் இல்லத்தில் அளிக்கப்பட்டது.

❀

ஆசிரியருக்கு...

## சித்தூரில் பஞ்சம்

### நெசவாளர் அவதி

ஐயா!

கடந்த ஐந்தாண்டுகளாக மழையில்லாக் கொடுமையால் சித்தூர் மாவட்டம் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல, ஏரிகளிலும் கிணறுகளிலும் சரியான நீர்த்தேக்கமின்மையால் நெற்பயிர் முற்றிலும் சாவியாகிவிட்டது. மானாவாரி பயிர்களும் மழையின்மையால் மாட்டுத்தீனிக்கும் பயன்படாது போய்விட்டது. இது இம்மாவட்டத்தில் பஞ்சத்தை அதிக மோசமான நிலையில் பரவச் செய்துவிட்டது.

சித்தூர் மாவட்டத்தில், பெருவாரி மக்களான கைத்தறி நெசவாளர்களின் நிலைமை பரிதாபத்திற்கு கொண்டுபோய்விடப்பட்டிருக்கிறது, போதிய நூல் விநியோகமின்மையால். வேலையில்லாது வருவாய் குன்றிவாடும் நெசவாளமக்கள் பட்டினியால் வதைக்கப்படுகின்றனர். பட்டினி—கூலி கொடுக்கமுடியாத நிலைமையில் பல கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தியே தடைபட்டு நிற்கிறது. நெசவாளிகள் சங்கங்களிலிருந்து விலகி, வயிற்றுப்பிழைப்பை நாடி வேறு மாவட்டங்களுக்கு போகும்வண்ணமுள்ளனர். எனவே நெசவாளிகளின் துயர், எல்லைவரையற்று தாண்டவமாடுகிறது.

எனவே மாகாண அரசாங்கத்தார் உடனடியாக பஞ்ச நிவாரணத் திட்டம் தீட்டி இம்மாவட்டத்தில் உள்ள மக்களின் குறைகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். போக்குவரத்து, நீர்ப்பாசன திட்டம் இவற்றின்மூலம் வறுமையால் வாடும் விவசாயிகளுக்கு வேலை தர ஒரு திட்டம், கடந்த 1949-ம் ஆண்டில் நெசவாளிகளுக்கு அளிக்கப்பட்டதுபோன்ற ஒரு பஞ்ச நிவாரணத் திட்டத்தை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் மூலம் அளிக்கப்பட வேண்டும், கைத்தறிநெசவாளர்களின் பட்டினிச்சாவைத் தடுக்க.

ஏ. ச. தியாகராசன்,
(பொதட்டூர் பேட்டை)
மாவட்டப் பஞ்சநிவாரணக் கமிட்டி தலைவர்,
மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க டைரக்டர்.

வெளிவந்து விட்டது!

1952ம் ஆண்டு காலண்டர்

அண்ணா, நெடுஞ்செழியன், கருணாநிதி, சிற்றரசு, நடராசன், சம்பத், வேலன், இராமாமிர்தம்மையார், சத்தியவாணி முத்து முதலியோரின் உருவப்படம் அடங்கிய மூவர்ண ஒரே பிக்சர் காலண்டர் விலை அணா 8

திராவிடன் பதிப்பகம்
P. B. No. 18., வேலூர். N. A.

# உதைக்கும் காலுக்கு முத்தம்!

சட்டம் செல்லத்தக்கது அல்ல! —உயர்நீதி மன்றம் தீர்ப்பு தந்தது இப்படி. பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது வழக்குத் தொடர்ந்த நால்வரிடமிருந்து.

“சர்க்கார் இட்டதே சட்டம். அது செல்லாது என்று கூற இவர்கள் யார்?” கோபத்தோடு கர்ஜித்தார், கோலேந்திய பிரதமர். உலகம் திகைத்தது, “நீதியை உதாசீனம் செய்யும் இந்த ஆசாமியைப்பார்!” என்று.

கருப்பு மக்களைப் பிரித்துவைக்கும் வோட்டு முறை செல்லத்தக்கதல்லவென்று, தென் ஆப்பிரிக்க உயர்நீதி மன்றத்தார், தீர்ப்பு தந்திருக்கிறார்கள்.

வழக்குத் தொடர்ந்தோர் நால்வர்—கருப்பு மக்களின் சார்பில் நீதி மன்றத்தில் நின்றனர். அவர்கள் உள்ளம் களிப்பால் மலர்ந்தது—வெற்றிகேட்ட நீக்ரோ மக்கள் நெஞ்சம் மகிழ்ந்தது—இந்திய மக்கள் வெற்றிக் கொண்டாட்டம் நடத்தினர்.

வழக்குத் தொடர்ந்த நால்வரும், பொதுத் தீமையைக் கண்டு மனம் பதறி நீதி மன்றம் சென்றனர். அந்த நால்வரும், பொதுத் தொண்டிலே, ஈடுபட்டிருப்பவர்கள்—புன்மைப்போக்கை ஒழிக்கும் ஆவேசங் கொண்டவர்கள்.

கேப்டவுன் நகர கவுன்சிலர் வில்லியம்டேவிட்காலின்ஸ், மரச்சாமான் செய்யும் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் எட்கார்ஆர்தர் பீன், வியாபார ஏஜண்டான எட்கார்பிராங்கலின், கட்டிடம் கட்டும் கொத்தனார் கனீப்ஹாரிஸ் எனும் நல்லோர் நால்வரும், நலிந்து வாட்டப்படும் தமது இன மக்களுக்காக நீதி மன்றத்திலே நின்றனர்—வெற்றி பெற்றனர்.

இந்த வழக்கு முடிவுகேட்டு மலான் கொதித்தான்—சட்டமா? சர்க்காரா? என்று வெறி, வீம்பு பேசுகிறது.

வழக்குத் தொடர்ந்தோர் கருப்பு நிற மக்கள்! நீதி தந்தோர் வெள்ளை நிற நீதிபதிகள்!!

வெள்ளை நீதிபதிகள், ஆப்ரிக்க சர்க்காரின் வெறிப்போக்கு, நீதிக்கு முரணானது என்று தீர்ப்பு தந்தார்கள்.

வெள்ளைநிறக் காவலனாக மார்

> ‘காமன்வெல்த்’ குறித்து தி. மு. க. தனது முதலாவது மாநாட்டில், நிறைவேற்றிய முக்கிய தீர்மானம்:—
>
> பொதுநலனைக் குறித்து பல நாடுகள் ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொள்வது தேவையானதாக இருந்தபோதிலும் காமன்வெல்த் கழகம் மேற்படி நோக்கத்துக்காகவே இயங்குவதாக கூறப்பட்டபோதிலும், காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் இந்தியாவுக்கு சம அந்தஸ்துதர மறுக்கும் போக்கில் வெள்ளைநிற வெறி திட்டத்தை கடைப்பிடித்தும் காமன்வெல்த் கழகம் அந்த போக்கைமாற்ற ஆவன செய்யாதிருப்பதால், இந்தச் சூழ்நிலையை ஏற்றுக்கொண்டு இந்தியா மேற்படி அமைப்புடன் இணைந்திருப்பது தன்மானக் குறைவு என்று இம்மாநாடு கருதுவதால் மேற்படி போக்கைக் கண்டிக்கும் அறிகுறியாக காமன்வெல்த்தைவிட்டு இந்தியா வெளியேறிவிடவேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

தட்டும் மலான் கோபத்துடன் கேட்கிறான் ‘யார் இவர்கள் நீதிதர?’ என்று.

நீதி தந்தோர் சாதாரணமானவர்களல்ல—தென் ஆப்ரிக்காவின் சட்டக் காவலர்கள். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள்.

இவர்களைத்தான் நிறவெறி கேட்கிறது—‘யாரென்று?’

“சர்க்காரிட்ட சட்டத்தை செல்லாதென்று கூற இவர்கள் யார்?” என்று ஆவேசத்தோடு அலறுகிறான் மலான். நீதியைக் காலடியில் போட்டு மிதிக்கிறான்! கோர்ட்டு முடிவைக் குறை கூறுவோர் கூண்டிலேற்றப்படலாம் –ஜனநாயக உலகு கடைப்பிடித்து வருகிறது இந்த ஒழுங்கை. மலானோ நீதி மன்றத்தை அவமதித்தது மட்டுமல்ல—“நீதி”யை சவாலுக்கிழுக்கிறான்; சுதந்திரமாகத் திரிந்துகொண்டும் இருக்கிறான்; பிரதமர் என்கிற பெருமையோடு பேசுகிறான்.

உலகமே சிரிக்கிறது நிறவெறி கண்டு—வெறி வீறுப்பு பேசுகிறது. சட்டத்தைக் கேலி செய்கிறது. நீதியை நிர்மூலமாக்குகிறது. நீதிபதிகளின் தீர்ப்பை—நாட்டின் சட்டத்தை நிர்வகிக்கும் காவலர்களின் தீர்ப்பை—நிறவெறி, துச்சமெனக் கருதுகிறது.

அந்த அளவுக்கு நிறவெறி, தாண்டவமாடுகிறது. புலியைப் போல் சீறுகிறது — உறுமுகிறது.

தென் ஆப்ரிக்க பூமியில், வெள்ளையர் நடாத்தும் அக்கிரமங்களைக் குறித்து அடிக்கடி கேள்விப் படுகிறோம். கருப்புநிற மக்களை நாயினும், கேவலமாக நடத்தும் அவர்தம் போக்கை நல்லோர் கண்டித்துக் கொண்டே உள்ளனர். தனித்தனி நாடுகள் மட்டுமல்ல உலக நாடுகளின் பொது மன்றம் என்று கூறப்படும் ஐக்கிய நாடுகள் சபையே கண்டித்திருக்கிறது. ஆனாலும் நிறவெறி பணியவில்லை. உலகம் கேலியோடு பார்க்கிறது! கொடுமைகளைச் செய்துகொண்டேயிருக்கிறது.

“கருப்பாயிருக்கிறான், பார்!”

“சேச்சே, கருப்பு!!”

“நாங்கள் வெள்ளையர் இனம்”

“வெள்ளையும் கருப்பும் ஒன்றாக முடியுமோ?”

இந்த வீறுப்பு, நடத்திவரும் வெறிச் செயல்கள் கொஞ்சநஞ்சமல்ல, எங்கெங்கு ஆரியப் பரம்



பரை இருக்கிறதோ அங்கெல்லாம் இக்கொடுமை வளர்ந்து, தீயெனச் சுட்டுப்பொசுக்கிக்கொண்டே இருக்கிறது.

ஆரியப் பரம்பரை, தான் குடியேறிய இடங்களிலெல்லாம், இத்திருக்கூத்தை நடாத்தத் தவறவில்லை. ‘பாரத பூமி’யில் நாம் காணும் காட்சிகளைப் போலவே, வெளிநாடுகளுக்குள் நுழைந்த ஆரிய இனம், அங்குள்ள ஆதிமக்களைக் கேவலப்படுத்தி, கீழ் மக்களாக்கி, நசுக்கி வருகிறது.

இந்தியாவில் இவர்கள்! ஆப்ரிகாவில் ஆரிய இனத்தின் பிரிவினரான ஆங்கிலோ சாக்சானியர்கள்!!

வெள்ளைக்காரர்கள், வீம்புத் துரைத்தனம் நடாத்துகிறார்கள் —நிறபேதம்!—அவர்களை மனிதமிருகங்களாக்கியிருக்கிறது.

ஆப்ரிக்க மண்ணிலே அட்டகாசம் செய்யும் வெள்ளை வர்க்கம், அங்கே உள்ள ஆதிவாசிகளைப்படுத்தாதபாடு படுத்துகிறது.

சொந்தநாட்டு மக்களை, வந்தோர் கேவலப்படுத்துகிறார்கள்.

நீக்ரோ மக்கள், தென் ஆப்ரிக்கா கண்டத்தின் பழங்குடி மக்கள். இவர்களை, புகுந்தஇனம், பொசுக்குகிறது.

வெள்ளைக்கார “காலனி” ஏகாதிபத்யம், அந்த நாட்டுமக்களின் அதிபர்களானதுமட்டுமின்றி, அவர்களை நாய்களாக நடத்துகின்றது.

மனிதனாகவே மதிப்பதில்லை! —கண்டால் கோபம், தொட்டால் திட்டு, தமது இடத்திற்குள் வரக்கூடாது, நீக்ரோக்களுக்கென தனி இடம்—தனி ரயில்—தனிச்சோலை.

மனித உரிமைகள் பேசப்படும் இந்த நாட்களிலே துர்ப்பாக்கியரான ‘கருப்பு நிறமக்கள்’ கழுகுக்கிடையிலே மாட்டிய காக்கையைப் போலக் கொத்திக் கொல்லப்படுகிறார்கள்.

இந்தக் கொடுமையை ஒழித்துக் கட்டவேண்டுமென்றல்ல, தீர்ப்பு தந்த நீதிபதிகள் வெளியிட்டது. வெகு வெகு சாதாரணமான தீர்ப்பு கருப்புநிற மக்களுக்கு வெள்ளையரோடு சேர்ந்து ‘வோட்’ அளிக்கும் முறை கூடாதெனக் கூறும் சட்டம் செல்லத்தக்கதல்ல,—இது கேட்டு அலறுகிறான் மலான்! இந்த உத்திரவுக்குக் கீழ்ப்படிய முடியாதென கர்ஜிக்கிறான்!!

★

தென்ஆப்ரிக்கா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குக்கட்டுப்பட்டதாகும். காமன்வெல்த் நாடுகளில்ஒன்றாகும். இங்கே இப்படி நிறவெறித் தாண்டவமாடுகிறது! நீக்ரோ மக்களையும் இந்தியாவிலிருந்து சென்று அங்கே இடு பொடியப்பாடுபடும் ஏழைகளையும், நிறபேதச் சட்டத்தால், கொடுமைகள் இழைத்துவருகிறது இந்தச் சர்க்கார். இந்தக் கேடுகளைக் களைய முடியவில்லை—காமன்வெல்த் அமைப்பால். இந்த நிலையிலே, இந்தியாவும் ஒரு காமன்வெல்த் நாடு! டில்லியும் கேப்டவுனும் நேசக் கரங்களோடு உலவுகிறது! காமன்வெல்தில் கைகோர்த்துக்கிடக்கிறது!!

ஆப்ரிக்க மலானின் அட்டகாசப் போக்கைக் குறித்து பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டால், “எமக்கும் வருத்தந்தான். என்ன செய்வது?” என்று கூறுகிறார்கள். ஏப்ரல் 2ந் தேதி, பிரிட்டிஷ் வெளிநாட்டு உதவி அமைச்சரான ரீடிங்பிரபுவை, இந்தியநிருபர்கள் சந்தித்து, மலான் போக்கு குறித்து சில கேள்விகள் கேட்டிருக்கிறார்கள்.

“ரீடிங் அவர்களே! சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்பை மலான் அவமதிப்பதைப் பார்த்தீர்களா?”

“கவனித்தேன். அது மிகவும் வருந்தத்தக்க விஷயம்தான்”

“வருந்தினால் போதுமா! இந்தப் போக்கைத் தடுக்க வேண்டாமா?”

“யார் தடுப்பது?”

“காமன்வெல்த் நாடுகளில் ஒன்றுதானே தென் ஆப்ரிக்க யூனியன்”

“ஆமாம்!”

“காமன்வெல்த்தின் தலைமைப்பீடமான பிரிட்டன், இது பற்றி, ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?”

“காமன்வெல்த் நாடுகளிடையே தலையிடுவது உசிதமல்ல”

இவ்விதம் பதில் தந்திருக்கிறார்—லார்டு ரீடிங். நிறவெறிப்போக்கைத் தடுக்க வேண்டியது அவசியம் தானென்றும், அந்த ஆவல் பிரிட்டனுக்கு உண்டென்றும், ஆனால் மற்றோர் சர்க்காரின் விவகாரத்தில் தலையிடுவது உசிதமல்லவென்றும் கூறியிருக்கிறார்.

“உண்மைதானே!” என்று கூறுவர், காமன்வெல்த்தில் இணைந்து கிடக்கும் இந்திய சர்க்காரின் தூதர்கள். ‘எப்படிமுடியும் பிரிட்டனால்?’ என்று, நமக்குப்பதில்தர முனைவர். வருத்த விருத்தம் பாடிவிட்டு எப்படி இயலும் என்று கேட்கிறாரே ரீடிங்துரை மகனார்—அவரது சர்க்கார்—சர்ச்சில் சர்க்கார்—நிறவெறி குறித்து என்ன செய்திருக்கிறது தெரியுமா!

கடந்தவாரம் நீக்ரோக்களின் அரசனான செரட்ஸிகாமாவை சிம்மாசனத்திலிருந்து தள்ளியிருக்கிறது. செரட்சிகாமா, தென் ஆப்ரிக்க ஆதிவாசிகளின் மன்னனாக வேண்டியவர். பேச்வானலாந்து, ஸ்வாசிலாந்து, பாசுடோலேண்ட் என்ற மூன்று பிரதேசங்களையும், ஆளும் உரிமை பெற்றவன்.

இந்த ஆளும் உரிமை இல்லையென்று, பிரிட்டிஷ் பார்லிமெண்டு முடிவு செய்திருக்கிறது. ஆளும் உரிமை கிடையாது! முடிவுசெய்தது பிரிட்டிஷ் பாராளும் மன்றம்!!

என்ன காரணம் தெரியுமா? செரட்சிகாமா—வெள்ளைநிற மாதை கல்யாணம் செய்துகொண்டார் என்பதுதான்! செரட்சி ‘கருப்பு’ குலத்தான் — ரூத்வில்லியம் என்கிற ‘ரோஜா’ நிறத்தாளை மணந்தான்! கருப்பும்—ரோஜாவும் கலப்பதா?—கேட்கிறது, நிறவெறி. அரச உரிமையில்லையென்று இப்போது பிரகடனப்படுத்தியிருக்கிறது.

இந்தக் கலப்பு மணத்தின் விளைவாக, பமாங்வடா பிரதேசத்துக்கு செல்லக்கூடாதென செரட்ஸி, பிரிட்டிஷாரால் தடைசெய்யப்பட்டதையும், ‘கருப்பு—ரோஜா’ திருமணம் குறித்து வெள்ளையர் சீறிக் கொதித்த சம்பவங்களையும் உலகு அறியும்.

இத்தகைய ஆவேச ஆட்டம் போடும், மக்களோடு, கைகோர்த்துக்கிடக்கிறது டில்லி! உதைக்கும் காலுக்கு முத்தம்!!

நிறவெறியைத் தமது பிறப்புரிமையாகக் கருதிக் கொட்டமடிக்கும் மனித இனத்துரோகிகளோடு இந்தியாவும் ஏன் சேர்ந்திருக்க வேண்டும்—நிறவெறி ஒழிக்க காந்தியார்பட்ட அரும்பாடுகளையாவது

நினைத்துப் பார்க்கக்கூடாதா, இவர்கள்?

நீக்ரோ மக்களை ஒருபுறமும், இங்கிருந்து சென்றோரை மற்றோர் புறமும் — 'கருப்பர்கள்' எனக்கூறி கொத்திச் சாய்கிறான்—மலான். மமதையோடு உலவுகிறான்! அவனுக்கு ஆதரவு தருகிறது—சர்ச்சில் சர்க்கார்!! இந்த வெறிக்கும் பலோடா, கூடிக்கிடப்பது? மனித உரிமையை மதிக்காதவர்களுடைய கூட்டுறவு ஏன்? எதற்காக?

திருமணம் நடந்த நாள் முதல் சொட்சி மீது தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இப்போது 'அந்த நாட்டில் வசிக்கும் உரிமையே கிடையாது' என்று, தீர்ப்பு தந்திருக்கிறது பிரிட்டிஷ் அரசாங்கம்.

பமாங்கவடோ மலைசாதி மக்கள், சொட்சியையும் அவரது வெள்ளை மனைவியையும் தமது நாட்டிலே வரவேற்று மதிக்கக் காத்துக் கிடக்கின்றனர். ஆனால் பிரிட்டன் மறுக்கிறது!

காரணம் வேறு எதுவுமல்ல— 'வெள்ளை நிறக் குலமகளை கருப்பன் மணந்தான்' என்கிற ஆத்திரம் தான். நிறவெறி, இந்த அடக்குமுறையை வீசியிருக்கிறது. இந்த நிறவெறிக்கு ஆட்பட்டிருப்பது—பிரிட்டிஷ் அரசாங்கம்! காமன்வெல்த் கழகத்தின் தலைமைப் பீடம்!

வெறியால் தாண்டவமாடுகிறது வெள்ளைநிறக் கும்பல். கருப்புநிற மக்களை, மனிதர்களாக மதிக்கவில்லை. மனித உரிமைகள் எதுவும் தரப்படுவதில்லை. நீதியும் சட்டமும் அவர்களுக்காக ஏதாவது செய்தால், அவைகளைத் துச்சமென மதிக்கிறது, ஆப்ரிக்க சர்க்கார். மலான், உயர்நீதி மன்றத்தையே அவமதிக்கிறான்!

மலான் — பிரிட்டிஷ் சர்க்காரின் பரம்பரை; இப்போது தோழன். பல வகைகளில் கட்டுப்பட்டவன். வெறியோடு திரியும், இந்த 'ஆசாமி'யைத் தட்டிக்கேட்பது இழிவென்று கூறுகிறது காமன்வெல்த் சிம்மாசனம்—பிரிட்டிஷ் சர்க்கார் கூறுகிறார்கள் 'நாங்கள் தலையிடுவது உசிதமல்ல' என்று.

இதைச் சகித்துக்கொண்டு இந்திய உபகண்டம் ஏனிருக்கவேண்டும், காமன்வெல்த்தில்.

நாயே! பேயே!! என்று இடித்துரைத்து இகழ்ந்து பேசுபவனுடன் எவர்தான், கூடிக் குலவ விரும்புவர்—எத்தனையும் பித்தனையும் தவிர.. சிறிப்பாயும் சிறுத்தையிடமா பசு சென்று, முத்தம் கொடுக்கும்!

கேவலமாக நடத்துகிறது, வெள்ளைவர்க்கம். இதை சகித்துக் கொண்டு ஏனிருக்கவேண்டும் ஒரு பொதுத் தொடர்பில்.

காமன்வெல்த்தில் இருப்பதால், ஏற்படும் பல தொல்லைகளை நாம் பலமுறை சொல்லியிருக்கிறோம்—டில்லிக்கு. அதையெல்லாம், அதிகாரபீடத்தார், கவனித்தாரில்லை. பிற்போக்கெண்ணம் படைத்த பிரிட்டனுடன் இன்னும், பலப்பல, நேசப் பேச்சுகள் நடத்துவதிலேயே இருக்கிறார்கள்.

நிறவெறிப் பிரச்சினை — மிகவும் முக்கியமான பிரச்சினை. இதைத் தீர்த்துவைக்க முயலாத காமன்வெல்த், எதற்கு! ஆப்ரிக்கா மலானும் டில்லி நேருவும் கை குலுக்குவதா — இந்த கொடுமைகளுக்குப் பிறகும்!! நெஞ்சுறுதியும், நிறவெறிக் கொடுமையை ஒழிக்கும் ஆவலும் நேரு ஆட்சிக்கு இருந்தால் — உடனடியாக, மதியாதோரின் தொடர்பிலிருந்து கத்தரித்துக் கொள்ளவேண்டும்.

காமன்வெல்த்:—கனிநிறைச் சோலையல்ல, நம் கஷ்டங்களைத் தீர்த்து விடுவதற்கு. ஏசியும் சாடியும் கொழுக்கும் காமன்வெல்த் தலைமை, நீதிக்குப் போராட முன்வரவில்லை. பிரிட்டன், பிடிவாதமாகயிருக்கிறது; சுழிக்கிறது சொட்சிக மனைவி, சட்டத்தால்.

இதை உணரவேண்டும், உதைக்கும் காலுக்கு முத்தம் கொடுப்போர் உடனடியாக விலகவேண்டும், காமன்வெல்த்தை விட்டு.

★

## "தொழிலரசு"

காங்கிரஸ் வெறியாட்டத்துக்குப் பலியான தென்னிந்திய ரயில்வே தொழிற் சங்கத்தின் இதழான "தொழிலரசு" மீண்டும் துவக்கப்பட்டு வெளிவந்துகொண்டுள்ளது. அதன் இரண்டாவது இதழ் பெற்றோம். மகிழ்கிறோம் வாழ்த்துகிறோம்.

முகவரி:— "தொழிலரசு"
பொன்மலை, திருச்சி.

## திருச்சிமாவட்ட தி.மு. கழக-மாணவத் தோழர்களுக்கு

ஈஸ்டர் விடுமுறையில் நடத்துவதாக இருந்த மாணவர் பிரச்சார வகுப்பை, பல மாணவத் தோழர்களின் வசதிக்கேற்ப, ஏப்ரல் மாதம் 24, 25, 26, 27, தேதிகளில் லால்குடியில் சிறந்த இடத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வகுப்பை சிறந்த முறையில் நடத்த தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் ஈ, வி. கே. சம்பத், மதியழகன், மு. கருணாநிதி, அண்ணா ஆகியோர் முறையே வர ஒத்துக்கொண்டுள்ளார்கள்.

வகுப்பில் கலந்துகொள்கிற மாணவத் தோழர்கள், அவரவர்களின் படிப்பு, முழு முகவரி, அந்த ஊர் கிளை செயலாளரின் அத்தாட்சி முதலியவைகளுடன், செயலாளர், தி. மா. தி. மு. கழகம், நெ-9, கிலேதார் தெரு, தெப்பக்குளம் திருச்சி. என்ற முகவரிக்கு உடனடியாக எழுதவேண்டுகிறேன்.

பராங்குசம்,
துணைசெயலாளர்,
தி மா. தி. மு. க.

## பெயரிடல்

சேலம் டவுன் அரிசிப்பாளையம் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாக உறுப்பினர் தோழர் கே. வி. நாகரத்தினம் மனைவி தோழியர் சரோஜினி அம்மையாருக்கு 16—3—52ல் தோழர் மு. கருணாநிதியால் "அழகிரி" என்று பெயர் சூட்டப்பட்டது.

Edited, Printed & Published by C. N. Annadurai M A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.

404

REGD No M 4642

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 20—4—52 | இதழ் 42

# துரோகி

—[அண்ணல்]—

"இஷ்டம் போல் வரி வசூலிக்கிறாய். பணம் தேவையென்றால் புது வரி போடுகிறாய். இதைப் பொறுக்க மாட்டோம்!"

"ஆமாம்—இனி, நீ, எமது அனுமதி பெறவேணடும் புதுவரி போட"

"அது மட்டுமல்ல! உனக்குப் பிடிக்காதவரை யெல்லாம் பிடித்து அடைக்கிறாயே, சிறைக்குள்—அதுவும் இனி கூடாது. தெரியுமா?"

"குற்றஞ் செய்திருந்தால் அவனை, கோர்ட்டிலே நிறுத்தி, விசாரித்த பிறகே, சிறைக்குள்ளே போடலாம். புரிகிறதா!"

* * *

திகைத்தான் மன்னன்! 'போடு கையெழுத்து' என்று முழக்கமிட்டது, பார்லிமெண்ட். "நான் மன்னனல்லவோ?" என்று மமதையோடு கேட்டான். 'ஆமாம் அதனால்தான் கேட்கிறோம்' என்றனர், கூடியிருந்தோர். 'மக்களின் பிதாவல்லவோ நான்?' என்று, பரிதாபத்தோடு கேட்டான். மறுக்கவில்லை நாங்கள் மைந்தர்கள் கேட்பது இது. இதிலேன் தயக்கம் உமக்கு! சாதாரணமான கோரிக்கைதானே மன்னவா! என்று, பதில் தந்தனர் பார்லிமெண்டு உறுப்பினர்கள். "மன்னன் கடவுளின் பிம்பம்!" என்று, ஞாபகம் வந்தவன் போல மிடுக்கோடு சொன்னான் அவன். அவர்கள் மருளாமல், கூறினர்—"அதனால் தான் கேட்கிறோம்" என்பதாக. விழித்தான்! முறைத்தனர்!! பெருமூச்சு விட்டான்! புன்சிரிப்போடு பார்த்தனர்!! உறுமினான்! சீறினர்!!

* * *

சோலைக்குள் புகுந்த யானை போல, சுந்தர நடைபோட்டுக் கொண்டிருந்த மன்னர் பரம்பரையின், வழக்கமான தர்பாருக்கு, பிரிட்டிஷ் பூமியிலே, வெடி வைத்தனர், பார்லிமெண்டார் — 1628ம் ஆண்டில். ஏதேச்சாதிகாரத்தோடு, இறுமாந்து கிடந்த முதலாவது சார்லஸ் முன் "உரிமை சாசனம்" எனும், ஒப்பந்தமொன்றை நீட்டினர். மன்னன் குமுறினான்—பதறினான். ஆனால் பார்லிமெண்டிலே, பகையஞ்சா வீரர் போலக் கிடந்த மூவர், முரசொலி கொட்டினர்—'மமதையை வளரவிடோம். மக்களை மதியாதவனை, மன்னனாக ஏற்கோம்' என்பதாக சர் ஜான் எலியட், ஜான் பிம், தாமஸ் வெண்ட்வொர்த் என்கிற மூன்று பார்லிமெண்டு உறுப்பினரும் முனைந்துநின்றனர், உரிமை சாசனம் நீட்டி. பணமில்லாததாலும், பக்கத்து நாடுகளைப் பகைத்துக் கொண்டதாலும் வழி தெரியாது விழித்த, சார்லஸ் மன்னன், கையொப்பமிட்டான். பணிந்தான். உரிமை சாசனம் எழுதப்பட்டது. 'அரசு, எதையும் செய்யும்' என்றிருந்த முறைக்கு, முதல் சாவுமணி, அடிக்கப்பட்டது. பெருமூச்சு விட்டான், கடவுளுக்கு அடுத்தபடி தானென எண்ணிக் கொண்டிருந்த, சாகசக்காரன் சார்லஸ். தன்னிஷ்டப்படி நடக்கமுடியாதவாறு தடுக்கும் பார்லிமெண்டை நினைத்து, வெகுண்டான். ஆனால், போர்முழக்கம் செய்யும் பிரான்சும்—ஸ்பெயினும் கருத்தில் பட்டன. கலங்கினான்—வேறுவழியில்லையேயெனவிழித்தான்— உரிமை சாசனத்தில் கையொப்பமிட்டான்.

* * *

"அப்பாடா! கையெழுத்திட்டானும்—மன்னன்"

"விதவிதமான வரிகள் இனிக் கிளப்பாதப்பா!"

"சித்ரவதையன்றோ செய்து விட்டான்—"

"இல்லையே என்றால் 'இழுத்துவா சிறைக்கு' என்றல்லவோ கர்ஜித்தான்"

"மழை ஓய்ந்தது—தொல்லை இனி இருக்காது. மகாவீரர்கள் நமக்காக வாதாடிய மூவரும்"

இவ்விதம் மகிழ்ச்சியோடு, பேசிக்கிடந்தனர், மக்கள். அவ்வளவு தூரம் அவர்களைக் கசக்கிப்பிழிந்து, வரிவசூலித்தான் — தாராதோரை சிறையில் நிரப்பினான். இவ்வளவு கொடுமைகளோடு வரிவசூலித்தது ஏன் தெரியுமோ? மக்களுடைய நன்மைக்காகவல்ல! நாடு சீர்பெறும் காரியங்களைச் செய்வதற்காகவுமல்ல!!

சார்லஸ், தனக்குப் பெண்தருமாறு, ஸ்பெயின் தேசத்து மன்னனைக் கேட்டான். மறுக்கப்பட்டது,

★

மக்கள் வாழ்த்த, பாராளும் சபைக்குச் சென்றான். பதவி ஆசையால் துரோகி ஆனான்.

அவன் முடிவு......?

ஸ்பானிய மன்னனால். பெண் கொடுக்காத மன்னனை எதிர்த்து ஒழிக்கக் கிளம்பினான்—படைக்குப் பணம் வேண்டுமல்லவா? மக்களை வதைத்தான்!

பெண் கொடுக்காத மன்னனுடன் மட்டுந்தான் போர் முழக்கம் செய்தானென எண்ணுகிறீர்கள்—பெண்கொடுத்த பிரான்ஸ் மன்னனுடனும் போர் தொடுத்தான்! மனைவி தந்தவனோடும் போர்! மகளைத் தராத நாட்டுடனும் போர்!!—இந்தப் போர்களை நடத்த, மக்களை இம்சித்து, வரிமேல்வரி — பணம் கொட்டப்பட்டது பொக்கிஷத்தில். பதைத்தனர் மக்கள்! மன்னனோ தன்னை மதியாத நாட்டோடு போர் துவங்கத் துடிக்கிறான்!! இந்த 'மதோன்மத்த நிலை'' கண்ட மக்கள் சீறும் புலிகளாயினர்.

''நாம் வதைகிறோம் — மன்னன் துந்துபி முழக்குகிறான்''

''அவனுக்கு பொழுதுபோக்கு போர் நடத்துவது. நமக்கெல்லாம் உயிரின் வாதை''

''இந்த அநீதியைக் கேட்பாரில்லையா?''

என்று; குமுறிய மக்களின் சார்பில்தான், உரிமை சாசனம். நீட்டப்பட்டது. உரத்த குரலெடுத்துப் பேசினர், ஜான் எலியட், ஜான்பிம், தாமஸ் வெண்ட் வொர்த் ஆகிய மூவரும். வெற்றியும் பெற்றனர், உரிமை சாசனத்துக்கு மன்னனும் பணிந்தான். மக்கள் மகிழ்ந்தனர்! தமக்காக வாதாடிய மூவரையும் போற்றினர்—புகழ்ந்தனர்.

''மாவீரன் எலியட்''

''நம் மதிப்புக்குரியவன் பிம்''

''மக்கள் நண்பன் வெண்ட் வொர்த்''

இவ்விதம், நாடு, பேசிற்று மூவரையும் குறித்து. சார்லஸோ, தனக்கேற்பட்ட நிலை யெண்ணி துடித்தான். 'சமயம் வராதா?' என எண்ணினான். ''இந்த மக்களென்ன இப்படிக் கிளம்பிவிட்டார்களே!'' என்ற கலக்கத்தால், கலங்கினான். ஆத்திரம், அருவருப்பு, கோபாவேசத்தோடு கிடந்த அவனுக்குத் தக்க புத்தி புகட்டியது நாடு. தறுதலை ஆட்டத்துக்கு, அடிமேல் அடிதந்தனர், மக்களுரிமைக்காகப் போராடியவர்கள். இங்கிலையில், வீம்புக்காகத் தொடர்ந்த போர்களையும் ஒரு முடிவுக்கு கொண்டு வரவேண்டியவனான். பிரான்சுடனும், ஸ்பெயினுடனும் சமாதானம் செய்துகொள்ள வேண்டியவனானான். இந்த நிலைகளால் அவனுடைய உள்ளம் அலைகடல்போல் கொந்தளித்தது. தனது வெறிப் போக்கை விரும்பாத மக்கள்மீது, தீராத வெறுப்பு கொண்டான். வெறுப்பை வெளிக் காட்டினால் விபரீதம் விளையுமே! அதனால், ஊமைபோலிருந்துகொண்டே, உரிமை சாசனத்தின் ஷரத்துக்களை மீற ஆரம்பித்தான்.

பார்லிமெண்டுக்குத் தெரியாமல், புதுவரி, ஒன்றை நிர்ப்பந்தப்படுத்தினான். 'கப்பல் வரி' கட்டவேண்டுமென்றான். இது கண்ட பார்லிமெண்டு கொதித்தது. கூடி, மன்னனுடைய போக்கைக் கண்டித்தது. மன்னனோ இப்போது மருளவில்லை! படைகளைக் காட்டி பார்லிமெண்டைக் கலைத்தான். 'நீங்கள் தேவையில்லை' என்று தெரிவித்தான். ''மக்கள்யார்—நான் மன்னன்—பரமண்டலப் பிதாவின் பிம்பம்!'' என்று கர்ஜித்தான். பார்லிமெண்டு திகைத்தது—கலைக்கப்பட்ட பார்லிமெண்டு பதினோரு ஆண்டுகள் பிறகு, கூட்டப்படவேயில்லை.

* * *

11 ஆண்டுகள் — மனம்போன போக்கில், கொடுமைகள் புரிந்தான் சார்லஸ் மக்களை வதைத்தான்! மக்களுக்காகப் பரிந்துப்பேசிய ஜான் எலியட்டை சிறைக்குள்ளே தள்ளி, சித்ரவதை செய்தான்—கொன்றான். மக்களின் தூதன் சாகடிக்கப்பட்டான்! பார்லிமெண்ட் உறுப்பினன் எலியட்—பரிதாபமாகக் கிடந்தது அவன்பிணம், சிறைக்குள்!! மக்களின் தலைவன் அவன். மன்னனின் வெறிக்கு மாண்டான்! தனது மக்களுக்காக தன்வாழ்வை இழந்தான் அம்மாவீரன்! நாடு காடாயிற்று — மக்கள் மனந்துடித்தனர். மன்னனோ சிரித்தான்! ஓயாது சிரித்தான்!!

திகைத்துக்கிடந்த மன்னனுக்கு இவ்வளவு தெம்பு வருமாறு செய்தவன், வெண்ட்வொர்த் ஆகும். மக்களுரிமைக்காக பார்லிமெண்டிலே பேசி, 'மக்கள் நண்பன்' என்று போற்றப்பட்டானே, அவனால்தான் இவ்வளவு துணிவும் ஏற்பட்டது சண்டாளமுகத்தானுக்கு.

''உரிமை சாசனம்'' முடிந்தபின், சார்லஸ், பலப்பல யோசனைகளில் ஆழ்ந்தான். தனது நிலையை வலுவாக்கிக்கொள்ள என்ன செய்வதென ஏங்கியபோது தந்திரம், ஒன்று தென்பட்டது.

''மக்களின் நம்பிக்கை பெற்ற ஒருவனை நமக்கு சாதகமாக்கிவிட்டால்?''

'நல்லதுதான். ஆனால்முடியுமோ இது?''

''ஏன். முடியாது! பெரும் பதவி தருகிறேன என்று தெரிவியுங்களேன்''

''பதவிக்குப் பணிந்துவிடக்கூடியவரா, அவர்கள்''

''மக்களின் நம்பிக்கையை எவர்தான் இழக்கவிரும்புவர் மன்னா!''

இவ்விதம், தனது சகாக்களுடன் ஆலோசனைகள் நடத்தினான். முடிவில் வலைவீசப்பட்டது! தாமஸ் வெண்ட்வொர்த் சிக்கினான்!!

''தாமஸ் — நீதான், நான். நம்பு என்னை. இந்த நாசகாலர்களை ஒழிக்க ஒத்துழைப்புத்தா—உன்னை ராஜ்யாதிபதி ஆக்குகிறேன்''

மன்னனின் வார்த்தை, தாமஸ், மனதில் ஆசைகளைத் தூண்டிற்று. தயங்கினான், பதில்பேச. பதவி ஒரு பக்கம்! தன்னைத் துதித்த மக்கள் மற்றோர் பக்கம்!!—திண்டாடினான், அவன். பதவி, தென்றலாகத்தென்பட்டது — அதனால் விளையும் பகையோ புயல்போலத் தோன்றிற்று.

''மன்னா! மக்கள் தூற்றுவரே என்னை. மாபாவி; துரோகி, வஞ்சகன் என்றெல்லாம் இகழ்வரே''

''ஆமாம்! இகழத்தான் செய்வர்—அதனால் என்ன? அவர்கள்நாவைத் துண்டிப்போம் அதிகாரத்தால்! துடுக்கடக்க சிறைச்சாலை இல்லையோ தாமஸ்?''

''பதவிக்காகத் துரோகியானேன் என்பரே!''

''சொல்லட்டுமே! சுகம்பெரிதா—சொல்லம்பு பெரிதா?''

''எனது நண்பர்கள் தூற்றுவரே''

''தூற்றினால் துடுக்கு அடக்கு

(10-ம் பக்கம் பார்க்க)



# 'கண்ணீர்த் துளிகள்' பெற்ற காணிக்கை

## வியர்வை தந்த விருந்து

## இலட்சரூபாய் குவிந்தது

### பட்டியல் பாரீர்!

திராவிட முன்னேற்றக் கழகம், கண்ணீர்த் துளிகளிலேதான் பிறந்தது. இலட்சத்தை அலட்சியம் செய்து விட்டு, இலட்சியத்திற்காக வெளியேறியவர்கள், அமைத்த கழகத்திற்கு ஆரம்பத்தில் செப்புக் காசும் இன்றித்தான், கழகச் செயல்களைத் துவங்கினார்கள். ஆனால் மக்கள் முகமலர்ச்சியோடு, ஒவ்வொரு சமயமும், காணிக்கை செலுத்தி, நம் கடமையைச் செய்யும்படி பணித்து வருகிறார்கள். கழகம் துவங்கிய நாளிலிருந்து, இன்று வரை மக்கள் அளித்துள்ள வெள்ளிப் பணங்களின் கணக்கு நமக்கு மகிழ்ச்சியையும், மாற்றாருக்கு மருட்சியையும் தருகிறது. மக்கள் நம்பால் காட்டும் நம்பிக்கையும், அன்பும் பிறர் நெஞ்சில் பொறாமையாகப் புகைந்து, வயிற்றெரிச்சல் தீயாகி, தினம் ஒருவிதமான திட்டுதல் ஜுவாலையோடு எரிகிறது. நாம் என் செய்வது? நம் தொண்டினை, மக்கள் கண்டு மனம் உவந்து செய்கிறார்கள்!

மாநாடுகள், நாடகங்கள், பொதுக் கூட்டங்கள், இசையரங்குகள் பெயரால் மக்கள் நமக்கு காட்டியுள்ள உற்சாகம் நம் தொண்டைப் பலப்படுத்துகிறது. நம் ஆர்வத்திற்கு புதுவேகத்தை உண்டாக்குகிறது.

மாநில மாநாடு, கழகக்கட்டட நிதி, கழகச் செலவுகள் இவைகளுக்காக திராவிடம் தந்துள்ள வெற்றிக் காணிக்கையைப் பாருங்கள். மக்களின் மனம் தெரியும். மாநில மாநாட்டு மொத்தவரவு ரூ. 74067, கழகக்கட்டிட நிதிக்காக மக்கள் அளித்த தொகை ரூ. 25105, கழகச் செலவிற்காக தந்தது ரூ. 2500–ஆக, மொத்தம் ரூ. 101669.

இலட்சத்தைத் தாண்டிவிட்டது, இலட்சிய வீரர்களுக்கு, மக்கள் அளித்த காணிக்கை! அதனால் தான் எரிச்சலும், ஏசலும், பிறக்கிறது, புகை மனங் கொண்டவர்களிடமிருந்துகீழே,

சில முக்கிய கணக்கு விவரங்கள் தரப்படுகிறது.

### மாநில மாநாட்டு வரவு—செலவு

| | |
|---|---|
| டிக்கட் விற்பனை | 48434–0–0 |
| மாவட்ட நன்கொடை | 21933–0–0 |
| ஸ்டால் வாடகை | 3700–0–0 |
| மொத்த வரவு | 74067–0–0 |
| மாநாட்டு மொத்த செலவு | 37398–2–9 |
| மாநாடு முடிந்து, தலைமைக் கழக செலவு | 1864–4— |
| மொத்த செலவு | 39262–6–9 |
| மிகுதி இருப்பு | 34804–9–3 |

### மாநில மாநாட்டுக்கு மாவட்ட நன்கொடை விவரம்

| | |
|---|---|
| சென்னை | 2000–0–0 |
| செங்கற்பட்டு | 2175–0–0 |
| திருச்சி | 2000–0–0 |
| தஞ்சை | 2000–0–0 |
| நாஞ்சில் | 2000–0–0 |
| வடாற்காடு | 1650–0–0 |
| தென்னாற்காடு | 1000–0–0 |
| மதுரை | 2000–0–0 |
| கோவை | 2100–0–0 |
| சேலம் | 2000–0–0 |
| ராமநாதபுரம் | 1005–0–0 |
| திருநெல்வேலி | 1125–0–0 |
| ஆமதாபாத் | 150–0–0 |
| பம்பாய் | 101–0–0 |
| செய்கோன் | 151–0–0 |
| புதுச்சேரி | 106–0–0 |
| இலங்கை | 200–0–0 |
| ரங்கோன் | 150–0–0 |
| தனிப்பட்டோர் நன்கொடை வரவு | 20–0–0 |
| மொத்த நன்கொடை வரவு | 21933–0–0 |

### கழகக் கட்டிட வரவு செலவு

| | |
|---|---|
| நன்கொடை வரவு நாடகங்கள் மூலம் | 9000–0–0 |
| சென்னை | 3000–0–0 |
| திருச்சி | 1000–0–0 |
| காஞ்சிபுரம் | 1000–0–0 |
| கோவை | 4000–0–0 |
| தென்னாற்காடு | 1000–0–0 |
| வடாற்காடு | 1000–0–0 |
| சேலம் | 1000–0–0 |
| நாகர்கோவில் | 1000–0–0 |
| சோழவந்தான் | 300–0–0 |
| தனிப்பட்டோர் நன்கொடை | 3000–0–0 |
| மொத்த வரவு | 25300–0–0 |
| கழகக் கட்டிட கிரயம் (மைனருக்குத் தரவேண்டிய ரூ 5615 நீக்கி) | 19385–0–0 |
| ஸ்டாம்ப் பேப்பர் | 2000–0–0 |
| ரிஜிஸ்டர் செலவு | 200–0–0 |
| ரிப்பேர் செலவு | 2420–0–0 |
| வீடு வாங்க பல தடவை பிரயாணம்—தர்கர் செலவு | 500–0–0 |
| வக்கீலுக்கு கமிஷன் | 500–0–0 |
| திறப்பு விழா செலவு | 100–0–0 |
| மொத்த செலவு | 25105–0–0 |
| இருப்பு | 195–0–0 |

ஏறத்தாழ மூன்றாண்டு காலத்திற்குள், கண்ணீர்த் துளிகளுக்கு, மக்கள் அளித்துள்ள காணிக்கை இலட்சம்.

செப்புக்காசுமின்றி செயல் புரியத் தொடங்கினோம். இன்று கழகத்திற்கொரு சொந்தமான கட்டடம் — இப்பொழுது மிகுந்துள்ள தொகையில் சொந்த அச்சகம் நிறுவ இருக்கிறோம். அதிலிருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கென தனி தினசரி தொடங்கப் போகிறோம் என்பதை எண்ணும் பொழுது பூரிப்படைகிறோம்.

மக்கள் கண்ணீர்த் துளிகளுக்கு காணிக்கை தந்துள்ளார்கள்—இலட்சம் ரூபாய்களுக்கு மேல். மக்கள் ஆர்வம் மனம் மகிழ்ச்சியைத் தருகிறது. அந்த மகிழ்ச்சி கலந்த நன்றியை, மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# இலங்கை ★ ★ கொடுமை

"இலங்கை வாழ் திராவிட மக்களுக்கு உரியதும் நியாயமானதுமான குடியுரிமையை வழங்க மறுக்கும் இலங்கை சர்க்காரின்போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், மேற்படி உரிமைகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை சர்க்காரை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது"

* * *

சென்னையில் பெருமிதமாக நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக முதலாவது, மாநாட்டில், இலங்கை வாழ் திராவிடர் சம்பந்தமாக, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஒரு பகுதி இது. பொன்விளையும் நாடிருந்தும், புசிக்க வழியில்லாததால் கூலிகளாய், கொலுழகளாய், தேயிலைத் தோட்டங்களிலே உழைத்துமெலிவோர், நமது சகோதரர்கள்தான். இலங்கையின் செல்வத்துக்கு நமது சகோதரர்களின் வியர்வை, மிக மிக அதிகமாகச் சிந்தப்பட்டு வருகிறது. பூச்சிக் கடிக்கும், தாக்கும் நோய்க்கும் ஆளாகி அவர்கள் படும் சஞ்சலங்கள் மிக மிக அதிகமாகும். உழைத்து, தமக்கு செல்வம் தரும், இந்த ஏழைகள் கூட்டத்துக்கு சிறிது நன்றியையும் தெரிவிக்காமல் நடந்து வருகிறது, இலங்கை சர்க்கார்.

இலங்கை நமக்கு அருகிலிருக்கும் நாடு என்பதால் அதற்கேற்படும் தொல்லைகளுக்காக வருந்தவும், நலன் பெறும்போது மகிழவுமான நிலைமைக்கு நாம் எப்போதும் இருந்து வருகிறோம்.

* * *

இலங்கையில் குடியேறிய நம்மவர்கள், இலங்கையின் மக்களாக வாழ, தமது விருப்பத்தைத் தெரிவித்தே வந்திருக்கின்றனர். இலங்கையின் சட்ட திட்டங்களையும், ஆட்சி முறையையும், ஏற்று நடப்பதாக வாக்குறுதி தந்துள்ளார்கள். இலங்கையின் பிரஜைகளாக வாழ, உறுதி பூண்டிருக்கும், இந்த உழைப்பாளர் கூட்டத்தை, ஓரவஞ்சனையோடு நடத்துகிறது, இலங்கை ஆட்சி.

இதன் உச்ச கட்டம், இப்போது அவர்களுக்கு வோட்டுரிமை இல்லாமல் செய்திருப்பதுதான்.

இலங்கையின் பிரஜைகள், அவர்கள்—இலங்கைத் தீவுக்காக பாடுபடும் கூட்டம் அது—தீவின் செல்வம் வளர தங்கள் இரத்தத்தைச் சிந்தி பாடுபடுகின்றனர். ஆனால், அவர்களுக்கு வோட்டுரிமை இல்லை! வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுகிறது!!

1951 ஆகஸ்டு 6ந் தேதிக்குள் சுமார் 2½ இலட்சம் மக்கள் தம்மை, இலங்கை பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளுமாறு, விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் இவர்கள் அனைவருக்கும், வோட்டுரிமை தரப்படவில்லை.

விரைவில் நடைபெறப் போகிற பொதுத்தேர்தலில், 8500 பேருக்கே வோட்டுரிமை தரப்பட்டிருக்கிறது-1950-ல் தயார் செய்யப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி..

1948ல் இருந்ததில் நூற்றுக்கு

# தேனிக் கலவர வழக்கு நிதி

"திராவிடநாடு ஜாமீன்"—"ஆரிய மாயை"—"காந்தியார் சாந்தியடைய" — "கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா" ஆகிய வழக்குகளில், அரசாங்கம் நமக்கு இழைத்த அநீதிகளுக்கு எதிராக, நீதிமன்றங்களிலே நாம் நீதி வழங்கப் பெற்றோம். அப்படி வழங்கப்பட்ட நீதியின்மூலம், நாம் எவ்வளவு தூய்மைநெறி படைத்தோர் என்பதை உலகறிய, வழி ஏற்பட்டது.

அரசாங்கமும், ஆளுங் கட்சியினரும் நமக்கு எவ்வளவு அநீதி இழைத்தாலும், நேர்மையும், நடுவு நிலைமையும் நிலவும் நீதிமன்றத்தில், நாம் ஏறிநின்று நீதி கோருவோமேயானால், நல்ல தீர்ப்பு நம் பக்கமே என்பது உறுதியாகிவிட்ட உண்மையாகும்.

அந்த உறுதிப்பாட்டைக் கடைபிடித்துதான், தேனியில் 4–7–51ல் காங்கிரஸ்காரர்கள் நடந்துகொண்ட அநீதிமுறையை அம்பலப்படுத்தவும், தி. மு. க-வின் தூய நிலையைத் தெளிவுபடுத்தவும், நாட்டிற்கோர் நல்ல தீர்ப்பு வாங்கித்தரவும் "தேனிக் கலவர வழக்கை" நீதி மன்றத்திலே தொடுத்துள்ளோம். வழக்கில் என். ஆர். தியாகராசன் உள்பட ஏறத்தாழ நாற்பது பேர்கள் எதிரிகளாக நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நாம் நல்ல தீர்ப்பைப் பெற, வழக்கை விடாமுயற்சியுடன் நடத்தவேண்டியிருப்பதோடு, உயர்நீதி மன்றம் வரை சென்று பார்க்கவேண்டிய அவசியத்திலும் இருக்கிறோம். "தேனிக் கலவர வழக்கில்" கிடைக்கும் வெற்றி, கழகத்திற்கு அசைக்க முடியாத ஆக்கத்தைத் தருவதாகும் அந்த 'நல்ல தீர்ப்பு' அவ்வளவு எளிதிலே கிடைக்கக் கூடியதல்ல, பெரும் பொருட்செலவின் பேரிலேயே கிட்டக்கூடியது என்பதைக் கழகத் தோழர்கள் அனைவரும் நன்கு உணர்வர்.

ஆகவே, பெரியோர்களே! தோழர்களே! ஆர்வமிக்க இளைஞர்களே! நீங்கள் வரையாது வழங்கும் பொருளுதவியின் பேரில்தான், வழக்கின் வெற்றி இருக்கிறது. எங்கே, உங்கள் முயற்சியைக் காட்டி, வெற்றிக் கனியை ஊட்டுங்கள்!

வழக்கின் வரவு—செலவு பற்றிய முழுப் பொறுப்பையும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பாளராகத் தோழர் இரா. நெடுஞ்செழியனை விட்டிருக்கிறேன்.

எனவே, தோழர்களனைவரும் தனிப்பட்டோரிடம் வசூல் செய்தும், பொதுக்கூட்டங்களில் உண்டியல் குலுக்கியும், நாடகங்களில் கிடைப்பதில் ஒரு பகுதியை நிதியாக ஒதுக்கியும், "தேனிக் கலவர வழக்கு நிதி" என்று குறிப்பிட்டு,

இரா. நெடுஞ்செழியன்
பொறுப்பாளர்
தேனிக் கலவர வழக்கு நிதி
12-வைத்தியநாதமுதலித் தெரு,
சேத்துப்பட்டு, சென்னை 10.

என்ற முகவரிக்கு உடனடியாக அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

சி. என். அண்ணாதுரை
15—4—52



ஐவரே, வரும் தேர்தலில், வோட்டர்கள். நூற்றுக்கு ஐந்து!

1949ல் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி பார்த்தால், 1¾ லட்சம் மக்களுக்கு, வாக்குரிமை அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றோ! 8500 பேருக்குத்தான்!!

* * *

இலங்கையில் வாழும் லட்சம் மக்களில் 8500 பேருக்கு மட்டுமே — வாக்களிக்கும் உரிமை. இந்த கோரத்தை எவர்தான் சகிக்கமுடியும்? மக்கள் இருக்கிறார்கள் உயிரோடு—உழைத்துக்கொண்டேயிருக்கிறார்கள் தீவுக்காக. ஆனால் அவர்கள் அத்துணை பேருக்கும், வோட்டுரிமை இல்லை. தம்மை, இலங்கையில் குடிமகன், எனப்பதிவு செய்துகொண்டவர்களுக்கும் இல்லை.

ஜனநாயகம் கேலி செய்யப்படும் இந்த நிலையை, இந்தியத் தூதர் கேசவமேனன், இலங்கை சர்க்காருக்குத் தெரிவித்தாராம். அதற்கு டட்லீ சேனநாயகா தெரிவித்த பதில் 'என் செய்வது?' என்பதாகும். பார்லிமெண்டு கலைக்கப்பட்டு விட்டதால் தம்மால் எதுவும் செய்வதற்கில்லையென்று தெரிவித்திருக்கிறார்—அதாவது மறுத்துவிட்டார் மறுத்தபோது, "அடுத்த தேர்தலின்போது தங்கள் கோரிக்கையை கவனிக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தாராம். அடுத்த தேர்தல் எப்போது? ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு! இந்த அன்புரை, கண்துடைப்பே அன்றி, வேறல்ல.

வாழும் மக்களுக்கு இந்த அடிப்படை உரிமையைத் தரமறுக்கிறது, இலங்கை சர்க்கார். தமக்காக உழைக்கும் மக்களை உதறித்தள்ளுகிறது—இதுபோன்ற இக்கட்டுகளால் வாழச்சென்ற நமது சகோதரர்கள் பலமுறை வேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அப்போதெல்லாம் நாம் துடித்தோம்! நமது சென்னை சட்டசபையிலும் பலர் தீர்மானம் நிறைவேற்றினார்கள்!

ஆனால் எதுவும் செய்யமுடியவில்லை—அதிகாரம் டில்லிவசம் இருப்பதால். இன்று நிலை மோசமாகி இருக்கிறது. இதற்கான பெரும் பங்கு டில்லியைத்தான் சாரும். வெகுதூரத்தே இருக்கும் டில்லி, இலங்கைவாழ் நம்மவர்பற்றி, அக்கறை காட்டவில்லை — முன்பு. இப்போது அடிப்படை உரிமையை இழந்து நிற்கிறார்கள் அவர்கள். ஜனநாயகத்தைக் கேலி செய்கிறது, அருகே இருக்கும் இலங்கை சர்க்கார். விழிகளில் கண்ணீரோடு நிற்கின்றனர் நமது சகோதரர்கள்! இந்த வேதனை, நல்லதல்ல. மக்களுரிமையைத் தடுப்பது, பலன் தராது. இந்தப்பாதையில் செல்ல வேண்டாம் என டட்லீ சர்க்காருக்கு அன்போடு கூறிக்கொள்ள விரும்புகிறோம் — வழிவகைகளைச் செய்து நமது நல்லெண்ணத்தைக் கருகாமலிருக்கச் செய்து கொள்ளட்டும்.

—————

## "பகுத்தறிவு"

நமது கழக முன்னணி வீரர் தோழர் ப. கண்ணன் அவர்களால் சேலம்—சலகண்டாபுரத்திலிருந்து தமிழுலகுக்குத் தரப்படும் "பகுத்தறிவு" மாத வெளியீட்டின் சித்திரை இதழ் காணப்பெற்றோம். சிந்தைகளித்தோம். புதிய முறைகளோடு, அருமையான கருத்துரைகள் தாங்கி வெளிவரும் பகுத்தறிவின் பணியைப் பாராட்டுகிறோம்—வாழ்த்துகிறோம். விலை 4 அணாதான் 'பகுத்தறிவு' சலகண்டபுரம், சேலம் Dt., என்பதே அதன் முகவரி. அறிவுலகச் செல்வர்கள்பெற்று மகிழவேண்டிய மாத வெளியீடு, இது.

## மஜீத்குடும்ப பாதுகாப்பு நிதி

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நெல்லிக்குப்பம் பகுதியில் காங்கிரசுக்கு எதிராக வேலைசெய்ததற்காக, அநியாயமாகக் கொலையுண்ட, நம் கழக வீரன் மஜீத் அவர்களின் குடும்ப பாதுகாப்பிற்காக, நன்கொடையனுப்பியுள்ள தோழர்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது. மேலும் நிதி தரும் தோழர்கள், காஞ்சிபுரம், 'திராவிட நாடு' நிலைய முகவரிக்கே அனுப்பும்படி வேண்டிக் கொள்கிறோம்.

| | |
|---|---|
| திருச்சி எம். எஸ்- மணி மூலம் | 15—0—0 |
| எம். ராமய்யன், கிரப்பாளையம் | 1—0—0 |
| கே. தங்கமுத்து, வள்ளிப்பாளையம் | 1—0—0 |
| கே. பி. ஆறுமுகம், கள்ளிபாளையம் | 2—0—0 |
| கே. மாரியப்பன், நீலகிரி | 2—0—0 |
| இளங்கோ இளைஞர் மன்றம், அமிஞ்சிக்கரை | 5—0—0 |
| டி. மயில்வாகனம், கொழும்பு | 2—0—0 |
| கே. டேனியல், மதுரை | 1—0—0 |
| டி. டி. ஆசிர்வாதம், ஜபல்பூர் | 6—0—0 |
| முத்து, வைத்தியர். கிருட்டினன்—டெல்லி | 7—0—0 |
| ரூ. | 42—0—0 |

## தினத்தாள் நன்கொடை

சென்னையிலிருந்து, வெளிவரவிருக்கும் கழக தினத்தாள் நிதியாக, நாட்டில் நடைபெறும், தி. மு. கழக பொதுக்கூட்டம் ஒவ்வொன்றின் சார்பிலும், ரூ. 5–0–0 அனுப்பவேண்டும் என்று ஈரோடு பொதுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டதை யொட்டி, கூட்டம் நடத்தும் தோழர்கள், தவறாது அனுப்பி வருகிறார்கள். இனி நடைபெறும் கூட்டங்களின் சார்பிலும், கழகத் தோழர்கள், தினசரிக்குரிய நன்கொடைத் தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| சென்றவாரம்வரை | ரூ. 25—0—0 |
| நெல்லிக்குப்பம், தியாகம்மாள் மூலம் | 5—0—0 |
| மரக்காணம் | 5—0—0 |
| வெ. பெரம்பூர் | 5—0—0 |
| | ரூ. 40—0—0 |

(கடந்தவாரம் வெங்கடசமுத்திரம் வரவு ரூ. 5 என்பதை மோலையானூர் வரவு என்று திருத்திக் கொள்ளவும்)

## வருந்துகிறோம்

நமது பணிமனையைச் சேர்ந்த தோழர் வசந்தனின் அருமைத் தாயார் 15–4–52-ந் தேதியன்று, நோய் வாய்ப்பட்டிருந்து, இயற்கை எய்தினார்கள். அவரது பிரிவு, வசந்தனுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும், ஆற்றொணாத் துயரைத் தருவதாகும். தாயை இழந்து நிற்கும் வசந்தனுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிடநாடு

காஞ்சி] 20—4—52 [ஞாயிறு

# பரிதாபம்

☆

பரிதாபத்தோடு கூறுகிறார்கள் வெளிநாடுகளிலிருந்து வரும், எவரும்.

அமெரிக்காவின் தூதர்கள் பல இடங்களையும் சுற்றிப்பார்வையிட்டுச்சென்று பக்கம் பக்கமாக, எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள் —பரிதாபத்தோடு.

சின்னஞ் சிறு நாடு ஜப்பான், கூறுகிறது—'எமது உதவி வேண்டுமா' என்று.

எங்குபோனாலும் எப்போது பார்த்தாலும், இந்தப் பரிதாபத்தைக் குறித்தே பேசுகிறார்கள் — இந்திய மந்திரிகளும் அவர்தம் தலைவர் பண்டித நேருவும்.

'பெரியநாடு இது. ஆனால் பின் தங்கிக்கிடக்கிறது' என்று துவங்கி, 'நாடு வளம்பெற, சிக்கல்கள் தீர, தொழில் வளர்ச்சிவேண்டும்' என்று எல்லோரும் கூறுகிறார்கள்.

அமெரிக்கா பணமாகத் தருகிறேன் என்கிறது! 'ஆகா — ஏற்றுக் கொள்கிறோம். யார் வேண்டுமானாலும் வந்து பணத்தைப்போடுங்கள். பாதுகாப்பு தருகிறோம்' என்று, பல்லிளித்துப் பாடுகிறது, டில்லி சர்க்கார்.

அண்மையில் நடந்து முடிந்த மாஸ்கோ மாநாட்டிலும், 'இந்தியாவுக்கு ஏராளமான ஆலைகள்தேவை' என்பதாக, வால்சந்த் ஹீராசந்த் என்கிற பெரிய முதலாளி தெரிவித்திருக்கிறார். ரஷ்யாவும், இந்தக் கோரிக்கையை 'பரிதாபத்தோடு' கவனித்ததாகப் பத்திரிகைகளில் பார்க்கிறோம்.

வளர்ந்துள்ள நாடுகள் அனைத்தும் 'வறுமை'யால் வாடும், இந்த உபகண்டத்தை, பரிதாபமாகவே பார்க்கின்றன.

இன்று இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள முக்கிய தேவைகள் (1) உணவு (2) ஆலைகள் என்பதாக எல்லா அறிஞரும் கூறுகிறார்கள்—வலியுறுத்துகிறார்கள்.

உணவுப்பிரச்சினை உடனடித் தேவை. தொழில் ஆலைகள், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும்—ஏழ்மையைப் போக்கும்.

ஆலைகள் அவசியம்! — இதை மறுப்பார் இல்லை. ஆலைகள் வளர்ந்தால்தான், வறுமை தொலையமுடியும்—வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியவுமாகும். செல்வம்கொழிக்கும்.

இன்றைய பொருளாதாரயுகமே, ஆலைகளின் உற்பத்தியில் தான் அமைந்திருக்கிறது. ஆகவே, ஆலைகளுக்கு, இவ்வளவு முக்கியத்துவம் தந்து பேசப்படுகிறது.

ஆலைகளின் தேவையை எவரும் மறுக்கார் — 'கைராட்டை' சுற்றச் சொல்வோர்கூட எத்தனையோ ஆலைகளுக்கு அதிபதியாக இருப்போர் தாம். ஆலைகள், அவ்வளவு முக்கியமானவையாயிருக்கின்றன.

பொருளுற்பத்திகள் பரவுவது மட்டுமின்றி, மனித வாழ்க்கைத் தரம் உயரவும், ஏழ்மை அகலவும், ஆலைகள் ஓடுவது அவசியமாகும்.

இத்தகைய ஆலைகள் இந்திய உபகண்டத்தில் பெருகவேண்டுமெனக் கூறப்படுகிறது — நாமும் 'ஆம்!' என்றுதான் கூறுகிறோம், வலியுறுத்துகிறோம்.

ஆலைகள் பெருக வேண்டுமென்றால் — இந்திய உபகண்டமெங்கும் பலப்பல இடங்களில் புதிது புதிதான 'மில்கள்' ஓடவேண்டும் என்பதாகும்.

இப்போது இருப்பதைவிட இன்னும் பலமடங்கு, விதவிதமான, இயந்திரங்கள் இயங்கவேண்டும் — இந்த ஆசையை எவரும் மறுக்க முடியாது.

இப்போது இருப்பது! மிகமிகக் கொஞ்சம், உலகத்தார் கூற்றுப்படி. இப்போது இருப்பது, போதாது—வெளிநாட்டினர் கூறுகிறார்கள் இவ்விதம். இப்போது இருப்பது, தேவையைப்பூர்த்தி செய்யாது — நமக்கே தெரிகிறது இந்தஉண்மை.

இப்போது இருப்பது! இதைசிறிது நாம் சிந்திக்கவேண்டும் இதுபோதாது என்று கூறப்படுவதைப்பற்றியல்ல; இப்போது இருப்பது; எங்கெங்கே எப்படியெப்படி இருக்கிற என்பதைப்பற்றி.

இந்திய உபகண்டத்தில் ஆலைகளே இல்லையென்று கூறிடமுடியாது. இருக்கிறது! அவை எப்படி, எங்கே இருக்கின்றன.

தொழில் வளர்ச்சியே துரைத்தனத்தின் முதுகெலும்பு ஒரு'மில்' ஏற்பட்டால், அந்த வட்டாரத்தில் வேலைத் திண்டாட்டம் நீங்கும் ஏழ்மை ஒழியும்! எல்லோரும் நலம் பெற வழிகிடைக்கும்.

இந்தநிலை நாடெங்கும் இல்லை — எனினும் ஒருசில இடங்களிலேமட்டும் இருக்கிறது, ஆலைகள் அங்கு மட்டும் ஓடிக்கொண்டிருக்கின்றன— அந்த ஆலைகள் தயாரிக்கும்பொருள்களைநம்பியே முப்பதுகோடி மக்களும் இருக்கவேண்டியிருக்கிறது.

இந்திய உபகண்டம் மிக மிகப் பெரியது—அங்கே, ஒரு சில இடங்களில்மட்டுமே "ஆலைவளர்ச்சி"— உலகத்தோடு ஒப்பிடும்போது, அதிகமாக இல்லையென்றாலும் மற்றப்பகுதிகளை வைத்துப்பார்க்கும் போது அதிகமாக இருக்கிறது.

## சி. என். ஏ. உடல் நிலை

ஈரோடு பொதுக்குழுவிற்குச் சென்றிருந்த பொதுச் செயலாளர் சி. என். ஏ-வுக்கு லேசான சிறு வலி, நெஞ்சில் இருந்தபடியே இருப்பதால், மதுரையில் எக்ஸ்ட்ரே எடுத்துப் பார்த்ததில் நுண்ணிய வீக்கம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று தெரிந்து, சென்னையில் மீண்டும் நாடித்துடிப்பின் அசைவுப் பரிசோதனை செய்யப்பட்டு ஓயாத உழைப்பின் காரணமாக ஏற்பட்டதே இந்தவலி என்றும், வேறு பயப்படத்தக்கது எதுவுமில்லை யென்றும் குறைந்தது மூன்றுமாதகாலம் நல்ல ஓய்வு கிடைத்தால் போதும் என்றும் தெரிவித்து, தக்க மருத்துவமும் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே தோழர்கள் இன்னும் தொடர்ந்து இரண்டு மாதங்கள் வரை கூட்டங்கள், விழாக்கள் என்று அழைப்புகள் விடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.



இப்போது இருக்கும் ஆலைகளில் அதிகம் இருக்கும் பிரதேசம் எது? கூசாமல் பதில் கூறமுடியும், "வடக்கு" என்று. 'துவேஷி' என்று பாய்வோருள்பட எவரும் இதை மறுக்கமுடியாது. தென்னாட்டைவிட, வடநாடு தொழிலுற்பத்தியில் சிறந்து விளங்குகிறது— வடநாடு 'பணத்தோட்டம்!' தென்னாடு பிணக்காடு!!

இந்த உண்மையை நாம் சுட்டிக் காட்டும்போது, தேசிய நண்பர்கள் சீறத்தவறுதில்லை கோபிக்க மறப்பதில்லை.

அனந்தராமகிருஷ்ணன் சென்னை நகரத்தின் 'ஷரீப்'—சிறந்த தொழிலறிஞர் என்று 'அந்த' வட்டாரத்தின் அர்ச்சனைக்குப் பிரியமானவர். அவர் சொல்கிறார்:-

"கடந்த கால் நூற்றாண்டில் தொழில்வளர்ச்சி, சிலஇடங்களிலே மட்டுமே குவிந்தது. தென்னாட்டைவிட பம்பாய் கல்கத்தா போன்ற இடங்களே வளர்ந்திருக்கின்றன."

சில இடத்தில் மட்டும் குவிந்தது! சொல்கிறார் அவர். "வேற்றுமைகளில்லாமல் எல்லா இடங்களிலும் சரிசமமாக தொழில் வளர்ச்சியிருந்தால் தென்னிந்தியா தொல்லைப்படவேண்டியதே இல்லை. ஏனெனில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தெற்கிலிருக்கும் ஏராளமான இளைஞர்கள் வேலை தேடி வெளியில் செல்லுமாறு ஏற்படுகிறது" இவ்விதம், பேசியிருக்கிறார், சென்னையில் ஏப் 13ந் தேதியன்று—இந்த வார்த்தைகளைக்கூறிக்கொண்டிருந்தபோது, 'இதென்னடா! நாம் பேசுவது திராவிடநாடு கேட்போர் பேசுவது போலிருக்கிறதே' என்ற சந்தேகம், அவருக்கே வந்துவிட்டது போலும்.

"வடக்குக்கும் தெற்குக்குமிடையே தாரதம்மியம் இருக்கவேண்டுமென்று கூறுகிறவனல்ல நான்" என்று, தெரிவித்துவிட்டு, 'தெற்கிலே சிறந்த இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களது சக்தியெல்லாம் வீணாகிறது—இந்தியா முழுமையும் அலைகிறார்கள் வேலைதேடி. இங்கே ஆலைகளிருந்தால் இப்படி ஏற்படுமா? நமது சக்தி வீணாகத்தான் நேருமா! உழைக்க மனிதர்கள் இருக்கிறார்கள் — ஆலைகளுக்கான வசதிகளும் உள்ளன. ஆனால் ஆலைகள்தான் இல்லை!" என்பதாகக் கூறியிருக்கிறார்.

ஆலைகள் தெற்கே இல்லை:—இந்த உண்மையை மறுக்கமுடியாது. அதனால்தான், நாட்டையே பணத்தால் நிரப்பக்கூடிய டாடாவும், பிர்லாவும், டால்மியாவும் வடக்கே வளர்ந்து கிடக்கின்றனர்—சாதாரணமாக அல்ல, தென்னாட்டையே வளைக்கக்கூடிய அளவில்.

முதலையும் மீனும்! வடக்கும் தெற்கும்!! — இந்த நிலைமையிலிருந்து, தெற்கு மீள்வது எவ்விதம். எப்படி இங்கே, ஆலை, வளர்ச்சி, ஏற்படுமாறு செய்வது. புதிதாக ஆலைகள்ஏற்படுத்துகிறோம் வெளி மூலதனத்தால் — ஆனால் அந்த ஆலைகள் வளர எத்தனை ஆண்டுகள் ஆகும்? வடநாட்டோடு போட்டியிட எவ்வளவு காலம் பிடிக்கும்! மீன் முதலையாவது எளிதா? முதலை மீனை விழுங்கி விடுமே, வளர்வதற்குள்!

இதை எண்ணும்போதுதான், நம்மை எதிர்ப்போருக்குத் தெளிவு ஏற்படமுடியும்.

ஆலைகள் இங்கே புதிதாகஅமைக்கப்படவேண்டும் — வடக்கே அப்படியல்ல.

வடக்கே, இனி ஆலைகள் தோன்றுவது, லாபத்துக்குமேல் லாபம்—வளர்ச்சிக்குமேல் வளர்ச்சி.

தெற்கே ஆலைகள் ஏற்படுவது—ஏற்பட்டால்?—புதிதாக.

புதிய ஆலை பழைய ஆலையோடு போட்டியிடுவது சாமான்யமா!

இந்த கேடு களையப்படவேண்டுமானால், 'வடக்கிலிருந்து வரும் ஆலைப்பொருள்களைக்கட்டுப்படுத்தி தெற்கில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு பாதுகாப்பு தரவேண்டும்.

பாதுகாப்பு தரும் அதிகாரம், டில்லியின் கையிலிருக்கிறது. டில்லியின்மூலவர்களோ வடநாட்டு பணமுதலையின் 'பரிவாரத்தினர்.' இந்நிலையில் இது சாத்தியமாகுமா ஆகும்? ஆகாது ஆகாது! நாம், பிற்பட்ட பிரதேசமாகத்தான் — என்றும் இருக்க நேரிடும்.

உலகில் இந்தியா பிற்பட்ட நாடு — இந்தியாவில் தெற்கு பிற்பட்ட பிரதேசம்.

இந்த நிலையைப் போக்க நாம் கூறும் முடிவுதான், 'திராவிடநாடு' நம்மை நாமே ஆள்வது — நமது தேவைகளை நாமே கவனித்துக் கொள்ளும் அதிகாரத்தோடு இருப்பது.

இதைக்கண்டிக்கின்றனரே, அவர் தம் சிந்தனை வேலை செய்தால், விளங்கும்— தென்னாட்டின் பரிதாபம். அவரும், விடுதலை பெறும்படை நோக்கி, உடனே தயாராவர்.

☆

# சென்னையில் தலைமை நிலையம்

## 25—4—52-லிருந்து பணியாற்றும்

மூன்று மாதங்களாக, தி. மு. க. தலைமைநிலைய அலுவல்கள் எல்லாம் காஞ்சிபுரத்திலிருந்து கவனிக்கப்பட்டு வந்தன. இனி 25—4—52-லிருந்து சென்னை, ராயபுரம், 'அறிவகம்' இல்லத்திலிருந்தே, தலைமை நிலையம் இயங்க ஏற்பாடாகிவிட்டது. ஈரோட்டில் நடந்த பொதுக்குழு தீர்மானப்படி, தலைமைநிலையப் பணிகளைக் கவனிக்க அமைக்கப்பட்ட மூவர் கொண்ட குழு, தலைமை நிலைய நிர்வாகக் காரியங்கள் செவ்வனே நடைபெற முயற்சி எடுத்துக்கொள்ளும் தோழர் ஈ வே கி சம்பத் அவர்கள், இப்பணிகளைத் துரிதப்படுத்தி நடத்த 16—4—52-லிருந்து சென்னையிலேயே தங்கியுள்ளார். இனி சி. என். ஏ. வின் சொந்தப் பார்வைக்குரிய மிக முக்கிய கடிதங்கள் தவிர, மற்ற எல்லா கடிதங்கள், மணியார்டர்கள் முதலியவை பொறுப்பாளர், தி மு. கழக தலைமை நிலையம், 24, சூரியநாராயண செட்டித்தெரு, ராயபுரம், சென்னை என்ற முகவரிக்கு எழுத வேண்டுகிறோம்.




"அண்ணா!"

"தம்பி"

"ராமபிரான் என்று கூறுகிறீர்களே, அவன் யார் அண்ணா?"

"ஆரிய வேந்தன் என்று சரித்திரம் கூறுகிறது தம்பி"

"அவன் தந்தை தசரதனைப்பற்றிச் சிறிது கூறுங்கள் அண்ணா!"

"நீ ராமாயணம் படித்ததில்லையோ......"

"ஓ! படிச்சிருக்கேன். இருந்தாலும் நீங்கள் சொல்லுங்களண்ணா!"

"தசரதன் அயோத்தி வேந்தன். மூன்று பட்டமகிஷிகள் அவனுக்கு. அறுபதினாயிரம் பேரை அணைந்து மகிழ்ந்தானாம்."

"அதுமட்டும்தானா, அண்ணா?"

"பெண்புத்தி கேட்பவன்—முன் புத்தியில்லாதவன் என்றும் புராணக்கதைகள் கூறுகின்றன."

"சரி — அவனுடைய சம்மந்தி ஜனகன் எப்படி அண்ணா?"

"ஊர் பற்றி எரியும்போது வேத பாராயணம் செய்தாராம் — அந்த ராஜரிஷி"

"அப்படியா?"

"ஆமாம்!"

"ராமன் ஆரியகுலமகிபன். தசரதன் அவசரபுத்தியுள்ளவன். ஜனகன், மக்களைக் கவனியாத மன்னன் அப்படித்தானே?"

"ஆமாம்! புராணங்கள் இவ்விதம் தான் சொல்லுகின்றன."

"அண்ணா! இந்த மூன்றுபேருடைய குணதிசயங்களையும்கொண்டு ஒரு மனுஷன் இருந்தால் அந்த ஆசாமியை என்னவென்று சொல்வீர்கள்"

"சொல்வதென்ன! எவரும் ஏசத்தான் செய்வர்—"

"அதாவது, புகழுக்குப் பாத்திரமான குணங்களல்ல அவை, அப்படித்தானே?"

"ஆமாம்!"

"நமது முதலமைச்சர் ஆச்சாரியார் இத்திருக் கல்யாணகுணங்கள் உள்ளவராம்"

"சே! நீ எப்பொழுதும் குறும்பன். கூறியது யார் அப்படி?"

"நானல்ல அண்ணா! செங்கல்வராயன், சென்னை கடற்கரைக் கூட்டத்தில்"

"என்ன சொன்னார்?"

"தசரதரும் ஜனகரும் ஒருரு வெடுத்துவந்தவர் ராஜாஜி"

* * *

[அக்கிரகாரத்தில்]

"ஓய்! பார்த்தீரேல்லீயோ—நம்மளவர்னா நம்மளவர்தான் ஓய்!! பிராமண புத்திதீட்சண்யம் போயிடுமோ — பொதுக் கூட்டத்திலே பேச ஆரம்பிச்சதும் எப்படித் துவங்கினார் கவனித்தீரோ?"

"கவனிச்சேன்— சாங்கோபாங்கமாக வந்தார்—அமர்ந்தார்—"

"அதையல்ல ஓய்! அவர்பேச ஆரம்பிச்சாரே அதைக் கேட்கிறேன்......"

"மழைவேணும்னா கடவுளைக் கும்பிடணும், அப்படின்னாரே—அதைச் சொல்றீரா?"

"அதையல்ல ஓய்! அவர் பேச ஆரம்பிக்கறப்போ......"

"ஞாபகம் வர்றது 'ஆசீர்வாதம்' அப்படின்னார்"

"யாரைப்பார்த்து?"

"மகாஜனங்களைப் பார்த்து. இதிலென்னஓய் இருக்கிறது"

"உம்ம மூளையும் அந்த விருதுநகரானுட்டமே ஆயிட்டுதுங்காணும் —சூட்சும புத்தியே. தூரபோயிடுத்தே உமக்கு."

"நேக்கு எல்லாம் சரியாத்தான் இருக்கு — விஷயத்தைச் சொல்லும்"

"கூட்டத்திலே பிரசங்கம் செய்யறவா, ஆரம்பிக்கிறப்ப என்ன சொல்லுவா?"

"வணக்கம்... அப்படீன்னு ஆரம்பிப்பா!"

"ஓய்! அது. அவன்க ஐயா. காங்கிரஸ்காரர் எப்படி துவங்குவா?"

"'நமஸ்காரம்' அல்லது 'ஜேஹிந்த்' இல்லேன்னா 'வந்தேமாதரம்'"

"இதுதானே வழக்கம்!"

"ஆமாம்!"

"ஆனால் எப்படி ஆரம்பிச்சார் நம்மளவர்"

"புரியுது ஓய் புரியுது!"

"புரிஞ்சண்டு வாழ்ந்தீர்... 'ஆசீர்வாதம்'னு, எல்லோருக்கும் பெரியவர்தானே சொல்வா."

அதனால்தான் அவரும் சொன்னார்!"

"ஏன் சொன்னார்?"

"இதென்னய்யா! அவர் பெரியவர்"

"இருக்கலாம்யா — ஏன், 'ஆசீர்வாதம்'னு ஆரம்பிச்சார்"

'மற்றவர்களைவிட உயர்ந்தவர்ங்கிறதை தெரிவிக்க......"

"சூட்சமம் புரியுதோன்னோன்!"

"புரியுது ஓய் புரியுது! சாணக்கியர்னா சாமான்யமா, என்ன? ஒரே சொல்—உயர்ந்துட்டாரே."

"தந்திரம்னு இதுக்குத்தான்யா, பேர்—இதுக்குத்தான்"

* * *

[தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆபீஸ்]

"பிரதர்! பார்த்தீங்களா சி. ஆர். பேசினதை"

"பார்க்கிறதா? கேட்டேன் பிரதர் கேட்டேன்!"

## கழகத் தோழர்களுக்கு

கழகச் சொற்பொழிவாளர்களுக்குப் பொதுக் கூட்டங்களிலும் பிற நிகழ்ச்சிகளிலும் மாலை போடும் கிளைக்கழகத் தோழர்கள், இனி மாலைபோடாமல், மாலைக்குரிய தொகையையோ அல்லது முடிந்த அளவு தொகையையோ "தேனிக் கலவர வழக்கு நிதிக்கு" என்று சொல்லிக் கொடுத்தால் பயன் தரும் செயலாகும். அப்படிச் சேரும் தொகையை உடனுக்குடன் அனுப்பிவைக்கும்படி கூட்டங் கூட்டும் கிளைக்கழகச் செயலாளர்களையும். சொற்பொழிவாளர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்
பொறுப்பாளன்
தேனிக்கலவரவழக்குநிதி



"தென்னாட்டு காங்கிரஸ் சாக்கடையாமே!"

"ஆமாம் பிரதர்! என்ன அக்கிரமம் பார்த்தீங்களா?"

"மனுஷன் என்னவெல்லாமோ பேசறாரே — இடங் கொடுத்ததும் மடத்தைப் பிடுங்கறதைப்போல"

"என்ன செய்றது!"

"என்மனம் பதறிச்சு பிரதர் — எவ்வளவு பாடுபட்டோம்! பலனில்லையே......"

"இங்குமட்டுமா. எங்கும்தான் இல்லே. இந்திய நாடு முழுமையும் தான் இல்லே. இது தெரியாத ஆசாமியா சி. ஆர்."

"நல்லாத் தெரிந்தவர்"

"பின்னே ஏன் தென்னாட்டுகாங்கிரசைமட்டும் சாக்கடைன்னாரு?"

"திருச்செங்கோட்டு சங்கதியாலா?—வருஷம் ரொம்ப ஆச்சே அது நடந்து"

"ஆனா? மனக்காயம் ஆறிடுமோ! அதுதான், பேசறார், இப்போ"

"ஒரேயடியா, சாக்கடைன்னுட்டாரே......"

"வயிறு எரியுது பிரதர்! நம்ப எத்தனைபேர் கஷ்டப்பட்டோம். காமராஜ் அண்ணாச்சி எவ்வளவு சுத்தினாரு, சுப்பையாவும் உபயதுல்லாவும் எங்கெங்கே பேசினாங்க, சிவஞானம் 'டிவிஷன்' வேறே ஊரூரா ஓடிச்சு, எப்படியெப்படி பாடுபட்டோம்! இவர், ஒய்யாரமா உட்கார்ந்துண்டிருந்துட்டு இப்ப வந்து சொல்றாரே சாக்கடைன்னு"

"மானம் போவுது பிரதர்! மனுஷன் பழிவாங்க ஆரம்பிச்சுட்டார்—எங்கே காமராஜ் அண்ணாச்சி!"

"அதோ மூலையில் உட்கார்ந்திருக்கே"

* * *

[நமது அலுவலகத்தில்]

ஆபீஸ்பையன்:- சார்! சாக்கடையில் எதெது சார் கிடக்கும்?

ப:- ஏம்பா!

ஆ. பை:- சொல்லுங்கள் சார்.

ப:- எருமை, பன்றி,......

ஆ. பை:- போதும் போதும் சார்!

ப:- சாக்கடை விசாரணை எதுக்கப்பா உனக்கு?

ஆ. பை:- காங்கிரசைசாக்கடைன்னாரேமே ஆச்சாரியார்...

ப:- ஓகோ!!!

ஆ. பை:- இன்னொரு சந்தேகம் சார். காங்கிரஸ் எம். எல். ஏக்கள் மொத்தம் எத்தனை பேர்?

ப:- 152.

ஆ. பை:- காங்கிரசிலிருந்து வந்தவங்கதானே சார் இவங்க?

ப:- ஆமாம்! அதிலென்ன ஐயம் உனக்கு?

ஆ. பை:- கோபிச்சுக்காதீங்க சார்! சாக்கடையிலிருந்து எதெது சார் உற்பத்தியாகும்?

ப:- கொசு, ஈ, புழு,

ஆ. பை:- இப்பவந்திருக்கிற எம். எல். ஏக்களெல்லாம் இந்த ரகம் தான். இல்லீங்களா?

* * *

[சென்னை செகரட்டேரியட்]

"நம்மையெல்லாம் மனித இனமாகவே மதிக்கலியே-இந்த சி. ராசகோபாலாச்சாரி"

"எப்படீங்க?"

"எப்படியா! நாம்எல்லாம் எங்கே வேலைசெய்கிறோம்?"

"செகரட்டேரியட்டில்!"

"செகரட்டேரியட்டில் தானே?"

"ஆமாம்!"

"இதுதானே சென்னை நிர்வாக இயந்திரம் இருக்கும் இடம்"

"ஆமாம்!"

"இதை இயக்குவது நாம்தானே"

"ஆமாம்!"

"சரி. காட்டில் என்ன இருக்கும்"

"இதென்ன மிஸ்டர் கேள்வி! மிருகங்கள் இருக்கும்"

"செக்ரடரியேட்டை காடுஎன்று சொல்கிறாரப்பா — ராஜகோபாலாச்சாரி."

"அப்படீயா? என்ன மமதை மிஸ்டர்!"

"என்ன செய்றது! ஊம்..."

## ஒரே தறியும் ஒட்டுத் துணியும்

"நாங்கள் 152 பேரல்ல —155 பேர் ஆனால் இது ஒரு தறியில் நெய்த துணி. ஆனால் ஐக்கிய ஜனநாயக முன்னணியோ பல தறியில் நெய்து ஒட்டுப் போட்டு நெய்த துணி"

என்று, சென்னை கடற்கரையில் பேசிய காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டாராம். காங்கிரஸ் சட்ட சபைக் கட்சியைத் தான், 'ஒரு தறியில் நெய்த துணி' என்று உபமானம் தந்து உரைத்திருக்கிறார்—பாரத புத்ரர். ஒரே தறி! ஒரே துணி!! பாரத மாதாவின் மைந்தர்கள் தயாரித்தது. பார்க்கிறோமல்லவா, நீல நிறப் புடவை, நீல நிற ஜாக்கெட் என்று இரண்டும் ஒரே விதமாக அணிந்துலவுவோரை!! அந்த அழகு, தந்திருக்கிறோம், பாரத மாதாவுக்கு என, மைந்தர் புகன்றிருக்கிறார்—போற்றக் கூடியது தான் — உண்மையாகயிருந்தால்! ஆனால், பாபம், அவர்கள் மாதாவுக்கு போர்த்தியிருக்கும் துணி எப்படியிருக்கிறது. தெரியுமோ? ஒரே தறியில் நெய்ததாம்! ஆனால் 'மாணிக்கவேல்' தேவைப்பட்டிருக்கிறது; சில பாகங்களை மறைக்க!! இன்னும் பல 'கஜம்' தேடப்படுகிறது—பல இடங்களை மறைக்க! ஒரே தறியில் நெய்ததுதான்— ஆனால் உடம்பெல்லாம் சுற்றக் கூட போதவில்லை—மாதா பரதவிக்கிறாள்! மைந்தர்கள் அலைகிறார்கள், எங்கெங்கே எது எது கிடைக்குமென்று. எனினும் பெருமையோடு 'சிலம்பம்' ஆடியிருக்கிறார் வார்த்தைகள் மூலம்.

ஐக்ய ஜனநாயக முன்னணி பல தறிகளில் நெய்யப்பட்டது! ஆனால் பாதி உடலோடு நின்றுவிடுவதில்லை — காலுக்குப் போதாமல் மேலுடம்பை மறைக்காமல் இடுப்புக்கு மேல் இழுத்துக்கொண்டு இல்லை, அது. உடம்பை மறைப்பதாகயிருக்கிறது! மானத்தைக் காக்குமளவில் இருக்கிறது!! இதை மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார், அவர். பாவம்!

2-ம் பக்கத் தொடர்ச்சி

வோம். துணியும் பயம் ஏன்? பதவி பெரிது தாமஸ்!''

பதவியாசைக்குப் பலியானன், தாமஸ் வெண்ட்வொர்த். தான், ஏந்திய கொள்கையைத் துறந்தான். தன்னை நம்பிய மக்களை மறந்தான். மக்கள் மத்தியில் பவனிவந்தபோது அவர்களிடம் தான் தந்த உறுதி மொழிகளை, காற்றிலே பறக்கவிட்டான். பதவி ஏறினன்! விரோதியெனக் கர்ஜித்த அரசனுக்குப் பக்கத்திலே நின்றான்!

''துரோகி! துரோகி!!''

''சுயநலக்காரன், சூதுமதியன்!''

''அயோக்கியன் அற்பன்!''

தாமஸ் வெண்ட்வொர்த்மீது, இத்தகைய அனல்குழம்பை வீசிற்று—நாடு. அவனோடு மக்களுக்காகப் பணிபுரிந்தோரெல்லாம், திகைத்தனர் 'சீச்சி! என்ன கேவலம் இது?' என்று பேசினர். தாமஸோ தெம்மாங்கு பாடினன்! சிரிப்பு மலர்ந்து கொண்டிருக்குமாம் அவன் முகத்தில், மக்கள் மத்தியில் உலவிய போது. இப்போது சிரிப்பு போயிற்று — சீறும் புலியானன். வீரம் ததும்புமாம் முகத்தில்முன்பு —இப்போது வெறி தாண்டவமாடலாயிற்று. பதவியாசைக்குப் பலியான அவனைப் பார்த்து பலர் கேட்டனர், இதுபோல.

''சரிதானு தாமஸ்! இப்படிச்செய்யலாமா நீ? நம்பினேரை நட்டாற்றிலாவிடுவது''

''மக்களுக்காகத்தான் பதவியேற்கிறேன்!''

''விரோதியின் பக்கம் சேர்ந்து வீணுவதா?''

''எங்கே வீணன் ஆனேன்! மன்னன்பக்கம் ஏன் சேர்ந்தேன் தெரியுமோ? எல்லாம் மக்களுக்காகத்தான் — பதவிமூலம் மக்களுக்கான நன்மைகளைச் செய்யலாமல்லவா!''

இப்படி பசப்பினன்—பலரிடம். ஆனல் விரைவில் பெரும் நெருப்பானன்!

தன்னை எதிர்த்தோரையெல்லாம் துவம்சம் செய்தான் — தூக்கிலிட்டான்—துண்டாடினன — சிறைக்குள்போட்டான். மன்னன் மமதை வளரும் வழிகளையெல்லாம் சொன்னன் சார்லசுக்கு. மக்கள் கொதித்தனர், துரோகியின் செயல் கண்டு! மகிழ்ந்தான் மன்னன், தன்தந்திரம் பலித்ததுகண்டு-தாமஸுக்கு பட்டம் தந்தான் 'ஸ்ட்ராபோர்டு பிரபு'வாக ஆக்கினன்.

பதவிக்குப் பலியான வெண்ட்வொர்த், மன்னனின் 'வலதுகை' ஆனன். எப்படியெப்படி மன்னனுக்குப்பணம் திரட்டித்தர முடியுமோ, அந்த வழிகளையெல்லாம் கையாண்டான். மக்கள் துடித்தனர்! பலர் வரிகொடா இயக்கம் நடத்தினர்—பார்லிமெண்டு இல்லாத நேரத்தில் பணத்தைக் குவித்துவிட வேண்டுமென்ற ஆவலால், துடித்த சார்லஸ், பலப்பல வழிகளைக் கையாண்டான்.

இந்த வழிகளால் வதையுண்டமக்களோ, 'எரிமலை' ஆகிக்கொண்டிருந்தனர். எங்கும் எரிச்சல் — எதிர்ப்பு — ஆத்திரம் மலைபோல வளர்ந்துகொண்டிருந்தது. இந்த அதிருப்தியைச் சமாளிக்க ஒரு பக்கம் படையும் திரட்டவேண்டியவனுன். புதுப்படைகளைப்போஷிக்கப் பணம் வேண்டுமே! மேலும் புதுத்தொல்லைகள் பெருகலாயின— மக்கள் மன்றத்தில்.

இத்தொல்லைகளில் ஒன்றுதான், ''கப்பல் பணம்'' கோரியது. புதிய கப்பற்படை தேவையென்றும் அக்கப்பல்களைக் கட்ட மக்கள் பணம் தரவேண்டுமென்றும் நிர்ப்பந்தித்தான்.

''தாயகம்இங்கிலாந்தின்பெருமை பெரியதாயிற்றே — நல்லகப்பல்கள் வேண்டாமோ! தாருங்கள்! தாருங்கள்!!''

என்று, நயவஞ்சகமாகப் பேசினன். ஆனல் அவன் நாச எண்ணம் விளங்கிற்று மக்களுக்கு. ஆகவே, அட்டகாசத்தை எதிர்க்க ஆவல் கொண்டனர். கப்பல்பணம் கட்ட முடியாதெனக் கர்ஜித்தான் ஜான் ஹாம்டன் எனும் பொதுநலத்தொண்டன்! அவன் மூட்டிய தீ, பரவலாயிற்று. பார்த்தான், சார்லஸ் ஹாம்டனை இழுத்துவந்தான்—தண்டித்தான்—சிறைக்குள் தள்ளினன்: சிறைக்கும் சித்ரவதைக்கும்அடங்குவதல்லவே சுதந்திரகீதம்! எங்கும், 'வரிகொடோம்!' எனும் நாதம் கிளம்பலாயிற்று. மக்கள் புலிகளாயினர்! அதிருப்தி சூருவளியாக ஆயிற்று!!

மக்களை இம்சிக்க, தாமஸ் வெண்ட் வொர்த்தைத் துணையாகக்கொண்டதோடு, சார்லஸ் இருந்துவிடவில்லை. மற்றொரு நண்பனையும் பெற்றிருந்தான் — அவன் சாதாரணமானவனல்ல — மக்கள் பணிந்து வணங்கும் தன்மை பெற்றவன்—மதகுரு! ஆர்ச்பிஷப்!! வில்லியம்லாட் எனும் பெயரினன். இவனையும் ஒருபக்கம் துணையாக்கிக்கொண்டான். ''கர்த்தரின் சேவைக்குக் காலத்தை ஒப்பித்தேன்'' என்று பாமரரிடம். பேசித்திரிந்த மதகுரு, மன்னனின், கையாளானன். மன்னனின் கொடுங்கோன்மைகளை மந்தமாருதம் எனப் பிரச்சாரம் செய்தான்—

''மக்களே! மதோன்மத்தர்கள் கையில் சிக்கிடாதீர்கள். அராஜகம் பெருகலாமோ. மன்னனை மதியீர்களாக. மன்னனென்றால் யார்? கர்த்தரின் பிம்பமல்லவோ! பரமண்டலத்துாதரைப் பணியாது விடுவது ஆகுமோ? பாவமல்லவோ!'' என்று போதிக்கலானன் மக்களிடத்தில். ''மகான்!'' — ''மதகுரு!!'' இந்தச் சொற்களால் அலங்கரிக்கப்பட்ட, ஆர்ச்பிஷப், கர்த்தர் பெயரைச் சொல்லி, மன்னனுக்கு ஆதரவு கேடலாயினர். மக்களோ, துடிக்கும் வயிற்றையும் கொதிக்கும் குடும்பத்தையும் காட்டலாயினர்.

''கொடுங்கோன்மை செய்கிறன், தேவா!''

''சேச்சே! அப்படிச் சொல்லாதீர்கள். மன்னன் செய்வது கொடுங்கோன்மையல்ல — மக்களுக்காகத்தான் பாடுபடுகிறன்''

''எங்களை இம்சிக்கிறனே!''

''இல்லை! இல்லை!!—உங்களை வாழவைக்க விரும்புகிறன். அதனல் சிறிது. சஞ்சலம் ஏற்படத்தான் நேரும். ராஜ்யபாரம் பெரிதல்லவோ?''

''அதற்காக நாங்கள் வாடுவதா?''

---

சேலம் கழகத் தோழர் கே. வீ. நாகரத்தினம் மனைவியார் தோழியர் சரோஜனி அம்மைக்கு 16–3–52ல் பிறந்த ஆண்குழந்தைக்கு தோழர் மு. கருணாநிதியால் 30—3—52 அன்று 'அழகிரி' என்று பெயர் சூட்டப்பட்டது.

---



144230

''ஏன் வாடவேண்டும்! சிரமத்தை சிறிது மறக்கக் கற்றுக்கொள்ளுங்கள். மாதாகோவிலுக்கு வாருங்கள் பரமண்டலத் துாதரைத் துதியுங்கள். பாபம் அகலும்! நாடு செழிக்கும்!!''

மக்களிடத்திலே பரவியிருந்த மதபோதையால், அவர்களை அடிபணிய சாகசம் செய்தான், 'மகான்' வேடந்தாங்கியவன்.

* * *

கொதிக்கும் தீயை குளிர்காற்று தடுத்துவிடவா முடியும்? அடக்குமுறை ஒருபக்கம்! அது கர்த்தர் திருவிளையாடல் எனக் கதைக்கும் மதகுரு ஒருபக்கம்!!—இரண்டுக்குமிடையிலே தவித்த மக்கள், எரிமலையாயினர். வரிகேட்டு வதைக்கும் மன்னன் — அவனுக்கு ஆதரவாகயிருக்கும் மக்கள் துரோகி— அவர்களுக்கு 'தெந்தின' பாடும் 'பூஜாரி'. இந்த குழப்ப நிலையில் இங்கிலாந்து சீரழிந்தது! மக்கள் மனங்கொதித்தனர்!! மன்னனுக்கோ, தனது முறைகள், யாவும் பலனளிக்காதது விளங்கிற்று. பணமோ தேவைப்பட்டது! 'பார்லிமெண்ட் சென்னல்தான் பணம்' என்று கூறுகின்றனர் மக்கள். பார்லிமெண்ட் கூடியோ பதினொரு ஆண்டுகள் ஆகிவிட்டன. சிந்தை குழம்பினன் சார்லஸ்! கடைசியில் எதுவும் செய்ய இயலாமற்போகவே கலைத்த பார்லிமெண்டை 1640-ல் [...]ட்டினன். ''நீண்டகால [...]டு'' (Long Parliam- [...]ழைக்கப்படும், இது, பல் [...] நீடிக்கலாயிற்று. சிறைக் [...] சித்திரவதை செய்யப் [...]ரன் ஹாம்டன் இப் [...]ண்டிற்கு, தலைவனுகத் [...]க்கப்பட்டான் — ஆம்! [...]ல் தேர்ந்தெடுக்கப்பட் [...]னனுலும் துரோகிகளா [...]க்கு ஆளான மாவீரன் [...]வனுஞன்!! இவனது தலை [...]டிய பார்லிமெண்டு, சார் [...]களைக் கண்டித்தது— [...]ந்திரிசபை செய்த ஊழல் [...]லமாக்கியது. 'தாமஸ்— [...]கி' எனப் பறைசாற்றி [...]லிமெண்டு உறுப்பினர் [...]களை வஞ்சித்த, தாமஸ் கலங்கினன். 'வந்துவிட்டதே விபத்து' எனக் குமுறினன். பார்லிமெண்டிலமர்ந்தோரோ, துரோகிகளை ஒழிக்கவேண்டும் என்று முழக்கினர். சொலித்தனர்.

''தாமஸ் வெண்ட் வொர்த் ஒரு துரோகி— மன்னன்பக்கம்சேர்ந்து மக்களை வஞ்சித்த மகாபாதகன். அவனை விட்டு வைத்தல் கூடாது. ஆகவே, அவனுக்கு மரணதண்டனை தர வேண்டும். துரோகி தொலைக்கப்பட வேண்டும்'' என்று சட்டம் செய்தனர். பார்லிமெண்டு, பரவசத்தோடு நிறைவேற்றிற்று இந்தச்சட்டத்தை. பார்த்தான் சார்லஸ். பதவித்தான் தாமஸ்.

''மன்னு! பார்த்தீரா?'' என்றான், பதைப்போடு.

''என் செய்வேன். ஸ்ட்ராபோர்டு?''

''என் செய்வீரா? உமக்காக எவ்வளவு பாடுபட்டேன்! நீர் வாழ, நான் மாள்வதா! சார்லஸ்—இதுவா உமது பதில். 'என் செய்வேன்' என்கிறீரே—இதற்கா நான் இவ்வளவு கஷ்டப்பட்டேன், உதவி செய்தேன்.''

கதறினன், துரோகி. சார்லஸ் எதுவும் கூறவில்லை. எது கூறினலும் ஏற்கும் நிலையில் இல்லை—பார்லிமெண்டும், நாடும். நாட்டோர் கொதித்தனர் — 'எங்களை வஞ்சித்த மகாத் துரோகி' என்றனர் தாமஸை. ''துரோகிகளிருப்பது நாட்டுக்கு ஆபத்து'' என்றனர்.

''வாழ்க இவன் என்று முழக்கமிட்டோம்! எமது வாழ்த்தொலியால் தலைவனுன இவன் எம்மைவஞ்சித்தான்! துரோக மிழைத்தான்— பதவிக்குப் பலியானன். பாதகஞ்செய்தான்! பாவி! மகா பாவி!! '' என்றது, நாடு.

தாமஸ், கலங்கினன் கைகளிலே விலங்கிடப்பட்டு, பலிபீடம் கொண்டு செல்லப் பட்டபோது. பார்த்தான் மக்களை! காரியுமிழ்ந்தனர், அவர்கள்!! நினைத்தான், சார்லஸை! நெஞ்சம் துடித்தது!!

''கெட்டேன்! தொலைந்தேன்! நம்பினர் மக்கள். நயவஞ்சகனனேன். வாழ்த்திய கரங்களை வெட்டினேன். மிருகமாக நடந்து கொண்டேன். எதிரியுடன் சேர்ந்தேன்—சரியான தண்டனை எனக்கு. தாயகத்தை வஞ்சித்த எனக்கு சரியான தண்டனை! நான் கொல்லப்படப் போகிறேன்—என்னை 'தலைவர்' என்று கூவியழைத்த மக்கள் இன்று கொதிக்கின்றனர். மலைபோல வாழ்ந்தேன்! இன்று மண்ணுகிவிட்டேன்!! மரணம் எனக்கு. மன்னன் வாழ்கிறன். மக்களை மதியாத மாமானேன்—மாளப் போகிறேன். சிறுகாயமென்றாலும் 'ஐயோ! ஐயோ!' என்று அலறிதுண்டு மக்கள்—நானை துரோகியாகாதபோது. அன்று கண்ணீர் சிந்திய மக்கள் இன்று ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றனர். ஐயோ! நான் சாகிறேன். பதவி ஆசையால் பலியானேன்—துரோகியானேன்—'தூ! தூ!!' எனகாரியுமிழப்பட்டேன். சாகப்போகிறேன்— இல்லை! இல்லை!!—கொலை செய்யப் படப் போகிறேன். மக்கள் மன்றம் ஓர்வாள்—அது என்னை மாய்க்கப் போகிறது. பலிபீடம் என்னைப் பார்த்துச் சிரிக்கிறது! தாயகமே, இத்தறுதலையை, மன்னித்துவிடு. நான் போகிறேன் — இனியாவது என் போன்றோர், இல்லாமலிருக்கட்டும், இங்கு—எனது சாவு ஒரு எச்சரிக்கையாகயிருக்கட்டும்—மக்களே மன்னர்களை நம்பாதீர்கள்! நம்பாதீர்கள்!!''

என்று கதறினன்—பலிபீடத்தில் நின்றுகொண்டு.

துரோகியின் தலையை துண்டாடிற்று, மக்களின் கொதிப்பு. தொலைந்தான், சுயநலத் துரோகி— பதவி வெறிக்குப் பலியான, இவனது கதியே, 'கஷ்டபா! கடவுளை வணங்குவீர்' என்ற மதகுருவுக்கும் தரப்பட்டது — பிறகு. கொடுமை புரிந்த சார்லஸும், கடைசியில் இதே கதிதான் பெற்றான்.

---

மகிழ்ச்சிகரமான செய்தி!
'கிளர்ச்சி'
(இரா. சு. தங்கப்பழம்)
மே 15 முதல் மீண்டும் வருகிறது.
''கிளர்ச்சி''
திருமங்கலம் (மதுரை Dt.)

ஈரோடு பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட மற்ற (முன்இதழில் வந்ததுபோக) தீர்மானங்கள்:—

(1) திராவிட முன்னேற்றக் கழகத் திட்டத்திடத்துநீங்காப்பற்றும் தணியா ஆர்வமுங்கொண்டு, கழக நடவடிக்கைகளில் தீவிர பங்கு பெற்றுப் பணியாற்றி வந்த சீரிய தோழர்களான உடுமலை கனகராசன், சேலம் வள்ளியப்பன் ஆகியோர் எதிர்பாராத வகையில் இயற்கை யெய்தியது கேட்டு இப்பொதுக் குழு வருந்துவதுடன் அவர்களின் குடும்பத்தாருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(2) அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில், நெல்லிகுப்பம் தொகுதியில் காங்கிரசுக்கு மாறுபாடாகத் தேர்தல் பணி ஆற்றினார் என்ற காரணத்தை உள்ளடக்கிக் கொண்டு, தி. மு. கழகத்தைச் சார்ந்த தோழர் மஜீத் என்ற இளைஞரை காங்கிரஸ் 'தியாகி' ஒருவர் மூலம் குத்திக் கொலை செய்யப் பட்டதை, அரசியல் அநாகரீக மிருகச் செயலாகக் கருதி, அதனை வன்மையாகக் கண்டிப்பதுடன், தோழர் மஜீத் அவர்களை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு பொது நிதி திரட்டித் தரும் முயற்சியை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறது.

(7) சிறுபான்மையினராகவெற்றி பெற்று வந்திருக்கும் காங்கிரசாரை சென்னை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தும் நோக்கத்தோடு, ஜனநாயகப் பண்பைப் புறக்கணித்துத் தோழர் சி. இராசகோபாலாச்சாரியாரை முறையில்லாத வழியில் சென்னை மேல் சபை உறுப்பினராக்கியிருக்கும் செயலை வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தச் செயலைக் கண்டிக்கவும் மாற்றவும் எடுக்கப்படும் தக்க முயற்சிகளுக்கு முழு ஆதரவு தருவது என்றும் இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

8. (a) காங்கிரஸ் ஆதிக்க [illegible]புணர்ச்சியை பொதுமக்கள் வெளிப்படையாகவே பொதுத் தேர்தலின் வாயிலாகக் காட்டிய பிறகும், காங்கிரஸ் ஆதிக்கத்தைமீண்டும் வலுக்கட்டாயமாகத் திணிக்கவேண்டுமென்றகெட்ட நினைப்புடனும், ஆட்டங்கொடுத்து வரும் வடநாட்டு ஆதிக்கத்தைச் சரியாமல் பாதுகாக்கும் நோக்குடனும், ஒரு வடநாட்டுக் காங்கிரஸ் காரரை, சென்னை கவர்னராக நியமித்த அடாத செயலை, இப்பொதுக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

(b) கவர்னர் நியமனத்தைக் கண்டித்து கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றிய முற்போக்குக்கழகங்களை இப்பொதுக்குழு பாராட்டுகிறது.

(9) கழகத்தின் சட்டதிட்டப்படி புதிய அமைப்பை உருவாக்க கீழ்க்கண்டவர்களடங்கிய தனிக் குழுவை இப்பொதுக்குழு நியமிக்கிறது.

குழு உறுப்பினர்கள்:—

(1) ஈ. வே. கி. சம்பத்
(2) கே. ஏ. மதியழகன்
(3) எஸ். எஸ். பி. லிங்கம்

(12) (a) பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பிடியிலிருந்து எகிப்தை மீட்க நடத்தப்படும் விடுதலைக் கிளர்ச்சியை இப்பொதுக்குழு ஆதரிக்கிறது.

(b) டுனீஷியாவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் மக்களின் விடுதலைக் கிளர்ச்சியை நசுக்கி, மக்கள் சர்க்காரின் தலைவர்களைக் கைது செய்து, அடக்குமுறை வெறியாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போக்கை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், கொடுமைக்கு ஆளான டுனீஷியா மக்களுக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, டுனீஷியமக்களின் விடுதலைக் கிளர்ச்சி வெற்றி பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(13) இராயலசீமாவில் பயங்கரமான அளவிலும், மற்ற மாவட்டப் பகுதிகளில் கவலை தரத்தக்க அளவிலும் பரவிக்கொண்டு வரும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் நிலைகண்டு இப்பொதுக்குழு வருந்துவதுடன், இப்பஞ்சத்திற்குக்காரணமாக இருந்த ஆட்சி முறையை வன்மையாகக் கண்டிப்பதோடு, ஆங்காங்குள்ள முற்போக்காளர்கள் பஞ்சநிவாரணப் பணியில் ஈடுபடவேண்டுமாய் இப்பொதுக் குழு வேண்டிக்கொள்கிறது.

## திருச்சி மாவட்ட மாணவர் பயிற்சி வகுப்பு அறிவிப்பு

திருச்சிமாவட்ட தி. மு. க. மாணவர் வகுப்பு லால்குடி தாலுக்காவில் அம்பில் என்ற சிற்றூரில் நடைபெற இருக்கிறது.

இயற்கை வளம் பொருந்திய அமைதியான இடம் பயிற்சி முகாமுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. கழக முன்னணி வீரர்கள் ஒவ்வொருநாளும் பயிற்சிதர ஒப்புதல் தெரிவித்துள்ளார்கள். அண்ணா அவர்களும் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்குவார்கள்.

நடைபெறும் நாட்கள் ஏப்ரல் 24, 25, 26, 27, ஆகிய நான்கு நாட்கள்.

முக்கிய குறிப்புகள்.

1. வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு தங்குமிட வசதியும், உணவு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.
2. வரப்போக வழிச் செலவுகள் மாணவர்களைப் பொறுத்தது.
3. வரும் மாணவர்கள் படுக்கை கொண்டுவர கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நான்கு நாட்களும் தங்குவது போல் வருதல் அவசியம்.

அம்பில், லால்குடியிலிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ளது. போக்குவரத்து பஸ் வசதி உண்டு.

வகுப்பில் கலந்துகொள்கிறமாணவர்கள், திருச்சிமாவட்ட செயலாளர் நெ-9, கிலேதார்தெரு, என்ற முகவரிக்கு உடன்விபரம் எழுத வேண்டுகிறேன்.

பராங்குசம்,
திருச்சி மாவட்ட உ. செயலாளர்.

Edited, Printed,& Publisned by C. N. Annadurai M A., at"Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.



405 2.52
REGD No M 4642

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 27—4—52 | இதழ் 43

# தள்ளாத வயது பொல்லாத வேலை

—[அண்ணல்]—

"நீங்க ஜமீன்தார் ஆனதற்காக உங்களுக்கு மரியாதை செய்ய வந்திருக்கிறார்கள்!"

"தெரியுது தெரியுது...இந்தாங்கப்பா—இந்த ஜமீன் என் தலையில் விழுமென்று நான் நினைக்கவேயில்லே. அந்தப் பாவி, உங்கபழைய எஜமான் வாங்கின கடனைக் கொடுக்க வழியில்லாமெ, இதைக் கட்டிட்டுப் போனான், என் தலை மேலே"

"இந்த ஜமீன் அவர் கையை விட்டுப் போனது காளியாத்தா புண்ணியமின்னு ஊர் பூராவும் சொல்லுதுங்க"

"அது சரி...நீங்க, அவன் தலையிலே மிளகாய் அறைச்சமாதிரி என்கிட்ட நடந்துகிடாதீங்க..."

'வேலைக்காரி' படத்திலே கண்டிருப்பீர்கள் இந்தக் காட்சியை! மார்பிலே மணியாரம் கிடக்க, காதிலே வைரம் ஜொலிக்க, கருத்த மீசைகள் உதடினை மறைக்க, கையிலே பச்சைக்கல்—'டால்' வீச, படாடோபத்துடன் பேசிய வேதாசலம் ஜெமீன் தனக்குக் கிடைத்தது, 'புதிய தொல்லை' என்பதைப்போல, புருவத்தை நெரித்துக்கொண்டு, கூறினார் 'ஜமீன் என்தலையிலே விழுமென்று நினைக்கலே' என்பதாக. மனிதர்களிலே இந்த விசித்திரகத்தை, எத்தனைகயிருப்போரிடமே காணமுடியும். புலி மானைக நடிக்கும்! நரி [illegible]டாகமாறும்! பாம்பு பழுதுபோல் கிடக்கும்! ஆனால், இந்த நடிப்புகளால், சுயரூபம், மாறாது—மறையாது. பச்சோந்தியிருக்கிறதல்லவா? இடத்துக்கு இடம் நிறத்தை மாற்றிக்கொண்டு! அதைப்போல சமயா சந்தர்ப்பத்துக்கேற்றபடி சுபாவத்தை மாற்றிக் கொள்ளும் மனிதரகம், இது! இந்த நடிப்பு ஏன் தெரியுமோ! சீறிக் கொத்தும் பாம்பு பதுங்கிப் பதுங்கிப் போவதேன்? தடி தன்மீது தாக்காமலிருக்கத்தானே! அதைப் போல, சமயம் வரும் வரை, இந்த சாகசப் பேச்சாலேயே காலத்தைக் கடத்தும், ரகம் இது.

வீட்டிற்கு வந்த புது மாப்பிள்ளை கோணிக் கோணி பேசுவதைப் பார்த்திருக்கிறோம் — 'மிட்டாயை இலையில் வைத்தால், "கொஞ்சம்!" என்று, கூறுவான். "நெய் கொஞ்சம் போடு!" என்று மாமியார் கூறினால், "வேண்டாம்!" என்று, உடம்பை வளைத்துக் கொண்டு சொல்லுவான். என்ன அர்த்தம் இதற்கு? மாப்பிள்ளைக்கு 'ஸ்வீட்டும்' நெய்யும் பிடிக்காதென்பதல்ல! அப்படி கூறுவதுதான் 'தன்னை மதிக்கும்படி' செய்துகொள்ளும் வழி என்ற நினைப்பு அவனுக்கு. மாப்பிள்ளை, 'குண்டோதரன்' என்று கூறுவதையா விரும்புவான்? இதெல்லாம், அந்த நோக்கத்துக்கான நடிப்பு! ஜமீன் வந்தது, ஏதோ ஒரு 'புதியதொல்லை' எனப் பேசினாரே வேதாசலமுதலியார், உடனே ஜமீனைத்தலைமுழுகியாவிட்டார், கதைப்படி. எப்படி முழுகுவார்? ஜமீன்தார் பட்டம் இலேசா, என்ன! அதிலும், எத்தனையோ நாள், எதிர்பார்த்ததாச்சே! ஆசை அகத்திலிருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமலிருப்பது, விவேகம், என்றொரு கருத்து, அந்த ரகத்தாரிடம் உண்டு. கூடைக்காரியின் 'முல்லையோ முல்லை!' என்ற கூவலைக் கேட்டு ஆவலோடு, 'என்னம்மா! முல்லை எப்படி?' என்று தெருக் கோடியிலிருந்து ஓடிவந்துகேட்டால், அவள், ஏற இறங்கப்பார்த்துவிட்டு தன்னிஷ்டம்போல விலை சொல்வாள். கேட்காதது போல் போய்க்கொண்டிருந்தால் அவளே வலுவில் வந்து 'வேணுங்களா, பூ!' என்று கேட்பாள். இந்த உண்மையை, அறியாதவர் என்று கூற முடியும், அன்பர் ஆச்சாரியாரை? அதிலும் 'வயதானவன், வயதானவன்' என்று வேறு சொல்லிக் கொள்கிறாரே! வயதான மனிதருக்கு, இந்த அனுபவம் ஒன்றும் சொல்லி வரவேண்டியதில்லையே! அதனால்தான், அடிக்கடி கூறிக் கொண்டிருக்கிறார் — தானே தனியாக உட்கார்ந்து கொண்டல்ல! யாரையாவது சந்திக்கும்போதும், பொதுக் கூட்டங்களில் பேசுகிற நேரத்திலும். "என் தலையில் எப்படியோ கட்டிவிட்டார்கள் இந்தப் பொறுப்பை!" என்கிறார் — அந்த மூலாதிகளை[illegible]தின்றுகொண்டு வளைத்

அறுந்த தாலிகள், நம்மை அலறச் செய்துவருகிறது. இந்த அக்கிரமம், இன்னும் நீங்கியபாடில்லை! காமன்வெல்த்தில் இருக்கிறோம் என ஜம்பம் பேசுகிறாரே பண்டித நேரு—அந்தக் காமன்வெல்த்திலுள்ள ஒரு நாடுதான் மற்றோர் நாட்டிலிருந்து வந்தோரைச் சுட்டுப் பொசுக்குகிறது! இந்தக் கொடுமைக்கு ஆதரவு தருவது காமன்வெல்த் தலைமை!!

தூக்கில் தொங்கிய 'கணபதி'களை வளர்த்துக்கொண்டேயிருக்கிறார்கள். மலேய சர்க்கார், நமது மக்களை சிறையிலே தள்ளுகிறது—சித்ரவதை செய்கிறது — சுட்டுப் பொசுக்குகிறது. மாதத்துக்கொரு கொலை! மலேயாவில்! காமன்வெல்த் நாட்டில்!!

* * *

சிங்கப்பூர் ஏப்-22. இந்திய ரப்பர் தொழிலாளி ராமன் என்ற இளைஞருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. பதினெட்டேவயதான ராமன், அழுதுகொண்டே தண்டனையை ஏற்றார். தன்னை கலகக்காரர்கள் கடத்திச் சென்று கட்டாயப்படுத்தியதாகவும் அதனாலேயே துப்பாக்கி வைத்திருந்ததாகவும் கூறினார்.

சென்ற பிப் 9-ல் ராமனுடைய சகா சுப்பையாவை மலேயப் போலீசார் சுட்டுக் கொன்றனர். இதற்குப்பின் ராமனே, போலீசாரிடம் சரண்புகுந்தார். பின்னர் கலகக்காரர்கள் 30-பேரைப்பிடிக்க ராமன் போலீசாருக்கு உதவிசெய்தார்.

* * *

இந்தச் செய்தியைக் காணும்போது, உள்ளம்துடிக்காதா நமக்கு? 18 வயது! வாலிபர்! அழுதார்!—எவ்வளவு கோரமான தகவல்கள். போலீசாருக்கு உதவியாகவும் இருந்தாராம். அத்தகைய வரை, மரணமேடைக்கு அனுப்ப வேண்டியதேன்? — பழிவாங்கும் மனோபாவம் அல்லது 'ஏழைதானே, எது செய்தால் என்ன?' என்ற அலட்சியம் தவிர, வேறென்ன கூறமுடியும் இதற்கு பதினெட்டுவயது வாலிபனின் இரத்தம் சிந்துவதாமே! வீணே அழிவதாமே, அந்த இளைஞன்? ஆற்றலற்ற கூட்டமா அவன் பிறந்து வளர்ந்த இனம்! சிங்கப்பூர் 'சிங்கைபுரி'யாகயிருந்த காலத்து அவனது மூதாதையரின் தாளடி பணிந்து கிடந்ததாம்! அரசோச்சிய பூமியில் இன்று அநியாயமாய் மாள்கிறான்—ஐயோ! என்றலறிக்கொண்டு சாகிறான். இந்த அக்கிரமத்தைக் கேட்க நம்மிடம் எதுவும் இல்லை! 'பாரீர்' என்று பல்லிளிக்கிறோம்—டில்லியை நோக்கி., பரிதாபம்! ஏ, தாழ்ந்த திராவிடமே உன் வாழ்வு, இவ்விதமா ஆவது? மாற்றானுக்கு கைகட்டி நிற்க உன் மகன், மாள்வதா கண் காணாச் சீமையில்! அக்கிரமம்; ஆனால், தொடர்ந்து நடக்கிறது. கலவரக்காரர்களுக்கு உதவியதாகக் கூறி, அதற்கு இவ்விதக் கடுந்தண்டனையா? மரண தண்டனை!—வாலிபனுக்கு. குற்றமிழைத்திருந்தது உண்மையானால், 'போ! உனக்கு வேலையில்லை' என்று, வேலை செய்த இடத்திலிருந்து, விரட்டிவிடலாமே இங்கு. அதை விட்டு, தூக்கிலே ஏன் தொங்கவிட வேண்டும்! கலகக்காரர்களைப் பிடிக்கத் கையாலாகாதவர்கள், ஏழைகள் மீதா பாய்வது? கையில் சிக்கினோரைச் சுட்டுக் கொன்று, கலகக்காரர்களைப் பயப்படச் செய்யப் போகிறார்கள்! அவர்களின் சாமர்த்தியத்தைக் காட்ட, பலியாவது நம்மவரா! இந்தப் பரிதாபம் தொடர்வது கண்டும் வாய் திறவாதிருப்பதேன் 'பாரதபுத்ரர்கள்.' ஐயோ! நாடே. இதுவாஉன் மக்களுக்கேற்பட்ட கதி? ✲

## நெசவாளர் நிலை

''இம்மாகாணத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாகப் பெரிய குடிசைத் தொழிலில் ஈடுபட்டுள்ள கைத்தறி நெசவாளர்கள் சர்க்காரின் கட்டுப்பாட்டு முறைகளால் தொழில் முறையில் மிகவும் பாதிக்கப்பட்டு இன்னலுக்குஆளானதைக் கண்டு இக்கூட்டம் மிக மிக கவலைப்படுவதோடு சர்க்காரின் 'துணி, நூல் கட்டுப்பாடு கொள்கை'யை வன்மையாகக் கண்டிக்கிறது. கைத்தறி நெசவாளர்கள் நிலைமையை சீர்கேடடைய விடாமல் போதுமான—தேவையான நூல் அந்தந்த பகுதிகளுக்கு விநியோகம் செய்யவும் தயாரித்த துணிகளுக்கு உறுதியான விற்பனை இடங்களைத் தேடிப் பிடித்துத் தரவும் நெசவுத் தொழிலாளர்களை கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேர்த்துக்கொள்ளவுமான காரியங்களை உடனடியாக எடுத்துக்கொள்ளும்படி மாகாண சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது'' என்று நங்கவள்ளியில் நடைபெற்ற தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

## நிதி

கழகத் தோழர்களே, கழகத்திற்கென சொந்தத்தில் ஒரு தினசரி தொடங்க இருக்கிறோம் விரைவில் சென்னையிலிருந்து வர இருக்கும் நம் சொந்த தினசரிக்கு நாம் போட இருக்கும் மூலதனம் மிகக் குறைவு—மேலும் அதற்கு நிதி தர வேண்டியவர்கள் நாம் தானே — ஆகவேதான் கழக நிகழ்ச்சிகள் எது, எங்கு நடந்தாலும் குறைந்தது ரூ. 5 நன்கொடை அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது, ஈரோடு பொதுக்குழுவில். ஆகவே தோழர்களே, நம் கழகத் தினத்தாளின் வளர்ச்சி, நம் கழகத்தின் வளர்ச்சி, நம் இலட்சிய வெற்றி.

எனவே, தினத்தாள் நிதிக்கு தாராளமாக உதவுங்கள்!

| | |
|---|---|
| சென்றவாரம் வரை | 40—0—0 |
| ஆமூர் | 5—0—0 |
| விண்ணமங்கலம் | 5—0—0 |
| புஞ்சைத்தலையூர் | 5—0—0 |
| மதானந்தகம் | 5—0—0 |
| கீழப்பழூர் | 5—0—0 |
| திருமானூர் | 5—0—0 |
| காரைப்பாக்கம் | 5—0—0 |
| | 75—0—0 |

இனி, தினத்தாள் நிதிக்கு பணம் அனுப்புவோர் கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்,
24, சூரியநாராயண செட்டித்தெரு,
ராயபுரம்—சென்னை.

இலட்சியக் கோட்டையின் தூதர்கள்



# பகவான் பேட்டி

—தி. வி.—

☆

[திடுக்கிட்டு எழுந்தார் ஆச்சாரியார்—திவ்ய ஜோதியுடன் எதிரில் பகவான் பரந்தாமன் நின்றுகொண்டிருந்தார். ஆச்சாரியார், ஆச்சர்யத்தால் அப்படியே சிறிது நேரம் அசைவற்று நின்றுகொண்டிருந்தார். தானே வந்த பகவானை வணங்கவும் வழிபடவும்கூட முடியவில்லை. எதிர்பாராமல் பகவான் வந்தார்—ஆச்சரியார் கண்களை அகல விரித்தபடி அவரைப் பார்த்தார்.]

பகவான்:- அப்பா, பக்தா, ஏன் ஆச்சர்யத்துடன் பார்க்கிறாய்?

ஆச்சாரியார்:- தங்களை, இந்த நேரத்தில் எதிர்பார்க்கலலே. அதனால்தான் ஆச்சர்யப்பட்டேன்.

ப:- நல்ல வேடிக்கையப்பா, செய்வதையும் செய்துவிட்டு, இப்படிக் குறும்புவேறு பேசுகிறாய்!

ஆ:- ஸ்வாமி, நான் என்ன செய்துட்டேன். அபச்சாரம் ஏதும் பண்ணல்லியே!

ப:- அபச்சாரம் செய்யவில்லை. அநியாயம் செய்திருக்கிறாய்—எனக்குப் பெரிய ஆபத்தையே வரவழைத்து விட்டாய்!

ஆ:- ஸ்வாமி, அநியாயம் என்கிறேள, ஆபத்து என்கிறேள். ஒண்ணும் புரியல்லேயே!

ப:- அநியாயம், ஆபத்துமட்டுமா? பெரிய அக்கிரமமே செய்துவிட்டாய். நான் என்ன உனக்குச் செய்யவில்லை. என்மீது உனக்கு என்ன கோபம்? நீ கூப்பிட்ட குரலுக்கு எல்லாம் ஓடோடி வந்தேன். வேண்டியதையெல்லாம் வேண்டிய மட்டும் தந்தேன். ''கண்ணா, காட்டு வழி'' என்றாய், கவர்னர் ஜெனரல் பதவிவரை காட்டினேனே வழி! உனக்குக் கஷ்டம் வந்த நேரத்திலெல்லாம் கைகொடுக்கவில்லையா? காமராஜர் விரட்டியபொழுது, திரௌபதைக்கு வஸ்திரதானம் தந்ததுபோல டெல்லியிலிருந்து கைகொடுத்துக் காப்பாற்றினேனே! இப்பொழுது 'பஜகோவிந்தம், பஜகோவிந்தம்' என்று பஜித்தாய்—அதற்கும் பலன் இல்லாமல் போகவில்லை. ஜனாதிபதி பதவிதான் உன் குறியென்பது எனக்குத் தெரியும். நாம் ஒன்று நினைக்க, நேரு ஒன்று நினைத்து விட்டார். இருந்தாலும், பஜகோவிந்தத்திற்குப் பலனளித்துத்தான் இருக்கிறேன். நீ எந்த கோபத்தைவைத்துக்கொண்டு இப்படி பழிவாங்கிவிட்டாய்?

ஆ:- பகவானே, தினமும் தங்களைத் தொழறேன். தங்களை மறந்திருந்தவர்களையும் பஜனைசெய்யச் சொல்றேன்.

ப:- நீ எத்தனை முறை வேண்டுமானாலும், அழை—வருகிறேன். ஆனால் ஊராரைவிட்டு இப்படி என்னை இப்பொழுது அவதிப்படுத்தலாமா?

ஆ:- அவதியா, ஆராதனையல்லவா செய்யச் சொல்லிவர்றேன்.

ப:- ஆராதனை வாங்கிக்கொண்டால் விட்டுவிடுகிறார்களா? நாடாள வந்திருக்கிறாய் — உனக்குத் தெரியாதா நாட்டின் நிலைமை?

ஆ:- தெரியும், தெரிந்துதான் உங்களைக் கூப்பிடச் சொல்றேன்.

ப:- அடபாவி, தெரிந்தே செய்கிறாயா? என்ன கல்நெஞ்சம் உனக்கு! நாட்டின் நிலவரம் தெரிந்துமா, என்னைக் காட்டிக் கொடுக்கிறாய்!

ஆ: பதரவேண்டாம், ஸ்வாமி. என்ன அப்படி வராதது வந்துவிட்டதுன்னு இப்படி சோகிக்கிறேள்.

ப:- அப்பா, என்னை நீ கூப்பிடச் சொல்கிற நேரம் எப்பேற்பட்டது தெரியுமோ? ராயலசீமாவிலே பஞ்சம், தாராபுரத்திலே பட்டினி, சித்தூர். செங்கற்பட்டு, வடாற்காடு ஜில்லாக்களில் வறட்சி, சேலம் தொழிலாளர் அவதி, சென்னையிலே தண்ணீர் இல்லை இப்படி தினந்தினம் வரும் செய்திகளைப் பார்த்தாலே எனக்குபயமாக இருக்கிறது. இந்த நேரத்திலே கூப்பிடச் சொல்கிறாயே! இந்த அநியாயம் அடுக்குமா? ஏதோ மக்கள் மகிழ்ச்சியோடு, இருக்கும்பொழுது தேர் திருவிழா நடத்து என்று சொன்னால் நானும் மகிழ்ச்சியுடன் தேரில் வருவேன் — போவேன். நீயோ, இப்பொழுது மாட்டிவைக்கிறாயே!

ஆ:- என்னஸ்வாமி, குழந்தை மாதிரி பேசறேள். இருந்தால் என்ன?

ப:- குறும்பு பேச்சு பேசுகிறாய் நீ—எனக்கு குலை நடுக்கம் எடுக்கிறது, மழையில்லை. மழைபெய்யப்பா என்கிறான் ஒருவன், நூல் இல்லை நூல்தா என்கிறான் ஒருவன், அரிசியில்லை. அரிசிதா என்கிறான் ஒருவன், வேலையில்லை, வேலைதா என்கிறான் ஒருவன், வேலையிருந்தாலும் தக்க கூலியில்லை, கூலிதா என்கி

7-ம் பக்கம் பார்க்க

## இறப்பு

வேலூர்:- பிரபல நாடக மேடை நடிகரான தோழர் A. S. கோபன் 17—4—52 இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

காஞ்சீபுரம் பிள்ளையார்பாளையம் கழகத் தோழர் சா. தட்சணாமூர்த்தியின் தந்தை திரு. கா. மு. சாம்பசிவம் 21—4—52-ல் உயிர் நீத்தார். என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


## கழக வெளியீடுகள்!

கழகத் தோழர்கள் கரத்திலே எப்பொழுதும் இருக்கவேண்டிய நம் இலட்சியக் குறள், கழக விதிமுறைகளை விளக்கும் தொல்காப்பியம் இச்சிறு நூல்கள்.

**தீர்மானங்கள் 0—1—0**
**சட்டதிட்டம் 0—2—0**

விவரங்களுக்கு:

பொறுப்பாளர், தி. மு. க. தலைமை நிலையம், ராயபுரம், சென்னை.


நம் கழக உறுப்பினர்கள்

திராவிடநாடு

காஞ்சி] 27—4—52 [ஞாயிறு

# கோலார் கொடுமை

இருபது, இளங் காளைகள், கடந்த 19-ந் தேதி கோலார் தங்கச் சுரங்கத்துக்குப் பலியான செய்தி அறிந்தோம்— திடுக்கிட்டோம். 'சாம்பியன் ரீப்மைன்' சுரங்கம், திடீரெனச் சரிந்ததால், தொழிலாளச் சகோதரர்கள் இருபதுபேரும், பிணமாகிவிட்டனர். அவர்களது பிணங்களைக்கூட இன்னும் காண முடியவில்லையாம். 8000-அடிக்குக் கீழ், தங்கம் தேடியபோது, பாறைகள் பிளந்து பூமிசரிந்து, புதைபட்டுப் போயினராம். இருபதுபேர்! அத்தனைபேரும் வாலிபர்கள்! பல பாகங்களிலிருந்தும் அங்கே குடும்பத்தோடு சென்று, கும்பிகழுவ, சுரங்க வேலைக்குச் சென்றவர்கள். அவர்களை நம்பியிருந்த குடும்பம்—சாதாரணமானதாகயிருக்க முடியாது. தாயும் தந்தையும் மனைவியும் மக்களும், தமது 'குடும்ப விளக்கு'களுக்கேற்பட்ட கோரச் சாவு கேட்டு, எப்படிப் பதறினரோ! என்று எண்ணும்போது, மெய் சிலிர்க்கிறது, நமக்கு. ஏழை உலகை எண்ணி, இதயம், வேகிறது. சுரங்கத்தொழில் சாதாரணமானதல்ல! அங்கிருந்து கிடைக்கும் "தங்கம்", அகில உலகத்தையும் ஆட்டிப் படைக்கக் கூடியதாயிருக்கலாம். அதைப்பெற்று மகிழ்வோர் தொகை, அதிகமிருக்கலாம். 'தங்கச் சுரங்கங்களுக்கு அதிபதி' என, அவைகளை நிர்வகிப்போரை, பயத்தோடு பார்க்கலாம் உலகம். ஆனல், அந்த "தங்கத்தை" எடுக்கப் பாடுபடும் ஏழைகள் உலகு இருக்கிறதே அதுபடும் கஷ்டத்தை எண்ணினல்! இருபது உயிர்கள்—ஒரே வினடிக்குள்—8000 அடிக்குக் கீழ். அப்பப்ப, எவ்வளவு கொடூரமாயிருக்கிறது இந்தச் செய்தி! 'கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டி கருவியெல்லாம் செய்து தந்த கைதான் யார் கை?' என்று பாரதிதாசன், கேட்பதை எண்ணிப் பார்த்தால், வேதனை விரியும்! பாறைகளைத் தோண்டி அங்கே பதுங்கிக் கிடக்கும் தங்கத்தை எடுக்கப் பாட்டாளித் தோழர்கள் பாடுபடுவதை நினைத்தால், 'என்ன உலகமடா!' என்ற வேதனை நம்மை அறியாமலே எழும்புபு!

இவ்வளவு கஷ்டங்களுக்கிடையே தங்கம் தரும், உழைப்பாளர்கள், தமது வாழ்க்கைக்கான வசதிகளின்றி வதைகின்றனராம். வசதிகள் என்ருல், மாடமாளிகையோ பூஞ்சோலையோ அல்ல அவர்கள் விரும்புவது. மிகமிகச் சாதாரணமான வசதிகள்—தினசரி குடும்ப வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான வசதிகள். வாழ்க்கையையே ஒப்படைத்து, கனிக்குள், இறங்கும் தொழிலாளி வீட்டுக்குத் திரும்பியதும் சிறிது நேரங்கூட 'தொல்லை'யில்லாமல் இருக்க முடிவதில்லை. கனியிலே, இறங்கும் போது வியர்வை சிந்துகிறது! கனிக்கு வெளியில் வந்தாலோ, மனைவியின் கண்ணீர் சிந்துகிறது!!

உரிகம் சுரங்கத் தொழிலாளர் மத்தியில் பேசிய மைசூர் சட்டசபை உறுப்பினர் தோழர் கே. எஸ். வாசன் கடந்த 22ந் தேதியன்று, சுரங்கத்தொழிலாளரின் துயரங்களை, தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிருர். அவர் பேசுகையில், குறிப்பிட்ட முக்கிய விஷயம், அல்லலுற்று அவதிப்படும் தொழிலாளர்கள், வயிருரவாவது சாப்பிட உணவு கிடைக்கும்படி, செய்ய வேண்டுமென்பதாகும். உழைத்து வாழ்வோருக்குப் போதிய உணவில்லை! உணவுப் பொருள் கிடைத்தாலும் தேவையான அளவுக்கு வாங்க முடிவதில்லை!! இந்த அடிப்படைப் பிரச்னையைத் தெளிவாக்கிய, அவர், "உணவுப் பொருள்களை சுரங்கக் கம்பெனிகளே வாங்கி, குறைந்த விலைக்கு தொழிலாளருக்குத் தரவேண்டும்" என்று கூறியிருக்கிருர். அதிக விலைக்கு வாங்கி குறைந்த விலைக்குத் தருவதா? எனத்திகைக்கலாம். தங்கச் சுரங்கங்களின் நிர்வாகத்தினர் பெறும் பெருமிதமான பலனுக்கும் லாபத்துக்கும், இந்த முறையினல் ஏற்படக்கூடிய நஷ்டம், மிகவும் சாதாரணமாகும். பாடுபட்டு, உயிரிழக்கும் கூட்டத்துக்கு இத்தகைய உதவிகளைச் செய்ய நிர்வாகிகள் முன்வரவேண்டும்! தமக்காகவாழும் 'உலகுக்கு,' தேவையான உணவுப் பொருள்களை, சர்க்கார் மூலம் பெற்று, அவைகளை எல்லோரும், தத்தமக்குத் தேவையான அளவுக்கு, வாங்கி உபயோகிக்கும்படியான வசதியைச் செய்து தரவேண்டும். அப்போதுதான், மகளின் 'வயிறு' நிறைய முடியும்! இந்த நல்ல காரியத்தை, சுரங்க நிர்வாகிகள் செய்து தரவேண்டும்—துடிக்கும் தொழிலாளரின் துயர் துடைக்க.

* * *

இருபது தொழிலாளர்களின் மரணம் குறித்து அனுதாப அறிக்கை விடுத்த மைசூர்ப் பிரதமர், மாண்ட ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் நஷ்டஈடு தரும் நடவடிக்கை விரைவில் துவக்கப்பட வேண்டும் என்பதாகத் தெரிவித்திருக்கிருர். இதை நாம், மிகமிக வலியுறுத்த விரும்புகிருேம். கணவனையிழந்த குடும்பங்களைக் காக்க எவருமில்லை! உழைப்பை மட்டும் நம்பி வாழும் கூட்டத்திற்கு உடனடியாக உதவாவிடில், அந்தக் குடும்பங்கள், இலவம் பஞ்சாக ஆகிவிடும். இந்நிலை வராமல், போதுமான நஷ்டஈடுத் தொகையைத் தரவேண்டும். இது துரிதமாக நடக்கும்படி, மைசூர் சர்க்கார், செய்ய வேண்டும்.

அதேநேரத்தில் வாடும் தொழிலாளர்களுக்கான குறைகளை நிவர்த்திப்பதில் மிகுந்த கவனம் கொள்ள வேண்டும்.

மேற்படி பொதுக் கூட்டத்தில் பேசிய மைசூர் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத் தலைவரும் சட்டசபை உறுப்பினருமான தோழர் பி. ஈம். சாமிதுரை வலியுறுத்தியிருப்பது போல, 'தொழில்லாளர்களுக்கான பிராவிடெண்ட்பண்டு, கூலி நிர்ணயம், வேலையின்நாம்' ஆகியவைகளை நிர்ணயிக்குமாறு, சுரங்க நிர்வாகிகளை, வலியுறுத்தவேண்டும்.

இலாபமில்லாத இடமல்ல, அது! அங்கே ஏழைகளின் பிணங்கள்மீது அகப்படும் தங்கத்தைக் கண்டு மகிழும் சுரங்க நிர்வாகிகள் இந்த சிறு சிறு நன்மைகளைக்கூடச் செய்து தரத் தயங்குகின்றனராம். இத்தயக்கத்தைத் தட்டிக் கேட்கவேண்டிய மைசூர் சர்க்காரோ, வாய்மூடி மௌனியாயிருக்கிறது.

உயிரிழந்து, 'தங்கம் தருவோர்' தவிக்க, அவர்கள் வேதனையின்மீது தமது உல்லாசபுரியை அமைத்துக் கொண்டிருப்போர் ஒய்யாரமாக இருந்துகொண்டிருக்கிருர்கள்.

சாவு! சஞ்சலம்! உணவுப்பஞ்சம்! கூலிக்குறைவு!—இத்தனை வேதனைகளுக்கு ஆளாகும், தொழிலாளத் தோழர்களில், பலரை, வேலையிலிருந்து வீட்டுக்கு அனுப்பவும்திட்டமிட்டுக்கொண்டுள்ளனராம். தங்கத்தின் விலை, வீழ்ந்துவிட்டதல்லவா! அதைக்காரணமாகக் காட்டி, பல தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கும் திட்டத்தோடு இருக்கிருர்களாம். வேதனைமேல் வேதனை! தொல்லைமேல் தொல்லை!! துடிக்கும் புழுக்களா, அவர்கள்? துரைமகனர் பலர் ஒய்யாரமாக இருக்கின்றனர், கொள்ளைச் சம்பளம் பெற்றுக் கொண்டு! அசல் ஐரோப்பிய துரைமகனர்கள்!! ஆனல், கனிபிளந்து, சாவுக்கும் வாழ்வுக்கு மிடையே திண்டாடுவோர் விரட்டியடிக்கப்படுவதாம்.

இந்த விசித்திரக் கொடுமையைத் தடுத்து, பரிதவிக்கும் சுரங்கப் பாட்டாளிகளுக்கான உதவிகளைச் செய்துதர, மைசூர் சர்க்கார் முன் வரவேண்டும் — 'துரை'களுக்குப் பல்லிளிக்காது, துணியவேண்டும்.

வாழ் விழந்துபோன, 'இருபது பிணங்களின் 'சார்பில், இதை வலியுறுத்துகிருேம்.

---

## 'இலங்கை' சர்க்காரே!

'இலங்கைவாழ் திராவிட மக்களுக்கான வோட்டுரிமையைக் கொடுத்து, நீதியை நிலை நிறுத்துங்கள். ஜனநாயகத்தைக் கேலி செய்யாதீர்—வீண்போக்கு வெற்றி தராது. அதிருப்தி அனல் விரைவில் எழும்பும். அது நல்லதல்ல.' என்று, எச்சரிக்கிருேம். உணருமா இதை இலங்கை சர்க்கார்? பாச உணர்ச்சியைத் துண்டிக்கும் பாங்கில்தான் நடக்கப் போகிறதா?

---



5-ம் பக்கத் தொடர்ச்சி

ருன் ஒருவன், இப்படி என் உயிரை வாங்குகிருர்கள் தினமும்! வைகுந்தத்தில் ஒரு நாளாவது லட்சுமியுடன் நிம்மதியோடு காலங்கழிக்கலாமென்ருல் முடிகிறதோ, எல்லாம் உன் வேலை நீ செய்யும் அநியாயம்!

ஆ:- அப்படிக் கேட்டானு, உடனே செவி சாய்க்கணும்னு யார் சொன்ன.

ப:- விசித்திரமாயிருக்கு உன் பேச்சு—காங்கிரஸ் எம். எல். ஏக்களை கூட்டிவைத்து நீ பேசினயே, முதன்முதலில். எப்படி ஆட்சி நடத்துவது, எப்படி காங்கிரசுக்கு வலுவு தேடுவது, என்ன திட்டத்தின்பேரில் வேலை செய்வது என்று தானே பேசவேண்டும். நீ, பஜனை கோவில் பாகவதர் பாணியிலேபேசிவிட்டாய். 'உங்களுக்கெல்லாம் தெய்வநம்பிக்கை வேணும், அவர் இருக்கிருர் என்பதை ஒத்துண்டா மட்டும் போருது, அவர் நாம் செய்வதெல்லாம் பார்த்திண்டேயிருக்கார் — நாம் அவரை மட்டும் ஏமாத்தவேமுடியாது' என்று உபதேசம் பண்ணிவிட்டாய். அதுமட்டுமா? எங்கே எதைப் பேசச்சென்ருலும், என்னைப்பழி வாங்குவதே உன்வேலையாய்ப் போய்விட்டது. ரேடியோவில் பேசினயே, இந்தப் பதவியைஏற்றுக்கொண்டதுஎன்னை நம்பி என்ருய். ஆனல் உண்மையில் என்னை ஏமாற்றிவிட்டு, தவிக்கவிட்டு விட்டு, அங்கே போனய் என்றுதான் நான் சொல்வேன். என்னை பஜித்து, ஆத்மார்த்தத் துறையிலிறங்கப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டிருந்தாய்- அருமையான ஆள் ஒருவன் கிடைத்தான் என்று ஆசையுடனிருந்தேன். உடனே, பஜகோவிந்தம் என்று பதவிக்குத் தான்சொன்னய். சரியென்றுசெய்து வைத்தேன். நன்றி மறந்து என்னை மாட்டிவைத்துவிட்டாய். சேலத்திற்குப்போனயே, தண்ணீரைத் திறந்துவிடுகிற நீ, என்னை சந்திக்கிழுத்துவிட்டாய். இனி என்னை விடுவார்களோ! நான் தொல்லை படுவது — நீ சுகம் அனுபவிப்பது — இதுதான, பக்தன் பகவானுக்குச் செய்வது! அதுவும் வேண்டிய வரங்களை, வேண்டிய அளவு பெற்ற பக்தன், பகவானுக்குச் செய்யும் கைம்மாறு!

ஆ:- பயப்படாதிங்க ஸ்வாமி, இதெல்லாம் நேக்குத் தெரியாதுன்னு நினைச்சுட்டேளா—ஜனங்க இப்போ, என்னைத் தொல்லைப் பண்ணுவா, அது இல்லே, இது இல்லே — அதைக் கொண்டுவா, இதைக்கொண்டுவான்னு என் உயிரை வாங்கமாட்டாளா—அதுக்காகத்தான் உங்களைக் காட்டிவிட்டேன். உங்களண்டை மோதிண்டிருக்கிறப்ப, ஏதோ நம்யாலானதை செய்துண்டு போகலாம்னுதான் அப்படிச் செய்தேன். கூப்பிட்டவுடனே, அவாளண்டை ஓடிவந்து கைகட்டி நிக்க, நீங்க அவாவீட்டு சேவகன என்ன — பகவான்! பக்தாள் பலகோடி வருடங்கள் தவஞ்செய்தாலும் வாரதவா—ஒரு ஐந்து வருடகாலம் வாரம இருக்கிறதாலே தங்களுக்கு என்ன ஆபத்து வந்துடும். ஏதோ, பக்தன் ஒருத்தன் கொஞ்சநாள் சங்கடமில்லாமே இருப்பன்.

ப:- பக்தா, பலேஆள் நீ. இப்படி என்னை மாட்டிவிட்டுவிட்டு, நீ சுகமனுபவிக்கலாம் என்று பார்க்கிருய்!

ஆ:- ஸ்வாமி! அப்படித் தப்பாக நினைக்கப்படாது நான் மனுஷ்யன், சாமான்யன்—இவ்வளவு தொல்லைகளையும் தாங்கமாட்டேன். தாங்கள் தாங்கும் சக்தி படைச்சவர். என்னைப்போல அழைச்சவுடன் ஓடிவாரணும்னு அவசியமில்லாதவர். அதனலேதான் அப்படிச் செய்தேன். அதுமட்டுமில்லே, இன்னும் சிலபேர் இருக்கா—என்னைத் தொல்லை படுத்திண்டேயிருப்பா, அவாளையும் அப்படித் திருப்பிவிட்டா கொஞ்சநாளாவது தள்ளலாம்னு தான்—க்ஷமிக்கணும், ஸ்வாமி.

ப:- யாரோ உன்னைச் சொன்னர்களாமே, தசரதரும், ஜனகரும் சேர்ந்து வந்தவர் என்று — அது தவறு. நீ, நரியும், சிங்கமும் சேர்ந்து பிறந்தவன். நரியின்தந்திரமும், சிங்கத்தின் கொடுமையும் உன்னிடமிருக்கின்றன அப்பா, என்னைக்காப்பாற்று!

[ஆச்சாரியார் குறும்புச் சிரிப்பு சிரிக்கிருர். பகவான் பரிதாபத்தோடு, 'போய் வருகிறேன்' என்று விடை பெற்றுச் செல்கிருர்.]

9-ம் பக்கத் தொடர்ச்சி

மந்திரக்காளி, தொலேச்சுடறேன் பிணிகளே' என்று மருத்துவத் துரையறியா மந்திரவாதி கூறுகிறனே, அவன் போதுமே. ஆச்சாரியாரா தேவை—இதைச் சொல்ல!

"கடவுளைத் துதியுங்கள்"— சாணக்கியப் பரம்பரையின் சாகாத மூளையைத் தாங்கியிருக்கும் ஆச்சாரியார், இன்று, எதற்கெடுத்தாலும் பாடும் பல்லவி இது. கடவுளைத் துதித்தால் சரியாகிவிடுமாம்—சொல்கிருர், ஏதோ புது முறையைக் கண்டுபிடித்தவர்போல. இங்கிருப்போரென்ன, எல்லோரும் கடவுளைத் துதிக்காததனுல்தாளு, இக்கேடு வந்துவிட்டது? எந்தக் கோயிலிலும் அர்ச்சனேயோ ஆராதனேயோ குறைந்ததாகக் கேள்விப்படவும் இல்லேயே நாம்! புதிய தங்கரதம் செய்ய பொருள் சேர்த்துக்கொண்டுதான் இருக்கிருர்கள் — திருப்பதி திருப்பணியாளர். பலப்பல இடங்களில் கும்பாபிஷேகங்களும் நடந்துகொண்டுதான் உள்ளன. பஞ்சமும் பட்டினியும் நாட்டிலிருக்கிறதே ஒழிய கஞ்சி காமாட்சியின் வீதி உலாவும், ஆரூர் தியாகேசனின் பங்குனி உத்திரமும், எட்டுகுடி முருகனின் சித்திரை விழாவும், ஏழுமலேயானின் சனிவார உத்சவமும், ஓயவில்லேயே! எப்போதும் போல—எங்கும்—அவை நடைபெற்றுக்கொண்டுதானே உள்ளன. அப்படி, எங்காவது ஓரிடத்தில் நடைபெறவில்லே யென்ருல், உடனே கவனிக்க தனி மந்திரியும் இருக்கிருரே! இந்துமத தர்ம பரிபாலன போர்டு இல்லாமலா போய்விட்டது!!—இருந்தும், ஏன் சொல்கிருர் ஆச்சாரியார்? கடவுளைத் துதிக்க வேண்டுமாம்!—வயலோரத்திலே வாடும் உழவன், வெயில் ஏறி வெகு நேரமாகியும், கஞ்சி வராததைக் கண்டு, கலங்கும்போதுகூட 'கடவுளே!' என்றுதான் கூப்பிடுகிருன்.

"எல்லாம் வல்ல அவரை" எப்போதும் போலத்தொழுதபடிதான் இருக்கிருன், ஏழை. ஆனுல் அவனது கஷ்டம் மலேபோலாகிக்கொண்டிருக்கிறது—கழனியில் நீருமில்லே, பயிருமில்லே—கவலேதோய்ந்த கண்களோடு ஒரு பக்கம் குடும்பத்தையும், மற்ருேர்பக்கம் வானத்தையும் அண்ணுந்து பார்க்கிருன். அவன் விரும்புவது, நல்வாழ்வு! அதைத்தரக்கூடிய நல்லாட்சி!! ஆனுல், அதைச் செய்யவேண்டிய பொறுப்பில் உட்காரவைக்கப்பட்டவரோ, போதனேகள் புரிகிருர் — 'வயதானவன் சொல்வதைக் கேளுங்கோ!" என்று, வார்த்தை ஜாலம் செய்கிருர். பக்தர்களெல்லாம் சேர்ந்து 'மகானுபாவா; மழையில்லே—பாபிகள் பெருத்ததால். நீராவது கண்பாரும் பூலோகத்தில் பக்தியைப் பெருக்கி பருவ மழையைக் கொண்டுவாரும்' என்று கூறவில்லே. கூருதபணியை செய்கிருர்! தேவையில்லாத வேலேகளில் ஈடுபடுகிருர்—அதற்கு தனது 'தள்ளாதநிலே'யை, ஆதாரத்துக்குவைக்கிருர். வெரும் வாய்ப்பந்தல்! வார்த்தை ஜாலம்!!—இரண்டாலும், காலந்தள்ள எண்ணுகிருர். பொல்லாதவேலே—தள்ளாதவயதில்.

✲

## கிரிப்ஸ்

இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்க நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது மூலபுருஷராக விளங்கியவரும், அட்லீ மந்திரி சபையில் பொக்கிஷ மந்திரியாகப் பணிபுரிந்தவருமான சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஏப் 21, அன்று காலமானுர் என்ற செய்தி நம்மை வருத்தத்தில் ஆழ்த்திற்று. 63 வயதுள்ள இந்தஅறிஞர் இந்தியாவின் வளர்ச்சியிலும் வாழ்விலும் அக்கரைகொண்டவர் எனப் போற்றப்பட்டவராகும்.

சாந்தகுணமும் நல்உள்ளமும் கொண்ட இந்த பேரறிவாளர் தீட்டிய சிலநூற்கள் சிந்தனேக்கான விருந்தாகும்.

பிரிட்டிஷ் மக்களது அரசியல் தலேவர்களில் ஒருவர் இறந்துவிட்டார். இவரது பிரிவு தாங்கொளுத் துயரத்தைத் தந்திருக்கும்.

பிரிட்டிஷ் மக்களின் துயரத்தோடு நாமும் பங்குகொள்கிறேம்.

## மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி

காங்கிரஸ் பாசீசத்தின் வீழ்ச்சிக்காகப் பெரும் பாடுபட்ட வீரன் மஜீத்—அந்த முயற்சியிலே வெற்றியுங் கண்டபிறகு, வெறியன் ஒருவனுல் கொல்லப்பட்ட செய்தி நம் இதயத்தைக் கலக்குகிறது. மஜீத்தை இழந்து, தவிக்கும் குடும்பத்தைக் காக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் நம்முடையது. தென்னுற்காடு மாவட்டத்தில், நெல்லிக்குப்பம் பகுதியில், தேர்தலில் தீவிரமாகஉழைத்து அங்கேயே கொலேயுண்ட தீரன்—அந்தத் தீரரின் குடும்பம் சீர்குலேந்து நிற்பதை யாரும் பார்க்க முடியாது. கடமையை நிறைவேற்றி, அதனுலே மடிந்துவிட்ட ஒரு கர்மவீரனே நாட்டுக்குத் தந்தவர்களேத் தவிக்க விடலாமா? நண்பர்களே, கடமையைச் செய்யுங்கள்.

| | |
|---|---|
| சென்றவாரம் வரை | 41—0—0 |
| எஸ். கணேசன், மெய்யூர் | 1—0—0 |
| K. ராஜேந்திரன், சென்னே வண்ணுரப்பேட்டை மூலம் | 7—2—0 |
| S. I. ஷம்சுதீன், சென்னே | 10—0—0 |
| எம். எஸ். மணி, திருச்சி மூலம் | 10—0—0 |
| வள்ளுவர் ஸ்டோர்ஸ் அலுவலாளர்கள், தூத்துக்குடி | 26—0—0 |
| மதுராந்தக தோழர்கள் | 10—0—0 |
| ஆர். தங்கவேல், தேவி நாய்க்கன்பட்டி | 0—4—0 |
| காளிமுத்து, மேல் கற்கண்டார் கோட்டை | 5—0—0 |
| செ. விசாலாட்சி, சென்னே | 2—0—0 |
| K. அருணுசலம், திண்டுக்கல் | 0—8—0 |
| D. K சாமி பெங்களூர் | 1—0—0 |
| காசி அய்யா, குடிகாடு | 5—0—0 |
| | 118—14—0 |

சென்றவாரம், டி. மயில்வாகனம் ரூ. 2. என்பதை ரூ. 1. என்று திருத்திப் படியுங்கள். மேலும் நிதி தர விழைவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.

மஜீத் பாதுகாப்பு நிதி
'திராவிடநாடு' அலுவலகம்
காஞ்சிபுரம்.

வீடு வீடாகச் சென்று, உறுப்பினரை



2-ம் பக்கத் தொடர்ச்சி

ஒத்துழைக்கவேண்டும்' என்பதன் பொருள் என்ன? பாலிலே தண்ணீரைக்கலந்து தருகிருர் பால்காரர்—வீட்டுக்கார அம்மா 'என்னப்பா இப்படிச் செய்கிறுயே' என்று கேட்டால், 'அம்மா! நீங்கள் இந்தப் பால் வினியோக விஷயத்தில் ஒத்துழைக்கவேண்டும்' என்று கூறினுல் என்னவென்று கருதுவது? அம்மாவுக்குத் தேவையானது நல்ல பால். பால்காரர் செய்வதோ அக்கிரமம். அக்கிரமத்துக்கு ஒத்துழைப்பு தரவாசெய்வர்! நல்லாட்சி இல்லே என்று கதறுவோரைப் பார்த்து, 'ஒத்துழையுங்கள்' என்ருல், பால்காரர் சொன்னதைப் போல, 'பால் இப்படித்தான் இருக்கும். பதருதீர்கள். பொறுத்துக் கொள்ளுங்கள்' என்பதுதானே பொருள். 'பொறுத்துக்கொள்— அநியாயமாகத்தான் இருக்கும் அரசாங்கம்' என்று நேரிடையாகக் கூறமுடியாததால், அன்பர் ஆச்சாரியார், 'ஒத்துழையுங்கள்' என்கிருர்—இந்த விருத்தத்துக்குச் சுதியாக தனது விருத்தாப்பியத்தைச் சுட்டிக் காட்டுகிருர்.

"ஆட்சி இப்படித்தான் இருக்கும்—பொறுத்துக்கொள்க" என்று கூற இவர் ஏன்? திறமைசாலி இவர் என்று செப்புகின்றனரே! இதுவா, திறமை? சர்க்கார் இப்படித்தான் நடக்கும்—வாய் திறவாதீர் என்று கூற திறமையா தேவை? தெரு சுற்றும் 'மைனர்' போதுமே—'குடும்பம் இப்படித்தான் இருக்கும்—வாய் திறவாதே' என்று மிரட்டும் அவனேவிட எந்தவிதத்தில் உயர்ந்தவர்?—வீதி சுற்றுவோனுக்குக் குட்டிக் கதைகள் தெரியாது—குல்லூகபட்டருக்குக் குட்டிக் கதைகள் தெரியும்—என்பதைத் தவிர!

ஒத்துழைப்பு கோருகிருரே, இவர். மக்கள் எப்போதுதான் ஒத்துழைக்க மறுத்தார்கள்—காட்ட முடியுமா? குமுறும் வயிற்றை அடக்கி அடக்கிப் பார்த்தும் முடியாததால் 'ஐயா பசிக்குது!' என்று வேதனேயோடு கூறியதைத் தவிர, வேறு என்ன செய்தார்கள்! வேகமாகப் புறப்பட்டு, சென்னே செகரிட்டேரியட்டுக்குச் சென்று, மந்திரிகள் அறைக்குள் புகுந்து, அவர்தம் கையிலுள்ள பேனுக்களேப் பிடுங்கவா செய்தார்கள்! அல்லது பொக்கிஷத்துக்குள் புகுந்து, 'பணம் கொடோம்' என்று பலாத்காரம் செய்தார்களா? கேட்ட வரியைத் தர மறுத்ததில்லே, மக்கள்! போட்ட உத்திரவுகளே மீறவில்லே நாடு! இருந்தும் இந்தப் புனிதர் ஒத்துழைப்பு கோருகிருர். 'ஒத்துழைப்புவேண்டும்' என்று கூறிவிட்டு, உடனே, மற்ருேர் போதனேயும் செய்கிருர் — 'நமக்கெல்லாம் அவசியமானது அடக்கம்'—சேலத்தில் பேசுகையில் கூறியது, இது. அவசியமாம், அடக்கம்! தாசிலோலன், கண்ணீர்விட்டு "தாதா! இது நியாயமா?" என்று கதறும் மனேவிக்குச் சொல்வதுபோல, 'அடக்கம் வேண்டும்' என்கிருர் பசுவைப் பார்த்து புலி கூறுகிறது இதனே! என்ன பொருள் இதற்கு? நான் பாய்ந்து வருவேன் உன்னேத் தின்ன—நீ ஆடாது அசையாது இருப்பாய்! நான் வீடு வீடாகப் போவேன்—நீ பேசாது இருக்க வேண்டும்!! புலியும் பசுவும்! தாசிலோலனும் தையலும்!! ஆச்சாரியாரும் மக்களும்!!!—வேறு என்ன கூற முடியும் இதைப்பற்றி. வேதனேப்படுகிறது நாடு — அந்த வேதனேக்குக் காரணம் காங்கிரசின் போக்கு என்பதையும் உணர்ந்தது அந்த கைப காங்கிரஸ் பலன் செய்யாது—ஆகவே அதன் ஆட்சி கூடாதென்னும் முடிவு வழங்கிற்று. ஆனுல் அந்த முடிவை அலட்சியம் செய்துவிட்டு, அமர்ந்திருக்கிருர் ஆச்சாரியார்! பூனேபோலப் பதுங்கி, புலிபோல பாய்ந்து அமர்ந்திருக்கிருர்! அவரை, அரியாசனத்தில் அமர்த்த 'ஐந்து' ஆண்டுகளாக ஆசைபட்டுக் கிடந்தோர். 'ஆச்சாரியார் ஆட்சியிலமர்ந்ததேன்?' என்று, கண்களால் கேட்கும் மக்களுக்குப் பதில் சொல்கிருர்கள்—பத்திரிகைகள்மூலம். "நிர்வாகம் ஒழுங்காக நடக்கவேண்டுமல்லவா? அதற்குத்தான் ராஜாஜியை அழைத்து வந்தோம்" என்பதாக. ஆனுல், நிர்வாகப் புலி என்று சித்தரிக்கப்பட்டவர் நீண்ட போதனேகளேத் தவிர வேறெதுவும் செய்யவில்லே.

"அரிசி ரேஷனே உயர்த்துவீர்களா?" என்று, இந்த 'நிர்வாகப் புலி'யிடம் சில நிருபர்கள் கேட்டனராம். அதற்கு, அவர் பதில் கூறினராம். "கடவுளேத்துதியுங்கள். மழைபெய்யும்" என்பதாக. கேள்வியையும் பதிலேயும் பாருங்கள். "ஐயா! கிராமம் முழுமையும் காலராவுங்க" என்று, கிராம முன்சீபு தெரிவிக்கிருர். "காலராவா! போய் ஊர்க்கோடி காளிக்கு நல்லா பூஜை போடு" என்று, ஹெல்த் இன்ஸ்பெக்டர் சொன்னுல் என்ன அர்த்தம்? காளியைக் கும்பிட்டால் காலரா போய்விடுமென்ருல் ஏன் ஹெல்த் இன்ஸ்பெக்டர்? எதற்காக சுகாதார மந்திரி? 'ஐயா பசிக்குது' என்ருல், அரனேயும் அரியையும் அமைச்சர் காட்டுகிருர். பூஜாரியின் வேலே இது! பூமிபாளப் பிறகேன் கட்சிகளும் அமைச்சர்களும்? 'சூ!

(8-ம் பக்கம் பார்க்க)

தின, வார, மாத வெளியீடுகளுக்கும்,
புத்தகங்களுக்கும் தேவையான
அழகிய தமிழ், ஆங்கில
அச்செழுத்துக்களுக்கு
சிறந்த இடம்

மாடல் டைப் பவுண்டரி

விலே மலிவாகவும்
நீடித்து உழைப்பதாகவும்
இருக்கும் என்பதில் ஐயமில்லே

2/59. கெங்காதரேஸ்வரர் கோயில் தெரு.
புரசவாக்கம், :: சென்னே—7.

குடும்பம் குடும்பமாகச் சேருங்கள்

# 'சோஷியலிஸ்ட்" சொல்கிறது!

['வடநாட்டு ஆதிக்கம் கூடாது' என்கிறகுரல் தமிழகத்தில்மட்டுமே ஒலிப்பதாக, இங்குள்ள சிலர் கூறித் திரிகிறார்கள். வடக்கத்தி மார்வாடிகளின் சுரண்டலுக்குப் பலியான கேரளத்திலும் ஆந்திரத்திலும் அந்த முழக்கம், எழும்பாமலில்லை. நமக்கிருக்குமளவு ஆவேசம் ஆங்காங்கே வாழும் உண்மை விரும்பிகளிடமும் பெருத்த அளவில் இருக்கிறது. ஆனால், பத்திரிகா உலகம், அவைகளைப் பரப்புவதில்லை—பார்ப்பனரிடமும் பனியாக்களிடமும் இந்நாட்டு பத்திரிகை இயந்திரங்கள் கிடப்பதால். கேரளத்தின் புதுமைக் குரலை விளக்கும் கட்டுரையொன்றை கீழே தந்திருக்கிறோம். கடந்த 6-4-52 அன்று மலையாள வார இதழ் ஒன்றில் 'கல்கத்தா அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம்—படிக்க முயலாதவர்களின் கூத்தாட்டம்' என்ற தலைப்புடன் வெளிவந்த கட்டுரையாகும். இந்த வார இதழ் பெயர் 'சோஷியலிஸ்ட்'. தோழர் K. சுதாகரன் B. Com. என்பவரை ஆசிரியராகக் கொண்டது. கேரள சோஷியலிஸ்டு கட்சி (K.S.P) யின் முக்கிய இதழ், இது! அது எழுதியிருக்கிறது, இக்கட்டுரையை. கேரளம் — வடவர் பிடியிலிருந்து மீளவேண்டும் என்ற கொள்கை முழக்கம் எதிரொலிப்பதைக் காணலாம். ஆச்சரியப்படுவீர்கள்! சோஷியலிஸ்டு கட்சியா இப்படி கூறுகிறது என்று. ஆமாம்! ஆனால் ஒன்று. கேரள சோஷியலிஸ்டு கட்சிக்கும், இந்திய சோஷியலிஸ்டு கட்சிக்கும் பெருத்த வேற்றுமைகள் உண்டு. இந்தக் கட்டுரையை கூர்ந்து படித்தால்—மலையாள மக்களின் 'உளம்' தென்படும். மலையாளத்திலிருந்து தமிழாக்கி இதைத் தருபவர் திருவாங்கூரைச் சேர்ந்த சித்தூர் அறிவு வளர்ச்சி சங்கச் செயலாளரான தோழர் சி. கந்தப்பன்—ஆ-ர்]

கேரளம் அளித்த தீர்ப்பு—தமிழ்நாடு உணர்த்திய உண்மை—ஆந்திரம் அறிவித்த அபாயம் — மகாராஷ்டிரம், வங்காளம், பஞ்சாப் நாட்டு மக்கள் விரும்பிய எண்ணங்கள்—இவ்வளவையும் தெரிவித்தது சென்ற பொதுத் தேர்தல். ஆனால் நேருவும் அவரது அடிவருடிகளும் அதை புரிந்துகொள்ளுவதில்லை. தெரிந்துகொள்ள முயலுவதுமில்லை! ஒருக்கால் அதைப்பற்றிச் சிந்தித்தாலும் அதன் மதிப்பை உணருவதில்லைபோலும்! கேரளத்தில் காங்கிரசின் படுதோல்வியைக் கண்டனர், கேட்டனர் கனம்கள். சுதந்திர கேரளத்திற்காகவும் ஐக்கிய கேரளத்திற்காகவும் போராடியவர் வெற்றிபெற்றனர் இங்கு. திராவிடநாடு கேட்போர் வாகை சூடினர் தமிழ்நாட்டில். ஆந்திரம் அபாயத்தை அறிவித்தது, சுதந்திரத்தைப் பரிக்கும் காங்கிரஸ் சீமான்களுக்கு. மகாராஷ்டிரத்தில் (பம்பாய் மாகாணம்) மூக்கறுபட்டது காங்கிரஸ். எதிர்க் கட்சிகள், பஞ்சாபிலும் வங்காளத்திலும் ஒன்று சேராததால், காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்தாலும், சுதந்திர உணர்ச்சி அங்கு குன்றுபோல் உயர்ந்திருந்தது. சுதந்திர உணர்ச்சி கொண்ட கட்சிகள் அடைந்த வெற்றியைத்தான் காங்கிரசின் தோல்வி தெரிவிக்கும் உண்மை. இந்த சுதந்திர உணர்ச்சியை. ஆவேசத்தைப்பற்றி, குஜராத்தி-மார்வாடிகளும் அவர்களது காங்கிரசும் சிந்தித்தது கிடையாது. ஆனால் சுதந்திரப் புயல் அவர்களது மணல் வீடுகளை முறித்தெறிந்ததை நாம் அறிவோம். அதே புயல்தான் அவர்களை மண்ணோடு மண்ணாக்கவும் போகிறது.

வகுப்பு வாதம், சுதந்திரத்தை சிதைத்து விடும், பலத்தை பொசுக்கிவிடும், ஐக்கியத்தை அழித்துவிடும்—இப்படி திட்டிக் கொண்டு பிரசங்கம்செய்தார்கள் அங்கு நேரு, தாண்டன் முதலியோர்.

காஷ்மீர் பிரச்சினை அவர்களுக்கோர் தலைவலி! காஷ்மீர் முஸ்லீம்கள் இந்தியாவை விட்டு நீங்கிவிட்டால் நேருவின் அதிகார எல்லை குறைந்துவிடுமே! இதுதான் தலைவலிக்கு முக்கிய காரணம் பஞ்சாபின் சுதந்திரக் கொடியை அங்கு பறக்கவிடுகிறார் தாராஸிங். இவைகள் அத்தனையும் நேருவின் அகன்ற கண்ணிற்கு தோன்றுவது வகுப்புவாதம்! மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு சுதந்திரம் அளித்துவிட்டால் அதிகாரம், அதுவும் ஏகேச்சாதிகாரம், சர்வாதிகாரம் குஜராத்தி — மார்வாடிகளுக்கு செலுத்த முடியாதே! இந்தியா முழுவதும் அவர்களது சொந்தம் என்பதை நிலைநாட்ட போராடுகிறார்கள். இந்த போராட்டத்தில் பிர்லாவும் டால்மியாவும் முக்கிய பங்கு எடுத்துக் கொண்டார்கள்—கொள்கிறார்கள். அதாவது பணத்தைக் கொண்டு காங்கிரசுக்கு உதவுகிறார்கள். தேசிய இதழ்கள் மூலம் நேருவையும் பட்டேலையும் உயர்த்தோராக்கினர். இந்தமுறையில்தமது அதிகாரத்தை அதிகரித்து வரும் வேலையில்தான் ஜின்னு அவர்கள் பாகிஸ்தான் வேண்டுமென்று உரிமை முழக்கம்செய்ததும் வெற்றி பெற்றதும். ஜின்னு உண்மையை உணர்ந்தார் உரிமை முழக்கம் செய்தார். இங்குள்ள கனம்களுக்கு அது தெரிந்து கொள்ள முடிவதில்லை!

பாகிஸ்தான் பிரிந்து போய் விட்டது. இனி ஒரு அங்குலம் கூட விட்டுக் கொடுக்கப் போவதில்லை. "காஷ்மீரை விட்டுக் கொடோம். வருடா வருடம் கோடிக் கணக்கில் ரூபாய் செலவானாலும் அதைவிடப் போவதில்லை. காஷ்மீருக்காக போரையே தொடுத்திடுவோம், பாகம் பண்ணவிட மாட்டோம். பஞ்சாப் பிரிந்து போவதை அனுமதியோம். ஆந்திரத்தின் அதிகாரத்தை அதன் கையில் கொடுப்பது இயலாத காரியம். யாவும் மத்திய அரசாங்கத்தின் கீழ் தான் இருக்க வேண்டும். பிரிந்து போகும் மனப்பான்மையை அனுமதியோம். குழப்ப மனப்பான்மையை குழிதோண்டிப் புதைப்போம். இந்தியா ஒன்றல்லவா! ஒரே இனம்! ஒரே நாடு! அதை ஆளும் அதிகாரம் குஜராத்தி—மார்வாடிகளிடம்தான் இருக்க வேண்டுமென்று அவர்களைப் படைத்த ஆண்டவனே அறிவிக்கிறான்! ஆகையால் ஐக்கியம், ஐக்கியம், இன்றைக்கு தேவையானது மட்டுமல்ல, உரிமை முழக்கம் கூட" — இந்த முறையில் சிந்திக்கிறார்கள் ஆகஸ்ட் தியாகிகள்.

தேர்தலின்போது திரு—கொச்சிக்கு சுற்றுப் பிரயாணத்திற்கு வந்திருந்த நேரு, "குஜராத்தியே வெளியே போ" என்று மதில் மேல் எழுதிவைத்திருந்ததை கண்டுற்றார். கலங்கிவிட்டார்! பின் களிடபாடுவார்? ஆறுதல் கூறுவதுபோல் ஆத்திரம் கொண்டார். டெல்லி செக்ரட்டரியேட்டிலிருந்து மலையாளிகளை நாங்கள்புறக்கணிட்போம் என்று பயமுறுத்தினர். சுதந்திர கேரளம் வேண்டுமென்போர் பள்ளிக்கூடம் சென்று படித்துவர வேண்டுமென்று தன் அவாவை — உபதேசத்தைவெளியிட்டார். அந்த உபதேசத்தில் ஓர் புதுமையும் இருக்கவில்லை. பாகிஸ்தான்வேண்டுமென்று உரிமைமுழக்கம் செய்த ஜின்னுவிடமும் இதே உபதேசமதான செய்தார். பள்ளிக்கூடம் சென்று படித்துவரச் சொன்னர். ஆனால் ஜின்னு சென்றதோ கல்வி கற்க அலல காரச்சியின் அரியாசனத்திற்கு. கேரளமக்களை பள்ளிக்கூடம் போகச்சொன்ன நேருவுக்கு கிடைத்த பலன் என்ன? நேருவின் காங்கிரசை சரித்திரத்தின் கண்காட்சி சாலைக்கு அனுபபினர்கள் கேரள மக்கள்! — தோல்வியின் அடித்தளத்திற்கு அனுப்பினர்கள்! இன்று திரு — கொச்சியில காங்கிரஸ் ஆட்சி புரிவது மூன்று ஓட்டு மெஜாரிட்டியால். அந்த மூன்று ஓட்டிற்கும் ஆயுசு அதிகமில்லை. இந்தஉண்மையை நேரு அறியாரா?

இந்தியா ஒரு நாடாம்! இந்த ஒன்றென்னும வார்த்தை எல்லா சாம்ராஜ்யவாதிகளும் முழங்கியிருக்கிறார்கள் கடைசியில் தொலைந்து மண்ணுக்கிரையாகியும் இருக்கிறார்கள். பிரமாண்டம் முழுவதும் ஒன்றெனக்கூறிய புராண மகரிஷிகளை வேண்டுமானாலும் சிறந்தோரென்று கூறிவிடலாம். ஆனால நேரு அதையும மிஞ்சிவிட்டார்! கால அலைகள் ஆசையின் பாறைகளை உடைத்தெறிந்திருக்கிறது. ஒன்றிரண்டாகவல்ல நூற்றுக்கணக்கில — அது மட்டுமல்ல மணல்பொடிகளாகவும்கூட. இவையெல்லாம் கூறி என்னபயன்!

நேரு உயர்ந்தவராயிருக்கலாம். அவருடைய அபிப்பிராயங்கள் விலைமதிக்கக்கூடியதாயிருக்கலாம். அதைப்பற்றி எங்களுக்குவிரோதம் கிடையாது. ஆனால் மக்களின் வேண்டுகோளுக்கு முன்—அவனுக்கு முன் எவரும் தலைகுனிந்தே தீரவேண்டும். அந்த முறையில் பார்க்கும்போது நேரு இந்தியாவின் ஓர் சாதாரண மனிதன்மட்டும்தான். மோதிலால் நேருவின் மகன்—கமலா நேருவின் கணவன்—இந்திரா காந்தியின் தந்தை — அன்று சுதந்திரத்திற்காக சத்தம்எழுப்பியிருக்கலாம். ஆனால் இன்று சுதந்திரம் கோறுவோர்மீது சீறிவிழுகிறார். அன்று சிறைசென்று தியாகங்கள் செய்திருக்கலாம். ஆனால் இன்று ஆயிரக்கணக்கில் மக்களை சிறைக்கனுப்பும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார். மாகாண எல்லையைவிட்டு அனைவர் சிந்தனையும் உயரவேண்டுமென்று நேரு கோறுகிறார். ஆனால் அவரது சிந்தனை இந்தியாவைவிட்டு உலகப் போக்கைக்காண மறுக்கிறது.

டெல்லி செக்ரெட்டரியேட்டிலிருந்து மலையாளிகளை திருப்பி அனுப்பிவிடுவோம் என்ற கூச்சலை நாம் ஏற்கத்தயார்! கேரளபூமியிலிருந்து குஜராத்தி — மார்வாடிகள் அவர்களது கொள்ளையடியைவிட்டு வெளிக்கிளம்ப தயார்தானா? கொச்சி துறைமுகத்திலிருந்து கிடைக்கும் சுங்கப்பணமும், அதன் மூலம் அடையும் வெளிநாட்டு நாணயங்களும், வருமான வரியும் இன்னும் பலதும் நமக்கு விட்டுக்கொடுப்பார்களா? வருடமொன்றுக்கு மிளகு மூலம்வரும் ஏற்றுமதி வரி இருந்தால் போதும் டாட்டா கம்பெனி போல ஆறு தொழிற்சாலைகள் உண்டுபண்ண. ஆறுயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கலாம். நேருவானாலும் சரி, உரைத்திட்ட அந்த வார்த்தை அனாவசியமானது. அவர் மூதாதையர் தேடி வைத்த சொத்தல்ல டெல்லி செக்காட்டரியேட், அங்கு அனைவருக்கும்சமஉரிமை உண்டு. யாரும்யாரையும் திருப்பி அனுப்புவேன் என்று சொல்லிப் பயப்படுத்த வேண்டியதில்லை. அப்படி அவர்கள் மலையாளிகளையும், தமிழர்களையும், தெலுங்கர்களையும் திருப்பி அனுப்புவதாயிருந்தால் செக்கரட்டரியேட் என்ற ஒன்று அங்கிருக்காது என்பதை நேரு மனதில் பதியவைக்க வேண்டும்.

இப்படி இருந்தும் அவர்களுடைய போக்கைப் பார்த்தால் நாதியற்ற மலையாளிகளை டெல்லி செக்கரட்டரியேட்டில் இடம் கொடுத்து உதவுகிறார்கள் என்று தோன்றும். இப்பேர்ப்பட்ட எண்ணம் — முதலாளித்துவ எண்ணம் அவர்களது மனதைவிட்டு அகலவேண்டும். இந்தியா முழுவதும் தங்களுடைய தென்ற வீண்எண்ணத்தை வடநாட்டார் விட்டொழிக்க வேண்டும். கௌன்சிலையும் சீப் செக்கரட்டரிகளையும் நியமித்து அனுப்பும் முறையை நிறுத்தவேண்டும். கேரளத்தின் எந்தவித விஷயங்களையும் ஆராய கேரள மக்களுக்கே சகல உரிமையும்விட்டு கொடுக்கவேண்டும். இல்லாவிடில் அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு நிச்சயமாக கிடைப்பது பூஜ்யம்தான்.

சிறுத்தைகளின் புள்ளிகள் தானாக மாய்ந்துவிடாது. குஜராத்தி—மார்வாடிகள் தங்களது வஞ்சகப் போக்கை அவர்களாகவே மாற்றிக் கொள்ளமாட்டார்கள். இதை நாம் அறிவோம். பொதுத்தேர்தல் அளித்த பாடங்களைப்பற்றி ஆராய முற்பட்ட கல்கத்தா அ. இ. கா. க. அப்பாடத்தின் சரியான பொருளை தெரிந்துகொள்ளவில்லை என்பதை எடுத்துக் காட்டவே இத்தனையும் உரைத்தோம்.

வடநாட்டு சாம்ராஜ்ய விரும்பிகளின்முன் உறுதியாக நின்று போரிட்டு வாகைசூட வேண்டும்.

☆

## கவிழ்ந்தது

பஞ்சாப் மாகாணத்தைச்சேர்ந்த பெப்சு ராஜ்யத்தில் அமைக்கப்பட்ட காங்கிரஸ் மந்திரிசபை கவிழ்ந்தது. ஐக்கிய ஜனநாயக முன்னணியின் மந்திரிசபை அமைக்கப்பட்டது.

———

# ஹுக்கா பிடியுங்கள்!

கவர்னராகவந்திருக்கிறார் பிரகாசா. அவர் நாட்டோரின் பூரண எதிர்ப்போடு பதவியேற்ற புண்ணியசீலர்! கூடாது, கூடாது என்று பொது மக்கள் புரட்சிக்குரல் எழுப்பியும், கவர்னராக்கப்பட்டுள்ள கனவான்! ஆச்சாரியாரின் அத்யந்த நண்பர்—அவரிட்ட கோட்டைத் தாண்டாத அரசியல் தர்மபத்தினி! அனந்தசயனம் அய்யங்கார் ஆலவட்டம் வீச, கோபால்சாமி அய்யங்கார் குதூகலத்துடன் வழிகூட்டி அனுப்ப, சந்தானம் சந்தோஷச்செய்திவிட, அக்காரவடிசலும், ஆமையடி வடையும் செய்து விருந்துண்டு, மகிழ்ந்து அக்கிரகாரங்கள் ஆடிப் பாட கவர்னராக வந்தார் பிரகாசா.

வந்ததிலிருந்து, 'அவர்கள்' மனங் குளிர பேசுகிறார்—செய்கிறார்.

பிரகாசா நிறைய பேசுகிறார்—அவர் பேசும் கூட்டங்களுக்கு குறைவில்லை.

சென்னைக்கு கவர்னர் அவர்—கவர்னர் என்றால் சாதாரணமானவரா? அதிகாரங்கள் அத்தனைக்கும் அவரே தலைமை பீடம்! கனங்களுக்கு எல்லாம் மேலான மகா கனம்! இந் நாட்டின் வாழ்விற்கும், தாழ்விற்கும் காரணமானவர்! மிகப் பெரிய பொறுப்பு — மிகப்பெரிய பதவி! அதனை ஏற்றுள்ள பிரகாசா சாதாரணமாகவா பேசுவார்! அறிவு மணங்கமழும் அற்புத யோசனைகளையல்லவா அள்ளித் தருவார்! கேட்டவரும், கேட்டவர் சொல்லக் கேட்டவரும் கேட்டுக் களிப்படையச் செய்யக்கூடிய கருத்துரைகளைத்தான் கவர்னர் கூறியிருப்பார்! அவர் பேச்சை ஏடுகள் மூலம் படித்திடுவோர் பரவசத்தோடு பாராட்டக் கூடிய உயரிய அறிவுரைகளைத்தான் உதிர்த்திருப்பார் என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள்!

நம்மையெல்லாம் திகைக்க வைத்துவிட்டார் பிரகாசா—திக்பிரமையே ஏற்படுகிறது, அவரது பேச்சைக் கேட்டவுடன்! அவர் பெயரே பிரகாசா—ஆகவே அவர் கருத்தும், செயலும் பிரகாசமாகத்தானிருக்கும் என்று எண்ணியவர்கள் எல்லோரையும் பிரமிக்க வைத்துவிட்டார், தனது பேச்சின் மூலம்!

அவர் பேச்சிலே பிரகாசம் இருக்கிறதோ, இல்லையோ, புகையடிக்கிறது — மன்னிக்கவேண்டும், புகை யென்றால், கண்ணைக் கரிக்கும் சாதாரண புகையல்ல, மூக்கைத் துளைக்கும் நெடி!

பிரகாசாவைப் பற்றிப் பேசிக் கொண்டேயிருந்தால், அவர் பேசிய பேச்சை எப்பொழுது கேட்பது என்று துடிக்கிறீர்கள். இனிமேல் உங்கள் ஆவலைத் தடுக்கவில்லை.

திருப்பதி சென்று, வேங்கடத்தானை தரிசித்துவிட்டு அவர் திரும்பிவிடவில்லை. காளஹஸ்தி சென்றார். அங்கு தங்கள் குறைகளை எடுத்துரைத்தனர் ஊரார். அவர்களுக்கு உருக்கமுடன் உபதேசம் செய்துள்ளார் கவர்னர்.

கவர்னர் பிரகாசா பேசுகிறார்—கவனமாகக் கேளுங்கள் — காதுகளைத் தீட்டிக்கொண்டு, கருத்தோடு கேளுங்கள்.

கவர்னரிடம் குறைகளைச் சொல்கிறார்கள் தொழிலாளர்கள். அவர் யோசனை அருளுகிறார். அந்த உரையாடலைக் கேளுங்கள்.

"கவர்னர் துரையே, வணக்கம்"

"நீங்கள்........"

"பீடி சுற்றிப் பிழைக்கும் ஏழைப் பிரஜைகள்".

"உங்கள் குறை?"

"குறைகள் ஏராளம் — முக்கியமானது கூலி மிகக்குறைவு"

"பைத்தியக்காரர்களே, கூலி குறைவாக இருந்தால் என்ன! ஒன்றுமில்லை யென்று சொல்லாமல் இருக்கிறார்களே—அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துங்கள்"

"விலைவாசி அதிகமாக..."

"வீண் பிரச்சினை......"

"வயிற்று சோற்றுக்கு..."

"ஐயோ போதும் — இனி நான் சொல்கிறபடிக் கேளுங்கள்"

"அப்படியே, அப்படியே"

"நீங்கள் எல்லோரும் ஹுக்கா பிடிக்கவேண்டும்"

"என்ன......"

"ஏன் விழிக்கிறீர்கள்? இனி உங்களில் யாரும் பீடியைக் கையாலும் தொடக்கூடாது—தெரியுமா? எல்லோரும் ஹுக்கா பிடிக்கவேண்டும்"

"என்னங்க......"

"கவர்னர் நான் சொல்கிறேன்—அதில் கருத்தில்லாமல் இருக்குமா? உங்களுக்கு வயிறார உணவு இல்லை—ஏன்?"

"நல்ல விளைவு..."

"விளைவு இல்லை. விளைவு இல்லாததற்குக் காரணம் வயல்கள் வளமாக இல்லை. வயல் வளமிழந்திருப்பதற்குக் காரணம்?"

"தண்ணியில்லிங்க, எஜமான்"

"தண்ணீர் இல்லாததற்குக் காரணம்?"

"மழை பெய்யலீங்களே."

"அப்படியானால், தண்ணீருக்கு என்ன செய்வது? கிணறுகள் தோண்டவேண்டாமா?"

"கிணற்றுக்கும் ஹுக்காவுக்கும் என்ன சம்மந்தம்?"

"அதுதான் கவர்னருக்கும், உங்களுக்குமுள்ள வித்தியாசம்—நீங்கள் எல்லாம் பீடியை விட்டுவிடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்—ஹுக்காவே பழக்கத்திலும் வந்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள், ஹுக்கா பிடிக்க நீர் வேண்டும். அந்த நீர் கிடைக்கவில்லையென்றால் என்ன செய்வீர்கள்—மண்வெட்டியையும், கடப்பாரையையும் தேடமாட்டீர்களா! எப்படி நம் யோசனை!!"

ஏதோ, பைத்தியக்கார ராஜாவுக்கும், விதூஷகனுக்கும் நடைபெறும் உரையாடல் என்று எண்ணிவிடாதீர்கள். இந்த முறையில், பீடித் தொழிலாளர்கள் குறைகளை நீக்க, யோசனை கூறிய பிரகாசா பேசியிருக்கிறார். ஹுக்கா பிடிக்கச் சொல்கிறார் பிரகாசா அவர் நமக்கு கவர்னர் — அவரையும் அனுமதித்திருக்கிறோம், இன்னமும் நாம்—நமக்குபெயர் மக்கள்!—நம்மையும் தாங்கிக் கொண்டிருக்கிறது இந்த பூமி—இதற்குப் பெயர் நாடு!! உம், ஹுக்காவைப் பிடித்தாவது, இந்த அவமானத்தை, புகையாக்கித் தள்ளவேண்டும்போலும்!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
35, Tirukkachinambi St., Kancheepuram.

712

REGD No M 4642

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 4—[illegible]52 | இதழ் 44

வாலாஜா

# தி. மு. க. தோழர்களுக்கு

மானங்காத்த மாவீரர்காள்!

தலை நிமிர்ந்து நடந்தேன்—நோய் கூட ஓய்வு எடுத்துக் கொண்டது—கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு அச்சம் தயை தாட்சணியத்துக்குக் கட்டுண்டு கொள்கையை இழந்து விடாமல், உறுதி எவர் உள்ளத்திலும் பாராட்டுதலைக் கிளறும் விதமாகக் கொண்டு, திராவிடம் களிக்கவும், அத்திரு நாட்டின்மீது திராவிடத்தைக் காக்கும் திருப்பணி புரிந்துவரும் தீய நோக்கினர் கலங்கவும், அறத்தினை ஓம்புவோர் மகிழவும், அதனை மறந்தோர் மருளவும், அரசியல் வட்டாரங்கள் ஆச்சரியப்படவும், அரசியலைத் தமக்குச் சுயநல வட்டாரமாக்கிக்கொள்ளும் சூதுமதியினர் வேதனைப்படவும், அன்று நீங்கள், அறப்போர்க்களத்திலே ஆண்மையுடன் நின்று வென்ற செய்தி கேட்டேன்—தலைநிமிர்ந்து நடந்தேன்.

அன்று 'கருப்புக் கொடி' காட்டிய செயலைத்தான் குறிப்பிடுகிறேன்.

மந்திரி மாணிக்கவேலர் — நமது நண்பர், அவருடைய வெற்றியை நமது வெற்றியாகக் கருதினோம்—களித்தோம். அவருடைய வெற்றிக்காக அரும் பாடுபட்டோம்—அதனைப் பெருமையாகக் கொண்டோம். நாம், இருப்புப் பெட்டிக் காரர்களல்ல—நல்ல இதயம் கொண்டவர்கள் — எனவே அவருக்காகப் பாடுபட்டு, பலன் கிடைத்ததும், அவர் சென்னை சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், பூரிப்படைந்தோம் — மார்தட்டி நின்றோம், அரசியல் மாற்றுக் கட்சிக்காரர்களைக் கண்டு, முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதி காணீர்! உழைப்பாளிச் சமூகத்தின் தலைவருக்குக் கிடைத்த வெற்றியினைக் காணீர்! மாணிக்கவேலரின் மகத்தான வெற்றியினைக் காணீர்!—என்று சிந்து பாடினோம். இந்த 'ஆனந்தக் களிப்புக்காக' சந்துமுனைச் சச்சரவினர், கனைத்துக் கலகம் விளைவிப்போர், கல் வீசிச் சொல்லை மறைக்க முயல்வோர் எனும், பல திறத்தினரின், எதிர்ப்புகளை, ஏளனங்களை, ஏசலைத் தாங்கிக் கொண்டோம்—உழைத்தோம் —அவர் வெற்றி அடைந்ததும், உள்ளம் மகிழ்ந்தோம் — ஊராருக்கும் உரைத்தோம்.

அவருக்குக் கருப்புக் கொடி காட்டித் தீரவேண்டிய நிலை பிறந்தது—அதை எண்ணும் போது, உண்மையாகவே வருந்துகிறேன். என் செய்வது, நாம், தொடர்ந்து மகிழ்ச்சியைப் பெறுவதைத் தடுக்க, களிப்பைக் கருகிய மொட்டு ஆக்குவதற்காக, 'சாணக்கியாஸ்திரம்' கிளம்பிற்று—இதோ, யாருடைய வெற்றிக்காக நாம் உழைத்தோமோ, யாருடைய வெற்றியைக் கேட்டுக் களித்தோமோ, யாருடைய பெயர் செந்தேன் போல் இனிப்பு அளித்ததோ, அவருக்கு, நாம், கருப்புக் கொடி காட்டவேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது — ஒரு தந்திரக்காரரின் போக்குக்கு, நாடு, இடம் கொடுத்துவிட்ட காரணத்தால்.

மாணிக்கவேலர், M. L. A. ஆனார்—மகிழ்ந்தோம்.

மாணிக்கவேலர் மந்திரி ஆக்கப்பட்டார்—மருண்டோம்.

மாணிக்கவேலருக்கு, 'வெற்றி மாலை' சூட்டி மகிழ்ந்தோம்.

மந்திரி மாணிக்கவேலருக்குக் கருப்புக் கொடி காட்டும், வேதனையை நாம் அடைந்து தீரவேண்டி நேரிட்டுவிட்டது, அரசியலிலே ஒரு ஆபத்தான மனிதர் நுழைந்து நடாத்திய திருவிளையாடலால்!

எவருக்காக, பட்டி தொட்டிகளிலே எல்லாம் சென்று, பரணி பாடினோமோ, எவருடைய அறிவையும் ஆற்றலையும், எதிர்க்கட்சியினரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எடுத்துரைத்தோமோ, எவருடைய முகத்திலே வெற்றிக்களை தெரிவதற்காக நமது முகத்திலே வியர்வையைப் பொழிய வைத்துக் கொண்டோமோ, அவருக்கு, நமது நண்பருக்கு, நமது உழைப்பைக் காணிக்கையாகப் பெற்று ஊராரும் மன்ற உறுப்பினராக்கப்பட்டவருக்கு, எந்தக் கரங்கள், மாணிக்கவேலருக்கு ஓட்டு அளியுங்கள்! மாட்டுப் பெட்டியிலே மண்போடுங்கள்!—என்ற தட்டிகளைத் தூக்கினவோ, அதே கரங்கள்—எந்தக் கரங்கள் அவருக்கு நமது அன்பை [illegible]

யாக மலர்மாலை [illegible]

# காகபட்டரிடம் சிவாஜி பணிந்திடும் காட்சி

அதே கரங்கள், கருப்புக்கொடிகளை ஏந்தின! வருக! வருக! — என்று வாழ்த்தினோம், உள்ளன்போடு — முகமலர்ச்சியுடன் — திரும்பிப்போ! திரும்பிப்போ! — என்று முழக்கமிட வேண்டி வந்தது, தாங்கமுடியாத வேதனையைத் தாங்கிக்கொண்டு! மாணிக்கவேலர் மந்திரி ஆக்கப்பட்டார் — நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டார்! கண்டெடுத்த தங்கத்தைக் கருப்புக் கண்ணாடியார் தட்டிப் பறித்துக்கொண்டார்! ஏழை எளியவருக்காகச் சீறிப் போரிடும் சிங்கம் என்பதால் சித்தம் களித்தோம், அந்தச் சிங்கத்தைப் பதவிக் கூண்டிலே போட்டு அடைத்துவிட்டார், பார்ப்பனீயத்தின் கடைசி பாதுகாவலர்! மாணிக்கவேலர் கிடைத்தார் நமக்கு — குணத்திலே, தரத்திலே மாணிக்கம் என்று மகிழ்ந்தோம் — திராவிடத்தின் எதிரிகளைத் தாக்கும் 'வேலர்' என்று களித்தோம், மாணிக்கவேலரை மாம்பலத்தார் அபகரித்துக் கொண்டார் — மலர்ந்த முகம் — நமக்குக் கிடைத்த பரிசு, தேர்தலின்போது ஆயிரம் தொல்லைகளைத் தாங்கிக் கொண்ட நமக்கு — அந்த மலர்ந்த முகத்தின் பொலிவுகண்டு பொறுக்கவில்லை, போலி வேதாந்திக்கு, நமது கண்களிலே வேல் கொண்டு குத்தி, வேதனையை மூட்டிவிட்டார், ஆச்சாரியார், நம்மைக் கொண்டே நமது மாணிக்கவேலருக்குக் கருப்புக்கொடி காட்டச் செய்துவிட்டார்! ஒருகல், இரண்டுபழம், என்பார்கள் — இது, அது அல்ல — ஒரு செயல், அதன் விளைவாக, எத்துணையோ வேதனை. திராவிடக் குடும்பத்திலே இருந்து ஒரு தீரரைச் சிறைபிடித்துக்கொண்டு சென்றுவிட்டார் — குடும்பத்துக்கு நஷ்டம் — கஷ்டம் — அவருக்கோ, மிக்க மகிழ்ச்சி — மாணிக்கவேலரை, அவருடைய நண்பர்களிடமிருந்து, ஆதரவாளர்களிடமிருந்து பிரித்துவிட்டேன் — குடும்பப் பாசத்தைக் குலைத்துவிட்டேன் — அதிகம் செலவுகூட இல்லை — ஒரே ஒரு மந்திரி வேலையை வீசினேன் — குடும்பம் சீர்குலைந்து கிடக்கிறது — தேர்தலின்போது குலவினார்களே, அவர்கள் இன்று குமுறுகிறார்கள் காணீர் என்று கூறுமற் கூறி நம்மைக் குத்துகிறார், குல்லூகப் பட்டர்.

"இந்த மாணிக்கவேலர்கள் எல்லாம் ஏன் காங்கிரஸ் மகாசபையை எதிர்க்கிறார்கள் தெரியுமா — பதவி மோகம்! இவர்களெல்லாம் எப்படிப் பட்டவர்கள் தெரியுமா? பட்டம் பதவி கிடைத்த பக்கம் பல்லிளித்துச் செல்பவர்கள்! இவர்களை எல்லாம் எமது தேசிய மகாசபை மட்டந்தட்டி வைத்திருந்தது — அந்தக் கோபம், வயிற்றெரிச்சல், பதவி ஆசை, காரணமாகத்தான் இந்த மாணிக்கவேலர்கள், காங்கிரசை எதிர்த்துத் தேர்தலிலே நிற்கிறார்கள்"

சொன்னார்களே, நமது காதுகளில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றுவதுபோலிருந்ததல்லவா, இந்தச் சொற்கள் — தேர்தலின்போது, காங்கிரஸ் பிரசாரகர்கள் பேசிய போது.

எத்துணை வீரத்துடன் — வீரம் கூடக்கிடக்கட்டும் — எத்துணை நம்பிக்கையுடன் நாம், மார்தட்டிக்கூறினோம் மேடை அதிரும் வண்ணம், "எமது மாணிக்கவேலருக்கா பதவி மோகம்! பித்தனே! பேசாதே அது போல்!! அவருடைய அறிவும் ஆற்றலும் அறியாததால், ஏதேதோ ஏசிப் பேசுகிறாய், அவர் நாடு வாழவும் கேடு வீழவும், ஏழை வளமாகவும் எத்தர் தொலையவும், பாடுபடும் அறப்போர் வீரர் — பதவிக்காசப் பல்லை இளிப்பவர் அல்ல" — என்று எத்தனை எத்தனைமுறை கூறினோம் — அப்பதிலுரைகள் ஒவ்வொன்றும் படமெடுத்தாடும் பாம்பாகி வந்தல்லவா, நமது இதயத்தைக் கடிக்கின்றன இன்று — நம்மை மறந்து, நமது குடும்பத்தின் நலனை மறந்து, ஆச்சாரியாரின் முகாமுக்குள் நமது மாணிக்கவேலர் இழுத்துக்கொள்ளப்பட்டார் என்று செய்தி வந்ததும், எவ்வளவு வேதனை! எத்துணை வெட்கம்! இதுவா மாணிக்கவேலரிடம் நாம் எதிர்பார்த்தபரிசு! இதுவா நமது நேசத்தின் விளைவு!

எவ்வளவு ஏளனப்பார்வையுடன் காங்கிரசார், கண்டனர், மந்திரி கும்பலின் படத்தைப் பத்திரிகைகள் வெளியிட்டவுடன்! எத்தனை விதமான கேலிப்பேச்சு, மாணிக்கவேலர், 'கன்மான' ஆப்பற்றி! நாம் எதிர்பார்த்தது என்ன — வெற்றிக்குப் பிறகு! ஆச்சாரியார் ஆனந்தமாக அமர்ந்திருக்க, அவர்பக்கத்திலே வடநாட்டுக்காங்கிரஸ்காரர் கவர்னராகக் கொலுவீற்றிருக்க, பின்புறத்தில், மாவீரர் மாணிக்கவேலர், நின்ற திருக்கோலத்தில் காட்சிதரும்படம் வெளிவந்ததே அந்தப்படம், சரிதத்திலே உள்ள சோகச் சித்திரமான காகபட்டரிடம் சிவாஜி பணிந்திடும் காட்சியை அல்லவா நினைவிற்குக்கொண்டுவந்தது — கண்களிலே நீரும், நெஞ்சிலே நெருப்பும் மூண்டதே. ஆஹா! எவ்வளவு மகிழ்ந்தோம். மாணிக்கவேலரின் வெற்றி கண்டு! எவ்வளவு சுலபமாக, வேதனையை மூட்டிவிட்டார் ஆச்சாரியார், அதே மாணிக்கவேலரைக்கொண்டு! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாமே — உண்மையாகத்தானே போயிற்று — இதோ மாலைக்காக நம்முன் மகிழ்ச்சியுடன்நின்ற மாணிக்கவேலருக்கு, கருப்புக்கொடி காட்ட வைத்துவிட்டாரே, ஆச்சாரியார், பத்தோடு பதினொன்று என்றமுறையிலே, மாணிக்கவேலரைப் பதவியில் அமரச்செய்து! மாணிக்கவேலருக்கும் நமக்கும் எவ்வளவுமகிழ்ச்சிகரமான 'நேசம்' உருவாயிற்று சுந்தரமாகவளர்ந்துசெல்லும்தோணியைக் கவிழ்த்துவிடும் சுழல்போலக் கிளம்பினாரே, சுந்தரகாண்ட பாராயணப்பிரியரான ஆச்சாரியார், நேசத்தை நாசமாக்கி விட்டாரே! மாணிக்கவேலருக்கும் நமக்கும் இடையிலே மனமாச்சரிய மடுவை வெட்டிவிட்டாரே! இதனெண்ணும் போது, உள்ளம் வேதனைப்படுவது மட்டுமல்ல, வெட்கம் பிறிட்டு வருவது மட்டுமல்ல, எவ்வளவு ஆபத்


## விளம்பரம்

A. K வேலன் எழுதிய
இலட்சியக் கனவு 0—6—0
புத்தன் தொடுத்த போர் 0—6—0
எமது அடுத்த வெளியீடு
புலிகேசி எழுதிய
கன்பூஷியஸ் (அச்சில்)
கழிவு 25% செலவு இனம்
ஜெகநா பதிப்பகம்
தெப்பக்குளம், திருச்சி.




# தூற்றியதே காங்கிரஸ் அணைக்கிருரே இவர்!

தான மனிதர் ஆட்சிப்பீடம் ஏறி இருக்கிறார் என்பது புரிகிறதே, அச்சம்கூடக் கிளம்புகிறதே! நினைத்தாலே நெஞ்சு நோகும் நிலை அல்லவா! மாணிக்கவேலர் யார்? நாம் யார்? எப்படிப்பட்ட 'நேசம்' மலர்ந்தது — எவ்வளவு இலேசாக அதனை நாசமாக்கிவிட்டார் ஆச்சாரியார், நண்பர் மாணிக்கவேலரைக் 'கனமாக்கி'. தோடோ தொங்கட்டமோ செய்து, குழந்தைக்குப் போட்டு மகிழலாம், என்று பூரிப்பான வைரத்தை வாங்கிவரும் சீமானுக்கு, அதே வைரத்தைப் பொடியாக்கித் தீயவன் ஒருவன், உள்ளுக்குக்கொடுத்துவிட்டால் — என்ன ஆகும்! மாணிக்கவேலரின் வெற்றி, வைரம்போல், ஒளிவிட்டது! திராவிடம் களித்தது! ஆச்சாரியார் அந்த வெற்றி வைரத்தைத் தூளாக்கித் திராவிடத்துக்குத் தருகிறாரே, என்னென்பது! இவ்வளவும் செய்துவிட்ட ஆச்சாரியார், இகத்தைவிடப் பரமே மேல் என்று பேசிக்கொண்டு பவனி வருகிறார், இங்கே நாமோ, வேதனையில் தள்ளப்படுகிறோம்.

"என்னமோ இந்தப்பயல்களெல்லாம் ஓடி ஆடிப் பாடுகின்றன, ஓங்காரக் கூச்சலிட்டு ஆங்காரப்பேச்சுப் பேசி அலைந்து திரிகின்றன, மாணிக்கவேலருக்காக — கடைசியில், அவர், 'இதுகளை'ச் சட்டை செய்யப்போவதில்லை. எங்கே பதவி கிடைக்கிறதோ அந்தப்பக்கம் பாய்வார், இதுகளின் முகத்திலே கரி பூசப்போகிறார், பார், பார்!" — என்று காங்கிரசார் சிலர் பேசிய போது, எரிச்சலாக இருந்தது — இன்று அதை எண்ணிக் கொண்டாலே வேதனையாக இருக்கிறதே!

நம்மை எல்லாம் இவ்வளவு வேதனைக்கு ஆளாக்கினாலும் பரவாயில்லை ஒரு மந்திரி வேலை கிடைத்தால் போதும் என்று எண்ண வேண்டிய நிலையா, மாணிக்கவேலருக்கு! இல்லையே!! அறிவாற்றல் உள்ளவர் — அனுபவம் உள்ளவர் — இன்றைய மந்திரிகளிலே பலர் அரசியல் அரிச்சுவடி படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே, மந்திரி சபையிலே பார்லிமெண்டரி 'செகரடரி'யாக இருந்தவர் — பஞ்சத்தில் அடிபட்டவரல்ல! பதவிப்பசி எடுத்துத் தீரவேண்டிய அளவு, அலைச்சல் பட்டவருமல்ல!' எனினும், நம்மை வேதனையிலாழ்த்திவிட்டு, மந்திரியானார் — ஏன் — என்ன காரணம்? காரணம் தெரியவில்லையா, என்று கேட்கிறார், 'கண்ணன் காட்டிய வழி' ஆசிரியராம் ஆச்சாரியார்! 'என்ன பொடி போட்டாரோ' என்பார்களே ஊரில், அதுபோல, என்ன சொன்னாரோ ஆச்சாரியார், கவிழ்த்தே விட்டார், மாணிக்கவேலரை!

ஆபரேஷன் வெற்றிகரமாக முடிந்தது, ஆள் தான் இறந்துவிட்டான் — என்பதுபோல, காங்கிரசை முறியடித்தார் மாணிக்கவேலர், ஆனால் காங்கிரஸ் மந்திரிசபையிலே அவரும் ஒரு மந்திரியானார், என்றல்லவா, ஆகிவிட்டது. வடாற்காடு மாவட்ட முழுவதையும் அடக்கி, மடக்கி விட்டேன், அங்கு, நமக்கு அருமையான 'வக்கீல்' கிடைத்து விட்டார், பீசும் சாதாரணந்தான், மாதம் இரண்டாயிரத்துக்கு மேலாகாது, என்றல்லவா, ஆச்சாரியார் எண்ணுவார்!

அவா இரண்டு பேரும் சேர்ந்துண்டு, ஒரே அமக்களப்படுத்தினா, வடாற்காடிலே, இப்போ, அவாளுக்குள்ளே, 'சிண்டு' முடிந்தாச்சி, பார் வேடிக்கையை! எலக்ஷனிலே, மாணிக்கவேலரும் அவரோட நண்பர்களும் நம்ம காங்கிரசுக்குத் தொல்லை கொடுத்தாளேன்னா, இனி பார், அவாளுக்குள்ளாகவே வாக்குவாதம் கிளம்பும்! நம்ம காங்கிரசுக்கு நல்ல சான்சு!! — என்றல்லவா ஆச்சாரியார் களிப்படைவார்!

இவைகளை எல்லாம் எண்ணி எண்ணி ஏக்கம்கொண்ட இலட்சியவாதிகள் தான், நண்பரானாலும் நம்மவரானாலும், அறிவாற்றலுள்ளவரானாலும், நம்மை மறந்து நம்மைத் துச்சமென மதித்து, பொது மக்கள் நம்மைக் கேவலமாகக் கருதும் விதமாக, எதிரி முகாமில் இடம் பிடித்துக் கொண்ட மாணிக்கவேலரை, நாங்கள் கண்டித்தே தீருவோம், எமது வெறுப்பைக் காட்டியே தீருவோம், அவ்விதம் செய்தால் மட்டுமே, எமது 'மானம்' தப்பிப் பிழைக்கும். நாட்டிலே ஜனநாயகம் தழைக்கும், பொதுவாழ்விலே தூய்மை நிலைக்கும், கொள்கைக்கு ஊறு ஏற்படாமல் இருக்கும், அறநெறி தெளிவாகும், என்று எண்ணிய இளைஞர்கள் தான், அன்று, கருப்புக் கொடி காட்டி, தங்கள், கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டனர்!

கருப்புக்கொடி மாணிக்கவேலர் முன்னிலையில் காட்டப்பட்டது, என்றாலும், அது, ஆச்சாரியாருக்கு நாம் அளிக்கும் கண்டனமே ஆகும். ஆச்சாரியாரே! எமது அன்பரும் நண்பருமான மாணிக்கவேலரை எம்மிடமிருந்து பிரித்துவிட்டீர்! உமது சூது எமக்குத் தெரியும்! அதை அம்பலப்படுத்துவது இந்த கருப்புக்கொடிகள் மாணிக்கவேலரை மந்திரியாக்கிவிட்டால், காங்கிரஸ் எதிர்ப்பாளர்களை, திராவிடர்களை, மயக்கிவிட்டதாக எண்ண வேண்டாம்! ஆர்வத் தீ, கொழுந்துவிட்டு எரிந்தவண்ணம் இருக்கிறது. உம்முடன் சேர்ந்ததால் மாணிக்கவேலருக்கும் எமது கண்டனத்தைத் தெரிவிக்கிறோம் — என்று அன்று, பறந்த நூற்றுக்கணக்கான கருப்புக் கொடிகள் கூறின!!

ஆச்சாரியார் போட்டிருக்கும் கணக்கு, தவறானது.

மாணிக்கவேலர் மந்திரியாக வேண்டும், அந்த ஒரு காட்சியைக் கண்ணால் கண்டுவிட்டால் போதும், புழுத்தசோளமும் உளுத்த அரிசியும், துப்பாக்கி தர்பாரும் தொல்லை தரும் துரைத்தனமும், எதுகிடைத்தாலும் மக்கள் சகித்துக்கொள்வார்கள், வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில். ஆட்சியின் அலங்கோலங்களைக் கண்டு, மக்கள்

## வாலாஜா வழக்கு

2—5—52 அன்று வாலாஜாவில் கருப்புக்கொடி காட்டிய குற்றத்திற்காகத் தோழர்கள் கச்சபாலையம், சின்னப்பன், தடையுத்தரவைமீறிய குற்றத்திற்காக, தோழர்கள் அன்பேழிலன், இரண்யதாசன், நாகரத்தினம் ஆகியோர்மீது வழக்குபதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெறுமென தெரியவருகிறது.

# "நரிக்கு, நகாரா கொட்டுகிறது, புலி!"

ஆத்திரப்பட்டால், மாணிக்கவேலரை மந்திரியாக்கினேன், போதாதா, திருப்தி இல்லையா, என்று சாகசமாகப் பேசலாம், என்று ஆச்சாரியார் கருதுகிறார். மிக மிகத் தவறான கணக்கு!

தேர்தலிலே காங்கிரசை முறியடித்து வெற்றி முரசு கொட்டியவர் மாணிக்கவேலர்! அவருக்கு, மந்திரிவேலை தந்தவர், தேர்தலிலே தலையிடாத ஆச்சாரியார்!

பெருமைக்குரியதா இது!

மாணிக்கவேலர், அறிவாற்றலுள்ளவர், அனுபவசாலி, எனவே, அவரை நிர்வாகத்துக்கு இழுத்துக் கொண்டேன் என்று காங்கிரஸ் கூற முடியாது. ஏனெனில் தேர்தலின் போது, காங்கிரஸ், மாணிக்கவேலர் மேதாவியாகக்கூட இருக்கலாம், ஆனால் அவர் காங்கிரஸ்காரர் அல்ல, ஆகவே அவருக்கு 'ஓட்' அளிக்காதீர் என்றுதான் 'கர்ஜனை' செய்தனர்.

அறிவாற்றலுள்ளவர், ஆனால் காங்கிரசால் எதிர்க்கப்பட்டவர்.

அறிவாற்றலுள்ளவர், காங்கிரசை முறியடித்தவர், அவர்மட்டுமல்ல— அவர்போலப் பலர் — பலப்பலர்! அவர்களின் தொகை, பெருவாரியானது! வெற்றிபெற்ற காங்கிரசாரின் தொகையைவிட அளவிலே பெரிது—எனவே, நாட்டை ஆளும் உரிமை பெற்றது — அந்த உரிமை பெற்ற குழுவிலே உள்ளவர் மாணிக்கவேலருக்கு, மெஜாரிடி பெறமுடியாதுபோன காங்கிரஸ், மந்திரிவேலை தருகிறதாம்!! பெருமைக்குரியதா இது? மாணிக்கவேலரின் உண்மை நண்பர்கள், இதனை அவருக்கோ, நண்பர்களுக்கோ, பெருமை தருவது என்று எண்ண முடியும்.

மக்கள் அளித்திருக்கும் மணிமுடி — காங்கிரசுக்கு அல்ல — காங்கிரஸ் அல்லாதாருக்கு! காங்கிரசல்லாதார் மந்திரிசபை அமைத்தால், மாணிக்கவேலருக்கு அதிலே இடமிருக்காது! நிச்சயமாக உண்டு! எனினும் அவருக்கு ஆச்சாரியார் 'வேலை' தருவதாம், இது பெருமையா!! என்ன வேடிக்கை வேதனை தரும்படி வேடிக்கை!! வேங்கைக் காடு—நரி ஆட்சி — நரிக்கு நகாரா கொட்டும் வேலைக்கு, புலி, மனுபோடுவது!!

மாணிக்கவேலருக்கு மந்திரி வேலை தருகிற உரிமையோ, யோக்யதையோ, ஆச்சாரியார் பெறவில்லை—காரணம் ஆச்சாரியாரின் காங்கிரசுக்கு மக்கள் பெருவாரியாக ஓட் அளிக்கவில்லை.

காங்கிரசுக்கு நாடாளும் உரிமை இல்லை—மக்கள் தீர்ப்பு அது.

'உருகி உடல் கருகி' உள்ளே நுழைந்த காங்கிரஸ் கட்சியிலே ஆச்சாரியார் இல்லை — அவர் அப்போது 'பஜகோவிந்தம்' செய்து கொண்டிருந்தார்.

மாணிக்கவேலரும் அவர் போலவே வெற்றி பெற்ற காங்கிரசல்லாதாரும் ஐக்ய ஜனநாயக முன்னணி அமைத்தனர்—நேர்மையான அரசியல் முறையின்படி காரியம் நடைபெறுவதானால், முன்னணிதான் மந்திரிசபையை அமைத்திருக்க வேண்டும். அமைத்திருந்தால், மாணிக்கவேலர், 'கனம்' ஆகியிருப்பார். ஆச்சாரியாரோ, 'அபோரம்' எழுதிக்கொண்டிருக்கக் கூடும்! அத்தகைய ஆச்சாரியார், உள்ளே நுழைகிறார், கொல்லைப்புறக் கதவைக் கவர்னர் திறந்ததால். நுழைந்தவர் காங்கிரசுக்கு மெஜாரடி இல்லாததைக் காண்கிறார், மந்திரி வேலைக்கு வருமாறு மாணிக்கவேலரை அழைக்கிறார்! கண்டிச் சோற்றுராமன், தயிர்வடை பாயாசத்துடன் விருந்து வைக்கிறான், சமாராதனைக் கூட்டம் நடத்தும் சம்பூர்ண சாஸ்திரிகளுக்கு—என்றால் எப்படி இருக்கும் வேடிக்கை!!

அதைவிட வேடிக்கை அல்லவா இது, மெஜாரடியற்ற காங்கிரஸ், தேர்தலுக்கு நிற்காத ஆச்சாரியாருடைய தலைமையிலே, மந்திரிசபை அமைக்கிறேன், உமக்கு ஒரு இடம் உண்டு, வருகிறீரா, என்று மாணிக்கவேலரை அழைப்பது! இதைவிட வெற்றி பெற்றவருக்கு அவமானம் வேறு என்ன செய்ய முடியும்! அந்த அவமானச் சின்னத்தையா, அன்பர் மாணிக்கவேலர், அமைச்சர் பதவி என்று எண்ணுவது! அவருக்கு 'இடம்' மக்கள் தீர்ப்பின்படி கிடைத்திருக்கும் — ஆச்சாரியார். யார். அவரிடம் ஏக கட்டிச் 'சேவகம்' செய்வதா மாணிக்கவேலருக்கு ஏற்ற நிலைமை! இந்த நிலையை பெறவா, காங்கிரசை மண்கவ்வச் செய்தார்! அவர், எண்ணுகிறாரோ இல்லையோ, நாம் எண்ணுகிறோம், வேதனை குபுகுபுவெனக் கிளம்பத்தான் செய்கிறது. அந்த வேதனை கொண்டவர்கள்தான், வாலாஜாவில் அவருக்குக் கருப்புக் கொடி காட்டினவர்கள், என்பதை நான் அறிவேன், நாடு அறியும், அவர் அறிய மாட்டார், ஆச்சாரியார், அனுமதிக்க மாட்டார்!

(9-ம் பக்கம் பார்க்க)

## சேலம் மாவட்ட தி. மு. க.

4—5—52 ஞாயிறு பிற்பகல் 2-மணிக்கு சேலம் மாவட்ட தி. மு. க. கூட்டம் நடைபெறும்.

இடம்:— செவ்வாய்ப்பேட்டை வீபஜார் E R கிருஷ்ணன் மண்டி.

பல முக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்படும். வருகை தந்து ஆலோசனை தரவேண்டுகிறோம்.

ப. கண்ணன், ஜி. பி. சோமசுந்தரம்.
வி. உறுப்பினர். செயலாளர்.

## ஆரம்பமாயிற்று

திருவாங்கூரைச் சேர்ந்த தோட்டத்தில், காங்கிரஸ் ஆட்சியினர் தொழிலாளர்மீது ஏப் 23-ந் தேதி துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். மூன்று தொழிலாளர் மரணம். பலருக்குப் படுகாயம். அகிம்சா ஆட்சியின் கொடுமைக்குப் பலியான தொழிலாளர்கள், வெள்ளையருக்குச் சொந்தமான தோட்டமொன்றில் வேலை செய்தவர்களாம். வெள்ளை நிற ஏகாதிபத்யத்தைக் காக்க, மஞ்சள் நிற ஆதிபத்யம் சுட்டுப்பொசுக்கியிருக்கிறது. பொதுத் தேர்தலுக்குப்பின், மீண்டும், துப்பாக்கிமுழக்கம், கேட்கத் துவங்குகிறது. காங்கிரஸ் ஆட்சியில் இதைத் தவிர வேறெதுதான் எழும்பும்! இரத்தம் குடித்த புலிகளாயிற்றே!!



# வாலாஜாவில் மாணிக்கவேலர்

# எங்கும் கருப்புக்கொடிகள்!

## ஆச்சாரியார் தூது அம்பலம்

### கழகத் தோழர்கள் எழுவர் கைது

### தடியடி, சிறை, வழக்கு

27—4—52 ஞாயிறு அன்று மாலை, மந்திரியான மாணிக்கவேலர் வடார்க்காடு மாவட்டத்தைச்சேர்ந்த வாலாஜாபேட்டைக்கு வந்தார்.

அங்கு அவர் முனிசிபல் வாசகசாலையைத் திறந்துவைக்கவே அழைக்கப்பட்டிருந்தார், நகரசபையாரால். அந்த அழைப்பை ஏற்று அவர் வருகிறார் என்றவுடன், தி. மு. கழகத்தினர் கூடினர்; சிந்தித்தனர்.

மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு, மந்திரியாகிவிட்டார் மாணிக்கவேலர் — இது மக்களுக்குச் செய்யும் மாபெருந் துரோகம் என்பதைக் காட்டவேண்டும் என்று தீர்மானித்தனர். பொதுச் செயலாளரின் அனுமதியும், ஆலோசனையும் கோரினர்.

26—4—52 சனிக்கிழமை மாலை 3-மணிக்கு, தோழர் தில்லை-வில்லாளன் முன்னிலையில் கூடிய வாலாஜாபேட்டை தி. மு. கழக செயற்குழுவின் அவசரக் கூட்டத்தில், மாணிக்கவேலருக்குக் கருப்புக்கொடி காட்டத் தீர்மானிக்கப்பட்டது. கருப்புக்கொடி நிகழ்ச்சிக்குப் பிறகு பொதுக்கூட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

செயற்குழு முடிந்தது. சுழற்காற்றெனத் தோழர்கள் சுற்றிச் சுற்றிப் பணியாற்றினர். வாலாஜாவிலுள்ள கழகக் காளையர் அனைவரும் ஆளுக்கொரு பணியேற்று ஓயாதுழைத்தனர். ஒருவர் கருப்புத் துணிகளை எடுத்துவந்தார். இன்னொருவர், பழைய துணிகளைக் கொணர்ந்து, கருப்புச் சாயம் தோய்த்து உலர்த்தினர். மற்றொருவர், கருப்புக்கொடிகள் தைத்தபடியிருந்தார். ஒரு தோழர் தட்டிகளில் எழுதிக்கொண்டிருந்தார். இப்படி, தோழர்கள் தமக்குள் அலுவல்களைப் பங்கிட்டுக் கொண்டு தாம் தாம் ஏற்ற பணிகளைச் செவ்வனே முடிக்க அரும்பாடுபட்டதை நாம் மறக்க முடியாது.

சின்னஞ்சிறு வண்ணக் குடிசைதான், வாலாஜாவின் கழகப் பணிமனை. அந்தக்குடிசை, அன்று வீரர் கோட்டமாக மாறிவிட்டது.

போர் வீரர்கள், பாசறைக்கு வந்து படைக்கலங்கள் பெற்றுச் செல்வது போல அப்பப்பொழுது, தோழர்கள் வந்து வந்து, யோசனைகள் கேட்டவண்ணமிருந்தனர்.

இந்தச் செய்தி மாலை ஐந்து மணிக்குள்ளாக, வாலாஜாவுக்கு மிக அண்மையிலுள்ள ராணிப்பேட்டை ஆற்காடு போன்ற இடங்களிருந்தெல்லாம் தோழர்களுக்கு எட்டி, அவர்கள் மறுநாள் நடக்கவிருக்கும் நிகழ்ச்சியைப் பற்றி விவரமறிய நேரில்வரத் தொடங்கிவிட்டனர்.

இரவும் வந்தது. அப்பொழுதுதான் சுவரொட்டிகள் தயாராகி வந்தன. உடனே தோழர்கள் ஆளுக்குக் கொஞ்சம் எடுத்துச் சென்று, எங்கும் நிறைந்திருக்கும் விதமாக ஒட்டிவிட்டனர். விடிந்ததும், வாலாஜா வாழ்வோர் இந்த சுவரொட்டிகளின் முகத்திலேதான் விழித்தனர்.

சிலருக்கு ஆச்சரியம் வேறு சிலருக்குக்கோபம், பலருக்கு மகிழ்ச்சி, இந்தக் கருப்புக்கொடி நிகழ்ச்சியை அறிந்தவுடன். ஆனால் எதற்கும் தயாராகவுள்ள கழக இளைஞர்கள், மாலையில மந்திரியாருக்குக் கருப்புக்கொடி வரவேற்புக்கான முயற்சிகளில் முழு மூச்சாக வேலை செய்து கொண்டிருந்தனர்.

நகராண்மைக் கழகத்திலேமந்திரியாருக்குக் கட்டியிருக்கும், மாலை சரியாக இருக்கிறதா என்று பரிசீலனை செய்தனர். அதேநேரத்தில் கருப்புக்கொடிகள் எத்தனை, ஒட்டிய விளம்பரங்களில் எத்தனைகிழிக்கப்பட்டுவிட்டன, மேலும் அங்கெல்லாம் விளம்பரங்கள் ஒட்டப்பட்டனவா என்ற விசாரணை, அந்தச்சிறுகுடிசையில். அதே சமயத்தில், போலீஸ் நிலையத்தில், 'ரிசர்வ்' படையின் லாரி வந்து நின்றது. 'எங்கே அந்த கழகச் செயலாளர் அழைத்துவா' என்று போலீஸ் அதிகாரி கட்டளையிட, சிப்பாய்கள் சிதறியோடினர். தோழர்களைக் காணாது அலுத்துத் திரும்பினர்.

மாலை நேரத்தில் மந்திரி வருகிறார். காலையிலே தண்டோரா போட்டார்கள். 'மந்திரி வருகிறார், மல்லிகைப் பூமாலை கொண்டுவாருங்கள்' என்று அறிவித்தனர்—இல்லை. 'கூட்டம் கூடாதீர்கள், அப்படிமீறி நின்றால், சட்டப்படி குற்றம் புரிந்தவர்களாவார்கள்; தண்டிக்கப்படுவார்கள்' என்றுதான் அறிவித்தார்கள். ஊராரில் விவரமறியாதவர்கள்விழித்தனர்; குறிப்புணர்ந்தோர் குறுநகை புரிந்து ஆட்சிபுரிவோரின் கோணல் புத்தியைக் கேலிபேசினர். மந்திரி வருகிறார், மக்கள் வெளியில் உலவக்கூடாது என்று தடை போடுகின்றனர், என்ன வெட்கக்கேடு என்று சொல்லாத வாயில்லை — அங்கு, அன்று. மக்களுக்கு மந்திரியே தவிர, மந்திரிக்காக மக்களில்லை — மக்கள் கண்களிலிருந்து மந்திரியை

7-ம் பக்கம் பார்க்க

திராவிட நாடு

காஞ்சி] 4—5—52 [ஞாயிறு

# சிகப்பு நாள்

☆

போர்! போர்! அவன் வாழ்க்கையே ஒரு பெரும் போர்! காலை முதல் மாலைவரை அவன் நடமாடும் இடமெல்லாம் போர்க்களந்தான். வீடோ—வீடல்ல அது: பாசறை! மறுநாளைய வாழ்க்கைப் போராட்டத்திற்கு வழிவகுக்கும் யுத்த முகாம்.

நாளெல்லாம் துடிக்கிறான். ஒரு நாளல்ல; சில ஆண்டுகள் அல்ல; பிறந்தது முதல்; பாட்டன்காலத்திலிருந்தே! பரம்பரை பரம்பரையாகவே.

வறுமைத்தேள் கொட்ட, துன்பக்கழுகு கொத்த, வாடுகிறான்—வதைகிறான் — ஆனாலும் வாழுகிறான்.

ஆலையிட்ட கரும்பாகிறான். அலைகடல் துரும்பாகிறான். 'அய்யோ' என்கிறான். "அப்பாடா" என்கிறான். ஆண்டவனையும் அழைக்கிறான்.

தொண்டை வரள்கிறது; தொல்லையும் வளர்கிறது.

செக்கிழுக்கிறான். செருமியழுகிறான். மூட்டை சுமக்கிறான். முதுகை ஒடித்துக்கொள்கிறான். மாடாக மாறுகிறான், ஓடாகத் தேய்கிறான்.

பிச்சைக்காரன், எச்சில் திருடி, இப்படியெல்லாம் பெயர் எடுக்கிறான்.

கூலி! காலி! இப்படியும் அழைக்கப்படுகிறான்.

யார் இவன்? மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழ முடியாத இந்தப் 'பாபி' யார்?

அவன்தான் பாட்டாளி. உழைக்கப் பிறந்தவன். அவனுக்கு விமோசனமே கிடையாதா? வியர்வைக் கடலில் மிதக்கவேண்டியவன்தானா? வாழப் பிறந்தவர்களின் பாதங்களில் வீழ்ந்துகிடக்கவேண்டியவன்தானா?

ஆறுதல் சொல்வார் யாருமில்லையா?

தேறுதல் கூறுவோர் கிடையவே கிடையாதா?

உண்டு! அமோகமாக உண்டு!

"பாட்டாளியே! பதறாதே! பகவான் இஷ்டத்திற்கு விரோதமாகப் பேசாதே! முன்ஜென்ம வினைகளுக்கு இந்த ஜென்மத்தில் அனுபவிக்கத்தானேவேண்டும். நீ உழைப்பவனாயிற்றே; உனக்கே தெரியுமே—தினை விதைத்தவன் தினை அறுக்கத்தானேவேண்டும். நீ பண்ணிய பாபங்களுக்கு — இப்போதல்ல— கடந்த ஜென்மத்தில் — நீ தானே பதில் சொல்லவேண்டும்"

இந்த விதத்திலே அவனுக்கு ஆறுதல் வழங்கப்படுகிறது. பாசத்தோடு! பரிவோடு! 'பஜகோவிந்தம்' பாஷையிலே!

கேட்கிறான் அந்த உபதேசத்தை உபத்திரவத்தால் சீரட்டப்படும் அந்த ஏழை. எவ்வளவு நாளைக்கு கேட்டுக்கொண்டிருக்கமுடியும்.

மான் சாகத்தான் வேண்டுமென்று புலி கூறுகிறது. கிளி வாழ்வது கூடாதென்று பூனை சொல்லுகிறது. மனிதன் வாழக்கூடாதென—அவனைப் போன்ற 'மனித உருவம்' சொல்கிறது. இந்த விசித்திரமான ஆனால் வேதனை நிரம்பிய உலகச்சக்கரம் உருண்டு கொண்டேயிருக்கிறது. வாழ்வோடு மனிதன் போராடுகிறான் — அவனது மனைவி போராடுகிறாள்—குழந்தைகள் போராடுகின்றன—'பரம்பரை'யே போராடவேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டத்தை அலட்சியக் கண்களோடு பார்ப்பவர் பலர், வாழ்வை போகக்களமாக்கிக் கொண்ட வர்க்கத்தினர். அதிர்ச்சிக் கண்ணோடு பார்ப்பவர் பலர், வேதனைபடுபவரின் விழிப்பு, விபரீதமாகிவிடுமோ என்று எண்ணுபவர்கள்.

இரு தரத்தினருமே இன்றுபுறம் காட்டிடவேண்டிய சூழ்நிலை உதயமாகியிருக்கிறது.

வேதனையால் விம்முகிறவனிடம் வேதாந்தமும், விழித்துக்கொண்டவனிடம் விரட்டல் பார்வையும் இனி பயன்படாது என்ற அளவுக்குப் பாட்டாளி உலகம் தோள் தட்டி நிற்கிறது.

திமிறிப் புறுவென மாண்டிடும் கோரம், எதிர்த்தாலும் வரப்போகிறது, எதிர்க்காது, இளித்தவாயராய் உலவினாலும் வரத்தான் போகிறது.

எதிர்க்காது விட்டால் நிலைமுறை தலைமுறைக்கும் கொடுமை நிலைத்திருக்கும், பாட்டாளிக் குடும்பத்தினிலை.

எதிர்த்தால் எலும்புச் சுக்கையாகிவிட்டாலும் கவலையில்லை, எதிர்காலத்திலாவது ஏழைக் குடிசையில் இன்பநிலவு கிளம்பும்.

இந்த உறுதியோடுதான் உழைப்பிடத் துவங்கிவிட்டது, ஏழையர் உலகு!

ஏழையெனில் எதுவேண்டுமானாலும் செய்யலாம் என்ற இரும்பு மனத்தினரின் இடுப்பொடிக்கப்படுகிறது பல இடங்களில்!

பொட்டுப் பூச்சிகளாய் புன்மைத் தேரைகளாய் ஆக்கப்பட்டவர்—தாழ்ந்து தாழ்ந்து போனவர்—தலையை நிமிர்க்காதவர்—"மனிதரில் நாமும் மனிதர்! மண்ணன்று இமை திறப்போம்" என்று எக்காளமிடத் துவங்கிவிட்டனர்.

அந்த எதிரொலிதான் இன்று பாரெங்கும் கேட்கிறது. பலமான குரலில்!

இருண்ட வீட்டிலே ஒளிபுகுந்து விட்டது! மருண்ட மனத்திலே மகிழ்ச்சி நுழைந்துவிட்டது!

எவ்வளவு கஷ்டம் அனுபவித்தோம் என்ற பெருமூச்சும், எதிர்காலத்தைப்பற்றிய நம்பிக்கையான புன்னகையும் தோன்றுகிறது தேய்ந்த வாழ்க்கையினருக்கு!

இதுவரை பட்ட இன்னலையும் இனி ஏற்பட இருக்கும் இன்பத்தையும் கணக்குப் போடுகிறவர்கள் களிக்காமலிருக்கமுடியாது.

மின்னலெனத் தாக்கும் வலியால் பிரசவ வேதனைக்குள்ளாகியிருக்கும் பெண்மணி, பிறக்கப்போகும் கண்மணியை நினைத்து ஊமைப்புன்னகை கொள்ளத்தான் செய்வாள்.

வாழ்நாள் முழுதும் வாடிய சமுதாயம், வாழ்வுக்கான போரில் ஈடுபட்டு, அந்தப் போரிலே பெறப்போகிற வெற்றிக் குழந்தைக்காக



தாங்கிக்கொள்கிற அடக்குமுறைகள், வெறியாட்டங்கள்தான் பிரசவ நேரத்துப் பெருவலிகள்.

அதைச் சமாளிக்கும் தாயின் தன்மைதான், தாழ்த்தப்பட்ட வர்க்கத்தின் புரட்சிப் பொறியாகும்.

அந்த சமாளிப்பிலே ஏற்றுக்கொண்டிருக்கிற சங்கடங்கள் சாதாரணமானவைகளா? இல்லை!

சாவுமுனை! தூக்குமேடை!!

இன்று பசுமலையிலும், கோட்டயத்திலும் பரிமாறிய பச்சை ரத்தம் மட்டுமல்ல, அன்று சிகாகோநகரின் வீதியிலேயே சிகப்பு படிந்திருக்கிறது.

1886 மே முதல்நாள் உரிமைக் கிளர்ச்சி நடத்தியவர்களை நாயைப்போல் சுட்டுவீழ்த்தி நடுத்தெருவில் எறிந்துவிட்டார்கள்.

15 மணி நேரம் வேலை செய்ய முடியாது. ரத்தம் சுண்டுகிறது. சித்தம் சோர்கிறது, என்கிற இந்த துணிவான தொனி 1878ல் அமெரிக்காவில் புறப்பட்டது. அதனுடைய வளர்ச்சியிலே ஒரு அங்கந்தான் சிகாகோ சிகப்பு.

மே முதல்நாள் வீதியிலே ரத்தக்குளம் வெட்டினர் வெறியர்.

மே நாலாம்நாள். சிகாகோ சீறிக் கிளம்பியது. மாபெருங் கூட்டம். மக்கள் கடல். கயவர்கள் செயல் கண்டிக்கப்பட்டது. கண்ணீர்த் துளிகள், செந்நீர்த்துளிகளைப்பற்றி சிங்கக்குரல் எழுப்பின. சிகாகோ சவங்கள் பேச ஆரம்பித்தன. சீர்கெட்ட வாழ்வினர் அந்தப் பிணங்களை சீராட்டிப் பாராட்டினர்.

1889ல் பாரிஸ்நகரில் சர்வதேசத் தொழிலாளரின் மாநாடு கூடியது. சிகாகோவின் சிகப்புமண் அங்கு ஆவேசகீதம் பாடியது.

'படமுடியாதினித்துயரம், பட்டதெல்லாம் போதும்' என்று பஜனை பாடி முடித்துவிடவில்லை மாநாட்டை! தொழிலாளர்மீது அக்கறை பிறந்துவிட்டது பாரீர் என்று தோள்தட்டி வீரப்பிரதாபம் பேசியதோடு நின்றுவிடவில்லை மாநாடு!

உலகமுழுதும் உணர்ச்சி வெள்ளம் கரைபுரளவேண்டும் என்று முழங்கியது, மே முதல் நாள் சிகாகோ!

சிகப்புநாள்! அந்த நாளை, நலிந்தவர் பெருநாளாக ஆக்கவேண்டுமென்று தீர்மானம் தீட்டினர்.

ஏழையர் உலகு, ரஷ்யாவிலே மட்டுமல்ல, எத்தர் வாழமுடியாத சீனாவிலேமட்டுமல்ல, ஆதிக்கவெறியின் அட்டகாசம் தாங்கமுடியாத அமெரிக்காவிலும் அதன் எடுபிடி நாடுகளிலுங்கூட, ஏழைகளின் இதயக்குமுறல், மே முதல்நாள் முரசம் ஒலித்திடுகிறது, ஆண்டுதோறும்.

ஆண்டுக்கு ஆண்டு ஆனந்தம் வளர்கிறது.

புதுவாழ்வுக்கான அருணோதயம் தெரிகிறது.

விடுதலை விடிவெள்ளி முளைக்கிறது.

இங்கே, திராவிடத்தில், உழைப்போர் பூமியில், தேன்சுரக்கப்பேசி தேய்ந்து போனவர் வாழ்வைத் தின்றிடும் தீயவர்களை வீழ்த்திடும் அறப் போராட்டத்திலே மேதினமும் ஒரு நல்ல கேடயமாக விளங்குகிறது.

அந்தக் கேடயத்தை திராவிட முன்னேற்றக் கழகம் — திராவிடர்களுக்காக, ஆம் தொழிலாளர் வாழ்வுக்காக கையிலேந்திக் களத்திலே நிற்கிறது!

இங்கு சிகாகோக்கள் ஏராளம். எங்குமே — மே முதல் நாள் என்றல்ல எப்போதுமே.

அந்த 'சிகாகோ' சகப்பு, சீனாவை ரஷ்யாவை சிகப்பாக்கிற்று!

இங்கே, இந்த 'சிகாகோக்களின்' சிகப்பு, திராவிடத்தை செழிப்பாக்கும்!

இது உறுதி! இந்த உறுதியை—சபதத்தை — இந்த நல்ல நாளில் நாம் ஏற்றுக்கொள்வோம்.

❁

---

## காஞ்சியில்

—

### 4—5—52ல்

கருணாநிதி படிப்பகத் திறப்புவிழா

நாஞ்சில் தோழர் கி. மனோகரன் திறந்துவைப்பார்.

தி. மு. க. கிளை.

---

5-ம் பக்கத் தொடர்ச்சி

மறைத்துவிடுவதால் யாருக்குலாபம் என்ற, சிந்திக்காத மனம் படைத்தோர், அங்கு கிடையாது.

தடை விதித்துள்ளனர் சர்க்கார்; இந்தச்செய்தி தோழர்களின் செவிகளில் விழுந்தது. அப்பொழுதான் அவர்களின் நடையில் மிடுக்கு தென்படத்தொடங்கிற்று. எஃகு மனங்கொண்டவர்களாயிற்றே அவர்கள், ஏறுநடைதானே காணமுடியும், அவர்களிடம்—கழகத்தோழர்களின் பண்பறிந்தவர்கள் பாராட்டாமல் போகவில்லை.

மந்திரி வருகிறார் என்றவுடன், மக்களை மருட்டும் தடையுத்தரவு வந்தது! பிறகு மக்களை விரட்டியடிக்கப் பட்டாளமும் வந்து சேர்ந்துவிட்டது!

தடையும், படையும், இலட்சியத்திற்காக எந்த நஷ்டத்தையும், கஷ்டத்தையும் ஏற்கத்துணிந்த இளங்காளையர்களை என்ன செய்துவிடமுடியும்? ஆகவேதான் அவர்கள் வாலாஜா 'ட்ரங்க்ரோடு' இருமருங்கிலும், ஒரு மைல் நீளத்திற்கு கொடிகளேந்தி, அணிவகுத்துள்ள படைபோல நின்றனர். ஒவ்வொருவரும் ஒரு கொடிதாங்கி, மந்திரி வரட்டும், அவர் மக்களுக்குச் செய்துள்ள துரோகத்தை எடுத்துக் காட்டுவோம் என்று காத்திருந்தனர்.

போலீஸ் படையினர் மூன்று கெஜத்திற்கு ஒருவராக 'சக்கிரவ்யூகம்' வகுத்தும், கருப்புக் கொடியை மறைக்க முடியவில்லை.

மாலை ஐந்தரைமணிக்கு மந்திரியார் வந்தார்.

எங்கும் திரும்பிப்போ, திரும்பிப்போ என்ற குரல்—அதன் எதிரொலி! மாணிக்கவேலரே, மக்கள் துரோகியே, திரும்பிப்போ என்ற முழக்கம், மந்திரியின் செவிகளில் புகுந்து, சிந்தையைக் குடைந்தது—அதனால்தான் முகம் சுருங்கிற்று. பிறகு கருத்தது — பிறகோ சிவந்தது! மந்திரியைத் திரும்பிப்போ என்பதோடு விடவில்லை, மக்கள் குரல், மந்திரிப்பதவியை ராஜிநாமா செய், ஆச்சாரியார் சூழ்ச்சி ஒழிக என்றும் கோஷித்தனர். மந்திரி மாணிக்கவேலர் கருப்புக்கொடி

களை கடல்போலப் பரவியிருப்பதைக் கண்டு கலங்கினார் — அந்தக் கருங்கடலில் மிதந்துதான் சென்றார்!

அவர், பேசும் மேடைக்குச்செல்லும் பொழுதும், தோழர்கள் கருப்புக் கொடிகளை, அவர் கரத்திலே தந்திடச் சென்றனர்.

அங்கேயும், அவரின் துரோகப் பாதைத் தெளிவாகத் தெரியும்படி, ஒலிகளை ஒலித்தனர்.

பட்டாளம் அவருக்குப்பாதுகாப்பளித்தாலும், அவர்கள் ஒலித்த ஒலிகள் அவரைச் சித்திரவதை செய்தன.

கோபத்தில் பல வார்த்தைகளைக் கொட்டியளந்தார் மந்திரியார். ஆனால் அவர் பேச்சைக் கேட்கவிடவில்லை மக்கள். திரும்பிப்போ என்றே முழங்கியவண்ணமிருந்தனர்.

கூட்டம் முடிந்ததும், அவர் சென்னை செல்கிறார் என்றவுடன் அந்தப் பாதையிலும் கருப்புக் கொடிகளுடன் காத்திருந்தனர். காரைக் கண்டதும், கருப்புக்கொடி காட்டி, தங்கள் வெறுப்பைத் தெரிவித்தனர்.

போலீஸார், தங்கள் 'கைவரிசை'யைக் காட்டத் தவறவில்லை. மாலையிலேயே கே. டி. எஸ். மணி, டி. சபாபதி ஆகிய தோழர்களைக் கைது செய்தனர். பிறகு சின்னப்பன், கச்சபாலையம் என்ற இரண்டு தோழர்களை மிகவும் அன்புமுத்திக் காவலில் வைத்தனர். சில இடங்களில் தடியடியும் தந்து, தம் கடமையைச் செய்ததாகக் காட்டிக்கொண்டனர்.

இரவு எட்டு மணிக்கு, தடையுத்தரவு இருந்தும், அதனை மீறி, தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடந்தது. தோழர் அன்பெழிலன், இரணியதாசன், நாகரத்தினம் ஆகிய மூவரையும் கைது செய்தனர்.

கருப்புக்கொடி நிகழ்ச்சி வெற்றிகரமாக நடந்திட கழகத் தோழர்கள் அனைவரும் பெரும்பாடுபட்டனர். ஆற்காடு பொன்னம்பலம், அவரது தோழர்கள், ராணிப்பேட்டை நண்பர்கள், காஞ்சிபுரம் எத்திராஜ், சம்பந்தம் மற்றும் அவரது தோழர்கள், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை, வாலாஜா வரதராசன், முனுசாமி, திராவிடர்கழகத்தோழர் இளங்குப்பன், எல்லோரும் கருப்புக்கொடி வரவேற்பை மிகச் சிறப்பாக நடத்தினர். தலைமை நிலையத்திலிருந்து தில்லை—வில்லாளன் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்திருந்தார்.

மந்திரி மாணிக்கவேலர், மக்கள் மன்றத்தில் நிறுத்தப்பட்டு, தீர்ப்பளிக்கும் நிகழ்ச்சிதான், வாலாஜாவில் அன்று நடந்த கருப்புக்கொடி நிகழ்ச்சி—மக்கள் தீர்ப்பை மந்திரியாருக்கு உணர்த்திய எல்லோரையும் பாராட்டுகிறோம், மனமார வாழ்த்துகிறோம்.


## பெங்களூர் அக்கிப்பேட்டை

சிக்கலரல் பாக்கில்

11–5–52 ஞாயிறு மாலை 5-மணிக்கு

தி. மு. க. பொதுக்கூட்டம்

நடைபெறும்.

அருப்புக்கோட்டை

M. S. ராமசாமி, பேசுவார்.



அரங்கண்ணல்

தீட்டிய

## ☆ புழுதிமேடு ☆

(விலை ரூ. 1—0—0)

சிறு கதைத் தொகுப்பு

கருணாநிதி பதிப்பகம், சென்னை 2.


## சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளை கவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவறாது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
3. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள் இல்லையெனில் குறிப்பிட்ட தேதியோடு பத்திரிகை நிறுத்திவிடப்படும்.

மானேஜர்.

12-ம் பக்கத் தொடர்ச்சி

பகுதிகளிலிருந்தும் வந்திருந்த அந்த விடுதலைச் 'செல்வங்களைக்' காண மகிழாமலிருக்கவா முடியும்? பள்ளியில் பயின்ற நேரம் போக எஞ்சிய நேரமெல்லாம் சமூகப்பணியில் ஈடுபடும் காளையர் கூட்டமன்றோ, அது! பாருங்கள் அந்த வீரர் பெரும் படையின், பட்டியலை:— லால்குடி: சிங்காரயர், திருவாம்பூர்: கூ. மு. பெரியசாமி, பீமநகர்: இரா. இளவழகன், அரியலூர்: வீரராகவன், துறையூர்: அ. மு. துரைராசு, அ. வெ. சென்னிகிருஷ்ணன், குளித்தலை: கு பெரியசாமி, துறையூர்: சி. சப்பாணி, பீமநகர்: க. இலக்குவன், அலங்காரதபுரம்: வா. தமிழ்மணி, சென்னை: வி. இளஞ்சேரலாதன், சிந்தாமணி: டி. ஆர். ரெங்கராஜன், லால்குடி: பெ. இராமன், முசிரி: அ. சீதாராமன், மயில்வாகனன், கோட்டாத்தூர்: அ. அருணாசலம், வெங்கடாசலபுரம்: ப. இராவண்ணன், உறையூர்: தி. சி. பாலசுப்ரமணியம், மலைக்கோட்டை: சா. தி. அரசு, கோமாகுடி: கே. அ. ரமசிவாயம், லெ. மருதையா, பொன்மலை: அ. தயாதாசன், மலைக்கோட்டை: தி. மு. குருநாதன், வையம்பட்டி: சுப்பராமன், அய்யாவு. திருச்சி: ஜி. ராமச்சந்திரன், முத்துசிதம்பரம், தி. இலக்குவன், டி. மாணிக்கம். கூழிபிறை: நா. இராமச்சந்திரன், முசிரி: ஓ. ஆற்றழகன், கொம்பம்பட்டி: ஆர். சுந்தரேசன், அம்பில்: எ. கே. பெருமாள், குளித்தலை: கே. ஆர். அண்ணாவி, அம்பில்: எம். கலியபெருமாள், டி. பிச்சையா, ஆர். திருஞானசம்பந்தம், ஆர். கோபாலகிருஷ்ணன் டி. சாமி அய்யா, டி. கோவிந்தராசன், சி. பெரியசாமி, எம். இரத்தினம், என். நடராசன். சேலம்: எ. கே. ஆறுமுகம், அரியலூர்: கோ. சிவபெருமாள், பாளையங்கரை: எம். கே. வீரமணி, கடியாப்பட்டி: ராமச்சந்திரன்.

இவர்கள் அத்தனை பேரும் 'வகுப்பு முடிந்து 'போய்வருகிறோம்' என விடைபெற்றபோது, இவர்களைப் பிரியவேண்டியிருக்கிறதே என்கிற எண்ணம் நெஞ்சைத் துளைத்தது.

பயிற்சி பெற்ற மாணவ நண்பர்களை வாழ்த்துகிறோம் — அவர்கள் பணி வளரவேண்டுமென்று.



# நேர்வழிக்கு அழைக்கும் கொடிதான், கருப்புக்கொடி

4-ம் பக்கத் தொடர்ச்சி

மெஜாரிடி பெறாத காங்கிரஸ், மந்திரிசபை அமைத்த அக்ரமத்தையும், 152 உருவாரங்கள் நுழைந்தும் மூளை பலத்துக்காக ஆச்சாரியாரை அழைத்துவந்த ஆபாசத்தையும், இவ்வளவும், எப்படியாவது பதவியில் காங்கிரஸ் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும் என்றசுயநலத்தின் விளைவு என்பதையும் நாடெங்கும் எடுத்துரைத்து, மக்களை வீரர்களாக்கி, விடுதலை விரும்பிகளாக்கி. நாட்டை நயவஞ்சகர்களிடமிருந்து மீட்டு, நல்லாட்சி அமைக்கும் காரியத்தில் நண்பர் மாணிக்கவேலர் ஈடுபடுவார்—அதற்கு ஏற்ற அறிவாற்றலும், பொதுஜன செல்வாக்கும் உள்ளவர்', என்று நாம் எதிர்பார்த்திருந்தோம்—அவரோ,

> என்னைப்பார்
> என் இடத்தைப்பார்
> உன் கண்ணாலே!
> ஆச்சாரியார் பின்னாலே!

—என்று பாடுகிறார்! இதுவா, 'மாணிக்கவேலர்!' பிற்பட்ட வகுப்புக்குத் துரோகமிழைத்த காங்கிரஸ் ஆட்சியைத் தொலைத்தாகவேண்டும் என்று வீர முழக்கமிட்ட மாணிக்கவேலர் எங்கே, மகா மேதாவியும் தவசியுமான ஆச்சாரியாருடைய தலைமையிலே பணிபுரியும் பாக்கியம் கிடைக்கப் பெற்றேன், என்போல் பாக்யவான் வேறு உண்டோ என்று திருவாய் மொழிபாடும் மாணிக்கவேலர் எங்கே! வீரரைக் கண்ட கண்களால், வீழ்ந்தவரைக்காணக் கூசுமல்லவா! கருப்புக்கொடியின் பொருள் அதுதான்!

கருப்புக்கொடி ஆச்சாரியின் சூழ்ச்சிக்கு மாணிக்கவேலர் பலியானதை, உணர்ந்த கொள்கை வீரர்கள், மாணிக்கவேலரின் போக்கைக் கண்டிப்பதன் மூலம், ஆச்சாரியார் மந்திரிசபைக்கு மக்களின் முழுமூச்சான எதிர்ப்பு கிளம்பிவிட்டது துவக்கத்திலேயே, என்பதை எடுத்துக்காட்டும் கொடி.

மாணிக்கவேலர், இப்போது செல்லும் பாதை சரியானதல்ல, அவருக்கும் சரி, வீரமரபுக்கும்சரி, அந்தப்பாதை, பெருமை தருவதல்ல; வேறுபாதை, ஜனநாயகப் பாதை தெளிவாக இருக்கிறது, அதிலே மாணிக்கவேலர் வந்துவிட வேண்டும், அந்தப் பாதையிலே, அவருக்கு ஆதரவுகாட்ட, ஒத்துழைக்க, ஆயிரமாயிரம் இலட்சிய வீரர்களும், இலட்ச இலட்சமாகப் பொதுமக்களும் உள்ளனர், எனவே நேர்வழி வருக, நேர்வழி வருக!—என்று மாணிக்கவேலரைக் கூப்பிடும், கொடி தான், கருப்புக்கொடி.

தகுதியோ, திறமையோ, அற்றவராக, மாணிக்கவேலர் இருந்திருந்தால், அவருக்கு, மந்திரி வேலை கிடைத்ததை, ஒரு வகையிலே பரவாயில்லை, 'பிரைஸ்' அடித்தது, என்று கூறியாவது, திருப்தி அடையலாம். மாணிக்கவேலர், குதிரைகளின் குளம்புச் சத்தத்திலே இலயித்துக்கிடாத, இராமநாதபுரம ராஜா அல்ல—மக்கள் இயக்கத்திலே ஈடுபட்டவர்—உழைத்து உழைத்து உருக்குலைந்து போயிருக்கும் சமூகத்திலே தோன்றிய சருவூலம்! காலைமுதல் மாலைவரை பாடுபட்டுப் பாடுபட்டு, பிறரை வாழவைத்து, தான் இளைத்துப்போகும் உழைப்பாளிச் சமூகத்திலே தோன்றி, அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப் பொருட்படுத்தாமல், கண்மூடி தர்பார் நடாத்தும் காங்கிரசைக் கண்டித்து, மக்களை காங்கிரஸ் வலையிலிருந்து விடுவித்திடப் பணிபுரிந்து வந்தவர்—அவர் இப்போது ஆச்சாரியார் வீசிய வலையில் வீழ்வதா! இதைக் கண்டிக்காமலிருக்க முடியுமா? பூனைக்குத் தாலாட்டுப் பாடக் கிளியை அமர்த்துவதா? எனவேதான், கருப்புக் கொடி!

> இலங்கையில் உரிமைப்போர் துவங்கியிருக்கிறது. பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் 'மனித உரிமையை என்று மதிக்கும் இலங்கை அரசாங்கம்?' என அறிவுலகு கேட்கிறது.

நல்லவர்—நம்மவர்— மந்திரி வேலையைத் திறம்படப் பார்ப்பவர்—அவருக்கு வேலை கிடைத்திருக்கும் போது, கருப்புக்கொடி காட்டலாமா என்று சிலர் செப்பினராம்—உண்மை! அவர்களுக்கு முதலிலே அப்படித்தான் எண்ணம் பிறக்கும். நல்லவரும், நம்மவரும், திறமைசாலியுமான மாணிக்கவேலர், பொல்லாத ஆட்சிக்காரருடன் கூடிக் குலவலாமா? அவர்களிடம் 'வேலை' பெறலாமா? கடை போடுவதிலே எல்லப்பன், குண்டுமணி அளவுகூடத் தவறு செய்யமாட்டான்—ஆனால், அவன் வேலைபார்க்கும் கடையிலே, தேய்ந்துபோன படிக்கற்கள் உள்ளனவே—வீசைக்குண்டு, முப்பது பலம்தானே கொடுக்கும்! எல்லப்பன் அந்தக் கடையிலே உட்கார்ந்தால் யாருக்கு நல்லதாகும்? அதுபோலத்தான், இவர், அவருடன் கூடிக்கொள்வதும். எனவேதான், கருப்புக்கொடி!

இதுவரையில் மந்திரி சபையிலே இடமே கிடைத்ததில்லை, இந்தச் சமூகத்துக்கு, இதுசமயம் தடுக்கலாமா, என்று சிலர் கேட்கின்றனர் —என்று அறிகிறேன். உண்மையிலேயே, உருக்கம் நிறைந்த கேள்வி இது. நானும், நமது தி. மு. கழகமும், பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு ஆட்சிப் பீடத்திலே உரிய இடம் தரப்படவேண்டும், என்ற கொள்கை கொண்டு, பணியாற்றுவதை அனைவரும் அறிவர். குறிப்பாக, தென் ஆற்காடு, வடாற்காடு மாவட்டங்களில், முன்னதில் உழைப்பாளர் கட்சிக்கும், இரண்டாவதில் பொதுநலக் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட கழகமும் எந்த அளவுக்குப் பாடுபட்டன, என்பதை நாடு அறியும் — நல்லோர் மறக்கமுடியாது. எனவே, நெஞ்சில் நேர்மையுடன் கூறுகிறேன், ஒன்றல்ல, ஜனத்தொகை எண்ணிக்கையின்படி பார்த்தால் மூன்றுக்கு மேல் மந்திரிகள் கிடைக்கும் உரிமை நிச்சயமாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பினிலே, வன்னிய சமூகத்துக்கு உண்டு. சட்டசபையிலும், முப்பதுக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர் காங்கிரசல்லாத மந்திரி சபை அமைந்திருந்தால் — அமைக்கப்பட்டால், மாணிக்கவேலருக்கு மட்டுமல்ல. அந்தச் சமூகத்தினரில் மற்றும் இருவருக்குக்கூட, மந்திரி வேலை கிடைக்கும் அங்கனம் கிடைத்தாகவேண்டும் என்று, யார் கிளர்ச்சி செய்தாலும், மந்திரி என்ற

# புண்படுத்தும் நோக்கமல்ல, எமது

ஆச்சாரியாரின் சிறையிலிருந்து விடுபட்டு மாணிக்கவேலர் கிளர்ச்சி செய்தாலும், அந்தக் கிளர்ச்சிக்குத் தக்க ஆதரவு திரட்டும் காரியத்தை நான் பெருமையுடன் செய்வேன். எனவே மாணிக்கவேலரை மந்திரியாக்கிவிட்டதன் மூலம், நியாயமாகக் கிடைக்கவேண்டியது குறைந்திருக்கிறது. மற்றும், மாணிக்கவேலர், பிற்படுத்தப்பட்ட வகுப்பாரின் முன்னேற்றத்துக்காக ஒரு திட்டம் தீட்டி, நாட்டுக்குக் காட்டி, ஆச்சாரியாருக்கு விளக்கி அந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதிலே, தனக்கு முழு சுதந்திரமும் சகல வசதியும் தந்தாக வேண்டும் என்ற நிபந்தனை விதித்து, அதற்கு ஆச்சாரியார் சம்மதம் அளித்து, அப்படி ஒரு இலாகாவை ஏற்படுத்தி அதற்கு மாணிக்கவேலர் மந்திரியாக்கப்பட்டிருக்கிறாரா, என்றால், இல்லை! பிறகு, அவர் மந்திரியானதால் மார்புடையப் பாடுபடும் உழைப்பாளிச் சமூகத்துக்கு உடனடியாகவோ நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ கிடைக்கப் போகும் உரிமை, வசதி, சலுகை என்ன? மந்திரிசபை விளக்குமா!! கேட்டால், ஆச்சாரியார், வகுப்பு, ஜாதி, குலம், இனம் என்றெல்லாம் பேசுவது அநாகரீகம், என்று கூறுவார், அதற்கும் ஒரு பஜகோவிந்தம் பாடுவார், வேறு என்ன செய்வார். சமூக நலன்பற்றி, மந்திரி மாணிக்கவேலர் தொடர்ந்து நாலு கூட்டத்திலே பேசினாலே போதுமே, ஆச்சாரியார் 'நிறுத்து' என்று கூறிவிடுவாரே! இந்நிலையில், மாணிக்கவேலர் மந்திரியானதால் சமூக உயர்வு எப்படிக் கிடைத்துவிடும்—என்ன உறுதி தரப்பட்டிருக்கிறது! எனவே உழைப்பாளிச் சமூகத்தை ஆச்சாரியார் ஏமாற்றிவிட முடியாது என்பதை எடுத்துக்காட்டும் கொடிதான் கருப்புக்கொடி. காரணமின்றி, மனக்கஷ்டத்தையும் அடக்கிக்கொண்டு, நண்பராக இருந்தவரைப் பகைத்துக்கொள்ள எந்தப் பித்தனுக்குத்தான் மனம் வரும். மாணிக்கவேலரின் போக்கைக் கருப்புக்கொடி மூலம் கண்டிப்பவர்கள், உண்மையில், பொதுநலத்துக்கும் ஜனநாயகத்துக்கும், சமூக உயர்வுக்கும் பாடுபடும் நோக்கம் கொண்டவர்கள் எனவேதான், சபலம், ஏளனம், என்பவைகளைப் பொருட்படுத்தாமல், இளைஞர்கள் கருப்புக்கொடி காட்டினர். தடி தர்பார் செய்தது — இரத்தம் சிந்தது! தடை மீறப்பட்டது! வழக்கு தொடரும்! சிறைபுக நேரிடும்! இவ்வளவையும் தாங்கிக்கொள்ள முன்வந்த தோழர்களின் கொள்கைப் பற்றைப் பாராட்டுகிறேன். நமது நோக்கம் தூய்மையானது — எனவே நமது நெஞ்சுரம் வளரத்தான் செய்யும். நமது முறை, கண்ணியம் நிரம்பியதாக இருக்கவேண்டும். மாணிக்கவேலருக்கும் சரி, கருப்புக்கொடி காட்டப்படவேண்டிய நிலை எப்போது ஏற்பட்டாலும் சரி, நமது தோழர்கள், அரசியல் நாகரீகத்தின் வரம்பிலே நிற்கவேண்டும் — அப்போதுதான், வெற்றி கிடைக்கும். கரத்திலே கருப்புக்கொடியும், மண்டையிலிருந்து போலீஸ் தடியால் ஒழுகும் செந்நீரும், இப்படியும் 'சூழ்நிலை' சூது மதியினரால் ஏற்பட்டதே என்பதை எண்ணுவதால் கிளம்பும் கண்ணீரும், கொண்ட தோழர்கள், வெற்றி வீரர்களாவர்!

வாலாஜாவில், நடைபெற்ற கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தைக் கண்ட கனம் மாணிக்கவேலருக்குச் சினம் மிகுந்து, சில பல கூறினார் என்று அறிகிறேன். கருப்புக்கொடி காட்டவேண்டி நேரிட்டதற்காக நாம் வருந்துகிறோம் — நம்மை வேதனையில் ஆழ்த்தியவர், கோபிக்கிறார்! என் செய்வது! பன்னெடுங் காலமாகவே; யாருக்காக, மனமாறப் பாடுபடுகிறோமோ, அவர்களை, எப்படியோ எதிர்முகாம் இழுத்துக் கொள்கிறது. அந்தத் தூபம் போடப்பட்டதும், நம்மைத் தாக்குவதிலே நம் உதவி பெற்றவர்கள் தனிச்சுவை காண்கிறார்கள். மந்திரி மாணிக்கவேலரும் அன்று வெகுண்டு பேசினார் என்று அறிகிறேன், அவருடைய கோபத்தை, நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்ளக் கூடிய, நெருங்கிய தொடர்பு எனக்கு இல்லை. உண்மையில் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்—நான் அவரைப் பார்த்தது இல்லை:— என்னையும் அவர் பார்த்ததில்லையாம்! வெற்றிக்குப் பிறகு, சென்னையில் நடைபெற்ற பாராட்டு விருந்திலே, அவரை நான் ஆவலோடு எதிர்பார்த்தேன், காணவில்லை! எப்படியும் விரைவிலே காண இயலும், என்று எண்ணிக் கொண்டிருக்கும் சமயமாகப் பார்த்து, ஆச்சாரியார் அவரை அழைத்துக்கொண்டார்:

அன்று வாலாஜாவில் அவர் கோபமாகப் பேசினார் என்கிறார்கள். கோபம் வரத்தான் செய்யும். எனக்கும் கூடத்தான் கோபம்— மாணிக்கவேலர் மீது அல்ல— ஆச்சாரியார்மீது!

எந்த வாலாஜாவில், வெற்றி வீரராக மாணிக்கவேலர் வந்திருந்து தி. மு. கழகத்தின் பாராட்டுரையைப் பெற்றிருக்க வேண்டுமோ, அங்கு அவருக்கு தி. மு. க. கருப்புக்கொடி பிடிக்கிறது என்றால் அவருக்குக் கோபமாகத்தான் இருக்கும். அவருடைய நெருங்கிய நண்பர்களுக்கு வருத்தமும் கோபமாகவும் இருக்கும். தி.மு.க, அவர்கள் மனதைப் புண்படுத்தும் எண்ணம் கொண்டதல்ல — என்ன இலாபம் அதனாலே! மாணிக்கவேலரும் கோபம் குறைந்த பிறகு, எண்ணிப் பார்க்கவேண்டும், கருப்புக் கொடி காட்டுகிறவர்கள் யார், என்ன நோக்கம் என்பது பற்றி: ஓட்டு வேட்டையின் மீது அவருடன் இருந்து கஷ்டப்பட்டு அனுபவித்தவர்கள் தி. மு. கழகத்தினர்— மந்திரியாகி விட்டார். அவர், கூட இருந்தால், அறுவடையில் ஏதோ சிறிதளவாவது கிடைக்குமல்லவா தி. மு. கவுக்கு! அறுவடையிலே பங்கு வேண்டாம், எமக்கு அந்தப்பழைய மாணிக்கவேலர்தான் வேண்டும் என்றல்லவா கேட்கிறோம். கொள்கைப் பற்று தவிர, வேறென்ன காரணம் காட்ட

## டார்வின் தினம்

மனித சமுதாயத்தின் வளர்ச்சி குறித்து புது விளக்கம் தந்த பேறிஞர் டார்வின் அவர்களது 70 வது இறந்த தினம், ரஷ்யா முழுமையும் கடந்த ஏப் 20ந் தேதி கொண்டாடப்பட்டது.



# இலட்சிய வாழ்வே நம் குறிக்கோள்

முடியும், தி.மு.கா வின் போக்குக்கு, மந்திரியின் நேசம், ருசிகரமானது— அவருடைய பகை, ஆஸ்பத்திரிக்கோ சிறைச்சாலைக்கோ கொண்டுபோய்ச் சேர்க்கும் — தெரியும் — தெரிந்து தானே கருப்புக்கொடி காட்டினீர்கள் — காரணம்? — கொள்கை, வேறென்ன?

இந்த இலட்சிய உணர்ச்சி உங்களை உயர்த்தும், நிச்சயமாக, தி.மு.க. வுக்கு உரம் தரும், திராவிடத்துக்குப் பெருமை அளிக்கும்.

கோபம் கொண்ட மாணிக்கவேலர், கூறிய பலவற்றுள், ஒன்று, பதவி ஏற்றுக் கொண்டதற்காக இவர்கள் ஏன் கருப்புக் கொடி காட்டவேண்டும், நான் என்ன இவர்களிடம் ஒப்பந்தத்தில் கை எழுத்தா போட்டேன், என்பதாகும் என்று தெரியவருகிறது.

தேர்தலின்போது, தி.மு.க. வின் துணையை நாடியவர்களிடம், தி. மு. க. வின் கொள்கையிலே உயரியதும், உயிர்போன்றதுமான திராவிட நாடு பிரிவினைத் திட்டத்துக்காகச் சட்டசபையிலே ஆதரவளிக்கச் சம்மதம் தரவேண்டும் என்ற ஒப்பந்தம் கேட்கப்பட்டது— கோரப்பட்டது. இதற்காக, ஸ்டாம்பு ஒட்டிக் கை எழுத்து வாங்குவது, அல்லது அச்சடித்த ஒப்பந்தத் தாளில் கையொப்பம் பெறுவது போன்ற முறை ஏதும் கிடையாது. நமது கோரிக்கை நியாயமானது என்று ஏற்றுக்கொண்டவர்களும், நமது துணை தேவை என்று கருதினவர்களும், கடித மூலமும், ஒப்பந்தத்தின் கருத்தைத் 'திராவிட நாடு' இதழில் வெளியிட்டிருந்ததே அந்த வாசகப்படியும், எழுதித் தமது கையொப்பமிட்டு அனுப்பினார்கள், நன்றியுடன் ஏற்றுக்கொண்டு, மகிழ்ச்சியுடன் அவர்களுக்காகப் பணியாற்றினோம்.

நமக்கும் நம்முடைய ஆதரவைப் பெறுபவர்களுக்கும் இடையே இருக்கவேண்டிய நேசம் எத்தகையது, தொடர்பு எவ்விதமானது, என்பதை உருவாக்கவே, இந்த முறையும் கையாளப்பட்டது. மேலும், புதிய அரசியல் சட்டத்தின்படி நடைபெறும் முதல் தேர்தலில், திராவிட நாடு பிரச்சினை மக்கள் முன் வைக்கப்பட, இது உதவி அளித்தது.

இந்தத் தூய்மையான நோக்கம் சிலருக்குக் கேலிக்குரியதாகத் தெரிந்தது. காரணம், அவர்கள், நம்மைப் போன்றவர்கள் அல்ல, துணையின்றி நெடுவழி போகிற ஆற்றலுள்ளவர்கள். அது வேறு கதை.

ஒப்பந்தம் என்றவுடனே, இது ஒரு பத்திரமாகப் பதிவு செய்யப்படவேண்டியது போலும், என்று எண்ணிக்கொண்டு ஸ்டாம்பு பேப்பரில் எழுதிக் கை எழுத்திட்டு அனுப்பியவர்கள்கூட உண்டு!— அவர்கள்போல, புரியாதவர்களல்லவே மற்றவர்கள். சிலர், திராவிட நாடு இதழின் வாசகத்தை எழுதிக் கையொப்பமிட்டு அனுப்பினர். சிலர் தமிழில் அல்ல, ஆங்கிலத்திலேயே திராவிட நாடு பிரச்சினையை ஆதரித்து ஒப்பந்தக் கடிதம் அனுப்பினார்கள். நண்பர் மாணிக்கவேலர்— மறந்துவிட்டேன், மந்திரி மாணிக்கவேலர்—அனுப்பிய ஆங்கிலக் கடிதம், அடுத்த இதழில், 'பிளாக்' செய்யப்பட்டு வெளிவருகிறது. இந்தக் கடிதத்தின் தொடர்ச்சியும் வெளிவருகிறது.

அன்று கொள்கையைக் காத்த உங்களுக்கு, என் நன்றியறிதலைக் கூறி, இதனை முடிக்கிறேன். வாலாஜா தோழர்கள், தி. மு. கழகத்தின் கருத்தை, அமைச்சர் அறியும்படிச் செய்ததற்காக, கழகம் நன்றி கூறிக் கொள்கிறது. தொடர்ந்து பத்திரிகையில், முன்கூட்டியே அறிக்கைகள், வேண்டுகோள், விளம்பரம், இவை ஏதும் இல்லை—எனினும், வாலாஜா, ராணிப்பேட்டை, ஆற்காடு, காஞ்சிபுரம், ஆகிய இடங்களிலிருந்து, ஆர்வமிக்க தோழர்கள் கிளம்பி, ஒரேநாளில், ஏற்பாடுகளைச் செய்து, வெற்றி பெற்றுத்தந்தனர். சிலர் சிறைசெல்வார்கள் போலத் தெரிகிறது. பரவாயில்லை! ஆச்சாரியார் மாணிக்கவேலருக்கு மந்திரி வேலையும், நம்மிலே சிலருக்கு, சிறைவாசமும் தருகிறார்! மாணிக்கவேலரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டதைவிடக் கொடுமையானதல்ல சிறைவாசம்! செல்வோம்— வெல்வோம்.

அன்பன்,

**அண்ணாதுரை.**


— புது வெளியீடுகள்! —

☆

**ரோம்** [அரங்கண்ணல்]

[வீரம் ததும்பும் அழகு நூல் தேன், நடை திகட்டாதலிருந்து அறிவுலக்கான புது நூல்.]

**விடுதலைக் கிளர்ச்சி 1-0-0**

[மு. கருணாநிதி]

திராவிடப்பண்ணை

தெப்பக்குளம் திருச்சி.


## கவனியுங்கள்! கவனியுங்கள்!

தி. மு. க. நண்பர்களே!

காஞ்சி நமதியக்கத் தோழரான மு. பாலசுந்தரம் அவர்களின் முருகன் & கோ என்கிற துணிக்கடையிலிருந்து ரூ 25000 மதிப்புள்ள பல பட்டு ரகச்சேலைகள், வெண்பட்டுவகைகள், களவு போயிருக்கின்றன.

இந்த பட்டு வகைகளில் M. B. என்ற சீலும், சிலசேலைகளில் இந்த 'சீல்' இல்லாமலும் இருக்கும்.

எங்காவது தனிப்பட்ட நபர்கள், இத்தகைய பட்டுரகச் சேலைகள் 'பில்' எதுவுமின்றி விற்க முயன்றால் தயவு செய்து அவர்களை, அருகே உள்ள போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்துவிட்டு நமக்கும் (திராவிட நாடு) தகவல் தருமாறு வேண்டுகிறோம்.

துணிக்கடைகளுக்கும் வந்து இந்த ரகங்களை, களவாடிய நபர்கள் விற்க முயலலாம். வெளியூர் ஜவுளிக்கடை நண்பர்கள், சொத்து இழந்து பாதவிக்கும் தோழருக்கு, கள்ளனை பிடிக்க, மேற்குறிப்பிட்டவாறு ஒத்துழைக்கவேண்டுகிறோம்.

"திராவிட நாடு"

காஞ்சிபுரம்.

# கொள்ளிடக்கரையில்! குளிர் நிழற்சோலையில்!!

குபு குபுவென்று காற்று வீச, குலை குலையாக காய்கள் குலுங்க, நிழற் பந்தல் போட்டவாறு நின்ற மரங்களடர்ந்த மாஞ்சோலையிலே, கருத்தைக் கவரும் இளைஞர்கள் ஐம்பது பேர் அமர்ந்திருந்தனர்—தழைகளை ஆசனமாகக் கொண்டு. வெளியே கனல் பறக்கக் காயும் வெய்யிலைப்பற்றிய சிந்தனையின்றி, எதிரே அமர்ந்து தமக்குப் போதனை புரிவோரின் சொற்களிலே கவனத்தையும், கருத்தையும் பதியவைத்துக் கிடந்தனர். இந்தக் காட்சியைக் கண்டபோது, 'நாம் எங்கேயிருக்கிறோம்?' என்று திரும்பிப் பார்த்தேன். என்ன, சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள், என்றார் நண்பர் தர்மலிங்கம். கோடை வெயிலிலே, பூத்துக் குலுங்கும் சோலையினையும், சுந்தரமாக அமர்ந்திருக்கும் இந்த மாணவ மணிகளையும்பற்றி எண்ணினேன் என்றேன். இவ்விதம் நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில் 'மணி ஒன்று. இப்போது இடைவேளை' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். நண்பர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன் ஆகிய மூவரும் என்னை நோக்கி வந்தனர். 'ஆசிரியர்களே, சாப்பிடலாமா?' என்றார் திருச்சி மணி. 'ஊர்.....ஊம். ஆகட்டும். மத்தியானம் வகுப்பு ஆரம்பிக்க வேண்டும்' என அவசரப்படுத்தினார் நண்பர் பராங்குசம். எப்போதுமே மகிழ்வுடன் வேலைகள் என்றால் இப்படித்தானே அவர்! சோலைக்குள்ளே, அறுபது பேருக்கும் அறுசுவை உணவு தரப்பட்டது. உணவு மட்டுமா? தமது கேலிப் பேச்சையும் அன்பையும் சேர்த்துக் கலந்து படைத்தார் அம்பில் தர்மலிங்கம்.

* * *

திருச்சி எப்போதும் முதலிடம் பெறத் துடிக்கும் கழகக் காளைகளைக் கொண்டிருக்கும் மாவட்டம். 'திராவிடப் பண்ணை' கட்டிடம்—அங்குதான் மாவட்டக் கழக அலுவலகம் உளது—நோக்கிப் போய்விட்டாலே, புளகாங்கிதமாகயிருக்கும். யாராவது நாலு பேர் உட்கார்ந்தவண்ணமும், 'இங்கே கூட்டம் அங்கே நாளைக்கு' என்று ஏதாவது கழக சம்பந்தமாகத்தான் பேசிக்கொண்டிருப்பர், வெளியூர் நண்பர்களும், மாவட்டக் காரியங்களைக் கவனிப்போரும். இதைக் கண்டு பலமுறை மகிழ்ந்ததுண்டு. அவ்வளவு ஆர்வமுள்ள நண்பர்கள்—கழக அமைப்புகளை உடனடியாகச் செய்யவேண்டுமெனும் ஆசை படைத்தவர்கள். அவர்களின் முயற்சியால், ஈரோடு பொதுக்குழு முடிவுப்படி, மாணவர் பிரச்சாரப் பயிற்சி, நான்கு நாட்கள் நடத்தப்பட்டது. மாணவர்களென்றால் ஒருவர் இருவரல்ல 84 தோழர்கள் விண்ணப்பித்திருந்தனராம்—அவர்களில் 48 பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கான பயிற்சி தந்தனர். நான்கு நாட்கள்! 24 வேளைகள்!! அறுபது பேருக்கு!!! உணவுப் பிரச்னை, மனதைக் குடைந்ததாம். நண்பர் 'அம்பில்' நானிருக்கிறேன், என முன்வந்தாராம். அவரது பெருந்த ஒத்துழைப்பினால், கொள்ளிடக்கரையிலே, குளிர் நிழற் சோலையிலே, 'வகுப்புகள்' நடைபெற்றன கடந்த 24, 25, 26, 27 ஆகிய தேதிகளில்.

* * *

முதலிரண்டு நாட்களிலும் மாவட்டத் தலைவர்களே, மாணவத் தோழர்களுக்கு, பயிற்சி தந்தனர்.

26-ந் தேதி பிரச்சாரக்குழுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் M. A., சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர் தோழர். க. அன்பழகன் M. A., ஆகியோர் வந்து சேர்ந்தனர். "ஞாயிறு" இதழ் ஆசிரியர்களில் ஒருவரான தோழர் T. K. சீனுவாசனும் இந்நல் முயற்சி காணவந்திருந்தார். முற்பகல்—பிற்பகல்—மாலை, ஆகிய நேரங்களில், இந்த மூவரும், வகுப்பு நடத்தினார்கள்.

மறுநாள் மாணவர் கழகச் செயலாளர் தோழர் K. A. மதியழகன், 'திராவிடநாடு' துணை ஆசிரியர் அரங்கண்ணல் ஆகியோர் வந்து, அவர்களும், பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டார்கள். ஒவ்வொரு நாளும் பற்பல தலைப்புகளில் வகுப்புகள், நடைபெற்றன. 'மாணவர் கடமை' குறித்து தோழர் பராங்குசம், 'கழகமும் நாமும்' என்பது குறித்து தோழர் A. P. தர்மலிங்கமும், 'தொழிலாளர் தொண்டு' சம்பந்தமாக தோழர் எம். எஸ் மணியும் பொதுவாக வகுப்புகள் நடத்தினர்.

'அரசியல் வரலாறு' — 'இந்திய அரசியல் வரலாறு'—'கழகவரலாறு' 'நமது இலட்சியம்'—'நாமும் பிறரும்', ஆகிய தலைப்புகளில் தோழர் நெடுஞ்செழியன் வகுப்பு நடத்தினார்.

'சமுதாயம்', 'பொருளாதார பேதம்', 'கழகத்தை வளர்ப்பது எவ்விதம்?' எனும் பொருள்கள் குறித்து தோழர் T K. சீனுவாசன்; விளக்கினார்.

'வகுப்புவாரிமுறை', 'திராவிடர்—யார்?', 'இலட்சியம் வளர்ந்தது எப்படி?', 'நாம் செய்ய வேண்டிய கடமை' முதலிய பல தலைப்புகளில் தோழர் அன்பழகன், விரிவுரைகளும் விபரங்களும் தந்தார்.

'வெளிநாடுகளும் நாமும்', 'இந்திய மாகாணங்களும் நமது இடமும்', இந்திய அரசியல் அமைப்பு', 'கழக சட்டதிட்டங்கள்' ஆகியவைகள் குறித்து தோழர் மதியழகன் விளக்கினார்.

'பொது அறிவு' 'பத்திரிகைகளும் மாணவரும்' என்பது குறித்து தோழர் அரங்கண்ணல் எடுத்துரைத்தார்.

* * *

கூடியிருந்த மாணவத் தோழர்களின் பேச்சுத்திறன், நம்மை ஆர்வத்திலாழ்த்திற்று. மாவட்டத்தின்

(8-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed, & Published by C. N. Annadurai M A., at "Dravidanadu" Press, 55, Tirukkachinambi St., Kancheepuram

713

REGD No M 4042

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 11—5—52 | இதழ் 45

மழலைபேசியும், குறுநகை புரிந்தும், கூச்சலிட்டும், சிறுகை நீட்டியும் தத்தித் தவழ்கின்றனவே, குழந்தைச் செல்வங்கள், அதைக் குறித்து, கவிஞர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்—அழகாக. தோட்டத்து மலர்களாம், அவர்கள்! 'வீட்டிலே குழந்தைகள்; தோட்டத்திலே மலர்கள்' அழகான உவமை! நெஞ்சை அள்ளும் உவமை!! குழந்தைகளை மலர்களுக்கு ஒப்பிடுகிறார். உண்மைதானே. வேதனையும் விம்முதலும் நிரம்பிய எத்தனையோ குடும்பங்களில், துன்பத்துக்கும் தொல்லைக்கும் 'இடைவேளை' தருவோராகயிருப்பது குழந்தைச் செல்வங்கள்தானே? விரக்தியான மனநிலையுற்றோன், பூந்தோட்டம் புகுந்தால், துயரம் குறையத்தான் செய்யும். அதேபோல, வீடு — பூந்தோட்டமாகுமாம், குழந்தைகள் உலவினால். கூறுகிறார், கவிஞர். கவிதைகளும் நூல்களும், குழந்தைகளைப்பற்றி, ஏராளம் உள்ளன. எதிர்கால உலகம் என்றழைப்பர், 'எதிர்காலம்' என்றே சுருங்கச்சொல்லி அதில் அடங்கிக்கிடக்கும் பொருள் காட்டி மகிழ்வோரும் உண்டு. இவ்வளவு சிறப்பித்துக் கூறபட்டும் குழந்தைச் செல்வங்களின் நிலை, என்ன, இன்று? இங்குதான், யோசித்துப் பாருங்கள். என்ன நிலை! பட்டு மெத்தையிலே பலவித 'சொக்காய்'களும் பவுன் ஆபரணங்களும் போட்டவண்ணம், தாலாட்டப்படுகிறதே, அந்தக் குழந்தைகள் தொகையை அல்ல — சிந்திக்கச் சொல்வது. சீரும்சிறப்புடன் இருக்கும் இந்தக் குழந்தைச் செல்வங்களின் தொகை பெரிதல்ல; மிகமிகக் கொஞ்சம். ஆனால்! தொட்டிலும் தாலாட்டும் அறியாது, மரக்கிளைகளிலே கட்டப்பட்ட 'ஏணை'யே தொட்டிலாக, மர நிழலே 'வீடாக' புழுதி மேடுகளே விளையாட்டு மைதானங்களாக, உடம்பிலே துணியின்றி உலவியும் தவழ்ந்தும் கிடக்கின்றனவே குழந்தைகள்—ஏழைகளின் வீட்டிலே பிறந்தவைகள், அவைகளைப்பற்றி எண்ணிப் பாருங்கள்.

குழந்தைப் பருவம் — உலகக் கோரம் எதையும் அறியாத பருவம். சூழ்ச்சியும், சூதும் நிறைந்த இந்த

## 'தோட்டத்துமலர்கள்'
## சுகம் பெறுவது என்று?

உலகத்திலே, எதுவும் தெரியாத இன்பப் பருவம் அது.

என்றாலும், இன்றைய சமுதாய அமைப்பில், 'எதிர்கால உலகம்' என்று போற்றியழைக்கப்படும் அந்தக் குழந்தையர் உலகு, எவ்விதம் இருக்கிறது?

இது குறித்து, ரஷ்யச் செய்தி இலாகாவினர் தகவல் ஒன்று தந்திருக்கிறார்கள்: அகில உலக குழந்தை பாதுகாப்பு மாநாட்டினர் விடுத்துள்ள செய்தியாகும் அது. அந்தக் குறிப்பினைத் தருகிறோம்:

"கோடிக்கணக்கான குழந்தைச் செல்வங்கள், இன்று, பசிக்கும் ஏழ்மைக்கும் இரையாகி வருகின்றன. ஆயிரக்கணக்கான குழந்தைகளை, ஜப்பான் சிரியாபோன்றநாடுகளில், பெற்றோர்கள் விலைகூறி விற்கிறார்கள். பற்பல நாடுகளில், சின்னஞ்சிறு பாலர்கள், உழைக்கிறார்கள்—தம் குடும்பத்தைக் காக்க. 'குழந்தைகளை வேலைக்கு வைத்து கொடுமைப்படுத்துதல் கூடாது' என்கிற சட்டங்கள் பல இருந்தும், இச் செயல், பகிரங்கமாக நடைபெறுகிறது. செல்வச் சீமான்கள் வீட்டிலேயிருக்கும் சிங்காரப் பொருள்களுக்காக, குழந்தைகளின் உழைப்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது ஈரான் போன்ற நாடுகளில். சிறுபாலர்கள்! சிந்துகிறார்கள்!! செல்வங்கொழிக்கும் நாடுகள் அவர்கள் பிறந்த இடங்கள். எனினும், இந்தக் குழந்தைகள், சீரழிகிறார்கள். ஏராளமான செல்வத்துக்கு அதிபதியாகயிருக்கும் அமெரிக்காவிலும், ஆபிரிக்காவிலும், ஆசிய நாடுகளிலும் கோடிக்கணக்கான குழந்தைகள் குப்பி கழுவவும் வழியின்றி துடிக்கிறார்கள்—இருக்க இடமின்றித் தவிக்கிறார்கள் — கவலைப்பட யாருமின்றி அலைகிறார்கள். இரண்டு மூன்று வயதுக்குள்ளேயே இந்த 'ஏழையின் சின்னங்கள்', தம்மைக்காத்துக் கொள்ளவேண்டியவர்களாகிறார்கள். குபேர நாடு என்று முரசு கொட்டப்படுகிறதே அமெரிக்கா, அங்கும்—அதன் பக்கத் துணையாக இருக்கும் மேற்கத்திய நாடுகளிலும், குழந்தைகள் நிலை என்ன தெரியுமா? நான்கு குடும்பத்துக்கு ஒரு குடும்பத்தில் வேதனைக்காளாகும் குழந்தைகள் இருக்கின்றன, அமெரிக்காவில். பிரான்சிலும் பிரிட்டனிலும், குழந்தைகளின் வாழ்க்கை நிலை, சீர் கெட்

டுக் கொண்டே போகிறது. இத்தாலியில், 40-லட்சம் குழந்தைகள் நிர்க்கதி. 'இந்த நாடுகள் செல்வமில்லாதவையா? சீரோடு வாழமுடியாதவைகளா? இல்லை, இல்லை! எனினும், இந்த 'எதிர்காலங்கள்' தத்தளிப்பதேன்— தவிப்பதேன்?

கிரீஸிலும் ஸ்பெயினிலும் ஆயிரக்கணக்கான குழந்தைகள் சிறையிலும் கொட்டடிகளிலும் அடைக்கப்பட்டிருக்கின்றனர். கொரியாவிலும், இந்தோசீனாவிலும், மலேயாவிலும் குழந்தைகள் படும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. கொரியாவிலும் சீனாவிலும் அமெரிக்கத் துருப்புகள் கிருமிகளைக் கொட்டுகிறார்கள்—இந்தக் கோரத்தின் விளைகளும் விபரீதங்களும்—அப்பப்ப!''

இவ்விதம், பற்பல நாடுகளிலும் நிலையை, படம் பிடித்திருக்கிறது. இந்த நாடுகளிலெல்லாம், ஆட்சி புரிவோர் கவனம் செல்லாத காரணத்தால், இத்தகைய கேடுகள் மலிந்து கிடக்கின்றன. இந்த நாடுகளின் பட்டியலில், 'பாரதமாதா'வின் பூமியையும் ஒப்பிடுங்கள். சுதந்திர நாடாம், இது! அமெரிக்கர்களுக்கோ அல்லது அந்நியநாடுகளுக்கோ அடிபணியாது—எதிர்காலச்சந்ததிகளை அடிமையாக்கவுமாட்டோம் எனமுழக்கமிடுகிறார் நேரு — ஆனால் என்ன நடக்கிறது? ரஷ்ய செய்தி இலாகா தந்துள்ள செய்திகளைவிட கோரமான காட்சிகள், நமது வீதிகளிலே. 'பிள்ளையோபிள்ளை!'—என்று பெற்ற குழந்தையை விலை கூறுகிறாள், மாதா. பசிக்கொடுமையால், குழந்தைகளைவெட்டி வீசுகிறான், தந்தை. குழந்தை மலர்களாம்! ஆனால் முறித்து வீசப்படுகிறது!—ஏழ்மையால்.

இங்கே வாழும் குழந்தைகளின் நிலையை எண்ணினால், பரிதாபம் அதிகமாகும். படிக்க வசதி கிடையாது! மாடு மேய்த்தால், காட்டுக்குச்சென்று 'சுள்ளி' ஒடித்துக் கொடுத்தால், சாணம் எடுத்தால், 'ஆண்டை' சொற்படி கேட்டால், 'ஆபீஸ் சிறுவனாக' இருந்தால், கொத்தனுக்கு 'எடுபிடி'யாக இருந்தால், குப்பை எடுத்தால், —இவைகளிலே ஏதாவதொன்றைச் செய்தால்தான் வாழமுடியும் என்கிற நிலைமையில் இருக்கிறார்கள் 'நமது எதிர்கால உலகங்கள்.' கல்வி கிடையாது! கோலிதான் விளையாட்டுத்தோழன் — குப்பைமேடுதான் கூடாரம். தவறி, ஆசையின் விளைவால், ஏதாவது, 'எசமான்' வீட்டு விருப்பத்தைத் தொட்டுவிட்டாலோ சிறைவாசம்!—வளராத வயது, வாடுகின்ற பாலர்கள் அடங்காத சிறுவயதுக் கைதிகள் — என்று பட்டம் சூட்டுகிறது சர்க்கார். குழந்தைகள் மலர்களாம்! ஆனால் இங்கே என்ன காண்கிறோம்?

உலகின் பலபாகங்களிலும், குழந்தைகள் வாழ்வு, கோரமாக இருப்பதற்குக்காரணம் அந்தந்த நாடுகளிலே உள்ள சர்க்கார்கள், முதலாளித்துவ சர்க்காராகயிருப்பதுதான் என்று சூசகமாக எடுத்துச் சொல்கிறது, ரஷ்யச் செய்தி இலாகா.

இங்கும், இதுதானே காரணமாகும்? ஏழைகள் சர்க்கார் என்று பெருமிதத்தோடு பேசுகின்றனரே, காங்கிரஸ் நண்பர்கள் — ஏழைக் குழந்தைகளின் கதி எப்படியிருக்கிறது, இங்கு? மற்றநாடுகளைவிட படுமோசமாகவன்றோ வளர்ந்து கொண்டுள்ளது.

என்ன காரணம் இதற்கு? குழந்தைகள் பிறந்த பூமி—பாலைவனமா. அல்லவே! செழிப்பும் கொழிப்பும் நிறைந்ததாயிற்றே. இருந்தும் ஏன் இந்நிலை? கல்வியும் அறிவும் பரவாத காரணம்தான் என்ன. மேட்டுக்குடியினரின் குழந்தைகள் உல்லாசமாகப் பள்ளிக்குச் செல்லுவதைப் பார்த்து நிற்கும் கதிதானே ஏழைக் குழந்தைகளுக்கு, இங்கு? பார்த்து நிற்பது மட்டுமல்ல, மாடிவீட்டுக் குழந்தையைப் பள்ளிகூடம்வரை அழைத்துச் சென்று, அவர்தம் புத்தக மூட்டையைத் தலையிலே வைத்துக்கொண்டு, பாதுகாப்புக்காக செல்லும் கதிதானே!

குழந்தைகளின் பாதுகாவலன் சர்க்கார் என்று சொல்கிறார்கள்— தான் பெற்ற குழந்தையை ஒரு தாய் கொன்றாள் என்றால், 'எப்படிக் கொன்றாய்?' என்று அதட்டிக் கேட்கிறது அரசாங்கம். சர்க்காரின் குடிமகனைக் கொல்லலாமா?' என்று சட்டம் கொட்டுகிறது. ஆனால் அதே குழந்தைக்கு ஆதரவு தா! படிப்பு வசதி தா! வாழச் செய்!

அண்மையில், சென்னை மாகாண சர்க்கார் தலைவரான அன்பர் ஆச்சாரியார் உத்திரவு ஒன்று பிறப்பித்துள்ளாராம். சர்க்கார் உத்யோகஸ்தர்களின் குழந்தைகளுக்கு, கல்வி வசதி, கிடைப்பது சம்பந்தமாக. இலவசக் கல்வி தரப்படுமாம் — உத்யோகஸ்தரின் குழந்தைகளுக்கு; ஆறுமாது பாரம்பரை! கூடாதெனக் கூறவில்லை நாம். ஆனால் இந்த சலுகை, சர்க்கார் உத்யோகஸ்தர்களின், குழந்தைகளோடுமட்டுமென்றின்றி விரிவடையவேண்டும். சர்க்கார் உத்யோகஸ்தர்களை 'ராஜா'செய்யவா இவ்வுத்தரவு? என்ன அவசியமேற்பட்டது அன்பர் ஆச்சாரியாருக்கு அதிகாரிகளின் அன்பைப்பெற?— 'குறுமதி' எனக்கூற விரும்பவில்லை நாம். உள்நோக்கம் என்ன, இதற்கு? தமக்குச் சாதகமாக அவர்கள் எல்லாம் இருக்கவேண்டுமென்பது தானே! தனது லாபம் என்றால் உதவிபுரிய எண்ணம் வருகிறது— அவர்களுக்குமட்டும் சலுகைதர. வந்தவரின் கண்களின் ஏன்படவில்லை, குப்பைமேட்டிலே கோவணாண்டிகளாய் நிற்கும்குழந்தைகள்?

குழந்தைகளை மலர் என்றார் கவிஞர்—ஆனால் அந்த 'மலர்கள்' இந்தச் சமுதாயத்திலே எவ்விதம் கிடக்கின்றன. பெற்றோரின் பெருமூச்சுக்கும் ஊராரின் ஏச்சுப் பேச்சுக்கும், சர்க்காரின் சட்டத்துக்கும் வதைபடுகின்றன. மலர்கள் மிதிக்கப்படுகின்றன. எதிர்கால உலகம் வதைக்கப்படுகின்றது.

இக்கொடுமைகள் நீடிக்கச்செய்ய அனுமதிக்கிறது; அரசாங்கம். கட்டாயக் கல்வியில்லை! அறிவு பரவ வழியுமில்லை!! ஏழ்மையின் கொத்துதலும் நீங்கவில்லை. இந்தக்கொடுமைகள் நீங்கினால்தானே 'எதிர் காலம்.' சீர்பெற முடியும்.

ரஷ்யச் செய்தி இலாகா செய்தி தருகிறது — குழந்தைகள் 'மலர்களாக' உலவுவதைக் காட்டும் படங்களைப் பிரசுரித்து. இங்கே? செல்வமும் பெருமையும் நிறைந்ததாகக் கூறப்படும் இங்கே எதைக் காட்ட முடியும்?

★



## 2- வாலாஜா தோழர்களுக்கு



18, Reddiappa St., VELLORE (N. A.)

Date 25. 12. 1951.

To
The Secretary
Dravidian Progressive Federation
Kanchipuram,

Sir,
I support the formation of Dravidasthan and am ready to sign the pledge.

Yours sincerely
M. A. Manickavelu
Candidate
Polur Constituency

இதுதான் மாணிக்கவேலர் அனுப்பிவைத்த ஆங்கிலக்கடிதம்— என்னை ஆனந்தத்திலாழ்த்திய கடிதம் — தி. மு. க. தோழர்களை மாணிக்கவேலருக்காகப் பரிவுடன் பணியாற்றத் தூண்டிய கடிதம் எத்தனை 'படேபடே' காங்கிரஸ் தலைவர்கள் திராவிடநாடு பிரச்சினையை அலட்சியம் செய்தாலும், எதிர்த்தாலும், ஏளனம் செய்தாலும், கவலையில்லை, கருத்திலே தெளிவும் காரியமாற்றும் திறனும், கஷ்டப்படும் சமூகத்திடம் தொடர்பும் கொண்ட தலைவர்கள் திராவிட நாடு பிரச்சினையை ஆதரிக்கிறார்கள் எனவே வெற்றிக்கு வாய்ப்பு இருக்கிறது என்ற களிப்பையும் நம்பிக்கையையும் நமக்கெல்லாம் தந்த கடிதம். — மாணிக்கவேலர், திராவிடநாடு அமைவதை ஆதரிப்பதாக எழுதியுள்ள கடிதம்—நமது இதயகீதத்தை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடும் கடிதம்—எந்த இலட்சியத்தை நாம் மக்கள் மன்றத்திலே எடுத்துரைத்து வந்திருக்கிறோமோ — எந்த இலட்சியத்துக்காக எண்ணற்ற இளைஞர்கள் சிறைச்சாலையை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எனக் கூறி ஏற்றுக்கொள்ளவும், தேவைப்பட்டால் தூக்குக் கயிறை முத்தமிடவும் சித்தமாக உள்ளனரோ, அந்த இலட்சியத்தை ஏற்றுக் கொள்வதாக, மாணிக்கவேலர் உறுதிதரும் கடிதம்.

இதைக்கண்டதும் களிப்புப் பிறக்காமலிருக்க முடியுமா!

திராவிட நாடு எனும் பேச்சு, காட்டுக் கூச்சல் என்றார் காமராசர்.— இதோ, மாணிக்கவேலர், ஏற்று கொள்கிறார்.

திராவிடநாடு என்றால் இன்னதென்றே புரியவில்லை, என்று பேசினார் பக்தவத்சலம் — இதோ அதைப் புரிந்துகொண்டதுடன் ஆதரவும் தர இசைகிறார், மாணிக்கவேலர். அவர் சட்டசபை சென்று அமருவது நமது இலட்சியத்துக்கு உரம் ஊட்டும், நமது இயக்கத்துக்கு மதிப்பளிக்கும். நமது கிளர்ச்சிக்கு வெற்றியைப் பெற்றுத்தரும் என்று எண்ணாமலிருக்கமுடியுமா — தெளிவாகத் தெரிவிக்கிறாரே, திராவிடநாடு அமைவதை நான் ஆதரிக்கிறேன் என்று.

எனவேதான் பூரிப்படைந்தோம். அந்தப் பூரிப்பைப் பொசுக்கித் தள்ளிவிட்டுப் புன்னகை புரிகிறார் பூசுரத்தலைவர்.

இரட்டைச் சந்தோஷமல்லவா அவருக்கு.

மாணிக்கவேலருக்குக் கருப்புக் கொடி காட்டப்படுகிறது — திராவிட இனத்தவருக்குக் காட்டப்படுகிறது—காங்கிரசை முறியடித்தவருக்குக் காட்டப்படுகிறது—நமது இனத்தாருக்கு அல்ல—என்பது பெருமகிழ்ச்சி ஊட்டத்தான் செய்யும் ஆச்சாரியாருக்கு!

மாணிக்கவேலர் திராவிட முன்னேற்றக் கழகத்தாரை ஏசிப் பேசுகிறார், சீறித் தாக்குகிறார் — இதுவும் பெருமகிழ்ச்சி அவருக்கு!

சிங்கங்கள் மோதிக்கொள்ளும்போது சிறு நரி இரத்தம் குடித்து இன்பம் பெறுமாமே காடுகளில்— அதுபோல, நாட்டிலே இது.

காட்டட்டும்! காட்டட்டும்!!— என்று கூறிக்களிக்கிறார் தன் அந்தரங்க நண்பர்களிடம்!

தாக்கட்டும், தாக்கட்டும்—உறவு அற்றுப் போகட்டும்—என்று பேசி மகிழ்கிறார், தன் குழுவினருடன்!

அவருக்கு இதுபோன்ற சம்பவங்கள் இரட்டைச் சந்தோஷம் அளிக்கத்தான் செய்யும்.

இது நமக்கு நன்றாகப் புரிகிறபோதுதான், மாணிக்கவேலரின் போக்கால் மூண்ட கோபத்துடன், இந்தப் போக்கு மூலம் ஆச்சாரியார் பெறும் ஆனந்தத்தை எண்ணி ஏக்கம்—ஏக்கமா!—வேதனை மூண்டு விடுகிறது. என்செய்வது—திராவிட முன்னேற்றக் கழகம் தன் வலிவை மேலும் பக்குவப்படுத்தியாகவேண்டும்—ஆம் — தி. மு. கழகம் நண்பர்களை நாடித்தேடிப் பெறலாம், ஆனால் நயவஞ்சகத்தைத் திறமை மிக்க கலையாக்கிக் கொண்டுள்ள ஆச்சாரியாரின் பிடியிலே நாடு சிக்கிக் கொண்டதால், நாம் பெறும் நண்பர்களை நம்மிடமிருந்து பிரித்துவிடவும், பகையை மூட்டிவிடவுமான காரியம், பலப்பல நடைபெறத்தான் செய்யும் — எனவே இந்தச் சம்பவங்கள் மூலம் நாம் பெறவேண்டிய பாடம், 'தி. மு. க. வின் வலிவு, நிச்சயமாக, வளர்ந்தாகவேண்டும்—வளரச்செய்வோம் என்று வாலிபத் தோழர்கள் சூளுரைக்கவேண்டும்.

ஆச்சாரியார் ஆட்சிப்பீடம் ஏறியதும், இத்தகைய திருத்தொண்டு புரிகிறார் — திறம்படப் புரிகிறார்— திறமை எப்படி இராமற்போகும்— அவர்தான் இராமாயணத்தைப் பாராயணம் செய்கிறவராயிற்றே, வாலியை வதைத்துச் சுக்ரீவனுக்குப் பட்டம் சூட்டிய காண்டம், சில திருத்தங்களுடன் அரசியலில் இப்போது வெளியிடப் படுகிறது.

இறுதியில் இந்தப் போக்கு, ஆச்சாரியாரையும் அவருடைய ஆதீனத்துக்கு வந்து சேர்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியையும், எங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பது, அரசியல் வரலாறுகளிலே ஆராய்ச்சி உள்ளவர்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது. துவக்கமோ, அவருக்கும் அவருடைய துதிபாடகர்களுக்கும் களிப்பூட்டத்தான் செய்யும். மாணிக்கவேலர் மந்திரி வேலையை ஏற்றுக்கொண்டதும், ஆச்சாரியார் ஆனந்தமாக அல்லவா ஊஞ்சலாடி இருப்பார்.

அதைவிட ஆனந்தம் பிறந்திருக்கும், மாணிக்கவேலருக்குக் கருப்புக்கொடி பிடித்த செய்தி கேட்டு!

அதனினும் அதிகமான மகிழ்ச்சி பிறந்திருக்கும், மாணிக்கவேலர் சீற்றமுற்று, நம்மைத் தாக்கிப் பேசுகிறார் என்று கேள்விப்படும்போது.

ஆகவே, களிப்பை மேலும் மேலும் பெற, மற்றும் பல, மாணிக்கவேலர்களைத் தேடிக் கொண்டுதானிருப்பார்—தன் சீடகோடிகளிடமும், இந்தத் திருமந்திரத்தைத்தான் உபதேசித்தபடி இருப்பார்.

இந்தச் சூழ்நிலையைத்தான், நாம் தகர்த்தெறிந்தாகவேண்டும்.

ஆச்சாரியாருடைய ஆட்சியின் அடிப்படையே, 'மித்ரபேதம்' என்பதிலேதான் இருக்கிறது!

எனவே, மாணிக்க வேலர்களுக்குக் கருப்புக்கொடி காட்டிவிடுவதுடன் நமது பணி தீர்ந்துபோகவில்லை சிக்கலும் தீர்ந்து போகவில்லை, இத்தகைய சூழ்ச்சி முறை மூலம், நாடாளலாம் என்று மனப்பால் குடிக்கும் ஆச்சாரியாரின் சூது அம்பலமாகவேண்டும் — அவருடைய பிடியிலிருந்து நாடு விடுபட்டாகவேண்டும்—அதற்கான அறப்போர் உருவாகவேண்டும்—அதிலே ஆயிரமாயிரம் வீர இளைஞர்கள் குதித்தாகவேண்டும் — வீரமும் தியாக சுபாவமும், கொள்கைப் பற்றும் கொண்டவர்களை எல்லாம் கொன்று குவிக்கட்டும் குல்லூகபட்டர்—அந்தப் பிணங்களைத் தமது சூதுத் தோட்டத்துக்கு உரமாக்கி, சூழ்ச்சி மலர் பூத்ததும், எடுத்து மணம் பார்த்து மகிழட்டும் — ஜார்போல! சியாங்கேஷேக்போல! பிரஞ்சு நாட்டு லூயிபோல!

அறப்போருக்கான வலிவைப் பெறுவதிலே, தி. மு. க. தோழர்கள் முனைந்திருக்க வேண்டும்.

தி. மு. க. வின் வளர்ச்சி, மாணிக்கவேலரின் உதவியாலோ, கூட்டுறவாலோ ஏற்பட்டதல்ல— இதனை அனைவரும் அறிவர்.

தேர்தலின்போது ஏற்பட்ட உறவுக்கு முன்பு, அவரிடமிருந்து தி. மு. க. துரும்பளவு உதவியும் பெற்றதில்லை, தூசிபோன்ற ஆதரவும் பெற்றதில்லை!

தேர்தலின்போது நாம் தேவைப்பட்டோம்.

தேர்தலின்போது நமக்கு அவர் தேவைப்பட்டார், காங்கிரசை முறியடிக்க.

தேர்தல் முடிந்தது — காங்கிரஸ் முறியடிக்கப் பட்டது.

இப்போது அவர் வேறு 'திசை' செல்கிறார்!

அதை அவருடைய நண்பர்கள் 'சுக்ரதிசை' என்கிறார்கள், அரசியல் யூமறிந்தவர்கள் 'சனிதிசை' என்கிறார்கள். எது எப்படியாயினும், அவர் செல்லும் 'திசை' தவறு என்பதை அந்தத் 'திக்கு'த் திரும்பியவருக்குக் கருப்புக் கொடி மூலம் வாலாஜாவில் அன்று காட்டிவிட்டார்கள்—தி. மு. க. வின் கருத்து என்ன அவர் 'சனம்' ஆனதுபற்றி, என்று பலரும் கேட்டுக்கொண்டிருந்த கேள்விக்கு அன்று பதிலளித்து விட்டார்கள்—நாம், அந்தப் போக்கைக் கண்டிக்கிறோம் என்பதை நாடு அறிந்து கொண்டு விட்டது.

வாலாஜாவிலேயே மாணிக்கவேலரும் பதிலளித்திருக்கிறார் நமக்கு. அன்றையச் சம்பவம் அவருக்குக் கோபமூட்டியதால் காரசாரமாக நம்மைத் தாக்கினார்—சகஜந்தான்—நான் அதுபற்றிக் கவலைப்படவில்லை.

அவருக்கும் தி. மு. கழகத்துக்கும் நேசப்பான்மையோ நெருங்கிய தொடர்போ முன்பு கிடையாது, எனவே அவர் அன்று கருப்புக் கொடி காட்டியதைத் தப்பர்த்தம் செய்து கொண்டு பேசியிருக்கிறார்— ஏசவும் செய்தார்.

மாணிக்கவேலர் மந்திரியானதன் மூலம் மக்களுடைய வெறுப்புக்கு ஆளான காங்கிரஸ் கட்சிக்கும் காங்கிரஸ் மந்திரி சபைக்கும் ஆதரவு தேடித்தருகிறார் — இதனால்தான் நாம் அவரைக்கண்டிக்கிறோம், கருப்புக் கொடி காட்டுகிறோம்.

தி. மு. க. தோழர்கள் மட்டுமல்ல, அவருக்கு 'ஓட்' அளித்த



மக்களெல்லாம் கூட காங்கிரஸ் ஆட்சி மீண்டும் ஏற்பட்டுவிடக் கூடாது, என்பதற்காகத்தான், ஓட் தந்தனர்!

எனவே, காரணம் ஆயிரம் காட்டினாலும், அவர் இன்று, காங்கிரஸ் மந்திரிசபை அமைவதற்குத் துணையாகி, ஆச்சாரியாருக்குத்துதிபாடிக் கொண்டிருப்பதைக் கண்டு, வேதனைப் படாமலிருக்க முடியாது.

காங்கிரஸ் மந்திரிசபையாக இருந்தாலென்ன, மாணிக்கவேலருக்கு அதிலே ஒரு இடம் கிடைத்து விட்டது, அந்த வரையிலே இலாபந்தான், அது வரையிலே சந்தோஷந்தான், என்று எண்ணுபவர்கள், சிலர் இருக்கலாம், அவர்களின் தொகை, வேக வேகமாகக் குறையத்தான் செய்யும். காங்கிரசுக்கு எதிர்ப்புணர்ச்சி காட்டும் அறிகுறியாக,மாணிக்கவேலருக்கு ஓட் அளித்தவர்கள், அவர் மந்திரியாகி விட்டார் என்பதற்காக மகிழமாட்டார்கள்— இப்படி இவர் செய்வது சரி என்றால், இவர் காங்கிரஸ் போராலேயே தேர்தலுக்கு நின்றிருக்கலாமே, ஏன் நம்மை எல்லாம் காங்கிரஸ் அபேட்சகருக்கு 'ஓட்' தராதீர்கள், மீண்டும் காங்கிரசாட்சி ஏற்பட விட்டு விடாதீர்கள் என்று தூபமிட்டுவிட்டு, இப்போது, அதே காங்கிரசாட்சியிலே இவர் பங்கு பெற்றுக்கொண்டார், என்று எண்ணுவர்.

நம்மவர் மந்திரியானாரே!-என்று சொந்தம் கொண்டாடி மகிழ்ந்து பேசுபவர்கள்கூட, அவர் மந்திரியாக்கப்பட்டதால், ஒரு பலனும் ஏற்படவில்லை, என்பதை உணரத் தலைப்படும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

எப்படியோ ஒன்று நம்மவர் மந்திரியாகி விட்டார், எனவே நம்மவர்களின் குறைகளைப் போக்குவார், என்று இன்று நம்பிக்கொண்டு, அவரை நாவார (மனமார அல்ல) வாழ்த்துபவர்கள்கூட, நாளாவட்டத்திலே, ஆச்சாரியார் மந்திரிசபையில் இருந்துகொண்டு மாணிக்கவேலரால் நம்மவர்களுக்கு ஒரு நன்மையும் செய்ய முடியாது என்பதை உணரத்தான் போகிறார்கள்.

துவக்கத்திலே அவர்களுக்கு இலேசான சபலம் தட்டத்தான் செய்யும்.

காகிதப்பூ, கண்ணுக்கு மட்டுந்தான் கவர்ச்சி—மணம்கிடைக்காது.

அது போலவேதான், ஆச்சாரியார் மந்திரிசபையிலே வீற்றிருப்பதும்.

ஆச்சாரியாரும் ஆள் தேடும் படலம், அணைத்து அழிக்கும் படலம், என்பவைகளுக்குப் பிறகு, உதறித் தள்ளும் படலத்தைத்தான் துவக்குவார்! அப்போதுதான், இன்று ஆயாசப்படும் நண்பர்கள் கூட, வாலாஜாவில் கருப்புக்கொடி காட்டப்பட்டதன் கருத்தைப் பாராட்டுவர்!

பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் நலனைப்பேண, மந்திரியானார்வேறு ஒன்றுமில்லை—என்று தழதழத்தகுரலில் பேசும் நண்பர்களுக்கு, மிகப் பழைய அல்ல,சமீபகாலத்திலே நடைபெற்ற ஒரு அரசியல் சம்பவத்தை நினைவூட்டுகிறேன்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தின் நலனைக் காக்கும் வாய்ப்பு இது என்று கூறிக்கொண்டுதான், டாக்டர் அம்பேத்கார், நேரு சர்க்காரிலே மந்திரி வேலை பார்த்துவந்தார்.

அந்தோ! அம்பேத்கார் இப்படி நேருவின் வலையிலே வீழலாமா, என்று அவருடைய உண்மையான நண்பர்கள் கூறியபோதுகூட அவருடைய ஆதரவாளர்கள், பொறு, பொறு! பார், பார்! தாழ்த்தப்பட்டோருக்கு அம்பேத்கார் என்னென்ன நன்மைகள் செய்யப்போகிறார் பார்! என்று நல்வாக்குக் கொடுத்தனர்.

நடைபெற்றதோ,நாடுஅறிந்ததே! மனம் நொந்து மனதைத்திறந்து பேசியபடி டாக்டர் அம்பேத்கார் நேரு சர்க்காரிலிருந்து விலகினார்.

விலகும்போது கூறினார், நான் மந்திரிகளிலே ஒருவனாக இருந்தேனே தவிர, மந்திரிசபையின் வேலைத்திட்டத்தைக் காங்கிரஸ் தலைவர்கள்தான் தயாரித்தனர், எனவே தாழ்த்தப்பட்டோருக்கு ஏதும் நலன் கிடைக்கவழி இல்லாமல் போய்விட்டது — என்னிடம் கலந்துபேசுவதோ,பொறுப்புகளைத் தருவதோகூட இல்லை — எனவே என்னால் என் சமூகத்தினருக்கு நன்மை செய்ய இயலாமல் போய்விட்டது. எனவே நான் நேரு சர்க்காரில் மந்திரியாக இனி இரேன் என்று கூறிவிட்டு வந்தார்!

டாக்டர் அம்பேத்கார், தாழ்த்தப்பட்டோருக்கு நன்மை செய்வதற்காகத்தான் பதவியில்அமர்ந்தார் —ஆனால் அவரால் முடியவில்லை — அதற்கு நேரு சர்க்கார் இடமளிக்கவில்லை. மனம் நொந்து இந்த உண்மையை அவர் வெளியிட்டபிறகும், பிற்பட்ட சமூகத்தினரின் நலனுக்காகப்பாடுபடத்தான் பதவி ஏற்றேன், என்று மாணிக்கவேலர் கூறினால், பொருள் உண்டா!

இதை எண்ணிடும்போது, மாணிக்கவேலரின்போக்கு பிற்பட்ட சமூகத்துக்கு நலனளிக்கும் என்று எப்படி உறுதி பிறக்கமுடியும். எனவேதான் மாணிக்க வேலரின் போக்கைக் கண்டித்துக் கருப்புக் கொடி காட்டப்பட்டது.

அவரோ, "ஆஹா! நான் யார்? நீங்கள் யார்? நான் யாருடன் சேர்ந்தால் உங்களுக்கு என்ன? என்னைக் கட்டுப்படுத்த உங்களுக்கு என்னஉரிமை? நானோ பொதுநலக் கட்சியின் தலைவர்! நீங்களோ, தி. மு. க.! என்னை இது செய்யாதே அது செய்யாதே என்று கூற நீங்கள் யார்?" என்றுகேட்கிறார்.

அவர் வேறு நாம் வேறு, என்பதால்தான், அவர் ஆச்சாரியாருடன் கூடிக்கொள்ள முடிந்தது—தி.மு.க. வாகவோ, உண்மையில் தி. மு. கழகத்தினிடம் பற்றும் பாசமும் கொண்டவராகவோ இருந்தால்இந்த நிலைமை ஏற்பட்டே இராது.

அவர் பொதுநலக் கட்சியின் தலைவர்.

பொதுநலத்துக்குக் காங்கிரசாட்சி ஊறு செய்தது.

எனவேதான் காங்கிரசைத் தேர்தலிலே மக்கள் முறியடித்தனர்.

பொதுநலக் கட்சியும், காங்கிரசாட்சி கூடாது என்று மக்களிடம் கூறித்தான் ஓட் பெற்றது.

இன்று பொதுநலக் கட்சியின் தலைவர், பொதுநலத்துக்கு ஊறு செய்வதும், மக்களால் வெறுத்துத் தள்ளப்பட்டதுமான காங்கிரஸ் கட்சி, 'ஜனநாயக தர்மத்தின்'படி ஆளும்நிலை பெறமுடியாத அளவுக்குத் தேய்ந்திருக்கும்போது, அதற்கு 'டானிக்' கொடுப்பது போல, உதவி செய்து மந்திரிசபையிலே இருக்க இசைவது,எந்தவகையான நியாயம், என்று மக்கள்கேட்

(8-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 11—5—52 [ஞாயிறு

# நரி பரியாகும் படலம்!

☆

கவர்னரே! சட்டசபையிலே சொற்பொழிவாற்றும் தகுதி உமக்குக் கிடையாது!!

முதியவர் ஒருவர் முழக்கமிடுகிறார் இதுபோல, சட்டசபையில்—கவர்னர் முன்னாலே—ஆச்சாரியார் வீற்றிருக்கும் மன்றத்திலே.

கவர்னர் சொற்பொழிவாற்றுவதைக் கண்டிக்கும் அறிகுறியாக நாங்கள் இந்தச் சபையை விட்டு வெளியேறுகிறோம், என்று வீர உரை கூறிவிட்டு, 170 சட்டசபை உறுப்பினர்கள் வெளியேறினர்!

மைனாரிடி மந்திரிசபை ஒழிக! மக்கள் துரோகிகள் ஒழிக! என்று முழக்கமிட்டனர், சட்டசபை நடவடிக்கைகளைக் காணச்சென்றிருந்தவர்கள். கருப்புக்கொடியும் காட்டினர். போலீஸ் புகுந்தது புயலை அடக்க — புரட்சிப் பொறிகளை சட்டசபைக் கட்டிடத்துக்கு வெளியே கொண்டு சென்றது — அங்கே இருந்த பொதுமக்கள் இதைக்கண்டனர்—ஆர்வத்தீ மூண்டது — கண்டன முழக்கம் கிளம்பிற்று!

போலீசும் இராணுவமும், தடியும் துப்பாக்கியும், சட்டசபைக் கட்டிடத்தைச் சுற்றிலும், அதை ஒட்டிஉள்ள பலதெருக்களிலும்.

நாடாள வந்துள்ளார் ஆச்சாரியார் — துவக்கவிழா நடைபெறுகிறது, துப்பாக்கியும் துரோகிகளும் துணைபுரிய, துதிபாடுவோர் உடனிருக்க, பொதுமக்கள் கண்டிக்க, வீரர் முழக்கமிட, போலீஸ் புயலை அடக்க, எனும் இத்தகைய கோலாகலத்துடன்.

கண்டனம், வெளி ஏற்றம், முழக்கம், கருப்புக்கொடி! சட்டசபைக்கு உள்ளே!!

பட்டாளம், போலீஸ் வெளியே!!

எவ்வளவு நேர்த்தியான ஆரம்பம்! எவ்வளவு கீர்த்தி பெறுகிறார்கள், துவக்கத்திலேயே.

கவர்னர் பேச எழுகிறார் — உமக்கு அந்தத் தகுதி இல்லை என்று முழக்கம் கிளம்புகிறது — கதர்கட்டி அதிகாரியிடமிருந்து அல்ல — காங்கிரசில் ஆண்டு பல உழைத்து இன்று அதன் குறைகூற அம்பலமாக்கும் ஆந்திரத் தலைவர் பிரகாசத்திடமிருந்து.

பூ! இதனாலே என்ன! கவர்னரின் சம்பளத்திலே கால்காசு குறையவா செய்யும்— அவருடைய திரு உருவத்தைத் தாங்காமலா போகும் ஏடுகள், அவருக்கு என்ன குறை வந்து விடும் இதனால், என்பர், காங்கிரசார்:— அதிலும் — காங்கிரசாரிலே அரசியல் தெளிவு அதிகமற்றவர்கள்.

ஆனால், சென்னையின் வரலாற்றிலே, இச்சம்பவம் இடம் பெறுகிறது. கவர்னர் சட்ட சபையைத் துவக்குகிறார், கருப்புக்கொடி பறக்கிறது, செந்தலைப் பூச்சிகள் என்று எந்தப் போலீசாரைக் காங்கிரசார் கேலிபேசி வந்தனரோ, அவர்களின் துணையோடு, துரைத்தனத்தின் துவக்கநாள் தொடங்குகிறது.

காங்கிரசாட்சிக்கு இனி ஏற்படப் போகும் கதிக்கு இதுமுன் அறிவிப்பு!

துவக்கமே இதுபோல தொடர்ந்து நடைபெற உள்ளவை யாவை!! இறுதி எங்ஙனம் இருக்கும், வரலாறு அறிந்த எவரும், யூகித்துக்கொள்ளலாம்.

நாடாள வந்துள்ளார் அரசியல் ஞானி!

அவர் ஆளவருகிறார் என்ற சேதி கேட்டதும், பட்ட மரம் துளிர்க்கிறது, கெட்ட நிலை மாறுகிறது, என்று இலட்சோப இலட்சம் மக்கள் பஜனை செய்தாராம்!

அத்தகைய ஆட்சியின் துவக்க நாளில், பொதுமக்களின் பூரிப்பு, எவ்விதம் இருந்தது. வெட்கம்! வெட்கம்!!

வேதங்களை வேதியர் முழங்க, சுமங்கலிகள் ஆர்த்தி எடுக்க, சீடர்கள் சாமரம் வீச, அர்ச்சகர்கள் தூபம் காட்ட, ஆட்சிப் பெருமான் கெம்பீரமாக வந்தமர்ந்தாரா!— இல்லை, இல்லை — நிற்காதே, போகாதே, பார்க்காதே, பேசாதே என்று பொது மக்களைப் போலீஸ் விரட்ட, இந்தச்சபையிலே பேச இவருக்கு என்ன தகுதி என்று கவர்னரைப் பிரகாசம் கேட்க, பார்வையாளர்களிலே சிலபலர், ஒழிக ஆச்சாரியார் ஆட்சி என்று முழக்கமிட, வெளியே இழுத்துச் செல்க என்று போலீசுக்கு அதிகாரிகள் உத்திரவிட, அதற்கு முன் இதைக் காணீர், என்று அவர்கள் கருப்புக் கொடியைக் காட்ட, அன்பர் ஆச்சாரியார் தலைகுனிந்த வண்ணம் அமர்ந்திருக்க, இதென்ன வம்பு! இப்படியா துவக்கவிழா!! என்று கவலைப்பட்டுக் கவர்னர், சட்டசபைத் தலைவரைப் பார்க்க, இது என்ன பிரமாதம், போகப் போக நடைபெறுவதைப் பாரும், என்று கூறுவதுபோல ஐக்ய ஜனநாயக முன்னணியினர் கவர்னரை நோக்க; இதுபோல காட்சி இருந்தது

ஆயுதப் போலீசும் படை வீரரும் முன்னும் பின்னும் இருந்திடும் வர், உல்லாசச் சீமான்களும் ஒய்யாரச் சீமாட்டிகளும் கண்டு களிப்பதற்காக அமைந்திருந்த நாடகக் கொட்டகைக்குள் ஜார் நுழைந்தான் —கண்டனம் கண்டனம் கிளம்பிற்று, ஏழைஎளியவர்களிடமிருந்து —எதிர்ப்பும் பிறந்தது, பயங்கரமான வேகத்தில் வளர்ந்தது, ஜார் திகிலடைந்தான்—ஜாரின் நிலைகண்டு அவனது பாது காவலர் பீதிகொண்டனர்—தடியும்துப்பாக்கியும் துணை புரிந்தன—ஜார் தப்பினான்—எனினும் புரட்சிப் புயல் வேகமாக அடித்தது—வளர்ந்தது.

இது ரஷியாவில் — கொடுங்கோலனை மக்கள் எதிர்க்கத் துணிந்ததும்!

இங்கு, சட்ட சபையிலே கவர்னர் பேசுகிறார்—பேசாதே என்ற முழக்கம்!!

சரிதம் எவ்வளவு அழகாக, புதிய புதிய பதிப்புகளாக வெளி வருகிறது!!

இவ்வளவு 'இடி'களுக்கிடையிலே, காங்கிரசாருக்கு, ஒரு திருப்தி! பயங்கரமான கிணற்றிலே விழ இருந்தவன், வேரொன்றைப் பற்றிக்கொண்டு, உயிர் தப்பிக்க முயல, வேர் அறுந்துகொண்டே வர, கீழே தெரியும் ஆபத்தால் அவன் மனம் பீதி கொள்ள, அந்தச் சமயத்திலே, அங்கிருந்த தேன் அடையிலிருந்து சிந்திய தேன்துளி அவன் வாயில்பட, அதைச் சுவைத்து இன்புற்றானாமே—கதை படித்திருப்பீர்கள் — அதுபோல, இவ்வளவு அலங்கோலமான ஆரம்



பத்துக்கிடையே, அவர்களுக்கு ஒரு அற்ப சந்தோஷம்—ஐக்யமுன்னணி தோற்றுவிட்டதாம்—சட்டசபைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலிலே ஐக்ய ஜனநாயக முன்னணி தோற்றுவிட்டதாம்!

சாயம் வெளுத்துவிட்டது-கட்டு குலைந்துவிட்டது-கனவு பொய்த்துவிட்டது—என்று கொட்டை எழுத்துக்களிலே அச்சடித்துப் பார்த்து அகமகிழ்கிறார்கள் 'அற்ப சந்தோஷிகள்' — வரலாறோ, அழிக்க முடியாத முறையிலே தீட்டுகிறது, ஆச்சாரியார் சட்டசபையைக்கூட்டினார்—கவர்னர் பேசவந்தார்—கண்டனம் கிளம்பிற்று, கருப்புக்கொடி பறந்தது — சட்டசபையைச் சுற்றிலும் பட்டாளம் பாதுகாப்பளித்தது—இவ்விதமான அலங்கோலத்துடன் துவக்கநாள் இருந்தது—என்று. எனினும், அவர்களோ, மலக் குழியிலிருந்து மல்லிகையை எடுத்து முகர்ந்திடும் மந்த மதியினர்போல, மகிழ்கிறார்கள்—தாங்கள் வெற்றி பெற்றோம் என்று கூறி அல்ல—ஐக்ய முன்னணி தோற்றது என்று கூறி.

ஐக்ய ஜனநாயக முன்னணியை கவர்னர் முதலிலேயே, பணியாற்ற இடமளிக்காமல், நொண்டிக்குத் தடி தானம் தருவதுபோல, ஆளும் இலாயக்கைப் பெறாத காங்கிரசுக்கு ஆச்சாரியாரை அளித்து காங்கிரஸ் மைனாரிடியைப் பீடத்தில் அமர்த்தினார். மாணிக்கவேலர் கிடைத்தார். பிரகாசம் பேசுவதைக் கேளுங்கள்— "ஆச்சாரியார் பதினொந்து மந்திரிகளை நியமித்து, அவர்களை அவிழ்த்துவிட, அவர்கள் சென்று ஆதரவு தேடி, சட்டசபைத் தேர்தலிலே ஐக்கிய முன்னணி வெற்றி பெறவொட்டாதபடி செய்தனர்."

இதற்குப் பெயர் வெற்றியா!

காங்கிரசுக்கு, காங்கிரஸ் கட்சியின் போரால், சட்டசபைத் தலைவர், துணைத்தலைவர் பதவிகளுக்கு, ஆட்களை நிறுத்தி வைக்க, யோக்யதையும் துணிவும், நம்பிக்கையும் இல்லையே! ஐக்ய முன்னணிக்குத் தானே அந்த யோக்யதை இருந்தது! மராமரத்தின் பின்புறம் இருந்தல்லவா, காங்கிரஸ் போரிட்டது—நேருக்கு நேர்—ஆண்மையுடன்—அரசியல் நேர்மையுடனா!

அலிபுரம் சிறையில் அவதிப்பட்டு அன்னை பாரததேவியின் தளைகளை அறுத்தெறிய அரும் பாடுபட்ட காங்கிரஸ் தலைவர்களா, வெற்றி பெற்றார்கள். அவர்கள் 'மலைமலை' யாக வீற்றிருந்தனர்—வெட்கம் தாக்கியநிலையில்-வெற்றிபெற்றவர்களோ சுயேச்சைகள்!

அவர்களுக்கு என்ன கசக்குமா, காங்கிரஸ் கட்சி தரும் சர்க்கரைக் கட்டி!!

காங்கிரஸ் லேபில் கூட ஒட்டிக் கொள்ள மறுத்தனர் — வெட்கம், மானம் ரோஷமற்று, பரவாயில்லை, சுயேச்சையாகவே இருந்தாலும் பரவாயில்லை, சிகப்பு நிறம் படாததாக இருந்தால் போதும் என்று தானே, காங்கிரஸ் கட்சியினர், சிவ சண்முகம், பக்தவச்சலம் ஆகியோர் பின்னாலே, வால் பிடித்துக் கொண்டு ஓடினர்! கீர்த்தியும் கித்தாப்பும் உள்ள காரியமா இது!!

ஐக்ய முன்னணி, அரசியல் இலஞ்சங்களை அள்ளி வீசும் ஆச்சாரியாரின் முழுத்திறமைக்குப் பிறகும் பெற்ற ஓட்டுகள், சாமான்யமல்ல, ஐக்யமுன்னணியின் கட்டு உடைபடும் விதமானது அல்ல! அதிலே இருப்பதைவிட, சும்மா இருந்தால், காங்கிரஸ் அரசியல் சூதாடிகள், சாமரம் வீசுவார்கள் என்றுதெரிந்தால், சிலர், 'பக்தவத்சல' அவதாரமாயினர் — அவர்களுக்குப் பாதந்தாங்கும் காரியம் புரிந்தனர், பாரத மாதாவின் பரிவுக்குப் பாத்திரமான திருக்குமாரர்கள்! இது, பாராட்டுதலுக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய காரியமா!! தெளிவுள்ளோர் சிந்திக்க வேண்டும்.

துவக்கநாளும், சட்டசபைத்தலைவர், துணைத்தலைவர் தேர்தலும். காங்கிரஸ் கட்சியின் போக்கு எவ்வளவு வேகமாகக் கேவல நிலைக்கு ஆச்சாரியாரால் இழுத்துச் செல்லப்படுகிறது என்பதை விளக்கும் நாள் ஆகிவிட்டது. இதை உணராத பேனா ஓட்டிகளும் பெரிய நாவினரும், ஐ. மு. சாயம் வெளுத்தது என்று கூறுவதிலே, பொருள் என்ன இருக்கிறது என்று கேட்கிறோம்.

நரியைப் பரியாக்கும் படலமும், பிறகு பரி நரியாகி உண்மைப் பரிகளைக் கடித்து விட்டு, ஊளையிட்டபடி ஓடிய படலமும் திருவிளையாடற் புராணமாகும். அரசியலிலே, இப்போது காங்கிரஸ் மைனாரிடி மெஜாரிடியாக்கப்படுவது நரி பரியான படலம் தான்! நயவஞ்சகத்தின் துவக்கம், வெற்றிகரமாக இருந்தது! ஆனால், இறுதி? அதை 375 பேர் கொண்ட சபை அல்ல, அந்தச் சபைகளை ஆக்கவும் அழிக்கவும் உரிமையும் வல்லமையும் கொண்ட மக்கள், தீர்மானிக்க இருக்கிறார்கள்! - மக்கள் விழித்துக் கொண்டுமிருக்கிறார்கள்!! இதை ஆச்சாரியார் திருச்சபை உணரட்டும்.

—

## வடாற்காடு மாவட்ட
## தி. மு. க. கிளைகளுக்கு

மாணிக்கவேலர், ஆச்சாரியார் மந்திரிசபையிலே சேர்ந்து கொண்டதைக் கண்டிக்கும் குறியாக, தி. மு. க. வாலாஜாவில் கருப்புக் கொடி காட்டியதை அறிவீர்கள்.

தி. மு. கழகத்தின் கருத்தை வாலாஜா எடுத்துக் காட்டிவிட்டது.

இந்த கருப்புக் கொடி பிடிக்கும் காரியத்தை தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும், பல ஊர்களிலேயும் நடத்த வேண்டுமென்றும், கடிதங்கள் பல வந்துள்ளன.

காங்கிரஸ் எதிர்ப்பாளர்களாக தேர்தலிலே நின்று வெற்றி பெற்றவர்களிலே பலரை, ஆச்சாரியாரின் சாகசம் பிடித்துக்கொண்டுவிட்டது.

மைனாரிடி மெஜாரிடியாக மாற்றிக் காட்டப் பட்டிருக்கிறது.

எனவே, பொதுவாகவே, ஆச்சாரியார் மந்திரிசபையை தி. மு. கழகம் எந்த முறையிலே எதிர்ப்பது, என்பதைக் கலந்து பேசி முடிவு செய்ய வேண்டி இருக்கிறது.

எனவே இதற்கு இடையில், வடாற்காடு மாவட்டத்தினர் என்ன செய்வது என்பதை முடிவு செய்யவும், ஆச்சாரியார் மந்திரி சபையை எதிர்த்துப் பொது நடவடிக்கையில் ஈடுபடயோசிக்கவும், அனைவரையும் கலந்தாலோசிக்க இருக்கிறேன். ஆகவே வடாற்காடு மாவட்ட தி. மு. கிளைகள், தலைமை நிலைய அனுமதியின்றி, தனித் தனியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்

**அண்ணாதுரை.**

5-ம் பக்கத் தொடர்ச்சி

கிறார்கள். கேட்கமாட்டார்களா? தி. மு. கழகத்தினர் கேட்கின்றனர்—கேட்பதா குற்றம்—ஓடி ஆடி அவர் புகழ்பாடி, ஓட்டுங்கள் மாட்டை, என்று முழக்கமிட்டு, மாணிக்கவேலர்களுக்கு வேலை செய்யமட்டும்தான் தி. மு. கழகமோ!

நான் யார்—இவர்கள் யார்!!

எவ்வளவு சுலபமாகக் கூறிவிட்டார்!

தேர்தலின்போது 'நாமெல்லாம் ஒன்று'—அந்த உறவு, பந்தம், பாசம், இப்போது, இல்லை!!

ஆச்சாரியார், யார்? இவர்யார்?

இவர்களுக்குள்ளே என்ன தொடர்பு?

தேர்தலின் போது இவருக்கும் ஆச்சாரியாருக்கும் என்ன தொடர்பு? ஒன்றும் கிடையாது! இப்போது? ஆச்சாரியார் அரசியல் ஞானியாகத் தென்படுகிறார் இவர் கண்களுக்கு! பாசமும் நேசமும் வழிந்து ஓடுகிறது! கனிவு கசிந்து வருகிறது. உருகுகிறார், ஆச்சாரியாரின் அருங்குணங்களைக் கூறிக்கூறி! மாணிக்கவேலருக்காக ஓட்டு தேடித்தர நாம்—பிறகோ நான் யார்? இவர்கள் யார்?—என்றபேச்சு!!

இந்தப் பேச்சு கேட்டு, தி.மு.க. தோழர்கள் கோபப்பட்டுப் பயன் இல்லை—கழகத்தை எஃகுக் கோட்டையாக்கும் ஆர்வத்தைப் பெற்றாக வேண்டும் இது போன்ற சம்பவங்கள் இனியும் நேரிடாதிருக்க வேண்டுமானால்.

இந்த நிலைமையால் தி.மு கழகத்துக்கு ஏதும் நஷ்டமில்லை—மாணிக்கவேலர், தனது உண்மையான நண்பர்களை இழக்கிறார்—அரசியல் பட்டுப் பூச்சிகளைக் கண்டுகளிக்கிறார்—தாராளமாகச் செய்யட்டும்.

தி. மு. க.,மாணிக்கவேலர்களின் கூட்டுறவின்றித்தான், வளர்ந்தது—மாணிக்கவேலர்கள், நாடிவரும் அளவுக்கு வளர்ச்சி கிடைத்தது, தி மு. கழகத்துக்கு.

இன்று வரையில், தி. மு. கழகம், தேர்தலின்போது யாராருக்கு ஆதரவு அளித்து அரும்பாடுபட்டதோ அவர்களிடமிருந்து எந்தவகையான உதவியையும் பெற்று வளரவில்லை. தி. மு. கழகம் வளர்ந்தது, வீர இளைஞர்களின் உழைப்பால், இலட்சியவாதிகளின் பணியினால்,வளர்ந்த கழகத்தின் உதவி தேவையாக இருந்தது மாணிக்கவேலர்களுக்கு, நமக்கும் காங்கிரசைத் தேர்தல் களத்திலே முறியடிக்க அவர்கள் தேவைப்பட்டார்கள் — அவ்வளவுதான்! எனவே, மாணிக்கவேலர் மாம்பலத்தாரிடம் தன்னை ஒப்படைத்து விட்டதால், தி. மு. கழகத்துக்கு ஏதும் நஷ்டம் இல்லை! எனினும், அவருடைய செயலை, தி. மு. கழகம் கண்டிக்கிறது, பொது மக்கள் வெறுக்கிறார்கள், என்பதை எடுத்துக் காட்டவேண்டிய பொறுப்புணர்ச்சியினால் வாலாஜாவில் கருப்புக்கொடி காட்டப்பட்டது—பொச்சரிப்பால் அல்ல!!

எந்த நோக்கத்தோடு பாடுபட்டோமோ, அந்த நோக்கம் பாழாகும் வண்ணம் மாணிக்கவேலர் நடந்து கொண்டாரே. என்பதால் ஏற்படும் வேதனையையும், எவ்வளவு தந்திரமாகவும் சுலபமாகவும், ஆச்சாரியார் தனக்குப் புதிய வலிவு தேடிக்கொண்டார், என்பதையும் எண்ணும்போது எழும் கோபமும் தான் கருப்புக்கொடி காட்டியதற்குக் காரணமே தவிர, நமக்கு வரவேண்டிய மந்திரி வேலையை மாணிக்கவேலர் தட்டிப்பறித்துக் கொண்டார் என்ற காரணத்தாலா கருப்புக் கொடி காட்டினார்கள்!

பொதுமக்களிடமும், குறிப்பாக பாட்டாளிச் சமூகத்திடமும் மாணிக்கவேலருக்கு உள்ளதொடர்பையும் செல்வாக்கையும் அழித்து, தேர்தலின்போது அவர் காங்கிரசை எதிர்த்ததற்கு அவர்மீது பழி தீர்த்துக்கொள்ளவேண்டும்என்றஆழ்ந்த சதித்திட்டமிட்டே ஆச்சாரியார், மாணிக்கவேலரை மந்திரியாக்கினார், என்று நிச்சயமாகக்கூறவிரும்புகிறேன்.

பிற்படுத்தப்பட்ட சமூகத்தாருக்குப் பரிந்துதான். ஆச்சாரியார் மாணிக்கவேலருக்குப் பதவி தந்தாரா? அல்லது ஆட்டம்கொடுக்கும் நிலையிலே அமைக்கப்பட்டுள்ள தன்மந்திரிசபைக்கு ஆதரவு தேடிக்கொள்ள, வேலை தந்தாரா? என்பதை எண்ணிப்பார்க்கும் எவருக்குந்தான், ஆச்சாரியாரின் சூழ்ச்சி புரியாமலிருக்கமுடியும்.

சூழ்ச்சியினால் தவிர வேறு எப்படி 152 பேர்கொண்ட ஒரு கட்சி, மந்திரிசபை அமைத்த, விழாமல் பாதுகாக்கமுடியும்? ஆச்சாரியாரின் சூழ்ச்சியின் ஆரம்பம், மாணிக்கவேலர் படலம். இந்த சோகக்கதை தொடர்ந்து எழுதப்படுகிறது. ஆனால் கடைசி அத்தியாயத்தை மக்கள் எழுதப்போகிறார்கள். இது நிச்சயம்!!

மாணிக்கவேலர் சேர்ந்துவிட்டார் என்று கூறி மற்றும் சிலரையும் இழுத்துக்கொள்ள முடிந்தது ஆச்சாரியாரால்! ஆனால் இந்த 'வித்தை' மூலமாகவே, மந்திரிசபையைக் காப்பாற்றிக்கொண்டிருக்கமுடியாது என்பது அவருக்கே தெரியும் — தெரிந்துதான். அவரே கூறினார், நமக்கு ஆபத்து எப்போதும் இருந்தபடி இருக்கும், என்று! இப்படிப்பட்ட அருவருக்கத்தக்க, 'அல்பாயுசு' மந்திரி சபையிலேயா மாணிக்கவேலர் வீற்றிருக்க இசைவது? அதில் இருந்துகொண்டு என்ன காரியம் சாதிக்க முடியும்? என்று மக்கள் கேட்பதிலே தவறு என்ன?

நான் என்தொகுதியிலேசென்று கலந்துபேசி சம்மதம் பெற்றுத்தான் இந்தமுடிவுக்கு வந்தேன் — என்று மாணிக்கவேலர் கூறுகிறார்.

எந்தப்பத்திரிகையிலும் இந்தச் 'சேதி' காணப்படவில்லை.

மாணிக்கவேலருக்கு,நான் ஒன்று கூறவிரும்புகிறேன். காங்கிரஸ் எதிர்ப்பாளர்களின் ஓட்டுகளைப் பெற்று வெற்றி பெற்றீர். காங்கிரசை முறியடிப்பதுதான் பொது நலத்துக்கு உகந்தது என்றீர். காங்கிரஸ் அபேட்சகரை மக்கள் முறியடித்தார்கள்! செட்டிநாட்டு அரசருக்குவிட்டுக் கொடுத்ததுபோலக் கூட காங்கிரஸ் தங்களுக்குப் போட்டி போடாமலில்லை!

தங்கள் வெற்றி நாட்டுக்குக் கேடு என்று காங்கிரஸ் பிரசாரம் செய்தது.

காங்கிரஸ் வெற்றி பெற்றால் நாடும் நாசமாகும் பிற்பட்ட வகுப்புக்கும் கேடு விளையும் என்று கூறினீர்.

மக்கள் உமது பேச்சை ஏற்றுக் கொண்டனர்—வாகை சூடினீர் — தி மு கழகத்தின் உதவியுடன்.

தி. மு. கழகத்தைக்கூட மறந்து விடுங்கள்—'ஓட்' அளித்தார்களே, மக்கள், அவர்களிடம் தாங்கள் தங்கள் நிலையை விளக்கிப்பேசுங்கள், தங்கள்போக்கு சரியல்ல, என்று



கருதுபவர்களும் பேசட்டும்,தங்கள் தொகுதியில்— அமைதியானமுறையிலே இந்தக்கூட்டங்களை நடத்துவோம் தங்கள் தொகுதியில்;இதற்கு 'ஓட்' எடுத்துப் பார்ப்போம் — சம்மதமா?

அறை கூவி அழைக்கிறேன் என்று கோபிக்க வேண்டாம். அரசியல் உலகிலே ஒரு நல்ல முறை ஏற்படட்டும் என்ற ஆசை மிகுதியினால் கூறுகிறேன்.

மறு தேர்தலுக்கு நின்று பாருங்கள் என்று கூடக் கூறவில்லை. ஆச்சாரியார் மந்திரி சபையிலே சேரத்தான் வேண்டும் என்று தாங்கள் கூறி, ஆச்சாரியார் மந்திரி சபையிலே சேரக்கூடாது என்று நாங்கள் கூறி இருதரப்புப்பேச்சையும்கேட்டு மக்கள் தீர்ப்பளிக்கட்டும்—ஏற்றுக் கொள்கிறீரா, என்று கேட்கிறேன்.

இந்த முறையைக் கையாளாமல், காங்கிரசை முறியடித்த தாங்கள் காங்கிரஸ் கட்சி அமைத்த மந்திரி சபையிலே, இடம் பெற்றதாலே தான், துரோகம் செய்து விட்டார் மாணிக்கவேலர் என்று மக்கள் கூறுகிறார்கள்.

அதைத்தான் தி. மு. கழகம் எடுத்துரைக்கிறது—தி. மு. கழகத்துக்குத் துரோகம் செய்து விட்டார் என்று அல்ல!

ஏன் இதைக் கூறுகிறேன். என்றால், மாணிக்கவேலர், வாலாஜாவில் நான் தி. மு. கழகத்துக்கு ஒரு துரோகமும் செய்யவில்லை, என்று கூறுகிறார்.

வேலூரில், காமன்வீல் காரியாலயத்தினர் மாணிக்கவேலரின் வாலாஜா சொற்பொழிவை வெளியிட்டுள்ளனர்.

போளூர் தொகுதியில் காமன் வீல் கட்சியின் சார்பாக சென்னை சட்டசபைத் தேர்தலில் நின்றேன். அப்பொழுது சில தோழர்கள் 'திராவிடநாடு' பிரிவினைத் தீர்மானம் சட்டசபை விவாதத்திற்கு வரும் பொழுது அத்தீர்மானத்திற்கு ஆதரவு அளிக்குமாறு கடிதம் கேட்டார்கள். அதற்கு இணங்கி, திராவிடநாடு பிரிவினைத் தீர்மானம் சென்னை சட்டசபையில் விவாதத்திற்குக் கோண்டுவரப்படுமானால் அதை ஆதரிப்பதாக எழுதிக் கோடுத்தேன். அந்தத் தீர்மானம் சட்டசபையில் இன்னும் விவாதத்திற்கு வரவில்லை. வந்தபிறகு அத்தீர்மானத்தை நான் ஆதரிக்கவில்லை என்றால் அப்போழுதுதான் அவர்களுக்கு நான் எழுதிக் கோடுத்தபடிச் செய்யவில்லை என்றும் அவர்களுக்குத் துரோகம் செய்துவிட்டேன் என்றும் கூறிக் கொள்ள நியாயம் உண்டு. அதற்கு முன்னால் அவர்கள் இப்படி எல்லாம் ஆர்ப்பாட்டம் செய்வது சரியா என்று போதுமக்கள் யோசித்துத் தீர்ப்புக் கூறவேண்டும்'' என்று கூறியிருக்கிறார்.

தி. மு. கழகத்துக்குத் துரோகம் செய்ததாக அல்ல, ஓட்டளித்த மக்களுக்குத் துரோகம் செய்ததற்காகத்தான் கருப்புக்கொடி காட்டப்பட்டது. மக்கள் அவ்விதம் எண்ணவில்லை, நான் அவர்களுக்குத் துரோகம் செய்யவில்லை, என்று மாணிக்கவேலர் கூறுகிறார் இதிலே எந்தக்கருத்து சரி என்று அறிய, ஒரேவழி, மக்களிடம் இருதரப்பினரும் இது விஷயமாகப் பேசி, காரணங்களை விளக்கிக் காட்டியானபிறகு, மக்கள் கூறும் முடிவைத் தெரிந்துகொள்வது தான். எனவேதான், அவருடைய தொகுதியிலே, இந்த முறையைக் கையாளச் சம்மதமா என்று கேட்கிறேன்.

மாணிக்கவேலர் தி. மு. கழகத்தவராக இருந்தால், அவரை தி. மு. கழகத்துக்குத் துரோகம் செய்துவிட்டார் என்று கூற இயலும்—இப்போது நிலை அது அல்ல. இப்போது, தி. மு. கழகம் கூறுவது, மாணிக்கவேலர், மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டார் என்பது தான்.

தி. மு. கழகம், மட்டுமல்ல இதைக் கூறுவது

திராவிடர்கழகமும் இதைக் கூறுகிறது.

கம்யூனிஸ்டு கட்சியும், பிரஜா கட்சியும் இதைக் கூறுகின்றன.

இந்தக் கட்சிகளெல்லாம் எனக்கு எம்மாத்திரம் என்று மாணிக்கவேலர் பேசக்கூடும், அது அவருடைய இஷ்டம்! ஆனால் ஒன்றுமட்டும் அவர் அறிந்து கொள்ளவேண்டும், இவரை மக்கள் ஆதரித்தது போலவே, கம்யூனிஸ்டுகளையும், பிரஜாகட்சியையும் மக்கள் ஆதரித்திருக்கிறார்கள். மக்கள் ஆதரவு பெற்று வெற்றி பெற்ற மாணிக்கவேலரின் கட்சியைவிட, இவை இரண்டும், அளவிலே மிகமிகப் பெரியன—ஏறத்தாழ 100-உறுப்பினர்கள் அவர்கள் சட்டசபையில்—அறுவர் எம்மவர் என்கிறார் மாணிக்கவேலர்!

காங்கிரசை ஆளவிடக்கூடாது என்பதற்காக பல இலட்சம் மக்கள் 'ஓட்' அளித்தனர்—மாணிக்கவேலரும் இதே முறையிலேதான் ஓட் பெற்றார்—அவர்கள் காங்கிரஸ் மந்திரிசபையை ஆதரிக்கவில்லை—இவர் அதிலே இடமே பெற்றார்—இதை எண்ணும் போது, இவர் தொகுதி மக்கள் இருக்கட்டும், பொதுவாக நாடு பூராவிலும் உள்ள பொது மக்கள், இவரைப்பற்றி என்ன எண்ணுவார்கள்? என்ன எண்ணுகிறார்கள் என்பதைக் கூறவா வேண்டும்!

நான், தி. மு. கழகத்துக்கு என்ன துரோகம் செய்துவிட்டேன் என்று கேட்கிறார்—தி. மு. க. கூறுகிறது, ஐயா! தாங்கள், மக்களுக்குத் துரோகம் செய்தீர் என்று.

தி. மு. கழகத்துக்கும் தமக்கும், ஏற்பட்ட தேர்தல் உறவை, மாணிக்கவேலர் விளக்கியிருப்பது கண்டு மகிழ்கிறேன். அதிலே சில சிறிய திருத்தங்களையும் கூறிக் கொள்கிறேன்.

மீண்டும் ஒருமுறை படியுங்கள் நான் குறிப்பிட்டிருக்கும் அவருடைய வாலாஜா சொற்பொழிவை.

திராவிடநாடு பிரிவினைத்தீர்மானம் சென்னை சட்டசபையிலே விவாதத்திற்குக் கோண்டுவரப்படுமானால் அதை ஆதரிப்பதாக எழுதிக்கோடுத்தேன். என்று பேசுகிறார்.

அவருடைய ஆங்கிலக்கடிதத்தை வெளியிட்டிருக்கிறேன்-பாருங்கள்.

நான் திராவிடஸ்தான் அமைவதை ஆதரிக்கிறேன்.

இதுதான் அவருடைய வாசகக் கருத்து.

சட்டசபையிலே தீர்மானம் கொண்டுவரப்படுமானால் நான் ஆதரிக்கிறேன் என்று அல்ல; இரத்னச் சுருக்கமாகக் கூறுகிறார்,

I support the formation of Dravidasthan.

திராவிடஸ்தான்அமைவதைநான் ஆதரிக்கிறேன்—என்றார்.

சட்டசபையிலே அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்படுமேயானல் நான் அதை ஆதரிக்கிறேன், என்றுதானே நான் எழுதிக்கொடுத்தேன், இப்போது அந்தத் தீர்மானம் வரவில்லையே—அந்தத் தீர்மானம் வந்து அப்போது நான் ஆதரிக்காவிட்டால்தானே என்னைத் துரோகி என்று கூறலாம்—என்று கேட்கிருர். சரியா இந்த வாதம்!! திறமையான வாதம்–ஒப்புக்கொள்ள்கிறேன் — ஆனல் நியாயமான வாதமா?

திராவிடநாடு அமைப்பை நான் ஆதரிக்கிறேன், என்று கடிதம் தெரிவிக்கிறது. தீர்மானத்தைச் சட்டசபையிலே கொண்டுவந்தால் ஆதரிக்கிறேன், என்று அல்ல.

திராவிடநாடு அமைப்பை நான் ஆதரிக்கிறேன், என்ருல், அதற்கான செய்தல், மக்களிடம் அதுபற்றி எடுத்துரைத்தல், அதை மறுப்போர்க்கு மறுப்பளித்தல், அதுபற்றிச் சட்டசபையிலும் ஆதரவு காட்டுவது–எனும் இவ்வளவும் அடங்கியதுதானே!

முடியுமா இப்போது இவரால் திராவிடநாடு தேவைதான், நான் அதை ஆதரிக்கிறேன் என்றுபேச. விடுவாரா ஆச்சாரியார்!

எங்கே ஒரு தடவை பரீட்சை செய்து பார்க்கட்டும் மாணிக்கவேலர்!!

திராவிடநாடு அமைவதை நான் ஆதரிக்கிறேன் என்று உறுதிகூறியவர் மாணிக்கவேலர்.

திராவிடநாடு என்பது பித்தர் திட்டம் என்ற கொள்கை கொண்டவர், ஆச்சாரியார்.

ஆச்சாரியார் 'பாரத் வர்ஷம்' 'பஜகோவிந்தம்!'

அவருடைய மந்திரி சபையிலே திராவிடநாடு அமைப்பை ஆதரிக்கும் மாணிக்கவேலர்.

பொருத்தம் இருக்கிறதா!!

திராவிடநாடு அமைவதை ஆதரிப்பவர் திராவிடநாடு அமைவதை எதிர்ப்பவரான ஆச்சாரியாருடன் எப்படி கூட்டாகப் பணியாற்றலாம்!

மாணிக்கவேலர் திராவிட நாடு ஆதரவாளர்—அதை இப்போதும் மறுக்காததற்காக என் நன்றி, மகிழ்ச்சி—ஆனல் ஆச்சாரியாரோ. திராவிடநாடு எதிர்ப்பாளர்—எங்ஙனம் திராவிடநாடு அமைவதை மாணிக்கவேலர் ஆதரிக்க முடியும் ஆச்சாரியார் மந்திரி சபையில் இருந்துகொண்டு! விளக்கம்தேவை!!

காங்கிரஸ் கட்சி, திராவிட நாடு அமைவதை எதிர்ப்பது. இன்று ஆட்சியைஎப்படியாவது கைப்பற்றியாக வேண்டும் என்ற நிலைக்குக்காரணமே, காங்கிரசாட்சி அமையாவிட்டால், திராவிடநாடு பிரச்சினை கிடீர் பலம் பெற்றுவிடும் என்ற பயம்தான். இதையறியாரா மாணிக்கவேலர்! வெண்ணெய் உருண்டையைச்சுண்ணும்பு போடப்பட்டுள்ள சட்டியிலே தான் வைத்திருக்கிறேன், என்று பேசுவதா!

திராவிடநாடு ஆதரவாளர், பாரதநாடு பாதுகாவலரின்கட்சி நடத்தும் மந்திரிசபையில்! விந்தையான நிலைமை! விசித்திரமான வாதம்!!

ஏதோ வாதத்துக்காகவாவது அன்பர் திராவிடநாடு அமைவதை நான் எதிர்க்கவில்லையே, அந்தத்தீர்மானம் வந்தால் நான் ஆதரிக்காவிட்டால், அப்போதுதானே நீங்கள் என்னைத் துரோகி என்று சொல்ல நியாயம் உண்டு, என்று பேசுவதன்மூலம், திராவிட நாடு பிரச்சினையை ஆதரிப்பதாகக், கூறுகிருரே, அதுவரையிலே மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சி தரும் பேச்சை அவரிடமிருந்து பெற்றுத்தந்ததும், நீங்கள் காட்டிய கருப்புக்கொடிதான் எனவே அதற்காக உங்களுக்கு, என் நன்றி.

அன்பன்,

**அண்ணுதுரை.**

---

## இலங்கையில்
## அறப்போர்

இலங்கையில் நடைபெற்றுவரும் அறப்போர் பற்றி தி. மு. கழகத்தின் ஆதரவுக்கட்டுரையும் இலங்கை தி. மு. க. வின் கருத்துரையும் அடுத்த இதழில் வெளிவருகிறது.

---

11-ம் பக்கத் தொடர்ச்சி

தனமான வானவெளிக்கப்பல்களும் நடமாடக்கூடுமென்றும் இவர் சுட்டிக்காட்டுகிருர்.

வானிலையையும், வான சாஸ்திர நுணுக்கங்களையும் ஆராய்வதற்காக உலகிலேயே மிக உயரமான இடத்தில் இந்தியா ஒரு ஆய்வு நிலையம் அமைக்க திட்டமிட்டிருக்கிறது. இந்த நிலையம் மத்திய இமயமலையிலுள்ள பத்ரிநாத்—மன்ன கணவாயில் அமைக்கப்படும், 17000 அடி உயரத்தில் இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக இந்திய விஞ்ஞானிகளைக்கொண்ட ஒரு குழு, மே மாதம் இங்கு செல்லவிருக்கிறது.

அமெரிக்காவிலுள்ள ராக்கி மலையைச்சேர்ந்த பைக்ஸ் சிகரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஆய்வு நிலையம்தான் இன்று உலகிலேயே மிக உயர்ந்த இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது 1,6000 அடி உயரத்திலிருக்கிறது. இந்த நிலையம் கொலாரேடோவிலிருக்கிறது. இந்தியாவில் அமைக்கப்படவிருக்கும் நிலையம் இதைவிட 1000 அடி உயரமாக இருக்கும்.

விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி கவுன்சிலைச் சேர்ந்த ஒரு கமிட்டியிடம் இந்தப் புதிய நிலையத்தின் தயாரிப்புத் திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. 17000, அடி உயரத்தில் ஒரு வான மண்டல ஆராய்ச்சி கோபுரமும், 12,000 அடி உயரத்தில் விஞ்ஞானிகளின் வாசஸ்தலங்களும் அமைக்கப்படும். இந்த காலனியில் நூல் நிலையமும், ஆய்வுச்சாலையும், தொழில் நிலையங்களும்,ஜாகைகளும் மின்சார நிலையமும் காஸ்மிக் கிரணங்கள் அதன் சம்பந்தமான ஆராய்ச்சிகள் செய்வதற்கான சாதனங்களும் அமைக்கப்படும்.

பனிப் படலங்கள், பனிமலைகள், வானமண்டல வஸ்துக்கள், சூரியக் காட்சிகள், வான பௌதிக விவரங்கள் முதலியவை இந்த நிலையத்தில் ஆராய்ச்சி செய்யப்படும் ரேடியோ தன் சம்பந்தமான ஆராய்ச்சிகளும் இங்கு நடைபெறும். இதனல்வான சாஸ்திரிகள், பிரகிருதி விஞ்ஞானிகள், வானிலை ஆராய்ச்சியாளர்கள், பூதத்துவ சாஸ்திரிகள், கிருமிசாஸ்திரிகள் ஆகியோருக்கு ப[illegible]ஆ[illegible]வ கூலங்கள் ஏற்படும்.



# ★ வான வெளி ★

[வானத்தை நோக்குகிருர்கள், மக்கள் மழையில்லையே என்று வாடுகிருர்கள், ஆனல் ஆச்சாரியார், வானத்தை நோக்கினல் மட்டும் போதுமா,\ வணங்குங்கள், வருண தேவன் அருள் பாலிப்பார் என்று உபதேசம் புரிகிருர். 'பஜகோவிந்தம்' பாணியிலேயே, பரிபாலனம் நடத்த முற்படுகிருர்.

வானத்தை அவர் தேவலோகம் என்று பாமரரிடம் கூறுகிருர். அவர் ஆளவந்திருக்கும் மந்திரி — ஆனலும் பஜனைகோவில் குரலிலேயே பேசுகிருர்!

உலகில்வானவெளிக்குயாத்திரை செய்யலாமா என்று சிந்தனையாளர்கள் ஆராய்ந்த வண்ணமுள்ளனர். அந்த வெளிக்குச் செல்ல, வான வெளிக் கப்பல் செய்ய முடியுமா என்று முயற்சிசெய்கின்றனர். அந்த முயற்சியிலே ஈடுபட்டுழைக்கும் விதத்தை விஞ்ஞான விற்பன்னர்கள் விளக்குகிருர்கள்.

வானவெளிக்கே, மனிதன்செல்லலாம் என்று மக்கள் முயற்சியெடுக்கும் காலத்தில், வானத்தைநோக்கி இறைஞ்சுங்கள் என்கிருர் — மத போதகர் அல்ல, மார்க்கபிரசாரகர் அல்ல, சித்தரல்ல, ஜீயரல்ல, மந்திரி ஆச்சாரியார்!

உலகிலேயே மிக உயரமான இடத்திலே, வானிலை ஆய்வுசெய்ய, ஒரு கூடம் அமைக்க இந்தியா முன் வந்திருக்கிறது. ஆனலும், ஆச்சாரியார் வானத்தை வாழ்த்தி, மழை வரம் பெறச் சொல்கிருர்!

கீழேயுள்ள கட்டுரையைப்படியுங்கள். வானவெளிபற்றி விளக்கம் தரப்பட்டுள்ளது. ஆ—ர்.]

கிரகங்களுக்கிடையே இருக்கும் வானவெளிக்கு யாத்திரை செய்வதுபற்றி இப்போது தீவிர, ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு துறையிலும் திறமை சான்றவராக விளங்கும் ஐந்து விஞ்ஞானிகள் 'காலியர்ன் வீக்லி' என்ற பத்திரிகையின் மார்ச் 13-தேதி இதழில் இதைப்பற்றி தொடர்ச்சியாக எழுதியிருக்கின்றனர்.

சட்டங்களில் தேர்ச்சி பெற்றிருக்கும் ஒரு நிபுணர் இந்த யாத்திரைகளால் ஏற்படும் நுணுக்கங்களை விவரித்திருக்கிருர்.

இன்னும் 10 அல்லது 15 வருடங்களில் வானவெளிக் கப்பலொன்று (செயற்கை கிரகம்) இயங்குமென்று ஜெர்மன் அறிஞராகிய டாக்டர் வேர்னர் வான் பிரான் கூறுகிருர். மணிக்கு 3000 மைல் வேகத்திற்குமேல் சென்று இங்கிலாந்தை அழித்த வி—2 ரக ராக்கெட் குண்டுகளைக்கண்டுபிடித்தவர் இவர்தான். வான்பிரான் அலபாமாவைச் சேர்ந்த ஹண்ட்ஸ்வில் என்ற இடத்தில் தற்போதுஇருந்து வருகிருர். இங்குள்ள ரெட்ஸ்டோன் ஆராய்ச்சி நிலையத்தில் வேலை செய்தவரும் 100 ஜெர்மன் விஞ்ஞானிகளில் இவரும் ஒருவர். ராக்கெட் குண்டுகள் செய்யும் பிரிவுக்கு இவர் டைரெக்டராக[illegible]ருந்து வருகிருர்.

வான வெளியில் கி[illegible]ந்திற்கு இடையே அமையும் இந்[illegible]யற்கை கிரகம் பூமியை ஒரு சி[illegible] சந்திரனைப்போல சுற்றி வர[illegible]ன்றும், இத்தகைய சாதனத்[illegible] அமைக்கும் முதல் நாடுதான் இராணுவ பலத்தில் முதன்மையாக விளங்குமென்றும் இவர் கூறுகிருர்.

இந்தப் பந்தயத்தில் ருஷியாவும் தீவிரமாக முயன்று கொண்டிருக்கிறதென்றும், அமெரிக்கா இதில் துரிதமாக முன்னேறிவிடும் வாய்ப்பிலிருக்கிறதென்றும் முதலாவது ராக்கெட் விமானம் அமைப்பதற்கு 50 லட்சம் டாலர் செலவழியுமென்றும், ஆராய்ச்சி, அபிவிருத்தி ஆகிய சகல செலவுகளும் இதில் அடங்குமென்றும் இவர் கூறுகிருர்.

இதற்கான சக்தி அமெரிக்காவிடம் இருப்பதால் அணுசக்திக்காக காத்திருக்கத் தேவையில்லையென்றும் கூறப்படுகிறது.

முதல் ராக்கெட் மூன்று கூறுகளாக இருக்கும். உந்துவதற்காக உபயோகிக்கப்படும் இரண்டு கூறுகள் கடலில் விழுந்துவிடும். இவற்றை எடுத்து மீண்டும் உபயோகிக்கலாம். அசல் ராக்கெட் வானில் 1075 மைல் தூரத்தில் போய் நிற்கும். வான்பிரான் இதைப் பற்றிய விளக்கங்களையும், புள்ளிகளையும், படங்களையும் தனது கட்டுரையில் கொடுத்திருக்கிருர். வான வெளி ஆராய்ச்சியாளர்களின் விளக்கங்களை சரியாகத் தெரிந்துகொள்ளாததால்தான் பொதுமக்கள் இதை கற்பிதமென்று கருதுகின்றனர்.

ஹார்வார்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வானசாஸ்திர இலாகாவில் தலைவராகஇருக்கும் டாக்டர் பிரெட் எல். விப்பிள், வான மண்டலசந்திர கிரக கப்பல்களில் வான சாஸ்திரிகள் என்ன செய்வார்களென்பதை குறித்து விளக்கம் தந்துள்ளார்.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த பூதபௌதிக கழகத்தில் போராசிரியராக இருக்கும் டாக்டர் ஜோஸப் கப்ளான் வாயுமண்டலத்தின்மேல் பகுதியை விவரித்து 100 மைலுக்குமேல் வானவெளியில் பாதை அமைகிறதென கூறுகிருர். நமது ராக்கெட்டுகள் இந்த தூரத்திற்கு மேல் போயிருக்கின்றன.

டெக்ஸாஸைச் சேர்ந்த ரான்டோல்ப் பீல்டில் அமெரிக்க விமானப் படை வைத்திய பள்ளிக்கூடத்தில், வானமண்டல வைத்திய ஆராய்ச்சி இலாகாவின் அதிபராக இருக்கும் டாக்டர் ஹெயின்ஸ்ஹேபர், ஆகர்ஷண சக்தி இல்லாத பகுதிக்கு நாம் செல்லும்போது ஏற்படும் குணும்சங்களை விவரிக்கிருர். மனிதர்கள் இத்தன்மைகளை சமாளிக்கமுடியும் என்றும் இவர் கூறுகிருர்.

வில்லிலே என்பவர் முதல் உபகிரகத்தின் அமைப்பு விவரங்களைத் தருகிருர். ஜெர்மன் ராக்கெட் விமான ஆராய்ச்சியாளர்களில்நீண்ட கால அனுபவம் பெற்றிருக்கும் இவர் இப்பொழுது எழுத்தாளராக மாறியிருக்கிருர்.

ஐக்கிய நாட்டுசபை சட்ட இலாகாவின் உதவி டைரெக்டராகிய ஆஸ்கார் ஷார்டர் இதரகிரகங்களில் கண்டுபிடிக்கபடும் இடங்களையும், உலோக சேமிப்புகளையும், யார் வைத்திருப்பார்கள் என்பதை விவரிக்கிருர். சில வருடங்களுக்கு முன்னர், டெலிவிஷன் எழுத்தாளர்கள் கண்டுபிடித்ததுபோன்ற திருட்டுத்

(10-ம் பக்கம் பார்க்க)

# மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி

"தென் ஆற்காடு மாவட்டத்தில், தேர்தலில் காங்கிரசுக்கு எதிர்ப்பாகப் பணியாற்றிய வீர இளைஞர் மஜீத் எனும் தோழன் காங்கிரசுக்காரர் ஒருவரால் கொலை செய்யப்பட்ட செய்தி தாங்கள் அறிந்ததே.

தமிழ்நாடெங்கும் இந்தப் படுகொலையைக் கண்டித்து அறிக்கைகள் விடுத்தும், கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றியும், அனுதாபச் செய்தி அனுப்பியும் எல்லா முற்போக்குக் கழகங்களும், தங்கள் கடமையைச்செய்தன.

தென்ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த (உழைப்பாளர் கட்சி) M. L. A-க்களுக்கும் இது விஷயமாகத் தங்கள் கடமையைச் செய்து வருகிறார்கள்.

தோழர் மஜீதின் குடும்பத்தினர் பரம ஏழைகள்.

பொதுநலப் பணிக்காகத் தன் மகன் பலியிடப்பட்ட செய்தி ஒருபுறமும், வறுமை மற்றோர்புறமும் தாக்க, மஜீதின் தந்தை தத்தளிப்பதாக அறிகிறேன்.

எனவே, "மஜீது குடும்ப பாதுகாப்பு நிதி" முயற்சியில், திராவிடமுன்னேற்றக் கழகத் தோழர்கள் ஈடுபட்டு, உருவாக்கி, விரைவில், வெற்றி தேடித்தரக் கோருகிறேன்.

இந்த என் வேண்டுகோளை அன்புடன் ஆதரித்து விரைவில், என் எண்ணம் வெற்றி பெறச் செய்வீர்கள் என நம்புகிறேன்." என்று தி. மு. க. பொதுச்செயலாளர் சி.என்.ஏ. அறிக்கை வெளியிட்டதை யொட்டி தோழர்கள், இலட்சியத்திற்காகப் போராடி உயிர் நீத்த, பெருவீரன் மஜீத்தின் குடும்பத்தின் நல்வாழ்விற்காக நிதியளித்தபடியுள்ளனர். முன்னர் வெளியிட்டுள்ளதற்குமேல், இப்பொழுது நிதியளித்துள்ளவர்கள் விவரம் கீழே தரப்படுகிறது.

| | |
|---|---|
| முன்வரவு | 118—14—0 |
| மு. கருணாநிதி, கண்ணதாசன் | 75—0—0 |
| உசிலம்பட்டி தி. மு. க. சார்பில் | 1—1—0 |
| அய்யம்பாளையம் மகாராஜன் மூலம் | 18—7—0 |
| ஆவடி பி. கே. எஸ், வைசரா | 4—0—0 |
| தாசம்பட்டி சின்னப்பன் | 0—8—0 |
| ஏனங்குடி முத்துராமன் | 10—0—0 |
| தூத்துக்குடி கோபால்ராஜன் | 1—0—0 |
| நாகர்கோவில் ஏ. பி. ரத்தினம் | 0—4—0 |
| திருமங்கலம் தனுக்கோடி | 0—8—0 |
| சைதாப்பேட்டை எத்திராஜ் | 1—0—0 |
| சென்னை டி. கிருஷ்ணன் மூலம் | 9—0—0 |
| காரைக்குடி | |
| இராம. சுப்பையா | 4—0—0 |
| தாவூதுபாட்சா | 2—0—0 |
| சுப. சிவஞானம் | 2—0—0 |
| சேகர் | 2—0—0 |
| க. வே. சத்தியவான் | 2—0—0 |
| குழந்தையன் | 3—0—0 |
| சோ. வெ. சோலையன் | 2—0—0 |
| அ. கா. அ. பிரதர்ஸ் | 2—0—0 |
| கதி. இராசன் | 2—0—0 |
| கரு. வள்ளியப்பன் | 2—0—0 |
| வீரப்பன் | 4—0—0 |
| சிவநேசபாண்டியன் | 2—0—0 |
| நடராஜன் ஜி. ராமசாமி | 2—0—0 |
| சு. ம. சாலியர் | 2—0—0 |
| என். கோபாலன் | 2—0—0 |
| ஒரு தோழர் | 2—0—0 |
| எ. இராமனுதன் | 2—0—0 |
| ஒரு தோழர் | 5—0—0 |
| டி. நாகராஜன் | 2—0—0 |
| கே. வி. முஸ்தபா | 1—0—0 |
| மு. கா. மதினுமளிகை | 1—0—0 |
| நா. முத்து | 1—0—0 |
| எம். எஸ். அன்வார் | 0—1—0 |
| ஆர். ராமகிருஷ்ணன் | 0—4—0 |
| ப. சி. செல்லையா | 0—8—0 |
| எ. ஆர். சின்னக்காளை | 0—8—0 |
| கே. ஆர். ராமச்சந்திரன் | 0—4—0 |
| டி. ஆர். கணேசன் | 0—4—0 |
| கே. எம். மஸ்தான் | 0—4—0 |
| கோவிந்தசாமி | 0—4—0 |
| சி. சுப்பிரமணியம் | 0—4—0 |
| பி. கோவிந்தசாமி | 0—2—0 |
| இ. ராமச்சந்திரன் | 0—2—0 |
| எஸ். சண்முகநாதன் | 0—2—0 |
| அழகிரி | 0—2—0 |
| நாராயணசாமி | 0—2—0 |
| நாச்சியார் ஸ்டோர்ஸ் | 0—2—0 |
| ராமசாமி | 0—2—0 |
| என். எ. ஆர். | 0—4—0 |
| கே. வெள்ளச்சாமி | 0—2—0 |
| எம். முகம்மது ஈசுபு | 0—4—0 |
| சேக்முகம்மது | 0—4—0 |
| பா. ஆசிம் | 0—2—0 |
| மு. முத்தையா | 0—4—0 |
| சே. சாகுல்அமீது | 0—2—0 |
| பி. மாரிமுத்து | 0—2—0 |
| ஜான் | 0—4—0 |
| காஞ்சிபுரம் பொதுக் கூட்டத்தில் | 13—15—4 |
| சேலம் ராபாஸ்கரன் மூலம் | 7—11—0 |
| கருவலூர் அங்கப்பன் | 0—12—0 |
| | 316—3—4 |

மேலும் நிதி யனுப்புவோர், 'மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி' என்று குறிப்பிட்டு காஞ்சிபுரம் 'திராவிட நாடு' முகவரிக்கு அனுப்பவேண்டுகிறோம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.

714/2-52

REGD No M 4043

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 18—5—52 | இதழ் 46

# மர நிழலும் 'மாஸ்கோ'வும்

"எட்டடிக் குச்சுக்குள்ளே
எத்தனை நாளிருப்பேன்—
சுப்பையா"

இது, பழைய கிராமபோன் ரிகார்டு. எட்டடிக் குச்சுக்குள்ளே வாழமுடியாத வனிதை "பழனி மலைமேல் வாழ்பவனுக்கு" பாட்டு மூலம், வேண்டிக்கொள்வதாக, கேட்டிருப்பீர்கள். இப்போது ஒரு புது 'ரிகார்டு' எந்தக் கம்பெனியாராலும் பதிவு செய்யப்படவில்லை — காரணம் பாடியவர் பாடகரல்ல! பாடகரல்லவாதலால், அவரது வார்த்தைகளில் ராகமும், தாளமும் இல்லை. இரண்டும் சேர்த்து, சிறிது எதுகைமோனையுடன் வைக்கப்பட்டால், 'புதுரிகார்டு' தயாராகிவிடும்.

"பத்தடி ரூமுக்குள்ளே
எப்படி நானிருப்பேன்?"

இப்படி, வேதனையோடு வெளியிட்டிருக்கிறார், அவர் பெயர் வாமனமூர்த்தி. உத்யோகம்—மாஜிஸ்ட்ரேட். இடம்: கட்டாக். தேதி 9!

கோர்டு நடத்தும் "ரூம்" வழக்குக்கு வந்தோரை விசாரிக்கப் போதாததால், — நீதி மன்றத்தை, "எடுத்துக்கொண்டு", மரநிழல் தேடிச் சென்றாராம் பத்து அடி ரூம்! எதிரிகளோ 20-பேர்!! என்ன செய்வார் மாஜிஸ்டிரேட்? 'மரமே—உன்நிழலே' என்று, வக்கீல்கள்பின் வர, குற்றவாளிகள் தொடர, மரத்துக்குக்கீழிருந்து வழக்கை நடத்த, சட்ட நூல்களையும் நாற்காலிகளையும் தூக்கிக்கொண்டு, போயிருக்கிறார். விசாரிக்கப்பட்ட வழக்கு, கொலை வழக்காம்!

ஒரிஸ்ஸா மாகாணத்தில் உள்ள 'இடநெருக்கடி' குறித்து, இவ்விதம் ஒரு செய்தி 'இந்து' இதழிலே வந்திருக்கிறது. 'இட நெருக்கடி' என்றால் மக்கள் அதிகமாகிவிட்டார்கள் என்பதல்ல! இருக்கும் மக்களுக்குப் போதிய வீடுகள் இல்லையாம்! இந்த அழகு, எவ்விதம் இருக்கிறது பாருங்கள் என்று விளக்கிச் சொல்வதுபோல, மரநிழல் நோக்கிய மாஜிஸ்டிரேட்டின் 'சுபவம்' தரப்பட்டிருக்கிறது. கட்டாக்கிலுள்ள நீதிமன்றத்திலுள்ள 19—மாஜிஸ்டிரேட்டுகளில் 9-பேருக்குமட்டுமே 'நிரந்தரமான' ஆபீஸ் கட்டிடம் இருக்கிறதாம். மீதி, பதின்மருக்கும் "பத்துக்கு எட்டு" அறைதானும்! கோர்ட்டின் அழகு, இது. சர்க்காரின் நிலை இது! எங்கே புள்ள சர்க்கார்? அகண்ட பாரத மாதாவின் மடியிலிருக்கிற சர்க்கார்! இருக்க, இடமில்லாமல், மரம் நோக்கிப் போகிறார், நீதிதரவேண்டியவர். இந்த நிலை, இங்கு! சுயராஜ்ய மலரின் மணத்தால் சுகமெங்கும் பரவுமென்று கூறித் திரிவோரின் ஆட்சியிலே, மக்கள் இருக்க இடமில்லாமல் அலைவது மட்டுமல்ல, அவர்களைப் பராமரிக்க வேண்டிய சர்க்காருக்கே 'கட்டிட'மில்லையாம். சங்கடப்படுகிறார்கள்! கோர்ட்டு 'பழைய குருகுல' முறையில்!!

இந்தச் செய்தி, 12ந் தேதிய 'இந்து'வின் 3ம் பக்கத்தில். அதே இதழின் 5ம் பக்கத்தில் மற்றோர் செய்தி.

"மூன்றாண்டுகளுக்கு முன் சுறம்பாகக் கிடந்த இடம், இன்று கூட கோபுரங்கள் நிரம்பிய நகரமாகிவிட்டது. மின்சாரம், தண்ணீர், காற்று வசதிகள் யாவும் நிரம்பிய வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இன்னும் மூன்றாண்டுகளில் இதே வட்டாரத்தில் இதைப்போல ஐந்து நகரங்கள், கட்டி முடிக்கப்படும்"

எங்கே தெரியுமா, இது? "கம்யூனிசம் எனது எதிரி நம்பர் 1" என்று சட்ட சபையில் முழக்கினாரே சனதனத் தலைவர் ஆச்சாரியார், அந்தக் கம்யூனிசத்தின் காவலனாக இருக்கும் ரஷ்யாவிலே வால்கா நதிக்கரையிலே கட்டப்படும் பெரிய தொரு மின்சார சக்தி நிலையத்துக்கு அருகாமையில் இவ்வித நகரம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறதாம். பெயர், 'ஷியுகுய்பிஷெவ்ஸ்க்' மூன்றாண்டுகளுக்கு முன் காடு முராடாகக் கிடந்த இடம். இப்போது சிங்கார நகரம்! இன்னும் மூன்றாண்டுகளில், இதைப்போல, ஐந்து புது நகரங்கள், வால்கா நதிக்கரையிலே கட்டுவதென திட்டமிடப் பட்டிருக்கிறதாம்— மாஸ்கோ செய்தி இலாகா கூறுகிறது. கம்யூனிசம் வந்திய நாட்டில் இது! ஆனால் 'கம்யூனிசத்தையே ஒழிப்பேன்' என்று கர்ஜனை எழுப்பும் கருப்புக் கண்ணாடியார் நாட்டில், கோர்ட்டு நடக்க மர நிழல்!

☆

# புதிய சீனாவில்
## —பெண்ணுரிமை

[ வ. பாலசுப்பிரமணியம் ]

நீண்ட கால இருளுக்குப் பிறகு சீனாவிலே ஒளி பிறந்தது. புதிய சீனா மலர்ந்தது.

இந்த மலர்ச்சிக்கு முன் சீனா சீரழிந்திருந்தது. பழைய சீனாவிலே கோலெடுத்தவரெல்லாம் கொற்றவர்களாக விளங்கினர். குரல் வலுத்தவரெல்லாம் ஆட்சியாளராய் வீற்றிருந்தனர். நாட்டின் நலத்திலே அக்கறையில்லாதோர், மக்களை மாடுகளின் கூட்டமென மதிக்கும் மாமண்டையினர், ஜனநாயக அரிச்சுவடியே அறியாதவர்கள், சர்வாதிகாரத்தையே உடன் பிறப்பாகக் கொண்டவர்கள்தான் சீனாவை ஆட்டிப்படைத்து வந்தனர். சன்—யாட்—சென் காலத்திலே ஓரளவு மறுமலர்ச்சியுற்ற சீனா, சியாங்கே—ஷேக் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் படுத்துக் கொண்டது. நாட்டிலே சியாங்கே—ஷேக்கும் அவனைச் சுற்றியிருந்த கூட்டத்தினருந்தான் வாழ்ந்து வந்தனர். மற்ற கோடானுகோடி மக்களெல்லாம் அணு அணுவாய்த் தங்களது ஆவிகளைப் போக்கிக்கொண்டிருந்தனர். பசியும் பிணியும் மக்களை வாட்டி வதைத்து வந்தன. வறுமையும் வாட்டமும் அவர்களது வாழ்க்கைப் பாதையிலே குறுக்குச் சுவர்களாக நின்று கொண்டிருந்தன. அவற்றைப் போக்கி அவர்களுக்கு நல்வாழ்வு தர ஆட்சியாளர் முன்வரவில்லை.

மக்களின் சமுதாய வாழ்வோ மிகக் கேவலமாகச் சரிந்து கிடந்தது. பெண்களுக்கு உரிமையில்லை. அவர்களால் உரத்துப்பேச முடியாது. அரசியலிலோ, சமுதாயத்திலோ, பொருளாதாரத்திலோ, பெண்களுக்குப் பங்கு கொள்ள உரிமையில்லை. சல்லாபத்துக்கும், சமைத்துப் போடவும் பிறந்தவளே பெண் என்ற மனப்பான்மையிலே பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருந்தனர் சீனர். ஆண்களே பெண்களை ஆட்டிவைக்கும் சூத்ரதாரிகளாக இருந்து வந்தனர். திருமணத்துக்கு முன் ஒரு சீனப்பெண் தந்தைக்கு அடங்கி நடக்கவேண்டும்; திருமணத்திற்குப் பிறகு அவள் தன் கணவனின் கைப்பாவையாக இருக்கவேண்டும்; கணவனுக்குப் பிறகு மகனுக்கு அடங்கி நடக்க வேண்டும்; இப்படி ஒரு சட்டம் இருந்து வந்தது சீன சமுதாயத்திலே! சராசரி சீன மனிதனொருவன் அரசாங்கத்துக்குக் கட்டுப்பட வேண்டும்; அடுத்தபடி குடும்பச் சட்டதிட்டங்கட்குக் கட்டுப்பட வேண்டும்; மூன்றாவதாக மதத்திற்கு அடிபணியவேண்டும். ஆனால் சீனப் பெண்ணொருவளோ இம்மூன்றோடல்லாமல் 'கணவன்', என்றொரு நான்காவது பொருளுக்கும் அடிமையாகவேண்டும். இதுவும் சட்டம்!

பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக பலாத்காரத் திருமணங்கள் சர்வசாதாரணமாய் நடந்து வந்தன. உரிய பருவத்தை அடையுமுன்பே பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கும் பழக்கம் இருந்து வந்தது. பால்ய விவாகமும் நடைபெறுவதுண்டு.

திருமணத்திற்கு முன் எந்த ஆடவனையும் அவள் பார்க்கமுடியாது. பேசமுடியாது. தன் வாழ்வின் சுகத்திலும் துக்கத்திலும் பங்கு கொள்ளப்போகும் கணவனை மணவறையில்தான் காணமுடியும் அவளால்! பெற்றோர்கள் தேர்ந்தெடுத்த கணவன் தனக்குத் தகுந்தவனாகத் தானிருப்பானென்று அவள் தன் மனதிலே கோட்டைகளெல்லாம் கட்டியிருப்பாள். பாவம்! அவளது பெற்றோர்களோ... அவளைப் பணத்துக்காகப் பயணம் வைத்திருப்பார்கள்! சொத்து சுகங்களுக்காக அந்த சொர்ண விக்ரகத்தை, சுடுகாடு போகக் காத்திருக்கும் கிழத்துக்கு முடிச்சுப் போட்டிருப்பார்கள். என்ன செய்வாள் பேதை? கொஞ்சநாளில் மணப்பறைகொட்டிய அதே வீட்டில் பிணப்பறை முழங்கும். முகரப்படாத அந்த முல்லைக்கொடியாள் விதவையாகியிருப்பாள்! கட்டிளம் பருவத்தினளான அவளுக்கு—உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு பதில் சொல்லமுடியாத அவளுக்கு—மறுமணம் செய்துகொள்ள அனுமதி தராது சீனநாட்டுச்சமுதாயம்!

அதோ! அங்கே ஒரு சீமான் வாழ்கிறான். அவன் பெயர் 'பெங்-யூ-டாங்' ஏற்கனவே அவனுக்கு ஐந்து மனைவிகளிருந்தனர். சில காரணங்களுக்காக அவர்களிலிருவரை ஓராண்டுக்குமுன் பெங்-யூ-டாங் விற்றுவிட்டான். ஆம்! விற்று விட்டான்! இப்போதுபோன இருவரின் இடத்தைப் பூர்த்திசெய்ய இரண்டு பெண்கள் தேவை அவனுக்கு! என்ன செய்வான் பாவம்? மூன்று மனைவியரை வைத்துக் கொண்டு திரும்பத் திரும்ப அவர்களுடைய முகத்திலேயே விழிக்க அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. பெங்-யூ-டாங்-கின் பணம் வேலை செய்தது. இளமை கொழிக்கும் இரண்டு புதுப் பெண்கள் கிடைத்து விட்டார்கள் அவனுக்கு! இதை அனுமதிக்கத் தவறவில்லை சீன சமுதாயம்!

இரண்டு காட்சிகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! அங்கே கணவனை இழந்த கைம்பெண்ணின் மறுமணம் மறுக்கப்படுகிறது! இங்கே மூன்று மனைவியர் போதாதென்று இன்னும் இருவரை விலைக்குவாங்கும் அக்கிரமம் அனுமதிக்கப்படுகிறது! அவளுடைய மனப்புழுக்கத்தைக் கவனிக்கவில்லை சமுதாயம்! இவனுடைய மன்மத லீலைகளையோ அனுமதிக்கிறது!

பழைய சீனாவிலே, கேள்விமுறையில்லாமல், ஆண்கள் எத்தனைப் பெண்களை வேண்டுமானாலும் மணந்துகொள்ளலாம். எத்தனை வைப்புகளையும் வைத்துக்கொள்ளலாம். விதவைத் திருமணத்திற்கு அனுமதி கிடையாது.

திருமணத்திற்குப் பிள்ளை வீட்டார் பெண் வீட்டாருக்குப் பணம் தரவேண்டும். பச்சையாகச் சொல்லவேண்டுமென்றால் பெண்ணை விலை தந்து பெறவேண்டும். பணம் படைத்தவர்களுக்கு இதனால் ஒருவிதக் கஷ்டமுமில்லை. பரம ஏழையான அன்றாடம் காய்ச்சும் ஒரு வாலிபன் பெண்வாங்கும் அளவுக்குப் பணத்துக்கு எங்கே போவான்? ஒன்று பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிக்கவேண்டும் அல்லது கடன்

(11-ம் பக்கம் பார்க்க)



# என்ன லாபம் இதனால்?
## ஆளுக்கும்! கட்சிக்கும்!!

[வண்டு]

"சண்டை பிடிக்கும் விஷயத்தில் மட்டுமே பயிற்சி பெற்றவர்களைக் கொண்ட காங்கிரஸ் மந்திரிகள் மாகாணப் பொருளாதார விஷயமாகவும் வரி விதிப்பு விஷயமாகவும் நிர்வாகத் திறமை இன்றியும், வகையின்றியும் நடந்துகொண்டனர். எப்போதும் மாயமானைத் துரத்திக்கொண்டு ஓடியே காலந் தள்ளினார்கள். அவர்கள் ஆட்சியில் பல கேடுகள் விளைந்தன. வரி விதிப்பு முறையில் ஒழுங்கு முறையோ, கொள்கையோ இல்லை. பொருளாதார முன்னேற்றம் தொழில் உணர்ச்சி ஆகியவைகளுக்கு ஏதும் செய்யவில்லை."

* * *

"இங்கே, கதரைக்கொண்டு வந்து விற்பனை செய்வது சம்பந்தமாக காங்கிரஸ் தலைவர்கள் கூறிவருவதாகத் தெரிய வருகிறேன். அவர்கள் அவ்விதம் செய்து, கதரைக் கொண்டுவந்தார்களேயானால், 100 ரூபாய்க்கு 10 ரூபாய் வீதம் வரி வசூலிக்கத் தயங்க மாட்டேன்."

* * *

"ஹிட்லர் முறைக்கும் காங்கிரஸ் கொள்கைக்கும் வித்யாசம் இல்லை. தற்கால நாகரீகத்தை அழிப்பவர்களுடன் சேர்ந்து இவர்களும் அழிவு வேலையை மேற்கொண்டிருக்கிறார்கள்."

இவ்வளவு காரசாரமாக காங்கிரசாட்சியையும், காங்கிரஸ் திட்டங்களையும் கண்டித்திருப்போர் யார்? துணிவும் ஆத்திரமும் பீறிட, துந்துபி முழக்கியிருக்கிறார்களே! மாயமான் வேட்டைக்காரர்கள் என்று வர்ணிக்கிறார் ஒருவர். 'கதரை அனுமதியேன்' எனக் கர்ஜிக்கிறார் மற்றொருவர். 'ஹிட்லர்கள்' என, நாஜிஸத்தோடு ஒப்பிட்டு, காங்கிரசாரின் போக்கை, கண்டித்திருக்கிறார் இன்னொருவர். இந்தக் கூற்றுக்களைக் கேட்டால், தேசிய நண்பர்கள்—'சந்தமுனைக் காரர்களல்ல; நாட்டிற்காகத் தழும்பும் வேதனையும் தாங்கியவர்கள்— துடித்துத்தான் போவார்கள். கண்டிக்கிறார்களோ எமது காங்கிரசை' என்று சீறுவார்கள்.

"துரோகிகள்!"

"சுயநலமிகள்"

"காட்டிக்கொடுப்பவர்கள்"

"கபோதிகள்"—இத்தகைய வார்த்தைகளை எல்லாம் சேர்த்துக் கொட்டுவார்கள் — திட்டுவார்கள். "சர்க்கார் இவ்விதம் பேசித் திரியும் பித்தர்களின் நாவை அடக்கவேண்டும்" என்று, சர்க்கார் காரியாலயத்தில் போய், தூண்டுவார்கள். இப்போது சர்க்கார் இருக்கிறதல்லவா 'அவர்களுடையதாக'! இந்த வார்த்தைகள், கூறப்பட்டது, இப்போதல்ல; **1940**ல். அப்போது, என்ன வார்த்தை சொல்லி ஏசியிருப்பார், இவ்விதம் பேசியவர்களை. கொஞ்சம், கடந்த காலத்தை நோக்குங்கள். கண்டிருக்கிறோமே!

"காலிகள்"

"கூலிகள்"

"பிரிட்டிஷ் பூட்ஸ் தாங்கிகள்" — இதைவிட காரசாரமான வார்த்தைகளால், மேடை அதிர, முழக்கமிட்டார்கள்—மேலே குறிப்பிட்ட விதம் பேசியவர்களைக் குறித்து. அதாவது, இவ்விதம் காங்கிரசைக் கண்டிப்போரால்தான், சுயராஜ்யம் வரத் தாமதமாகுதென்று தூற்றினார்கள். "தேசத் துரோகிகளை என்ன செய்வோம் தெரியுமா?" என்று கர்ஜனை எழுப்பி, அவர்களுக்கு எவ்வெவ் வித தண்டனைகள் தரப்படும் என்றெல்லாம் விவரித்தார்கள்.

அவ்விதம் 'கர்ஜனை' எழுப்பிய காங்கிரஸ் நண்பர்கள், பலர், இருக்கிறார்கள். அவர்களால் 'துரோகிகள்' என்று, தூற்றப்பட்டோரும் இருக்கிறார்கள். தேசத்தியாகி 'கந்தப்பன்', வழக்கம் போல தனது சங்கத்துக்கும்தலைவருக்குமிடையே நடந்து போய்க்கொண்டிதானிருக்கிறான்—'சுதந்திரம் வந்தது' என்ற பெருமிதத்தோடு. ஆனால், அவன் ஆத்திரத்தொடு, அன்று கண்டித்தானே, 'துரோகிகள்', 'பூட்ஸ் தாங்கிகள்' என்றெல்லாம்—அவர்களெல்லாம், இன்று, அவனுடைய தலைவர்களாகிவிட்டார்கள்! ஆமாம், தடியடியும் துப்பாக்கியும் ஏந்தியவன் வெயிலில் நடக்க — அவனால் கண்டிக்கப் பட்டோர் வேகவேகமாக அவனது தலைவர்களுடன் அமர்ந்து காரில் செல்லும் காட்சி, நடைபெறுகிறது, இங்கே. 'தேசத்தியாகி' பல்லிளிக்க, 'என்னப்பா வேண்டும்?' என்று, கேட்கக் கூடிய நிலையில் அவன் வார்த்தைக் குண்டுக்கு இலக்கான, 'துரோகிகள்' பதவிகளிலே இருக்கிறார்கள். இருக்கிறார்களா—இல்லை! இல்லை!!—அவனது, 'தேசப்பிதாக்களையே' ஆட்டிவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"நானிருந்தால்தான் இந்தக் காரியங்கள் நடக்கமுடியும் ஒழுங்காக."

"என் ஒத்துழைப்பு இல்லையென்றால் காங்கிரஸ் சர்க்கார் எப்படி நடக்கும்?"

"அன்று தூற்றினாயே தம்பீ! இன்று என் காலில் விழுவது யார், நீயா, நானா?"

"குழிதோண்டிப் புதைப்போம்— இவர்களை என்றாயே. காரசாரமாக எதிர்த்தாயே தேர்தலின்போது—இப்போது நீதான், என்னைக் கண்டதும், கைகட்டி நிற்கிறாய். நானல்ல" என்று, கெக்கலிப்பதுபோல், கெம்பீரமாக அமர்ந்திருக்கிறார்கள்—காங்கிரஸ் தலைவர்கள் 'பஜனை' பாட, காங்கிரஸ்மந்திரிகள், ஸ்தோத்திரம் செய்ய. 'காங்கிரசே வாழ்வு!' என்று உழைத்து, உடம்பெங்கும் காயங்

களோடு, வாழ்பவரோ, அவர்களை அன்றைந்து பார்க்கிறார்கள்—வேதனையோடு. ஆத்திர உள்ளம் படைத்தோரோ, 'செருப்பு என்றேன்—இன்று சிங்காதனத்தில் ஏறுகிறேன்—சே! இது என்ன முறை?' என்று, கண்டித்து விட்டு, கவலையோடு நிற்கிறார்கள். "சந்தர்ப்பமே எமது அரசியல்" என்று இருப்பவரோ, 'தாசன் நானுள்ளவரை தயக்கமேன்?' என்று, உறுதிமொழி கூறிவிட்டு, கையை நீட்டி கிடைப்பதை' பைக்குள் தள்ளிவிட்டு, "காட்சி இது பாரீர்! காங்கிரஸ் கரைவதைக் காணீர்!!" என்றுஉரைப்போரை நோக்கி,நாம் முன்பு குறிப்பிட்ட 'பாஷை'களைத் துவக்கி விடுகிறார்கள். இன்றைய 'பாஷை'யால் அன்று தாக்கப்பட்டவரோ, அவருக்கு எஜமானர்களாக இருக்கிறார்கள்!! நம்மீது சினம்—உண்மையை விரிப்பதால். 'வந்தோர் மீதோ' பரிவு, வசதி பெறலாம், கவுரவம் கிடைக்கலாமெனும் ஆசையால்.

* * *

டி. டி. கிருஷ்ணமாச்சாரி —வியாபார மந்திரி.

என். கோபாலசாமி அய்யங்கார் —பாதுகாப்பு மந்திரி.

புது இந்திய மந்திரி சபையில், இந்தப் பெயர்களை— கண்டிருப்பீர்கள். இருவரும் காங்கிரசின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பவர்கள். இவர்கள் இன்று மந்திரி! இவர்கள் மட்டுமென்ன, சென்னை மந்திரி சபையின் 'தாசேநான்' என்று கர்வத்தோடு இருக்கிறார் செட்டிநாட்டு சீமான் முத்தையா செட்டியார்—காங்கிரசில் இவரும் சேர்ந்து விட்டாராம். இவர்கள் இன்று மந்திரிகள்—தலைவர்கள். ஆனால் 1940ல் 'துரோகி' 'சுயநலக்காரன்' 'பூட்ஸ் தாங்கி' என்றெல்லாம் காங்கிரஸ் தலைவர்களால் வர்ணிக்கப்பட்டவர்கள். ஆமாம்! ஐயம் வேண்டாம்!! தலைப்பிலே, இரு 'கலமிட்டு' நாம் தந்திருக்கிறோமே, மூன்று 'முத்துக்கள்' அவைகளைச்சிந்தியோர், இவர்தாம். தேதி விபரப்படி வேண்டுமா?

முதலில் இருப்பது டி. டி. கிருஷ்ணமாச்சாரி பேசியது. இடம் மதுரை தேதி 12—3—1940.

இரண்டாவது சிதறல், "இவரில்லாவிடில் எவ்வளவு கஷ்டப்படுவேன் தெரியுமோ?" என்று பண்டிதநேரு பாராட்டுரை பகிர்கிறாரே அந்த கோபால்சாமி அய்யங்காருடையது. காஷ்மீர் திவானாக இருந்தபோது—காங்கிரசைப்பற்றி அவர் கண்டித்த மொழிகள் இவை. வரி விதிப்பேன் என்றார்! பேசிய வருடம் 1938.

கடைசி முத்து, சீமான் முத்தையா செட்டியாருடையது. 7—4—1940ல் ஈரோடு மாநாட்டில் பேசியது.

"காங்கிரஸ் ஆட்சியில் பலகேடுகள் விளைந்தன"

இவ்விதம் பேசியவர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி. இன்று அவர் இந்திய மந்திரி—காங்கிரஸ் அமைச்சர். ஆச்சாரியாரின் பழைய சாறுகதி, மந்திரி சபையின் காலத்தில் சட்டசபையில் வர்த்தகர்களின் பிரதிநிதியாக இருந்து, காங்கிரஸ் போக்கை, காரசாரமாகக் கண்டித்தவரான். காங்கிரஸ்காரர்களால் பிரிட்டிஷ் கம்பெனியின் 'தரகர்' என்று ஏசிப்பேசப்பட்ட 'பெம்மான்!'

"கதருக்கு ஆதரவு தரேன். காங்கிரஸ்காரரை காஷ்மீருக்குள் நடமாடவிடேன்!"

இப்படி கர்ஜனை எழுப்பியவர் கோபால்சாமி அய்யங்கார். 'காயம்' கலையாமல், 'சர்'பட்டம் அழியாமல் பாரதமாதாவின் மைந்தரானார். இவர் ஆறுகாலத்தில் காஷ்மீர் காங்கிரசார் எழுப்பிய ஆத்திரக்குரல்கள் ஏராளம். "வெள்ளையனின் கைக்கூலி" என்று, சென்ற இடமெல்லாம், 'வாழ்த்துரை' வழங்கப்பட்டவர். இன்று அவர் பாதுகாப்பு மந்திரி. அதுமட்டுமல்ல, 'எது செய்தாலும் என்னைக் கேட்டுத்தான் நேரு செய்வார்' என்று பேசிக்கொண்டிருக்கிறார்.

"ஹிட்லர் முறை!"—காங்கிரசுக்கு இவ்விதம், 'பட்டம்' சூட்டியவர், ஆச்சாரியாரின் 'அந்நாள்' ஆட்சியின்போது, சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினராக அல்ல—தலைவராக இருந்தவர். 'அடையாறு' என்று காங்கிரஸ்காரர்களால்,குறிப்பெயர் தரப்பட்டு, கண்டிக்கப்பட்டவர், இவரைப்பற்றி, அன்று வழங்கப்பட்ட 'அர்ச்சனை' சொற்கள்—பெரிய அகராதி ஆகும். அவர் சென்னை ராஜ்யக் காங்கிரஸின் சூத்ர காரியமெல்லாம் 'அடையாறு மாளிகை'க்குப் பின்தான், முடிவு செய்யப்படுகிறதாம்.

அன்று காங்கிரஸ் தொண்டர்களால், கொடும்பாவிகள் என்று கூறப்பட்டவர்கள், இன்று அவர்களையே 'எடா, வாடா!' என்று அழைக்கக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். "இதிலென்ன தப்பா? அன்று எதிர்த்தோர் இவரெல்லாம். இன்று வந்து சேர்ந்தாட்டா. இது எதைக் காட்டறது? எமது தேசிய மகாசபையின் செல்வாக்கை யன்றோ!" என்று இவர்கள்'வரவு' குறித்து, பதிகம் பாடக்கூடிய, தேசிய நண்பர்களும் இருக்கிறார்கள். உள்ளத்தில் படுவதை உரையாத உத்தமர்கள்! அவர்களைக்

## அனுதாபம்

நமது நண்பரும், தமிழாசிரியருமான தஞ்சை மாவட்ட பவனமங்கலம் புலவர் குழந்தையா அவர்களின் வாழ்க்கைத் துணைவியார், கடந்த 29-ந்தேதியன்று திருக்காட்டுப்பள்ளியில், தமது இளம்வயதில், சாவால் கொத்திச் செல்லப்பட்டார் என்கிற செய்தி அறிய திடுக்கிட்டோம். தோழர் குழந்தையா அவர்களைப்போன்றே, அவரது துணைவியாரும் ஆசிரியத் தொழிலில் பணியாற்றி வந்தவர்களாகும். இளங் குழந்தைகள் மூன்று தவிக்க, பெற்றோரெல்லாம் வாட, அம்மையார் அவர்கள் போய்விட்டார்கள். தாங்க முடியாத துக்கம் ஏற்படவே செய்யும். கலங்கும் நண்பருக்கு எவ்விதத்தில் ஆறுதல் கூறுவோம்? எனினும் வாழ்க்கையில் கேடுபன்னாங்களை தாண்டிச் செல்லவேண்டியவர்கள்தானே நாம். வருந்தும் குடும்பத்தாருக்கும் துணைவியாரை இழந்த நண்பருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

* * *

நமது அலுவலகத்தைச் சேர்ந்த தோழர் நாகராஜனின் தாயார் கன்னம்மாள் தவிக்கும் தனது குழந்தைகளை விட்டு விட்டு 3—5—52 அன்று இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.



காணும்போதுதான், நமக்குப் பரிதாபமாக இருக்கிறது. இவர்களெல்லாம் வந்தது எமக்குள்ள பெருமையால்தானே! மணமுள்ள மலரை விரும்பாதவர் உண்டோ?" என்று உபமானங்களுடன், உரைத்துப் பேசுவர். ஆனால் பாவம்! கட்சியின் மகிமையைக் காட்டுவது, 'இதுகள்' வரவல்ல, மக்களின். கட்டிடத்துக் குள் புகுந்து விட்ட 'கரையான் பொந்து'களைக் காட்டி எமது கட்டிடத்தின் பெருமை அத்தகையது, அதனால்தான் கரையான் வந்தது' என்றால், கைகொட்டிச் சிரியாரோ, மக்கள். தூற்றினோர் துந்துபி பாடுகின்றனர்! என்ன காரணம் இதற்கு? மாம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூறி அழைப்பாருண்டோ? அந்தப் பாடலை, சிறிது நினைவூட்டிக்கொள்ளுங்கள். அரசியல் வௌவால்கள்! பழம் பழுத்தது — வந்துவிட்டன!!

இந்த அரசியல் வௌவால்களைக் காணும் போது, வேதாரண்யம் நோக்கி விலாவெலும்பு உடைபட்டவனும், உப்பு அள்ளச்சென்று சிறைக்குள் தள்ளப்பட்டவனும், ஆகஸ்டின் போது காலை இழந்தவனும், மகிழவா செய்வான்? அவனால் தூற்றப்பட்டவன், இன்று அவனைப்பார்த்து, 'என்னப்பா— சவுகரியமா?' என்று, கேட்டுவிட்டு, சொகுசான காரில் ஏறும்போது, அவன் இதயம் என்ன பாடுபடும்— மேலுக்கு, 'இருக்கேங்க' என்று வாய் உச்சரித்தாலும். அவர்கள் பார்க்கும் பார்வையில் தென்படும் 'கர்வம்' அந்த ஏழைத் தொண்டனின் இருதயத்தைப் பிளக்காதா, என்ன! "கொடி தூக்கினேன்—கூச்சல், போட்டேன். 'மாட்டுப்பெட்டிக்கே போடுங்கள் வோட்டு' என்று கூவினேன். மாடாக உழைத்தேன். ஏசல்களைத் தாங்கினேன். இன்று 'எதிரி' மந்திரி! நான் அவரது தொண்டன் — என்ன உலகம்"— என்று, எண்ணுமலா, இருப்பான், இன்று, ஆச்சாரியார் கூறுகிறாரே, 'அவர் வந்துவிட்டார். இவர் சேருவார்' என்று, அந்த 'அவரையும் இவரையும்' பார்க்கும்போது. அந்த 'அவரையும் இவரையும்' எதிர்த்து, தேர்தலில் போட்டியிட்டாரே, காங்கிரஸ் சார்பில் அவர்தான் என்ன எண்ணுவார்!

பெருமையோடு, கூறுகிறாராம், ஆச்சாரியார் 'அவர்—இவர்வருவார்' என்று. 'அவரும் இவரும்' வந்து சேரட்டும். அதனால் என்னலாபம், ஏற்படமுடியும் — மந்திரி சபைக்கு அல்ல—அந்த மந்திரிசபை 'எமது,' என்று கூறும் காங்கிரஸ் கட்சிக்கு. என்ன பலன், வரும்? எப்படித்தான் கிடைக்கமுடியும்! அல்பசந்தோஷம் சிலபல நாளைக்கு—ஆட்சிச் சவுகரியம் குலைந்தாத வரைக்கும். பிறகு? கட்சியும் தொண்டர்களும்! ? கரையான் புகுந்த வீடு—கலனை மாளிகை—இந்தக் காட்சிதானே.

இது, அறியாதவர்போல ஆச்சாரியார் பேசுகிறார்.

இங்கே, இப்படி ஆச்சாரியார் பேசுகிறார் வலைவீசியவண்ணம்.

அங்கே, நேரு பேசுகிறார். "காங்கிரஸ் கட்சியின் தூய்மை கெட்டுவிடக் கூடாது" என்று.

சோரம் போகிற மனைவியுடன் வாழ்பவன், கற்பு நிலைபற்றி பேசினால், நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டாக இருக்கும். ஆனால் பண்டிதநேரு! அன்று தன்னால் கண்டிக்கப்பட்டோரையெல்லாம், அருகே அமர்த்திக் கொண்டு, தூய்மை விளக்கம் செய்கிறார். தூய்மையோடு இருக்கவேண்டுமாம் காங்கிரஸ் கட்சி! எப்படி முடியும் இது? உடலுக்குள் உதவாத கிருமிகளெல்லாம் புகுந்து, அரித்துக் கொண்டிருக்கையில், உடல் எத்தனை நாளுக்கு இருக்கமுடியும்! "புதுரத்தம்" கேட்டார், முன்பொருமுறை, பண்டிதநேரு. இளைஞர்கள் என்கிற புது இரத்தம்! புதுரத்தமா, புகுந்திருக்கிறது, காங்கிரசுடலுக்குள். சீழ்! ஆளை உருக்குலைக்கும் ஆபத்தானது. புகுந்து, ஆளையே, அடிமை கொள்ளுமளவுக்கு, பரவிவிட்டது. "பாம்பு புகுந்தகுடம்! — பயன்படுமா? அரசியல் வௌவால்கள், புகுந்த, கட்சி வாழவா முடியும்?" — வேதனையோடு, தியாகத்தின் மூலம், தன் அரசியல் வாழ்வை கழித்தவன், இதை, எண்ணுமலா இருப்பான்?

"அவரும்—இவரும் வந்தாட்டா. அவா, ஆதரவு உண்டு" என்று, மந்திரிசபையைப் பலப்படுத்த, ஆச்சாரியார், சாணக்கிய மூளையோடு பேசுகிறார்.

பண்டிதநேருவோ, தூய்மையாயிருக்கவேண்டும் காங்கிரஸ் இயக்கம், என்று பன்னிப்பன்னிச் சொல்கிறார் — பக்கத்திலே அரசியல் வௌவால்களை வைத்துக்கொண்டு.

ஆச்சாரியார் கூறுவதுபோல, மந்திரிசபையைக் காக்க கைகொடுக்கும் 'அவாளும் இவாளும்'—'காங்கிரசில் நான் சேரவில்லை' என்று, கர்வத்தோடு கூறுகின்றனர். "மனைவியா இல்லாட்டி என்ன. மாதாசி, என் பக்கமிருந்தால் போதாதோ?" என்கிறார், கருப்புக் கண்ணாடியார். சர்க்கரைக் கட்டி! ருசிபார்க்கிறார்கள் 'அவாளும் இவாளும்.'

இந்த ருசிக்காகப் பறந்துவந்தோரின் 'பட்டியல்' நீளலாம்— பலன்? காங்கிரஸ் இயக்கம் வளர என்ன ஊன்றுகோல் கிடைக்க முடியும்! 'துரோகிகள்' அரசு வீற்றிருப்பதைக்கண்டு 'தண்டியும்' 'ஆகஸ்டும்' கண்ட உண்மை ஊழியர்கள் மகிழவா செய்வார்கள்! கண்ணீர்தான் மிஞ்சும்!! அந்தக் கண்ணீர், இப்போதே, ஆறாகப்பெருக்கெடுத்துவிட்டது பலப்பல தியாகிகளின் இதயங்களிலே.

## தேனிக்கலவர வழக்கு நிதி

| | |
|---|---|
| உ. பு. அ. சௌந்திரபாண்டியன் பட்டிவீரன்பட்டி | 1000-0-0 |
| தா. ஆவுடையப்பன், சோழவந்தான் | 10-0-0 |
| தி. மு. க. தவிட்டுப் பாளையம் | 2-0-0 |
| தி. மு. க. பாண்டமங்கலம் | 1-0-0 |
| பொதுக்கூட்டம் திண்டுக்கல் | 2-1-3 |
| ,, கொண்டலம்பட்டி | 3-0-0 |
| தி. மு. க. கள்ளக்குறிச்சி | 5-0-0 |
| விவசாயிகள் சங்கம் பெரியவார்சிலி | 1-0-0 |
| பொதுக்கூட்டம் பீமநகர் | 12-10-3 |
| தி. மு. க. குல்லக்குண்டு | 10-0-0 |
| ஒரு தோழர் ,, | 1-9-3 |
| தி. மு. க. பள்ளப்பட்டி | 1-9-3 |
| எஸ். காளசாமி பள்ளப்பட்டி | 5-0-0 |
| ஆக. இதுவரையில் | 1054-14-0 |

இரா. நெடுஞ்செழியன்
செயலாளர்
தேனிக்கலவர வழக்கு நிதிக்குழு

திராவிட நாடு

காஞ்சி] 18—5—52 [ஞாயிறு

# இலங்கை அறப்போர்

☆

பதினெட்டு நாட்களாக அறப்போர் புரிகிறார்கள்!

நூற்றுக் கணக்கில், தினம், ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்!

விழிகளிலே வேதனை! 'ஐயா, இது அடுக்குமோ?' என்கிற பரிதாப மொழி!

பட்டினி—கிடந்தார்கள்!

'என்ன பாவம் செய்தோம் ஐயா!' என்று ஏக்கத்தோடு கேட்கிறார்கள்.

அவர்கள் ஏழைகள்! அழுது கொண்டே கேட்கிறார்கள்—சிரிக்கிறது சர்க்கார்.

மனிதராம், அவரும்.

மனிதனை, மற்றோர் மனிதன் பார்த்துச் சிரிக்கிறான்—புழுதி மேட்டிலே புரளும் மனிதனைக் கண்டு, 'நம்மினம்தானே அவனும்' என்று துடிக்கவேண்டிய மனிதன் சிரிக்கிறான்.

மனித இனத்தை, காக்கவேண்டிய பொறுப்புகொண்ட 'சர்க்கார்' சிரிக்கிறது.

அந்தச் சர்க்காரின் பொறுப்பை, சுட்டிக் காட்டவேண்டிய 'ஒருவர்'.

அவரை அண்ணாந்து பார்க்கிறார்கள்—அறப்போரில் ஈடுபட்டவர்கள். ஆனால் அந்தப் பெருந்தகையாரோ, வேதனைப்படும் கூட்டத்தைக்கண்டு விலா நோகச்சிரிக்கும் சர்க்காருடன் "விருந்து" அருந்திக் கொண்டிருக்கிறார்!

☆

இலங்கையின்நிலை இது. வேதனை மக்களுக்கு! விருந்து அவருக்கு!! ரோமாபுரி, எரியும்போது, பிடில் வாசித்துக்கொண்டிருந்த நீரோ—சரிதத்தில். இங்கே காண்கிறோம்! திராவிட பூமியிலிருந்து சென்ற எட்டு லட்சம் மக்களும், இலங்கையில் அறப்போர் புரிகிறார்கள். தமது உரிமைக்காகப்போராடுகிறார்கள்—"வாழவந்தோம். இலங்கையைத் தாயகமாகக்கொண்டுவிட்டோம். எமக்கு உரிமைதாருங்கள்" என்று பிரட்டியல்ல—கண்ணீரைச் சிந்திக்கொண்டு, கேட்கிறார்கள். கதறியவண்ணம் கோருகிறார்கள்! இந்தக்கூட்டத்துக்கு, உதவியும் ஒத்தாசையும் செய்யவேண்டிய நிலையிலிருக்கிறார் ஒருவர்—டில்லியின் தூதுவர்—மாதா மாதம் பணமும், சுகவாழ்வும் பெற்றுக்கொண்டிருப்பவர்—அவர் விருந்து அருந்துகிறாராம்! யாரோடு? தனது பூமியிலிருந்து சென்ற மக்களை கேலிசெய்யும், இலங்கை பொறுப்பாளரோடு. நாம் கூறவில்லை, குற்றச்சாட்டை. கொழும்பு நகரமன்றத்து டெபுடி மேயர் கூறுகிறார். விருந்தில் மகிழ்ந்து கிடக்கிறாராம், வேதனை போக்கும் முயற்சிகளைச் செய்ய

> இலங்கை அறப்போரில், இலங்கை தி. மு. க. சார்பில் தோழர்கள் ஈடுபடுவர் என்பதாக தி. மு. க. பொதுச் செயலாளருக்கு, இலங்கை கழகச் சார்பில் தந்திச் செய்தி, வந்திருக்கிறது.

வேண்டியவர். டெபுடி மேயரான திருமதி ஆயிஷாரவூப் கூறுகிறார்.

"இந்திய ஹை – கமிஷனர் ஒன்றும் செய்வதில்லை. அவர், கொழும்பு மேயருடனும் அவருடைய மனைவியுடனும் விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்."

எவ்வளவு விசித்திரம் பாருங்கள். உலகமே, தன்வியப்புக்கண்களோடு சிறுதீவு இலங்கையின் போக்கைக் கண்டுகொண்டிருக்கிறது. ஆனால் இந்திய ஹைகமிஷனரோ, விருந்து சாப்பிடுகிறாராம் விருந்து! புலி பாய்கிறது—ஆடுகள் அலறுகின்றன இடையன் குழலூதுகிறான்!! என்னென்று கூறுவது இதனை? வாழச் சென்று இலங்கையை தமது தாயகமாகக்கொண்டுவிட்ட மக்கள் தாமும் மனிதராக மதிக்கப்பட வேண்டுமெனப் போராடுகிறார்கள். 'வாக்குரிமை தா!' என்று முழக்கமல்ல — வேதனையோடு வேண்டுகிறார்கள். இந்த வேதனையைக்கண்டும், அசையாமலேருக்கிறது, இலங்கை சர்க்கார் "இது நீதியா?" என்று கேட்கவேண்டிய பொறுப்பிலிருப்பவர் இந்திய ஹைகமிஷனர். அவர் விருந்து சாப்பிடுகிறாராம்! விழியிலேநீரோடு உரிமை கோரும் மக்கள் சிறைக் கூடம் நோக்கிச் சென்றுகொண்டுள்ளனர்—அவரோ சிங்கள சிநேகம் வேட்டுக்கொண்டு 'சிங்காரமது' அருந்துகிறார்!!

இந்த விசித்திரமான ஹைகமிஷனருக்குத்தான், நாக்கிகள் அனுப்பியிருப்பதாக, தகவல் தருகிறது பண்டிதநேருவின் இலாகா.

பதைக்கும் திராவிட இனத்தவர்—அவருக்கு பரிதாபமொழிகூட காட்டாத ஹைகமிஷனர் — அவருக்கு உத்திரவு செய்யும் டில்லி.

நாடகத்தில் கூட காணாத முடியாத காட்சி! நடக்கிறது, தோழர்களே, நடக்கிறது!!

தேயிலைத்தோட்டத்தின் பூச்சிக்கும் கொல்லைக்கும் ஆட்பட்டு, தவிக்கும், திராவிடமக்கள், உரிமை கேட்கிறார்கள்—மனித உரிமை—அடிப்படை உரிமை. 'எங்களையும் மனிதனாக மதியுங்கள்' என்கிற உரிமை. 'எமக்கும் வாக்களிக்க, வோட் போட உரிமை கொடுங்கள்' என்று கெஞ்சிக் கேட்கிறார்கள்—'குண்டு' காட்டியல்ல, 'கோபம்' கொட்டியல்ல, குமுறும் வயிற்றையும் அழும் குடும்பத்தையும், விழி நீரையும், விலா எலும்பையும், உழைத்ததால் ஏற்பட்ட உடல் தழும்புகளையும் காட்டி.

ஆனால், இலங்கை சர்க்காரோ, "இம்மி"யும் இரங்கவில்லை — சாகசமாகப் பேசுகிறார் டட்லி சேனநாயகா. 'பார்லிமெண்டைக்கலைத்துவிட்டோம்—எப்படி இயலும்' என்கிறார். தந்திரமாக தட்டிக் கழிக்க எண்ணுகிறார்கள் எட்டு லட்சம் மக்களின் இதயக் குமுறலை!

இந்த கேவலக் காட்சியைக் காணும் இந்திய சர்க்காரோ, 'தாக்கீது' அனுப்பிவிட்டோமே என்று தகவல் தருகிறார்கள். அவர்தம் பிரச்சாரப் பீரங்கிகளான தேசிய இதழ்களோ, "நேரு சர்க்காரின் தீவிர முயற்சி" என்று கொட்டை எழுத்துக்களில் செய்திகள் தருகின்றன. ஆனால் வடநாட்டு சர்க்காரின் தூதுவரோ விருந்தருந்துகிறார்! விநோதமாகக் காலங்கழிக்கிறார்!! வீதிகளிலே, வேர்வலம்வந்துவண்ணமுள்



ளனர், உரிமை விரும்பிகள்-உழைப்பாள மக்கள்—'ஒருசாண் வயிற்றுக்காக' ஓடி, 'கங்காணி'களின் சவுக்குக்கும், கலங்கும் மனைவியரின் கண்ணீருக்குமிடையிலே ஊசலாடி உயிர்தேயும் கூட்டத்தவர்.

இவர்கள் கோரும் உரிமை மிக மிகச் சாதாரணமானது என்பதை எவரும் மறுக்கார். ஆனால், இலங்கை சர்க்கார் மறுக்கிறார்கள். ஆமாம், இலங்கை சர்க்கார்தான்! சிங்களமக்களல்ல!! சிங்களச் சகோதரரும், உரிமை கோரும் மக்களுக்கு தமது ஒத்துழைப்பையெல்லாம் தருகிறார்கள். 13-ந்தேதியன்று அறப்போர் புரியும் கூட்டத்தில் சிங்களத்தோழரும் கலந்துகொண்டாராம். சிங்கள மக்களும், கையெழுத்திட்டு 'மகஜர்' அனுப்பியுள்ளனர் ஆள்வோருக்கு. சிங்களமக்கள் ஆதரவு தருகிறார்கள்! ஆனால் சர்க்கார் மறுக்கிறது!!

'மலான்பாதை' என்று சில இதழ்கள், இந்தப்போக்கை வர்ணித்துள்ளன. ஆனால் நாம் இந்தப் பெயர் சூட்ட விரும்பவில்லை. ஏனெனில் மலான் இருப்பது ஆபிரிகா—நமக்கும் அதற்கும் உள்ள தூரம் அதிகம். ஆனால் இலங்கை அப்படியல்ல. இதோ, இருப்பது. காலையில் கிளம்பினால் மாலைக்குள் கொழும்பு கொண்டுவிட்டுவிடும், விமானம். இதுமட்டுமல்ல; இன்றுமட்டுமல்ல, பண்டுதொட்டு நமக்கும் இலங்கைக்கும், பாசமும் நட்பும் உண்டு. ஈழநாடும் சோழமன்னனும் இருகை கோர்த்துலவிய சேதிகள் உண்டு. பாண்டியகுலமகிபனும், இலங்கை மன்னரும் விருந்துண்டு மகிழ்ந்த கதைகள் அறிவோம். கேரள நன்னாடும், சிங்களச்சீமையும், தொடர்பும் நட்பும், வாழ்வும் உறவும் பெற்ற நிகழ்ச்சிகளை அறிவோம்.

அன்றுதொட்டு இன்றுவரை! சிங்களரை நண்பர்களாக அல்ல—சகோதரர்களாக பாவிக்கும் பாச உணர்ச்சி கொண்டோர், நாம். இலங்கைக்கோர் இன்னல் என்றால் நமது இதயத்தில் தேள் கொட்டியதுபோல் துடித்திருக்கிறோம் — திரிகோணமலை 'ஜப்பான்' குண்டுக்கு இலக்கானபோதும் சரி, இலங்கை வீரர் சேனநாயகா கடலைவிட்டுப் பிரிந்தபோதும் சரி, நமது கண்கள் சிந்திய கண்ணீர், பாசத்தால் உதிர்ந்ததுதான்! சகோதர உள்ளம்—'தம்பி' நாடு எனும் பரிவு—அருகிருக்கும் உறவினர் என்கிற உணர்ச்சி—இதைக் கூட மறந்தனர் போலும் டட்லி சேனநாயகாவின் அமைச்சர்கள்! ஏனோ, இவ்வித வெறி? இலங்கை ஒரு சுதந்திரத் தீவு, என்பதை அறிவோம்; அதன் சுதந்திர நிலைக்குப் பங்கம் வரக்கூடாதென்பதில் ஏனையோரைவிட நமக்குள்ள ஆர்வமும் ஆசையும் அதிகம்.

"பூனையே, மிரட்டுகிறாயா, யானையை?" என்று கேட்கின்றனரே, இங்குள்ள 'பாரத புத்ரர்'கள், அவர்களல்ல நாம், என்பதை, அங்கிருப்போரே அறிவர். ஆகவேதான், உரிமை கேட்போரை உதாசீனம் செய்கின்றனர், என்பதை அறிய அறிய, தாங்கொணாத் துடிப்பும், இதயத்துயரமும் அடைகிறோம்.

திராவிட பூமியிலிருந்து சென்றோர் உரிமை கோருகிறார்கள்!—இது மட்டுமல்ல, இலங்கையின் உரிமைப் போரை, நாம் ஆதரிப்பதற்கு 'நம்மவர்' என்பதால், எதையும், ஆதரித்துவிடும் பண்பும் பழக்கமுமல்ல, நம்முடையது. ஒரு போது, இன்று அங்கிருப்போரெலாம், இங்கேயிருந்தோர்தான் என்றாலும், இப்போது அவர்கள் இலங்கைவாசிகள்! இலங்கையின் சுகதுக்கங்களை, மனதிலும் உடலிலும் ஏற்க வேண்டியவர்களாகி விட்டவர்கள்! எனவே, 'விட்டகுறை தொட்டகுறை' அல்ல, நாம் இலங்கை அறப்போரை ஆதரிப்பதற்கு. அவர்கள் கோருவது நியாயமான உரிமை! மனித உரிமை!! அடிப்படை உரிமை!!!

இதையா மறுப்பது, இலங்கை சர்க்கார். படித்தோரும், பண்புள்ளம் கொண்டோரும், ஜனநாயக முறைகளை உணர்ந்தோரும், உலகியல் அறிவு பெற்றோரும் அதிகம் உண்டு, என்று கேள்விப் பட்டிருக்கிறோம். அத்தகையோர், அட்டகாசப்பாதை புகுகிறார்கள்! எட்டு லட்சம் மக்களில் 8500 பேருக்கு மட்டும் வோட்டுரிமை தருகிறார்கள்!! ஏனையோருக்குக் கிடையாதாம்—மறுக்கப்படுகிறது.

* * *

18—தினங்களாக (மே 15 வரை) அறப்போர் தொடர்ந்து நடைபெறுகிறது — உரிமை விரும்பும், மக்களால். இலங்கை இந்திய காங்கிரசினர் துவக்கிய, இந்த சத்யாக்கிரகத்தில், எல்லோரும், பேதமின்றி கலந்துகொண்டு வருகிறார்கள். தினசரி நூற்றுக்கணக்கானோர், அறப்போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அறப்போர் குறித்து கவனம் செலுத்த வேண்டிய டில்லி சர்க்கார்—தாக்கீதுகள் அனுப்பிக் கொண்டிருப்பதாகக் கூறுகிறது. இந்திய ஹைகமிஷனரோ, விருந்துக் கூட்டத்தில். இலங்கை சர்க்காரோ, கொட்டிக் கொண்டேயிருக்கிறது! இதோடு நீங்கிடவில்லை — அறப்போர் வீரர்களைத் தாக்கும் சங்கடங்கள். அவர்கள் அறப்போரை வேறுசிலரும் அவமதிக்கிறார்கள். 'நியாயமற்றது' என்று கண்டித்து, உரிமைகோருவோர் உணர்ச்சியைப் பொசுக்குகிறார்கள். யார் இந்தச் சிலர்? சிங்களவரா—இல்லை! இல்லை!!—அவர்தான் ஆதரவு நல்குகின்றனரே. பிறகு யார் தெரியுமோ? அகண்ட பாரதத்தின் புதல்வர்களில் சிலர்! 'இந்தியர்கள்' கண்டிக்கிறார்களாம், உரிமை கோரும் மக்களை! யாரிந்த வீபீடணர்கள் என்று அறியத் துடிப்பீர்கள். 'அடுக்குமோ இந்த ஆர்ப்பாட்டம்' என்று அங்கலாய்க்கின்றனராம். தேயிலைத் தோட்டத்திலே உழைத்து வாழும் மக்கள் உரிமை கோருகிறார்கள். இதை 'உதவாத முறை' என கண்டிப்போர் யார்? வேண்டாதது என விளக்கமுரைப்போர்யார் தெரியுமா? முதலாளிகள்! சிங்கள முதலாளிகள் அல்ல. இந்திய முதலாளிகள் — இலங்கையில் வர்த்தகம் செய்யும் இந்திய முதலாளிகள் சங்கம், அறப்போரைக் கண்டித்து, தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

"இலங்கையெங்கும் வர்த்தகத்திலும் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ள மக்களின் நலன்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் இலங்கை மேமன் சங்கம் இலங்கை இந்திய காங்கிரஸ் ஆரம்பித்துள்ள யோசனையற்ற, பொறுப்பற்ற சத்தியாக்கிரக இயக்கத்தைக் கண்டிப்பதோடு அதை வெறுக்கின்றது" என்பதாக முடிவு செய்திருக்கிறதாம்.

முதலாளிகள்! துரோகமிழைக்கும் துணிவுப் பாதையில் செல்லும் 'வீபீஷணப் பரம்பரை' எது, இது, தெரியுமா! தோழர் நீலகிரி அன்ப

வர் இது சம்பந்தமாக நமக்குத் தந்திருக்கும் தகவல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். "இலங்கையில் இந்திய காங்கிரஸ் சட்டமறுப்பு துவங்கியிருக்கிறது. ஆனால் கவலையின்றி வர்த்தகம் செய்து வாழும் வட இந்தியர்கள் நிரம்பிய இந்திய வர்த்தக சங்கம் இதைக் கண்டித்திருக்கிறது" வட இந்தியர்கள் நிரம்பிய வர்த்தக சங்கம்! முதலாளிகள் கூட்டம்!! ஏழைகள் கோருகின்றனர் உரிமை — எத்தர்கள் அதனை 'பொறுப்பற்ற' செயல் என்கின்றனர். வளைந்து வாழும் மலைப்பாம்பு — என, முதலாளித்துவம் குறித்து, கூறுவர். முற்றிலும் நியாயம்! என்று, மெய்ப்பிக்கின்றனர், இலங்கைவாழ் வட இந்திய 'பண குண்டு'கள். ஏழைகளின் அறப்போர், 'இதுகளுக்கு' அவசியமற்றதாகப்படுகிறது. ஆட்சியாளரின் பாதந்தாங்கிகளாக நடந்துகொள்வதில் ஆசைவைத்து, 'தம்மவர்' எனக் கூறப்படுவோரின் தலையிலே அடிக்கின்றனர். துரோகம் செய்கின்றனர்! காட்டிக்கொடுத்து தம்மை 'நல்ல பிள்ளை'களாக்கிக் கொள்ள, எண்ணுகின்றனர். வியாபார 'முதலை'கள். கண்டிக்கின்றனர்! வியர்வை சிந்தப் பாடுபடுவோர் உரிமை முழக்கம் செய்கின்றனர்!! பாடுபடுவது, தென்னிந்தியாவிலிருந்து சென்ற கூட்டம். 'பகட்டாக' இருந்து பணம் சம்பாதிப்பது வட இந்தியாவிலிருந்து சென்ற கும்பல். புலிக்குப் பசுவிடம் பட்சாதாபமா ஏற்பட முடியும்? வட இந்திய 'பண மூட்டை'களுக்கு நம்மவர் மீது பரிவு ஏற்படமுடியும்!

'எது எப்படிப்போனால் என்ன எனக்கு வேண்டியது பணம்'— இதுவே, பணப்பேய்களின், சித்தாந்தமாகும். இதை, கண்கூடாக மெய்ப்பித்துக் காட்டுகின்றனர், வட இந்திய முதலாளிகள். சிறைக்குச் சென்று கொண்டுள்ளனர் நம்மவர்கள்! உண்ணாவிரதம் மேற்கொண்டு உலர்கிறார்கள் உரிமை விரும்பிகள்! உல்லாசமாக அமர்ந்திருக்கும் பணியா கும்பல், சர்க்காரோடு கைகோர்த்துக் கொண்டு, கண்டிக்கிறது இதனை!

பாதிக்கப்படுவோர் நம்மவர்தான். வட இந்திய மேனாமினுக்கிகள் 'அச்சா! சர்க்கார்!' என்று இருந்து விடுவார்கள். அவர்களுக்கு வேண்டியது பணம். அது கிடைக்க நடைபெறவேண்டிய வியாபாரம்!! ஆகவே, நம்மவரின் துயரங்கண்டு, துடிப்போ, பதைப்போ ஏற்படாது 'இரும்பு உள்ளங்கொண்ட' அந்த 'இரும்புப் பெட்டிகளுக்கு'. ஆனால் நாம்! நம்மவரிலே? உரிமைக்காகப் போராடும் உலர்ந்த சமுதாயமாயிற்றே இது! தோட்டக் காடுகளின்மூலம் 'செல்வத்தை'ச் சேர்த்துக் குவிக்கும் கூட்டமன்றோ நம்மவர்கள்? இவர்கள் சிதைவதா — சித்ரவதை செய்யப்படுவதா — சிறைக்குள்ளே பூட்டப்படுவதா!

கண்டிக்கிறார்கள்! வெறுக்கிறார்கள்!! வடநாட்டு முதலாளிகள், செய்கிறார்கள் இதனை. நம்மவரோ வாடுகின்றனர்.

இந்த வாட்டம் தீர்த்திடவேண்டிய வடநாட்டு சர்க்காரும், அவரது தூதரும், எவ்வழியில் நடக்கின்றனரோ, அதே வழியில்—இன்னும் தீவிரமாக நடக்கின்றது, இந்த மார்வாடிக் கூட்டம்.

வதைகிறான் மனிதன்! மனித உரிமைக்கு முட்டுக் கட்டையிடுகிறது, வடநாட்டு முதலாளித்துவம். இந்த வக்கிரமச் செயல் எவரது இதயத்திலும் தீயையும் புயலையும் எழுப்பத்தான் செய்யும்.

எனினும், கண்ணீரோடு வீதிகளில் நிற்கும் உரிமை விரும்பிகள் தமது அறப்போரை அமைதியுடன் நடத்தவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறோம்.

மனித உரிமைக்காகப் போராடும் அப்பாவீரர்களை வாழ்த்துகிறோம்.

அறப்போர் நீதியின் துணை, கொண்டது. நிச்சயம் வெற்றி கிடைக்கவே செய்யும்—அறப்போரில் ஈடுபட்டு வரும் தோழர்களை வாழ்த்துகிறோம். வட இந்திய பண பிம்பங்கள் முணுமுணுக்கலாம் — கவலைக் கொள்ளாதீர்கள். டில்லி, மௌனியாக இருக்கலாம்—அலட்சியம் செய்யுங்கள். நீங்கள் ஏற்ற பணி புனிதமானது! நியாயத்துக்கு என்றும் வெற்றி கிடைக்கும். விரைவில் இலங்கை சர்க்கார், நல்லபாதையின் அவசியத்தைக் காண்பார். நீங்கள் சிந்தும் வியர்வை அதைச் செய்யும் அமைதியாக—அவசியம் பலாத்காரமின்றி — அறப்போர் நடைபெறட்டும். அறப்போரின் வெற்றி, நம்மைக் காட்டிக்கொடுக்கும் பணியா கும்பலுக்கும் அவர்தம் பாதந்தாங்கும் டில்லிக்கும் பாடமாக அமையட்டும். வாழ்க அறப்போர்!" என வாழ்த்துகிறோம்.

உண்மையிலே உணர்ந்து வீணாகைக்கு பலியாகாது உரிமைக்குரலுக்கு மதிப்பளிக்கும் உணர்வு, இலங்கை சர்க்காரிலிருப்போருக்கு ஏற்படவேண்டுமென்பதையும் வலியுறுத்துகிறோம். நீதி, தோற்காது! மனித உரிமையையே உதாசீனம் செய்வது பலன்தராது — படிப்பினையையே கற்றுத்தரும்!! ✲

---

# வெளி வந்து விட்டன!

சிந்தனைக்கு விருந்தளிக்கும் மிகச் சிறந்த நூல்கள்.

★

இரண்டாம் பதிப்பாக, மிக அழகாகவும் கண் கவரும் முறையிலும் வெளிவந்துள்ளன.

★

C. N அண்ணாதுரை M. A. தீட்டி, நாட்டுக்குத் தரும் நல்ல ஏடுகள்

★

| | |
|---|---|
| ஜெபமாலை | 0—8—0 |
| சாது | 0—8—0 |

★

## புதிய நூல்கள்

?

★

விற்பனைக் கழிவு 25%-தபாற் செலவு தனி. நூல்கள் பெற விரும்புவோர், கழிவை நீக்கி, முன் பணமாக அனுப்பினால்மட்டுமே, நூல்கள் அனுப்பிவைக்கப் படும். தனிப்பட்ட புத்தகங்கள் வேண்டுவோர், புத்தக விலையோடு, அஞ்சல் செலவிற்கும் சேர்த்து தபால் தலைகள் அனுப்புக.

விபரங்களுக்கு:-

**பரிமளம் பதிப்பகம்,**
17, B. வரதுவாசல் தெரு,
காஞ்சீபுரம்.

---



# கேரளக் குரல், இது, கேளீர்!

## "வடநாட்டாதிக்கம் ஒழிப்போம்"

## "இந்திய ஏகாதிபத்யம் ஏற்படவிடோம்"

## "தனி நாடு பெறுவோம்"

## கேரள சோஷியலிஸ்டுகள் மாநாடு

ஐயா,

வட இந்திய முதலாளிகளின் ஏகாதிபத்தியப் போக்கை எதிர்த்து தீவிரமான போராட்டம் நடத்த கேரள சோஷியலிஸ்டு கட்சிக்காரர்களாகிய நாங்கள் முடிவு செய்து விட்டோம்.

வட இந்திய முதலாளிகள், தமது சர்வாதிகாரத்தால், பல நாடுகளை விழுங்கும் முயற்சியில் முனைந்திருக்கிறார்கள். அந்தந்த நாடுகளின் பொருளாதாரத்தைச் சுரண்டுகிறார்கள்—இந்தக் கொடுமைக்கு, எமது கேரளமும் உள்ளாகியிருக்கிறது.

ஈவிரக்கமில்லாத, வடநாட்டு மார்வாடிகளும் குஜராத்திகளும் கொண்டுள்ள இந்தச் சுரண்டலுக்கு இந்திய சர்க்கார் பூரண ஆதரவு தருகிறார்கள். கேரளம், ஆந்திரம், தமிழகம், கர்னாடகம் முதலிய தென்னாட்டில் தொழில்வளம் ஏற்படாமல், இந்திய சர்க்கார், முட்டுக்கட்டை போடுகிறார்கள் — இதன் மூலம் வடநாட்டு முதலாளிகளை வளரச்செய்து வருகிறார்கள். வடக்கிலுள்ள பஞ்சாப், காஷ்மீரம் போன்றவைகளுக்கும் இதேகதி தான்.

தமது சுரண்டலுக்கு சாதகமான ஏகாதிபத்ய முறைகளை வெகு தந்திரமாகக் கையாண்டு வருகிறது— இந்தியசர்க்கார். "ராஷ்டிரபாஷை" என்ற திரையில், வட இந்திய முதலாளிகளின் மொழியான இந்தியைப்பரப்ப, எல்லாவிதமான வழிகளிலும், அவசர அவசரமாக ஈடுபட்டு வருகிறார்கள், அவர்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பாதையை வடநாட்டு ஏகாதிபத்தியம், அப்படியே பின்பற்றி வருகிறது.

இக்கொடுமை நீங்க,

நமது நாட்டை தொழில்வளம் உள்ளதாகச் செய்ய,

முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல, நாங்கள், விடுதலைக் கொடியை பறக்கவிட, சபதம் கொண்டுவிட்டோம்.

* * *

ஏகாதிபத்தியக் கொள்கையால் வேலையில்லாத் திண்டாட்டம் பரவி

---

[தி. மு. க. பொதுச் செயலாளருக்கு, கேரள சோஷியலிஸ்டு கட்சியினர் அனுப்பியிருக்கும் அழைப்பு இது. நடைபெற விருக்கும் மாநாட்டில், தன்து உடல்நிலை காரணமாக பொதுச் செயலாளர் அண்ணாதுரை கலந்துகொள்ள இயலாமை குறித்துத் தெரிவித்து, கழகச் சார்பில் ஒரு தோழரை அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார்.]

---

விட்டது. நமது மக்களில் பலர், கேரளத்தைவிட்டு, வெளியேறிச் செல்லும் 'கதி' ஏற்பட்டுவிட்டது. வடநாட்டு ஆலையரசர்களின் நகர வீதிகளில் நம்மவர் அலைகிறார்கள்! வயிற்றுப் பிழைப்புக்காக நமது மக்கள் மலேயா, இலங்கை, கிழக்கு ஆப்பிரிகா முதலிய வெளிநாடுகளுக்கு குடும்பம் குடும்பமாகப்போய், சித்ரவதைக்கும், அரசியல் வேதனைகளுக்கும், அடக்கு முறைக்கும் ஆளாகி விடுகிறார்கள்.

எனவேதான்,

நாம் நமது நாட்டைப் பெற விரும்புகிறோம்—மலையாளிகள் வாழும் கேரளம் விடுதலை பெற வேண்டுமென விரும்புகிறோம்.

* * *

கேரளபூமி கீர்த்திமிக்கது! பாரம்பரைப் புகழ்வாய்ந்தது! படிப்பாளிகள் நிறைந்தது! முன்னேற்றப் பாதையில், சமதர்மவீரன் லெனின் காட்டிய பாதையில், நாம் முன்னேறிச் செல்வோம். சுதந்திர சோஷியலிச முறைகளை நிலைநாட்டுவோம். பாடுபடும் ஏழைகள், தம்மை எதிர்நோக்கும், மலைபோன்ற தொல்லைகளை உணர்ந்து விட்டார்கள். நமது மக்களை ஒன்று திரட்ட, கடந்த காலத்தில் நாம் தவறிவிட்டோம். 'சுதந்திரம் பெறுவோம்' என்கிற பொது வேலை திட்டத்துடன், திருவாங்கூர் கொச்சியில, ஐக்கிய முன்னணியாக நின்று கடந்த பொதுத் தேர்தலில், ஓரளவு வெற்றி கண்டிருக்கிறோம். இந்த ஒற்றுமையை இப்போது நிலைநாட்ட முனைவோம். எல்லா முற்போக்காளரின் ஒத்துழைப்பையும் பெறுவோம்.

18—5—52 திருவனந்தபுரத்தில் கேரள சோஷியலிஸ்டு கட்சியின் தென்கேரள அமைப்புக் கமிட்டியின் சார்பில் சுதந்திர கேரள மாநாடு, இந்நோக்கங்களுடன், நடைபெறவிருப்பதைத் தங்கட்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

நீதி நிரம்பிய எங்கள் கோரிக்கைக்கு தங்களது ஆதரவு கிடைக்குமென்று நம்புகிறோம்.

எஸ். பாஸ்கரன் நாயர் Bsc. B. L.
வரவேற்புக்குழுத்தலைவர்
திருவனந்தபுரம்
10-5-1952

---

## ஆரம்பம்

டில்லி சட்டசபை, கடந்த 13-ம் தேதியன்று, வெளியே ஆயிரக்கணக்கான மக்கள், 'போதிய உணவும் வாழ்வும் கொடு!' என்று கதற, அவர்கள்மீது போலீஸ் பட்டாளம் பாய, ஆதி விமரிசையான அடக்கு முறையோடு ஆரம்பமாயிற்று.

## சேலம் மாவட்ட கமிட்டி கூட்ட முடிவுகள்

4—5—52 பிற்பகல் 3 மணிக்கு செவ்வாய்ப்பேட்டை தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் மண்டியில், சேலம் மாவட்டக்கழகக்கூட்டம் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிறைவேறிய தீர்மானங்கள்:

1. ஈரோடு பொதுக்குழுவின் முடிவுப்படி நமது மாவட்டத்தில், மாணவர் பிரச்சாரப்பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தலாமென்றும், பயிற்சி வகுப்பு நடத்தும் செலவுக்கு நமது மாவட்டக் கிளைக்கழகங்கள் ஒவ்வொன்றும் ரூ 10ம் மேற்கொண்டு தனிப்பட்டவர்கள், அவரவர்கள் விரும்பிய தொகையும் உதவியும், தந்து உதவ வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

1 (அ) இந்தப் பயிற்சி வகுப்பை ஒகேனக்கல்லில் நடத்தலாமென்று முடிவு செய்யப்பட்டது.

(ஆ) இப்பயிற்சி வகுப்பை நடத்துவது சம்பந்தமான காரியங்களை கவனித்துச் செயலாற்ற, தோழர் ப. கண்ணன் பொருப்பாளர், தோழர் பி. எம். குப்புசாமி பொருளாளர், தோழர்கள் இரா. செகன்னாதன், ஈ. ஆர். கிருஷ்ணன், ஜி. பி. சோமசுந்தரம், பி. ஆர். சோமசுந்தரம், எம். இப்ராஹீம் ஆகிய ஏழு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

3. நமது மாவட்டத்தில் நெசவாளர் பிரச்சினையை கவனித்து பணியாற்ற ஒரு குழு அமைப்பதென்றும் அந்தக் குழுவுக்கு நமது மாவட்டத்தில் நெசவாளர் மிகுதியாக உள்ள பகுதிகளின் தி. மு. க. செயலாளர் அல்லது வேறு பொறுப்பாளர்கள் குழுவில் இருந்து பணியாற்ற வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

மாவட்டக் கழக சம்பந்தமான தபால்கள், மணிஆர்டர்கள்—பி. ஆர். சோமசுந்தரம், 25, மாரிமுத்துமுதலி தெரு, அம்மாப்பேட்டை சேலம். என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மாணவர் பிரச்சாரப்பயிற்சி வகுப்பில் சேரவிரும்புவோர், தங்கள் ஊர் தி. மு. க. செயலாளரிடமிருந்து அனுமதி சீட்டுடன், தோழர் ப. கண்ணன், ஆசிரியர் 'பகுத்தறிவு' சலகண்டாபுரம். (சேலம் மாவட்டம்) என்ற முகவரிக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

## வாழ்த்துகிறோம்

நமது இயக்க நண்பரும், 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்', 'வாழ முடியாதவர்கள்' முதலிய கழக நாடகங்களில் பங்கேற்று நடித்தவரும், பிரல நாடக மேடை நடிகரும், தற்போதைய திரைப்பட நட்சத்திரமுமான 'சிவாஜி' வி. சி. கணேசன் கடந்த மே முதல் நாளன்று சுவாமிமலையில் தோழியர் கமலவல்லியை வாழ்க்கைத்துணைவியாக ஏற்றுக் கொண்டார். விழாவுக்கு திருச்சி தமிழாசிரியர் தோழர் ரத்தினசாமி அவர்கள் தலைமை தாங்கி, திருக்குறளில் இல்வாழ்க்கை குறித்து வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கும் பகுதிகளைப் படித்து, அதைப்போல மணமக்கள் வாழ்க்கை நடத்தவேண்டுமென விரிவுரையாற்றினர். மணமக்களைப் பாராட்டி, தோழர் மு. கருணாநிதி சொற்பொழிவாற்றினர்.

மணமக்களுக்கு, நேஷனல் பிச்சர்ஸ், ஏ. வி. எம். ஸ்டுடியோ, திருச்சி விலிங்டன் டாக்கீஸ் உரிமையாளர்கள், டைரக்டர் கிருஷ்ணன்—பஞ்சு, சிதம்பரம் இசைவாணர் சி. எஸ். ஜயராம், எஸ். வி. சகஸ்ரநாமம், பண்டரிபாய் சகோதரிகள், சக்தி நாடகசபை டி. கே. கிருஷ்ணசாமி முதலியோராலும் மற்றும் பலராலும் பல வெள்ளிச் சாமான்கள் பரிசளிக்கப்பட்டன. பலர் வாழ்த்து இதழ்கள் வாசித்தளித்தார்கள். சீர்திருத்தத் திருமணத்தைப் பாராட்டி ஏராளமான வாழ்த்துக்கள் தந்தி மூலமாக வந்திருந்தன. மேற்படி விழாவில், திரைப்பட நடிகத் தோழர்களான எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். வி. சகஸ்ரநாமம்; டைரக்டர் கிருஷ்ணன்—பஞ்சு; நேஷனல் பிச்சர்ஸ் உரிமையாளர் பி. ஏ. பெருமாள்; வேலூர் நடராஜன்; இசைவாணர் சி. எஸ். ஜயராம்; டி. ஏ. மதுரம் அம்மையார், நடேசா ஆர்ட் புரொடக்ஷன் நடேசன், சக்தி நாடக சபை நடிக நண்பர்கள், தோழர் டி. கே. கிருஷ்ணசாமி, முதலியோரும் நமது கழகத் தோழர்களான அரங்கண்ணல், கண்ணதாசன், தஞ்சை சண்முக வடிவேல் முதலானோரும், மற்றும் பல நடிகத் தோழர்களும், கலந்து கொண்டனர்.

புதுவாழ்வு புகும் நண்பர் கணேசனை மனமார வாழ்த்துகிறோம்.

## மதுரை மாவட்ட பிரச்சார பயிற்சி வகுப்பு

மதுரை மாவட்ட பிரச்சார பயிற்சி வகுப்பு 1952 மே திங்கள் 21, 22, 23, 24 நாட்களில் பட்டி வீரன் பட்டியில் நடத்த ஏற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. தோழர் W. P. A. சௌந்திர பாண்டியனார் அவர்கள் அதற்கான ஏற்பாடுகள் செய்ய இசைந்துள்ளார்.

பிரச்சார பயிற்சி வகுப்பைத் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் நடத்தி வைப்பார்கள். பயிற்சி வகுப்பில் மதுரை மாவட்டத்தினர் மட்டுமே கலந்து கொள்ளவேண்டும். மாணவர்களுக்கு மட்டுமே வகுப்பில் சேர்த்துக்கொள்ள முதன்மையும், முக்கியத்துவமும் அளிக்கப்படும்.

பயிற்சி வகுப்பில் சேருவோர் முன்பே மேடை ஏறி பேசிப் பழக்கப் பட்டவராகவும், பயிற்சி மட்டுமே பெறவேண்டியவராகவும் இருக்கவேண்டும்.

வகுப்பில் சேர விரும்புவோர் அவர் பேச்சாளர் என்பதற்கு அந்தந்த ஊர்க் கிளைக்கழகத்தின் முத்திரையும், கிளைக் கழக செயலாளரின் கையொப்பமும் வாங்கி விண்ணப்பத்தாள்களை தா. ஆவுடையப்பன் செயலாளர் மாவட்ட தி. மு. கழகம், பனகல் இல்லம் சோழவந்தான், மதுரை மாவட்டம் என்ற முகவரிக்கு 15-5-52 வியாழக்கிழமைக்குள் அனுப்பி வைக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு மட்டுமே பதில் வரையப்படும். அழைப்பு பெற்றவர்களே வகுப்புக்கு வரவேண்டும்.

போக்கு வரத்து வழிச்செலவுகள் பயிற்சி பெறுவோரைச் சார்ந்தவை. ஒவ்வொருவரும் சொந்தப் படுக்கையுடன் வரவேண்டும்.

இடவசதி, சாப்பாட்டு வசதி மட்டும் செய்து தரப்படும்.

தா. ஆவுடையப்பன்
செயலாளர்
மதுரை மாவட்ட தி. மு. கழகம்
சோழவந்தான்.



2-ம் பக்கத் தொடர்ச்சி

வாங்கித் தொலைக்கவேண்டும். வாங்கிய கடனை அடைக்க அவன் படாத பாடுபடவேண்டும். "விவாகமானவன் சம்பாதிக்கத் தொடங்கினால் அவன் சமாதியை நண்ணும்போதுதான் பணக்காரனாவான்" என்று வேல்ஸ் நாட்டிலே ஒரு பழமொழியுண்டு. திருமணத்துக்குக் கடன் வாங்கும் சீனவாலிபன், கிழவனானாலும் கடன் என்னவோ இருந்தபடிதான் இருக்கும். நித்திய தரித்திரம் அவனுடைய வீட்டில் தாண்டவமாடும். "ஒண்டியாயிருந்தால் தனியொருவன் பட்டினி; திருமணமாகி மனைவிவந்தால் இருவர் பட்டினி; குழந்தை பிறந்தால் மூவர் பட்டினி!" என்ற சீனப் பழமொழி இந்தப் பரிதாப நிலையைச் சொல்லவே பிறந்ததாகும்.

திருமணமான பிறகு மணமகளை —கணவன் இஷ்டப்பட்டால் ஆடு மாடுகளை விற்பதுபோல பணம் வாங்கிக் கொண்டு விற்றுவிடலாமென்ற வழக்கம் இருந்து வந்திருக்கிறது. கணவனோ, கணவனின் தந்தையோ அவளை எது வேண்டுமானாலும் செய்யலாம். அடிக்கலாம்; உதைக்கலாம்; சூடு போடலாம்; அடித்த அடியில் செத்தாலும் கேள்விமுறையில்லை. கல்லானாலும் கணவன்—புல்லானாலும் புருஷன்; அவன் சொற்படிதான் அவள் கேட்கவேண்டும். மீறினால் மணவிலக்கு, அடி, உதை, குத்து, வெட்டு, அத்தனையும் நடக்கும். கேள்வி கேட்பாரில்லாத காரணத்தால் பணம் படைத்தவன் எத்தனைப் பெண்களை வேண்டுமானாலும் வரித்துக் கொண்டான். இஷ்டப்பட்டபோது வேண்டாதமனைவியை விலக்கினான்; விற்றான்!

சீனாவிலே ஆடு மாடுகளாக நடத்தப்பட்டார்கள் பெண்கள்! அடிமைகளாக நடத்தப்பட்டார்கள்! ஆட்டிவைத்தால் ஆடும் பொம்மைகளாக இருந்தார்கள் பெண்கள்! ஆண்களால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு. வாட்டி வதைக்கப்பட்டார்கள்! பாம்பின்வாய்த் தேரைகளாக இருந்தார்கள்! வெளியுலகம் அறியாத கிணற்றுத் தவளைகளாகத் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள்! நேற்று இன்றுகவா? ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக!

'இந்தப் பத்தாம் பசலிக் கொள்கைகள் என்று ஒழியுமோ? என்ற நம் துயர் நீங்குமோ?' என்று ஏங்கித் தவித்தார்கள் சீனப் பெண்மணிகள். அந்த நாளும் வந்தது! 1950-ம் ஆண்டு மே மாதம் முதல் நாள்! சீனப் பெண்மணிகளின் திருநாள் அது! யுக யுகாந்திரமாய் அடிமைப் படுகுழியில் விழுந்து உழன்று கொண்டிருந்த அவர்களது விடுதலை நாள்! துயரந் தோய்ந்த முகங்களில் புன்னகை அரும்பிப் பொலிந்த நாள்! மூட நம்பிக்கைகள் ஒழிந்து அசட்டுப் பிடிவாதங்கள் அழிந்த நாள்! அடுப்பங்கரையே மோட்ச லோகமென்று நம்பி யிருந்தவர்களுக்கு வெளியுலகம் தெரிந்த நாள்! கட்டளை யிடுபவன் கணவன்; அதை நிறைவேற்றுபவள் மனைவி என்ற கட்டுப்பாடுகள் ஒழிந்து, ஆணும் பெண்ணும் ஒன்று என்ற சரிநிகர் சமத்துவம் அமுல் செய்யப்பட்ட நாள்! அன்றுதான் புதிய சீனாவின் திருமணச் சட்டம் அமுலுக்கு வந்தது.

எட்டு பகுதிகளையும் இருபத்தியேழு அங்கங்களையும் கொண்ட புதிய சீனாவின் இந்தத் திருமணச் சட்டம் பலாத்கார மணத்தைத் தடை செய்கிறது. பால்யவிவாகத்தைத் தடுக்கிறது. இருதார மணத்தை மறுக்கிறது. கள்ளநட்பையும், திருமணத்திற்காக பணம் பரிசு பெறுவதையும், தடுக்கிறது. விதவைத் திருமணத்தை ஆதரிக்கிறது. பரஸ்பரம் ஆண், பெண், இருவரது பூரண சம்மதத்தின் அடிப்படையிலேயே திருமணங்கள் அமைய வேண்டுமென்று எடுத்த எடுப்பிலேயே இச்சட்டத்தின் முதல் அங்கமும் மூன்றாவது அங்கமும் சொல்லுகின்றன. உடற்கூறு அமைப்பிலே கோளாறுடையவர்கள், பெண் வியாதி பிடித்தவர்கள், தொத்து நோய்களுக்கு இருப்பிடமான நோயாளிகள், தொழுநோய்க்காரர்கள், பைத்தியம் பிடித்தவர்கள், ஆகியோர் திருமணம் செய்து கொள்வதை இச்சட்டம் தடுக்கிறது. ஆணுக்கு இருபது வயதும், பெண்ணுக்குப் பதினெட்டு வயதும் நிறைந்த பிறகே திருமணம் நிகழ வேண்டுமென்று இச்சட்டத்தின் நான்காவது அங்கம் வரையறுக்கிறது. வீட்டில் கணவனும் மனைவியும் சம அந்தஸ்த்தை அனுபவிக்க வேண்டும். புதிய சமுதாயத்தை உருவாக்குவதிலே அவர்களிருவரும் கைகோர்த்து வேலை செய்யவேண்டுமென்று இச்சட்டம் அறிவுறுத்துகிறது. கணவனுடைய சொத்தை மனைவியும், மனைவியின் சொத்தைக் கணவனும் அனுபவித்துக் கொள்ள இருசாராருக்கும் உரிமையுண்டென்று இச்சட்டத்தின்பனிரெண்டாம் அங்கம் பகர்கிறது. கணவன் மனைவி இருவரும் விரும்பினால் மணவிலக்கை அனுமதிக்கிறது இச்சட்டம். மணவிலக்கு பெற்ற அவர்கள் சிறிது காலங்கழித்து மறுபடியும் தம்பதிகளாக விரும்பினால் அதற்கும் தடையில்லை. அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் படிப்பும், பராமரிப்பும் மணவிலக்கிற்குப் பிறகும் பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளை இச்சட்டம் செய்கிறது.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், புதிய சீனாவின் இந்தத் திருமணச்சட்டம் அளவில் சிறிதென்றாலும் பூரணத்துவம் பெற்றது. மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிதென்பார்கள். அதுபோல இச்சட்டம் சிறிதென்றாலும் அதுவிளைக்கும் பயனோ மகத்தானது. பெரும் பெரும் சட்டங்களை உலகம் வியக்க இயற்றலாம். ஏராள


தலைமை நிலைய
**வெளியீடுகள்**

| | |
|---|---|
| சட்டதிட்டம் | 0—2—0 |
| தீர்மானங்கள் | 0—1—0 |

கிளைக்கழகத் தோழர்களே,

மொத்தமாக நூற்களைப் பெற்று, உங்கள் ஊர்களில் தோழர்களுக்குத் தாருங்கள். நம் தீர்மானங்களைத் தெரிவியுங்கள். தெளிவற்றவர்களுக்கு விளக்குங்கள். கழகத்தில் சேர மனங் கொண்டவர்களுக்குச் சட்டதிட்டத்தைக் காட்டுங்கள்.

விவரங்களுக்கு:—

பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்,
ராயபுரம், சென்னை 3.

மாகப் பணம் செலவுசெய்து வெளி நாடுகளில் அவற்றை விளம்பரப் படுத்தலாம். செயலில் நடைபெற வேண்டுமே!

இங்கேயும்தான் மதுவிலக்குச் சட்டமியற்றினார்கள்! அமெரிக்காவில் தோல்வியுற்ற மதுவிலக்கு இங்கு வெற்றி பெற்றது என்று வெளிநாடுகளில் விளம்பரம் செய்தார்கள். நடப்பதென்ன?

இருதார மணத்திற்குத் தடை விதித்து சட்டம் இயற்றினார்கள். சட்டம் ஏட்டளவிலிருக்கிறது. நாட்டில் இருதாரத் திருமணங்கள் நடைபெற்றுக்கொண்டு தானிருக்கின்றன.

இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன? சட்டமியற்றுவதோடு தங்கள் கடமை முடிந்ததென்று கை கழுவி விடும் கனதனவான்களை நாம் தேர்ந்தெடுத்து அனுப்பியதுதான்.

சீனாவிலே நிலச் சீர்திருத்தம் கிராமங்கிராமமாக செய்யப்பட்டு வருகிறபோதே இத்திருமணச் சட்டத்தையும் அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். அங்கங்கே அது ஒழுங்காக இயங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவ்வப்போது செய்து கொண்டே சென்றார்கள். அதற்குப் பலன் உடனடியாக ஏற்படாவிட்டாலும், சிறுகச் சிறுக ஏற்பட்டு வருகிறது. பட்டிக்காட்டான் யானையைப் பார்ப்பதுபோல இச்சட்டத்தை, கிராமப்புறத்திலே வசிக்கும் சீனர்கள் புதுமையாகப் பார்க்கிறார்களாம்.

சீனாவிலே இந்த சீர்கெட்டுப் போன சமுதாயவாழ்வு நமது திராவிட சமுதாயத்திலும் இருக்கிறது. மனைவியை விற்கும் கொடுமையான அந்த ஒரு பழக்கத்தைத் தவிர, எஞ்சிய அத்தனைப் பழக்கங்களும் நம்மிடையே இருக்கின்றன. இருதார மணங்கள் இங்கே நடந்துவருகின்றன. சாரதா சட்டமிருந்தும் பால்ய மணங்கள் நிகழாமலில்லை. விபசாரம் உண்டு. இங்கே! மறுமண உரிமை கிடையாது இங்கே! ஆணுக்கு அடிமை பெண் என்ற மனப்பான்மை இங்கே ஆதிகாலந் தொட்டே இருந்து வருகிறது. மணத்திற்காக இங்கு பணம் வாங்கும் பழக்கம் இன்னும் ஒழியவில்லை. எழுபதாண்டுக் கிழவனுக்கும் இருபதாண்டு இளநங்கைக்கும் நடக்கும் திருமணங்கள் இன்னும் சட்டப்படி தடுக்கப்படவில்லை. விரும்பிய கணவனைக் கைப்பிடிக்க பெண்ணுக்கு உரிமையில்லை இங்கே!

சீனாவின் சமுதாய வாழ்வு எப்படி இருந்ததோ, அப்படியே நமது சமுதாய வாழ்வும் இருந்து வருகிறது. நமது இயக்கம் செய்துவந்த தொண்டுகளினால் ஓரளவுக்கு நாட்டிலே விழிப்பேற்பட்டு, சீர்திருத்தத் திருமணங்கள் ஆங்காங்கே நடைபெற்று வந்தாலும், பெண்களின் நிலை, முன்னிருந்ததைப் போலவேதான் இருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும்.

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே" என்றார் புரட்சிக் கவிஞர். மண்ணடிமை தீர்ந்த பிறகும் இந்த நாட்டிலே பெண்ணடிமை தீரவில்லை. முன்வரவில்லை. பெண்களாவது தங்கள்மேல் சுமத்தப்பட்டுள்ள தளைகளை யெல்லாம் போக்கிக்கொள்ளுகிறார்களா என்றால் அதுவுமில்லை. அழகுப் போட்டி நடத்தவே அவர்களுக்கு நேரம் போதவில்லை. இந்தப் பரிகாசகரமான நிலை மாற வேண்டும். தானாக மாறாவிட்டாலும் நாம் மாற்றியமைக்கவேண்டும்.

❋

## கிளைக்கழகத் தோழர்கள் கவனத்திற்கு

1. தி. மு. க. தலைமை நிலையம் சென்னையிலிருந்தே இயங்கத் தொடங்கிவிட்டதால், கழகச்சம்பந்தமான எல்லா கடிதப்போக்குவரத்துக்களையும் சென்னை முகவரிக்கே வைத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

2 பதில்கோரி எழுதும் கடிதங்களுக்கு, பதில் எழுதப்போதுமான தபால்தலை வைத்தனுப்ப வேண்டுகிறோம்.

3. ஒவ்வொரு கிளைக்கழகமும், தனக்கென அச்சிட்டதாள்களிலோ அல்லது ரப்பர் ஸ்டாம்ப் போடப்பட்ட கடிதங்களிலோ எழுதி அனுப்பும் விஷயங்கள்தான் கவனிக்கப்படும்.

4. அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர் சேர்க்கும் புத்தகங்களை விரைவில் முடித்து அனுப்பும்படியாக வேண்டப்படுகிறார்கள். உறுப்பினர் சேர்க்கும் பணியை முடிப்பதற்கான கடைசிநாள் ஜூன் 15-ந்தேதி என்பதாக பொதுக்குழு தீர்மானித்திருப்பதையும் கவனப்படுத்துகிறோம்.

5. கழகத் தினத்தாள் சம்பந்தமான கடிதங்களும், நன்கொடை நிதிகளும் தலைமை நிலையத்துக்கே அனுப்ப வேண்டுகிறோம்.

6. எழுதப்படும் எல்லாக் கடிதங்களிலும், தி. மு. க. தலைமைநிலையம் 24, சூரியநாராயண செட்டி தெரு, ராயபுரம், சென்னை 13, என்ற முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டுகிறோம்.

ஈ. வெ. கி. சம்பத்,
பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்.

❋

## தேனிக் கலவர வழக்குக் குழு

தேனிக்கலவர வழக்கினை நடத்தும் பொறுப்பாளராகப் பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட தோழர். இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வழக்கினைச் செவ்வனே நடத்த "தேனிக் கலவர வழக்கு நிதிக்குழு" என்ற பெயரில் ஒரு குழுவினை அமைத்துக்கொண்டார். அக்குழுவின் அமைப்பு பாண்டியராஜபுரத்தில் 30-4-52-ல் அமைக்கப்பட்டது. குழுவில் கீழ்கண்டவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள்.

தலைவர்:
ஈ. ப. அ. சௌந்தரபாண்டியன்
செயலாளர்:
இரா. நெடுஞ்செழியன்
பொருளாளர்:
அ. பொன்னம்பலனார்
உறுப்பினர்கள்:
ச. தொந்தி
அ. தேவராசன்,
தா. ஆவுடையப்பன்
எஸ். முத்து

குறிப்பு:— தேனிக் கலவர வழக்கு நிதிக்காகத் தொகையனுப்பும் தோழர்கள், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.

715
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1952
MADRAS

REGD. No. M 4642

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 25—5—52 | இதழ் 47

சிறுகதை

## 'உலகம்' யாருக்கு?

[அண்ணல்]

"டிரியோ...... டிரியோ...டியோ ...டியாலே!"

ஆடிக்கொண்டிருந்தாள் அவள், அஞ்சான் அதை ரசித்துக்கொண்டிருந்தான். ஆண்டையின் குரல் அவனை 'மாய' உலகிலிருந்தும் களத்துமேட்டுக்கு இழுத்துவந்தது. "டேய்! பொழுது சாயுதடா. நெல்லைக் குவிங்க......"

என்று நீண்ட ஓர் கனைப்பைத் தந்துவிட்டு, 'அங்காடிக் கூடை'யைப் பார்த்தார். அவர் மகன், குமரன், அங்காடிக்கூடைக்கார அம்மாளிடம் பேசிக்கொண்டிருந்தான். குமரனைப் பார்த்தார், கோவிந்தப் பிள்ளை — குறும்புத்தனம் செய்துவிடப்போகிறான் பிள்ளை, என்கிற கவலையோடு. ஏனெனில் அங்காடிக்கடை அம்மாளுவின் பெண் அலமேலும், அங்குதானிருந்தாள்!

"பெண்—பஞ்சு; ஆண்—நெருப்பு. இரண்டும் அருகே இருப்பது ஆபத்து" இது, அவரது அனுபவ சித்தாந்தம். அதிலும் குமரன் காலேஜிலிருந்து வந்திருப்பவன். காளை! கனைத்தார். அதைக் கண்டு கொள்ளாததுபோலிருந்தான் குமரன் இருந்தானா? ஓசையில்லாத 'பாஷைகள்' பேசிக்கொண்டிருந்தான், ஒய்யாரமாக வைக்கோல் போரில் சாய்ந்து நின்ற அலமுவிடம்! 'காட்டிலே மலர்ந்த 'ரோஜா' என்று எண்ணியபடி, 'எம்மா! எல்லாம்வித்துதுங்களா?' என்றான், அலமுவின் அம்மாவிடம். 'எங்கே தம்பி? தோசையும் வடையும் அப்படியே இருக்கே' என்று சோகத்தோடு கூறிவிட்டு, பக்கத்து களத்துமேட்டிலிருந்து யாராவது வருவார்களா என்று ஆசையோடு நோக்கினாள்...

இந்த நேரத்தில்,

அலமுவின் கை, குமரனுக்கு சுண்டலை எடுத்துக் கொடுத்தது, 'நல்லாருக்கே' என்று ஒரே வார்த்தையில் அம்மாவுக்கும் மகளுக்கும் பதில் தந்தான், அவன். கோவிந்தப் பிள்ளை, மீண்டும் திரும்பிப் பார்த்தார்; கனைத்தார்.

டியோ...டியோ....டியோ...டிரியாளோ......!

அஞ்சானின் இதயத்தில் பனித்துளிகள்போல, இந்தக் குரல் விழுந்துகொண்டிருந்தது. தலையில் கட்டிய 'முண்டாசை' எடுத்து உடம்பிலிருந்து ஓடும் வியர்வையைத் துடைத்துக்கொண்டு, 'மரக்காலை' எடுத்து 'லாபம்' என்று ஆரம்பித்தான்! 'ஒண்ணு' என்பது விவசாயிகள் பாஷையில் 'லாபம்! லாபம்....ரெண்டு.....மூணு....மூட்டைக்குள் நெல்லை வீசிக்கொண்டிருந்தது மரக்கால். அவனது கண்களோ, அவள்மீது 'பார்வை'யை வீசிக்கொண்டிருந்தன. அந்தக்குறப் பெண், தனது 'பரம்பரைச் சொத்தான' தகர டப்பாவைத் தட்டிய வண்ணம் 'சங்கீதச் சப்தம்' எழுப்பிக்கொண்டிருந்தாள்.

எறும்புகள் போல் ஓடியாடிக்கொண்டிருந்த ஆதித்திராவிட விவசாயிகள் எவரையும் அந்தச் 'சப்தம்' கவர்ந்ததாகத் தெரியவில்லை. வியர்வையைத் துடைப்பதும், சாக்குமூட்டைகளை அடுக்குவதும், "லாபம்... இரண்டு" என்று நெல் அளப்பதும்........வேகமாக நடந்துகொண்டிருந்தது. அவளோ, சப்தம் எழுப்பியவண்ணம், ஆடிக்கொண்டிருந்தாள்.

நெல் அளந்தாயிற்று......

மூட்டைகள் அடுக்கப்பட்டு விட்டன.........

ஆட்களுக்குக் கூலியும் தரப்பட்டு விட்டது........

பிள்ளை, குடைவெற்றிலைப்பெட்டி சகிதம், புறப்பட்டும்விட்டார்.......

குமரனோ, விழிகளால் அலமேலுவிடமும் மொழிகளால் அவள் அம்மாளிடமும் பேசிக்கொண்டிருந்தான். 'தம்பி! போகலாமா?' என்ற பிள்ளையின் குரல், கனி சுவைக்கும் போது காவற்காரன் விரட்டியது போலிருந்தது. கடைசிப் பார்வையொன்றை வீசிவிட்டு அவனும் கிளம்பினான்.

டியோ...டியோ...டியோ...

இந்தச் சப்தம், குறைந்தது. தனக்கெதுவும் கிடைக்காததால், ஏமாந்த அந்தக் குறத்தியின் ஆட்டமும் அடங்கிற்று. ஆனால் கண்ணோட்டம் மட்டும் ஓயவில்லை. அஞ்சான் இருக்கிறானே!

"இந்தாபிள்ளை, நீ போக மாட்டே?" என்று அதட்டினான், அஞ்சான்.

"போடு, சாமி!" என்று தகரக் குவளையை நீட்டிக்கொண்டே சிரித்தாள் அவள். ஈறெல்லாம் கறுத்து அதன் மத்தியில் ஒளிவிட்ட அந்தப் பற்கள் குப்பைமேட்டிலே கிடக்கும் கிளிஞ்சல்களைப்போலிருந்தன.

இப்போது அதட்டவில்லை, அஞ்சான்.

"ஏம்மே! உனக்கு தர்மம் பண்ணிட்டா, என்ன ஆவுறதாம் நான்?"

குறத்தி ஒன்றும் பேசவில்லை. அவள் உதடுகள் சிறிது விரிந்தன; கண்கள் மீன்களைப்போலத் துள்ளின. பச்சைபாசிமணிகளைச் சரிப்படுத்திக்கொண்டாள். தகரக் குவளையை நீட்டினாள். தனக்குக்கிடைத்ததில் ஒரு பகுதி, நெல் மணிகளைக் கொட்டினான்—அஞ்சான். சிரித்தாள்...சிரித்தான். தேன் சிட்டு போல, அடுத்த களம் நோக்கிப் பறந்து சென்றாள், அந்தக் குறத்தி.

2

இந்தியாவில் ஏழுலட்சம் கிராமங்களிருக்கின்றனவாமே! அதில் ஒன்றுதான், மாவூர். "இயற்கை அன்னையின் இதயம். இன்பத்தடாகமும் ஏழைகளின் அன்பும், அல்லிப் பூவும், ஆடும்மாடும்...ஆகா! கிராமத்தின் அழகு வருமோ?" என்றெல்லாம், கல்லூரி மேடையில், கர்ஜனை எழுப்ப உபயோகமாகயிருப்பது தான் கிராமங்கள்...என்று எண்ணிக்கொண்டிருந்த குமாரனுக்கு, இப்போது "கிராமத்திலும் உயிர் இருக்கிறது" என்பது தெரிந்தது. "கவிதைக் கூடே! எழிற் சோலையே! கிள்ளை தாலாட்டும் கிளர்ச்சிக் குகையே!" என்றெல்லாம், எழுதலானான். கிராமத்தைப்பற்றியா, அல்லது அந்த கிராம மோகினியைப் பற்றியா என்பதை அவனைத்தான் கேட்கவேண்டும். காலேஜ்லீவுக்கு ஊருக்கு வந்தால், புத்தகமும் கையுமாகவே காலங்கழிக்கும் அவன், இப்போது மாலையும் காலையும் களத்துக்குச் செல்லத் தவறவில்லை. காரணம் அந்தக் 'காட்டுரோஜா' என்பதைச் சொல்லவா வேண்டும்? கோவிந்தப் பிள்ளை இதைப் புரிந்துகொண்டார். பிள்ளையிடம் இதுபற்றிப் பேசலாமா? 'சிறு பிள்ளை — வயதுவந்த மனம் குரங்குதானே'-இது, அவரது, எண்ணம். ஆகவே, கடிதங்களும், ஜோசியமும் வந்து குவியலாயின, அவரை நோக்கி. அவரது மனைவியும், 'அது இது' என்று சேகரிக்கத் துவங்கிவிட்டார்கள். ஆனால் குமாரனோ! 'அங்காடிக்கடை' அம்மா வீட்டுக்குப் போகத் தவறவில்லை.

"தம்பி! நல்லால்லீங்க......ஊரு ஒரு கோடிபேசும். வேண்டாங்க. பெரிய இடத்துப் பிள்ளை. வயிற்றிலே நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்கேன். அலமு — சின்னஞ் சிறுசு. அடிக்கடி இபபடி வாரதிங்க........"

உள்ளத்தில் அலைமோதிய இந்த வார்த்தைகளை ஒரு நாள் உதிர்த்துவிட்டாள், அம்மாளு. கண்ணீரோடு கதவிடுக்கில் நின்றுகொண்டிருந்தாள்—அலமேலு. குமரன் திடுக்கிடவில்லை — அவன்தான் 'முன்னமே' தீர்மானம் செய்துவிட்டானே! "தம்பிகோவிச்சுக்காதீங்க, நேத்து உங்க அப்பாவந்து இங்கே இரைஞ்சாருங்க. குப்பைமேடு கோபுரத்திலே வாழ ஆசைப்படலாங்களா?"

"சரி—அம்மா!" வேகமாக எழுந்து சென்றான், குமரன். அலமுவின் கண்ணீர், அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது. வீட்டுக்குள் நுழைந்தபோது கோவிந்தப் பிள்ளை ஊஞ்சல் போட்டுக்கொண்டிருந்தார் 'எங்கே, அந்தக் கழுதை?' என்று. 'இந்தாங்க! பிள்ளையைக் கழுதே கிழுதேன்னு பேசாதீங்க' என்று மறுத்துக்கொண்டிருந்தாள், குமரனின் தாய் குமரன் வந்துகொண்டிருந்தான். கோவிந்தப் பிள்ளை சொன்னார். "பிள்ளையை யாரடி கேட்டா? அவனைக் கேட்டேண்டி! அஞ்சானை. எங்கே போய்ட்டான். நெல் அரைக்கப் போகச் சொன்னேனே? மில்லுக்கு நேரமாயிட்டுதே!"

3

"வெள்ளைக்காரன் எவ்வளவோ கெடுதி செஞ்சிருந்தாலும் இந்த நன்மைசெய்ததை மறக்க முடியாதுங்க!"—மாவூர் ரயில்வேஸ்டேஷனைப்பற்றி, அந்த ஊரார் அடிக்கடி, இவ்விதம் பேசிக்கொள்வதுண்டு. 'வெள்ளைக்காரன்' தயவால்ஏற்பட்ட நன்மை எதுவோ நமக்குத் தெரியாது. ஆனால் அந்தஸ்டேஷனைச்சுற்றியிருந்த ஆலமரங்கள், நரிக்கொம்பர்களுக்கும், 'பூம், பூம்' மாட்டுக்காரர்களுக்கும் பெரிய 'கோட்டை' யாக மட்டும் இருந்துவந்தது. அறுவடை காலம் வந்துவிட்டால் அந்த இடம்—ஒரு சித்ராகிவிடும். நரிக்கொம்பர்களின் சிறு குடிசைகள்! புரியாத பாஷையில் அவர்கள் போடும், சப்தம்! நரிப்பல் — பாசிமணி—"சாமியோ! ஊசி! ஊசி!!" என்கிற ஓலம்!—அந்த இடம், அவ்வூர்ச் சிறுவர்களுக்கு ஓர் 'உல்லாச இடம்.' ஆலமரத்துப்பொந்துகளில் வசிக்கும் பட்சி ஜாதிகளும் அந்தக் கொம்பர்களும் ஒரு விதத்தில் ஒரே இனம் என்று சொல்லலாம். காலையில் பொந்தை விட்டுப் புறப்படும் பறவைகளைப்போலவே, அவர்களும் கிளம்புவார்கள்! இருட்டுக்கு முன் வந்து விடுவார்கள்! — "இருட்டிய பிறகும் வராத குறப் பெண்களை அவர்கள் ஜாதியிலிருந்தும் விலக்கி விடுவார்கள்" என்று, அந்த ஊர்ப் பெரியவர்கள் பேசிக்கொள்வதுண்டு தைமாதம் — வருவார்கள். பங்குனிக்குள் போய்விடுவார்கள். எங்கிருந்தோ வந்து எங்கேயோ போய்விடும் அந்த நாடோடிகளைப் பற்றி எவரும் அவ்வளவு அக்கரை காட்டமாட்டார்கள். ஆனால் அவர்கள் அடிக்கடி நடத்தும் 'ஒரு விழா' மட்டும் ஊராருக்கு கவனமாயிருக்கும். பலிவிழா! பெரிய எருமையை வெட்டி, அதன் இரத்தத்தைக் குடிப்பார்களாம்! என்னெய்ச் சட்டியில் கைவிடுவார்களாம்!—இதைப் பற்றிப் பல 'கதைகள்'—ஊரார் எவரும் அன்று அந்தப் பக்கமே திரும்பமாட்டார்கள்.

பூரண நிலவு காய்ந்து கொண்டிருந்தது. கழுத்திலே போடப்பட்டிருந்த மாலையிலிருந்த தழைகளைத் தின்று, அசைபோட்டுக் கொண்டிருந்தது ஒரு எருமைமாடு.

எவருக்கும் புரியாத பாஷையில் எல்லோரும் கூடிக் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இரைச்சலால் பயந்த பறவையினங்கள் வேறு 'ஓ! ஓ!' என்று அலறிக்கொண்டு அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. பயங்கரம் நிரம்பிய இந்த இடத்தின் அமைதி

(11-ம் பக்கம் பார்க்க)



# ☆ காலம் கனிகிறது! ☆

[நில்லை-வில்லாளன்]

திருவனந்திற்குச் சென்றேன். தித்திக்கும் சேதிகளைத் திரட்டிக் கொண்டு திரும்பினேன். தித்திக்கும் சேதி—ஆமாம், தோழர்களே, நமக்குத் தித்திப்பு தரும் சேதி. ஆனால், அந்த இனிய சேதி, இங்குள்ள சிலருக்கு கசப்பைத்தான் தரும். தித்திப்பு, கசக்கிறதா, இது என்ன விந்தையென்று கேட்கிறீர்கள். அவர்கள் ஒருமாதிரி—இனிப்பு, கசக்கும். வெண்மை, கருப்பாகத் தெரியும், வெண்மணல், சர்க்கரையாகக் கூடத் தோன்றும். பாலை, நஞ்சென்பர். வீதி நாயை, வேங்கை யென்று பேசுவர். நிலவோடு, சண்டைக்கு செல்வர். ஆமாம், அவர்களுக்கு உண்மை, பொய்யாகத் தெரியும். பொய்யைச் சுமந்துகொண்டு போருக்குப் போவர். ஏற்கனவே, அவர்கள் அப்படி — அதுவும், இப்போது நிறத்தையே மாற்றிக் காட்டும் கலர்க் கண்ணாடி மாட்டியிருக்கிற தலைவர் வேறு கிடைத்திருக்கிறார். அவரோ, தட்டிக்கொடுத்து, அவிழ்த்து விட்டிருக்கிறார், இப்போது.

அந்தத் திருக்கூட்டத்தார், எத்துறையிலும் நாம் இடம் பெறுவது கண்டு கண்டு நொந்துபோன மனத்தினர்.

எங்கேயும் இடமில்லை யென்று ஏங்கித் தவிப்போர் சேர்ந்து, திக்கற்றோர் திருச்சபை மூலம், நாட்டில் நடமாடி வருகிறார்கள்.

அவர்கள், நம்மைப்பற்றிக் குறை பேசாத நாளில்லை.

காக்கை கருப்பென்று நாம் கூறினால், அவர்கள் வெள்ளை யென்பர். கடல் நீர் உப்பு என்று சொன்னால், சர்க்கரைபோல் இனிக்குமே என்பர், அவர்கள்.

அவர்கள், நாம் திராவிட நாடு, திராவிடருக்கே என்று கூறிவருவதைப் பழித்துப் பேசி வருகின்றனர். திராவிட நாடு, திராவிட நாடு என்று தமிழகத்தில் இருந்துகொண்டு பேசிவிட்டால்போதுமா, ஆந்திரத்தாரின் ஆதரவு உண்டா, கன்னடத்தார் சம்மதம்பெற்றனரா, கேரளத்தார் ஒத்துழைப்பு கிடைத்ததா என்று உரக்கக் கேட்டுவிட்டு, ஒரு சோடாவுடன், தங்கள் மனத்திற்குத் திருப்தி தேடிக்கொண்டிருக்கின்றனர்.

அப்படி அவர்கள் பேசுவதைக் கேட்டு, நாம் வருந்தவுமில்லை—அவர்கள் மீது எரிந்து விழவுமில்லை. நொந்துபோனவர்கள், இதனால் நிம்மதி தேடுகிறார்கள் என்றால், நாம் ஏன் குறுக்கில் நிற்பானேன் என்று சிரித்தபடியிருந்தோம்.

எதிர் வீட்டில் திருமணம் என்றவுடன், அவனுக்கு வயிற்றெரிச்சல்—தன் வீட்டுப் பெண்ணுக்கு, வரன் கிடைக்காததால் வாடிக் கிடக்கிற அவன், அந்தத் திருமணத்தையே தவறு என்று சொல்லி வந்தான். பெண்ணுக்கு நாகதோஷம், பிள்ளைக்கு ஜாதகக் கோளாறு என்று பேசித் திரிந்தான். திருமணம் நடந்தே தீரும் என்று தெரிந்தவுடன், பந்தலைப் பார், எவ்வளவு சிறியது, மேளம் வைத்திருக்கிறானும், மேளம் இரட்டை மேளம் வைக்கக் கூடாதா என்று பேசினால் வீட்டுக்குடையவன் என்ன செய்வான்—பந்தல்காரனைத் தேடி பந்தணைநல்லூர் போய் நாதஸ்வர நாதமுனியை அழைத்துவர ஆள் அனுப்புவானா! புத்திசாலியாக இருந்தால், தந்திரக்காரன் வீண் செலவு அதிகம் செய்ய வைத்து, பிறகு வீதியில் நிற்க வைக்கப்பார்க்கிறான் என்று புரிந்துகொள்வான்.

அப்படித்தான், திராவிட நாடு கேட்பதே தவறு என்று பேசி வந்த அவர்கள், ஆந்திரம் சென்றாயா, கன்னடத்தாரைக்கலந்தாயா; கேரளத்தாரைக் கேட்டாயா, என்று கேட்கிறார்கள், திருமணமே தீதானது என்று பேசியவன், பந்தல் அகலம் போதாதென்று பேசுவதைப் போல.

அவர்களுக்காக, இந்தச் சேதியைச் சொல்லவில்லை. சொன்னாலும், இதுமட்டும் போதுமா, ஜகதாலப் பிரதாபன் கதையிலே வருவதைப் போலவே, நாகலோகம் சென்று நாகரத்தினம் கொண்டுவா, இந்திரலோகம் சென்று தேவபாரிஜாதம் பறித்து வா என்று கூடப் பேசுவார்கள்;

ஆனால், நம்மிலே சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம், சில சமயங்களில். திராவிட நாட்டுப் பிரச்சினையைப் பற்றி ஆந்திரத்தில் ஏன் பேசக் கூடாது, தெலுங்கிலே தோழர் சி. பி. சிற்றரசு பேசுவாராமே, கன்னடத்தில் போய்ச் சொன்னால் என்ன, சம்பத் அழகாகப் பேசுவாராமே, கன்னடத்தில், சோரளம் விரும்பிக் கேட்கிற முறையில், மலையாளத்தில் மனோகரன் பேசுவாராமே என்று நமக்குள் பேசிக் கொள்வோமல்லவா? அப்பொழுதெல்லாம், நம் பொதுச் செயலாளர், காலங் கனியும், அதுவரை காத்திருப்போம் என்று கூறிடும் வார்த்தைகள் நம் கவனத்திற்கு வந்து, நாம் கடமையைச் செய்து வருகிறோம்.

அந்தக் காலம் வருகிறது — அந்தக் காலக் கனிவை நேரிலே கண்டேன். அந்தச் சேதிதான் தித்திக்கும் சேதியென்று நான் குறிப்பிட்டேன்.

2

கேரளத்தார் கேட்கிறார்கள், இன்று, மிக உரத்த குரலில்—வடநாட்டாதிக்கத்தைப் பார்த்து!

---

## இலங்கை மாநாடு ஒத்திவைப்பு

18—5—52ல் நடைபெறுவதாக இருந்த இலங்கை திராவிட முன்னேற்றக் கழக மாநாடு ஒத்திவைக்கப்பட்டுவிட்டது.

மாநாட்டில் கலந்து கொள்ள விருந்த சி. பி. சிற்றரசு, என். வி. நடராசன், மு. கருணாநிதி, ஆகியோருக்கு, இலங்கை செல்ல அனுமதி தரவில்லை, ஆட்சிபீடம்.

எனவே, மாநாடு, ஒத்திவைக்கப்பட நேர்ந்தது என வரவேற்புக்குழுவினர் அறிவிக்கிறார்கள்.

சுதந்திர கேரளம் வந்தே தீரும் என்று முழக்குகிறார்கள்!

கேரளத்தில் என்ன இல்லை, பின் ஏன் கேரளர் வாடிவதையவேண்டும் என்று கேட்கிறார்கள்.

மலையும், காடும் மலிந்த நாடு. வளமான உப்பங்கழிகள், அவைகள் ஓடி வளமாக்கும் வயல் வெளிகள் எங்கும். எப்பக்கம் திரும்பினாலும்.

தென்னை மரங்களின் காட்சி, கமுகுத் தோட்டத்தின் தோற்றம் நம்மைப் பரவசப்படுத்துகிறது, பார்க்கும்பொழுது.

வாழை, பலா, வாயில் நீர் சொட்டச் செய்கிறது, ரயிலில் செல்லும் பொழுது, ஓரங்களில் நின்றபடி,

இதுமட்டுமா, ரப்பர், காபி, தேயிலை, மிளகு, காட்டிலே விளையும் பலவித பொருள்கள் எத்தனை எத்தனையோ.

அணுசக்தி ஆராய்ச்சிக்கு அவசியமான உலோகப் பொருள் கிடைக்கிறது.

கொப்பரைத் தேங்காய் ஏற்றுமதியே, கோடி, கோடி டாலர்களைக் குவிக்கும். மிளகு ஒன்றைக் கொண்டே மேன்மையடையலாமே!

வளமான சோளம் — ஆனாலும் வாடுகிறார்கள் மக்கள்! ஏன்?

இயற்கை வளம் கிடக்கட்டும். தொழில்துறைகள் தோற்றுவிக்க முடியாத இடமா?

தொழில்கள் உண்டு. தொழிலகங்களும் இருக்கின்றன. ஆனாலும் துவண்டுபோகிறார்கள், மலையாள மண்ணிலே பிறந்தும், வாழவழியில்லாமல்!

செச்வாலைகள், ஓடு செய்யும் தொழிற்சாலைகள், கயிறு திரிக்கும் தொழிலகங்கள், ரப்பர் தொழிற்சாலை, பேப்பர் தொழிற்சாலைகள் உண்டு. ஆனால், அவைகளால் அம்மண்ணுக்குடையவருக்கு வாழ்வில்லை.

ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் கம்பெனிகள் உண்டு. பல பெயர்களில், பல பொருள்களுக்கு அங்கு ஆதிக்கம் செய்வோர் மலையாளிகளல்ல!

பாங்குகள், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் — இவைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கேயும் அந்நியர் பிடிதான்.

இந்த நிலையை எண்ணிப் பார்த்த பிறகுதான், கேரளம் வந்தே தீரும் என்று முழங்குகிறார்கள்.

வளமிருந்தும், அந்த வளத்தின் மூலம், தங்கள் நாட்டு மக்களுக்கு நன்மை செய்துகொள்ள முடியவில்லை. இதற்குக் காரணம், வடக்கிலே அதிகாரங்கள் குவிந்து கிடப்பதுதான். ஏக இந்தியா என்ற பெயரால் நம்மை ஏய்த்து, அவர்கள் வாழ்கிறார்கள். வெள்ளைக்காரர்கள் காலத்தில் லிவர்ப்பூர், மான்செஸ்டர் என்று காட்டி, நம்மைச் சுரண்டியதாகப் பேசிய அதே தலைவர்கள், இன்று பம்பாய், அகமதாபாத்தை ஆக்கிக்கொண்டு சுரண்டுகிறார்கள்.

மார்வாரிகள், குஜராத்திகள் இங்கு படையெடுத்து எங்கும் அவர்களே நிறைந்துவிட்டார்கள்.

மலையாளிகளோ, சொந்த நாட்டில் சுகம் பெற வழியின்றி, சிலோன் செல்கிறார்கள்; மலேயா செல்கிறார்கள்.

சென்ற இடங்களில் மட்டும் சீரும், சிறப்புமாகவா வாழ்கிறார்கள். காபிக் கடைகளில், வேலை!

வந்தவன் வாழ்கிறான் — சொந்த நாட்டுக்காரன் சீரழிகிறான்.

வடக்கிலே, மலையாளிகளைக் கண்டாலே கடுகடுக்கிறார்கள்.

ஆகவே, மார்வாரிகள், குஜராத்திகள் ஆதிக்கம் ஒழிக என்ற குரல், மார்வாரி, குஜராத்திகள் ஆதிக்கம் தான் காங்கிரஸ், அந்த காங்கிரஸ் கட்சியின் கையிலேதான் இந்தியா இருக்கிறது என்பதால், வடநாட்டாதிக்கம் ஒழிக என்று ஒலிக்கிறது.

வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்துப் போர் முரசு கொட்டத் தொடங்கிவிட்டார்கள்.

## 3

கேரள சுதந்திரக் குடியாட்சியமைப்பதையே இலட்சியமாகக் கொண்டு, இன்று இயங்கிவருகிறது கேரள சோஷலிஸ்ட் கட்சி.

அக்கட்சியார், தங்கள் இலட்சியத்தைப்பற்றி மற்ற முற்போக்குக் கட்சிக்காரர்கள் என்ன கருதுகிறார்கள் என்று அறிய 18-5-52-ல் திருவனந்தபுரத்தில் ஒரு மாநாடு கூட்டினார்கள்.

அதற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு பிரதிநிதியனுப்பி வைக்கும்படி கேட்டிருந்தார்கள்.

கழகத்தின் பிரதிநிதியாக நான் சென்றிருந்தேன்.

கேரளத்தில் நாம் பணியாற்றவில்லை யென்று சொல்கிறார்களே, அவர்களுக்கு நம் கிளைகள், திருவனந்தபுரம் பலராமபுரம், பாலக்காடு, எர்ணாகுளம், மூணார், மன்னார், ஏர்வாடி போன்ற இடங்களில் இருக்கின்றன என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொள்கிறேன்.

17-5-52 இரவு 8 மணிக்கு திருவனந்தபுரம் சென்றேன். பத்து மணிக்கெல்லாம், மாநாட்டின் அமைப்பாளர் பாஸ்கரன் நாயர் என்னைக் கண்டு பேசினார்.

நம் திராவிடநாட்டுப் பிரச்சினை பற்றிய சந்தேகங்கள் பல கேட்டார். விளக்கினேன். கேரள சுதந்திர உணர்ச்சிபற்றிய வரலாறையே சுருங்கிய முறையில் எடுத்துக் கூறினார். பிறகு இரவு பதினொன்றரைக் கெல்லாம் விடைபெற்றுச் சென்றார்கள்.

திருவனந்தபுரம் நான் சென்று இறங்கிய சில நிமிடங்களிலே, கழகத் தோழர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்.

மறுநாள் தோழர்களுடன் மாநாடு நடந்த அழகப்பா மண்டபத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு, கருத்துரை வழங்க பல கட்சித் தோழர்கள் வந்திருந்தார்கள்.

வாதங்கள் மலையாளம், தமிழ், இடையிடையே ஆங்கிலம் கலந்து நடந்தன.

இதில் கம்யூனிஸ்ட்கட்சி, புரட்சிகர சோஷலிஸ்ட்கட்சி, திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், தனிப்பட்டோர் என்று பலவித சார்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

காலை பதினொன்றரைக்குத் தொடங்கியது, மாலை ஐந்துமணி வரை (அரை மணி நேர இடைவேளை) நடந்தது

திராவிட முன்னேற்றக் கழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் ஆகியவை சுதந்திரக் குடியாட்சிகளாகி, இவை நான்கும் கூட்டாட்சியாக அமையும் திராவிட நாட்டை யமைப்பதையே குறிக்கோளாகக் கொண்டது. இப்பொழுது கேரளம் சுதந்திர சமதர்மக் குடியரசாகிறது என்றால், தி. மு. க. வின் சார்பாக வேலை பூர்த்தியாகிறது என்று அர்த்தம், ஆகவே, கேரளம், வடவர் பிடியிலிருந்து விலகி சுதந்திரமாக வாழ்வதை தி. மு. க. வரவேற்கிறது. அதற்காக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்று குறிப்பிட்டு விட்டு ஆனால் அப்படி அமையும் கேரளம், தி. மு. கழகம் சொல்லும் திராவிட நாட்டில் இடம்பெறுமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டேன். இது சம்மந்தமாக கேரள சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள், தி. மு. க. பொதுச் செயலாளரைக் கண்டு பேசுவது நல்லது என்ற கருத்து வரவேற்கப்பட்டது! சுதந்திர கேரளம் அமைப்பது பற்றிய தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (தீர்மானச்சுருக்கம் வேறொரு பக்கத்தில்)

அன்று மாலை பழவக்காடு மைதானத்தில் நடந்த அவர்கள் கூட்டத்தில், நம் கருத்தைத் தெரிவித்தேன்

## 4

சேரள சோஷலிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரைச் சந்தித்துப் பேசினேன். பேசியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள், ஜான்மஞ்சூரியன், எம். பி. மேனன், சதானந்த சாஸ்திரி எம். எல் ஏ., பாஸ்கரன் நாயர், விவேதாநந்தன், தங்கப்ப நாயர், சுகுமார்.

இவர்கள் வடநாட்டு எதிர்ப்புப் போராட்டங்களில் நம்முடன் தோளோடு தோளிணைய இருந்து பணியாற்ற ஒப்புக் கொள்கிறார்கள். அதன் அறிகுறியாக, இந்தி எதிர்ப்புப்போர் தொடங்கி நடத்த மாநாட்டிலேயே தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

அடுத்த திங்களில், தி. மு. க. பொதுச் செயலாளரை வந்து சந்திப்பதாக அறிவித்து, அதற்கான முயற்சிகளை என்னை எடுத்துக்கொள்ளும் படியும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

காலம் கனிந்து வருகிறது என்பது இப்பொழுது புரியும் என்று கருதுகிறேன்.

திருவனந்தபுரத்தில் நம் கழகத் தோழர்கள் பலர் உளர், மலையாளத்தில் எழுதவும், பேசவும் தெரிந்தவர்கள்! அவர்கள் கேரளத்திலும் நம் குரல் ஒலிக்கத் தொடங்கிவிட்டது என்பதை தமிழகத்தில் சொல்லுங்கள் என்று ஆர்வத்தோடு வழியனுப்பியதை என்னால் மறக்க முடியாது

தோழர் ஏ. கிருஷ்ணன், வயதானாலும், இலட்சிய வெறியோடு உலவும் நல்லசாமி ஆகியோரையும், மற்றும் பல தோழர்களையும், இதனை எழுதிக்கொண்டிருக்கும் பொழுதே என்னால் நினைக்காமல் இருக்கமுடியவில்லை. அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன். கேரளத் தோழர்கள், நம் இலட்சியத்தைப் புரிந்து கொள்ளும் முறையில் பணியாற்றுங்கள் என்று தமிழகம் கேட்டுக்கொள்கிறது அவர்களை!

★

---

### திருத்தம்

20—4—52-ல் திராவிடநாடு இதழில், வெளியிடப்பட்டுள்ள தி. மு. கழக மாநில மாநாட்டு நன்கொடை வரவுக்கணக்கில் சந்திரன் ரூ 150 என்பதை, இலங்கை, தோழர் குலசேகரன் மூலம் வரவு ரூ 175 என்று திருத்திப்படியுங்கள்.

---

வாசித்தீர்களா!

**திருக்குறள்-குழந்தை உரை**

திருத்தி, உருவாக்கி உறுதியாகப் பைண்ட் செய்து அழகிய மூவர்ண ஆர்ட் முகப்புடன் கூடிய இரண்டாம் பதிப்பு விற்பனையாகிறது.

மலிவுப்பதிப்பு ரூ. 4—0—0

பரிசு பதிப்பு ரூ. 5—0—0

முன்பணம் அனுப்புகிறவர்களுக்குத் தபால் செலவில்லை. விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவுண்டு.

தேவைக்கு:—

சிவலிங்கம் நூற்பதிப்புக் கழகம், ஈரோடு.

---

## செங்கற்பட்டு மாவட்ட பிரசாரப் பயிற்சி வகுப்பு

### மே. 27, 28, 29, 30-ல்

வாலாஜாபாத்அருகிலுள்ள கட்டவாக்கம் கிராமத்தில் நடைபெறும்.

செங்கற்பட்டு மாவட்ட பிரசாரப் பயிற்சி வகுப்பு 1952-மே திங்கள் 27, 28, 29, 30 ஆகியநாட்களில் வாலாஜாபாத் அருகிலுள்ள கட்டவாக்கம் கிராமத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வாலாஜாபாத் தோழர் W. K. தேவராசன் அவர்கள், இதற்கான பொறுப்புகளை ஏற்றுக் கொண்டுள்ளார்.

பயிற்சிவகுப்பில், மாணவர்களும் கழகப்பணியாளர்களும் பங்குபெறலாம் ஆனால், பயிற்சியாளர்சேர்ப்பில் மாணவர்களுக்கே முதன்மையும், முக்கியத்துவமும் அளிக்கப்படும்.

பயிற்சி வகுப்பில் செங்கற்பட்டு மாவட்டத்தினர் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

பயிற்சி வகுப்பில் சேருவோர் முன்பே மேடையேறிப் பேசும் பழக்கமுடையவராகவும், பயிற்சி மட்டுமே பெறவேண்டியவராகவும் இருக்கவேண்டும்.

வகுப்பில்சேரவிரும்புவோர்அவர் பேச்சாளர் என்பதற்கு அந்தந்த ஊர்க்கிளைக் கழகச் செயலாளரின் கையொப்பத்துடன், தங்கள் விண்ணப்பத் தாள்களை, சி. வி. எம். அண்ணாமலை, மாவட்ட செயலாளர், மாவட்ட தி. மு. க. காஞ்சிபுரம் முகவரிக்கு 25—5—52-க்குள் அனுப்பிவைக்க வேண்டுகிறோம். பயிற்சி வகுப்புக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்படும் அழைப்புப் பெற்றவர்கள் வழிப் பயணச் செலவை அவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வரும்பொழுது படுக்கை வசதியுடன் வரவேண்டும். நான்கு நாட்களுக்கும் உணவு, தங்க வசதி மட்டுமே செய்து தரப்படும்.

சி. வி. எம். அண்ணாமலை
செயலாளர்
செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க.

திராவிடநாடு

காஞ்சி] 25—5—52 [ஞாயிறு

## ஆசிரியர் குறை தீர!

☆

பள்ளி ஆசிரியர்கள், மனித வாழ்வின், படிக்கட்டுகள்! ஆனால், அவர்களோ, விழியில் நீரோடு, வேதனைப்படும் நிலையிலிருக்கின்றனர். ‘மனிதர்களை’ தயார் செய்யும், அவர்கள் வாழ்க்கை, வறண்ட பாலையாகவே இருந்துவருகிறது— குடும்பத்தை நடத்திச் செல்ல போதிய வருவாயின்றி, அவர்கள் படும் அல்லல் கொஞ்சநஞ்சமல்ல.

இந்நிலையை கடந்த வாரம் கோவை மாநகரில் கூடிய சென்னை மாநில கல்வி மாநாடு, நன்கு சுட்டிக்காட்டியிருப்பதோடு, ‘பள்ளி ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்த சர்க்கார் தயங்கக்கூடாது’ என்றும் வலியுறுத்தியிருக்கிறது.

எத்தனையோ முறைகள் இது போலத் தத்தம் குறைகளை, அவர்கள் தெரிவித்தும், இன்றைய அரசாங்கம் அதுகுறித்து, போதிய கவனம் செலுத்தவில்லை.

பலப்பல உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் — நூற்றுக்கணக்கிலும் ஆயிரக்கணக்கிலும் சம்பளம் பெற்றுக் கொண்டு. அவர்களுக்கு சமுதாயத்திலும் அரசாங்கத்திலும் இருக்கும் செல்வாக்கும் அதிகாரமும் ஏராளம்!

ஆனால், அத்தகைய ‘பெரியவர்களை’ ஆக்கித்தரும் ஆசிரியர்களோ, எப்போதும்போல் ‘ஈசனே, சிவகாமி நேசனே!’ என்று பாடியவண்ணம், பிரம்பையும், கரும்பலகையையுமே நம்பிய வண்ணம் காலங் கழிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்—பள்ளியின் ‘காம்பவுண்டு’க்கு அப்பால் அவர்களுக்கு எனவித அதிகாரமோ செல்வாக்கோ இல்லை!

இவ்வித நிலை; அவர்களுடையது. போதிய சம்பளம் கிடையாது—பல இடங்களில் ‘பிரைவேட்’ சொல்லிக்கொடுத்து அதன் மூலம் ஐந்து பத்தைக்கொண்டு, வீட்டுக்கு ஏற்படும் தொல்லையை அடைக்கலாமென்றாலும், அனுமதி கிடையாது அவர்களுக்கு.

இவ்வித அல்லல்களுடன்நிற்கும் ஆசிரியப்பெருந்தகையாளர்களுக்கு போதிய சம்பளம் தரும்படியான விதிமுறைகளை, ஆளவந்தார் நிர்ணயிக்கவேண்டியது மிக மிக அவசியம். ஒரேமாதிரியான சம்பளமுறையும் அவர்களுக்கு இருக்கவேண்டும். தனிப்பட்ட நிர்வாகிகளைக் கொண்ட இடத்தில் ஒன்றுமாவட்டப்பள்ளியில் வேறு ஒருமாதிரி என்கிற நிலை இல்லாது, எல்லோருக்கும் அவரவர் தரத்துக்கு தக்கவாறு, சம்பளமுறையமைப்பு யமைக்கப்படவேண்டும்.

இந்த அவசியமான காரியத்தை, சென்னை அரசியலார் செய்ய, ‘வழக்கம்போல்’ காலங்கடத்தமாட்டார்கள் என நம்புகிறோம்.

❀

## அவசர வேண்டுகோள்

கிளைக் கழக வீரர்களே!

மாவட்டக் கழகத்தினரே!

கழகத் தோழர்களே!

உறுப்பினர் சேர்க்கும் பணியின் கடைசிநாள் ஜுன் 15, என்று பொதுக்குழு முடிவு செய்ததை அறிவீர்கள். தேதி நெருங்கிக்கொண்டிருக்கிறது. வேலைகள் நிறைய இருக்கின்றன். உடனடியாக உறுப்பினர் சேர்க்கும் வேலை, முடிவாகவேண்டும். இலட்சியக் கோட்டையின் ‘பலம்’ உறுப்பினர் எண்ணிக்கைதான்! வேக வேகமாகச் சேருங்கள். விரைவில் முடியுங்கள். பல இடங்களில், கழகக் கிளைகள், ஆர்வத்தோடு ஒவ்வொரு தெருவாகப் போய்ச் சேர்ப்பதாக அறிகிறோம்; நல்லமுயற்சி, உடனடியாக இந்தப் பணி முடிவாகவேண்டும். இது வேலையில், எல்லோரும், முயற்சி எடுக்குமாறு கோருகிறோம். அப்போதைக்கப்போது, எம்முடன், கடிதத் தொடர்பு பெறக் கேட்டுக்கொள்கிறோம்.

உடனடி வேலை. உடனே முடிக்க வேண்டிய வேலை.

ஈ. வெ. கி. சம்பத்,
பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்,
“அறிவகம்”
24, சூரியநாராயணசெட்டி தெரு
ராயபுரம், சென்னை.

☆

## வெளி வந்துவிட்டன!

சிந்தனைக்கு விருந்தளிக்கும் மிகச் சிறந்த நூல்கள்.

☆

இரண்டாம் பதிப்பாக, மிக அழகாகவும் கண்கவரும் முறையிலும் வெளிவந்துள்ளன.

☆

C. N அண்ணாதுரை M. A. தீட்டி, நாட்டுக்குத் தரும் நல்லேடுகள்

☆

| | |
|---|---|
| ஜபமாலை | 0—8—0 |
| சாது | 0—8—0 |

☆

புது நூல்

| | |
|---|---|
| மக்கள் தீர்ப்பு | 0—8—0 |

☆

விற்பனைக் கழிவு 25o/o-தபால் செலவு தனி. நூல்கள் பெற விரும்புவோர், கழிவை நீக்கி, முன் பணமாக அனுப்பினால்மட்டுமே, நூல்கள் அனுப்பிவைக்கப்படும். தனிப்பட்ட புத்தகங்கள் வேண்டுவோர், புத்தக விலையோடு, அஞ்சல் செலவிற்கும் சேர்த்து தபால் தலைகள் அனுப்புக.

விபரங்களுக்கு:-

பரிமளம் பதிப்பகம்,
17, B. வரதுவாசல் தெரு,
காஞ்சிபுரம்.



## ☆ கேரளம் கேட்கிறது ☆

திருவனந்தபுரத்தில், 18—5—52ல் நடந்த கேரள சோஷலிஸ்ட் கட்சி மாநாட்டுத் தீர்மானத்தைக் கீழே தந்துள்ளோம். வடவராதிக்கத்தின் கொடுமையை நாம்மட்டுமே எடுத்துக்கூறுவதாகவும், வடநாட்டுப் பிடியிலிருந்து நாம்மட்டுமே பிரிந்துவிட வேண்டும் என்று பேசுவதாகவும் சிலர் பிதற்றித் திரிகிறார்களே, அவர்களுக்கு இதனை அன்புப் படையலாக்குகிறோம். தமிழகம்மட்டுமல்ல, கேரளமும் போர்முரசு கொட்டுகிறது. அந்த முரசொலிதான் கீழ்வரும் தீர்மானமாகும். மலையாளத்தில் எழுதப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தமிழ்க் கருத்துரை தான் இது.

பிரிவினை திட்டத்திற்குட்பட்டு சுதந்திர தேசிய அரசு நிறுவ பலையாளிகளின் ஒத்துழைப்பு இன்று இருக்கிறது. சுயநிர்ணய உரிமையுள்ள கேரளத்தை உருவாக்குவதற்காக இடதுசாரி ஐக்கிய முன்னணி தலைமை தாங்குமென்பது தெளிவு. சுயஉரிமை படைத்த கேரளம் சுதந்திர கேரளமேயாகும். கேரளரான நம்மைப் பொறுத்த வரையில் சுதந்திர கேரளம் நிச்சயமாக நிறுவப்படவேண்டும்.

### கேரளத்தின் பரிதாபச் சித்திரம் :

வேலையில்லாமை, உணவு நெருக்கடி இவைகளினால் கேரளத்தின் பொருளாதார நிலை சீர்குலைந்திருக்கிறது. கைத்தொழில்கள் இல்லாததினால் வேலையில்லாமை பெருகுகிறது. உழைக்கும் பாட்டாளிக்கு வேலை செய்ய இடமில்லாததினால் உணவுப்பொருள்கள் பெருகுவதில்லை. இங்குள்ள ஆதாயந்தரும் பொருள்கள் அனைத்தும் வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. உணவுப் பொருள்களின் இறக்குமதி குறைந்ததால் நாடு பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. உபயோகமற்ற கல்விமுறைதான் இங்குள்ளது. நாட்டு மக்களுக்கு நன்மையைக்கொடுக்காத வடநாட்டு காங்கிரசாட்சி நாட்டை நாசப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. தாழ்நிலைக்கு இழுத்துச் செல்லப்படும் பாட்டாளியின் துன்பங்கள் பெருகிக்கொண்டே போகின்றன.

பரிதாபகரமான ஆட்சியால் பாதிக்கிறது, கேரளம்—இயற்கை வளம் நிறைந்த கேரளத்தின் இன்பமயமான வாழ்விற்கு ஏங்கி நிற்கும் மலையாள மக்கள் வடவரின் அநியாயச் சட்டங்களினால் அவதிபடுகிறார்கள். இங்குள்ள மிளகு, தேயிலை, ஏலம், ரப்பர் முதலிய பொருள்களுக்கு ஏற்றவிலை தரப்படவில்லை. நம்மை ஆளும் வடநாட்டு காங்கிரஸ் முதலாளிவர்க்கம் இந்த செய்கைக்கு ஒத்துழைக்கிறது. வடநாட்டு சர்க்கார் நம்மிடமிருந்து வரியென்ற பெயரால் பணத்தை வாங்கிக் குவிக்கிறது.

### தொழில் வளர்ச்சி தடைப்படுகிறது :

கேரளம் தொழில் துறையில் அவ்வளவாக முன்னேறவில்லை. இங்கு தொழில் உணர்ச்சிக்கான முயற்சிகள் செய்யப்படவில்லை. நேர்மாறாக தொழில் வளர்ச்சியை தடை செய்வதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றன. மலபார், திருவிதாங்கூரின் மலைநாடுகளில் விளையும் ரப்பர், தேயிலை போன்ற பொருள்கள் அத்தனையும் அந்நிய நாட்டு முதலாளிகளுக்குச் சொந்தமாயிருக்கிறது. இங்குள்ள மக்களின் சுதந்திர உணர்ச்சியை அழித்து, தங்களின் ஆதிக்கத்தை ஸ்தாபித்து வருகிறார்கள், அவர்கள். அந்நிய நாட்டு முதலாளிகளின் பாதம் தாங்கி கிடக்கும் நம் நாட்டு முதலாளிகள் இந்நாட்டின் அரசியல் அதிகாரத்தை வடநாடு முதலாளித்துவத்திற்கு காணிக்கையாக்கியிருக்கிறார்கள்.

### தேசிய உணர்ச்சி வளருகிறது :

எல்லா தேசிய நாடுகளிலும் சுதந்திர உணர்ச்சி பொங்கிடுவதுபோல கேரளத்திலும் பொங்கிவழிகிறது. சமீபத்தில் நிகழ்ந்து முடிந்த தேர்தல் இந்த உண்மையை விளக்குகிறது. தென்னிந்தியாவில் — குறிப்பாக தமிழகத்தில் வடஇந்திய ஆதிக்கத்திற்கு எதிராக எழுப்பப்படும்சுதந்திர கீதத்தை நல்லவழியில் பயன்படுத்தினால் தேசிய அரசுகளின் முன்னேற்றத்திற்கு அது மிகவும் உதவும்.

### நாடுகளின் சுயநிர்ணய உரிமை :

தேசிய சுயநிர்ணய உரிமையைத் தடை செய்வது வல்லரசு வாதமாகும். வல்லரசுகளின் பகையினால் தான் சுயநிர்ணய உரிமைக் குரல் எழும்பமுடியும். தேசிய பிரச்சினைக்கு பரிகாரம் கண்டால்தான் இந்தியப்புரட்சி வெற்றிபெறும். ஒரு நாட்டின் சுதந்திர உணர்ச்சியை அழித்து, அதன்மேல் மற்றொரு நாடு ஆதிக்கம் புரிவதுதான் தேசியபிரச்சினை. தேசியநாடுகளின் உரிமை வாதங்களை ஏற்றுக்கொள்வதுதான் இதற்குப் பரிகாரம். சுயநிர்ணய உரிமைப் பேச்சை நாடுகளின் பிரிவினையினால் செயலாக்க வேண்டும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வருகிறது. இந்திய முதலாளித்துவம். முளையிலேயே அதன் வளர்ச்சி தடை செய்யப்பட்டது. 1947 ஆகஸ்ட் 15-ந்தேதி முதல் முதலாளித்துவம் மக்களைப்படுகுழியில் தள்ளியது.

## வரப்பெற்றோம்

நமது கடவுள்கள்

‘திராவிடன்’ ஆசிரியரும் நமது முன்னணி வீரருமான தோழர் என். வி. நடராசன் அவர்கள் தீட்டியுள்ள இந்நூலில், சமுதாய வீழ்ச்சியும் அதைத் தடுக்கும் மூடநம்பிக்கைகளையும் விளக்கிக் காட்டியுள்ளார். இளைஞருலகு படித்துணர வேண்டிய நூல். விலை 4 அணா.

வஞ்சகவலை

தோழர் என். வி. கலைமணி தீட்டியுள்ள இந்நூலில், வஞ்சகவலை விரித்து வாழ்வோரைப் பற்றிய விளக்கங்கள், பலமேற்கோள்களுடன் தரப்பட்டிருக்கின்றன. சிறந்த முயற்சி. நல்ல கருத்துக்கோவை விலை 12 அணா.

இந்நூல்கள் கிடைக்குமிடம்:—

பாண்டியன் பதிப்பகம்,
18, பெருமாள்முதலி தெரு,
கொண்டித்தோப்பு சென்னை—1

சோஷலிஸப் புரட்சிக்கு :

ஜனநாயகப் புரட்சி வளர்ந்து, சமதர்மப் புரட்சியாக மாறும். அதன் முக்கியமான காரணம் தேசிய தத்துவமேயாகும். தேசிய நாட்டை சமதர்மக் குடியரசாக்குவதே தொழிலாளிகளின் கடமையாகும். தேசியப்புரட்சி உருவாகும்போது மலையாளிகளாகிய நமது கடமை கேரளத்தை ஒரு சுதந்திர சமதர்ம அரசாக மாற்றுவதேயாகும். கேரளத்தின் ஒன்றுபட்ட தொழிலாள இனம் சுதந்திர கேரளத்திற்காக புரட்சி செய்யவேண்டும்.

பூர்ஷ்வாக்களின் இந்திய 'தேசிய தத்துவம்':

விசித்திரமான தேசிய உணர்ச்சியை இந்திய மக்களுக்கு ஊட்டியிருக்கிறது, வடஆதிபத்தியம். குஜராத்தி, மார்வாடிகளின் வஞ்சக வலைக்குள் இந்திய மக்களை வீழ்த்துவதற்கான ஒரு தந்திரமேயாகும் இது. ஒரு மக்கள் சமுதாயத்தின் முன்னேற்றம் வளர்ந்துவரும் அவர்கள் மொழியும், கலாசாரமுமாகும். கேரளத்தில் தேசியமாகிய அஸ்திவாரத்தில் மலையாளியின், ஒரு உன்னத கலாசாரம் வளர்த்த மலையாளம் சுதந்திரமாயிருக்கவேண்டும். அந்நிய மொழியின் ஆதிக்கம் தடைசெய்யப்படவேண்டும். இந்தி மொழி இந்நாட்டு மாணவர்களுக்கு கட்டாய பாடமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆங்கில ஆதிக்கம் ஆங்கிலமொழியைத் திணித்ததைப்போலத்தான் இதுவும்!

அரசியல் சட்டத்தை மாற்றவேண்டும்:

குஜராத்தி, மார்வாடி, முதலாளித்துவ திட்டம்தான் இந்திய அரசியல் திட்டம். அந்தத் திட்டம் சிறிய நாடுகளின் கோரிக்கைகளைகவனிப்பதில்லை. அதிகாரங்களை அமிழ்த்துவிடும் சட்டத்தின் கொடுமை தீர்க்கப்படவேண்டும். ஆதலால் கேரள மக்களாகிய நாம் இந்த ஆட்சியின் மேலுள்ள அதிருப்தியை வெளிப்படுத்தவேண்டும். நமக்காக நாமே ஓர் அரசியல் சட்டத்தை வகுக்க வேண்டும்.

லோக சாம்ராஜ்யம் அழிகிறது

வல்லரசு விநோதம் நமது குராலுக்கு உதவி செய்யும்போது, உலகெங்கும் வல்லரசு தத்துவத்திற்கு கிடைத்துக் கொண்டிருக்கும் கண்டனங்கள் நமது பார்வையில் படுகிறது. வியட்நாமிலும், இந்தோசீனாவிலும், இச்சாம்ராஜ்ய சக்தி தகர்ந்து விட்டது. அதே போல்தான் ஈரானிலும், ஈஜிப்டிலும் இந்தோனேஷியாவில் சாம்ராஜ்ய வெறுப்பு மனப்பான்மை இந்தியாவைப்போல புகைவெடித்து வருகிறது. மலாயா போன்ற நாடுகளில் சாம்ராஜ்ய தத்துவத்திற்கு நிலையில்லாமலாகிவிட்டது. கோல்ட் கோஸ்டிலிருக்கும் டுனிஷ்யாவும், மேற்கூறியவைகளில் ஒன்றாகும்.

(1) கேரளத்தின் ஜமீன்களும், முதலாளிகளும் ஒரே நிலையிலுள்ளவர்களாகும். ஆதலால் இவர்கள் தலைமை முதலாளித்துவத்திற்கு அடிபணிந்து வாழ்கிறார்கள். அவர்கள் சுதந்திர கேரள கோரிக்கைக்காரர்களின் எதிரிகளாகும். கேரளத்தை விமோசனப் புரட்சியை தங்களாலியன்ற வரையிலும் எதிர்க்க இருக்கிறார்கள்.

(2) சுதந்திர கேரளப் புரட்சியைப் பட்டாளிகளே நடத்தவேண்டும். தவறின்றி, புரட்சி உணர்ச்சியோடு பாட்டாளி இனம் அதன் கடமையைச் செய்யும்.

மேலும், சுதந்திர கேரளம் அமைவதற்கும், அதற்கு நல்லாட்சி அமைப்பதற்கும் எட்டு திட்டங்களைத் தெரிவித்து, எல்லா முற்போக்கு சக்திகளையும், கேரள சுதந்திரத்திற்கான போராட்டங்களில் ஒத்துழைக்கும்படி வேண்டுவதோடு தீர்மானம் முடிகிறது.

☆

---

**தலைமை நிலைய**

## வெளியீடுகள்

| | |
|---|---|
| சட்டதிட்டம் | 0—2—0 |
| தீர்மானங்கள் | 0—1—0 |

கிளைக்கழகத் தோழர்களே,

மொத்தமாக நூற்களைப் பெற்று, உங்கள் ஊர்களில் தோழர்களுக்குத் தாருங்கள். நம் தீர்மானங்களைத் தெரிவியுங்கள். தெளிவற்றவர்களுக்கு விளக்குங்கள். கழகத்தில் சேர மனங்கொண்டவர்களுக்குச் சட்டதிட்டத்தைக் காட்டுங்கள்.

விவரங்களுக்கு:—

பொறுப்பாளர்,
தி. மு. க. தலைமை நிலையம்,
ராயபுரம், சென்னை 3.

---

### கோவை மாவட்ட பிரச்சாரப் பயிற்சி வகுப்பு

**மே 29, 30, 31, ஜூன் 1–ல் கணியூரில் நடை பெறும்**

கோவை மாவட்ட பிரச்சாரப் பயிற்சி வகுப்பு 1952 மே திங்கள் 29, 30, 31, ஜூன் 1 நாட்களில் கணியூரில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தோழர் K. A. முருகேசன் அவர்கள் அதற்கான ஏற்பாடுகள் செய்ய இசைந்துள்ளார்.

பயிற்சி வகுப்பில் கோவைமாவட்டத்தினர் மட்டுமே கலந்துகொள்ள வேண்டும். பயிற்சி வகுப்பில் சேர்ந்து கொள்ள மாணவர்களுக்கும், கழக ஊழியர்களுக்குமட்டுமே முதன்மையும், முக்கியத்துவமும் அளிக்கப்படும்.

பயிற்சி வகுப்பில் சேருவோர் கழக உறுப்பினராகவும், முன்பே மேடையேறிப் பேசிப்பழக்கப்பட்டவராகவும், பயிற்சி மட்டுமே பெற வேண்டியவராகவும் இருக்க வேண்டும்.

வகுப்பில் சேர விரும்புவோர் அவர் பேச்சாளர் என்பதற்கு அந்த ஊர் கிளைக் கழகச் செயலாளர் கையொப்பத்துடன் விண்ணப்பத்தாளை கீழ்க்கண்ட முகவரிக்கு 23—5—52 வியாழக்கிழமைக்குள் அனுப்பவேண்டும். வழிச் செலவு அவரவர்கள் பொறுப்பு. இடவசதி, சாப்பாடு வசதி செய்து தரப்படும்.

விண்ணப்பத்துடன் போதிய (பதில் எழுத) தபால் தலை வைத்தனுப்பவேண்டும்.

சே. அ. ராசமாணிக்கம்,
செயலாளர்,
கோவை மாவட்ட தி. மு. க.
11/47, தெப்பக்குளம் வீதி,
கோயமுத்தூர்.



## கதரே, கதர்!

"நமஸ்தே—பண்டிட்ஜீ. ஒரு சிக்கலான பிரச்னை."

"எங்கே? எங்கே!"

"நமக்குள்தான்"

"மாகாணக் கமிட்டியிலா—மத்யக் கமிட்டியிலா?"

"இல்லை பண்டிட்ஜி! பார்லிமெண்ட் மெம்பர்களுக்குள்"

"என்ன? என்ன! போட்டி வந்துவிட்டதோ—"

"அதுதான் ஒருமந்திரியா முடிந்துவிட்டதே..."

"பிறகென்ன பிரச்னை?"

"நாமெல்லாம் காங்கிரஸ்காரர்கள் தானே..."

"சந்தேகம் என்ன இதில்? யார் கேட்டது......கம்யூனிஸ்டா, சுயேச்சையாளர்களா..."

"வேறு ஒருவருமல்ல பண்டிட்ஜி! நமக்கே சந்தேகம் வந்துவிட்டது..."

"நமக்கு நமக்கு என்றால் என்ன ஐயா அர்த்தம்? யாருக்கு சந்தேகம்—உமக்கா — அல்லது வேறு யாருக்காவதா?"

"எனக்கே என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்"

"என்ன சந்தேகம்?"

"நாம் எல்லாம் காங்கிரஸ்காரர்கள் தானே"

"ஆமாம்!"

"இங்கே வந்து பாருங்கள் என்ன நடக்கிறதென்று?"

* * *

கோபாவேசத்தோடும், நெறித்த புருவத்தோடும், வேக வேகமாகச் செல்கிறார் பண்டிட்ஜி! காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சி அறை. பலர் 'முடியாது' என்று கூச்சல் போடுகிறார்கள். வேறு பலர், எங்களால் முடியாது!' என்று கூவுகிறார்கள். சந்தைக் கடை சப்தம்! காதை மூடிக்கொண்டு — கத்துகிறார்.

"பண்டிட்ஜி! பண்டிட்ஜி!!" என்கிற, குரல், எங்கும். 'பண்டிட் நேருக் கூ.......' என்று வேறு சிலர் கூவுகிறார்கள். பழைய ராஜாதி ராஜ மார்த்தாண்ட பூபதி போல், மிடுக்கோடு, நுழைகிறார்! 'என்ன இங்கே தகராறு?' என்று, கொஞ்சம் கோபத்தோடு கேட்கிறார்.

'இப்படியெல்லாம் சண்டை போட்டுக்கொண்டால்...' என்று ஆரம்பித்து, காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்தவேண்டிய அவசியம் எதிர்க் கட்சிகள் வளருவதால் ஏற்படும் ஆபத்து, இதைப்பற்றி, சிறு பிரசங்கமா? கர்ஜனை!—எழுப்புகிறார். ஒருவர், எழுந்து நிற்கிறார்.

"பண்டிட்ஜி! காங்கிரஸ் கட்சியை நாம் காப்பாற்றவேண்டும். கரையானுக்கு இடம் அளிக்கக் கூடாது. காங்கிரஸ் காப்பாற்றப்பட வேண்டுமானால் அதன் கொள்கைகளை நாம் காற்றிலே விட்டுவிடக் கூடாது. இல்லையா?"

"ஆம்! நன்றாகச் சொன்னீர்கள். கொள்கைகள் மிகவும் முக்கியம். அவைகளை விட்டுவிட்டால் கட்சியேது, காங்கிரஸ் ஏது?"

"இங்கே ஒரு தகராறு—"

"காங்கிரஸ் கொள்கைகளைப் பற்றியா?"

"முக்கியமான விஷயம்குறித்து"

"என்ன அது—யார் அவ்விதம் தகராறு செய்வது?"

"கூறுகிறேன்—கேளுங்கள். மகாத்மா காந்தி, நம்மை விட்டுப் பிரியும் வரை, வலியுறுத்தி வந்தாரல்லவா கதரின் முக்கியத்துவம் பற்றி..."

"ஆமாம்! அதுவே நம் தாரக மந்திரம் எனக் கொண்டோம். காங்கிரஸ் காரனாக இருக்க, கதர் அணிவதுதான் முதல் திட்டம், என்றும் கடைப்பிடித்தோம் — கஷ்டப்பட்டோம்—"

"இப்போது?"

"இப்போதுந்தான்! இதிலென்ன சந்தேகம் — என்னைப் பாருங்களேன்......"

ஒரு குரல், மூலையிலிருந்து எழும்புகிறது—"அமெரிக்காவுக்குப் போனபோது?" குரல் வந்த இடத்தைக் கோபத்தோடு பார்க்கிறார். சிறிது நிசப்தம், அறையில். பண்டித நேரு, கதரின் மகத்துவம் குறித்துப் பேசுகிறார். திடீரென ஏதோ ஞாபகம் வந்தவர்போல, பேச்சை நிறுத்திவிட்டு, "இப்போது கதர் பற்றிய பிரச்னை ஏன் வந்தது?" என்று கேட்கிறார்.

"காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களில் பலர், 'கதர் உடுத்த முடியாது' எனக் கூறுகிறார்கள், பண்டிட்ஜி!"

"பலரா?"—நேருவின், குரல் கம்முகிறது.

"ஆமாம்!"

"பார்லிமெண்டு மெம்பர்களா, கூறுகிறார்கள்"

---

## வழக்கு வாபஸ்

"நான் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்!"

"வேண்டாம்! வேண்டாம்! நடவடிக்கைஎடுக்க வோட்டு எடுங்கள்"

வழக்கை வாபஸ் பெற்றார், வழக்குப் போட்டவர். எதிரி, 'ஏன் வாபஸ் வாங்குகிறீர்?' என்று முழக்கமிட்டார், எங்கே நடந்தது இது என்பீர். வேறெங்குமல்ல, ஆச்சாரியார் நியமனம் செய்யப்பட்டு, அமர்ந்திருக்கிறாரே, அந்த மேல்சபையில். கவர்னரை அவமதித்ததாக பிரகாசம்மீது, புகார் செய்து, 'தண்டிக்க' வேண்டுமென்று, கலர்க் கண்ணாடியார், தீர்மானமொன்று கொண்டுவந்து வக்கீல் முறையில்—வாதிட்டார். பலர், 'அநாகரீகம்', 'வெறிச்செயல்' என்றெல்லாம் கண்டித்தனர். 'எதற்கும் நான் தயார். கவர்னரைத் தடுத்துப்பேசியது நான்தான். உண்மை' என்று முழக்கமிட்டார், பிரகாசம். 'கவர்னர் யார்? தேர்ந்தெடுக்கப்பட்டவரா!' என்று கிண்டலோடு, வாதத்தின்பே[illegible] சொன்னார். ஆதித்தன். கடுமையான கண்டன மாரி! கடைசியில் 'வோட் எடுங்கள்' என்றார், பிரகாசம். ஆச்சாரியாரோ 'இதுவே-போதும்' என்று கூறிவிட்டு, வாபஸ் பெற்றார். பெருந்தன்மையாக யிருக்கமுடியாது இது—ஏனெனில், அது அறியாதவர் ஆச்சாரியார்! பின், என்ன காரணம்? 83 வயதுக் கிழவரை இந்த அவமானத்திலாழ்த்திவிட்டு 'மூச்சுப் பேச்சில்லாமல்' வாபஸ் பெற்றதன் ரகசியம் என்ன???

"அவர்களேதான்!"

"என்ன காரணமாம்?"

"கதர், அவ்வளவு நாகரீகமாகவும் வசதியாகவும் இல்லையாம்..."

"அப்படியா சொல்கிறார்கள்?"— மேலும் குரல், கம்முகிறது, இந்தியப் பிரதமருக்கு.

"சொல்வது மட்டுமல்ல; கதர் அணியும் எங்களையும் கேலி செய்கிறார்கள். இதற்கு நீங்கள்தான் ஒரு முடிவு கூற வேண்டும் — நீங்கள்தானே எங்கள் வழிகாட்டி!"

"சரி—சிறிது நேரத்தில் கூறி அனுப்புகிறேன். கூச்சலும் தகராறும் வேண்டாம். நல்லது நமக்கு?"

வந்தவழியே திரும்பி, தனது 'ஆபீஸ் அறை'யில் போய் அமருகிறார். பேனாவை எடுத்து, 'கதரே மிகவும் முக்கியம். கதரை நாம் போற்றவேண்டும். அதுவே நமது முதல் நிர்மாணத்திட்டம். ஆகவே எல்லோரும் கதர் அணிந்தே வர வேண்டும்' என்று எழுதி முடிக்கிறார்.

அப்போது—

நிதிமந்திரி சிந்தாமன் தேஷ்முக் வருகிறார்—'குட்மார்னிங்!' என்று கூறியவண்ணம். அலுங்காத சூட், கலையாத கோட், இவ்விதமாக. அவரை உற்று நோக்குகிறார்—தான் எழுதிய துண்டுக் காகிதத்தின்மேல் ஒரு 'பைலை'ப்போட்டு மூடிவிட்டு, உரையாடுகிறார். அவர்போன சிறிது நேரத்துக்கெல்லாம் பாதுகாப்பு மந்திரி கோபால்சாமி அய்யங்கார் வருகிறார், தனது 'சூட்', 'லாங் கோட்' சகிதம். பண்டித நேருவின் மனதில் ஏதோ ஒரு குழப்பம்! மனது ஒரு நிலையில் இல்லை—எதிரேயுள்ள புகைப் படங்களைப் பார்க்கிறார் — சிரித்துக்கொண்டு செஸ்டர் பௌலஸ் (அமெரிக்கத் தூதுவர்) பக்கம் பேசிய வண்ணம் நின்று கொண்டிருக்கும் சகோதரி விஜய லட்சுமியாரின் புகைப்படம் படுகிறது கண்ணில். உற்று நோக்குகிறார், சகோதரி அணிந்திருக்கும் பளபளக்கும் பட்டாடை தெரிகிறது! மீண்டும் குழப்பம்!! பேனாவை எடுக்கிறார்—எழுதுகிறார். முன்பு எழுதிய கடிதத்துண்டு குப்பைக் கூடையில் விழுகிறது. இதை அனுப்புகிறார், காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களுக்கு. ஆவலோடு, பண்டித நேருவின் தாக்கிதை, எதிர்பார்த்து இருக்கிறார்கள், அவர்கள். வருகிறது, "தாக்கீது."

புதுடில்லி
மே 15

கதர்தான் அணிந்திருக்க வேண்டுமென மற்ற காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்களை, கட்டாயப் படுத்த வேண்டாமென கதருக்காக வாதாடும் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து வலியுறுத்த வேண்டாம்.

ஜவஹர்லால் நேரு

# தியாகமான்யம் திரும்புமா?

'தியாகமான்யம்' என்ற பெயரால், பற்பல காங்கிரஸ்காரர்களுக்கு, காங்கிரஸ் ஆட்சியினர் ஐந்து ஏக்கர், பத்து ஏக்கர், இனாமாக அளித்திருப்பதை நாட்டோர் அறிவர்.

உழுது பயிரிட்ட பல ஏழை விவசாயிகளிடமிருந்து, பலாத்காரமாக, இந்த முறையின் மூலம், பல இடங்களில் 'தரிசு' நிலங்கள் கைக்கொள்ளப்பட்டதும், நிலத்தை இழந்த அந்த ஏழைகள் வயிற்றையும் குடும்பத்தையும் காட்டி அலறியதும் எல்லாரும் அறிந்தவிஷயமே.

இப்போது, இதுபோல 'தியாக மான்யம்' தருவதை நிறுத்தி வைப்பதென சென்னை அரசியலார் முடிவு செய்திருப்பதாக அறிய வருகிறோம்—காலங்கடந்த முடிவு! எனினும், பரவாயில்லை!!

"தியாகமான்யம்" — உழைத்து உருக்குலைந்த ஏழைத் தொண்டர்களைவிட, வசதியும் வாய்ப்பும், சட்டசபையில் குரல் எட்டும் கம்பீரமும் கொண்ட "வசதியுள்ளோர்" கைக்குத்தான் போயிருக்கிறதாம்—பற்பல ஊர்களில்.

பணம்படைத்தோருக்கு, "தியாகமான்யம்" மிகமிகக் கேவலமானது என்றாலும், அவர்கள் 'அதையும்' தியாகம் செய்யும் மனஉறுதி பெறவில்லை போலும்! பணஆசை யாரை விட்டது!!

இன்றைய சர்க்காரின் முடிவைபொட்டி. ஏதோ ஒருசில ஊர்களில் மட்டும் தமக்கு கிடைத்த 'தியாக மான்யத்தை' ரத்தும் செய்து அரசியலார்க்கு அறிவித்திருக்கிறார்கள், ஒரு சிலர்.

இவர்களைப் பாராட்டுகிறோம் — இப்போது ஏற்பட்ட தியாகபாவத்துக்காக!

நஞ்சையும், புஞ்சையும் ஏராளமாகப் பெற்று சுகபோகத்துடன் வாழும் இந்தப் பெரிய மனிதர்களுக்கு, ஏனோ இந்த ஐந்து ஏகரும் பத்து ஏகரும்? வீதி சுற்றி அலைந்து ஓய்ந்த, கொடிதூக்கும் தோழனைக் கொன்றாலும், 'ஐந்து' ஏகர் ஒரு அற்புதக் காட்சியாக இருக்கும்! அவனுக்கு அளிக்கப்பட்டாலும், உடம்பிலிருக்கும் 'பிரிட்டிஷ் முத்திரை'களையும், எதிரே கிடக்கும் நிலத்தையும் காணும் போது — பெருமூச்சுக்குப் பதில், புன்சிரிப்பு ஏற்பட — வழியுமுண்டு, நியாயமுமிருக்கிறது.

பணம் படைத்தோருக்கேன், தியாகமான்யம்? பட்டமும், பதவி பாரமும் வகிப்போருக்கேன் ஐந்து ஏகரும் அதற்குமேலும்!

இதைக் குறிப்பிட்டு, காஞ்சி திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள்—'வேண்டுகோளாக.'

"வசதியுள்ள காங்கிரஸ் முக்யஸ்தர்கள், தாம்பெற்ற தியாகமான்யத்தைத் திருப்பித் தரலாமே!"—என்பதுதான், அந்தத் துண்டுப்பிரசுரத்தின் சாரமாகும்.

மக்களுக்குச் சொந்தமான நிலம் சுகமாக வாழ்பவரிடம் போய்க்குவிவதால் என்னலாபம்? ஆகவே, தியாகத்துக்காக வழங்கப்பட்ட தியாக மான்யத்தை, தியாக சீலமுள்ள பணக்கார காங்கிரஸ் தலைவர்கள், உடனே 'தியாகம்' செய்யப் பின் வாங்கார் என நம்புகிறோம்.

ஒருவேளை, அவர்களுக்குள்ள பல வேலைச்சுமைகளினால், இந்த "சின்ன" விஷயத்தை மறந்திருந்தாலும் இருக்கலாம். அதை, அவர்களுக்கு, காஞ்சித் தோழர்கள் செய்ததுபோல, நினைவூட்டியாறு கேட்டுக்கொள்கிறோம் — திராவிட முன்னேற்றக் கழகத்தவரைமட்டுமல்ல! காங்கிரஸ் சங்கங்களையுங்கூட!! ✲



2-ம் பக்கத் தொடர்ச்சி

யைக் கிழித்தவண்ணம், ரயில் வந்து நின்றது—ஸ்டேஷனில். இரண்டே இரண்டு உருவங்களை ஏற்றிய வண்ணம், பெருமூச்சு விட்டுக்கொண்டு, சில வினாடிக்கெல்லாம் ரயில் புறப்பட்டு விட்டது.

4

"சிறுக்கி மயக்கிட்டா! என் பிள்ளை போயிட்டுது"—என்று அலறித் துடித்தாள் குமரனின் தாய். சீறினார் கோவிந்தப் பிள்ளை, அலமுவின் அம்மாவிடம். "ஐயோ! எனக்கொன்னும் தெரியாதுங்க என் மானத்திலே மண்ணைப் போட்டுட்டாளே" என்று முகத்தில் அறைந்து கொண்டாள், அம்மாளு. ஊராருக்கு 'அசைபோட' ஒரு நியூஸ்!

"படிச்ச பிள்ளையாம் பார்த்தீங்களே!"

"காலம் கெட்டுப் போச்சுங்க"

"வேணும், கோவிந்தப் பிள்ளைக்கு"

"எல்லாம் அந்த அம்மாளுவின் தந்திரம்தான்"

வாய்க்கு வந்தபடி யெல்லாம்— பேசினர். இந்த சம்பவத்தால்தான், குறவர் குடிசையில் எழும்பிய கூச்சலும் ஆரவாரமும், அவர்கள் எவருக்கும் எட்டவில்லை.

சிங்கி —பலி விழாவின்போது, போய்விட்டாள். அஞ்சானுடன் அந்த அஞ்சுகம் பறந்து விட்டது. விழாவெறியில் எவரும் அதைக் கவனிக்கவில்லை. விடிந்ததும் தேடினர்—விபரமறியாமல் துடித்தனர். கோவிந்தப் பிள்ளை, கொதித்துக் கிடந்தார். அவர்தானே கிராமத்து மணியம். அவரிடம் வந்து, முறையிட்டார்கள் அந்த நாடோடிகள். இடிமேல் இடிபோலிருந்தது இது! எரியும் நெருப்பில் எண்ணெய் விடுவது போலிருந்தது, இந்தப் புகார். என்ன செய்வது? விசாரிக்க வேண்டியவரானார். பலப்பலர், பலப்பல சொல்லினர். பாச்சேரியைச் சேர்ந்த ஒருவன், அஞ்சானும் அவளும், அடிக்கடி சந்தித்துப் பேசியதைத்தான் கண்டதாகச் சொன்னான். அஞ்சானுக்கு ஆள் அனுப்பப்பட்டது. அவன் அங்கே இருந்தால் தானே? அவனும் அவளுந்தான் கொண்டுவந்த 'கட்டிச் சோற்று மூட்டையை வைத்துக்கொண்டு பத்து மைலுக்கப்பால் உட்கார்ந்திருந்தனரே!

"அவனில்லை—ஓடிவிட்டான்—" இத்தகவல் கேட்ட பிள்ளை துடித்தார். என்ன அக்கிரமம்? என்று கர்ஜித்தார். "போலீசில் தெரிவிக்கப் போறேன்" என்றார். அஞ்சான் அவருடைய பண்ணையாள்! "நூறு ரூபாய்" சோந்தை பெற்றவன். அவன், தன்னை ஏமாற்றிச் செல்வதை அவரால் எப்படிச் சகிக்க முடியும்? பண்ணையாள் போய்விடுவதா? பணம்? தான் கொடுத்த பணம்? — போலீசில் புகார் செய்யபபட்டது. பிள்ளையின் காலில் விழுந்து கும்பிட்டு விட்டு அந்த 'நாடோடி'க் கும்பல், புரியாத பாஷையில், ஏதேதோ பேசிக்கொண்டு, ஆலமரத்துக்குச் சென்றது. அன்றுமாலையே எங்கோ புறப்பட்டு விட்டது, அந்தக் கூட்டம்.

5

"காட்டு ரோஜா! நீ, என் கண்ணே!"

"ஆமாம்! போதும் விடுங்கள்..."

"கொய்யாப் பழம் கொண்டு வருகிறேன் — நீ மாம்பழம் தருகிறாயா?"

"என்ன—என்ன?"

"உச்......உச்......"

இப்படிப் பேசிக் கிடந்தார்கள் குமரனும் அலமுவும்—தனி அறை—ஓட்டல் மாடி. இரண்டே புறாக்கள்! ஆனால் சிங்கியும், அஞ்சானும் இப்படி யெல்லாம் பேசவில்லை. எப்படித் தெரியும், இப்படி உரையாட? என்றாலும், அவர்கள் கண்களும் சிரிப்பும் இதைவிட மேலான காதல் மொழிகளை உதிர்த்துக் கொண்டிருந்தன. மரநிழல்தான் அவர்களது 'ஓட்டல்'; புதரும் மரத்தோப்பும்தான் அவர்களுக்கு 'ரூம்' அவள் பாடுவாள்—அவன் 'ஏதாவது வேலை?' என்று அலைவான். இப்படி அலைந்து கொண்டிருந்தனர். ஆனால் இவர்களது "ஜோடிப் பொருத்தம்" பலரது கண்களில் சந்தேகத்தை வரவழைக்காமலில்லை. "பறையன்—நரிக் குறத்தி"—இவ்விதம் கேலி பேசவும் தவறவில்லை. இரண்டு மனித உடல்கள்தான்! ஆனால் உடையும் உருவமும். கிழிந்த பாவாடை—மேலே ஒரு கச்சை; கச்சைக்கும் பாவாடைக்குமிடையே தெரியும் வயிறு; பாசி மணி. மறையாத மார்பு; அதை மூடிக் கிடக்கும் சிறு மேல் துணி; காது மணி— அவளை எவரும் புரிந்துகொண்டு விடுவார்களே!

அதனால்தான், இந்த 'ஜோடி'யைக் கண்ட, அந்த போலீஸ்காரன் சந்தேகப்பட்டு, ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றான். இன்ஸ்பெக்டர், அவனை, மேலும் கீழும் பார்த்தார். "இழுத்துக் கொண்டு போய்ப் பூட்டு" என்றார். அவள் கதறினாள். அவனை வெளியே விரட்டினர்—அவனை மட்டும் இழுத்துச் சென்றனர். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை! எப்படித் தெரியும்? "அஞ்சான் என் பண்ணையாள். வீட்டிலேயிருந்த மாடு ஒன்றைத் திருடிக்கொண்டு ஓடிவிட்டான்" என்று கோவிந்தப் பிள்ளை, செய்திருந்த புகார். அவன் கதறினான்; அவள் 'கூ கூ'வெனக் கூச்சலிட்டாள். அவன் கம்பிகளுக்குள்; அவள் புழுதி படிந்த வீதியில்புழுப்போல் துடித்தாள். அவளை நெருப்புக் குண்டத்தில் போட்டு அவிப்பது போலிருந்தது. கதறினாள்!— போலீஸ்காரர் வந்து 'ஓடு கழுதே' என்று விரட்டி யோட்டும்வரை கதறினாள்! ஏழை அஞ்சான், அலறினான், துடித்தான். 'சாமி—அவளை ஒன்னும் செய்யாதீங்க' என்று கூக்குரல் போட்டான். பலன், பலமான அறை, அவனுக்கு! அவள் நாயைப்போல் விரட்டப்பட்டாள். காதல் ஜோடி—ஒரு புறா கூண்டுக்குள்! மற்றொன்று புழுதியில்!!

சப்-இன்ஸ்பெக்டர், இந்தக் காட்சியைப் பற்றி அவ்வளவு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவர் கண், அன்றைய பத்திரிகையில் வந்திருந்த திருமணப் படத்தையும் செய்தியையும் பார்த்துக் கொண்டிருந்தது.

"காதல் மணம்" என்ற தலைப்பிட்டு அலமுவும் குமரனும் "ரிஜிஸ்டர் கலியாணம்" செய்துகொண்டதாகவிளம்பரம்செய்திருந்த செய்தி, புகைப்படத்தோடு வந்திருந்தது. சிரித்துக்கொண்டிருந்தார்கள் அந்த இரு சிட்டுகளும்! செய்திக்குக்கீழ்— குமரனுடைய 'தீவிரப்போக்குக்' குறித்து, சிறு குறிப்பும் தந்திருந்தார், பத்திரிகாசிரியர். ஆனால் ஏழை அஞ்சானைப்பற்றி! அவனது இதயராணி நரிக்குறத்தியைப்பற்றி......

சப்இன்ஸ்பெக்டர்தான் டைரி, எழுதிக்கொண்டிருந்தார்! ✲

# மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி

காங்கிரஸ் பாசிச வெறிக்குப் பலியான வீரன் மஜீத் குடும்பத்தைப் பாதுகாக்க, தோழர்களே, தாராளமாக நிதி தாருங்கள். தான் கொண்ட கொள்கைக்காக தன் உயிரையே தந்த ஒரு உத்தம இலட்சியவாதிக்கு, உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள்.

மேலும் நிதியனுப்ப விழைவோர் 'மஜீத் குடும்பபாதுகாப்புநிதி' என்று குறிப்பிட்டு, காஞ்சிபுரம் 'திராவிட நாடு' நிலயத்திற்கு அனுப்பிவையுங்கள்.

| | |
|---|---|
| முன் வரவு | 316—3—4 |
| கொடைக்கானல் K. M. M. மேத்தா | 20—0—0 |
| சென்னை ரத்னு கபே தொழிலாளர்கள் | 21—0—0 |
| திருவல்லிக்கேணி கேப் தொழிலாளர்கள் | 6—0—0 |
| வாலாஜாபாத் W. K. தேவராசன் | 5—0—0 |
| சென்னை ரத்தினம் | 5—0 0 |
| சென்னை எஸ். எல். பி. லிங்கம் | 5—0—0 |
| காஞ்சி. சி. வி. ராசகோபால் | 2—0—0 |
| ,, லட்சுமணன் | 2—0—0 |
| ,, பூஞ்சோலை | 2—0—0 |
| ,, M. M ராமநாதராவ் | 2—0—0 |
| ,, T சாம்பசிவம் | 2—0—0 |
| ராயப்பேட்டை இளங்கோ மன்றத்தார் | 5—0—0 |
| தாத்தையங்கார்பேட்டை தி. மு. க. | 5—0—0 |
| கங்குவார்பட்டி S. R. இராசமதுரன் | 1—0—0 |
| சென்னை அழகிரிப் படிப்பகம் S. A. பாண்டியன் மூலம் | 6—8—0 |
| திருவனந்தபுரம் S. கிருஷ்ணன் மூலம் | 11—2—0 |
| சென்னை எம். பி. ஆனந்தன் | 1—0—0 |
| மதுரை சுந்தரம் | 5—0—0 |
| சிந்தாதிரிப்பேட்டை தமிழர் அறிவுச்சோலை | 1—2—0 |
| காஞ்சீபுரம் பொதுக் கூட்டத்தில் வசூல் | 62—10—6 |

சென்னை எலக்டிரிக் ட்ராம் கம்பெனி

| | |
|---|---|
| எ. பக்தவச்சலம் | 1—0—0 |
| வி. ராஜமாணிக்கம் | 1—0—0 |
| எம். ராஜீ | 1—0—0 |
| ஆர். கணேசன் | 1—0—0 |
| டி. சொக்கலிங்கம் | 1—0—0 |
| ஜி. பி. ரத்தனம் | 1—0—0 |
| ஆர். கண்ணன் | 1—0—0 |
| என். கே. சீராமுலு | 1—0—0 |
| சேஷசயனம் | 1—0—0 |
| ஆர். கோவிந்தராசன் | 1—0—0 |
| ஜி. கே. மாத்யூஸ் | 1—0—0 |
| வேலுசாமி | 1—0—0 |
| சி. வி. ராமசந்திரன் | 1—0—0 |
| என். நந்தகோபால் | 1—0—0 |
| ஆர். குப்புசாமி | 1—0—0 |
| எம். கே. ரங்கநாதன் | 1—0—0 |
| லோகநாதன் | 1—0—0 |
| எஸ். விஜயராஜ் | 1—0—0 |
| ஜி. ராஜரத்னம் | 1—0—0 |
| கே. முனுசாமி | 1—0—0 |
| பாபு ராவ் | 1—0—0 |
| ஏ. சண்முகம் | 1—0—0 |
| வி. எஸ். கோவிந்தராசன் | 1—0—0 |
| பரசுராமன் | 0—8—0 |
| கே. மன்னியப்பன் | 0—8—0 |
| கே. ராதாகிருஷ்ணன் | 0—8—0 |
| எம். ஜேவியர் | 0—8—0 |
| ஆர். சுப்பிரமணி | 0—8—0 |
| ஏ. ஆரோக்யசாமி | 0—8—0 |
| எம். கே ராஜவேலு | 0—8—0 |
| பி. வி. வரதராஜுலு | 0—8—0 |
| டி. முருகய்யா | 0—8—0 |
| ஜி. ஆர். கே. சின்னய்யா | 0—8—0 |
| கன்னையா | 0—8—0 |
| கே. ராமானுஜம் | 0—8—0 |
| கே ராஜு | 0—8—0 |
| எஸ். ஹரி | 0—8—0 |
| கே. சங்கரன் | 0—8—0 |
| எம். வீராசாமி | 0—8—0 |
| துரைசாமி | 0—8—0 |
| ரங்கநாதன் | 0—8—0 |
| கண்ணபிரான் | 0—8—0 |
| பார்த்தசாரதி | 0—8—0 |
| பாபுசிங் | 0—8—0 |
| எஸ். வெங்கடேசன் | 0—10—0 |
| டி. ராமலிங்கம் | 0—8—0 |
| சிதம்பரம் | 0—8—0 |
| சிவஞானம் | 0—8—0 |
| வீராசாமி | 0—8—0 |
| ஆர். சாமையன் | 0—8—0 |
| கன்னையா | 0—8—0 |
| கோவிந்தராஜன் | 0—8—0 |
| ராஜரத்தனம் | 0—6—0 |
| எ. சின்னய்யா | 0—4—0 |
| புஷ்பலிங்கம் | 0—4—0 |
| எம். கே. சொக்கலிங்கம் | 0—4—0 |
| அமீத்ஷரீப் | 0—4—0 |
| கண்ணன் | 0—4—0 |
| நாதிமுனிராவ் | 0—4—0 |
| கன்னியப்பன் | 0—4—0 |
| பாலகிருஷ்ணன் | 0—4—0 |
| ஞானபிரகாசம் | 0—4—0 |
| பொன்னுரங்கம் | 0—4—0 |
| வெங்கடேசன் | 0—4—0 |
| எல்லப்பன் | 0—4—0 |
| கிருஷ்ணமூர்த்தி | 0—4—0 |
| கோவிந்தராஜுலு | 0—4—0 |
| நாகரத்தினம் | 0—4—0 |
| ராமச்சந்திரன் | 0—4—0 |
| வேணுகோபால் | 0—4—0 |
| ஜகந்நாதம் | 0—4—0 |
| ஏ. பெருமாள் | 0—4—0 |
| பக்தவச்சலு | 0—4—0 |
| ராஜாராம் | 0—4—0 |
| எம். ஆர். வேணுகோபால் | 0—4—0 |
| வெங்கடேசன் | 0—4—0 |
| பலராம் | 0—4—0 |
| ஜானகிராமன் | 0—4—0 |
| கிருஷ்ணசாமி | 0—4—0 |
| ரங்கசாமி | 0—4—0 |
| தர்மசிவம் | 0—4—0 |
| ஸ்ரீராமுலு | 0—4—0 |
| டி. ரங்கநாதன் | 0—4—0 |
| டி. பொன்னுசாமி | 0—4—0 |
| சில்லரை வரவு(உண்டியல்) | 1—13—0 |
| ஏ. கே. வெங்கடாசலபதி | 0—8—0 |
| டி. அய்யலு | 0—8—0 |
| கோவிந்தராஜுலு | 0—8—0 |
| கருணாகரன் | 0—4—0 |
| பி. கஜபதி | 0—7—0 |
| அலமேலு அப்பாதுரை | 5—0—0 |
| சென்னை கோகலே ஹால் கூட்டத்தின் மூலம் | 128—0—0 |
| ஆகமொத்தம் வரவு | 663—1—10 |

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.

REGD. No. M 4042

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

1—6—52 | இதழ் 48

# 'நானும்' 'நாமும்'

அண்ணா

"நான்"—"நாம்" [illegible]

இந்த இரு வார்த்தைகளால் [illegible] பிணக்குவியலும், வாழ் ஒலியும் [illegible] முழக்கமும், [illegible] சிப்பும், [illegible] விளைவுகளும், விபரீதங்களும் ஏராளம். "நான் சொல்கிறேன்—மன்னனாகிய நான் கட்டளையிடுகிறேன்" என்று 'தானே யாவும்' என்பதாக [illegible] மன்னர்களை, "நாங்கள் கேட்கிறோம்," என்கிற மக்களின் குரல், வீழ்த்தி வெற்றி பெற்ற நிகழ்ச்சிகள், சரிதத்தில் மிகப் பல உண்டு. இங்கிலாந்து நாட்டில் முதலாவது சார்லஸ்! பிரான்சுக்கு ஒரு லூயி! ரஷ்யாவுக்கு ஒரு ஜார்! — இவ்விதம் "நான், நான்" என்று மமதை கொண்டு மக்களை மிரட்டிய கிரீடமேந்திகள், கடைசியில் "நாம் வாடுவதா?" என்று கிளம்பிய 'ஏழை எரிமலை' களால், பொசுக்குண்டுபோயினர். மக்களை நாய்களினும் கேவலமாக மதித்து, 'கடவுளின் பிம்பம் நான்' என்று கதைகள் கூறிய இந்த சிம்மாதன தாரிகளை, மக்களின் சீற்றம், தூக்குமேடையிலே கொண்டு நிறுத்தித் தண்டாடிற்று! மணிமுடி தரித்ததால் 'நான் கூறுகிறேன்' என்று எக்காளமிட்ட அவர்தம் தலைகள், தரையிலே உருண்டன!!

மன்னர்கள்மட்டுமல்ல —மக்களை மதியாத காரணத்தால், கேடுற்று, சீர்கெட்டு சிதைந்தது; 'மக்களின் தலைவர் என்று ஒருபோது போற்றித்துதிக்கப்பட்டோரும் "நான்" என்கிற மமதை கொண்டால், அதே மக்களால் [illegible] கப்பட்டிருக்கின்ற [illegible] வியாவை சிந்தி உழைத்து, [illegible] பெற்று, [illegible] அவரே' 'ஒரே தலைவர்' என்று மகிழ்ச்சிப் பெயர் சூட்டி, 'மூர்வீரர்' என்றெல்லாம் கொண்டாடப்பட்ட பொதுஜன தலைவர்களும், 'நாம் செய்வோம்' என்று மக்களையும் அனுசரித்துப் பேசாது, தமிர் கொண்டோராக, கையிலே துப்பாக்கியும் குரலிலே கடுமையுமாக, துரைத்தனப்பாதையில் செல்லத்துவங்கியதால், சின்னா பின்னமாக்கப்பட்டிருக்கின்றனர்—கடைசிகாலத்தில். கொல்லனின் மகனாகப் பிறந்து, ஏழையுலகின் கண்ணீரைக்கண்டு கலங்கி, 'இவர் ஏன் வாடுவது — பிறர் ஏன் வாழுவது?' என்று கோபாக்கினியோடு கேள்விகள் எழுப்பி, சண்டமாருதமெனப் பிரசங்கம் செய்து, மக்களின் 'மனதெல்லாம்' நிறைந்து, தலைவனாக ஆனான் இத்தாலி நாட்டில், முசோலினி! இத்தாலியில் அவனுக்கிருந்த செல்வாக்கும் சிறப்பும், அவன் பிடித்த பேனாவுக்கிருந்த வலிமையும் கவர்ச்சியும், கீர்த்தியும் பெருமையும் இன்னதென்று கூறமுடியாது. மேடையில் பேச எழுந்தால், ஜனசமுத்திரம் எழுப்பும். ஆனந்தமுழக்கம் அடங்க வெகுநேரம் பிடிக்குமாம்! கையை யுயர்த்தி அவன் நிமிர்ந்து நின்றால், கடல்போல முழக்கமிட்டமக்களின் கூச்சல் அரைவினாடியில் ஓயுமாம்!! ஏழையாகயிருந்து, சர்க்காரின் துப்பாக்கிகளுக்குத் தப்பி, சமதர்ம கீதம் எழுப்பிய முசோலினிக்கு இவ்வளவு கீர்த்தி இருந்தது. எது சொன்னாலும் கேட்டனர், மக்கள். நாவும் பேனாவும்—இத்தாலிய மக்களின் இதயங்களையெல்லாம் துளைத்தது—'இவனே—எம்பிதா' என்று முழக்கமிடச் செய்தது. ஆனால் பின்பு! பொதுஜனத்தலைவன் ஆட்சி பீடம் ஏறியபின்பு! 'நானே சர்வாதிகாரி' எனப் பிரகடனப்படுத்திய பின்பு!

"நாம்போராடுவோம் — வாழ!" என்பதை மறந்து "நான் சொல்லுகிறபடி கேளுங்கள்" என்கிற வார்த்தைகள் அவன் உதட்டைத் தாண்டி வெளிவந்த போது மக்களின் இதயத்தை மலர்விக்கவில்லை — அவன் நாமம்; கிழித்தது, துளைத்தது. "நான்" என்பது அவன் கர்ஜனையில் இடம் பெற்றபிறகு, அவனது பாதை மாறிற்று. 'பாசிசட்பேய்' என்றனர் மக்கள் — "எல்லா அதிகாரமும் என்னுடையதே. நான்தான் சர்க்கார்" என்று அவன் பிரகடனப்படுத்தியது கண்டு, குமுறினர்' கொதித்தனர்! கடைசியில், எதிரே போர்வீரர்கள் நிற்க, அவர் தம்கரங்களிலே துப்பாக்கிகள் இருக்க, அவன் ஒருவன்மட்டும் 'கைதி'யாக நின்றான். பல துப்பாக்கிகள் அவன் உடலைத் துளைத்தன!

வீழ்ந்தான் பிணமாக. அந்தப்பிணம் எடுத்துச் செல்லப்பட்ட போது, காரியுமிழ்ந்தனராம். அவனை 'தேசபிதா' என ஒருபோது போற்றிப் புகழ்மாலை தந்தமக்கள்!! இதே கதிதான், "ஆரியராஜ்யத்தை எங்கும் நிலைநாட்டுவேன்" என்று கர்ஜனை எழுப்பிய ஹிட்லர் அடைந்தான். 'என்ன ஆனான்' என்பதே அறிய முடியாது நாசமடைந்தான். ஹிட்லரும் ஆதியில் பொதுஜனத் தலைவனாக இருந்தவன்தான். சாதாரண 'பெயின்டராக' இருந்த அடால்ப் ஹிட்லர், மாபெரும் கட்சியொன்றுக்குத் தலைவனாக வந்தபோது — அவனைப்போற்றுதாரில்லை. 'எமது குறைதீர்க்கவந்த மாவீரன்' என்று போற்றப்பட்டான். அவன் ஸ்தாபித்த தேசிய சோஷியலிஸ்டுக்கட்சி (நாஜிசக்கட்சி)யை, மக்கள் மனமார வரவேற்றனர். "ஹெர் ஹிட்லர்!"— இந்த முழக்கம் ஜெர்மெனியில் எழும்பாத இடமில்லை. அவ்வளவு செல்வாக்கோடு விளங்கிய அவன் 'நாம்' மறந்து, நான் இடும் கட்டளை இது' என்றுகர்ஜிக்கத்துவங்கினான். "சர்க்கார் வைத்ததே சட்டம் — நான்தான் சர்க்கார். இதுதான் நாஜிசம்" என்றான். நாஜிசப்பேய் — என்றனர், அவன் நடத்தை கண்ட நல்லோர். உலகமே தூற்றிற்று! கடைசியில், அவன் உயிர் போன விபரமே தெரியவில்லை!! இன்றைய ஜெர்மானியில், அவன் பெயர், ஒரு எரிச்சல் வார்த்தை. இதே நிலையில் தான் இருக்கிறார், சீனாவின் பிதாவெனப்போற்றப்பட்ட; சியாங்கே ஷேக், இன்று!!

'நாசிசம்', 'பாசிசம்' — இரண்டின் காவலரும், ஆரம்பத்தில் தமது பொது வாழ்க்கையை நன்னோக்கோடு ஆரம்பித்து, செல்வாக்கு வந்ததும், திசையைத் திருப்பி, மக்களை மறந்து, தனதனவான்களின் கைலாகு பெற்று, சர்வாதிகாரியாகி, சிதைந்து, அழியாத அவமானச்சின்னங்களாகினர். "நாம்" என்கிற கூட்டுச் சொல் மறந்து, "நான்" எனும் சர்வாதிகாரப் பாதையில், கெட்டழிந்தனர் —இவர்கள் எல்லாம்.

நாம்—நான்! மக்களும்—மமதையும்! கூட்டுறவு முழக்கமும்—கொக்கரிப்பவனும்!!

* * *

"நாங்கள் வாடுகிறோம், ஐயா"

"நான் என்ன செய்யமுடியும்?"

"நாம் வாட, அவர்கள் வாழ்வதா?"

"என்னையா எதிர்க்கிறீர்கள்?"

வாழமுடியாதோருக்கும்; அவரை வாட்டி வதைப்போருக்கும் ஏற்பட்ட மோதலால், பிணங்கள் பல வீழ்ந்த பிறகு: இரத்த வெள்ளம் ஓடியபின்பு. கேள்வி எழுப்பியோர், வெற்றி பெற்றிருக்கிறார்கள். "நான்" என்று மமதையோடு பேசிய சார்லஸ், லூயி, ஜார் இவர்களின் எலும்புகள் கூட இல்லை— இன்று. 'சர்வாதிகாரி' என்று உலகையே அலறச்செய்த அக்கிரமக்காரர்களின் சந்ததிகூட மிஞ்சவில்லை மன்னர்கள்! சர்வாதிகாரிகள்!! முதல்ரகம், மமதையாலும் தனது ஆடம்பரத்தாலும் மக்களின் மன எரிச்சலைத் தூண்டி, மதிகெட்டு சேட்டைகள் புரிந்து, மக்களால் வீழ்த்தப்பட்டார்கள். சர்வாதிகாரிகளோ, மக்களை ஆளும் அதிகாரங்களைப் பெற்று, நாடு பிடிக்கும் ஆசைக்கு ஆளாகி; 'என் குடைக்கீழ் இந்த ராஜ்யங்கள் அனைத்தையும் கொண்டுவருவேன்' எனக் குதித்து கொடுமைகள் பல புரிந்து, இருந்த இடம் தெரியாது போயினர். 'ரோம் சாம்ராஜ்யம் ஒரு காலத்தில் ஒளி வீசிப் பிரகாசித்ததாம்—அதைப்போல, இத்தாலி சாம்ராஜ்யம், சிருஷ்டிப்பேன்' என கனவு கண்டான் பாசிசத் தலைவன்! 'ஆரிய சாமராஜ்யம் அமைப்பேன்' என்று அண்டை அயல் நாடுகளையெல்லாம் விழுங்கினான், ஹிட்லர்!! கடைசியில என்னவாயிற்று? மமதை, மண்ணுக்குள் புதைந்தது! கர்ஜனை, காற்றோடு போயிற்று! வீழ்ந்தனர் — அழிந்தனர் — அழியாத அவமானத்தைத் தேடிக்கொண்டனர்.

நான்கு பக்கமும் தன்கரம்விரிந்து பார்த்து கிடக்கும் என்ராஜ்யம்—எனக் கனவு கண்டோரின் கதி, இது. 'நான்' வைத்ததுதான் சட்டம் என வெறியோடு உலவியோர் வீழ்ச்சியுற்ற சம்பவம், அது.

இந்த உண்மையை இன்னும் பலர் உணர்ந்தாரில்லை—பழைய மன்னர் பாணியிலேயே பேசுகின்றனர்— நடக்க எண்ணுகின்றனர்.

"நாம்" கூட்டு முயற்சியின் விளைவாகப் பிறக்கும் சொல். வாழமுடியாத மக்களுக்காக உழைக்கும் உறுதியும் தாகமும் பெற்றிருப்போர் கூறுகிற சொல் சமுதாயம் எழுப்பும் நாதம்! எல்லோரும் சமம் என்று எண்ணுவோர் முழக்கும் கீதம்! ஆனால், இது, சர்வாதிகாரிகளுக்கும், 'சர்வமும் எனதே' எனக் கூறும் சக்ரவர்த்திகளுக்கும் பிடிக்காது — "நான்" வந்துவிடும். இதை அகம்பாவமும், அழுக்காறும் உச்சரிக்கும் தைரியமும் வளர்ந்ததும் — அதிகார போதை, ஏறஏற, 'எனது' 'என்னுடைய ஆட்சி'—இப்படி, அவர்கள் பேசுவதைக் காண நலம் விரும்பிகள் மனம் பதறும். ஜனநாயகம் பேசப்படும் இந்த நாட்களிலே இப்படி 'எனது' 'நான்' என்று எவராவது பேசினால் மக்கள் மனது எப்படியிருக்கும்? மக்கள் ஆட்சிக்குப்பதில் மமதை நிரம்பிய 'மன்னன்' ஆட்சி முறை ஏற்படுவதையா விரும்புவர்! பசுக்கூட்டம், புலி வருவதையா வரவேற்கும்! பொதுஜன ஆட்சிக்குப்பதில் "நான்" பேசும் தனியொருவன் வசமா, செங்கோலைத் தருவர்! ஒருக்காலும் ஒப்பார்—எவருமே இசையார். அதிலும் மமதை நிரம்பியோரை ஒழித்து, பொதுஜன ஆட்சி ஏற்படுவதற்காக உடமையையும் உள்ளத்தையும் புண்ணாக்கிக் கொண்டவரா ஒப்புவர்!

* * *

'ஜனநாயகத்தின் விலை!' என்று தலைப்பிட்டு, 'மெயில்' இதழ், கடந்த வாரம் டில்லியில் ஆரம்பமாகியிருக்கும் முதல் இந்திய பார்லிமெண்டு குறித்து, செய்தியொன்று தந்துள்ளது. நாள் ஒன்றுக்கு 30,000 ரூபாய், செலவழியுமாம்! பார்லிமெண்டு உறுப்பினர்களுக்கும், அவர்தம் வசதிகளுக்கும்!! இதைத்தான், 'ஜனநாயகத்தின் விலை' என்று குறிப்பிடுகிறது, 'மெயில்'. ஜனநாயக முறையின்படி, மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும், அதற்கான செலவை மக்கள் மன்றம் ஏற்றுக் கொள்வதும், இந்த ஜனநாயக முறையால் தமக்கு நல்வாழ்வும் சுக ஆட்சியும்கிடைக்குமென்பதால்தான். இதனாலேயே தமது பிரதிநிதிகளுக்கு ஏற்படும் செலவை மக்கள் தமது வரிப்பணத்

(11-ம் பக்கம் பார்க்க)



# காதல்

"சுந்தரரூபா!"

"இதய வல்லி"

"ஏற்பரோ உமது மதத்தவர்?"

"கவலையில்லை, கண்மணி"

"வாய்த் துடுக்கினால் வதைப்பரே!"

"உன் வனப்பினால் என்னை நீ வசீகரிக்கிறாயே"

"அதோ—அப்பா வருகிறார்"

"வந்து பார்க்கட்டுமே நமக்குள் ஜோடிப்பொருத்தம் இருப்பதை"

* * *

கன்னியனுப்பும்
புதுப்பார்வை—அவன்
கட்டுடல் மீதிலும்
தோளினிலும்—சென்று
மின்னலின் மீண்டது!
கட்டழகன்—தந்த
விண்ணப்பம் ஒப்பினள்
—புன்னகையால்!

* * *

திருமணத் தேதி குறிக்கப்பட்டுவிட்டது! தேன்குடித்த வண்டாயினர் இருவரும்! மணமகன் சாதாரணமானவனல்ல, அழகன்; அந்தஸ்துள்ளவன்! மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசி! ஆகவே, திருமண ஏற்பாடுகள் யாவும் சிறப்பாக நடைபெற்றன. தித்திக்கும் இவ்விழாவில் கலந்துகொள்ள அதிகாரிகளும் அறிஞர்களும் தயாராயினர். 'கலப்புமணம்' பற்றிப் பாராட்டி, பலரது, வாழ்த்துக்களும் வந்து குவிந்தன. மணமகனும் மணமகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுகின்றனர். இளமலர்[illegible]ல் மணம் பெற்ற மலர்கள்!! [illegible] இதயமும் குளிர்ந்து நிற்[illegible]ம். 'ரிஜிஸ்டர்' ஆகவேண்[illegible]ன் பாக்கி. பிறகு இருவரும் ஒரே காம்பின் இரண்டு புஷ்பங்களாகிவிடுவர்! சதிபதிகள்தான், பிறகு!! இன்பக்கனு, கண்டு கொண்டிருக்கும் இந்த நேரத்தில், ஆவேசமாக ஒருவர் ஓடிவருகிறார் — 'ஐயோ!' என்று அலறுகிறார். திடுக்கிடுகின்றனர் மணமக்கள். "திருடா உன் ஜம்பம் பலிக்காது. விடடா என் பெண்ணை" என்று அழைக்கிறார். மணமகளின் விழியிலே நீர்! மணமகனின் கண்களிலே கனல்!!

# சிந்தூரம்

வீதியிற் பற் பல
வீணர்களும் வேறு
விதியற்ற சிற்சில
பண்டிதரும் —வந்து
சாதியினை
விலக்கிடுவோம்-உன்
தந்தையின் மதிப்பையும்
நீ இழப்பாய்! நம்
ஆதி வழக்கத்தை
மீறுகின்றாய்!!"

இவ்விதம், எழுப்பிய, எதிர்ப்புகளையெல்லாம் தூசுகளாக மதித்துத்தான், அந்த சுந்தரமலர்கள் இரண்டும், ஜோடிகளாக, முடிவு செய்தது.

"மதம், எங்கள் மன உறுதியை மாற்றமுடியாதப்பா!" என்றாள், தந்தையிடம் வாதாடியபோது.

"மதத்தைவிட்டுத்தானே விலக்குவீர்கள்—பரவாயில்லை. உங்கள் மதத்தைவிட என் மணாளனின் மார்பே எனக்குப் பெரிது!" என்றாள் வீதி வீணர்கள் வந்துமிரட்டிய போது. அவ்வளவு உறுதியுடன் புது விழா மனையில் அமர்ந்திருந்த அவர்களிடம் வந்து அலறினார், மணமகளின் தந்தை. மணமக்கள், விழித்தனர் ஒருவர்க்கொருவர். "முடியாதப்பா!" என்றாள், மகள். 'இவளே என் இதயராணி' என்றான் அவன். 'ஆனால், சட்டத்தால் உமது கொட்டம் அடக்குவேன் தெரியுமா?' என்று கர்ஜித்தார், கானத்தைக் கலைத்த காடி! நீட்டினார் நீதிபதியின் உத்திரவை. மிரண்டான் மணமகன். இழுத்துச் சென்றார் பெண்ணை!!

* * *

'எங்கே நடந்தது, இந்த நாடகம்' என்று கேட்பீர்கள். நாடகமல்ல, இது! நடைபெற்ற சம்பவம்!! கடந்த சனியன்று டில்லிமாநகரிலே நிகழ்ந்தது இது. குமாரி ராஜ்சர்மா எனும் கொவ்வை இதழாள், டில்லிராஜ்ய முதல் மந்திரியின் அந்தரங்க காரியதரிசியான சிகந்தர்பகத் எனும் குமரனுக்கு மாலையிட இருந்தாள். 'மதம்' எனும் மந்தி, காதல் மலர்களை, கசக்கிவிட்டது. மணமகள் இந்து மதமாம்! மணமகன் முஸ்லீமாம்!! பொறுக்குமா வைதீகம்? மதப்புலி சீறியிருக்கிறது. பெண்ணின் தந்தை, கோர்ட்டின் உதவியை

# கண்ணீர்!

நாடி, தற்காலீக 'இன்சக்ஷன்' பெற்று தடுத்துவிட்டார் திருமணத்தை—'மகளுக்கு வயது 21 ஆகவில்லையென்று சொல்லி. மணத்தம்பதிகள் பிரிக்கப்பட்டனர். காதல் புறாக்களின் சிறகுகள் கத்தரிக்கப்பட்டுவிட்டன - காதகரால்! நீதிபதியின் 'தற்காலிகத் தடையுத்தரவு, பெறப்பட்டுவிட்டது-பெண்ணின் தந்தையால். ஆனால் இது அவரோடு போய்விடவில்லை! அவருக்கு பக்கபலமாக வைதீகக் கும்பல் வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்திருக்கின்றன. 'இஞ்சக்ஷன்' ஆர்டர் பெறுமுன்பு என்னென்ன கோலாகலம் நடைபெற்றதாம் தெரியுமா? டில்லி சர்க்காரின் அறிக்கை கூறுகிறது, கேளுங்கள்:

கோர்ட்டுக்குள் 500 பேர் புகுந்தனர்.

"திருமணத்தைத்தடு" என்று முழக்கமிட்டனர்.

கூச்சல்! கலாட்டா!!

கண்ணாடி ஜன்னல்களேல்லாம் தூள்! தூள்!!

காட்டுமிராண்டித்தனமாக நடந்தனர்.

நீதிபதி 'தடையுத்திரவு' தந்த பின்னரே, அமளி அடங்கிற்று.

பலருக்கு கத்திக்குத்து.

இருவருக்கு மரண நிலை
9 பேருக்கு படுகாயம்

இவ்வளவும் எதற்கு? முஸ்லிம் மத மணமகன், இந்துப் பெண்ணை மணப்பதற்கு. ஆத்திரமும் கோபமும் பெண்ணின் தந்தையோடு போய்விடவில்லை—வைதீக இந்துக்களின் வெறியையெல்லாம் கிளப்பியிருக்கிறது. வைதீக இந்துக்கள் என்றால் முப்புரி நூலும், வேத பாராயணமும், தர்ப்பையும், ஏந்திய சனாதனப் பிம்பங்களுக்கு மட்டுமல்ல! சட்டசபை உறுப்பினர்களுக்கு? யாரிந்த சட்டசபையினர் தெரியுமா! இந்துமகாசபைக்காரர்கள், காதல் ஜோடிகளைத் நீய்க்க

பொதுஜன ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்! ஆர்ப்பாட்டமா? அல்ல! அல்ல! பெரிய தொரு கிளர்ச்சி. அந்த கிளர்ச்சியின் விபரம் வேண்டுமா?

டில்லி மந்திரிதாக்கப்பட்டார்
பார்லிமெண்டு மேல்சபை உறுப்பினரை கூட்டத்தார் உதைத்தனர்
காயம் அவருக்கு.
கார் சேதமடைந்தது
உயிர்தப்பியது, அபூர்வம்

எப்படியிருக்கிறது, பாருங்கள்! காதல் கீதம் தடுக்க இத்தனை பெரிய கலவரம்—காரணம் 'மதம்'. மந்திரியாரை தாக்கியிருக்கிறார்கள்—சனாதனிகள். அவர்களின் கலவரம் அதோடு போய்விடவில்லை. இத்திருமண ஏற்பட்டால் உருவாகியிருக்கும் கலவர நிலையை சமாளிக்க முடியவில்லையாம் — டில்லி ராஜ்ய சர்க்காருக்கு. எனவே,

144 போட்டிருக்கிறார்கள்.
கூட்டங்கள் கூடாதென்று தடுத்திருக்கிறார்கள்.
ஊர்வலம் நடத்தக் கூடாது.
ஐவருக்கு மேல் கூடக் கூடாது.
ஆயுதமணிந்த போலீசார் ரோந்து வருகிறார்கள்.

சாதாரணத் திருமணம். "கண்ணே நீயும் நானும் ஒருட்லானோம். எனவே கைகோர்த்துச் செல்வோம் வாழ்க்கையில்" என்று, இரு இளம் இதயங்கள் செய்து கொண்ட முடிவை, அழுக்க, இவ்வளவு பெரிய கலவரம்! மந்திரி மீது படையெடுப்பு — சர்க்காரே கலங்கக் கூடிய நிலை, 32 பேர் கைது— இந்து மகா சபைத் தலைவர்கள் கைது — பார்லிமெண்டு இ. ம. உறுப்பினர் கைது. எவ்வளவு வெட்கக் கேடு இது! இத்திருமணத்தைத் தடுக்க, பாராளுமன்றத்திலமர்ந்திருக்கும் 'பக்குவம்' பெற்றோரும், முழு மூச்சோடு ஒத்துழைக்கிறார்கள். என்ன காரணம் இதற்கு? மற்றோர் மதஸ்தன் தமது மதத்தில் பெண் கொள்ளக் கூடாதாம்! காதலித்து, அணைத்து, மகிழ்ந்து, ஆரத் தழுவி முத்தம் கொடுத்து, வாழ்க்கைப் பாதையில் செல்ல இரண்டு உருவங்களுக்கு உரிமை இல்லை. மதபீடம்—காதலை முறிக்கிறது! வைதிகக் கோடரி பாய்கிறது! சனாதனக் கழுகு கொத்துகிறது! அதுவும் எவ்விதம்? கோர்ட்டிலே புகுந்து நீதிபதியை மிரட்டி! மந்திரியைத் தாக்கி! ஊரையே நிலை கலக்கி! இந்த விபரீத நடவடிக்கையில் ஈடுபடுவோர் யார்? எதுவுமறியாத பாமரரா? அல்ல. அல்ல. படித்து பட்டம் பெற்றவர்கள் — பாராள வந்திருப்பவர்கள். அவர்களால் இந்தக் கலப்பைப் பொறுக்க முடியவில்லை. 'லைலா—மஜ்னு' கதையை அறிந்தவர் உண்டு. 'ரோமியோ ஜூலியட்'டை வியந்து படித்து பட்டம் பெற்றோர் உண்டு. 'சாகுந்தலம்' கண்டு போற்றும் சம்ஸ்கிருத பண்டிதர்கள், அவர்கள் ஆனால், இந்தக் காதலைத் துண்டிக்கிறார்கள். அதுவும் எப்போது? மாபெரும் சாம்ராஜ்யத்தையே மங்கைக்காக இழந்த விண்ட்ஸர் கோமகன் வாழ்கின்ற இந்த நூற்றாண்டில்! சண்டிக்கும் தமது உறவினரை யெல்லாம் துச்சமெனத் தள்ளி, 'கருப்பர்தான் ஆனாலும் என் கண்ணாளர்' என்று காதல் கீதம் பாடும் வெள்ளை நிறச் சிமாட்டி ரூத் வில்லியமும் அவரது ஆப்பிரிக்க கணவன் — அரசன் — செரட்ஸி காமாவின் சம்பவம் நடைபெறும் நூற்றாண்டில்! மதம் மாய்க்கிறது—காதலை. வைதீகம் மறுக்கிறது — உரிமையை. மணமக்கள் இருவரும் மனிதர்தாம்! அங்க அவலட்சணமில்லை, மணமகன், முஸ்லீம் என்பதால். எல்லோரையும் போலத்தான் இருக்கிறான் — இன்னுஞ் சொன்னால் சராசரி மனிதர்களைவிட அதிக சம்பாத்தியம்தான் பெறுகிறான். அந்தஸ்துள்ளவன்— மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசி— அழகன்: எனினும் மதம், தடுக்கிறது, அவனை மணாளனாகக் கொள்ளாதே என்று. 'மதம்' எந்த உருவில்? மகாவிஷ்ணுவின் சக்ராயுதமாகவோ, மகேசனின் சூலாயுதமாகவோ வந்து அல்ல! வைதிகர்கள் மூலம்!! எவ்வளவு விசித்திரம் இது? காதலை மாய்க்கிறது கட்டுப்பாடு! "அப்பா! அலிமணி தந்தீர்—படிக்க வைத்தீர் — பலமெச்சவளர்த்தீர். கண்ணே என்றீர். கண்மணியே என்று அழைத்தீர். காலில் முள் குத்தினால் கண்ணில் பட்டது போலக் கலங்கினீர். நான் துயரப்பட்டால் துடித்தீர். 'என் மகளே' பெரிதென்றீர். இன்று என் ஆசையைப் பொசுக்குகிறீர்களே! வாழ்க்கையை ஒடிக்கிறீர்களே, அப்பா. இது நியாயமா அப்பா?" என்று கலங்கும் மகளின் கண்ணீரைக் கண்டும் இரங்கவில்லை மனம், அந்த மணமகளின் தந்தைக்கு ஏற்பாடு செய்திருக்கிறது, மதம். மனித நிலையிலிருந்தும் அவரை விரட்டியோட்டியிருக்கிறது, மதம். 'தன் மகளின் வாழ்க்கையைவிட சனாதனம் கெடக்கூடாது' என்று கூறத் தூண்டுகிறது, அவரை. அவரோடு போய்விடவில்லை இது! ஆயிரக்கணக்கானோர் பதைக்கின்றனர். 'அடுக்குமா?' என்று அங்கலாய்க்கின்றனர். துடிக்கின்றனர்! தோள் தட்டுகின்றனர்! 'விடுவோமா இதை?' என்று வீறுப்பு பேசுகின்றனர். விந்தையிதை எங்கே காண முடியும்? அறிவு வளர்ச்சிப் பெருகுவதாக ஆர்ப்பரிக்கும் தோழர்களே, காதலைத் தியக்கிறதே கண்மூடி வழக்கம், கண்டீர்களா? மதம்! மதம்!!—இது, மக்களின் கண்களைக் கொத்துகிறது. உள்ளத் துடிப்பை உணராமற் செய்கிறது. கேவலம் இதுவென்பீர்! வெட்கம் என்பீர்! விசித்திரம் என்று நொந்து கொள்வீர்! இந்த வேதனையை ஒழித்தால் தான் முன்னேற முடியும் என முழக்குவீர்!

ஆனால் என்ன நடைபெறுகிறது? 'காதல் கண்ணீர் வடிக்கிறது! பருவ மலர் அழுகிறாள்! வாலிபன் சித்திரவதை செய்யப்படுகிறான்—"மதம்" பாய்கிறது. "தர்மானுசாரம் போவதா?" என்போர், கொதிக்கிறார்கள். இத்தகைய 'மதம்' தான் போற்றிக் காக்கப்படவேண்டுமாம்— புனிதர் 'ஆச்சாரியார்' போதிக்கிறார். "தர்மானுசாரம் நிலைநாட்டப்பட வேண்டுமாம்" — கூறுகிறார், கோவையில், ராஜகோபாலாச்சாரியார். நினைத்துப் பாருங்கள்! வாடி வதங்கும் அந்த இரு இள இதயங்களை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்! வாழ்க்கையைத் துண்டிக்கும் மதம்! வெறி பிடித்த புலி! வேண்டுமா? ஆதரித்து வளர்க்கத்தான் வேண்டுமா? புராதன சம்பிரதாயத்தை வளர்க்கத்தான் வேண்டுமா? — பொசுக்குகிறதே மனிதர்களை! வாழப் பிறந்தவர்கள்—வாழ்வின் வசந்த காலத்தில் நிற்பவர்கள்—இன்பக் கனைத் துடிக்கும் மணமக்கள்—அவர்களைப் பிரிகிறதய்யா பிரிக்கிறது! 'மதம்' பிரிக்கிறது' கொக்கரித்துக்கொண்டு செய்கிறது, இப்பணியை. என்ன விந்தை! எவ்வளவு கோரம்!! ✲



# "ஜகஜ் ஜோதி!"

"வைகுண்டம் போகிறேன்!"

"வேண்டாம் பிரதர் வைகுண்டம் வரண்டுகிடக்குதாம். கைலாசம் போகலாம் — கனஜோராயிருந்துட்டுவரலாம்"

"வைகுண்டத்தைவிட கைலாசம் ஒசத்தியோ?"

"தெரியாதா சேதி! கைலாசம் இன்னும் வரண்டுவிடவில்லை — வைகுண்டம்தான் சுடுகாடாகஇருக்குது. கைலாசம் போனுபோதும். ஆகாயமும் பூமியும் அந்தரமாச் சுற்றும்! 'ஜெகஜ்ஜோதி'யிருக்குதப்பா, அங்கே!!"

"அப்படியா?.......வைகுண்டத்தின் வசதிகள் கைலாசத்தில் உண்டோ!"

"ஆட, பாட, அருமையாககாலம் கழிக்க அதுதானப்பா ஏற்ற இடம். கேட்டதில்லையா, நீ, வைகுண்டத்தைப் பற்றி?!!

"ஆல்ரைட்! நீ சொல்றபடியே, செய்றேன். அதுசரி. வைகுண்டத்துக்கும் கைலாசத்துக்கும் ரொம்ப தூரம் இருக்குமோ?"

"அதுதான் இல்லை! நடுவிலே ஒரு ஆறு. அவ்வளவுதான். இக்கரையிலே வைகுண்டம்! அக்கரையிலே கைலாசம்!!"

"வைகுண்டத்துக்கும் கைலாசத்துக்கும் போய்வர, வசதி?"

"படகு இருக்கும், பார்த்துக் கொள்ளலாம்"

"அப்ப, சரி! நாம்ப கைலாசத்துலே 'ரூம்' வச்சுக்குவோம். குடும்பத்தை 'வைகுண்டத்திலே' தங்கச் சொல்லுவோம்"

"ஓ! பேஷா!!"

"சரி. டிக்கட் 'புக்' பண்ணிடச் சொல்றியா உடனே செய். இங்கே வெயில் உயிரைக் கொல்றது—அங்கேயாவது போய் இருந்துட்டுவரலாம்"

* * *

திகைத்துப்போனேன் நான்! ஆனால் அந்த இரு தோழர்களும்— தோழர்களா? அல்ல! அல்ல!! கனதனவான்கள்— ஒருவருக்கொருவர் விடைபெற்றுக்கொண்டு போயினர். பஸ்ஸ்டாண்டில் நடைபெற்ற சம்பவம் இது. அந்த இருவரும் யாரோ எனக்குத் தெரியாது — ஆனால் சுகமாக வாழ்க்கையைக் கழிக்கும் ஒய்யார புருஷர்கள் என்று மட்டும் விளங்கியது—தோற்றத்தின் மூலம். அவர்கள் இவ்விதம் வைகுண்டத்தையும் கைலாசத்தையும் ஏதோ அவர்கள், 'ரெஸ்ட்ஹவுஸ்' மாதிரி பேசுகிறார்களே, என்னும் எண்ணத்தால், திகைத்தேன்.

"இளமையான வாலிபர்கள். இவர்களுக்கேன் இந்த விரக்திவந்திருக்கிறது. கைலாசத்தையும் வைண்டத்தையும் நாடுகிறார்கள்?"

"கைலாசமும் வைண்டமும் போவதென்ன அவ்வளவு எளிதா? தபோதனர்களும் மகாமுனிவர்களும், அறுபதனாயிரம் எழுபதனாயிரம் ஆண்டுகள் என்று அகோர தவம் செய்தும் அத்தனிப்பேறு அடைவது கடினம் என்று புராண இதிகாசங்கள் சொல்லுகின்றனவே"

"சேச்சே! இவர்களைப் பார்த்தால் நாகரீகமானவர்கள் என்று தெரிகிறது. இவர்களாவது, கைலாசத்தையும் வைகுண்டத்தையும் நம்புவதாவது?"

"டிக்கட் 'புக்' பண்ணு என்று சொன்னாரே!"

"கேலியாக இருக்கும் — நாம் கூறுவதில்லையா 'என்னஐயா! அய்யரிடம் அரையணா கொடுத்தா 'மோட்சலோக'டிக்கட் ஆயிடுமோ என்று? அதுபோல கிண்டலாகப் பேசிக்கொண்டிருந்திருப்பார்கள்."

"ஆகாயம் பூமியும் சுற்றும்! 'ஜகஜ் ஜோதியைக் காணலாம்' என்றார்களே!"

இவ்வித கேள்விகள், என் மனதில், கூத்தாடலாயின. வைகுண்டமும் கைலாசமும்!—சாதாரண விஷயமா இது? ஆகவே, பக்கத்திலிருந்த ஒருவரிடம் கேட்டேன். "இப்போது இங்கே பேசிக்கொண்டிருந்தார்களே அவர்கள் இருவரும் யார்?"

"அவர்களா?" என்று கேட்டுவிட்டு, என்னைச் சிறிது பார்த்தார். பிறகு ஏதோ, ஐயம் கொண்டோர் போல, "ஏன்?" என்றார்.

"கைலாசம், வைகுண்டம் என்று பேசிக் கொண்டார்களே — அதனால்..."

"அதனால் என்ன?"

"ஏதாவது வாழ்க்கையில் விரக்தியோ, என்று நினைத்தேன்"

"விரக்தி உனக்கும் எனக்கும் தான். அவர்கள் இந்த ஊரிலேயே பெரிய செல்வவான்கள்......"

'வைகுண்டத்துக்குப் போவதா கைலாயத்துக்குப் போவதா என்று பேசிக்கொண்டார்களே?"

அவர் சிறிது என்னை முறைத்துப் பார்த்தார். "நீர் — பத்திரிக்கைப் படிப்பதுண்டா?" என்றார். "உண்டு என்றேன் நான்" "பிறகேன் அவர்கள் பேசிக் கொண்டதைப் பற்றி இப்படிக் கேள்விமேல் கேள்வி போடுகிறீர்" என்றார். அப்போது தான் விஷயம் விளங்கிற்று! 'அது தானே பார்த்தேன்' என்று கூறிக் கொண்டே இடி இடியெனச் சிரித்தேன். அவர், எரிச்சலோடு, என்னைப் பார்த்தார். "புரிஞ்சுதுங்க!" என்று கூறினேன். எனக்கோர் திருப்தி ஆனால், அவர் என்னை விடவில்லை.

"ஏன்யா சிரித்தீர்?"

"சிரிக்காமல் பிறகென்ன செய்வது! 'வைகுண்டம்' 'கைலாசம்' பற்றி கதையளப்போரின் வார்த்தைகள், இவ்வளவுதூரம், நமது மக்களின் கேலிக்கு ஆளாகியிருப்பதை அறிந்து, சந்தோஷப் படாமலா இருக்க முடியும்?"

"யார் கதையளப்போர்—அதற்காக நீர் ஏன் சிரிப்பது?"

(8-ம் பக்கம் பார்க்க)

எமது புது வெளியீடு
கிரேக்க பேரறிஞர்
பிளேட்டோ
ஆசிரியர்: கௌதமன்
விலை ரூ 1—0—0
விற்பனையாளருக்கு 25% கழிவு
தபால் செலவு இனும்
தனிப் பிரதி தேவைக்கு 1—0—0
M. O. மூலம் அனுப்பவும்
கிடைக்குமிடம்:—
மின்னொளிப் பதிப்பகம்
31, பீட், சென்னை 1.

திராவிடநாடு

காஞ்சி] 1—6—52 [ஞாயிறு

## விரயம்

☆

டில்லி சட்டசபையிலே, கடந்த வாரம் இரயில்வே பட்ஜெட்டும், பொது பட்ஜட்டும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன—காங்கிரஸ் ஆட்சியாளரால்.

"ஏழைகளின் நன்மைகளுக்காக ஏதுவும் இல்லை!" என்று, பார்லிமெண்டு உறுப்பினர்கள் பலர் கண்டித்திருக்கின்றனர்.

பாதுகாப்பு என்ற பெயரால் பாதிப்பணம் செலவழிக்கப்படும் காங்கிரஸ் சர்க்காரால் மக்களின் நன்மைகளுக்காக, எவ்வித வசதியும் அதிகரிக்கப்படவில்லை. மாறாக, மாகாணங்களுக்கு தந்து வந்த உதவி 'மான்யத் தொகை'யும் இனி கிடையாதாம்.

'பட்ஜட்டை' விளக்கிப் பேசிய நிதி அமைச்சர் தேஷ்முக், 'வரி அதிகமாகாமலிருப்பதற்காக', மக்கள் மகிழ்ச்சி அடையவேண்டும் என்று கூறியிருக்கிறார். பார்லிமெண்டில் பேசிய பண்டித நேருவோ, 'எமது நோக்கம் நாட்டைச் சீர்படுத்தி மக்களுக்கான குறைகளைப்போக்குவது தான்' என்று, வழக்கம்போல், தீப்பொறி பறக்கப் பேசியிருக்கிறார்.

இரயில்வேயில் மூன்றும் வகுப்பு மக்களுக்காக எவ்வித வசதியுமில்லை—'டிக்கெட்' குறைப்பும் இல்லை.

அதேபோல, டில்லி சர்க்காரின் புது வரவுசெலவு திட்டப்படி, மக்களுக்கான கல்வி, சுகாதாரம், ஏழ்மை ஆகியவைகளுக்குப் பரிகாரமும் இல்லை—வரி விகிதங்களில் குறைப்புமில்லை—மாகாணங்களுக்கு வேண்டிய பண உதவிகளும் இல்லை.

"இது ஏன்?" என்று கேட்ட எதிர்க்கட்சித் தோழர்களுக்கு, பற்பல விதமான காரணங்களும், 'பணம் இல்லையே!' என்கிற பல்லவியும் பாடப்பட்டிருக்கிறது. அதிக வரி! சேமிப்புப் பணமும் காலி மக்களுக்கும் வசதிகள் இல்லை!—ஆனால் 'பணமும் இல்லையாம்'!!

எங்கே போகிறது பணம்?—இது பற்றி பார்லிமெண்டிலே சிலர்வெளியிட்டருசிகரமான தகவல்களைத் தர விரும்புகிறோம்.

குன்ஸ்ரு: ஒழுங்கான திட்டம் இல்லை. இதனால் தாமோதர் நதிபள்ளத்தாக்கு போன்றவைகளுக்கு, திட்டமிட்டதற்கு மேல் பணம் செலவழிக்கப்படுகிறது. அதிக விலை கொடுத்து வெளி நாட்டுக்கம்பெனிகளிடமிருந்து வெடிகுண்டுகள் வாங்குவதேன்? அக்கம்பெனிகள் நம்மை ஏமாற்றிக் கொண்டே இருக்கின்றனவே! பெல்ஜியம் போன்ற இடங்களில் இந்த வெடிகுண்டுகள், நல்லதாகவும் மலிவாகவும் கிடைக்கும் போது, பிரான்சில் வாங்கக் காரணம் என்ன? லண்டனிலிருக்கும் ஹைகமிஷனருக்கு இதில் என்ன சம்பந்தம்?

பி. ராத்: ஹிராகுத் அணைக்கட்டுக்கு போட்ட திட்டத்தை விட அதிகப் பணம் செலவாவதேன்? அதிகாரிகளுக்கும் பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் இந்த 'அணைக் கட்டுத்திட்டங்கள், பொன் காய்க்கும் மரங்களா?

அம்பேத்கார்: நடுநிலைமை வகிப்பதாகப் பெருமை பேசும் சர்க்கார் ராணுவத்துக்கென வருமானத்தில் பாதிப்பங்கை செலவழிப்பது ஏன்? சேமிப்பு நிதியையும் கரைத்துக் கொண்டிருக்கும் சர்க்கார் எதிர் காலத்தில் என்ன செய்யப் போகிறது?

*   *   *

'வரிப்பணம், விரயம் ஆகிவரும் விஷயங்கள் குறித்து, அடிக்கடி நாம், குறிப்பிட்டு வந்துள்ளோம். இருந்தும் இன்னும் மாதா மாதம் இதுபோன்ற விரயங்கள் அதிகமாகிக் கொண்டே உள்ளன. இவ்விதம் மக்கள் பணத்தைச் சீர்கேடாக்கும் 'மத்திய சர்க்கார்', ஏழை மக்களின் நல்வாழ்வுக்கென எவ்வித பணமும் ஒதுக்கவில்லை. நாட்டில் வேலை திண்டாட்டம்—கல்வியில்லாமை—ஏழ்மை—தாண்டவமாடுகிறது. இதுபற்றி எவ்வித உடனடித் திட்டங்களும் வகுக்கவில்லை. ஆனால், பணம் மட்டும் காலியாகிக் கொண்டிருக்கிறது! வெளி நாடுகளிலிருக்கும் இந்தியத் தூதுவர்களின் இஷ்டம்போல் மக்களின் வரிப்பணம் விரயமாகிறது!!

இது குறித்து, இவ்வளவு புகார்கள் வந்தும், விசாரணை செய்ய முன்வரவில்லை, நேரு சர்க்கார். ஆனால் வேதனை மட்டும் கொள்கிறார். அதுவும் யார் மீது? வெளி நாடுகளுக்குச் செல்லும் இந்தியர், தனது ஆட்சியைப் பற்றிப்புகழ்ந்து பேசுவதில்லையாம்; இகழ்ந்து பேசுகிறார்களாம்—இதைக் குறிப்பிட்டு வேதனைப் படுகிறார். போவோர் கூறியா தெரிந்து கொள்ளவேண்டும்? ஆங்காங்கே இருக்கும் தூதுவர்களின் செய்கைகளே போதுமே! இவ்வளவு அவலட்சணத்திலிருக்கும் டில்லி, எதற்கெடுத்தாலும் 'ஐந்து வருஷத் திட்டங்கள்' என்று கூறிக்கொண்டு, அதற்கு அமெரிக்கா பணம் தரும்' என்று பேசிய வண்ணம் இருக்கிறது.

*   *   *

இந்த ஆண்டு பட்ஜெட்டைப் பார்த்தால், மாகாணங்களிலிருந்து செல்லும் வரி இனங்கள், டில்லி கஜானாவுக்கு அதிகப் பணம் குவிப்பதை அறியலாம். மாகாணங்கள் அதிகப்பணம் தருகின்றன! ஆனால், அவைகளுக்குத்தரும் 'மான்யமோ' ரத்து செய்யப்படுகிறது!!

ஊழல்—விரயம்—துரோகம். இதுதான் டில்லியின் நிர்வாகம்: இதை எத்தனை நாட்களுக்குத்தான் நாம் சகிப்பதோ?

☆

## "இமயம்"

ஆசிரியர்: எஸ். எஸ். மாரிசாமி

'காண்டீபம்' இதழின் ஆசிரியராகயிருந்து பணியாற்றிய நண்பர் எஸ். எஸ். மாரிசாமி அவர்கள் துவக்கியிருக்கும் 'இமயம்' இதழ் வரப்பெற்றோம். வாசகர்களின் மனதைக் கவரக்கூடிய பல பகுதிகள் உள்ளன. விலை அணா 3. முகவரி: நிர்வாகி "இமயம்" பூந்தமல்லி ஹைரோடு, சென்னை 3.



# குரங்காட்டம் பாரீர்

வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த, குடியேற்றத்தில், சென்ற ஆண்டு வள்ளுவர் நூல் நிலையம் நடத்துவதற்காக தோழர் கே. ஆர். ராமசாமி அவர்கள் நடிக்கும் 'ஓர் இரவு' நாடகம் தி. மு. கழக சார்பில் நடத்தினார்கள். அப்பொழுது நாடகங்களுக்கு வரி உண்டு. நூல் நிலையத்திற்காக நிதி நாடகம் என்று காட்டி, வரி விலக்கு பெற்றார்கள். ஆனால் இப்பொழுது ஏதேதோ காரணங்காட்டி, வரி கட்டச்சொல்லி தொல்லை தருகிறார்கள் ஆட்சியாளர்கள். தோழர்கள் எங்கே செல்வார்கள்? எல்லாம் நூல்களாகவும், நூல்நிலையச் சாமான்களாகவும் மாறியிருக்கின்றன. ஆட்சியாளர் குரங்காட்டம் ஆடுகிறார்கள். அதற்கு இது அருமையான உதாரணம்! ஆனால், வரி கட்ட இயலவில்லையென்று, நிலைமையை விளக்கி, குடியேற்றம் தி. மு. க. செயலாளர் கு. கி. பொன்சாமி அறிக்கை வெளியிட்டுள்ளதைக் கீழே காணுங்கள். மக்கள் மன்றத்திற்கு வழக்கு வந்துவிட்டது. பொதுமக்களே, தீர்ப்பளியுங்கள்!

## பொதுமக்களே! தீர்ப்பளியுங்கள்!!

15—3—51ல் வள்ளுவர் நூல் நிலைய உதவி நிதி—நாடகம் ஓர் இரவு—நடத்த நாடக வரிக்கு விதிவிலக்கு அளிக்கும்படி குடியேற்றம் விற்பனைவரி அதிகாரிக்கு மனு போட்டோம்.

16—3—51ல் குடியேற்ற விற்பனைவரி அதிகாரி M. E. T. E 2/51 உத்திரவுபடி வரிவிலக்கு அளித்தார்.

25—3—51ல் ஓர் இரவு நாடகம் நடைபெற்றது.

19—5—51ல் குடியேற்றம் கிளை ஆபீசிலிருந்து மேற்படி 16—3—51ல் அளிக்கப்பட்ட வரிவிலக்கு அரசாங்கத்தாரலேயே முறை தவறி அளிக்கப்பட்டதின் காரணமாக செல்லுபடியாகாதென்றும் வரிவிலக்கு தரப்பட்ட ரூ 384—10—0ம் உடனடியாகக் கட்டப்படவேண்டும் என்ற உத்திரவு பிறந்தது.

5—6—51ல் R. C 136/51 படி வடஆற்காடு மாவட்ட விற்பனைவரி அதிகாரியின் ரூ. 384-10-0ம் கட்டப்படவேண்டும் என்ற உத்திரவு.

12—6—51ல் தி. மு. க. காரியதரிசி அவர்களால்குடியேற்றம் கிளை அதிகாரிக்கு (1) வடஆற்காடு மாவட்ட அதிகாரிக்கு (2) அப்பீல் மனுக்கள்.

அப்பீல் மனு வாசகச் சுருக்கம்: 16—3—52ல் வரிவிலக்கு அளிக்கப்பட்டதால்தான் நாடகம் நடத்தப்பட்டது இல்லையெனில் நடந்திராது. மேலும் செலவினங்களும், நூல்நிலைய ஏற்பாடுகளும் அரசாங்க சட்டதிட்டங்கட்குட்பட்டு செய்திருப்பதாலும், வந்த பணம் பூராவும் நூல் நிலையத்திற்குச் செலவழிந்து விட்டதாலும், மீதி ஒரு செல்லாக் காசும் இல்லாததால் 16—3—51ல் தந்த வரிவிலக்கை ஊர்ஜிதம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

11—8—51ல் மீண்டும் எங்கள் 12—6—51ல் போடப்பட்ட மனுவைக் கிஞ்சித்தும் ஏறெடுத்துப் பார்க்காமல் குடியேற்ற விற்பனைவரி அதிகாரி ரூ 384-10-0ஐயும் கட்டிவிடும்படி உத்திரவு

10—9—51ல் காரியதரிசிக்கு மேல்படி கிளை ஆபிசிலிருந்து நேரில் வரும்படி சம்மன்.

15—9—51ல், குடியேற்றம் அதிகாரிக்கு 25—9—51ல் வடஆற்காடு மாவட்ட அதிகாரிக்கு முறையே அப்பீல் மனுக்கள்.

11—11—51ல் வடஆற்காடு மாவட்ட அதிகாரியிடமிருந்து 15—9—51லும் 25—9—51லும் செய்யப்பட்ட அப்பீல் மனுக்கள் காலதாமதத்தில் செய்யப்பட்டதால் செல்லாது என்றும். உடனே ரூ 384-10-0ம் கட்டப்படவேண்டுமென்றும் உத்திரவு. ஆனால் 12—6—51ல் காரியதரிசி அவர்களால் காலா காலத்திலேயே செய்யப்பட்ட மனுவைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லை.

14-11-51ல் எங்கள் 12-6-51, 15—9—51, 25—9—51. மனுக்களைச் சாப்பிட்டுவிட்டு, குடியேற்றம் கிளை ஆபீசிலிருந்து, காரியதரிசிக்கு உண்மையில் அப்பீல் செய்வதாயிருந்தால் ரூ. 384—10—0 கட்டுவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க (Stay-Order) வாங்கும்படி உத்திரவு போட்டு திணறடித்தது.

(Personal Hearing) நேரில் குறைதெரிவிக்க காரியதரிசி அவர்களால் வேலை மாவட்ட அதிகாரிக்கு அனுமதி மனு. அனுமதி பறக்கப்படவே நம் ஊர் வாசியும் வேலைமா நகரில் சட்டநிஞர் துறையில் அரிமா எனத்திலங்கும் உயர்திருவாளர். C. V. சதாசிவம் B. A., B. L. அவர்கள் ஊதியம் ஏதும் பெறாமல் மனமுவந்து வாதாடினார்கள்.

அன்னாருக்கு பொதுமக்கள் சார்பில் என்றும் குன்றா நன்றி!

27-1-52ல் நேரில் குறை தெரிவிக்க அனுமதி.

21-2-52ல் மீண்டும் வேலைமாநகரில் நம் ரிகார்டுகளைப் பரிசீலனை செய்தப்பிறகும், சாமான்கள் வாங்கியதற்கான ரசீதுகள் நேரில் காட்டப்படவேண்டும் என்ற மாவட்ட அதிகாரியின் உத்திரவு.

27-2-52, 4-3-52, 12-4-52ல் வேலூரில் தக்க ரசீதுகளுடனும் உள்ளூர் பிரமுகர்களால் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களால் அளிக்கப்பட்ட உறுதிமொழி பத்திரத்தையும் காட்டி விளக்கியும்,

14-4-52ல் Roc. 224/51 படி ரூ. 384-10-0ம் கட்டப்படவேண்டும் என்ற வேலை மாவட்ட அதிகாரியிடமிருந்து உத்திரவு.

மேற்கண்ட உத்திரவை பார்க்கும் போது 16-3-51ல் வரிவிலக்கு அளிக்கப்படுவதேன்? 19-5-51ல் பணம் பூராவும் நூல் நிலையமாகக் காட்சியளிக்கின்றது. ஒருசெல்லாக்

காசும் கிடையாது என்று தக்க சான்றுகளுடனும், ரிகார்டுகளுடனும், உள்ளூர் பிரமுகர்கள் M.A.V. துரைசாமி, முனிசிபல் கவுன்சிலர். V. ராமசாமி, முனிசிபல் கவுன்சிலர் K. முத்துசாமி நகர வரிகொடுப்போர் கழகத் தலைவர் மற்றும் சிலர் கூடியபரிசீலனைக்கமிட்டியின் உறுதிமொழி பத்திரத்தைக் காட்டி வழக்கறிஞரைக்கொண்டு நாங்கள் ஆதி முதல் அந்தம் வரை அரசாங்க சட்டதிட்டங்கட்குட்பட்டே செய்துள்ளோம் என்பதை நிரூபித்தாங்கூட, இந்த ராமராச்சிய ஆளவந்தார் ஆட்சியில் ரூ. 384–10–0ம் கட்டும்படி உத்திரவு பிறப்பிப்பது நீதியா? முறையா? நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.

தி. மு. க. சார்பில் நாடகம் நடைபெற்றது—நூல் நிலையம் தோற்றுவிக்கப் பட்டது அதை அனுமதிக்கக்கூடாது என்று யாரோ இன எதிரிகள் விஷமம் செய்தால் அரசாங்க அலுவலகத்தாரும் முன் பின் யோசிக்காமல் பணம் கட்டு, என்று உத்திரவு அம்புகளால் துளைத்தால் ஒருகாசும் மிதமில்லா நிலையில் தி. மு.க. காரியதரிசி எங்ஙனம் கட்டுவார்? நிலத்தீர்வை கட்டத்தவறினால் வசூல் செய்ய என்ன முறை கையாளப்படுகிறதோ அம்முறையே கையாளப்பட்டு ரூ. 384–10–0ம் வசூலிக்கப்படும் என்ற அரசாங்க எச்சரிக்கை வரப்பெற்றுள்ளோம். நாங்களும் ஆளவந்தாருக்குப் பதில் எச்சரிக்கை விடுகிறோம்.

ஏ, அரசாங்கமே! நாடக வசூல் அனைத்தும் புத்தக உருவிலே, பொது மக்கள் பலருக்கு போதிய அறிவை பயக்கிற வண்ணமிருக்கிறது. இந்நிலையில் நீ மிரட்டுகிறாய். சுதந்திரம் வந்ததாகக்கூறிக்கொள்ளும் இந்த நாட்டிலே பேசுவதற்கு தடை, எழுதுவதற்கு தடை, நாடகத்திற்கு 144, நூல் நிலையத்திற்கு மூடுவிழா. இம்மாதிரி பலவகையில் அறிவை குறைப்பதற்கென்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறாய். ஆனால், பொதுமக்களின் உரிமைபுகை உங்களை கவ்விக்கொள்ளும் நாள் தொலைவில் இல்லை என்று துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

❀

5-ம் பக்கத் தொடர்ச்சி

"பத்திரிகையில் வந்த சேதிகளைக் கொண்டுதானே அவர்களிருவரும் பேசிக் கொண்டார்கள்"

"ஆமாம்!"

"கோவையில் ஆச்சாரியார் பேசியிருக்கிறாரே—அதைப்பற்றித்தானே வைகுண்டத்தையும் கைலாயத்தையும் கேலி செய்தார்கள்"

அவருடைய கண்களில், ஒருவித கோபப்பார்வை படர்வதைக் கண்டேன்.

"என்ன ஐயா பேசினார் ஆச்சாரியார்?"

"மாரியம்மனைக் கும்பிடுங்கள்—தர்மம் தழைக்கப் பாடுபடுங்கள், பக்தி மார்க்கம் பெருகவேண்டும். நான் கொடுத்திருக்கும் போர், இவைகளை நம்பாதவர்கள் மீதுதான்—இப்படியெல்லாம் பேசியிருக்கிறாரே. பத்திரிகைகளில் கொட்டை கொட்டையாகப் போட்டிருக்கிறார்களே! அதைப்பற்றித்தானே அவர்கள் கிண்டலாகப் பேசிக் கொண்டார்கள்"

"போய்யா! பத்திரிகையிலே பெரிய தலைப்பிட்டு வரும் சேதியைப் படிப்பதோடு சரிபோலும் நீர். அவங்க, என்னமோ, பிரமாதப் படுத்தறாங்க. அவரும் வாய்க்கு வந்தபடியெல்லாம் கொட்டறாரு. நீர் என்னமோ அதை பிரமாதமா நினைக்கிறீர்? யார் அய்யா கவலைப் படறாங்க இப்ப அதைப் பத்தியெல்லாம்..."

"சி. ஆர். பேச்சை, நீங்கள், படிக்கலியா?"

"படிக்கிறது வேறு—கவலைப் படறது வேறு. ஏதோ, அந்த மனுஷன், பேசித் திரியறாரு—விஷமத்தோடே செய்யறாரு. அதைப் பற்றி நமக்கென்ன? ஆகாய விமானம் இருக்கிற காலத்திலே புஷ்பக விமானக் கதையையா கேட்க முடியும்!"

"அவர் செய்ற விஷமத்தை இப்படியே விடறதா?"

"விடாமே! தள்ளுகின்ற கிழமாட்டை அதன் போக்கிலே விட்டா, கொஞ்ச நேரத்திலே, அடங்கிட்டுப் போவுது. சம்பங்கித் தோட்டத்திலே 'சாக்கடையின் மணம்' குறித்துப் பேசினா யார் தான் நம்புவா? முன்னேயும் உலகை இவர்தானு முட்டுக்கட்டையிட்டுத் தடுத்துவிட முடியும். சும்மா 'கப்சா' விடறாரு..."

"அப்படின்னா அவர் பேச்சைக் குறித்துப் பேசலியா, அவர்களிருவரும்"

"நீர்தான் ரொம்ப கவலைப் படறீர்—அவர்கள் பேசிக்கொண்டது வேறு விஷயம். பக்தி மார்க்கம் அல்ல—எப்படி சுகமா இந்த வெயில் காலத்தைக் கழிக்கலாம் என்பது!"

"வெயிலுக்கும் வைகுண்டத்துக்கும்?"

"தாங்க பத்திரா நதி இல்லே."

"ஆமாம்! இருக்கு. அங்கே ஒரு கரையிலே வைகுண்டம் இருக்கு—அடுத்த கரையிலே கைலாயம்னு ஒரு 'ரெஸ்ட்' ஹவுஸ் இருக்கு"

"ஆமய்யா, ஆமாம்! கோடையில் குளு குளுவென்று இருக்குமாம்—அங்கே போவதைப் பத்தித்தான் அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்"

"கைலாசம்போனு 'ஜகஜ்ஜோதி'யைக் காணலாம் என்றார்களே?"

"ஓ! அதுவா? துங்கபத்ராவின் அடுத்த கரையிலே இருப்பது ஐதராபாத்...சமஸ்தானமல்லவா?"

"ஆமாம்!"

"அங்கே யிருப்பது கைலாயம்—இந்தக் கரை சென்னை மாகாணம். இங்கே இருக்கும் உல்லாச வீட்டின் பெயர் வைகுண்டம். ஐதராபாத்திலே மதுவிலக்கு உண்டோ?"

"கிடையாது மது கிடைக்கும்"

"அதுதான் 'ஜகஜ்ஜோதி'—புரியுதா? எதிருக்கெதிரே வைகுண்டமும் கைலாசமும் இருக்குதாம்!

கைலாசத்திலிருப் போரைப் பார்க்க வைகுண்டத்திலிருப்பவர்கள் வயிறு எரிகிறதாம். "பூப் போட்ட கிளாசிலே போடய்யா ஒன்னைறை!"—இது, கைலாசத்தில். 'ஆரஞ்சு ரசமா—தக்காளி சூப்பா'—இது வைகுண்டத்தில். வைகுண்ட வாசிகள், அக்கரையிலிருப்போரின் சுகம் கண்டு பொறுமைப் படுகிறார்களாம். 'வைகுண்ட வாசம்' சொந்தக்காரரும் வருந்துகிறாராம்—வருமானம் குறைகிறதாம்! வருவோர்—நேராக 'கைலாசம்' போய் விடுவதால்!! போட்டி சொர்க்கம் போல — வைகுண்டமும் கைலாசமும் இருக்கிறதாக பி. டி. ஐ. நிருபர், எழுதியிருக்கிறார்"

❀



# மறைந்த மஜீத்

நெல்லிக்குப்பத்தின் நெடு வீதிகளை யெல்லாம் தாண்டி, சின்னஞ் சிறு சந்துக்குள்ளே புகுந்து அழைத்துச் சென்றார்கள். அந்த சந்து, சாக்கடையும், சகதியும் இரண்டு பக்கங்களிலும் புடைசூழ, காட்சியளித்தது! அந்த சந்தைத் தாண்டியவுடன், சிறு மைதானம். அதில் நாலைந்து சிறு கூரை வீடுகள். அதிலே, கூரையும் சிதைந்து ஒரு குடிசை வீடு. அதன் முன்னால் போய் நின்றோம்.

தோழர்கள், வீட்டிலிருப்போர்களை அழைத்தார்கள்.

வயதான கிழவி வெளியில் வந்தார்கள். அக்கம் பக்கம் ஓடி ஈச்சம் பாய்களை வாங்கிவந்து, சுதசுதவென நீரோதம் நிரம்பிக் கிடந்த தரையின் மீது விரித்தார்கள். எங்கோ ஒரு வீட்டிலிருந்த கயிற்றுக் கட்டிலை இழுத்து வந்து போட்டார்கள்.

பக்கத்து வீட்டிலிருந்தவர்கள் விரைந்து சென்று, சிறுவனொருவனை அழைத்து வந்து நிறுத்தினார்கள்.

மஜீத் குடும்பத்தை நேரில் காணச் சென்றவர்கள் கண்ணீருடன் தான் திரும்ப முடியும்.

அவர்கள் குடும்பம், ஏழ்மைக்கு இலக்கியம்! வறுமைக்கு உதாரணம்!!

மஜீத் தந்தை வயதானவர்—வாழ்வின் அந்தி நேரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்.

ஷேக்பாபு என்று கூறினால் அந்த ஊர் மக்களுக்கு நன்குத் தெரியும். ஏனெனில் அவர் தொழில் கலாய் பூசுதல். ஆகவே, அந்த ஊரில் எந்த வீட்டுப் பாத்திரமும், அவரது கையால் ஈயம் பூசப்படாமலிருக்க முடியாது. அவர் தெருக் கோடிகளில் துருத்திக்கு இடம் அமைத்து, தொழில் தொடங்கும் பொழுதெல்லாம், துணை புரிவாள், அவர் மனைவி தாவுத்தம்மாள்.

இந்த இருவர் பெற்றெடுத்தவரோ ஒன்பது பேர். ஐந்து குழந்தைகள், இளமையிலேயே இறந்து விட்டன.

மிகுதி நால்வரில் மூத்த சகோதரிக்கு திருமணம் முடிந்துவிட்டது. இளைய சகோதரி ஜீனத் பாய், தம்பி அப்துல் கரீம் இருக்கிறார்கள், மறைந்த மஜீதுக்கு.

பழுத்த இலைகளும், பசுமை நிறைந்த துளிர்களும்தான் மிச்சம் இவைகளைக் காப்பாற்றும் பொறுப்பிலே இருந்த மஜீத் மறைந்து விட்டான்.

மஜீத், குள்ள உருவமானாலும், கொள்கையிலே, மிக உயரம். திராவிட கழகத்திலே பணியாற்றிய பொழுதும், பிரிந்து முன்னேற்றக் கழகம் அமைத்த பொழுதும் மஜீத்தின் தொண்டு, நல்ல முறையில் பயனளித்தது.

அண்மையிலே வந்து போன தேர்தலில், காங்கிரசுக்கு எதிராக இருந்து பணியாற்றினான். தெருத் தெருவாக சென்று, ஊழல் மலிந்த காங்கிரசின் கேடுகளை மக்களுக்கு எடுத்துரைத்தான்.

தென்னாற்காடு மாவட்டம், இந்தத் தேர்தலால், இந்தியாவிற்கே ஒரு அபாய அறிவிப்பாக அல்லவா மாறிவிட்டது.

இந்த மாவட்டம், நேருவுக்கு நெஞ்சிலே நடுக்கத்தை தந்துவிட்டது.

இந்த மாவட்டம், வடநாட்டு முதலாளிமார்களுக்கு எச்சரிக்கையல்லவா, விட்டது, கோயங்காவை விரட்டியடித்தது மூலம்.

இந்த மாவட்டம், காங்கிரசுக்கே சாவுமணியடித்து விட்டது.

இதற்கு மஜீத் போன்றவர்களின் தொண்டுதானே காரணம் என்று கண்ட ஒரு காங்கிரஸ் வெறியன், காரணன்.

கண்ணன் என்ற பெயருடைய பாதகன் 24—1—52 அன்று இரவு 10–30 மணிக்கு, ஆலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த மஜீதை, கத்தி கொண்டு தாக்கினான். கொலை செய்து விட்டோடினான்.

வழக்கு பதிவாகி நடந்து வருகிறது. இதோடு நான்கைந்து வாய்தாக்கள் போட்டு விட்டார்கள்.

கண்களை இழந்துவிட்டதுபோல், தடுமாறுகிறார்கள், மஜீதின் குடும்பத்தினர்.

தந்தைக்கு தள்ளாத வயது — எந்த வேலையும் செய்துபிழைக்கும் பருவம் கடந்துவிட்டவர்.

தாயும் அப்படியே—என்னசெய்யும்? பிஞ்சுக் குழந்தைகள்தான், மற்ற இரண்டுபேரும்.

தம்பி ரகிமை, ஆலையில் சேர்த்துக்கொள்ளும்படிக் கேட்டால் வயதாகவில்லையென்று திரும்பியனுப்புகிறார்கள்.

அன்றாட வாழ்க்கைக்கே, அலைமோதுகிறார்கள்.

இந்த ஏழைக்குடும்பத்தின் நிலையைக்கண்டு, கொள்கைக்காக உயிர் விட்ட ஒரு வீரனின் குடும்பம் இப்படித் தவிக்கப் பார்த்திருப்பது சரியல்லவென்று ஒரு நிதிதாருடிவு செய்து, நிதியும் சேர்ந்துவருகிறது.

நெல்லிக்குப்பத்திலேயே, ஒரு நிதிக் கமிட்டி அமைத்தார்கள்—ஆரம்பத்தில். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் சி. என். ஏ. அவர்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளதால், அவர்கள் தாங்கள் சேர்த்துள்ளதொகையை காஞ்சிக்கு அனுப்பிவிடுவதாக அறிவித்துள்ளார்கள்.

அந்தக் குடும்பம், நம் உதவியைத் தினந் தினம் எதிர்பார்க்கிறது. மஜீத் மரணத்திற்குப்பிறகு, இன்று வரை, நகர தி. மு. க. உதவியால் தான் குடும்பம் நடைபெற்று வருகிறது. ஆகவேதான் நிதி முயற்சியை விரைவில் முடிக்கவேண்டும்.

அந்த மாவட்டத்தில், காங்கிரசுக்கு எதிர்ப்பாக நின்ற எம். எல். ஏக்கள் மனம் வைத்து, இந்தஏழை குடும்பத்திற்கு உதவி செய்திருக்க வேண்டும். ஒருவர், இருவர் உதவியிருந்தாலும், எல்லோரும் செய்ய வேண்டும்.

மற்றும் கழகத்தோழர்கள், விரைவில் நிதி உதவி, தவிக்கும் குடும்பத்திற்கு ஆறுதல் கூறவேண்டும்.

தோழர்களே, நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் என்றஅடியைநினைவு படுத்திக்கொள்ளுங்கள்.

## மஜீத் நிதி விவரம்

| | |
|---|---|
| முன் வரவு | 663—1—10 |
| ஆ. சுப்பையா | 2—0—0 |
| சுப. முத்து வேல் | 1—0—0 |
| பொ. ரெங்கசாமி | 1—0—0 |
| சுப. ஆறுமுகம் | 1—0—0 |
| சோ. பொன்னப்பா | 1—0—0 |
| செ. ராமசாமி | 1—0—0 |
| ந. கருப்பையா | 1—0—0 |
| பொ. கிருட்டினன் | 1—0—0 |
| சொ. சுப்பிரமணியன் | 1—0—0 |
| சு. அ. மோகன் | 1—0—0 |
| க. வேலாயுதம் | 1—0—0 |
| ராம. சிலையப்பன் | 1—0—0 |
| ராம. நாராயணன் | 1—0—0 |
| கு. ம. சொக்கலிங்கம் | 1—0—0 |
| புதியம்புத்தூர் எம். துரை பாண்டியன் | 0—8—0 |
| பட்டுக்கோட்டை ஏ. டி. எம். சிவகங்கை | 1—0—0 |
| ஜலகண்டாபுரம் ஸ்டூடன்ஸ் வாலிபால் கிளப் தோழர்கள் | 5—4—0 |
| காவனூர் புருஷோத்தம் | 0—8—0 |
| ராமசந்திராபுரம் பி. நாராயணன் | 1—0—0 |
| பெரியமங்கலம் முகம்மது | 0—8—0 |
| சைதாப்பேட்டை ஆர். சகுந்தலா | 1—0—0 |
| மீர்சாபேட்டை, வள்ளுவர் இலவச வாசகசாலை மூலம் | 10—0—0 |
| கடையநல்லூர் தி. மு. க. | 6—2—0 |
| பட்டிவீரன்பட்டி தி. மு. க. | 9—4—0 |
| குடந்தை தி. மு. க. | 6—0—0 |
| கம்பம் தி. மு. க. | 35—0—0 |
| திருவாங்கூரைச் சேர்ந்த வண்டிப் பெரியார் வசூல் | 34—0—0 |
| பாம்பனூர் வசூல் | 11—0—0 |
| எம். அஹ்மா | 0—4—0 |
| எம். அப்துல்கரீம் | 0—8—0 |
| எம். முஹம்மது ஜவுபர் | 0—4—0 |
| கே. சுல்தான் | 0—4—0 |
| எச். ஏ. அஜீஸ் | 0—2—0 |
| எம். செவத் | 0—8—0 |
| எம். அப்துல்கபூர் | 0—2—0 |
| எம். ஏ. ஜப்பார் | 0—2—0 |
| கே ஜாஹிர் | 0—4—0 |
| மு. க. முஸ்தாபா | 0—2—0 |
| எஸ். கெய்னு | 0—2—0 |
| எம். செய்யது | 0—2—0 |
| எம். அஹ்மது | 0—3—0 |
| எம். முஹம்மது சாகிது | 0—4—0 |
| எம். அப்துல்காதர் | 0—2—0 |
| எஸ். செல்லா | 0—2—0 |
| ஓ. வகாப் | 0—2—0 |
| எச். முகம்மது சாலிஹ் | 0—2—0 |
| எச். சாரீது | 0—4—0 |
| கே. நத்தர்சா | 0—2—0 |
| இ. சுல்தான் | 0—2—0 |
| என். டி. எம். கனி | 0—2—0 |
| ஜே. எம். அஹமது ஷரீபு | 0—2—0 |
| ஏ, ஜக்கிரியா | 0—2—0 |
| எஸ். அப்துல்ஹமீது | 0—2—0 |
| ஜே. காதர்பாட்சா | 0—4—0 |
| ஆர். அப்துல்லெத்தீபு | 0—4—0 |
| எம். இஸ்மாயில் | 0—4—0 |
| எஸ். யாகூபு | 0—3—0 |
| கே. தாஹிது | 0—4—0 |
| ஒய். சுபுஹான் | 0—2—0 |
| பி. என். கிருஷ்ணசாமி | 1—0—0 |
| ஆர். கல்யாணசுந்தரம் | 1—0—0 |
| கோடி | 1—0—0 |
| வாசுதேவன் | 1—0—0 |
| லக்குமணன் | 1—0—0 |
| ராமானுஜம் | 1—0—0 |
| நடராஜன் | 1—0—0 |
| நடேசன் | 1—0—0 |
| வெங்கிடுசாமி (ஏஜெண்ட் திராவிடநாடு) | 1—0—0 |
| வெங்கிடுசாமி மூலம் | 1—8—0 |
| சௌந்திரபாண்டியன் | 0—8—0 |
| மாரி | 0—8—0 |
| இராமசாமி | 0—8—0 |
| வீரப்பன் டி. எம். | 0—4—0 |
| நம்மாள்வார் | 0—8—0 |
| வி. எஸ். மணி | 0—4—0 |
| பி. கே. நடராஜன் | 0—8—0 |
| எஸ். முத்து | 0—8—0 |
| டி. எஸ். எஸ். என். | 0—4—0 |
| மந்திரிகருப்பன் | 0—4—0 |
| அ. மா. பெரியசாமி | 0—8—0 |
| முருகூர் ஆர். தொரசாமி | 0—4—0 |
| துரையூர் டி. என். அப்பாஜி | 0—8—0 |
| கோவிலூர் எஸ். விஸ்வநாதன் | 0—4—0 |
| கொழும்பு கே. நடராசன் | 5—0—0 |
| சென்னை ராசகோபாலன் | 3—0—0 |
| சென்னிமலை தி. மு. க. | 5—0—0 |
| தாதாபுரம் தியாகராயர் படிப்பகம் | 1—0—0 |
| சக்கரமல்லூர் ராமசாமி | 0—8—0 |
| „ எம். விநாயகம் | 1—0—0 |
| „ தி. க. ராமலிங்கம் | 0—4—0 |
| „ வி. ஏ. நடராசன் | 0—4—0 |
| சங்கரநயினார்கோவில் தி. மு. க. செயலாளர் மூலம் | 5—2—0 |
| சென்னை பாரதிதாசன் நூல் நிலையத்தார் | 5—9—0 |
| திண்டுக்கல் டி. நாராயணன் | 3—0—0 |
| மொத்தம் வரவு ரூ. | 851—2—10 |

## தஞ்சை மாவட்ட பிரச்சார பயிற்சி வகுப்பு

தஞ்சை மாவட்ட பிரச்சார பயிற்சி வகுப்பு 1952 ஜூன் திங்கள் 12, 13, 14, 15 நாட்களில் கும்பகோணம் டவுனை அடுத்துள்ள, தேப்பெருமா நல்லூரில் (திருநாகேஸ்வரம் ரயில் நிலையத்துக்குப் பக்கத்தில்) நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, பெரு நிலக்கிழார் அவர்கள் தங்கள் பங்களாவில் நடத்தித்தர முன்வந்துள்ளார்கள்.

பிரச்சார பயிற்சி வகுப்பைத் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., என். எஸ். இளங்கோ ஆகியோர் நடத்திவைப்பார்கள். பயிற்சி வகுப்பில் தஞ்சை மாவட்டத்தினர் மட்டுமே கலந்துகொள்ளவேண்டும் மாணவர்களுக்கு மட்டுமே வகுப்பில் சேர்ந்துகொள்ள முதன்மையும் முக்கியத்துவமும் அளிக்கப்படும்.

பயிற்சி வகுப்பில் சேருவோர் முன்பே மேடை ஏறிப்பேசிப் பழக்கப்பட்டவராகவும் பயிற்சி மட்டுமே பெறவேண்டியவராகவும் இருக்க வேண்டும்.

வகுப்பில் சேர விரும்புவோர் அவர் பேச்சாளர் என்பதற்கு அந்தந்த ஊர்க் கிளைக் கழகத்தின் முத்திரையும் கிளைக் கழக செயலாளரின் கையொப்பமும் வாங்கி விண்ணப்பத்தாள்களை கே. கே. நீலமேகம் செயலாளர் மாவட்ட தி. மு. கழகம் பஞ்சுக்காரத் தெரு, கும்பகோணம் என்ற முகவரிக்கு 5—6—52-க்குள் அனுப்பிவைக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே பதில் வரையப்படும் அழைப்பு பெற்றவர்களே வகுப்புக்கு வரவேண்டும்.

போக்குவரத்து வழிச் செலவுகள் பயிற்சி பெறுவோரைச் சார்ந்தவை ஒவ்வொருவரும் சொந்தப் படுக்கையுடன் வரவேண்டும்.

இடவசதி சாப்பாடுவசதி மட்டும் செய்து தரப்படும்.



2-ம் பக்கத் தொடர்ச்சி

தின் மூலம் தருகின்றனர்—‘கஜானு’விலிருந்து எடுத்துக்கொடுக்க அனுமதிக்கின்றனர்.

“நான்” கூடாது — “நாம்” வேண்டும் என்பதற்காக; “சர்வாதிகாரம்” இல்லாத “ஜனநாயக” ஆட்சி நடைபெறவேண்டும் என்கிற ஆசைக்காக; இவ்வளவு செலவையும் ஏற்றுக்கொள்கிறது, மக்கள் மன்றம்.

தினசரி ரூ 30,000! அகில இந்தியப் பார்லிமெண்டுக்கு!! இந்த சபையிலேதான், இந்திய ஜனாதிபதி ராசேந்திரபிரசாத், கடந்த 16ந் தேதி பிரசங்கம் செய்திருக்கிறார்—அவரது பேச்சில் அடிக்கடி தொனித்த குரல் நம்மைத் திடுக்கிடச் செய்தது. ராசேந்திரர், சக்கரவர்த்தியல்ல; நாம் அறிவோம்—நல்லவர் என்று கூறப்படுவர். சர்வாதிகாரியும் அல்ல! ஆனாலும், பழைய பாணியிலேயே, அவரது பிரசங்கத்தில் வார்த்தைகள் வந்து விழுந்திருக்கின்றன—அல்ல! அல்ல!! ஜனாதிபதியின் பிரசங்கம் கவனத்தோடு தயார் செய்யப் படுமாம் — ஆகவே சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்திய பார்லிமெண்டு ஜனநாயகப் பிரதிநிதிகள் அடங்கிய கூடம் என்று சொலலப்படுகிறது—அதற்காக நாளொன்றுக்கு ‘முப்பதினாயிரம்’ செலவிடப்படுகிறது. அங்கே பேசுகிறார்—ராசேந்திரபிரசாத் அல்ல—ஜனாதிபதி. எவ்விதம்? “என்னுடைய சர்க்கார்” (My Government) இங்கிலாந்தில் இவ்விதம் பேசப்பட்டால் ஐயம்கிளம்பாது எவருக்கும்! ஆனால் இங்கே பேசப்படுகிறது — குடியாசு எனக் கூறப்படும் இங்கே “நான்” என்கிற தொனி எழும்புகிறது. “இதிலென்ன குற்றமாம்? அவருடைய காங்கிரஸ் சர்க்கார்தானே ஆள்வது!” என்று சிலர் கேட்கவிரும்பலாம். உண்மை! ஆள்வது அவரது காங்கிரஸ் சர்க்காராகவேயிருக்கட்டும். அதனால் என்ன? ஏனிந்த அவசியம் வந்தது, ‘என்னுடைய’ என்று குறிப்பிட! அதைவிட அருமையான சொல் இல்லையா? கவுரமான வார்த்தை இருக்கிறதே—அவரே சில சமயங்களில் கூறியிருக்கிறாரே—Our Government என்று! “நம்முடைய”—“என்னுடைய” இரண்டு வார்த்தைகளுக்கும் இடையே இருக்கும் வித்யாசம் இலேசா என்ன? மககள் சர்க்கார்—தனிமனிதன் சர்க்கார். இரண்டையும் பிரித்துக் காட்டுவதுதானே ‘எனது’ ‘நமது’ என்னும் வார்த்தைகள். ஏனிதை விட்டுவிட்டு ‘என்னுடைய’ என்று குறிப்பிடவேண்டும் அவர். ராசேந்திரர் மன்னனல்ல; மமதை நிரம்பிய சர்வாதிகாரியுமல்ல; பின், ஏன், ‘எனது’ வந்தது? ‘நமது’ வரவில்லை! என்ன காரணம் இதற்கு?

ராசேந்திரபிரசாத் மட்டுமல்ல, அவரது ஆசனத்தில் அமரும் எவரும் இப்படித்தான் பேசுவர். ‘முப்பது கோடிமக்களின் ஏக தலைவர்’ என்கிற, முழக்கம்தான், இந்திய ஜனாதிபதியாகவரும் எவரது, பேச்சிலும் காணமுடியும். அத்தகைய ஆட்சிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது காங்கிரஸ் மூலவர்களால்! ஜனநாயகப் போர்வையில் ‘சர்வாதிகாரம்’ பவனி வரும் முறை!! அமெரிக்காவிலும் பிரசிடெண்ட் உண்டு—அவர் மக்கள் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், அளவிலாத அதிகாரங்கள் உடையவர். அப்படியில்லை, இங்கு! மக்கள் மூலம் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவரல்ல இந்திய ஜனாதிபதி. மறைமுகமாக வருபவர். மந்திரி சபையால் கவுரவம் பெறுபவர். இவர் பேசுகிறார், ‘எனது’ என்று! என்ன பொருள் இதற்கு? எப்படியேற்பட்டது இந்தத் துணிவு? எங்கிருந்து வந்தது, இவ்வளவு தைரியம்?

காங்கிரஸ் மூலவர்கள் வகுத்திருக்கும் அரசியல் முறைதான், இத்துணிவையும் உரிமையையும் தந்திருக்கிறது.

முப்பது கோடி மக்களின் முடிசூடா மன்னனாகயிருக்கும் வகையில் வடநாட்டவர் வகுத்திருக்கும் அரசியல் முறைதான், ‘எனது’ என உரிமை கொண்டாடச் சொல்கிறது.

எல்லா மகாணங்களும் அவரது பேனா முனையிலே கிடக்கின்றன.

எல்லா மக்களும் அவரது ‘டில்லி’க்குக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இந்திய உபகண்டம் ஒரே நாடு எனும், விசித்திரத்தை ஸ்தாபிக்கச் செய்துகொண்ட, வேதனையான அரசியல் முறைதான், இது.

இந்த அரசியல் முறை, இப்போது ஆளத் துவங்கிவிட்டது.

இந்த அரசியல் முறையை நாம் மட்டுமல்ல, பற்பலர் கண்டித்தே வந்துள்ளனர். எனினும், இன்று, செங்கோலை ஏந்தத் துவங்கிவிட்டது.

இந்த அரசியல் முறையை வகுத்துக் கொண்டோம் என்கிற துணிவால்தான், ‘டில்லி’ கம்பீரமாகப் பேசுகிறது — ‘நான் கூறுகிறேன்’ என்று, மாகாணங்களைப் பார்த்துப் பேசுகிறார், பண்டித நேரு.

நீண்டு பரந்து கிடக்கும் இம்மாபெரும் உபகண்டமே தமது எனும் தருக்கு, டில்லி மூலவர்களுக்கு, தரப்பட்டிருக்கிறது.

முப்பது கோடி மக்கள்! பற்பல இனம்! பற்பல மாகாணங்கள்! — இதைஆட்டிப்படைக்க ‘ஒருஇடம்’.

* * *

இவ்வளவு தருக்கும், இத்துணை பெரிய உபகண்டத்தை ‘தமது’ என உரிமை கொண்டாடும் வழியும் தரும் வகையில் வடநாட்டு மூலவர்கள் வகுத்துக்கொண்ட அரசு முறையின் ஆபத்து இருக்கிறதே—அது, பசுத்தோல் போர்த்திய புலிபோன்றதாகும்! ஜனநாயகம் பற்றிப் பேசவில்லை ஹிட்லர்! முசோலினியும் ‘ஜனநாயகம்’ குறித்து கவலைப்படவில்லை! ஆனால், இங்கே, ‘ஜனநாயகம்’ பற்றிப்பேசிய வண்ணமே ‘ஹிட்லரும் முசோலினியும்’ உருவாகுகிறார்கள்!! அவர்கள் ‘மாபெரும் சாம்ராஜ்யம்’ என மனக் கனாவோடு உலவினர்—உறுமினர். இவர்களும் ‘அகண்ட இந்துஸ்தான்’ எனும் ஆசையோடு உலவுகின்றனர்— உறுமுகின்றனர்.

பலப்பல மாகாணங்கள் அடங்கியதாகவுள்ள தேசங்கள், உலகில் இல்லாமலில்லை. ஆனால் அந்தத் தேசங்கள் தமக்கு வகுத்துக் கொண்டிருக்கும் அரசியல் முறைக்கும், வடநாட்டு மூலவர்கள் இந்த மாபெரும் உபகண்டத்துக்கு வகுத்துக் கொண்டிருக்கும் அரசியல் முறைக்குமுள்ள தாரதம்யத்தைப் பார்த்தால், டில்லியின் சூது மதி விளங்கும்.

Federal

Unitary—என்று இரண்டு வகை உண்டு, அரசு முறைகளில். பல பிரதேசங்கள், இந்த அரசு முறைகளின் மூலம், ஒன்றாகச் சேர்க்கப்பட்டு ஆட்சி நடைபெறுவதாகும். இந்த இரு முறைகளில்:

பெடரேஷன்: பல மாகாணங்கள் அல்லது ராஜ்யங்கள் அடங்கியதாகும். ஆனால் இதிலிருக்கும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. வெளிநாட்டு விவகாரம் போன்ற சில பொதுப் பிரச்னைகளின் அதிகாரம் மட்டும் பெடரேஷன் சர்க்கார் வசம் இருக்கும். மத்யசர்க்கார் பலம்பொருந்தியதாக இருக்காது — நேசமுள்ளதாக காட்சி அளிக்கும். தனது செல்வாக்கு மூலம் மாகாணங்களின் உரிமைகளை மத்யசர்க்கார் பறித்துவிட முடியாது.

யூனியன்: பல மாகாணங்கள் அல்லது நாடுகள் சேர்க்கப்பட்ட ஒரு 'ஐக்கிய' முறை இது. இங்கே, மாகாணங்களைவிட மத்யசர்க்காரே பலம் பொருந்தியதாக இருக்கும். எல்லா நாடுகளும், தமது அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டதாகவே மத்யசர்க்கார் கருதும்.

இரண்டுவித அரசு முறைகளில், வடநாட்டு மூலவர்கள், எதை தமதாக்கிக் கொண்டுள்ளனர் என்பதை, உலகம் உணரும். 'பெடரல்' —கூட்டாட்சி முறைக்கு பூகோள ரீதியும், இன ரீதியும் வேற்றுமையில்லாமலிருக்கவேண்டுமாம்! இங்கே இதைக் காட்ட முடியுமா? எத்தனை இனங்கள்! எவ்வளவு வேறுபாடுகள்!!—இருந்தும் "இந்திய யூனியன்" என்று, கூறுகிறார்கள். 'தனது' சர்க்கார் என்று பரந்த உபகண்டத்தைக் காட்டுகிறார்கள், உலகுக்கு! எவ்வளவு சூதுமதி இது? ஏனிந்த கோழைத்தனமும் குறும்புச் செயலும் இருக்க வேண்டும்? என்ன காரணம் இதற்கு தமது அதிகாரம், என்று காட்டிக் கொள்ளும் சர்வாதிகார வெறியைத் தவிர?

ஆஸ்திரேலியா, பெடரல் அமைப்புகொண்ட நாடு. அங்கே இப்போது மாகாணங்களுக்கும் மத்திய சர்க்காருக்குமிடையே ஒரு தகராறு வளர்ந்திருக்கிறது. மாகாணங்களுக்கு அந்தக் 'காமன்வெல்தில்' நிறைய உரிமையும் சலுகையும் உண்டு! எனினும் மாகாணங்கள், பெடரல் சர்க்காரை எதிர்த்துத்தோள் தட்டுகின்றன. 'ஏனிந்த அமைப்பு' என்றுகூட கேட்கின்றனராம். பெடரல் சர்க்கார், தமது நிதிநிலையைச் சரிவரக் கவனித்து உதவவில்லையென்பதே, ஆஸ்திரேலியா மாகாணங்களின் கிளர்ச்சியாகும். 'உதவாத கூட்டாட்சி—ஏன்?' என்று உரத்து முழக்கமிடுகின்றனர்.

பெடரல் அமைப்பு கொண்ட அங்கே இந்த 'முழக்கம்' எழும்பத் துவங்கும்போது, மாகாணங்களின் தலையில் கைவைத்தவண்ணமே இருக்கும் இந்திய 'யூனியனில்' எத்தனை நாளைக்குத்தான் டில்லியின் தர்பாரும் 'ஒரே ஆட்சியும், நான் என்கிற மமதையும் நீடிக்க முடியும்? இப்போதே மாகாணங்கள் கேட்கவில்லையா — கோபாலர் (மாஜி அமைச்சர்) குமுறவில்லையா-பலர் கண்டிக்கவில்லையா 'டில்லியின்' போக்கை. மாகாணங்களின் 'குரல்வளை'யை இறுகப்பிடிக்க, டில்லி, ஆயத்தம் செய்யச் செய்ய இந்த உரிமைக்குரல் இங்கே எழும்பத்தான் துவங்கும் — இன்று துதிபாடும் காங்கிரஸ் தலைவர்களே இதைஎழுப்புவர் இந்த உண்மையை உணராமல் டில்லி, கொக்கரிக்கிறது! 'நாம் எல்லாம் ஒன்றன்றோ?' என்று பல்லவி பாடுகிறதல்லவா டில்லி அங்கே நடந்த சம்பவத்தைக் கேளுங்கள். கடந்த 20ந்தேதி — டில்லி பார்லிமெண்டிலே பேசிய பஞ்சாபி ராவ் தேஷ்முக் எனும் மத்திய பிரதேச காங்கிரஸ்காரர் தென்னாட்டவரைப் பார்த்து கேலி செய்தாராம்! எவ்விதம்? ஆபிரிக மலான் கூறுகிறானல்லவா நிறத்தைக் காட்டி— அதைப்போல! 'எதிர்கட்சியில் வாதாடும் உறுப்பினர்களின் நிறம் நன்றாக இல்லை' என்றாராம். உடனே ஒரு தென்னிந்தியப் பிரதிநிதி எழுந்து, அவரைக்கண்டித்திருக்கிறார். ஆபிரிகமலான், வடநாட்டில்! நிறத்தைக் காட்டி பரிகசிக்கிறார்கள்!—ஆனால், "இந்தியா ஓர் நாடன்றோ" என்று பாடுகிறார்கள். தென்னிந்தியப் பிரதிநிதிகளைப் பழிப்பது தென்னிந்திய பூமியை அன்றோ பரிகசிப்பதாகும்? அவ்வளவு திமிரும் மமதையும் வளர்ந்து கிடக்கிறது—வடநாட்டவர்களுக்கு! இதை, எத்தனை நாளைக்கு, எவர்தான் சகித்துக் கிடக்க முடியும்! அதிகாரத்தால் அலறிய, மன்னாதிமன்னர்களையும், சர்வாதிகாரிகளையும் கண்டிருக்கிறோம் — சரிதத்தில். இப்போது இங்கே அவர்கள் கையாண்டுவீழ்ந்த "நான் பாதை" அரும்புகிறது — ஆனால் நீடிக்குமா! நிச்சயம் நீடிக்காது. 'அகண்ட சாம்ராஜ்யம்' பேசிய நாஜிசமும், பாசிசமும், இங்கே போர்வை போர்த்துக் கொண்டு உருவாகிறது! அங்கே, பெர்லினும் ரோமும்! இங்கே டில்லி!! இந்த மமதை எப்படி நீடிக்க முடியும்? 'நான்' வாழமுடியாது— 'நாம்' என்று, வேதனையோடு கூவும், நமது குரல் நிச்சயம் வெற்றி பெறும்.

☆


**புதிய வெளியீடுகள்**

| | |
|---|---|
| அண்ணா | |
| தமிழகம் | 1—0—0 |
| இராதாமணாளன் | |
| சபதம் | 1—0—0 |
| ஆசைத்தம்பி | |
| வெறுங்கூடு | 1—0—0 |
| மு. வரதராசன் | |
| அல்லி | 4—0—0 |
| அச்சில் | |
| குமிழி (அண்ணா) | |
| கிழக்கும் மேற்கும் (ஆசைத்தம்பி) | |

பாரி நிலையம்,
59, பிராட்வே சென்னை.


Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.



REGD. No. M.

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 8—6—52 | இதழ் 49

# ஏடுகளே புரட்சி ஆயுதங்கள் :: தடை போட்டால் படையாகும்

ராமராஜ்ய தர்பார் ஆரம்பமாகிவிட்டது. அவர்கள் ஆட்சிக்கு வந்துவிட்டார்கள் என்பதை எப்படி காட்டுவது? அனுமார் இலங்கைக்கு வந்திருப்பதை எப்படிக் காட்டியதாக கதையிருக்கிறது, அதுபோல!

காங்கிரஸ் ஆட்சிபீடம் ஏறியிருக்கிறது என்றால், சாவாதிகாரம் முடிசூடிக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம்—அவர்கள் பதவியில் அமர்ந்திருக்கிறார்கள் என்ற சேதியே, அடக்குமுறைக்கு ஆனந்தத்தையும், ஆர்ப்பாட்ட வெறிச் செயல்களுக்கு கும்மாளத்தையும் தான் கொடுக்கும்.

அவர்கள் வந்து மாதம் ஒன்று கூட முடியவில்லை காலண்டரில் ஒரு சீட்டு கிழிந்து விழுவதற்கு முன்னாலே, அடக்குமுறை குதியாட்டம் போட ஆரம்பித்துவிட்டது.

சோவியத் சம்மந்தமான புத்தகங்களை, பத்திரிகைகளை, புகைவண்டி நிலையங்களில் விற்கக் கூடாது என்று தடுத்திருக்கின்றனர், இந்த ஆட்சியாளர்கள்.

ஏடுகளைப் படிக்காதே; எங்களோடு சேர்ந்து, போடு எதற்கும் பஜகோவிந்தம், என்று கூறுகிறார்கள்.

படிப்பதை தடுக்கிறது, ஒரு பரிபாலனம்—இவர்கள் வேறு வெட்கமில்லாமல் சொல்லிக் கொள்கிறார்கள், இந்த ஆட்சிக்குப் பெயர் ஜனநாயகமென்று — வெட்கம்! வெட்கம்!!

நம் இயக்க ஏடுகள் பலவற்றை இப்படித்தான் தடுத்தார்கள். ஆனால் நீதி மன்றத்திற்குப் போய் முகத்தில் கரியைப் பூசிக்கொண்டார்கள், இந்த ஆட்சியாளர்கள்.

நம் இயக்க எழுத்தாளர்களையெல்லாம் தொல்லைமேல் தொல்லை அனுபவிக்க வைத்தார்கள்.

இப்பொழுது மீண்டும், கொடி கட்டிவிட்டார்கள், தங்கள் அடக்குமுறை ஆர்ப்பாட்டத்திற்கு!

ரஷ்ய இலக்கியங்கள், மறுமலர்ச்சி மலர்கள். அம்மலர்களை கசக்கி எறியும் மந்தியாகிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில் அமெரிக்க இலக்கியங்களும், ஏடுகளும், விற்கப்படுகின்றன. அமெரிக்காவுக்கு அடிபணிந்து கிடக்கும் ஆட்சியாளர் ஓரவஞ்சனையோடு நடந்துகொள்வதுதான் வேதனை தருகிறது.

இந்திய சர்க்கார், உலக நாடுகளோடு நட்புறவு கொண்டுள்ளதாக வேறு பெருமை பேசுகிறது—இதுதான் நட்பின் இலட்சணமா? நேசமனப்பான்மைக்கு அடையாளமா?

திராவிட இயக்கம் ஒரு மறுமலர்ச்சி இயக்கம், அதன் அறிவுப் பிரச்சாரம் கனவேகமாகப் பரவுகிறது, ஆகவே, அதன் அறிவாயுதத்தைப் பிடுங்கிவிடவேண்டும் என்றுதான், முயற்சி செய்தார்கள். ஆனால், அவர்களின் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டது, அறிவியக்கம் என்பதை அவர்கள் உணரும்படிச் செய்துவிட்டது காலம். அவர்கள் இப்போது தங்கள் முடிமீட்சிக்குப் பிறகு பொதுவுடைமை இயக்கத்தின்மீது பாய்வதன் மூலம், மறுபடியும் தங்கள் இழிகுணத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

மறுமலர்ச்சி எண்ணத்தைத் தூவும், சோவியத் ஏடுகளை தடுத்துவிட்டு, முதலாளித்துவ வெறியை ஊட்டும் அமெரிக்க ஏடுகளுக்கு ஆதரவு காட்டும் இந்த போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

புத்தகங்களுக்குத் தடை விதித்தல், எழுத்தாளர்களைக் கட்டுப்படுத்தல், எண்ணங்களுக்கு கூட தடைபோடல் — இம்மாதிரி அடக்குமுறைகளை, நெறிகெட்ட வகையில் ஏவுவதை, மக்கள் உரிமையில் நம்பிக்கை கொண்டோர் எதிர்க்காமலிருக்க முடியாது—நாம், சர்க்காரின் போக்குகண்டு வெறுக்கிறோம் — எதிர்க்கிறோம். ஏடுகளுக்கு தடை போடாதீர், போட்டால், அவைகளே, படைக்கலங்களாக மாறிவிடும் என்று ஆணவத்தால், அறிவு கலங்கித் திரியும் ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை செய்கிறோம்.

## படிப்பதை தடுக்காதீர்கள்!

## பயங்கர எச்சரிக்கை இது!!

# மக்கள் பிரதிநிதிகள் (வில்)

### அச்சமில்லை

மக்கள் பிரதிநிதிகள் என்று ஆளும் சபைக்குள் போகிறார்கள். மக்களுக்குத் தொண்டு செய்யவே, இந்தத் தேர்தலில் நிற்கிறேன், மற்றொன்றும் அறியேன் பராபரமே என்று, பெரியகூட்டங்கள் கூட்டிப் பேசிவிட்டு, ஓட்டுப் பெட்டியில் ஓட்டுகள்நிரம்பியான பிறகு, தங்களுக்கேபிரதிநிதிகளாகிவிடுகிறார்கள். மந்திரிப் பதவிக்குப் போம் பேசுகிறார்கள், மக்கள் பிரதிநிதிகள்!

மற்ற பதவிகளுக்கு, தம்மக்களை, மற்றுள்ள சுற்றத்தார்களை நுழைக்க பகீரதப் பிரயத்தனப்படுகிறார்கள் மக்கள் பிரதிநிதிகள்!

பர்மிட் வேட்டைக்குத் தங்களை மிகவும் பக்குவப்படுத்திக் கொள்கிறார்கள், மக்கள் பிரதிநிதிகள்!

சலுகைகள், தங்களுக்கும், தங்கள் குடும்பத்திற்கும் தேடிக்கொள்கிறார்கள், மக்கள் பிரதிநிதிகள்!

மைத்துனனை லண்டனுக்கு அனுப்புகிறார், ஒரு மக்கள் பிரதிநிதி. மனைவி பேருக்கு, சிமெண்ட் வியாபாரம் செய்கிறார் இன்னொரு மக்கள் பிரதிநிதி. இரும்பு வியாபாரத்திற்கு, தம்பியின் பெயரைத் தேடிப்போடுகிறார், இன்னொரு மக்கள் பிரதிநிதி.

கள்ளமார்க்கட் வியாபாரம் செய்கிறார் — அதிலிருந்து தப்ப கள்ள வழிகள் பல தேடுகிறார் ஒரு மக்கள் பிரதிநிதி.

மந்திரியிடம் தூது போகிறார், தங்கள் வயல்கள் நிறைந்திருக்கும் பக்கம் ஓடும் ஆற்றிலே அணைக்கட்டு கட்டச்சொல்லி, வேறொரு மக்கள் பிரதிநிதி.

மக்கள் பிரதிநிதிகள், இப்படி மாறிக்கொள்கிறார்கள். மக்களும் பார்க்கிறார்கள். திட்டுகிறார்கள். ஆனாலும், அவர்களோ, மக்கள் பிரதிநிதியாக வீற்றிருக்கிறார்கள்.

இதென்ன வெட்கக்கேடு, மக்கள் பிரதிநிதியென்று லேபிலை ஒட்டிக்கொண்டு, தங்கள் சுயநலத்திற்காக உழைக்கிறார்கள். அதனைக் கண்ணாரக்காண்கிறோம். பிறகும் எப்படி மக்கள் பிரதிநிதிகள் என்று கூறுவது என்று கேட்காதீர்கள்!

ஆனால், மக்கள் அவர்களைத் தங்கள் பிரதிநிதிகள் அல்லவென்று கூறினாலும், மக்கள் பிரதிநிதிகள் தான்!

யாருக்கு அவர்கள் பிரதிநிதிகளாகச் சென்றிருக்கிறார்களோ அவர்களை, மறந்தாலும், அவர்கள் மக்கள் பிரதிநிதிகள் தான்.

மக்கள் பிரதிநிதி என்ற வார்த்தைகளே, வெட்கப்படும், அவர்கள் பெயர்களோடு ஒட்டியிருக்க—ஆனாலும், மக்கள், பிரதிநிதிகள் தான் அவர்கள்!

ஒவ்வொரு தேர்தல் முடிந்த பிறகும், மக்கள் திட்டியிருக்கிறார்கள். துரோகி, வஞ்சகன், ஏமாற்றிவிட்டான், சொன்னபடி நடக்கவில்லை, சுயநலத்திற்காகக் கட்சியை விட்டான், பதவிக்காக எதிரியோடுகூடிக் கொண்டான் என்று மக்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பதவியிலே தான் இருந்தார்கள்—இருக்கிறார்கள்.

மக்கள் பிரதிநிதியில்லை, மக்களே சொல்கிறார்கள்—ஆனாலும் அவர்கள் மக்கள் பிரதிநிதியாக இருக்கிறார்கள். ஏன்?

எப்படி முடிகிறது, அவர்களால், பதவியிலே ஒட்டியிருக்க, மக்கள் எதிர்க்கும்பொழுது! யார் துணை செய்கிறார்கள் அவர்களுக்கு! எங்கள் பிரதிநிதி இல்லையென்று மக்கள் முழங்கியபிறகு அவர்களுக்கு அங்கென்ன வேலை என்று கேட்காதீர்கள்.

அவர்கள் இருக்க முடிகிறது அங்கே — மக்கள் கூவமுடிகிறதே தவிர, வேறு எதுவும் செய்யமுடியவில்லை. இதற்குக் காரணம், மக்கள் சக்தியைவிட, அந்த மமதையாளர்களுக்கு வல்லமை அதிகம்வளர்ந்து விட்டதென்று கூறவில்லை.

சட்டம், அவர்களுக்கு துணை செய்கிறது. அந்த சட்டத்தின் துணையினாலே, அவர்கள் உலவமுடிகிறது. எதையோ பேசி, எப்படியோ தேர்தலில் வெற்றி பெற்று அவர்கள் சட்டசபைக்கு உள்ளே சென்றுவிட்டால், அவர்கள் ஐந்தாண்டுகளுக்கு அசைக்க முடியாதவர்களாகிவிடுகிறார்கள்.

சட்டசபைக்கு உள்ளே நுழைகிறபோழுது சேவகர்களாக இருக்கிறார்கள். உள்ளே நுழைந்து விட்டாலோ, ராஜாவாகிவிடுகிறார்கள். மக்கள்–சேவகர்களாகிவிடுகிறார்கள்.

இந்த சட்டத்தினால்தான், மக்கள் பிரதிநிதிகளுக்கிருக்கவேண்டிய அச்சம் இல்லாமல் போய்விட்டது. நாம் யாருக்காக, 'இங்கே வீற்றிருக்கிறோம், நாம் எதைச் செய்தாலும், நமயைக் கேட்க மக்கள் இருக்கிறார்கள் வெளியே என்ற நினைவும், அந்த நினைவினால் ஏற்படும் பயமும் இருந்திருந்தால், ' மாணிக்கவேல் கதை பிறக்காது. பக்தவத்சல விஜயம் நடக்காது.

இந்திய அரசியல் திட்டம், அவர்களின் அச்சத்தைப் போக்கிவிட்டது. ஆகவேதான் மக்களால் வெறுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள், சட்டசபைகளில் உலவுகிறார்கள்!

### திருப்பி வா

சட்டசபையில் நுழைந்தபிறகு, மக்களை மறந்திடும், சுயநலக்காரர்களை மக்கள் கண்டிக்கிறார்கள்.

கண்டனத்தைக் கேலிசெய்துவிட்டு, அவர்கள் புதிய கார்களில் பவனி வருகிறார்கள்.

மக்களோ, கையில் ஊமையராய் காட்சியளிக்கிறார்கள். அவர்கள் வேதனைப்படுகிறார்கள் —வெட்கமும் படுகிறார்கள். நாம் விரும்பாத பிரதிநிதியை நாம் விரட்டமுடியவில்லையென்று என்றும் பொழுது!

சட்டசபைக்குப்போ என்று மக்கள் அனுப்புகிறார்கள், நல்லது செய்வார்கள் என நம்பி. ஆனால் அவர்கள், மக்கள் துரோகிகளாக மாறிவிடுகிறார்கள்.

அப்படி மாறிவிட்டவர்களை, திருப்பி அழைக்கும் அதிகாரம் மக்களுக்கு இருக்கவேண்டும், நியாயமாக. ஆனால் இல்லை. அதனால் தான் மக்கள் பெயரைச்சொல்லி அவர்கள், மட்டரகமாக நடந்துகொள்கிறார்கள்.

சட்டசபையைவிட்டோடு என்று மக்கள் கூறமுடியும் என்றால், இந்த பிரதிநிதி வேடத்தில், பித்தலாட்டக்காரர்கள் உலவமுடியாது. இதனை இந்திய அரசியல் திட்டம் வகுத்தோர் உணரவேண்டும்.

சட்டசபைக்குப் பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை மக்களுக்கு இருக்கும் பொழுது, அவர்களைத் திருப்பியழைத்துக் கொள்ளவும் உரிமைவேண்டும், மக்களுக்கு. அந்த உரிமையிருந்தால், மக்கள் பிரதிநிதிகள், மக்கள் துரோகிகளாக மார்க்கமில்லை.



# தொடர்கதை—மற்றோர் அத்தியாயம்

"கோதுமை விலை அதிகமாயிருக்கிறதே!"

"ஆமாம், அதனால் என்ன?"

"குறைவாக இருந்தால், அவதிப்படும் மக்கள் அதையாவது வாங்க நினைப்பார்கள்"

"அதற்கு நான் என்ன செய்வது?"

"குறைவானவிலைக்குக் கோதுமையைத் தருவது!"

"அதிக-விலைக்கு வாங்கி, உங்களுக்குக் குறைவாகத் தந்தால், அதனாலேற்படும் நஷ்டத்தை யார் ஏற்பது?"

"நீங்கள்தான்!"

"சென்னைக்கு மட்டும் இந்த சலுகை தரவேண்டுமோ? கல்கத்தா, பம்பாய்க்கு இல்லாத சலுகை உங்களுக்குமட்டுமா?"

"ஆமாம்! சென்னையிலிருப்போரின் உணவு அரிசிதான்; கோதுமையல்ல. எங்களுக்குத் தேவையான அரிசியும் தருவதில்லை. ஆனால், விலை கூடுதலாகவுள்ள, கோதுமையை அனுப்புகிறீர்கள். அதை வாங்கவும் முடியவில்லை, எம்மால்"

"அரிசி, அரிசி என்று அடித்துக் கொண்டால் என்ன செய்வது? அரிசிக்குப் பதிலாகக் கோதுமை சாப்பிடப் பழகிக்கொண்டால் என்ன?"

"பழகிக்கொள்ளலாம், மந்திரியாரே! ஆனால் கோதுமையை வாங்கக் கூடிய விலைக்கா தருகிறீர்கள், நீங்கள்?"

"என்ன செய்வது, பிறகு?"

"கோதுமைதான் அனுப்பமுடியும், அரிசி இல்லை, என்கிறீர்கள். சரி! அனுப்புகிற கோதுமையையாவது குறைந்தவிலைக்கு விற்கும்படிச் செய்யுங்களேன்"

"அதிகவிலைக்கு வாங்கி குறைந்த விலைக்கு விற்றால், நஷ்டம் ஏற்படுமே"

"ஆமாம், உண்மைதான். ஆனால் ஒரு சந்தேகம்"

"என்ன?"

"யாருக்கு நஷ்டம் ஏற்படும்..."

"மாகாணத்துக்கு; மாகாணங்கள் தானே உணவுப் பொருள்களை மத்திய சர்க்கார் மூலம் வாங்குகின்றன"

"தெரியும்' அறிவோம்! நஷ்டம் ஏற்படுமென்றீர்களே, அதை, மத்ய சர்க்காரே தாங்கிக்கொள்ளலாமே!"

"ஓகோ! மான்யம் தருவதைப் பற்றி சொல்கிறாயா?

'ஆமாம்! மான்யம் தருவதால் அதிக விலைக்கு வரும் கோதுமையை மக்களிடம் குறைந்த விலைக்கு விற்கலாம். அரிசி இல்லாமல் கஷ்டப்படுவோரின் அரை வயிறாவது நிரம்பச் செய்யலாம். மான்யம் தந்தால் என்ன? தரக்கூடாதா? தவிப்போரின் துயர்துடைக்கக் கூடாதா?"

"கவனிக்கிறேன். மான்யம் தர முடியாது. ஆனால், குறைவான விலைக்கு பஞ்சாப் கோதுமையை அனுப்புவதுபற்றி ஆலோசனை செய்கிறேன். ஆனால், ஒரு நிபந்தனை"

"என்ன மந்திரிஜீ?"

"அரிசி வேண்டும், அரிசி வேண்டும் என்று ஆலாய்ப் பறக்கிறீர்களே —அதை விட்டுவிடவேண்டும் அரிசிக்காக எங்களுக்கு அடிக்கடி 'தூது' அனுப்பக்கூடாது. சம்மதந்தானே?"

* * *

நிருபர்கள் திகைத்தனராம், இந்திய உணவு அமைச்சர் அஹமது கித்வாயின் பதில்கேட்டு. "எப்படி முடியும், இது. எங்கள் வாழ்க்கைக்குத் தேவையானது அரிசிச் சோறு தானே!" என்று, பத்திரிகை நிருபர்கள், படபடப்போடு தெரிவித்தனராம். அதைக்கண்ட டில்லி அமைச்சர், சிரித்தாராம்! சம்பவம், சடந்த மே 29-ந்தேதி, சென்னையில் நடைபெற்றதாகும். இங்கு வந்திருந்த—தவறு! தவறு!! "விஜயம்" செய்திருந்த—டில்லி அமைச்சர். கித்வாய், சென்னைபத்திரிகைக்காரர்களுக்குப் பேட்டியளித்தாராம். அதுபோது, மேலே குறிப்பிட்டதுபோல, வாக்குவாதம் நடைபெற்றிருக்கிறது. இத்தனையையும் கேட்டுக் கொண்ட அவர், கடைசியில், சிரித்தாராம்! சித்ரவதைப் படுவதைச் செப்பினர், செய்தித் தூதர்கள். சிங்கார உடல் படைத்த உணவு அமைச்சர், சிரித்திருக்கிறார். சிந்தையில் தேள் கொட்டியது போலிருந்ததுபோலும், நிருபர்களின் கேள்விகள். சிரித்துக்காட்டிவிட்டு, சினந்துக் கொட்டியிருக்கிறார், மேலும் சில வார்த்தைகளை.

"நாங்கள், கோதுமைக்கு ஆர்டர் கொடுத்துவிட்டோம். சென்னைக்கும் சேர்த்துத் தான் ஆர்டர் கொடுத்திருக்கிறோம்.

நீங்கள் வேண்டாமென்றால் அந்தக் கோதுமையை என்ன செய்வது?

எப்படியாவது நீங்கள் வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்.

அதனால் நஷ்டம் ஏற்பட்டால் நீங்களே ஈடுசெய்து கொள்ளுங்கள்."

டில்லி அமைச்சர், இவ்விதம், தெரிவித்திருக்கிறார். 'நீங்களே ஈடு செய்துகொள்ளுங்கள்!' — மாகாண சர்க்காருக்குக் கூறுகிறார். கூறுவது மத்திய சர்க்காரின் அமைச்சர்.

☆

"விலை ஏறிவிட்டது!" "விலைஏறிவிட்டது!!" இவ்விதக் குரல்கள் எங்கும் ஒலிக்கின்றன. கடந்த சில மாதங்களைவிட இப்போது, அதிகமாக ஒலிக்கிறது, இத்தீனக்குரல். இதற்குக் காரணம் என்ன? மத்திய

## இடம் மாற்றம்

அகில இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைக் காரியாலயம் இப்போது சென்னைக்கு வந்துவிட்டது. இதுவரை பம்பாயிலிருந்து கவனிக்கப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் அலுவல்கள் இனி இங்கிருந்தே கவனிக்கப்படுமாம். 'தெற்கே' கம்யூனிஸ்டுத் தோழர்கள் பலர் வெற்றி பெற்றிருப்பதாலும், இங்கிருந்து பணியாற்றுவதே பலன் மிகத்தரலாம் என்ற கருத்தைக்கொண்டுமே, இடமாற்றம், செய்யப்பட்டிருக்கிறதாம்.

சர்க்கார் மாகாணங்களுக்குத் தந்து வந்த மான்யத் தொகையை ரத்து செய்தது மான்யம் கிடைத்தால், அதைக்கொண்டு, பொருள்களின் விலையைக் குறைத்து, பொதுஜனங்களுக்கு குறைந்த விலையில் உணவுப்பொருள்களை விற்றிட இயலும். மான்யம் ரத்து செய்யப்பட்டதால் மாகாணங்கள் மயங்குகின்றன. உணவுப்பொருள்களின் விலையைக் குறைத்து, அதனால் ஏற்படும் நஷ்டத்தைக் குறைக்க வழியில்லாமல் திகைக்கின்றன. இதனால் மக்கள் விழிக்கிறார்கள்! வேண்டிய அளவு உணவும் கிடைக்கவில்லை. கிடைப்பதை வாங்கவோ பணமுமில்லை!

இத்திண்டாட்டம் இப்போது அதிகமாகியிருக்கிறது.

இதனால் ஏழைகளும் தொழிலாளர்களும் மிகமிகப் பாதிக்கப்படுகிறார்கள்.

மாமியார் மருமகள்போல மத்ய சர்க்காரும் மாகாணங்களும் இருக்கின்றன.

பொதுமக்களோ தாக்கப்படுகிறார்கள்—'விலை உயர்வு' எனும் சம்மட்டியால்.

உணவு மான்யத்தொகை அளிக்கப் பட்டபோது, அதன் மூலம், அதிகப்பணம் பெற்றது, பம்பாய் மாகாணமே ஆகும். சென்னை கதறியது! எவரும் கவனிக்கவில்லை. பம்பாய்க்கே, உதவிவர் — பாரபட்சத்துடன்.

1950—51ல் பம்பாய்க்குத்தந்த தொகை 4·83 கோடி.

அதே ஆண்டு சென்னைக்கு அளிக்கப்பட்ட மான்யம் 2 89 கோடி.

1951—52ல் இந்த மான்யத் தொகை குறைக்கப்படும் என்று அறிவித்தனர், டில்லி ஆளவந்தார். ஆனால் பம்பாய்க்கு, 4·92 கோடி ரூபாய்கள் தந்தனர்.

சென்னைக்குமட்டும் 1·78 கோடி தான் தரப்பட்டது.

'இப்படி ஏன் குறைக்கிறீர்கள்?' என்று, சென்னை, கேட்டதற்கு, 'பணக்கஷ்டம் நீங்கள் அறியாததோ?' என்று பல்லவி பாடினர். ஆனால் பம்பாய்க்குமட்டும் அதிகம் தந்தனர்! சென்னையின் தலையில் கைவைத்தனர்!!

இந்த ஆண்டில்தான், இங்கே, வீதியில் பிணங்கள் விழும் நிகழ்ச்சிகளும், பின்னே வியாபாரங்களும், கத்தாழை உணவுப்பொருளாகிய காட்சிகளும் நடைபெறத் துவங்கின — வளர்ந்தன.

எனினும், டில்லி, பாரபட்சத் தோடு நடந்தது. பம்பாய்க்கு அதிகம் தந்தது! சென்னையைச் சீரழித்தது!!

ஆனால், உரிமையோடு, நித்வாய், கேட்கிறார், நமது கிருபர்களே:

"சென்னைக்கு மட்டும் சலுகை தர வேண்டுமோ? பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் இல்லாத சலுகை உங்களுக்கேன்?" என்று.

சிரித்துக்கொண்டு கேட்கிறார், டில்லியின் அதிபதி; பாரபட்சத்தோடு நம்மை நடத்துபவர், கூறுகிறார். 'அவர்களுக்கில்லாத சலுகை சென்னைக்கு ஏன்?' என்கிறார்.

நமது கிருபர்களும் இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

* * *

மான்யத் தொகை தந்தபோது பாரபட்சம் காட்டப்பட்டது, நமக்கு.

நாம் பதறினோம்—கவலைகொள்ளவில்லை, டில்லியினர்.

இப்போது, துணிந்து கூறுகிறார் நித்வாய் 'சலுகை தரோம்! எப்படி. யாவரும் நீங்களே கஷ்டத்தைச் சுமந்து கொள்ளுங்கள்' என்று.

ராணுவத்துக்கென பாதி வரிப் பணத்தை விரயமாக்கும் டில்லிப் பீடம் கூறுகிறது, இதனை.

மாகாணங்களுக்கு 'மான்யம்' தரப்படும் வகையில் மத்திய சர்க்காருக்கு செலவழிந்த தொகை மிகப் பெரியதோ, தாங்க முடியாததோ அல்ல; 15·8 கோடி ரூபாய்தான்! பல கோடி ரூபாய் வரவு செலவு செய்யும் சர்க்காருக்கு இது ஒரு பிரமாதமல்ல!

எனினும், இந்த மான்யத் தொகையை ரத்து செய்திருக்கிறார்கள்.

ரத்துக்குக் கூறப்படும் காரணம், மிக மிக விசித்திரமானது!

"ஐயா! கொஞ்சம் தண்ணீர் கொடுப்பீர்களா?" என்று பதைப் பவனுக்கு, 'இரு ஐயா! இப்போது தான் கிணறு வெட்டப் போகிறேன்' என்று பதில் தந்தால் எப்படி!

அதுபோலக் காரணம் கூறப்படுகிறது, இந்த நடவடிக்கைக்கு. "மான்யத்தை ரத்து செய்வதால் ஏற்படும் பணத்தைக்கொண்டு புதிய நீர்ப்பாசனத் திட்டங்களும், விவசாயத்துக்கான வசதிகளும்" செய்யப்படுமாம்!

இப்போதுள்ள கஷ்டத்தைச் சொன்னால், எப்போதோ நிறைவேறப் போகும் திட்டங்களைச் செப்புகிறார்கள். அதுவும் மேற்படி திட்டங்களுக்கென அமெரிக்காவிடம் கையேந்தி நின்ற வண்ணம்!

15 கோடி ரூபாய் மான்யம்! இதற்கு, இவ்வளவு, விளக்கங்கள்


சிந்தனையைத் தூண்டும்

## சிறந்த ஏடுகள்

—⊛—

சி. என். ஏ. தீட்டிய

| | |
|---|---|
| மக்கள் தீர்ப்பு | 0—8—0 |
| ஜபமாலை | 0—8—0 |
| சாது | 0—8—0 |

விற்பனையாளர்களுக்கு 25o/o கழிவு. வேண்டிய புத்தகங்களுக்கு கழிவை நீக்கி, தொகையை முன் பணமாக அனுப்பியவர்களுக்குமட்டுமே புத்தகங்கள் அனுப்பப்படும். தனியாகப் புத்தகங்கள் வேண்டுவோர் புத்தக விலையோடு, தபாற்செலவிற்கும் சேர்த்து அஞ்சல் தலைகள் அனுப்புக.

விபரங்களுக்கு:— பரிமளம் பதிப்பகம்,

17, B. வரகுவாசல் தெரு, காஞ்சிபுரம்.




தரப்படுகிறது. யாரால்? 198 கோடி ராணுவத்துக்கென செலவழிக்கும் டில்லியால்!

பாதுகாப்புக்கென இவ்வளவு பணத்தை விரயமாக்குவது மட்டுமல்ல, இன்னும் எப்படியெல்லாம் நமது பணம் வீணாகிறது, தெரியுமோ! 'கேட்க கேட்கவெட்கமாயிருக்குதம்மம்மா!' என்றுதான், கூறத்தோன்றும் கேளுங்கள் அந்தக் கேலிச் சித்திரத்தை!

### 557 மோசடிகள்

### 6 20 000 ரூபாய் கொள்ளை

எங்கே? 'எல்லாம்வல்ல' மத்திய சர்க்கார் என்று கூறப்படுகிறதே—அங்கு! தபால் இலாகாவில்!! இவ்வளவு மோசடிகளும், பணக்கொள்ளையும் நடத்தியது யார்தெரியுமோ?

"பெரும்பாலான மோசடிக்குக் காரணம், தபால் இலாகாவின் சிப்பந்திகள்தாம்."

எவ்விதம் இவ்வளவுபணம் மோசடி செய்யப்பட்டதென்கிற விசித்திரமான விபரத்தைப் பாருங்கள்.

"தபாலாபீசில் வரும்பணத்தை அப்போதைக்கப்போது கஜானாவில் சேர்க்கவில்லை."

இது நடைபெற முடியுமா என்று ஆச்சரியப் படுவீர்கள் — இதைக்கூட கண்டுபிடிக்க முடியாதபடியா சர்க்கார் இருக்கிறது என்று எண்ணுவீர்கள்! எப்படி நடந்திருக்கிறது தெரியுமோ இது?

"பணம் கட்டவேண்டிய இம்பீரியல் பாங்கியின் அதிகாரிகளையும் கையில் போட்டுக் கொண்டு, 'பாஸ்' புத்தகத்தில் பொய்கையெழுத்துப்பெற்று..."

மோசடி செய்திருக்கிறார்கள்! இவ்வளவு பணமும்விரயமாயிருக்கிறது!

'ஒரு டெலிபோன் ஆபீஸ் கிளார்க் ரூ 50,000 (கண்டு பிடித்தது இவ்வளவுதான்) வரைமோசடிசெய்திருக்கிறார்"

"இது சம்பந்தமான கணக்குப் புத்தகங்களை ஒழிக்கும் நோக்குடன் ஆபீசையே கொளுத்திவிட்டார்."

இவைகள், அதிகாரிகள் அடித்த கொள்ளையின் விபரங்கள். சர்க்காரின் உத்தி வுகள் மூலம் விரயமானதற்கு விபரம் இது.

"தொழிலாளர்களுக்கென நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் விநியோகம் செய்யப்பட்டன. இவைகளுக்கு 12 ஆண்டுகள்என்று கால நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இதில் ஐந்து ரூபாய் வீதம் கட்டுவோர், விரும்பினால் ஓராண்டுக்குள் அதை 'டிஸ்சார்ஜ்' செய்யவும், அதற்குமேற்பட்டு தொகை கட்டி வருவோருக்கு 18 மாதமும் காலதவணை தரப்பட்டிருந்தது. இதை எதிர்த்து தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்ததால் இந்த ஏற்பாடு ரத்து செய்யப்பட்டது.

இதனால் ரூ 2,3,00,000 பொறுமானமுள்ள பாதுகாப்பு சர்ட்டிபிகேட்டுகளை 'டிஸ்சார்ஜ்' செய்ய நேர்ந்தது. இதனால் காரியத்தைச் செய்ய, பல புது அதிகாரிகள் நியமிக்கப்பட நேர்ந்ததால் ரூ 3,50,000 அதிகச் செலவாகியிருக்கிறது. சேமிப்புப் பணமும் நஷ்டம்! அதற்குச் செலவும் வேறு!!

சர்க்காரின், யோசனையற்ற முறையின் விளைவு இது.

"பிரயாணப்படிச் செலவு என்று சொல்லி பொய் விவரங்களைக் காட்டி ரூ 40000 வரை. வீணாகத் தரப்பட்டிருக்கிறது—அதிகாரிகளுக்கு"

'கேபிள்' டெலிபோன் ஏற்பாடுகளுக்கென, ஜப்பான் கம்பெனியொன்றிடம் ரூ 82,00,000க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இப்போது அந்தக் 'கேபிளை'ச் சோதனை செய்து பார்த்தால், அந்தக் கம்பிகள் யாவும், எதற்கும் பிரயோசனமில்லை."

* * *

இவ்வளவு விபரங்களையும், எந்த உறுப்பினர், பார்லிமெண்டில் பேசினார் என்று கேட்பீர்கள். உறுப்பினர்களல்ல, இதை வெளியிட்டிருப்பது! சர்க்காரின் 'ஆடிட்டர்'!! இவ்வளவு ஊழல்களையும், வெளியிட்டிருக்கிறார். இவ்வளவு பணம் விரயம்! விரயத்துக்குக் காரணம், நிர்வாகத் திறமை இல்லாமை.

இது அல்ல முதல் தடவை—இதைப்போல பற்பல சம்பவங்கள், அடிக்கடி, நடைபெற்ற வண்ணமே உள்ளன.

இதன் காரணமாக பல கோடி ரூபாய்கள் பாழாகின்றன.

இவ்வளவு பணத்தையும் பாழாக்கும் டில்லி, மாகாணங்களுக்கு மான்யம் அளிக்க, 'இயலுமோ?' என்று பல்லவி பாடுகிறது.

மாகாணங்கள் வாட, மத்ய பீடம் தன் காரியத்தைக் கவனித்துக் கொண்டே போகிறது. நமது பணமும் வீணாகிறது! வாழ்க்கையிலும் வதைபடுகிறோம்!! எவ்வளவு காலத்துக்குத்தான் இதைச் சகிப்பது? வஞ்சகம்—ஒருதலைப்பட்சம்—வீண் விரயம்—!! இதற்கு, நாம்பலி!!!

## கோவை மாவட்ட பிரச்சாரப் பயிற்சி வகுப்பு

கோவை மாவட்ட பிரச்சார வகுப்பு மே இறுதி நாட்களில் கணியூரில் நடைபெறுவதாக இருந்து, பல காரணங்களால் ஒத்திவைக்கப் பட்டு, ஜூன்-19, 20, 21, 22 தேதிகளில் கணியூரில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தோழர் கே ஏ. முருகேசன் அவர்கள் அதற்கானவை செய்ய இசைந்துள்ளார். எனவே இதுவரை பயிற்சி வகுப்பில் சேர விண்ணப்பம் செய்யாத தோழர்கள் கிளைக்கழகச் செயலாளரின் கையொப்பத்துடன் 15—6—52க்குள் விண்ணப்பங்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறேன்.

சே. அ. ராசமாணிக்கம்
செயலாளர்
கோவை மாவட்ட தி. மு. கழகம்
கோவை


வெளிவந்துவிட்டது!

விற்பனையாகிறது!

## தனி அரசு

(மாதம் இருமுறை)

ஆசிரியர் ஏ வி. பி. ஆசைத்தம்பி

தனிபிரதி ரூ. 0—2—0

ஆண்டுச் சட்டணம் ரூ. 3—0—0

பிரதி 1-க்கு 8 அணா வீதம் டிபாசிட் கட்டும் ஏஜெண்டுகள் தேவை.

தனி அரசு,
விருதுநகர்.

திராவிடநாடு

காஞ்சி] 8—6—52 [ஞாயிறு

# அவர்களும் வாழ......!

★

"பெரிய மண்குடிசை யொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அதுதான் கிராமப் பள்ளிக்கூடமாம்! ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். நூறு குழந்தைகள் தரையிலே உட்கார்ந்து கிடந்தன. கரும்பலகையில், வாலிப வயதுள்ள ஒரு ஆசாமி ஏதோ, கன்னட வார்த்தைகளை எழுதிக்கொண்டிருந்தார். இருளடர்ந்த முகங்கள்! பனி போன்ற கண்கள்! — கருப்புத் துணியில் பளிங்கு கற்கள் உருண்டு கொண்டிருப்பது போலிருந்தது, அந்தக் குழந்தைகளின் கண்கள் அங்குமிங்கும் அசைந்த காட்சி. ஜன்னலை விட்டு, கட்டிடத்தின் ஒரு மூலைக்கு வந்தேன். பன்னிரெண்டு சிறுவர்கள், பயத்தால் நடுங்குவோர் போல, தனியாக உட்கார்ந்து கிடந்தனர்.

'இவர்கள் இங்கே என்ன செய்கிறார்கள்? ஏதாவது தண்டனை தரப்பட்டிருக்கிறதா!' என்று கேட்டேன்.

என் கூட வந்த இந்துமத வாலிபன் அலட்சியத்தோடு சொன்னான், "அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டோர்" என்று.

நான், அந்தச் சின்னஞ் சிறுவர்களை, வைத்தகண் வாங்காது, பார்த்தேன். இளைத்து, இடுப்பில் எதுவுமில்லாது, கிட்டத்தட்ட, நிர்வாணமான நிலையில் இருந்தனர். ஒருவராவது சுத்தமாக இல்லை!

ஏதோ எப்படியோ, அவர்களுக்கு இந்தப் பள்ளிக்கூடத்துக்குச் செல்ல அனுமதி கிடைத்திருக்கிறது. அவர்களும் இந்த நாட்டில் 'வாழ' ஏராளமான சட்டங்களைப் பெற்றிருக்கிறார்களாம்!

......இளம் இந்தியா கல்வி பெறுகிறது!!"

இவ்வளவு வேதனையோடு, இங்கிலாந்திலிருந்து இங்கே வந்து சென்ற பீவர்லி நிக்கோலஸ் என்னும் எழுத்தாளன், 1944ல் தான் கண்ட காட்சியைச் சித்தரித்தான், 'VERDICT ON INDIA' என்கிற நூலில். சீறினர், தேசியவாதிகள்! பத்திரிகைகளெல்லாம் பக்கம் பக்கமாக எழுதிக் குவித்தன! அவனுக்கு மறுப்பு தருவதுபோல 'VERDICT ON ENGLAND' என்றொரு நூலும் எழுதப்பட்டது. அவ்வளவு சீற்றம் அவன் மீது எழும்பியதற்குக் காரணம், அவன் இங்குள்ள உண்மைகளை எடுத்துச் சொன்னான் என்பதுதால. அதுமாத்திரமா, — ஆனால் ரத்தினச்சுருக்கமாக— அவன் குறிப்பிட்டான். "கல்வியில்லாமல் திரியும் மக்களின் பரிதாபத்தை, பிராமணர்களின் பிடியிலே உள்ள காங்கிரஸ், மாற்றும் கருத்தில்இல்லை" என்பதாக. எனவேதான், சீறினர் அவன் மீது! ஆயிரம் உண்டிங்கு ஜாதி—இதை அந்நியன் எடுத்துப் புகலென்ன நீதி?' என்று கூடப் பாடினர்—கோபத்தோடு!

* * *

இது 1944-ல்! எட்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. 1952 இது. இப்போது என்ன நிலைமையைக் காண்கிறோம் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி நிலையில் மட்டுமல்ல! பொதுவாக மக்களுடைய கல்வி வளர்ச்சிக்கு, நன்மைகள், மலர்ந்துள்ளன, இவர்தம் ஆட்சியில். காட்ட முடியுமா? குடிசைகளாக நிற்கும் வீதிப்பள்ளிகளின் நிலைமைகளில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா! கிராமங்களில் மலர்ச்சி மணம், புதிதாகப்பரவியிருக்கிறதா! தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் 'துளியாவது' புதுமை அருவித்துளி விழுந்திருக்கிறதா!

தமது உத்திரவுகளையும், சட்டங்களையும், ஒப்பிக்கலாம்—ஆட்சியிலிருப்போர். 'ஹரிஜன முன்னேற்ற அபிவிருத்தி இலாகா'வைச்சுட்டிக் காட்டலாம் — அதை நிர்வகித்த அமைச்சர் ஒரு ஆதித்திராவிடர் தான், தெரியுமோ — என்று பதில் தரலாம், தனித்தொகுதி மூலம் சட்டசபைக்கு வந்திருப்போரைக் கூறலாம், ஆச்சாரியார் கவர்னர்ஜனரலாகஇருக்கும்போது அவரதுபாதுகாவலராகப் பதவி வகித்தவர் ஒரு ஹரிஜன்' என்று விளக்க முன்வரலாம்—இது கஷ்டமான காரியமல்ல; மறுக்கும் நோக்கமுமல்ல நம்முடையது. ஆனால் பொதுவில் என்ன பலாபலன்கள் கிடைத்திருக்கிறது, அந்தச் சமூகத்துக்கு! இந்திய பூமியில் கிராமத்தில் வாழ்வோர் தொகை சுமார் 82o/o என்று கூறப்படுகிறது. இந்தக் கிராமங்களில் வாழும் ஆதித்திராவிட மக்களின் நிலை என்ன? சேறும் பாம்பும், கட்டுவாக்களியும் நண்டும் உலவும் குப்பைமேடுகளிலே உள்ள குடிசைகள், அவர்தம் இருப்பிடம்! மாடும் ஆடும் அவர்தம் குழந்தைகளின் 'பேனாவும் புத்தகமும்!' தோப்பும் துறவுமே அவர்தம் பள்ளிக் கூடங்கள்! — இதை 'இல்லை' யென்று எவராவது கூறமுடியுமா? கேவலமாக இருக்கிறார்கள் — ஆதித்திராவிட மக்கள். அவர்கள் வாழ்க்கையைக் கப்பிக்கிடக்கும் இருளை ஒழிக்க—சட்டம் இருப்பதாக மார் தட்டலாம், மகாத்மாவின் சீடர்கள். ஆனால் மார்க்கம் காணப்பட்டிருக்கிறதா, அவர்தம் மடமை நீங்க! பறச்சேரிகள்—அவர்களுக்கு. அதுவும் சொந்தமல்ல; ஆண்டையின்மனை இது. இவ்வளவு அநாகரீகத்தில் அவர்கள் அல்லாடுகிறார்கள். 'ஜாதி மதம் தீது. பொருளியல் வாதமே பெரிது' என்று பேசும் தோழர்கள் பார்வையில் வைக்கிறோம். கிராமங்களில் 'சாதி' படுத்தும்பாட்டை எளிதில் விவரிக்க முடியுமா! அதிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் இச் 'சாதி'க் கொடுமையால் படும் பாடு கொஞ்சநஞ்சமல்ல. உழைப்போர் அவர்தாம்! ஆனால் உணவும், இடமும், அவர்களுக்கு 'எஜமான்' இட்டால்தான் உண்டு! படிக்கவசதியில்லாதது மட்டுமல்ல — 'தமது' என்று சொல்லிக்கொள்ளக்கூட அவர்களுக்கு ஒரு இடம் கிடையாது.

இந்தக் குறையைப்பற்றி, ஓமந்தூரார் மந்திரிசபையின் காலத்தில், நாம் அடிக்கடி வலியுறுத்தி வந்தோம்.

பலபல இடங்களில் மிராசுதாரர்களுக்கும் ஆதித்திராவிடவிவசாயப் பெருங்குடி மக்களுக்குமிடையே '[illegible]' ஒரு ஏற்பாடு நடைபெறலாம் என்று, செய்தி ஒலிகள், எழும்பின. ஆனால் அவை



யாவும் பனித்துளிகள் போலாகி விட்டன.

ஆதித்திராவிட பெருங்குடி மக்கள், உழைப்பால் உலகை உய்விக்கும் மனித 'தெய்வங்கள்'. ஆனால் அவர்களை நாயினும் கீழாக நினைக்கிறது நிலப்பிரபுத்துவமும், அதை நிலைநாட்டும் மத, சமூக, பாகுபாடுகளும். உரிமையும்கிடையாது! உடைமையும் கிடையாது!! இந்தக்கேட்டுக்கு ஆளாகியிருக்கும், அவர்கள் உள்ளம், உலர்ந்த சருகுபோலாகியிருப்பதால்தான், 'முன்னேற்றம்' என்கிற தீப்பொறி விழுந்ததும், பெருந்தீ, தோன்றுகிறது! இந்தத் தீச்சுழல், தஞ்சைபோன்ற இடங்களில் சுழன்று அடித்த 'வேகத்தை' எவரும் மறந்துவிட முடியாது. உழைத்து உழைத்து உடல் கருப்பானவர்கள் அவர்கள்; ஆனால் உள்ளமோ பாலையும் மிஞ்சும் தூய்மை கொண்டது. அந்த 'தும்பை' மலர்களைத் துவைக்கிறது மதமும் பணமும்! இந்த படுநாசத்தார்க்குப் படுகுழி வெட்டாவிடில், நிச்சயம் எதிர்காலம், இடர் மிக்கதாகவே இருக்கும். "ஏதோ, அவாளவாள் தலைவிதி. ஈசன் அவனை நீசனாகப் பிறப்பித்துவிட்டான். அவன் கர்மபலன்" என்கிற பாவபுண்ய பரிசீலனை இனிப் பயன்தரமுடியாது. "கடவுளை வணங்குவீர். காளிக்கும் மாத்தடி பிசாசுக்கும், சுக்குமாந்தடிக்கும் ஒதிய மரத்துக்கும் பூஜை செய்வீர் ஹரிஜனமக்களே!" எனும் பக்திப்போதனையும் பலிக்காது. அவர்கள் வாழ்க்கையின் ஒளியை அறியத்துடிக்கிறார்கள் — அறிவின் கதிரைக்காண விரும்புகிறார்கள். மண்ணும் நீரும் ஆக்கித்தரும் குடிசைகளைப் பார்க்கும் அவர்கள் கண்கள் மாளிகைகளையும் மதோன்மத்த நிலையிலிருக்கும் மடாலயங்களையும் பார்க்கத் துவங்கிவிட்டன. சாதாரணமாக அல்ல — ஆத்திரத்தோடு. வயலில் கதிர்வரக்காணும் அவர்கள் இதயம், வயிற்றுப்பசியை அடக்க 'எஜமானின் கையை' இனியும் எதிர்பார்க்கும் என்று கூறமுடியாது. அவர்கள் ஆத்திர உருவங்களாகி வருகிறார்கள். 'எங்கே, கூறு?' என்று விபரப்பட்டியல்கேட்கலாம். தஞ்சைத் தரணியில்மட்டுமல்ல எங்கெங்கு 'தாழ்த்தப்பட்டோர்களாக' அவர்களிருக்கிறார்களோ அங்கெல்லாம்சென்று அவர்கள் இதயங்களின்அருகே,காதுகளை வைத்துக்கேட்டால், 'கேள்வியும் கோபமுமாக' அங்கு துடிப்புகள் இருப்பதைக் காணலாம். இந்தத் துடிப்புகள், எரிமலை வெடிப்பதின் அறிகுறியாகும். இதை ஆளவந்தாரும், அவர்தமை ஆட்டிப்படைக்கும் பிரபுக்களும், விரைவாக உணர்தல் நலம்.

> "இந்த நாட்டில் எண்ணத்துக்கும் 'கண்டிரோல்' ஏற்படப் போகிறதா? நீங்கள் மனிதர்களைச் சுட்டு வீழ்த்தலாம்; ஆனால் எண்ணங்களைச் சுட்டுப் பொசுக்கிவிட முடியாது. அறிஞர்களைச் சுட்டு வீழ்த்தலாம்; அறிவொளியைச் சுட்டு வீழ்த்தமுடியாது"
>
> ஹரிந்திரநாத்சட்டோபாத்யாயா
> (பார்லிமெண்டில்)

கிராமப்பகுதிகளிலிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை வகுத்து, அவர்களும் சமூகத்தில் 'மனிதராக' வாழும் வழிவகைகளைக் காணும் முயற்சியில் எல்லோரும் ஈடுபட வேண்டும்.

சமுதாயத்தில் சிறப்புற்று வாழ்வதற்கு வழிகாட்டியாக இருக்கும் கல்வி விளக்கு, அவர்தம் குழந்தைகளுக்கு கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு கிராமப்பள்ளியிலும் ஆதித்திராவிட மாணவர்கள் இருக்க வேண்டுமென்று, ஒரு உத்திரவு இருப்பதை நாம் அறிவோம்.

'இன்ஸ்பெக்டர்' வரும் நேரத்தில் மட்டும் 'ஏழெட்டு' ஆதித்திராவிடப்பிள்ளைகளை அழைத்து வந்து காட்டும் நிகழ்ச்சிகள் நடப்பதையும் அறிவோம்.

ஏனையநாட்களில் அவர்கள், மாட்டையும் ஆட்டையும், காக்க வேண்டியவர்களாக ஆவதையும் அறிவோம்.

இவை இல்லாமல் செய்யப்பட வேண்டும்! எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி போதனை கிடைக்குமாறு, வழி செய்ய வேண்டும்.

பள்ளிதிறக்கும் 'காலம்' இது— எனவே, இதை மிகமிகவலியுறுத்துகிறோம்.

கட்டாயக்கல்வி!—இருக்க இடம்!—போதிய கூலி!—நியாயமான 'வாரம்'! இந்தத் தேவைகளை ஆதித்திராவிடப்பெருங்குடி மக்களுக்கு, கிடைக்கும் ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

'தும்பைமலர் இதயத்தவர்' அவர்கள் —துணிந்தால் 'எரிமலை' ஆகிவிடுவர்.

இதை எண்ணியாவது, இவைகளைச் செய்யுமா, இந்த சர்க்கார்?

## அதிகாரிகள் சிபார்சு!!

"கைத்தறி ஜவுளி, கையினால் செய்யப்பட்ட பூட்சுகள், வளையல்கள், சமைத்த உணவு முதலியவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும்" என்று மத்திய பிரதேச விற்பனைவரி அதிகாரிகளின் மகாநாடு சிபாரிசு செய்திருக்கிறது.

இந்தச் சிபார்சுகளை ஏற்றுக்கொண்டு அமுல் நடத்துவதனால் சர்க்கார் வருமானத்தில் இரண்டு கோடி ரூபாய் குறையலாம் என்றாலும் மத்திய பிரதேச சர்க்கார் அவைகளை அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளை கவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவறாது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
3. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள் இல்லையெனில் குறிப்பிட்ட தேதியோடு பத்திரிகை நிறுத்திவிடப்படும்.

மானேஜர்.

# 'இந்தி' ஏகாதிபத்தியம்

மற்றத் தேசிய இனங்களின்மீது 'இந்தி' மொழியை வலுக்கட்டாயமாகச் சுமத்தி, 'இந்தி' மொழி ஏகாதிபத்தியம் ஏற்பட மத்திய ஆட்சியினர் விரும்புகின்றனர். இவ் விருப்பத்துக்குக் காரணம் தேசிய ஒற்றுமை என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்தியாவிலுள்ள பல்வேறு தேசிய இனங்களுக்குள்ளும் இந்தியர் என்ற உணர்வு அழுத்தமாய் அரும்பாமலிருப்பதற்குரிய காரணம், இந்திய அரசியலில் உள்ள கோளாறே என்பது நன்கு தெரிய வரும் இந்நிலையில், இந்திய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் முறையில், மேலும் மேலும் சில காரியங்களை மத்திய ஆட்சியினர் அவசரப்பட்டுச் செய்துகொண்டு போவது, காலப்போக்கில் எதிர்பார்த்த ஒற்றுமையை உண்டாக்காது என்பது தோற்றம். அதற்கு மாறாக, கசப்புணர்ச்சி பெருகவே செய்யும். மத்திய ஆட்சியினர் அவசரப்பட்டுச் செய்யும் காரியங்களில் 'இந்தி' மொழித் திணிப்பும் ஒன்றாகும்.

'இந்தி' மொழி, இந்தியப் பொது மொழியாக இருக்கும் தகுதியுடையதுதானா என்ற ஐயப்பாடு இன்னும் என்னைவிட்டு நீங்கியபாடில்லை" என்று சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் குறிப்பிடுகையில், 'இந்தி' மொழியை விரும்பாத மக்கள்மீது, வலுக்கட்டாயமாகத் திணிப்பது கூடாது. மீறிச் செய்தால் ஒருவருக்கொருவர் மனக்கசப்பும், அவநம்பிக்கையும்தான் கொள்ளவேண்டியது ஏற்படும்' என்று அறிவுரை கூறியிருக்கிறார். ஸ்ரீ பிரகாசா முதிர்ந்த காங்கிரஸ்காரர்; சிறந்த படிப்பாளி; அத்துடன் 'இந்தி' மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர். அத்தகைய ஒருவர் 'இந்தி'ப் பிரசாரமயில் மேற்கண்டவாறு அண்மையில் குறிப்பிட்டிருக்கிறார் ஆனால் நடப்பது என்ன?

'இந்தி' தேசிய மொழி என்று ஒருதலைப்பட்சமாய் தீர்மானித்துக்கொண்டு, அதனை விரும்பாத மக்கள்மீது வலுக்கட்டாயமாய்ச் சுமத்தும் வேலைகளில் மத்திய ஆட்சியினர் இறங்கியிருக்கின்றனர் என்பது ஒருதலை. இதற்குச் சான்றாக, (1)ஹைதராபாத்திலுள்ள உஸ்மானியப் பல்கலைக் கழகத்தை 'இந்தி' மொழிப் பல்கலைக் கழகமாக மாற்ற முடிவு செய்திருப்பது. (2) 'இந்தி' மொழியைப் பரப்ப, இந்தியப் பொதுமக்களின் வரிப்பணத்தில் 15-இலட்சம் ரூபாய் செலவிடப் பணம் ஒதுக்கியிருப்பது; (3) 'இந்தி'ச் சொற்களை வலுக்கட்டாயமாகப் புகுத்த முன்வந்திருப்பது; (4) அஞ்சல் அட்டைகளிலும், உள்நாட்டுக் கடிதங்களிலும் ஆங்கிலத்திற்குப் பதிலாகப் பெயர், ஊர் முதலான இடங்களைக் குறிக்கும் இடங்களில் 'இந்தி' மொழிச் சொற்களை அச்சடித்திருப்பது; (5) இந்தியைக் கட்டாய பாடமாகச் செய்ய முற்பட்டிருப்பது முதலான காரியங்களைச் சுட்டிக் காட்டலாம்.

உஸ்மானியப் பல்கலைக் கழகம் நீண்ட நாட்களாக 'உருது' மொழியில் பாட போதனை நடத்தி வந்திருக்கிறது. திடீரென்று 'இந்தி' மொழியில் பாட போதனை நடத்தும்படி சொல்வதனால், எவ்வளவு இடையூறுகள் ஏற்படும் என்பதை, மத்திய ஆட்சியினர் 'இந்தி' வெறி உணர்ச்சியினால் மறந்து விடுகிறார்கள். ஆங்கிலத்துக்கு ஏற்ற கலைச் சொற்களை 'இந்தி' மொழியில் இன்னும் கண்டுபிடித்தபாடில்லை கண்டு பிடித்த சொற்களும் ஆங்கிலப் பொருளளவுக்கு நேரான கருத்தைக் கொடுப்பதாகவுமில்லை. அத்துடன் உச்சரிப்புகளும் கடுமையாக இருக்கும் முறையில் கலைச் சொல்லாக்கம் நடந்திருக்கிறது. சான்றாக, தூதர் (Ambassador) என்ற கருத்தில் வரும் ஆங்கிலச் சொல்லுக்கு 'இராஜ்டூத்' என்றும், மேன்மை தாங்கிய (His Excellency) என்ற சொல்லுக்கு, 'தத்ர பவன் பரம் சிரேஷ்டா' என்றும், ஆலோசகரை (Adviser) 'மந்திரமகாரி' என்றும், உதவி ஆலோசகரை 'சாயக்' என்றும் மொழிபெயர்த்திருக்கிறார்கள். வேறு பல சொற்களுக்கும் அவசரப்பட்டு வலிந்து பொருள் தேடியிருக்கிறார்கள். சில சொற்களுக்கு அவர்களால் பொருள் காண முடியாது விட்டுமிருக்கின்றனர். அவற்றில் ஐ.நா.க்கு—குறிக்கோள் நிலையம், (Mission), பதிவாளர் (Registrar) போன்ற சொற்களும் இடம் பெற்றுள்ளன. ஆங்கிலத்துக்கு எதிராகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள 'இந்தி'ச் சொற்கள், ஆங்கிலச் சொல்லோ, அன்றி தமிழ்ச் சொல்லோ தரும் பொருள் விளக்கத்தைத் தரவில்லை. 'இந்தி' மொழியில் தரவும் முடியாது. ஏனெனில், அது கதம்ப மொழியாக இருப்பதே என்பது பெறப்படும். இந்நிலையில், உஸ்மானியப் பல்கலைக் கழகத்தில் உள்ள பாட போதனை நூல்களை 'உருது'விலிருந்து 'இந்தி'க்குக் கொண்டுவருவதில் பணச் செலவு மட்டும் ஒரு கோடி ரூபாய் ஆகும் என்று அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர். அப்படிக் கொண்டு வருவதிலும், சரியான கலைச் சொற்களை 'இந்தி'யில் கொண்டு வருவது முடியாது என்றும், அப்படி முடிந்தாலும், அது தப்புந்தவறுமாகவே இருக்கும் என்றெல்லாம் மொழித்துறை அறிஞர்கள் பயப்படுகின்றனர். இவ்வித நிலையில், 'இந்தி'யை எப்படியும் அவசரப்பட்டுத் திணித்துவிட முற்படுவது, கோரிய பலனை உண்டாக்காது. 'இந்தி' ஏகாதிபத்தியவாதிகளின் அவசரப்பட்ட செயல்கள் பல, ஏற்கனவே பல தேசிய இனங்களிடையில் அவநம்பிக்கையையும், தனியே பிரிந்து போகும் அளவுக்கு மனக்கசப்பையும் வளர்த்து வருகின்றன. தனியே பிரிந்துபோகும் எண்ணத்தில் தோன்றியுள்ள பிரிவினைக் கிளர்ச்சி தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை ஒப்புக்கொள்ளும் விதத்தில் வந்து முடியவே போகிறது.

இவ்வித நிலையில் அவசரப்பட்டு அஞ்சல் அட்டை, உள்நாட்டுக் கடிதங்களில் எல்லாம் வெறும் 'இந்தி'யில் மட்டும் அச்சடித்திருப்பதும், புகைவண்டி, அஞ்சல் நிலையங்களில், இம்மாகாண மொழிகளுக்கு முதலிடம் கொடாது, கடைசி இடம் கொடுத்திருப்பது மான இன்னோரன்ன பிற காரியங்கள், அபாயத்தை இருகைகொண்டு அழைப்பதை ஒக்கும். இதன் விளைவு கவர்னர் ஸ்ரீ பிரகாசா சொன்னது போல், சுதந்திரத்துக்கே ஆபத்து ஏற்படும் நிலைமையை உண்டாக்கும் என்று, நாம் அஞ்சுகிறோம்.

(பிரசண்ட விகடன்)

## தேனீக்கலவர வழக்கு நிதி

| | |
|---|---|
| முன்னைய வரவு | 1054—14—0 |
| தி. மு. க. | |
| கொடைக்கானல் | 5—0—0 |
| ர. தமிழ்மணி | |
| நாடார்பட்டி. | 4—0—0 |
| திருமங்கலம் | |
| ந. தனுஷ்கோடி. | 1—0—0 |
| தேவாரம் | |
| சி. எஸ். ஆப்ரகாம் | 5—0—0 |
| திருமங்கலம் | |
| ஆர். விவேகானந்தன் | 5—0—0 |
| தி. மு. க. நாமக்கல் | 1—0—0 |
| ,, வரகப்பட்டி. | 1—0—0 |
| ராயப்பேட்டை | |
| இளங்கோமன்றம் | 5—0—0 |
| தி. மு. க. மதுராந்தரம் | 25—0—0 |
| ,, குடந்தை | |
| பொதுக்கூட்டம் | 6—0—0 |
| ,, திருவிடமருதூர் | 2—0—0 |
| ,, காடவாப்பட்டி. | 1—9—3 |
| ,, வரதப்பட்டி. | 1—12—0 |
| சின்னாளப்பட்டி. | |
| ,, பொதுக்கூட்டம் | 10—6-9 |
| சின்னாளப்பட்டி | |
| சதாசிவம்மூலம், | 3—0—0 |
| சின்னாளப்பட்டி. | |
| சில தோழர்கள் | 4—13—3 |
| அம்பாசமுத்திரம் தி. மு. க. | |
| பொதுக்கூட்டம் | 12—9—7 |
| பத்தமடை பரமசிவம் | 2—0—0 |
| முதலூர் தி. மு. க. | |
| பொதுக்கூட்டம் | 12—9—0 |
| ,, திருஷ்ணுபுரம் | 1—4—0 |
| மதுரை பொதுக்கூட்டம் | 10-0-0 |
| இராமநாதபுரம் மாவட்டம் | |
| வீரபத்திரன் | 1—0—0 |
| இராமலிங்கம் | 1—0—0 |
| பழனி ரயில்வே | |
| தொழிலாளர்கள் | 3—8—0 |
| தி-மு. க. பொட்டலேரி | 2—0—0 |
| கிழையூர் | |
| பொதுக்கூட்டம் | 2—8—0 |
| சொக்கப்பாளையம் | |
| ஒரு அன்பர் | 1—0—0 |
| | 1185—15—10 |

மேலும், நிதி தர விழைவோர், இரா. நெடுஞ்செழியன், 12, வைத்தினாத முதலித் தெரு, சேத்துப்பட்டு, சென்னை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

இரா. நெடுஞ்செழியன்,
செயலாளர் நிதிக்குழு.



## சேலம் மாவட்ட பிரச்சார பயிற்சி வகுப்பு

சேலம் மாவட்ட தி. மு. க. பிரச்சார பயிற்சி வகுப்பு ஜூன் 19, 20, 21, 22ல் சேலம் அயோத்யாபட்டினம் திரு. பி. கந்தசாமி எம். எல். ஏ அவர்கள் தோப்பில் நடைபெறும். சேலம் காரிப்பட்டிப் பாதையில், 6-வது மைலிலும், மாசிநாய்க்கன்பட்டி புகைவண்டி நிலையத்திற்கு அருகாமையிலும் உள்ளது.

பயிற்சி வகுப்பில் பள்ளி மாணவர்களும், கழகப் பணியாளர்களும், பங்கு பெறலாம். சேர்ப்பில் மாணவர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படும். பயிற்சிபெறும் மாணவிகளுக்கு பிரத்தியேக வசதிகள் செய்து தரப்படும்.

வகுப்பிற்கு வருவோர் முன்பே மேடையேறிப் பேசும் பழக்கம் உடையவராகவும், பயிற்சி மட்டுமே பெறவேண்டியவராகவும் இருக்க வேண்டும்.

சேலம் மாவட்டத்தினர்க்கு மட்டுமே வகுப்பில் முதல் இடம் உண்டு.

இதுவரை விண்ணப்பம் அனுப்பாதவர்கள் அவர் பேச்சாளர் என்பதற்கு அந்த ஊர்க் கிளைக் கழகச் செயலாளரின் கையொப்பத்துடன் 12—6—52க்குள் ப கண்ணன், அமைப்பாளர், பயிற்சி வகுப்பு, சலகண்டாபுரம், சேலம் மாவட்டம். என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கக் வேண்டுகிறோம். தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்பப்படும். அழைப்பு பெற்றவர்களுக்கு மட்டும் நான்கு நாட்களுக்கும் இலவச உணவு தங்க வசதி செய்து கொடுக்கப் படும். வழிப்பயணச் செலவை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அழைப்பு பெற்று பயிற்சி பெற வருபவர்கள் படுக்கை வசதியோடு வருவதோடு, வகுப்பு கட்டுமுறை கட்டு திட்டங்களுக்குப் பணிந்து நடந்துகொள்ள வேண்டும். பயிற்சியில் தேர்ந்தவர்களுக்கு அத்தாட்சி பத்திரம் வழங்க ஏற்பாடு நடைபெறுகிறது.

இதுவரை பங்குத் தொகை அனுப்பாத கிளைக் கழகங்கள் உடனே பி. ஆர். சோமசுந்தரம் துணைச்செயலாளர், 25 மாரிமுத்து முதலி தெரு, அம்மாபேட்டை, சேலம் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

ஜி. பி. சோமசுந்தரம்.
செயலாளர்
சேலம் மாவட்டம் தி. மு க.

☆

## 'பூரி' யாத்ரீகர்களே!

"பூரியில், ஜூன் 24 முதல் ஜூலை 2 வரை நடைபெற விருக்கும் மகோத்சவத்துக்கு செல்லும் யாத்திரிகர்களுக்கோர் எச்சரிக்கை.

அங்கே, காலரா, தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. ஆகவே, உங்களை, நீங்களே தற்காத்துக்கொள்ள வேண்டும். போவதற்கு ஒரு வாரத்துக்கு முன்காலரா ஊசிபோட்டுக் கொள்ளுமாறு யோசனை, கூற விரும்புகிறோம்."

* * *

'சம்பளம் அதிகம் வேண்டுமா?'
'ஆம்'
'கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள்'
'அரிசி அதிகம் தேவையா?'
'ஆமாம்'
'கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள்'

இவ்விதம், எதற்கெடுத்தாலும், 'கடவுளை' அழைக்கிறாரல்லவா, அன்பர் ஆச்சாரியார், அவரது சர்க்காரைச்சேர்ந்த சுகாதார இலாகா டைரக்டர் விடுத்திருக்கும் எச்சரிக்கைதான் மேலேயிருப்பது — நமது தயாரிப்பு அல்ல. பக்தர்கள் குழாம், எச்சரிக்கப்படுகிறார்கள். யாரால்? சர்க்காரால்! எதற்காக? காலராவின் கொடுமையால்!! மும்மலம் நீக்கி முத்தி பெறப்போகும் பக்தர்களின் உடலை காலரா தாக்கிடுமென்று சர்க்கார் எச்சரிக்கிறார்கள். ஆச்சாரியாரைப் பிரதமராகக் கொண்டிருக்கும் சர்க்கார் இவ்வித எச்சரிக்கை விடுகிறது. "காலரா வந்தால் என்ன, கடவுளின் கருணை கடாட்சம் ஏற்படாதோ, ஒரே விநாடியில் இந்நோய்தனை விரட்டியடிக்கமாட்டாரோ" என்று எண்ணவில்லை 'பஜகோவிந்தம்! பஜகோவிந்தம்!' என்று பாடவில்லை. ஊசி போட்டுக்கொள்ளுமாறுதான் தெரிவிக்கின்றனர்!

12-ம் பக்கத் தொடர்ச்சி

பட்ஜெட்டை கண்டபிறகு இந்த எண்ணமே வலிவாகும். தென்னிந்திய மக்களின் எல்லா பிரச்சினைகளிலும், அநாவசியமான, ஆதிபத்தியம் ஸ்தாபிப்பதற்குள்ள, முயற்சி நடந்துவருகிறது என்பதை பார்லிமெண்டின் நிகழ்ச்சி மூலம் விளங்கும்.

ஆகவே, இந்த துர்ச்செயலுக்குள்ள ஒரு பரிகாரம் வேண்டுமானால், காந்தியடிகள் உபதேசித்த அதிகாரத்தை பிரித்து ஆளும் தன்மை உடனே, நடைமுறைக்கு வந்தாகவேண்டும். (அதிகாரத்தை ஒரே இடத்தில் குவிப்பது மாற வேண்டும்) பாகிஸ்தான் பிரிந்து போன, இந்தியாவை, இனியும், இந்தியா, என்று குறிப்பிடுவதில் அர்த்தமில்லை.

புராதன ஆரிய பூமியின் தென்னெல்லையாகிய, விந்தியப் பிரதேசத்தை, வைத்து, ஆர்யவர்த்தமென்றும் (தக்ஷிணபதம்) தென் பீடபூமி என்றும் இரண்டாகப் பிரித்து தனித்தியங்கும் உரிமையுடைய, இரண்டு குடியரசுகளாக இந்தியாவை பிரிப்பதே நன்மை பயக்கும். தென்னாட்டவரின் எண்ணங்களை காப்பாற்றவும், குறைகளை போக்கவும் தகுந்த பாதுகாப்புடன் இருக்கவேண்டுமானால், சென்னை (மாகாணம்) மைசூர், ஹைதராபாத், திருவாங்கூர் கொச்சி என்கிற சமஸ்தானங்களை ஒன்றாக இணைத்து பிரத்தியேகமான ஒரு தென்னாட்டு குடியரசு ஸ்தாபித்தேயாகவேண்டும். இந்த நிலைமைக்கு வந்துள்ளது. காஷ்மீர் பிரச்சினையிலும், சிலோன் பிரச்சினையிலும் மத்திய சர்க்கார் கடைபிடிக்கின்ற, பிரிவு எண்ணம் இவ்விஷயங்களிலும் புகுந்து நமது கண்களை திறக்கட்டும்.

—


வெளிவந்துவிட்டது!

சி. பி. சிற்றரசு

அவர்கள் எழுதிய

எமிலி ஜோலா ரூ 1—0—0

(முதற்பாகம்)

தமிழ் மன்றம்

தெப்பகுளம் :: திருச்சி.


## ★ நான் தான் நிதி ★

| | |
|---|---|
| தி. மு. க. திட்டக்குடி | 5—0—0 |
| ,, முக்கூடல் | 5—0—0 |
| ,, மேட்டுப்பாளையம் | 5—0—0 |
| ,, கல்லக்குறிச்சி | 5—0—0 |
| வின்சென்ட்ஜெயபால் | |
| மதுரை | 3—2—0 |
| பச்சையப்பன் பட்டறை | 5—0—0 |
| தி. மு. க. அம்மையப்பன் | 5—0—0 |
| ,, அத்திப்பாளையம் | 5—0 – 0 |
| ,, ஓனங்குடி | 5—0—0 |
| ,, கல்லிடைக்குறிச்சி | 5—0—0 |
| தஞ்சை வி. ராம | |
| மூர்த்தி மூலம் | 10—0—0 |
| ஏ. கே. வேலன் மூலம் | |
| தி. மு. க. மூங்கில்பாடி | 5—0—0 |
| ,, காமக்கல் | 5—0—0 |
| ,, பொட்டனேரி | 5—0—0 |
| ஈ. வே. கி. சம்பத் மூலம் | |
| தி.மு.க.பாண்டியராஜபுரம் | 5—0—0 |
| முத்துபடிப்பகம் மதுரை | 5—0— 0 |
| தி.மு க. அய்யம்பாளையம் | 5—0—0 |
| ,, சம்பப்புதுப்பட்டி | 5—0—0 |
| ,, மாயவரம் | 5—0—0 |
| எம். கோவிந்தராசன் | |
| தஞ்சை. | 5— 0—0 |
| இளங்கோமன்றம் | |
| ராயப்பேட்டை | 5—0—0 |
| மாரிமுத்து திருச்சி | 5—0—0. |
| மு. கருணாநிதி மூலம் | |
| தி. மு. க. தூத்துக்குடி | 5—0 —0 |
| ,, போடிநாயக்னூர் | 5—0 0 |
| ,, நெல்லிக்குப்பம் | 5—0—0 |
| வ. நடராசன் இடையூர் | 2—0—0 |
| தமிழ்மன்றம் திருச்சி | 5 —0—0 |
| தி. மு. க. சென்னிமலை | 5—0—0 |
| கே. கே. நீலமேகம் | |
| குடந்தை | 5—0—0 |
| தி.மு.க.மேட்டுப்பாளையம் | 5—0—0 |
| அ.ச. பானு பொள்ளாச்சி | 5—0—0 |
| நாராயணன் திண்டுக்கல் | 5—0—0 |
| இரா. நெடுஞ்செழியன் மூலம் | |
| தி. மு. க. திருவன்னூர் | 5 —0—0 |
| ,, ஆற்காடு | 5—0—0 |
| ,, கொண்டலாம்பட்டி | 5—0—0 |
| ,, லால்குடி | 5—0—0 |
| ,, திருசசிபீமநகர் | 5—0—0 |
| ,, கோட்டூர் | 5—0—0 |
| ,, பலக்கனூத்து | 5—0—0 |
| ,, பள்ளப்பட்டி | 5—0—0 |
| ,, ஸ்ரீரங்கம் | 5 — 0—0 |
| மேற்கற்கண்டார் | |
| ,, கோட்டை | 5—0—0 |
| ,, சோகைமலை | 5—0—0 |
| ,, மதுராந்தகம் | 5—0— 0 |
| ,, வடுகப்பட்டி | 5— 0— 0 |
| ,, சின்னாளப்பட்டி | 5—0—0 |
| ,, திருப்புவனம் | 5—0—0 |
| ,, அம்பாசமுத்திரம் | 5—0—0 |
| ,, கல்லிடைக்குறிச்சி | 5—0— 0 |
| ,, மடத்தூர் | 5—0—0 |
| ,, முடக்கூர் | 5—0—0 |
| ,, மதுரை | 5—0—0 |
| ,, திருப்பாதிரிப்புலியூர் | 5—0—0 |
| ஆகவரவு | 271—2—0 |

மேலும், தினத்தாள்நிதி அனுப்பும் தோழர்கள், சென்னை, தி. மு. க. தலைமைநிலையத்திற்கு அனுப்பி வைக்கவும்

—

## தோழர்களுக்கு

தி. மு. க. தலைமை நிலைய வெளியீடான "தீர்மானங்கள்" புத்தகம், அனைத்தும் செலவாகிவிட்டபடியாலும், இரண்டாம் பதிப்பு வெளிவர இன்னும் 2—3 வாரகாலமாகுமாதலாலும், புத்தகம் வேண்டும் தோழர்கள் 'சட்ட திட்டங்கள்" புத்தகத்திற்கு மட்டுமே பணம் அனுப்பும்படி வேண்டப்படுகிறார்கள்.

'தீர்மானங்கள்" புத்தகத்துக்காக சமீபத்தில் பணம் அனுப்பியவர்களுக்கும், இனி அனுப்பும் தோழர்களுக்கும் தாமதமாகவே அனுப்பப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஈ. வே. கி. சம்பத், பொறுப்பாளர்.

## அறப்போர்

உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவேண்டுமென்ற கோரிக்கையோடு பம்பாயிலும் மற்றும் சில இடங்களிலும் சோஷியலிஸ்டு தோழர்கள் அறப்போர் துவக்கியுள்ளனர்.

ஆற்றுக் கணக்கானோரை காங்கிரஸ் அரசாங்கம், இதன் விளைவாக் கைது செய்துள்ளது.

'உணவுப் பொருள்களின் சேமிப்புக் கிடங்குகளை நோக்கிச் சென்று, அங்குள்ள உணவுப் பொருள்களைக் கைப்பற்றி, குறைந்த விலைக்கு விற்று, பணத்தை சர்க்காரிடம் சேர்ப்போம்" என்பதே அறப்போரின் திட்டமாகும்.



# "கேரள கீதம்"

## கேட்குது பாரீர்!

"எது இல்லை எம்மிடம்? வளமான பூமியா, விளையும் வயல்களா, கனி தரும் மரங்களா, கரும்பா, பொன் சுரங்கமா, அகிலா, தேக்கா, விலைபெறும் சுரங்கப்பொருள்களா— எது இல்லை என்று சொல்ல முடியும்? மிளகு ஒன்று போதுமே, எமது புகழ் பரப்ப! மணம் தரும் பொருள்கள், இன்று மட்டுமல்ல, ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எமது புகழை அலைகடலுக்கப்பாலும் பரப்பி வருகிறது! எமது நாட்டவர் பதனிட்டுத் தரும் தோல் — கிட்டாவிடில் 'பாட்டா'வும் பளபளப்பான செருப்புகளும், குவிய முடியுமென்று கூறுவீரா? அணுகுண்டுக்குத் தேவையானப் பொருள்களை எமது மண்மாதா மறைத்து வைத்திருக்கிறாள். இவ்வளவு சிறப்புடையவர்கள் நாங்கள். ஆனால் சீரழிகிறோம்!—அல்லஅல்ல— சீரழிக்கப்படுகிறோம். யாரால் என்று கேட்கிறீர்களா? உங்களால் தான்! இந்த நாட்டை ஆளும் வடநாட்டுக்காரர்களாகிய உங்களால் நாங்கள் வஞ்சிக்கப்படுகிறோம். வடக்கு, எம்மை வீழ்த்துகிறது— ஓரவஞ்சனையோடு நடத்துகிறது. எமது பூமியில் விளையும் பொருள்கள், அகில உலகுக்கும் செல்லுகின்றன. அமெரிக்கா, 'இன்னும் இன்னும்' என்று 'ஆர்டர்' கொடுத்த வண்ணமே உள்ளது. அமெரிக்காவின் 'டாலர்' இங்கே வருகிறது. இங்கே என்றால் எங்கே? டில்லிக்கு! வடநாட்டு பீடத்துக்கு!! இந்திய சர்க்காருக்கு!! டாலரைக் குவிப்பது, எமது பொருள்கள். இந்திய சர்க்காரின் மானத்தைக் காப்பவை, எமது மாதா தரும் பொருள்கள். ஆனால் இவ்வளவு இலாபம் பெறும் — நீங்களோ எங்களைச் சீரழிக்கிறீர்கள். எமது பொருள்களை விற்று, கஜானவுக்குள் நீங்கள் குவிக்கும் பணத்தில், நாங்கள், பங்கு கேட்கவில்லை. 'பாகம், போடு' என்று கேட்கலாம்—ஆனால் கேட்கவில்லை. 'ஐயா, எமது குறை தீருங்கள்' என்று கேட்கிறோம். கெஞ்சிக் கேட்கிறோம். நியாயமான, ஒழுங்கான கஷ்டங்களைத் தீர்க்குமாறு வேண்டுகிறோம். நீங்களோ, செவி சாய்ப்பதே இல்லை! மாற்றாந்தாயைப் போல் நடத்துகிறீர்கள். தெற்குக்கு வஞ்சனை! வடக்குக்கு வாழ்வு!!— இது உமது சித்தத்தில் குடியேறி விட்டது.

சீரழிக்கிறீர் எமது மக்களை. சிறிதும் சிந்தாகூலம் ஏற்படவில்லை, உங்களுக்கு. சிரித்து மகிழ்கிற சிங்கார புருஷர்களே! உமது 'சிம்மாசனம்' நீடித்தே இருக்குமென எண்ணாதீர். மக்களின் எரிச்சல் உமது மமதையைச் சாய்க்கும். சூழ்ச்சிக்கு இரையானோர், சூறாவளியாவர்! புயலெனக் கிளம்புவர்! உங்களின் தொடர்பை உதறித் தள்ளிவிட்டு, தமது பூமியைத் தமதாக்கிக் கொள்வர். 'சுதந்திர குடியரசு' எனத் தமது தாயகத்தைப் பிரகடனப் படுத்துவர். விடுதலை பெறுவர் உமது வேதனையினின்றும்"

* * *

இவ்வாறு டில்லி பார்லிமெண்டிலே மே-31ந் தேதியன்று, பேசினாராம் ஒரு உறுப்பினர். அதுவும் சாதாரணமாக அல்ல — ஆவேசத்தோடு, பேசினாராம். "மெயில்" இதழ் தெரிவிக்கிறது Forceful Speech என்று. 'யார் அவர்? நமது குரல் போலிருக்கிறதே' என்று கேட்பீர்கள். அவர் நமது கழகத்தவரல்ல; ஆனால் நமது இனத்தைச் சார்ந்தவர். வீரத்தாய்மார்களின் வரிசையிலே நிற்பவர்! மறக்குடிமகள்! நியாயத்துக்காக வாதாடியிருக்கிறார், கேரளநாட்டின் பிரதிநிதி. தோழியர் அன்னி மாஸ்கரீன், இவ்வாறு, ஆவேசத்தோடு பேசினாராம்—டில்லி தர்பாரில். ஒருகை, அரிசியைக் காட்டி 'பாரீர்! இதுவா எமக்கு? இது அரிசியா! எவ்வளவு அநீதி' என்று முழக்கமிட்டாராம், அப்போதுதான், மேலே குறிப்பிட்டோமே, அதுபோல, வீரமுழக்கம் செய்திருக்கிறார். அவரது பேச்சின் முழு விபரமும், நமக்கு கிடைக்கவில்லை—மேற்கண்ட செய்தியும் 'மெயிலின் விசேஷ நிருபர்' சுருக்கமாகத் தந்திருப்பதன் விளக்கம்தான. எனினும் North Versus South என்று தலைப்பிட்டு தரப்பட்டிருக்கிறது. வடக்கும்—தெற்கும்! பேசினவர், தி. மு. க. தோழியரல்ல—கேரளத் தோழியர். அவர் கூறுகிறார், வடக்கு வஞ்சனை செய்வதாக. 'தனி நாடு பெறும் நிலைக்கு உமது போக்கு எமது பூமியினரைக் கொண்டு செல்லும்' என்று முழக்கமிடுகிறார். தனிநாடு! அதுவும் எப்படி? 'சொந்தக் குடியரசு'! கூறுகிறார், அவர். கூறுபவர் ஒரு கேரளத் தோழியர். கேரள மக்கள் உள்ளத்தில் உருவாகி வரும் 'விடுதலைப் புயலின்' அறிகுறிகள், வரவர, அதிகமாகத் தென்படுகின்றன.

மேலே பார்லிமெண்டு உறுப்பினர், பேசியதைக் கண்டீர்கள்.

இதோ, மற்றொன்று.

மலையாள மக்களிடை உலவும் "கேரள கௌமதி" எனும் இதழ் 25—5—52ல் எழுதியிருப்பது.

பலராமபுரம் (கேரளம்) தி.மு. க. தோழர் அருணாசலம் மூலம், தமிழாக்கப்பட்டது. இதையும் படியுங்கள் :—

404.98 கோடி ரூபாய், வரவும் 401.25 கோடிரூபா செலவும் ஆக 3.73 கோடிரூபா மீதிஎன்கிறமுறையிலுள்ள ஒருபட்ஜெட் மத்தியசர்க்கார் பார்லிமெண்டில் நிதிமந்திரி சிந்தாமன் தேஷ்முக் சமர்ப்பித்துள்ளார். 3.73 கோடி ரூபா மிச்சமிருந்தாலும் கூர்ந்து கவனிக்கிறபோது. இது ஓர் பற்றுக்குறை பட்ஜெட்டுதான் என்பது விளங்கும். இந்த பட்ஜெட் ஒரு குறுகிய எண்ணத்தின் அடிப்படையிலுள்ள பட்ஜெட்டுதான். புரட்சிகாமான பொருளாதார சமத்துவங்களும் இதில் காணவில்லை. புதிய தாக வரிகளொன்றும் சுமத்தவில்லை.

என்பதுமட்டுமே இதன் பிரத்யேக மான மேன்மை.

உணவு தான்யங்களுக்கு சகாய தனம் கொடுக்க முடியாது என்றும் —ஆனால் ஏதாவது பிரதேசங்களில் வறுமை உச்சநிலை அடையுமானால், மத்திய சர்க்காரில் இருந்து வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் சொல்லப்படுகிறது.

நம்முடைய பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு பொருள் செலவு செய்யவேண்டியுள்ளபடியால் உணவுப் பொருள்களுக்கு சகாயதனம்தர வசதியில்லை என்பதுதான் நிதிமந்திரியின்வாதம். உணவுப் பொருள்களுக்குசகாயநிதி தருவதை நிறுத்திவிட்ட காரணத்தால் பல சமஸ்தானங்களிலும், உணவுதான்யங்களின் விற்பனை செய்யும் விலை கூடிவிட்டதுமல்லாமல் சாதாரண மக்களின் வாங்கும் சக்தி குறைந்து விட்டதென்பதையும், விலை கூடின சாதனங்களை வாங்கும்தன்மை இழந்துவிட்டார்கள் என்பதையும் குறித்து நமது நிதிமந்திரி தெரியாதவரில்லை.

உணவுப் பொருளின் விலை கூடினமைக்காக இன்று பம்பாயிலும் டெல்லியிலும், சத்யாக்கிரக போராட்டங்களும் நடந்தவண்ணமிருக்கின்றன. அந்த போராட்டம் நாடு முழுதும் படர்ந்து பிடிப்பதற்குள்ள சகல இலட்சணங்களும் தோன்றியுள்ள, இந்த சந்தர்ப்பத்தில்தான் நிதி மந்திரி பட்ஜெட்டை குறித்து இம்மாதிரி ஒரு சொற்பொழிவு நடத்தியுள்ளார். மக்களுக்கு மிதமான விலைக்கு ஆகார சாதனங்கள் கொடுப்பதற்கு சாத்தியமாகாமலிருப்பதற்குள்ள காரணம் சொல்லப்படுவது நமது பொருளாதார அபிவிருத்தி திட்டங்களுக்கு பெருமளவுக்கு செலவு இருக்கிறது என்பதேயாகும்.

பட்டாள செலவுக்காக 197.95 கோடிரூபாய் பிரித்துவைக்கப்பட்டுள்ளது. அதாவது மொத்த செலவின் 49% ராணுவச்செலவிற்கு வைக்கப்பட்டுள்ளது. மக்கள் வேலையும் உணவுமில்லாமல, பட்டினியாக சாகிறபோது, ராணுவச் செலவிற்கு இவ்வளவு மிகுதியான ஒரு தொகையை வினியோகிப்பது கண்டிப்பாக நீதி என்று சொல்லமுடியாது. முதலாவதாக, மக்களை காப்பாற்றவேண்டும். பிறகு நாட்டை பாதுகாப்பது முறையாகும்.

பட்டாளத்திற்காக இவ்வளவு பெரும் செலவு செய்யவேண்டிய நிலைக்கு காஷ்மீரின் மீதுள்ள ஆசையே, காரணமாகும்.

இந்த பட்ஜேட்டை துருவிப் பரிசோதிக்கும்போது, தென் இந்தியா மீது மத்திய சர்க்கார் மாற்றுந்தாய் கோள்கையை கடைப்பிடிப்பதை பிரத்தியேகமாகக் காணலாம்.

தென்னிந்தியாவில்விவசாயங்களையும், வியாபார பொருள்களையும் அறவே வெறுத்து ஒதுக்கியிருப்பதும், வடநாட்டு விவசாயங்களுக்கு வியாபார சாதனங்களுக்கும், பாதுகாப்பளித்து வருகின்றது மத்திய சர்க்கார். தோழர் ஸ்ரீகண்டன் நாயர் எம். பி. (இவர் மறுமலர்ச்சி சோஷியலிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர் R. S. P.)பார்லிமெண்டில்குறிப்பிட்டதுபோல்,அதாவது பிர்லாவுக்கும், டாட்டாவுக்கும்— அவர்களைப்போன்ற முதலாளித்துவ தாத்பர்யங்களை பாதுகாப்பதே மத்திய சர்க்காரின் குறிக்கோளும் கவனமும் என்றார். அவர்களுடைய சோப்பு வியாபாரம், விவசாயம் இலாபகரமான, முறையில் நடத்திச்செல்வதற்கு சிலோன் கொப்பரைத் தேங்காயின் இறக்குமதி வரியை மிகவும் குறைத்து, தென்னிந்தியா, கொப்பரை விவசாயிகளையும், தண்ணீரில் தாழ்த்தி வருகின்றனர். அநேக இலட்சம மக்களின் வாழ்க்கைத் தொழிலாகிய கயிறு விஷயத்திலும் ஸ்தம்பிக்கும்படி செய்துள்ள நிலையை குறித்து ஒன்றும்சொல்வதற்கில்லை- ஆனல், அதே சமயம் வடநாட்டிலுள்ள சணல் தொழிலைக் குறித்து ரொம்ப கூடுதலாக சொல்ல வேண்டியும் இருக்கிறது.

தோழர் ஸ்ரீ கண்டன்நாயர் குறிப்பிட்டதைபோல் சணல்விஷயதில் மத்திய சர்க்கார் காட்டும் அக்கரையில் பத்திலொருபாகம் நம்முடைய, கயிறு விஷயத்தில்காட்டியிருந்தால், இன்றுள்ளநிலைஎவ்வளவோ,நன்மையளிப்பதாகஇருக்கும். திருவாங்கூரிலுள்ள, மோனைசைட்டும், இல்மனைட்டும், விஷயத்திலும் மத்திய பீடம், பல கட்டுபாடுகளும்விதித்து நம்மை நெரித்து கொன்று வருகிறது.

பிரம்மாண்டமாக பரந்து கிடக்கும் இந்த மகா உபகண்டத்தை, ஒரேஆட்சியின்கீழ் வைத்துக்கொண்டிருந்தால் இப்படித்தான் நிலைமை இருக்கும். மத்திய சர்க்காரின்

(10-ம் பக்கம் பார்க்க)

## அவசரப்படுங்கள்!

ஜூன் 15, கடைசி தேதி—உறுப்பினர்கள் சேர்க்கும் பணி அதற்குள் முடிந்தாகவேண்டும்.

உறுப்பினர் சேர்க்கும் வேலை முடிந்த பிறகே, இவ்வாண்டுக்குரிய புதிய நிர்வாகிகள் தேர்தல்களை நாடெங்கும் நடத்த முடியும்.

புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுத்த பிறகே, கழகப் பணிகளைத் தொடர்ந்து நடத்த முடியும்.

ஆகவே, தோழர்களே, உறுப்பினர்களை ஏராளமாகச் சேருங்கள். மிகவிரைவில் சேருங்கள்.

மாவட்டச் செயலாளர்களே, தோழர்களை அவசரப்படுத்துங்கள்.

உறுப்பினர் சேர்க்கும் வேலை, கழகத்தின் முதல் வேலை— அதுவே முக்கியமான வேலை.

ஜூன் 15, கடைசி தேதி, கவனப்படுத்திக்கொள்ளுங்கள்!

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.



REGISTERED No M 3644 11/52

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 15—6—52 | இதழ் 50

# டில்லி-தொடக்கம்

டில்லி, தென்னாட்டவரின் திறத்தை மெள்ள மெள்ள அறியத் தொடங்கியிருக்கிறது.

டில்லியில், தென்னாட்டிலிருந்து முன்பும் பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பலர் சென்றிருந்தனர் ஆனால் அவர்கள் பஜகோவிந்தா கம்பெனியினர், எனவே, எதிர்ப்பு கிளம்பவில்லை. எல்லாம் நேரு மயம் என்று இருந்தது.

டில்லி, முதன் முறையாகத் தென்னாட்டின் மனப் போக்கை உணரும் வாய்ப்பைப் பெறுகிறது.

'ஆசியாவின் ஜோதி'தான் இப்போதும் அரசோச்சுகிறார், ஆனால் அந்த ஜோதி கண்டு சொக்கிப் போன சோணாசலங்கள் மட்டுமே அல்ல இப்போது அங்கு.

தென்னாடு; பலதிறப்பட்டவர்களை, டில்லிக்கு அனுப்பி வைத்திருக்கிறது. கம்யூனிஸ்டுகள் குறிப்பிடத் தக்க அளவு உள்ளனர். சோஷியலிஸ்டுகள் உள்ளனர். பிரஜா கட்சி—உழைப்பாளர் கட்சி—பொதுநலக் கட்சி — திருவிதாங்கூர் கொச்சி பகுதியிலுள்ள தீவிரவாதக் கட்சிகள்—என்று பல்வேறு முகாம்களிருந்தும், தீரர்கள் சென்றுள்ளனர்.

அவர்கள், ஆதிக்க வெறிபிடித்தலையும் காங்கிரஸ் ராசீசத்தை, அச்சம் தயை தாட்சணியமின்றி கண்டித்து, ஜனநாயகம் தழைக்கப் பாடுபடுகின்றனர்.

நண்பர் டாக்டர் கிருஷ்ணசாமி, இந்தி வெறியைக் கண்டித்து, வீரமாக நடந்துகொண்டார்.

டாக்டர் சுப்பராயனை வீழ்த்திய பேபி டாக்டர் கிருஷ்ணசாமிக்கு துணை நின்றார்.

கொள்கைப் பற்றும் ஆர்வமும் கொண்ட பழங்குடி பாதுகாப்பாளர் தோழர் வீருசாமி பாட்டாளிகளுக்காகப் பரிந்து பேசியிருக்கிறார். வடநாட்டு முதலாளி கோயங்காவைக் குப்புற விழச் செய்த திருக்குறள் முனுசாமி, டில்லி சென்றார்—சென்றதும், டில்லி பார்லிமெண்டில் நிதி அமைச்சர் குறள் பேசுகிறார்.

கம்யூனிஸ்டுகளின் புள்ளி விவரங்களைக் கேட்டுக் காங்கிரஸ் எதேச்சாதிகாரிகளுக்கு ஏற்படும் கிலியை விட, முதலாளிமார்களுக்குத் திகில் அதிகமாகிவிட்டிருக்கிறது.

கவிதை கொண்டு தாக்குகிறார் கவிஞர் அரிந்திர நாத் சட்டோபாத்யாயா!

கலங்காது போர் முழக்கமிடுகிறார் அன்னுமஸ்கார்னீஸ் அம்மையார்!

ஆள்வோருக்கு அறநெறியைக் காட்டுகிறார், ஸ்ரீ கண்டன் நாயர்.

இவை ஆரம்பம்! ஆனால் இவைகளை முதன் முறையாகக் காண்கிறார் நேரு! முகம் சுளித்துக்கொள்கிறாரா — விழிகளை உருட்டுகிறாராம்! ஏன்! அவருக்குத்தான் ஏராளமான 'மெஜாரடி' இருக்கிறதே, இந்த எதிர்ப்புகள் அவரை என்ன செய்யும் என்று அனுபவம் குறைவாகவும் ஆர்வம் அதிகமாகவும் உள்ள காங்கிரஸ் தோழர், கேட்கக் கூடும்.

அமெரிக்க 'மார்க்கட்'டில், நேருவின் செல்வாக்கு, சரிகிறது, இந்த எதிர்ப்பினால், என்பதை அவர் அறியார்—பெருந் தலைவர்கள் அவருக்கு அதனை அறிவிக்கமாட்டார்கள்.

அமெரிக்காவிலே நேரு, முன்பு பவனி வந்தபோது, தன்னை எதிர்க்கும் துணிவு கொண்ட ஆண்மகன் எவனும் இலலை; காங்கிரசாட்சியின் சட்டத்திலும் திட்டத்திலும் குற்றம் குறை கூறக் கூட யாரும் முன்வர மாட்டார்கள்; அப்படிப்பட்ட செல்வாக்கு தனக்கு, என்று நம்பும்படிச் செய்துவிட்டார்.

அந்த நம்பிக்கை உடைகிறது, செல்வாக்கு சிதைகிறது! இது மட்டுமல்ல, பண்டித நேருவும், பக்தர்கள் புடைசூழ, கொலுவீற்றிருந்து பழக்கப்பட்டவரேயன்றி, கேள்விகள், குழக்குக் கேள்விகள், கண்டனம், வெளிநடப்பு, என்பனவற்றைக்கண்டவரல்ல! சுதேசமித்திரன் ஆசிரியர் முன்பு ஒருமுறை கூறியிருக்கிறபடி, நேரு, கொஞ்சம் முன்கோபக்காரர்! எனவே முனுசாமியும், வீராசாமியும், கிருஷ்ணசாமியும், கோபாலனும், அன்னவும் பிறரும், எதிர்ப்பது கண்டு இப்படியும் காலம் மாறிவிட்டதே! இவ்வளவு எதிர்ப்புகளையும் சமாளித்தாக வேண்டுமே!! என்று ஏக்கம் கொள்ளத்தான் செய்வார்! பாபம்! அவர் மாளிகைவாசி! மன்னர்கள் கைலாகுகொடுக்க கோடீஸ்வரர்கள் அர்ச்சனைபுரிய

காங்கிரஸ் தலைவர்கள் கிருதுகளைத் தூக்கிவர, பவனி வந்து பழக்கப் பட்டுப்போனவர். இப்போதுதான் 'ஜனநாயகம்' காண்கிறார், எனவே, பதைக்கத்தான் செய்வார்! இந்த 'எதிர்ப்பு' துவக்கம்தான்! முழு அளவு வளர்ச்சியும் வேகமும் ஏற்படச் சிறிதுகாலம் பிடிக்கும் எனினும் வடநாட்டு ஆதிபத்யக்காரர்கள் தென்னாட்டைத் தாக்கும்போது, கேடயமாகி தென்னாட்டைக் காப்பாற்றும். தீரர்களின் இந்த எதிர்ப்புகளைக்கண்டு ஏதேனும் யுக்தி செய்து செல்வாக்கைத் தேடிக்கொள்ள வேண்டும் என்றுகாங்கிரஸ் தலைவர்கள், குமுறிய மனதுடன் யோசித்தவண்ணம் உள்ளனராம். நாமே நமது சம்பளத்தை குறைத்துக்கொண்டால் நல்லதல்லவா! என்று நேரு கூறுகிறாராம், செய்வோம், என்று அதிர்ப்தியை அடக்கிக்கொண்டு மற்றவர்கள் கூறுகிறார்களாம். ஆக, எதிர்ப்பு அரும்பிய உடனேயே, பொதுமக்களுக்குச் சிறிது இலாபம் கிடைக்கக்கூடும் போலத்தெரிகிறது. சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளும் நிலைக்கு டில்லி மந்திரிகளை, எதிர்ப்பாளர்கள் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள். உண்மையாகவே, டில்லி மந்திரிகள் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டால், அந்தப் பெருமை தென்னாட்டிலிருந்து சென்றுள்ள தோழர்களையே சாரும்!!

அணிவகுப்பு—அளவிலே சிறிதுதான் — ஏற்பட்டுவிட்டது கண்டு மகிழ்கிறோம். சிங்கத்தை அதன் குகையில் சென்றே எதிர்ப்பதுஎன் பார்களே, அது இது!

"உங்கள் போக்கு இப்படியே இருக்குமானால், தென்னாடு பிரிந்து, தனிநாடு ஆகவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்படத்தான் செய்யும்"

என்று டில்லி பார்லிமெண்டிலே திருமதி அன்னா மஸ்கரீனசும், தோழர் வல்லத்தரசும் பேசினர்.

திராவிட நாடு திராவிடருக்கே! என்ற முழக்கம், கேட்கத்தொடங்கி விட்டது என்பதுதானே இதற்குப் பொருள்! டில்லி அறியத்தொடங்குகிறது, திராவிடத்தை!

❀

# சீனு சிரிக்கிறது.

உலகிலேயே குபேர நாடு என்று பெயர் பெற்றது

அமெரிக்கா

கடந்த போரிலே பிரிட்டன் பல மிழந்தபிறகு உலகை ஆதிக்க வலிமை பெற்றது

அமெரிக்கா.

முதலாளித்வ முறையின் கடைசி வலிவான புகலிடமாகவும் பாசறையாகவும் இருப்பது

அமெரிக்கா.

அழிக்கும் அணுகுண்டுகளைக் குவித்து வைத்திருக்கும் நாடு

அமெரிக்கா.

விஷக்கிருமிகளை வீசி எதிரி நாடுகளை நாசம் செய்யும் கொடுமையின் பிறப்பிடம்

அமெரிக்கா.

கம்யூனிசத்தை ஒழிப்பதே என் கடமை என்று கூறுவது

அமெரிக்கா.

அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக

இந்தியா இருக்கிறது.

இந்தியாவின் மூலம் கம்யூனிசத்தை ஒழிக்கத் திட்டம் தயாரித்து விட்டோம் என்று இறுமாப்புடன் முழக்கமிடுகிறது

அமெரிக்கா.

அமெரிக்கா தரும் டாலர் கடன்களைப் பெற்றுப் பெற்று அதன் அடிவருடியாகி வருகிறது

இந்தியா.

எனவேதான் ஆச்சாரியார் முதற்கொண்டு நேரு வரையிலே கம்யூனிசத்தை ஒழித்துக் கட்டப்போகிறோம் என்று 'கர்ஜனை' புரிகிறார்கள்.

இந்தக் கர்ஜனையாளர்களை ஏஜண்டுகளாக்கிக் கொண்டோம், இனி நமக்குப் பயமில்லை என்று அமெரிக்க முதலாளிகளும் இந்திய முதலாளிகளும் மகிழ்கிறார்கள்.

இதுபோலத்தான் இங்கும் முயற்சித்தனர்.

சியாங்கேஷேக் கேட்டதும் இங்கே டாலர் மழை பொழிந்தது, எனினும்........!!

சீனு கூடிச் சிரிக்கிறது.

✫

# கார்ப்பரேஷனும் கடவுளும்!

கடந்த சில வாரங்களுக்கு முன் சென்னையில் பெருமழையும், புயலும் ஏற்பட்டதல்லவா? அப்போது நமது தி. மு. கழகக் காரியாலயத்தின் எதிரிலிருந்த இரண்டு வேப்பமரங்களில் ஒன்று பெயர்ந்துவிழுந்தது. வெளிப்பாகம்,பெயர்ந்து விழுந்தால்.அறிவகத்தின்மாடியில் விரிப்பக்கமாகயிருந்த கைப்பிடிச்சுவர் சேதமாயிற்று—உடைந்து விட்டது. மரத்தின் கிளைகள் விழுந்ததால், மேலே வேயப்பட்டிருந்த மங்களூர் ஓடுகளும் கொஞ்சம் நாசமாயின. கழக கட்டிடத்துக்கு சேதம் விளைவித்த இந்த மரம், கார்ப்பரேஷனுக்குச் சொந்தமானதாகும். கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான மரத்தின் மூலம் சேதங்கள் ஏற்பட்டால், அச்சேதத்துக்கான நஷ்டஈட்டைத் தருவதுண்டாம், கார்ப்பரேஷன் நிர்வாகிகள்! இந்த முறையை யொட்டி,நாமும் எழுதியிருந்தோம், சென்னை நகரசபையின் கமிஷனருக்கு.

மரம்விழுந்த மறுநாள் காலை, மரத்தை அப்புறப்படுத்த வந்த கார்ப்பரேஷன் அதிகாரியொருவரும், சேதத்தைப் பார்வையிட்டு, எல்லாவற்றையும் குறித்துக் கொண்டும் போனார். இது சம்பந்தமான புகைப்படங்களையும் நமது கழகப் பொறுப்பாளர் எடுத்து வைத்திருக்கிறார்.

இருந்தும், கார்ப்பரேஷன் நிர்வாகி, 'எவ்வித நஷ்டஈடும் கிடையாது' எனத்தெரிவித்து நமக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். பிறருக்கு நஷ்டஈடு உண்டு! ஆனால் நமக்கு இல்லை! இந்த மறுப்புக்கு கார்ப்பரேஷன் நிர்வாகி காட்டியிருக்கும் காரணம் என்ன தெரியுமா? "It is purely a matter of God and Nature"—கடவுள் செயலாம்! கை விரிக்கிறது கார்ப்பரேஷன்!!

❀



# "சாகச முரசம்"

# தட்டுகிறார் பண்டிதர்!

"மார்க்கட் பேரம்பேசிக்கொண்டு வம்பளப்பதைவிட, மலையிலே வாழும் நாடோடிகளோடுவாழ நான் எப்போதும் தயார்"

*

"இங்கே வியாபாரச்சூதாடிகளின் மூலம் நடைபெறும் வம்புக்கூச்சல்களைக்காட்டிலும் அங்கே எழும்பும் பயங்கர ஆரவாரத்தை, அமைதியோடு கவனிப்பேன்."

*

"இஷ்டம்போல் பாடி, ஆடும், மலைசாதியினரின் நாகரீகம் என்றும் இருக்கும். 'மார்க்கட் பேரம்' ஒழிந்த பின்னரும், அது நிலைத்து நிற்கும்."

*

"மனோரம்யமான இந்த வாழ்க்கைப் பகுதியை இழந்து வெகு தொலைவில் நாம் எல்லாம் நிற்பது, மிக மிகப் பரிதாபம்"

*

"கிராமப்புரங்களுக்குச் சென்றால் இன்றும் வேண்டிய அளவு நாடோடிப்பாட்டுகளையும், கூத்துக்களையும் கண்டுகளிக்கமுடியும். நமது நவீன பட்டணத்து-கலாச்சாரம், நம்மைப் போல, அங்குள்ளோரைப் பாதிக்கவில்லை."

*

"மலையிலே வசிப்போரிடம் காணும் நல்லகுணங்களை நகரத்திலே வாழ்வோரிடம் காண்பதற்கில்லை."

*

சுந்தரமான மாளிகை, 'ஜகஜ்ஜோதி, தாண்டவமாடும்திருஇடம், ஒரு பக்கத்திலே பிரிட்டிஷ் போர்த் தளபதி அலெக்சாண்டர் கை குலுக்கி விடை பெறுகிறார். திரும்பினால், 'தீனதயாபரா!ஜகத்ரட்சகா' என பாவசகீதம் பாடப் பலப்பலர், எதிரே பார்த்தால் 'டாலர் டாலராகக் குவிக்கிறேன்' எனக்கூறும் அமெரிக்கத் தூதர் செஸ்டர் பௌல்ஸ், பக்கத்திலே 'அண்ணா! சீனு சென்றுவந்தேன்- அடுத்தபடி எங்கே போவது?' என்று வாய் திறந்துகூட அல்ல — பளபளக்கும் சேலையைக் காட்டியவண்ணம் தயாராக நிற்கும் தங்கை, இத்தியாதி வைபோகங்களுடன்வாழும் இந்திய பிரதமர் பண்டிதநேரு, இத்தகைய மணிவாசகங்களைச் சிந்தியிருக்கிறார். காடு நன்றே! காடு நன்றே!! என்று, பாடவில்லை; முழக்கமிட்டிருக்கிறார்.

முழக்கமிட்ட இடம், டில்லி மாநகரம். தேதி—ஜூன் 7!

"பூர்வக்குடிகள்" சம்பந்தமாக ஆலோசிக்க, அன்று மாநாடொன்று நடைபெற்றதாம். குடியரசுத் தலைவர் ராஜேந்திரரும், சர்வபள்ளி ராதாகிருஷ்ணனும் அமர்ந்திருக்க; உள்நாட்டமைச்சர் கைலாசநாத கட்ஜூ தலைமைதாங்க, இவ்விதம் கர்ஜனை புரிந்திருக்கிறார் பண்டித நேரு.

பூர்வக்குடிகளைப்பற்றிய மாநாடு! போக போக்கியங்களுடன் வாழும் இவர் 'இதெல்லாம் நாகரிகச் சமானம்—இயற்கையோடுவாழும அவர்களது வாழ்க்கையன்றோ வாழ்க்கை' என்று புகழ்வோடுபேசியிருக்கிறார். புத்தருக்கு ஞானோதயம் ஏற்படக் காரணம், தன் கண்முன் மக்கள் புழுப்போலத் துடித்ததை அவர் கண்டதுதானாம்! இவருக்கும், மலைகளிலே பூச்சிக்கும் மிருகத்துக்கும் ஆட்பட்டு மடியும் அந்தப் பூர்வக் குடிகளைக் கண்டதும், ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறதோ — என்று மகிழ்ந்தோம்.

ஏனெனில், பண்டித நேருபேசக் கூடிய வார்த்தைகளா இவைகள்? அதிலும் இப்போது அவர் யார்!

நாம் எல்லாம் வியாபாரச் சூதாடிகளாகிவிட்டோம்.

மனோரம்யமான வாழ்க்கையை இழந்துவிட்டோம்.

மலைஜாதி மக்களின் ஆனந்தத் தெம்மாங்கு நமக்குக் கிட்டுமோ?

இவ்விதம் அவர் பேசியிருக்கும் வார்த்தைகளைக் கண்டபோது, நமக்கு திகைப்பும் வியப்பும் உண்டாயிற்று. ஏனெனில் இன்றைய உலகின் பேதங்களையன்றோ அவர் சாடுகிறார்! வாழப் பிறந்தோர், பொறாமைக்கும் பேராசைக்கும் ஆட்பட்டன்றோ அழிகிறார்கள்! அதிலும் எத்தனை யெத்தனை வேதனைகள்—இன்றைய சமுதாயத்தில்.

இந்தச் சமுதாய அமைப்பை, அவர் சாடிடும் வார்த்தைகளின் காரத்தை நினைக்க நினைக்கக் களிப்பு அதிகமாயிற்று!

மலை சாதியினரைவிட மதியையும் குணத்தையும் இழந்தோம் எனச் செப்பினார். அதோடு இருந்துவிடவில்லை! மலைஜாதி மக்களின் குணாதிசயங்களையும், இங்கு நாகரீகத்தோடு உலவுவோரின் தன்மைகளையும் எடுத்துக்காட்டி, 'ஐயோ! இத்தகைய சமூக அமைப்பிலா நாம் வாழ்வது?" என்றும் கேட்கிறார். மலைஜாதியினரைவிட இப்போதிருப்போர் கொடூர சிந்தை மிகுந்தோராய் கூறுகிறார், அவர்!

"மலை சாதி மக்களிடம் வீரம் உண்டு; அதே போல வீண் சண்டைகளும் உண்டு. சண்டையிட்டுக் கொண்டிருந்தாலும் எனக்கு ஏனோ அவர்கள் மீது ஆசை அதிகமாகிறது" என்று குறிப்பிட்டுவிட்டு, அந்த ஆசைக்கான விளக்கத்தையும் தருகிறார்.

"மனிதனுடைய இருதயத்தைக் குத்தி, நசுக்கும் துர்க்குணம் படைத்தோரைவிட, கையையோ தலையையோ வாங்கிவிடுவோர் மேலானவரல்லவா?"

இதயப் புண்ணைவிட, தசைக் கேற்படும் புண் சாதாரணமானது தான்! தியினுற் சுட்ட புண் ஆறும்—நாவினுற் சுட்ட புண் ஆறுதல்லவா? இருதயத்தை வாட்டுவோர்—எவ்வளவு துயரத்தைத் தருகின்றனர். இதயம் குத்துப்பட்டால், அதனுலேற்படும் தொல்லைகளும், தூங்க முடியாத இரவுகளும், தாங்க முடியாத சஞ்சலமும், வழியும் நீரும், அழியும் புகழும் கொஞ்சமா! ஒருவருக்கொருவர் பொருமையால் பொசுக்கிக் கொள்வதைவிட, கத்தியால் பேசிக்கொள்வது எவ்வளவோ நல்லதுதானே—என்று கேட்கிருர் பண்டித நேரு.

நவீன உலக வாழ்க்கையைவிட, காடுகளிலும், குன்றிலும்குளிரிலும், மிருக வேட்டையிலும் இஷ்டம் போல் ஈடுபட்டிருக்கும் பூர்வகுடிகளின் வாழ்க்கையைப்பற்றி புகழ்ந்து கூறுகிருர்.

மனிதனின்கோரநினைவுகள், மலைக் குன்றுகளிலே வாழும் பூர்வ குடிகளைத் தாக்கவில்லை—'ஜனநாயகம்' பேசித் திரிகிரேம், ஆனல் 'உண்மையான' ஜனநாயகம் மலைஜாதிமக்களிடம்தான் உலவுகிறது—என்றெல்லாம் பேசுகிருர்.

வனந்திரங்களில் வனமிருகங்களோடு போராடிக்கொண்டும், இச்சைக் கேற்ருற்போல் திரிந்த வண்ணமும், தனியொரு பாஷையும், தமக்கென ஓர் வாழ்க்கை முறையும் அமைத்துக் கொண்டிருப்பவர்கள், ஆதி குடிகள். நாகரிகத்தின் ஒளிச் சிதறலை, அவர்கள் கண்டது கிடையாது விஞ்ஞானத்தின் முடிவுகள் அவர்களின் கருத்தைக் கவர்ந்ததில்லை. வேட்டையும் போட்டியும் தான் அவர்களுக்குத் தெரியும்—விமானமும் அணுசக்தியும் அறியார். குன்றுகள் அறிவர் — பாசறைச் சரிவுகளிலே பதுங்கியிருக்கும் மிருக வகைகளை கொன்றுபோடும் வீரம் அறிவர். வியர்வை சிந்தி, மரக் கிளைகளிலே தாவுவர்—வேண்டிய கனி வகைகளைப் பறிப்பர். கிழங்குகளும், கிடைக்கும் உணவு வகைகளும்அவர்களுக்குப்போதும். அப்பன் ஆறுமுகனையும் அவனருகிலமர்ந்திருக்கும் வள்ளி தெய்வயானையும் அவர்களுக்குத் தெரியாது சங்கு சக்கரதாரி, புரியாத 'கடவுள்' அவர்களுக்கு. நாற்பத்தெண்ணுயிரம்ரிஷிசுரர்களையும்முப்பத்து முக்கோடி தேவாதி தேவர்களையும் தெரியாது அவர்களுக்கு. கலைமகளையும் அலைமகளையும் அறியார். தேரோட்டம் தெரியாது—தினசரி ஆறுகாலப் பூஜைகள் நடைபெறும் கோயில்களைக் கண்டதில்லை. அவர்களுக்குத் தெரிந்த கடவுள்களெல்லாம், வேட்டைக்குப் போகுமுன் விழுந்து வணங்கும் "தீ"! சிற்சில மரங்கள்தாம்!—நகரங்களைப் பற்றியோ, நாட்டை எவர் ஆளுகிருர் என்பது குறித்தோ, அவர்கள், சஞ்சலப்பட்டதில்லை.

அவ்வளவுதூரம், இந்நாட்டுப் பூர்வக் குடிகள், எதுவும் அறியாதவர்களாய் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்துவருகிருர்கள். நன்செய் நிலமோ புன்செய் மேடோ அவர்கள் கண்டதில்லை. காடுகள்! குன்றுகள்! காட்டாறுகள்! சிறும் மிருகங்கள்! இவைகளுடனேயே, காலத்தைக் கழித்துக்கொண்டிருப்பவர்கள், இந்நாட்டுப் பூர்வக் குடிகள்.

இருட்குகையிலே கிடக்கும் இந்த மண்ணின் ஆதிச்சொந்தக்காரர்களின் வாழ்க்கையை உலகத்தோடு சேர்க்க என்னென்ன செய்யலாம் என்பது குறித்து ஆலோசிக்கவே டில்லியில் மாநாடொன்று கூடியதாம். பூர்வகுடிகளைப் பற்றி ஆலோசிக்க 'பூசுரபீடத்தவர்' கூடியிருக்கின்றனர்.

சமுதாய வளர்ச்சியின் விசித்திரத்தைத்தான் என்னென்போம்! நரை எழுப்பி, முழுக்கமிட்டு, தன்னியும் தாவியும், குதித்தோடி வரும் அலைகளைப் போன்றது மனித சமுதாயத்தின் வளர்ச்சி—என்று குறிப்பிட்டிருக்கிருர்கள், அறிஞர்கள்.

எவ்வளவு, தெளிவான உண்மை! சிற்றலைகளைப் பேரலை விழுங்கிவிடுகிறது—மாடுகளைப் புலிகள் அடக்கிவிடுவதுபோல. இல்லையெனில் இந்த நாட்டு ஆதிக்குடிகள் வனந்திரங்களில் வதிய, 'வந்து புகுந்தோர்' சுகபோகங்களுடன் வாழும்படியான காட்சியைக் காணவா முடியும்!

ஆதி குடிகள்—இந்த மண்ணின் சொந்தக்காரர்கள். ஆனல் அவர்கள் இப்போது இருக்குமிடம்? மலைக்குகை! எல்லைக்காடு!! மனித உலகத்திலிருந்தே, பிரிந்து கிடக்கிருர்கள்.

இவ்விதம் பலைகளிலும் காடுகளிலும் வாழும் பூர்வ குடிகளின் தொகை இந்திய உபகண்டமுழுமையிலும் சுமார் இரண்டுகோடிகளாம் நாடு முழுமையிலும், சுவியுற்று இவர்கள் பரந்துகிடக்கிருர்கள். அஸ்ஸாம், பீகார், பம்பாய், ஒரிஸ்ஸா, மத்தியபிரதேசம், மேற்கு வங்கம், மத்தியபாரதம், சென்னை ராஜஸ்தான்—பாகங்களில் இவர்கள் பெருத்த அளவில் பரவிக்கிடக்கிருர்கள்.

பூர்வகுடிகள் இவர்கள். எப்படி பொசுக்குண்டு போயிற்று இவர்தம் வாழ்க்கை என்பதை நமது சரித்திரம், கண்ணீரோடு, கூறுகிறது.

* * *

"இந்தியா என்று அழைக்கப்படும் இங்கே முதன் முதலில் மனிதர்கள் உலவிக் கொண்டிருந்த இடம், தக்காணமேயாகும். உலகத்தின் மற்றப் பகுதிகளில் எவ்விதம் ஆதிக்குடிகள் இருந்தனரோ அப்படித்தான் இங்கிருந்தோரும் இருந்தனர். காடுகளில் அலைந்தவண்ணம், வேட்டையாடி வாழ்ந்தனர். உணவுக்காக வேட்டையாடினர்! வேட்டைக்காக, கல் ஆயுதங்களைக்கண்டார்கள் அவர்கள். இத்தகைய மனிதர்கள் வாழ்ந்த இந்தக்காலத்தையே "கற்காலம்" என்று அழைக்கிரேம். இதற்குப்பின் பல நூற்றுண்டுகள் கழிந்தன. 'கற்காலம்' மாறி, 'புதிய கற்காலம்' ஆரம்பமாயிற்று! பழைய கல்லாயுதங்களைவிட, புதுவிதமான, முன்னைவிட சிறப்பான கல்லாயுதங்கள் இவர்களால் கண்டுபிடிக்கப்பட்டன! இவர்கள், இறந்தோரை 'பண்சால்'களில்மூடிப்புதைத்தனர்!

## இலங்கையில் 'வெறி'

மனித உரிமைகோரும் இலங்கை வாழ் திராவிடமக்களை ஜுன் 10ந் தேதியன்று தடியடியால் தாக்கிக் கொடுமைப்படுத்தியது — இலங்கை சர்க்கார். பத்துபேருக்கு காயம். மக்கள் சபைக்குமுன் தமது உரிமைகோரிக்கையின் அறப்போரை நடத்த இருந்தார்கள். அறப்போர் வீரர்களைப் போலீஸ் வானில் ஏற்றி, (இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது நமது தோழர்களை காங்கிரஸ் சர்க்கார் நடத்தியது போல) ஊருக்கு வெளியில் கொண்டுபோய் விட்டனராம்.



144230 600

முன்னிருந்தோர் இறந்தோரைப் பற்றிக் கவலைப்படுவது கிடையாது. இவர்கள், சாவுக்குப் பின், இந்தப் புதுமையைக் கண்டார்கள். இதன் சின்னங்கள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரிலும், சிந்துப்பிரதேசத்திலுள்ள பிராமணபாத்திலும் அகப்பட்டிருக்கின்றன. இவர்களின் வாழ்க்கைச் சின்னங்கள் தென்ஆற்காடு, வடஆற்காடு, நெல்லூர், செங்கற்பட்டு மாவட்டங்களில் மிகுதியும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள்தான், மண்ணை மதிக்கத் துவங்கியவர்கள்—மண்ணில் பயிரிட்டு வாழக் கற்றவர்கள்! இந்தக்கால மனிதர்கள் நாடோடி வாழ்க்கையை வெறுத்து, ஆங்காங்கே, தங்க ஆரம்பித்தார்கள். மாடுகளும் ஆடுகளும் பழக்கப்பட்டன, பயிர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. வயல் உண்டாயிற்று! குடிசைகள் தோன்றின! சமுதாயம் உருப்பெறலாயிற்று!! சமைக்கவும் கற்றனர்! மண்பாண்டங்கள் செய்தனர்! உடம்பை மூடிக்கொள்ளவும் ஆரம்பித்தனர் — பருத்தியின் பலன் தெரிந்தது. ஆடைகள் உண்டாயின!

புதியகற்காலம்—மறைந்தது. தென்னட்டில் 'இரும்புக் காலம்' அரும்பியது. இந்த நேரத்தில்தான், வடஇந்தியாவில் 'செம்புக் காலம்' ஆரம்பமாயிற்று.

இந்த உலோககாலமக்களைப் பற்றி அறியும்போது, இந்தியாவின் பூர்வ குடிகளைப்பற்றி நன்ருகத் தெரிய முடிகிறது. நாகரீகம் தெரிந்து வாழ முற்பட்ட, இந்த ஆதிக்குடிகளைத் தான், ஆரியர்கள் வந்து அலைக்கழிக்க ஆரம்பித்தனர். இந்த ஆதிக்குடிகள்தான்,

கோலாரியர்களும், திராவிடர்களும்:

இவர்கள் யார் என்பதைப் பற்றி பலர் பலவிதமாகச் சொன்னலும், பூர்வகுடிமக்கள், இவர்கள்தான். இனரீதியில் இவர்கள், ஓரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே கோலாரியர்கள் பற்பல கூட்டங்களாகப்பிரிந்தனர். ஒரு பகுதி, காட்டுமிராண்டித் தனத்திலிருந்து விடுபடவில்லை! மற்ருேர் பகுதி நாகரீகத்தோடு வாழ முற்படலாயினர்! இன்று தென்னட்டில் ஆனைமலையிலும், மலபாரிலிருக்கும் பாணியரும், ஒரிஸ்ஸாவிலிருக்கும் இலை அணிந்தோரும், அஸ்ஸாமிலிருக்கும் நாகர்களும், கோலாரியரின் சந்ததியார் தாம். வங்கத்தில் காணப்படும் சாண்டல்யரும், ஒரிஸ்ஸாவிலிருக்கும் கோண்ட் மக்களும், சிறிது முன்னேற்றமடைந்த கோலாரியர்களாகும். இவர்கள் பேசும் மொழி முண்டா என்பதாகும். இவர்களுக்குள் எவ்வித சாதிப்பாகுபாடுகளும் கிடையாது. இவர்கள் சமாதானம் விரும்பிகள்—புதிதாக சந்திப்போரிடம் அமரிக்கையோடு பழகுபவர்கள். இன்று மேற்கு வங்கக் குன்றுகளிலும், சோடாநாகபுரியின் பகுதிகளிலும், மத்யமாகாணத்திலும் இவர்களை கூட்டம் கூட்டமாகக் காணலாம்."

* * *

இந்நாட்டின் ஆதிக்குடிகளைப் பற்றி, ராமசாமி அய்யங்கார் என்பார் எழுதிய இந்திய சரித்திரத்திலுள்ளதின் அசல் மொழி பெயர்ப்பே, இது. இதே ஆராய்ச்சி முடிவைத்தான், வல்லுநர் எல்லோரும் தெரிவித்திருக்கின்றனர். பூர்வகுடிகள், அவர்கள்! ஆனல் இன்று புகலிடமின்றி மலையிலும் காடுகளிலும் பதுங்கிக்கிடக்கின்றனர். இந்தப் பூர்வகுடிகளில் ஆரியரோடு மோதி 'தஸ்யு'க்கள் என அழைக்கப்பட்டு அங்கங்கே பரவிய இனமும் வாழ்கிறது! ஆரியரோடு மோதி, காட்டுக்கும் மலைக்கும் ஓடிய கூட்டமும் வாழ்கிறது! வாழ்கிறதேயொழிய, ஆரியமுதலாளி, விளைந்த விபரீதங்கள் இருப்பவரையும் இன்னும் விட்டுவிடவில்லை தாழ்த்தப்பட்டோராகவும், கீழ்சாதி மக்களாகவும் நாம் வதைகிரேம்! மலைஜாதியினர், பரம்பரை வழக்கத்தினின்றும் மாருது, மலைக்குகைகளிலும் காட்டுப் புதர்களிலும் வாழ்கின்றனர்!

இவ்விதம், வதைபடும் இந்தப் பூர்வகுடிகளின் வாழ்க்கையை வளமாக்கவே. 'பூசுரத் தலைமை' டில்லியில், மாநாடு நடத்தியதாம்.

இதை அறிந்தபோதுதான், சமுதாய வளர்ச்சியின், விசித்திரம் தெரிந்தது.

எவ்வளவு வேடிக்கை இது! சொந்த நாட்டினர், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, இலைக்குள் மறைந்த காயைப்போல் கிடக்கிருர்கள்—நாகரீக இன்பம் எதையும் உணரவில்லை. கல்விதெரியாது! விஞ்ஞானம் அறியார்கள்! மலைஜாதி மக்கள் இதுவரையில், மனித ஆராய்ச்சிக்காரர்களுக்குரிய ஒரு "ஆராய்ச்சி இனமாகவே" இருந்து வந்தார்கள். ஆனல், வெள்ளையர் காலத்தில், கிருஸ்துவப்பாதிரிகள், குன்றுகளையும் சரிவுகளையும் பொருட்படுத்தாது, அந்தப் பரம்பரை மனிதர்கள் மத்தியிலே உலவலானர்கள். 'இந்து மதம்' எனப் பெருமை பேசுகின்றனரே, அவர்தம் சங்கராச்சாரிகளும் தருமபுரங்களும், தமது சிந்தையை இந்த இருட்டு குகைகள் நாக்கி

(8-ம் பக்கம் பார்க்க)

## கோவை ராசமாணிக்கம் சிறைக்குள்

## 'கடவுள்' தந்த பரிசு

கோவையில் கழகக் கொடியை முன்பு காலிகள் எரித்தார்களல்லவா? அது சம்பந்தமானவழக்கு 10—6—52 அன்று கோவைநகர சப்மாஜிஸ்டிரேட் முன் எடுத்துக் கொள்ளப்பட்டது. சாட்சிகளாக தோழர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். கோவை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் S. A. இராசமாணிக்கம் சாட்சி கூண்டேறியதும் 'எல்லாவல்ல கடவுள் மீது ஆணையிட்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன்' என்று சொல்லும்படிக் கூறினர்கள். தோழர் இராசமாணிக்கம் அது போல் கூருமல் 'உண்மையாய்ச் சொல்லுகிறேன்' என்று கூறுவதாகச் சொன்னர். இது கோர்ட்டை அவமதித்ததாகுமாம்! இவ்விதம் குற்றஞ்சாட்டப்பட்டு ஆறுவாரசிறை தண்டனை விதிக்கப்பட்டார்.

☆

திராவிடநாடு

காஞ்சி] 15—6—52 [ஞாயிறு

# ரத்தும்—பயமும்

☆

குதூகலம்
மட்டற்ற மகிழ்ச்சி
நாடெங்கும் ஆனந்தம்
வீதிக்கு வந்துவிட்டது
விலை இறங்குகிறது
தாராளமாகக் கிடைக்கிறது
எங்கும் சந்தோஷம்

இவ்வித 'கொட்டை எழுத்துக்களுடன்' ஆச்சாரியாரின் உணவுக் கட்டுப்பாடு ரத்து செய்த நடவடிக்கை குறித்து, 'தினமணி' இதழ், கடந்த சில தினங்களாகப் பிரமாதப்படுத்தி வருகிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்திகளைத் திரட்டி, "சொந்த நிருபர் தெரிவிக்கிறார்" என்று 'பஞ்சம் பறந்தது! இனி பரதவிப்பு இராது!' எனும் பாவனையில், செய்திகளைப் போடுகின்றன — தேசிய இதழ்கள். பத்திரிகைக் காரியாலயம் ஒரு விசித்திரமான இடம்! அறைக்குள்ளிருந்தபடியே 'பட்டுக்கோட்டை' நிருபரையும், 'பக்டுனிஸ்தான்' நிருபரையும் பேசச் செய்துவிடும் திறமைபெற்ற, துணை ஆசிரியர்கள் இருப்பார்கள். சும்மாவா சொல்கிறார்கள், பத்திரிகைகள் பலமிக்க பீரங்கிகள் என்று! இப்போது இந்தப் பீரங்கிகள், எதற்கெடுத்தாலும் முழங்க ஆரம்பிப்பதையே கருத்தாகக் கொண்டுள்ளன. குண்டு இல்லாமல் இவ்விதம் இந்தப் பீரங்கிகள் முழங்குவதைக் காணும்போதுதான், நமக்குப் பரிதாபமும் அருவருப்பும் எழும்புகின்றன. 'உணவுக் கட்டுப்பாடு ரத்து' ஆனதன் விளைவாக, நாட்டில் மகிழ்ச்சியும், ஏழைகளிடத்திலே இன்பமும் மலர்ந்திருப்பது உண்மையானால் நாம் மகிழ்வோம்—மனமார இந்நடவடிக்கையை எடுத்த ஆச்சாரியாரையும் வாழ்த்துவோம். "துணிவைக் செய்கார்!" "தயார் தீர்க்கச் செய்தார்" என்று அந்துதி எழுப்புகின்றன, இதழ்கள்.

இதையொட்டி, தாளமும் தட்டியிருக்கிறார்கள், சில தலைவர்கள். ரேஷனை ரத்து செய்ய, துணிவு என்ன தேவை? இதென்ன மகா காரியம்! நீரில்லாமல் அவதிப்படும் மக்களின் கஷ்டத்தைப் போக்க 'ரெட்ஹில்ஸ்' ஏரி இருக்கிறது,— மழை பெய்தால் நீரைத் தேக்கி வைக்கிறார்கள். சிறிது சிறிதாக சென்னை மாநகர மக்களுக்கு 'சப்ளை' செய்கிறார்கள். மக்களும் தேவையானபோது கிடைக்கும் நீரைக் கொண்டு திருப்தி அடைகிறார்கள். இதற்குப் பதில, ஏரியின் வாய்க்கால்களையெல்லாம் திறந்துவிட்டு, 'தண்ணீரைத் திறந்து விட்டு விட்டோம்; நீங்களே இஷ்டம்போல் எடுத்துக்கொள்ளுங்கள்' என்று செப்பினால், சென்னை மக்கள் மகிழ்வா செய்வர்? ஏரியில் கண்ணீர் இருக்கும்வரை வாய்க்காலில் நீர் ஓடும் — ஏரியில் தண்ணீர் எப்போதும் வற்றாதிருக்க, வானம் பொய்க்கக்கூடாது. ஆனால் இப்போதிருக்கும் நிலை அப்படிப்பட்டதா? ஏரிக்குத் தேவையான மழையை போல, நாட்டுக்குத் தேவையான அரிசியும் பிறவும், இங்கு உற்பத்தியாகவில்லை. மக்கள் தொகையையும் உற்பத்தியாவதையும் ஒப்பிடும்போது, சென்னை ஒரு பற்றாக்குறை பிரதேசம் என்பது, தெளிவாகத் தெரிகிறது. நீரை தேக்கிவைக்காவிடில், ஏரி வறண்டு போக எவ்வளவு நாள் பிடிக்கும்? அதிக உற்பத்தியில்லாத நாட்டில், கண்டிரோலை ரத்து செய்துவிட்டால், என்னென்ன அனர்த்தங்கள் ஏற்படும்!

'அரிசி விலை குறைந்து விட்டது' அப்படி இப்படியென்று, பெருமையோடு பேசுகிறார்களே! அவர்கள் அவ்விதம் கூறுமளவுக்கு, ஆச்சாரியார் 'ரேஷனை' எடுத்ததும், இரவு அமர்ந்து 'பஜகோவிந்தம்' பாட, மறுநாள் காலையில் அரிசி பொழிந்திட்டதா! அல்லது 'நாற்பது வேலி நிலமும் நாலே காலே விளையவேண்டும் ஐயனே!' என்று பாடினாமே நந்தன் அதைப்போல, இவர் பாட, மறுநாளே கழனிகளிலெல்லாம் கதிர்கள் குலுங்கி, நெல் குவிந்து போய்விட்டதா! அதுவும் இப்போது கொடைகாலர் — சாகுபடி கொண்டு அல்ல. இப்போது, 'அரிசி இஷ்டம்போல் கிடைக்கிறது' 'விலை குறைவாகக் கிடைக்கிறது' என்றால் என்ன பொருள்? கண்ணுக்கெதிரே தெரிகிறது— சர்க்காரின் புள்ளிவிபரமே பேசுகிறது—சென்னை ஒரு பற்றாக்குறை பிரதேசம் என்று. இந்நிலையில், எப்படி அரிசி குவியும்? எவ்விதம் விலை இறங்கும்! எங்கும் ஆனந்த கீதமும், பரவசப்பாடலும் நிறையும்!

ஆலையிலே பாடுபடுவோன், காலை மாலை ஆபீசுக்குச் சென்று வருவோன், கல்லுடைப்போன், வாணிபம் செய்வோன், நகரத்தில் வாழ்வோன், போலீசாயிருப்போன்— என்று பலப்பல அலுவல்களிலே மனிதர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களனைவருக்கும் தேவையானது உணவு. ஆனால், அவர்கள் உழுது, உணவுற்பத்தி செய்பவிலலையே என்று அவரவர்க்குத் தேவையான உணவு கிடைக்காமலிருந்தால் என்ன ஆகும்! 'ஆபீஸ் பைலை'ச் சாப்பிடமுடியுமா, அலைந்து சம்பாதிக்கும் காசால், பசி தீருமா, ஆலைப் பஞ்சு கும்பிகூழிடச் செய்யுமா! ஆகாது—முடியாது எல்லோருக்கும் தேவையானது உணவு, இதை எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்திடவேண்டும். 'ரெட்ஹில்ஸில்' நீர் குறைந்ததும், அளந்துதான் அனுப்பினார்கள், ஒவ்வொரு தினமும்! அதைப்போல, நாட்டில் நிலம் வைத்திருப்போர் விளைவிக்கும் உணவுப்பொருளைக் கொண்டு எல்லோரையும் வாழச் செய்ய வேண்டும். எல்லோருக்கும் தேவையான அளவு உணவுப் பொருளிருந்தால் கவலை இல்லை; கட்டுப்பாடும் தேவையில்லை. நீர் குறைந்ததும் அளவு தேவைப்பட்டதுபோல போதிய அரிசி இல்லையென்றதும், கிடைப்பதைக் கொண்டு எல்லோரையும் வாழச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதன் விளைவாக, நாட்டில் உற்பத்தியாகும் உணவுப் பொருளையும், வாழும் மக்களின் தொகையையும் கணக்கிட்டு, பங்கு போடவேண்டிய நிலையேற்படுகிறது இதனால், ஏற்பட்ட முறைதான், பங்கீடு.

இந்தப் பங்கீட்டை எல்லோருக்கும் சரிசமமாகச் செய்யவேண்டுமானால், நிலம் வைத்திருப்போரின் மகசூலைக் கணக்கிட்டு, அவர்களுடைய தேவை போகமீதத்தை சர்க்கார், கணக்கெடுக்க வேண்டும்—கோள்முதல் செய்யவேண்டும்.



நாட்டில் உற்பத்தியாகும் உணவுப் பொருளை கோள் முதல் செய்து, அதைப் பங்கிட்டுத் தந்து, உணவு நெருக்கடியில்லாமல் பார்த்துக் கொள்ளும், நல்லதோர் முறை தான் பங்கீட்டு முறை.

ஆனால் இதை ரத்து செய்திருக்கிறார் ஆச்சாரியார்! 'கெட்டது இம்முறை' என்பதாலா? அல்ல! அல்ல!! அந்தராத்மா சொல்கிறாரும் அவருக்கு. அந்த அந்தராத்மா சொன்னதோ சொல்லவில்லையோ, பிற ஆத்மாக்களின் முணுமுணுப்பும் எரிச்சலுமே இந்நடவடிக்கைக்கு காரணமாகயிருக்கவேண்டும்.

சிறுமணி வேண்டுமா — கிச்சிலி தேவையா—வெள்ளைச் சம்பா முதலரகம்—மூடையாகத் தரட்டுமா— எவ்வளவு தேவை—இவ்விதம், கேட்கிறார்கள். நிலப் பிரபுக்களும் அவரைச் சார்ந்திருக்கும் வியாபாரிகளும். இக்குரலை நாம் நேற்றும் கேட்கத்தான் முடிந்தது—அந்தி நேரத்தில் அல்லது சந்துமுனையில் அல்லது விளக்கில்லாத இடத்தில்! நேற்று ரகசியமாகக் கேட்டவர்கள்—இன்று பகிரங்கமாக விசாரிக்கிறார்கள்.

சர்க்காரின் 'ரேஷன் முறை' இருந்தபோதும். 'கொள் முதல்' திட்டம் அமுல் நடக்கப்பட்ட நேரத்திலும், இத்தகைய குரல்களைக் கேட்டோம். இப்போதும் கேட்கிறோம்! என்ன அர்த்தம் இதற்கு? கொள்முதல் திட்டம் இருந்தபோதும் கள்ளத்தனமாக அரிசியும் நெல்லும் கிடைத்தது— ரயில் மூலமும் சிறுவண்டிகள் மூலமும் ஜில்லாக்களைத் தாண்டிபோய்க் கொண்டிருந்தது. சட்டசபையிலேயே, பலர் பேசினார்கள், 'நான் கூட கள்ளமார்க்கெட் அரிசி சாப்பிடுகிறேன்' என்பதாக.

சர்க்கார் வசம் கொள் முதலும் பங்கீடும் இருந்தபோது, இவ்விதக் கோலாகலங்கள்! கிராமப் புறங்களில் ஒழுங்காக கொள்முதல் செய்யப்படவில்லை—அதிகாரிகளால். சர்க்காருக்கு மீதப்பட்ட நெல்லை விற்காமல் ஏமாற்றிய விவசாயிகளை சர்க்கார் தண்டிக்காமல் விட்டதா, என்றால், தண்டித்தது. இவர் இவ்வளவு நெல்லை கடத்தினார்—இந்த 'அம்மா' இத்தனைபடி அரிசியைத் திருட்டுத்தனமாக வாங்கிவந்தார்—இவருக்கு அபராதம் ரூ 200—இந்த அம்மாவுக்கு ரூ.25 அபராதம்—இவ்விதம் வழக்குகள் ஏராளமாக நடக்கத்தான் செய்தன! இருந்தும் 'கள்ள மார்க்கெட்' கொட்டம் அடித்தது. மாயமா மந்திரமா இது வென்றெண்ணுகிறீர்கள், மகாத்மாவின் சீடர்கள் மண்டியிட்டுவிட்டார்கள். நிலப்பிரபுக்களிடமும் குரல்வலுத்தோரிடமும். வழக்குக்கும் கோர்ட்டுக்கும் சிக்கியோரெல்லாம் மிகமிகச் சாதாரணமானவர்கள்—வீடுகூட்டும் குப்பாயி—இரண்டு வேலி மிராசுதார் போன்றவர்கள். வழக்குக்கும் அதிகாரிகளுக்கும் தப்பியோர்! மிகமிகப் பெரியவர்கள் — கதர்ச் சட்டை அணிந்தவர்கள் — ஆயிரக்கணக்கான ஏக்கர்களின் அதிபதிகள். அவர்களைச் சட்டமோ சர்க்காரோ எதுவும் செய்யவில்லை! செய்ய முடியவில்லை!!

பணக்காரனை அவிழ்த்து விட்டுவிட்டதையும், தம்மைப் போன்ற சாதாரண விவசாயிகளைக் 'கெட்டி' கட்டி கொள்முதலை வசூலிப்பதையும் கண்ட கிராமத்து நடுத்தர விவசாயிகள், காங்கிரஸ் ஆட்சியின் போக்கைக்கண்டு அதிருப்தியடைந்தார்கள். அதேபோல ரேஷன்வாங்குவோரும்', கல்லும் மண்ணும் நிரம்பிய அரிசியை வாங்கி கஷ்டப்படவேண்டியிருக்கிறதே! என்று ஆத்திரமடைந்தார்கள்.

இதனால் அதிருப்தி வளர்ந்தது— ரேஷன் முறையின் மீதே சீறினர் மக்கள். இந்தசீற்றத்தைக்குறைத்து, ஆட்சிக்கு வலிவு தேட, இதை 'துருப்புச் சீட்டாக்க' பார்க்கிறார், அன்பர் ஆச்சாரியார்

தோழர் பி. ராமமூர்த்தி சொல்லியதுபோல, "மக்களை வாழவைக்கும் பொறுப்பை சர்க்கார் தட்டிக்கழித்துக் கொள்ளுகின்றனர். தற்சமயம் மக்கள் இந்நடவடிக்கையை வரவேற்றாலும் வெகுவாய்தங்களைப் பாதிக்கிறதென்பதை விரைவில் உணருவார்கள்"

பங்கீடு முறை — ஒரு அருமையான திட்டம். ஆனால், இந்த நல்லவர்கள், அதை ஒழுங்காக அமுல் நடத்த முடியாமல், சீர்கேடுள்ளதாகச் செய்து விட்டனர். ஆண்டு தோறும் இரண்டு கோடியை செலவிட்டும், ஐந்து ஆண்டுகளாகியும், இதனை அமுலுக்குக் கொண்டு வர முடியவில்லை—முதலாளிகளும்பு 'பண ஆசை'யால் வலையும் சாபத்தைப் பெற்றிருந்ததால்.

இந்த நிலையில், மக்களிடையில் எழுந்த மன அதிருப்தியை 'ஆட்டக் காயாக' வைத்துக்கொண்டு பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டார், பஜகோவிந்தப் பிரசங்கியார்.

காஞ்சி — மதுரை — கோவை முதலிய ஊர்களிலிருந்து நமக்கு வந்துள்ள கடிதங்களைப் பார்த்தால், 'தேசிய ஏடுகள்' கூறுகிறபடி விலை குறைந்ததாகத் தெரியவில்லை! வீதிக்கு அரிசி வந்திருப்பதால் சில நாளைக்கு இத்தகைய மனமயக்கம் ஏற்படமுடியுமே தவிர, எவ்விதம் விலை குறையும்? இப்போதே, காஞ்சி போன்ற இடங்களிலிருக்கும் வர்த்தகர்கள் நெல் இருக்குமிடம் நோக்கிப் புறப்பட்டுப்போய் விட்டார்களாம்! சரக்குகளைப் பெருமிதமாக வாங்கிச் சேமித்து லாபம் பெறும் வேலைகளில் மார்வாடிகள் வேறு முனைந்துவிட்டனராம். இத்தகவல்களைக் கேள்விப்பட, எதிர்காலத்தை எண்ணி நடுங்குகிறோம். புலிகளை அவிழ்த்துவிட்டு ஆடுகளையும் அலையவிட்டால், புலியின் வாயில் ரத்தத்தைத்தானே காண முடியும்; ஆடு வாழவா செய்யும்! இந்த நிலைக்குதான், ஆச்சாரியாரின் போக்கு கொண்டுவந்து விட்டிருக்கிறது. உணவுக் கட்டுப்பாடு ரத்து ஆனதும் எவரெவர் மகிழ்ந்தார்கள் என்று பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன தெரியுமா! பெரிய மிராசுதாரர்—தஞ்சை ஜில்லா மில் சொந்தக்காரத் தலைவர்—ஓட்டல் முதலாளிகள்—தென் இந்திய வர்த்தக சபையினர்—சினிமாப்பட சங்கத்தினர். இவர்கள்தாம மகிழ்ந்திருக்கிறார்கள்!!

ஆச்சாரியார் உத்திரவைக் குறித்து தூரகிழக்கு ஆசிய உணவு மாநாட்டின் பிரதிநிதியான ஜி. பரமேஸ்வரம்பிள்ளை எனும் கேரளத் தோழர், "போதிய அரிசி இல்லாமல் அவதிப்படும் பற்றாக்குறை மாகாணத்தில் கட்டுப்பாட்டை ரத்து செய்வது மிக மிகப் பயங்கரமானதாகும்" என்று எச்சரித்துள்ளார்.

இதனையே நாமும் வலியுறுத்துகிறோம்—கம்யூனிஸ்டு கட்சியினர் கூறுவதுபோல, ஆச்சாரியாரின் இந்த 'அல்பசந்தோஷப்போக்கால்' —ஏழைப் உலகு மிகமிக வேதனைகளைத் தாங்கவேண்டியே நேரும். அவ்விதவேதனை வராமல் தடுக்கும் பொறுப்பு, ஆச்சாரியாருடையது என்பதை நினைவூட்டுகிறோம். ✲

5-ம் பக்கத் தொடர்ச்சி

எள்ளளவும் திருப்பியதில்லை. எப்படித் திருப்புவர்? இந்துமதக்காவலர்களை எதிர்த்துப் போராடிய கூட்டமன்றோ அது! அது எங்கேகெட்டால் என்ன! அவர்களிடம் போய், புது உலகத்தைக்காட்டினால், போஜனம்தான் கிடைக்குமா! தட்சணை தான் வருமா!!

கிருஸ்துவப் பாதிரிகள் சிலபல ஆண்டுகளாக, மலைவாழ் மக்களிடையே, புது ஒளிகளைப் பரப்பலாயினர் — பூச்சிக்கடியையும் மிருக உறுமலையும் பொருட்படுத்தாது.

இந்தப் புது ஒளி, சிறிது வீசத் துவங்கியதன்விளைவாக அஸ்ஸாம் மலைக் குன்றுகளில் வசிக்கும் நாகர்கள், தனி நாடு கேட்கிறார்கள். சோடா நாகபுரியின் பகுதிகளில் வசிப்போர் "ஆதிவாசிகள்" என்ற பெயரோடு அரசியல் உரிமைகளுக்காகக் கிளர்ச்சி செய்கிறார்கள்.

"தாங்கள் வாழும் முறைகளை யொட்டியே பிறரும் வாழவேண்டுமெனப் பலர் கருதுகின்றனர். தமது நாகரீகத்தை யொட்டியே பிறரும் இருக்கவேண்டும் என்கிற ஆவல், இங்கு மட்டும் என்றல்ல, உலக முழுமையும் பரவிக் கிடக்கிறது. இந்தப் போக்கு எனக்கு கவலையே தருகிறது: 'இப்படித்தான் நீ வாழவேண்டும்' 'என்னைப்போல நீயும் உலக முறைகளை அனுசரிக்கவேண்டும்' என்று எதற்காக வலியுறுத்த வேண்டும்?"

தமது முறைகளை மற்றோர் மீது பலவந்தமாகத் திணிக்கக் கூடாது எனத் தெள்ளத் தெளிவாகச் செப்புகிறார் நேரு.

மலையில் வாழும் பூர்வகுடிகளையும் போய், நீங்கள் இப்படித்தான் வாழவேண்டும், என்று வலியுறுத்தக் கூடாது—என்கிறார்.

அவரது பரந்த நோக்கு கண்டு வியந்து கொண்டிருந்த நாம், அவரது பேச்சின் கடைசிப் பகுதியைக் கண்டபோது, திடுக்கிட்டோம்.

பூர்வகுடிகளைக் குறித்து இவ்வளவு சிரத்தையும் சிந்தனையும் கொண்டு பேசிய அவர், முக்கியமான கட்டத்தில் விடுத்த விளக்கம் நம்மைக் குழப்பலாயிற்று.

மலையில் வாழும் பூர்வகுடிகளுக்கென்று பேச்சு மொழிகள் உள்ளனவே தவிர, எழுத்துக்கள் எதுவும் கிடையாது.

அவர்களையும் எழுத்து அறிவுள்ளோராக்கவேண்டுமானால், ஏதாவது ஒரு எழுத்தை அவர்தம் பேச்சு மொழிக்கேற்ப, மாறுதல் செய்து தரவேண்டும்.


மக்களின் மனம்
ஒரு காலிப் பாண்டம்
என்று
அண்ணன் ஏசுகிறான்.
மக்கள் தீர்ப்பு மகத்தானது
என்று
வாதாடுகிறான், தம்பி.
தம்பி
தாக்கப்படுகிறான்
மக்களால்!

புதிய வெளியீடு
மக்கள் தீர்ப்பு
C. N. A.
எழுதியது.

இரண்டாம் பதிப்புகள்
ஜெபமாலை 0—8—0
சாது 0—8—0
கருத்து விளக்கச்
சிறு கதைகள்.

மக்களாட்சி நாட்களிலே
அனைவரும் படிக்கவேண்டிய
அரசியல் கருத்து விளக்கக் கதை.
விலை 8 அணா.

அச்சில்:- வாழ்க்கைப் புயல்

கிடைக்குமிடம்:— பரிமளம் பதிப்பகம் 17-B, வரகுவாசல் தெரு, சின்ன காஞ்சிபுரம்.
ஏஜண்டுகளுக்கு 25 o/o கழிவு. V. P. P. இல்லை. தபால் செலவு தனி.




இப்போது அவர்கள் மத்தியில் உலவும் கிருஸ்துவப் பாதிரிகள் ரோமன் எழுத்துக்களைக் கையாண்டு வருகிறார்கள். அதன் மூலம் அவர்களுக்கு கல்வி தந்து வருகிறார்கள்.

பூர்வகுடிகளின் பேச்சு மொழிகளைக் குறித்து ஆராய்ந்தோர், அவைகள் யாவும், திராவிடமொழிக் குழுவைச் சேர்ந்ததாகும் என்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார்கள்.

"திராவிட மொழி" குறித்து ஆராயப் போந்த கால்டுவெல் எனும் பேரறிஞர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் இலக்கிய வளம் உள்ள பிரிவுகள் என்றும் துளு, துடா, கோடா, கோண்டு, இராசமகால், ஒராயன், பிராகி முதலிய பிரிவுகள் இலக்கியமில்லாதவையென்றும் வரையறுத்து கூறியிருக்கிறார்.

பண்பட்டு நாகரீக முதிர்ச்சிபெற்றவை முதற்பிரிவு, நாகரீக முதிர்ச்சி அடையாது ஒதுங்கி விட்டவை இரண்டாவது பிரிவு.

எனினும், இரண்டும், திராவிட மொழிக் குழுவையே சேர்ந்ததாகும். நமது மொழிக்கும் பூர்வகுடிகளின் பேச்சு மொழிக்குமிடையிலே பெருத்த வேற்றுமை கிடையாது!

இது, பண்டிதநேரு அறியாததல்ல. ஆனால் அவர் எத்தகைய எழுத்துக்கள், பூர்வ குடிகளுக்கு வேண்டுமெனக் கூறியிருக்கிறார் தெரியுமா!

தேவநாகிரி எழுத்துக்களை பூர்வ குடிகளுடையதாக ஆக்க வேண்டுமாம்.

நேரு கூறுகிறார்! 'பலவந்தத் திணிப்புகூடாது' 'நமது முறைகளை சுமத்துவது நல்லதல்ல' என்று பெருமிதமாக முழக்கமிட்ட பண்டித நேரு சொல்கிறார்! அவரைப் போலவே கைலாசநாத கட்ஜுவும் கூறுகிறார்!!

வடஇந்திய மலைக்குன்றுகளில் வாழ்வோரும், சென்னை மாகாணத்தில் வசிக்கும் ஏழுலட்சம் பூர்வ குடிகளும், தேவநாகரி, அறிந்தோராக ஆக்கப்பட வேண்டுமாம்.

அவர்களுடைய எழுத்தாக தேவநாகிரி, ஆக்கப்பட வேண்டுமாம்

தேவநாகரி அவ்வளவு சுலபமானதா? அல்ல! அல்ல!! சிக்கலும் குழப்பமும் நிறைந்த மொழி அது. சுமார் 200 எழுத்துகள் நிரம்பியது. அதை அவர்கள் ஏற்கவேண்டுமாம்!

அந்தந்த வட்டாரத்தில் என்னென்ன மொழி உலவுகிறதோ அதை அவர்களுடையதாக்குவோம் —என்று கூறவேண்டும்; ஆனால் கூறவில்லை.

எளிய, இலகுவான, ரோமன்லிபியை அவர்களுடையதாக்கலாம்— என்று கூறியிருக்கலாம்; ஆனால் கூறவில்லை!

தேவநாகிரி தேவையாம்! சம்ஸ்கிருத பரம்பரை நீடிக்க வேண்டுமாம்! ஹிந்திபடையெடுப்பு இருக்க வேண்டுமாம்! அன்புத்தொனி எழுப்பியவரின், ஆர்வம், இது. என்னென்று சொல்வது இதனை! சாகசம் என்பதா! சுயநலம் என்பதா! ஆரியவெறி என்றழைப்பதா! —கூறுகிறாரே, துணிந்து.

உலக நிலைமைகளை ஒருபுறம் விளக்கிவிட்டு, அதே நேரத்தில் இதனையும் செப்புகிறாரே!

ஏனிந்த மொழிவெறி இருக்க வேண்டும் பண்டிதருக்கு? ஆரியம் நுழைந்ததால் அவதிப்பட்டு, மலைக் குகையையும், மிருகம் நிரம்பிய காடுகளிலும் விரட்டப்பட்டவர்கள் பூர்வகுடிகள்! ஆரியத்தின் நுழைவால் சீரழிந்த திராவிடம், விதவை போலிருக்கிறது — கண்முன். திராவிடத்தின் சீரழிவுக்கே காரணம், 'தெய்வமொழி, என்று நுழைந்த தேவநாகிரி எழுத்துக்கள் என்பதை உலகு அறியும்.

இருந்தும், இவர், அதையே இன்றும் வலியுறுத்துவதேன்?

அன்று அவர்கள்!
இன்று இவர்களா?
நல்லெண்ணமா?
நயவஞ்சகமா?

என்ன காரணம் இதற்கு! டில்லியும் ஆரியமும் — ஒருடம்பின் இரண்டு கைகள் எனக்கூறினால் சீறுகின்றனரே இங்குள்ளோர்! அவர்களைக் கேட்கிறோம், உலகவரலாறு பேசிய வண்ணம், புகழ்மாலை, சூட்டியபடி, தமது 'முறையில்' அவர்களையும் ஆக்க விரும்பும் ஆவல் ஏன் ஏற்படவேண்டும் 'எமது கடவுளே பெரியவன். எம்மைப்போலவே நீங்களும் இருக்கவேண்டும், என்று பலாத்காரப் பாதையிலிறங்கினர், கிருஸ்துவைக் காண்பதற்கு முன்பு, பாலஸ்தீனத்து யூதமக்கள். பலன்—அவர்களது 'முறை'கள் அழுகிய உடம்பாகிப் போயிற்று! அதை அறிந்தவர்கள், இன்றும், நாகரீகப் படையெடுப்புக்கு, வித்திடுவதேன்-அதற்கு 'மொழி' எனும் வாளினை ஏந்துவதேன்? அன்று, அம்முறை! இன்று இம்முறையா!!

☆

## பம்பாயில்

உணவு விலை உயர்வை எதிர்த்து பம்பாயில் 6ந் தேதி நடைபெற்ற பிரமாண்டமான வேலை நிறுத்தத்தில் 3 லட்சம் தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். 64 ஆலைகள் ஓடவில்லை.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சாமி 0-3-0, ச. ராமையா, 0-3-0 பாசோமன் 0-5-0, ஆவுடையப்பன் 0-3-0, சோலையப்பன் 0-3-0; சிறுவர்த்தகணவாய் பாயம்மாள் 0-1-0.

கொழும்புத் தோழர்கள்

| | ரூபாய் சதம் |
|---|---|
| எஸ். எம். ஐ. அபுபக்கர் | 2—00 |
| எஸ். ஓ. எ. காதர்முகைதீன் | 1—00 |
| எஸ்.கே.உதுமான்முகைதீன் | 1—00 |
| எம். எம். ஈசா | 1—00 |
| எம்.கே.எ.முகம்மதுமைதீன் | 1—00 |
| இ. பாவாமுகைதீன் | 0—50 |
| பி. எம். அன்சாலி | 0—25 |
| எம். கனிசாகிபு | 0—25 |
| டி.வி.எம். செய்யதுசாகிபு | 0—50 |
| சாலிமரைக்கார் | 0—25 |
| பி. கே. ராமன் | 0—50 |
| எம். எஸ். கிருஸ்நன் | 0—50 |
| பி. எம். ஓ. அகுமது அலி | 0—25 |
| பி. எஸ். ஹமீதுபாய் | 0—25 |
| வி ஓ. உமர்கத்தாய்சாகிபு | 0—25 |
| கே. ஓ. ரகீம் | 0—25 |
| எஸ். எ. சுப்ரமணியம் | 0—25 |
| எம். மஸ்தான் | 0—25 |
| மஜீத் | 0—25 |
| பிரிஸ்டல்பில்டிங் | |
| எம். எச். எஸ். ஹமீது | 1—00 |
| எம். அப்துல்காதர் | 0—50 |
| ஜே. எச். மொஹிதீன் | 1—00 |
| எஸ். எம். அனிபா | 0—25 |
| எஸ். முத்தலீப் | 0—25 |
| எஸ். எம். அப்துல்லா | 1—00 |
| அப்துல்காதர் | 0—50 |

# ☆ மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி ☆

| | |
|---|---|
| முன் வரவு | ரூ 851—2—0 |
| சிதம்பரம் C. S. | |
| ச கோபன் | 50—0—0 |
| காயில்பட்டி தி. மு. க. | 2—0—0 |
| குளத்தூர் ,, | 3—0—0 |
| நடிகர் கார்மோல் ராஜ் | 2—0—0 |
| கீழ்க்கடையம் J.P. ராஜி | 5—0—0 |
| மேனூர் சி. காதர்கனி | 2—8—0 |
| ஆனந்தூர் ஜி. கணபதி | 3—0—0 |
| உதகை எம் பெரியசாமி | 2—0—0 |
| தஞ்சை திராவிட மாணவ முன்னேற்ற கழகம் | 5—0—0 |
| காஞ்சி நூபிடர் ஐஸ் பாக்டரி | 5—0—0 |
| மதுரைவின்சன்ட்சயபாக் | 5—4—0 |
| தாலமுத்து படிப்பகம் | 2—0—0 |
| பட்டறை பச்சையப்பன் | 3—0—0 |

ரூ 1—0—0

தளவாய்புரம்: பு. கா. சா. காளி முத்து, ச. மாரியப்பன் பொட்டல் புதூர்: அப்துல் ரஹிம், மணப்பாரை: கோதண்டராமன், கொழும்பு: சாமிவேல், ஜி. பிரகாசம், லால்குடி: எல். ஏ. ராமசாமி, சிவகங்கை: கே. ராமசாமி, ஆனந்தூர்: மு. க. மு. நயினுமுகம்மது, வெ. கணபதி, எ. எஸ். வேலு, எ. எம். அப்துல் சலாம், சென்னை: எஸ். வீரபாண்டியன், கடலூர் ஓ. டி: எஸ். எஸ். மணியன், மேட்டூர்: கே. அனந்தராசன், மதுரை: ஓ சன்முகம், திருச்சி: ஜி. வெங்கடேசன், வீரவநல்லூர்: எம். ஏ. அபுபக்கர், ரங்கம்பாளையம், பி. தண்டபாணி.

0—8—0

வீரவநல்லூர்: கே. கனகசபாபதி, மீகா. மீருக்கண்ணூர் காசை: முத்துகிருஷ்ணன், பெரம்பூர்: டி. வெங்கடேசன், கே. ஜி. சுந்தரமூர்த்தி, டி. முருகவேலு, மா. செ. சிவானந்தம், சி. ஆர். பத்மநாபன், ஆதிசேஷலு, ராமகோட்டி. ஆனந்தூர்: ப. வேலு, ப. குருசாமி, ரா. இ. முகம்மது ஹனிபா, கா. வ. செ. வருசைமுகம்மது, எம். ஏ. காஜா மைதீன, கெ. சி. செ. இஸ்மாயில், மீ. இ. முகம்மது சுல்தான். தளவாய்புரம், எம். என். ராமசாமி, வீ. கு. மா. குருமூர்த்திலிங்கம், வீ. கு பா. குருமூர்த்திலிங்கம், மு. கருத்தகண், க. சாமி, உ. மாயாண்டி, கா. சு ரா. நாராயணன், மா. அருணாசலம், ஸ்டாலின் அண்ணாமலை, அ. துரைச்சாமி க. காளிமுத்து, (சாமி & கோ புகையிலை கம்பெனி தொழிலாளர்கள்):- பெ. ராமர், க. சங்கரநாராயணன், பா. கலைச்செல்வன், வெ. சண்முகம், என். லட்சுமணன், அ. கணபதியப்பன்.

0—4—0

தளவாய்புரம்:- மு. ரத்தினம், எஸ். பி. பாலகிருட்டினன், இரா, சுப்பையா, கு. கன்னியப்பன், ச இ. சங்கரலிங்கம், பி. டி. செல்லச்சாமி, ராசேந்திரன், ப. பெரியசாமி, பு. கா. ச. சுப்பையா; மா. சின்னச்சாமி, சக்கரையப்பன், எல். பி. சாமி. அ. சவுந்திரபாண்டியன், ச மொன்னப்பன், பு. கா. ச. சுந்தரேசன், பா. அய்யாசாமி, தே. மாரியப்பன்,

> **மொத்த வரவு**
> **ரூ. 1033—9—10**

நாயகன், இ. அழகுரத்னம், சாமி & கோ) புகையிலைக் கம்பெனித் தொழிலாளர்கள்:- பி. வெங்கா, உ. காளியப்பன், காளியப்பன், க. செல்லத்துரை, நடராசன், வேலாயுதம், மாரியப்பன், ஆ. அப்பாச்சாமி, அ. மாரியப்பன், அனந்தப்பன். ஆனந்தூர்:- முகம்மதுமைதீன், முகம்மதுஹனிபா, எஸ். மீருமைதீன், கு. ராமையா, பு. செ. கா. மீருமைதீன், மு. நையினுமுகம்மது, எம். ராமானுசம், வா. செ. மீருமைதீன், கா.மு. அப்துல்ரஹீம், மீ. அ. அப்துல்மஜீத், மீ. குப்பை முகம்மது, ம. க. நையினுமுகம்மது, பா. மீ. மு. ப. முகம்மது அலி, சே. பி. சேகுலாபிதீன், மே. சி. சய்யது முகம்மது, உசேன், காதர்மைதீன், ஜமால்முகமது, நையினுமுகம்மது, அா. செயினுமுகம்மது, வருசை நயினுமுகம்மது, உ. முனியாண்டி, அமீர்ஹம்சா, பிச்சை, முத்து, பெ. மலைக்கண்ணு, ஒரு தோழர், சாமிஅய்யா, ஆ. மு. கருப்பையா, வெங்கட்டராமன், கா. பாண்டி, முகம்மதுயூசுப், முகம்மது இஸ்மாயில், சதக்கதுல்லா, மு. நாகு, சே. கு மு. நயினுமுகம்மது, கா. குமரந்தைசாமி, பொம்பூர்:- ஆதிநாராயணன், கோபாலகிருஷ்ணன், எஸ். அப்பாராவ், சக்கரவர்த்தி, நாராயணன், சிவசங்கரன், தாமோதரன், லக்ஷிமிபதி, சண்முகம், ஆர். எஸ். மணி, நடராசன். வீரவநல்லூர்: இசக்கி, மீர்முகமது, மலையருவி, காகுல்ஹமீது, அப்துல்காதர், அப்துல்ஹமீது, பழம், கழகப்பிரியர், அப்துலரஹ்மான், கான்முகம்மது, பீர்முகம்மது, லிங்கம், எஸ். பி. எஸ், அப்துல்கபூர், தொழிலாளி, எஸ். சங்கரன், பாத்திரக்கடை, பீராமுமைதீன், பெருமாள், நாராயணன், முகம்மதுயூசுப, எஸ். பழனி, எம். வன்னியராஜ். ஆ. மு. ஆறுமுகம், வி. என். ஆறுமுகம், எஸ் சந்தானம் செங்குட்டுவன், இசக்கி, வி. பி. அசோக், சிறுவர்சதகணவாய்:- பி. கனகசபாபதி, ரங்கநாதன், அன்பழகன், ஜி. எஸ். மணி, ஜி. வெங்கடேசன், தட்சணாமூர்த்தி, மாசிலாமணி, ரங்கநாதன், அண்ணாமலை, சாமிநாதன்.

0—2—0

வீரவநல்லூர்: தி. ப. க. கணபதி. ஆறுமுகம் பாலு, மயில். எஸ். இசக்கி, சோமு. ஆனந்தூர்; செய்துமுகமது தளவாய்புரம்: அரசப்பன், பாலகிருட்டினன் (சாமி & புகையிலைக் கம்பெனி தொழிலாளர்கள்:- ராமசாமி, பத்திரங்கொண்டான், ஆதிநாராயணன், சங்கரநாராயணன், மூக்கன், பாசுபதையர் மருதபாண்டியன், முனியாண்டி, சுப்பையா, சிறுவர்சதகணவாய்: பத்மநாபன், கிருஷ்ணமூர்த்தி, இராசகோபால், வெங்கடேசன், ரத்தினம்.

பலவிதமாக:- கோவில்பட்டி அப்துல்மஜீது மூலம் 1—12—0; கோவை எம். எஸ். அப்பாஸ் 1-1-0 நடராசு 1-1-0; ஆனந்தூர் சிந்தாமதார் 0-6-0; தளவாய்புரம் சடாச்சாரம் 0-3-0; சென்னை அறிவுச்சோலை 1-2-0; சாமி & கோ. பி. துரைச்சாமி 0-3-0, எஸ். ராம

(9-ம் பக்கம் பார்க்க)



# புதுக்கொடி

புதுக் கொடி—வானளாவப் பறக்கிறது, சர்க்காரின் மாளிகையில். அதை ஏற்றியபோது, ஆயிரக்கணக்கானோர், ஆரவாரத்தோடு கைதட்டினராம். 'வாழ்கநம் கொடி!' என்று முழக்கமிட்டனராம். அரசியலமைப்பு சபையில், புதுக்கொடி, தீர்மானம் நிறைவேறியபோது, உறுப்பினர்கள் அனைவரும் ஆனந்த ஆரவாரம் செய்தனராம். "நமது வாழ்நாளில் இத்தினம் ஒரு பொன்னாளாகும். நமது கொடி இது! நமக்கே சொந்தமான கொடி. தாயின் மணிக்கொடி இது—தாழ்விலும் வாழ்விலும் இதனைக் கண் போல் காப்போம். உயிரினும் மேலானது நம் கொடி." என்று பற்பல தலைவர்கள், கர்ஜனை எழுப்பியிருக்கிறார்கள்.

புதுக் கொடி, பறக்கிறது, பொலிவோடு! அதை அண்ணாந்து பார்த்து பெருமிதம் கொள்கிறார்கள் மக்கள். எங்கே, இப் புதுக்கொடி தெரியுமா! விடுதலைப் போராட்டம் நடத்தும் டுனீஷியாவிலோ, வியட்நாமிலோ அல்ல; இமயத்தின் சரிவிலே. காஷ்மீர சர்க்கார், கடந்த 7ந் தேதியன்று தமக்கென ஓர் தனிக்கொடி ஏற்படுத்தியிருக்கிறார்கள். தனிக்கொடி! தனி நாடு!!—இந்த எண்ணத்தைப் பிரதிபலிக்கிறது, காஷ்மீர அரசியல் தலைவர்களின் போக்கு.

காஷ்மீர சிங்கம் என்று 'காங்கிரஸ் ஏடுகள் புகழும் ஷேக் அப்துல்லா, தனிக்கொடியின் மகத்துவம் பற்றி வீர முழக்கமிட்டாராம். தனிக்கொடிக்கே, அவர்தாம், காரணமாம். துணைப் பிரதமர் குலாம் முகம்மது, அப்துல் கனி, சயத் இப்ராகிம் முதலிய பல தலைவர்களும், 'தனிக் கொடி'யின் பெருமை குறித்து பேசியிருக்கிறார்கள். காஷ்மீரம் பெரும்பாலும் முஸ்லீம்கள் அடங்கிய நாடு அல்லவா? அங்கு, முஸ்லிம் தலைவர்கள் மட்டுந்தான், கொடியின் மகத்துவம் குறித்து பேசியிருக்கிறார்கள் என்று எண்ணுகிறீர்கள்! மஹராஷா ஹர் சிங், சர்தார் அர்ஜன் சிங், திருமதி மேனி என்போரும், 'தனிக் கொடி அவசியம் வேண்டும்' என்பதாக, அரசியலமைப்புச் சபையிலே, முழக்கமிட்டிருக்கிறார்கள்.

தனிக்கொடியின் நிறம் என்ன

> **கட்டாய இந்தி?**
>
> மொழிவல்லுநர்கள் கண்டித்தனர். அரசியல் அறிஞர்கள் எதிர்த்தனர். மக்கள் அறப்போர் புரிந்தனர். தாய்மார்கள் தடியடி பட்டனர். ஆயிரவர் சிறை சென்று வாடினர். தாலமுத்து நடராசன் பிணமாயினர்
>
> கட்டாய
> இந்தியால்.
>
> ஆளவந்தார்களுக்கு அறிவு பிறந்தது. மக்கள் கிளர்ச்சி வெற்றி பெற்றது.
>
> எனினும் ஆதிக்க வெறியினர், காங்கிரஸ் சர்வாதிகாரிகள், வடநாட்டுத் தலைவர்கள், மீண்டும் கட்டாய இந்தியைப் புகுத்த முயல்கிறார்கள்.
>
> *
>
> என்ன செய்யப்போகிறீர்கள்?
> எத்தனை ஆயிரம் தோழர்கள்?
> எங்கே அணிவகுப்பு?
>
> *
>
> வருகிறதாம் கட்டாய இந்தி
> வரிந்து கட்டுங்கள் கச்சையை.
>
> தி. மு. க.

தெரியுமா? மங்களகரமான மஞ்சள், அல்ல (—அதைத்தானே எதிர்பார்ப்பார்கள் ஷேக் அப்துல்லாவும் பண்டித நேருவும் சேர்ந்து பவனி வந்த காட்சிகளைக் கண்டோர்) சிவப்பு!! அதனைக் கண்டு அலறுகிறதே, அந்த செந்நிறமாம், காஷ்மீரக் கொடிக்கு. "இந்தச்சிவப்பு, தொழிலாளர்களின் சின்னம்" என்று சொல்லியிருக்கிறார் ஷேக் அப்துல்லா.

"2x3 விகிதத்தில் அகல நீளமும், மூன்று வெள்ளைக்கோடுகள் கொடியின் ஒருபக்கத்தில் மேலும் கீழுமாகவும், நடுவில் ஒரு கலப்பைச் சின்னமும்" இதுதான், காஷ்மீரின் செங்கொடி. மூன்று வெள்ளைக் கோடுகளும், காஷ்மீரத்துக்குள் அடங்கியிருக்கும், ஜம்மு—காஷ்மீரம், மற்ற எல்லைகளைக் குறிக்கும், கலப்பைச் சின்னம் விவசாயிகளுடையது. என்று விளக்கியிருக்கிறார் காஷ்மீரத் தலைவர் அப்துல்லா. விவசாயிகள்தான் காஷ்மீரத்தின் உயிர்நாடி. ஆகவே, கலப்பைக்கு முதலிடம் தந்துள்ளோம்" என்றும் தெரிவித்திருக்கிறார்.

கலப்பை ஏந்திய செங்கொடி சிங்காரமாகப் பறக்கிறது, காஷ்மீரத்தில்! தனிக்கொடி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள், அழகுபுரியின், அரசியல் தலைவர்கள்.

"தமது பிரதேசம் தனியாக இருக்கவேண்டும்—" என்கிற தணியாத ஆவல், இந்த அளவுக்கு, அவர்களுடைய ஆவலையும் ஆர்வத்தையும் தூண்டியிருக்கிறது.

ஆனால், இந்த இடத்துக்காகத்தான், நாக்கில் நீர் சொட்டச் சொட்ட பணத்தையும் படைகளையும் செலவழித்துக் கொண்டிருக்கிறது, டில்லி ஆதிபத்யம். 'காஷ்மீரம் என் காதலி!' என்றார், பண்டித நேரு. இன்னும் விட்டபாடில்லை திரைப்பட 'வில்லன்' போல, திடுக்கிடும் பேச்சும், சண்டப்பிரசண்ட நடவடிக்கைகளும் குறையாமலே இருக்கிறது. ஆனால் காஷ்மீரம் தனிக்கொடி ஏற்படுத்திக்கொண்டு விட்டது — அதுவும் எவ்விதம்? டில்லி 'மாடலில்' அல்ல! மஞ்சள் நிறம் தாங்கி அல்ல!! முற்றிலும் மாறான விதத்தில். சிறுசமஸ்தானம் — சிங்காரப்பண்பாடுகிறது! ஆனால் அகில உலகஜோதியோ, "ஆசை கொண்டேனே அடையாமல்விடுவேனோ?" என்று காதல்கீதம் பாடுகிறார்! நமது பணத்தைச் செலவிட்டுக்கொண்டேயிருக்கிறார்!!

☆

# சர்க்கார் சிப்பந்திகள்

## அங்கும்—இங்கும்

"ஆடோம்! அசையோம்! உமது ஆர்ப்பரிப்பைக் கண்டு பணியோம்" என்று, புலிபோல் சீறிய, நேபாள சர்க்கார் பூனைபோல் பணிந்து விட்டதாக அறிகிறோம்.

கடந்த ஜூன் முதல் தேதி முதல், நேபாள சர்க்காரின் சிப்பந்திகள், சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தம் செய்துவந்தார்கள்.

"சர்க்கார் சிப்பந்திகளா இப்படி சண்டித்தனம் செய்வது?" என்று சீறினார்; சினந்தார்—நேபாளப் பிரதமரான கோய்ரலா.

ஆனால் அசைந்து கொடுக்கவில்லை—சர்க்கார் சிப்பந்திகள். "உல்லாசம் உமக்கு! எமக்கு மட்டும் வேதனை!! — ஏன் இது?" என்று முழக்கிய வண்ணம், தொடர்ந்து தமது வேலை நிறுத்தத்தை நடத்தினர்.

மிரட்டல்! பயமுறுத்தல்! சட்டம்! — எதுவும், அந்த சர்க்கார் சிப்பந்திகளின் உறுதியைத் தளரவிடவில்லை.

இதைக்கண்ட நேபாள அரசாங்கம், கடைசியில் பணிந்திருக்கிறது. சிப்பந்திகளின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

"சம்பளம் அதிகம் வேண்டும்"—என்பதுதான் சர்க்கார் சிப்பந்திகளின் கோரிக்கையாகும். இதை ஏற்றுக்கொண்டுவிட்டது, நேபாள சர்க்கார்.

அட்டெண்டர்களுக்கு இப்போதுள்ள சம்பளத்தைவிட 113 சதவிகிதம் அதிகம்.

ஜூனியர் கிளார்க்குகளுக்கு 131 சதவிகிதம் அதிகம்.

சீனியர் கிளார்க்குகளுக்கு 33 லிருந்து 84 சதவிகிதம் வரை அதிகம்.

கீழ்ப்படியிலுள்ள அதிகாரிகளுக்கு 15-லிருந்து 36- சதவிகிதம் வரை அதிகம்.

இவ்விதம், சம்பள உயர்வு செய்து, அறிவித்திருக்கிறார்கள்.

கடந்துபோன ஜனவரிமாதமுதல் இந்த உயர்வுக் கணக்குப்படி அவரவர்களுக்குரிய சம்பளம் தரப்படுமாம.

இது, அங்கு!

ஆனால், இங்கு?

"சம்பளம் அதிகம் வேண்டும்" என்று கேட்டார்கள், சர்க்கார் சிப்பந்திகள். உபதேசம் புரிந்தார், பாரதப்பிரசங்கி! செலவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று திருவாய்மலர்ந்தார் அன்பர் ஆச்சாரியார்! "சினிமாவுக்கு ஏன் போகிறீர்கள்?" என்று கேட்டார். ஏதோ வருஷம் 365 நாட்களும் சினிமாக் கொட்டகையிலே சர்க்கார் சிப்பந்திகள் காலங்கழிப்பதைப் போல! "கடைசியில், உங்கள் குழந்தைகளுக்குப் பள்ளிச் சம்பளம் இல்லை" என்று தெரிவித்திருக்கிறார் — க்ஷயரோகத்தால் வாதைப் படுபவனுக்கு 'சாக்லெட்' கொடுப்பதுபோல!

நேபாளத்தில், வாதைப் பட்டு நிவாரணம் பெற்றோரும், சர்க்கார் சிப்பந்திகள்தாம்.

இங்கே, வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருப்போரும், சர்க்கார் சிப்பந்திகள்தாம்.

அங்கே நிவாரணம்!

இங்கே நீதிபோதனை!!

போதனையோடு, நின்றுவிடவில்லை, இங்கே இருக்கும் புனிதர். சர்க்கார் நடக்கப் பாடுபடுவோரை மிக மிகச் சாதாரணமாகவும் நினைக்கிறார். "உணவுக் கட்டுப்பாடு ரத்தானதனால் பலருக்கு வேலை இல்லாமல் போய்விடுமே" என்று பத்திரிகை நிருபர் ஒருவர் பரிதாபத்தோடு கேட்டாராம். "அவர்களுக்குவேலை போய்விடுமே என்பதற்காக மக்கள் தரும் வரிப்பணத்தைச் செலவழிக்கத் தயாராக இல்லை" என்று, பதிலளித்தாராம் நமது மதிமுக முதலமைச்சர். சர்க்காரின் உணவுக் கண்ட்ரோலை நிலைநாட்ட சுமார் 20,000 சிப்பந்திகள் தேவைப்பட்டார்கள். இப்போது அவர்கள் யாவரும் வேலையில்லாமல் திண்டாடப்போகிறார்கள்! "அவர்களுடைய பிரச்சினையையும் கவனிப்போம்" என்று ஆதரவுச் சொல்லாவது தரவில்லை ஆச்சாரியார்! மக்களைச் சுட்டிக் காட்டி — மறைந்து கொள்ளப் போர்வை தேடுகிறார். இருபதினாயிரம் பேர்! அவர்கள் யார்? அவர்களும் மக்கள்தானே—அவர்களின் மூலமும் கஜானாவுக்கு வரி போகாமலா இருக்கிறது? எட்டு ஆண்டுகளாக சர்க்காருக்காக மாரடித்தவரே! அவர்களை ஏவ்வளவு அலட்சியமாக நினைக்கிறார் இவர்? மக்களுடைய வரிப்பணத்தைக் காக்கும் 'டிரஸ்டி'யாம் அரசாங்கம். அத்தகைய டிரஸ்டியாகவா இருக்கிறது! மாதாமாதம் கவர்னருக்கென அரை லட்சத்துக்குமேல் வாரிவிடும், ஆச்சாரியார் கூறுகிறார் இதனை! அலட்சியமாகச் சொல்கிறார் இவ்விதம்!!

சர்க்கார் சிப்பந்திகள் என்றால், இவ்வளவு அலட்சிய சுபாவம் ஏற்படுகிறது, அமைச்சருக்கு. அனுசரணையாகப் பேசவும் மனம் வரவில்லை, ஆனால் அவர்கள் யாவருக்கும் போதனைகள் மட்டும் புரிகிறார்! 'பணமில்லையே' எனப்பல்லைக்காட்டுகிறார். பணமா, இல்லை? வீணுக்குப் பல வழிகளுக்குக் கொட்டிக்கொடுக்கும் பணத்தை நம்மவர்களுக்காகத் திருப்பிவிடலாமே! செய்யலாம் — மனமிருந்தால் மார்க்கம் உண்டு. ஆனால் மனம்? நல்ல குணம்?

---


வெற்றிக்கு வழித்துணை

வித்துவான் அ. கணபதி

எம் ஆர். மாணிக்கம், எம். ஏ.

இருவரும் சேர்ந்து தயாரிக்கும்

S. S. L. C. 1953. தமிழ்ப் பாட புத்தகங்கட்கான உரை (Notes)

அச்சில்! விரைவில் வெளிவரும்

தென்றல் பதிப்பகம்

திருவல்லிக்கேணி சென்னை. 5.



Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press.
95, Tirukkachinambi St., Kancheepuram.



REGD No M. 4542

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 22—6—52 | இதழ் 51


# பஜகோவிந்தத்தால், அல்ல!

"என்ன இது?" — என்று, திகைத்து விழித்த காலம் மாறி விட்டது. 'ஓ! அதுவா' என்று, ஆனந்தத்தோடு, எதற்கும் விளக்கம் தந்து வருகிறது விஞ்ஞானம். அறிவு வளர்கிறது! வேக வேகமாக முன்னேறிச் செல்கிறது, உலகம்! 'எதற்கும் உதவாது' என்று கூறப்பட்டவைகளையும், தனது தேவைக்கானதாக ஆக்கிக்கொள்ளுகிறான் மனிதன். சூரிய வெப்பம் — தீயில்லாமலே உணவைச் சமைத்துத் தருமாம்! கடலலைகள் மூலம்நமக்குத் தேவையான மின்சாரத்தைப் பெறலாமாம்! காலால் எற்றிச் செல்வோமே அந்தக் காளான் மூலம் செய்யப்படுவது தான், பிணியெல்லாம் தீர்க்கும் "பெனிசிலின்"— கண்களில் வியப்பு படரும், வெளிநாட்டு விஞ்ஞானிகளின் சாதனைகளைப் படிக்கும்போது. உலகமே பயத்தோடு பார்க்கிறதல்லவா: அணுக்குண்டு. அது தயாரிக்க அவசியமான பொருள் யுரேனியம் என்று மட்டுமே கேள்விப்பட்டிருக்கிறோம். யுரேனியம் — தங்கத்தைவிட அதிக மதிப்பு பெற்றும் விட்டது. எந்தெந்த நாடுகளில் இந்த யுரேனியம் கிடைக்கிறதென்கிற புள்ளி விபரங்களைக் கணக்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர்—அமெரிக்கரும் ரஷ்யரும். உலகத்தையே அழிக்கும் ஆற்றல் மிக்க அணுகுண்டினை, இந்த யுரேனியம் இல்லாமலும் செய்துவிட முடியுமாம்!! விஞ்ஞானம், கூறுகிறது, இதனை. எவ்விதம் தெரியுமா? தண்ணீர் மூலம்! திகைப்பாகயிருக்கும் இத்தகவல். ஆனால் உண்மை. தண்ணீரிலிருக்கும் நீர்வாயு (Hydrogen) மூலம், அபரிமிதமான அணுசக்தியினைப் பெற முடியுமாம். விஞ்ஞானம் வளர்கிறது! ஆனால் இங்குள்ளோரோ, 'அது அவாள்' அஞ்ஞானம்—மெஞ்ஞானம் என்பது கோயிலுள்ளே கிடக்கிறது— அதைப் பார்க்கப் பஜகோவிந்தம் செய்வீர்' என்று போதனை புரிகிறார்கள். திடீரென மழை பொழிந்தால், 'கண்டீரோ எமது பஜனையின் பெருமையை!' என்று கூத்தாடுகின்றனர். அண்மையில் சென்னையிலும் சுற்றுப் புறங்களிலும் பெய்த மழைக்குக் காரணம், பஜகோவிந்தப் பிரசங்கியார் ஆட்சியிலிருப்பதால்தான் என்பதாக ஆண்டவனுக்கும் ஆச்சாரியாருக்கும் இடையிலே 'டெலிபோன்' இருப்பதுபோலவும், இவர் 'பெய்!' என்று கூற, மழை பெய்தது போலவும்— பாதந்தாங்கி பத்திரிகைகள் பிரமாதமாகப் பிரசுரித்தன. இரண்டு வாரம்கூட ஆகவில்லை! மேட்டூரிலிருந்து தகவல் வந்திருக்கிறது— மேட்டூர் அணைக்கட்டில் போதிய தண்ணீர் இல்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை. மின்சார சக்தி கிடைக்குமோ கிடைக்காதோ என்று கவலைப் படுகிறோம்" என்பதாக. காரணம் என்ன? பத்திரிகைகள் எழுதினவே, அந்த ஆச்சாரியாரின் 'மகிமையால் பெய்த மழை, நாடு எங்கும் பெய்யவில்லை! பல இடங்கள், பாலைவன வெளியாகவே கிடக்கின்றன!! ஆனால் பத்திரிகைகளோ, "எல்லாம் பஜகோவிந்தத்தின் பலன்" என்று இன்னும் பீரங்கி முழக்கம் செய்கின்றன. எந்தச் செயலுக்கும், கடவுள் தொடர்பை உண்டு பண்ணி, அதன் திரையிலே வாழ நினைக்கின்ற எத்தர்கள் உள்ள இங்கே, இது. ஆனால் 'இந்து மதக் கடவுள்கள்' இல்லாத வெளிநாடுகளிலே — விஞ்ஞானம் வளர்கிறது — புதிதாக, ஆராய்ச்சிகள், உதயமாகிய வண்ணமே உள்ளன. கடல் நீரிலிருந்து உப்பு எடுக்க முடியும் என்பது மட்டுமே நாம் அறிவோம். ஆனால் வெளிநாட்டு அறிஞர்கள் கூறுகின்றனர். கடல் நீரிலிருந்து குடிதண்ணீர் பெறமுடியுமாம்! அத்தண்ணீரைக் கொண்டு பாலைவனங்களை பசுஞ்சோலைகளாக்க முடியுமாம்! வறண்ட காடுகள் வயல்களாகுமாம்! கரடுமுரடான பூமி பச்சை நிறம்பெற முடியுமாம்! உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யலாம் கடல் நீர் மூலம். சமுத்திரத் தண்ணீர் எதற்கும் உதவாது என்பதுதான், நமக்குத் தெரியும். ஆனால், வெளிநாட்டினர் கூறுகிறார்கள், கடல் நீரைக் கொண்டு சாகுபடி செய்ய முடியும் என்பதாக!

அப்படி அவர்கள் கூறுவது, கர்த்தரின் நாமத்தை ஜபித்து கண்டுபிடித்தது அல்ல—அறிவு மூலம் அறிந்தது. ஆனால் 'பஜகோவிந்தம்' பாடும் இங்கேயோ!? விஞ்ஞானம் வளர்கிறது அங்கே—எவ்விதம். பஜகோவிந்தத்தால் அல்ல; அறிவு மூலம்!

☆

# "ஹிட்லர்" ||| தென்னாப்பிரிக்காவில்!

ஜாதி அகம்பாவம்: ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசுதல், இன உயர்வு ஜம்பமடித்தல் ஆகியவை முறையே வேதகாலம், மனு சாஸ்திரம், ஹிட்லர் ஆகியவர்களுடன் மாண்டுவிடவில்லை. அழிந்துவிட்டதென எண்ணப்பட்ட இனவெறித்தனங்களின் கலவைப் படையலைப்போல இன்று தென்னாப்பிரிக்காவில் மலான் ஆட்சி காட்சியளிக்கிறது.

"ஆண்டவன் என் இனத்தை, ஆளும் இனமாகப் படைத்திருக்கிறான். மற்றவர்கள் எல்லாம் எங்களை அண்டி உழைத்துப் பிழைக்க வேண்டுமென்பது அவன் கட்டளை"

"நீக்ரோவுக்கு வீடு எதற்காக? அவன் மரத்தடியில் கிடக்கலாமே! ஆகவே அவன் வெள்ளைக்காரனைவிடக் குறைந்த ஊதியத்துக்கு வேலை செய்யலாம்!"

தென்னாப்பிரிக்க பிரதமர் டாக்டர் டேனியல் மலான் கூறிய சொற்கள் இவை என்றறியும்பொழுது எவர்தான் இன ஒதுக்கல் கொள்கையில் அவருக்குள்ள பிடிவாதத்தைக் கண்டு வியக்கமுடியும்? அரசியல் சட்டத்துக்கு முரணாகவும், நாட்டின் உயர்நீதி மன்றத் தீர்ப்பைப் புறக்கணித்தும், எதிர்க் கட்சியின் கிளர்ச்சிகளையும் கூக்குரல்களையும், காதிலேயே போட்டுக்கொள்ளாமல் ஒதுக்கியும் வருகிற டாக்டர் மலான் உலகம் முழுதும் இன்று பேசப்படுகிற மனிதர். உலக அரசியல் சூத்திரதாரிகளின் இதயத்தில் எல்லாம் சஞ்சலத்தை எழுப்பியிருப்பது தென்னாப்பிரிக்க இனவெறிக் கொள்கை.

தென் ஆப்ரிக்காவில் இன்று இருக்கிற சச்சரவு வெறும் வெள்ளையர் கறுப்பர் விவகாரமல்ல, போயர்கள், பிரிட்டிஷ்காரர், பண்டு நீக்ரோ ஆகிய மூன்று இனத்தவர்களிடையே இருக்கும் மும்முனைச் சச்சரவு ஆகும் அது.

15 லட்சம் போயர்கள் தென்னாப்பிரிக்காவில் வாழ்கின்றனர். இவர்கள் பிரிட்டிஷ் கப்பல் ஆப்ரிக்காவுக்கு வருவதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறிய டச்சு, பிரெஞ்சு, ஜெர்மன் நாட்டின் கலவைகளாகும். பண்டு நீக்ரோக்களைவிடத் தாங்கள் தென்னாப்பிரிக்காவுக்கு அதிக உரிமையுடையவர்கள் என்று கூறிக்கொள்ளுகிறார்கள். ஆப்ரிக்காவின் உள்பகுதிகளிலிருந்து நீக்ரோக்கள் பிறகுதான் நுழைந்ததாகச் சொல்லுகிறார்கள்.

போயர்கள் தென்னாப்பிரிக்காவை மட்டுமே தங்கள் நாடாகக் கருதுகின்றனர். அவர்களுக்குத் தென்னாப்பிரிக்காவை விட்டால் வேறு போக்கிடம் இல்லை. மலானின் "தேசியக் கட்சிக்கு முதுகெலும்பாக இருப்பவர்கள் போயர்கள்தான். பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து தென்னாப்பிரிக்காவைப் பிரிக்கவேண்டும் என ஆர்ப்பரிப்பவர்கள் இவர்கள்.

தென் ஆப்ரிக்காவில் வாழும் பத்து லட்சம் பிரிட்டிஷ்காரர்களில் பெரும்பாலோர் நேட்டாலிலும் கேப் மாகாணத்திலும் வாழ்கின்றனர். நகரங்களில் வர்த்தகர்களாகவும், பாங்க் நடத்துகிறவர்களாகவும், பஸ் டிரைவர்களாகவும் பிரிட்டிஷ்காரர்கள் இருக்கின்றனர். போயர்களின் தீவிர தேசிய இயக்கத்தைப்போன்ற சக்தியோ அக்கரையோ பிரிட்டிஷ்காரர்களுக்குக் கிடையாது. பணம் கிடைத்தால் சரி, அரசியலை எவராவது பார்த்துக் கொள்ளட்டும் என்று இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நீக்ரோக்களை மலான் நடத்தும் விதம் சரியென்றே பல பிரிட்டிஷ்காரர்களும் கருதுகின்றனர்.

ஐரோப்பியரல்லாதவர்கள் ஒரு கோடிபேர் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையினர் (85 லட்சம்) கறுப்புநிறபண்டு நீக்ரோக்கள். அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் நாகரீகம் பெறாத கூட்டமாக காட்டு மனிதர்களாகவே வாழ்கின்றனர். வெள்ளைக்காரர்களின் மொழி அவர்களுக்குத் தெரியாது. பண்டுக்களுக்கிடையில் 3-லட்சம் இந்தியர்கள் இருக்கின்றனர். நேட்டால் கரும்புத் தோட்டங்களில் தொழிலாளர்களாகவும் கடைக்காரர்களாகவும் இந்தியர்கள் பிழைப்பு நடத்துகின்றனர். மேலும் கேப் மாகாணத்தில் 11-லட்சம் 'கலப்பு ஜாதியினர்' இருக்கின்றனர் இவர்கள் வெள்ளையர்களுக்கும் நீக்ரோக்களுக்கும் பிறந்தவர்கள்.

சமீபகாலம் வரையில் இந்தக் கலப்பு சாதியினருக்கு ஒரு சில சிவில் உரிமைகள் இருந்துவந்தன. உதாரணமாக கேப் மாகாணத்தில் அவர்கள் வெள்ளைக்கார பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு வோட்டு போடலாம். ஆனால் கறுப்பர்களுக்கும் பழுப்பு நிறத்தவர்களுக்கும் வோட்டுரிமையே கிடையாது. சர்க்காருடைய ஜனத்தொகைக் கணக்கில் அவர்களை மக்களாக மதித்துக் கணக்கிடுவதுகூட இல்லை.

இரண்டு வெள்ளைக்கார கோஷ்டியினரான பிரிட்டிஷ்காரர்களும் போயர்களும் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்கின்றனர். தென்னாப்பிரிக்காவை பிரிட்டிஷ் கொள்கைகளா அல்லது போயர் கொள்கைகளா ஆளவேண்டும் என்பது பற்றி அவர்கள் ரத்தம் சிந்தாத இரண்டாவது போயர் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆனால் இரண்டு வெள்ளையர் கோஷ்டிக்கும் இருக்கும் ஒரே அச்சம் கறுப்பர்களைப்பற்றியதுதான். தங்களைப் போல நான்கு மடங்கு எண்ணிக்கையுடையவர்கள் கறுப்பர்கள் என்பதை மறக்கவில்லை.

தென் ஆப்ரிக்காவின் மொத்த தொழிலாளர் தொகையில் ஐந்தில் நான்கு பங்கினர் (30 லட்சம்) பண்டு நீக்ரோக்கள். அவர்கள்தான் வெள்ளையர்களின் தங்கச் சுரங்கத்தை வெட்டி எடுப்பவர்கள். வெள்ளைக்காரக் குழந்தைகளை வளர்ப்பவர்கள். இறந்த வெள்ளையருக்குச் சவக்குழி தோண்டுகிறவர்களும் அவர்களே.

(11-ம் பக்கம் பார்க்க).



# "ஸ்டாலினைக் கொன்றேன்!"

[அண்ணல்]

"1958 ஆகஸ்டு 18ந் தேதி மாலை மணி [illegible]-3க்கு தனது கோடைகால வாசஸ்தலத்தின் மேல் மாடியில் ஸ்டாலின் சுட்டுக் கொல்லப்பட்டார். குண்டு இருதயத்துக்குள் பாய்ந்தது.

ஸ்டாலினைக் கொன்றவன் அமெரிக்காவின் கையாள் என்றும், கடந்த நான்கு ஆண்டுகளாகவே இதற்கான நேரம் பார்த்தவண்ணம் திட்டமிட்டு வந்ததாகவும் தெரிய வருகிறது.

தனிப்பட்ட யாரோ ஒருவனின் சொந்தச் செய்கை அல்லவென்றும், அமெரிக்க அரசாங்கத்தின் அதிகார பூர்வமான முயற்சிகளின் விளைவாக நடைபெற்றதே இந் நிகழ்ச்சியென்றும் அறிய வருகிறோம்.

கொலை நடைபெற்ற சிலமணி நேரத்துக்கெல்லாம் பாதகனைப் பாராட்டி அமெரிக்கத் தலைவர் வாழ்த்துக்கள் அனுப்பினார். அந்த வாழ்த்துக்களில், 'அமெரிக்காவின் தலைசிறந்த மனிதன்' என்று அவனைப் புகழ்ந்திருக்கிறார்."

* * *

இப்படியொரு விளம்பரம்! அதற்குக் கீழே, இவ்வித ஒரு விளக்கம். 'நெஞ்சு நடுக்கிடும்படியான, மயிர்க்கூச்செறியும் இந்தப் படுகொலையின் முழு விபரங்களையும் படிக்கவேண்டுமா? "ஸ்டாலினைக் கொன்றேன்"! புத்தகம் ஒன்று போதும். ஸ்டெர்லிங் நோயல் தீட்டியது. விலை சரசம்! மலிவான பதிப்பு! ஏஜெண்டுகளுக்குத் தக்க கமிஷன் உண்டு. ஒவ்வொருவரும் சட்டைப் பையில் வைத்துக் கொள்ளக் கூடிய 'சைஸ்' உலகமெங்கும் பரபரப்போடு விற்பனையாகிறது. ஒரு ரூபாயும் சில அணாக்களும் தந்தால் போதும். உலகத்திலேயே மிகவும் அற்புதமான கொலை[illegible]பற்றிப் படிக்கலாம். கொலை[illegible]; தனது முயற்சிகளைக் கூற[illegible]போல, இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது, திடுக்கிடும் சம்பவங்கள்! தீர நிகழ்ச்சிகள்! தத்ரூபமான நடை. மனதைக் கலக்கும். மகத்தான நாவல். மறந்துவிடாதீர். அரிய சந்தர்ப்பம்."

* * *

"ஸ்டாலினைக் கோன்றேன்!"—இத்தலைப்பில், மேற்கண்ட விளம்பரங்களுடன், அமெரிக்க நாட்டில் நாவலொன்று விற்பனையாகிவருகிறதாம்—கடந்த ஓராண்டுகாலமாக. தலைப்பைக் கண்டதுமே, மயிர் சிலிர்க்கிறது நமக்கு. உடனே அதைப் படிக்கவேண்டும் என்று ஆவல் அரும்புகிறதல்லவா? இந்த ஆவலைக் கிளப்பி லாபத்தைக் குவிக்கும் ஆசையோடு இந்த நூலைப் பிரசுரகர்த்தரும், ஆசிரியரும் தயாரிக்கவில்லை. நூல் முழுவதையும் படித்தால், ஸ்டாலின்மீது அமெரிக்க முதலாளிகள் வைத்திருக்கும் ஆத்திரம் வெளிப்படுமாம்! அவ்விதம் எழுதப்பட்டிருக்கிறதாம். பிரபல ஆங்கில எழுத்தாளரான பம்பாய் நண்பர் அஹமத் அப்பாஸ், இந்த விபரத்தை, ஒரு கட்டுரைமூலம் வெளியிட்டிருக்கிறார். "ஸ்டாலினைக் கொன்றேன்!"—நாவலில், எப்படி ரஷ்யாவுக்குள் நுழைந்தேன், யாரரைக் கொன்றேன், எத்தனை சதிகள் வகுத்தேன் ஸ்டாலினைத் தீர்த்துக்கட்ட, அந்த முயற்சிகள் எவ்விதம் கைகூடாமற்போயின, கடைசியில் எப்படிச் சுட்டுக் கொன்றேன், என்று விளக்கமாக வரைந்திருக்கிறானும், நூலாசிரியன். கொலை நடந்ததும், அமெரிக்க ஜனாதிபதி அடைந்தபரவசம், கொலைகாரனைப்பற்றி விடுத்த பாராட்டு, இவைகளையும் விளக்கமாகத் தந்திருக்கிறானும். இந்த நூல், பகிரங்கமாகப் பவனி வந்துகொண்டிருக்கிறது, அமெரிக்காவில்! அமெரிக்க அரசாங்கம் அனுமதிக்கிறது, இத்தகைய பிரசுரங்களை. இந்த நூல், அமெரிக்க ஆதிபத்தியக்காரர்களின் ஆசையைப்பிரதிபலிக்கிறது. 'ஸ்டாலினைக்கொன்றேன்!! — எவ்வளவு துணிவிருக்கவேண்டும் இதைத்தீட்டியவனுக்கும், பிரசுரித்தவனுக்கும். ஸ்டாலின் மகோன்னதமாகப் பவனிவரும் காட்சிகளைக் காண்கிறோம் நாம் — பத்திரிகைகளில்! பரவசமடைகிறோம்!! ஆனால், இந்தப் பாதகன், அவரைக் கொலை செய்தேன், இவ்விதம் என்று வர்ணிக்கிறான். அந்த ஆசைக்கனவை, அச்சியற்றி, பணமும் சம்பாதிக்கிறான்!

ஸ்டாலின் சமாதிமீது அமெரிக்கக் கொடி பறப்பதாக எழுதும் அளவுக்கு, மனக்குதிரை, ஓடுகிறது, அமெரிக்க ஆசிரியனுக்கு. 'கிரெம்லின்' மாளிகையில் கீர்த்தியோடு உலவும் ரஷ்ய மாவீரனை, வெகு எளிதில், கொன்றுவிட்டான்! கொஞ்சம் இங்கி—சிறிது பேனாவுக்கு வேலை—தீர்ந்தது ஒரு வேலை!! எழுத்தால், ஸ்டாலினை, தீர்த்துச் சமாதி கட்டிவிட்டான்.

* * *

எழுதியவனின் ஆசை! அதன் மூலம் பணம் குவிக்கும் பிரசுர கம்பெனியின் நோக்கம்!!—இரண்டையும் தள்ளிவிடுவோம். ஆனால், இத்தகைய நூலுக்கு அமெரிக்க அரசாங்கமுமா ஆதரவளிப்பது! தடை செய்யாமல், பரவவிடுவது? மாவீரன் ஸ்டாலின், ரஷ்ய மக்களின் தலைவன்—புதுயுகம் பாராட்டுமளவுக்கு வளர்ந்து நிற்கும் இலட்சிய வீரன். பாராட்டவேண்டிய அம்மாவீரனைப் படுகொலை செய்து காண்பதில்—அதுவும் காகிதத்தில்!—என்ன ஆனந்தம் ஏற்படமுடியும், அமெரிக்கருக்கு? புலியென்று எழுதி, அதன்மீது கத்தியை எடுத்துக் குத்தி, 'காண்பீர்! காண்பீர்!' என்று அலறினால் என்னவென்று சொல்வது? பைத்தியம் என்போம். பிடிக்காத மனைவியின் புகைப்படத்தை, கணவன் ஒருவன், துப்பாக்கியால் சுட்டுவிட்டு, 'கொன்றேன் அவளை!' என்று குரலெழுப்பினால், கொல்லென்று சிரிப்போம்! நல்ல நகைச்சுவை கிடைக்கும்!! நகைச்சுவை ததும்ப, அமெரிக்க ஆசிரியனின் நாவல் விபரம் இருந்

தாலும், அவ்விதம் எழுதுமளவுக்கு அவனுக்கேற்பட்ட மன ஆவேசத்தையும், அதை அனுமதிக்கும் அரசாங்கத்தின்போக்கையும் நினைக்கும்போது,—டாலர் நாட்டினரின் வெறியும் வெறுப்பும், தெள்ளத் தெளிய விளங்குமே! அமெரிக்காவில் வெளியான "ஸ்டாலினைக் கொன்றேன்!" நூலைப்போல, மாஸ்கோவில், 'ட்ரூமனைக் கொன்றேன்!" அல்லது "சர்ச்சிலைக் கொன்றேன்!" என்று நூல்கள் வெளியாவதாக வைத்துக் கொள்வோம். அப்போது என்ன நடைபெறும், 'ஜனநாயகம்' பேசும் இத்தயாபரர்களிடம்? எத்தனைவிதமான கட்டுரைகள் வரும், 'பிடாரிகளின் வெறியினைப் பாரீர்' என்பார், ஒரு ஆசிரியர். "ரத்தம் குடிக்கும் பித்தர்கள்!"—என்று தீட்டும் தேசீய ஏடு. விதவிதமான கேலிச் சித்திரங்களும், பற்பல விளக்கங்களும் தந்து, அமெரிக்கப் பத்திரிகைகள் இனமாக வழங்கப்படும்! ஆனால், "ஸ்டாலினைக் கொன்றேன்!" நூலைப்பற்றியோ, நூலாசிரியனைப்பற்றியோ எவ்வித நடவடிக்கையும் இல்லை. சர்க்காரும் அனுமதிக்கிறது. சர்க்கரை வேண்டுமென்று விரும்புபவன், காகிதத்தில் 'சர்க்கரை' என்று எழுதி அதை நக்குவதுபோல, "ஸ்டாலினைக் கொன்றேன்" என்று எழுதியும், அதைப் படித்தும் பரவசமடைகின்றது, அமெரிக்கா. எத்தகைய பேதைமை இது! எவ்வளவு வெறிச் செயலிருந்தால், இதுபோன்ற பித்துப் பிள்ளை விளையாட்டுகள் எழும்பும்!

"ஸ்டாலினைக் கொன்றேன்!"—இந்நூல், ரஷ்யமக்கள்மீது, ஆதிபத்யவாதிகளுக்கு இருக்கும் ஆத்திரத்தையும் குமுறலையும், படம் பிடித்துக் காட்டுகிறது. கொலை செய்யத் தூண்டுமளவுக்கு, ஸ்டாலின் செய்த வஞ்சகம் என்ன? சூழ்ச்சி எது? தந்திரம் எது?—அவர், கம்யூனிசக் கொள்கையின் தூதுவராக, இருப்பதைத் தவிர வேறெவ்வித குற்றமும் செய்யவில்லை—கொடுமையும் இழைக்கவில்லை. இருந்தும் இவ்வளவு ஆத்திரம்! எதற்காக? அவர் கம்யூனிசத்தைக் கட்டிக்காப்பதைக் காண முடியவில்லை அமெரிக்கர்களால்! அவ்விதம், இவர்கள் சகிக்க முடியாதவகையில், என்ன இருக்கிறது பொதுவுடைமைக் கொள்கையில்? உலகம் தன் குடைக்கீழ் இருக்கவேண்டுமென்கிறதா ஸ்டாலின் பூமி, எல்லோரும் தனக்கு அடிமையாகி வரி செலுத்தவேண்டுமென்கிறதா—இல்லை! இல்லை!! எல்லோரும் தன்னைப்போல வாழ வேண்டும் என்று சொல்கிறது. அதற்கு, தான் சென்ற பாதையில், எல்லோரும் வரவேண்டுமென அழைக்கிறது. இந்த அழைப்பில் பலவந்தம் இருக்கலாம்! ஆனால், நோக்கம் நல்லதாயிற்றே. 'முடியாது' என்று நீ பிடித்த வீட்டுக்குள், போர்த்திக்கொண்டு குறட்டை விடுபவனை, அடித்து எழுப்பினால், தவறு என்று சொல்லவாமுடியும்? எவரே மறுப்பர், இதனை! எவரும் கூடாதெனக் கூறார். ஆனால் அவ்வழியில்கூடச் செல்லவில்லை, ரஷ்யா. அந்தந்த நாட்டு மக்களிடையேயும் விடுதலை வேட்கை, எழும்புகிறதா என்று தெரிந்ததும், அதற்கு உதவி செய்து "தலைநிமிர்! சுடர் முகம் தூக்கு!" என்று, அழைக்கிறது—அன்புக்குரல் தருகிறது. இதைக்கண்டு ஏன், 'ஸ்டாலினைக் கொன்றேன்' என்கிற ஆசை எழும்பவேண்டும், அமெரிக்கருக்கு. அமெரிக்கருக்கு என்றால், அமெரிக்காவிலுள்ள பணமுதலைகளுக்கு என்றே கூறவோம். ஏனெனில், பணக்காரபூமி என்று கூறப்படும் அங்கும், ஏழைகள் நிரம்ப இருக்கிறார்கள்! அடிக்கடி தொழிலாளர்கள், "ஸ்டிரைக்" நடைபெறுமலில்லை. அவர்களிலே, பலர், பொதுவுடைமையை வரவேற்கிறார்கள்! ஆனால் கோடீசுவர அமெரிக்கா கொக்கரிக்கிறது.

"ஸ்டாலினைக் கொன்றேன்!"—எழும்புகிறது.

"கம்யூனிசம் எமது எதிரி"—என்கிற கூச்சல், அரும்புகிறது.

இந்த அளவு ஆத்திரமும், ஆவேசமும் ஏன் எழும்பவேண்டும்? அமெரிக்க சர்க்கார், தோள் தட்டுகிறது — "காந்தி முழக்குகிறது!" கொலைப்போம் ரஷ்யாவை" என்று, குரல் எழுப்புகிறது. கூறுவும் நூலும் எழும்பிக் கொண்டிருப்பது மட்டுமல்ல அதை நிறைவேற்றிவைக்கவும், ஏராளமான பணத்தைச் செலவிட்டு, உலகத்தையே வளைக்கவும் கனவு காண்கிறது. சூழ்மதி இதற்கு பல்வேறு நாடுகளும் 'சரிகம' பாடுகின்றன. ரிட்ஜ்வே புறப்படுகிறார் — கிளார்க் தளபதியாகிறார்—அட்லாண்டிக் முகாம் அமைக்கப்படுகிறது—அலெக்சாண்டர் சுற்றுப்பயணம் நடத்துகிறார் — மார்ஷல் திட்டம் போடப்படுகிறது—பொதுப் பாதுகாப்பு என்ற பேரால் பல நாட்டிலும் போர் முகாம்கள் அமைக்கப்படுகின்றன, இந்த அளவுக்கு பொதுவுடைமையை எதிர்த்துப் போர் முழக்கம் செய்கிறது, அமெரிக்கா. இதற்கு, முன்னேறும் பிள்ளையாக இருக்கிறது, பிரிட்டன். தம்பிக்கு உதவும் தமையன்! அமெரிக்காவில் வாழ்வோர் பிரிட்டனின் குடிகள்தானே! பிரிட்டிஷாரின், இந்தப் போக்கு, இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

முதலாளித்துவ வல்லரசுகளில், முன்பு முதலிடமும், கடந்த போருக்குப் பிறகு இரண்டாவது இடமும் வகிக்கும் பிரிட்டன், ரஷ்யா குறித்து கையாண்டு வரும் வெளிநாட்டுக் கொள்கை எப்படியிருந்து வருகிறது தெரியுமா? பேரறிஞர் பெட்ரண்ட் ரஸ்ஸல் கூறுகிறார்.

"அரை நூற்றாண்டுகளுக்கு முன்பு, இந்தியா மீது ஜார் படையெடுத்து விடுவாரோ, என்று திகிலடைந்து கிடந்தோம். அதனால் ரஷ்யர்களை எதிரியாகப் பாவித்தோம். பிறகு, பெரிய பெரிய கப்பற் படைகளை ஜெர்மனி கட்டத் துவங்கியதைக் கண்டதும், 'ரஷ்யாவை விட ஜெர்மனியே பெரிய எதிரி' என்றோம் — ரஷ்யாவுடன் நேசம் கொண்டோம். ஆனால் ரஷ்யப் புரட்சி நடைபெற்றதும், அந்த ரஷ்யாவை நேச நாடு என்றோமோ அதை விரோதியாகப்பாவித்தோம். இப்போது, ஜெர்மனிக்கு ஆதரவு தந்தோம்! ஹிட்லர் வளர்ந்து, ஆக்கிரமிப்பு வேலைகளுக்குத் தயாரான போதுகூட, ரஷ்யாவை விரோதியாகவே பாவித்தோம். நல்லவேளை! முட்டாள்தனமாக ரஷ்யா மீது ஹிட்லர் போர் தொடுக்காமலிருந்தால் நாம் தூள் தூளாகிப் போயிருப்போம்!"

* * *

முதலாளித்துவ வல்லரசுகள், தமது ஆதிபத்தியத்தை கேந்திரமாக வைத்தே, வெளிநாட்டுக் கொள்கைகளைத் தயார் செய்கின்றன. இந்த உண்மையைத்தான் ரஸ்ஸல் குறிப்பிடுகிறார். கீரியும் பாம்பும் போல, கடந்த உலகப்போரின் துவக்கத்தின் போது இருந்தனர் ரஷ்யரும் வெள்ளையரும். ஆனால் பிறகு! போர் முடியும்போது இரண்டும் நேசநாடுகளாகயிருந்தன. ஹிட்லரை ஒழிக்க, இந்த நேசம், அமைத்துக் கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு........! 'ஸ்டாலினைக் கொன்றேன்'— எழும்புகிறது—எரிச்சலும் வெறியும் உருவாகியிருக்கிறது. இது வியப்பானது அல்ல! ஏனெனில், புரட்சிக்குப் பின் மலர்ந்த புது ரஷ்யா மீது, போரில் வீழ்ந்த ஹிட்லர் முதல் மேற்கத்திய நாடுகள் அத்தனையும் விரோதமாகத் தான் இருந்து வந்தன.

ரஷ்யப் பொதுவுடைமையை முதலாளித்துவ வல்லரசுகள் அத்தனையும் எதிர்த்தேவந்திருக்கின்றன.

என்னகாரணம் இதற்கு? பொதுவுடைமை — முதலாளித்துவம். இரண்டு துருவங்கள், எவ்விதம் ஒன்றாகமுடியும்? சுகபோகி, ஏழைக்கு வாழ்வு தரவா விரும்புவான்! போக போக்கியங்களில் வாழும் கூட்டம் அவைகளை இழக்கச் சம்மதிக்குமா, என்ன! இதனால் தான், "பொதுவுடைமை எமது எதிரி" என்று பகிரங்கமாகப் பேசுகிறார்கள், ஆதிக்கம் வகிக்க விரும்பும் அத்தனைபேரும்.

முதலாளிகள் வெறுக்கிறார்கள்—அவர்களின் பொம்மைகளாயிருக்கும் சர்க்காரும் எதிர்க்கின்றன.

"கம்யூனிசம் எனது எதிரி நம்பர் ஒன்று!"—என்று கர்ஜிக்கிறார்களே, அவர்களுக்கு விரோதியாகும் நிலையில் என்ன கொடுமை செய்துவிட்டது, கம்யூனிசம்.

கம்யூனிசம் — ஒரு கொள்கை. அது ரஷ்யாவுக்குத்தான் சொந்தமென்றோ சீனாவுக்குமட்டுமே உரியதென்றோ கூறிவிடமுடியாது. அதேபோல, கம்யூனிஸ்டுக் கட்சியினர் மட்டுமே உரிமை கொண்டாடக் கூடிய ஒன்று என்றும், புறக்கணித்துவிடமுடியாது.

அந்தக் கொள்கை, பிறந்த இடத்தில், மகிழ்ச்சி நிலவுவதை அறிகிறோம். எவ்விதம், ரஷ்யாவுக்குள் அத்தகைய மகிழ்ச்சி ஏற்படமுடிந்தது?

* * *

"இது எனது வீடு!", "இத்தோட்டம் எங்கள் அப்பா வைத்துப்போனது" — இவ்விதம் இங்கிருப்போர் உரிமைகொண்டாடுகிறார்களல்லவா? இது, அங்கே, கிடையாது. எல்லாம் நாட்டுக்குச் சொந்தம். எல்லாம் நாட்டைச் சேர்ந்தது என்று இருப்பதுபோல அந்த நாட்டில் பிறந்துவிட்ட எல்லோருக்கும் வாழ்வளிக்கவேண்டியதும் அந்த நாட்டின் பொறுப்பேயாகும்.

கடைக்குச் சென்று ஒரு பொருளை வாங்கும்போது, 'பக்கத்து கடையில் இரண்டணா குறைவு' என்று எவராவது கூறினால், உடனே மலிவாகக் கிடைப்பதை வாங்கச் செல்கிறோம். அது எந்த நாட்டில் செய்யப்பட்டது என்பதைப்பற்றி நாம் கவலைப்படுவதில்லை. 'விலை குறைவா?'—என்பது தான் நாம் கவனிப்பது. ஆனால், ரஷ்யாவில், எத்தகைய விலைக்குக் கிடைப்பதானாலும், அது தமது நாட்டில் உற்பத்தியானதா என்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர். பண்டிதநேருவிடம் சென்று, 'பேனாவைக் கொஞ்சம் தாருங்கள்' என்றால், பெருமிதத்தோடு 'பார்க்கர்' பேனாவை எடுத்து நீட்டுவார். ஆனால் ரஷ்யாவிலோ, எவரும் தமது நாட்டில் செய்யப்பட்டதை வைத்திருப்பதையே பெருமையாகக் கருதுகின்றனர்.

நாம் எவ்விதம் பொருள்களுக்கு விலையிடுகிறோமோ அவ்விதம் ரஷ்யாவில் விலை வைப்பதில்லை. மக்களுக்கு அன்றன்றாடம் தேவையான பொருள்களின் விலை, குறைவாக இருக்கும். ஆடம்பரப் பொருள்களின் விலை அதிகமாயிருக்கும். எதெது குறைவாகக் கிடைக்குமென்று நாம் எண்ணுகிறோமோ, அவைகளின் விலை மிக மிக அதிகமாயிருக்கிறது.

ரஷ்யாவுக்குப் போய் பார்த்தால் நாம் பொருள்களுக்கு வைக்கும் மதிப்புக்கும் அவர்கள், அவைகளை மதிப்பிடும் தரத்துக்குமுள்ள தாரதம்மியம் மிக மிக வித்தியாசப்படுகிறது.

ஒரு ஓட்டலில் வேலை செய்பவன் மாதம் 2000 ரூபிள்வரை (ஒரு ரூபிள், ஒரு ரூபாயைவிடச் சிறிது அதிக மதிப்புள்ளது) சம்பளம் பெறுகிறான். ஆனால் அந்தச் சம்பளத்தைக்கொண்டு வாங்கக்கூடிய பொருள்களை நாம், இங்கு சுமார் 200 ரூபாய்க்குள் வாங்கிவிடலாம். ஒரு கோப்பை கொக்கோவின் விலை ரூ 3!

நாட்டின் செல்வம் ஒவ்வோரிடமும், வேற்றுமையின்றிப் பரந்து கிடக்கவேண்டுமென்றே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஓட்டல் தொழிலாளியும், ஓட்டலில் சாப்பிடுபவனும் சம அந்தஸ்தோடு, எல்லாவகைகளிலும் வாழ்கிறார்கள்.

இங்கே இந்தியாவிலே! கிராம மக்கள், தாம் உற்பத்தியாக்கும் பொருள்களுக்கான, நியாயவிலையைக்கூட பெறமுடிவதில்லை. குறைந்தவிலைக்கு விற்கிறார்கள் — நகரத்திலிருப்போர் லாபம் பெறுகிறார்கள். கிராம மக்கள் சுரண்டப்படுகிறார்கள்.

"இதனால் நமக்குலாபம்என்ன?" இதுதான் நம்முடைய நோக்கம்.

வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை உற்பத்தி செய்யவும் கிராமத்தார் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு கஷ்டமடைகிறார்கள். நாட்டின் செல்வம் அவர்களுக்குச் சரிசமமாகப் பங்கிடப்படுவதில்லை. ஆனால் ரஷ்யாவில் தரத்துக்குத் தக்கவாறு, அது பங்கிடப்படுகிறது. எவருக்கும் ஒரே நிலைதான்! மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் அவர்களுடைய ஒரே நோக்கமாயிருக்கிறது.

குடும்பம்—என்பது செழிப்பாகயிருப்பதே சமுதாயத்தின் செழிப்பு என்று சோவியத் மக்கள் கருதுகிறார்கள்.

காந்தியாரின் பிரதம சீடரும் பொருளியல் அறிஞருமான குமரப்பா, இவ்விதம், ரஷ்யா சென்று திரும்பியதும் வெளியிட்டுள்ளார்.

பொதுவுடைமை பூத்துவிட்டது, அங்கே! பொதுவுடைமை மணம் அங்கே கமழ்கிறது, ரஷ்யாவில்!

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 22—6—52 [ஞாயிறு

# போதனை

"மனிதர்களுக்காகப் பாடுபடுகிறோம் என்பதை மனதில் வையுங்கள். அதிகாரக் கோபுரத்தில் அமர்ந்திருக்கிறோம் என்கிற மமதை கூடாது" என்று, பண்டித நேரு, இந்திய நிர்வாகிகளுக்கு அறிவுரையொன்று விடுத்திருக்கிறார்—அஸ்ஸாம் சர்க்கார் காரியாலயத் திறப்பு விழாவுக்கு அனுப்பிய செய்தியின் மூலம்.

இந்தப் 'பொன்னுரை' ஒவ்வொரு இடத்திலும் தொங்கவிடப்படவேண்டும் என்று விழாவில் பேசிய அஸ்ஸாம் கவர்னர் ஜயராம்தாஸ் தௌலத்ராம் வெளியிட்டிருக்கிறார்.

அறிவுரை அர்த்தம் பொதிந்தது மட்டுமல்ல — அவசியமானதுங்கூட. ஆனால், பண்டித நேரு, யாருக்கு அதை வற்புறுத்தவேண்டுமோ அவர்களை மறந்துவிட்டிருக்கிறார்.

சர்க்காரை நடத்திச் செல்லும் நிர்வாக அதிகாரிகளை, ஆட்டிப் படைப்போர் ஆங்காங்கே இருக்கும் அமைச்சர்களும், அவர் தம் குழாமும்தான். காங்கிரஸ் ஆட்சியில், இந்த நிர்வாக அதிகாரிகள் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல! இஷ்டப்போல் ஆடவேண்டும்! எதற்கும் தாளம் போடவேண்டும்! மீறினால் ஆபத்து.

இந்த மோசமான நிலைமையை நாட்டில் பற்பல அறிஞர்களும் வெளியிட்டுக்கொண்டே வருகிறார்கள். ஆனால், நேருவோ, மீண்டும் அவர்களுக்குத்தான் 'போதனை' செய்கிறார்! சமது 'திருக்குழாத்தை' மறந்திருக்கிறார்!

நிர்வாக அதிகாரிகள், எப்போதும் இருப்பவர்கள். அவர்களுக்கு தமது பணியில் ஊக்கமும் அக்கரையும் வளரவேண்டுமேயானால், அவர்களது கருத்துக்கும் பணிக்கும் மதிப்பளிக்கப்படவேண்டும். ஆனால் அது இல்லை, இப்போது! தமக்குப் பிடித்தமானவர்களை 'தூக்கிவிடும்' தூர்க்குணமும் சுயநலமுமே — காங்கிரசாட்சியில் வளர்ந்து கிடக்கிறது. இதன் விளைவாகவே டில்லி இலாகாவிலும் சரி, மாகாண இலாக்காக்களிலும் சரி ஏராளமான ஊழல்கள் வளர்கின்றன.

இதற்கான காரணஸ்தர்களுக்குப் போதனை செய்யவேண்டும், நேரு. அதை, அவரே, கடைபிடிக்கவும் வேண்டும். ஆனால் எங்கே நடக்கிறது?

*

## 7-ம் பக்கத் தொடர்ச்சி

பொதுக் கூட்டங்களிலேயும், ஏடுகளிலேயும், நாடக மேடைகளிலேயும், பாடல்களிலேயும், பள்ளிச்சிறுவரின் உரையாடலிலேயும், காணலாம். பிரிவும் பிளவும், இந்தப் பொது உணர்ச்சியைப் பாதிக்கவில்லை. திராவிடர்களுக்குள் இரு கழகமாம், இதென்ன தொல்லை, ஏன் நமக்கு இந்த வம்பு, திராவிடர் என்ற எண்ணமே வேண்டாம், ஆரியமே ஆளட்டும், வடநாடே ஆதிக்கம் செலுத்தட்டும் என்று கூறிடும் ஏமாளி யாரும் இல்லை. அதுவோ இதுவோ, இரண்டிலே, எது நமது அன்புக்கு உரியதாக இருந்தாலும் சரி, நாம் விரும்புவது ஒன்று, திராவிட நாடு திராவிடருக்கே என்பதுதான், நாம் விரும்பும் அந்த ஒன்று, என்று கருதும் திராவிடர் தொகைதான் அதிகம்—அதுதான் வளர்ந்துகொண்டும் வருகிறது. திராவிடர் கழக மாநாடு கூடிற்று—சேலத்தில், கூடி, என்ன செய்தது? —திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரால் சிலர் சுற்றிக்கொண்டு திரிகிற காரணத்தால், திராவிடநாடு தேவையில்லை என்று கூறிவிட்டதா? அதுபோலவே, சென்னையில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டிலே, திராவிடர்க் கழகத்திலே இருந்து பணியாற்ற முடியாது என்று வெளிக் கிளம்பிவிட்ட காரணத்தால், நாம் இனி, திராவிட நாடு திராவிடருக்கே என்ற திட்டத்தை விட்டுவிடுவோம், என்று தி. மு. க. பேசிற்று? பேசுமா? திராவிட நாடு திராவிடருக்கு என்ற நிலையை உண்டாக்க, வழிவகை வகுக்க, நான் முந்தி நீ முந்தி, என்பதுதான், இரு கழகமானவர்கள் வினவாகிவிட்டதே தவிர திராவிடநாடு திராவிடருக்கேஎன்ற பொதுப் பிரச்னைக்குத் துளியும் ஊறு நேரிடவில்லை—நேரிடவிடமாட்டோம் — மாறாக புதுபலமே ஏற்பட்டிருக்கிறது. திராவிடநாடு திராவிடருக்கே என்ற முழக்கம், எந்த முகாமிலிருந்து கிளம்பினாலும், காதுக்கு இதமாகிறது — தெளிவு பெற்ற திராவிடப் பெருங்குடி மக்களுக்கு—இந்த முழக்கம் மேலும் மேலும் வலுவடைந்து. இலட்சியம் வெற்றி பெறப்போவதற்கான அறிகுறிகள் பலப்பல காண்கிறோம். அகமகிழ்ச்சிக்குரிய அவ்விதமான அறிகுறியில் ஒன்று என்போம், திராவிடகழக மாநாட்டை, உழைப்பாளர் கட்சித்தலைவர் தோழர் S. S. ராமசாமி அவர்கள் திறந்து வைத்ததை. அவர் உரையிலே, திராவிட நாடு திராவிடருக்கே என்ற பாவலி கண்டோம் — களித்தோம். நான் திராவிட கழகமல்ல'— எனினும் திராவிடநாடு திராவிடருக்காக' நான் பாடுபடுவேன் என்று S. S. R. கூறினது, திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்துக்கு மாவீரர்கள் பலப்பல முகாம்களிலே உள்ளனர் என்ற உண்மையை உணர்த்துவிக்கிறது. வடநாட்டு ஆதிக்கத்தின் விளைவுகளை உரைத்திருக்கிறார். "எல்லாக் கட்சிக்களிலும் உள்ள நல்லவைகளை ஆதரிக்கும்" நண்பர் ஜி. டி. நாயுடு அவர்கள். திராவிட நாடு திராவிடருக்கு என்ற இலட்சியத்துக்கு ஆதரவு பெருகுகிறது— பல்வேறு இடங்களிலும், இதற்கான ஆதரவு மலர்ந்தவண்ணம் இருக்கிறது. சேலம்மாநாடு இத்தகைய எழிலோட்டும் ஓவியம். சேலம், எப்போதுமே திராவிடச் சமுதாயத்தின் ஓவியக்கூடமாகவே திகழ்ந்திருக்கிறது. நாம் திராவிடர் கழகம் ஆகத் திகழத்தொடங்கியது சேலத்தில்தானே! அந்தச் சேலம், இன்று திராவிடநாடு திராவிடருக்கே என்ற இலட்சியத்துக்கு ஆதரவுபல திசைகளிலும் இருக்கிறது என்பதைச் சிறப்பான மாநாடுமூலம் காட்டிவிட்டது. திராவிட சமுதாய விடுதலைக்கான முயற்சி யாரால், எங்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும், நாம் மகிழ்கிறோம்—திராவிட நாடு திராவிடருக்கு என்ற இலட்சியம் வெற்றி பெ யாரார் உதவி அளித்தாலும் உவகை கொள்கிறோம் — திராவிடநாடு திராவிடருக்காகும் என்ற நம்பிக்கையூட்டத்தக்க நிகழ்ச்சிகள் எங்கெங்கு நடைபெற்றாலும் நாம் பெருமை கொள்

10-ம் பக்கம் பார்க்க



# சேலம்—திராவிடச் சமுதாயத்தின் ஓவியக் கூடம்

'சேலம், காங்கிரசுக்குப் பாசறையாகிவருகிறது, ஏனெனில் அங்கே தென்னாட்டுத் திலகர் டாக்டர் வரதராஜுலு வெற்றிபெற்றார்' என்று கூறினர் — நாட்டின் நாடியைச் சரியாகக் கண்டறியமுடியாத காங்கிரஸ் நண்பர்கள். அண்மையில், சீரும் சிறப்பும் கொண்ட முறையிலே நடைபெற்ற திராவிடக்கழகமாநாடு, அவர்களின் கண்களைத் திறந்திருக்கும் என்று எண்ணுகிறோம்.

முற்போக்காளர்களின் ஒன்றுபட்ட முகாம் அமைவது சாத்யமாகாது போகவே, சேலத்தில், காங்கிரஸ் வெற்றியைப் பறித்துக் கொள்ள முடிந்தது—இதனை அறியாமல், சேலம் இனி நமது 'ஜிம்கானா' என்று கணக்கிட்டுக்கொண்டு காங்கிரசார், அந்தப் பல ஆர்ப்பாட்டங்களைத் துவக்கினர்.

தேசிய ஐக்ய முன்னணி என்ற பெயருடன் ஒரு அமைப்பு—அதன் அருமையான பணி, எதிர்க்கட்சிக்காரர்களைத் தூற்றிக்கொண்டு இருப்பதும், நியாயம் கேட்க வருபவர்களை நையப்புடைப்பதும்! இந்த விசித்திரம், சேலத்தில். இம் மட்டோ! சந்து முனைகளிலே சாக்கடை மொழியிலே சிந்தாபாடி எதிர்க்கட்சித் தலைவர்களை ஏசிக்கொண்டிருக்க இசைபாட், கூத்தாட். இந்தத் தைரியம் அவர்களுக்கு வந்ததற்குக் காரணம், சேலம், காங்கிரஸ் பாசறையாகிவிட்டது, என்ற தப்பெண்ணந்தான்.

அவர்கள் போட்ட கணக்கு தவறு என்பதும், கட்டிய கோட்டை உடையும் என்பதையும், எடுத்துக்காட்டும் விதமாக, திராவிட கழக மாநில மாநாடு நடைபெற்றது—மக்கள் திரண்டனர். சேலம் திராவிடக் கோட்டை, தேசியத் தெந்தினக்காரரின் பாசறை அல்ல, என்பதை எடுத்துக்காட்டும் விதமாக. சேலத்திலே, திராவிட கழகமும் கம்யூனிஸ்டு கட்சியும் தேர்தலின்போது மாறுபட்டிருக்க நேரிட்டது — இதனால், இரு சக்திகளுக்கும் இடையே மாச்சரியம் வளரும், அந்த குழம்பிய குட்டையில் இலாப மீன் பிடிக்கலாம் என்று காங்கிரஸ் வலைஞர்கள் கருதினர். அதற்கு இடம் கொடோம், என்று அறிவித்துவிட்டார் தோழர் ஜீவானந்தம்—திராவிடக்கழக மாநாட்டிலே, கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கலந்து, ஜீவா பேசியது, காங்கிரஸ் கபடர்களின் மனக் கோட்டையை உடைத்தெறியும் சம்மட்டி அடியாகும். கருத்து வேற்றுமைகள் எழத்தான் செய்யும்—ஜனநாயக இலட்சணமே அதுதான — ஆனால், கருத்து வேற்றுமை காரணமாக, பிற்போக்காளர்களுக்கு இடம் கொடோம், என்பதை ஜீவா உணர்த்திவிட்டார். நாட்டிலே. முற்போக்கான கொள்கைகள் கொண்ட கட்சிகள் பல உள்ளன. அவைகள் ஒன்றை ஒன்று பகைத்துக்கொள்வது, பொது நஷ்டம் என்பதை உணர்ந்துள்ளவர்களே இன்று அதிகம். எனவேதான், முற்போக்குக் கருத்துடன் பணிபுரியும் கட்சிகளுக்கிடையே சிண்டு முடிந்துவிடும் சில்லறை விஷமம் முளைக்கும்போதே கருகிவிடுகிறது. தேர்தலின்போது தி. மு. க. கம்யூனிஸ்டுகளை ஆதரிக்கவில்லை என்றவுடனே சரி, சரி, இதுதான் சமயம், இந்த இருசக்திகளையும் மோதவிடவேண்டும் என்று கிளம்பினர் கதருடையினர், ஆனால் ஜீவா இந்தப் போக்கை மண்டையிலடிப்பது போல, சென்னையில் நடைபெற்ற தி. மு. க மாநில மாநாட்டிலே மேடையிலே வந்தமர்ந்தார். புதுமையாக இருக்கிறதே என்று புலம்பினர் பழைமை விரும்பிகள்—பாசீச ஒழிப்புக்காகத் தயாரிக்கப்படும் புதிய போர் முறையை அவர்கள் அறிந்துகொள்ள முடியவில்லை. சேலம் மாநாடு, அவர்களின் சிந்தனையில் படிந்துள்ள தூசு துடைக்க உதவும் என்று எண்ணுகிறோம். பொதுவாகவே காங்கிரஸ்காரர்கள், எதிர்க்கட்சிகளின் கூட்டங்கள், மாநாடுகள் ஆகியவற்றைக் காணும்போது, கொள்ளவேண்டிய உண்மையான கருத்தைக் கொள்ள மறுக்கிறார்கள், எனவே தவறான முடிவுகளுக்கே வருகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாட்டிலே வெள்ளம் போல் தமிழர் கூட்டம் கூடிற்று என்றால், அதைக் காணும் காங்கிரசார், இந்தக் கூட்டம் பெரியாருக்கு விரோதமான கூட்டம் என்று கருதிவிடுகிறார்கள். அதுபோலவே திராவிட கழக மாநாட்டிலே வீறுகொண்ட திராவிடரின் பெருங்கூட்டத்தைக் கண்டால், உடனே, இது தி. மு. க. வுக்கு விரோதமான கூட்டம்என்று கருதிவிடுகிறார்கள் — இதனால் இவர்களுக்கு உண்மையான கணக்குப் புரிவதில்லை. திராவிடர் கழக மாநாட்டிலே கூடினாலும், திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிலே கூடினாலும், கூடுபவர்கள் திராவிட இன உணர்ச்சி எனும் ஆர்வம் கொழுந்துவிட்டெரியும் உள்ளத்தினர் — காங்கிரஸ் கபட நாடகத்தைக் கண்டிக்கும் திண்ணிய உள்ளம் படைத்தவர்கள் — பாசீசத்தை ஒழித்தாகவேண்டும் என்ற பரணி பாடுவோர்—திராவிடம் திராவிடருக்கே என்ற இலட்சிய கீதம் இசைப்போர்! — இந்தச் சூட்சமத்தை உணரும் அளவுக்கு அரசியல் தெளிவு அற்றவர்கள், முற்போக்குச் சக்திகள் ஒன்றை ஒன்று விழுங்கிவிடும், என்று தவறான கணக்கு போடுகிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன? காங்கிரஸ் பாசீசம் கூடாது, சனாதன ஆட்சி கூடாது, திராவிட நாடு திராவிடருக்கு ஆகவேண்டும், என்று கூறினால், அந்தக் குரலை தமது இதயக் குரல் எனக்கொண்டு குழுமிடும் திராவிடர்கள் இலட்ச இலட்சமாக உள்ளனர்—தொகை வளர்ந்துகொண்டும் வருகிறது. அழைப்பவர் யார்? எந்தக் கழகம் என்பதுகூட அல்ல, விழிப்புற்ற திராவிடர்கள் கவனிப்பது. என்ன என்ன கூறி அழைக்கிறார்கள், இலட்சியம் யாது? என்பதைத்தான் கவனிக்கிறார்கள். அதாவது பொதுவான ஒரு உணர்ச்சி, அரசியல் சூதாடிகளால் அழிக்கப்படமுடியாததும், காங்கிரசாரால் கட்டுப்படுத்தமுடியாததுமான ஒரு புது பொது உணர்ச்சி, திராவிடச் சமுதாயத்திலே பூத்திருக்கிறது. அதன் மணம், மாநாடுகளிலேயும்

(6-ம் பக்கம் பார்க்க)

# துயர் துடைக்க வாரீர்!

உறுப்பினர்கள் ஏராளமான அளவிலே சேர்த்தாகவேண்டும், அதுதான் ஆக்கவேலை, ஊக்கத்துடன் அதைச் செய்தாகவேண்டும், அப்போதுதான் கழகம் எஃகுகோட்டையாகும், என்று ஆர்வத்துடன் கூறினீர்கள். மகிழ்ந்தேன்.

*

எங்கே உறுப்பினர் சீட்டுகள் என்று கேட்டீர்கள்—ஆவல் கொந்தளித்தது உங்கள் கடிதங்களில். உறுப்பினர் சீட்டுகளை அனுப்பிவைத்தேன்.

*

போதாது—மேலும் உறுப்பினர் சீட்டுகள்தேவை என்று கேட்டீர்கள்—அச்சாகத் தாமதமாகிறது என்றேன், ஆயாசப்பட்டீர்கள். அச்சகத்தாரிடம் மன்றாடினேன்—மீண்டும் சீட்டுகளை அனுப்பினேன்.

*

கேட்பவர்க்கெல்லாம் அனுப்பி வைப்பது முறையல்ல, மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி அவர்கள் கிளைகளுக்கு அனுப்பி வைப்பதே முறை என்று மாவட்டச் செயலாளர்கள் கூறினர்—அதையும் ஒப்புக்கொண்டேன்—அனுப்பி வைத்தேன். உறுப்பினர்கள் சேர்த்தாகிவிட்டதா என்று உசாவியபடி இருந்தேன்—இதோ—இன்னும் சிலநாட்களில், என்று பதிலளித்தீர்கள்.

*

காத்துக்கிடக்கிறேன்—உறுப்பினர் சேர்க்கும் வேலை முடிந்து, தேர்தல்கள் நடைபெறவேண்டும் பிறகு பொதுக்குழு அமையவேண்டும் என்று எடுத்துரைத்தேன். எட்டு நாள், இரண்டுவாரம்,—என்று தவணைகள் கூறினீர்கள்.

*

வருத்தப்பட்டேன் — தலைமை நிலையம் அவ்வப்போது, இது குறித்துத் தபால் அனுப்பவேண்டும் என்றீர்கள்—சரி என்றேன்—தோழர் ஒருவர் அலுவலகப் பணிக்காக அமர்த்தப்பட்டார்—அவரும் நாளும் சேர்ந்து, கடிதங்களை அனுப்பினேம்—தபால் இலாகா தழைத்தது. உறுப்பினர் சேர்க்கும் பணி முடிவுபெறவில்லை.

*

தொடர்ந்து, முறைப்படி, அலுவலக வேலையைக் கவனிக்கவேண்டும், அப்போதுதான் உறுப்பினர் சேர்க்கும் வேலை வெற்றிகரமாக நடைபெறும், என்றீர்கள், தோழர் E. V. K. சம்பத் அவர்களைச் சென்னையில் தங்கி இருந்து, தலைமை நிலையப் பொறுப்பாளராக இருக்கக் கேட்டுக்கொண்டேன் — அவரும் ஒரு மூன்று மாத காலம் இருக்க இசைந்து, மாதம் இரு நூறு ரூபாய்க்குமேல் சொந்தப் பணத்தைச் செலவிட்டுக்கொண்டு, காரியமாற்றுகிருர்—எனினும், உறுப்பினர் சேர்க்கும் காரியம் வெற்றிகரமாக நடைபெறவில்லை.

*

நாட்டிலே உள்ள ஆர்வம், நண்பர்கள் காட்டிய உற்சாகம், முறைகளைக் கூறியவர்கள் வெளியிட்ட ஆவல், இவைகளுடன் சேர்ந்திருக்கும் உறுப்பினர் தொகையை ஒப்பிட்டுப் பார்க்கிறேன்; வெட்கப்படுகிறேன்.

*

துயர் துடைக்கும் விதமாகத் தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் K. K. நீலமேகம் அவர்கள், தஞ்சை மாவட்டத்திலே சேர்க்கப்பட்ட உறுப்பினர் தொகையின் அளவுக்கேற்ற பணமும் அனுப்பி, மேற்கொண்டும் பணியைத் துரிதப்படுத்தும்படி நண்பர்களுக்குக் கூறியிருக்கிறார்.

*

அதுபோலவே. தலைமைநிலையத்திலிருந்து நேரிடையாக உறுப்பினர் சீட்டுகள் பெற்றுக்கொண்ட கிளைகள் சிலபல, பணம் அனுப்பிவைத்துள்ளன.

*

மொத்தத்திலே, இது விஷயத்திலே ஆர்வத்தை அதிகமாகக் காட்டிய நண்பர்கள், நான் எதிர்பார்த்ததில் நாற்றில் ஒரு பகுதி அளவுகூட, வெற்றியைப் பெற்றுத் தரவில்லை.

*

தலைமை நிலைய அறிக்கைகள் பல வெளிவந்தன. பொறுப்பாளரின் கடிதங்கள் பலப்பல அனுப்பப்பட்டன. புதுப் புதுப் பொதுக்கூட்டங்கள், தவறாமல் நடைபெறுகின்றன; ஆனால், உறுப்பினர் சேர்க்கும் விஷயம் கவனிக்கப்படவில்லை.

*

நாள் குறித்துவிடுங்கள், உடனே மள மளவென்று காரியம் நடந்தேறிவிடும், என்றீர்கள், சரி என்றேன், ஜூன் 15 என்று நாள் குறித்தேன், நண்பர்களுக்குக் கூறினேன், இயக்க ஏடுகள் தலையங்கங்களைத் தீட்டின, காரியம் முடியவில்லை. இனி என்ன செய்ய?

*

இன்னும் ஒரே ஒரு யோசனை—ஒரே ஒரு திங்கள் தவணை தேவை, என்று நண்பர்கள் கூறுகிறார்கள். இசைகிறேன்—ஆனால் உள்ளத்தில் வேதனையுடன். ஒவ்வொரு முறையும் நான் உங்கள் யோசனைகளை ஏற்றுக் கொள்கிறேன், நம்பிக்கையுடன்—ஆனால் ஒவ்வொரு முறையும்என் மனம்மகிழும்படிகாரியமாற்றாமலேயே இருந்துவிடுகிறீர்கள்—எனினும், இப்போதும் உங்கள் யோசனையை ஏற்றுக்கொள்கிறேன்.

ஜூலை 15—வரை உறுப்பினர்கள் சேர்க்கலாம்.

மேலும், நாள்தர, நான் இசையப்போவதில்லை.

ஜூலை 15க்குள், இந்தக் காரியம் முடிந்தாக வேண்டும்.

மாவட்டச் செயலாளர்கள் இதுவரை பெற்றிருக்கும் வெற்றியைத் தெரிவிக்க வேண்டுகிறேன் — உடனடியாக. பல மாவட்டங்களில், கிளைக் கழகங்கள்,



மாவட்டச் செயலாளரிடம், உறுப்பினர் சேர்த்துத் தந்துவிட்டதாகத் தெரிகிறது.

உடனுக்குடன், அந்தத் தகவலை தலைமை நிலையத்துக்குத் தெரிவிப்பதுடன், சேர்ந்துள்ள தொகையை, மாவட்டச் செயலாளர்கள், அனுப்பி வைக்க வேண்டுகிறேன். மேலும், தாமதப்படுத்துவது, வேண்டுமென்றே, எனக்கு இழைக்கப்படும் கொடுமை என்றே நான் கருதுவேன்.

ஜூலை 15—கடைசி நாள்—உங்கள் ஆர்வம் செயலளவில், எந்த முறையில் உருவாக முடிகிறது; என்பதை உலகு தெரிந்துகொள்ளும் நாள்.

ஜூலை 15 என்பதும் மற்றொரு ஜூன் 15, என்ற போக்கிலே கருதிவிடாதீர்கள்—மிக மிக மனச் சோர்வுடன் இதை எழுதுகிறேன்.

ஜூலை 20ம் தேதி, தேர்தல்களை நடத்தத் திட்டமிட்டிருக்கிறேன்.

எனவே, ஜூலை 15க்குள், உறுப்பினர் சேர்க்கும் பணியை முடித்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன். உடனே முனைந்து பணியாற்றுங்கள். நம்பிக்கையை ஊட்டிவிட்டு, செயலிலே சோர்வைக் காட்டுவது சரியல்ல. உறுப்பினரைச் சேர்த்து, தேர்தல்களை முடித்து, மாவட்டக் கழகங்களையும், பொதுக்குழுவையும் காண வேண்டாமா? அப்போதுதானே, கழகம், எழிலுள்ள உருவத்தைப் பெறும். அந்த உருவம் பெற்றால்தானே ஊராள்வோர், நமது கொள்கையைக் கவனிக்கவும், திட்டங்களை ஆராயவும் முன்வருவர். அந்த நிலை பெற்றால்தானே, நாம் நடத்தத் திட்டமிட்டிருக்கும் அறப்போர் வெற்றிபெறும்! ஏன், நண்பர்களிடம் இதை வலியுறுத்திக் கூறக்கூடாது!! உடனே புறப்படுங்கள், இந்த பொறுப்பான பணி புரிய! ஜூலை 15 கடைசி நாள்!

*

கடந்த மூன்றாண்டுகளாக நாம் கடுமையாக உழைத்திருக்கிறோம்—கஷ்ட நஷ்டங்களைக்கண்டோம்—துப்பாக்கியும் தடியும் கண்டோம் — சிறை கண்டோம்—சீற்றம் கொண்டோரின் சீரழிவான ஏசலைத் தாங்கிக்கொண்டோம் — எல்லாம் எதன்பொருட்டு? உறுப்பினர்கள் சேர்க்கும் காரியத்தைக்கூட ஒழுங்காகவும் திறம்படவும் நம்மாலே நடத்திக் காட்டமுடியவில்லை, என்ற செய்தியை உலகுக்கு அறிவிக்கவா! சிந்தியுங்கள்—சிந்தியுங்கள்—என் நிலைமை எப்படி இருக்கும் என்பதைச் சிந்தியுங்கள். ஆவன செய்யுங்கள்—இன்றே துவக்குங்கள்!

அன்பன்,

அண்ணாத்துரை.

---

5-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால், இதைக்கண்டு, மற்றோர் பகுதியிலுள்ள மனிதர்கள் குமுறுவதேன், கொக்கரிப்பதேன், 'ஒழிப்போம்' என உறுமுவதேன்? இதற்கு ஆதரவாக எல்லா நாடுகளையும் தமது பக்கம் சேர்த்து வைத்துக் கொள்ள முயலுவதேன்?

தமது ஆதிபத்ய ஆசையால்!—என்று, உடனே பதில் தந்துவிடலாம்.

"ஆனால் இந்த ஆதிபத்ய ஆசையைக் காப்பாற்ற ஏன், இவ்வளவு வெறி?"

"இலாபம் இருப்பதால்! பணம் குவிவதால்!"

"எப்படி இலாபம் ஏற்படுகிறது"

"ஆலைகளில் பொருள்களைக் குவிப்பதால்?"

இப்படிப் பதில் கிடைக்கும்.

அமெரிக்கா போன்ற ஆலையரசர்கள் பூமியில் பொருள்கள், ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

உற்பத்தியான பொருள்களை, வெளிநாடுகளில்இறக்குமதிசெய்து, வியாபாரம் செய்யவேண்டியவர்களாகின்றனர்.

அதாவது 'மார்க்கெட்'தேடுகிறார்கள்! இதன் நோக்கம், பணலாபம் தான். இது, முதலாளித்துவ நாடுகளில்!

வல்லரசு நாடுகளைப்போல, ரஷ்யாவும் ஏராளமாக பொருளைப் உற்பத்தி செய்யாமலில்லை. ஆனால் முதலாளித்துவ பூமியில் உற்பத்தி அதிகரிக்கப்படும் நோக்கத்துக்கும் பொதுவுடைமை நாட்டில் அதிரிக்கப்படும் நோக்கத்துக்கும், பெருத்த வித்யாசம் உண்டு.

அங்கே, லாபம்!

இங்கே, தேவை.

லாபத்தை நோக்கமாகக்கொண்ட முதலாளித்துவ நாடுகள், எப்படியாவது அதிகப் பொருள்களை, குவிக்கவேண்டுமெனத் துடிக்கின்றன.

இதனால் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிகின்றனர்—நன்றாக வேலை செய்பவனையே, வேலைக்கு வைத்துக்கொள்கின்றனர்; சிறிது தவறிழைத்தாலும் 'டிஸ்மிஸ்' செய்துவிடுகின்றனர்.

ரஷ்யாவில் ஒரு தொழிலாளி திறமையாக வேலை செய்யவில்லை என்பதற்காக அவனை விரட்டிவிடுவதில்லை. அவன், திறமையுள்ளவனாக ஆவதற்கான பயிற்சிகளைச் சொல்லித் தருகின்றனர். 'டிஸ்மிஸ்' செய்யமாட்டார்கள்.

ஏனெனில், உற்பத்திமட்டுமல்ல, அவர்களுக்கு முக்கியம்; மனிதனும் கூடத்தான்.

* * *

மனிதனை வைத்து, நாட்டைப் பார்க்கிறது, பொதுவுடைமை பூமி.

பணத்தை வைத்து, நாட்டைப் பார்க்கிறது, முதலாளித்துவ பூமி.

வாழப் பிறந்த மனிதனை வாழவைக்கும் கொள்கைகளைக் கண்டு, பண பீடங்கள், அலறுகின்றன. 'எனது எதிரி நம்பர்!' என்று, கர்ஜிக்கின்றன.

இன்பத்தோடு வளரும் பொதுவுடைமைப் பூமியைப் பொசிக்கிட வேண்டுமெனத் துடிக்கின்றன. அணுகுண்டு! கிருமிகள் யுத்தம்!!—இடபடியெல்லாம் குதிக்கின்றன. பொதுவுடைமையை அழிக்கும் ஆர்வத்தில் மனித நாகரீகத்தையே மறந்துவிடுகின்றனர்.

"ஸ்டாலினைக் கொன்றேன்!"—என்று எழுதித் திருப்திப்படுகின்றன.

இத்தகைய வெறி பிடித்த அமெரிக்காவுக்குத்தான், வால் பிடிக்கிறது, நேரு ஆட்சி.

குட்டிக் கதைகளோடு, ஆதரவு தேடுகிறார், ஆச்சாரியார்.

★

# பனி-மலையிலே பருதி

[ நெடுமாறன் ]

இரத்தினங்கள் பதித்த மணிமுடி—வைரம் இழைத்த சிம்மாசனம்—இவைகளெல்லாம் புதிய நூற்றாண்டிலே நாடகத்தில் கண்டு ரசிக்கவேண்டிய அழகுப் பொருள்கள். மேக்—அப் ராஜா மேடையை விட்டு வெளியே வந்தால கேலிப் பொருளாக மதிக்கப்படும் காலத்திலேயும் பிறர் மரியாதை அறியாத மன்னர் பரம்பரை வியப்புக்கிடையே நம்மிடையே இன்றும் இருக்கத்தான் செய்கிறது. எகிப்திலே வரம்புக்குட்படாத முடியாட்சி—இங்கிலாந்திலே வரம்புக்குட்பட்ட மன்னர்— இப்படிப் பட்டியலை கிழக்கிலும் மேற்கிலும் வளர்த்துக்கொண்டே போகலாம். காலத்தை களியாட்டங்களிலே போக்கிவரும் இந்த ராஜாக்கள், காலத்கால் அடித்துக்கொண்டு போகப்படுகிறார்கள், உலகமெங்கும். இந்த அதிசய காலப்போக்கு எழுதுகின்ற காவியந்தான் இன்று நாம் காஷ்மீரத்திலே காண்பது!

அவர்கள்சாதாரணமனிதனுக்குச் சிம்மாசனம் அளிக்க விரும்பவில்லை. பட்டத்தில் ஒருவனை அமர்த்தி அவனுக்கு "பராக்" கூறுவது அநாகரிகம் என்று எண்ணுகிறது. எனவே சென்ற வாரம் காஷ்மீர மக்கள் சபை தங்களை ஆள மன்னன் என்ற பெயரிலே ஒரு சாதாரண மனிதன் இருப்பது நாட்டுக்கு ஒரு சுமை என்று தீர்மானித்தது. அந்த வேண்டாப் பொருளை நீக்கி விடவும் முடிவு செய்துவிட்டது.

காஷ்மீரம் தனிக் கொடியை வைத்துக்கொண்டு, தலைவரைத் தேர்ந்தெடுத்து தனியாட்சி நடத்த முடிவு செய்துவிட்டது. எங்கு காஷ்மீரத்துக்கு இந்தச் 'சுதந்தரம்' கொடுத்தால ஐதராபாத்தும் மற்றவைகளும் காஷ்மீரத்தைப் பின்பற்றி விடுமோ என்று கலங்குகின்றனர் பாரத மாதாவைத் துண்டு போட விரும்பாத பாலர்கள்!

விரைவிலே இமயத்தின் பனிப் பாறைகளில், தனி நாடு சுடர்விட்டுப் பிரகாசிக்கும். காஷ்மீரத்திலே செங்கொடி, பாரதமாதாவின் விரிந்த நெற்றியிலே இரத்தத் துளிகள்!

காஷ்மீரத்தின் முடிவுக்கு இந்தியாவின் பின்னேற்றவாதிகள் முட்டுக்கட்டை போடத் துவங்கிவிட்டார்கள். ஜன சங்கம் ஜூன் 29 அன்று காஷ்மீர தினமாக அனுஷ்டித்து தனது எதிர்ப்பைக் காட்டப்போகிறது. இந்து எழுதுகிறது "காஷ்மீரத்துக்கு இதைவிட அநேக பிரச்னைகள் இருக்கின்றன. இந்த அவசியமான ஆனால் அவசரமற்ற பிரச்னையைப் பின்னர் கவனித்துக் கொள்ளலாம்" என்று!

என்ன எதிர்ப்பு இருந்தாலும் அவைகள் மக்கள் சக்தியின் முன்னே சுக்கு நூறாகத் தகர்ந்து விடும். அந்தப் பனி — மலையிலே விடுதலைப் பருதி கிளம்பிவிட்டான். மக்கள் சக்தியின் வைரிகள் அந்தப் பருதியின் சூட்டிலே உருகி ஓடிவிடுவார்கள். பின்னர் அங்கு குடியாட்சி மலரத்தான் போகிறது.

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி).

கிறோம்—ஏனெனில், நாம். திராவிடநாடு திராவிடருக்கு என்ற இலட்சியத்திலே அவ்வளவு நன்றாக இலயித்திருக்கிறோம். நமக்கெல்லாம் அந்த அரிய இலட்சியத்தை ஊட்டிய பெரியார் தலைமையில், திராவிடர் கழக மாநாடு நடைபெற்றது கண்டு மகிழ்வதுடன், திராவிட விடுதலைப் போர்த்திட்டங்கள் பலவற்றை பெரியார் எடுத்துரைத்தது கண்டு பெருமிதம் கொள்கிறோம். வெளியிட்ட உடனேயே 'இந்து'வுக்கு அடி வயிற்றிலே நெருப்பு போலாகிவிட்டது—அலறுகிறது! இந்தியின் எரிசசலைக்கிளப்பும் திட்டம்சேலம் மாநாட்டிலே பேசப்பட்டது. யாது அந்தத்திட்டம்? இந்தி ஆதிபத்ய ஒழிப்புக்காகவும், வடநாட்டு ஆதிபத்ய ஒழிப்புக்காகவும், டிக்கட் இன்றி ரயிலில் பிரயாணம் செய்வது என்பது, ஒரு திட்டம்! இதைக் கேட்டதும், 'இந்து'வுக்கு ஒரு கலக்கமாகிவிட்டது. திராவிடர் கழக மாநாட்டிலே பேசப்பட்ட இந்தத்திட்டம், தி. மு. க. தோழர்களின் மனத்தை முன்னமேயே தொட்டுவிட்டிருக்கிறது.

கோவில்பட்டியிலே 1950 ஆகஸ்டு 26, 27 தேதிகளில். நடைபெற்ற திருநெல்வேலி மாவட்ட தி. மு. க. மாநாட்டிலே, "நமது மாகாணத்திலிருந்து செல்லும் ரயில்வே வருமானம் டில்லி செல்லாத வழியில் நமது கிளர்ச்சியைத் துவங்குவோம் ரயிலில ஏறினால் டிக்கெட்வாங்க மாட்டோம்!........ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் டிக்கெட்வாங்காத் திட்டத்தைக் கைகொண்டால் கலங்காமற்போகாது இந்திய ஆட்சி,' என்று, நாம் வெளியிட்டோர். அதுமுதல் டிக்கெட் இல்லாப பிரயாணம் குறித்து பேசப்பட்டும், எழுதப்பட்டும் வந்ததும். நண்பர்களுக்கு நினைவிலிருக்கும். நாம்தான் இந்ததிட்டத்தை முதலில் தீட்டினோம், என்று வறட்டு ஜம்பம்அடித்துக் கொள்வதற்காகக் கூறவில்லை, எப்படியோ ஒன்று, இந்தத் திட்டம், நமக்கும் பிடித்தமானது, என்பதைக் குறிப்பிடதான். எழுச்சி பெற்ற திராவிடச் சமுதாயம், இதுவும் இது போன்ற வேறு பலஅறப் போர்த்திட்டங்களையும் ஏற்று, வெற்றிகரமாக நடத்தித்தரும் வாய்ப்புகளைப் பெறுகிறபோது, பயன்படுவதற்காக, நாள்தோறும் வலிவைத்தேடிப்பெற்றுச்சேமித்து வைத்திருக்க வேண்டும்' எந்த நேரத்தில அழைப்பு வருகிறதோ அப்போது தயாரில் இருக்கவேண்டும். திராவிடம் அத்தகைய நிலைமை இன்று எய்தியிருக்கிறது—அவர்களின அயராத பணியால், திராவிடம் விடுதலை பெற்றே தீரும். சேலம் மாநாடு. இதற்கான சூழ்நிலை வளர வழி செய்தது கண்டு மகிழ்கிறோம்.

---

## பழிந்த கொலை வழக்கு

வெறியர்களால் படு கொலை செய்யப்பட்ட நெல்லிக்குப்பம் கழகத் தோழர் மதிது.

கொலை நிகழ்ச்சியையொட்டி. சிலர் மீது போலீசார் வழக்குத் தொடர்ந்திருந்தார்கள். அவர்கள், காங்கிரஸ் கட்சியினராம்.

'தற்காப்புக்காக நடைபெற்றது இது' என்று தீர்ப்பு தரப்பட்டு குற்றஞ் சாட்டப்பட்டோர் விடுதலைசெய்யப்பட்டு விட்டதாக அறிகிறோம். விபரம், பிறகு.



2-ம் பக்கத் தொடர்ச்சி

மற்றும் 30 லட்சம் நீக்ரோக்கள் நிலத்தில் பயிர் விளைப்பவர்களாகவும் ஆடுமாடு வளர்ப்பவர்களாகவும், ஒயின் காய்ச்ச திராட்சைப்பழம் சேர்ப்பவர்களாகவும் இருக்கிறவர்கள் நீக்ரோக்கள். கறுப்பர்களின் உழைப்பு இல்லையென்றால் வெள்ளையரின் நாகரிகம் மாண்டுவிடும்.

டாக்டர் மலான் இளம் வயதிலிருந்தே மதத்தில் ஊறிப்போனவர். அவரை எதிர்க்கட்சியினர். "போயர் மோஸஸ்" என்று அழைப்பது வழக்கம். மலான் ஒரு தினசரிப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்றதும் எழுதிய முதல் தலையங்கம்; "கடவுள் கிருபைக்காக" என்பதுதான். பிறகு மலான் அரசியலில் நுழைந்து உள்நாட்டு மந்திரியானார். அப்பொழுது அவர் செய்த முக்கியமான காரியம் தென்னாப்ரிக்க யூனியனின் அரசியல் சட்டத்தில், "யூனியன் மக்கள் எல்லாம் வல்ல இறைவனின் துணையையும் மேலதிகாரத்தையும் கோருகிறார்கள்" என்பதுதான்.

1933-ல் உலகம் முழுவதும் பொருளாதார சுணக்கம் ஏற்பட்டு தங்கவிலை இறங்கியது. தங்க உற்பத்தி நாடான தென்னாப்ரிக்கா தடுமாறியது. போயர் விவசாயிகள் வேதனைக்குள்ளாயினர். உடனே மலான், அரசாங்கத்தைத் திட்ட ஆரம்பித்தார். போயர் மக்கள் யூதர்களுக்கு விற்கப்படுகின்றனர் என்றார். ஏழே நண்பர்களை வைத்துக்கொண்டு 'தூய்மையான தேசியகட்சி' அமைத்தார். ஹிட்லர் கூட தமது நாஜிகட்சியை ஏழே ஆதரவாளர்களுடன்தான் ஆரம்பித்தார் என்று சொல்லி அவர் திருப்தியடைவார்.

இரண்டாவது உலகயுத்தத்தின் போதுதான் மலான் கட்சியினர் பிரசித்தம் அடைந்தது. அவர்கள் வெளிப்படையாகவே ஹிட்லர் ஆதரவாளராக இருந்தனர். "ஹிட்லரின் மெயின்காம்ப்" புத்தகம் பெருமையுற வழிகாட்டுகிறது. நாஜிகளைப்பற்றியது போன்ற மூரட்டு வெறித்தனத்தில் நாமும் ஆப்ரிக்கர்களை நசுக்க வேண்டும்" என்று மலான் கட்சிப் பிரமுகர் ஒருவர் பேசினார்.

1948-ல் தேர்தல் வந்தது. நீக்ரோக்களை ஒதுக்கிவைத்து பிரிட்டிஷ்காரரைத் தள்ளிவைக்க எங்களுக்கு வோட்டுப் போடுங்கள் என்று மலான் கோஷ்டி பிரசாரம் செய்தது.

5 லட்சம் தென்னாப்ரிக்கர்கள் மலானை எதிர்த்து வோட்டளித்தனர். அப்படி வோட்டளித்தவர்களில் 50 ஆயிரம் பேர் கேப் மாகாணத்தைச் சேர்ந்த கலப்பு ஜாதியினர். ஆனால் தென்னாப்ரிக்க தேர்தல் சட்டம்விசித்திரமானது. கிராமப்புறத் தொகுதிகளுக்குச் சாதகமாகவே சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக மலான் கட்சியினர் அரசாங்கத்தினுள் நுழைய முடிந்தது. மலான் கட்சிக்கு 70 ஸ்தானங்களும் எதிர்க்கட்சிக்கு 65 ஸ்தானங்களும் கிடைத்தன.

மலான் அமைத்த 14 பேர் கொண்ட மந்திரிசபையில் மலான் உட்பட 10 பேர் "ஆப்ரிக்கனர் பிரோடர் பாண்டு" என்ற ரகசியச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இனவெறி பிடித்த சதிச் சங்கம் என்று குற்றஞ் சாட்டி ஜெனரல் சுமட்ஸ்

(அடுத்த பக்கம் பார்க்க)

---

# இலங்கை சர்க்காருக்கு!

"பதவி ஏற்றதும் முதல வேலையாக இலங்கை இந்தியர் பிரச்னையைத்தான் கவனிப்பேன்" என்று அமெரிக்க நாட்டு நியூயார்க்டைம்ஸ் பத்திரிகையின் நிருபருக்குபேட்டி அளிக்கையில் சமீபத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கூறியதாகப் பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது. அதைப் பார்த்ததும் அறிஞர்கள் அனைவருமே ஆனந்தமடைந்தனர். ஆனால் இப்பொழுது இந்தியர் பிரதிநிதியாக திரு. வைத்தியலிங்கம் அவர்களை நியமித்திருப்பதிலிருந்து சந்தேகிக்க இடமளிக்கிறது. தனிப்பட்டமுறையில் திரு. வைத்தியலிங்கம் ஒரு உயரியவராக இருக்கலாம், ஆனால் ஒரு பெரும் பிரச்னைக்கு மத்தியில் அவரது நியமனம் உண்மையிலேயே வருந்தத் தக்கதுதான். இலங்கை இந்தியர்களுக்கு மத்தியில் பிளவையும் பிணக்கையும் உண்டுபண்ண திரு வைத்தியலிங்கத்தை ஒருகருவியாக சர்க்கார் உபயோகித்துக்கொண்டனர் என்பதுதான் நமதெண்ணம். அந்த துரோக வேலைக்கு திரு. வைத்தியலிங்கம் அவர்களும் ஒப்புக்கொண்டுவிட்டார் என்பதைக் கேட்டு வருந்துகிறோம்,

இலங்கை இந்தியர் பிரச்சினையை முதலாவதாகக் கவனிப்பதாகக் கூறிய பிரதமர், உடனடியாக அந்த சமுதாயத்தை நெஞ்சில் குத்துவது போல, ஒருநியமன அங்கத்தினரை ஏற்படுத்திக்கொண்டதிலிருந்து, சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாதவரோ, பிரதமர்என்று சந்தேகிக்கிறோம். சிறுபான்மையினர்களில் சிறந்த சமுதாயமாக இன்று இலங்கையில் இருப்பது இலங்கை இந்தியர் சமுதாயம்தான். அந்த சமுதாயத்தின் சிறந்த பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக இருப்பது இலங்கை இந்திய காங்கிரஸ்தான். இதை இலங்கை அரசாங்கமும், ஆட்சியின் அதிபர்களும் அறிவர். அப்படி இருந்தும் அவர்களின் அறப்போர் நடவடிக்கையை அலட்சியப்படுத்துவதுபோல இன்று ஆட்சியினர் நடந்துகொண்டதைப் பார்க்கும்போது ஆச்சரியமும் ஆத்திரமும்தான் ஏற்படுகின்றது!

உண்மையாகவே பிரதமருக்கு நல்லெண்ணமிருப்பின் அதைநிறைவேற்ற இது ஒரு நல்ல சந்தர்ப்பம். உள்நாட்டிலாகாவிடம் விடப்பட்டிருந்த பிரஜாப்பதிவு இலாக்காவை இன்று பிரதமரே எடுத்துக்கொண்டார். இனி அவர் நினைக்கிறபடி நல்முறையிலே தனது மேற்பார்வையிலேயே பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் முடிவு கட்டலாம்! இனியும் தட்டிக்கழிப்பு வேலையும் தற்பெருமைப் பேச்சும் நடத்திக் கொண்டிருந்தால் நாடு நகைக்கும்! நல்லவர்கள் வெறுப்படைபவர்! நாகரீக நாடுகள் நையாண்டி செய்யும்! ஆகையால் இவைகளையெல்லாம் மீண்டும் தனியாக ஆலோசனை செய்து, அமைச்சர்களின் அதிபரான திரு. டட்லி அவர்கள் அறிவு விளக்கம்பெற்று அன்பு முடிவு செய்து அறிஞர்கள் பலரின் ஆதரவு பெற்று அழியாப்புகழடைய மீண்டும் பணிவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

"நவஜீவன்"

பிரதம மந்திரியாக இருந்தபொழுது தடை செய்திருக்கிறார். மந்திரி சபையில் மலானின் மனைவியும் ஒரு மந்திரி.

கறுப்பர்களை நசுக்கும் திட்டத்திற்குத்தான் மலான் அரசாங்கம் இன ஒதுக்கல் என்ற பெயரைக் கொடுத்திருக்கிறது. அனுமதிச் சீட்டு இல்லாததற்காக வருடம் ஒன்றுக்கு ஒரு லட்சம் நீக்ரோக்கள் சிறையில் தள்ளப்படுகின்றனர்.

ஜோகன்ஸ்பர்க்கில் 60 வயது வெளுப்புத் தொழிலாளி ஒருத்தி இருக்கிறாள். அவள் தினந்தோறும் பொசுக்கும் வெய்யலில் நடந்து சென்று துணிகளை எஜமானி அம்மாவுக்குக் கொடுக்கவேண்டும். ஏனெனில் வெள்ளையர் பஸ்களில் ஏற அவளுக்கு உரிமையில்லை.

மலானின் 'புதிய ஜெருசலத்தில்' "கறுப்பு" மனிதன் உழைக்க வேண்டும்; வோட்டளிக்க முடியாது. அவன் வரிசெலுத்துகிறான்; ஆனால் நீக்ரோ படிக்க அரசாங்க பள்ளிக்கூடங்களே கிடையாது. நீக்ரோ நோய்வாய்ப்பட்டு வெள்ளை டாக்டரிடம் சென்றால் வெளியே பலமணிநேரம் காத்திருக்கவேண்டும்; அல்லது கொல்லைப்புறமாகச் சென்று பல்லைக் காட்டி நிற்கவேண்டும்.

தங்கள் நிலைமையை அபிவிருத்தி செய்துகொள்ள மார்க்கமில்லாத நீக்ரோக்கள் குடியில் மூழ்கிக் கிடக்கிறார்கள். கொலையும், கொள்ளையும், குற்றங்களும் மலிந்துவிட்டன. இரண்டு நாளைக்கு சராசரி மூன்று கொலைகள் நடைபெறுகின்றன.

இந்தக் குற்றங்களுக்கு மலான் கண்டுள்ள சுலபமான பரிகாரம் சிறைக் கூடங்களை அதிகப்படுத்துதல். மலானுக்கு முன்பு ஆட்சியில் இருந்து காலஞ்சென்ற சுமட்சும் மலானும் பக்கத்து பக்கத்து வீட்டுக்காரர்கள். ஆனால் பரம விரோதிகள். சுமட்ஸ் சர்வ தேசியவாதி. இரண்டுமுறை அவர் ஜனநாயகத்தின் பேரால் ஜெர்மனியின் மீது யுத்த பிரகடனம் செய்திருக்கிறார். ஆனால் மலானோ கெய்சரையும் நாஜிகளையும் போற்றியவர். ஹிட்லரே யுத்தத்தில் ஜெயிக்கவேண்டும் என்று பொது மேடையில் அறிவித்தவர். சுமட்சின் வாரிசாக இப்பொழுது பார்லிமெண்டில் மலானுக்கு எதிர்ப்பு செய்கிறவர் ஸ்ட்ராஸ் என்பவர். பார்லிமெண்டுக்கு வெளியே எதிர்க் கட்சித் தலைவராக இருப்பவர் 'டார்ச் கமாண்டோ' ஸ்தாபனத்தின் தலைவர் மலான். இவர் பிரதம மந்திரி மலானுக்கு நெருங்கிய உறவினர். 1 லக்ஷத்து 75 ஆயிரம் மாஜி வீரர்களை ஒன்று திரட்டியிருப்பவர் இவர்.

அரசாங்க எதிர்க்கட்சிகளுக்குப் பணபலமளிப்பவர் தென்னாப்ரிக்காவிலேயே பெரிய பணக்காரரான சர் ஏர்னஸ்ட் ஓப்பன் ஹீமர். அவர் வைரச் சுரங்கங்கள் பலவற்றுக்குச் சொந்தக்காரர் என்பதுடன் ரயில்வேக்கள், பத்திரிகைகள் முதலியனவும் அவருடைய ஆதிக்கத்தில் இருக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர்களோ அல்லது தொழில் முதலாளிகளோ நிறபேதம் அடியோடு ஒழியவேண்டும் என்று கருதவில்லை. நீக்ரோக்கள் குறைந்த ஊதியத்தில் வேலைசெய்ய வேண்டும் என்பதே அவர்களுடைய விருப்பம். எதிர்க் கட்சித் தலைவர் ஸ்ட்ராசும், டார்ச் கமாண்டோ ஸ்தாபன மலானும் பிரதமர் மலானைப்போன்றே போயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

✲

## அந்நிய 'முதலை'கள்!

தேசப் பிரிவினைக்குப் பிறகு, 18.26 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட முலதனமுள்ள 22 வெளிநாட்டு ஸ்தாபனங்கள் இந்தியாவில் ஸ்தாபிதமாகியிருக்கின்றன. அவைகளில் 20 ஸ்தாபனங்கள் பிரிட்டனிலிருந்தும் ஒரு ஸ்தாபனம் அமெரிக்காவிலிருந்தும் ஒரு ஸ்தாபனம் ஸ்விட்சர்லாந்திலிருந்தும் பதிவானவை. இத்தகவலை நிதிமந்திரி தேஷ்முக பார்லிமெண்ட் சபையில் ஏ. கே. கோபாலன் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் ஜூன் 11-ந்தேதி தெரிவித்தார்.

பிரிட்டனைச் சேர்ந்த ஸ்தாபனங்களுக்கு 152.5 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனமாகும். அதில் 10.48 கோடி ரூபாய் செலுத்தப்பட்ட மூலதனமாகும். மேற்படி ஸ்தாபனங்கள் மருந்துச் சரக்குகள் ரசாயனங்கள், பயபுகள், சுரங்க வேலை, கப்பல்வேலை, மின்சாரசாமான் வர்த்தகம், பிரசுர வெளியீடு, மானேஜிங் ஏஜென்ஸி, தோட்ட வேலை, சர்வே ஆகியதொழில்களில் ஈடுபட்டிருக்கின்றன. 3 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனமும் 2 கோடி ரூபாய் செலுத்தப்பட்ட மூலதனமும் உள்ள அமெரிக்க ஸ்தாபனம் ஒன்று இந்தியாவில் பதிவாகியிருக்கிறது. அது டைப்ரைட்டர்கள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கிறது. 1½ லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் உள்ள ஸ்விஸ் கம்பெனியொன்று இங்கு இணைக்கப்பட்டு, ஷிப்பிங் ஏஜெண்ட்வேலை பார்த்து வருகிறது.

## கலைமன்ற வெளியீடுகள்

சி. என்: அண்ணாதுரை

| | |
|---|---|
| புராண மதங்கள் | 1—0—0 |
| தேன் துளிகள் | 1—0—0 |
| அண்ணாதுரை (தொகுப்பு நூல்) | 1—0—0 |
| ஊடுருவி | |
| கலை—பஞ்சு (1-ம்பாகம்) | 1—0—0 |
| உலகைத திருத்திய உத்தமர்கள் | 1—0—0 |
| ஒளி விளக்குகள் (2-ம் பாகம்) | 1—0—0 |
| வீர பங்கை ஜோன் | 1—0—0 |
| மக்கள் உரிமை (இங்கர் சால்) | 1—0—0 |
| ரோமியோ ஜூலியத் | 1—0—0 |
| நா. நா. (எமிலி ஜோலா) | 1—0—0 |
| ரன்புடன் | 0—8—0 |
| விருதை ந. ராமசாமி | |
| மலர்புரி ராணி | 1—0—0 |
| வழுக்கி விழுந்தவள் | 1—0—0 |

வியாபாரிகளுக்கு கழிவு 30% செலவு வேறு. கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

விற்பனை நிலையம்
எம். எஸ். ராமுலு கம்பெனி.
286. சைனா பஜார்
சென்னை 1.

விபரங்களுக்கு:
ஸ்ரீ மகள் கம்பெனி
122. வராதா முத்தியப்பன் தெரு
P. O Box No. 275, சென்னை-1

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at 'Dravidanadu" Press.
95, Tirukkachinambi St., Kancheepuram.



Regd. No. M 3942

# திராவிட நாடு

விலை அணா 2
சிலோன் 15 சதம்

மலர் 10 | 29—6—52 | இதழ் 52

8 JUL 1952

# 'ராஜாஜி' விஜயம்

திவி.

★ ★

ரங்காச்சாரி:- நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர்.

சிற்றம்பலம்:- கமிட்டி காரியதரிசி.

கங்காதரமுதலியார்:- நகர செல்வவான்.

மாணிக்கவாசகம்-: முதலியார் மகன்.

சோணசலம்-: முதலியாரின் கணக்கப் பிள்ளை.

இன்னும்

காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள்:— ஆகிய இவர்களுக்குள்ளே நடைபெறும் கற்பனை உரையாடல் கீழே தரப்பட்டுள்ளது, படியுங்கள்.

ரங்காச்சாரி:- சிற்றம்பலம், வாடாப்பா—ஏது, கண்ணிலேயே பட்ரதில்லே.

சிற்றம்பலம்:- இப்போ, எப்படிங்க நான் தெரியும் உங்க கண்ணுக்கு

ர:- என்னடா அது; வர்ரபோதே கோபமா வர்ராப்போலிருக்கு.

சி:- எனக்கென்னங்க கோபம்—அப்படியே இருந்தாலும், அது யாரை என்னசெஞ்சிடும்—ஹூம், ஏன் கூப்பிட்டனுப்பிச்சிங்க?

ர:- வீட்டிலே ஏதேனும் மனஸ்தாபமோடா.

சி:- உம்....அதெல்லாம் ஒண்ணுமில்லிங்க. என்ன விஷயமாய் கூப்பிட்டிங்க. அதைச் சொல்லுங்க.,

ர:- டவுன் கமிட்டியைக்கூட்டினு தேவலே..........

சி:- கூட்டி.........

ர:- ஒரு தீர்மானம் போடணும்.

சி:- என்னன்னு.

ர:- நம்ம ஊருக்கு நம்ம ராஜாஜி விஜயம் செய்யணும்னு வேண்டி....

சி:- நம்ம ஊருக்கு இப்ப வேண்டாங்க.

ர:- என்னடா அது, அப்படிச் சொல்றே.

சி:- முதல்லே, அவர் போற ஊருக்கெல்லாம் போயிட்டு வரட்டுங்க.

ர:- ஏன்?

சி:- என்னங்க, நீங்களே அப்படிச் சொல்றிங்க......

ர:- சிற்றம்பலம், வேடிக்கைபேசறியா என்ன.........

சி:- வேடிக்கை யில்லிங்க. அவர் முதல்லே, பாவிகள் நிறைய உள்ள ஊர்களுக்குப் போய் வரட்டும்—நம்ம ஊரிலே அப்படி அதிகம் இருக்கமாட்டாங்க—அதுவும் நீங்க இருக்கிற ஊர்.........

ர:- போதுண்டா—குறும்பு, என்ன இன்னைக்கு ராத்திரி கூட்டிரியா.

சி;- அதெப்படிங்க இன்னைக்கே முடியும்—இரண்டு நாளாவது பிடிக்கும்!

ர:-ஏன்?

சி:- ஏனுப், கமிட்டி ஆபீசைக் கூட்டிச சுத்தம் செய்யவே இரண்டு நாள் போதாதே! கவுண்டர் தோற்றானு சேதி கிடைச்சதிலிருந்து யார் அந்தப்பக்கம் எட்டிப் பார்த்தாங்க.

ர:- அப்ப நாளைக்காவது......

சி:- ஆகட்டுங்க...ஆனால் ராஜாஜியைகூட்டியாந்து என்ன செய்றது?

ர:- சிற்றம்பலம், வந்ததிலிருந்து நீ ஒரு மாதிரியாகத்தானே பேசிண்டு வர்ரே—நான் பார்த்திண்டிருக்கேன. நம்ம ராஜாஜி வந்தது தான் சரின்னு உங்க காமராஜரே ஒத்திண்டிருக்கார்.

சி:- அவர் ஒத்திண்டிருக்கட்டும்—ஒதுங்கித்தானிருக்கட்டும், இல்லே பதுங்கித்தான் பாயட்டும்—ஏங்க, வீண்கதை. ராஜாஜி வந்ததும், ஜனங்ககிட்டே என்ன சொறது.

ர:- ஆச்சாரியார் சாதாரண பனிதரல்ல, அவதார புருஷர், தேவாம்சம் பொருந்தியவர், மகான், ராஜரிஷி, சனாதனத்தை நிலைநாட்ட வந்தவர், சன்மார்க்க குரு—அவரே, நமக்குத் தலைவராக வந்துட்டார், இனி பயமில்லை, ஜெயமுண்டுன்னு சொல்லணும்.

சி:- யார்கிட்டே, இதையெல்லாம் சொல்லணும்னு சொல்றிங்க......

ர:- ஜனங்களண்டே.........

சி:- உம், அவங்ககிட்டே போய். இதைச் சொல்லி என்ன பண்றது கேட்டு சிரிப்பாங்க. நீங்க எனக்குச் சொல்லுங்க. நான் உபகாரியதரிசி

உத்திராபதியிட்டே சொல்றேன். உத்திராபதி, காரியக்கமிட்டி அங்கத்தினர் கனகசபைக்கு சொல்லட்டும். இது நம்ம கட்சி சங்கதிங்க. நம்ம கட்சியிலே 152 பேர் வந்ததும், ஒருத்தருக்குகூட தலைமை வகிக்க யோக்கியதையில்லே. அதனால் அவரைக் கூட்டிபாக்தோம்.

ந:- சிற்றம்பலம், நீயா இப்படிப் பேசரே.........

சி:- ஜனங்க எப்படிப் பேசராங்க என்கிறதைப் பேசிக் காட்டரேன்.

ந:- அப்போ ராஜாஜி அறிவாளியில்லியா.

சி:- அறிவாளிங்கதான் ஆளனும்னு இந்தியாவுக்கு சட்டம் எழுதியா வைச்சிருக்கோம்.

ந:- அவர் திறமையைக்கூட ஒத்துக்கமாட்டேபோலிருக்கு

சி:- சர்வாதிகார ஆட்சியா நடக்குது—இல்லீங்களே — ஜனநாயக சர்க்கார்தான்னு எத்தனை தடவை சொல்லியிருப்போம்.

ந:- ஜனநாயக ஆட்சின்னு......

சி:-மக்கள் பிரதிநிதிகள்தான் ஆளனும்னு ஜனங்க கேக்கறாங்க......ராஜாஜி, கவர்னர் நியமனந்தானே!

ந:- நம்ம ராஜாஜி மகான்—தெரியுமோன்னே......

சி:- மகானாக இருக்கட்டும், மகாரிஷியாகக்கூட இருக்கட்டும், ஜனநாயகத்திற்கு விரோதந்தானுங்களே, அவர் பதவிக்கு வந்தது.

ந:- ஏது, எதிர்க்கட்சி, வேண்டாம்போலிருக்கு நீயே எதிர்க்கட்சி நடத்துவேபோலிருக்கு ஜனங்க மறந்தாகூட, நீ மறக்கமாட்டேபோலிருக்கு — ராஜாஜி எப்படியோ வந்தாச்சு—மந்திரிசபை அமைச்சாச்சு. நாம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவா — அவரோ, காங்கிரஸ் மந்திரிசபையின் தலைவர். நம்ம கடமையைச் செய்வோம்.

சி:- கடமைக்கு என்னங்க குறைச்சல் — நிறைய இருக்கு — கமிட்டியைக் கூட்டரேன்.

☆

ந:- கமிட்டி அங்கத்தினர்களே, எல்லோருக்கும் நமஸ்காரம். நாம் இப்போ கூடி விவாதிப்பதன் நோக்கம்—நம்ம ஊரிலே, ஸ்ரீமான் கங்காதர முதலியார் அவர்களால் கட்டப்பட்டுள்ள பார்க்கைத் திறந்து வைப்பதன் மூலம் நமக்கு ராஜாஜியின் தரிசனம் கிடைக்க ஒரு சந்தர்ப்பம் இருப்பது பற்றி யோசித்து, அந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல், தேர்தலுக்குப் பின்னால் ஏதும் செய்யாதிருக்கும் காங்கிரஸ் கமிட்டிக்கு புதுஜீவன் ஊட்டும் விதமாக ஒரு மாபெரும் கூட்டம் நடத்தலாம் என்பதாகும். இது சம்பந்தமான கமிட்டி அங்கத்தினர்களின் அபிப்ராயங்களைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அங். 1:- ஆச்சாரியார் விஜயம் அவசியம் நம்ம ஊருக்கு தேவை. போனவாரம், கம்யூனிஸ்ட் கூட்டம் நடந்தது. அதுக்குப் பதில் கூட்டம் போட்டாகனும்.

அங் 2:- கருப்புசட்டை கூட்டங்கள் தொடர்ந்து நடக்குது, ஊரிலே, ஆனால் நாம் கூட்டம் போடுவதே கிடையாது

அங் 3:- அங்கத்தினர் நண்பர் இருவர் பேசியதை ஆமோதிக்கிறேன். ஆனால் கூட்டம் போட்டு என்ன பேசுவது என்று தெரிய வேண்டாமா?

ந:— ராஜாஜியின் பெருமைகளைச் சொல்வதற்கே நாலு கூட்டங்கள் போடலாமே!

அங்: 3— ராஜாஜி வந்து அப்படி என்ன செய்துட்டார்?

ந:— கவிழ்ந்திருந்த காங்கிரஸ்காரரோட, மானத்தைக் காப்பாற்றினார். காங்கிரஸ் மந்திரி சபையே அமைக்க முடியாதுன்னு, ஊரெல்லாம் திரிஞ்சு, எதிர்க்கட்சிக்காரா பேசிண்டிருந்தா — அவா வாயிலே மண்ணைப் போடுவது போல, காங்கிரஸ் மந்திரிசபை அமைச்சார் ராஜாஜி.

[அவர் பக்கத்திலிருந்த காரியதரிசி சிற்றம்பலத்திற்கு பலத்த கோபம் வந்து விட்டது]

சி:— காங்கிரஸ் மந்திரிசபையா அமைச்சார்?

ந:— பின்னே......

சி:— சும்மாயிருங்க. மந்திரிசபை அமைச்சார்னு சொல்லுங்க—ஒத்துக்குவோம். காங்கிரஸ் மந்திரி சபைன்னு இன்னொரு தடவை சொல்லாதீங்க.

ந:— ஏண்டாப்பா—

சி:— தலைவர் ஐயா, மரியாதையாகவே பேசுங்க — இது கமிட்டிக் கூட்டம் — உங்களைத்தான் கேக்கரேன். மாணிக்கவேல் நாய்க்கர் காங்கிரஸ்காரரா? அவர் மந்திரி சபையிலிருக்கிறாரே!

க:— அவர்தான் காங்கிரசோடே ஒத்துழைப்பதாய் ஒத்துண்டிருக்கிறாரே!

சி:— போமய்யா, போம்—இந்த மாதிரி பதவியைக் காட்டி, பேராசைக்காரர்களை இழுக்க, மகான் வேண்டாங்க—எங்க வீட்டுப்பயல் கூட எதிர்வீட்டு நாய்க்கு எலும்புத்துண்டைப் போட்டு, தான் சொல்றபடியெல்லாம் ஆடவைக்கிறான்.

ந:—மத்தவா செய்யமுடியாததை ........

சி:— பழையபடியும் அதையே திருப்பிச் சொல்றீங்களே, ஆச்சாரியார் அசகாய சூரரென்றால், ஒரு ஜீவாவை காங்கிரஸ்காரராக்கியிருக்கலாம், பாராட்டலாம் — எண்ணைக்கு எவன்கூப்பிடுவான்னு, வாசலோரம் நிற்கிறவங்களைக் கூட்டிவந்துவிடுவது யாரால் முடியாது.

அங் 4:— சாக்கடைக்குமேல் சாக்கடை!

அங் 5:— துடைப்பக்கட்டை, சாக்கடையை சுத்தமும் செய்யும்— மேலும் சாக்கடையைச் சேர்த்தாலும் சேர்க்கும்!

ந:- நீங்க போற போக்கு எனக்குப் புரியல்லே.

அங் 6:- கமிட்டித் தலைவரும், காரியதரிசியுமே இப்படி சண்டை போட்டுண்டா, கமிட்டிக் கூட்டம் என்னவாகிறது?

ந:- கு......கு......கொஞ்சம் எல்லோரும் சத்தம் போடாமலிருங்கோ, சிற்றம்பலத்திற்கு சித்தம் சரியில்லேபோலிருக்கு.

சி:- ஓய், யாருக்கு சித்தம் சரியில்லே. உமக்கு உடம்புக்கு சரியில்லேபோலிருக்கு.

அங் 3:- வாபஸ் வாங்கவேண்டும் தலைவர்.

ந:- எதை?

அங்:- சித்தம் சரியில்லேயென்று சொன்னதை.

ந:- ஏன்?

அங் 7:- தலைவர் வாபஸ்வாங்காத

(11-ம் பக்கம் பார்க்க)



# நகரசபை—நல்வாழ்வுக்கு!

(அண்ணல்)

'நகரங்களில், மக்கள் தொகை, வர வர அதிகமாகிறது''—சென்னையில் கடந்த வாரம் நடைபெற்ற நகர சபைத் தலைவர்கள் மாநாட்டில் பேசிய சென்னை சுகாதார அமைச்சர் ஷெட்டி, புள்ளி விபரத்தோடு அறிவித்துள்ளார், இதனை.

மேற்படி மாநாட்டிலே, முதலமைச்சர், நிதி அமைச்சர், பொதுவுறவு இலாகா அமைச்சர், சுகாதார அமைச்சர், கல்வி அமைச்சர் ஆகிய அத்தனை பேரும் கலந்து கொண்டு, நகர சபைகளின் நிலை குறித்து, தத்தமது கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர்.

நகரங்கள், இன்று, நாகரிக உலகின் சின்னங்களாகிவிட்டன. புதுமைகள் தாலாட்ட, நவீன வசதிகள் இன்பம் தர, வாழ்க்கையை மிகலளிதமாக நடத்த, ஏதுவாக இருப்பதால் நகரங்களை நோக்கி, மக்கள் குடியேறுகிறார்கள்.

அதுவும், இங்கே, நகர் நோக்குவோரின்தொகையைக் கவனித்தால், நமது மக்களின் உள்ளங்களை நகர வாழ்க்கை எவ்வளவு கவர்ந்திருக்கிறதென்பதை உணரலாம்.

1941—1951—இந்தப் பத்து ஆண்டுகளில், நகரப் புறங்களில் மக்கள் தொகை 42·8 சதவிகிதம் அதிகமாகியிருக்கும் ஜனத்தொகையின் மொத்த விகிதம் 14·8 சதவிகிதம் தான்! ஆனால், நகரங்களில் மட்டும் அதிகமாயிருப்பது, 42·8 சதவிகிதம்! கிராமப் பகுதிகளைவிட, நகரங்களில், மக்கள் தொகை அதிகரித்திருப்பதன் காரணம், நகரத்தின் மனோரம்யமான வாழ்க்கைதான். ஆனால், இந்த மனோகரமான வாழ்வை அனுபவிப்போர் தொகை எவ்வளவு தெரியுமோ? நாட்டில் வாழும் மொத்த மக்களில் 12 சதவிகிதம் பேர்தான் நகரங்களிலும் பட்டணங்களிலும் வாழ்கிறார்கள். நவீன இன்பங்களைத் துய்க்கும், இந்த நகரத்தார், சமுதாய விளக்கின் தூண்டுகோல் போல விளங்குகிறார்கள். இங்கு மட்டும் என்றல்ல; அகில உலகிலும், நகரங்களின் வாழ்க்கைத் தரமே, அந்த நாட்டின் உயர்வுச் சின்னமாகக் கருதப்பட்டு வருகிறது.

கிராம மக்கள் அடையப் பெறாத இன்பத்தை இவர்கள் மட்டும் அடைவதா? நகரமேன்—நாட்டுபுறமேன்?—இவ்விதக் கேள்விகள், சிலருக்கு எழும்பலாம் அழுக்குடையோடு, ரிஜிஸ்தர் ஆபீசுக்கு வரும் விவசாயி, ஓட்டலில் 'சர்வ்' செய்பவன் ஒய்யார உடை அணிந்து உலவுவதைக் காணும்போது, உறுமத்தான் செய்வார். உறுமாவிட்டாலும், உள்ளத்தில், 'இவனைப் பார். எவ்வளவு ஜோராயிருக்கிறான். நான் உழைக்கிறேன்—என்றால் ஏன் இப்படி இருக்க முடியவில்லை' என்று, உள்ளத்தால், நினைக்காமலிரார். மின்சார விளக்கும், மாடிக் கட்டிடங்களும், பூங்காவும், வானொலியும், சினிமாவும், சிங்கார வாழ்வும் — கிராம மக்களின் ஆவலைத் தூண்டிவிடக்கூடியவைதான். அதன் விளைவாக, நகர மக்கள் தொகை, அதிகரிக்கவும் செய்கிறது. கிராமத்தில் உழுது பயிரிட்டு, வாழ்ந்தவன், ஒருசில ரூபாய்களோடு பட்டணத்துக்கு வந்து, வேலைதேடி அலைந்து, மடியிலிருப்பது கரைந்ததும், பட்டினி கிடந்து, பசி பொறுக்காத நிலை பிறந்ததும், மூட்டை தூக்கியோ, முதுகை வளைத்தோ, 'காசு' தேடுகிறான்! அதுவும் கைகூடாவிடில் கள்ளனாகிறான்! ரோடு ஓரத்தில் அவனது இரவுக்கால 'மாளிகை' உருவாகிறது! இன்னும் அவனோடு 'ஜோடி' சேர்ந்தால், குடிசை எழும்புகிறது!! குடும்பங்கள் அதிகமாகின்றன!! இது, ஓர் பக்கம்.

படித்தால், பயன்பெற எண்ணி, 'உத்யோகம்' பெற்று உலவும் மத்யதர வர்க்கம்—மற்றோர் பகுதியில். ஒண்டுக் குடித்தனம்—இரண்டு அறைகள் வாழ்வு — மாடி 'ரூம்'— இவ்விதம்! இவர்களும் வாழ்கிறார்கள், அல்ல! அல்ல!! வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பரம்பரைச் சொத்து, பலசரக்கு மளிகை, பலமான மாளிகைகள் பல தொழிலைத் ஆதிக்கப், வாணிபம், வளமான வாழ்வு, வாடகை வருமானம் — சுகபோக வாழ்வு.

இது, இன்னொரு பக்கம்.

மூன்று ரகம்—ஏராளமான கிளைகள் இவைகளிலே உண்டு — எனினும், இவர்கள் யாவரும் மனிதர்கள்! வாழ்பவர்கள்! வாழவும் வேண்டியவர்கள்!!

ரிக்ஷா இழுப்போன், குதிரை வண்டி மூலம் குடும்பத்தை நடத்துபவன், மூட்டை தூக்கி, ஆலைக்கு உழைப்பைத் தருபவன்—இவ்விதம் அன்றாடக் காய்ச்சிகள்! மாத முதல் நாள், கணக்குப்படி சம்பளம் பெற்று, வாடகை வீட்டுக்கு இவ்வளவு, வண்ணானுக்கு இது, அரிசிக்கு இத்தனை ரூபாய், மளிகைப் பாக்கி தரவேணும், பள்ளிக்கூடத்துப் பையன் பட்டியல் இது—இவ்விதம் மாதம் நோக்கி வாழ்வோர்!

இந்த இரண்டிலும் இல்லாது; இன்பம்! எக்களிப்பு! மோகனம்! கார் பயணம்! கவலையில்லா வாழ்வு பெற்று டெலிபோனும் தாசும், பணப் பெட்டியும் கணக்கேடுமாக இருப்போர்!

இவ்வளவு ரக மக்களும், நகரப் புறங்களிலே, உலவுகிறார்கள். இத்தனை வகையினரும் வாழும் இடம் தான் பட்டணம்.

இந்தப் பட்டணத்தில் வாழ்வோருக்கான, குடிநீர், வைத்ய வசதி, சுகாதாரப் பயன், கல்வி அறிவு, ஆகியவைகளைச் செய்து தரும் நிலையிலும் பொறுப்பிலும் இருப்பவை— நகர சபைகள்.

குக்கிராமத்தில் ஆலமரத்தடியிலோ, குளக்கரையிலோ நான்கு பேர் கூடிப் பேசிவிட்டால் நல்லது கெட்டது, உருவாகிவிடும்! கிராமக்


## 'திராவிடன்'
## முகவரி மாற்றம்

16, ரிலையன்ஸ் ரைஸ்மில் தெரு,
(வால்டாக்ஸ் ரோட் போஸ்ட்)
(ரீகல் டாக்கீஸ் அருகில்)
சென்னை—1.

என் வி நடராசன் அவர்களுக்கு கடிதம் எழுதுவோரும் மேற்கண்ட விலாசத்திற்கே எழுதவும்.

காரிடங்களும், வரையறுக்கப்பட்டு விடும்!

ஆனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழும் — வாழ வந்து குவியும்—நகரங்களைப் பரிபாலிக்க, பஞ்சாயத்து போர்டுகளும் நகர சபைகளும், இருக்கின்றன—தேவையாகவும் ஆகிவிட்டன.

நகரத்துக்கும் — கிராமத்துக்குமுள்ள பேதாபேதப்பிரசினை, மிகப் பெரியது! ஆனால், அசட்டைசெய்து விடக் கூடியதுமல்ல. அது தனி விஷயம்.

இன்று சென்னைமாநிலத்திலுள்ள 98 நகர சபைகளில், முன் குறிப்பிட்ட மூன்று ரகத்தவர்களில், வதைபடும் இரண்டு வகையினரும் போதிய வசதிகளைப் பெறுகிறார்களா, என்றால், இல்லையென்றுதான் கூறவேண்டும்.

நகர சபைகள், இந்தக் காரியங்களுக்கென, நகரத்தில் வாழும் மக்களிடமிருந்து, வரி வசூலிக்கிறார்கள்.

ஆனால் இந்த வரியின் மூலம் வரும் பணம், நகர மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை. சுகாதார வசதியில் நமது நகரங்கள் மிகவும் தாழ்ந்தேயிருக்கின்றன!—என்கிறார், சுகாதார அமைச்சர். "இன்னும் நிறையச் செய்யத்தான் வேண்டும்" எனச் செப்புகிறார், முதலமைச்சர். "கல்வி பரவுதல் வேண்டும்" என்கிறார், கல்வி அமைச்சர். "சேரிகள் செப்பனிடப்பட வேண்டும், முதலில்" என்கிறார், நிதி அமைச்சர்.

மேற்படி நகரசபைத்தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளும் சரி, அமைச்சர்களும் சரி, நகரங்களுக்கு இன்னும் போதிய வசதிகள் செய்யப்பட வேண்டுமென்பதை மறுக்கவில்லை.

ஆனால், இவ்வித வசதிகளைச் செய்யத்தர 'பணம் வேண்டுமே—என்செய்வது?' என்பதிலேதான், ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள் — ஆத்திரத்தையும் அதிருப்தியையும் கூடத் தெரிவித்திருக்கிறார்கள்.

"போதிய அதிகாரம் நகரசபைத் தலைவருக்குவேண்டும்" என்று மாநாட்டின் வரவேற்புத்தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். அதோடு, சர்க்கார் ஒருதலைப்பட்சமாக நடப்பதாகவும், நகரசபைக்கு வருமானம் வரும் இனங்களைப் பறித்துக்கொள்வதாகவும் குறைபட்டிருக்கிறார்.

இந்தக் குறைகளைக் கேட்ட, பஜகோவிந்தப் பிரசங்கியார், "இதையெல்லாம் சொல்லத்தான் என்னை அழைத்தீர்களோ?" என்று ஆத்திரமாகக் கேட்டுவிட்டு, "நீங்கள் குறைகளைத் தீர்க்கப்பணம் வேண்டாமோ?" என்று, கோபத்தோடு கேட்டிருக்கிறார்.

நகரசபைகள் கவனிக்க வேண்டிய பொறுப்புகள் அதிகம். ஆனால், பணமோ இல்லை! பணம் வரும் வாய்க்கால்களைச் சர்க்கார் வைத்திருக்கிறது—இது, 'சேர்மன்களின்' குற்றச்சாட்டு.

இதற்கு முதலமைச்சரின் பதில், சீற்றம்! கோபம்!!

நகரமக்களில், கீழ் பட்டோரும், மத்தியதர மக்களும் மிகமிகச் சிரமப்படுகிறார்கள். தண்ணீர்க்குழாய்ச் சண்டை! நாற்றமடிக்கும் சாக்கடை! பன்றியும் கொசுக்களும் கும்மாளமிடும் சேரிகள்! நகரம்—அங்கே, 'நரகமாக' இருக்கிறது.

இந்த மக்களுக்கான சகலவித வசதிகளும், செய்து தரப்படவேண்டும். சென்னையை எடுத்துக்கொண்டால் மாமபலம் போவில்லை, சிந்தாதிரிப்பேட்டை! மதுரையில், 'எக்ஸ்டென்ஷனை'ப்போல இல்லை, பொன்னகரம்!!

வாழத் துடிக்கும் இந்த இரண்டு ரகமக்களும், நாகரிக இன்பங்களைத் துய்க்க முடியவில்லை. தவிக்கிறார்கள்!

இத் தவிப்பைப் போக்க புதிய வீடுகளும், சாக்கடை போக்கியும் கல்வி வசதியும், அதிகமாகவேண்டும்.

"அதிகரிக்கப் பணம்?" — இது தான், சேர்மன்களின், கேள்வி.

அதற்கு, முதலமைச்சர் கூறுகிற பதில்—'இல்லை' என்பதல்ல; கோபப்பார்வை! சீற்றக்குரல்!!

முதலமைச்சரின் இத்தகைய போக்கைப் பல நகரசபைத் தலைவர்கள், கண்டித்துப் பேசியதாகவும் அறிகிறோம். அவர்களில் பலர், காங்கிரஸ்காரர்கள் என்றும் தெரிகிறது!

நகர மக்களில் உயர்ந்த மாடி வீட்டினரைவிட, ஏழைபுரி மிகமிக அவதிப் படுகிறது. இந்த அவதியைப் போக்கவோ, பணம் இல்லை.

"பணம் இல்லை!" இந்தப் பல்லவியைப் பாடிக்கொண்டிருந்துவிட்டால், போதுமா? நகரத்தில் வாழ்வோரின் நலன்களை எப்படித்தான் சமாளிப்பது!

இதற்கு நல்லயோசனையொன்றை வெளியிட்டிருக்கிறார் — மதுரை M. L. A யும் சேர்மன்கள் மாநாட்டின் வரவேற்புத் தலைவருமான டி. கே. ராமா.

"தொழிலாளர்கள் மிகவும் வேதனையான வாழ்விலிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய குடிநீர், சுகாதாரவசதி அத்தனையையும் நகரசபைகளே செய்துதரவேண்டியிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிலாளர்கள் நகரசபைக்குக் கட்டும், வரி, தொழில் வரி ஒன்றுதான். இதன்மூலம் வரும் வருமானம் மிகக் குறைவு. இதனால் நகர சபைக்கு நஷ்டம் ஏற்படுகிறது இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய நான் ஒரு வழி கூறுகிறேன். இந்தத் தொழிலாளர்களை வேலைக்கு வைத்திருக்கும் ஆலைகள் அரசாங்கத்துக்கு கட்டும் வருமான வரியில், நகரசபைகளுக்கும் சிறிது கிடைக்குமாறு செய்யலாமே!"

தோழர் ராமா — நம்மவரல்ல; காங்கிரஸ் பிரமுகர். அவர் கேட்கிறார்! மத்ய சர்க்காருக்குச் செல்லும் வருமானவரியில் சிறிது பங்கு தரப்பட வேண்டுமென்று கேட்கிறார்! நகரசபைகளுக்காகக் கேட்கிறார்!! நம்பரின் யோசனை, நாம் அடிக்கடி கூறிவருவதுதான். கோடிக்கணக்கில், டில்லிக்குச் செல்லும், இந்த வருமானவரியில் சில லட்ச ரூபாய்களை நகரசபைகளுக்கென ஒதுக்கலாம்! ஏழைவாழ, வழி செய்யலாம்!!

இதேபோல, நிதியமைச்சர் சுப்ரமணியமும், நகரசபைகளுக்கு வருமானம் வரும் புது யோசனையொன்றைக் கூறியிருக்கிறார்—நமக்கு அதுவும் பழைய யோசனைதான்.

(அடுத்த பக்கம் பார்க்க)



# எப்படிச் சகிப்பது?

சென்னை சட்டசபை, வரும் 27-ந் தேதியன்று ஆரம்பமாகிறது.

26—6—52 முதல் ஒருமாத காலத்துக்குச் சட்டசபை வட்டாரத்துக்கு தடையுத்தரவு போடப்பட்டிருக்கிறது.

மவுண்ட்ரோட்டிலுள்ள புதிய அசெம்பிளி கட்டிடத்திற்கு அருகாமையில் சில ரஸ்தாக்களிலும் பொது இடங்களிலும் மக்கள் கூடக்கூடாதாம்!

தடையுத்தரவோடு, ஆரம்பமாகிறது, சட்டசபை நடவடிக்கைகள். மக்களின் பிரதிநிதிகள், அமர்ந்து, திட்டங்கள் தீட்டவேண்டிய இடம் —'தீண்டப்படக் கூடாது பொது மக்களால்' என்று, தடைவீசப் படுகிறது.

ஜனநாயக ஆட்சியாம்! சண்டப் பிரசண்டமாகப் பேசியிருக்கிறார், பஜகோவிந்தப் பிரசங்கி பாளையங் கோட்டையில். ஜனநாயகம் மதிக்கப்படவேண்டுமென்று, மாவீரர் போலக் குரலெழுப்பியிருக்கிறார். ஆனால், அடக்குமுறைக் குரங்கு, இங்கே, அவிழ்த்துவிடப் படுகிறது!

சட்டசபைக்குமுன் எவரும் கூடக்கூடாது என்பது மட்டுமல்ல; அந்த வட்டாரத்திலேயே மக்கள் கூடுவது தகாதாம் — ஆகாதாம்— பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளையுமாம்.

பொதுமக்களின் தூதர்கள்கூடப் போகிறார்கள்! ஆனால், பொதுஜன உரிமை பறிபோகிறது!!

மக்கள், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பார்களாம்—'சுதந்திர ஜோதி'யின் உத்தரவு செப்புகிறது இவ்விதம்.

அதுவும், இப்போது நடைபெறவிருக்கிற சட்ட சபைக் கூட்டம் மிகவும் முக்கியமானதாகும் கவர்னர் பிரசங்கம் செய்யப் போகிறார்—முன்பு மூக்குடைபட்டதற்குப் பிறகு — என்பதாலல்ல, முக்கியம் என்று நாம் குறிப்பிடுவது இது, பட்ஜட் கூட்டம்! நாட்டின் நலனுக்கான வழிமுறைகளைக் கூடிப்பேசி விவாதிக்கும் கூட்டம் இது! இது ஆரம்பமாகிறது, அடக்குமுறையோடு சுடுகாடு அமைதி, வேண்டுமாம், சுதந்திரப் பிரியர்களுக்கு! அதுவும் துரைத்தனம் நடத்துவதற்கு!!

வெட்கமின்றி, உத்தரவு வெளியிடுகிறது, இவ்விதம், "அசெம்பிளி கூடியிருக்கும்போது பொதுஜன அமைதியைப் பாதுகாக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது"

எவ்வளவு வெட்கம், இது! மக்களென்ன அலைகடலென எழுந்து அசெம்பிளி மண்டபத்தைத் தூக்கி, அருகிலிருக்கும், கடலில் போடத் திட்டமிட்டுள்ளனரா? அல்லது, 'சட்ட சபைக் கூட்டமே கூடாது' என்று சத்யாக்ரகம் செய்ய முடிவு செய்திருக்கின்றனரா? வெறுக்கின்றனரா, ஜனநாயக முறையை! அல்லது, மறுக்கின்றனரா, இந்தமுறைகளெல்லாம் எதற்கு என்று? எதுவுமில்லையே! இருந்தும், ஏன், தடை! அதுவும், சட்ட சபை கூடும் முதல் தினத்திலிருந்து! ஆச்சாரியார் ஆட்சி மக்களைப் பரிகசிக்கிறது — ஏளனம்செய்கிறது-ஜனநாயகத்தை நோக்கிச் சவால் விடுகிறது! இதை எப்படிச் சகிப்பது? இந்த லட்சணத்தில் '......ஜி' மந்திரி சபைக்கு வாழ்த்தும் பாராட்டும் வரவேற்பும்!

✱

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

வணக்கம். என்மகன் அருணாசலத்திற்கு, காஞ்சிபுரம்ஜவுளி வியாபாரம், M. V. M. பச்சையப்பனார் அவர்களின் மகள் சரஸ்வதியை, 2-7-52 புதன்கிழமை காலை 8-மணிக்கு தோழர் W. P. A. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமையில், காஞ்சிபுரம் பாவாப்பேட்டைத் தெரு, மணமகள் இல்லத்தில், வாழ்க்கைத் துணைவியாக்க உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

அதுகாலை, தோழர்கள்: C. N. அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, க. அன்பழகன், சேலம் A. சித்தையன், K. A. மதியழகன், C.P. சிற்றரசு, கவிஞர் கண்ணதாசன், காஞ்சி மணிமொழியார் ஆகியோரும், தோழியர்கள்: டாக்டர். தர்மாம்பாள், சத்தியவாணிமுத்து, இராமாமிர்தம்மையார் ஆகியோரும், வாழ்த்துரை வழங்குவர்.

அன்று இரவு 9-30-மணிக்குமேல், சிதம்பரம் C. S. ஜெயராமன் குழுவினரால் இசை விருந்து நடைபெறும்.

அன்பர்கள், இதையே அழைப்பாக ஏற்று, திருமணத்தில் கலந்துகொள்ளக் கோருகிறேன்.

அன்பன்,
காஞ்சி—கல்யாணசுந்தரன்.

முன் பக்கத் தொடர்ச்சி

நகரங்களில் ஓடும் பஸ் போக்குவரத்தை அந்தந்த நகரசபைகளே ஏற்று நடத்துவது. இதுவும் பெரிய காரியமல்ல! தாராளமாகச் செய்யலாம். சாமர்த்தியமாகச் செய்தால், நல்ல, லாபமும் பெறலாம். ஓட்டல் நடத்தலாம்! இதன் மூலம், வருமானத்தைப் பெறலாம்.

ஆனால் இந்த முறைகளைக் கையாளும்போது, அந்தந்த நகரசபைகள், பணிவுணர்ச்சியோடு பாடுபட வேண்டும். 'கமிஷனர் பிடிக்கவில்லை!' — போன்ற, பிரச்னைகளுக்கும், கட்சித் தகராறுகளுக்கும் இடங் கொடாமல், நடக்கவேண்டும்.

தமக்குத்தாமே வருமானம் வரும் இனங்களைத் தேடிக்கொள்வதோடு, மத்ய சர்க்காருக்குச் செல்லும் வருமான வரியிலும் பங்கு பெறவேண்டும்.

இதன் மூலம் வரும் பணத்தைக் கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்து கொள்ளலாம்.

வெறும் பல்லவி பாடிக்கொண்டிராமல் பயனுள்ள இந்த யோசனைகளை, செயலாக்குவதில், அந்தந்த நகரசபைகள், முனைய வேண்டுகிறோம்.

---

## பிறப்பு

தோழர் ஏ. கே. வேலனின் துணைவியார், 16—6—52ல் ஒரு ஆண்மகவை ஈன்றெடுத்தார். தாயும், குழந்தையும் நலம்.

திராவிடநாடு

காஞ்சி] 29—6—52 [ஞாயிறு

# இது சகஜம்!

★

"In the construction of huge river valley projects things will go wrong here and there."

உற்பத்தி மந்திரி கே.ஸி. ரெட்டி, பார்லிமெண்டில் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்திருக்கிறார்.

உறுப்பினர்கள், நீர்த்தேக்கத் திட்டங்கள் என்ற பெயரால், மக்கள் தரும் வரிப்பணத்தைப் பாழாக்குகிறீர்களே, இது நீதியா என்று கேட்டார்கள். ஏழைகள் வியர்வையல்லவா, சர்க்கார் கஜானாவில் வெள்ளிப் பணங்களாகக்காட்சியளிக்கின்றன, எளியவர் சிந்தும் கண்ணீரன்றோ, வரிப்பணமாக உருவெடுத்திருக்கின்றது என்று கேட்டார்கள்.

ஆனால் மந்திரியார், மனங்கலங்கிடவில்லை — மருட்சி கொள்ளவுமில்லை. அமைதியாகச் சொல்கிறார்.

இதுசகஜம் என்கிறார் மந்திரியார் பாழாவது சகஜமாம், மந்திரியார் பதில் அப்படித்தான் இருக்கிறது.

"பெரிய நீர்த்தேக்கத் திட்டமென்றால், தவறுகள் இங்கொன்று, அங்கொன்று நடக்கத்தான் செய்யும்."

மந்திரியார், பணம் பாழாக்கும் படலத்தை மறுக்கவில்லை. பாழாவது சகஜம் என்று புதிய படலம் சேர்க்கிறார்!

தவறுகள் நடக்கத்தான் செய்யும், பெரிய காரியங்களில் என்கிறார். ஒப்புக்கொள்வோம். தவறுகள் சாதாரணத் தவறுகளாக இருந்தால் தாங்கிக்கொள்ளலாம். இமாலயத் தவறுகள் நடந்திருக்கின்றன. இத்தகைய ஆதாரங்கள் ஆயிரமாயிரம் உண்டு.

சென்ற காங்கிரசாட்சி நடவடிக்கைக் குறிப்பை மீண்டும் கவனத்திற்குக்கொண்டு வாருங்கள். நடந்தவைகளை ஒரு கணம் நினைவிற்குக் கொண்டுவாருங்கள். இது சகஜம் என்று சொல்லமுடியாது. இது சகிக்கமுடியாதது என்றுதான் ஒவ்வொன்றை எண்ணும்பொழுதும் சொல்லத் தோன்றும்.

ஆற்று அணைக்கட்டுத் திட்டங்கள் கிடக்கட்டும். எந்தத் துறையிலும், இவர்கள் ஆளத்தெரியாத அப்பாவிகளாகவே நடந்து வந்திருக்கிறார்கள்.

சர்க்கரை வாங்கினார்கள், குறைந்த விலைக்கு கிடைத்த பொழுது மறுத்துவிட்டு, பிறகு அதிக விலை கொடுத்து-அதிலே பல கோடி நஷ்டம். ஜீப்கள் கதையும் அப்படி. டிராக்டர்கள் சங்கதியும் அதே. சணல் விதையும் ஊழல் மயம். உர உற்பத்தியும் தகராறு, வீடுகட்டும் திட்டமும் வீண், உணவு உற்பத்திப் பெருக்கமும் உருப்படவில்லை, வெடிமருந்து வாங்கியதிலும் குறையென்று தினந்தினம் நாம் படித்த பழைய ஊழல்கள் நினைவிற்கு வருகின்றன.

இவையெல்லாம் சகஜம் என்கிறார் கனம் ரெட்டி.

அதற்குக் காரணம் காட்டியிருக்கிறார், பெரிய வேலைகளில் சிறிய தவறுகள் ஏற்படுவது இயற்கைதானே என்று! அவர் ஏதாவது சொல்லியாக வேண்டுமே, அதற்காகச் சொல்லியிருக்கிறார்.

பெரியசர்க்கார் நடத்துகிறார்கள், பெரிய தேசிய இனத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே சிறிய தவறுகள் ஏற்படுவதைப் பொருட்படுத்தக் கூடாது என்கிறார் கனம் ரெட்டி.

சர்க்கார் எடுத்துக் கொண்டுள்ள காரியம் பெரிது. அதிலே நமக்கு சந்தேகமில்லை. ஆனால் நடந்திருக்கிற தவறுகள் சிறியவையா என்பதிலே நமக்கு பலமான சந்தேகம்.

நீர்த் தேக்கத் திட்டங்களில் மிக முக்கியமான ஒன்றில் சென்ற ஆண்டு, விந்தைக்குரிய விஷயம் ஒன்று நடந்தது. அதனை 'மெயில்' அம்பலப்படுத்தியிருந்தது அப்பொழுதே.

ஹிராகுத் அணைக்கட்டுத் திட்டம் என்று கூறுகிறார்களே — அதுபற்றிய செய்திதான் அது.

இந்த அணைக்கட்டுத்திட்டம் கட்டப்படுவதற்குரிய காரணங்களை விளக்கிடும் பொழுது, கட்டப்படும் மகாநதியைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள், அதற்காக வெளியிட்டிருந்த பிரத்தியேக ஏட்டில். மகாநதியில், அணைக்கட்டுத் திட்டம் வெற்றிகரமாக முடிந்துவிட்டால், 20,000,000 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். 4,000,000 கி. வா. மின்சாரம் உற்பத்தியாகும். மத்திய பிரதேச எல்லையிலிருந்து, வங்காள விரிகுடா வரை சுமார் 380-மைல் கப்பல் போக்குவரத்துக்குரிய வாய்க்கால் வசதி ஏற்படும். ஒரிஸ்ஸாவிற்கு, சந்தபாலி அல்லது தாம்ரா என்ற இடத்தில் துறைமுகம்கூட அமையும். அது, வருடத்திற்கு 6 000,000 டன் எடைவரை அனுப்பவும், வரவும் உதவியாக இருக்கும். அணைக்கட்டுத் திட்டத்தால், ஏற்படும் ஏரிகள், கப்பல் தங்குமிடங்களாகப் பயன்படும். மீன்பிடிக்கும் தொழிலும் வளரும்.

இப்படி, அடுக்கடுக்கான, சுவையான கனவுகளை சொல்லியிருந்தார்கள் அந்த ஏட்டில்.

மகா நதித் திட்டத்தில், முதலில் ஹிராகுத் திட்டத்தை எடுத்துக் கொள்வதென முடிவு செய்தார்கள். ஏனெனில், நதியில் அது முதலில் இருக்கிறது. மேலும் அதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் எளிதில் கிடைக்கின்றன என்று காரணங் காட்டினார்கள்.

கொஞ்ச நாட்கள் அது பற்றிய தகவல்கள் கிடைக்கவேயில்லை. பிறகு, இந்தத் திட்டம் ஏற்கனவே 1946ல் தொடங்கப்பெற்று அப்படியே கிடந்ததென்றும், பிறகு இப்பொழுது தொடங்கப்படுகிறது என்றும் தகவல் வந்தது முதலில் குறிப்பிடப்பட்ட செலவுத் திட்டம் 47·81 கோடி. ஆனால் பிறகு 100 கோடியாகிவிட்டது. ஆகவே இந்த வேலை நான்கு ஆண்டுகளாக மெதுவாக நடந்து வந்தது.

அந்த அணைக்கட்டுத் திட்டத்தை யொட்டி, சென்ற ஆண்டு, சிறிய கப்பல்கள் செல்வதற்காக எடுக்கப்படும் வாய்க்காலுக்கு மேல் ஒரு பாலம்கட்டினார்கள். கட்டியும் முடித்துவிட்டார்கள். ஆனால், அந்த வாய்க்காலில் எந்தக் காலத்திலும் கப்பல் போக முடியாது. ஏனெனில் அதில் தண்ணீரே ஓடாது என்று தெரிய வந்தது. அந்த வாய்க்காலை யொட்டிக் கட்டப்பட்ட சம்பல்பூர் அணைக்கட்டு சரியானதில்லை யென்று நிரூபணமாகி விட்டார்கள்.



ஆகவே, கட்டிய பாலம், வெட்டிய வாய்க்கால், உண்டாக்கிய அணைக்கட்டு எல்லாம் பாழ் — இந்தப் பாழான வேலைக்கு கொட்டியழுதது சர்க்கார் கணக்கு மூன்று கோடி—சரியான கணக்கு எத்தனை கோடியோ!

பெரிய திட்டங்களில் தவறுகள் ஏற்படலாம் என்கிறார் கனம்.

3 கோடி, சாதாரணதவறு—யார் ஒப்புக்கொள்வார்கள்? இம்மாதிரி விஷயங்களை. பார்லிமெண்டில் கேட்டால், இது சகஜம் என்று பதில் வருகிறது!

வடநாட்டிலே, ஏற்பட்ட பாழான கணக்கையும் பார்த்தீர்கள். தென்னாட்டிலே, பணமில்லாததால், வீணான திட்டங்களையும் பாருங்கள்.

வசிஷ்ட கோதாவரி பாலம், கிருஷ்ணா நதி பாலம், துங்கபத்திரா பாலம் இப்படித் தென்னாட்டுத் திட்டங்களுக்குச் செலவிடப் பணமில்லை—ஆனால் மூன்று கோடி பாழ்!

இது பழைய கதை—ஆனால் புதிய பாடம் தரும்—இதனை மீண்டும் நினைவு படுத்துகிறோம். இம்மாதிரி, பணத்தைப் பாழாக்கிவிட்டு இது சகஜம் என்று பேசுவோர் நாட்டை ஆள்வது சகஜம் என்று மக்கள் எத்தனை நாள் விட்டிருப்பர்? இவர்களை விட்டு வைப்பது நாட்டுக்கு மிகவும் சங்கடம், மக்களுக்கு வீண்சஞ்சலம், ஆகவே விட்டிடுவோம் என்று கிளம்பிவோர்—இது கவனமிருக்க வேண்டும் அவர்களுக்கு!

---

விற்பனையாகிறது

சி. என். ஏ. தீட்டிய

சிறிய ஏடு

**அதிர்ச்சிக்கு வைத்தியம்**

விலை அணா 2

விற்பனை கழிவு 25%

தபாற்செலவு இனம். வேண்டுவோர் எழுதுக.

திராவிட நாடு நிலையம்

காஞ்சிபுரம்.

# நிதி தாரீர்!

★

இலட்சியத்திற்காக உயிர் நீத்த தோழர் மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதிக்குத் தாராளமாக உதவுங்கள்.

| | |
|---|---|
| முன்வரவு ரூ | 1033—9—10 |
| கொழும்பு டி. எம். அப்துலமஜீத்மூலம் | 75-0-0 |
| பூனா எஸ். பொன்னைய்யா | 25-0-0 |
| காட்டுபபுத்தூர் கந்தசாமி | 15-0-0 |
| கோவை ஆர். வெங்கட்ராமன் மூலம் | 14-8-0 |
| தேவகோட்டை தி. மு. க. சார்பில் | 13-0-0 |
| சென்னை கே. வேள்பாரி மூலம் | 12-8-0 |
| கோவை தி. மு. க. நகரக்கிளைசார்பில் | 11-8-0 |
| மலைக்கோட்டை எம். வேலாயுதம் மூலம் | 10-8-0 |
| தூத்துக்குடி கலைரசிகர் சங்கம் | 10-0-0 |
| சென்னை கே. சிதம்பரம் மூலம் | 9-5-0 |
| சூலூர் தி. மு. க. சார்பில் | 8-6-0 |
| தஞ்சைத் தோழர்கள் | 7-10-0 |
| கோவில்பட்டி தி. மு. க. சார்பில் | 7-8-0 |
| லால்குடி. சி. வி. பாலசுப்பிரமணியன் மூலம் | 7-4-0 |
| காரைக்கால் ஞானசம்மந்தம் | 7-0-0 |
| சென்னை ஏ. முருகேசன் மூலம் | 6-4-0 |
| விருதுநகர் அய்யாசாமி | 6-0-0 |
| மதுரை அ. பொன்னம்பலனார் | 5-0-0 |
| பண்ருட்டி பசுபதி | 5-0-0 |
| ராயபுரம் எம். ஆர். ராமதாஸ் மூலம் | 5-0-0 |
| திருவாரூர். கருணை எம். ஜமால் | 5-0-0 |
| குடந்தை கே. கே. என். மூலம் | 5-0-0 |
| பெரம்பூர் டி. எஸ். மணி மூலம் | 4-0-0 |
| தேனி வெற்றியரசு மூலம் | 3-6-0 |
| குமாரபாளையம் எஸ். எஸ். எம். புருஷோத்தமன் | 3-0-0 |
| திருவனந்தபுரம் எஸ். சுவாமிநாதன் | 3-0-0 |
| தூ[illegible], தங்கத்துரை | 2-0-0 |
| ஆரணி [illegible]. பி. சுந்தரம் | 2-0-0 |
| திருமங்கலம் சந்திரசேகர பாண்டியன் மூலம் | 1-2-0 |
| கீழ்ப்புரம் ஆர். ரங்கசாமி | 1-0-0 |
| திண்டுக்கல் எம். கணபதி | 1-0-0 |
| சிவகாசி ஆர். சுந்தர பாண்டியன் | 1-0-0 |
| சென்னை அன்பில் அபூபக்கர் | 1-0-0 |
| செம்பியம் கே. பழனிவேலு | 1-0-0 |
| செவத்தூர் சோமலிங்கம் | 1-0-0 |
| புதியம்புத்தூர் தி. மு. க. சார்பில் | 1-0-0 |
| திருவையாறு ஏ. எல். முத்தையா | 0-9-0 |
| சேப்பாக்கம் செயராமன் | 0-4-7 |
| | **1336-2-7** |

இயக்க தீர்மானங்களை எடுத்தியம்பும் சின்னஞ் சிறிய ஏடு

*

முதற்பதிப்பு முடிந்து, இரண்டாம் பதிப்பு வெளிவந்திருக்கிறது.

*

தி. மு. க. கிளைக் கழகங்கள் மொத்தமாக வாங்கிவைத்துக் கொள்ள வேண்டிய ஏடு.

*

**தீர்மானங்கள்**

விலை 1-அணா

விபரங்கட்கு:

தி. மு. க. தலைமை நிலையம்

ராயபுரம், சென்னை 13.

## முகவரி மாற்றம்

மு. கருணாநிதி
6, வடக்கு கோபாலபுரம்
முதல் தெரு
கோபாலபுரம், சென்னை—6.

*

கண்ணதாசன்
4, கணபதி முதலி தெரு
புதுப்பேட்டை, சென்னை—14.

## மறைவு

கலப்பு மணத்தம்பதிகள் இளமுருகு —பொற்செல்வியார் பெற்றெடுத்த 'மணிக்கொடி' எனும் குழந்தை 12—6—52 மறைந்த செய்தி கேட்டு வருந்துகிறோம்.

11-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டிற்குப் புதிதல்ல—புராண காலத்திலிருந்து, இந்தக் காலம் வரை, அப்படி மழை பெய்யாத சந்தர்ப்பங்கள் உண்டு. ராமாயணத்திலேயே, ரிஸ்யச்ருங்கர் கதை படிச்சிருப்பீங்களே—நல்லதங்காள் கதையிலே வருகிறதேப்பா, பன்னிரண்டு வருடம் மழையே பெய்யல்லேன்னு.

க:— அதனாலே......

மா:—இப்போ, மழை பெய்யாமலிருந்தது புதிதல்ல என்கிறேன்.

க:— அது சரிடா, இதுக்கு முன்னாலே, மழையே பெய்யாமலிருந்து, அவர் வநததும் ஏண்டா பெய்யனும்.

மா:— மழைன்னு எதுக்கு பேர் தெரியுமாப்பா.

ர:— ஏது, பெய்தது மழையே இல்லேன்னு கூடச் சொல்லிடுவன் போலிருக்கு.

மா:— தமிழ் நூல்கள் படித்திருந்தால தெரியும். குறிப்பிட்ட காலத்தில், குறிபபிட்ட இடத்தில், குறிப்பிட்ட அளவு பெய்வதைத்தான் மழை யென்பர். தண்ணீர் தேவையில்லாதபோது கொஞ்சம் துளி துளியாக விழுவதையோ, தேவைக்கு மேல் ஒரே வெள்ளமாகப் பாய்வதையோ, மக்கள் எப்படியப்பா மழையென்று மகிழ்வார்கள்.

க:— அப்ப, இப்போ பெய்ஞ்சது மழையில்லேங்கிரியா.

மா:— அது கிடக்கட்டும், மழைக்கும், இவருக்கும் என்ன சம்மந்தம்?

ர:— பகவானைப் பிரார்த்தியுங்கோ, மழை பெய்யும்னு சொன்னார், பெய்ஞ்சுடுத்து.

மா:— அதுக்கு ஆச்சாரியார் தேவையில்லீங்க. இதுக்கு முன்னாலேயே, பானிவாலா மகாராஜா என்றொரு மகானைக் கண்டுபிடித்தார்கள். முன்ஷி நாடெங்கும் அவர் துதி பாடினார், ஏராளமாகப்பணத்தைக் கொட்டியளந்தார். அவர் பூமியைப் பார்த்து, தண்ணீர் இருக்குமிடம் காண்பிக்கும் அருள் பெற்றவர் என்றார்கள். இவர் வானத்தைப் பார்த்து இறைஞ்சுங்கள் என்றார். இருவருக்கும் என்ன வித்தியாசம்?

ர:— உம்......காலங் கெட்டுப் போச்சு.

மா:— பானிவாலா மகராஜ் குட்டு வெளியாய்ப் போச்சு. அவரை, சர்க்கார் செலவில் வைத்திருந்தார்கள். பலனில்லையென்று இப்பொழுது நீக்கி விட்டார்கள். அந்தப் போலி வேலைக்கும் ஆச்சாரியார் போதனைக்கும் வித்தியாசமே கிடையாது.

ர:— வாய்த்துடுக்கா பேசாதே.

மா— நீங்களே தான் சொல்லுங்களேன். மழை பெய்யவில்லைன்னு, அதை இதைச் செய்யுன்னு சொல்வது இந்த நாட்டுப் பழக்கம். எரிகிற கொள்ளியை வானத்திற்குக் காட்டு என்று சொல்வார்கள். கர்ப்பிணிப் பெண்கள் புழுங்கலரிசியைத் தின்றால் மழைவரும் என்பார்கள். மழையும், வெயிலும் சேர்ந்திருந்தால், காக்கைக்கும் நரிக்கும் கல்யாணம் என்று இந்தநாட்டுக் குழந்தைகள் கைதட்டி யாடுவார்கள்.

க:— ஆமாம், இதையெல்லாம் சொன்னால்.........

மா:— ஆச்சாரியார், ஏதோ புதிதாகச் சொல்லி, பெரிய மழைவந்து விட்டது என்று நினைக்காதீர்கள். இந்த நாட்டு ஜனங்களுடைய மௌடீகத்திற்குத் தக்கபடி பேசுகிறார். மழைக்காக கொடும்பாவி கட்டியிழுக்கிற மக்களிடம், ஏன் பகவானைப் பஜி, மழை வரும்னு சொல்லக்கூடாது. மேகத்தை தேவனாக்கியிருக்கிறார்கள். அதற்கு இந்திரனைத் தலைவனாக்கியிருக்கிறார்கள். மழைக்கு வருண ஜபம் செய்ய வேண்டுமென்று வேறு போதித்திருக்கிறார்கள். அவர்கள் மகான்களாக மட்டுமிருந்து சொன்னார்கள். மகரிஷிகள் என்ற பேரோடு மறைந்தார்கள். இவர் மந்திரியாகி அதையே சொல்கிறார்.

ர:— பகவான் அனுக்ரகம் இல்லாமே மழைபெய்ததுங்கரே.

மா:— இல்லே, பகவான் அனுக்கிரகத்தாலே வந்ததென்றே வைத்துக் கொள்வோம்.

ர:— அப்போ, ராஜாஜி வந்ததும் தானே, பகவான் அனுக்ரகம் கிடைச்சிருக்கு.

மா:— உண்மையிலேயே, ராஜாஜி மகானாக இருந்திருந்தால் என்ன செய்திருக்கனும் ஜனங்க கஷ்டப்படராங்க, இப்போ மழை வந்தாகனும்னு எண்ணி, இப்போ செய்த பிரச்சாரத்தை அப்பொழுது செய்திருக்கனும். செய்யவில்லை. அதாவது ஆட்சிக்கு அவர் வந்தாத்தான் ஆண்டவன் அநுக்ரகம் வாங்கித் தருவார்—அப்படித்தானே!

ர:— அப்படி யார் சொன்னு?

மா:— பின்னே ஏன் ஐந்து வருடமாகப் பேசாதவர் இப்போ, மழை வருவதற்கு பகவானை வேண்டனும்கிற உபாயத்தை உபதேசிக்கிறார்.

ர:—ஒரு மகானை இப்படி அவமரியாதையாகப் பேசாதே.

மா:— மழையைத் தந்தவர் மகானென்றால், மற்றவங்க, மாபாவிகள். பிரகாசம், ஓமாந்தூரார், குமாரசாமி ராஜா எல்லாம் பாவிகள்.

ர:— அப்படி ஒண்ணும் அர்த்தமில்லே.

மா:— நானும் ஒத்துக் கொள்வதாயில்லே. ஆச்சாரியாராவது, பகவானைப் பஜியுங்கள் என்று பேசி விட்டுப் போய்விடுவார். ராமசாமி ரெட்டியார் கார்த்திகை விரதமே இருந்தவர். எல்லாக் கோயில்களிலும், குறிப்பிட்ட நாளில், மழைக்காகவும், நாட்டு சுபிட்சத்திற்காகவும் அபிஷேகம், ஆராதனையும் செய்யவேண்டுமென்று உத்தரவே போட்டிருந்தார்.

ர:— அப்போ மழை பெய்யல்லே

மா:— இதிலிருந்து கடவுள் கூட ஒரு மாதிரிதான்னு தெரிகிறது. கைலாசம், வைகுந்தம் இங்கேகூட கம்யூனல் ஜி. ஓ. வேறும் போலிருக்கு -வேதாரண்ய சிவனாலயக் கதவைத் திறக்க திருஞான சம்மந்தர் ஒரு பாட்டு பாடினார். கதவு திறந்து கொண்டது. ஆனால், திருநாவுக்கரசர் பத்துப்பாடல் பாடிய பிறகே கதவு மூடிக் கொண்டது. காரணம், ஞானசம்பந்தர் ஆச்சாரியார் குலம், நாவுக்கரசர் நம்மவர், அது போலத்தான், ஆச்சாரியார் மழை பெய்ய, பகவானை பஜனை செய்யுங்கோன்னு சொன்னவுடனே மழை, பூஜை பல தடவை செய்தும் ஓமாந்தூரார் காலத்தில் மழையில்லே. காரணம் என்ன? புரிநால் இல்லையென்பது தானே?

ர:— நீ விதண்டாவாதம் பேசரே.

மா:— ஆச்சாரியார் மகான் என்று சொல்கிறீர்களே அதற்காகத்தான் இவ்வளவும் சொல்ரேன். ஐந்து வருடமாக வாய்மூடியிருந்த மகான், மந்திரியானவுடன் வாய் திறந்தார்; மழைபெய்தது. தன் சகாக்கள் காலத்தில் இதைச் சொல்லியிருக்கக்கூடாதா? சொல்லி மழைவந்துவிட்டால், அவர்களுக்கு நல்லபெயர் வந்துவிடுமே என்ற எண்ணத்தால்தானே சும்மாயிருந்தார்? அத்தகைய கெட்ட எண்ணம் உள்ளவரா ஆச்சாரியார்? கெட்ட எண்ணங் குடிகொண்ட ஒருவர் எப்படி மகானாகமுடியும்?



ர:— போதுண்டாப்பா, இந்த ஒரு வாரமா, என் கிரகம் சரியில்லேன்னு நினைக்கிரேன். அண்ணைக்கு சிற்றம்பலம் பேசினான், இண்ணைக்கு நீ— அப்பாடா, உன்னைச் சொல்லிப் பிரயோஜனமில்லே, காலம் தலைகீழாயிட்டுது உம், நான் வர்ரேன், முதலியார்வாள்.

க:— என்னங்க, சின்னப்பையன் பேசினான்னு • இப்படி கஷ்டப்பட்டுக்கிறீங்க. டே, தம்பி, நீபோய் வேலையைப் பாருடா.

ர:— எனக்கென்ன முதலியார்வாள் கஷ்டம்—அவன் பேசிண்டிருந்தபொழுது நான் சந்தோஷப்பட்டுண்டேன். அவன் சொல்றது சரியோ, தவறோ, சொல்றது எவ்வளவு அழகாக, கோர்வையாய், தெளிவாய்ச் சொல்ரான். அதைக் கவனிச்சுப் பரமானந்தப்பட்டேன்.

க:— என்னைக்கூடக் கேட்டான், இதே கேள்விகளை, நம்மசாமி வருவார்டா, அவர் சொல்வார்னு சொன்னேன். இப்போ பார்த்தால், நீங்ககூட பயலண்டை, என்னைப் போல, திணறித்தான்.......

ர:— சே, அதெல்லாம் ஒண்ணுமில்லை முதலியார்வாள். சிறு பையன் அவனண்டை எதுக்குன்னு...

க:— உம், சரிதான் விடுங்க. ஏதோ நாம் ஒண்ணிலே நம்பி இறங்கிட்டோம். அதுப்படி நடந்திட்டுப் போவோம்.

ர:— முதலியார்வாள், தங்கமான வார்த்தை சொன்னேள் — அண்ணைய பொதுக்கூட்டத்திற்கு, நீங்க தலைமை வகிக்கனும்.

க:— சரி, என்ன பேசாதுன்னு மட்டும், கொஞ்சம் ஒரு தாளிலே எழுதித் தள்ளிடுங்க.

ர:— அதுக்கென்ன, கூட்ட ஏற்பாடு முடிஞ்சுதானா, திவ்யமான பிரசங்கம், அச்சடிச்சே கொடுப்போம் வந்து...

க:— ஏன் தயங்கிறிங்க, செலவுக்குத்தானே. சாயந்திரம் கடையண்டை வாங்க. கணக்கப்பிள்ளையிடம் சொல்லிடரேன். வாங்கிக்கிட்டுபோங்க.

ர:— முதலியார்வாள், வர்ரேன்.

★

ர:— கணக்கப்பிள்ளைவாள், முதலியார் சொல்லியிருப்பாரே—

கணக்கர் சோணாசலம்:— ஆமாம், அதுக்கென்னங்க......

ர:— பிள்ளைவாள், ஏதோ எரிச்சல்லே.

சோ:— வேலைக்காரனுக்கு, எதுக்குங்க எரிச்சல்வரும்? நீங்க ஒரு அரைமணி கழிச்சு வாங்க.

ர:— நம்ம ஊருக்கு ராஜாஜி வர்ரார் தெரியுமோன்னோ.

சோ:— இது தெரியாதுங்களா, நானும், நீங்களும் வர்ரதிற்கா, முதலியார் தாராளமாக இருநூறு கொடுன்னுசொல்லுவார்.

ர:— ராஜாஜி வந்தது, அவாளுக்கு மட்டும்தான் சந்தோஷமா — நமக்குந்தான்.' ஏழை, எளிதுகள் எவ்வளவு கஷ்டப்பட்டதுங்க. இப்போ பார்தீங்களா, கண்ட்ரோல், ரேஷனும் ஒழிஞ்சுது!

சோ:— அதுதான் பாக்கியிருந்தது. அதுவும் போச்சு!

ர: என்ன, ரேஷன் போனது தப்புன்னு சொல்றீர்?

சோ:— ரேஷன் போகவேண்டியதுதாங்க — எப்போ போகிறது, எப்படிப் போகிறதுன்னு இருக்கில்லே.'

ர:— இப்போ தொலைஞ்சதாலே என்ன கெட்டுபோச்சு?

சோ:— பதுக்கி வைச்சிருந்தவங்க பகிரங்கமாக விக்கிறாங்க கள்ள மார்க்கட், வெள்ளை மார்க்கட்டாச்சு!

ர:— நீர் என்ன சொல்றீர்?

சோ:— என்ன சொல்றேன். ரேஷன் முறையை ஒழுங்காக நடத்துவிக்க கையாலாகல்லே— அதனால் கைவிட்டுவிட்டாங்க. அரிசி கொடுக்கயோக்கியதையில்லாமல்தானே. புளியங்கொட்டை, பருத்திக்கொட்டையெல்லாம் சிபார்சு செய்தாங்க. அரிசியை மறந்துடு, கத்தாழையைக் கவனம்வைச்சுக்கோன்னு பேசினாங்களே நம்ப கனமான மந்திரிகள்.

ர:— இப்போ வேணுங்கிறதை, வேண்டிய அளவு, விரும்புகிற இடத்திலே வாங்கிக்கலாமே!

சோ:— கள்ள மார்க்கட்டை ஒழிக்க முடியல்லே. பங்கீட்டு முறைக்கு வேண்டிய அளவு கூட அரிசியை வாங்க முடியல்லே— கைவிரித்துவிட்டார் ஆச்சாரியார்.

ர:— ஆனால் ரேஷனை, இந்தியாவிலேயே ஒழிச்ச பெருமை, நம்ம ராஜாஜிக்குத்தானே!

சோ:— என்ன பித்தலாட்டம் இது, ராஜாஜிதான் ரேஷனை முதன் முதல் எடுத்தார். ஆகவே அவர் மகான் என்கிறீங்க. ஆனால் உணவு மந்திரி கித்வாய் என்ன பேசியிருக்கிறார் தெரியுமோ? நான் தான் சென்னைக்கும், பஞ்சாபுக்கும், இந்த ரத்துமுறையை சிபார்சு செய்தேன். சென்னை ஏற்றுக் கொண்டது, பஞ்சாப் மறுத்து விட்டதென்று. இதற்கென்னசொல்றீங்க. மகான்யார்? கித்வாயா, ஆச்சாரியாரா? அதுமட்டுமில்லே, நேரு நான்தான் இதனைக் கொண்டுவர ஏற்பாடு செய்தேன் என்கிறாரே— என்ன சொல்றீங்க, இப்போது.

ர:— ஆனாலும் ராஜாஜிதானே அமுலாக்கினார்.

சோ:— அட பைத்தியக்காரரே, எல்லாம் பகவான் செயல், என்னாலே ஆவதொன்றுமில்லை, மந்திரி சபையையே கடவுள்தான் நடத்தறார், நான் எடுத்துக் கொண்டுள்ள இலாகா கடவுள் இலாகா என்றெல்லாம் பேசறார். அவர் செய்ததாக நீங்க ஏன் சொல்லனும்.

ர:— பின்னே, பகவானில்லாமல் என்ன நடக்கும்!

சோ:— அப்போ, இந்த மந்திரிகளுக்கு ஏன் தண்டத்திற்கு சம்பளம் கொடுத்து அழுகிறது. திருப்பதிக்கோ, பழனிக்கோ பணியார்டர் பண்ணி, திருத்துளாயும், பஞ்சாமிர்தம் மட்டும் இவர்களுக்கு வழங்கினால் போச்சு!

ர:— கணக்கப் பிள்ளை வம்புப் பேச்சு பேசறார்.

சோ:— பின்னே என்னங்க, ஒருத்தரை புகழ்வதற்கு அளவிருக்கனுமில்லே. ரேஷன் ஒழிஞ்சுதுன்னு சொன்னவுடனே, மலைமலையாக அரிசி [illegible] 'தினமணி' எழுதுகிறது. அது

காங்கிரசுக்கு எவ்வளவு கெட்ட பெயர். இத்தனை நாள் காங்கிரசால் வாங்க முடியாத கள்ள மார்க்கட் அரிசி யென்றுதானே அர்த்தம். இல்லே, இப்போ என்ன புது அறுவடை நடந்ததா, பகவான் அருளால், ஆச்சாரியார் பூத கணங்களை ஏவி, ஒரே இரவில், நடுவு நட்டு, களை யெடுத்து, பயிர் வளர்த்து அறுவடை செய்துவிட்டாரா? காங்கிரசின் கையாலாகாதத்தனத்தை அம்பலப் படுத்துகிற சேதியை, இப்படி விளம்பரப் படுத்துகிறது! இந்தமாதிரி ஏடுகளே, அவருக்கு இருக்கிற மரியாதையைக் கெடுத்து விடும் போலிருக்கு!

ர:- ரேஷன் கஷ்டம் தீர்த்து வைச்சது, ராஜாஜி காலத்திலே தானே!

சோ:- இதுக்காக காங்கிரசுக்கு என்னங்க பெருமை. சில விஷயங்கள் அப்படித்தாங்க. செய்யாம இருந்தால், பெரிய தப்பு—செய்தா பெரிய பாராட்டு கிடைக்காது. மல ஜலம் கழித்துவிட்டு, கால் கழுவாமே வந்தால், திட்டுவாங்க. கால் கழுவி விட்டு வந்தா, தம்பட்டம் அடித்து சொல்வதில்லே.

ர:- முதலியார் பையனும் அப்படி, இவரும் அவனுக்கு ஜோடி பரவாயில்லே.

சோ:- ஜோடியோ, ஜாடியோ— பின்னே என்னங்க — சோறு போடவேண்டியது சர்க்கார் கடமை — முடியாதபோது அது பெரிய விஷயம். அதைச் செய்கிற போது கீர்த்திக்குரிய விஷயமில்லையே!

ர:- ராஜாஜி வந்ததாலே தான் சுகம்வர்ரது — அது ஒத்துக்கத் தான் வேணும்.

சோ:- சுகம், மகான்கள் செய்கிற மந்திர ஜாலமானு, மக்கள் என்ன செய்வது? தேசம் சுபிட்சமாக இருக்கனும்னு, ராஜாஜியே இருக்கனும்னு, கடவுளைப் பிரார்த்தியுங்கோன்னு அவரே சொல்ரார். அது எப்படிங்க முடியும்?

ர:- ஏன் முடியாது?

சோ:- ஆண்டவன் புண்ணியத்திலே, அவருக்கு ஒண்ணும் வரவேண்டாம். நீண்ட நாள் இருக்கட்டும். ஆனால், அவருக்கு ஒண்ணு ஆயிட்டா, சுபிட்சமே கிடைக்காது. கார் செய்தவன் வந்தால் தான் கார் ஓடும்னு, எப்படிங்க முடியும்? அதனால்தான், திட்டம் போட்டு, அதன மூலம் ஆளனும், ஆள் பெயரைச் சொல்லி எத்தனை நாள் முடியும்னு கேக்கறுங்க!

ர:- சரி, இப்படிப் பேசரவா, தொகை வளர்ந்துண்டே போறது. கணக்கப் பிள்ளை பணந் தர்ரேளா.

சோ:- தாரமே, 'என்னுங்க— இருந்து வாங்கிக்கிட்டு போங்க ✲

புதிய வெளியீடு

# மக்கள் தீர்ப்பு

C. N. A.
எழுதியது.
✲

மக்களின் மனம்
ஒரு காலிப் பாண்டம்
என்று
அண்ணன் ஏசுகிறுன்.
மக்கள் தீர்ப்பு மகத்தானது
என்று
வாதாடுகிறுன், தம்பி.
தம்பி
தாக்கப்படுகிறுன்
மக்களால்!

இரண்டாம் பதிப்புகள்
—
ஜெபமாலை 0—8—0
சாது 0—8—0
கருத்து விளக்கச்
சிறு கதைகள்.
✲

மக்களாட்சி நாட்களிலே
அனைவரும் படிக்கவேண்டிய
அரசியல் கருத்து விளக்கக் கதை.
விலை 8 அணு.

அச்சில்:- வாழ்க்கைப் புயல்

கிடைக்குமிடம்:— பரிமளம் பதிப்பகம் 17-B, வரதுவாசல் தெரு, சின்ன காஞ்சிபுரம்.
வியாபாரிகளுக்கு 25 o/o கழிவு. V. P. P. இல்லை. தபால் செலவு தனி.



2-ம் பக்கத் தொடர்ச்சி

வரையில், கமிட்டியில்வேறு எதைப் பற்றியும் பேசக்கூடாது.

ர:- அங்கத்தினர்களே.

அங் 3:- உள்...பேசாதேள்வர்பஸ் வாங்கு!!

ர:- மிஸ்டர் கணபதி, நீங்க கூட......

அங். கணபதி:- ஒண்ணும் பேசாதீங்க. வாபஸ் விஷயம் முடியட்டும்.

ர:- என்னப்பா உத்திராபதி

அங். உத்திராபதி:- அதெப்படிங்க நீங்க சொல்லலாம்.

சி:- இருவரும் ஆச்சாரியாரில்லே—அவர் எதிர்க் கட்சிக்காரங்களைப் பிரிச்சுவிட்டு, பெரிய மனிதராகப் பார்க்கிறார். இவங்கதான் இருக்காங்களே, துதி பாட! அதே மாதிரி உங்களைப் பிரிச்சுவிடப் பார்க்கிறார்.

ர:- சிற்றம்பலம், இப்போ, என்ன செய்யனும்கிறே.

சி:- நான் என்ன சொல்றது— அங்கத்தினர்கள் சொல்றதை செய்யுங்க.

ர:- சரி, வாபஸ் வாங்கிக் கிட்டேன், இனி தீர்மானத்தைப் போடுங்க. இப்படி நாம் சண்டை போட்டுண்டா, எதிர்க் கட்சிக்காரா ஏளனம் செய்யமாட்டாளா—தயவு பண்ணுங்கோ.

சி:- தீர்மானம் போடுவோங்க. அதுக்கென்ன எதையாவது செஞ்சுதானே ஆகனும்.

★

ர:- முதலியார்வாள், எல்லாம் ஏற்பாடு பண்ணியாச்சு.

கங்காதர முதலியார்:- முனிசிபாலிடியிலே கூட தீர்மானம் பண்ணியாச்சு.

ர:- ராஜாஜியை கேசிலே பார்த்துன்னு கேட்டுண்டு வந்திருக்கேன்.

[அப்பொழுது, கங்காதரன் முதலியார் மகன் மாணிக்கவாசகம் உள்ளே வருகிறுன்]

க:- தம்பி, இப்படி வாடா. ஐயாவை நமஸ்காரம் பண்ணிக்கோ.

மாணிக்கவாசகம்:- வணக்கம்.

ர:- நல்லாயுசோடு இருக்க பகவான் அனுக்ரகம் பண்ணனும்.

க:- நாம் கட்டின பார்க்கை, யார் திறக்கிறு தெரியுமாடா.

மா:- தெரியும். ஆச்சாரியார் தானே.

ர:- ராஜாஜியே விஜயம் செய்கிற பாக்கியம் கிடைச்சுதே—அப்பா செய்த பூர்வ ஜென்ம புண்யம்தான்!

மா:- அவர் திறக்கல்லேன்னு, பார்க்கை திறக்க முடியாதா! பூஞ்செடியெல்லாம், எருக்கஞ் செடியாயிடும்—அப்படித்தானே.

ர:- என்ன பிள்ளையாண்டான் ஒரு மாதிரி பேசறுன்.

மா:- உண்மை, எப்போதுமே ஒரு மாதிரியாய்த்தான் தோணும். உங்களவங்க வேலையே இது காபிக் கடையிலிருந்து, கலெக்டர் ஆபீஸ் வரையிலே உள்ளவங்க எல்லாம் ஒரே மாதிரி பிரச்சாரம் — ராஜாஜி. மகான், மேதாவி! அப்படியே ஒரே அச்சிலே தயாரானது மாதிரி பேசறீங்க.

ர:- என்னப்பா, மாணிக்கவாசகம், மளமளன்னுபேசிண்டுபோறே, ராஜாஜியைப் பத்தி பொய்யாப் புகழ்கிறேம்னு சொல்றே.

மா:- இன்னைக்கு மட்டுமா சொல்ரேன். இது உங்க பழக்கம். ஆச்சாரியார், அரசியலில் அடியெடுத்து வைத்த நாளிலிருந்து. 1938ல் அவர் மந்திரி சபையமைத்த பொழுது இப்படித்தான்.

ர:- என்ன இப்படித்தான்.

மா: பதவி யேற்க மாட்டேன் என்று பசப்பித் திரிந்துவிட்டு, பிறகு பதவிக்கு வந்தார். இப்போ பஜ கோவிந்தம் எழுகியது போல, அப்பொழுது கண்ணன் காட்டிய வழியை எழுதினர். அவரது விளம்பர ஏஜண்ட்......

ர: ராஜாஜிக்கு விளம்பர ஏஜண்டா—அபச்சாரம்.

மா:- விளம்பர ஏஜண்ட் 'கல்கி' அப்பொழுது தனிப் பத்திரிகை வைத்தில்லை. ஆனந்த விகடனில், கண்டறியாதன கண்டோம் என்று எழுதினர், இப்பொழுது நடவாதது நடந்துவிட்டது என்று எழுதியது போல.

ர:- பிள்ளையாண்டான் பேசரதைப் பார்த்தா......

மா:- கருப்புச் சட்டையோ என்று கேட்கத் தோணும்; கருப்பு சட்டையோ, சிகப்பு சட்டையோ, எதுவேணுமானுலும் வைத்துக் கொள்ளும். அப்பொழுது கூடத் தான் ஆச்சாரியார், நான் வயதானவன் என்று அடிக்கடி கூறினர். இப்பொழுதும்தான் அதையே கூறுகிறார்.

ரா:- அவருக்கு ஆயிண்டு வர்ர வயது கூட பொய்யா......

மா:- வயதாகிறது. அதற்கு இத்தனை விளம்பரம் ஏன் என்று கேட்கிறேன். அது மட்டுமா? இப்போ கூட டெல்லியிலே அவர் இருந்த பொழுது, ஆச்சாரியார் ஏர் உழுகிறார்னு, கான்பூர் செருப்பு கால்களில் துலங்க, ஏர் உழுத படம், பத்திரிகைகளிலே வந்ததே, அது போல அப்பொழுதும், ஆச்சாரியார் எவ்வளவு எளிய வாழ்க்கை நடத்துகிறார் என்று, வேட்டி துவைப்பதாக, மூக்குக்கண்ணாடியோடு போட்டோ பிடித்துப் போட்டார்கள்.

ர:- இப்படி ஏன் வையரே— பெரியவாளை அப்படிப் பேசாதே.

மா:- அவர் வர, பெரும் பாக்கியம் செய்யனும்னு சொன்னீங்களே அதற்காகத்தான் சொன்னேன். அவர், காமராஜரோடு சண்டையிட்டபொழுது அப்பாவுக்கே, கார்டு எழுதி போட்டுண்டு கூட்டம் பேசினவர்தான்!

ர:- ராஜாஜியில்லேன்னு எல்லாம் தெரிந்திருக்கும்.

மா:- காங்கிரசும் உருப்பட்டிருக்கும்—நாடும் நலம் பெற்றிருக்கும்.

ர:- எப்படி?

மா:- காங்கிரஸ் எதிர்க்கட்சியாக இருந்திருக்கும். ஜனநாயத்தின் சாதகங்களை மட்டும் அனுபவித்த அவர்கள் அதன் பாதகங்களைக்கூட உணர்ந்திருப்பர். நல்லபுத்தி வந்திருக்கும்.

க:- டே, என்னடா, சாமியண்டை ஏகமாகப் பேசரே. இவன் இப்படித்தாங்க. எல்லாம் பேசுரியே, ராஜாஜி வந்தாரு — கறைவரலியா.

மா:- ஏப்பா, அவர்தான் குல ஒற்றுமையாலே, அப்படிப் பேசரார். நீங்களும் ஏன் அப்படி? மறை பெய்யாமலிருப்பது நம்ம

(8-ம் பக்கம் பார்க்க)




Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.

310

310
3.52

# திராவிடநாடு



## வாழிய 'நாடு!'

[கண்ணதாசன்]

வீழ்ந்தவர் எழவும் விழுப்பம் பெறவும்
வேல்கொடுதானை போர் முழங்கி ல்போல்
ஆழ்ந்த சிந்தனைசொல் அறிவுப் பொருள்கள்
[illegible] தரப் போன் ஏடே! நாடே!

பழமைக் காட்டை அடியோடு அழிக்கும்
பணியில் புகுந்தாய் 'பதினோராண்டு'!
மடமை நீங்கியால் மானிடவர்க்கம்
வாழச்செய்தாய் மலைபோல் ஈண்டு!

ஆற்றல் மறவர் வாழப்பாதை
அமைத்துத் தந்தாய்; மேலோர் என்போர்
தூற்றல் கேட்டும் துவளா நெஞ்சம்
துணையாய்க் கொண்டாய்! வாழி! வாழி!!

மலர் [illegible] | 6—7—52 | இதழ் 1.

விலை: இரண்டணா

# எது நல்லாட்சி?

"கஜானாவின் காவலன் நான். கடமையினின்றும் தவறிவிட்டேன். பட்ஜட் விபரத்தை, தவறிச் சொல்லிவிட்டேன். தவறுதான், அது. மறைக்கவில்லை; மறைக்க விரும்பவுமில்லை. ஏனெனில், நான் செய்தது தவறு என்பதை உணர்கிறேன். இத்தவறால், எவ்வளவுகேடு, நாட்டுக்கேற்படும் என்பது எனக்குத் தெரியும். ஆகவே, சபையினரே! பொறுப்பைச் சரிவரக் காக்கத் தவறிய என்னை, அனுமதியுங்கள். மந்திரியாக இருக்க இனி என் மனச்சாட்சி இடந்தராது. நான், இனி இருக்கவும் கூடாது. விலகிக் கொள்கிறேன்!"

இங்கிலாந்தின் பொக்கிஷ மந்திரியாக இருந்த டால்டன், இவ்வண்ணம், லண்டன் பார்லிமெண்டிலே வெளியிட்டார். அவரோ பொக்கிஷ மந்திரி! பொக்கிஷத்துக்கு எப்படி யெப்படியெல்லாம பணத்தைக் குவிக்கலாம் என்பதை யோசித்து, அதன்படி செய்யவேண்டியவர். வரி செலுத்தக்கூடியோருக்கு அதிக வரி போட்டும், எந்தப் பொருள் மீது வரி போட்டால் தாங்கும் என்பதை அறிந்தும், தக்க நடவடிக்கைகளைச்—செய்யும், மந்திரி. அவர் போடும் திட்டங்கள், இரகசியமாக வெளிவருதல் கூடாது. பட்ஜட்டின் போதுதான், சபைக்குத் தெரிவிக்கப்படவேண்டும். இரகசியம் முன்னரே வெளியாகுமேயானால், வரி கொடுக்க வேண்டியோர் தப்பி விடுவரே! ஒரு பொருள்மீது வரிவிதிப்பதெனறால், அந்த வரிபோட முடியாமல தந்திர சாகசங்களில், ஈடுபடுவரே, வரிதர வேண்டியவர்கள். இதனால்தான், நாட்டின் ஆட்சி முறையை வரையறுக்கும் 'பட்ஜட்' கூட்டத்திலன்றி, இந்த விஷயங்களை வெளியிடுதல் கூடாதென்பர். ஆனால், டால்டனோ, தனது பட்ஜட் பற்றிய செய்தியை, எப்படியோ நழுவவிட்டுவிட்டார். "ஸ்டார்" எனும் தினசரி இதழும் இந்த ரகசியத்தை பிரசுரம் செய்துவிட்டது. பார்லிமெண்டு உறுப்பினர்கள் திகைக்கிறார்கள்! பத்திரிகையிலோ, செய்தி வந்திருக்கிறது!!

இந்தத் தவறின் விளைவுகளையும் சர்க்காரின் வரவு செலவுத் திட்டம் "வெளியானதால்", அது எவ்வளவு தொல்லைகளை உண்டாக்கும் என்பதை உணர்ந்திருந்ததாலும், டால்டன், தாமே பார்லிமெண்டில், தனது தவறை அறிவித்து, பொக்கிஷ மந்திரி பொறுப்பிலிருந்தும் விலகினார்! இது, இங்கிலாந்தில்!! சர்க்காருக்காக தனது பதவியைத் துச்சமென உதறினார் — ஆடம்பரமாக இருந்துவந்த இடத்திலிருந்து 'அசடு' பட்டம் கட்டிக்கொண்டு விலக நேர்ந்ததென்பது வேதனையான நிகழ்ச்சிதான்! ஆனால், அந்த வேதனையைவிட, அதனால் நாடு பாதிக்கப்படுவது மிக அதிகமன்றோ? இதை உணர்ந்தார், அவர். விடைபெற்றுக்கொண்டார், மந்திரி பதவியிலிருந்து. அதன் மூலம், தனது தொழிற்கட்சிக்கு புது கவுரவத்தைப் பெற்றுத்தந்தார். "தவறிழைத்தேன்—ஆகவே விலகுவேன்"— பாராட்டினர், எதிர்கட்சியினரும், அவரது குணப்பண்பை.

இத்தகைய, நாட்டு நலம் விரும்பிகள், இருக்கிறார்கள் மேலை நாடுகளில்! ஆனால், இங்கே? செய்த தவறை இல்லையென்று சொல்லி, எப்படியாவது 'கிடைத்த இடத்தை' நழுவ விடக் கூடாது என்று தவிக்கிறார்கள்.

சென்னை சர்க்கார், தமது பட்ஜட்டில், மூன்று புது வரிகளைக் கொண்டு வந்திருக்கிறார்களே! இந்தப் புது வரிகளைப் பற்றிய தகவல், பட்ஜட் கூட்டம் கூடுவதற்கு முன்பே, "மெயில்" போன்ற பத்திரிகைகளில் வந்துவிட்டது. 'பெட்ரோலுக்கு அதிக வரி போடப்படும்' என்று வெளிவந்திருந்தது. அமது ரகசியம் இவ்விதம் வெளிவந்துவிட்டது என்பதை விளக்கி, ஆகவே அவசரச் சட்டம் கொண்டு வருகிறோம் என்று மேற்படி வரிக்காக ஒரு சட்டத்தையும் கொணர்ந்தனர், ஆளவந்தவர்கள்.

பட்ஜட் ரகசியம் வெளியாகிவிட்டது—இதை, சர்க்காரிலிருப்போர் உணர்ந்துவிட்டதன் 'அறிகுறி', மேற்படி அவசரச் சட்டம்.

'பட்ஜட்' ரகசியம் வெளிவருவதென்றால், அது எளிதல்ல. மந்திரிமார்களுக்கும், மிகப் பொறுப்பான வெகுசில அதிகாரிகளுக்கும் மட்டுமே இந்த ரகசியங்கள் தெரிந்திருக்க முடியும்.

இருந்தும், இரகசியம் பத்திரிகைகளில் வெளிவந்துவிட்டது!

இதைக் கண்டதும், நலம் விரும்பும் சர்க்காராக இருந்தால், என்ன செய்திருக்கும்? 'டால்டன்' பாதையை விரும்பும்! அல்லது 'எவர் அம்பலமாக்கியது' என்று அறிந்து அவர் மீது நடவடிக்கை எடுக்கும். இதுவே, கொஞ்சம் அவமானகரமானதுதான். ஏனெனில், எவர் அம்பலமாக்கினரோ, அவரே வலிய வந்து தன் தவறை ஒத்துக் கொண்டிருக்க வேண்டும்—டால்டனைப் போல. அந்த அளவு பெருந்தன்மை, காங்கிரஸ் நண்பர்களிடம் இல்லை! ஆனால் 'பெருந்தன்மையும் நாட்டு நலமுமே' தமது ஆசையென்று கூறித் திரியும் ஆச்சாரியாராவது, தனது நண்பர்களை விசாரித்து, தக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும். செய்தாரா? நயமுள்ளி, முற்றுந் துறந்தவர் என்றெல்லாம் புகழப்படும் 'சிரேஷ்டர்', தமது சிந்தையைத் திருப்பினாரில்லை.

திருப்பாததுமட்டுமல்ல, 'இது தவறு' எனக் கூறிச் சட்டசபையில் பிரச்னை கிளப்பி எதிர்க் கட்சியினர், பேசுமளவுக்கு, நிலைமையையும் வளர்த்துக்கொண்டிருக்கிறார்.

டால்டன்பற்றிப் பேச சர்ச்சில் காரசாரமாக வந்தாரா! ஆனால் ஏமாந்தார், அங்கு ராஜினாமாவைக் கேட்டதும்.

ஆனால், இங்கு? எதிர்க்கட்சிக்காரர்கள் வாதாடுமளவுக்கு நிலைமையை வளர்த்துக் கொண்டது மட்டுமல்ல — நிமிரோடும் பேசியிருக்கிறார். அலட்சியமாக, மிகவும் சாவ சாதாரணமானதுபோல. கருதிப்பேசியிருக்கிறார்.

அலட்சியம்! ஆச்சாரியாருக்கு. ஆனால் டால்டனோ? பதறினார்—துடித்தார்.

நாட்டுநலம், அவரை அவ்விதம் செய்யச் செய்தது—நீதியும் முறையும் நடைமுறையிலிருக்கவேண்டுமென்று விரும்பினார். பதவியைப் பெரிதெனக் கருதினாரில்லை.

ஆனால், ஆச்சாரியாரோ? பிரசித்தமான தவறு என்று அறிந்தும் பரபரப்பு அடையவில்லை — பரிகாசம் செய்யத் தவறவுமில்லை. அதே நேரத்தில், "நானே மக்களுக்கு நன்மை செய்ய வந்தவன்" எனச் சொல்லிக்கொள்ளவும் தயங்கவில்லை!

★



# பட்ஜட் மகத்தான துரோகம்!

"வந்துவிட்டார்! பறந்துவிடும்!!" என்றனர், பரவசத்தோடு.

"பெய்கிறது மழை! பெருமையே பெருமை!!" என்று காவடி தூக்கி ஆடின, தேசிய ஏடுகள்.

"சுபிட்சோதயம்! இன்போதயம்!!" என்று படம் போட்டு, 'பகலவன் வந்தான் இருள் அகலும்' என்றன தேசிய வார ஏடுகள்.

"பஞ்சம் அகலும்! பசி பறக்கும்! வரி குறையும்! வாழ முடியும்!" என்ற நம்பிக்கையைத் தமது நாவால் பரப்பினர்—இடங்கிடைத்த போதெல்லாம், நமது 'சுயராஜ்ய நண்பர்கள்.

ஆனால்! அவ்வளவு போற்றித் துதிக்கப்பட்ட அன்பர் ஆச்சாரியார், தமது ஆட்சியின் முதல் "பட்ஜட்டை" சமர்ப்பித்திருக்கிறார், தமது 'முன்னோடும் பிள்ளை' மூலம். அந்த வரவுசெலவுத் திட்டத்தைப் பாருங்கள். 'கூர்ந்து பாருங்கள். கூர்த்த மதியில் முளைத்ததா, அது! அல்லது சீர்த்த சிந்தனையாளரின் 'வெற்றிகர' பட்ஜட் என்றுதான் செப்பமுடியுமா! 'பற்றுக்குறை' என்ற பல்லவி— 'பணம் தேவை' என்ற அனுபல்லவி — ஆகவே 'புதுவரி தாரீர்' என்று சரணம்.

புதுவரிகள் போடப் போகிறாராம்! அதுவும், கோடியாக மக்களைப் பாதிக்கும் புது வரிகள். 'பஸ் சார்ஜ், மைலுக்கு ஒருதம்பிடி அதிகமாகுமாம்! நீர்ப்பாசன அபிவிருத்திக்கும் வரியாம்!! அதிகவரிகள், முளைக்கின்றன 1938 ஆச்சாரியாரை மறந்திருக்கமாட்டீர்கள்! அவர் அன்று சுமத்திய வரிப்பளு, கடைக்குச் செல்லும்போதும், 'பில்'லைக்கூட்டும் போதும், நம் 'பை' களைத் தடவும் போதும், நமக்கு அடிக்கடி கவனத்துக்குவராமற்போகாது. அத்தகைய "விற்பனை வரி"யைச் சுமத்திய 'வீரர்,' அவர். இப்போது மேலும் வரிகளைச் சுமத்துகிறார்! மூன்றரை கோடி ரூபாய் தேவையாம்—அதற்குப் புது வரிகளாம். இந்தப் புது வரிகள் செலுத்துவதால் புதுமைகள் கிடைக்கலாம் என்று நினைப்பீர்கள். மீண்டும் ஒருமுறை 'பட்ஜட் விபரத்தை'ப் பாருங்கள், தின இதழ்களில். எதுவும் இல்லை! புது நன்மைகள் இம்மியும் இல்லை!! ஆனால், வரிகள், வருகின்றன. அதுவும் எப்படி? ஏழை மக்களைப் பாதிக்கும்படி! பஸ்சார்ஜ் உயர்கிறது. சார்ஜை உயர்த்துவது பஸ் முதலாளியல்ல; சர்க்கார். அந்தந்த பஸ் முதலாளிகளின் லாபத்தில், கை வைக்கலாம். செய்வாரா, ஆச்சாரியார்? அதுவும் இப்போது! ஆகவே, மக்கள் 'பையில்' கை போடுகிறார்.

கரம்பையும் காட்டையும் திருத்த உதவுவது சர்க்காரின் கடமையென அறிவீர்கள்—நாம்செலுத்தும்நிலவரியும் அதற்குத்தான் என்று கூறப்படுகிறது. ஆனால், இவர், அதற்கும் பணம் கேட்கிறார்! தனியாக வரி உண்டாம்! இவ்வளவு வரியும் எதற்குத் தெரியுமோ? புது நன்மைகளுக்கல்ல! இவ்வளவு வரிகளும் வந்தால்தான் சர்க்காரின் நிதி நிலைமை சரியாக முடியுமாம். பஞ்சத்துக்கும், ஐந்து வருடத் திட்டத்துக்கும் பணத்தை ஒதுக்க முடியுமாம், கூறுகிறார், அவர்! ஆனால், இந்த வரிகள் போடாமல், இந்த $3\frac{1}{2}$ கோடியையும் சரிப்படுத்த முடியாதா? முடியும்—வழியுமிருக்கிறது. "ராயலசீமா பஞ்சத்துக்கு நிறையப்பணம் செலவழித்திருக்கிறோம் — ஆனால் நீங்கள் 25 லட்சம்தான் தந்தீர்கள்."

(அடுத்த பக்கம் பார்க்க)

## என்ன தமிழ், பாரீர்!

★

"ஜாதியாச்சாரம் கெடக் கூடாது. வர்ணாஸ்ரமதர்மம் ஒழியக்கூடாது"

—இப்படி யாராவது பேசினால் தப்பமுடியுமோ எம்மிடமிருந்து என்று பேசுவீர்கள்! 'இருபதாம் நூற்றாண்டு தெரியுமோ?' என்று குரல் எழுப்புவீர்கள்!

"கழுதையும் குதிரையும் ஒன்றாக முடியுமோ? முடியாதல்லவா! அதைப் போலத்தான் சூத்ரனும் பிராம்மணனும் ஒன்றாகணும்கிறதும்......"

—தப்பித்தவறி ஒரு வைதீகர், இவ்விதம், கூறினால் அவரைப் பார்த்துகெக்கலிப்பீர்கள்! உங்களிடமிருந்து அவர் எளிதில் தப்புவதும் அரிதுதான். ரயிலிலோ, வழியிலோ, யாராவது பேசினாலும் சிம்மமெனக் கிளம்புவீர்!

"சூத்ரண்டா, நீ? நோக்கேதுக்கு படிப்பும் பட்டமும்? போடா, போ! போய் கலப்பையை தூக்கு—க்ஷவரத்தொழிலைக் கத்துக்கோ—மாடு மேய்....."

—இவ்விதம், கிராமக் குருக்கள், கூறினால், "போய்யா! குள்ளநரி" என்று கூறும் ஆவேசம் கொண்டுவிட்டார்கள், நம்மவர்கள்! எங்கும் அறிவுமீது ஆசை வளர்ந்துவிட்டது! கீழ்சாதி எனப்பட்டோரெல்லாம் பட்டம் பதவி பெற்று, உலக அரங்கில் திகழ்கிறார்கள். தெரியுமா? அம்பேத்கார் யார்; சிவசண்முகம் எந்த ஜாதி என்று வீரத்தோடு பேசுவீர்கள்—பேசியும் வருகிறோம்! படிப்பு வேண்டும்—படிக்க வேண்டும் — கல்லூரியில் இடம் வேண்டும்—கம்யூனல் ஜி. ஓ வேண்டும் — இவ்விதமெலாம் போராடுகிறோம். புதுவாழ்வு பெறத் துடிக்கிறோம்! இந்த நேரத்தில்,

"நீங்களெல்லாம் மேல்படிப்பை எண்ணி ஓடக்கூடாது. உங்கள் தொழிலையே செய்யவேண்டும். வண்ணான், வண்ணானாகவே இருப்பதில் பெருமை கொள்ளவேண்டும். குயவன், சட்டிபானை செய்வதுதான் கவுரவம். நாவிதன், க்ஷவரத்தொழில்தான் செய்யவேண்டும்"

என்று எவராவது கூறினால், என்னவென்று நினைப்பீர்கள்? கோபம் படரும்! அரும்புமீசை துடிக்கும்! அனலும் புனலும் எழும்பும் கண்களில்! ஆனால் தோழர்களே, இவ்விதத் துணிவோடு,பேசியிருக்கிறார் அன்பர் ஆச்சாரியார் திருவான்மியூர் சலவைத் தொழிலாளர் மாநாட்டில், கண்டீர்களா? துணிவோடு பேசுகிறார்.

(அடுத்த பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 29—6—52 [ஞாயிறு

# புயலில் சிக்கிய படகு

★

வணக்கம்

தோழர்களே, வணக்கம்.

பெருமூச்சுகளுக்கிடையிலே, பெருமிதம் பெறுகின்றது—உங்கள் ஏடு. இன்று பதினோராவது வயது—ஆரம்பமாகிவிட்டது. உங்கள் 'நாடு' உலவத் துவங்கியது முதல், இன்று வரை அது தாண்டி வந்திருக்கும் தொல்லைகளையும், அவைகளைத் தாங்கச்செய்த உங்களது அன்பின் எல்லையையும் நினைக்கும் போது பெருமூச்சும் புன்னகையும்போட்டியிடுகின்றன. கொள்கைக்காகப் போராடும், நமது ஏடுகள் — நெருக்கடி நெருப்புப் பந்தங்களால் அடிக்கடி தாக்கப்படுவது, நீங்களெல்லாம் அறிந்ததே அவையனைத்தையும் தூசுகளாகத் தென்படுமாறு செய்தது, வாசகத் தோழர்களாகிய உங்களது, அன்பும் ஆதரவுமதான். அந்த இன்பநினைவுகளை இதயத்திலே ஏந்திக்கொண்டு, உங்களுக்கெல்லாம், தனது அன்பு வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

மகிழ்ச்சிகரமான இந்தநேரத்தில், தனது ஏஜண்டுத்தோழர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் தனது நன்றி கலந்த அன்பையும் தெரிவித்துக் கொள்கிறது. உங்களது ஆர்வமும் கடமையும் தான், ஏட்டின் வாழ்வுக்கு ஊன்றுகோலாகும். இதைக்கவனத்தில் நிறுத்தி, ஏட்டின் வளர்ச்சியில் இன்பம் காண்போர், நமது சந்தாதாரர்கள் என்பதால், இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படுகிறது, நமக்கு. அதே நேரத்தில், அவர்களைப் போல, இல்லையே ஏஜண்டுத் தோழர்களில் பலர் என்று நினைக்கும் போது, இதயத்திலும் எதிர்காலத்திலும் இருள்பட்டதுபோலிருக்கிறது. இந்த நிலையை நமது ஏஜண்டுத் தோழர்கள், எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

புயலில் சிக்கிய படகு, இன்றைய நிலை. இந்த நெருக்கடியிலிருந்து 'ஏடு' மீளவேண்டுமானால், ஏஜண்டுத்தோழர்களுடைய,ஒத்துழைப்பு மிகமிக அதிகமாகவும் அவசரமாகவும் கிடைத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

"இக்குறை நீக்குவீர்!" என்று ஏஜண்டு தோழர்களை வேண்டிக் கொண்டு, இதுவரை ஊக்கமும் ஒத்துழைப்பும் தந்து வரும் அனைவருக்கும் எமது வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்—மகிழ்வோடு! வளர்க அறிவு! வருக திராவிடம்!

**

3-ம் பக்கத் தொடர்ச்சி

"ஜாதி—தொழில் முறையால்தான் ஏற்பட்டது." என்று, போதிக்கிறார். வேதமோதிக் கொண்டு ஆற்றங்கரையிலே இருக்கவேண்டியவர், அரசு பீடத்தில் இருக்கிறார்! ஆனால் பிறரைப் பார்த்துப் போதிக்கிறார்—'படித்து முன்னுக்கு வருவதைவிடக் குலத் தொழிலைச் செய்யுங்கள்' என்று கூறுகிறார். நாம் இருக்கிறோம்!, "அவர் இப்படியெல்லாம் பேச முடியும்?" என்று கேட்கும் நீங்களும் செத்துவிடவில்லை ஆனால், அவர் பேசுகிறார். துணிவாகப் பேசுகிறார். படிப்பு எதற்காம்! பரம்பரைத் தொழிலைதான் செய்ய வேண்டுமாம்! கூறுகிறார் வேதமோதி! கூறும் தைரியத்தைப் பாருங்கள். புது உலகம் விழித்துவிட்டது என்பீர்! ஆனால், அவர் கேலி செய்கிறார், அந்தப் புது உலகத்தை 'ஜ மகம் ரீது' என்கிறார்—அந்தந்த ஜாதி அதற்குள்ள தொழிலைச் செய்யவேண்டும் என்கிறார். நஞ்சைப் பாயாச போலப் பரிமாறுகிறார்! பாரீர் அவருக்குள்ள துணிச்சலை. பாரதப் பிரசங்கியாருக்கு எங்கிருந்து வந்தது இவ்வளவு துணிவு? மார்தட்டும் நீங்களும், தோள் தட்டும் வீரரும் உலவுகிறீர்கள் நாட்டில்—சுதந்திரப் பிரியர்கள் பாடிய சமத்துவ பாடல்களும் இன்னும், இருக்கத்தான் இருக்கின்றன. ஆனால் அவர் அஞ்சினாரில்லை — அச்சம் கொண்டாரில்லை துணிந்து பேசுகிறார். ஏது இந்தத் துணிவு! எங்கிருந்து பெற்றார்? என்னுங்கள்! எண்ணுங்கள்!!

✲

முன் பக்கத் தொடர்ச்சி

இது போதுமோ? ஆகவே, எமது நிதி நிலைமை சரியாக இல்லை, பணம் கொடுங்கள்!" என்று கேட்கலாம். யாரை? மத்ய சர்க்காரை! 'இதென்னப்பா, எதற்கெடுத்தாலும் நீங்கள் மத்ய சர்க்காரைத் தானே காட்டுவது வழக்கம்' என்று கேட்கிறீர்களா? ஐயன்மீர்! இந்த யோசனை, எமது சரக்கல்ல. "இந்து" எழுதுகிறது. இன்னும் காரசாரமாகக் கேட்கிறது!

"இந்திய சர்க்காரைக் கேட்டு இந்தத் தொகையைப் பெறலாம்! சென்னைக்கு அப்படியொன்றும், தாராளமாகவும் செய்துவிடவில்லை மத்ய சர்க்கார். ஆகவே மத்ய சர்க்காரைக் கேட்டு இத் தொகையை ஈடு செய்து கொள்ளலாம் இதற்கேன் புதுவரிகள்?"

என்று, "இந்து" கேட்கிறது—'மித்திரனுய', கண்களைக் கசக்குகிறது. பணம்பெற வழியிருக்கிறது! ஆனால் பாரத புத்திரர், புதுவரிகளைப் போடுகிறார்!! அதுவும் மக்களை நேரிடையாகப் பாதிக்கும், புது வரிகள்!!

என்னவென்று சொல்வது இதனை? இத்தகையவரின் எண்ணத்தைத்தான் எப்படி மதிப்பிடுவது நாம்! வாழ்த்தும் பாராட்டும் குவிக்கதைக் கண்டோமே—இவருக்கு? இன்னும் சிலர் செப்புகின்றனரே, "ராஜாஜியின் நிர்வாகத் திறமை யாருக்கு வரும்?" என்று. அவர்களைக் கேட்கிறோம். இதுவா, திறமை? புதுவரிகளா 'போக்குவரத்து திறமையென்ன, வேண்டும்! 'கொடு! கொடு!!' என்று, திருடனும் தான் மிரட்டுகிறான், கையிலே கத்தியையும் தடியையும் வைத்துக் கொண்டு. அதிகாரக் கத்தியைக் காட்டி வரி வசூலிக்க திறமை என்ன தேவையாம்! கோபிப்பீர்—இவ்விதம் கேட்டால் — "எமது ராஜாஜிக்கு திறமையில்லையென்று செப்புகிறாயோ?" என்பீர் கோபத்தோடு. ஒத்துக்கொள்கிறோம், — திறமைசாலி என்று. அவ்விதமானால், அத்தகைய திறமைசாலிக்கு, "இந்து" கூறும் யோசனை, மனதில் படுகிறதா முடியாதென்று கூற முடியுமா? மனதிலும் படும், ஆம்

(9-ம் பக்கம் பார்க்க)



8-ம் பக்கத் தொடர்ச்சி

வழக்கம்போல விற்றவிலைக்கே உணவுப் பொருள் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இங்கே குறைவான விலையில விற்கும்போது, வெளியில்விற்கும் அரிசியை அதிக விலைக்கு வாங்க எவரும் விரும்ப மாட்டார்கள். அதனால், அதிகவிலையில் கொள்ளைலாபமடிக்க விரும்பியோருக்கு வியாபாரம் நடக்காது! உடனே, அவர்களும் நியாயவிலை கடைகளில் விற்கும் விலைக்குத் தர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்"

இவ்விதம், ஆச்சாரியாரும், அவரது, 'பஜனைக்கோஷ்டி'யும் தெரிவித்து வருகின்றன.

ஆனால் இந்த நியாயவிலைக் கடைகள், எவ்விதம் உள்ளன, தெரியுமா? நமது தோழர், திருக்காரவாசல் எனும் ஊரில சேகரித்த தகவல் இது.

*

"இன்று நல்ல விற்பனை என்று சொன்னார் — இங்கு நியாயவிலைக் கடைமூலம் வியாபாரம் செய்யும் கடைக்காரர். "எப்படீங்க?" என்று கேட்டேன். "ரேஷன் காலத்திலே கூட இந்தக் கிராமத்திலே, இவ்வளவு ரூபாய்க்குவித்தது இல்லிங்க!" என்றார், மீண்டும், அவர் வியப்போடு, மீண்டும் 'எப்படி' என்று கேட்டேன். "எப்படிங்களா—தேவகோட்டை (ராமநாதபுரம் ஜில்லா) யிலிருந்து சிலபேர் வந்தாங்க அவர்களால் தாங்க......" என்றார், அவர். எனக்குத் திகைப்பாக இருந்தது."

*

இந்த லட்சணத்திலிருக்கிறது நியாயவிலைக் கடைகளின் நிலைமை! அங்கே தரப்படும் அரிசியை, அங்கு தரப்படும் விலைக்கு வாங்கி, வெளியில் அதிகவிலைக்கு விற்க எத்தனிக்கிறார்கள், எத்தர்கள். நேற்றுவரை தூங்கிக்கிடந்த 'கூபன்'களெல்லாம், நியாயவிலைக்கடைகளில் குவிக்கப் படுகின்றன. இதற்கான காரியங்களும், தந்திரமாகச் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், ஆச்சாரியார் சொல்கிறார், "விலை ஏறினால் இந்த நியாயவிலைக் கடைகள் மூலமாகத் தகர்த்துவிடுவோம் என்பதாக!"

இந்த நியாயவிலைக் கடைகள், மக்களுக்குத் தேவையான அரிசியைத் தருமானால் இருக்கின்றனவா என்றால், உரியான விளக்கம், தெளிவாகத் தரப்படவில்லை சர்க்காரால். நியாயவிலை கடைகளில் அரிசி அதிகமாக இருக்கவேண்டுமானால், சர்க்கார் வசம் நிறைய "ஸ்டாக்" இருக்க வேண்டும். நிறைய "ஸ்டாக்" இருந்தால், ஏனிந்த தொல்லைகள் முளைக்கப் போகின்றன. கவலையில்லாமலிருக்கலாமே! சர்க்கார் 'வசம்" நிறைய "ஸ்டாக்" இல்லை — இனிமேல் கொள்முதல் செய்யும் திட்டமும் இல்லை இந்நிலையில், இந்த நியாயவிலைக் கடைகளை நம்பி என்னபயன்? மண்குதிரையை நம்பி ஆற்றிலே இறங்கலாமென்கிறார் அன்பர் ஆச்சாரியார்!

*

பற்றுக்குறைப் பிரதேசங்களில் இருக்கும் மக்கள், 'அதிகவிலை' கொடுத்து அரிசி வாங்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், அங்குள்ள வியாபாரச் சூதாடிகளோ, பணத்தைக் குவிக்கிறார்கள்.

உபரிஜில்லாவிலிருக்கும் சாதாரண மக்களும் — அவதிப்படுகிறார்கள், தத்தமது தேவைக்கான நெல் இல்லாமல்.

ஆனால், பெரிய நிலப் பிரபுக்களோ, தாம சேமித்துவைத்திருந்த நெல்லையெல்லாம், விற்று, பணம் திரட்டுகிறார்கள்.

புலிகள் அவிழ்த்துவிடப்படும் வேலை, இது—என்றோம்.

அதுவே, நடைபெறுகிறது, இப்போது.

தஞ்சைத் தரணியிலே, சாதாரணமாக, இந்தக் காலத்தில், குறுவை சாகுபடி நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இந்த ஆண்டோ! இன்னும், சாகுபடி துவக்கப்படவில்லை.

ஏனெனில், மேட்டூர் அணைக்கட்டு திறக்கப்படவில்லை. தண்ணீர், வரவில்லை.

மேட்டூரிலோ, தண்ணீர், இல்லை —போதுமான அளவு, இந்த நெருக்கடியால் தாக்குண்டு கிடக்கின்றனர் —சாதாரண விவசாயிகளும் மக்களும்.

வயல்வறண்டு கிடக்கிறது!—விரைவில் நெல் உற்பத்தியாகும் நிலை இல்லை.

இந்தக் காட்சியையும், இப்போது ஏற்பட்டிருக்கும் திண்டாட்டத்தையும் காணும்போது மிக மிகப் பயப்படுகிறோம்.

பெருமீன்கள், சிறு மீன்களை விழுங்கின்றன! திமிங்கிலங்களின் கையில், சிறுமீன்களின் வாழ்வை ஒப்படைத்துவிட்டது—புதுரேஷன் கொள்கை. ஏழை மாள்கிறார்கள்! பணச்சூதாடிகளும் நிலப்பிரபுக்களும் கொள்ளை லாபம் குவிக்கிறார்கள்!!

"பஜகோவிந்தம்! பஜகோவிந்தம்!! வியாபாரிகளே—பரந்த நோக்கம் பெறுங்கள்" என்று போதனை விடுத்தார், ஆச்சாரியார். இரத்தம் குடிக்கும் புலியிடம் வேதாந்தம் பேசினானாமே வேதியனொருவன்—கதையில். அதேநிலை, இன்று. அவதியும் வேதனையும் மக்களுக்கு. அன்பர் ஆச்சாரியாரோ, பவனி, வந்துகொண்டிருக்கிறார். ✲

கிளைக் கழகத் தோழர்களே!

வாங்கிவிட்டீர்களா?

**தீர்மானங்கள்**

— இரண்டாம் பதிப்பு 0—1—0

**சட்ட திட்டம்** 0—2—0

விபரங்கட்கு:-

பொறுப்பாளர் : ராயபுரம்

தி. மு. க. தலைமைநிலையம் : சென்னை 13

# வேங்கையிடம் வேதாந்தம் பேசுகிறார் ஆச்சாரியார்!

—அண்ணா—

"இரண்டு பிரபல வியாபாரிகளை நான், தஞ்சை நகரில், தங்கியிருந்த நேரத்தில் சந்திக்க நேர்ந்தது. அவர்களிருவரும் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் உடுமலைப்பேட்டை — மற்றொருவர் கோவையைச் சேர்ந்தவர். "எங்கே வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "நெல், கொள்முதல்செய்து போவதற்காக"—என்றனர். சிறிது பழகியதற்குள், அவர்களிருவரும், ஊருக்குமட்டுமல்ல; வியாபாரத்துக்கும் புதிது என்பதைத் தெரிந்துகொண்டேன். உணவுக்கட்டுப்பாடு ரத்தானதும், பணத்தை எடுத்துக்கொண்டு, சில தரகர்களோடு, நெல் களஞ்சியம் நோக்கி வந்திருக்கிறார்கள்! "மூட்டை என்ன விலைக்கு, வாங்குகிறீர்கள்?"—என், கேள்வி, இது. "ரூபாய் இருபது!"

"இருபதுக்கு வாங்கி, அதை ஏற்றிக்கொண்டு சென்று, உங்களூரில் விற்கும்போது, விலை நிறைய வைக்கவேண்டுமே!"

"ஆமாம்!"

"என்ன, விலை, வைப்பீர்கள்?"

இந்தக் கேள்விக்கு, அவர்களிருவரும் பதில் தரவில்லை. சிரித்தார்கள், என்னைப் பார்த்து.

*

தஞ்சை மாவட்டத்துக்கு சென்றிருக்கும் நமது அலுவலகத்தோழர் ஆச்சாரியாரின் ரேஷன் ஒழிப்பு சம்பந்தமாக, சில தகவல்களைச் சேகரித்து அனுப்பியுள்ளார். அதில், ஒரு துண்டுதான், நாம் மேலே தந்திருப்பது. தஞ்சை—தென்னாட்டின் நெற்களஞ்சியம்! அங்கே. பற்றாக்குறை ஜில்லாக்களைச் சேர்ந்த 'பணமூட்டைகள்' பவனி வந்து கொண்டுள்ளனராம். பற்பல இடங்களுக்கும், ஆளம்புகளை ஏவி, கிடைத்தவரைக்கும் நெல் கொள்முதல் செய்யப்படுகிறதாம். இந்தப் போட்டியால், நெல்லின் விலை, மூட்டை ஒன்றுக்கு 20, 21, 22 என்று ஏறிக்கொண்டிருக்கிறதாம். இவ்வளவு விலை கொடுத்து, இவர்கள் வாங்குகிறார்கள்! எதற்கு? தமது ஊருக்குக்கொண்டுபோய் வியாபாரம் செய்வதற்கு! கண்ட்ரோல் இருந்தபோது, மூட்டை ஒன்றுக்கு ரூ 13—4—0 (முதல் ரகம்) என்ற விலையிருந்தது. இதே விலைக்கு, சர்க்காரும், கொள்முதல் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், ஆச்சாரியாரின் நடவடிக்கைக்குப்பிறகு! ரேஷன் ரத்து ஆனவுடன்! கொள்முதல் விலை—ஏறுகிறது. ரூ 13-4-0 லிருந்து 20, 21, 22, ஆகிறது! நெல் இல்லாப் பிரதேசங்களைச் சேர்ந்த வியாபாரிகள், நெல் களஞ்சியங்களை நோக்கி, வட்டமிடுகிறார்கள்—கிடைத்தவரை அள்ளிச்செல்ல, அலைகிறார்கள் — ஆவலோடு, உலவுகிறார்கள் — பணத்தைக் கொட்டித் தந்து கிடைத்தவரை, அள்ளிச் செல்லும் ஆசை, இந்த வியாபார வேட்டைக்காரர்களுக்கேன் ஏற்பட்டிருக்கிறதென்கிற, உண்மையை, எல்லோரும் அறிவோம். இந்தவியாபாரிகளைத்தான் அவிழ்த்துவிட்டாயிற்றே, புது உத்திரவுமூலம்! இஷ்டம்போல் எதுவும் செய்யலாம் என்கிற துணிவு கிடைத்ததும் லாபம் குவிக்கத் தயங்குகிறார்கள் — பறக்கிறார்கள். [illegible] தொடுத்து, நெல்லை, அள்ளிச் செல்கிறார்கள். இவ்விதம் இவர்கள் அதிக விலைக்கு வாங்கிச் செல்லும் நெல்மீதுதான், இவர்களுக்கேற்பட்ட கொள்முதல் செலவும், லாபமும், கடைச் செலவும், சுமத்தப்படவேண்டும். அவ்விதமானால், அரிசிக்கு அல்லாடும் மாவட்டங்களிலிருப்போர், தமக்கு வேண்டிய அரிசியைப்பெற, முன்னைவிட அதிக விலை கொடுக்கவேண்டியவர்களாகத்தானே ஆவார்கள். அரிசியின் விலை ஏறும்! மிக மிக அதிகமாக ஏறும்!!—இந்த 'அபாய அறிவிப்பை'த்தான், நமது இதழில் "ரத்தும்—பயமும்" என்று எழுதியபோது நாம் குறிப்பிட்டோம்.

கடந்த 22-ந்தேதி, வானொலி மூலம், சர்க்காரின் புதுக்கொள்கை குறித்துப் பேசிய உணவு—மந்திரி—அமைச்சர் சி. சுப்பிரமணியம், சர்க்காரின் புதுத்திட்டத்தை, புதிய போக்கை விளக்குகையில், "பிராந்திய வாரியாக பல ஜில்லாக்களை இணைத்திருக்கிறோம். அதிக உற்பத்தியாகும் இடங்களோடு, பற்றாக்குறைப் பிரதேசங்களைச் சேர்த்திருக்கிறோம். இதனால் பலன் ஏற்படும். நெல் இருக்குமிடங்களும், நெல் இல்லாத இடங்களும் இதனால் ஒத்துப்போகுமென எதிர்பார்க்கிறோம். இதையொட்டியே, இந்தப் பிராந்தியங்களுக்குள் எவரேயானாலும், எவ்வித போக்குவரத்து மூலமாகவும், உணவுப் பொருள்களை தங்குதடையின்றி வாங்கலாம் —விற்கலாம்—கொண்டு செல்லலாம்" என்பதாக விவரித்துள்ளார். அவ்விதம் வாங்குவோரும் — விற்போரும் எந்த விலைக்கு வேண்டுமானாலும், வாங்கலாம்—விலை வைக்கலாம். இதுவும், சர்க்கார் உத்திரவு இந்தக் கொள்கையின்படி, மாகாணத்தை ஆறு பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள் (விபரம்—விளக்கமாகப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது.)

ஒவ்வொரு பகுதிக்குள்ளும் இஷ்டம்போல் எதுவும் நடைபெறலாம் — ஆனால், அடுத்த பகுதியோடு தொடர்பு கொள்ளக்கூடாது. சுப்பிரமணியத்தின் விளக்கமும், ஆச்சாரியாரின் கொள்கையும், இது.

சுயதேவைப் பூர்த்தி—புது உருவில், சிறிய அளவில்.

ஆனால், இந்த "சுயதேவை"யின் நிலை, சூதாடிகளை, சுதந்திரமாக உலவச் செய்திருக்கிறது.

தஞ்சையும் கோவையும், ஒரே பகுதியில் இருப்பவைதான். ஆனால், தஞ்சை, நஞ்செய் பூமி! கோவை புஞ்சைப்பூமி!!

வளமாக [illegible] குவிப்போரும், [illegible] ஜில்லாக்காரரும் "விளை வாடும் வயல்" [illegible] பெற அனுமதித்துள்ளோம்—என்கிறது சர்க்கார்.

ஆனால், விளைவு; தஞ்சைத் தரணி'யிலிருக்கும் நெல்லைக் குவித்துக்கொண்டுபோய், வாடும் மக்களிடம் மிகுந்த பணத்தைச் சுரண்டத் திட்டமிடுகிறார்கள், வியாபாரச் சூதாடிகள். "என்ன விலை வேண்டுமானாலும் சரி—நெல் கொடு!" என்று, கோவை வியாபாரிகள், தஞ்சை நிலப்பிரபுக்களிடம் கேட்பதன், நோக்கம் இதுதான்.

முன்பு, இரகசியமாக, இந்த முறையைக் கையாண்டார்கள்.

'இப்போது, பகிரங்கமாக, நடைபெறுகிறது.

முன்பு, கள்ளமார்க்கெட்! கொள்ளை லா[illegible]ள்ளைலாபம்!

இப்போது [illegible] ஆனால் பகிரங்க வியாபாரம்!!

*

ரேஷன் கண்ட்ரோல் ரத்து ஆனதும், காஞ்சியிலிருந்து பல பிரமுகர்களும்—மார்வாடிகளும்—எவ்விதம் தஞ்சையில் கோவை 'மூட்டை'கள் சென்றுள்ளனவோ, அதுபோல— நெல்லூர் ஜில்லா நோக்கிச் சென்றிருந்தார்கள். செங்கற்பட்டு மாவட்டம் பசியுள்ளதல்லவா? ஆகவே, அரிசிவியாபாரம் அதிக லாபம்தரும் என்ற நோக்கில், அவசர அவசரமாகச் சென்றிருந்தார்கள் — சிலர் திரும்பியும் விட்டார்கள். திரும்பியவர்களில், சோர்ந்த முகத்தோடு வந்தோரை, விசாரிக்கச்செய்தோம். அவர்கள் [illegible]ன்னது, இது. "ஏதோ, [illegible] வியாபாரமாவது செய்யலாம் [illegible]ன் போனோம். [illegible]த்தால், ஒவ்வொருத்தன், [illegible]ணம் பணமா, மூட்டைகட்டிகிட்டு வந்திருக்கான். நம்மாலே முடியுங்களா, போட்டி போட? முதல் நாள்விலை, இரண்டாவது நாள் இல்லீங்க" முதல் கொஞ்சமும், ஆசை அதிகமும் கொண்டு சென்றோர் கூறியது இது.

நெல்கிடைக்குமிடங்களில், வியாபாரச் சூதாடிகள், போய் கூடிக்கிடக்கிறார்கள். இதன் காரணமாக, அங்கே நெல் விலை ஏறுகிறது— ஏறுகிறது— ஏறிக்கொண்டேயிருக்கிறது!!

இவ்வித விலை ஏற்றத்தால், பற்றாக்குறை மாவட்டங்களில் இருக்கும் மக்கள் மட்டுமல்ல வேதனைக்கு ஆளாகப்போவது—"நெல் களஞ்சியங்களில்" இருப்போரும் தவிக்கிறார்கள், "ஐயோ! அரிசியில்லையாமே" என்றலறுகிறார்கள்.

நஞ்செய் மாவட்டங்கள், நெற்களஞ்சியங்களாக இருக்கின்றன என்றாலும்—அங்கே வாழும், எல்லா மக்களும் விவசாயிகளல்ல— நிலம் வைத்திருப்போருமல்ல. பற்பல தொழில்களில் ஈடுபட்டிருப்போரும், அங்கே வாழ்கிறார்கள். அவர்கள் விவசாயிகளைத்தான், எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான, நெல், சூதாடிகளால் விலையேறுவதாலும், எவ்வளவு விபரீதங்கள் ஏற்படும்.

இந்த வேதனைகளைக் குறித்து, தஞ்சைக்கு நாம் அனுப்பியிருந்த அலுவலகத் தோழர், நிறைய விபரங்களை அனுப்பியுள்ளார்.

எனினும், 'நமது', என்றால் காதைப் பொத்திக் கொள்வோரும் இங்கே இருப்பதால், 21—6—52ந் தேதிய, "சுதேசமித்திரன்" இதழில், இது சம்பந்தமாக வந்திருக்கும் தகவல்களைத் தருகிறோம்.

* *

தஞ்சை

ஜூன் 19:— உணவு கண்ட்ரோல் நீக்கத்துக்குப் பின் இங்கு பகிரங்க மார்க்கெட்டில் அரிசி விற்பனை ஆரம்பமாகி விட்டது. பகிரங்க மார்க்கெட் விலை நியாயவிலைக் கடைகள் விலையைவிட சற்று அதிகமாக இருக்கிறது. கையிருப்பு, துரிதமாக கரைந்து வருகிறது. உள்நாட்டில் நல்ல நெல் ஏராளமாகக் கிடைக்கிறது. விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. வெளியிலிருந்து நெல் வர்த்தகர்கள் ஏராளமாக வாங்குவதே இதற்குக் காரணம்.

*

நெடுந்தெரு

ஜூன் 18:— தஞ்சை ஜில்லா பாபநாசம் தாலுகாவைச் சேர்ந்த நெடுந்தெரு கிராமத்தில் 15–6–52ல் அரிசி கட்டுப்பாடு நீக்கத்திற்குப் பிறகு அரிசிவிலை பக்காபடி ஒன்று 0—11—6 லிருந்து ரூ. 1—2—0 வரை ஏறிவிட்டது. அரிசியும் சரியான முறையில் கிடைக்கவில்லை. நெல்லும் ரூ 13 லிருந்து 19 ரூபாயாக விற்கிறது ஏழைமக்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள்.

*

நீடாமங்கலம்

ஜூன் 18:— இவ்வூரில் இரண்டு தினங்களாக நியாய விலைக்கு அரிசி கிடைக்கவில்லை. சின்னப்படி 0—7—0க்கு கிடைக்கவில்லை. மக்கள் பரிதவிக்கின்றனர்.

*

கொரடாச்சேரி

ஜூன் 18:— கொரடாச்சேரியில் ரேஷன் கடைவியாபாரம் நிறுத்தப்பட்டதால் அரிசி பட்டணம்படி ஒரு ரூபாய்க்கும் கிடைக்கவில்லை. ஏழைமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். பெரும் மிராசுதாரர்கள் தங்களிடம் இருப்பு மீதி நெல்லை அதிகவிலைக்கு விற்று கரூர், ஈரோடு முதலிய இடங்களுக்கு லாரியில் ஏற்றிப் போய்க்கொண்டிருக்கிறது. இதனால்தான் உள்ளூர் ஏழைஜனங்களுக்கு எப்போதும் உள்ளவிலைக்கு கிடைக்கவில்லை.

*

விலை ஏறுகிறது.

நியாய விலைக் கடைகளை விட, வெளியில் விலை அதிகம்.

அரிசி கிடைக்கவில்லை.

அவதியுறுகின்றனர், மக்கள்.

ஆச்சாரியாரின், ரேஷன் ரத்துக் கொள்கையால், ஏற்படக் கூடிய, "வேதனைகள்" என நாம் எதிர்பார்த்தோம்—பயந்தோம் — தீட்டினோம். நாம் எதிர்பார்த்தது, நடக்கிறது! வியாபாரச் சூதாடிகள், கொட்டம் அடிப்பார்கள்" என்று கூறினோம். கொட்டம் அடிக்கிறார்கள், தாராளமாக! வெளியில் விலை ஏறும் என்றோம்—அப்படியே நடப்பதாக 'மித்திரன்' தருகிறது தகவல். அதுவும் எந்த மித்திரன்? ஆச்சாரியாரின் ரேடியோ அறிவிப்பைக் கண்டதும் 'ஆனந்தம்! பிரம்மானந்தம்!!' என்று கூவிய மித்திரன்.

நாம் எந்தெந்தப் பயங்கரங்கள் நடைபெறுமென எதிர்பார்த்தோமோ, அவை, இன்று நடைபெறுகின்றன. இலாப வேட்டைக்காரர்கள் கொட்டம் அடிக்கின்றனர் — நிலப் பிரபுக்கள் 'பணம்' குவிக்கின்றனர்.

* * *

'தஞ்சை, ஓர் நெற் களஞ்சியம்' என்று கூறும்போது ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. தஞ்சைத் தரணி, காவிரியின் 'கருணை'க்குப் பாத்திரமான, பச்சைப் பசும் சோலை. ஆனால் இந்தச் சோலையின் பலனை அனுபவிப்போர், நிலப் பிரபுக்களேயொழிய எல்லோரும் அல்ல "நெல் விலை ஏறுகிறதாம். அப்படியானால் நெல் விளையும் பிரதேசங்களில்வாழ்வோருக்கு கொண்டாட்டம் தான்" என்று, சிலர், கருதலாம். இது மிக மிகத் தவறு.

விவசாயத் துறையிலே—பற்பல படிக்கட்டுகள் உள்ளன. வயலிலே உழும் ஆதித்திராவிட மகன், அவனோடு உழைக்கும் காரியக்காரன், குத்தகைக்கு நிலம் வாங்கி வாழ்

உணவு நிலைபற்றிய விசேஷ கட்டுரை.

## அதன் விளைவு? விலை ஏற்றம்! கொள்ளை லாபம்! வேதனை! கண்ணீர்!

வோன், சிறு மிராசுதாரர் — இவ்விதம், பல ரகம் உண்டு. இவர்கள் தொகை அதிகம். இவர்களுக்கும் மேலாக, நூறு 'வேலி', ஆயிரம் 'வேலி', என்று உரிமை கொண்டாடும் நிலப் பிரபுக்களும், கோயிற் சாமிகளும், தம்பிரான் மடங்களும் இருக்கின்றன. இந்தக் கூட்டம் மிகக் குறைவு! ஆனால் சக்தியும் செல்வாக்கும் உள்ளது!

தற்போது, நெல்விலை ஏறுவதால் பயனும் பணமும் பெறுவோர், இவர்கள்தான். வயலை உழுபவனுக்கு 'கூலி'தான் சொத்து. குத்தகைகாரனுக்கு, வருடத்துக்குத் தேவையான 'மிச்சம்' கூட இருப்பதில்லை. 'ஆடி' பிறந்ததும், நிலப்பிரபுவின் வீட்டில் போய், விதைக்கும், 'தரிசு கூலி'க்கும் நிற்கவேண்டும். ஒரு 'வேலி', இரண்டு 'வேலி' என்று வைத்திருக்கும் சிறு மிராசுதாரனுக்கும், இதே கதிதான்.

"பங்குனிக்குப் பின், இவர்களிடம், நெல் மிச்சம், இருப்பதே கிடையாது—இருக்கவும் முடியாது. இவர்களைவிட கொஞ்சம் வசதியோடு இருப்பவர்களுக்கு, மீதப்படும் நெல்லை வைத்திருக்கவும் இயலாது. ஏனெனில், அறுவடையானதும், தமது தேவைகளுக்காக, மீதப்படும் நெல் முழுவதையும் அளந்துவிட்டு "பணத்தையே" எதிர்பார்ப்பார்கள்." அதிலும், இந்த ஆண்டு, இவர்களிடத்தில் சிறிதுகூட மிஞ்சுவதற்கு வழியில்லை.

ஏனெனில், கடந்த ஜனவரியில், அப்போதிருந்த சர்க்கார் கொள்முதலை தீவிரப்படுத்துவதற்காக, மூட்டை ஒன்றுக்கு ரூ 1—8—0 போனஸ் தரப்படுமென்று, தெரிவித்தது.

அதன்படி ஜனவரி முதல் மே, வரைக்கும் கால நிர்ணயம் வைத்து கொள்முதல் செய்திருக்கிறது. ரூ 13—4—0க்கு மேலும் பணம் கிடைக்கிறதென்கிற காரணத்தால், இந்த நடுத்தர மிராசுதாரர்கள் அனைவரும், இருந்ததையெல்லாம் அளந்துவிட்டனர். சாதாரண விவசாயியும், ஆலையில் அவதிப்படுவோனும் அரிசிக்காக அவதிப்படுகிறார்கள்!

ஆகவே, இப்போது வியாபாரச் சூதாடிகளிடம 'பேரம்' பேசுகிற அளவுக்கு இருப்போர் பெரிய பண்ணையாளர்கள்தான்.

இவர்களுக்குப்பணம் போகிறது! இவர்களுக்குப் பணத்தைத் தந்து நெல்லை வாங்கிச் செல்லும் வியாபாரச் சூதாடியும் கொள்ளை லாபம் கொட்டுகிறான்! ஆனால் சாதாரண விவசாயியும், ஆலையில் அவதிப்படுவோனும் அரிசிக்காக அவதிப்படுகிறார்கள்!

ஆச்சாரியாரின் நிமிர்க்கொள்கையால், விளைந்திருக்கிற விபரீதம், இது.

காசு அதிகம் வருவதைக் கண்ட பெரும்பண்ணைக்காரர்கள், தம்மைச் சார்ந்திருக்கும் குத்தகைதாரர்களுக்கும், ஏழைத் தொழிலாளர்களுக்கும், 'நெல்விலைக்கு இல்லை' என்று தெரிவிக்கிறார்கள்.

நேற்றுவரை, இவர்களை நம்பியிருந்தோர், இன்று கண்ணீர்விட்டுக் கலங்குகிறார்கள்.

அதேபோல, பிறவேலைகளிலிருந்து வாழ்வோரும் போதிய அரிசியைப் பெறமுடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

"சாதாரண மக்களுக்கென்ன கஷ்டமாம்? பகிரங்க மார்க்கெட்டில் அரிசியின் விலை அதிகமாயிருந்தால் அவர்கள் நியாய விலைக் கடைகளில் வாங்கலாமே!" என்று, கேட்கலாம். இவ்விதமே அன்பர் ஆச்சாரியாரும் தெரிவித்திருக்கிறார்.

"நியாயவிலைக் கடைகள் மூலம்

(5-ம் பக்கம் பார்க்க)


# தேனி கலவர வழக்கு நிதிக்காக

11—7—52 வெள்ளி இரவு 9-30 மணிக்கு

கம்பம், வ. உ. சி. தியேட்டரில்

இரா நெடுஞ்செழியன் எம். ஏ.,
இசை முரசு நாகூர் அனிபா
எஸ். வி தொந்தி
பால்ராசு, சேதுராமன்
நடிக்கும்
**கல்சுமந்த கசடர்**
[ சி. என். ஏ. தீட்டியது ]

தோழர்
W. P. A.
**சௌந்தரபாண்டியன்**
தலைமையில்
இரு நாடகங்கள் நடைபெறும்.

ஏ. வி. வி. ஆலவந்தார்பி
எம். அய்யாசாமி
நா. ஆவுடையப்பன்
மீராபாய், சுப்புலட்சுமி
மற்றும் பலர் நடிக்கும்
**விஷக் கோப்பை**
[ எம். அய்யாசாமி தீட்டியது ]

சௌந்தரராஜன் குழுவினர் பின்னணி இசை உண்டு

கட்டணம்:— ரூ. 5, 3, 2, 1. பெண்களுக்கு அரை கட்டு.

—தேனி கலவர வழக்குநிதி குழுவினர்.




## அருணாசலம்—சரசுவதி வாழ்வுவிழா

காலையிலே கருத்துமழை! இரவிலே இசைமாரி! — குதூகலமாக நடைபெற்றது, நண்பர் காஞ்சி. கலியாணசுந்தரம் அவர்களின் திருமகன் அருணாசலத்தின் வாழ்க்கை விழா. மணமகள் சரசுவதி, காஞ்சி ஜவுளி வியாபாரி M. V. M. பச்சையப்பனாரின் திருச் செல்வியாகும். மணமகள் இல்லத்திலே அமைக்கப்பெற்றிருந்த அலங்காரமான பந்தலிலே, 2—7—52 காலை மணி 9க்கு விழா ஆரம்பமாயிற்று விழாவுக்கு, சுயமரியாதை இயக்கத் தந்தைகளில் ஒருவரும், பாண்டிய மண்டல வீருமான தோழர் W. P. A சவுந்தர பாண்டியன் அவர்கள் தலைமை வகித்தார்கள் விழாவுக்குத் தலைமை தாங்குமாறு அவரைப் பிரேரேபித்தும், மணமக்களை வாழ்த்தியும் தோழர் அண்ணாதுரை பேசினார். பலத்த கைதட்டுதல்களுக்கிடையே தனது தலைமை உரையைத் துவங்கிய பாண்டியனார், "மூடநம்பிக்கைகளை ஒழிக்கவே கடந்த முப்பது ஆண்டு காலமாக சுயமரியாதை இயக்கம் பணியாற்றி வருகிறது." என்று குறிப்பிட்டு, அவ்வியக்கத்துக்கு தம்மாலான சேவையைச் செய்ய, தான் எப்போதும் தயார் என்பதாகவும் வெளியிட்டார். தெளிந்த அவரது பேச்சு, தென்றலாக வீசிற்று! பிறகு, மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரைகள் பல வழங்கப்பட்டன. பரிசுகள் அளிக்கப்பட்டன. "திராவிட நாடு" அச்சகச் சிப்பந்திகள், வெள்ளிக் கோப்பை ஒன்றை, மணமக்களுக்கு வழங்கினர். பிறகு, காஞ்சி வட்டார எம். எல். ஏ. தோழர் தெய்வசிகாமணி பி. ஏ. பி. எல்., புரோகித ஒழிப்பின் அவசியம் குறித்து வலியுறுத்திப் பேசினார். தோழர் அ. பொன்னம்பலனார், சுயமரியாதைக்கொள்கைகளை எடுத்துக் கூறி, "வாழச் செய்யும் பாதை இதைவிட வேறெதுவுமில்லை" என்று, சொற்பொழிவு ஆற்றினார். தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், இரா. நெடுஞ்செழியன், வாலாஜாபாத் மாசிலாமணியார், க. அன்பழகன், சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சி கண்ணப்பர், கி. வே. சுப்பராயன், 'ஆரம்பக்கல்வி' ஆசிரியர் வீரராகவன், டி. புருஷோத்தமன் M L C, நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி, காஞ்சி. மணிமொழியார், சி. டி. டி. அரசு, சத்தியவாணிமுத்து, கண்ணதாசன், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், மு. கருணாநிதி ஆகியோர் மணமக்களைப் பாராட்டி சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் பாண்டியன் அவர்களின் முடிவுரைக்குப் பின், தோழர் காஞ்சி. கலியாணசுந்தரம் அவர்கள் தனது அழைப்புக்கிணங்கி வந்திருந்து வாழ்த்துரைகள் நல்கிய அனைவருக்கும் அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார். மணமக்களை வாழ்த்தி பெரியார் அவர்களிடமிருந்தும், இன்னும் ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் வந்திருந்தன.

இரவு. மணி 9க்கு தமிழிசைச் செல்வர், சிதம்பரம் சி. எஸ். ஜெயராமன் அவர்களின் இன்னிசை, நடைபெற்றது. தமிழ் மணம் கமழ, போதனைகள் பொதிந்த, அருமையான கானத்தைப் பருகினர்—பல்லாயிரக் கணக்கான மக்கள்.

---

## கோவை
### தி. மு. க. ஒலிபெருக்கி

கோவை நகர தி. மு. க. ஒலிபெருக்கி நிதிக்காக நடிகவேள் எம். ஆர். ராதாவின் 'மலேயா கணபதி' நாடகம் 27—6—52-ல் எடிசன் தியேட்டரில் தோழர் மு. கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. மொத்தம் ரூ 2600 வசூலாயிற்று. செலவு போக ரூ. 1350 மீதியாயிற்று. இத்தொகையைக்கொண்டு உடனடியாக கழகத்துக்கென ஓர் ஒலிபெருக்கி வாங்கப்படும் என்று செயலாளர் எஸ். ஏ. ராசமாணிக்கம் அறிவிக்கிறார்.


**கடைசி நாள்**

**மஜீத் குடும்ப நிதிக்கு**

உதவுவோர்

**20—7—52க்குள்**

அனுப்பி வையுங்கள்.


## நிதி தாரீர்!

மஜீத் குடும்ப பாதுகாப்புநிதிக்கு உதவுவோர், விரைந்து உடனே அனுப்பிவையுங்கள். 20—7—52 தான், மஜீத் நிதி வசூலுக்குரிய கடைசி தேதியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்குள், நிதியனுப்புவோர், அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறோம்

| | |
|---|---|
| முன்வரவு ரூ. | 1336—2—7 |
| பல்லாவரம் பொதுக்கூட்டத்தில் | 4—8—0 |
| இலங்கை ஏ. எம். மீரான் | 1—0—0 |
| திரிகோணமலை, ஏ. தாமோதரன் மூலம் | 33—8—0 |
| திசையன்விளை, தி. மு. க. சார்பில் | 5—0—0 |
| ஜலகண்டாபுரம் ஆர் ஏ. அண்ணாமலை, எஸ். மார்க் மூலம் | 12—14—0 |
| பெங்களூர் எஸ். ஜே. ஹுசேன் மூலம் | 7—0—0 |
| மதுரை, என். ராமையா | 3—0—0 |
| பெரியகுளம் ஆர். அப்துல்கலாம் | 10—0—0 |
| அண்ணா படிப்பகம், மதுரை | 0—7—3 |
| முத்து படிப்பகம் ,, | 1—0—0 |
| பாண்டியராசபுரம் தி. மு. க. சார்பில் | 5—0—0 |
| கம்பம் புதுப்பட்டி தி. மு. க. சார்பில் | 12—0—0 |
| வேலப்பஞ்சாவடி. தி. மு. க. சார்பில் | 5—8—0 |
| | 1486—15—10 |

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டாம். வரிபோட்டு வசூலிப்போம்' என்று ஆச்சாரியார் கருதியிருப்பாரானால், இந்தக் குற்றத்துக்கு என்ன பெயரிட்டு அழைப்பது? துரோகம் என்பதா! துணிந்து நடத்தும் 'படுகொலை' என்பதா! நயவஞ்சகம் என்பதா! எதுவென்று சொல்வது. ஏனிப்படிச் செய்கிறார்! ஏனிந்த புதுவரிகளைச் சுமத்துகிறார்! பக்தர்கள் நிலை அறியாத மனோன்மத்தரும் செய்யாரே—இவரேன் செய்கிறார்? எதற்காக! மத்திய சர்க்காரிடம் கேட்டு வாங்கக்கூடிய தொகைக்கு, ஏன் நமது மக்களை வதைக்கவேண்டும். இது திறமையா? அல்லது வஞ்சகமா? த—கூறுங்கள். ஆத்திரப்படாமல், கூறுங்கள். ✲

# ★ ஊரார் உரையாடல் ★

[நி. வி.]

காலம்:— காலை.

இடம்:— சீனுவாசாச்சாரியார் வீடு.

இருப்போர்:—சீனுவாசாச்சாரி, அவர் மகள் கிரிஜா, மனைவி லட்சுமி.

ராஜாஜி பக்தர் சீனுவாசாச்சாரியார். அவர் மகள் கிரிஜா, துடுக்குப் பேச்சுக்காரி. காலேஜிலே படிக்கிருள். காலையிலே எழுந்து, ஈஸிசேரில் சாய்ந்தபடியே, 'தினமணி'யைப் புரட்டுகிருர். அவர் மனைவி லட்சுமியின் குரல் கேட்டு, பேப்பரை மடக்கி வைக்கிருர்.

லட்சுமி:— (உள்ளிருந்தபடியே) காபி சாபபிட்ரேளா, கொண்டு வரட்டுமா.

சீனுவாசாச்சாரி:— ஜோஸ்யம் கேட்பே போலிருக்கு—சட்டுன்னு கொண்டுவாடி.

ல:— கேட்டுண்டு கொண்டுவர்ரதிற்குள்ளே என்ன அவ்வளவு அவசரம்—அதான் பேப்பர் படிச்சிண்டு இருக்கேளே.

சீ:—அதனாலேதான், அவசரமாக காபி கேட்டேன்.

ல:— ஏனும்........

சீ:— உம்........பேப்பர்லே என்னடியிருக்கு—சுவாரஸ்யமாயில்லே-அதனாலே காபியாவது சுவாரஸ்யமாய் சாபபிடலாம்னு.

[மேல் மாடியிலிருந்து இறங்கி வருகிருள் கிரிஜா]

கிரிஜா:— ஏப்பா, பேப்பர்லே ஒண்ணுமில்லேங்கரேள், நிறைய இருக்கே......

சீ:— போடி, போ — என்னடி அப்படியிருக்கு.

கி:— என்னப்பா, ராஜாஜின்னு பெயர் வந்துட்டாலே அந்தச் செய்தியை மூணுதடவைப் படிப்பேளே

சீ:— ஆமாம்...

கி:— அவரைப் பத்தி, கவர்னர் புகழ்ந்திருக்கிருரே.

சீ:— கவர்னர் நல்ல மனுஷ்யன். பரமசாது.

கி:— ராஜாஜியைப் புகழ்ந்து பேசுறார்னு சொன்னவுடனேயே கவர்னரைப்புகழ ஆரம்பிச்சுட்டேள் அப்பா. பிரகாசா என்ன சொல்லியிருக்கிருர் தெரியுமோ.

சீ:— என்ன பேசியிருக்கேர்

கி:— ராஜாஜி, ரொம்ப எளிய வாழ்க்கை நடத்தறுர். டெல்லியிலே கூட, கோட், நெடுங்கால் சட்டை போட்டதில்லே. அவர் எப்பொழுதுமே, ஒரு சாதாரண வேட்டிதான உடுத்திண்டிருந்தார்

சீ:— காந்தி இலண்டனிலேயே அப்படித்தான்டி. இவரும் அவர் மாதிரி மகானேல்லியோ.

ல:— எங்கேடி பேசியிருக்கிறர், கவர்னர்

கி:— சேலத்திலே—அதுக்கு முதல் நாள் சென்னையிலே கூட பேசியிருக்கிருர் தமிழ்எழுத்தாளர் கூட்டத்திலே.

ல:— என்னடி சொன்னர்?

கி:— நான் முன்பின் யோசியாமல் கண்டதைப்பேசிவிடுவேன். ஆனல், பிரதமமந்திரி ராஜாஜி வார்த்தைகளை அளந்து, நிறுத்து எடை போட்டுத்தான் பேசுவார் என்று பக்கத்திலிருந்த அவரைப் பற்றிப் புகழ்ந்தார்.

சீ:— வாஸ்தவந்தான்டி; ராஜாஜி எதையும் அவசரப்பட்டுச் சொல்லிவிட மாட்டார்.

கி:— நிஜமாவாப்பா.

சீ:— அதிலே, என்னடி உனக்கு சந்தேகம்.

கி:— அருப்புக்கோட்டை விஷயத்திலே அவர் பேசினது அவசரப்பட்டு பேசினதில்லையா? இப்போ, ஆட்டுண்டு முழிக்கிருரே!

ல:— கிரி, என்னடி சொல்றே, கேக்குர் தெரியமாதிரி சொல்லேண்டியம்மா.

கி:— அருப்புக்கோட்டையிலே, முத்துராமலிங்கத்தேவர் என்பவர் நின்னு ஜெயிச்சார், பார்லிமெண்டுக்கு. முன்னே அவர் சென்னை அசெம்பிளிக்கு தெரிதெடுக்கப் பட்டதாலே, பார்லிமெண்ட் பதவியை ராஜிநாமா செய்தார். அதுக்காக உபதேர்தல் நடந்தது.

ல:— காங்கிரஸ் ஜெயிச்சுடுத்துன்னு, நேற்று சொன்னுரே, உங்க அப்பா.

கி:— காங்கிரஸ் கோட்டைவிட்டுடுத்தே. போனவாரம் 'கல்கி'யிலே எழுதியிருந்ததே, கோட்டை விடாதீர்கள்னு இந்தவாரம் கோட்டை விட்டாச்சு!

ல:— 'கல்கி'யிலே என்னடியம்மா எழுதியிருந்தது?

கி:— அருப்புக்கோட்டைத் தொகுதிக்கு, ராஜாத்தி குஞ்சிதபாதம்னு ஒரு பெண்ணை நிறுத்தி வைச்சிருந்தா அதுக்கு, கல்கி பிரமாதமா எழுதியிருந்தார். பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்களோடத்த வந்தோம்' என்று பாரதியார் பாட்டைப் போட்டு நேரு, முடிந்தவரை, சட்டசபை, பார்லிமெண்ட் தேர்தலில் பெண்களை நிறுத்தி வையுங்கள் என்று காக்கிது அனுப்பியிருக்கார் என்றெல்லாம் எழுதி, ராஜாத்தி குஞ்சிதபாதத்திற்கு ஓட்டு போடுங்கள் என்று வேண்டிக் கேட்டு வாங்கியிருந்தார்.

ல:— ஏண்டி, கிரி, உனக்கு இதெல்லாம் பிடிக்குமே — பெண்கள் முன்னேறனும். அப்படி, இப்படின்னு அடிக்கடிச் சொல்லிண்டே இருப்பேயடி.

கி:— அதில்லேம்மா, அருப்புக்கோட்டையில் மட்டும், பெண் போட்டி போடல்லேம்மா, நீலகிரி தொகுதியிலும் பார்வதி குமாரமங்கலம் போட்டியிட்டா — இவா பெண் என்பதற்காக விட்டுக் குடுத்துடல்லே — இரண்டு தொகுதியிலும் பெண்களைத் தோற்கடிச்சா—பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரீர், கல்கி பேனைவுக்குள்ளே என்று நான் பாடனும்.

ல:— காங்கிரஸ் ஜெயிச்சுடுத்துன்னு உங்க அப்பாதான் சொன்னர். நேக்கென்ன தெரியும். பேப்பரோ, பேப்பரோ படிக்கிறேனு, என்ன.

கி:— ஏம்பா, எதைப் பார்த்து சொன்னேள்.

சீ:— "தினமணி"யைப்பார்த்துத் தான்.

கி:— தினமணி. ராஜாஜி பூஜை பண்ணியாயிடுத்து—நேரு நன்னாயம்! நானுந்தான் பார்த்தேன் நேத்து.



கோவில் பட்டித் தொகுதியில் மட்டும், காங்கிரஸ் ஓட்டுகள் அதிகமாம் — அதைப் பிரிச்சுப் போட்டிருந்தது

சீ:— அதைப் பார்த்துத்தான்...

கி:— இப்படித் தவறுதலாய் பேசணும்கிறதிற்காகத்தானே அப்படிப் போட்ரா.

ல:— தோத்துடுத்தா காங்கிரஸ்—ராஜாஜி என்ன இது விஷயத்தில் பேசினேர்.

கி:— அம்மா, கல்கியில் நெல்லைக் காட்சிகள் படமெல்லாம் போட்டு ரா. கி. எழுதியிருந்தாரே, பார்த்தியோன்னே. ராஜாஜி அங்கே பிரசாரத்திற்குப் போயிருந்தார். நடுராத்திரியிலேன்னு கோவில்பட்டியில் பேசினர். அவரைப் போல, டி. டி. கிருஷ்ணமாச்சாரி போயிருந்தார். இன்னும் வேறு மந்திரிகளும் போயிருந்தார்கள்.

ல:— ஆமாம், ராஜாஜி என்ன சொன்னர்.

கி: இந்த உபதேர்தல், நான் வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு கூறப் போகும் தேர்தல்—நான் மந்திரி சபையில் இருக்க வேண்டுமானல், காங்கிரசுக்கு ஓட்டு போடுங்கள் என்று பிரமாதமாய் பேசிட்டு வந்துட்டார்.

ல:— இப்போ, தோத்துன்னு போயிடுத்து: அவர் என்ன செய்யப் போறுர்.

கி:— நியாயமாய் செய்யணும்னு, ராஜினமா செய்யணும்-செய்யல்லே.

சீ:— போடி அசடு—ராஜாஜி கோவில்பட்டியில் தாண்டி பேசினேர் அவர் பேச்சு, மத்த இடங்களுக்குத் தெரியாதுக்குள்ளே தேர்தல் வந்துடுத்து இல்லேன்னு ஜனங்க, யாருக்கு ஓட்டு போட்டிருப்பாய் தெரியுமா?

கி:— அப்பா, தினமணி ரகத்திலேயே பேசாதீங்கோ. தெரியுமோ. ராஜாஜி வந்த பிறகு, காங்கிரசிடத்திலே ஜனங்களுக்கு பதிபு வந்துடுத்துன்னு பேசினு, ஜனங்க.சிரி பா.

சீ:— ஏண்டி.

கி:— நீலகிரியிலே போன தேர்தலிலே, டி. ஏ. ராமலிங்கம்செட்டியார், போட்டியின்றி காங்கிரஸ் பேரால் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தத் தடவை. அங்கே, காங்கிரசுக்கு பலத்த போட்டின்னு வந்துடுத்து இது காங்கிரசுக்கு ஆதரவு வளர்ந்துட்டதயா காட்டாது.

சீ:— காங்கிரஸ் ஜெயிச்சிடுத்தா, இல்லியா—அது போதுண்டி.

கி:— கௌடா சாதியிலே இல்லாம, வேறே ஒருத்தரை நிறுத்தியிருந்தா தெரிஞ்சிருக்கும். சும்மா, ஏப்பா இப்படி பேசுறீங்க!

சீ:— நீ, நீ என்னடி இது, காங்கிரசை எதிர்த்தே பேசறே.

கி:— எதிர்த்துப் பேசல்லேப்பா—உண்மையைச் சொன்னேன். அருப்புக்கோட்டையிலே, கோவில் பட்டித் தொகுதியில் மட்டும், ஆதரவு காங்கிரசுக்குன்னு பிரிச்சு போட்டல்லே, தினமணி — இப்போ, எதிர்க்கட்சிக்காரா இப்படிச் சொல்றான்னு வைச்சுக்குவோம்.

சீ:— எப்படடி ......

கி:— முன்னே காங்கிரசைத் தோற்கடிக்கணும்னு போட்டி போட்டுண்டு, ஓட் போடவந்தா—ஓட் முன்னமே போட்டவா மட்டும் 2,01,037 பேர். இப்போ, நாம் எப்படி ஓட்டு போட்டு, காங்கிரசை விரட்டியடித்தாலும், தந்திரம் பண்ணி, காங்கிரசே ஆட்சிக்கு வந்துடுதுன்னு சலிப்பிலே ஓட்டு போடவே கூட ஜனங்க வரல்லே, இப்போ ஓட்போட வந்தவா மொத்தம் 1, 25, 296 பேர்தான்

சீ:— காங்கிரசை எதிர்க்க மனசில்லேன்னு வைச்சுக்கப் படாதோ.

கி:— அதெப்படி, முன்னே 70724 பேர் காங்கிரசுக்கு ஓட்டு போட்டா, இவாளிலேயே. இப்போ ரொம்பக் குறைஞ்சுட்டாளே இப்போ, ஓட்டுபோட்டவா, 50291 பேர்தான்.

சீ:— மொத்தம் ஓட்டு போட வந்தவாளிலேயே குறைஞ்சிருக்கில்லே.

கி:— அதெப்படியப்பா, காங்கிரஸ்காரா எப்படி அலட்சியமாயிருக்கலாம். அதுவும் ராஜாஜி வந்த பிறகு, இன்னும் அதிகமான்னு: காங்கிரஸ்காரர் வேலைசெஞ்சு ஓட்டு போட்டிருக்கணும். காங்கிரசுக்கு ஏற்பட்ட ஆள்நெருக்கடியைப் போக்க எவ்வளவு அரியசந்தர்ப்பம் அது—ராஜாஜி வந்தபிறகு காங்கிரசுக்கு ஆதரவு வந்துடும்னு பேசினது எவ்வளவு அபத்தம்கிறது இப்போ தெரிஞ்சுடுத்தில்லே. காக்கனுடாமா திரிபோட்டியிடாமலிருந்திருந்தால் எவ்வளவு கண்ணியமாயிருக்கு . ராஜாஜி, சும்மாயில்லாமல், வாயைக் கொடுத்து, வம்பிலே மாட்டிண்டார்

சீ:— வாயைக்குடுத்தா என்னடி—அதனால், நம்பிக்கை ஓட்டுக் கேட்டிருக்கிருரே!

கி:— அதுதான் தெரிஞ்ச விஷயமாச்சே — சட்ட சபையிலேதான் சருக்கல் சட்ட சபை உறுப்பினர்களைப் பிடிச்சு வைச்சிருக்கிருர்னு! வெக்கமில்லாமே, கோவில்பட்டியிலே பேசிவிட்டு, இப்போ கோட்டைக்குள்ளே, ஓட்டு கேட்டால், என்ன அர்த்தம்?

ல:— முதல்லே, அப்படிப் பேசிவிட்டார்.

கி:— இந்த மாதிரி அவசரக் குடுக்கைப் பேச்சைத் தான், கவர்னர் நிறுத்து, எடை போட்ட பேச்சென்கிருர்.

சீ:— கவர்னர், நம்ம ராஜாஜிக்கு ரொம்ப வேண்டியவர், தெரியுமோ.

கி:— இவரை, அவர் தன் நியமனமாக வெளியிட்டபோதே, நன்னு தெரிஞ்சு போச்சு.

சீ:— ராஜாஜியண்டே, அவருக்கு அத்யந்த பிரியம்.

கி:— பிரியம் என்னப்பா, பக்தியினுதான் சொல்லுங்களேன். இல்லாவிட்டால் கவர்னர், பிரதமரைப் புகழ்வதும், பிரதமர், கவர்னரைப் பாராட்டுவதும்—இதை ஜனங்கள் வேடிக்கை பார்ப்பதும் நடக்குமா?

சீ:— இவர், டெல்லியிலிருந்த பொழுது, நம்ம ராஜாஜியுடன், பக்தியுடன்தான நடந்திண்டார்.

ல:— அவுரை, நான் சென்னைக்கு வரும்படி கூப்பிட்டிருக்கேன்னு ராஜாஜியே சொன்னர்னு சொல்லியிருக்களே.

சீ:— அது மட்டுமில்லேடி, அவர் கவர்னராக நியமிக்கப்பட்டவுடன், டெல்லியிலே, அனந்தசயனம் அய்யங்கார். தலைமையிலே கோபால்சாமி அய்யங்கார், சந்தானம் இவாளை பாராட்டிப் பேசினு.

ல:- சென்னை வந்தவுடன், செண்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து ராஜாஜி வீட்டுக்குத்தான் போனார்னு, எவ்வளவு பெருமை யடிச்சிண்டேளே.

இ:- ஆமாம். இதுமாதிரி யெல்லாம் வெள்ளைக்காரா காலத்திலே நடக்காது—மந்திரி சபை எப்படி வேணுமானாலும் மாறலாம் யார் வேண்டியானாலும் முதல் மந்திரியாகலாம் — கவர்னர் பக்தனாகவும், முதல் மந்திரி பக்தனாகவும் காண்பது, இஃதுதான்! வெள்ளைக்கார கவர்னர் இப்படி. தன் கீழ் மந்திரி சபையைத் திருப்பவரைப் பற்றிப் பேசவே மாட்டார்.

ஓ:- வெள்ளைக்காரா மாதிரி இருக்கணும்கிறயா?

ல:- ஏண்டி கிரி, படங்களிலெல்லாம் இந்தக் கவர்னர் பக்கத்திலே, ஒருபொண்ணு நிக்கிறாளே, அவ யாரு.

இ:- அவரோடே, மருமா பெயர் காமினி தேவி எப்போதும் கூட வே வருவா.

ல:- என்னடி இது, மாமனாரோடே மருமாளுக்குஎன்ன வேலை?

ஓ:- போடி, அசடு நம்ம வீட்டுக்கு யாருடி எஜமான்—நீதானேடி அதாவது பெண்தானேடி, விருந்து உபசரிப்பது

ல:- அதனாலே, ஒரு பெண், பெரியவாளோடு வருவாளா நேருவோடு, அவர் மகள் சுந்தல்வியோ, காந்தியோடு, பேத்திமார் போகல்லியோ, நம்ம ராஜாஜியோடே, அவரோடே மகள் நாமகிரி [illegible] லையோ.

இ:- அதாவது மனைவியுள்ளோ காணும்கிற, ஆங்கிலே [illegible] கத்தை அப்படியே பின்பற்ற — ஆனால் மத்த விஷயங்களிலே அவாளைப் பின்பற்ற மாட்ட

ல:- மனைவியில்லாதவா, மகளை, பேத்தியைக் கூட்டிண்டு போறா — ஆனா மருமாளை கூட்டிண்டு போவாளோ?

ஓ:- போடி [illegible] — [illegible]. பேசாதே சாமி கேட்டு, இன்று மணியாறது — இன்னும் தெண்டு வாசலே—கிரி. [illegible] மாச்சு! போய் உன் காரியத்தைப் பாடி.

✻

## தேனிக் கலவர வழக்கு நிதி

—✻—

| | |
|---|---|
| முன்னைய வரவு | 1185—13 10 |
| செல்வம் தி. மு. க. | |
| மீனாட்சிசேரி, புதுமை | 1—4—3 |
| தி. மா. மு க. மதுரை | 1—0—0 |
| தி. மு க. தேவகோரி | 1—0—0 |
| முதலபடிப்பாகம் [illegible] | 1 0—0 |
| தி. மு. க தயிலபட்டி | 2—0—0 |
| எஸ். கடராசன தேனி | 1—0—0 |
| மு. புரட்சிமணி [illegible] பேட்டை | 1—0—0 |
| தி. மு. க மேலூர் | 5—0—0 |
| தி. மு. க. சின்னமனூர் | 15—0—0 |
| தி. மு. க. குளக்காட்டுப் புதூர் | 2—0—0 |
| கே. சிவப்பிரகாசம் பொத்தனூர் | 5—0—0 |
| பாலகுரு பழையகலனூர் | 2—0—0 |

+ரோடு தோழர்கள்:—

எஸ். ஆர். சந்தானம், எஸ். அப்பாவு. ஆர் பெருமாள், பி. சி. சாமி, ஜே. ஆண்ட்ரூஸ் பி. சண்முக வேலாயுதம். ஈ. எஸ் முனுசாமி, சி ராமசா. ஈ. என் முத்துச்சாமி கே. ஆறுமுகம், ஈ. ஆர். ஹனிபா, எம். சின்னப்பன். எம ராமசாமி, வி. குமாரசாமி, [illegible]பன். சி. சுப்ரமணியம், ஆர். சம்பத். கே. எஸ். மாணிக்கம், சின்னையன், சி. பி. மணி, வி. சின்னராஜ், எஸ் சீனிவாசன், ஏ. எம். மணி, சுந்தரம், சி. ரங்கசாமி வி. சின்னராஜ் [illegible] — 0 14 0

இ [illegible] பதுக்குறிவு [illegible]:

மா. [illegible] ஜ. சண்முகவேல். [illegible] எம். எம் சக்ரவர்த்தி [illegible] ஆர். ராமமணி. [illegible] இ. சகடு. மா. கருப்பையா [illegible] வீராசாமி. செர்வி மு [illegible] மாள், பூரணம்மாளக்க [illegible] பாப்பாத்தியம்மாள், இளைஞர் [illegible] தறிவு மன்றம். 50—0—0

ஆக. 1294—0—1

இரா. நெடுஞ்செழியன்,
செயலாளர்—தேனிக் கலவர வழக்கு நிதிக் குழு.

★

## வெளிவந்துவிட்டது!

பூகோள அமைப்பில் இல்லாத இடம், புலவர்கள் பாடாத பூமி, புள்ளினங்கள் தூது செல்லாத தரணி, ஆராய்ச்சிக்காரர்கள் அறிவிக்காத அகிலம். அனுபவம் பெற்றவர்கள் போக அஞ்சிய அவனி. எனினும் அஞ்சாமல் போன அட்லாண்டிக்கின் அதிபன்

### "கொலம்பஸ்"

(வரலாறு)

தீட்டியவர்
சி. பி. சிற்றரசு
விலை ரூபா 1—0—0

★

[illegible]

### போர்

[illegible]ளிவந்துவிட்டது.
விலை ரூபா 1—8—0
[illegible]
[illegible]
திருச்சி.

Edited Printed & Published by C. N. Annadurai M.A. [illegible] "Dravidanadu" [illegible]
15, Tirukkachinambi St., Kancheepuram

# திராவிடநாடு



## யாரிங்கே?

[கருணு]

சூத்திரன் ஆனது யாராலே?
சுதந்திரம் போனது எவராலே?
சாத்திரம் வேதம் இதிகாசம்
சமய நூல் புராணம் இவையேது?
கோத்திரம் குலம் மதம் சாதியென்று
கூட்டம் பிரித்தது யார் வேலை?
ஆத்திரம் இன்றி அடிமைசெய்து—நம்மை
ஆட்சி புரிபவர் யாரிங்கே?

கண்ணில் தெரியாக் கடவுளுக்கே
கற்பனை யாய்ப்பல கதைகட்டி
மண்ணில் கல்லில் செம்பதனில்
வடிவம் பலவாய் உருவமைத்து,
விண்ணில் இடித்திடும் கோயிலுடன்
விமானம் முதலாய் ஏற்படுத்தி,
எண்ணிப் பார்க்கும் அறிவழித்தே—நம்மை
எய்த்துப் பிழைப்பவர் யாரிங்கே?

மலர் 11 | 13—7—52 | இதழ் 2.

விலை: இரண்டணு

திராவிடநாடு

காஞ்சி] 13—7—52 [ஞாயிறு

# 'பொம்மை'க்கு லட்சமா!

★

| | |
|---|---|
| சம்பளம் ரூ | 66,000 |
| சாப்பாட்டுக்கு ரூ | 22,500 |
| சிப்பந்திகளுக்காக | 46,000 |
| மாளிகைச் செலவு | 2,48,000 |
| கார் செலவு | 1,50,000 |
| பிரயாணச் செலவு | 1,71,000 |
| இஷ்டச் செலவு | 25,000 |
| மொத்தம் | 7,28,500 |

சென்னை மாகாணக் கவர்னருக்கென, ஒரு ஆண்டுக்கு, "நாம்" தரும் தொகை இது. நமது வரிப் பணத்தில் இவ்வளவு லட்ச ரூபாய்களையும் காங்கிரஸ் சர்க்கார், அவருக்குத் தருகிறது. இந்த ஆண்டுக்கு இந்த 'நபருக்கு' ரூ. 10-லட்சம் அளிக்கப்போவதாக ஆச்சாரியார் கணக்குக் கொடுத்திருக்கிறார்! நாட்டை ஆள, மந்திரிகள், இருக்கும்போது, இப்படி ஏன் 'ஒரு பொம்மை'யும் அதற்கென இவ்வளவு பணம் செலவிடுவதும் நீடிக்க வேண்டும்? 'தாம் ஒரு பொம்மைதானென்று' இப்போதிருக்கிற பிரகாசாவே, தெரிவித்திருக்கிறார்!

இப்படிப்பட்ட 'பொம்மை'மக்காக நமது பணம் லட்சக் கணக்கில் ஏன், வீணாவது! மாகாணங்களை 'மேற்பார்வையிட' ... டில்லி ஆதிபத்தியத்துக்கு தேவைப்படலாம், கவர்னர்கள்; அவ்விதம் தமது ஆதிக்கத் தூதர்களாக இருப்போருக்கு டில்லியினரே பணத்தைக் கொடுத்து வைத்துக் கொள்ளலாமே! மாறாக, வாடும் நம்மை வாதைக்கு ஆளாக்குவது போல, இவ்விதம் ஒரு 'பீடை' ஏன்? ஆடம்பரச் செலவுகள் ஏன்?

"காங்கிரஸ் ஆட்சி வந்தால் ரூ 500க்கு மேல் எந்த அதிகாரிக்கும் சம்பளம் தரமாட்டோம்" என்று சுயராஜ்யப் போரின்போது முழக்கமிட்டோர், இன்று, சிறிது கூடக் கவலையின்றி மாதாமாதம் தனியொரு நபருக்காக ரூ 70,000 செலவழிப்பதா? வீணாக ஒருபதவியும் அதற்கு வீணாடம்பரச் செலவுகளுமா? — அறிவுலகம், இந்த அக்கிரமத்தைச் சகிக்காது. இந்த 'அநீதி'யைச் சட்டசபையிலிருப்போர், 'கவர்னர் மான்யப் பிரரேபணை'யின் போது, எதிர்க்கத் திட்டமிட்டிருப்பதாக அறிகிறோம். வாய் வீரம் பேசிய காங்கிரசார், இந்த வீணான 'வகைக்கு' மக்கள் பணத்தைச் செலவிடுவதை மக்கள் மன்றம், ஒரு போதும், அனுமதியாது. ஏழையின் கண்ணீர், இந்த கோலாகலத்துக்கு முற்றுப்புள்ளிவைக்கத்தான் செய்யும். இதை, இன்றுள்ளோர் உணர்ந்து ஆவன செய்யவேண்டுமென வலியுறுத்துகிறோம். ❊

5-ம் பக்கத் தொடர்ச்சி

காத ஆச்சாரியார் தலைமையில், மெஜாரிட்டியில்லாத காங்கிரஸ் மந்திரி சபை அமைச்சிருக்கு. இதிலே. தினமொரு துரோகி சேர்ந்து சேர்ந்து கொள்கிறார்கள் இந்த கோரக் காட்சியை, ஜனங்க பார்த்துப் பார்த்து மனம் புழுங்கி நிற்கிறார்கள். அவர்களிடையே, நீங்க போய், கண்டதைச் சொல்லி, உடம்பை......

பி. பி. ரா:- எனக்கென்னமோ, ஆச்சாரியார், பேசிக்கொண்டு வருவது பிடிக்கிறது.

வி. பி. ரா:- உங்களுக்கு ஏன் பிடிக்காது! அவர் பஜகோவிந்தம்— நீங்க அய்யப்பன் சரணம்! அதுக்காக, இப்படி, நம்பிய மக்களை ஏமாத்தக் கூடாது. ஏதோ உள்ளே வந்துட்டோம்கிற தைரியத்திலே, எல்லாம் செய்யறாங்க என்னைக்கு ஜனங்க, பொங்கும் கடலாகிறாங்களோ?

பி. டி. ரா:- நீர் மட்டும் சந்தர்ப்பத்தில் இப்படி ஒரு நெருக்கடி ஏற்பட்டால், இப்படி செய்யமாட்டீரா?

வி. வி. ரா:- அதிகமாகப்போறீங்க —இத்தோடு நிறுத்திக் கொள்வோம்.

## ஆச்சாரியாரும், அவர் வீட்டு வேலைக்காரனும்

வேலைக்காரன்:- என்னங்கசாமி, முகம் வாடியிருக்கு.

ஆ:- போடா, முகம் வாடாம, ஜெகஜ்ஜோதியாயிருக்குமோ.

வே:- சாமியா, இப்படிச் சொல்றீங்க, நீங்கநினைச்சா, இந்தியாவையே ஆட்டலாம்.

ஆ:- இந்தியாவை ஆட்டறது கிடக்கட்டும், இந்த எம். எல். ஏ. ஒவ்வொருத்தனை ஆட்டி அசைக்கவே முடியவில்லேடா

வே:- சாமி, அப்படிச் சொல்லப்படாது. அன்னைக்கு வந்தாரே இப்போ, மந்திரியாகியிருக்கீங்களே—அவர் பேரு, மாணிக்கமோ, வைடூரியமோ—அவர் அசையலியா?

ஆ:- அவர் மட்டும் போதுமா?

வே:- அவர் ஆளுங்க ஆறு பேராமே.

ஆ:- ஆறுபேர் கிடக்கட்டும்— இப்போ அறுபதுபேர் இருந்தாலும், அதிலே எவனையும் நம்பறதிக்கில்லே.

வே:- இப்போ, ஏதாவது சங்கடம் வந்துடுச்சுங்களா?

ஆ:- சங்கடம் தவிர வேறே என்னடா வருது?

வே:- ஏங்க, அவ்வளவு சலிப்பு?

ஆ:- சலிப்பில்லேடா இது, தவிப்பு—என்மேலே நம்பிக்கையிருக்கான்னு சொல்லும்படிக் கேட்டேன். நம்பிக்கையிருக்குன்னு சொல்லவைக்க, எவ்வளவு திருகுதாளம் போடவேண்டியிருந்தது தெரியுமோ?

வே:- சாமி, நீங்க நினைச்சா நடக்காதது எதுங்க.

ஆ:- எதுவா, எல்லாந்தான்!

வே:- எல்லாம் நடக்கும்னு சொல்லுங்க.

ஆ:- நடக்கும், எல்லாம் ஏமாந்தவா?

வே:- ஏமாறவேண்டாங்க—இன்னும் கொஞ்சம்......

ஆ:- இன்னும் கொஞ்சம்......

வே:- பக்தர்களாகிவிட்டால்......

ஆ:- ஆகிவிட்டால்?

வே:- பஜகோவிந்தம், பஜகோவிந்தம் என்று பஜனை பண்ணுவாங்க.

ஆ:- பஜனை பண்ணி என்னடா செய்யறது?

(9-ம் பக்கம் பார்க்க)



3-ம் பக்கத் தொடர்ச்சி

கு. சா:- சௌக்கியந்தான் நான் வர்றேன், நெடுநேரமாயிடுத்து. உங்க. வேலையெல்லாம் கெடுத்ததற்கு, மன்னிக்கணும்.

ஆ:- அதெல்லாம் ஒண்ணுமில்லேன்னு, என் வேலையே இதுதானே—சரி, புறப்படுங்கோ.

## குன்னியூராரும், இந்துக்காரரும்

கு. சா. சௌக்கியமோ?

சீனுவாசன்:- சௌக்கியத்திற்கு குறைச்சல் ஒண்ணுமில்லே. நீங்க எங்கே புறப்பட்டேள்.

கு. சா:- ராஜாஜியண்டை போய்ட்டு வர்றேன்.

சீ:- அவர் ஏனோ, இப்படி பண்ணிண்டிருக்கார்.

கு. சா:- என்ன பண்ணிண்டு...

சீ:- அருப்புக்கோட்டை எலக்ஷனைப் பற்றித்தான் சொல்றேன்.

கு. சா:- என்னண்டை கூட அதைபத்திப் பேசினார். நேக்குக் கொஞ்சமும் பிடிக்கலே. ஆனா அவாண்டை அதை எப்படிச் சொல்றது. அதனாலே வாயை மூடிண்டு வந்துட்டேன்.

சீ:- அதனாலேதான், பத்திரிகையிலே, எழுதினேன். அருப்புக்கோட்டை விஷயத்திலே, ராஜாஜி விசேஷ அக்கறை செலுத்தத் தேவையில்லேன்னு.

கு. சா:- காங்கிரஸ் பலத்தைக் காட்டத்தான் நம்பிக்கை தீர்மானம் கொண்டு வந்தேன்னு சொல்றாரே.

சீ:- ஆமாம், அதான் தெரிஞ்சிருக்கு — அவனவன், எப்படி எப்படி திட்டணுமோ, அப்படியெல்லாம் திட்டித் தீர்த்துட்டான் நமக்கு மானம் போறது—இவைகளை வேறெ, நம்ம பத்திரிகைகளிலே போடவேண்டியிருக்கு. எல்லாம், இவர் செய்த வேலை. இல்லாவிட்டா, இவன்களுக்கு ஏது சமயம், இப்படியெல்லாம் பேச.

கு. சா:- என்னைக்கும் திட்டறவா தானே?

சீ:- அய்யர்வாள், சட்ட சபையிலே, நாலு நாட்களும், இருந்திருந்தா தெரிஞ்சிருக்கும் நாக்கு வளைஞ்ச பக்கமெல்லாம் பேசின—ராஜாஜியை எப்படி எப்படிக் கிண்டல் பண்ணணுமோ, அப்படியெல்லாம் கிண்டல் பண்ணினா. நம்பிக்கை தீர்மானம்னு கொண்டு வந்ததாலே, வந்த தீம்பு தானே, இது. இதிலே என்ன லாபம் இருக்கு?

கு. சா:- ஆமாம், ஜெயிக்கறதுன்னு தெரிஞ்சதான், அவா பேசியிருக்கிறு ...

சீ:- அது போகட்டும், நீங்க வந்த விஷயம்.

கு. சா:- விஷயம் பிரமாதமில்லே, தஞ்சாவூரிலே ஒரு கூட்டம். நான் தலைமை வகிக்கிறேன். நீரும் அன்று......

சீ:- பேஷாய்.........

கு. சா:- சரி, விவரம் போய் எழுதறேன்.

## இந்துக்காரரும், ராஜனும்,

சீ:- நான் ஆச்சர்யப்பட்டேன்...

பி. டி. ராஜன்:- எதுக்காக!

சீ:- நீங்க, ராஜாஜியை ஆதரிப்பேள்னு கனவிலேகூட எண்ணினதில்லே—ஆனால், ஆதரிச்சேள்.

பி. டி. ரா:- இதுக்கு, ஆச்சர்யப்படுவானேய்யா, வெட்கப்படும் அர்த்தமுண்டு.

சீ:- என்ன அப்படிச் சொல்றீர்.

பி. டி. ரா:- பின்னே எப்படிச் சொல்வது?

சீ:- ராஜாஜியை வெகுவாய் ஆதரிச்சு பேசியிருக்கிறீர். ஓட்டும் கொடுத்திருக்கிறீர்.

பி. டி. ரா:- ஓய், நான் எந்தக் கட்சி.

சீ: ஜஸ்டிஸ் கட்சி.

பி. டி. ரா:- ஜஸ்டிஸ் கட்சி, காங்கிரசுக்கு பரம விரோதின்னு நீங்க பேசினதில்லையா?

சீ:- அதுக்கு இப்போ என்ன.

பி. டி. ரா:- இல்லே, இதுக்கு முன்னாலே, ஜஸ்டிஸ் கட்சிக்காரங்க ஆட்சி நடத்தினபோது, அவர்கள், நல்லது செய்தபோது, ஒரு வார்த்தை, ஆதரவா, பேசிய காங்கிரஸ்காரனைக் காட்டும். அந்தக் கண்ணியம் தான் அங்கே கிடையாதே!

சீ:- நீங்க செஞ்சது, பெருந்தன்மையான காரியம் தான்.

பி. டி. ரா:- நீர் சொல்லுகிறீர், பெருந்தன்மையானதுன்னு — எங்களவா, துரோகம் செஞ்சேன்னு சொல்கிறார்கள் — என் மனசுகூட அதைத்தான் சொல்றது. ஆனா என் ஒரு ஓட்டு, காங்கிரசுக்கு வைத்த வேட்டுன்னுதான் நினைச்சு கொடுத்தேன்.

சீ:- எப்படி சார்.

பி. டி. ரா:- வெட்கம், மானம் சூடுள்ளவர்களுக்குப் புரியும். காங்கிரசுக்கு ஜென்ம விரோதியான, என்னைப் போன்றவங்க, ஓட்டுகளை வாங்கித்தான், உயிர் பிழைக்க முடிகிறது ஆச்சாரியாராலே.

சீ:- நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறிவிட்டது.

பி. டி. ரா:- நம்பிக்கைத் தீர்மானம். வந்ததே சொல்றதே, அவர் மேலே, நம்பிக்கை குறைஞ்சிருக்குன்னு, யாரார் ஓட்டாலே? எல்லா காங்கிரஸ் ஆண்கள் போட்ட ஓட்டா? எனக்கு ஒரு வெறுப்பு— இந்தக் கம்யூனிஸ்டுகள் போக்கு எனக்குத் துளியும் பிடிக்கல்லே— அதனாலே, இப்படிப் போட்டுத் தொலைத்தேன். இல்லாவிட்டால், ஆச்சாரியாருக்கா, ஓட்டு போடுவேன்!

## பி. டி. ராஜனும்,— வி. வி. ராமசாமியும்

வி. வி. ராமசாமி:- என்னங்க, இப்படி பண்ணிட்டீங்க—நான் எதிர்பார்க்கவில்லை.

பி. டி. ரா:- என்ன பண்ணிட்டேன்.

வி. வி. ரா:- என்ன பண்ணிட்டேளா, துரோகம் — மக்களுக்குப் பெருந் துரோகம்!

பி. டி. ரா:- துரோகமா? ஆச்சாரியார் மந்திரி சபை இருப்பதாலே, நமக்கு நஷ்டம் என்ன?

வி. வி. ரா:- நஷ்டமா? நமக்கு தாங்க முடியாத கஷ்டம்.

பி. டி. ரா:- நான் செஞ்சது சரின்னு நினைக்கிறேன்.

வி. வி. ரா:- தயவு செய்து இன்னொரு முறை இப்படிச் சொல்லாதீங்க. அவங்க, ஏற்கனவே வழி தெரிஞ்சி யிருக்கிறாங்க. தோத்த காங்கிரஸ் கட்சிப் பிரகாசா, கவர்னராகியிருக்கிறார். தேர்தலைப்பார்க்

(4-ம் பக்கம் பார்க்க)

# "பணாதிபத்ய"—பாதுகாவலர் இந்தப் "பாரதப் பிரசங்கி!"

—அன்னால்—

அதிக வரி செலுத்திக்கொண்டிருக்கிறோம்! — வெள்ளையன் காலத்தைவிடக் கோடிக்கணக்கான ரூபாய்கள் சர்க்கார் கஜானாவுக்குப் போய்க்கொண்டிருக்கின்றன.

மக்கள் செலுத்தும் வரிகள் மூலம்தான் பணம் குவிந்தது, கஜானாவுக்கு. வெள்ளையனை விரட்டிய இந்த வீரர்கள் காலத்திலும் மக்கள்தான், கஜானாவுக்குப் பணத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அன்றும் நாம் பணம்தர, செலவழித்தான் வெள்ளையன்! இன்றும் நாம் பணம் தருகிறோம்; செலவழிக்கிறார்கள் இவர்கள்!!

விளக்கமாகச்சொன்னால், அப்போதையைவிட, இப்போது அதிகமாக வரி செலுத்துகிறோம், நாம். சர்க்காரும் அதிகமாகவே, நமது பணத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கிறது! அதிகமாகச் செலவழிப்பதென்றால், நாம் தரும் அதிகவரிகளின் மூலம்வரும் வருமானத்துக்கு மேல் செலவழிக்கிறது. வரவுக்கு மேல் செலவு! 'பற்றாக்குறை' பட்ஜட்!!

அதிகவரி செலுத்துகிறோம்—சர்க்காரும் அதிகப்பணத்தைச் செலவழிக்கிறது.

வரி அதிகமாகி — அதிகப் பணமும் ஆள்வோரால் செலவிடப்படுகிறதென்றால், சுபிட்சம் இருக்க வேண்டும் மக்களிடம்.

ஆனால் மக்கள் நிலையோ! அன்று போல்தான் இன்றும்—தெளிவாகச் சொன்னால் அதைவிட மோசமான நிலைமைதான்.

*

வெள்ளையன் காலத்திலே, 'வெளிநாட்டு உதவி' என்கிற பேச்சை நாம் கேட்டது இல்லை. ஆனால் இப்போதோ, 'அமெரிக்காவிலிருந்து உதவி வந்துகொண்டேயிருக்கிறது' என்று பண்டித நேருவும், பற்பல பிரமுகர்களும் கூறுவதை, அடிக்கடி பத்திரிகைகளிலே காண்கிறோம். உலக பாங்கியின் உதவி, உலக நாணயச் செலாவணி பாங்கியின் உதவி, மார்ஷல் உதவி, செஸ்டர் பௌலஸ் போயிருக்கிறார், 'கம்யூனிடி' திட்டத்துக்குத் தனிப் பண உதவி — இவ்விதம், விதவிதமான "உதவிகளை"ப் பற்றிக் கூறப்படுகிறது. அதிலும், 'சுயராஜ்யம்' கிடைத்த நாள்முதல், இந்த உதவிக்குரல் அதிகமாகவே ஒலிக்கிறது. கடந்த மூன்றாண்டுகளில் காது செவிடுபடக் கேட்கிறோம். பலன்! 'பணம் போதவில்லை' — என்கிற பல்லவிதான். மத்திய சர்க்காரும் சொல்கிறது! மாகாண சர்க்காரும் அலறுகிறது!! பற்றாக்குறை 'பட்ஜட்' தயாராகிறது.

மத்திய சர்க்காருக்கு வரும், 'பண உதவிகளை'ப்பற்றி அறிவோம்—மாகாண சர்க்காருக்கு செல்லும் வரி அதிகமாயிருப்பதையும் அறிவோம். ஆனால் நிலைமை ஏன் மாறாமல், மோசமாகிக்கொண்டே போகிறது!

நெல்லை அறுத்து களத்துமேட்டிலே குவிக்கிறோம் — பக்கத்து வயல்காரரின் நெல்லையும் வாங்கிக் குவிக்கிறோம். ஆனால் அவ்வளவு நெல்லும் நமக்குப் போதவில்லையென்றால், என்ன பொருள்? வரவுக்கு மீறி செலவழிக்கிறோம் என்பதானே அர்த்தம். அவ்விதம் வரவுக்கு அதிகமாகச் செலவழித்தும், குடும்பத்தினர் குந்தி தொடிக்க கதறுகின்றனர் என்றால், நாம் செலவழித்த முறைகளைத் தானே குற்றம், கூறுவர்—நல்லோர்.

இதே 'கதை'யை, சர்க்காருக்கு வைத்துப்பாருங்கள். அதிகவரி—பண உதவி—அதிகச் செலவு. இவை, சர்க்காருக்கு. ஆனால், 'நாடு' எனும் குடும்பமோ இக்கதியிலிருக்கிறது. வரவு—செலவு சரியாக பில்லை! கஷ்டம் வருகிறது. ஆண்டு விழுகிறது. புதுவரிகள், போடப்படுகின்றன!!

*

முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியார், புது வரிகள், போடப்போவதாக அறிவித்துள்ளார். 61-கோடிக்குமேல் வரவு செலவு செய்யும் சென்னை சர்க்கார் புதிய வரிகளைப் போடப்போகிறார்கள்! பஞ்சாலைகள்மீதோ, பணக்காரர்கள் மீதோ, 'தெகிடுதத்தமாக' பணம் திரட்டுவோருக்கோ, அல்ல; சாதாரண மக்களுக்கு. மக்கள் தலையிலே புதுவரிகள் சுமத்தப்படப்போகின்றன, அதிக வரி செலுத்தும் மக்கள் இன்னும் வரி கட்டவேண்டுமாம்!

பஸ் கட்டணங்களில் மைலுக்கு ஒரு பைசா அதிகமாகுமாம்.

நிலவரியின்மீது 'அதிகப்பணம்' தரவேண்டுமாம்.

நீர்ப்பாசன வசதி கிடைத்தமைக்காக சர்க்காருக்கோர் 'பங்கு' நிலவிலை தரவேண்டுமாம்.

இந்தக் 'கெடுபிடி'கள் மூலம், பணம் வந்தால்தான், காலம் தள்ள முடியுமாம். இந்தவகைகள் மூலம், நான்கு கோடி ரூபாய் மக்களிடமிருந்து சர்க்கார் கஜானாவுக்குப் போகவேண்டுமாம். இந்தப் புது வரிகள், மக்களை கோடியாகத்தாக்குபவை.

'வரிகட்டினால்தான் அரசாங்கம் இயங்கமுடியும்' இதை, எவரும் மறுக்கார். மக்களைப் பராமரிக்கும் சர்க்கார் நடைபெற, மக்கள் வரித்தொகை தரக்கடமைப் பட்டுள்ளவர்கள்தான். ஆனால் அந்த வரித்தொகையை மக்கள், சர்க்காருக்குத் தராமல் ஏமாற்றுகிறார்களோ என்று பார்த்தால் இல்லை! இல்லை!! பட்டியல் நம்மைப் பயமுறுத்துகிறது. கஜானாவுக்கு கடந்த சில ஆண்டுகளில், மக்கள் செலுத்திக் கொண்டிருக்கும் வரித்தொகையின் விபரம் இது.

1945-46 ............ 47 கோடி
1948-49 ............ 53 கோடி
1950-51 ............ 58 கோடி
1951-52 ............ 59 கோடி
1952-53 (கிட்டமிட்டிருப்பது) 62 கோடி

வரித்தொகை, அதிகமாகிக் கொண்டே, போகிறது. மக்கள், சர்க்காரின் கஜானாவுக்கு, முன்பைவிட அதிகப் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேன்மேலும் புதிய வரிகளைச் சுமத்துகிறேன், என்கிறார் ஆச்சாரியார்.

*

"மன்னா! அறுகால பூஜையும் சரிவர நடக்கிறது. ஆனால் கோயில்கள் தான், புனர்நிர்மாணம் செய்யாமல் கிடக்கிறது"

"அப்படியா! உடனே உத்தரவிடும் — எல்லாத் தேவாலயங்களிலும் திருப்பணி நடக்கட்டும்."

"திருப்பணி செய்ய பொருள் வேண்டுமே, அரசே! பொக்கிஷம், வரண்டன்றோ கிடக்கிறது"

"போடு புதுவரி! தலைக்கு ரூபாய் பத்து என்று போடு கட்டாதவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று தெரிவி"

பழைய மன்னாதி மன்னர்களின் காலத்திலே, இவ்விதம் நடைபெற்றிருக்கலாம். பணமில்லையென்றதும், குடிமகன் ஒவ்வொருவனும் வரிகட்டுக, என்று உத்தரவு பிறப்பிப்பதும், அதை முரசறைந்து தெரிவித்து, கிட்டிகட்டி வசூலிப்பதும், முடியாதோர் அழவுமான காட்சிகளை நாடகமேடையில்கூட நாம், காண்பதுண்டு. 'பணமில்லையா?', 'போடு, வரி!'—என்று மக்கள் மீது பாயப்பயந்ததில்லை, கொடுங்கோலர்கள். பிரதானியாயிருந்தாலும், பிழைக்கவே தவித்தவனானாலும், ஏழையும், மச்சு வீட்டுக்காரனும், தலா ரூபாய்பத்து கட்டவேண்டும் என்று, கட்டளை பிறப்பிக்கப்பட்டால் எப்படி இருக்கும், இது? குதிரை சுமக்கலாம் பொதி மூட்டைகள் மூன்றினை! அதே மூட்டைகளைக் கன்றுகளின் முதுகிலும் வைத்தால்! தாங்கத்தான்முடியுமா? கன்றுதான் வாழுமா! இதனால் தான், இருக்கும் மக்களைக் கணக்கிட்டு வரிவாங்குவதற்குப் பதில், அவரவர்க்குள்ள நிலையையும் வசதியையும் கண்டு அதற்கேற்றவாறு வரிவாங்கும் முறை ஏற்பட்டது. நிலத்தின் தரத்தையும், அது ஒவ்வொருவரிடம்இருக்கும் அளவையும் கணக்கிட்டு, அதற்கேற்றபடி தீர்வை விதிக்கப் பட்டது. காட்டுராஜா முறையிலிருந்து மக்களின் கைக்கு சிறிதளவு சுதந்திரம், கிடைத்த முறை இதுவென்பர். "ஆறு கோடி மக்கள் இருக்கிறார்கள் நாட்டில் அரசே!" என்று அமைச்சன், மக்கள் தொகையைக் கூற, 'அப்படியா, தலைக்கு பத்துரூபா வீதம் வரிவசூல் செய்!' என்று மன்னன் கட்டளை இடுவதும், அத்தகைய ஆட்சி நடைபெறுவதுமாகயிருப்பின், எவ்வளவு வேதனைகளைக் காண்போம் நாம்! 'கூலிக்கு வேலை செய்யும் தச்சனுக்கும் பத்து ரூபாய்—நிலபுலன்களை வைத்து ஆளும் பிரபுவுக்கும் பத்து ரூபாய்' என்ற முறையிருக்குமானால், எவரே ஒப்புவர். இதனால்தான், மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு வரியிடாமல், மக்களின் நிலைமையை வைத்து வரி விதிக்கும் முறையே, உசிதமெனக் கருதினர். காட்டுராஜா தர்பாரிலிருந்து சிறிதளவு மக்களுக்கு உரிமை, கிடைக்கலாயிற்று. நிலவரி தரத்துக்கும் அளவுக்கும் ஏற்றபடி விதிக்கப்பட்டது மக்களிடமிருந்து, நேரடியாக வசூலிக்கப்பட்டது ஆயிரம் வேலி வைத்திருப்போன் அதற்கான வரியையும், அரைவேலிக்கு உரியவன் அதற்குரிய 'கிஸ்தி'யையும் செலுத்தும் நிலை பெற்றான். சொத்தின் அளவு கணக்கிடப்பட்டு, அதன் அடிப்படையில் மட்டுமே வரி வசூலிக்கப்பட்டது—அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் (மிச்சத்தின்) விகிதத்தில் அல்ல. இதனால் பணக்காரர்களுக்கு வரி செலுத்த வாட்டமோ வருத்தமோ, ஏற்படுவதில்லை—வறு

## புதுவரிகள் ஏன்?

## வேறுவழிகள் இல்லையா?

## மக்களைத் தாக்கும் புதுப் பாணங்கள்

(1) பஸ் பிரயாணிகள் மைலுக்கு ஒரு தம்பிடி அதிகமாகக் கொடுக்க வேண்டும். அரை 'டிக்கட்' உள்ள குழந்தைகளுக்கு, இரண்டு மைலுக்கு ஒரு தம்பிடி. இந்த 'சர்சார்ஜ்' காலணாவுக்குக் குறைவாக (1½ தம்பிடி 2½ தம்பிடி என்பது போல) வந்தால் இது காலணாவாகவே வசூலிக்கப்படும்.

இந்த வரியை வசூலித்து சர்க்காருக்கு செலுத்தவேண்டிய பொறுப்பு பஸ் சொந்தக்காரர்களுடையது இந்த 'வரி' சம்பந்தமான கணக்குகளை பஸ்காரர்கள், போலீஸ் ஸ்டேஷனிலுள்ள அதிகாரியிடம் கொடுக்கவேண்டும். 20 பஸ்ஸுக்கு மேல் வைத்திருப்போர், இந்தக் கணக்குகளை, போலீஸ் ஸ்டேஷனில் காட்டவேண்டியது இல்லை — இது சம்பந்தமாக நியமிக்கப்படும் அதிகாரிகளிடமே அளிக்கலாம். பிரதி மாதம் 10ந் தேதிக்குள், இந்த வரித் தொகையை, சர்க்கார் கஜானாவில் பஸ் சொந்தக்காரர் கட்டிவிட வேண்டும்.

(2) ரூ 50க்கு மேற்பட்டு ரூ 100க்குள் நிலவரி செலுத்துவோர் ரூபாய்க்கு 4 அணா விதம், அதிகமாகக் கட்டவேண்டும்.

அடுத்த ரூ 400க்கு ரூபாய் ஒன்றுக்கு 8 அணா வீதமும்,

அடுத்த ரூ 500க்கு ரூபாய்க்கு 12 அணா வீதமும், அதற்குமேல் உள்ள தொகைக்கு, ரூபாய்க்கு 16 அணா வீதமும் கட்டவேண்டும்.

யாராவது ஒருவர் தமது நிலத்தை பாகம் செய்தாலும் விற்றாலும், 1952 ஜூன் 28க்கு முன் அவர் எந்த விதத்தில் சர்சார்ஜுக்கு உட்படவேண்டுமோ அதே விதப் படி இன்னும் 3 [illegible]ண்டுகள் வரை[illegible]யில் செலு[illegible]ண்டும்.

(3) புது [illegible]களை, வடிகால் அணைத் தேக்கங்களை, சர்க்கார் செய்து கொடுத்ததால் பலன் பெறும் நிலங்களுக்கு அபிவிருத்தி வரி வசூலிக்கப்படும்.

இந்த சவுகரியங்கள் செய்து கொடுத்ததாலும், [illegible] நிலம் விளை நிலமாகியதாலும், [illegible]தனால் அந்த இடத்துக்கு விலை மதிப்பு அதிகமாகியிருந்தாலும், இந்த வரி விதிக்கப்படுகிறது.

1—1—[illegible] தேதிக்குப் பின் [illegible]பெற்ற வீட்டு [illegible] இந்த வரி நிலங்களுக்கு [illegible] உண்டு.

ஒரு நிலத்தில் முன்பு வந்த வருமானக் கணக்கு, நீர்ப்பாசன நன்மையால் இப்போது வரும் வருமானக் கணக்கும் ஒப்பிடப்படும். அதில் வரும் வித்தியாசத்தில் ஏற்பட்ட சாகுபடி செலவைக் கழித்து, மீதப்படும் தொகையை 'அதிக வருமானம்' என்று மதிக்கப்படும். இத்தொகையை முப்பதால் பெருக்கி, அதனால் வரும் தொகையை "மூலதன அபிவிருத்தியாக" கருதப்படும். இதில் பாதித் தொகையை, 20 வருட வாய்தாக்கள் மூலம், வசூலிக்கப்படும்.

★

ஆச்சாரியார் கொண்டுவந்துள்ள புதுவரிகளில் மக்களை [illegible]திக்கும்,

10-ம் பக்கம் பார்க்க

மையமாய் வாடும் ஏழைகளை கொஞ்ச வரியையும் செலுத்த சங்கடப் படலாயினர்.

பணக்காரர் ஒரு பக்கம்! ஏழை மற்றோர் பக்கம்!! — இருவருக்கும் அவரவர் நிலைக்கேற்ற வரி விகிதம் போடப்படவில்லை. ஏழை செலுத்தும் நிலவரிதான் பணக்காரனுக்கு! சிபு கொடுக்கும் விற்பனை வரிதான் ஏழைக்கும்! இதனால், வரிக் கொள்கை, புலிக்கும் பசுவுக்கும் ஒன்றாகவேயிருந்து வருகிறது. இந்தக் கொள்கையைமீண்டும்வலியுள்ளதாக்குகிறார், அன்பர் ஆச்சாரியார். முதலாளித்துவ சமுதாயத்துக்கு முட்டுக்கட்டை தருகிறார்! பணக்காரர்களுக்கு பாதுகாப்பும், ஏழைகட்குத் தொல்லையும் சமத்துகிறார்!!

*

'பட்ஜட்'டில் ஏற்பட்டிருக்கும் பற்றுக்குறைஎப்படி உண்டாயிற்று? —இந்தக் கேள்வியை ஒரு புறம் ஒதுக்கிவிட்டு,அந்தப்பற்றுக் குறையைச் சரி செய்யஇதுதானா வழி? என்று ஆலோசித்தால், ஆச்சாரியாருக்கு 'முதலாளித்துவ சமுதாய அமைப்பில்' உள்ள ஆசையும் பக்தியும் தென்படும்,

மன்னாதி மன்னர்கள் காலமுதல் வெள்ளையன் இருந்தது முதற்கொண்டு இன்று வரை, சர்க்காரை நிர்வகிக்க, மக்கள் மட்டுமே பணம் தர வேண்டியவர்களாகயிருக்கிறார்கள். ஆட்சி நடக்கவும் — மந்திரிகளுக்குப் பணம் தரவும் — கவர்னருக்கு 10 லட்சம் அழவும்— நீர்ப்பாசனத் திட்டத்துக்குச் செலவிடவும்: எல்லா வற்றையும் 'மக்கள் மூலம் வசூலாகும் வரித்தொகை' தான், சமாளிக்கிறது. இதனால்தான், பணமில்லையென்றதும், பளுவைச் சுலபமாக மக்கள் மீது சுமத்த முற்படுகிறது, சர்க்கார்.

நல்லாட்சியின் இலட்சணம் இதுவல்ல! 'மக்களை' மட்டும் எதிர்பார்க்கும் ஆட்சியை திறமையுள்ள சர்க்கார் என்று எவரும் செப்பமாட்டார்கள். 'மாமாவை அதட்டினால் பணம் தருவார்' என்று அப்பாவை நம்பியே காலத்தைஓட்டும்கணவனை மனைவிதான் மதிப்பாளா! ஊரார் தான் 'புத்திசாலி' எனப் போற்றுவார்!! செலவைச்சமாளிக்க, அவனே சம்பாதிப்பதன்றோ அழகு? கணவன் கஷ்டப்பட்டுச் சம்பாதித்ததில் காலணாவுக்கு மருக்கொழுந்து வாங்கித் தந்தாலும் அது மனோரம்யமாகத்தானே இருக்கும் மனையாளுக்கு! அதைப்போலத்தான் நாட்டைப்பரிபாலிக்கும் சர்க்காரும், மக்களின் 'பை'யைமட்டும் எதிர்பார்க்காமல், பணத்தைச் சம்பாதிக்க வேண்டும். ஆம், ஆம்! விசித்திரமாகத் தோன்றலாம், இது. ஆனால்தற்போது—பல இடங்களில் நடைபெறுவது தான். சென்னையில் பஸ் போக்குவரத்துக்கு'சொந்தக்காரர்'யார்? T. V. S. அல்ல, S. R. V. S. அல்ல; சர்க்கார்! அதனால் ஆண்டுக்கு பதினைந்து லட்சத்துக்கு மேல் 'லாபம்' வருகிறது! இது போல, லாபம் வரும் 'இனங்களை' சர்க்கார் ஏற்று நடாத்தி, சம்பாதிக்க வேண்டும். மத்ய சர்க்காருக்கு, எவ்விதம், ரயில் இலாகா, 'பொன் காய்க்கும் மரமாக' இருக்கிறதோ அதைப்போல நாடெங்குமுள்ள பஸ் போக்குவரத்து சர்க்காருக்கு ஆகிட வேண்டும்! இதைப் போல பணம் சம்பாதிக்க, பற் பல வழிகள் உள்ளன. ஆலைகள், புதுத் தொழில்கள்—இவைகளை யெல்லாம் செய்யலாம்! ஏராளமான லாபத்தையும் பெறலாம் !!

இவ்விதம், பணத்தைக் கஜானாவுக்கு கொண்டுவரும் ஆட்சியையே திறமையுடைய ஆட்சியெனச் செப்பலாம். முடியாத காரியமல்ல இது! ஆனால் காங்கிரஸ் ஆட்சியோ, கடந்த ஐந்து ஆண்டுகளாக, மக்களின் 'தலை'யைத்தான் தடவுகிறது. 'புதுவரி கொடு' என்று மக்களைத் தான் மிரட்டுகிறார், ஆச்சாரியார்!

இந்த ஒருவழிமட்டுமல்ல, இன்னும் சில முறைகளும் இலகுவாக உள்ளன.

நல்லாட்சி என்றால், அந்த ஆட்சியிலே அமர்ந்திருப்போருக்கு யாரிடம் வரி வசூலிக்கமுடியும், யாருக்கு வரி போடலாம் என்பது தெளிவாகத் தெரியவேண்டும். 'வரிபோடும்' இந்த இரு இலக்கணங்களையும்தெரியாதவர் என்று நாம், ஆச்சாரியாரைக்கூறமுடியாது. இது நன்றாகத் தெரியும், அம்மேதைக்கு! ஆனால், முதலாளித்துவ சமுதாய அமைப்பில் அவருக்குள்ள மோகம், இவ்வழிகளிலெல்லாம் அவரைச் செல்ல விடவில்லை! ஏழை விவசாயிகள் மீதே பாய்கிறார் — பணக்காரரைக் கொள்ளை லாபம்தேட அநுமதித்துவிட்டு அதில் 'என்முனை — எனக்குத்தா!' என்று பேசுகிறார். நிலத்துக்கு 'சர்சார்ஜ்' போட்டிருக்கிறாரே, அதைவிட அதிகவருமானம் பெறமுடியும் — நிலவருமான வரி போட்டால்! மத்தியதர மக்களுக்கும் சாதாரண விவசாயிக்கும் இப்போதிருக்கும் சங்கடம்கூட ஏற்பட முடியாது. ஆனால் அதைச் செய்யவில்லை, இவர். காரணம்,தெரியாதது அல்ல! பணக்காரரை ஒழிக்கும் முறையில் 'வைதீகத் தலைவருக்கு' வாத்சல்யம் எப்படிப் பிறக்கும்? ஆகவேதான், அவர்களுக்குப் பாதுகாப்பும், மக்களுக்கு வரிச்சுமையும் கிடைக்கிறது பரிசாக!

*

நமது மாநிலத்தில் சமதர்மத் தென்றலைச, படிப் படியாகச் சிற்சில, புதுக்கொள்கைகளைக் கடைப்பிடித்துக் காட்டலாம் — காங்கிரஸ்காரர்கள். ஆனால் அவர்களுக்கு அதில்கூட ஆசையில்லை! அவ்வளவு தூரம் 'முதலாளித்துவ சமுதாய அமைப்பு' அவர்களைப் பிடித்து ஆட்டிவைக்கிறது. இல்லையெனின், ஆச்சாரியார் இவ்வித வரிகளையா சுமத்த வருவார்! அதிலும் சென்னைக்கு நான்கு கோடி தேவை என்பது பெரிய காரியமல்ல — கடந்த இதழில் நாம் குறிப்பிட்டதுபோல 'டில்லி'யைக் கேட்டுக்கூடச் சரிப்படுத்திக்கொள்ளலாம். டில்லியைக் கேட்பது என்றால் இனமாக அல்ல! நாம் எவ்விதம் மாகாணசர்க்காருக்கு வரி செலுத்துகிறோமோ, அதைப் போலவே டில்லிக்கும் வரி செலுத்திக்கொண்டுதான் இருக்கிறோம். வருமான வரி! ரயில் இலாகா வருமானம்! சுங்க வரி! இவ்விதம் பல ரூபங்களில் கோடிக் கணக்கான நமது ரூபாய்கள், டில்லிக்கு போய்க் கொண்டுள்ளன. இதில் ஒரு நான்கு கோடி பெரிதா! எத்தனை கோடி ரூபாய் நாம் தருகிறோம்—டில்லிக்கு. அவ்வளவு பணமும், இங்கேயே செலவழிக்கப்பட்டால் 'பற்றுக் குறை'தான் வருமா! புதுவரிதான் ஏற்படுமா! சஞ்சலம்தான் எழும்புமா!

*

'பற்றுக் குறை' பட்ஜட், நாம் அதிக வரி கொடுத்தாலும்,ஏற்படத்தான் செய்யும். ஏனெனில் அத்தகையவர்கள் கையில்தான் நாடு சிக்கிக் கிடக்கிறது. இரத்தம்குடிக்கும் புலியென்று கூறுவர் முதலாளித்துவ சர்க்காரை. அத்தகைய 'புலி'களின் கையில்தான் நமது நாடும் வாழ்வும் அகப்பட்டுக் கிடக்கிறது. இத்தகைய ஆட்சி நீடிக்கும் வரை, "பற்றுக்குறை" அடிக்கடி ஏற்படவே செய்யும். பணக்காரன் வாழ்வான்! நாம் வதைவோம்!! இந்த நிலை ஒழிய இன்றுள்ள 'முதலாளித்துவ முறை' ஒழியவேண்டும்—புதுச் சோலை மலரவேண்டும். அந்நாள் வர நமது இலட்சியம் வெற்றிபெறவேண்டும். இன்பத் திராவிடம் மலர்ந்தால், பணம்தான் கோடிக் கணக்கில் 'டில்லி'க்குச் செல்லுமா! மக்களை வதைக்கும் 'வரிக் கொடுமை'தான் நீடிக்குமா! முதலாளித்துவ மோகனச் சிரிப்பைத்தான் கேட்க முடியுமா!! அத்தகைய இன்ப நாள் என்று வருமோ? இன்று கொட்டமடிக்கும் புலிகளின் கொடுமைதான் என்று ஒழியுமோ?

★

விரைவில் திருச்சியிலிருந்து வெளிவருகிறது!

★ "தீப்பொறி" ★

(தமிழ்வார வெளியீடு)

ஆசிரியர். சி. பி. சிற்றரசு.

ஆண்டு சந்தா ரூ. 7; ஏஜண்டுகளாக விரும்புவோர் விண்ணப்பிக்கவும். விபரங்களுக்கு:—

மானேஜர்,
"தீப்பொறி"
த. பெ. 316, தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.



## பேபியின் கேள்வியும் டில்லி தர்பாரும்!

★

(அ) சென்னை ராஜ்யத்திலுள்ள பள்ளிகள் எல்லாவற்றிலும் இந்தியைப் புகுத்துமாறு இந்திய சர்க்கார் உத்தரவிட்டிருப்பது உண்மையா?

(ஆ) உண்மையானால், வடஇந்தியாவிலுள்ள பள்ளிக்கூடங்களில் தமிழ் மொழியை ஏன் புகுத்தக் கூடாது?

(இ) இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவக்க சென்னையிலுள்ள முன்னேற்றச் சக்திகள் யாவும் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதை சர்க்கார் அறியுமா?

திருச்செங்கோட்டுத் தொகுதியில், இந்நாள் காங்கிரஸ் தலைவர் டாக்டர் சுப்பராயனைத் தோற்கடித்து வெற்றிபெற்ற வீரர் நமது தோழர் எஸ். கே. பேபி (கந்தசாமி) மேற்குறித்த கேள்விகளை, கடந்த 18—6—52 அன்று டில்லி பார்லிமெண்டில் கேட்க விரும்பி சபாநாயகருக்குத் தெரிவித்தார். மெம்பர்கள் விபரமும் விளக்கமும் பெறத்தான் கேள்விகள் போடுவதும் அமைச்சர்கள் பதில் அளிப்பதும்! ஆனால், வடநாட்டுச் சபாநாயகரோ, இந்தக் கேள்விகளைக் கண்டதும், நண்பர் பேபிக்கு கீழ்க்கண்ட பதிலைத் தெரிவித்திருக்கிறார் — தனது கேள்வியையும் அதற்கு சபாநாயகர் அளித்த பதிலையும் தோழர் பேபி, நமக்கு அனுப்பியுள்ளார். சபாநாயகர், கேள்விகளை, மறுத்து அனுப்பியுள்ள ஆங்கிலக் கடிதத்தின் மொழி பெயர்ப்பு, நகல் இது.

ஐயா,

இந்தி மொழியைப் பள்ளிக்கூடங்களில் வைப்பது குறித்து தாங்கள் அனுப்பிய கேள்விகளை, சபாநாயகர் சபையில் அனுமதிக்க மறுத்து விட்டார் என்பதைத் தெரிவிக்கிறேன்.

உங்கள்
சி. எல். சூரி
கேள்விப் பிரிவு அதிகாரி.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வே:— பஜகோவிந்தம் பாடினால் பலிக்காதது எதுங்க?

ஆ:— யாருடா சொன்னது?

வே:— சாமி, நீங்கதான்!

ஆ:— போடா, பைத்தியக்காரா, நம்ம ஆத்திலே வேலைக்கிருந்தும், சூட்சமபுத்தியில்லையேடா,ஊருக்கு அதைச் சொன்னா, நமக்கும், அதே பதிலைச் சொல்லரியே—பஜகோவிந்தம் பாடினா, எல்லாம் நடக்கும்னா, கோயில்களே போதுமே, ஏண்டா, சட்டசபை, கோர்ட், ஜெயில் எல்லாம்....ஜனங்களண்டை சொன்னா, நம்பினவங்க வரையிலும் தொல்லையில்லைபாரு.

வே:— சாமி, சட்டசபையே கூட பஜனைமடமாயிருந்தால் நல்ல துன்னு பேசினீங்கன்னு வீட்டிலே, பேசிகிட்டிருந்தாங்க.

ஆ:— பஜனைமடமாயிட்டா, சுண்டலும், புளியோதரையும் கிடைக்கும். வெளியிலே பேசாதை, வீட்டுக்குள்ளேயே கொண்டுவராதே— அங்கே வேதாந்தம்—இங்கே விசாரம்!எனக்குத் தலைகனத்துப்போச்சு. இந்த கிருஷிக்லோக் கட்சியாரோடு பேசிப் பேசி, எனக்கு வாய்வலிக்கிறது.

வே:— வாய்வலிச்சாலும், அவங்க சேர்ந்துதான் ஜெயிக்க வைச்சிட்டாங்களே.

ஆ:— போடா, அசடு,என்மேலே, நம்பிக்கையிருக்குன்னு சொல்ல, இவ்வளவுடா இந்த நம்பிக்கையை நான் நம்பிவேறே காரியம் செய்யணும்.

வே:— நம்புங்க—சாமி.

ஆ:— எனக்கென்னமோடா, நம்பிக்கையில்லை. இந்த மந்திரி சபையிலே நம்பிக்கையில்லை. என்மேலே நம்பிக்கையிருக்குன்னு சொல்லியிருக்கிறவங்க எவங்க பேரிலும் நம்பிக்கையில்லை. இன்னும் சொல்லப் போனா, என்பேரிலேயே எனக்கு நம்பிக்கையில்லை !

வே:— நான் நம்புகிறேன்.

ஆ:— போடா போ படுக்கை விரித்திருக்கா பாரு நான் கொஞ்ச நேரம் நிம்மதியா, படுத்திண்டிருக்கேன்.

★

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வரி இனங்கள் இவை. பஸ் டிக்கட் வரிமூலம் ரூ. 1 கோடியும், நிலவரி 'சர் சார்ஜ்'மூலம் ரூ 75 லட்சமும், நில அபிவிருத்திமூலம் ரூ 60 லட்சமும் (இந்த ஆண்டில்) சர்க்கார் கஜானாவுக்கு அதிகமாகக்குவியும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த வரிகள் யாரை மிகவும் தாக்குபவை என்பதை எவரும் புரிந்துகொள்ள முடியும்!

பஸ் கட்டண உயர்வால் ஏழைகளும் நடுத்தர மக்களும்தான் அவதி அடைவார்கள். பணக்காரர்களைப் பாதிக்காது, இது.

நாம்தான் தொடுக்க வேண்டும்! அதிலும் இப்போது, ஐந்து ஆண்டுகளுக்குமுன் இருந்ததைவிட இரண்டுமடங்கு அதிகமாகி இருக்கிறது, பஸ்சார்ஜ். ரயிலிலும் சார்ஜ் அதிகம்! பஸ்ஸுக்கும் அதிகம்!!— போக்குவரத்துமீது 'புதுப்பளு' வீசப்படுகிறது.

நிலவரி முறையும் நடுத்தரமக்களை பாதிப்பதுதான். ரூ 50-க்கு மேல் என்று வைத்திருப்பது, மிகவும் ஆபத்தானது.

ரூபாய் ஆயிரத்துக்குமேல்வரிகட்டுவோர், ரூபாய்க்கு ரூபாய் வரிகட்டவேண்டுமாமே! என்று கூறத் தோன்றலாம். பெரிய நிலப்பிரப்புக்களை மட்டும் தட்டும் மகத்தான திட்டம் என்றுகூடப் பேசலாம், சிலர். ஆனால் உண்மை அதுவல்ல! விலைக் கட்டுபாடு நீக்கத்தின் விளைவாக நிலப்பிரபுக்கள் அவிழ்த்து விடப்பட்டிருக்கிறார்கள். நெல்விற்பனைமூலம் ஆண்டுக்கு பதினாயிரம் லாபம் பெற்ற பண்ணையாளர்கள். இனிமேற்பட இருபதனாயிரம் ரூபாய் லாபம் குவிப்பர்! ஏராளமான 'பணம்' சேரவழி இருக்கும் போது, ஆயிரத்தோடு மற்றோர் ஆயிரம் சேர்த்துக் கட்டுவது பிரமாதமல்ல, அவர்களுக்கு. ஆனால், நடுத்தர விவசாயியின் நிலை, அது வல்ல!

அபிவிருத்தி வரி என்ற முறை பல ஐயப்பாடுகளை எழுப்புகிறது. ஏழை முதல் எல்லோரும் இதனைக் கட்டித்தான் தீரவேண்டுமாம்.

நீர்ப்பாசனத்துக்கென 'தனிவரி' ஒன்றை வசூலிக்கும் சர்க்கார் அதன் மீதே மற்றோர் வரியும் சுமத்துவதென்றால் என்னவென்று கூறுவது? இன்று நிலத்துக்குள்ள மதிப்பை வைத்து, தொகை நிர்ணயிக்கப்படுமாம்! இன்னும் ஐந்து ஆண்டுகளில அந்த நிலத்தின் விலை மதிப்பு, இன்றுள்ளதுபோலவே இருக்குமென்பது என்னநிச்சயம்?

❀

**உடனே தேவை**

கீழ்க்கண்ட இடங்களில் 'திராவிடன்' இதழ் விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் உடனே தேவை

சேலம், கரூர்.

நிர்வாகி:—

'திராவிடன்'

16, நிலையன்ஸ் ரைஸ்மில் தெரு

சென்னை 1.

இரண்டாம் பதிப்புகள்

ஜெபமாலை 0—8—0

சாது 0—8—0

கருத்து விளக்கச் சிறு கதைகள்.

புதிய சித்திரம்

மக்களை மதியாத அண்ணன்!

மக்கள் தீர்ப்புக்காக வாதாடும் தம்பி!!

**மக்கள் தீர்ப்பு**

C. N. A. எழுதியது.

மக்களாட்சி நாட்களிலே அனைவரும் படிக்கவேண்டிய அரசியல் கருத்து விளக்கக் கதை.

விலை 8 அணா.

அச்சில்

வாழ்க்கைப் புயல்

வெள்ளிநாயகியின் கோபம்

கிடைக்குமிடம்:— பரிமளம் பதிப்பகம் 17-B, வரதராசல் தெரு, சின்ன காஞ்சிபுரம்.

வியாபாரிகளுக்கு 25 o/o கழிவு. V. P. P. இல்லை. தபாற் செலவு தனி.



# எதை? எப்படி? எதற்காக?

அன்பர் ஆச்சாரியார் அடிக்கடி "ஆண்டவனைத் துதியுங்கள்!' என்று கூறி வருகிறாரே, அதைக் குறித்து நமக்கோர் சந்தேகம்! "எல்லாம் வல்ல இறைவனைத் துதித்தால் கஷ்டங்கள் விலகும். அவர் நம்மை இரட்சிப்பார்" என்று அவர் கூறுவதை மறுக்க விரும்பவில்லை, நாம். துதித்தால், துன்பங்கள் ஒழியுமென்றால், நமக்கென்ன சங்கடம் அதில்? மக்களிடமுள்ள தொல்லைகள் நீங்கி, சுகவாழ்வு பெறவேண்டும் என்றுதானே, நாமெல்லாம் போராடுகிறோம்! தடியடியும், துப்பாக்கியும், சர்க்காரின் அடக்குமுறையும், இரத்த வெள்ளமும், இல்லாது இன்பங்கள் மலருமென்றால், நமக்கென்னகஷ்டமிருக்கிறது, இறைவனைத் துதிப்பதில்! இல்லை— இல்லை. ஆனால், ஆண்டவனின் அத்யந்த பிரியாக, சதாசர்வகாலமும் 'பஜகோவிந்தம்' பாடிக்கொண்டிருக்கும், ஆச்சாரியாரை 'அருப்புக்கோட்டை'யில, ஐயன் ஏன் கைவிட்டாரோ — என்று கேட்பீர்கள். நமக்கும் எழுகிறது அந்தச் சந்தேகம். எல்லாத் தொல்லைகளும் தொலையுமாமே இறைவனைத் துதித்தால்! ஆனால், அங்கேன், ஆண்டவன் ஆச்சாரியாரை அல்லாடவிட்டாரோ! எமக்குத் தெரியவில்லை, இதற்கான விளக்கம். அன்பர் ஆச்சாரியார் அறிவாரோ, அறியாரோ— தெரியவில்லை. ஆனால், "அருப்புக் கோட்டை"க்குப் பிறகும், ஆச்சாரியார் ஆண்டவனை அழைக்காமலில்லை! அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்திருக்கிற எயபிரான், பக்தன் குரல் கேட்டும், பராமுகமாய் இருந்ததேனோ? பதில் அறியோம் யாம். விளக்கவேண்டிய விவேகி யாரோ, அதற்குப் பின்னரும், 'தெய்வத்தைத் துதிப்பீர்! தீமைகள் ஒழியும்!' என்றே போதிக்கிறார். தெய்வத்தைத் துதிக்கவேண்டும்! நமக்கென்ன சங்கடம், இதில். நமக்கும் தெய்வத்துக்கும் என்ன பங்காளிக் காய்ச்சலா! பகையா! வெறுப்பா! — எதுவுமில்லை. 'பழம் கிடைக்கும் பகவானைத் துதித்தால்' என்றிருக்குமானால், கஷ்டப்படுவோமா நாம். கனி கிடைப்பதை வெறுக்கும் கருப்பு உள்ளத்தவரா, அல்ல, அல்ல. இன்பம் வேண்டும் நமக்கு. "ஈசா! பரமேசா!" என்றால், அந்த இன்பம் வரும், எதுவும் கிடைக்குமென்றால், இவ்விதம் கூறுவதில் நமக்கென்ன சஞ்சலம், சங்கடம்? ஆச்சாரியார், கூறுவது போலவே, தெய்வத்தைத் தொழுவோம், வணங்குவோம். ஆனால், அவர் ஒன்றைமட்டும் தயவுசெய்து விளக்கிடவேண்டும்! அவரோ, சாதாரணமானவரல்ல. வேதாந்தி— விளக்கங்களும் நுணுக்கங்களும் தெளிவோடு வியாக்யானம் செய்யக் கூடியவராம். தெய்வத்தைத்தொழத் தயார், ஐயன்மீர்! ஆனால் தயவு செய்து தெளிவு வேண்டும். எந்தத் தெய்வத்தைத் தொழவேண்டும்? எதை! எதை!! விளங்காமல்தான் கேட்கிறோம்—குதர்க்கபுத்தியல்ல— உண்மையாகவே கேட்கிறோம். எந்தத் தெய்வத்தை? ஹரியையா, அரனையா! பார்வதியையா, லட்சுமியையா! தியாகேசனையா, தில்லை நடராசனையா! தாயுமானவனையா, வரதராஜனையா! கார்மேகக் கண்ணனா, அல்லது காருத்தனா? சீதா பிராட்டியா, தெருவீதி அம்மனா! காளியாத்தாளா, ஐயனாரப்பனா? எந்தத் தெய்வத்தைத் தொழச் சொல்கிறார்-எது, 'தெய்வம்' என்று குறிப்பிடுகிறார். பழனிமலைமேல் வாழ்பவனா, பிள்ளையாரப்பனா! வாதாபி கணபதியா, சோமசுந்தரேசனா, திருப்பதி வெங்கடாஜலபதியா, திருவரங்கத்தானா, எட்டுக்குடி முருகனா, குன்னக்குடியானா, கலைமகளா, அலைமகளா, காஞ்சி காமாட்சியா, கங்கா தேவியா! எதுவென்று கூறட்டும்—நமக்கு ஆட்சேபணையில்லை; இதில் எத்தெய்வத்தைத் தொழச் சொல்கிறார். மரத்தடி காத்தான்! வேப்பிலை அம்மா! வீரன்! சூரன்! பெரியாச்சி! ஒதியமரத்தடி தெய்வம்! சுக்குமாந்தடியான்! சூலமேந்தி சூலி! திரிசூலி! மகமாயி! மண்டலேஸ்வரி! பிரம்ம தேவன்! மன்மதன் கோயில்! நாரதமா முனி! நந்திகேசுவரர்! நர்த்தன முரளி! கோவர்த்தனதாரி! கண்ண பரமாத்மா! காசி விசாலாட்சி!—இந்தப் பட்டியலிலே, எந்தத் தெய்வத்தைச் சொல்கிறார். சிவத்தைச் செப்புகிறாரா, நமக்கு! அன்று, அன்று. "சிவமோ, பெரிது? எமது நாராயணனன்றோ!' என்று விஷ்ணுவைச் சிபார்சு செய்கிறாரா! எதைத் துதிப்பது? எதைக் கடவுளென்று குறிக்கிறார்? எந்தத் தெய்வம்? பழம் நூல்களைப் புரட்டினோம்—சில பனுவல்களைத் துருவினோம். தெய்வம், என்பதற்கு, இப்படி விளக்கம் கிடைக்கிறது. ஏழைகளுக்கு அன்னங் கொடுத்தவர் தெய்வமாம்! அன்பான மாணக்கருக்கு அரிய குருவே தெய்வமாம்! அஞ்சினோர்க்கு ஆபத்தை அகற்றினோன் தெய்வமாம்! காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாம் கணவனே தெய்வமாம்! காசினியின் மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு காக்கும் மன்னன் தெய்வமாம்! ஒதரிய பிள்ளைகட்கு அன்னை தந்தையர் தெய்வமாம்! செப்புகின்றன நமது தமிழ் நூல்கள். இந்தத் தெய்வங்களையா? எதைச் சிபார்சு செய்கிறார்! கண்முன்னே இருக்கும் நடமாடும் தெய்வங்களையா? அல்லது கோயிலிலே கிடக்கும் படரூபச் சாமிகளையா? காலண்டரிலே இருக்கும் 'பிக்சர்' கடவுள்களையா? அல்லது கல் ரூபத்திலே இருக்கும் தெய்வங்களையா? எதைக் 'கடவுள்' என்று கூறுகிறார். மெய்ஞ்ஞானம் தேடச் சொல்கிறாரே! அந்த ஞானம், இந்தக் கடவுளரில் எவர் மூலம் கிட்டுமென்று போதிக்கிறார்? உள்ளத்தை ஒன்றுக்கி, ஐம்புலன்களை அடக்கி, ஆசையெனும் குதிரைக்கு கடிவாளம் பூட்டி, மனம் எனும் குரங்கைக் கட்டி, மனதிலே 'த்யானம்' செய்க! அத்தியானத்தின் முடிவிலே, ஆண்டவனின் ஜோதியைக் காண்க!! — இவ்விதம் கூறவில்லை. அன்பர் ஆச்சாரியார். கடவுளைத் துதிமின்! பஜகோவிந்தம் பாடுமின்!!—என்கிறார். அதையே, தான் செய்வதாகவும், கூறுகிறார். அவ்வழியே, பிறரும்

REGD. NO 4642.

வருகவென அழைக்கிறார். 'தேவ புருடர், கருடர், காந்தருவர், சித்தர், கின்னரர், வித்தியாதரர் சங்கீதம் பாட—தும்புரு நாரதர், சனகாதியர், நற்சேடன், பாருடனே, ரிஷி முனிவர், பலரும் போற்ற' அளிக்க [illegible] ...ளிகொள்வோன் [illegible] ராஜன் என்போரும் உளர்! அவனை விடப் பெரியவன், முருகன்னான்—அவனன்றோ பார்வதி நாதன் பரமசிவம், என்று சண்டைக்கு வருவோரும் உளர்! பிள்ளையாரையும் முருகனையும், அரச மரத்தடிச் சாமியையும், வீரனையும் வணங்குவோரும் உண்டு! இந்த ரகத்திலே, யாரைத் துதிக்க வேண்டுமெனச் செப்புகிறார், ஆச்சாரியார்! எந்தக் கடவுளை, சிபார்சு செய்கிறார், நமக்கு! எந்தக் கடவுளால், வாழ்வு சுபிட்சமாகும் என்று கூறுகிறார்!!

★

'கடவுளைத் துதிப்பீர்' என்று, நாட்டினர்க்கு, அடிக்கடி வலியுறுத்தும், அன்பரை நோக்கி மற்றோர் ஐயமும் எழுகிறது. கடவுளைத் துதிப்பது என்றால், எப்படி? எப்படித் துதிப்பது?—இதையும், சற்று, அவர் விளக்கினால் நன்றாகயிருக்கும். நாமம் போட்டுக்கொண்டு — அதிலும் வடகலை தென்கலை எனும் சண்டை உண்டு!—விஷ்ணு கோயிலை வலம் வந்துவிட்டால போதுமா! சிவனுக்குத் தினசரி அர்ச்சனை செய்யவேண்டுமா! அம்மனுக்கு அனுதினம் பட்டாடை போர்த்துவதா? எவ்விதம் துதிக்கவேண்டும், கடவுளை! எந்த வகையில் அவரைத் துதிப்பது! காளிக்கு ஆடு வெட்டுவர், கிராமங்களிலே—கோழிகளைக் குவிப்பதுண்டு சில தெய்வங்களுக்கு. இவ்விதமா? அல்லது காலை மாலை எழுந்து பசுவுக்கு புல் போட்டால்போதுமா. கொழுக்கட்டை வைத்துப் படைத்தா! துளசி மாடத்தைச் சுற்றியா! வரலட்சுமி விரதம் இருந்தா! கார்த்திகை தீபம் ஏற்றியா! சனிக்கிழமை தோறும் வீதிகளில் புரண்டா! ஏகாதசிவிரதம் அனுஷ்டித்தா! அர்ச்சனைமூலம் அய்யருக்கு தட்சணை சமர்ப்பித்தால் போதுமா? எப்படித் துதிப்பது! இந்த வகைகளிலே எதைச் சிபார்சு செய்கிறார். 'காவடி தூக்குகிறேன் கட்டிக்குடியானே' என்பர். 'அலகு குத்திக் கொள்கிறேன்' என்று வேண்டிக் கொள்வோரும் உண்டு. 'ஆயிரத்தெட்டு அணுக்களை உண்டியில் போடுகிறேன்' — இதுவும் ஒரு முறை. இவைகளைச் செய்யுமாறா! அரசமரத்தைச் சுற்றி வந்தால் போதுமா! 'அரகரா மகாதேவா!' என்று உச்சரித்தால் போதுமா! 'ராம், ராம்' என்று நோட்டில் எழுதச் சொல்வாராம், சங்கராச்சாரியார். அந்த முறையிலா? எந்த—எம்முறை—எப்படித் துதிப்பதாம்! இதில் எது சரியென்கிறார்! அல்லது "இம்முறைகளில் அல்ல; ஒரு முறை ஈசன் நாமத்தை எண்ணினாலே போதும்" என்கிறாரா. அவ்விதமெனின், அதைத்தான் வெளியிடுவாரா! துணிவு பிறக்குமா? விளக்கம் தருவாரா!!

☆

எதை? எப்படி?—இந்தச் சந்தேகங்கள் எழும்புபோது, மற்றொன்றும் மனதில் ஓடிவருகிறது. 'கடவுளைத் துதிப்பீர்' என்கிறாரே — எதற்காக? எதற்காக கடவுளைத் துதிக்கச் சொல்கிறார்! ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கையில் முன்னேற்றம் பெறவா? அல்லது எல்லோரும் துதித்தால நாடு முன்னேறும் என்கிற ஆசையினாலா! பஞ்சம் தீருமென்பதாலா! பிணி அகலும் என்பதாலா! அறிவு பெருகும் என்பதுதான் காரணமா? தொல்லைகள் நீங்கலாம் என்பதா! ஏழை—பணக்காரன் வித்தியாசம் ஒழியும் என்கிற ஆசையிலா! ஆலைகள் பெருகுமென்பதா! விஞ்ஞானம் வளரும் என்பதுதான் காரணமா? அல்லது, வெளிநாட்டிலிருக்கும் விஞ்ஞானிகள் மனதில் தோன்றிய ஆராய்ச்சிகள் அனைத்தும் பாமரர் மூளையிலும் உதிக்கும் என்ற உண்மையைக் கண்டதாலா? எதனால் கூறுகிறார், இவ்விதம்! எதற்காக, எங்குபோனாலும், கடவுளைத் துதிக்கச் சொல்கிறார்? நாட்டுக்கு நலம் பெறலாம் என்ற நல்லெண்ணமா, எல்லோரையும் துதிக்கச் சொல்வது. அல்லது "நான் இடர்ப்படுகிறேன். எல்லோரும் துதித்து என்னைக் காப்பீர்!' என்ற கருத்திலா? இவருக்காக நம்மைத் துதிக்கச் சொல்கிறாரா! அல்லது நமக்காகவே நம்மை துதிக்கும்படி அழைக்கிறாரா? என்ன காரணம், என்ன அவசியம், என்ன அவசரம், இந்தப் போதனைக்கு! எதற்காகத் துதிப்பது! கட்டைவண்டி ஓட்டுபவன் வெயில் கூடாது எனகிறானே—அதற்கா? அல்லது 'கல் சுடுபவன் காயவேண்டும் வெயில்' என்கிறானே—அதற்கா? மழை விரும்பும் விவசாயிக்காகவா! 'மாடு போல் உழைக்கிறேன்—எஜமான், கூலி அதிகம் கொடுங்கள்' என்கிறானே, பாட்டாளி. அவன் குறை தீரவா! ஆலையரசன் வருத்தம் தீரவா! சர்க்காரின் பணப் பஞ்சம் நீங்கவா! சமதர்மம் ஏற்படவா! ஜாதிபேதம் ஒழியவா! எதற்காக? என்ன காரணத்துக்காக? கஞ்சிக்கு உப்பில்லை என்று அழும் பாட்டாளியின் கண்ணீர் ஒழியவா அல்லது பாலிலே கலக்க சர்க்கரையில்லை என்று வேதனைபபடும் பணக்காரன் குறை தீரவா! புலி வாழவா! பசு வாழவா! புசிப்பவனுக்காகவா? பசிப்பவனுக்காகவா? எதற்காக! எந்தக் கொடுமை போவதற்காக! சமாதானம் பரவவா! சண்டைகள் ஒழியவா! ஜாதிபேதம் அகலவா, சம அந்தஸ்து ஏற்படவா? எதற்காக, கடவுளைத் துதிக்கச்சொல்கிறார். "எல்லாம் ஏற்படத்தான்"—என்றுவது, சொல்லிட முடியுமா, அவரால்! அவ்விதம் தான் வெளியிடுவாரா!!

★


விற்பனையாகிறது

சி. என். ஏ. தீட்டிய

சிறிய ஏடு

அதிர்ச்சிக்கு வைத்தியர்

விலை அணா 2

விற்பனை கழிவு 25%

தபாற்செலவு இனம். வேண்டுவோர் எழுதுக.

'திராவிட நாடு' நிலையம்

காஞ்சிபுரம்.


Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.



312
3-52

# திராவிடநாடு



## ஞானோதயம்?

ராஜ்ய வரி விதிப்பு அளவு அதிகமானதே. ஆகவே புது வரிப் பிரேரணைகளை மக்களின் பிரதிநிதிகள் எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை. பணக்காரர்கள் மீதே வரி விதிக்க வேண்டுமெனக் கோருவதும் சரியே. நியாயமானதே. ஆனால், பணக்காரர்கள்மீதும்இந்திய சர்க்கார்வரிகளை விதிக்கிறார்கள். ராஜ்ய சர்க்கார் எதையாவது செய்யப்போனால் பணக்காரர்கள் இந்திய சர்க்காரை அணுகுகிறார்கள். தங்கள் வருமானம் எங்காவது பாதிக்கப்பட்டுவிடப் போகிறதேன்று அந்த சர்க்கார் பயப்பட்டு நடக்கிறார்கள். ஆச்சாரியார்

(11-7-52 சட்டசபையில்)


மலர் 11 | 20—7—52 | இதழ் 3.

விலை: இரண்டணா

# ★ புதுவரி ★

தி. வி.

இடம்:— ரயிலில் முதல் வகுப்பு வண்டி.

காலம்:— இரவு.

இருப்போர்:— தஞ்சை மாவட்ட பிரபல மிராசுதாரர்கள்.

மிராசுதாரர் 1:— என்ன முதலியார்வாள், மதராசுக்குத் தானே?

மிராசுதாரர் 2:— ஆமாம், நீங்க...

மி 1: நானும் மதராசுக்குத்தான். நீங்க என்ன விஷயமாய்......

மி 2:—எல்லாம் சொந்த விஷயமாகத்தான்.

மி 1:— என்னங்க அப்படி... ...

மி 2:— காங்கிரஸ் வந்தாத்தான், நமக்கு கஷ்டமில்லேன்னு, நம்ம பணம் ஆயிரமாயிரமா செலவு பண்ணினேம். பணம் மட்டுமா, நாம பட்ட கஷ்டம், அடைஞ்ச நஷ்டம் இவ்வளவு அவ்வளவுன்னு சொல்ல முடியாது.

மி. 1:- ஆமாம், நம்ம தொகுதியில் நான் பட்ட சிரமம் வேறு யாராலும் பட்டிருக்கமுடியாது. அப்படியும் தோத்துப்போச்சு!

மி. 2:- கம்யூனிஸ்ட் ஜெயிக்கிறுன்னு, இவங்க பண்ணின அக்கிரமந்தான் காரணம். இருந்தாலும் நம்மளைப்போல, பணக்காரங்க தயவினுலே, மிட்டா, மிராசுகாரங்க பக்கபலத்தாலே, ஏதோ இந்த அளவாவது வந்தாங்க.

மி. 1:- அவ்வளவு தொல்லைக்கிடையிலே தோள் கொடுத்தோமே —துளியாவது நன்றியிருக்குதா, பாருங்க.

மி. 2:- நன்றியிருந்தா, நல்லாயிருக்குமே — அது அவங்களுக்கு பழக்கமேயில்லையே.

மி. 1:- இருந்தாலும், ராஜாஜி, இப்படி நடந்துக்குவார்னு நான் நினைக்கவே இல்லை.

மி. 2:- நீங்க, மட்டும்தானு, நம்ம ஜில்லாவிலே, எந்த மிராசுதாரனும் கனவுகூட கண்டதில்லை.

மி. 1:- நீங்க, மிராசுதாரர் கூட்டத்திலே, பேசினதிலே, அந்த ஒரு விஷயம், எனக்கு நல்லாபிடிச்சுது.

மி. 2:- எதுங்க?

மி. 1:— கம்யூனிஸ்டுகள் கையிலே சிக்கி, காங்கிரஸ் சாகப்பார்த்தது. நாங்க கைகொடுத்துக் காப்பாத்தினேம். ஆனல், இப்போ, அதே கம்யூனிஸ்டுகள் கைகொட்டிச் சிரிக்கிறமாதிரி நிலையாய்விட்டதுன்னு சொன்னிங்களே—அதுதான்.

மி. 1:- ஆமாம், பின்னே என்னவாம், இந்த ராஜாஜி, முதல்லே, புதுவரியே போடப்போறதில்லேன்னு, பிரமாதமாய்ப் பேசினர். பிறகு என்னடான்னு, வரிவரியாய்ப் போட்டுத்தள்ளிவிட்டார்.

மி, 2:- பண்டாரர் வரி சரி—நியாயமானது. ஜனங்களண்டை வசூல் பண்ணி, கொண்டு கொடுத்துவிடலாம்.

மி. 1:- ஆனல், பெட்ரோல்மீது வரி, புது நீர்ப்பாசன வசதிபெற்ற நிலங்கள்மீது வரி, அப்பப்பா, இப்படிப் போட்டா, என்ன செய்யரது.

மி. 2:- எல்லாம் போகட்டும். நிலவரின்னு 'சர்சார்ஜ்'போட்டு, நம்ம உயிரை வாங்கிவிட்டாரே, இந்த ராஜாஜி.

மி. 1:- நம்ம, கண்டனத்தைப் பார்த்திருப்பாரே, ராஜாஜி

மி. 2:- நம்மளையெல்லாம் கூப்பிட்டுப்பேசப் போவதாகச் சொல்லியிருக்கிருரே. உங்களுக்கு அழைப்பு வரல்லியோ.

மி. 1:- இல்லையே!

மி 2: ஐயோ, எனக்குந்தான். நான் ஒரு கார் வாங்கலாம்னுதான் வர்ரேன்.

மி. 1:- நீங்க எங்க தங்குவீங்க?

மி. 2:- உட்லண்ட்ஸிலேதான்.

மி. 1:- நான் செஸில்...

மி. 2:- நாளைக்கு, நீங்க, ராஜாஜியை சந்திச்சு, இதைப்பத்திப் பேசுவிங்களோ

மி. 1:- ஆமாம், எங்கங்கே......

மி. 2:- சரி, நமக்கு எங்கே முடியுது!

இடம்:— ஆச்சாரியார் இல்லம்.

காலம்:— பகல்

இருப்போர்:— வேலைக்காரன் — தஞ்சை மிராசுதாரர்கள், ஆச்சாரியார்.

மி. 1:- அடடே, என்னண்டை, ஏன்னமோ சொன்னீங்க. இப்போ, நேரே இங்குதான் வந்திருக்கிறீங்க.

மி. 2:- இல்லே. நீங்க உண்மையைச் சொல்லல்லே. நானும் பொய்யைச் சொல்லவேண்டியதாயிற்று. அட கங்காதரமுதலியார் கூட வாரார்.

மி. 1:- அவரோடே, கனகசபைப் பிள்ளை, நடராசமுதலியார்கூட.

மி. 2:- அதோ, பார்த்திங்களா, தென்பாதி திருநாவுக்கரசுமுதலியார், அவரோடே, மைத்துனர் மருதநாயகமுதலியார்

மி. 1:- எல்லோருந்தான் வந்திருக்காங்க — ஆனல் ஒருத்தரையொருத்தர் ஏமாத்திட்டு, தாங்களே வந்து ராஜாஜியைப் பார்த்து சலுகை வாங்கிக்கனும்கிற பேராசை.........

மி. 2:- எப்படியோ, போகட்டும். நம்மை நாமே ஏமாத்திக்க இது சந்தர்ப்பமில்லே. நமக்குள்ளே ஒத்துமையிருந்தாத்தான், இன்னும் கொஞ்ச நாட்களாவது, நிம்மதியாயிருக்கலாம்.

மி. 1:- அவரைச் சந்திக்கிற போதாவது நாம் எல்லோரும் சேர்ந்து சந்திப்போம்.

[வேலைக்காரன் கையில் சீட்டெழுதியனுப்புகின்றனர்]

வேலைக்காரன்:- சாமி, யாரோ, பெரிய பெரிய ஆசாமிகளா, பத்துப் பதினைஞ்சுபேர் நிக்கிறாங்க. வாசலிலே. வரலாமான்னு.........

ஆச்சாரியார்:- யாருடா, அவா.

வே:- இதோ, அவங்க கொடுத்த சீட்டு.

ஆ:- (கலர்க்கண்ணாடியை மாட்டிக்கொண்டு) தஞ்சை மிராசுதாரர்கள்—அடடா, அவாளை வெளியிலே நிறுத்தலாமோ, சட்டுன்னு வரச்சொல்லுடா, போடா, மண்டு.

வே:- எனக்கெப்படிங்க, தெரியும், அவங்க அவ்வளவு பெரியவங்கன்னு.

11-ம் பக்கம் பார்க்க



144230

சிறு கதை

# கூத்தாடி

தில்லை-வில்லாளன்

உள்ளே பேச்சுக் குரல் கேட்டதும், அவர் தலையை வெளியில் இழுத்துக்கொண்டார்.

குரல்கள் தெளிவாகக் கேட்டன. அவர் அப்படியே அசைவற்று நின்ருர். அந்தக் குரலை அவர் உன்னிப்பாகக் கேட்டார்.

முதல் குரல்:— அப்பா......

அடுத்த குரல்:— அட, தடிப் பயலே!

மு. கு:— தங்களின் ஒரே மகன் கேட்கிறேன் — என்னை இப்படிச் சித்திரவதை செய்கிறீர்களே!

அ. கு:— பின்னே, நீ செய்த காரியத்திற்கு, உன்னைக் கட்டிப் பிடித்து முத்தம் கொடுப்பார்களா?

மு. கு:— நான் செய்த குற்றம்...

அ. கு:— குற்றமா—குடி கெடுக்கும் தடித்தனமல்லவா செய்கிருய்!

மு. கு:— என்ன அப்பா!

அ. கு:— காலிப் பயலே, எவனே ஒரு காவாலிப்பயல் மகன் மகளைத்தான் கட்டிக் கொள்வேன் என்று என்னிடமே பேசுகிறுய் — என்ன துணிச்சல்!

மு. கு:— அவள் தந்தை ஒரு பிரபல வழக்கறிஞர்.

அ. கு:— ஆனல் அவன் சாதி?

மு. கு:— ஐயோ, அப்பா, சாதியா? நீங்கள் எத்தனையோ முறை சாதியைப்பற்றிப் பார்ப்பது அறிவிலிகள் செயல் என்றுசொல்லியிருக்கிறீர்களே!

அ. கு:— அது ஊருக்கு உனக்கல்லடா.

'காலிப் பயலே' என்று கூவியபடி, அவர், அறைக் கதவை படாரென்று திறந்துகொண்டு உள்ளே சென்ருர்.

அந்த அறையிலிருந்த சிறுவர்கள் பதறிப் போனுர்கள்.

"அப்பா..." அந்தச் சிறுவனின் வாய் குழறிற்று. இன்னெருவன் நழுவப் பார்த்தான்.

"டேய், என்னடா இது" என்ருர் அவர்.

"பட்டுத் துண்டு, அம்மாவைக் கேட்டுத்தான் எடுத்தேன்" என்ருன்.

"அடபோடா மடப்பயமவனே, துண்டைப் போட்டுவிட்டு இங்கே வாடா" என்று மிரட்டினர்.

சிறுவன், துண்டைப் போட உள்ளே போனுன். இன்னெரு சிறுவன் நின்றுகொண்டிருந்தான்.

குப்புசாமி :— டேய், நீ யாரு வீடு?

சங்கரன்:— காண்ட்ராக்ட் கந்தசாமி முதலியார்......

கு:— என்ன. என்ன......

ச:— பேரன்

கு:— பேரனு, மூலைத் தெருவிலே இருக்கிறுங்களே, மரகதம்மா, அவங்க மகனு

ச:—ஆமாம், நான் தான் சங்கரன்

கு:— என்னைத் தெரியுமா?

ச:— தெரியுமே!

கு:— நான் யார்?

ச:— எங்க தாத்தா வீட்டுக் குமாஸ்தா குப்புசாமி பிள்ளை.

கு:— ஏண்டா, உங்க அம்மாவுக்கும் தாத்தாவுக்கும் பேச்சு வார்த்தையில்லாம போய்த்தான் பல வருஷங்களாய் விட்டதே—என்னை எப்படி உனக்குத் தெரியும்?

ச:— தாத்தாவுக்கும் எங்களுக்கும் சண்டை மூட்டினதே நீங்கதான்னு எங்க அம்மா சொல்லியிருக்கிறுங்களே.

கு:— அடபாவி! குழந்தையின்னு பார்த்தா, குரங்கு குட்டியாட்டமாயில்லே பேசுரே.

ச:— குரங்கு குட்டி பேசாதுங்க—கடிக்கும்

கு:— நீ என்னைக் கடிச்சுடாதே- நீங்க இப்பொ இங்கே என்ன பேசிக்கிட்டிருந்தீங்க?

ச:— பேசவில்லையே — ஆக்ட் பண்ணினேம்.

கு:— ஆக்ட் பண்ணினிங்களா? அப்போ, கூத்தாடப் போறிங்களா?

ச:— கூத்தாடல்லே நாடகமாடப் போறேம்.

கு:— அட கூத்தாடிப் பசங்களா! டேய், பட்டாபி, இங்கே வாடா, அம்மாகிட்டே சிபார்சு சொல்லப் போய்ட்டியோ—எலே, பட்டாபி!

பட்டாபி:— அப்பா.

கு:— கூத்தாடவா போறீங்க?

ப:— இல்லேப்பா, பள்ளிக்கூடத்தில், உணவு விடுதி கட்டுவதற்காக, நாங்களே நடிக்கும் நிதி நாடகம் ஒன்று நடத்தப் போகிறேம்.

கு:— எலே, உன்னைப் பள்ளிக்கூடம் எதுக்கு அனுப்பினேன். படிக்கவா, கூத்தாடவா?

ப:— ஏம்பா, கூத்துன்னு கேவலமாப்பா, தமிழே, இயல், இசை, கூத்துன்னு மூன்று பிரிவாகும்னு தமிழ் ஐயா இன்னைக்குச் சொன்னாப்பா.

கு:— அது சரிடா, படிப்புக்கும், நாடகத்திற்கு என்னடா சம்மந்தம்?

ப:— நாடகத்தாலே, படிக்காதவங்களுக்குக் கூட பாடம் போதிக்கலாமே!

கு:— ஆமடா, அதிகப்பிரசங்கி!

ப:— ஏப்பா, நம்ம நாட்டிலே எழுத்தறிவில்லாதவங்கதானே ஏராளம்—அவங்க, நல்ல கருத்துக்களை நாடகத்தின் மூலம் கற்றுக் கொள்ளலாம்.

கு:— போடா, காலிப்பயலே — அதுக்கு ஆடுரவங்க ஆடட்டும் — நீ ஆட வேண்டாம்

அவர் உள்ளே சென்ருர். பட்டாபி, தன் நண்பன் சங்கரனை அனுப்பிவிட்டு, அம்மாவிடம் ஓடினன்.

* * *

அடுப்பங் கரையில் அப்பாவும், அம்மாவும் பேசிக்கொண்டிருந்தார்கள். பட்டாபி, என்ன பேசுகிருர்கள் என்று கூர்ந்து கவனித்தான்.

கு:— அம்புஜம், நம்ம பட்டாபி,

கூத்தாடப்போரானும்—ஒத்திகைப் பார்க்கிருரு, ஒத்திகை.

அம்புஜம்:– நீங்க குழந்தையிலே, இப்படி ஆடவேயில்லையோ. இராவணன், இரண்யன் வேஷமெல்லாம் போட்டு தெருக்கூத்தே ஆடியிருக்கிறேன்னு சொல்லியிருக்கிங்களே.

கு:– அடிபோடி, அறிவு கெட்டவளே, நான் எதுக்கு சொல்லவரேன்....

அ:– நல்லா சொல்ல வந்திங்க. நீங்க வேஷம் போட்டபோது பார்க்க ஆட்களை நீங்களே கூட்டிக்கிட்டுப் போவணும். இப்போ போய்ப் பாருங்க.

*  *  *

வெளியிலிருந்து அவரை யாரோ கூப்பிடுங் குரல் கேட்டு, வெளியில் வந்தார். கணக்கப்பிள்ளை கனகசபாபதி நின்றுகொண்டிருந்தார்.

கு:– என்ன இப்பதானே அங்கே இருந்துவந்தேன். அதுக்குள்ளே எமகிங்கன்மாதிரி பின்னாலேயே வந்துட்டீரா உயிரை வாங்க?

கனகசபாபதி:– ஐயா..?......

கு:– ஐயா கூப்பிட்டாரா?

---

15—7—52 காலை 6-மணிக்கு சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் தோழர் டி. என். ராமன் அவர்கள் தமது 45வது வயதில் காலமானர். மாலை 4-மணிக்கு சடலம் செங்கற்பட்டிலுள்ள அவர் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு 16-7-52 காலையில் செங்கற்பட்டில் சவ அடக்கம் நடைபெற்றது. தி. மு. கழகச் சார்பில் மாலை சூட்டப்பட்டது. கருப்புக் கொடிகளுடன் சவ ஊர்வலம் நடைபெற்றது. தி. மு. க தோழர் வகாப் தலைமையில் இடுகாட்டில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி கலந்து கொண்டார். தோழர்கள் சிங்கைத் 'தமிழ் முரசு' சாதாகிருஷ்ணன், சண்முகவடிவேல், தென்னன், டி. எஸ். ராசகோபால், நம்பி வாயம், லெட்சப்பா முதலியோர் தமது கடைசி மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர்.

மறைந்த தோழர் ராமனுக்கு கல்லூரியில் படிக்கும் இரு ஆண்பிள்ளைகளும், மூன்று பெண் குழந்தைகளும், தாயாரும் இருக்கிறர்கள்.

---

க:– உங்களை...........

கு:– எங்களை காரியமிருக்கிற போது கூப்பிடுவாரு—இல்லேன்னு திரும்பிக்கூடப் பார்க்கமாட்டாரு.

க:– அவசியமாய், உடனே கையோடு கூப்பிட்டுகிட்டு வரச் சொன்னரு.

கு:– கொடுக்கிற சம்பளத்திலே, ஒரு சல்லிக்காசு கூட்டிக்கொடுக்கிறதுன்னு கசக்கும். எத்தனை குமாஸ்தாக்கள் இருந்த இடத்திலே நான் ஒரு குமாஸ்தா இருந்துவேலை பார்க்கிறேன். இன்னமும் தான் அந்த எழுபத்தைந்தை எண்ணித் தருகிறர்.

க:– ஐயா, காத்துக்கிட்டிருப்பாங்க.......நீங்க பேசிக்கிட்டேயிருக்கிங்களே.

கு:– காத்துக்கிட்டிருக்கட்டுமே—வேறே வேலைதான் என்னவாம் அவருக்கு — என் வயிற்றெரிச்சலைக் கிளறிவிட்டார். அது கொட்டாமல் ஆறுது. ஏனய்யா, மைலம் பாலம் காண்ட்ராக்ட் எடுத்தாரே என்னைக் கூப்பிட்டாரா, என் பொறுப்பிலேயே, அதை விடுவாருன்னு எவ்வளவு ஆசையாயிருந்தேன்.

க:– அதுக்கு காரணம் ஏதாவது இருக்கும்.

கு:– காரணமும், பூரணமும் — சரி, சரி போய்யா — அவர்கிட்டே போய் ஏதாவது உளறி வைக்கப்படாதே. நான் போய் இப்பவே பார்க்கிறேன். நீர் நேரே உம்ம வீட்டுக்குப்போம்.

க:– சரிங்க.

*  *  *

தெருவிலே, ஓய்ந்து ஓய்ந்து நடந்துவந்தவர்; வீட்டிற்குள் நடக்கிறபோது வேக வேகமாக நடந்தார். வியர்வையை வழித்துவிட்டுக் கொண்டார். மூச்சு விரையாக விட்டார். துண்டையெடுத்து இடுப்பிலே கட்டிக்கொண்டார். காண்ட்ராக்ட் கந்தசாமி முதலியார் ஈஸிசேரியில் சாய்ந்தபடி, சுருட்டைப் புகைத்துக்கொண்டிருந்தார்.

கு:– ஐயா, கூப்பிட்டீங்களா.....

கந்தசாமி முதலியார்:– ஆமாங்...

கு:– நீங்க கூப்பிட்டீங்கன்னு, கணக்குப்பிள்ளைச்சொன்னவுடனே ஓடோடி வந்தேன்.

க:– அப்படியொன்றும் அவசரமான காரியமில்லே, மெதுவாகக்கூட வந்திருக்கலாமே.

கு:– மனசு கேட்குமுங்களே.....ஐயா கூப்பிட்டீங்கன்னு கேள்விப்பட்டுட்டு, இருப்பு கொள்ளுதுங்களா? நான் இருந்தாலும், அம்புஜம் விடுமா, விரட்டியடிக்காதா? ஐயாவைப் போய்ப் பார்த்துட்டுவந்து இலைபிலே உட்காருங்கன்னு உத்திரவு போட்டுடுமே!

க:– சரி, இப்படி உட்காருங்க.

கு:– பரவாயில்லீங்க........

க:– சரி, சரி, உட்காரய்யா!

கு:– என்ன விஷயம்?

க:– இப்போ, கட்டட காண்ட்ராக்ட் எடுக்கலாம்னு பார்க்கிறேன்.

கு:– ஓ, செய்யலாங்களே!

க:– இப்போ, சாமான்கள் விற்கிற விலையிலே, லாபம் நிறையா வருமான்னு சந்தேகம்.

கு:– சந்தேகந்தானுங்க.

க:– ஆனல், பிளாக் மார்க்கட்டிலே சாமான்கள் வாங்கி, கட்டிக்கொடுத்தால், எஸ்டிமேட்டை அதிகம் போட்டு இலாபம் சம்பாதிக்கலாம்.

கு:– கொள்ளை கொள்ளையாக சம்பாதிக்கலாங்க

க:– ஓய், நான் எதைச் சொன்னலும், ஒத்து ஊதறீரே என்ன செய்கிறது?

கு:– ஆமாங்க.

க:– சரி, சரி, பாங்கர் கந்தசாமிப்பிள்ளை, ஒரு வீடு கட்டுறர், அதை காண்ட்ராக்ட் எடுத்திருக்கிறேன்.

கு:– செய்வோங்க.

க:– சரி, போய் இன்னைக்குமாலையிலே அவரை நேரில் பார்த்துப் பேசும். போம்.

*  *  *

குமாஸ்தா, குப்புசாமிப்பிள்ளை வெளியேறியவுடன், முதலியாரின் மனைவி மரகதத்தம்மாள், சாப்பிட அழைக்க வருகிறள்.

க:– மரகதம், பார்த்தியா, நாடகத்தை......

மரகதம்:– எந்த நாடகத்தை...

க:– குப்புசாமிப்பிள்ளை ஆடிய நாடகத்தை......

ம:– புரியலிங்களே.

க:– மரகதம், அவ எனக்கொண்ணுமே தெரியாதுன்னு, எதிரில் வந்தால் வேஷம் போட்டான். இப்போ, அவன், நாடகத்திலே, பழையகால ராஜாக்களுக்கு வருகிற 'ஆமாம்' போடும் மந்திரி வேஷம், கனஜோராய் நடித்தான்.

ம:– என்னங்க, அவரைப்போய் அப்படிச் சொல்லாதிங்க.

க:– போடி, போ, இப்போ, நேரே, வீட்டிலே போய்ப்பாரு, வேஷங்களைந்த கூத்தாடி மாதிரி, என்னைத் திட்டிகிட்டிருப்பான்.

ம:– அவரைப்போய் கூத்தாடின்னு சொல்றிங்க. அவருக்கு கூத்து, ட்ராமா, சினிமான்னு துளியும் பிடிக்காது.

க:– அவனேதான் தினமும் நிமிடத்திற்கு நிமிடம் கூத்தாடரானே — அவனுக்கே, என் கூத்தும், நாடகமும் சினிமாவும் பிடிக்கப்போகிறது!

ம:– அப்போ, நீங்கமட்டும், கூத்தாடியில்லையோ — அண்ணைக்கு, முனுசாமிமுதலியார் வந்திருந்த பொழுது குப்புசாமிப் பிள்ளையை அப்படிப் புகழ்ந்தீர்களே!

க:– எல்லா பயல்களும் தான் தின்னுட்டான்களே, இருக்கிறவன் இவன் ஒருத்தன்தான். பின்னே, என் கிட்டேயிருக்கிற இந்த ஆளும், மிரமிக மட்டம்னு ஊரிலெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டு வரச் சொல்றியா?

*  *  *

குமாஸ்தா குப்புசாமிப்பிள்ளை, நாடக காண்ட்ராக்ட்டே எடுத்து விட்டார், கடைசியில். நாடக சம்பெனி நாகரத்தினத்திடம் அவர் பேசியதைக் கேட்டால், சிரிப்பு தானே வரும்.

நாகரத்தினம்:– எங்க, உங்களுக்குப் பிடிக்காத விஷயத்திலே, வீண் சிரமம் எடுத்துக் கொள்ளாதிங்க.

கு:– நாடகம் எனக்குப் பிடிக்காதுன்னு யார் சொன்னது? அந்த காலத்திலே, சம்பூர்ண ராமாயணத்திலே நான் ராவணனு வரேன்னு, எவ்வளவு பேர்........

நா:– நீங்க ராவணன் போட்டது எனக்கும் தெரியும். ஒருதடவை கல்லாலடித்து, கூத்தே குழப்பமாயிடல்லே.

கு:– அது வேறு கதை — அந்தப் பயல் கந்தன் செய்த காலித்தனம் அது. இப்ப நீங்க சொல்லுங்க, எனக்கு ஆறு ஆட்டம் போட்டுத் தந்தாகணும். எனக்கு ரொம்ப சிரமம்—இதிலிருந்துதான் எப்படியாவது என்னை நான் சரிசெய்து கொள்ளவேணும்.

நா:– கடைசியில் நாடகந்தான் உங்களுக்கு கை கொடுக்க வேண்டியதாயிற்று!

கு:– ஆறு ஆட்டங்கள் - ஆமாம்.

நா:– அவரைக் கேட்டீங்களா?

கு:– முதலாளி ஐயா வைத்தானே....அவர்கிட்டே, ஏதாவது புளுகி, கூத்தாடி ஒத்துக்கவைக்கிறேன். அதுபற்றி உங்களுக்கு கவலை வேண்டாம்.

நா:– நானும் ஒரு வார்த்தை கேட்டுக் கொள்றேன்.

கு:– ஆகா, பேஷாய்.....

நா:– சரி, நாடகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்க.

கு:– அப்பாடா.

*  *  *

தன் பிள்ளை பள்ளிக்கூடத்தில் நாடகம் ஆடுவதைக் கண்டித்தார் குப்புசாமிப்பிள்ளை. நாடகமே, பிள்ளைகளைக் கெடுத்துவிடும் என்று சீறிவிழுந்தார். கூத்தாடிப் பிழைப்பு நமக்கு வேண்டாம் என்று போதனை புரிந்தார். ஆனல் வாழ்க்கையில், அவர் நடிகனுகவே தினமும் நடமாடுகிருர். ஆளுக்குத் தகுந்தமாதிரி வேஷம் போடுகிருர். வேளைக்குத் தகுந்தமாதிரி பேச்சு பேசுகிருர். முதல் சீனில் பிச்சைக்கார வேடத்திலே வந்த நடிகன், அடுத்த காட்சியில் ஜமீன்தார் வேடம் போட்டு வருவதைப்பார்க்கிறோம். ஆனல் குப்புசாமி, அதை வாழ்க்கையில் தினமும் செய்துக்கொண்டிருக்கிருர். அவரைக் கூத்தாடி யென்று கூறுவதில்லை. இரவானதும் விளக்கைப்போட்டு, பவுடரைத் தடவிக்கொண்டு, மூன்று மணி நேரம் ஆடிப்பாடுவோரை மட்டும் கூத்தாடிகள் என்கிருர்கள். இவர்கள் பகலிலேகூட பவுடரில்லாமல், வேடம் கட்டாமல், நடிக்கிருர்கள். இந்த வாழ்க்கைக் கூத்தாடிகள் எவர் கண்களிலும் படுவதில்லை. இதுதான் உலகம் — நாடகமே உலகம், நாளை நடப்பதை யாரறிவார் என்றபழைய ரிகார்டு அவர் வீட்டில் அடிக்கடி பாடிக்கொண்டிருக்கும். அதனைக் கேட்டு, கேட்டு செவி மாத்துப் போனவர் குமாஸ்தா குப்புசாமிப் பிள்ளை!

★


விற்பனையாகிறது:

| | |
|---|---|
| மங்கள் தீர்ப்பு ... | 0–8–0 |
| ஜெப்மாலை ... | 0–8–0 |
| சாது ... | 0–8–0 |

அச்சில்

வள்ளிநாயகியின் கோபம்

வெளிவந்துவிட்டது!

சி. என். ஏ. தீட்டிய

வாழ்க்கைப் புயல்

3–ம் பதிப்பு] [விலை 12 அணு

பரிமளம் பதிப்பகம் 17-B. வரகுவாசல்தெரு

காஞ்சிபுரம்.

வியாபாரிகளுக்கு

25o/o கழிவு உண்டு.

வி. பி. பி. இல்லை.

முன் பணம் அனுப்புக.

தபால் செலவு தனி.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

இவரோ, 'ஆராரோ' பாடி அழைக்கிறார் மக்களை. அதற்கு சினிமா வேண்டாம்—அந்தக்காசை இங்கே போடு' என்கிறார். அல்பசுபாவம்—என்று கூறத்தோன்றும். ஆனால் இது அந்தரகத்தது, அல்ல—ஆபத்தான சுபாவம்! வேதமந்திரங்களை ஓதித் தேன் பால் புகட்டினாலும் வேம்பு கரும்பாகிவிடாது! வெண்மையான சீனியைக்கொட்டி வளர்ப்பதால் வெள்ளெருக்கு மணமுள்ள மலர் ஆகிவிடாது! மந்திக்கு அனுதினமும் பாலாபிஷேகம் செய்து பட்டாடை போர்த்துவதால் மனித குணம் பெற்றுவிடாது! அதைப்போல, சற்குணமில்லாதவரிடம் இருக்கும் சண்டிக் குணம் எளிதில் மாறிடாது. இடமும், இயல்பும், பதவியும், அறிவும—இயற்கைக் குணத்தை மாற்றிவிடாது. அதையே, ஆச்சாரியாரும், மெய்ப்பிக்கிறார். சாக்கடை பென்று ஒரு சமயம் கூறினாலும், அதற்கே உழுப்பினர் திரட்டுகிறார்! சலிப்பு நேரத்தில் ஒன்று—சந்தோஷ நேரத்தில் மற்றொன்று,

இதுவே சனதனப் பரம்பரையின் சாணக்யப் புத்தி என்பர். இதற்கு, இவர், மட்டுர், விதிவிலக்கா, என்ன? காங்கிரசுக்கு உறுப்பினர் சேர்க்க, பொதுக் கூட்டத்தில் பேச வந்த முதலமைச்சருக்கு, கம்யூனிசத்தின் மீதும் களவு கொலே மேலும், பிறகு சினிமாவின் மீதும், சீற்றம் வந்து அடங்கியிருக்கிறது. சினிமாக்கள், மூலம்—கெட்ட எண்ணம் பரபத்தியாகி பரவுகிறதாம்! படு கொலே நடக்கிறதாம்! களவும் காமமும் வளர்கிறதாம்! கூறுகிறார் அவர். திருஞானசம்பந்தர், திருமங்கை ஆழ்வார், சிறுத்தொண்டன், இயற்பகை...இப்படிப்பட்ட கதைகளை வைத்துக் கொண்டு! காமாசமும் களவுத்துணிவும், கொலே வெறியும் தூண்டும் நூல்கள் 'பக்தியின் பாதை'கள்!! ஆனால், நவீன உலகின் சாதனம், தீமை பயக்குமாம்!!! கடவுளரின் கதைகளை நீங்களே—அறிவீர்கள். இருந்தும், ஏன், சினிமாமீதுபாய்கிறார், இந்தச் சிலர்? சற்குணமா! சண்டித்தனமா!!

✫



தோழர் W. P. A. சவுந்தரபாண்டியன் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்ட அருணாசலம் (காஞ்சி—கலியாணசுந்தரம் அவர்கள் திருமகன்)—சரஸ்வதி தம்பதிகள். மேற்படி வாழ்க்கை விழாவன்று மணமக்களை வாழ்த்தி தந்திமூலமும் தபால்மூலமும் செய்திகள் அனுப்பிய தோழர்களுக்கும், மணவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த நண்பர்களுக்கும் தோழர் காஞ்சி-கலியாணசுந்தரம் அவர்கள் தனது அன்பு கனிந்த நன்றியையும் வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறார்.


## அண்ணாவின் அரிய நூல்கள்

| | |
|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2—4—0 |
| கம்பரசம் | 1—8—0 |
| ரபோதிபுரக் காதல் | 1—4—0 |
| குமரிக்கோட்டம் | 1—0—0 |
| பணத்தோட்டம் | 1—0—0 |
| உலகப் பெரியார் காந்தி | 1—0—0 |
| கற்பனைச்சித்திரம் | 1—0—0 |
| சிறு கதைகள் | 1—0—0 |
| நீ பாவட்டும் | 1—0—0 |
| ஆறு கதைகள் | 1—0—0 |
| 1858—1948 | 1—0—0 |
| ஆரியமாயை | 1—0—0 |
| இலட்சிய வரலாறு | 1—0—0 |
| அறப்போர் | 1—0—0 |
| வர்ணாஸ்ரமம் | 0-12—0 |
| நிலையும் நினைப்பும் | 0-12—0 |
| மே தினம் | 0—5—0 |
| அவர்கள் சந்திப்பு | 0—3—0 |

### அரங்கண்ணல்

| | |
|---|---|
| இதயகீதம் | 0-12—0 |
| ரஸ்புடீன் | 1—8—0 |
| ரோம் | 1—8—0 |

### மு. கருணாநிதி

| | |
|---|---|
| விடுதலைக்கிளர்ச்சி | 1—0—0 |
| பூந்தோட்டம் | 0—4—0 |

### சி பி. சிற்றரசு

| | |
|---|---|
| கொலப்பசு | 1—0—0 |

### மதியழகன்

| | |
|---|---|
| அறிஞரின் ஆதர்கள் | 0-12—0 |
| நன்றி யாருக்கு? | 1—0—0 |

### தில்லை-வில்லாளன்

| | |
|---|---|
| இருளும் ஒளியும் | 1—8—0 |

### வாணன்

| | |
|---|---|
| ரஷ்ய இலக்கியம் | 1—8—0 |

## திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி




## தி. மு. க. நிகழ்ச்சிகள்

28—6—52 பல்லாவரம். தோழர் என். வி. நடராசன் தலைமையில் தோழர் ஈ.வி.கே. சம்பத் சொற்பொழிவாற்றினர்.

29—6—52 காஞ்சி — பிள்ளையார் பாளையம் வேலாயுதம் படிப்பகத் திறப்புவிழா தோழர் அண்ணாதுரை தலைமையில் தோழர்கள் ஈ வி.கே. சம்பத், பொன்னம்பலனார் சொற்பொழிவாற்றினர்.

6—7—52 காஞ்சியில் வரி எதிர்ப்பு தினப் பொதுக் கூட்டம் கம்யூனிஸ்ட் தோழர் கே எஸ். பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்றபோது கம். பால சுப்பிரமணியமும் தி. மு. க. சார்பில் தோழர்கள் காஞ்சி. கலியாணசுந்திரம், அரங்கண்ணல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

6—7—52 சித்தூர் தி. மு. க. பொதுக்கூட்டம் தோழர் வில்லாளன் தலைமையில், தோழர் ஈ. வி. கே. சம்பத் பேசினார்.

23-7-52 வேலூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழியர் அருண்மொழி தலைமையில் தோழியர் பூங்கோதை பேசிய பிறகு தோழர் ஈ. வி. கே. சம்பத்சொற்பொழிவாற்றினர்

14—7—52 உத்திரமேரூர் தி மு.க. துவக்கவிழா தோழர் அரங்கண்ணல் தலைமையில் தோழர் சி.வி.எம். அண்ணாமலை பேசிய பிறகு தோழர் ஈ. வி. கே. சம்பத் சொற்பொழிவாற்றினார்.

### மு. கருணாநிதி

ஜூலை 23 அய்னாவரம் (சென்னை)
27 கொல்லுமாங்குடி.
ஆக. 8 முக்கூடல்
10 பட்டிவீரன்பட்டி
11 உசிலம்பட்டி

## மேட்டுப்பாளையம்

(தஞ்சை)

### தி. மு. க. ஆண்டு விழா

20-7-52 ஞாயிறு காலை 10 மணிக்கு
தலைவர்: V. சின்னத்தம்பி
படிப்பகத் திறப்புவிழா
சி. என் அண்ணாதுரை
ஈ. வி. கே. சம்பத், N. S. இளங்கோ,
அரங்கண்ணல் ஆகியோர்
சொற்பொழிவாற்றுவர்.
இரவு 'மக்கள் ஆட்சி' நாடகம்
சி. என். ஏ. தலைமையில்.

—

21-7-52 திங்கள் இரவு
முதியோர் கல்வி நிதிக்காக
'தேச பக்தி' நாடகம்.

தி. மு. கிளைக் கழகங்கள் நடத்தும் பொதுக் கூட்ட நிகழ்ச்சிகளின் விபரத்தைத் தலைமை நிலையத்துக்கும், அதோடு நமக்கும் உடனுக்குடன் அனுப்பி வைக்கக்கோருகிறோம்.

ஆசிரியர்.

## மஜீத் நிதி

மஜீத்நிதி இன்றுவரை(17-7-52) ரூ. 1897—1—1 சேர்ந்திருக்கிறது. 20—7—52 தான், மஜீத் நிதிக்கு கடைசி நாளாகக் குறிப்பிடப் பட்டிருந்தாலும், தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, கடைசி நாளை தள்ளிவைக்க வேண்டியதாகி விட்டது. மஜீத் நிதிக்காக, தென்னார்க்காடு மாவட்டத்திலேயே, ஆகஸ்ட் முதல்வாரத்தில் ஒரு நாடகம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. கிடைக்கும் மொத்த தொகையைக்கொண்டு, ஒருநிலையான உதவியளிக்கும் வகையில் நிலமாக வாங்கித்தர யோசிக்கப்பட்டு வருகிறது. ஆகவே நாடகம் நடத்தப்படும் தேதிவரையில் இன்னும், மஜீத் நிதிக்கு உதவாத தோழர்கள் விரைந்துநிதியளியுங்கள்.

| | |
|---|---|
| முன்வரவு ரூ. | 1486—15—10 |
| கவுண்டன்பாடி ஆர். துரை | 3—0—0 |
| பல்லடம் தி. மு. க. | 3—0—0 |
| மதுராந்தகம். எம். வேணு | 4—0—0 |
| சிந்தாதிரிப்பேட்டை தி. மு. க. | 8—0—0 |
| சென்னை தமிழ்மன்ற உறுப்பினர் சார்பில், சி. டி: தனபால் மூலம் | 6—8—0 |
| மாதவாக்கம் ஜமால்பாட்சா | 1—0—0 |
| காரைக்குடி ராமசுப்பையா மூலம் | 17—0—0 |
| சென்னை ஏ.சே.சிவபூஷணம் மூலம் | 15-15-0 |
| சித்தூர் பொதுக் கூட்டத்தின் மூலம் | 6—2—3 |
| இடைப்பாடி தி. மு. க. | 10—0—0 |
| கல்லிடைக்குறிச்சி தி.மு.க. | 7—6—0 |
| நீலகிரி எம்.கண்ணையா மூலம் | 14-1-0 |
| நிலக்கோட்டை எம். எஸ் நடராசன் | 3—0—0 |
| குருவம்புலம் பி. எஸ். நடேசன் | 2—0—0 |
| சென்னை அன்பில் அபூபக்கர் மூலம் | 9—8—0 |
| குள்ளம்பட்டி தி. மு. க. | 5—0—0 |
| வேலூர் கஸ்பா பொதுக் கூட்டத்தில் | 1-15-0 |
| செங்கற்பட்டு கோவிந்தன் | 0—8—0 |
| ,, பர்வதம்மாள் | 0—8—0 |
| செந்துறை எஸ். அப்துல் ஹமீத் | 10—0—0 |
| குளத்தூர் தி. மு. க. | 3—0—0 |
| அங்கலாங்குறிச்சி இப்ராகிம் | 1—0—0 |
| பாமக்குடி வ. எம். அப்துல் வகாப் | 1—0—0 |
| திருவேலியூர் பி. சங்கரய்யா | 1—0—0 |
| ,, எம். சங்கையா | 0—8—0 |
| துறையூர் நாடக வசூல்—அழகமுத்து மூலம் | 6—4—0 |
| மீர்சாகிப்பேட்டை தி. மு. க. கிளை | 11—0—0 |
| தேவாரம் எம். ராசாராம் | 0—8—0 |
| வல்லவராயன்பட்டி தி மு க | 2—8—0 |
| கிருஷ்ணபுரம் பி. டி. செல்வசாமி | 1—0—0 |
| அருப்புக்கோட்டை சிவசண்முக சுந்தரன் | 30—0—0 |
| அகமதாபாத் தி. மு. க. | 24—0—0 |
| நகரி வ. நடேசன் | 1—0—0 |
| சிங்கப்பூர் ஸையத் இப்ராகிம் | 2—0—0 |
| வெள்ளனூர் தி. மு. க. | 5—0—0 |
| கம்பரசம்பேட்டை பி. முத்துசாமி | 1—0—0 |
| கோயமுத்தூர் செல்வராசன் | 2—0—0 |
| பெங்களூர் தி. மு. க. | 13—8—0 |
| சென்னை ஜோசப் நினைவு நூலகத்தார் | 8—2—0 |
| சென்னைமாவட்டக் க. நிதி | 65—0—0 |
| கொழும்புத் தோழர்கள் | 100—0—0 |
| | 1897—1—1 |

# சற்குணமா? சண்டித்தனமா?

தண்ணீர்க் குடமேந்திச் செல்லுகிறாள், அத்தையல் — காட்டுப் பாதையில் துள்ளிச் செல்லும் மான்போல. தலையிலே இருக்கும் குடத்தை, அவளது இரு கரங்களும் தாங்கிக்கொண்டிருப்பதால், மேலாடை சிறிது நழுவிக் கிடக்கிறது. அந்தப் 'போஸ்'!—அவனை, லாகிரி கொள்ளச் செய்கிறது. மெதுவாக, அவள்பின் போகிறான். சடையைப் பிடித்து இழுக்கிறான். கோபத்தோடு திரும்புகிறாள், அந்தக் கோமளாங்கி! குறும்புச் சிரிப்போடு முறைக்கிறான், அந்தக் குமரன்!

*

"என்ன அக்கிரமம், இது! ஏண்டா நீ இப்படிச் செய்யலாமா?"

"அக்கிரமம் என்னடி, இதில்? அழகு மலரே! உன் ரூபம் என்னைப் பரவசமாக்கிற்று. பழத்தைச் சுவைக்கப் பதைக்கிறேனடி, நான்!"

"பரஸ்திரீயை இச்சிக்கலாமோ, நீ?"

"மயங்கிவிட்டேன், மானே. கார் போன்ற உன் கூந்தல் என்னைக் கவர்ந்துவிட்டதடி! அதன் கவர்ச்சியில் மயங்கிய என்னை, உனது 'அங்க' அமைப்பு மயக்கிவிட்டதடி!'

"அதற்காக இப்படிச் செய்வதோ?"

"தளிர்ச் சோலையில் திரியும், மதம் பிடித்த யானைபோல, நிமிர்ந்து நிற்கும் உனது அங்கம் என்னை அதட்டிப் பார்ப்பதை, அறிடவில்லையோ, நீ?"

"பாயும் யானைகளைப் பிடித்து அடக்கும் அந்த முறை. அதை விட்டு விட்டு, பாபம், என் சடைக்குத் தாலாமோ தொல்லை?"

*

செச்சே! எவ்வளவு விரசம்! ஆபாசம்! இப்படியெல்லாமா எழுதுவது. எழுத்தா, இது? காமரசம்! வாலிபத் துடிப்பில் வந்ததையெல்லாமா எழுதிவிடுவது! இளைஞர்களைக் கெடுக்குமே இந்த எழுத்து. இதை விடுவதோ! எங்கே, சட்டம்? கொட்டுங்கள் இவனை! அசிங்கம்—அசிங்கம்!,—என்று கூறுவர், ஆச்சாரியாரின் திருக்குழாம். அவர்களுக்கு, கூறுகிறேன். அன்பரீர்! இது, நமது சரக்கல்ல! கடவுள் கதையிலிருப்பது!! வடமொழியிலுள்ள 'பூலோகம்' ஒன்றின் அசல் மொழி பெயர்ப்பு. "கிருஷ்ண லீலா"—ஒரு சிறு கட்டம். பாகவதர் பாட, ஜனக்கூட்டம், 'ச்சு, ச்சு' கொட்ட, 'ராதா கல்யாணம்' நடக்கிறதே, அங்கு இதுபோலப் பலப்பலக் கேட்கலாம். பக்திரசமாம், இது! பரவசத்தோடு கூறுவர், பாகவதப் பாதந்தாங்கிகள். 'காமரசம்' இதுவன்றோ என்று நம் போன்றோர் கேட்டால், சீறுவர்! 'பாபி' என்பர்! பழிக்கிறோயோ பதிதா — என்று சினந்துகொள்வர்! அவர்களோ, பணிவோடு, கேட்கிறோம். வழியில் செல்லும் பெண்ணை 'வாதுக்கழைப்பதும், அவளது 'மார்பகத்தை' மதம் பிடித்த யானை என்பதும், அதற்கு அவள் 'யானையைப் பிடித்து அடக்கேன்' என்று மறுமொழி தருவதையும் என்னவென்று சொல்வீர்! பக்தி — ஒருபக்கம் இருக்கட்டும். இந்தப் பூலோகத்தில் இன்று, இப்படியொருகாட்சி, நடைபெற்றால்— அதுவும் நடுவீதியில் — என்னவென்று அழைப்பீர்? காமச் சேட்டை — வேறென்ன சொல்ல முடியும்! இத்தகைய 'சேட்டை'யைப்பற்றி, நாள்தோறும், பலப்பல இடங்களில் காலேட்சம்! பாடநூல்கள் இவை! இந்தக் 'காமரச காட்சிகள்'—கலக்கவில்லை, அன்பர் ஆச்சாரியார் இதயத்தை. உலுக்கவில்லை, அந்த வைராக்கியரும் பெரியவரை! ஆனால், சினிமாக்கள் மூலம்தான் கெட்ட எண்ணம் பரவுகிறதாம். சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றிலே செப்பியிருக்கிறார். 'சினிமா' வெளிவருமுன் 'சென்சார்' என்று ஒன்று இருக்கிறது—அது தெரியும் அவருக்கு. ஆனாலும் சொல்கிறார்! சினிமாக்கள் மூலமே கெட்ட எண்ணம் பரவுகிறதாம். அதிலும் எத்தகைய கெட்ட எண்ணம் தெரியுமா? அவர் கூறுகிறார், கேளுங்கள்.

"அங்கு போய்விட்டுத்திரும்பினால் புத்திகெட்டுவிடுகிறது. வரும்போதும் அந்தப்பக்கம் இந்தப்பக்கம் பார்த்து நடக்கவேண்டியிருக்கிறது. சினிமாப் பார்த்து பார்த்து உள்ளம் கெட்டுவிடுகிறது. இதனால்தான் களவு, கொலை, கம்யூனிசம் எல்லாம் ஏற்படுகிறது"

'களவு, கொலை' வரிசையில் 'கம்யூனிசத்தையும்' வைத்து, அந்தக் கெட்ட எண்ணம் ஏற்பட இடங்கொடாதீர்கள்! — என்கிறார், ஆச்சாரியார். இந்தக் கெட்ட எண்ணம் வளர்ந்தால் "தமிழ்நாட்டுப் பண்பாடு" அழிந்துவிடுமாம்! ஆதலால் எவரும் சினிமாவுக்குப் போகக் கூடாதாம். "கம்யூனிசம்!"—இது ஓர் கெட்ட எண்ணம். அதுவும் களவு, கொலையைப் போன்றது!—இவ்வித விசித்திர வியாக்கியானம், தவிர, அவரிடமிருந்து வேறு எதுவும் எதிர்பார்க்க முடியாதுதான். கோரப்புலி, அகிம்சையை வரவேற்கவா செய்யும்? ஆச்சாரியப் பரம்பரை சமதர்மத்தை ஏற்க ஒப்புமா? — ஆகவே, அவரது, இந்த 'புலிப்போதனை' கேட்டு நாம் ஆச்சரியப்படவில்லை. ஆனால் கம்யூனிசமும் களவு கொலையும் இந்தச் சினிமாவால் ஏற்படுகிறதென்று கூறுகிறாரே, பெரியவர், அவர் மேலும் என்னசொல்லியிருக்கிறார் தெரியுமா சினிமாவுக்கு செலவழிக்கும் காசை 'காங்கிரஸ் பாங்கி'யில் போடச் சொல்லியிருக்கிறார். "ஒரு நாள் சினிமாவுக்குப் போகாமலிருந்தால் ஆயிற்று. 4 அணா மிச்சம். அந்த நாலணாவைக் கொடுத்து, காங்கிரஸ் மெம்பர்களாகச் சேருங்கள்" என்று மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதற்கு சினிமாவைப்பற்றி, வியாக்யானம் செய்திருக்கிறார். மனதில், "எப்போதுசேரலாம்? எங்கே? யாரிடம்?" என்று காங்கிரசில் சேர மக்கள் தவிப்பதுபோலவும், ஆனால் அவர்களுக்குள்ள கஷ்டம் நாலணா கிடைக்காததுபோலவும், அதற்கு இவர் வழி சொல்லிக்கொடுப்பதாகவும் எண்ணிக்கொண்டு சினிமாமீது சீறுகிறார்! களவும் கொலையும் கம்யூனிசமும் வளர்ந்துவிடும் என்று பயமுறுத்துகிறார்!! பாபம், பரிதாபப்படுகிறோம் — தள்ளாத வயதில் தளர்ந்துபோகிறதே அவரது அறிவுபலம், என்பதால். மக்கள், காங்கிரசை "அவர்கூறியதுபோல" அசல் சாக்கடை என்றே கருதுகின்றனர். சாக்கடையில் குளிக்க சாதாரணமனிதனும் ஒப்பானே, இன்று. ஆனால்

(6-ம் பக்கம் பார்க்க)



(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆ:- சரி, சரி போடா, அவாளை வரச்சொல்லு.

[மிராசுதாரர்கள் உள்ளே வந்து சேர்கிறார்கள்.]

மி. எல்லோரும்:- நமஸ்காரம்.

ஆ:- எல்லாம் இப்படி அமருங்கோ. நேத்தே வருவேள்னு எதிர்பார்த்திண்டிருந்தேன். வரல்லே.

மி. 3:- உங்க அழைப்பு, நேத்து காலையிலேதான் கிடைச்சுது. இரவு புறப்பட்டு, இப்போ நேரே வந்துவிட்டோம்.

ஆ:- என்ன அப்படி, என் பேரிலே, அவ்வளவு கோபம். என்ன செய்துட்டேன். பத்திரிகையிலே பார்த்தேன். நேக்கொன்னும் புரியல்லே, புடிபடல்லே!

மி. 4:- என்னங்க.

ஆ:- என்னை ஏன் இவா கண்டிக்கணும். கண்டிக்கிற மாதிரி, நான் ஏதும் செய்துடல்லேயேன்னு யோசிச்சிண்டேயிருந்தேன். அதனாலேதான் நேரிலே கூப்பிட்டுக் கேட்டுத் தெரிஞ்சுக்குவோம்னு தான் வரச்சொன்னேன்.

மி. 5:- உங்களையாரும் கண்டிக்கலிங்க. அப்படியெல்லாம் தப்பா நினைச்சுக்கவேணுங்க.

ஆ:- பத்திரிகைகளிலே, பார்த்தேன். தஞ்சை மிராசுதாரர்கள் கண்டனம்னு தலைப்பு போட்டிருந்தது.

மி. 5:- உங்களை நாங்க கண்டிக்க நாங்க என்ன பைத்தியக்காரர்களா, என்ன. நீங்க போட்டிருக்கிற புது வரியைத்தான்......

ஆ:- புதுவரியைக் கண்டிக்கிறேளா—என்ன அப்படி தாங்கமுடியாத பெரிய வரியைப் போட்டுட்டேன்.

மி. 6:- ஆமாங்க, அந்த நிலவரியைக்கட்ட முடியாதுன்னு சொல்லலாம்னுதான்......

ஆ:- இதைச் சொல்லிட்டுப் போகத்தான் இவ்வளவு தூரம் வந்தேளா. வரி, கட்டமுடியாதா— என்ன துணிச்சலா, என் எதிரிலேயே சொல்றேள்.

மி. 7:- இல்லிங்க, அதிலே சிரமம் அதிகம் இருப்பதாலேதான்...

ஆ:- இந்தத் தொல்லைக்குத்தான், என்னை ஏன் இழுத்துவம்பு கொடுக்கிறேள். குத்தாலம் குளிர்ச்சியை விட்டுட்டு, இந்த வெப்பத்திலே தள்ளேள்னு தலைபாடாய் அடிச்சிண்டேன்.

மி. 8:- நீங்க, வந்தது தெய்வ சங்கல்பம்னு நாங்களெல்லாம், எவ்வளவோ சந்தோஷப்பட்டோம். நீங்க இப்படி பேசறிங்களே.

ஆ:- பின்னே என்ன, காலம் இருக்கிற நிலைமை தெரியாமே, கண்டபடிப் பேசினா, நான் என்ன செய்யட்டும். பேசாமே, அந்தக் கம்யூனிஸ்ட்டுகளைக் கூப்பிட்டு, இந்தாடாப்பா, இலங்காபுரி பட்டத்தைச் சூட்டிக்கோன்னு விட்டுட்டுப் போயிடலாம்னு இருக்கு.

மி. 4:- கம்யூனிஸ்டுகள்கையிலே, ராஜ்யத்தைக் கொடுக்கவா, இவ்வளவு பாடுபட்டது.

ஆ:- அப்போ, இப்படி பேச மாட்டிங்கல்லே. ஒரே வரியிலே சட்டம் போட்டுடுவான்களே. ஆளுக்கு ஐந்து ஏக்கருக்குமேல் தேவையில்லை. அதிகம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தை வாங்கி உழுபவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டியதுதான் முறையின்னு! அப்போ என்ன செய்வேள்.

மி. 7:- அப்படி செய்துட்டா கூட பரவாயில்லை போலிருக்கு. ஏதோ, சர்க்கார், எங்க நிலத்திற்குரிய கிரயத்தைப் போட்டு......

ஆ:- கிரயமா, இதுவரை நீங்க அதிகமா அனுபவித்த குற்றத்திற்காக அபராதம் போடாம விட்டா போதாதோ! இப்போ, காஷ்மீரிலே செய்யல்லியோ, நஷ்டஈடா கொடுத்தா — விபரம் தெரியாம, விபரீதமாகப் பேசாதிங்கோ!

மி. 4:- ஐயோ!.

மி. 3:- அப்படியா, அட பாவிகளா!

மி. 8:- நாசமாகப்போக!

ஆ:- அப்படிப்பட்டவாளண்டை தான், நீங்களும் குறியாய் தடக்குவேள். அவா, கையிலே ராஜ்யமிருந்துதன்னா, உங்களைக் கூப்பிட்டு இப்படிப் பேசனும்னு என்ன அவசியம்.

மி. 1:- ஆமாங்க.

மி. 2:- கோபப்படாமே, கொஞ்சம் எங்களுக்கு உதவி செய்யணும். உங்க காலத்திலே, நாங்க நன்மையடையல்லேன்னா, வேறயார் காலத்திலே, அடையப் போகிறோம்.

ஆ:- நான் கேட்கிற கேள்விகளுக்குக் கொஞ்சம் நிதானமா யோசிச்சு பதில் சொல்லணும்.

மி. 1:- கேளுங்க...

ஆ:- ஊரிலே உங்களைப்பத்தி, இப்போ, விவசாயிகள் என்ன பேசரா

மி. 2:- பேசுராங்களா, ஏசராங்க.

ஆ:- என்ன சொல்லி ஏசரா.

மி. 3:- ஊர் சொத்தை வைச்சுகிட்டு, நாங்க உப்பிக் கொழுக்கிறோமாம். ஊதாரித்தனம்செய்கிறோமாம். உழைப்பவரை உதாசீனப் படுத்தறோமாம்.

மி. 4:- இந்த நிலங்களைப் பிடுங்கி, உழுகிறவங்களுக்கே பிரிச்சு கொடுக்கணுமாம்.

மி. 5:- உம்......சும்மாயிருங்க. இந்தப் பயல்களெல்லாம், அந்தக் கம்யூனிஸ்ட்டுகள் சொல்லிக் கொடுத்ததையெல்லாம் கிளிப்பிள்ளை மாதிரி சொல்றாங்க.

ஆ:- கிளிப்பிள்ளையோ, அணிப்

## இவர் கவர்னராம்!

ஆச்சாரியார் சென்னைப் பிரதமராகப் பணியாற்றுவதற்காக, சம்பளம் எதும் பெறவில்லை — இப்படிக் கூறியவர் சாதாரண ஆளல்ல. 'போலோ பாரத் மாதாகி' போடும் கொடிதூக்கி, குப்பனல்ல, குமரனல்ல—கவர்னர் இந்த ராஜ்யத்தின் தலைவர் பிரகாசா கூறினார். சேலத்தில், இரண்டு வாரங்களுக்கு முன்னால். ஆனால், சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஆச்சாரியார், தான் கவர்னர் ஜெனரலாக இருந்ததற்குத் தரப்படும் ஆயிரம் ரூபாய் அலவன்சும், மாகாணப் பிரதமராக உள்ளதற்குரிய சம்பளத்தையும் வாங்கிக் கொள்வதாகவும், இதனை மறுத்துக் கூறுபவர் எவராயினும், நம்பவேண்டாம் என்றும் கூறியுள்ளார். நாட்டைக் கட்டியாளும் கவர்னருக்குத் தெரியவில்லை, பிரதமர் சம்பளம் பெறுகிறாரா, இல்லையா என்பது—அப்பாவி மனிதர்—இவர் நமக்கு கவர்னர் என்ற சேதிதான் நம்மை வாட்டுகிறது—வெட்கமோ பிடுங்கித் தின்கிறது!

144230



பிள்ளையோ [illegible] ஆபத்து உருவாகிறதென்பதும் தெரியுதோல்லியோ.

மி. 6:- அதுதான், இந்த எலக்ஷனிலே பட்டவர்த்தனமாய்ப் புரிந்து போச்சுங்களே.

ஆ:- அதனாலேமில்லே. ஏங்களைப் பத்தி என்ன சொல்றா—தெரியுமோ. சர்க்கார் நடத்திறவா, முதலாளிங்க பக்கம் சேர்ந்துகிட்டிருக்கு—இதை ஒழிச்சு கம்யூனிஸ்ட் சர்க்கார் ஏற்படுத்தினாதான் எங்களுக்கு வாழ்வு, வளமுண்டு பேசிண்டிருக்கிறா—அதற்குத்தான் ஓட்டு போட்டிண்டிருக்கா, கம்யூனிஸ்ட்காரா.

மி. 8:- ஆமாங்க.

ஆ:- அதனாலும், கொஞ்சமும் யோசிக்காம தஞ்சை ஜில்லாவை போலீஸ் ராஜ்யமாய் பண்ணி, வெறுப்பை மூட்டை கட்டி வைச்சிருக்கா.

மி. 2:- ஆமாங்க.

ஆ:- இந்த நிலையிலே, நான் செய்தது தப்புன்னு சொல்லமுடியுமோ—கொஞ்சம் யோசிச்சு பாருங்கோ. கம்யூனிஸ்ட்காரா, மிட்டா, மிராசுகளை ஒழிக்கணும்—ஆயிரம், இரண்டாயிரம் எக்கர் வைத்துக்கொண்டு அக்ரமம் செய்றாங்கன்னு பேசறபோது நான் அவங்கவாயை அடைச்சிட்டமாட்டேனோ, இப்போ!

மி. 1:- எப்படிங்க?

ஆ:- எப்படியா? அவா, ஆயிரமாயிரமா நிலம் வைச்சிருந்தா, நாம் என்ன விட்டுவிடுகிறோமா, என்ன—புதுவரி போட்டு, கசக்கிப்பிழிந்து எடுத்துவிடுகிறோமின்னு சொல்ல மாட்டேனோ.

மி. 1:- அதுக்காக நாங்க, ஒத்தைக்கு இரட்டையாக வரிகொடுக்க முடியுமா?

ஆ:- சரி, முதலியார்வாள், நீங்க வருஷத்திற்கு எவ்வளவு கிஸ்தி கட்றேள்.

மி. 1:- 1000 ரூங்க.

ஆ:- இப்போ எவ்வளவு?

மி. 1:- அதைப்போல இரண்டு மடங்குங்க.

ஆ:- இதிலே, என்ன கஷ்டம்? கட்டிவிடலாமே சுலபமா.

மி. 2:- எப்படிங்க.

ஆ:- நீங்க வேறொன்றை மறந்துவிட்டேள். முதல்லே, ரேஷனிருந்த பொழுது சர்க்கார் நெல்லெல்லாம் வாங்கியபொழுது, குறைந்தவிலைக்கு (Procurement rate)க்குக் கொடுக்க வேண்டிவந்தது. அதாவது, மூட்டை முன்னே ரூ. 18-க்குக் கொடுத்தால், இப்பொழுது ரேஷன், உணவு கண்ட்ரோல் ஒழிந்ததால், அதிக விலைக்கு, குறைந்தது ரூ. 25க்காவது விற்க முடிகிறது. முன்னே ஆயிரம் மூட்டைகள் விற்று ரூ 18000 கிடைத்தால், இப்பொழுது ரூ. 25000 கிடைக்கிறது. அதிக லாபம் ரூ. 7000 வருகிறது. ஏன் புதுவரி கொடுக்கக் கூடாது? உங்களுக்கு கொள்ளை லாபம் வர வழி செய்து கொடுத்து விட்டுதான், வரிகொடுங்கள் என்று கேட்கிறேன். நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன் நீங்க அழற மாதிரி அழுங்க என்கிறேன். இதிலே என்ன கஷ்டம் சொல்லுங்கோ.

மி. 7:- நீங்க சொல்றது வாஸ்தவந்தான். இருந்தாலும், நாங்க இவ்வளவு தூரம், வந்ததற்காக ஏதேனும் ஒருமாற்றம்......

ஆ:- என்ன, பழையபடியும், அதேபல்லவியை பாட ஆரம்பிக்கிறேளே.

மி. 4:- இல்லீங்க.........நாங்க வந்து உங்களைக்கேட்டுக்கிட்டோம். அதற்காக செஞ்சதா, ஏதாவது ஒன்று செய்யுங்க.

ஆ: உங்க கௌரவத்திற்காக.

மி. 3:- ஆமாங்க.

ஆ:- ஆகட்டும், பார்ப்போம்.

மி. எல்லோரும்:- நமஸ்காரம்.

ஆ:- போய்ட்டு வாங்கோ.

இடம்:- ஆச்சாரியார் இல்லம்.
காலம்:- பகல்.
இருப்போர்:- ஆச்சாரியார், வேலைக்காரன்.

வே:- சாமி, கடைசியில், அவங்களை தாஜா பண்ணியனுப்பிச்சுட்டீங்களே.

ஆ:- ஆமாண்டா, நமக்கு நல்ல வேலையடா, இது. வர்ர பசங்களை தாஜா பண்றதும், தட்டிக் கொடுக்கிறதும்.

வே:- பின்னே, ஏங்கசாமி, அவ்வளவு நேரம் பேசினீங்க.

ஆ:- என்னடா பண்றது—பிரசாரம். நாய் வேஷம் போட்டா குலைச்சுத் தானே ஆகணும்.

வே:- எனக்கென்னமோ, சாமி, அப்படியே ஆயிட்டா கூட நல்லாயிருக்குங்கோ.

ஆ:- என்னடா, நாயாகவே ஆயிட்டா, நல்லாயிருக்குங்கிறியா—

வே:- இல்லீங்க சாமி, உழவங்களுக்கே நிலமுன்னு சொல்றாங்களே, அது மாதிரி, செஞ்சிட்டா, நமக்கென்னங்க நஷ்டம்—நம்ம மிராசு ஒண்ணும் பறி போயிடலீங்களே,

ஆ:- டேய், காங்கிரஸ்காரா விட்டுச் சோற்றைத் தின்னுட்டுக் கம்யூனிசம் பேசாதே?

வே:- ஏங்கசாமி, காங்கிரஸ்காரங்க கம்யூனிசம் பேசப்படாதா?

ஆ:- பிரசங்கம், அதிகப் பிரசங்கமாகுது!

வே:- இல்லீங்க சாமி, நீங்க முன்னே ஒரு புத்தகம் எழுதினீங்களே, சிறையிலிருந்த பொழுது—அதிலே கம்யூனிசத்தைப் பத்தி ஆதரிச்சு......

ஆ:- அது, அப்படா—அப்போ, ரயில்வே தொழிலாளர் மாநாட்டில் கூட, கம்யூனிஸ்டுகளைப் பாராட்டிக் கூடப் பேசியிருக்கிறேன்......

வே:- அது அப்போங்களா...! இப்ப இல்லையா......!

ஆ:- ஆமாண்டாப்பா, நீ கேலி பண்ற நிலைமைக்குத்தான் வந்துட்டேன் நான்—உம், சவ்வாரி! *

விற்பனையாகிறது
சி. என். ஏ. தீட்டிய
சிறிய ஏடு
அதிர்ச்சிக்கு வைத்தியம்
விலை அணா 2
விற்பனைக் கழிவு 25%
தபாற்செலவு இனாம். வேண்டுவோர் எழுதுக.
'திராவிட நாடு' நிலையம்
காஞ்சிபுரம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.